D

V211,31 N81

N83.23;1

122207

SECRETARIAT LIBRARY

ll Nadu Legislative Assembly / ~~Council~~ Debates:-

---

e 1981 Vol. XXIII S.No 1-6 No.

---

1981 XXIII 1. 6.

S.No 4. NIL

இந்த / புத்தகக் கட்டை வரிசை மாற்றாமல்

ரே புத்தகமாகப் பைண்டிங் செய்யும்படி கேட்டுக்

கொள்ளப்படுகிறது.

15/3

for LIBRARIAN

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஏழாவது சட்டமன்றப் பேரவையின்
இரண்டாவது கூட்டத்தொடர்

**1981 மே 8, 9, 11, 12, 13, மற்றும் 14 ஆம் நாட்கள்**

***(தொகுதி XXIII - எண்கள் 1 முதல் 6 வரை)***

©
தமிழ்நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

லை ரூ .1]

D I
Y.211,31 N81
N88.2331
1-22207

I

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சாதிக் அலி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப் பணித்துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் ; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமி தானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் திரு. எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. எஸ். முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கைத்தறி, கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மதுவிலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத் துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலை வாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

THIRU SADIQ ALI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption Public Works Department and Establishment Matters relating to Public Works Department.

2. HON. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official language.

8. HON. THIRU K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. HON. THIRU C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures. Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. HON. THIRU P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum-Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. HON. DR. H. V. HANDE (Minister for Health)—Health.

13. HON. THIRU K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. HON. THIRU S. N. RAJENDRAN (Minister for Handlooms and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and Passports.

17. HON. THIRU M. VIJAYASARATHI (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்,
2. திரு. ஜே. எஸ். இராசு,
3. திரு. என். எஸ். வி. சித்தன்,
4. திரு. எஸ். சிவசாமி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்,

திரு. த. இராதாகிருஷ்ணன்,

திரு.இரா. பாலகுரு, பி.ஏ.

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி. ஏ., பி.ஜி. எல்.,

குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.,

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.,

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.,

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.,

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (எஸ்டேட் அதிகாரி),

திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

---

* 21-6-1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

† 23-1-1981 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 1 அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 3 அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 4 அப்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 5 அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 6 அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ. வ.) |
| 7 அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 8 அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 9 அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ. வ.) |
| 10 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 11 அன்பழகன். திரு. க. | புரசைவாக்கம் |
| 12 அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 13 அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 14 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 15 ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 16 ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. வ.) |
| 17 சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 18 ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 19 இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 20 இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 21 இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 22 இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 23 இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ |
| 24 இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 25 இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 26 இராசு. திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ. |
| 27 இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி |
| 28 இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு) |
| 29 இராமச்சந்திரன், திரு. கே.கே. | சாத்தூர் |
| 30 இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 31 இராமச்சந்திரன், திரு. ந. செஞ்சி. | செஞ்சி |
| 32 இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 33 | இராமசுப்பிரமணியம், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 34 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ. வ.) |
| 35 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 36 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 37 | இராஜசேகரன், திரு. வெ. | இராதாகிருஷ்ணநகர் |
| 38 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 39 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 40 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ. வ.) |
| 41 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 42 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 43 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 44 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 45 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 46 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 47 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 48 | கணேசன், திரு. இ. | இடைப்பாடி |
| 49 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 50 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 51 | கந்தசாமி, திரு. பி. | பொங்களூர் |
| 52 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 53 | கருணாநிதி, டாக்டர், மு. | அண்ணாநகர் |
| 54 | கருப்பசாமிப் பாண்டியன் திரு. வி. | பாளையங்கோட்டை |
| 55 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 56 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை (செ. வ.) |
| 57 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 58 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 59 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 60 | நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | நன்னிலம் (செ. வ.) |
| 61 | காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம் |
| 62 | கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 63 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 64 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 65 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 66 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 67 | கிருஷ்ணராஜ், திரு. ஜீ. | சேலம்-1 |
| 68 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 69 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 70 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 71 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ. வ.) |
| 72 | குமரிஅனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 73 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ. வ.) |
| 74 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 75 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 76 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 78 | கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர் |
| 79 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 80 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 81 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 82 | கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கை (செ. வ.) |
| 83 | கோவேந்தன் திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 84 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 85 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 86 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 87 | சட்டநாத கரையாளர் திரு. கி. | தென்காசி. |
| 88 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 89 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 90 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 92 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ. வ.) |
| 93 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டணம் |
| 94 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 95 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 96 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 97 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 98 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 99 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 100 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 101 | சிவபெருமான், திரு. மு | ஓமலூர் |
| 102 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 103 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 105 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 106 | சின்னராஜ், திரு. எம். | தொண்டமுத்தூர் |
| 107 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 108 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 109 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 113 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 114 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 115 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 116 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 117 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 118 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 119 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 120 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 121 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ. வ.) |
| 122 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 123 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. | அரவக்குறிச்சி |
| 124 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 125 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர் |
| 126 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 127 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 128 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி—2 |
| 129 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர் |
| 130 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ) |
| 133 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 135 | தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.) |
| 136 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 | திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 140 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 141 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 142 | திருமான், திரு. | ஏற்காடு (செ.வ.) |
| 143 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 144 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |
| 145 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 146 | துரைமுருகன், திரு. | ரால ப்பேட்டை |
| 147 | துரைராமசாமி, திரு. | வெ ளக்கோவில் |
| 148 | துரைராஜ், திரு. பி. | சங் ரநாயினார் கோவில் (செ.வ.) |
| 149 | தேவராஜ், திரு. வி. எம். | வே லூர் |
| 150 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 151 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 152 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 153 | நவநீத கிருஷ்ணபாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 154 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 155 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 156 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 157 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 158 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 159 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 160 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 161 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 162 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 163 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 164 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 165 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 166 | பழனியப்பன், திரு. கு. ப. | விழுப்புரம் |
| 167 | பழனிவேல், திரு. என். | பழனி (செ. வ.) |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 169 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 170 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 171 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ. வ.) |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 173 | பாலகிருஷ்ணன், திரு. | சிவகாசி |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 175 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 176 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ. வ |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 177 பாலுச்சாமி, திரு ஏ. | ... | சமயநல்லூர் (செ. வ.) |
| 178 பிச்சை, திரு. எம். | .. | அருப்புக்கோட்டை |
| 179 பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | .. | வில்லிவாக்கம் |
| 180 புருஷோத்தமன், திரு. து. | .. | சைதாப்பேட்டை |
| 181 பூங்காவனம், திரு. என். ஏ. | .. | காட்பாடி |
| 182 பெரியசாமி, திரு. ஏ. | .. | தாராபுரம் (செ. வ.) |
| 183 பெரியசாமி, திரு. ரா. | .. | தொட்டியம் (செ.வ) |
| 184 பெருமாள், திரு. என். | .. | வரகூர் (செ.வ.) |
| 185 பெருமாள், திரு. ரா. கு. | .. | விளாத்திகுளம் |
| 186 பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | .. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 187 பொன்னுரங்கம், திரு. ப. | .. | ராயபுரம் |
| 188 பொன்னையன், திரு. சி. | .. | திருச்செங்கோடு |
| 189 மணி, திரு. டி. | .. | விளவங்கோடு |
| 190 மணிமாறன், திரு. ஆர். | .. | திருப்பூர் |
| 191 மாணிக்கம், திரு. எம். எஸ். | .. | வேதாரண்யம் |
| 192 மாரிமுத்து, திரு. ந. | .. | குளத்தூர் (செ. வ.) |
| 193 முகமது இஸ்மாயில், திரு. பி. | .. | பத்மநாபபுரம் |
| 194 முசிறிப்புத்தன், திரு. ம. | .. | திருச்சி—11 |
| 195 முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | .. | கன்னியாகுமரி |
| 196 முத்துசாமி, திரு. சு. | .. | ஈரோடு |
| 197 முத்துராமலிங்கம், திரு. இ. | .. | ராதாபுரம் |
| 198 முத்துவேல், திரு. என். | .. | வானூர் (செ. வ.) |
| 199 முத்தையா, திரு. இரா. | .. | சேடப்பட்டி |
| 200 முனிரத்தினம், திரு. இரா. சா. | .. | கும்மிடிபூண்டி |
| 201 முனுசாமி, திரு. மு. ப | .. | பாலக்கோடு |
| 202 மூர்த்தி, திரு. ஜி. | .. | பேரணாம்பட்டு (செ. வ.) |
| 203 மொக்கையன், திரு. பி. | .. | ராஜபாளையம் (செ. வ.) |
| 204 யசோதா, திருமதி டி. | .. | ஸ்ரீ பெரும்புதூர் (செ. வ.) |
| 205 ரகுமான்கான், திரு. அ. | .. | சேப்பாக்கம் |
| 206 ரங்கசாமி, திரு. ஆர். | .. | சத்தியமங்கலம் |
| 207 ரங்கசாமி, திரு. க. | .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.) |
| 208 ரமணி, திரு. கு. | .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 209 ராமசாமி, திரு. என். என். | .. | சாத்தான்குளம் |
| 210 ராஜமாணிக்கம், திரு. எஸ். கே | .. | முசிறி |
| 211 ரெத்தினராஜ், திரு. எஸ். | .. | குளச்சல் |
| 212 வரதராஜன், திரு. என். | .. | திண்டுக்கல் |
| 213 | (வெற்றிடம்) | |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 214 விசயலட்சுமி, செல்வி. வி. | .. | வீரபாண்டி |
| 215 வின்சென்ட், திரு. மி. | .. | நாகர்கோவில் |
| 216 விஜயசாரதி, திரு. எம். | .. | அரக்கோணம் (செ. வ) |
| 217 விஜயபாலன், திரு. என். | .. | பூம்புகார் |
| 218 விஜயரெகுநாத தொண்டமான், திரு. | .. | புதுக்கோட்டை |
| 219 விஜயராகவன், திரு. பொ. | .. | கிள்ளியூர் |
| 220 விஸ்வநாதன், திரு. கோ. | .. | அணைக்கட்டு |
| 221 வீராசாமி, திரு. த. | .. | ஓரத்தநாடு |
| 222 வீராணம்பலம், திரு. க. வெ. | .. | மேலூர் |
| 223 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | .. | காஞ்சி |
| 224 வெங்கடரெட்டி, திரு. டி. | .. | ஓசூர் |
| 225 வெங்கடேசன், திரு. பி. எம். | .. | பெரணமல்லூர் |
| 226 வெள்ளைச்சாமி, திரு. அ. | .. | ஆத்தூர் |
| 227 வேணுகோபால், திரு. த. | .. | தண்டராம்பட்டு |
| 228 வேலப்பன், திரு. சி. வி. | .. | கபிலர்மலை |
| 229 ஜகத்ரட்சகன், திரு. எஸ். | .. | உத்திரமேரூர் |
| 230 ஜான் வின்சென்ட், திரு. மு. | .. | நாங்குனேரி |
| 231 ஜெகதீசன் ஆனூர், திரு. பு. கோ. | .. | செங்கல்பட்டு |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | .. | தேனி |
| 233 ஹாஜாஷெரீப், திரு. கே. எஸ். ஜி. | .. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டார் |
| 235 மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். — அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். — அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. — அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. — அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி —தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

1981 மே 8, 9, 11, 12, 13 மற்றும் 14 ஆம் நாட்கள்

(தொகுதி 23, எண்கள் 1 முதல் 6 வரை)

உள்ளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. | iii |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. | vi |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உள்பட அகர வரிசையில்) .. | ix |
| அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. | 261<br>520—526 |
| இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 | 47,<br>423—436 |
| எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 119,<br>325—331 |
| கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. | 331—342 |
| கலவரப் பகுதிகள் (சட்ட விரோதக் கூட்டத்தினால் காயம் அடைந்தவருக்கு இழப்பீடு கொடுக்கும்) சட்ட முன்வடிவு, 1981 .. | 633—639<br>815 |
| குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. | 493—497 |
| கைத்தறி தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981 .. | 457—4[illegible] |

| | பக்கம் |
|---|---|
| **அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி—** | |
| சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. | 639—640, 804—815 |
| சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. | 262, 527—529 |
| தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு, 1981 .. | 771—803 |
| தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. | 642—658 |
| நிதி ஒதுக்க எண். (3) சட்ட முன்வடிவு, 1981 | 221, 262—325 |
| பட்டா பாஸ் புத்தகம் வழங்கல் சட்ட முன்வடிவு, 1981. .. | 261, 699 |
| பல்கலைக் கழக—கல்லூரி தேர்வுகள் (ஆசிரியர்களும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களும் தேர்வின் போது மாணவர்களைக் கண்காணித்தல்) சட்ட முன்வடிவு, 1981 .. | 640—641 |
| பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. | 423 |
| மாவட்ட காவல்—சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. | 684—698 |
| வன (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. | 436—457 |
| விற்பனைவரி (மேல்வரி) திருத்தசட்ட முன்வடிவு, 1981 பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. | 261, 497—520 |
| வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவன (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 658—684 |
| வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 639 |
| **அரசினர் தனித் தீர்மானங்கள்—** | |
| தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடன் வரம்பு மாநில அரசின் செயற்குறிப்பு .. | 699—700 |
| நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப் பெறும் வரைவு அறிக்கை .. | 700 |





| | பக்கம் |
|---|---|
| **அரசினர் தீர்மானங்கள்—** | |
| நாள் குறிப்பிடாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுவது .. | 826—827 |
| பேரவை அலுவலில் மாற்றம் .. | 423 |
| பேரவைக் குழுக்களின் பதவிக்காலம் நீடிப்பு .. | 256—258 |
| பேரவையின் அலுவல் .. | 641 |
| விதி 31-ஐத் தளர்த்தல் .. | 116 |
| விதி 32-ஐத் தளர்த்தல் .. | 770 |
| விதி 54 (6)-ஐத் தளர்த்தல் .. | 410, 623, 752 |
| விதி 58-ஐத் தளர்த்தல் .. | 394, 591 |
| **அறிக்கை அளித்தல்—** | |
| பொது நிறுவனங்கள் குழு .. | 752 |
| மதிப்பீட்டுக் குழு .. | 256, 409 |
| விவசாய மின் இணைப்புகளுக்கு கூடுதல் மின்சக்தி வழங்கல் .. | 409 |
| **அறிவிப்புகள்—** | |
| இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.) .. | 261 |
| எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ. இ.) .. | 119 |
| கைத்தறி தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும், பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.) .. | 457 |
| சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.) .. | 803 |
| சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ. இ.) .. | 262, 527 |
| நிதி ஒதுக்க எண் (3) சட்ட முன்வடிவு, 1981 (ஆ. இ.) .. | 221 |
| பேரவை அலுவல் .. | 325 |
| பேரவை நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள் .. | 822—826 |
| பொது விற்பனை வரி (திருத்தம்) சட்ட முன்வடிவு. 1981. (ஆ. இ.) .. | 260 |
| மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி | 821—822 |
| விற்பனை வரி (மேல்வரி) திருத்த சட்ட முன்வடிவு, தமிழ்நாடு 1981 (ஆ. இ.) .. | 259 |

பக்கம்

உரிமைப் பிரச்சினைகள்—


எதிர்க்கட்சித் தலைவர் மீது .. 586—591

சட்டமன்றக் குழுக்களுடன் அரசுத் துறைகள் ஒத்துழைப்பது .. 579—586

பேரவை நடைபெறும்போது அரசின் கொள்கை பற்றிய அறிவிப்புகளை அவையில் வெளியிடுவதற்கு முன் துறை அதிகாரி நாளேடுகளுக்கு தெரிவித்துள்ளது .. 579

பொறியியல் துறை அதிகாரி திரு. மணவாளன் மீதும் பத்திரிக்கை மீதும் .. 738—746

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது .. 387—394


ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—


இந்தி கற்றால்தான் பதவி உயர்வு என்பதன் மூலம் இந்தி திணிக்கப் பெறுவது .. 591—602

குளச்சல் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் .. 249— 53

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது .. 602—623

சென்னை நகரில் மண்ணெண்ணெய் விநியோகத்தை தனியாரிடம் விடுதல் .. 38—42

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் .. 394—402

தமிழக கேரள மாநில மீனவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல் .. 747—750

வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள் உண்ணாவிரதம் .. 403—408


கவன ஈர்ப்புகள்—


அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவ மனையில் பெனிசிலின் ஊசி போட்டதால் ஏற்பட்ட மரணம் .. 253—255

இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு மருந்து .. 416—418

கண் நோய் தொற்று நோயாகப் பரவுதல் .. 418—422

கன்னியாகுமரி—கொட்டாரம் கிராம குடிநீர் குழாய்கள் .. 756—758

குடகனாறு அணையைப் புதுப்பித்தல் .. 45—47




பக்கம்


கும்பகோணம் அருகே சோழன் போக்குவரத்துக் கழக பேருந்து விபத்து .. 758—760

குழாய்க் கிணறுகளில் கைப்பம்புகள் வைக்க வேண்டிய அவசியம் .. 628—630

குளித்தலையில் சூறாவளிக் காற்றால் பயிர்கள் பாதிப்பு .. 623—624

சங்கரன்கோவிலில் கைத்தறி நெசவாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையே மோதல் .. 42, 45

சென்னை மாநகராட்சித் துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் .. 410—413

சேலம் மாவட்டத்தில் தீவனம் இல்லாது கால்நடைகள் இறத்தல் .. 763—764

தஞ்சை மாவட்டம் பாத்தூர் கிராமக் கூட்டுறவு சேவா சங்கம் .. 624—628

தமிழகத்திற்கு மைய அரசு ஒதுக்கும் அரிசி .. 753—756

பீடித் தொழிலாளர்கள் மூலப்பொருள் கிடைக்காததால் வேலையின்றி இருத்தல் .. 413—416

மாஜிஸ்ட்ரேட் முன்சீப் ஒருங்கிணைப்பு சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் .. 764—769

வறட்சியின் காரணமாக கால்நடைகள் வெட்டப்படுவது .. 760—762

வேடசந்தூர்—இறவை கூட்டுறவுச் சங்கம் மூலம் தோண்டப்பட்ட கிணறுகள் செயல்படாமை .. 769—770

வேலை நிறுத்தம் செய்துள்ள ஃபைட்டோ கெமிக்கல்ஸ் நிறுவனத் தொழிலாளர்கள் கைது செய்யப் பெறுவது .. 630—633


த

தகவல் கோரல்—


உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்பு .. 387

உறுப்பினரின் அறிக்கை குறித்து .. 751—752

கள்ளுக்கடைகள் திறப்பை சில மாதங்கள் ஒத்திவைத்தல் .. 221—222

கால்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற மோகன் பேகன் அணிக்குப் பாராட்டு .. 247—248

குரோம்பேட்டை கலவரம் .. 736—737

கைதான தொழில் நுட்பத் தொழிலாளர்களை விடுதலை செய்தல் .. 737—738

செய்திச் சுருக்கம்—குழுக்கள் நியமனம் .. 578

தேர்வு ஆணைக் குழு ஆதி திராவிட வகுப்பினர் எவரையும் பாரஸ்ட் ரேஞ்சர் பதவிக்குத் தேர்ந்தெடுக்காதது .. 746—750

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| அ | .. | அறிக்கை |
| அறி | .. | அறிவிப்பு |
| அ.வி. | .. | அரை மணிநேர விவாதம் |
| கு.வி. | .. | குறுகிய கால விவாதம் |
| பொ.வி. | .. | பொது விவாதம் |
| ஆ.உ. | .. | ஆளுநர் உரை |
| உ.பி. | .. | உரிமைப் பிரச்சினை |
| ஒ.பி. | .. | ஒழுங்குப் பிரச்சினை |
| க.ஈ. | .. | கவன ஈர்ப்பு |
| க.ஈ.அ. | .. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச.அ.நி. | .. | சட்டமுன் வடிவின் அறிமுக நிலை. |
| ச.ஆ.நி. | .. | சட்டமுன் வடிவின் ஆய்வு நிலை— இந்நிலையில், (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம். (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற தீர்மானம். (3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |
| ச.பிரி.ஆ. | .. | சட்ட முன்வடிவு—பிரிவுவாரியா ஆய்தல். |
| ச.பே. | .. | சட்டமன்றப் பேரவை |
| ச.மே. | .. | சட்டமன்ற மேலவை. |



| | | |
|---|---|---|
| த.கோ. | .. | தகவல் கோரல் |
| த.வி. | .. | தன்னிலை விளக்கம் |
| தீ. | .. | தீர்மானம் |
| உ.தீ. | .. | உரிமைத் தீர்மானம் |
| ஒ.தீ. | .. | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த.தீ. | .. | தனித் தீர்மானம் |
| து.மா.கோ. | .. | துணை மானியக் கோரிக்கை |
| மி.மா.கோ. | .. | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை |
| பே.அ. | .. | பேரவையின் அலுவல் |

அ

பக்கங்கள்

அங்காடிகள்—
கடைகள், விலைப்பட்டியல் வைக்கும் சட்டம் .. 1—4

அப்பாதுரை, திரு. மு—
இந்து சமய அறக்கட்டளைகள் திருத்த சிறப்பு நிதித் துறைகள் திருத்தச் சட்டமுன்வடிவு 1981 426—427
ஒட்டப்பிடாரம் அரிசன மாணவர் இல்லக் கட்டிடம் .. 34—35
ஒட்டப்பிடாரம் தாலுகா, அரசு உயர் நிலைப் பள்ளி கட்டிடம் .. 535—536
வன (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 438—404

'அ'—தொடர்ச்சி

அம்பிகாபதி, திரு. மு.—
உண்ணாவிரதம், வேளாண்மைத் துறைத் தொழில் நுட்ப ஊழியர்கள் (ஒ தீ.) .. 403
கும்பகோணம், சோழன் போக்குவரத்துக் கழக பேருந்து விபத்து (க.ஈ.) .. 758—760
கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ தீ.) .. 602
சென்னை, மண்ணெண்ணெய் விநியோகத்தை தனியாரிடம் விடுதல் (ஒ.தீ.) .. 38—39
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ.) .. 394

பக்கங்கள்

அ—தொடர்ச்சி

அம்பிகாபதி திரு. மு—தொடர்ச்சி

தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன் வடிவு, 1981 .. 785—78

அரங்கங்கள்—

திரையரங்குகள் சென்னை மாநகராட்சி அமைத்தல் .. 709—710

அரங்கநாதன், திரு. எஸ்.—

தர்மபுரி, அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி அமைத்தல் .. 561, 562

தர்மபுரி நகரம் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டுதல் .. 233, 234

அரங்கநாதன், திரு. மு.—

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம் (க.ஈ.) .. 253

அரங்கநாயகம் திரு. செ.—

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ.) .. 401—403

பல்கலைக் கழகக் கல்லூரித் தேர்வுகள் (ஆசிரியர்களும், ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களும் தேர்வின் போது மாணவர்களை கண்காணித்தல்) சட்ட முன்வடிவு, 1981 .. 640, 641

அரங்கநாதன், திரு. வெ.—

ஊரக வளர்ச்சித் துறைப் பணியாளர்கள், பணி விதிகள் .. 711

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள், பணி விதிகள் செயலாக்கம் .. 712

அலுவலகங்கள்—

செங்கற்பட்டு மாவட்ட மண்டலத் துணை இயக்குநர் அலுவலகம் (சென்னை) மாற்றம் .. 560, 561

'அ'—தொடர்ச்சி

பத்திரப்பதிவு, எக்ஸிராக்ஸ் இயந்திரங்களைப் பயன்படுத்தல் .. 708, 709

அலுவலர்கள்—

ஊரக வளர்ச்சித் துறை, பணி விதிகள் .. 711

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள், பணி விதிகள் செயலாக்கம் .. 712



அ—தொடர்ச்சி

அலுவலகங்கள்—தொடர்ச்சி. பக்கங்கள்

சர்வேயர்கள் நியமனம், அரிசன நல வட்டாட்சியர் அலுவலகங்கள் .. 245,24

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், வீட்டு வசதி 368—370

அழகர்சாமி, திரு. சோ.—

உண்ணாவிரதம், வேளாண்மைத் துறை, தொழில் நுட்ப ஊழியர்கள் (ஒ.தீ.) .. 403—405

கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 339.340

குழுக்கள், பதவிக் காலம் நீடிப்பு (தீ) .. 257

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ.தீ.) .. 602—606

கைதான தொழில் நுட்பத் தொழிலாளர்களை விடுதலை செய்தல் (த.கோ.) .. 737,738

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ) .. 394

நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1981 .. 280—289

மாதவரம் பால் பண்ணை, மாட்டுத் தொழுவம். 373—375

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு, மாநிலச் சட்ட மன்றம், தேர்தல்கள் .. 191—196

வெள்ளாகுளம் (சங்கரன்கோவில் வட்டம்) புதிய பாசனக் கண்மாய் .. 27,28

வேளாண்மைத் துறைத் தொழில் நுட்ப அலுவலர்கள் உண்ணாவிரதம் (த.கோ.) .. 248

அன்பழகன், திரு. க.—

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ.) .. 394

அன்பழகன், திரு. தி.—

கந்திலி கிராமம், மருத்துவமனையை அரசாங்கம் மேற்கொள்ளுதல் .. 363

பொது நிறுவனங்கள் குழு, அறிக்கை அளித்தல் .. 752

'ஆ'

ஆண்டித்தேவர், திரு. எஸ்.—

உண்ணாவிரதம், வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள் (ஒ.தீ.) .. 403 407,408

உறுப்பினரின் அறிவிக்கை குறித்து (த.கோ.) .. 751

பக்கங்கள்.

ஆ—தொடர்ச்சி

ஆண்டித் தேவர் திரு. எஸ்.—தொடர்ச்சி.

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ.தீ.) .. 606—609

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ.) .. 394—398, 399

ஆதி திராவிடர் நலன்—

அரிசன மாணவர் இல்லக் கட்டிடம், ஒட்டப்பிடாரம் .. 34,35

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையம், சென்னை .. 571—572

மலைவாழ் மக்கள், கடன் நிவாரணச் சட்டம் .. 35,36

மாணவர்கள், உதவித் தொகை .. 243—245

மாணவர்கள், புத்தகங்கள் வழங்குவதில் தாமதம் .. 31—34

மாணவர் விடுதி கட்டும் திட்டம், கூவத்தூர் .. 573

வீட்டு மனைப் பட்டா, வடிவேல் நகர் (கீழ் பாகம் கிராமம்) .. 573—575

ஆறுமுகம், திரு. எம்.—

அவிநாசி, மருத்துவமனை அமைத்தல் .. 715,716

உண்ணாவிரதம், வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள் (ஒ.தீ.) .. 403

குழாய்க் கிணறுகளில் கைப்பம்புகள் வைக்க வேண்டிய அவசியம் குறித்து (க.ஈ.) .. 628

குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு, 1981 .. 495

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ.தீ.) .. 602

ஆறுமுகம், திரு. சேலம் மு.—

கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981 .. 484—486

ஆரூர் ஜெகதீசன், திரு. பு. கோ.—

சதுரங்கப்பட்டணம், புதுப்பட்டணம் பகுதிகள், குடிநீர் வழங்குதல் .. 231—233



இ பக்கங்கள்

இராகவானந்தம் திரு. எஸ்.—

கன்னியாகுமரி-கொட்டாரம் கிராமம் குடிநீர்க் குழாய்கள் (க.ஈ.அ.) .. 756—757, 758

குழாய்க் கிணறுகளில் கைப்பம்புகள் வைக்க வேண்டிய அவசியம் குறித்து (க.ஈ.அ.) 628—630

குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 493—495, 496, 497

கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981, .. 457, 486—493

தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (ஆய்வு) .. 642, 654—658

தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு, 1981 .. 771, 789—800, 801, 803

பீடித் தொழிலாளர்கள், வேலையின்மை (க.ஈ.அ.) .. 413—416

ஃபைபட்டோ கெமிக்கல்ஸ் தொழிலாளர்கள் கைது (க.ஈ.அ.) .. 630—632, 633

இராசமாணிக்கம் திரு. இரெ.—

குத்தாலம் ஒன்றியம், நாட்டாற்றில் பாலம். 710—711

இராசாம்பாள் திருமதி த.—

நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1981 .. 263—268, 295

இராசாராமன் திரு. எஸ்.—

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம (க.ஈ.) .. 253

சித்தமல்லி கிராமம், ஏரி அமைத்தல் 28—29

சென்னை, மாநகராட்சி திரையரங்குகள் அமைத்தல் .. 709—710

இ தொடர்ச்சி

இராசாராமன் திரு எஸ். தொடர்ச்சி

தஞ்சை மாவட்டம், மாத்தூர் கிராமக் கூட்டுறவு சேவா சங்கம், உரக் கலப்பட வழக்கு(க.ஈ.) .. 624, 626, 627

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் போராட்டம், (ஒ.தீ.) .. 394

இராமச்சந்திரன், திரு எம். ஜி.—

கைதான தொழில் நுட்பத் தொழிலாளர்களை விடுதலை செய்தல். ... 737—738

பாரஸ்ட் ரேஞ்சர் பதவி, ஆதிதிராவிட வகுப்பினரை தேர்வாணைக் குழு தேர்ந்தெடுக்காதது (த.கோ.) .. 747

பொறியியல் துறை அதிகாரி திரு. மணவாளன் வெளியிட்ட அறிக்கை (உ.தீ.) .. 739, 745—746

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம் .. 47, 48, 49, 82, 129—132, 133, 141-152, 153, 154—162, 163, 164

இராமச்சந்திரன் திரு. ச.— 423.

அலுவல் வரிசையில் மாற்றம் (தீ). .. 641—642

இந்தி கற்றால் தான் பதவி உயர்வு என்பதன் மூலம் இந்தி திணிப்பு குறித்து (ஒ.தீ.) .. 597—602

கலவரப் பகுதிகள் (சட்ட விரோதக் கூட்டத்தினால் காயம் அடைந்தவருக்கு இழப்பீடு கொடுக்கும்) சட்ட முன்வடிவு, 1981. .. 633, 634, 635, 636-638

சட்டமன்றக் குழுக்களுடன் அரசுத் துறைகள் ஒத்துழைப்பு. (உ.பி.) .. 582—585

சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1981. .. 639—640



இராமச்சந்திரன், திரு. ச. தொடர்ச்சி

இ தொடர்ச்சி

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடன் வரம்பு—மாநில அரசின் செயற் குறிப்பு (த.தீ.) .. 699—700

விதி 54(6)—ஐத் தளர்த்தல் (தீ), 410, 623

விதி 58ஐத் தளர்த்தல், (தீ), 394, 591

விவசாயம், கூடுதல் மின்சக்தி வழங்கல் (அறி) 409

இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந —

மின்சார வாரியம், தொழிற்சங்கங்கள் 345—347

இராமசாமி, திரு. எஸ். என்.—

அரசின் கொள்கை பற்றிய அறிவிப்புகளை அவையில் வெளியிடுவதற்கு முன் நாளேடுகளுக்கு தெரிவித்தது. (உ.பி.) .. 579

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம், (க.ஈ.) 253

இந்து சமய அறக் கட்டளைகள் திருத்த-சிறப்பு விதித் துறைகள் திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 .. .. 43[illegible]—432

இராமலிங்கம், திரு. செ.—

சென்னை கண் நோய் (க.ஈ.) 418

இராஜா முகமது, திரு. கே.—

குடகனாறு அணையைப் புதுப்பித்தல், (க.ஈ.அ.) 45—46, 47

இளையபெருமாள், திரு. எல்.—

கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. .. 333

கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981 .. .. 465—469

சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981. .. 8[illegible]5

தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு, 1981 .. 788—789, 795, 796, 797

நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1981 278—279

பாரஸ்ட் ரேஞ்சர் பதவி, ஆதிதிராவிட வகுப்பினரை தேர்வாணைக் குழு தேர்ந்தெடுக்காதது (த.கோ.) .. 746—747

‘இ’ தொடர்ச்சி


இளையபெருமாள், திரு. எல்—தொடர்ச்சி
பின்னலூர் கிராமம், வாலாஜா ஏரிப் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு. .. .. 228—230

வரவு—செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம் .. .. .. 81, 82, 83—84


‘ஈ’


ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—
அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம், (க.ஈ.) 253

ஆலங்குளம் காவல் நிலையம், சமூக விரோதிகளால் தாக்கப்பட்டது. .. 513

இந்தி கற்றால் தான் பதவி உயர்வு என்பதன் மூலம் இந்தி திணிப்பு (ஒ.தீ.). 591

உண்ணாவிரதம், வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள், (ஒ.தீ.) 403, 405—406

குளச்சல் காவல் நிலையம், விசாரணைக் கைதி மரணம். (ஒ.தீ.) .. 249

குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981, .. 494

சங்கரன்கோவில், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம், (க.ஈ.) 42

சந்தனமர ஏற்றுமதி, தடை, 378—386

சென்னை, கண் நோய், (க,ஈ.) 418,420‘421

சென்னை, மண்ணெண்ணெய் விநியோகத்தை தனியாரிடம் விடுதல் (ஒ.தீ.) 38,40

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் போராட்டம், (ஒ.தீ.) 392

தமிழக, கேரள மாநில மீனவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல் (ஒ.தீ.) 747

தமிழகத்திற்கு மைய அரசு ஒதுக்கும் அரிசி (க.ஈ.) 753

தூத்துக்குடி, உப்பு சம்பந்தப்பட்ட தொழில்கள், 30

போக்குவரத்துக் கழகங்கள், பட்டாபிராமன் குழு அறிக்கை மீது நடவடிக்கை. 727—729




‘ஈ’— தொடர்ச்சி


ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்—தொடர்ச்சி
வரவு—செலவுத் திட்டம், 1981-82. வாக்கெடுப்பு மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம். 48

மாநிலச் சட்டமன்றம் தேர்தல்கள். 165


‘உ’


உகம்சந்த் திரு. எஸ். டி.—
கூவத்தூர், ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுதல். 573

செய்யூர் பஞ்சாயத்து, கையாடல் 358

வறட்சியின் காரணமாக கால்நடைகள் வெட்டப்படுவது (க.ஈ) 760,762

உணவுப் பொருள்கள்—
தமிழகத்திற்கு மைய அரசு ஒதுக்கும் அரிசி (க.ஈ.) 753—756

உத்திராபதி, திரு. பொ.—
ஆரம்பப் பள்ளி மாணவர்கள் மதிய உணவு 564—568

உண்ணாவிரதம், வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள் (ஒ.தீ.) 403

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்கப்பட கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ.தீ.) 002

சென்னை மண்ணெண்ணெய் விநியோகத்தை தனியாரிடம் விடுதல், (ஒ.தீ.) 38

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு மாநிலச் சட்டமன்றம் தேர்தல்கள் 165

வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 669—672

உமாநாத், திரு. ரா.—
இந்தி கற்றால் தான் பதவி உயர்வு என்பதன் மூலம் இந்தி திணிப்பு (ஒ.தீ) 592—595

கலவரப் பகுதிகள் (சட்ட விரோதக் கூட்டத்தினரால் காயம் அடைந்தவருக்கு இழப்பீடு கொடுக்கும்) சட்ட முன்வடிவு, 1981, 633,634 636—639

சட்டமன்றக் குழுக்களுடன் அரசுத் துறைகள் ஒத்துழைப்பது (உ.பி) 580—582 585

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ.) 394.403

'உ'—தொடர்ச்சி


தமிழகத்திற்கு மைய அரசு ஒதுக்கும் அரிசி (க.ஈ.) 753,754
755

நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1981, 279

உமாநாத் திரு. ரா. தொடர்ச்சி

பொறியியல் துறை அதிகாரி திரு. மணவாளன் வெளியிட்ட அறிக்கை (உ.தீ) 738—739
741—744

உரிமைப் பிரச்சினை—

பார்க்க— தலைவர்

உள்ளாட்சிகள்— 358

செய்யூர் பஞ்சாயத்து; கையாடல்

சென்னை மாநகராட்சி, துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் (க.ஈ) 410—413

நகராட்சிகள், வாக்காளர் பட்டியல் 386

பல்கலை நகரை நகரியமாக்குதல், மதுரை. 355—356


எ


எரிபொருள்—

நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் விறகு விற்பனை, சென்னை 544


ஏ


ஏடுகள்— 117—118

அவைமுன் வைக்கப்பெற்றவை 223,343,529
701—702
827—829


க


கடற்கரை—

விளவங்கோடு தொகுதி. கடலரிப்புத்தடுப்பு 733—735

கருப்பையா திரு இரா—

உண்ணாவிரதம், வேளாண்மைத்துறை, தொழில் நுட்ப ஊழியர்கள்(ஒ.தீ) 403

கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 334—335
339

குழுக்கள், பதவிக் காலம் நீடிப்பு. (தீ) 258

குளித்தலையில் சூறாவளிக் காற்றால் பயிர்கள் பாதிப்பு. (க.ஈ) 623—624




பக்கங்கள்

'க'—தொடர்ச்சி


கருப்பையா, திரு. இரா—தொடர்ச்சி

கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு 1981 492,493

சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 805—807

சென்னை மாநகராட்சி, துப்புறவுத் தொழிலாளர்கள். வேலை நிறுத்தம் (க.ஈ) 410,411,412

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ) 394

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு 1981 801,802,803

தொழில் நகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1981 649—654

விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு 1981 மற்றும் பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 507—510
518

கருப்பையா திரு எ.டி—

உண்ணாவிரதம், வேளாண்மைத்துறை தொழில் நுட்ப ஊழியர்கள் 403

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ,தீ) 602

கோவை மாவட்டம், முதியோர் கல்வி நிலையங்கள் 536—537

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ) .. 394

கல்வி—

அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி அமைத்தல் தர்மபுரி .. 561—562

ஐ. ஏ. எஸ். தேர்வு பயிற்சி நிலையங்கள் .. 548—55

பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரி, அனுமதி .. 713—714

முதியோர் கல்வி நிலையங்கள் கோவை மாவட்டம் .. 536—537

பக்கங்கள்

முதுகலை வரலாற்று வகுப்பு திருப்பூர் சிக்கண்ணா அரசினர் கலைக்கல்லூரி .. 563—564

கல்விக்கூடங்கள்—

அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் ஒட்டப் பிடாரம் தாலுகா .. 535—536

ஆரம்பப்பள்ளி மாணவர்கள் மதிய உணவு .. 564—568

கலிதீர்த்தான் திரு. சோ—

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன் வடிவு, 1981, .. 325—327

'க'—தொடர்ச்சி

கலையரசன் திரு: நன்னிலம் அ.—

கும்பகோணம் நகராட்சி, துப்புரவுத் தொழிலாளர்களின் குடியிருப்புகள். .. 556—559

சர்வேயர்கள் நியமனம், அரிசன நல வட்டாட்சியர் அலுவலகங்கள் .. 245—246

கவன ஈர்ப்புகள்—

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை—ஊசி போட்டதால் மரணம் .. 253—255

இளம்பிள்ளை வாதம், மருந்து கிடைக்காமை, .. 416—418

கண்நோய், சென்னை .. 418—422

கன்னியாகுமரி—கொட்டாரம் கிராமம் குடிநீர்க் குழாய்கள் .. 756—758

குடகனாறு அணையைப் புதுப்பித்தல் .. 45—47

கும்பகோணம், சோழன் போக்குவரத்துக்கழக பேருந்து விபத்து .. 758—760

குழாய்க் கிணறுகளில் கைப்பம்புகள் வைக்க வேண்டிய அவசியம் குறித்து .. 628—635

குளித்தலையில் சூறாவளிக் காற்றால் பயிர்கள் பாதிப்பு .. 623—624

சங்கரன்கோவில், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், .. 42—45

சென்னை மாநகராட்சி துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் .. 410—413

சேலம் மாவட்டத்தில் தீவனம் இல்லாது கால் நடைகள் இறத்தல் .. 763—764

தஞ்சை மாவட்டம்—மாத்தூர் கிராமக் கூட்டுறவு சேவா சங்கம், உரக்கலப்பட வழக்கு .. 624—628

தமிழகத்திற்கு மைய அரசு ஒதுக்கும் அரிசி .. 753—756

மாஜிஸ்ட்ரேட்—முன்சீப் ஒருங்கிணைப்புச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் .. 764—769



பக்கங்கள்

'க'—தொடர்ச்சி

வறட்சியின் காரணமாக கால்நடைகள் வெட்டப் படுவது .. 760—762

வேடசந்தூர் இறைவை கூட்டுறவுச் சங்கம் மூலம் தோண்டப்பட்ட கிணறுகள் செயல்படாமை.. 769—770

வேலையின்மை, பீடித் தொழிலாளர்கள் .. 413—416

ஃபைட்டோ கெமிகல்ஸ் தொழிலாளர்கள் கைது.. 630—633

கழகங்கள்—

தோல் ஏற்றுமதி கழகம் இடமாற்றம் .. 537—539

கனிமங்கள்—

சுண்ணாம்பு சிப்பி குத்தகை, இராமநாதபுரம் தொகுதி .. 29

காட்டுவளம்—

சந்தன மரங்கள் ஏற்றுமதி, தடை .. 378—386

கால்நடைகள்—

கோழிப்பண்ணை, கப்பலூர், .. 375—376

சேலம் மாவட்டத்தில் தீவனம் இல்லாது கால் நடைகள் இறத்தல் (க.ஈ.) .. 763—764

வறட்சியின் காரணமாக கால்நடைகள் வெட்டப் படுவது (க.ஈ.) .. 760—762

காவல் துறை—

ஆலங்குளம் காவல் நிலையம், சமூக விரோதிகளால் தாக்கப்பட்டது .. 543

காளிமுத்து திரு. கா—

உண்ணாவிரதம் வேளாண்மைத்துறை தொழில் நுட்ப ஊழியர்கள் (ஒ.தீ.) .. 408

வேளாண் விளை பொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1981 639

கிட்டப்பா திரு. என்—

சென்னை, துப்பு துலக்கப்படாத வழக்குகள் .. 541—542

சென்னை, நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலம் விறகு விற்பனை .. 544

கிருஷ்ணன் திரு. ரா—

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம் (க.ஈ.) 253

இந்தி கற்றால்தான் பதவி உயர்வு என்பதன் மூலம் இந்தி திணிப்பு (ஒ.தீ.) .. 591

பக்கங்கள்

'க'—தொடர்ச்சி


553—554

ஸ்கூட்டர்கள் வரி விதிப்பு

கோபாலன், திரு. ஆர். டி. — 365

குமுளி பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு
பணிமனை, — 710

கோம்பை ரங்கநாதர் கோவில்—
ராமக்கல் மெட்டு, பாதை அமைத்தல்

கோமதி சீனிவாசன் திருமதி—

சேலம் மாவட்டத்தில் தீவனம் இல்லாது கால் — 763—764
நடைகள் இறத்தல் (க.ஈ.அ.)

வறட்சியின் காரணமாக கால்நடைகள் வெட்டப் — 761—762
படுவது (க.ஈ.அ.)

கோவைத்தம்பி, திரு—

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் — 815—820
(த.தீ.)

மாவட்ட காவல்—சென்னை மாநகரக் காவல் — 693—695
(திருத்த) சட்டமுன்வடிவு, 1981

வரவு செலவுத்திட்டம், 1981—82, வாக்கெடுப்பு
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், — 67—73
தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட
நிர்வாகம் — 186—190

மாநிலச் சட்டமன்றம்
தேர்தல்கள் — 445—448

வன (திருத்த) சட்ட முன்வடிவு, 1981


'ச'


சட்ட முன்வடிவுகள்—

இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த)
சட்ட முன்வடிவு, 1981,

| | |
|---|---|
| ஆ. இ. | 261 |
| அ. நி. | 262 |
| ஆ. நி. | 520—529 |
| பிரி. ஆ. | 526 |
| நிறைவேற்றுதல் | |

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த-சிறப்பு
விதித்துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு,
1981,




'ச'—தொடர்ச்சி.


சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| அ. நி. | 47 |
| ஆ. நி. | 423—433 |
| பிரி. ஆ. | 435—436 |
| நிறைவேற்றுதல் | 436 |

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்
வடிவு, 1931.

| | |
|---|---|
| ஆ. இ. }<br>அ. நி. } | 119 |
| ஆ. நி. }<br>பிரி. ஆ. }<br>நிறைவேற்றுதல் } | 325—330<br>331<br>842 |

கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட
முன்வடிவு, 1981.

| | |
|---|---|
| ஆ. நி. | 331—341 |
| பிரி. ஆ. | 341—342 |
| நிறைவேற்றுதல் | 342 |

கலவரப் பகுதிகள் (சட்டவிரோதக் கூட்டத்
தினரால் காயம் அடைந்தவருக்கு இழப்பீடு
கொடுக்கும்) சட்ட முன்வடிவு, 1981

| | |
|---|---|
| அ. நி. | 633—689 |
| ஆ. நி. | 817 |

குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த)
சட்ட முன்வடிவு, 1981.

| | |
|---|---|
| ஆ. நி. | 493—496 |
| பிரி. ஆ. | 496—947 |
| நிறைவேற்றுதல் | 497 |

கைத்தறி தொழிலாளர்கள் (வேலை நிலைமை
களும் விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு,
1981

| | |
|---|---|
| ஆ. இ. | 457 |
| ஆ. நி. | 457—497 |
| பிரி ஆ. | 492—492 |
| நிறைவேற்றுதல் | 499 |

'ச'— தொடர்ச்சி.

சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி.


| | | பக்கங்கள் |
|---|---|---|
| சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981. | | |
| | அ. நி. | 639—640 |
| | ஆ. இ. | 803 |
| | ஆ. நி. | 804—813 |
| | பிரி. ஆ. } நிறைவேற்றுதல் } | 814—815 |
| சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981. | | 262 |
| | ஆ. இ. | 522 |
| | அ. நி. | 265 |
| | ஆ. நி. | 527 |
| | பிரி. ஆ. நி. | 527—525 |
| | நிறைவேற்றுதல் | 529 |
| தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981. | | |
| தொழில் தாலுக்காக்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு. | | |
| | ஆ. நி. | 642—658 |
| | பிரி. ஆ. } நிறைவேற்றுதல் } | 658 |
| தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு, 1981 | | |
| | ஆ. நி. | 771—80 |
| | பிரி. ஆ. | 801—803 |
| | நிறைவேற்றுதல் | 803 |
| நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1981. | | |
| | ஆ. இ. | 221 |
| | அ. நி. | |
| | ஆ. நி. | 262—324 |
| | பிரி. ஆ. | 324—325 |
| | நிறைவேற்றுதல் | 325 |
| | மே. .செ | 822 |




'ச'— தொடர்ச்சி.

சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி.


| | | பக்கங்கள் |
|---|---|---|
| பட்டா பாஸ் புத்தகம் வழங்கல் சட்ட முன்வடிவு, 1981— | | |
| | அ. நி. | 261 |
| | ஆ. நி. | 699 |
| பல்கலைக் கழகக் கல்லூரித் தேர்வுகள் (ஆசிரியர்களும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களும் தேர்வின்போது மாணவர்களை கண்காணித்தல்) சட்டமுன்வடிவு, 1981 (திரும்பப் பெறுதல்). | | 640—641 |
| பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) | | 423 |
| பொது விற்பனை வரி (திருத்தம்) சட்ட முன்வடிவு, 1981— | | |
| | (ஆ.இ.) | 260 |
| | அ.நி. | 261 |
| | ஆ.நி. | 497—519 |
| | பிரி.ஆ. | |
| | நிறைவேற்றுதல் | 519—520 |
| மாவட்ட காவல்—சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு; 1981— | | |
| | ஆ.நி. | 684—698 |
| | பிரி.ஆ. | 698 |
| | நிறைவேற்றுதல் | 698 |
| வன (திருத்த) சட்ட முன்வடிவு, 1981— | | |
| | ஆ.நி. | 436—456 |
| | பிரி.ஆ. | |
| | நிறைவேற்றுதல் | 457 |
| விற்பனை வரி (மேல்வரி) திருத்த சட்ட முன்வடிவு, 1981 — | | |
| | ஆ.இ. | |
| | அ.நி. | 229—260 |
| | ஆ.நி. | 497—519 |
| | பிரி.ஆ. | |
| | நிறைவேற்றுதல் | 519—520 |

சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி. பக்கங்கள்.

வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981
- ஆ.நி. 658—684
- பி.ஆ.
- நிறைவேற்றுதல் 684

வேளாண் விளைபொருள் அங்காடிகள் இரண்டாம் (திருத்த சட்ட முன்வடிவு) 1981—
- அ.நி. 63

**சண்முகம், திரு. ஏ. சி.—**
- கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்டமுன்வடிவு, 1981— 471—473

**சத்தியமூர்த்தி, திரு. வ.—**
- பிற்பட்ட சமுதாய மக்கள் மேம்பாடு, வாரியம் அமைத்தல் 544—548
- மேலசெழுவனூர் (முதுகுளத்தூர் வட்டம்), காட்டு நிலங்களுக்கு பட்டா வழங்குதல் 347—350

**சந்திரசேகரன், திரு. ஏ.—**
- திருப்பூர் குமரன் சிலை அமைத்தல் 3?0—3?2
- வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981— 66?—666
- ஃபைட்டோ கெமிக்கல்ஸ் தொழிலாளர்கள் கைது (க.ஈ.) 630,63?

**சமரசம், டாக்டர் கே.—**
- நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1981 289—29?
- மதிப்பீட்டுக் குழு அறிக்கைகள் அளித்தல் 25?, 409
- மாவட்ட காவல்—சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 ?88—691
- வரவு செலவுத் திட்டம், 1981-72. வாக்கெடுப்பு—
  - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம் 5?—62,82
- வண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 443—445





பக்கங்கள்.

சமூக நலன்—
- ஏழைகள், இலவச சட்ட உதவி 8—17
- ''குரும்பர்'', ஜாதி முரண்பாடு 241—242

சாலைகள்—
- கோம்பை ரங்கநாதர் கோவில்—ராமக்கல் மெட்டு, பாதை அமைத்தல் 710
- விளவங்கோடு தாலுக்கா, பயன்படுத்தாத தார் டின்கள் 357

சித்தன் திரு. என். எஸ். வி.—
- அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம் (க.ஈ.) 258
- உண்ணா விரதம், வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள் (ஒ.தி) 103
- எதிர்கட்சித் தலைவர் பத்திரிகைக்கு அளித்த பேட்டி (உ.பி,) ?90—511
- கப்பலூர் கோழிப்பண்ணை 375—37?
- குரோம்பேட்டை விவரம் (த.கோ.) 736,737
- கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ.தீ.) 609—613
- சென்னை மண்ணெண்ணெய் விநியோகத்தை தனியாரிடம் விடுதல் (ஒ.தீ.) 38,39—40
- தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ.) 394, 399—401
- பத்திரப்பதிவு அலுவலகங்கள், எக்ஸிராக்ஸ் இயந்திரங்களை பயன்படுத்தல் 708—709
- பொறியியல் துறை அதிகாரி திரு. மணவாளன் வெளியிட்ட அறிக்கை (உ. .) 739, 744—7?

சித்தன் திரு. என். எஸ். வி.—தொடர்ச்சி.
- மாநிலத் திட்டங்கள், மத்திய அரசு ஒதுக்கீடு, 225
- விற்பனை வரி (மேல்வரி) திருத்த சட்ட முன்வடிவு, 1981 மற்றும் பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 497—500, 517—518
- ஃபைட்டோ கெமிக்கல்ஸ் தொழிலாளர்கள் கைது (க.ஈ.) 630

ச—தொடர்ச்சி


சிவசாமி, திரு. செ—

உண்ணாவிரதம் வேளாண்மைத் துறை தொழில்நுட்ப ஊழியர்கள் (ஒ.தீ) 403

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 327—328

கும்பகோணம், சோழன் போக்குவரத்துக்கழக பேருந்து விபத்து (க.ஈ.) 7?8

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ.தீ.) 602

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ.) 394, 397—398

பரமக்குடி நகரப் பஞ்சாயத்து, பாதாளக் கழிவு நீர்த் திட்டம் 19—23

மாவட்ட காவல்—சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 691—693

சிவப்பிரகாசம், திரு. சி.—

மலைவாழ் மக்கள், கடன் நிவாரணச் சட்டம், 35—36

சிவராமன், திரு, எஸ்.—

இந்து சமய அறக்கட்டளைகள் திருத்த-சிறப்பு விதித் துறைகள் திருத்த சட்ட முன்வடிவு, 1981 421—426

சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையம் 376—378

சின்னசாமி, திரு. எம்.—

வடிவேல் நகர் சீர்பாகம் கிராமம்—ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கல் 573—575

சின்னராசு, திரு. மா.—

"குரும்பர்' ஜாதி முரண்பாடு 241—242

தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1981 646—649

மாஜிஸ்ட்ரேட் முன்சீப் ஒருங்கிணைப்புச்

சின்னராசு, திரு. மா.

சட்டத்தினை நடைமுறைப் படுத்துதல் (க.ஈ) 764—767






ச—தொடர்ச்சி


சுந்தரம், திரு. கே. ஆர்—

இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981. 521

கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981, 331—332, 340

சங்கரன் கோவில், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் (க.ஈ) 42

தமிழகத்திற்கு மைய அரசு ஒதுக்கும் அரிசி (க.ஈ.) 753

பீடித் தொழிலாளர்கள் வேலையின்மை (க.ஈ.) 413, 415

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு-மாநிலச் சட்ட மன்றம் தேர்தல்கள். 165

சுந்தரம் திரு. ப.—

குழாய் கிணறுகளில் கைப்பம்புகள் வைக்க வேண்டிய அவசியம் குறித்து (க.ஈ.) 628

சுந்தரராஜ், திரு, நா.—

கலவரப் பகுதிகள் (சட்ட விரோதக் கூட்டத்தினால் காயம் அடைந்தவருக்கு இழப்பீடு கொடுக்கும்) சட்ட முன்வடிவு, 1981. 638—639

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ.தீ.) 602

வரவு செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம். 84, 120, 121—129, 131, 132—133, 134—141, 152—153

வன (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 436—438

சுந்தரராஜன் திரு. மு.—

விருதுநகர் மருத்துவமனையில் நெருக்கடி 718

சுப்ரமணியன், திரு. உ.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு மாநிலச் சட்டமன்றம், தேர்தல்கள். 166—172

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுவாமிநாதன், திரு. வி. வி.—

சிதம்பரம்-காட்டுமன்னார்கோவில், தனி வருவாய்க் கோட்டமாக்குதல் 554

செங்கோட்டையன், திரு. கு. அ.—

பூச்சிமருந்து மற்றும் விதைப் பொருட்கள் மானியம், 352—354

செம்மலை, திரு. செ.—

உள்நாட்டு மீனவர்கள் வீடுகள் கட்ட கடன்வசதி, 551—553

மாஜிஸ்ட்ரேட் முன்சீப் ஒருங்கிணைப்புச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல் (க. ஈ.) 764

மின்துறை ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு. 703—794

செல்லமுத்து, திரு. எம்.—

தஞ்சை மாவட்டம் விவசாயத்திற்கு தண்ணீர் வசதி. 235—237

வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981. 668—669

செல்வராசன், திரு. அ.—

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம் (க. ஈ.) 253

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—

இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981, 261—262, 520, 525—526

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1981, 329—330

கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981, 331, 336—339, 340, 341, 342

கள்ளுக்கடைகள் திறப்பை ஒத்தி வைத்தல் (த. கோ.) 222

குளித்தலையில் சூறாவளிக் காற்றால் பயிர்கள் பாதிப்பு. (க. ஈ. அ.) 623—624

சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981, 527—528, 529



பக்கங்கள்

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—தொடர்ச்சி

ச—தொடர்ச்சி

நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப் பெறும் வரைவு அறிக்கை (த. தீ.) 708

நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1981. 273

பட்டா பாஸ் புத்தகம் வழங்கல் சட்டமுன்வடிவு 1981. 261

பொது விற்பனை வரி (திருத்தம்) சட்ட முன்வடிவு, 1981. 211, 497, 511—520

விதி 32-ஐத் தளர்த்தல் (தீ.) 770

விற்பனைவரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981, மற்றும்

வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு 1981 658, 676—684

சௌரிராஜன், டாக்டர் கே.—

சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்தம்) சட்டமுன்வடிவு, 1981. 808—809

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது (உ. பி.) 387—389, 392—393

விற்பனைவரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981. 259—260

"த"

தங்கமணி, திரு. கே. எம்.—

உண்ணாவிரதம் வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள். 403, 406—407

கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981, 340—341

குறைந்த அளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1981, 493—494

ஃபைட்டோ கெமிகல்ஸ் தொழிலாளர்கள் வகது (க. ஈ.) 630

வரவு-செலவுத் திட்டம் 1981-82 வாக்கெடுப்பு மாநில ஆட்சித் தலைவர் அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம் 48

மாநிலச் சட்ட மன்றம் தேர்தல்கள். 165

128 204—5

பக்கங்கள்

தங்கவேல் ராஜ், திரு. பி. எம்.—

த—தொடர்ச்சி

| | |
|---|---|
| உண்ணாவிரதம் வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள் (ஒ.தீ.) | 403 |
| தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ) | 396 |
| வரவு-செலவுத் திட்டம் 1981-82 வாக்கெடுப்பு, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம் | 62—67 |
| வேளாண்மைத் துறை தொழில் நுட்ப அலுவலர்கள் உண்ணாவிரதம் (த.கோ) | 248 |

தங்கவேலு, திரு. பி.—

| | |
|---|---|
| உடையார் பாளையம் வட்டம் பொன்னாறு வாய்க்கால் சீர்திருத்தம் | 23—25 |
| கங்கைகொண்ட சோழபுரம் பொன்னேரியை விரிவுபடுத்துதல் | 238—239 |

தலைவர்—

அறிவிப்புகள்—

| | |
|---|---|
| பேரவை அலுவல் | 428 |
| பேரவை நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள் | 822—826 |

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் !

உரிமைப் பிரச்னை :

அரசுத் துறை மீது :

''பொதுக் கணக்குக் குழு கோரும் விளக்கங்களை துறைகள் உரிய காலத்தில் அளிக்காதது, 'அவை உரிமை மீறிய செயலாகும்' என்பதாக ஓர் உறுப்பினர் தம் உரிமைப் பிரச்சினை அறிவிப்பை யொட்டி 13-5-1981-ஆம் நாள் அதற்கான ஆதாரங்களை எடுத்துச் சொன்னார்.

இதற்கு மின் துறை அமைச்சர் விளக்கம் அளிக்கையில், அதே அறிக்கையில் குழுவின் தலைவர் எல்லாத் துறைத் தலைவர்களும் ஒத்துழைப்புத் தந்துள்ளார்கள் எனப் பாராட்டி இருப்பதைச் சுட்டிக்காட்டி, என்றாலும், ''குழு நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய வகையில் எந்த அதிகாரி செயல்பட்டாலும் அதை அரசின் கவனத்திற்கு இத்தகைய குழுக்கள் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது என்று உறுதி அளித்தார்.



பக்கங்கள்

எதிர்க்கட்சித் தலைவர் மீது :

தலைவர் (தொடர்ச்சி)

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் (தொடர்ச்சி)

உரிமைப் பிரச்னை (தொடர்ச்சி)

''அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை'' எனத் தீர்ப்பு அளிக்கும்போது தலைவர் அளித்த குறிப்புரை யாவது :

''அமைச்சர் அவர்கள் அவைக்கு அளித்துள்ள உறுதியின் மேல் அரசுத் துறைகள் இனிமேலாவது காலதாமதமின்றி அவைக் குழுக்களின் அலுவல்களில் எவ்வித தாமதமும் ஏற்படாது உடனுக்குடன் பதில்களை அளிக்க வேண்டும் என்ற முறையைக் கடைபிடிக்க வேண்டும் என்பதை அரசு அவர்களுக்குக் கண்டிப்பாக வற்புறுத்த வேண்டும்''. 579—586

உள்துறை அதிகாரி மீது—

''காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் 5-5-1981 அன்று பேரவையில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கையில், அத்துறையில் எடுக்கப்படயிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி உள்துறை உயர் அதிகாரி ஒருவர், பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளது 3-5.1981-ஆம் நாளிட்ட தினமணியில் வந்துள்ளது என்றும், இது அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் சில உறுப்பினர்களால் கொடுக்கப்பெற்றிருந்த அறிவிப்புகள் மீது தலைவர் 13-5-1981-ஆம் நாள் அளித்த தீர்ப்பானது :

''அரசின் கொள்கை பற்றிய அறிவிப்புகள், பேரவைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில்

பேரவையில்தான் செய்யவேண்டும் என்பது மரபு தானேயொழிய, அப்படி செய்யாதது உரிமை மீறலாகாது என்று பல தீர்ப்புகள் உள்ளதால் எழுப்பப்பட்ட பிரச்னையில் அவை உரிமை மீறல் எழவில்லை.

எனினும் கொள்கை பற்றிய ஒரு பிரச்சினையை, அதுவும் மானியக் கோரிக்கை பேரவையில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கையில் பத்திரிகையில் வெளியிடுவது சரியான மரபாகாது : எதிர்காலத்தில் இப்படி வெளியிடுவது தவிர்க்கப்படவேண்டும்''. 579

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் காவல் நிலையத்தில் 16-4-81-ல் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட டேவிட் ராஜ் என்பவர் காவல் ஏலையத்தில் இறந்ததால் அப்பகுதி மக்கள் மத்தியில் நிற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து''

**தலைவர் (தொடர்ச்சி)**

அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. 249—253

"சென்னை நகரில் குடும்பக் கார்டுகளுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கி வந்த மண்ணெண்ணெயை தனியார் வழங்க உத்தரவிட்டுள்ளதால், மக்கள் மத்தியில் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து"

அவை முன்னவர் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது". 38—42

**தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் (தொடர்ச்சி)**
**உரிமைப் பிரச்சினை (தொடர்ச்சி)**

த—தொடர்ச்சி — பக்கங்கள்

"தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் குறித்து"

கல்வி அமைச்சர் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது. .. 394—403

"தமிழ் நாடு வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள் உண்ணாவிரதம் குறித்து"
வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது. 4‍3—408

"தமிழ் நாட்டின் கடைசிப் பகுதியான குமரி மாவட்டத்தில் நீரோடியிலுள்ள மீனவர்களுக்கும் அடுத்த மாநிலமான கேரளாவினைச் சார்ந்த பொழியூர் மீனவர்களுக்கும் ஏற்பட்டுள்ள மோதலின் காரணமாக நீரோடி பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து"

அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது. .. 747—750

மத்திய அரசுப் பணிகளை இந்தி மொழியில் நிர்வகிக்கும் ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை அளிக்கச் செய்வதன் மூலமாக மத்திய அரசு மறைமுகமாக இந்தியைத் திணிப்பதற்கு முடிவு செய்ததன் விளைவாக ஏற்பட்டுள்ள பாகுபாடு பற்றியும், பதட்டநிலை குறித்தும்"

மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. 591—602





**தலைவர் (தொடர்ச்சி).**

"எதிர்க்கட்சித் தலைவர் செய்தியாளர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில் பேரவைத் தலைவரின் தீர்ப்பு ஒன்றைப் பற்றி கூறியுள்ள சில கருத்துக்கள் பேரவைத் தலைவர் அவர்களை குற்றம் சாட்டும் தன்மையில் அமைந்துள்ளது அவையின் உரிமையை மீறிய செயலாகும்", என்பதாக 13-5-1998 ஆம் நாள் எதிர்க்கட்சித் தலைவரின் மீது ஓர் உரிமைப் பிரச்னை எழுப்பப்பெற்றது. இதுபற்றி விளக்கம் கேட்டு எதிர்க்கட்சித் தலைவருக்கு எழுதி இருப்பதாகவும், அவரிடம் இருந்து பதில் வந்தவுடன் அதைப் பரிசீலித்து தம் தீர்ப்பை வழங்குவதாகவும் பேரவைத் தலைவர் குறிப்புரைத்தார். 586—[illegible]

பொறியியல் துறை அதிகாரி திரு மணவாளன் மீதும், பத்திரிகை மீதும்—

முதல் அமைச்சர் அவர்கள் அவைக்கு அளித்த தகவல் சம்பந்தமாக திருத்தம் கொடுப்பது எனில் அதை உரிய முறையில் அளிப்பதற்குப் பதிலாக

பொறியியல் துறை அதிகாரி திரு மணவாளன் பத்திரிகை மூலமாக மறுப்புத் தெரிவித்திருப்பது அவை உரிமையைப் பாதிப்பதாகும் என சில உறுப்பினர்கள் மே மாதம் 14 ஆம் நாள் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்கள்.

முதல் அமைச்சர் அவர்களும் தம் கருத்தைத் தெரிவித்தார்.

பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு விடவேண்டும் என்ற தீர்மானம் முன்மொழியப்பட்டு விவாதித்த பின்னர் திரு மணவாளன் மீதும் அவரது அறிக்கையை வெளியிட்ட பத்திரிகை மீதுமான உரிமைப் பிரச்சினை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றது. 738—746

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது—

"சென்னை நகரத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் மயக்க மருந்து கொடுப்பவர்களில் தகுதியற்றவர்கள் யாரும் இல்லை என்று அமைச்சர் 8-4-98 அன்று மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது கூறியது உண்மை நிலைக்குப் புறம்பானது" என்பதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது உரிமைப் பிரச்சினை எழுப்ப 1998, மே 12 ஆம் நாள் ஓர் உறுப்பினர் அனுமதி கோரினார்.

பக்கங்கள்

தலைவர் (தொடர்ச்சி)

''மயக்க மருந்து கொடுப்பதில் பட்டம் பெற்ற
வர்கள் அல்லது அதில் பயிற்சி பெற்றவர்கள்தான்
கொடுக்கிறார்கள். எனவே தாம் கூறியதில் உரிமை
மீறல் ஏதும் இல்லை'' என்று அமைச்சர் விளக்கம்
அளித்தார்.

தலைவர் அளித்த தீர்ப்பாவது :

''இது குறித்து மேற்கொண்டு நடவடிக்கை
எதுவும் தேவையில்லை'' — 387—393

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் (தொடர்ச்சி)

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் :

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் (தொடர்ச்சி)
ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் (தொடர்ச்சி).
''விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன்
பாக்கிகளை 30-6-1981-க்குள் செலுத்தினால்
வட்டிச் சலுகை அளிக்கப்படும் என்று அரசு
அறிவித்திருந்தும், கூட்டுறவு அதிகாரிகள்
அதற்கு முன்பே தமிழகம் முழுவதும் ஜப்தி
நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து''
கூட்டுறவு—சட்டத் துறை அமைச்சரின் விளக்கத்
திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. — 602—623

குறுக்கீடு

''அனுமதி இல்லாமல் உறுப்பினர்கள் அடிக்கடி
குறுக்கிடுவது முறையல்ல''. (வ.செ.நி.) — 153

வினாக்கள்—விடைகள்—

''அமைச்சர் இப்படித்தான் பதில் சொல்ல
வேண்டும் என்று சொல்லக்கூடிய வாய்ப்பும்,
உரிமையும் தலைவருக்குக் கிடையாது''. (து.வி.) — 22, 23

''கேள்வி நேரத்தில் வாதங்களை எழுப்பக்
கூடாது.'' .. — 23

''துணை வினாக்கள் சுருக்கமாக இருத்தல்
வேண்டும்'' .. — 33

''துணை வினாக்கள் மூல வினாவை ஒட்டிய
தாக இருத்தல் வேண்டும்''. (து.வி.) — 533—231



த—தொடர்ச்சி — பக்கங்கள்

தலைவர்கள்—

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், விடுமுறை — 225—228

தனுக்கோடித்தேவர் திரு கே—

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்
போராட்டம் (ஒ.தீ.) — 394

பேரையூர், ஆதிதிராவிடர் மாணவர்கள் தங்கும்
விடுதி, — 246—247

தாமரைக்கனி திரு. இரா—

அரசு கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை,
சென்னை, ஊசி போட்டதால் மரணம்,
(க.ஈ.) — 253

அரசுப் பேருந்துகள், அதிகப்பயணிகள் செல்லத்
தடை — 365—368

எழும்பூர், குழந்தைகள் மருத்துவமனை
விரிவாக்கம். — 714—715

கடைகள், விலைப்பட்டியல் வைக்கும் சட்டம், — 1—4

சங்கரன்கோவில், கைத்தறி நெசவுத் தொழி
லாளர்கள் வேலைநிறுத்தம், (க.ஈ.) — 42, 45

சந்தனமர ஏற்றுமதி, தடை, — 378—386

சென்னை, கண் நோய், (க.ஈ.) — 418,419—420

சேலம் மாவட்டத்தில் தீவனம் இல்லாது கால்
நடைகள் இறத்தல் (க.ஈ.) — 763

திருவண்ணாமலை கிராமம், புஞ்சை நிலத்தை
நத்தமாக மாற்றுதல் — 230—231

திருவில்லிபுத்தூர் கான்வென்ட் பள்ளி, அரசு
நிலத்தைக் கொடுத்தல். — 555—556

மல்லி பாலம் பழுது பார்த்தல், — 355

திட்டங்கள்—

மாநிலத் திட்டங்கள், மத்திய அரசு ஒதுக்கீடு, — 225

தியாகராசன் திரு ஆர்—

விருத்தாசலம் நகராட்சி, குடிநீர் வழங்கல். — 17

திருவேங்கடம் திரு பெ. சு—

அரசு கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை,
சென்னை, ஊசி போட்டதால் மரணம்,
(க.ஈ.) — 253

குழாய் கிணறுகளில் கைப்பம்புகள் வைக்க
வேண்டிய அவசியம் குறித்து (க.ஈ.) — 628

த—தொடர்ச்சி — பக்கங்கள்

திருவேங்கடம் திரு. பெ.சு, —தொடர்ச்சி—

வடஆற்காடு மாவட்டம், பெரியார் போக்கு வரத்துக்கழக பேருந்துகள் விடுதல் 718—720

தீர்த்தராமன் திரு. ப.—

அரசின் கொள்கைபற்றிய அறிவிப்புகளை அவையில் வெளியிடுவதற்கு முன் நாளேடுகளுக்கு தெரிவித்தது. (உ.பி) 579

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம், (க.ஈ.) 253

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ.தீ) 614—615

தீர்மானங்கள்—

அரசினர் தனித் தீர்மானங்கள்:—

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடன்வரம்பு—மாநில அரசின் செயற்குறிப்பு. 699—700

நகர்ப்புற நில வரிச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப் பெறும் வரைவு அறிக்கை 700

அலுவல் வரிசையில் மாற்றம் 423

641—642

உரிமைத் தீர்மானம்:

பொறியியல் துறை அதிகாரி திரு. மணவாளன் வெளியிட்ட அறிக்கை 738—746

ஒத்திவைப்புத் தீர்மானம் (பார்க்க—தலைவர்)

குழுக்கள், பதவிக் காலம் நீடிப்பு, 256—258

தனித் தீர்மானங்கள்—

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் 815—821

நாள் குறிப்பிடாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுவது 826—827

விதி 31-ஐத் தளர்த்தல் 116

விதி 32—ஐத் தளர்த்தல் 770

விதி 54—(6) ஐத் தளர்த்தல் 410,623,751

விதி 58 ஐ தளர்த்தல், 394, 591

துரை முருகன் திரு—

சங்கரன்கோவில், நெசவுத் தொழிலாளர்கள், வேலைநிறுத்தம், (க.ஈ) 42





த—தொடர்ச்சி — பக்கங்கள்

துரைராஜ் திரு. பி—

சங்கரன்கோவில், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம், (க.ஈ) 42

தொழிலாளர்கள்—

பீடித் தொழிலாளர்கள் வேலையின்மை, (க.ஈ.) 413—416

மட்பாண்டத் தொழிலாளர்க்கு கருவிகள், வடஆற்காடு மாவட்டம் 731—732

தொழிற்சாலைகள்—

உப்பு சம்பந்தப்பட்ட தொழில்கள், தூத்துக்குடி 30

கெடிகார தொழிற்சாலை, கொடைக்கானல் 569

தனியார் பஞ்சாலைகள், வேலை வாய்ப்பு 539— 541

மீன் எண்ணெய், கன்னியாகுமரி, 4

மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரித்தல், கூட்டுத்துறை 570

ரப்பர் தொழிற்சாலை அமைத்தல் கன்னியாகுமரி மாவட்டம், 706—708

"ந"

நல்லப்பன் திரு தி. கா—

இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981, 520—521

உண்ணாவிரதம், வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள் (ஒ.தீ.) 403

கும்பகோணம், சோழன் போக்குவரத்துக் கழக பேருந்து விபத்து (க.ஈ.) 758

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ.தீ.) 602

கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981, 463—465

சென்னை, கண் நோய் (க.ஈ) 418—421

சென்னை, மண்ணெண்ணெய் விநியோகத்தை தனியாரிடம் விடுதல், (ஒ.தீ.) 38

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ.) 394

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம். 8

பக்கங்கள்

ந—தொடர்ச்சி


நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர்—

- அரசின் கொள்கை பற்றிய அறிவிப்புகளை அவையில் வெளியிடுவதற்கு முன் நாளேடு களுக்கு தெரிவித்தது (உ. பி.) .. 579
- அரசு கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம், (க.ஈ.) 254, 255
- சென்னை, கண் நோய், (க.ஈ.) .. 418, 422
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
  - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம் .. 92—96

நிதி அலுவல்கள்—

- வரவு-செலவுத் திட்டம் 1981-82 வாக்கெடுப்பு
  - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மை களும், பல்வகை மூலதனச் செலவு, ..
  - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங் களும் .. 220—221
- மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம் .. 47—116, 119—164
  - மாநிலச் சட்ட மன்றம், தேர்தல்கள் .. 164—22

நிலங்கள்—

- அரசு நிலத்தை கான்வென்ட் பள்ளிக்குக் கொடுத்தல், திருவில்லிபுத்தூர் .. 555—556
- புஞ்சை நிலத்தை நத்தமாக மாற்றுதல், திருவண்ணாமலை கிராமம். .. 230—231
- மேலசெழுவனூர் (முதுகுளத்தூர் வட்டம்) காடு பட்டா வழங்குதல். .. 347—350
- வாலாஜா ஏரிப் புறம்போக்கு, ஆக்கிரமிப்பு, .. 228—230

நினைவுச் சின்னங்கள்—

- குமரன் சிலை அமைத்தல், திருப்பூர். .. 350—352

நீக்கம்— .. 167, 190, 368, 660, 673, 750, 751, 75




பக்கங்கள்

ந—தொடர்ச்சி


நீதிமன்றங்கள்—

- ஏழைகள், இலவச சட்ட உதவி, .. 8—17
- குற்றவியல் நீதிமன்றம், காஞ்சிபுரம். .. 7—8
- மாஜிஸ்ட்ரேட்-முன்சீப் ஒருங்கிணைப்புச் சட்டத் தினை நடைமுறைப்படுத்துதல் (க.ஈ.) .. 764—769

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—

- இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 .. 47
- உறுப்பினரின் அறிவிக்கை குறித்து (த.கோ.) .. 751
- எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 119, 325, 330
- குரோம் பேட்டை கலவரம் (த. கோ.) .. 737
- குழுக்கள், பதவிக் காலம் நீடிப்பு (தீ.) .. 256, 257—258
- குளச்சல் காவல் நிலையம், விசாரணைக் கைதி மரணம் (ஒ.தீ.) .. 251—253
- சங்கரன்கோவில், கைத்தறி நெசவுத் தொழி லாளர்கள், வேலை நிறுத்தம் (க.ஈ.அ.) .. 43, 44, 45
- சபளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981. .. 262
- சென்னை, மண்ணெண்ணெய் விநியோகத்தை தனியாரிடம் விடுதல், (ஒ.தீ.) .. 41—42
- தமிழக—கேரள மாநில மீனவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல் (ஒ.தீ.) .. 750
- தமிழகத்திற்கு மைய அரசு ஒதுக்கும் அரிசி (க.ஈ.அ.) .. 753—754, 755—756
- நாள் குறிப்பிடாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுவது (தீ.) .. 826—827
- நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு, 1981. 221, 262, 311—316, 317—324
- பொறியியல் துறை அதிகாரி திரு. மணவாளன் வெளியிட்ட அறிக்கை. (உ.தீ.) .. 740, 746
- போப் ஆண்டவர் நலம் பெற வாழ்த்து .. 735—736

ந—தொடர்ச்சி

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—தொடர்ச்சி

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

மாநில சட்ட மன்றம், .. 164, 165, 166,

தேர்தல்கள் 208—219

விதி 31-ஐத் தளர்த்தல் (தீ.) ... 116

விதி 54 (6)-ஐத் தளர்த்தல் (தீ) .. 752

நெடுமாறன் திரு. ப.—

இந்தி கற்றால்தான் பதவி உயர்வு என்பதன் மூலம் இந்தி திணிப்பு (ஒ.தீ.) .. 595—597

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு (த.கோ.) 387

எதிர்க்கட்சித் தலைவர் பத்திரிகைக்கு அளித்த பேட்டி (உ.பி.) .. 586—591

கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்டமுன்வடிவு, 1981 .. 458—460

சந்தனமர ஏற்றுமதி, தடை .. 378—386

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், போராட்டம் (ஒ.தீ.) .. 394, 396—397

தமிழ் பாடப் புத்தகங்கள், நீக்கப் பெற்ற பாடங்கள். .. 531—535

நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1981 316—317

மதுரை, பல்கலை நகரை நகரிய மாக்குதல் 355—356

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு—

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமைபீடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம் .. 81—87

.. 102—111

.. 120—121, 162

ஃபைட்டோ கெமிகல்ஸ் தொழிலாளர்கள் கைது (க.ஈ.) .. 630

நோய்கள்—

இளம்பிள்ளை வாதம், மருந்து கிடைக்காமை (க.ஈ.) .. 416—418

கண் நோய், சென்னை (க.ஈ.) .. 418—422

'ப'

பணப்பயிர்கள்—

பல நிறப் பருத்தி உற்பத்தி 354



ப—தொடர்ச்சி

பம்மல், நல்லதம்பி திரு.—

குரோம்பேட்டை, மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை வசதியின்மை .. 712—713

பலராமன், திரு. இல.—

குழாய்க் கிணறுகளில் கைப் பம்புகள் வைக்க வேண்டிய அவசியம் குறித்து (க.ஈ.) .. 628

பழனிமுத்து திரு. செ.—

ஃபைட்டோ கெமிகல்ஸ் தொழிலாளர்கள் கைது (க.ஈ) .. 630

பழனிவேல், திரு. என்.—

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை ஊசி போட்டதால் மரணம் (க.ஈ) .. 253

ஆதி திராவிட மாணவர் உதவித் தொகை 243—245

இந்து சமய அறக் கட்டளைகள் திருத்த-சிறப்பு விதித் துறைகள் திருத்த சட்டமுன்வடிவு, 1981 429—431

உண்ணாவிரதம், வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள் (ஒ.தீ.) 403

எதிர்பாரா செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 .. 329

கன்னியாகுமரி—கொட்டாரம் கிராமம் குடிநீர்க் குழாய்கள் (க.ஈ) .. 756

குளச்சல் காவல் நிலையம், விசாரணைக் கைதி மரணம் (ஒ.தீ) .. 249

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ.தீ) .. 602

சென்னை, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான ஐ.ஏ.எஸ் பயிற்சி நிலையம் .. 570—572

நூனியார் பஞ்சாலைகள், வேலை வாய்ப்பு .. 539—541

ஸ்டான்லி மருத்துவமனையில் காணப்பெறும் குறைபாடு (த.கோ) .. 578

பாசனம்—

ஆறுகள், மழைக்கால வெள்ளம் வீணாவதைத் தடுத்தல் .. 23

உத்திரமேரூர் ஏரி மராத்துப் பணிகள் .. 237—238

உப்பாற்றில் அணைக் கட்டும் திட்டம்' மானா மதுரை தொகுதி .. 239—241

ஏரி அமைத்தல் சித்தமல்லி கிராமம் .. 28—29

குடகனாறு அணையைப் புதுப்பித்தல் (க.ஈ.) 45—47

பாசனம்—தொடர்ச்சி — பக்கங்கள்

- புதிய பாசனக் கண்மாய், வெள்ளாகுளம், (சங்கரன்கோவில் வட்டம்) — 27—28
- பொன்னாறு வாய்க்கால் சீர்திருத்தம் உடையார் பாளையம் வட்டம், — 23—25
- பொன்னேரியை விரிவுபடுத்துதல் கங்கை கொண்ட சோழபுரம் — 238—739
- வெள்ளக்கல் நீர்த்தேக்கத் திட்டம்,வாணியம்பாடி தாலுக்கா — 25—27
- வேடசந்தூர் இறைவை கூட்டுறவுச் சங்கம் மூலம் தோண்டப்பட்ட கிணறுகள் செயல்படாமை (க.ஈ) — 769—770

பாபு ஜனார்த்தனன் திரு:

- அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம் (க.ஈ) — 253
- குழாய்க் கிணறுகளில் கைப்பம்புகள் வைக்க வேண்டிய அவசியம் குறித்து (க.ஈ) — 628
- குளச்சல் காவல் நிலையம் விசாரணைக் கைதி மரணம் (ஒ.தீ) — 249
- கூட்டுத்துறை, மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரித்தல் — 570

பாரமலை திரு. க,— — 239—241

- மானாமதுரை தொகுதி உப்பாற்றில் அணைகட்டும் திட்டம் — 239—241
- ஃபைட்டோ கெமிகல்ஸ் தொழிலாளர்கள் கைது (க.ஈ) — 630,632-633

பால்வளம்—

- பால் குளிரூட்டும் நிலையம், சின்ன சேலம் — 376—378
- பால் பண்ணை மாதவரம் மாட்டுத் தொழுவம் — 373—375

பாலங்கள்—

- குத்தாலம் ஒன்றியம் நாட்டாற்றில் பாலம் — 710—711
- பழுது பார்த்தல், மல்லி — 355
- வைகை ஆறு, தேனி தொகுதி — 358—359

பாலசுப்பிரமணியன், வேடசந்தூர் திரு வி.பி—

- அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை சென்னை ஊசி போட்டதால் மரணம் (க ஈ) — 253
- இந்திய முத்திரைத் தாள் தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 521—525
- ஏழைகள், இலவச சட்ட உதவி — 8—17
- ஐ.ஏ.எஸ். தேர்வு பயிற்சி நிலையங்கள் — 548—551



பாலசுப்பிரமணியன் வேடசந்தூர் திரு வி.பி.—தொடர்ச்சி — பக்கங்கள்

- குடகனாறு அணையைப் புதுப்பித்தல் (க.ஈ) — 45—48
- நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1981 — 30—31
- வரவு-செலவுத் திட்டம், 1981–82 வாக்கெடுப்பு மாநில ஆட்சித் தலைவர் அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம் — 79—92
- வேடசந்தூர் இறைவை கூட்டுறவுச் சங்கம் மூலம் தோண்டப்பட்ட கிணறுகள் செயல்படாமை (க.ஈ.) — 769—770
- வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்டமுன்வடிவு 1981 — 658—665

பிற்பட்டோர் நலன்—

- பிற்பட்ட சமுதாய மக்கள் மேம்பாடு வாரியம் அமைத்தல். — 544—548

புத்தகங்கள் —

- தமிழ் பாடப் புத்தகங்கள், நீக்கப் பெற்ற பாடங்கள், — 531—535

புருஷோத்தமன் திரு. து—

- பாளையங்கோட்டை, இந்திய மருத்துவக் கல்லூரியில் அனுமதி — 713—714

பூங்காவனம் திரு. என். ஏ.—

- குழாய்க் கிணறுகளில் கைப்பம்புகள் வைக்க வேண்டிய அவசியம் குறித்து (க.ஈ.) — 628—629
- வரவு-செலவுத் திட்டம் 1981–82, வாக்கெடுப்பு, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம் — 73—79

பெருமாள் திரு ரா. கு.—

- இராமநாதபுரம் தொகுதி, சுண்ணாம்பு சிப்பிகள் குத்தகை. — 29

பொன்னம்மாள் திருமதி ஏ. எஸ்,—

- அம்மையநாயக்கனூர் பேரூராட்சி, குடித்தண்ணீர் திட்டம். — 559—560
- ஆதிதிராவிடர் மாணவர்கள், புத்தகங்கள் வழங்குவதில் தாமதம், — 31—34
- கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981, — 335—336
- கள்ளுக்கடை திறப்பை ஒத்திவைத்தல் (த.சோ) — 221
- பட்டிவீரன்பட்டி பேரூராட்சி, குடிநீர் வழங்கல். — 18—19

பக்கங்கள்

பொ—தொடர்ச்சி

பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ்.—தொடர்ச்சி

வரவு-செலவுத்திட்டம், 1981-82 வாக்கெடுப்பு—மாநில சட்டமன்றம் 203-207

தேர்தல்கள்.—

ஃபைட்டோ கெமிகல்ஸ் தொழிலாளர்கள் கைது (க.ஈ.) 630

பொன்னுரங்கம் திரு. ப.—

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம், (க.ஈ.) 253

குளச்சல் காவல் நிலையம், விசாரணைக் கைதி மரணம், (ஒ.தீ.) 249

சென்னை மாநகராட்சி, துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம். (க. ஈ.) 410

பொன்னையன் திரு. சி.—

கலவரப் பகுதிகள் (சட்ட விரோதக் கூட்டத்தினால் காயம் அடைந்தவருக்கு இழப்பீடு கொடுக்கும்) சட்டமுன்வடிவு, 1981. 815

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ.தீ.) 615-623

சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு, 1981. 804, 809-813, 814, 815

தஞ்சை மாவட்டம்— மாத்தூர் கிராமக் கூட்டுறவு சேவா சங்கம், உரக்கலப்பட வழக்கு. (க.ஈ.அ-) 624-625 626-628

மாவட்ட காவல்—சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981. 684, 695-698

மாஜிஸ்ட்ரேட் முன்சீப் ஒருங்கிணைப்புச் சட்டத்தினை நடைமுறைப் படுத்துதல் (க.ஈ.அ.) 764-769

வேடசந்தூர் இறைவை கூட்டுறவுச் சங்கம் மூலம் தோண்டப்பட்ட கிணறுகள் செயல்படாமை (க.ஈ.அ.) 769-770

போக்குவரத்து—

அரசுப் பேருந்துகள் அதிகப் பயணிகள் செல்லத் தடை- 365-368

கும்பகோணம், [illegible] போக்குவரத்துக் கழக பேருந்து விப[illegible].) 758-761



பக்கங்கள்

போக்குவரத்து—தொடர்ச்சி

சட்டமன்ற உறுப்பினர்கள், பேருந்துகளில் பயணம். 729—721

தனியார் பேருந்துப் பயணிகள், வட ஆற்காடு மாவட்டம். 720—724

பட்டாபிராமன் குழு அறிக்கை மீது நடவடிக்கை. 727—729

படகுப் போக்குவரத்து, விவேகானந்தர் நினைவுச் சின்னம், கன்னியாகுமரி. 370—373

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் பணிமனை, குமுளி. 365

பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்துகள் விடுதல், வட ஆற்காடு மாவட்டம். 718—720

வசதி, பயன்பெற்ற கிராமங்கள். 724—727

போப் ஆண்டவர்—

நலம்பெற வாழ்த்து 735—736

'ம'

மக்கள் நல்வாழ்வு—

பாதாளக் கழிவுநீர்த் திட்டம், பரமக்குடி நகரப்பஞ்சாயத்து. 19—23

மணி, திரு. டி.—

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம். (க.ஈ.) 253

கன்னியாகுமரி-கொட்டாரம் கிராமம் குடிநீர் குழாய்கள் (ஐ. ஈ) 756,757

குமரி மாவட்டம் நீர்த்தேக்கங்களில் பிடிபட்ட மீன்கள். 4-6

குமரி மாட்டம், மரத்தினாலான மின்விளக்கு கம்பங்கள். 704—706

குளச்சல் காவல் நிலையம், விசாரணைக் கைதி மரணம், (ஒ.தீ.) 249—251

கூட்டுறவுத்துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (ஒ. தீ.) 602

சங்கரன்கோவில், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், வேலைநிறுத்தம், (க. ஈ.) 42

தமிழக கேரளமாநில மீனவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல் (ஒ.தீ.) 747

வன (திருத்த) சட்ட முன்வடிவு, 1981, 440—442

விளவங்கோடு தாலுக்கா பயன்படுத்தாத தார் டின்கள்: 357

பக்கங்கள்

ம—தொடர்ச்சி

**மணிமாறன். திரு. ஆர்—**

கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981, 473—478

திருப்பூர்—சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரி, முதுகலை வரலாற்று வகுப்பு தொடங்குதல். 563—564

தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு, 1981. 779—785

**மருத்துவம்—**

செயற்கை அவயவங்கள் நிலையம், கருணாநிதி நகர், (சென்னை) 364—365

**மருத்துவமனைகள்—**

அரசாங்கம் மேற்கொள்ளுதல், ஆத்தூர் நகரப் பஞ்சாயத்து. 361—363

அரசாங்கம் மேற்கொள்ளுதல், கந்தலி கிராமம். 363

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம். (க.ஈ.) 253—255

எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனை விரிவாக்கம். 714—715

குரோம்பேட்டை மருத்துவமனை, அறுவை சிகிச்சை வசதியின்மை. 712—713

மருத்துவமனை அமைத்தல், அவினாசி. 715—716

மருந்துகள் வழங்குதல். 359—361

விருதுநகர் மருத்துவமனை, நெருக்கடி. 718

**மாணிக்கம், திரு. எம். எஸ்.—**

இந்து சமய அறக் கட்டளைகள் திருத்த-சிறப்பு விதித் துறைகள் திருத்தச் சட்ட முன்வடிவு. 1981. 427—429

கெம்ப்ளண்ட் தொழிற்சாலை, வரிவிலக்கு. 575—578

வரவு-செலவுத் திட்டம், 1981—82,

வாக்கெடுப்பு—

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம். 96—98

விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு 1981.

மற்றும்



ம—தொடர்ச்சி பக்கங்கள்

**மாணிக்கம் திரு. எம். எஸ்.—தொடர்ச்சி**

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு. 506—507

வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண திருத்தச் சட்ட முன்வடிவு, 1981. 672—675

**மாவட்ட நிர்வாகம்—**

சிதம்பரம்-காட்டு மன்னார் கோவில் வருவாய்க் கோட்டமாக்குதல் 554

**விடுதிகள்—**

ஆதிதிராவிடர் மாணவர்கள் தங்கும் விடுதி பேரயூர். 244—247

**மின்சாரம்—**

குமரி மாவட்டம், மரத்தினாலான மின்விளக்கு கம்பங்கள். 704—706

மின்துறை, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கீடு. 703—704

**மீனளம்—**

நீர்த்தேக்கங்களில் பிடிபட்ட மீன்கள், குமரி மாவட்டம். 4—6

ஃபிஷ் ஃபார்மர்ஸ் டெவலப்மெண்ட் ஏஜன்சி, கன்னியாகுமரி மாவட்டம். 7

**முத்துகிருஷ்ணன், திரு. சு.—**

கன்னியாகுமரி-கொட்டாரம் கிராமம் குடிநீர்க் குழாய்கள். (க.ஈ.) 756

757—758

கன்னியாகுமரி, மீன் எண்ணெய் தொழிற்சாலை. 4

கன்னியாகுமரி, விவேகானந்தர் நினைவுச் சின்னம் படகுப் போக்குவரத்து. 370—373

வரவு-செலவுத் திட்டம், 1981-82,

வாக்கெடுப்பு—

மாநிலச் சட்ட மன்றம் தேர்தல்கள். 176—179

**முத்துசாமி, திரு. க.—**

கும்பகோணம், சோழன் போக்குவரத்துக் கழக பேருந்து விபத்து. (க.ஈ.அ.) 759—760

**முத்துராமலிங்கம், திரு. இ.—**

அரசின் கொள்கை பற்றிய அறிவிப்புகளை அவையில் வெளியிடுவதற்குமுன் நாளேடுகளுக்கு தெரிவித்தது. (உ.பி.) 57[illegible]

ஆறுகள் மழைக்கால வெள்ளம் வீணாவதைத் தடுத்தல் 23

பக்கங்கள்

"ர"

ரகுமான்கான், திரு. அ.—

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை, ஊசி போட்டதால் மரணம். (க.ஈ.) 253

ரமணி, திரு.கு.—

அரசு மருத்துவமனைகள், மருந்துகள் வாங்குதல். 359—361

கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981. 480—484

சங்கரன்கோவில், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், வேலை நிறுத்தம். (க.ஈ.) 42

பிற்பட்ட சமுதாய மக்கள் மேம்பாடு, வாரியம் அமைத்தல். 544—548

பீடித் தொழிலாளர்கள் வேலையின்மை. (க.ஈ.) 413

பேஸின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத் தீ விபத்து, விசாரணை முடிவுகள். 716—717

மாவட்ட காவல்-சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981. 685—688

வரவு-செலவுத் திட்டம், 1981—82'
வாக்கெடுப்பு—

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம். 60

மாநிலச் சட்ட மன்றம் தேர்தல்கள். 179—186

விளவங்கோடு தொகுதி. கடல் அரிப்பைத் தடுத்தல். 733—735

ராஜமாணிக்கம், திரு.எம்.கே.—

வேலைவாய்ப்பு, வயது வரம்பில் விலக்கு. 36—38

ரெத்தினராஜ், திரு.எஸ்.—

குளச்சல் காவல் நிலையம், விசாரணைக் கைதி மரணம். (ஒ.தீ.) 249

"வ"

வரதராஜன், திரு.என்.—

உண்ணாவிரதம், வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள். 403



பக்கங்கள்

வ—தொடர்ச்சி

வரதராஜன் திரு.என்.—தொடர்ச்சி

கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். (ஒ.தீ.) 613—614

சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981. 804—805

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் போராட்டம். (ஒ.தீ.) 394—395

நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1981. 268—273
274—278

பீடித் தொழிலாளர்கள் வேலையின்மை (க.ஈ.) 413

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல். (த.தீ.) 820—821

வரவு-செலவுத் திட்டம், 1981—82,
வாக்கெடுப்பு—
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம்- 47—48,
112—116
163

வரிகள் —

வரிவிலக்கு, கெம்ப்னாண்ட் தொழிற்சாலை. 575—576

ஸ்கூட்டர்கள் வரி விதிப்பு. 553—554

வாரியங்கள்—

குடிசை மாற்று வாரியம், தர்மபுரி நகரில் வீடுகள் கட்டுதல். 233—234

மின்சார வாரியம், தொழிற்சங்கங்கள். 345—347

விடுதிகள்—

ஆதிதிராவிடர் மாணவர்கள் தங்கும் விடுதி, பேரையூர். 246—247

விபத்துக்கள்—

பேஸின் பிரிட்ஜ் அனல்மின் நிலைய தீ விபத்து விசாரணை முடிவுகள் 716—717

விளையாட்டுகள்—

கால் பந்தாட்டப் போட்டி, வெற்றி பெற்ற அணிக்குப் பாராட்டு. (த.கோ.) 247—248

வின்சென்ட், திரு மி—

இளம்பிள்ளை வாதம், மருந்து கிடைக்காமை, (க.ஈ.) — 416; 417—418

கால் பந்தாட்டப் போட்டி, வெற்றி பெற்ற அணிக்குப் பாராட்டு, (த.கோ.) — 247—248

கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981. — 460—463

சட்டமன்ற உறுப்பினர்கள், பேருந்துகளில் பயணம் — 721—731

நகராட்சிகள், வாக்காளர் பட்டியல் — 386

போக்குவரத்து வசதி, பயன் பெற்ற கிராமங்கள் — 724—727

விடுமுறை நாட்கள், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் — 225—228

விஜயராகவன் திரு பொ—

டெவலப்மெண்ட் ஏஜென்சி, — 7

கன்னியாகுமரி மாவட்டம் பிஷ் ஃபார்மர்ஸ்

நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1981. — 296—300; 317

பொறியியல் துறை அதிகாரி திரு மணவாளன் வெளியிட்ட அறிக்கை (உ.தீ) — 740

வீட்டுவசதி—

உள்நாட்டு மீனவர்கள் கடன்வசதி — 551—553

துப்புரவுத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் கும்பகோணம் நகராட்சி — 556—559

வீரப்பன் திரு. ஆர். எம்—

இந்து சமய அறக் கட்டளைகள் திருத்த-சிறப்பு விதித்துறைகள் திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 — 423—437; 435—436

வன (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 436; 448—457

வெங்கடசுப்பிரமணியம் திரு. ப.

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, ஊசி போட்டதால் மரணம், (க.ஈ.) — 253

காஞ்சிபுரம் குற்றவியல் நீதிமன்றம் — 7—8



'வ'—தொடர்ச்சி — பக்கங்கள்

கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறையளும்) சட்ட முன்வடிவு, 1981 — 478—480

செங்கற்பட்டு மாவட்ட மண்டலத்துணை இக்யகுநர் அலுவலகம், சென்னை மாற்றம் — 560—561

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம் — 98—102

மாநிலச் சட்டமன்றம் தேர்தல்கள் — 173—176

விற்பனை வரி (மேற்வரி) திருத்தச் சட்ட முன்படிவு 1981

மற்றும்

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு — 500—502

வெங்கடரெட்டி திரு. டி.

நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1981 — 300—304

வெள்ளைச்சாமி திரு ஆ—

கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும். பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981, — 469—471

மாஜிஸ்ட்ரேட்-முன்சீப் ஒருங்கிணைப்புச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் (க.ஈ.) — 764

வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்டமுன்வடிவு 1981 — 675—676

வேணுகோபாலன், திரு. த.—

அரசுப் பேருந்துகள், அதிகப் பயணிகள் செல்லத் தடை — 365—368

வட ஆற்காடு மாவட்டம் மண்பாண்டத் தொழிலாளர்க்கு கருவிகள் — 731—732

வேலை வாய்ப்பு—

வயது வரம்பின் விலக்கு — 36—38

வேளாண்மை—

கூடுதல் மின்சக்தி வழங்கல், (அறி) — 409

தண்ணீர் வசதி, தஞ்சை மாவட்டம் — 235—237

பூச்சி மருந்து மற்றும் விதைப் பொருட்கள், மானியம் — 352—354

'ஹ'—தொடர்ச்சி பக்கங்கள்

ஹண்டே டாக்டர் எச். வி.

அரசு கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, சென்னை ஊசி போட்டதால் மரணம் (க.ஈ அ.) 254—255

இளம்பிள்ளை வாதம், மருந்து கிடைக்காமை, (க.ஈ.அ.) 416,417,418

சென்னை கண் நோய் (க.ஈ.அ.) 419—422

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்மீது (உ பி.) 389—393

ஹாஜா செரீப், திரு. கே. எஸ், ஜி.

தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல், சட்டமுன் வடிவு 1981 771—772

789—792

நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1981 316

வரவு—செலவுத் திட்டம், 1981—82 வாக்கெடுப்பு—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம் 81

ஹேமச்சந்திரன் திரு. ஜே.

கன்னியாகுமரி-கொட்டாரம் கிராமம் குடிநீர் குழாய்கள் (க.ஈ.) 756

கன்னியாகுமரி மாவட்டம், ரப்பர் தொழிற் சாலை அமைத்தல் 706—708

குழுக்கள் நியமனம், செய்திச் சுருக்கத்தில் டைம் பெறாதது குறித்து (த.கோ) 578

குனச்சல் காவல் நிலையம், விசாரணைக் கைதி மரணம், (ஒ. தீ.) 249

கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன் வடிவு, 1981. 492

சங்கரன்கோவில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், வேலைநிறுத்தம் (க.ஈ) 4

சென்னை கண் நோய் (க.ஈ.) 418

தமிழக கேரள மாநில மீனவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல் (ஒ. தீ.) 748—750

தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1981 642—646

657

தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல் சட்டமுன்வடிவு 1981 772—779 801,802,803



ஜ—தொடர்ச்சி பக்கங்கள்

ஜகத்ரட்சகன், திரு. எஸ்.

உத்திரமேரூர் ஏரி மராமத்துபணி 237—283

ஜெயராமன் திரு வே இரா.

கோம்பை ரங்கநாதர் கோவில்—நாமக்கல் மேட்டு பாதை அமைத்தல் 710

தேனி தொகுதி வைகை ஆற்றின் பாலம் 358—359

மாஜிஸ்ட்ரேட்—முன்சீப் ஒருங்கிணைப்புச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் (இ. ஈ.) 764

வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்டமுன்வடிவு 1981 666—668

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1981 மே. 8

சித்திரை 26, துன்மதி – திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு"

செய்யத்தக்க செயலை ஆராய்தலும், அதற்குரிய வழிகளை ஆராய்ந்து செய்தலும், துணிவாகக் கருத்தைச் சொல்லுதலும் வல்லவன் அமைச்சன்.

### 1. வினாக்கள்— விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**விலைப்பட்டியலை கடைகளில் கட்டாயம் வைக்கும் முறையினைத் தீவிரப்படுத்தும் திட்டம்**

* வினா எண். 947—**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விலைப்பட்டியலை ஒவ்வொரு கடைக்காரரும் கட்டாயம் வைக்க வேண்டும் என்ற சட்டத்தை தீவிரப்படுத்தும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் (இருப்புகளையும், விலைகளையும் விளம்பரப்படுத்தல் மற்றும் கணக்குகள்-பராமரித்தல்) ஆணைய உணவுத் துறை அலுவலர்களும், குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு அலுவலர்களும் ஏற்கனவே அமல்படுத்தி வருகின்றனர்.

**திரு. இரா. தாமரைக்கனி** : துணைத் தலைவர் அவர்களே, பலசரக்குக் கடைகளில் விற்பனை செய்யும் பொருள்கள் சரியாக எடைபோடப்பட்டு, விலைகள் குறிக்கப்பட்ட பாலிதீன் பைகள் மூலம் விற்பனை செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? அப்படியில்லாமல், பொருள்களின் விலையை உயர்த்தி, மக்களை ஏமாற்றி விற்பனை செய்யும் வியாபாரிகள் மீது ஐ.பி.சி.420 செக்ஷன் படி வழக்குத் தொடர அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, விலைப்பட்டியல் போர்ட் வைக்க வேண்டும் என்றும், எடைகள் மற்றும் விலைகளில் வித்தியாசம் இருந்தாலோ அல்லது தவறான தகவல் பலகை வைத்து இருந்தாலோ அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று விதிமுறைகள் இருக்கின்றன. அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆங்காங்கு உள்ள வட்ட அலுவலர்களுக்கு அவ்வப்போது தக்க அறிவுரை வழங்கி வருகிறார்கள். அதன்படி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, ஒரே பொருளின் விலை ராயப்பேட்டையில் ஒருவிலையிலும், ராயபுரத்தில் ஒரு விலையிலும் விற்கப்படுகிறது. ஆகவே, பொருள்களின் விலைகளை நிர்ணயம் செய்வதற்காக, பொருள் உற்பத்தி செய்வோர், பொருள் வாங்குவோர், பொருள் விற்பனை செய்வோர் ஆகியோர் அடங்கிய விலை நிர்ணயக்குழு அமைக்க அரசு முன்வருமா? அப்படி சரியான விலையில் பொருள்களை விற்பனை செய்யாத வியாபாரிகளின் லைசென்சு ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை அரசுக்கு தற்போது இல்லை. ஆனால் அரசு நடத்துகின்ற நியாயவிலைக்கடைகளைப் பொறுத்தவரையில் ஒரே சீரான விலையில் சரியான வகையில் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மற்றப்பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துகிற நிலைமை தற்போதுஇல்லை. அது அந்தந்த மாவட்டங்களில் உள்ள நிலைமைகளை அனுசரித்து இருக்கிறது. இருப்பினும், எல்லா இடங்களிலும் ஒரே சீரான விலையில் மக்களுக்கு பொருள்கள் கிடைக்கவேண்டும் என்கிற அடிப்படையில்தான் 17,500-க்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகளை அரசும், நுகர்பொருள் வாணிபக்கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் நடத்திவருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகுத் துணைத் தலைவர் அவர்களே, காரணம் எதுவும் இல்லாமலேயே பருப்பு, எண்ணெய் போன்ற பொருள்களின் விலைகள் ஏறிக்கொண்டே போகின்றன. ஆகவே, விலைப்பட்டியலையும், இருக்கின்ற ஸ்டாக் பொசிஷனையும் கண்டிப்பாக அறிவிக்க வேண்டும் என்றும், அப்படி அறிவிக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? திடீர் சோதனை செய்வதற்கான ஏற்பாடு செய்து, இப்படி அதிகவிலைக்கு விற்பன்ன செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி விலைப்பட்டியல் கட்டாயம் வைக்கவேண்டும்



என்று வற்புறுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, வியாபாரிகள் விலைப்பட்டியலை வைக்கத் தவறினாலும் சரி, அல்லது தவறான தகவல் தந்து இருந்தாலும் சரி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வழிவகை செய்து இருக்கிறோம். அதன்படி 1978-79-ல் இப்படிப்பட்ட தவறு செய்தவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 343, தொடரப்பட்ட வழக்குகள் 333, அதில் 314 வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்டு இருக்கிறது. 1979-80-ல் 346 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 328 வழக்குகள் தொடரப்பட்டன. 308 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது. ஏப்ரல் 1980-லிருந்து அக்டோபர் 1980 முடிய, 222 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 146 வழக்குகள் தொடரப்பட்டன. அதிலே 82 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது. இதில் இன்னும் கவனமாக இருக்கவேண்டும் என்று சுற்றறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர், நுகர்பொருள் வழங்குத்துறை ஆகியோருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு பிரைஸ் லிஸ்ட் என்று விலைப் பட்டியல் இருக்கிறது. அது தவிர லோக்கல் டாக்ஸ்ஸ் எக்ஸ்ட்ரா என்று இருப்பதால்தான் வியாபாரிகள் இடத்தைப் பொறுத்து, வாங்குகிற ஆளைப் பொறுத்து விலை வித்தியாசம் வைத்து விற்கின்ற நிலைமை இருக்கின்றது. இப்படி வித்தியாசமான முறையில் பிரைஸ் வேரியேஷன் இருக்கக்கூடிய சூழ்நிலையை மனதிற்கொண்டு, அதிக விலைக்கு விற்கக்கூடிய நபர்களை, கொள்ளை லாபம் அடிப்பவர்களை, பதுக்கல்காரர்களை கண்டுபிடித்து, அவர்களைப் பற்றி பத்திரிகைகளிலும் வானொலியிலும் விளம்பரம் செய்வதுடன் அவர்களுடைய லைசென்சையும் கேன்சல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, அவர்கள் மட்டுமல்லாமல், குடிமப்பொருள் புலனாய்வுத் துறையினரும் இத்தகைய வழக்குகளைக் கண்டு பிடிக்கிறார்கள். இப்படி அவர்கள் கண்டுபிடித்து வழக்குத் தொடரப்படுகின்ற பெரிய வழக்குகள் பத்திரிகைகளில் வெளி வருகின்றன. எல்லா வழக்குகளும் வெளிவரவில்லை; வெளியிடக் கூடாது என்பதல்ல; வெளிவரவில்லை. அந்தந்த இடங்களில் நடைபெறுகின்ற வியாபார நிலைமைகளை உத்தேசித்து, தவறு செய்கின்றவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க அந்த ஆணையில் வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவரவர்களே, விலைப்பட்டியல் வைக்கப்பட வேண்டுமென்ற நியதி இப்போது அமுலில் இல்லை. விலைகள் பயங்கரமாக உயர்ந்திருக்கிற ஒரு நிலையில் எல்லாப் பொருட்களுக்கும் இல்லாவிட்டாலும்

அத்தியாவசியமான 10. 15 பொருட்களுக்காவது விலைப் பட்டியயல் போடச் சொல்லி, அது அமுல்செய்யப்படுமா? கடைகளில் இருப்பு சரியாக இருக்கிறதா, சரியான விலைக்கு விற்கிறார்களா என்பதைக் கண்காணிக்க ஒரு உஷார் குழுவை புதிதாக அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா? ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தக் குழுவை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, 1977ஆம் ஆண்டு சட்டப்படி 37 இன்றியமையாத பண்டங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் விலைகளை கட்டாயம் குறித்து வைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். அது இப்போதும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று எங்காவது தவறுகளோ அல்லது கண்காணிப்போ சரியாக இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை இருந்தால் அதுபற்றி தீவிரமாக நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மற்றவர்களும் முயற்சி செய்வார்கள். ஏற்கெனவே அவர்களுக்கு இதுபற்றி சொல்லியிருக்கிறோம். இந்த மாமன்றத்தில் நடைபெறும் விவாதமே அவர்கள் தீவிரமாக நடவடிக்கை எடுக்க ஊக்கம் தருவதாக இருக்கும் என்று கருதுகிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர்களும் இப்படிப்பட்ட தீவிர நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

## கன்னியாகுமரியில் மீன் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 948—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரியில் மீன் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது தொழிற்சாலை அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.
(ஆ) இவ் வினா எழ இடமில்லை.

## குமரி மாவட்டத்திலுள்ள நீர்த்தேக்கங்களில் பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு.

* வினா எண். 949—திரு. டி. மணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார் நீர்த்தேக்கங்களில் 1979–80, 1980–81 ஆண்டில் எத்தனை டன் மீன் பிடிக்கப்பட்டது?



(ஆ) அதன் மதிப்பீடு என்ன?

(இ) இந்த அணைக்கட்டுகளில் மீன் பிடிக்க பயன்படுத்தும் படகுகளில் இணைக்கப்பட்டிருந்த இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதால் புது இயந்திரம் பொருத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) நான்கு நீர்த்தேக்கங்களிலும் 1979–80, 1980–81 ஆண்டுகளில் மீன் பிடிக்கப்பட்ட மீன்களின் எடை மற்றும் அவற்றின் மதிப்பு பற்றிய விவரங்கள் வருமாறு:—

| நீர்த் தேக்கத்தின் பெயர். | பிடிக்கப்பட்ட மீன்களின் எடை. (கிலோவில்.) | | மீன்களின் மதிப்பு. (ரூபாயில்). | |
|---|---|---|---|---|
| | 1979–80 | 1980–81 (31–1–81 முடிய) | 1979-80 | 1980-81 (3 -1-81 முடிய.) |
| பேச்சிப்பாறை | 6,427 | 4,321 | 9,249.25 | 6,831.20 |
| பெருஞ்சாணி | 6,370 | 15,328 | 5,224.20 | 10,388.50 |
| சிற்றார் 1 | 2,142 | 976 | 2,976.75 | 1,568.90 |
| சிற்றார் 2 | 4,119 | 3,205 | 6,289.90 | 5,136 45 |

(இ) அணைக்கட்டுகளில் மீன்பிடிக்கப் பயன்படுத்துவதற்கென ஒன்பது புதிய படகுகள் இயந்திரங்களுடன் வாங்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கப்பட உள்ளது. புதிய படகுகள் வாங்கியபின் இந்த அணைக்கட்டுகளுக்கு விநியோகிக்கப்படும்.

[முற்பகல் 9–10]

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எந்த அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தைத் தந்தார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே பிடிக்கப்படுகின்ற மீன்களைக் கணக்கிடுகின்றபோது பேச்சிப்பாறையைப் பொறுத்த வரையில் அதன் அளவு குறைந்து வருகின்றது. அதற்குக் காரணம் அங்கே தேவையான இயந்திரப் படகுகள் இல்லாதது தான். ஆகவே அதுபற்றி அவசரமாக ஆராய்ந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமா இந்த அரசு? மேலும் அங்கே வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகின்ற சம்பளத்திற்கு ஏற்றாற்போல அந்தப் பகுதியிலே மீன்கள் கிடைக்கின்றதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, அந்த அலைக் கட்டுகளில் மீன்பிடிப்பதற்கு போதிய படகுகள் இல்லை என்ற காரணத்தால்தான் புதிய படகுகள் வாங்கவேண்டும் என்ற அடிப்படையில் 1981–82-ஆம் ஆண்டில் 3,64,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு 9 புதிய படகுகளை வாங்குவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்தப் படகுகளை வாங்கியதற்குப் பிறகு அங்கே அதிகப்படியான அளவுக்கு மீன் பிடிக்க முடியும். அடுத்து சம்பளம் பற்றிக் கேட்டார்கள். அதுபற்றிய குறிப்புகள் இல்லை, தனிக் கேள்வி கேட்டால் விபரம் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் பேச்சிப்பாறை, சிற்றார் போன்ற நீர்தேக்கங்களில் 1979–80, 1980–81 ஆகிய ஆண்டுகளில் பிடிக்கப்பட்ட மீன்கள் பற்றியும் அதன்மூலம் கிடைத்த பணத்தைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தற்போது இறைச்சியின் விலை மிகவும் கடுமையாக ஏறிக்கொண்டு வருகின்றது. ஆனால் மீன்களின் விலை மட்டும் ஆண்டுக்காண்டு குறைந்துகொண்டே வந்திருப்பதாகத் தெரிகிறது. அதன் காரணம் என்ன? அதன் மூலம் அரசுக்கு லாபமா நஷ்டமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மீனின் விலை குறைந்துகொண்டு வரவில்லை. 1979-80ஆம் ஆண்டைப் பொறுத்தவரையிலே முழுக்கணக்கையும் சொன்னேன். ஆனால் 1980–81 ஆம் ஆண்டைப் பொறுத்த வரையிலோ 31-1-81 வரை உள்ள விவரம்தான் இருக்கின்றது, இன்னும் மேற்கொண்டும் அதிலே கணக்கு சேர்க்கவேண்டும். அப்படிச்சேர்த்த பிறகுதான் அந்த ஆண்டின் முழுஅளவு தெரியவரும். ஆகவே அதனுடைய அளவு குறையவில்லை. மேலும் அதிகப்படியான மீன்களைப் பெருக்கவேண்டும் என்ற அடிப்படையில் தான் சில மேம்பாட்டுத் திட்டங்களைப் போட்டு வருகிறோம். பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தில் விரைவில் வளரும் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் திட்டத்திற்காக 2,27,000 ரூபாய் அளவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் செயற்கை முறையில் மீன் குஞ்சுகளை வளர்க்கும் திட்டத்திற்கான கட்டடப் பணிகள் துவக்கப்பட்டு உள்ளன. இத்திட்டத்திற்கெனவே தயாரிக்கப்படும் கண்ணாடி தொட்டிகளை வாங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் 2 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தியாகும் எனவும் அவற்றிலிருந்து தரமான 3 இலட்சம் மீன் குஞ்சுகளைப் பிடித்து மேலும் பல நீர்த்தேக்கங்களிலே போடுவதன் மூலம் அடுத்து வருகின்ற ஆண்டுகளில் அதிகப்படியான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்ய முடியும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.



Fish Farmers Development Agency in Kanyakumari

*Q. No 950— THIRU P. VIJAYARAGHAVAN: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(a) whether the Government has any proposal to extend the scheme of Fish Farmers Development Agency to Kanyakumari district; and

(b) if so, the present stage of the scheme?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்தை நடப்பு நிதி ஆண்டில் (1981-82) நிறைவேற்றலாமா என்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

காஞ்சிபுரம் குற்றவியல் நீதிமன்றம்.

*வினா எண். 1020—திரு ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் குற்றவியல் நீதிமன்றம் குற்றவியல் நடுவர் இல்லாமல் ஓராண்டு காலமாக நடைபெற்று வருவது உண்மையா?

(ஆ) இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) 1-11-80-லிருந்து மட்டுமே இந்த இடம் காலியாக உள்ளது. தற்போது காஞ்சிபுரம் நீதிமன்றத்திற்கு ஒரு நீதிபதியை நியமித்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அவர் விரைவில் பதவி ஏற்க இருக்கிறார்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியான காஞ்சிபுரத்திலே ஓர் ஆண்டுக் காலமாகவே நடுவர் பதவி காலியாக இருக்கின்றது. அதனால் பொதுமக்களுக்கும் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு யார் பொறுப்பு, அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன விடை (ஆ)-வில் இந்தப் பதவி எப்போதிருந்து காலியாக இருக்கிறது என்பதைச் சொன்னேன். 1–11–80–லிருந்து இந்த இடம் காலியாக இருந்தது. அதற்குக்காரணம் திருமதி வசந்தாமணி என்றஒருவரை குற்றவியல்

நீதிபதியாக அமர்த்தியதற்குப் பிறகு உயர்நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ள சில காரணங்களின் அடிப்படையில் அவர் அந்தப் பணியிலிருந்து திரும்ப தாய்த் துறைக்கு அனுப்பப்பட்டு விட்டார். அதன் காரணத்தால்தான் அந்த இடம் காலி ஏற் பட்டது. தற்போது உயர்நீதிமன்றம் அதுபற்றி ஆய்ந்து வேறு ஒருவரை நியமித்து உத்தரவிட்டிருக்கின்றது.

ஏழைகளுக்கான இலவச சட்ட உதவி அளிக்கும் திட்டம்.

*வினா எண் 1021—திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

ஏழைகளுக்கான சட்ட உதவித் (Legal Aid tc Poor) திட்டத்தை அமுல்படுத்த நிரந்தர வழக்குரைஞர்களை ஒவ்வொரு நீதிமன்றத்திலும் நியமிக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இலவச சட்ட உதவித் திட்டத்தின்கீழ் வழக்கறிஞர்களை நிரந்தர அடிப்படையில் நியமிப்பதில் உள்ளதை விட தேர்ந்த பெயர்ப்பட்டியல் முறையில் நிறைபாடுகள் அதிகமாக இருக்கின்றன. எனவே, இப்போதுள்ள முறையில் மாற்றம் ஏதும் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச சட்ட ஆலோசனைக்குழுவில், பணியாற்றுகிற வழக்கறிஞர்கள் நியமிக்கப் பட்டு, 15 நாட்களுக்கு ஒருவர் என்று முறை வைத்து அலுவல கத்தில் அமர்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற வழக்குகளைப் பார்க்கிற அவசர அவசியத்தில் இந்தஇலவச சட்ட ஆலோசனைக் குழுவை அணுகுகிற நபர்களின்வழக்குகளைமுறையாக என்னென்ன சொல்கிறார்கள் என்ற தகவல்களை கூட கவனிப்பதற்கு அவர் களால் முடிவதில்லை, கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, வழக்குகளை நடத்துவதற்கு தற்போது இருக்கக்கூடிய அமைப்பு முறையில் வழக்கறிஞர்கள் குழு இருந்தாலும் கூட, அந்த வழக்கு களின் ஆரம்ப நிலையில் என்னென்ன தகவல்கள் தேவை என்பதை சேகரித்து செம்மையாக செய்வதற்கு, வட்டத்திற்கு ஒரு நிரந்தர வழக்கறிஞர் நியமிக்கிற முறையிலே அரசு பரிசீலிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டுவது போன்ற சிஸ்டம் ஆப் அப்பாயிண்டிங் லாயர்ஸ் என்கிற முறையைப் பொறுத்தவரைக்கும் கர்நாடக மாநிலத் திலும் கேரள மாநிலத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மற்றப்பகுதிகளில் எல்லாம், சிஸ்டம் ஆப் பேனல்ஆப் லாயர்ஸ் என்ற முறைதான் நடைமுறையில் இருந்து வருகிறது.



சிஸ்டம் ஆப் பேனல் ஆப் லாயர்ஸ் முறையில்தான் அனுகூலங்கள் பலன்கள் ஏழைகளுக்கு அதிகம் ஏற்படுகிறது என்று கணிக்கப் பட்டிருக்கிறது. காரணம், இந்த பேனல் ஆப் லாயர்ஸ் அமைப்பின் கீழ் பணிகளைச்செய்பவர்களைப்பொருத்தவரைக்கும் வெறும் நீதிமன்றத்திலே இலவசமாக வழக்குகளை நடத்தி தீர்ப்புகளை வாங்கித் தருவது மட்டும் அல்லாமல், அந்த வழக்குகள் நீதிமன்றத்திற்கு வராமலே கூட அவர்களுக்குள் ஒரு செட்டில்மெண்ட் ஏற்பட வழி செய்யப்படவேண்டும் என்பது தான் அதனுடைய நோக்கம். அது மட்டும் அல்லாமல், சட்டப் பிரச்னைகள் இல்லாத வழக்குகளில் கூட பஞ்சாயத்து செய்வது போன்ற பணிகளில் கூட அவர்கள் ஈடுபடுகிறார்கள்.

அதுபோல பலதரப்பட்ட பணிகளைச் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிற நேரத்தில், பேனல் ஆப் லாயர்ஸ் என்கிற அமைப்புதான் தேவையாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் பேனல் ஆப் லாயர்ஸ் குழுவிலே ஒவ்வொரு துறையிலும் தகுதி பெற்ற நிபுணத்துவம் பெற்ற வழக்கறிஞர்கள் இடம் பெற்றிருக் கிற காரணத்தால், நிரந்தரப்பணியாளராக ஒருவரை மட்டுமே நியமிப்பதால், அவர் தான் தேர்ச்சிபெறாத துறையிலே வழக்குகள் வருகிறபோது, அந்த வழக்குகளை நடத்த முடியாது பொதுமக்களுக்கு செம்மையாக உதவி செய்ய முடியாத சூழ் நிலை ஏற்படும் என்ற காரணத்தால்தான், பல துறையிலே நிபுணத்துவம் பெற்ற வழக்கறிஞர்களைக் கொண்ட குழு நடை முறைப்படுத்தப்படுகிறபோது இப்படிப்பட்ட பணிகள் செம்மை யாக இருக்கின்றன என அக்குழு அரசிற்கு தெரிவித்திருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இலவச சட்ட ஆலோசனைக் குழுவில் சிவில் வழக்குகளுக்கு கொடுக்கிற அளவு முக்கியத்துவம் குற்றயியல் வழக்குகளுக்கு கொடுப்பதில்லை, ஆகவே அதன் அடிப்படையில் கொண்டு வருவதற்காக காவல் நிலையத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டவுடன், சட்ட இலவச ஆலோசனைக் குழுவின் உதவி தேவையா என்று அங்கே இருக்கக் கூடிய அதிகாரிகள் அவரைக் கேட்டு, அந்தத் தகவலை அங்கே இருக்கிற வட்டக்குழுவிற்கு தெரிவிக்க வேண்டும் என்ற நியதியை அந்தக் குழுவின் மூலம் அறிக்கையாக வெளியிடப்படுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவில் வழக்குகளுக்கு தரக்கூடிய முக்கியத்துவம் கிரிமினல் வழக்குகளுக்கு தரப்படவில்லை என்பது தவறு. கிரிமினல் வழக்குகளுக்கு அதுவும் சிறையிலே இருக்கிற ரிமாண்ட் பிரிசினர்ஸுக்கும், அண்டர்டிரையல் பிரிசினர்ஸுக்கும் கூட சிறைக்குள்ளேயே சென்று அவர்களுக்கு என்ன உதவி தேவை என்பதை பெரிய அதிகாரிகள் மூலமாக அறிந்து, அவைகளையும் கவனிக்க வேண்டும் என்ற அளவில் ஒரு உத்தரவு இடப்பட்டு நடப்பு ஆண்டிலே, அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், செயல்பட்டு வருகிறது, என்னுடைய பட்ஜெட் உரையிலே கூட அதைப்பற்றிச் சொன்னேன்.

[முற்பகல் 9-20]

திரு. எஸ். ஆண்டித்தேவர்: சட்ட உதவி என்பதன் பெயரால் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பானல் ஆப் லாயேர்ஸ் வைத்து அந்த உதவி கொடுக்கப்படுகிறது என்று. பானல் ஆப் லாயர்ஸ் என்று சொல்கிறபோது சிவில், க்ரிமினல் இரண்டையும் ஒருவரிடம் கொடுக்கிறார்கள். அவர்கள் சரியாகச் செய்வதில்லை, க்ரிமினல் வழக்குகளைப் பொறுத்த வரையில் சாதாரண பொய் வழக்குகளில் சிக்கிய ஏழைகளை உடனடியாக பெயிலில் எடுக்க வேண்டும் என்று சொன்னால் இவர்கள் அதை செய்வதில்லை. ஆகவே சிவிலுக்கு என்று ஒரு பானல் வைத்து அதில் திறமையுள்ள வழக்கறிஞர்கள் பட்டியல் தயாரித்து க்ரிமினல் சைடிலும் வழக்கறிஞர்கள் பட்டியல் தயாரித்து, ஒவ்வொரு ஆண்டும் ஸி. பி. மற்றப் பதவிகளுக்குக் கொடுப்பது போல் நிரந்தரமாக ஒரு ஆண்டுக்குக் கொடுக்கிற பணத்தை ஒருவருக்குக் கொடுத்து செய்வதன் மூலம் அவர்கள் தொடர்ந்து அந்த வழக்குகளுக்கு உதவி செய்ய முடியும் என்ற நிலையை அரசு ஏற்படுத்தித் தருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இலவச சட்ட ஆலோசனைக் குழுவைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வட்ட அளவிலும் இதை விரிவுபடுத்த வேண்டும் என்று அரசு கருதுகிறது. அது மட்டுமல்ல. வட்டத்திலிருந்து ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இதை எடுத்துச்செல்ல மொபைல் ஸிஸ்டம் மூலமாக இதை விரிவுபடுத்த நடப்பாண்டிலிருந்து அரசு திட்டமிட்டிருக்கிறது. அப்படி ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பானல் போட்டு 6,7,8, வழக்கறிஞர்களை அமைக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் ஒவ்வொரு துறைக்கும் ஒரு ஆண்டு பி. பி., ஸி. பி. போல் நிரந்தரமாக வழக்கறிஞர்களை அமைக்க வேண்டுமென்றால் அந்தளவிற்கு தகுதி பெற்ற வழக்கறிஞர்கள் கிடைக்க மாட்டார்கள். நாம் விரும்புவதெல்லாம் ஏழைகளுக்கு இந்த வழக்குகளில், இது போன்ற பிரச்னைகளில் நீதி கிடைக்க விவரம் புரிந்த, வழக்கறிஞர்கள் இருக்க வேண்டும் என்று இநத பானல் ஸிஸ்டம் வைத்திருக்கிறோம். விவரம் புரிந்த வழக்கறிஞர்களை இந்த பானல்-ஸிஸ்டத்தில் வைத்து விட்டு நாமினேஷன் ஸிஸ்டத்தில் வரும்போது அதிகப்படியான ஊதியம் அரசால் தரமுடியாது, குறிப்பிட்ட அளவுதான் ஊதியம் தர முடியும், ஆகவே அந்த ஊதியத்தில் விவரம் புரிந்த, அனுபவமிக்க வழக்கறிஞர்கள் முன்வரமாட்டார்கள் என்ற சிரமம் ஏற்படும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் க்ரிமினல், சிவில், மற்ற வழக்குகளுக்கு எல்லாம் ஒவ்வொரு துறையிலும் ஒரு குறிப்பிட்ட அளவு வழக்கறிஞர்கள் அந்தப் பானலில் இருக்கவேண்டும் என்று கொண்டுவந்தால் அந்தப் பிரச்னையைத் தீர்க்கலாம் என்று நம்புகிறோம். அதுகுறித்து கழகத்திற்கு அரசு அறிவுரை செய்யும்.



திரு. சோ. அழகர்சாமி: ஏழைகளுக்கு சட்ட உதவி என்று சொல்லும் போது ஏழைகள் என்று சொன்னால் எந்தத் தகுதியின் அடிப்படையில் ஏழைகள் என்று நிர்ணயிக்கப்படுகிறது? அதற்கு ஏதாவது சான்றிதழ் பெறவேண்டியிருக்கிறதா? யாரிடம் பெற வேண்டும்? அல்லது அவர்கள் ஏழைகள் என்று அவர்களே சொன்னால் ஏற்றுக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தற்போது சான்றிதழ்கள் அவர்கள் வந்தாலும் தரப்படுகிறது, சான்றிதழ்கள் பெற்று இல்லாமல் வந்தாலும் அந்தந்த வட்டப் பகுதியில் உள்ள வழக்கறிஞர்கள் கழக ஆலோசனைக் குழுவிடம் சென்று தனக்கு வாதாட வசதி இல்லை என்று சொல்லி அவர்கள் தாங்களாகவே ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்தால் கூட அந்த அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இப்படி தளர்த்திய முறை போடக் காரணம், பல கட்டங்களில் ஏழைகள் தாங்கள் ஏழைகள் என்பதற்கான அத்தாட்சி வாங்குவதில் பிரச்னை ஏற்பட்டுவிடும் என்பதால் அவர்கள் ஏழைகள் என்று ஏற்றுக்கொண்டு ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்தால் அதுவே போதும் என்று அந்த அடிப்படையில் இந்த முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

திருமதி. து. இராசாம்பாள்: இலவச சட்ட உதவி பற்றி பட்டிதொட்டிகளில் உள்ள பாமர மக்களுக்கு தகவல் தெரிவிக்கும் வகையில் விளம்பரப்படுத்த இந்த அரசு என்னென்ன வகையில் முயன்றிருக்கிறது? அதை வானொலி மூலம் விளம்பரப் படுத்த இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மொபைல் ப்ரீ லீகல் எய்ட் ஸிஸ்டம வரும் ஆண்டிலிருந்துதான் பட்டிதொட்டிகளில் பரப்ப அரசு முடிவு செய்து அதற்காக ஒதுக்கப்பட்ட 13 இலட்சம் ரூபாயில் ஒரு குறிப்பிட்ட அளவு செலவு செய்ய இருக்கிறது. அந்த அடிப்படையில் விளம்பரம் தேவையான அளவு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் வானொலி மூலமாகவும் அதைப் பற்றி விளம்பரப் படுத்த அரசு பரிசீலிக்கும்.

திரு. எல். இளையப்பெருமாள்: அமைச்சர் அவர்கள் சொல்கிற போது திறமை மிக்கவர்கள், அதிக நிதி வசதி உள்ளவர்கள் வருவதில் சிரமம் இருக்கிறது என்று அவர்களே ஒத்துக் கொண்டு சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது என்னவென்றால் ஏழை மக்களுக்கு உதவி செய்வது என்று சொல்லி நாம் அவர்களுக்கு போதிய உதவித்தொகை கொடுக்கத் தவறினால் நிச்சயமாக திறமை உள்ள வழக்கறிஞர்கள் முன்வர மாட்டார்கள் என்று அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டிருப்பதால் திறமை உள்ளவர்களை குறைந்த அளவிற்காவது மாவட்ட ரீதிவாக ஓரிருவரை அமர்த்தி போதிய நிதி உதவி செய்ய வேண்டும் என்பதை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: திறமை உள்ளவர்கள் அப்பாயிண்டி லாயர் லிஸ்டத்தில் வர முன்வரவில்லை என்று சொன்னேனே தவிர பானல் லிஸ்டத்தில் வர முன்வரவில்லை என்று சொல்லவில்லை. பானல் லிஸ்டத்தில் வருகிறார்கள். இதில் முக்கியமான விஷயம் ப்ரீ லீகல் எயிட் பொறுத்த வரையில் குறிப்பிட்ட வழக்கு அல்ல. சில நேரங்களில் சட்டப் பிரச்னையே இல்லாத பிரச்னைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் கூட அதுவுமில்லாமல் நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் அரசு அதிகாரிகளிடம் சென்று அவர்கள் முன்னிலையில் இருக்கிற பிரச்னைகளில், ஏழைகளுக்காக ஈடுபடுகிறபோது பலதரப்பட்ட பணிகளில் ஈடுபடக்கூடிய மனப்பக்குவம் உள்ளவர்கள் வரவேண்டி இருக்கிறது. குறிப்பிட்ட ஒருவரை நியமித்துவிட்டு அவர் க்ரிமினல் வழக்கில் மட்டும் அனுபவம் உள்ள வழக்கறிஞரராகயிருந்தால் சிவில் வழக்குகள் நடத்தாமல் எம்.எஸ்.ஐ.டி. வழக்குகள் கூட மேற்கொள்ளாமல் இருந்தால் அரசு அதிகாரிகளைச் சந்திப்பது தனக்கு கௌரவக் குறைவு என்று கருதுகிற வழக்கறிஞர்கள் பலர் இருப்பதால் அது கூடாது என்று பானல் லிஸ்டம் போட்டு அதற்கு முன்வருகிற வழக்கறிஞர்களைத்தான் அதிகமாகப் போடுகிறோம். சமுதாய நலனுக்காக சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு தனக்கு இருக்கிற ஓய்வு நேரத்தை அதற்காகச் செலவிடலாம் என்ற அடிப்படையில் வருகிற வழக்கறிஞர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

பாரதத்திலே எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவில் தமிழகத்தில் அதிகப்படியான வழக்குகள் இந்த சிஸ்டத்தில் வந்திருக்கிறது. மற்ற மாநிலங்களைவிட சிறப்பான முறையில் தமிழ் நாட்டில் நடக்கிறது என்பதை மைய அரசு பாராட்டியிருக்கிறது; இந்த முறை தொடர்ந்து இருப்பதுதான் நல்லது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாலே கேள்விக்குப் பதில் அளிக்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழக்குகளுடைய தன்மையைக் கருதி, திறமையுள்ள வழக்கறிஞர்கள் வாதாட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது; அந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு இங்கே இருக்கின்ற பார் கவுன்சிலின் உதவியை நாடி, அவர்கள் அந்த வழக்குகளின் தன்மையை அனுசரித்து வழக்கறிஞர்களை பரிந்துரை செய்து உதவ செய்ய அரசு அவர்களை அணுகுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பார் கவுன்சிலிடம் எந்தெந்த வழக்கறிஞர்கள் எந்தெந்தத் துறையில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதுபற்றிய விவரம் அவர்களிடம் இருக்காது. காரணம், என்ரோல்மென்ட் செய்தபிறகு, வழக்கறிஞர்களின் தன்மையை புரிந்து, அதற்கான விவரம் பார்கவுன்சிலிடம் இருக்காது. அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற பார் அசோசியேஷன். அட்வகேட்ஸ் அசோசியேஷன் பொறுத்தவரைக்கும் அவர்களிடம் அந்தத் தலைவரிடம், அந்தக் கழகம் அணுகி, மாண்புமிகு உறுப்



பினர் கருதுகிறதுபோல், திறமை மிக்கவர்களைத் தரவேண்டுமென்று கேட்டு. அந்த அடிப்படையிலே தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் எண்ணம் அந்த முறையில் தற்போது ஈடேற்றப்பட்டு வருகிறது.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழைகளுக்கு சட்ட உதவி செய்யும் வழக்கறிஞர்களை ஊக்குவிக்க, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டரேட் பதவியில் நியமனம் செய்வதில், அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னுரிமை கொடுக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளாக வருவதற்கு இந்தத் தகுதி என்று சொன்னால் சிறிது காலம் இந்தப் பணியில் அவர்கள் இருந்துவிட்டு நீதித் துறைக்கு சென்றுவிட்டால் அவர்கள் சேவை கிட்டாமல் போய்விடும். செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்.ரேட்டுகளாக வருவதற்கு தற்போது இருக்கும் விதியின்படி என்ரோல்மெண்ட் ஆன பிறகு 3 ஆண்டுகள் அவர்கள் வழக்கறிஞர்களாக பணியாற்றி இருக்க வேண்டும். அது போதாது என்று கருதுகின்ற காரணத்தினால், அதாவது நீதிபதிகளாக இருப்பதற்கு வழக்கறிஞர்கள் 10 ஆண்டுகளாக நீதிமன்றத்தில் வழக்குகளில வாதாடியவர்கள் கூட போதிய அளவுக்கு திறமை பெறமுடியவில்லை என்ற நிலை இருக்கிறது, இது ஒரு குற்றச்சாட்டாக இருக்கிறது, இப்போது 3 ஆண்டுகள் என்பதை 5 ஆண்டுகளாக உயர்த்தலாம் என்று இந்த அரசு கருதுகிறது. ஏழைகளுக்கு திறமையான வழக்கறிஞர்களைக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில், போதிய பணத்தைக் கொடுத்து, வழக்கறிஞர்கள் அமர்த்தப்படுவார்கள். அதுபோல் ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டுமென்ற அடிப்படையில், பலன் கிட்ட வேண்டுமென்ற அடிப்படையில் நல்ல அனுபவம் உள்ள வழக்கறிஞர்கள் வரவேண்டும். எனவே, 10 ஆண்டுகள் 15 ஆண்டுகள் அனுபவமுள்ளவர்கள், செகண்ட். கிளாஸ் மாஜிஸ்துரேட் பதவிக்கு அதிகமாக வரமாட்டார்கள் வருவதும் இல்லை,

திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த இலவச சட்ட உதவி சம்பந்தமாக பல விவரங்களை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். நடைமுறையில் இப்போது ஏற்பட்டுள்ள கஷ்டம் ஏழைகளுக்கு இந்த சட்ட உதவி திறமையாகக் கிடைப்பதற்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது: அந்தப் பேனலிலே அவர்கள் பல சங்கடங்களைத் தீர்த்து வைப்பதற்கு, காம்பிரமைஸ் செய்வதற்கு முயற்சி எடுக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால்; நீதி ஸ்தலத்தில் கிரிமினல், கொலை கேஸ்கள் வருகின்றபோது, எதிர்ப்பக்கத்தில் எப்படிப்பட்ட வழக்கறிஞர்களை வைக்கிறார்களோ அப்படிப்பட்ட வழக்கறிஞர்களைப் போடுவதில்லை என்ற குறை இருக்கிறது. அந்தக் குறையைத் தீர்ப்பதற்கு அந்த கேசுக்குத் தகுந்த மாதிரி, அந்த எதிர் வழக்கறிஞர்களுக்கு சம அந்தஸ்துள்ளவர்களை அந்தப் பணியில் அமர்த்தி உதவ அரசு முன்வருமா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் கேட்ட கேள்வியும் கிட்டத்தட்ட இதுவேதான். கிரிமினல் வழக்குகளில் வாதாடுவதற்கு திறமை மிக்கவர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்த வேண்டுமென்பதை இந்த அரசு உணருகிறது. இதையேதான், மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித் தேவர் அவர்களுக்கும் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும். இந்த 'ப்ரீ லீகல் எய்ட்' பொறுத்தவரைக்கும், அரசியல் சட்டத்தில் 39-ஏ பிரிவில் ஏற்கனவே இருந்தபோதும் கூட தமிழகத்திலே 1977-லிருந்துதான் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இது நான்கு ஆண்டு குழந்தையாக இருக்கிறது. இதற்கு அதிகப்படியான நிதியை இன்னும் ஓராண்டில் தந்து இதை செம்மைப் படுத்தி அரசு தீவிரமாக நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஏழைகளுக்கு சட்ட உதவி திட்டத்தில் இது வரையில் எவ்வளவு ஏழைகள் பயன்பெற்றிருக்கிறார்கள்? கீழ் கோர்ட்களிலிருந்து மேல் கோர்ட்களுக்கு மேல் முறையீடு ஒரு வழக்கை செய்யும்போது தொடர்ந்து சட்டம் உதவி கிடைக்க அரசு வழி செய்திருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, எத்தனை வழக்குகள் இந்த நான்கு ஆண்டு காலத்தில் அவர்கள் தீர்த்து வைத்திருக்கிறார்கள் என்ற தகவல் என்னிடத்தில் தற்போது இல்லை, அதற்கு தனி கேள்வி போட்டால் விவரமாக அதைப்பற்றி சொல்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க துணைத் தலைவரவர்களே, மத்திய அரசாலே அறிமுகம் செய்யப்பட்ட இந்த இலவச சட்ட ஆலோசனைக் குழுவிலே நாள் ஒன்றுக்கு நூற்றுக்கணக்காக, ஆயிரக்கணக்காக சம்பாதிக்கக் கூடிய புகழ் மிக்க வழக்கறிஞர்கள் பணிபுரிவதை என்னுடைய தொகுதியிலே கூட பார்த்து வியந்து பாராட்டியிருக்கிறேன். எனவே இந்த சமுதாயப் பணியிலே ஈடுபடுகிற வழக்கறிஞர்களை மேலும் உற்சாகப்படுத்துகிற முறையிலே, அரசாங்கம் அவர்களை கௌரவக்கிற வகையிலே, ஒரு 'ரெகக்னிஷன்' கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மத்திய அரசால் துவக்கப்பட்டிருக்கிற சட்ட ஆலோசனைக் குழு என்பது சரியல்ல. அரசியல் சட்டத்திலே 39ஏ பிரிவிலே ஏற்கனவே இலவச சட்ட உதவி



ஒவ்வொரு மாநிலத்திலும் மக்களுக்கு தரவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் 1977 வரை இத்தகைய சட்ட உதவி ஏழைகளுக்கு, அரசியல் சட்டத்திலே தரவேண்டும் என்று இருந்தாலும்கூட, தருவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. 1977—லேதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப கட்டத்திலே பத்து லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, தற்போது இந்த ஆண்டு 13 லட்சமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமாக ஒதுக்க அரசு முடிவு செய்திருக்கிறது. நல்ல வழக்கறிஞர்களை நியமிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள்சொல்லியது போல இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து அதிகமாக பணத்தை தரலாம். இருந்தபோதிலும் மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் மாண்புமிகு திரு. பி. ராமகிருஷ்ணன், அய். சி. எஸ். (பதவி ஓய்வுபெற்றவர்) அவர்கள் தலைமையில் இந்தக் குழு தற்போது மிக சிறப்பாக இயங்கி வருகிறது. இதை நாம் நடைமுறையிலே பார்த்து வருகிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கிரிமினல் வழக்குகளைப் பொறுத்தவரையில் குறிப்பாக கொலை வழக்கு, ராபரி, டெகாய்ட்டி, போன்ற 'செஷன்ஸ்' வழக்குகளுக்கு மட்டும்தான் 'ஸ்டேட் பிரீப்' போடப்படுகிறது. அப்படி 'ஸ்டேட் பிரீப்' போடப்படுகிற இடத்திலும் ஒரு நாளைக்கு அந்த வக்கீல்களுக்கு 35 ரூபாய்தான் பீஸ். அப்படி மூன்று நாளைக்கு நடக்கக்கூடிய ஒரு வழக்கு, கிட்டத்தட்ட 105 ரூபாய்க்கு ஒரு கொலை வழக்கு நடத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நல்ல வழக்கறிஞர்கள் கிடைப்பதில்லை. கொலை வழக்கு நடத்த வேண்டியிருக்கிறது, அதிக 'ஸ்ட்ரெய்ன்' பண்ண வேண்டியிருக்கிறது. ஆகவே குறைந்த பட்சம் 500 ரூபாயாவது கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்கிற அளவிற்கு அந்த குறைபாட்டை அரசும் உணர்கிறது; நானும் உணர்கிறேன். அதை நிவர்த்திக்க அவர்களுக்கு தரக்கூடிய அந்த 'பீஸ்' இன்னும் அதிகமாக தரவேண்டும், அவர்களுக்கு நிர்ணயிக்கிற அந்தத் தொகையை அதிகப்படுத்த அரசு ஏற்கனவே பரிசீலித்து வருகிறது. விரைவில் இதுகுறித்து ஒரு முடிவு செய்வோம்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த இலவச சட்ட உதவியில் அவர்களுக்கு அனுகூலம் கொடுக்கப் படுகிறது. ஆனால் அந்த குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்கு தொடுப்பவர்கள் ஏ.பி.பி.—2 தான் வழக்கு தொடுக்கிறார்கள். அந்த ஏ.பி.பி. சில நேரங்களில் எதிர்க்கட்சி வக்கீல்களுக்கு சமமாக இல்லையென்றால் வேறு ஒரு திறமையான வக்கீலை அமர்த்திக் கொள்ளலாம் என்று அதற்கு சட்டப்படி

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் கேட்ட கேள்வியும் கிட்டத்தட்ட இதுவேதான். கிரிமினல் வழக்குகளில் வாதாடுவதற்கு திறமை மிக்கவர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்த வேண்டுமென்பதை இந்த அரசு உணருகிறது. இதையேதான், மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித் தேவர் அவர்களுக்கும் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும். இந்த 'ப்ரீ லீகல் எய்ட்' பொறுத்தவரைக்கும், அரசியல் சட்டத்தில் 39-ஏ பிரிவில் ஏற்கனவே இருந்தபோதும் கூட தமிழகத்திலே 1977-லிருந்துதான் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இது நான்கு ஆண்டு குழந்தையாக இருக்கிறது. இதற்கு அதிகப்படியான நிதியை இன்னும் ஓராண்டில் தந்து இதை செம்மைப் படுத்தி அரசு தீவிரமாக நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஏழைகளுக்கு சட்ட உதவி திட்டத்தில் இது வரையில் எவ்வளவு ஏழைகள் பயன்பெற்றிருக்கிறார்கள்? கீழ் கோர்ட்களிலிருந்து மேல் கோர்ட்களுக்கு மேல் முறையீடு ஒரு வழக்கை செய்யும்போது தொடர்ந்து சட்டம் உதவி கிடைக்க அரசு வழி செய்திருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, எத்தனை வழக்குகள் இந்த நான்கு ஆண்டு காலத்தில் அவர்கள் தீர்த்து வைத்திருக்கிறார்கள் என்ற தகவல் என்னிடத்தில் தற்போது இல்லை, அதற்கு தனி கேள்வி போட்டால் விவரமாக அதைப்பற்றி சொல்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க துணைத் தலைவரவர்களே, மத்திய அரசாலே அறிமுகம் செய்யப்பட்ட இந்த இலவச சட்ட ஆலோசனைக் குழுவிலே நாள் ஒன்றுக்கு நூற்றுக்கணக்காக, ஆயிரக்கணக்காக சம்பாதிக்கக் கூடிய புகழ் மிக்க வழக்கறிஞர்கள் பணிபுரிவதை என்னுடைய தொகுதியிலே கூட பார்த்து வியந்து பாராட்டியிருக்கிறேன். எனவே இந்த சமுதாயப் பணியிலே ஈடுபடுகிற வழக்கறிஞர்களை மேலும் உற்சாகப்படுத்துகிற முறையிலே, அரசாங்கம் அவர்களை கௌரவக்கிற வகையிலே, ஒரு 'ரெகக்னிஷன்' கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மத்திய அரசால் துவக்கப்பட்டிருக்கிற சட்ட ஆலோசனைக் குழு என்பது சரியல்ல. அரசியல் சட்டத்திலே 39ஏ பிரிவிலே ஏற்கனவே இலவச சட்ட உதவி



ஒவ்வொரு மாநிலத்திலும் மக்களுக்கு தரவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் 1977 வரை இத்தகைய சட்ட உதவி ஏழைகளுக்கு, அரசியல் சட்டத்திலே தரவேண்டும் என்று இருந்தாலும்கூட, தருவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. 1977–லே தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப கட்டத்திலே பத்து லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, தற்போது இந்த ஆண்டு 13 லட்சமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமாக ஒதுக்க அரசு முடிவு செய்திருக்கிறது. நல்ல வழக்கறிஞர்களை நியமிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள்சொல்லியது போல இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து அதிகமாக பணத்தை தரலாம். இருந்தபோதிலும் மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் மாண்புமிகு திரு. பி. ராமகிருஷ்ணன், அய். சி. எஸ். (பதவி ஓய்வுபெற்றவர்) அவர்கள் தலைமையில் இந்தக் குழு தற்போது மிக சிறப்பாக இயங்கி வருகிறது. இதை நாம் நடைமுறையிலே பார்த்து வருகிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கிரிமினல் வழக்குகளைப் பொறுத்தவரையில் குறிப்பாக கொலை வழக்கு, ராபரி, டெகாய்ட்டி, போன்ற 'செஷன்ஸ்' வழக்குகளுக்கு மட்டும்தான் 'ஸ்டேட் பிரீப்' போடப்படுகிறது. அப்படி 'ஸ்டேட் பிரீப்' போடப்படுகிற இடத்திலும் ஒரு நாளைக்கு அந்த வக்கீல்களுக்கு 35 ரூபாய்தான் பீஸ். அப்படி மூன்று நாளைக்கு நடக்கக்கூடிய ஒரு வழக்கு, கிட்டத்தட்ட 105 ரூபாய்க்கு ஒரு கொலை வழக்கு நடத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நல்ல வழக்கறிஞர்கள் கிடைப்பதில்லை. கொலை வழக்கு நடத்த வேண்டியிருக்கிறது, அதிக 'ஸ்ட்ரெய்ன்' பண்ண வேண்டியிருக்கிறது. ஆகவே குறைந்த பட்சம் 500 ரூபாயாவது கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்கிற அளவிற்கு அந்த குறைபாட்டை அரசும் உணர்கிறது; நானும் உணர்கிறேன். அதை நிவர்த்திக்க அவர்களுக்கு தரக்கூடிய அந்த 'பீஸ்' இன்னும் அதிகமாக தரவேண்டும், அவர்களுக்கு நிர்ணயிக்கிற அந்தத் தொகையை அதிகப்படுத்த அரசு ஏற்கனவே பரிசீலித்து வருகிறது. விரைவில் இதுகுறித்து ஒரு முடிவு செய்வோம்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த இலவச சட்ட உதவியில் அவர்களுக்கு அனுகூலம் கொடுக்கப் படுகிறது. ஆனால் அந்த குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்கு தொடுப்பவர்கள் ஏ.பி.பி.—2 தான் வழக்கு தொடுக்கிறார்கள். அந்த ஏ.பி.பி. சில நேரங்களில் எதிர்க்கட்சி வக்கீல்களுக்கு சமமாக இல்லையென்றால் வேறு ஒரு திறமையான வக்கீலை அமர்த்திக் கொள்ளலாம் என்று அதற்கு சட்டப்படி

[1981 மே 8

பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு

*வினா எண். 1023—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டைத் தொகுதி பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் குடிதண்ணீர் கிடைக்காமல் மக்கள் சிரமப்படுவது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் என்றால், இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) பட்டிவீரன்பட்டி பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிற போது பதிலில் பரிசீலனையில் உள்ளது பரிசீலனையில் உள்ளது என்று சொன்னால் பரிதாபத்திற்குரிய நிலைதான். அங்கே தண்ணீர் இல்லாமல் அவஸ்தைப் படுகிறார்கள். ஓடையில் வரக் கூடிய சாக்கடைத் தண்ணீரைக் குடிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது ஆகவே போர்கால முக்கியத்துவம் கொடுத்து அந்தத் திட்டத்தை விரைவாக சாங்ஷன் செய்து குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படுமா ? எத்தனை லட்சத்திற்கு எஸ்டிமேட் போடப்பட்டு அனுப்பப் பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, இப்பேரூராட்சியில் வசித்து வரும் மக்கள் தற்சமயம் பேரூராட்சியால் செயல்படுத்தப்பட்ட இரண்டு திறந்த கிணறு களிலிருந்து குடிநீர் எடுத்து வருகிறார்கள். இக்கிணறுகளிலிருந்து கிடைக்கும் நீர் போதுமானதாக இல்லாமையாலும், கோடை காலங்களில் இக்கிணறுகள் வறண்டு விடுவதாலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விரிவான ஆய்வின் பிறகு 1978 ஆம் ஆண்டு இப்பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ. 14.40 லட்சத்தில் திட்டம் அமைக்கவும் ரூ. 62 ஆயிரத்தில் திட்டத்தைப் பராமரிக்கவும் ஒரு உத்தேச மதிப்பீடு தயார் செய்தது. இத்திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: துணைத் தலைவர் அவர்களே. மறுபடியும் பரிசீலனையில் உள்ளது என்றுதான் அமைச்சர் அவர்கள் கருணை காட்டாமல் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 14.40 லட்சம் ரூபாய் திட்டம் என்று சொல்கிறார்கள், ரீபேயிங் கெபாசிட்டி இல்லை ஆகவே தள்ளி வைத்துக் கொண்டே இருக்கிறோம் என்று அங்கே உள்ள இலாகாவினர் சொல்கிறார்கள்.



1981 மே 8] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

[முற்பகல் 9–40]

அதற்கு அந்த ஊரிலே உள்ளவர்கள் எவ்வளவு பணம் வேண்டு மானாலும் கட்டத்தயாராக இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை 30 நாட்களுக்குள்ளாகவாவது, ஒரு ஸ்பெஷல் ஸ்கீமாகப் போட்டு எடுத்துக் கொள்ள அமைச்சரவர்கள் வழிவகை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, எந்தத் திட்டமாக இருந்தாலும் பரிசீலனை செய்யாமல் கையெழுத்துப் போட முடியாது. திட்டம் அங்கிருந்து வந்த பிறகு படித்துப் பார்த்து, 14.40 இலட்சம் எக்சிகியூஷனுக்கு மெயின்டெனன்ஸ் பராமரிப்புக்காக 62,000 என்றால் எந்தப் பேரூராட்சி என்று பார்த்து, பணம் இருக்கிறதா என்று பார்த்து, இதையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். நீங்கள் கூட கடைக்குப்போய் புடவை வாங்குவது என்றால் பரிசீலனை செய்துதான் வாங்கவேண்டும், போனவுடனே எடுத்துக் கொண்டு வந்துவிடமுடியாது. எனவே, பரிசீலனை செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன காரணத்தினால் இதை விரைவாகப் பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் துணைத் தலைவர வர்களே, தற்போது பரிசீலனையில் இருக்கின்ற திட்டத்திலே எந்தெந்தப் பகுதிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் அந்த பட்டிவீரன்பட்டியில் ஒரு பகுதி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. வேறு பஞ்சாயத்தாக இருந்தாலும் அதுவும் சேர்த்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தனிக் கேள்வி போட்டால் விரிவான தகவலைத் தரலாம். ஆனால், இங்கே இருப்பது பட்டிவீரன்பட்டி, மதுரை மாவட்டத்தில் நிலக் கோட்டை தாலுக்காவில் தேர்வுநிலைப் பேரூராட்சியாகும். இப்பேரூராட்சியில் கீழ்க்கண்ட கிராமங்கள் இருக்கின்றன என்று இருக்கிறதே தவிர, இந்தக் குடிநீர்த்திட்டம் மற்றக் கிராமங்களுக்கு பொருந்துமா, அது ஒரு காம்பிரெஹன்சிவ் ஸ்கீமா என்பதைப் பற்றிய தகவல் இங்கு இல்லை. தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பரகுமடி நகரப் பஞ்சாயத்துப் பகுதியில் பாதாள கழிவு நீர்த் திட்டம் அமைத்தல்

* வினா எண். 1024 — திரு. செ. சிவசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரமகுடி நகரப்பஞ்சாயத்தில் பாதாள கழிவுநீர் திட்டம் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. செ. சிவசாமி : பேரவையின் உதவித் தலைவரவர்களே, இல்லை என்ற பதில் வேகமாக இருக்கிறது. பரமக்குடி முனிசிபாலிட்டியைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய முனிசிபாலிட்டி, கிட்டத்தட்ட 66,000 ஜனத்தொகை கொண்டது. இன்றைக்கு டவுன் பஞ்சாயத்திலே சாக்கடை நாற்றம் பொறுக்கமுடியவில்லை. நாற்றத்திற்குப் பெயர்போன இடமாக இருக்கிறது. கொசு உற்பத்தி பெருகிப்போன இடம். ஏற்கனவே இதையெல்லாம் தீர்க்க வேண்டுமென்று பாதாளச் சாக்கடைத் திட்டம் சேங்ஷன் செய்யப்பட்டு என்ன காரணத்தினாலோ அது நிறுத்தி வைக்கப்பட்டது. சேங்ஷன்ஆன திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து உடனடியாகக்கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள், 66,000 மக்கள் தொகை என்று. அரசின் கொள்கை, வடிகால் திட்டங்களுக்குச் செலவு அதிகமாவதால் உள்ளாட்சி மன்றங்கள் திட்டங்களை ஏற்க முன்வருவதில்லை. எனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி ஒரு இலட்சத்திற்கு மேல் உள்ள முதல்தர நகராட்சிகளுக்கு மட்டுமே கழிவுநீர் அகற்றும் பணியை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

திரு. மி. வின்சென்ட் : துணைத் தலைவரவர்களே, நாகர்கோவில். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில் நாகர்கோவில் வரவில்லை; பரமகுடி பற்றியது. அடுத்த கேள்வி எண். .

திரு. மு. அம்பிகாபதி : மூலக் கேள்வி கேட்ட உறுப்பினர் இரண்டு கேள்விகள் கேட்கலாம்; அந்த மரபையே மாற்றினால் . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி, நீங்கள் உட்காருங்கள். திரு. சிவசாமி அவர்கள் இரண்டாவது துணைக் கேள்வி கேட்கலாம்.

திரு. செ. சிவசாமி : மிகவும் நன்றி. பரமக்குடியைப் பொறுத்த அளவில் பக்கத்திலுள்ள வைகையாற்றில் இன்றைக்கு சாக்கடை முழுவதும் திருப்பி விடப்படுகிறது. அந்த சாக்கடையை யாவது நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே நாகர்கோவில் மற்றும் வேலூர் நகராட்சிகளுக்குக் கழிவுநீர்த்திட்டம் குடிநீர் வடிகால் வாரியத் திடம் பரிசீலனையில் இருக்கிறது என்றுதான் இருக்கிறது. அங்கே பிருக்கின்ற சாக்கடை நீரைக் கொண்டுபோய்விடுவது என்று சொன்னால் அதற்காகத் தனியாக அந்தப் பரமக்குடி (குறுக்கீடு) அது நகராட்சியா ? நகராட்சி, அதற்கே அவர்கள் ஒரு இலட்சத் திற்குக் குறைவாகத்தான் மக்கள் தொகை இருக்கிறது. 66,000 பேர் தான் இருக்கிறார்கள். ஆகவே எங்கள் திட்டத்தில் அதை ஏற்றுக் கொள்வதில்லை, இப்பொழுது இருக்கின்ற அரசின் கொள்கைப்படி, அவர்கள், தனியாகச் சாத்தியக்கூறுகள் இருக் கின்றன. ஒரு இலட்சத்திற்குக் குறைவாக இருந்தாலும் செலவு செய்ய, எங்களால் அந்தத் தொகையைத் திருப்பிக் கட்ட முடியும் என்று எழுதுவார்களேயானால் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு கடைசி ஆய்வும் முடிவுற்று சுமார் ரூ. 4 கோடி மதிப்பீடு செய்து ஓராண்டுக்காலம் முடிந்ததற்குப் பிறகும் அந்தப் பணியைத் தொடங்காதிருப்பது சரிதானா ? உடனடியாக அடிக்கல் நாட்டி அந்தப் பணியை ஆரம்பித்து வைக்க அமைச்சர் முன் வருவாரா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மூலக் கேள்வி பரமக் குடியைப்பற்றி. நாகர்கோவிலைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் தான் நாகர்கோவில் என்று சொல்லிவிட்டார்கள். அதற்காகத் தான் வாய்ப்பு கொடுத்தேன். வினா எண் 956, திரு. இ. முத்துராமலிங்கம், மாண்புமிகு நீர்பாசனத் துறை அமைச்சர் . .

திரு. எல். இளைய பெருமாள் : திரு. சிவசாமி அவர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லவே இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை நீங்கள் ஏன் சொல்கிறீர்கள்? 'இல்லை' என்று முதலிலேயே அமைச்சர் சொல்லி விட்டார்.

திரு. கு. ரமணி : ப்ரொசீஜர் பற்றி நான் ஒன்று சொல்கிறேன்.

திரு. செ. சிவசாமி : இரண்டாவது கேள்விக்கு தாங்கள் அனுமதி கொடுத்தீர்கள். ஆனால், அமைச்சர் நாகர்கோவிலைப் பற்றிச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதையெல்லாம் 10 மணிக்குமேலே வைத்துக்கொள்வோம.

[1981 மே 8

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு இலட்சத்திற்குக் குறைவாக மக்கள் தொகை இருக்கக்கூடிய நகராட்சியில் .....

திரு. செ. சிவசாமி : இரண்டாவது கேள்வி அது அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் இப்படித் தான் பதில் சொல்ல வேண்டுமென்று நான் சொல்ல முடியாது. சொல்கிற பதிலைக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பாதாள சாக்கடைத் திட்டம் வேணடும. திட்டம் வேண்டுமென்று சொன்னால், ஒரு இலட்சத்துக் குறைவாக மக்கள் தொகை இருந்தாலும், அந்தத் திட்டத்தைக் குடிநீர் வடிகால்வாரியம் (திரு.எல்.இளையபெருமாள் எழுந்தார்). நான சொல்கிற பதிலைக் கொஞ்சம் பொறுமையாக கவனியுங்கள். திரு. இளையபெருமாள் என்னைப் போல் வயதானவர். அவர் கூட அவசரப்பட்டால் எப்படி ? Both of us are sailing in the same boat இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றுசொன்னால், குடிநீர்வடிகால் வாரியம் திட்டத்தை நிறைவேற்றினால் அதற்காக ஆகக்கூடிய செலவை அந்த நகராட்சி ஏற்றுக் கொள்ளும் என்ற தீர்மானத்தை அவர்கள் நிறைவேற்றினால் 50,000 பேர்கள் இருந்தாலும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம்.

THIRU L. ILAYAPERUMAL He mentioned my name.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய பெயரைச் சொன்னார், அவ்வளவுதான். உங்களுடைய கேள்வி அல்ல அது.

THIRU L. ILAYAPERUMAL : He has not given a proper reply to Mr. Sivasamy's question.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை நீங்கள் சொல்லக் கூடாது. உங்களுக்கு உரிமை கிடையாது. சிவசாமி கேட்பதற்கு அமைச்சர் பதில் சொல்வார். நீங்கள் அதற்குப் பதில் கேட்க முடியாது. (திரு. எல். இளையபெருமாள் குறுக்கீடு). அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். அமைச்சர் இப்படித்தான் பதில் சொல்ல வேண்டுமென்று சொல்லக் கூடிய வாய்ப்பும், உரிமையும் எனக்குக் கிடையாது. அவர் சொல்வதுதான் பதில். அவர் சொல்கிற வாசகம் தான் பதில். அவரை இப்படித் தான் பதில் சொல்ல வேண்டுமென்று நான் சொல்ல முடியாது.

திரு. எல். இளையபெருமாள் : அவர் ரிப்ளை கொடுக்கவில்லையென்றால் ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் பதில் கொடுக்கவில்லையென்றாலும் நான் ஒன்றும் செய்ய முடியாது.



1981 மே 8]

திரு. எல். இளையபெருமாள் : வைகை ஆற்றில் விடப்படும் தண்ணீர் நிறுத்தப்படுமா என்பது கேள்வி. .....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் இப்படி நடந்து கொள்வது வழக்கம் அல்ல.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நடைபெற்ற விவாதங்களைக்கூட நீங்கள் அவைக் குறிப்பிலே ஏற்றாமல் இருக்க வேண்டும். இது தவறான முன் மாதிரியாக இருக்கலாம். கேள்வி நேரத்திலே ஒரு அமைச்சர் என்ன பதில் சொல்கிறாரோ அதுதான் பதிலே தவிர, இப்படித் தான் சொல்ல வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. இரண்டாவது முறையும் அவர் சொல்லியிருக்கிறார் எனவே இதுவே முன் மாதிரியாக இருக்குமானால், ஒவ்வொரு கேள்வி பதில் நேரத்திலும் சம்பந்தம் இல்லாத சில கேள்விகள் எழ வாய்ப் பேற்படும் என்ற காரணத்தினாலே, அதை முதலிலே அவைக்குறிப் பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் சொல்வது தான் பதில் என்று நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அது ரூலிங்கிலே வந்து விட்டது. கேள்வி நேரத்திலே இந்த மாதிரி வாதங்களை எழுப்பக் கூடாது.

ஆறுகளில் பாயும் மழைக்கால வெள்ளம் வீணாவதைத் தடுக்கும் திட்டம்

* **வினா எண். 956**— திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக ஆறுகளில் பாயும் மழைக்கால வெள்ளம் கடலில் கலந்து வீணாவதைத் தடுக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

(ஆ) இல்லையெனில் பொறியாளர் (Engineers) களின் குழு ஒன்று அமைத்து ஆலோசனை செய்யப்படுமா ?

(இ) உண்டெனில் என்னென்ன திட்டங்கள் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ), (ஆ) மற்றும் (இ) :

* விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

பொன்னாறு வாய்க்கால் தலைப்பை சீர்திருத்தும் திட்டம்

* வினா எண். 957—திரு. பி. தங்கவேலு : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

[*118—ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.]

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம் பொன்னாறு வாய்க்கால் தலைப்பை சீர்திருத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது இந்த வேலை துவங்கப் பெறும்?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) மற்றும் (ஆ) : உடையார்பாளையம் வட்டம், பொன்னாறு வாய்க்கால் தலைப்பை சீர்திருத்தும் திட்டம் ஏதும் இல்லை. இந்த வாய்க் காலை சுமார் ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது என்று பாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

[முற்பகல் 9.50]

**திரு. கு. ரமணி :** நான் நீண்ட நேரமாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிற கேள்வி களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். அந்த பதிலுக்குப் பிறகு மேற்கொண்டு விளக்கங்கள் அல்லது மேலும் தகவல்கள் பெறுவதற்கு உறுப்பினர்கள் விரும்பினால், அதைச் சட்டப்படி வேறு வகைகளில் கேட்கலாமே தவிர, சரியான பதில் வரவில்லை, அந்த பதில் இப்படி வந்திருக்கவேண்டும் என்று அமைச்சரை வற்புறுத்துவதற்கு வழியில்லை. மாண்புமிகு உறுப் பினர்கள் எதிர்பார்க்கின்ற அளவிற்கு விளக்கங்கள் அந்த பதிலில் இல்லாவிட்டால் அந்த விளக்கங்களைப் பெறுவதற்கு வேறு முறை யான நடவடிக்கைகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு அமைச்சர் அளித்த பதில் சரி யான பதிலாக, போதுமானதாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். மாண்புமிகு அமைச்சர் இப்படித்தான் பதில் சொல்லவேண்டும் என்று நான் கட்டாயப் படுத்த முடியாது. மாண்புமிகு அமைச்சர் பதிலே சொல்ல வில்லையென்றாலும் நான் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**Thiru K. RAMANI :** I have not asked the Hon.Deputy speaker to compel the Hon.Minister to reply. The Hon.Minister is bound to give a reply. According to our rules, the Hon Minister is bound to give a proper reply to the question put.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் ஏற்கனவே இது குறித்து தீர்ப்புச் சொல்லிவிட்டேன். அந்தக் கேள்வி முடிந்து அடுத்த கேள்விக்குப் போய், அதற்கும் பதில் சொல்லியாகி விட்டது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து உட்கார வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற நடவடிக்கைகளிலேயே கேள்வி நேரம் என்பது முக்கியமான ஒரு நேரமாகும். பல தகவல்கள் பெறுவதற்கும், தேவையான விளக்கங்களை அமைச்சர்களிடத்தில் இருந்து பெறு வதற்கும் இது ஒரு முக்கியமான நேரமாகும். மேலும், இங்கே வருகின்ற வினாக்கள் போடப்பெற்று, நீண்ட நாட்கள் சென்ற பின்னரே, அதற்கான பதில்கள் இங்கே வருவதால், மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய விளக்கங்களை அமைச்சர்களிடத்தில் இருந்து பெறுவதற்கு விரும்புகிறார்கள். அப்படி விளக்கங்கள் கேட்கின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர்கள் அதற்கான விளக்கங்களைத் தர இயலவில்லை என்றால், விவரங்கள் தற் போது இல்லை, பின்னர் சேகரித்துத் தருகிறேன் என்று சொல்ல லாம். அது உறுப்பினர்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடியதாக இருக்கும். அது சம்பந்தமான முறையில் மாண்புமிகு அமைச்சர் கள் பேசினால் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். இப்படித் தான் அவர் பதில் சொல்லவேண்டும் என்று உறுப்பினர்கள் எதிர் பார்ப்பது சரியல்ல. இது ஒரு நல்ல முன்மாதிரி இல்லை. ஆகவே, இந்தப் பிரச்னையை இத்தோடு முடிக்கிறேன்.

### வெள்ளைகல் நீர்த்தேக்கத் திட்டம்

* வினா எண். 958—**திரு. ந. குலசேகர பாண்டியன்:** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா, வெள்ளைகல் நீர்த்தேக்கத் திட்டம் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) : வடார்க்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தில் வெள்ளாகல் நீர்த்தேக்கத் திட்டம் முதல் நிலை ஆய்வில் உள்ளது. இத்திட்டம் பாலாறு வடிநிலத்தில் அமைந்துள்ளது. பாலாற்றில் போதிய உபரிநீர் இல்லாததால் மூன்று ஆண்டுகளாக நீர் அளவைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறைந்தது 5 ஆண்டுகளாவது நீர் அளவைகள் எடுத்து, உபரிநீர் இருப்பதாகத் தெரிந்தால் மேற்கொண்டு ஆய்வு செய்ய எடுத்துக் கொள்ளப்படும் என்று தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஏறத்தாழ பல கிராமங்கள் பயன் அடையும். தற்போதுள்ள வறட்சி நிலையில் கூட அங்கேயுள்ள கிட்டத்தட்ட 15 கிராமங்களுக்கு தேவையான நீர் வற்றாமல் கிடைத்து வருகிறது. அந்த அளவிற்கு ஒரு மிகப்பெரிய வாய்ப்பு இருப்பதால், அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகின்ற இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வர வேண்டும். மேலும், இதிலே வருகின்ற நீரின் மூலம் பாலாற்றின் நீர் அதிகப்படுவதற்கோ அல்லது இல்லாமல் போவதற்கோ வாய்ப்பு இல்லை என்பதால், அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசு முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பாலாற்று வடிநிலத்தில் இந்த அணைக்கட்டு கட்ட வேண்டிய நிலைமை இருப்பதால், போதிய நீர் கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஏற்கனவே கடந்த 3 ஆண்டுகாலமாக நீர் அளவு எடுக்கப்பட்டு வருகிறது. ஏறத்தாழ ஒரு 5 ஆண்டு அல்லது 10 ஆண்டு நீர் அளவு ஒரு நீர்த்தேக்கத் திட்டம் நிறைவேற்றுவதற்கு முன்பு எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மிகுந்த அக்கறை காட்டுவதால் ஏறத்தாழ 5 ஆண்டு கணக்கு எடுத்த பிறகு இது குறித்து பரிசீலிக்கலாம். இன்னும் 2 ஆண்டுகள் நீர் அளவு எடுத்தபின், இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்று எப்போது வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, 1978-79 விலைவாசி கணக்கின்படி 106 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.



திரு. ஏ. சி. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, வறட்சியும் வெள்ளமும் தமிழகத்தில் மாறி மாறி வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் நிரந்தர பாசன வசதி அளிக்க ஆங்காங்கே அணைகள் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு வடாற்காடு மாவட்டத்தில் செண்பகத் தோப்பு அணை கட்ட இதுவரையில் பணி தொடங்கப்படவில்லை. அந்த பணியைத் தொடங்க துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

**வெள்ளாகுளம் பகுதியில் புதிய பாசனக் கண்மாய் அமைக்கும் திட்டம்**

* வினா எண். 959— திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வெள்ளாகுளம் என்ற இடத்தில் ஒரு புதிய பாசனக் கண்மாய் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப் பணி எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) : திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வெள்ளாகுளம் கிராமத்தருகே ரூ. 5.60 லட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய கண்மாய் அமைக்கும் திட்டத்திற்கு நடப்பு ஆண்டு ஜனவரி மாதம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. திட்ட வேலை விரைவில் தொடங்கப்படும் என சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவரவர்களே, இந்த சங்கரன்கோவில் வட்டம், வெள்ளாகுளம் என்ற இடத்தில் அமைக்கப்படும் பாசனக் கண்மாய் ஆயக்கட்டில் வரக்கூடிய மொத்த நிலப்பரப்பு எவ்வளவு இந்த வேலைகளைச் செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் எல்லாம் கேட்கப்பட்டு விட்டனவா? இன்னும் காண்ட்ராக்ட் விடப்படவில்லை என்றால் எவ்வளவு காலத்திற்குள் வேலை தொடங்கும்? இப்போது வறட்சியாக இருப்பதால் இந்த வேலையை உடனடியாகத் தொடங்கினால் வறட்சி நிவாரணப் பணியாகவும் அமையும். ஆகவே உடனடியாக வேலையைத் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவரவர்களே, இந்த புதிய கண்மாயிலிருந்து 1.13 மில்லியன் கன அடி அளவுக்கு தண்ணீர் தேக்கக்கூடிய புதிய ஏரி அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதனால் 178 ஏக்கா புதிய நிலங்கள்– இதுவரை பாசன வசதி இல்லாத நிலங்கள்—பாசன வசதியடையும். இப்போது இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று தல அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம். டெண்டர், மற்ற விவரங்கள் எல்லாம் முடிந்துவிட்டனவா என்ற குறிப்பு இல்லை. முடிக்கப்படாமல் இருந்தாலும், உடனடியாகத் தொடர்பு கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

## சித்தமல்லி கிராமத்தில் ஏரி அமைக்கும் திட்டம்

* வினா எண். 960 —திரு எஸ். இராசாராமன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடையார் பாளையம் தாலுகா சித்தமல்லி கிராமத்தில் 7½ கோடி ரூபாய் திட்டத்தில் ஏரி ஒன்று வெட்டி அமைப்பதற்கு திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) மற்றும் (ஆ) : திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார் பாளையம் வட்டத்தில் சித்தமல்லி ஓடையின் குறுக்கே ரூ. 240 இலட்சம் செலவில் ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 4202 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். 846 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன உறுதிபெறும்.

**திரு. எஸ். இராசாராமன் :** துணைத் தலைவரவர்களே, சென்ற ஆட்சியில் இந்தத் திட்டம் 7½ கோடி ரூபாய்க்குப் போடப்பட்டதாகத் தெரிகிறது. அதை ஏன் 2.40 கோடி ரூபாயாகக் குறைத்தது இந்த அரசு என்று அறிய விரும்புகி3றன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவரவர்களே, சென்ற ஆட்சியில் எத்தனை கோடிக்குப் போட்டார்கள் என்று தெரியவில்லை. அவர்களே, அதை நிறைவேற்றியிருந்தால் இந்தக் கேள்வி எழுந்திருக்காது. இந்த ஆட்சி அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்ததற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி தெரிவித்திருக்க வேண்டும்.

**திரு. எஸ். இராசாராமன் :** துணைத் தலைவரவர்களே, இந்த ஆட்சி இந்த அளவுக்குத் திட்டம் போட்டு, நிறைவேற்றுவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்: இருந்தாலும்கூட 7½ கோடி ரூபாய்க்கான திட்டத்தை நிறைவேற்றினால் இன்னும் அதிகமான பாசன வசதி பெற முடியும். அரசுக்கு மிகவும் வேண்டியவர்களுடைய நிலம் பாதிக்கும் என்பதால்தான் அந்தத் திட்டம் இந்த அளவுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா?



**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவரவர்களே, ஒரு திட்டத்தை நிறைவேற்றும்போது அங்கே கிடைக்கக்கூடிய பல்வேறு தகவல்களைக் கணக்கிலே கொள்கிறோம். மேலும் கூடுதலாக எந்த அளவுக்கு புன்செய் நிலங்களுக்கு புதிதாக பாசன வசதி கொடுக்க முடியும் என்பதை முக்கியமாக கருத்திற்கொண்டு திட்டங்களைத் தீட்டுகிறோம். இத்திட்டத்தின் மூலம் 4202 ஏக்கர் புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்; 846 ஏக்கர் நன்செய் நிலங்கள் பாசன உறுதி பெறும். அந்த வகையில் திட்டத்தை அமைத்திருக்கிறோம். இதற்குமேல் அங்கே பெரிய திட்டம் அமைக்கத் தேவையில்லை என்றும், இருக்கிற நீர் அளவைக் கருதிப்பார்க்கும்போது இதுவே சரியானது என்று கருதுவதாலும் இத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஒப்புதலும் அளித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இராமநாதபுரம் தொகுதியில் சுண்ணாம்பு சிப்பிகள் எடுக்க குத்தகை விடும் திட்டம்.

* வினா என் 1025—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம், முகவை தொகுதியில் அழகன்குளம், நாகாச்சி, ஆத்தங்கரை போன்ற இடங்களில் சுண்ணாம்பு சிப்பிக்கு டன் 1க்கு ரூ. 9–86 வசூல் செய்யவேண்டும் என்பதை அரசு வட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டுள்ளதா?

(ஆ) ஆண்டுக்கு அதன் வருமானம் என்ன?

(இ) குத்தகைதாரருக்கு விடும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) இல்லை.

(ஆ) 1980ம் ஆண்டு வருமானம்; உரிம வரி (Royalty) தலவரி (Local Cess) மற்றும் தலவரி மீது உபரிவரி (Local Cess surcharge) உட்பட ரூ. 7?,578 65 ஆகும்.

(இ) தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை விடும் உத்தேசம் அரசுக்கு இல்லை. தமிழ்நாடு கனிம நிறுவனம் இராமநாதபுரம் வட்டம், அழகன்குளம், நாகாச்சி, ஆத்தங்கரை கிராமங்களில் சுண்ணாம்பு சிப்பி எடுக்க குத்தகை கோரி மனுச் செய்துள்ளது. அம்மனுவின் பேரில் அரசுக்கு, சென்னை தொழில் மற்றும் வணிக இயக்குநர் 20 வருடக் குத்தகைக்கு சிபாரிசு செய்து உள்ளார். அரசு விதிமுறைகளுக்கிணங்க தமிழ்நாடு கனிம நிறுவனத்தினரின் விண்ணப்பத்தின்பேரில் ஆணை பிறப்பிக்கவிருக்கிறது.

[1981 மே 8

## தூத்துக்குடியில் உப்பு சம்பந்தப்பட்ட தொழில்கள் துவங்கும் திட்டம்.

* வினா எண் 1026 திரு. பி. ஈஸ்வரமுர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் உப்பு சம்பந்தப்பட்ட தொழில்கள் துவங்க தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) & (ஆ): உப்பை மூலப்பொருளாகக் கொண்டு 66,000 டன்கள் சோடா ஆஷ் மற்றும் 66,000 டன்கள் அம்மோனியம் உற்பத்தி செய்யக்கூடிய ஏறக்குறைய 40 கோடி ரூபாய் முதலீட்டில் ஏறக்குறைய 500 பேர்களுக்கு நேரடியாகவும் ஆயிரம் பேர்களுக்கு மறைமுகமாகவும் வேலை கொடுக்கிற வகையில் தமிழ்நாடு ஆல்கலி கெமிக்கல்ஸ் அண்ட் பெர்டிலைசர்ஸ் நிறுவனம் டிட்கோவினுடைய கூட்டுத்துறை நிறுவனமாக 1982-ல் உற்பத்தியைத் துவக்க இருக்கின்றது. அதற்கான தொழிற்சாலைகளுக்கான கட்டுமான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் தூத்துக்குடி பகுதியில் 1,350 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தும் வேலை அதாவது லேண்ட் அக்விசிஷன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியிலே மெரைன் மற்றும் சால்ட் பேஸ்ட் இன்ஜீனியரிங் இன்டஸ்ட்ரீஸ் துவங்குவதற்கு அந்த 1,350 ஏக்கர் நிலப்பரப்பும் பயன்படுத்தப்படும்.

[முற்பகல் 10–00]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. பி. ஈஸ்வரமுர்த்தி என்கிற சொரணம் :** துணைத் தலைவர் அவர்களே, விரிவான பதில் அளிக்கப்பட்டுவிட்டது. ஆனால் நான் கேட்க விரும்புவது ஒரு வருடத்திலே அங்கே எவ்வளவு மொத்த உற்பத்தி செய்ய முடியும் என்பதுதான்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** துணைத் தலைவர் அவர்களே, டிட்கோ நிறுவனத்தின் சார்பிலே கூட்டுத்துறையிலே ஆரம்பிக்கப்பட இருக்கின்ற அந்த நிறுவனத்தின் உற்பத்திபற்றி ஏற்கனவே சொன்னேன். அங்கே 66,000 டன் சோடா ஆஷ் மற்றும் 66,000 டன் அம்மோனியம் தயாரிக்கப்படும், அந்த அளவுக்கு அந்தத் தூத்துக்குடி கெமிக்கல்ஸ் நிறுவனத்தினுடைய உற்பத்தி இருக்கும். 1,350 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்யும் பணி தற்போது நடந்து வருகின்றது. அதற்குத் தொழில் துவங்குவதற்குரிய பணிகள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு உற்பத்தி ஆரம்பிக்கப்படும்.



1981 மே 8]

## ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பெறும் புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள்.

* வினா எண் 963—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு அரசாங்கம் இனாமாக வழங்கும் புத்தகம், நோட்டுப் புத்தகங்கள் 3 & 4 மாதம் தாமதப்படுத்திக் கொடுக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் காலாகாலத்தில் புத்தகங்கள் கிடைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** (அ) ஆம்.

(ஆ) உரிய காலத்தில் புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடிகள் நல இயக்குனருக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது நாங்கள் கொடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால் காலப்போக்கில் பார்த்தால் 4, 5 மாதங்கள் ஆகின்றன. புத்தகங்கள் வழங்கப்படாமல் இருப்பதால் குழந்தைகள் அறிவே இல்லாமல் போய்விடுகிறார்கள். ஆகவே இந்த நடப்பாண்டிலே யாவது உத்திரவிடப்பட்டது என்ற நிலையிலே இல்லாமல் அவர்களுக்கு உடனடியாகப் புஸ்தகம் ஜூன் 15 ஆம் தேதிக்குள் கிடைப்பதற்கு வழி வகை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** துணைத் தலைவரவர்களே, இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் 30–6–81க்குள் தமிழகத்திலே உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பயில்கிற மாணவர்களுக்கு புத்தகங்கள் சென்றடையவேண்டும் என்று ஒரு பிரத்தியேகமான ஆணையை அரசு பிறப்பித்திருக்கின்றது.

**திரு. எல். இளையபெருமாள் :** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். சென்ற தடவை கூட அப்படித்தான் சொன்னார்கள். அதிலே இரண்டு விதமான கஷ்டங்கள் இருக்கின்றன. ஒன்று, குறித்த நேரத்திலே அவர்களுக்கு புத்தகங்கள் கொடுக்கப்படவில்லை என்ற உண்மை அரசுக்குத் தெரியுமா? அதோடு இரண்டாவதாக

2,500, 3,000 என்று வருஷ வருமானத்திற்குக் குறைவாக உள்ள பெற்றோர்களின் குழந்தைகளுக்குத்தான் கொடுக்கப்படும். அதற்கு மேல் இருந்தால் கொடுக்கக்கூடாது என்றும், அதுமட்டுமல்லாமல் 90 நாட்களுக்கு மேல் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை என்றால் அவர்களுக்கு புத்தகமும் கொடுக்கக்கூடாது என்ற நடைமுறைகள் இருப்பது அரசுக்குத் தெரியுமா அவற்றை நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டைப் பொறுத்தவரையில் என்னிடம் உள்ள தகவல்படி தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் உரிய காலத்திலே பாடநூல் நிறுவனத்தின் மூலம் பாடப் புத்தகங்களும் குறிப்பேடுகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த இரு மாவட்டங்களுக்கும் ஜூலைத் திங்களில் அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று நடைமுறையிலே சிரமங்கள் இருந்தால் அதை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறுபடியும் நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிற போது, சென்ற ஆண்டு உரிய காலத்தில் கொடுத்தாகிவிட்டது என்பது போல சொல்கிறார்கள். ஆனால் நாங்கள் ஹாஸ்டலில் சென்று விசாரித்த காலங்களில் ஆகஸ்ட், செப்டம்பர். அக்டோபர் மாதங்களில் கூட சென்ற ஆண்டு கொடுக்கப்பெறவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். போனது எல்லாம் போகட்டும். இந்த ஆண்டாவது அந்தப் பிள்ளைகளுக்கு புத்தகங்கள் உரிய காலத்தில் கொடுப்பதற்கு அரசு வழி வகை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகுந்த நடவடிக்கை இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் நிச்சயமாக எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஜூன் 15 ஆம் தேதிக்குள்ளாகவே அதாவது 6 வது மாதத்திற்குள்ளாகவே, அந்த மாணவர்களுக்கு புஸ்தகங்கள் வழங்கிவதற்கான உத்தரவு ஆதி திராவிட நலத்துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டு விட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். பொதுவாக கேட்க விரும்புகிறேன். அரசு வழங்குகிற இந்த இலவசப் புத்தகங்களை அரைப்பரிட்சை தாண்டிய பின்னால்தான் கொடுக்கிற நிலைமை இருப்பதால், அதற்குள் அந்தப் ஊர் பிள்ளைகளின் பெற்றோர்கள் அவர்களுக்கு புத்தகம் வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள் என்றும், அதனால் அரசு வழங்கும் புத்தகங்களுக்கு பயன் ஏதும் இல்லை என்றும் சொல்கிறார்களே அது உண்மைதானா? அத்தோடு, இவ்வளவு காலதாமதத்திற்குக் காரணம், அரசுக்குச் சொந்தமான அச்சகங்களில் அதிகமான அளவு புத்தகங்கள் உரிய நேரத்தில் அச்சிட முடிவதில்லை என்பதும் உண்மைதானா? இவைகளை யெல்லாம் ஆராய்ந்து, இந்தக் குறைகளைப் போக்க இந்த ஆண்டாவது உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் அவர்களே, ஆதித் திராவிட குழந்தைகளுக்கு இந்த ஆண்டு ஜூன் மாதமே புத்தகங்கள் வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் பொதுவாக வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கக்கூடிய ஏழை மக்கள் பெரும்பான்மையாக ஆதித் திராவிட இனத்தில்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு கிராமப்புறங்களில் இருந்து பள்ளிக்குச் சென்று படிப்பது என்பதே பொதுவாக மிகுந்த சிரமமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், சென்ற ஆண்டு அக்டோபர் மாத இறுதிவரை புத்தகங்கள் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது... (மணியடிக்கப்பெற்றது) அதனால் அது குறித்து நானே அமைச்சருக்கு புகார் கொடுத்து, அதற்கு பிறகு ஒரு மாதம் கழித்து புத்தகங்கள் கொடுக்கப்பட்டன. அந்த நிலை இருப்பதால் ஆதி திராவிட மக்கள் பள்ளிக்குச் சென்று படித்து முன்னேறுவது என்பதே மிக சிரமமாய் இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டாவது அந்தக் குறைகளையெல்லாம் போக்கி அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு இந்தச் சலுகைகளுக்கெல்லாம் வருமான வரம்பு 3,000 என்று இருக்கிறது. இது அனேகமாக (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் மானியத்தில் பேசுவது போல் பேசுகிறீர்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. பொ. உத்திராபதி : அந்த வருமான வரம்பு வரையறையை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தி இந்தச் சலுகைகளை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல. சென்ற ஆண்டைப் பொறுத்த வரையில் சில புகார்கள் எனக்கு தெரிவிக்கப்பட்டன. அதனால் இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் அத்தகைய புகார்கள் எழாத வண்ணம் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும். ஆண்டு வருமானத்தைப் பற்றி குறிப்பிட்டுக் கேட்டார்கள். அதையும் அரசு பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு புத்தகம் வழங்குவதில் வருகைப் பதிவேடு இவ்வளவு இருக்க வேண்டும் என்று நிர்ணயிக் கப்பட்டுள்ளதா? அப்படியென்றால் அரசுத் தேர்விற்கு அனுமதிக் கப்படும் 75 சதவீதம் என்பதை அனுமதிக்கப்படுமா அல்லது 90 சதவீதம் என்று நிர்ணயித்துள்ளதா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடையளிக் கப்படும்.

ஒட்டப்பிடாரத்தில் ஆதிதிராவிடர் மாணவர் இல்லத்திற்கான கட்டிடம் கட்டும் திட்டம்.

*வினா எண். 964— திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஒட்டப்பிடாரத்தில் அரிசன மாணவர் இல்லத்திற்கு அடித்தளம் போடப்பட்டு 3 ஆண்டு காலமாகியும் இன்றுவரை கட்டிடம் கட்டப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக கட்டி முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) ஆதி திராவிட மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக 1974-ல் (விடுதி) கட்டடங்கள் கட்டத் தேர்ந்தெடுக்கப்பட்ட 150 விடுதிகளில் திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர் மாணவர் விடுதியும் ஒன்றாகும். ரூ. 2.23 இலட்சம் செலவில் மேற்கண்ட விடுதிக்கு கட்டிடம் கட்ட அரசு ஆணை எண். 86, சமூகநலத்துறை, நாள் 5-2-80-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. தற்பொழுதுள்ள மற்றும் கட்டடப் பொருட்களின் விலைவாசி ஏற்றத்தினால் அரசு அளித்த ரூ. 2.23 இலட்சம் தொகை போதாது எனவும் அதிகத் தொகைக்கான மதிப்பீடு ஒன்றை அரசின் ஏற்புக்காகத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர் அனுப்பியுள்ளார். இதுபோன்று வேறுசில மாணவர் இல்லங்கள் கட்டுவதற்கான திருத்திய மதிப்பீடும் வந்துள்ளன. இவைகளின் மீது அரசு முடிவெடுத்தவுடன் கட்டிட வேலைகள் விரைவில் தொடங்கப்படும்.

[முற்பகல் 10-10]

திரு. சோ. அழகர்சாமி: ஒட்டப்பிடாரத்திலுள்ள அரிசன மாணவர் இல்லத்திற்கு அடித்தளம்போட்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன என்று சொல்லப்படுகிறது. இப்போது இந்த மதிப்பீடு, முன்னால் இருந்ததை விட விலைகள் உயர்ந்துள்ள



காரணத்தால் மதிப்பீட்டை உயர்த்திப் போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே காலதாமதம் ஆகஆக ஆண்டுக் காண்டு முதலீடு உயர்ந்து கொண்டே போகும். ஆகவே, உடனடியாக அடித்தளம் போட்டவுடனே கட்டடம் கட்டக் கூடிய முறையில இனிமேலாவது இந்த ஒட்டப்பிடாரத்தில் உள்ள இந்த மாணவர் இல்லத்தை துரிதமாகக் கட்டிமுடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி; அரசைப் பொறுத்தவரையில் விரைவில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாவட்ட அரிசன நல அலுவலகத்தில் பணியாற்றக் கூடிய சூப்பர்வைசர்களுக்கு ரூ 500-க்குள் ளேதான் பள்ளிக்கூடங்கள் கட்ட முடியும் என்ற விதிமுறை இருக்கிறது. இந்த விதிமுறை ஐந்தாண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட விதியாகும். ஆகவே, இப்போது கல்லின் விலை, சிமெண்ட் விலை போன்றவை அதிகரித்துக் கொண்டிருப்பதால் அந்த சூப்பர்வைசர்களுக்கு விதிக்கப்பட் டிருக்கிற இந்த ரூ. 5,000 என்ற வரம்பினை உயர்த்தி ஆரம்ப பள்ளிக்கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி: அரசு பரிசீலனை செய்யும்.

மலைவாழ் மக்களுக்கென தனிக் கடன் நிவாரணச் சட்டம்.

*வினா எண். 965)— திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்களுக்கென தனிக் கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது இயற்றப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மலைவாழ் மக்களுக்கென தனிக் கடன் நிவாரணச் சட்டம் விரைவில் இயற்றப்படும்.

(ஆ) அரசின் பரிசீலனையிலிருக்கிறது.

திரு. சீ. சிவப்பிரகாசம்; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நிவாரணச் சட்டம் பரிசீலனையில் உள்ளது கூறினார்கள். இது மூன்று ஆண்டுகளாகவே பரிசீலனையில் இருப்பதாக தெரிகிறது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றி செயலாக்காததால் பல்லாண்டுகளாக, மலைவாழ் பகுதி மக்கள் தங்கள் நிலங்களையும் பலன் தரும் மரங்களையும் குறைந்த பணத்திற்கு வட்டியாகச் செலுத்தி வருகிறார்கள். இதனால் அவர்களது பொருளாதார நிலை வெகுவாகப் பாதிக் கப்பட்டுள்ளது. ஆகவே இதை சீராக்க விரைவில் இந்த புதிய சட்டத்தை பரிசீலனை செய்து நிறைவேற்ற அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: 1973-ல் கூட்டுறவுத் துறையில் இயற்றப்பட்ட தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் எவ்விதப் பயனும் மாற்றமும் அளிக்கவில்லை என அறியப்பட்டது. ஆகவே பழங்குடியினருக்கு கடன் நிவாரணம் அளிக்கும் வகையில் ஒரு சிறப்புச் சட்டம் இயற்றுவது அவசியம் என வலியுறுத்தப்பட்டது. பழங்குடியினர் எவ்வளவு வருவாய் உள்ளவராயினும் எவ்வளவு நில அளவு உடையவராயிருப்பினும் அவர்களுக்கு கடன் நிவாரணம் அளிக்க சட்டமியற்ற வேண்டுமென அமைச்சர் குழுவால் கொள்கையளவில் முடிவெடுக்கப்பட்டது. அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டதற்கிணங்க ஒரு சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டு சட்டத்துறைக்கு அனுப்பப்பட்டது. சட்டத்துறை இச்சட்ட முன்வடிவில் சில மாற்றங்கள் செய்யக் கோரி இத்துறைக்கு அனுப்பியுள்ளது. விரைவில் அது பரிசீலனை செய்யப்பட்டு இந்தக் கடன் நிவாரணச் சட்டம் மிக விரைவில் நிறைவேற்றப்படும்.

திரு. என். வரதராஜன்: இந்த மலைவாழ் மக்கள் அறியாமையிலும், கல்லாமையிலும், வறுமையிலும் வாடும் மக்கள். அவர்கள் கடனுக்காக கந்துவட்டி, சந்தை வட்டி, வார வட்டி என்று பெறப்பட்டு அவர்கள் இன்று கொத்தடிமைகள் போல் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு கடன் நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டத் திருத்தம் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; தற்போது அது குறித்த விவரம் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தை அனுசரித்து அது இயற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களின்
வயது வரம்பில் விலக்களிக்கும் திட்டம்.

*வினா எண். 966—திரு. எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு அலுவலகத்தில் முறையாக பதிவு செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு தகுதி வயதிற்குள் எந்த ஒரு நேர்முக தேர்வும் வராமல் தகுதி வயதை இழந்தவர்களுக்கு வயது வரம்பில் இருந்து விலக்கு அளிக்கப்படுமா?

(ஆ) வேலைவாய்ப்புக்கு தகுதி என நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பு மேலும் 3 ஆண்டுகள் உயர்த்தப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) மேற்கண்ட வினாக்களில் குறிப்பிட்ட பொருள் பற்றிய திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.



திரு. எம். கே. ராஜமாணிக்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆய்விலே உள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களுடைய ஓய்வு பெறும் வயதை 55—லிருந்து 58 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அதன் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. இந்தக் குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு இது பொருந்தாது.

திரு. வேட்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில அரசுத் துறைகளிலே அல்லது அரசுப் பணிகளிலே தற்காலிகமாக சிலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி தற்காலிகமாக பணியாற்றுபவர்கள் நிரந்தரமாக்கப்படுவதற்கு, அதே துறையிலோ அல்லது வேறு துறைகளிலோ, வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து அது பற்றி தகவல் கொடுத்து அட்டை வாங்கிவர வேண்டியிருக்கிறது. எனவே, அரசுத் துறையிலே அவர்கள் எவ்வளவு காலம் தற்காலிகமாகப் பணியாற்றுகிறார்களோ, அந்தக காலத்தை அவர்கள் பணியிலே சேருவதற்கு அந்த வயது வரம்பை நீட்டித்துக் கொடுக்க இந்த அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போட்டால், விடை அளிக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியபடி வேலை வாய்ப்பு அலுவலகத்திலே குறிப்பாக ஆதி திராவிட மக்கள் மலை வாழ் மக்கள் ஆகியோருக்கு தகுந்த முறையில் அவர்களே அனுப்பினால் ஒழிய, அவர்களுடைய சதவீதத்திற்கான அளவிலே அனுப்புவதில்லை. அப்படி அனுப்பாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அந்த மாதிரி இனியும் நடைபெறாமல் இருப்பதற்கு தமிழகத்திலுள்ள எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சுகளுக்கு அப்படி சதவிகிதப்படி அனுப்பாமல் இருந்தால், அனுப்பும்படி ஒரு தாக்கீதை இந்த அரசு அனுப்ப முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வயது உச்சவரம்பைக் கடக்கும் நிலையில் உள்ளவர்களுக்காக இந்த அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதைக் களைய வேண்டுமென்ற எண்ணத்தில், சமுக, பொருளாதாரக் காரணங்களால் அரசுப் பணிகளுக்கு உரிய தகுதிகளை மிகவும் தாமதமாகவே அடையும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதி வகுப்புகளைச் சார்ந்த வேலை தேடும் இளைஞர்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தத் திட்டம் தற்போது உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, பின் தங்கிய தாழ்த்தப்பட்ட மற்றும் மலை சாதி வகுப்புகளைச் சார்ந்த உச்ச வயது வரம்பினைக்கடந்த

வேலை தேடுவோர் நிலையான அல்லது தற்காலிக வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்களுக்கு உச்ச வயது வரம்பிலிருந்து 5 ஆண்டுகள் தளர்த்தப்படலாம் என்றும், பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மற்றும் மலைஜாதி வகுப்புக்களைச் சார்ந்த உச்ச வயது வரம்பினைக் கடந்த வேலை தேடுவோருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்தினரால் நடத்தப்பெறும் போட்டித் தேர்வுகளை எழுத இப்பொழுது தரப்படும் சந்தர்ப்பங்களுக்கு மேலாக மேலும் மூன்று சந்தர்ப்பங்கள் அளிக்கப்படலாம் என்கிற திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் குறையிருந்தால், அதைக் களைவதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை நகரில் மண்ணெண்ணை விநியோகத்தை தனியாரிடம் விடுதல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ''சென்னை நகரில் குடும்பக் கார்டுகளுக்கு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் வழங்கி வந்த மண்ணெண்ணையைத் தனியார் வழங்க உத்தரவிட்டுள்ளதால், மக்கள் மத்தியில் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்று கேட்டு திருவாளர்கள் மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, டி.கே. நல்லப்பன், என். எஸ். வி. சித்தன், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர் இது எப்படி அவசர முக்கியம் என்பது குறித்துச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிற மண்எண்ணை தனியாருக்கு கொடுத்து விநியோகம் செய்யப்படுவதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது. தனியார் விநியோகம் என்பது அறவே ஒழிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கூற விரும்புகிறோம். ஏனென்றால், சென்னை நகரத்தில் வாழும் சாதாரண ஏழைய எளிய மக்கள், அவர்களுக்குத் தேவையான மண்ணை எந்த நேரத்திலும் பெற்றுக்கொள்ளும் வகையில் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகத்தான் வழங்கப்பட வேண்டும்.



கேரளாவில் கூட்டுறவு முறையிலே 1,000 கார்டுகளுக்கு ஒரு விநியோக நிலையம் ஏற்படுத்தப்பட்டு அங்கே இருக்கிற மக்கள் வாரத்தில் எந்த நேரத்தில் வந்தாலும் அவர்களுக்கு உரிய பங்கு கிடைக்கும் என்று வகை செய்யப்பட்டிருக்கிறது, உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் அத்தியாவசிய பண்டங்கள் என்று 30 பொருள்கள், 40 பொருள்களை தேர்வு செய்து அந்த அத்தியாவசிய பொருள்கள் அனைத்தையும் இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளில் அல்லது கூட்டுறவு நிறுவனங்களில் விநியோகிக்க வேண்டுமே தவிர, கூட்டுறவு நிறுவனங்களில் தேவையான அத்யாவசிய பொருள்களை வாங்கிக் கொண்டு மண்ணெண்ணெய் வாங்குவதற்கு வேறு தனியாரிடத்தில் சென்றால் சிரமமாக இருக்கும். தனியாருக்கு கொடுப்பதன் விளைவாக பதுக்கல் அதிகமாகும். விலைவாசி ஏறும். ஏழை எளிய மக்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்காது என்பதால் வாரத்தில் எந்த நேரத்தில் போனாலும் கார்டு வைத்திருக்கக் கூடிய அவர்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் வழங்கப்பட வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் சென்னை மாநகரத்தில் புதிதாக எடுக்கப்பட்டிருக்கிற மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் புதிய கார்டுகள் அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டு அந்த கார்டுகளுக்கு வாரத்தில் எப்போது போனாலும் ஒரு குறிப்பிட்ட நாளிலே போனால்தான் கிடைக்கும் என்றில்லாமல் கிடைக்கவேண்டும். சென்னை மாநகரத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் எரிக்கிற கடுமையான வெயிலில் சாரிசாரியாக கியூவிலே நின்று அங்கே நிற்க முடியாமல் ஏழை எளிய மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே மண்ணெண்ணெய் விநியோகத்தை பொருத்தவரை சென்னை மாநகரத்திலே தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மற்றும் அங்கே இருக்கக் கூடிய கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக வழங்கப்பட வேண்டும். தனியார் வியாபாரிகளிடத்தில் கொடுப்பதால் ஊழலும், பதுக்கலும், விலை ஏற்றமும் கடுமையாகும் என்ற காரணத்தை முன்னிட்டும் அவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கக்கூடாது என்பதைப் பற்றி விவரமாகவும் தெளிவாகவும் பேசுவதற்கு அவையை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என் எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க துணைத் தலைவர் அவர்களே மண்ணெண்ணெய் சென்னையைப் பொறுத்தவரையில் விளக்கு எரிப்பதற்கு மட்டுமல்லாமல் ஏழை, நடுத்தர மக்கள் சமையல் செய்வதற்கும் பயன்படுகிற எரிபொருளாக இருக்கிற காரணத்தால், அண்மைக் காலத்தில் இந்த மண்ணெண்ணெய் விலை கொஞ்சம், கொஞ்சமாகக் கூடிவருவது நமக்கு கவலையை அளிக்கிறது. அதிலும் குறிப்பாக தனியார் கடையில் விற்கப்படுகிற மண்ணெண்ணெய் இன்றைக்கு காலையில் சட்டமன்றத்திற்கு வருகிறபோது கூட ஒருவர் வந்து சொல்லிப் போனார் சிந்தாதிரிப்பேட்டையிலே இருக்கிற குருவப்பச் செட்டித் தெருவில் ஒரு கடையில் மண்ணெண்ணெய் வாங்கினாராம். 2 லிட்டர் என்று அதை வாங்கி அளந்து பார்த்தால் $1\frac{1}{2}$ லிட்டர்

தான் இருக்கிறது. கை வண்டி வைத்து மண்ணெண்ணெய் விநியோகம் செய்கிறார்கள். மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கும் மண்ணெண்ணெய் கொடுப்போம் என்று அரசு தரப்பிலே ஒரு கருத்து சொல்லப்பட்டது. ஆனால் கை வண்டி மூலமாக விற்பனை செய்கிறவர்கள் நல்ல தரமான மண்ணெண்ணெய் விற்கிறார்களா என்று கேட்டால் அதிலும் கலப்படம் இருக்கிறது. தண்ணீரைக் கூட கலந்து விற்கிறார்கள் என்று சொல்கிறார்கள். 1.62—க்கு விற்க வேண்டிய மண்ணெண்ணெய் இன்றைக்கு 2¼ ரூபாய், 3 ரூபாய் என்று உயர்ந்து ஏழை நடுத்தர மக்கள் பாதிக்கப்படுகிற நிலையிலிருந்து கொண்டிருக்கிறார்கள். இதில் தனியாரிடத்தில் மட்டுமல்லாமல், அரசினுடைய கவனம் டி.யூ.சி.எஸ். போன்ற நிறுவனங்களில் விநியோகம் செய்கிற இடங்களிலே கூட சரியாகவில்லை என்று தகவல் வந்து கொண்டிருக்கிறது, அங்கேயும் பார்க்க வேண்டும். ஆகவே 'வெயிட் அண்ட் மெஷர்ஸ்' அதிகாரிகள் சரியாக சோதனை செய்ய வேண்டும். சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற மக்களை சுரண்டுகிற இந்த நிலையை போக்குவதற்கும், சென்னை நகரத்திலே இருக்கிற மக்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் மண்ணெண்ணெய் கிடைப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த தீர்மானத்தை முன்மொழிந்த திரு.அம்பிகாபதி அவர்கள் கூறிய கருத்துக்களை பூராவையும் நானும் சொன்னதாக கவனத்தில் எடுத்துக் கொண்டு ரெக்கார்டுகளில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில் அதில் விட்டுப்போன ஒரு விஷயத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மண்ணெண்ணெய் விநியோகத்தைப் பொறுத்தவரை பல ஊழல்கள் நடக்கின்றன என்று நண்பர் சித்தன் அவர்கள் கூட கூறினார். அதிலும் நான் உடன்பாடு—2 லிட்டர் வாங்கினால் 1½ லிட்டர் தானஇருக்கிறது என்பதிலே நானும் உடன்பாடு தான். ஆனால் மாநில சர்க்கார் குறைபாடு என்று அவர் சொன்னதில் நான் மாறுபடுகிறேன். இந்த மண்ணெண்ணெய் பொறுத்தவரை தட்டுப்பாடு இருக்கிறது என்ற அடிப்படையிலே முன்பு சபையில் பேசப்பட்டு, அதன் அடிப்படையில் எங்களிடம் விநியோகத்தை கொடுக்க வேண்டுமென்று மாநில சர்க்கார் கேட்டு, வேண்டா வெறுப்பாக வழங்கப்பட்டது. அந்த அடிப்படையில் மகாஞ்ச காலம் அந்த குறைபாடுகள் குறைவாக இருந்தது. இப்போது இந்த நிலை மாற்றப்பட்டால், பழைய நிலைக்கே போகவேண்டிய அபாயம் உள்ளது. மத்திய சர்க்கார் இந்த மாநிலத்திற்கு ஒதுக்கவேண்டிய எண்ணெயின் அளவை உயர்த்துங்கள் என்று மாநில சர்க்கார் கேட்டு, மத்திய சர்க்காரிடம் பேசி, ஆயில் சம்பெனியிடத்தில் பேசி அந்த எண்ணெயை மாநில சர்க்காரிடம் ஒப்படைக்கக்கூடிய நிலைக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதைப்பற்றி விரிவாக விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க அனுமதி அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; துணைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டின் காரணமாக சென்னை நகரில் 1979 ஏப்ரல் மாதம் முதல் மண்ணெண்ணெயை பொது விநியோக முறையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத் துறை நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப கார்டுகளுக்கு வழங்க அரசு உத்தரவிட்டது. இது தவிர சென்னை நகரில் மண்ணெண்ணெய் வியாபாரம் செய்துவந்த 1,023 கைவண்டிக்காரர்களுக்கு விடுமுறை நாட்கள் தவிர நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் மண்ணெண்ணெய் தெருக்களில் விற்பனைக்காக வழங்கப்படுகிறது. மேற்கொண்டு மண்ணெண்ணெய் வியாபாரத்தையே நம்பி வாழும் 154 மண்ணெண்ணெய் தனியார் வியாபாரிகளும் நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டனர். கைவண்டிக்காரர்களும் தனியார் வியாபாரிகளும் அவர்களுக்கு வழங்கப்படும் எண்ணெயை குடும்பங்களுக்குத்தான் வழங்கவேண்டும். ஓட்டல் போன்ற மொத்த நுகர்வோருக்கு வழங்கக்கூடாது. ஆயினும் இந்த தனியார் வியாபாரிகள் தங்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணெயை ஓட்டல்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் அதிக விலைக்கு மொத்தமாக விற்றுவிடுகின்றனர் என்று புகார்கள் வந்தன. சென்னை நகர் மற்றும் புறநகர்ப்பகுதியிலுள்ள தனியார் வியாபாரிக்ள் தவிர மாவட்டங்களிலுள்ள தனியார் வியாபாரிகள் எற்கெனவே குடும்பக் கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்குகின்றனர். அம்முறையை சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிக்கும் விரிவுபடுத்தவும், தனியார் மண்ணெண்ணெய் வியாபாரிகளுக்கு மாதமொன்றுக்கு ஒதுக்கப்படும் சுமார் 3,85.000 லிட்டர் எண்ணெயை தவறான முறையில் அதிக விலையில் விற்கப்படுவதை தடுக்கவும் மேற்குறிப்பிட்ட எண்ணெய் பொது விநியோக முறையில் வழங்க வகை செய்யும் நோக்குடனும், தனியார் வியாபாரிகள் மண்ணெண்ணெய் விநியோகத்தை எளிதில் கண்காணிக்கும் நோக்குடனும் ஒவ்வொரு தனியார் மண்ணெண்ணெய் வியாபாரியும் 500-க்கு மேற்படாத குடும்பக் கார்டுகளுக்கு தனக்கு ஒதுக்கப்படும் எண்ணெயை வழங்கவேண்டுமென 1981 மார்ச் மாதம் அரசு ஆணைபிறப்பித்தது, மண்ணெண்ணெய் விநியோகத்தை மட்டுமே தனது வாழ்வின் ஆதாரமாகக் கொண்டுள்ள இந்த 154 தனியார்கள் தவிர தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுத் துறையும் தனக்கு ஒதுக்கப்பட்ட எண்ணெயை சில்லரைக் கடைகள் மூலம் பொது விநியோக முறையில் தொடர்ந்து வழங்கிவருகின்றன. தனியார் வியாபாரிகள் குடும்பக் கார்டுகளுக்கு எண்ணெய் வழங்குவதில் புகார்கள் வந்தால் அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது. மண்ணெண்ணெய் விநியோகத்தில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவும் பெரும் பங்கு வகிக்கின்றன. தனியார் ஈடுபாடு மிகமிகச் சொற்பம். அவர்களுக்கு வேறு தொழில் இல்லை என்பதால் மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு எண்ணெய் வழங்கப்படுகிறது. தனியார் மண்ணெண்ணெய் வியாபாரிகள் தங்கள் எண்ணெயை குடும்ப கார்டுகளுக்கு வழங்கும் ஏற்பாட்டில் ஏந்த

சிரமமோ சிக்கலோ வரவில்லை. இம்முறை குறித்து பொது மக்களிடமிருந்து எதிர்ப்போ, குறைபாடோ தெரிவித்து மனுக்கள் ஏதும் அரசுக்கு இதுவரை வரவில்லை. ஆகவே எப்போதும்போல் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும் கூட்டுறவுச் சங்கக்கடைகளின் மூலமாகவும் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அவர்களுக்கு என்று வரையறுத்து குடும்பக் கார்டுகளுக்கு வழங்க வேண்டுமென்றும் அவர்கள் தனியார்கள் ஓட்டல்களுக்கு வழங்கக்கூடாது என்றும் சொல்லியிருக்கிறோம், அதிலேயும் தகராறு வருமானால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அவற்றையெல்லாம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலம் செய்யலாம். சிறு வியாபாரிகளுக்கு வேறுதொழில் இல்லை என்று கூறுகிற காரணத்தினால் கூடுதலாக செய்யப் பட்டிருக்கிறது. கூட்டுறவு சங்கங்களில் கடைகளிலிருந்து எடுத்துச் செய்யவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதுபோன்று அளவில் குறைபாடுகள் இருக்குமானால் அவை கண்காணிக்கப் படவேண்டும் என்று சொல்லப்பட்டு சிலபல வழக்குகள் வந்து லைசென்ஸ்கள் கூட ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் கண்காணிப்புச் செய்வதற்கு அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் இதை. ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இசைவு மறுக்கப்பெறுகிறது.

### 3. கவன ஈர்ப்புகள்

#### அ. சங்கரன்கோவிலில் கைத்தறி நெசவாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையே மோதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி, என்கிற சொரணம், ஜே. ஹேமச்சந்திரன். கே.ரமணி, துரைமுருகன், ரா. கிருஷ்ணன், கே.ஆர்.சுந்தரம். டி.மணி, பி.துரைராஜ், இரா, தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ரா. கிருஷ்ணன்: துணைத் தலைவர் அவர்களே ''திருநெல் வேலி மாவட்டம் சங்கரன்கோவிலில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் 8—4—1981 அன்று முழு வேலை நிறுத்தம் செய்ததைத் தொடர்ந்து நடைபெற்ற அசம்பாவிதங்கள் குறித்த'' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்

#### அறிக்கை

நெல்லை மாவட்டம், சங்கரன் கோவிலில் நெசவாளர்கள், மதுரை தொழிலாளர் துணை ஆணையர் 30—1—80—ல் கொடுத்த சிபாரிசுகளை நிறைவேற்றக்கோரி, 26—3—81 முதல் 29.3.81 வரை வேலை நிறுத்தம், தலைமை மேற்பார்வை நெசவாளர்கள் (மாஸ்டர் வீவர்ஸ்) வீடுகளின் முன்னால் மறியல் போன்றவற்றில் ஈடுபட்டனர். தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட்டனர். 31–3–81—ஆம் தேதியன்று, திருநெல்வேலி தொழில் தறை துணை ஆணையர் முன் நடத்தப்பட்ட சமரசப் பேச்சுவார்த்தையும், 6—4—81-ஆம் தேதி மாவட்டஆட்சித்தலைவர் முன் நடந்த பேச்சுவார்த்தையும் தோல்வியடைந்தது 8—4—81— ஆம் தேதி அன்று போராட்டத்தில் ஈடுபட்ட நெசவாளர்கள் தாங்கள் முன்னர் எடுத்த முடிவிற்கேற்ப சங்கரன்கோவில் நகரில் முழு கடை அடைப்பு (பந்த்) நடத்தியபொழுது, ஆத்திரம் அடைந்த நெச வாளர்கள் ஆர். எஸ். முப்புடாதி, எம். நடராசன், எம். எஸ். சிவசாமி, பி. ஆர். ஆறுமுகம் ஆகியோர் தலைமையில், நகரின் பல பகுதிகளில் உள்ள 17 தலைமை மேற்பார்வை நெசவாளர்கள் (மாஸ்டர் வீவர்ஸ்) இல்லங்கள் மற்றும் கைத்தறி தொழிற்கூடங் களுக்குச் சென்று, அத்துமீறி நுழைந்து, அவர்களுடைய உடமைகள் மற்றும் தொழிற் கூடங்களைத் தாக்கியும், தீ வைத்தும் பெரும் சேதம் விளைவித்ததாகவும், மேற்கண்ட நிகழ்ச்சிகளில் சுமார் ரூ 2,69,200க்கு மதிப்புள்ள பொருள்கள் சேதப்படுத்தப்பட்டதாகவும் புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட புகாரினடிப்படையில் 17 வழக்குகள் பதிவு செய்யப் பட்டன, மேற்கண்ட சம்பவம் நடப்பதற்கு முன்னர், அங்குள்ள காவல் துறையினரைக் கொண்டு கூடுமான அளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தகவல் கிடைத்தவுடன் காவல் துறையினர் அதிக அளவில் அங்கு சென்று நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இதன் தொடர்பாக 59 பேர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் மேற்கண்ட நிகழ்ச்சியைத் தொடர்ந்து, 20.4.81 அன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் ஒருவர் விசைத் தறிகூட உரிமை யாளர் ஒருவரை அடித்துள்ளதாகத் தெரிகிறது. இதன் தொடர் பாக சங்கரன்கோவில் காவல் நிலையத்தில் குற்ற எண். 170/81ல் இ.த.ச. 448 மற்றும் 323 பிரிவுகளின்கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. நகரில் போதுமான காவல் துறை பந்தோபஸ்து அளிக்கப்பட்டுள்ளது. காவல் துறையினர் அங்கு எந்தவிதமான அத்துமீறிய அடக்கு முறையிலோ, வன்முறை யிலோ ஈடுபடவில்லை தற்பொழுது அங்கு நிலைமை அமைதியாக உள்ளது.

[முற்பகல் 10-30]

திரு. ரா. கிருஷ்ணன்: துணைத் தலைவர் அவர்களே, 1975 இல் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மீறி முதலாளிகள் தரப்பில் உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. 6-4-81 ஆம் நாளன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, கையெழுத்து ஆகக்கூடிய நேரத்தில் முதலாளிகள் மறுத்து விட்டார்கள். ஒப்பந்தத்தை நிச்சயமாக அமல் படுத்தி விடுவார்களே என்று நினைத்து முதலாளிகள் திட்டமிட்டே சில நபர்களை ஏவிவிட்டு 8—4—81 ஆம் நாளன்று இப்படிப்பட்ட சில சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒப்பந்ததை அமுல் படுத்தசட்ட பூர்வமான நடவடிக்கை எடுத்த தொழிற்சங்கத் தலைவர்கள்மீது கலவரத்திற்குச் சம்பந்தம் இல்லாமல் இருந்தாலும்கூட அவர்கள்மீது புகார் செய்யப்பட்டு அவர்கள்மீது 17 வழக்குகள் தொடரப்பட்டு, இன்றைக்கு நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இதில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்தச் சங்கரன்கோவில் விவகாரத்தைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும் அங்கேயிருக்கின்ற மாவட்டத் தலைமைக் காவல்துறை அதிகாரி அவர்களும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். ஒரு சுமுகமான உறவினைத் தொழிலாளர்களுக்கும் அந்த முதலாளிகளுக்கும் ஏற்படுத்த வேண்டுமென்பது நோக்கம். முதலாளிகள் கொஞ்சம் பிடிவாதமாக இருக்கிறார்கள் என்கின்ற நிலைமை வந்து, மறுபடியும் பேச்சு வார்த்தை மூலம் இதனைத் தீர்க்க முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் மூலமாகவும் இது பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் நல்லதொரு தீர்வு காணப்படும் என்ற நிலைமை ஏற்படும். காவல் துறையினர் சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றவும், அமைதியை நிலை நாட்டவும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முறைப்படி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். புலன் விசாரணை நடந்து முடிந்தபிறகு தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. ரா. கிருஷ்ணன்: துணைத் தலைவரவர்களே, கடந்த இரண்டு மாத காலமாக வேலையில்லாமல் பட்டினியால் வாடுகின்றார்கள். இப்பொழுதுகூட வட்டாட்சியர் அலுவலகம் முன் தர்ணா, உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் மூலமாக இந்தப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் ஏற்கனவே பி அன்ட் சி மில் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து பணம் வழங்குவது பாராட்டுதற்குரிய ஒன்று. அதுபோன்ற பட்டினியால் வாடுகின்ற சங்கரன்கோவில் நெசவாளர்களுக்கும் உதவி செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் இதுபற்றிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அங்கே அந்தப் பேச்சுவார்த்தையை நடத்தி இருக்கின்ற சூழ்நிலைகளைப் பற்றி அரசுக்கு அவருடைய அறிக்கையை அனுப்பி வைக்குமாறு கேட்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையும் பரிந்துரையும் வந்ததற்குப்பிறகு அதைப் பரிசீலனை செய்து மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப் போன்ற யோசனைகளை அரசு பரிசீலனை செய்ததற்குப்பிறகு தக்க முடிவுகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்படுகின்ற தகராறுகளை முறைப்படுத்துவதற்காக கைத்தறித் தொழில் பாதுகாப்புச் சட்டம் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தால், தொழிலாளர்கள் வயிற்றுக்கு வழியில்லாமல் ஆத்திரப்பட்டு ஏதோ சில சம்பவங்களைச் செய்து வந்தார்கள். அவர்களை மன்னித்து அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, சட்டப் பிரச்னை பற்றிய எல்லா முடிவுகளையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே கேட்டுவிட்டார்கள், புலன் விசாரணையில் இருக்கிறது. எந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும், கவனிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையையும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்களின் பேச்சுவார்த்தை மூலம் ஏற்படுகின்ற விளைவுகளையும் வைத்து தக்க முடிவுகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

### (ஆ) குடகனாறு அணையைப் புதுப்பித்தல்

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:— தலைவர் அவர்களே, "1977ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த மதுரைமாவட்டம் குடகனாறு அணையைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கைஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை

மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் வட்டத்தில் குடகனாறு ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் ரூ. 212 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அரசினால் கட்ட ஒப்புதலளிக்கப்பட்டது. இந்நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 434 மில்லியன் கன அடி ஆகும். இதனால் மதுரை மாவட்டத்தில் 2,230 ஏக்கர் புதிய ஆயக்கட்டு நிலங்களும் திருச்சி மாவட்டத்தில் 2,910 ஏக்கர்

நிலங்களும் பயன்பெறும். மற்றும் திருச்சி மாவட்டத்தில் 819 ஏக்கர் நிலங்களுக்கு பாசன உறுதி பெறுவது மட்டுமின்றி 356 ஏக்கர் நிலங்களின் பாசன பற்றாக் குறையையும் போக்கும் இவ்வணை டிசம்பர் 1973ல் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. Head works ஜூன் 76-ல் முடிக்கப்பட்டன. நவம்பர் 1977ல் 75 சதவீத கால்வாய் வேலைகள் முடிவடைந்தன.

இம்மாதத்தில் இதற்கு முன் கண்டிராத அளவில் ஏற்பட்ட வெள்ளத்தினால் இவ்வணை உடைந்தது. இவ்வணை உடைப்பு சம்பந்தமாக விசாரிக்க அரசு கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்தது;—

(1) திரு. ஏ. என். ஹர் கௌலி, தலைவர், மத்திய நீர்குழு, டெல்லி.

(2) திரு வி. ஆர். எஸ். பாண்டியன், முன்னாள் தலைமைப்-பொறியாளர் (பாசனம்).

(3) திரு. ஏ. எம். சுவாமிநாதன், ஐ.ஏ.எஸ்., முன்னாள் இணைச் செயலாளர் நிதித்துறை, சென்னை குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளது. குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி மிகவும் வறட்சியான பகுதி என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். 1977ஆம் ஆண்டு உடைந்த அணை இதுவரையில்கூடக் கட்டப்படாமல் இருக்கிறது. ஆகையால், அதை விரைவுபடுத்திக் கட்டுவதற்கான முயற்சி, விரைவாக எடுக்கப்படுமா? புதிதாக கட்ட இருக்கிற அணையினுடைய மதிப்பீடு எவ்வளவாக இருக்கும் என்ற விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, குழுவின் அறிக்கையை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. விரைவிலே தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அணை உடைந்தது சம்பந்தமாக ஒரு குழு அமைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் குழு தனது அறிக்கையில் அந்த இடத்தில் கட்டப்பட்டதால்தான் அந்த அணை உடைந்தது என்றும், வறட்சியான அந்தப் பகுதியிலிருக்கிற மக்கள் அணையை அங்கே கட்டி, திருச்சி மாவட்டத்திற்குத் தண்ணீர் எடுத்துச் செல்லக் கூடாது; ஆகவே, அந்த அணையை மாற்று இடத்தில் கட்ட வேண்டுமென்று தெரிவித்தார்கள் என்றும் எனவே மாற்றிக் கட்ட வேண்டுமென்ற கருத்தை குழு தெரிவித்திருக்கிறதா? ஆமென்றால், அந்தக் கருத்தை அரசு ஆழ்ந்து பரிசீலித்து, இடத்தை மாற்றி அணை கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இரகசியமான முறையிலே குழு தன்னுடைய அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அது அரசினுடைய பரிசீலனையிலே இருக்கிறது. எனவே, குழுவினுடைய அறிக்கையிலே என்ன, என்ன இருக்கிறது என்பதை எல்லாம் இந்த அரசு வெளியிடத் தயாராயில்லை. குழுவினுடைய அறிக்கையை கவனமாகப் பரிசீலனை செய்து அரசு தக்க முடிவுகளை எடுக்கும்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவு.

### இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச்சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 5. வரவு—செலவுத்திட்டம் 1981-82, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

### (அ) கோரிக்கைஎண். 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 9— மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ.18,45,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் துறை ஒவ்வொன்றுக்கும் சட்டப் பேரவை மேலவை உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்களை

அமைக்க வேண்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,45,19,000—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்''

(ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ.28,35,88,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்: துணைத் தலைவரவர்களே, திண்டிவனம் வட்டத்தில் கடன் நிவாரண சட்டத்தின் கீழ் மனுசெய்துள்ள ஏராளமான வழக்குகள் துரித பைசல் செய்வதற்கு வகை செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,35,88,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்''

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களை வருடத்திற்கு ஆறு கூட்டங்களையும் தவறாது நடத்துவது பற்றி விவாதிக்க நா கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,35,88,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்''

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்துறை வட்டம், தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகியும் சுமார் ரூ.6 இலட்சம் ஒதுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் புதிதாக உடன் வட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 11 — மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,35,88,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டு தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர்களுடைய கருத்துக்குப் பிறகு என்னுடைய விளக்கத்தைக் கூற நான் விரும்புகிறேன்.

[முற்பகல் 10-40]

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தைப் பற்றி முதலில் கருத்து சொல்ல விரும்புகிறேன். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் இப்போது 4 மாதங்களுக்கு ஒரு முறை நடத்த வேண்டும் என்று இருந்தாலும், பல மாவட்டங்களில் அப்படிப் பட்ட முறை கையாளப்படவில்லை என்பதை நான் உறுதியாகச் சொல்லமுடியும். காரணம் அவர்களுக்குப் பல வேலைகள் இருக்கிறது என்றும் அல்லது சட்டமன்றக் கூட்டம் இருப்பதால் உறுப்பினர்கள் அங்கே செல்ல இயலாத நிலையில் கூட்டம் போடமுடியவில்லை என்றும் காரணம் சொல்லப்படுகிறது. எப்படியிருப்பினும் குறைந்தபட்சம் 3 மாதத்திற்கு ஒரு முறை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் கண்டிப்பாக நடத்தப்பெற வேண்டும் என்று வலியுறுத்தவேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அதனுடைய தலைவராக இருக்கிறார். மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு 'நான்-அஃபிஷியல் பாடியாக, இருப்பதால், மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்குச் செயலாளராக இருப்பதுதான் முறை. அந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களில் ஒருவரே சுயேச்சையான முறையிலே தலைமை யேற்கும் முறையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே பேசுகின்ற அல்லது சொல்லப்படுகின்ற கருத்துக்கள் எவ்வளவு அக்கறையோடு கவனிக்கப்படுகிறது என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. அங்கே எழுப்பப்படும் பல்வேறு பிரச்னைகள் மீது மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது அவருடைய பர்சனல் அசிஸ்டெண்ட் (டெவலெப்மென்ட்) முறையாகக் கவனித்து நடவடிக்கைகள் எடுக்கிறார்களா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை என்று சொல்லலாம். ஒரு சில நேரங்களில் அங்கே எழுப்பப்பட்ட பிரச்னைகள் சம்பந்தமாகப் பதில்கள் வருகின்றன. ஆனால் அதனுடைய முக்கியத்துவம் கருதி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்றால் அதற்குத் தகுந்த அக்கறை செலுத்தப்படுவது இல்லை என்பதை உறுதியாக நான் சொல்ல முடியும்.

உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன் 1977 ஆம் ஆண்டிலே நெல்லை மாவட்டத்திலே சங்கரன் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நீலிதநல்லூர் என்ற ஊரில் ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி திறக்கப்பட்டது. திறப்பு விழா செய்கின்ற நேரத்தில் அதிலே தண்ணீரை ஊற்றி அந்தத் தண்ணீர்த் தொட்டியைத் திறந்து விட்டார்கள். அதற்குப் பிறகு அதிலே தண்ணீர் வரவே இல்லை. 1977-ல் இருந்து தொடர்ச்சியாக 4 ஆண்டுகாலமாக நான் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் அது பற்றிப் பேசியிருக்கிறேன். ஆனால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடைசியாக ஒரு 6 மாத காலத்திற்கு முன்பு சந்தர்ப்பவசமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த ஊருக்குச் செல்ல நேரிட்டது. அங்கேயுள்ள கிராம மக்கள் அவரிடத்தில் இந்த நிலையைச் சுட்டிக்காட்டியபின்னர், அவர் அதிலே சற்று நேரடியான கவனம் செலுத்தி அந்தப் பணியை நிறைவேற்றியுள்ளார். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பலமுறை பேசப்பட்ட ஒரு பிரச்னை கவனிக்கப்படவில்லை என்று சொன்னால், அதற்கு என்ன பரிகாரம் என்று எங்களுக்கு புரியவில்லை. இப்படிப் பல அம்சங்களை நான் சொல்லமுடியும். பல நேரங்களில் பல கோரிக்கைகள் கவனிக்கப்படுகின்றன என்று கடிதம் வரும். அதைத்தொடர்ந்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்கிற விவரம் வந்து விடாது. சில நேரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அந்தப் பதில் வரும், அல்லது சில நேரங்களில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகப் பதில் வரும். மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் அவசியமான கருத்துக்களாக இருப்பதால் அவற்றைப் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதுபோல் இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கான வகையில் அரசாங்கம் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப் படுகிறது. ஆனால் அது கிடப்பிலே போடப்படுகிறது. குறிப்பாக வாசுதேவ நல்லூரைப் பொறுத்தவரையில் அங்கேயிருக்கும் பிரைமரி ஹெல்த் கட்டிடம் இடிந்து விழுந்து 7-8 ஆண்டுகள் ஆகிவிட்டன. மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதன் காரணமாக நோயாளிகள் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலைமை மாற்றப்படவேண்டும் என்கிற காரணத்தால்தான் மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளோம். ஆனால் அது சம்பந்தமாக எந்த விதமான நடவடிக்கையும் இங்கே எடுத்ததாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட நிலை தவிர்க்கப்படவேண்டும். மாவட்ட, வளர்ச்சி மன்றத் தீர்மானங்களுக்கு உரிய மரியாதை அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம், பெரிய மாவட்டமாக இருந்தால் இரண்டு வேளையும் நடக்கிறது. ஒரு பகுதி (தெங்கு) காலையிலும், மற்றொரு பகுதி மாலையிலும் நடப்பது என்று வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிக் கூட்டம் நடைபெறு கிறபோது, அது 11 மணிக்கு ஆரம்பித்தால் 1.30 மணிக்கு முடிக்கவேண்டியிருக்கிறது. இதனால் அந்தக்கூட்டம் ஒரு 2 மணி நேரம் தான் நடக்கிறது. ஆகவே, விவாதிக்க நேரம் கிடைப்பது குறைவாக இருக்கிறது. இது போதாது. 4 மாதத்திற்கு ஒருமுறை நடைபெறுகின்ற இந்தக் கூட்டத்தில் ஏற்கனவே பேசித் தீர்க்கப் பட்ட விஷயங்களில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ரிவியூ செய்வதற்கோ, இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி விவாதிப்பதற்கோ அங்கே நேரம் இல்லை. கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்தில் பிரச்சனைகளைப் பற்றிப் பேச முடியாது; பதில் பெறவும் முடியாது. இப்படி நேரம் போதாத காரணத்தால் இந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தைப் பொறுத்தவரையில் குறைந்த பட்சம் இரண்டு நாட்களாவது நடத்த வேண்டியது அவசியம் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதே மாதிரி இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஒவ்வொரு தாலுகா ஆபீசுக்கும் நேரடியாகச் சென்று, மாதத் திற்கு ஒருமுறை அல்லது 6 மாதத்திற்கு ஒருமுறையாவது ஒரு குறிப்பிட்ட தாலுகா ஆபீசுக்கு ஒரு குறிப்பிட்ட நாளில் போக வேண்டும். அந்த வட்டாரத்தில் இருக்கிற அதிகாரிகளையும் அங்கே வரவழைக்க வேண்டும். அங்கே வரக்கூடிய மனுக்களைப் பரிசீலனை செய்து, வந்திருக்கிற அதிகாரிகளைக் கலந்து, உடனடியாக உத்தரவு போட வேண்டும். 'ஆன் தி ஸ்பாட் ஆர்டர்' போட வேண்டும். அப்படிச் செய்தால் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எல்லாப்பகுதி மக்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குச் செல்ல முடியாது; சென்றாலும் அன்றைக்கு அவரை சந்திக்க முடியுமா என்பது சந்தேகம். ஆகையால் ஒவ்வொரு தாலுகா தலைநகருக்கும் ஒரு குறிப்பிட்ட தேதியை நிர்ணயித்து, அதற்கு முன்பே விளம்பரம் செய்து மனுக்களை வரவழைத்து, அவைகள் மீது நடவடிக்கை எடுத்து, அன்றைக்கு அந்த இடத்திலேயே உத்தரவு போட்டால் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும்.

இன்றைக்கு 'லான்ட் அசைன்மென்ட்' பிரச்சனை இருக்கிறது. கடன் நிவாரணச் சட்டம் இருக்கிறது. கட்டுக் குத்தகைச் சட்டம் இருக்கிறது. இவைகளை எல்லாம் அங்கே இருக்கக்கூடிய ரெகுலர் தாசில்தார் செய்ய வேண்டியிருக்கிறது, அமுல்படுத்த வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் அவருக்கு வேறு பல பிரச்சனைகளும் இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் வந்தாலும் சரி, சென்னையிலிருந்து பெரிய அதிகாரிகள் போனாலும் சரி, அமைச்சர்கள் போனாலும் சரி, அந்த தாசில்தா ர்

தான் பின்னால் போகக்கூடிய நிலை இருக்கிறது. அரசு சம்பந்தப்பட்ட கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வதும் அவருடைய பொறுப்பாக இருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில், சில நேரங்களில் சட்டம், அமைதிப் பிரச்சனையும் வந்துவிடுகிறது. ஆகையால் அந்த தாசில்தாரால் ஸ்பெஷல் ஆக்ட் என்று சொல்லக்கூடிய கடன் நிவாரணச் சட்டம், கட்டுக் குத்தகைச் சட்டம் போன்றவை களை சரியாக அமுல்படுத்த முடியவில்லை. சம்பந்தப்பட்ட வழக்கு களை விசாரிக்க முடியவில்லை. அதனால் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு காலாகாலத்தில் பலனில்லாமல் போய்விடுகிறது. உரிய நேரத்தில் அவர்களால் தீர்ப்பு வழங்க முடியாத நிலை இருக்கிறது. நாம் எவ்வளவு சட்டங்களைப் போட்டாலும் அதனால் சாதாரண மக்களுக்கு உரிய காலத்தில் பலன் கிடைக் காமல் போய் விடுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட சட்டங்களை சரியாக அமுல்படுத்த ரெகுலர் தாசில்தார் இல்லாமல். தனியாக ஸ்பெஷல் ஆபீசர்களை நியமிக்க வேண்டும். இப்படிப்பட்ட பணிகளை தனி அதிகாரிகள் மேற்கொள்ள ஏற்பாடு செய்வது மிக மிக அவசியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கவர்னர் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மாநிலத்திற்கு கவர்னர் தேவையற்றவர். அது தேவையற்ற பதவி என்பது என்னுடைய கருத்து. அவர் மத்திய அரசினுடைய ஏஜென்ட். ஒரு மாநிலத்தின் மக்களுடைய உணர்வுகளுக்கு ஏற்ப செயல்பட முடியாது. மத்திய அரசு என்ன நினைக்கிறதோ அதைத்தான் அவர் செயல்படுத்துவார். மாநில மக்களின் உணர்வுகளுக்கு ஏற்ப அவர் செயல்பட மாட்டார். அதற்கு ஒரு உதாரணம். எமர்ஜன்சி தமிழ்நாட்டில் பிரகடனம் செய்யப்படுவதற்கு முன்பு கவர்னர் இங்கிருந்த முதலமைச்சர் அவர்களைப்பற்றிப் பாராட்டிப் பேசினார். கே. கே. என்றால் என்ன என்றெல்லாம் பேசினார். அவ்வளவு நெருக்கமாக இருந் தார். அப்படிப் பேசி 10 நாட்களுக்குள் தவறு செய்தார் என்று முதலமைச்சர்மீது சில குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி. ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்படுகிறது. ஆகையால் மத்திய அரசு எதை நினைக்கிறதோ அதைச் செயல்படுத்துவதுதான் கவர்னருடைய வேலையாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நபர் ஒரு மாநிலத்தின் தலைவராக இருக்க வேண்டியது அவசியமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். ஆகவே, மாநிலத்திற்கு கவர்னர் தேவை யில்லை என்று இந்த மாநில அரசு மத்திய அரசுக்கு தெளிவு படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இன்றைக்கு செக்ரெட்டேரியட், தலைமைச் செயலகத்தைப் பொறுத்தமட்டில் பல்வேறு பணிகள் இருக்கின்றன.

[முற்பகல் 10-50]

இங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்களைப் பொறுத்த வரையில் செக்ஷன் ஆஃபீஸர்ஸ், அஸிஸ்டென்ட்ஸ், ஜூனியர் அஸிஸ்டென்ட்ஸ் போன்ற மூன்று கேட்டகரியாகப் பணியாற்று கின்ற ஊழியர்கள் ஒன்றுபட்டு ஒரு அசோசியேஷன்



வைத்திருக்கிறார்கள். அந்த அசோசியேஷன் மூலமாக சில கோரிக்கைகளை அதாவது அனாமலீஸ் வைத்து அவற்றை தவிர்க்க வேண்டும் என்று மாநில அரசுக்கு கோரிக்கை விடுத் திருக்கிறார்கள். இதன் காரணமாக இப்போது மாநில அரசு என்ன செய்கின்றது என்றால் செக்ஷன் ஆஃபீஸர்ஸ் அசோசியேஷன் என்று தனியாக ஒன்றை ஏற்படுத்துவதற்காக மாநில அரசுகூட உறுதுணையாக இருக்கின்றதோ என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கு நடைமுறைகள் இருந்து வருகின்றன. சமீபத்திலே ஒரு தேர்தலுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒரு அசோசியேஷனுக்குத் தேர்தல் நடக் கின்றது என்று வைத்துக் கொண்டால அது அசோசியேஷன் மூலமாகத்தான் நடக்கவேண்டும். ஆனால் இந்த தலைமைச் செயலகத்திலே இருக்கக்கூடிய செக்ஷன் ஆஃபீஸர்ஸுக்குரிய அசோசியேஷன் தேர்தல் எப்படி நடந்தது என்றால் அந்தந்த துறைகளைச் சேர்ந்த டெபுட்டி செக்ரட்டரிஸ் அறையிலே பாலட் பாக்ஸை வைத்து அந்த செக்ஷன் ஆஃபீஸர்களை கட்டாயப்படுத்தி ஓட்டுப்போடவேண்டும் என்று நிர்ப்பந்தித்திருக் கிறார்கள். ஆனால் ஏற்கெனவே இருந்த அசோசியேஷன் இப்படிப் பிரித்தாளுகின்ற சூழ்ச்சியினைச் செய்யவேண்டாம் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் அந்தத் தேர்தல் நடைபெற்றது அந்த தேர்தலைப் பொறுத்த வரையிலே பல செக்ஷன் ஆஃபீஸர்ஸ் பங்கெடுத்துக்கொள்ள வில்லை. அதிலே பங்கெடுத்துக்கொண்டவர்கள் 47 சதவிகிதம் என்றால் 53 சதவிகிதத்தினர் பங்கெடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே ஏற்கெனவே இருந்த அந்த அசோசியேஷன் அதாவது செக்ஷன் ஆஃபீஸர்ஸ் முதல் சாதாரண கிளார்க்குகள் வரை, அசிஸ்டன்ட், ஜூனியர் அசிஸ்டன்ட் வரை இருந்த அந்த அசோசியேஷனே தொடர்ச்சியாக செயல்படு வதற்கு இந்த அரசு உறுதுணையாக இருக்கவேண்டும். அதைப் பிரிக்கின்ற முறையினைக் கையாளவேண்டாம் என்று நான் பணி வோடு தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து இன்றைக்கு இருக்கக் கூடிய அலுவலக நடைமுறைகளைப் பொறுத்தவரையிலே அதிகாரிகளுக்கு ஒரு ஃபைல் வருகின்றது என்றால் அதிலே ஏதாவது திருத்தம் செய்யவேண்டும் என்றால் உடனடியாக அந்தத் திருத்தத்தைச் செய்யாமல் ஸ்பீக் என்று பென்சிலால் மொட்டையாக எழுதி விடுகிறார்கள். அதாவது அவர்களுக்கு கீழே பணியாற்றக்கூடியவர்கள் அந்த அதிகாரியிடம் நேரடியாக வந்து பேச வேண்டும் என்ற பொருள்படுகின்ற வகையிலேதான் அவ்வாறு எழுதிவைத்து விடுகிறார்கள். மேலும் ஃபைல் தன்னிடம் தாமதப்பட்டதாக இருக்கக் கூடாது என்பதற்காகவும் அது செக்ஷனிலேயே இருக்கட்டும் என்பதற்காகவும்தான் அவ்வாறு எழுதுகிறார்கள். ஏனென்றால் கீழே உள்ள அலுவலர்கள் அதிகாரியிடம் வந்து பேசவேண்டும் என்றால் அந்த மேலதிகாரிகளுக்கு நேரமே கிடைப்பதில்லை. அப்படியே அந்த ஃபைலைப் பொறுத்த வரையிலே எடுக்கவேண்டிய முடிவு எடுக்கப்படாமலே காலதாமதம் ஆகிவிடுகின்றது. இப்படிப் பட்ட காலதாமதங்களை உடனடியாகத் தவிர்க்க வேண்டியது அவசியம்.

நேற்றையதினம்கூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசுகின்றபோது ரெட் டேப்பிசம் இருக்கிறது என்று சொன்னார்கள். அது தொடர்ச்சியாக இருந்து வருகின்றது. தற்போது இருக்கின்ற கோப்புக்களைப் பொறுத்தவரையிலே அவற்றைச் சரியாகப் பதிவு செய்வது போன்ற நடவடிக்கைகளை துரிதப் படுத்துவதற்கு நவீன காலத்திலே சில மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியம்.

ரெவின்யூ டிப்பார்ட்மெண்டிலே உள்ள அடங்கல்களைப் பொறுத்தவரையிலே 23 அடங்கல்கள் இருக்கின்றன. அவற்றிலே எந்த அடங்கல் எது சம்பந்தமானது என்பது யாருக்கும் தெரியாது. ஏற்கெனவே பல ஆண்டுகளாகப் பணியாற்றிய கணக்கர்களுக்குத்தான் அது புரியும். இப்போது திடீரென்று ஏற்படுத்தப்பட்டுள்ள ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களால் அவற்றைப் புரிந்துகொள்ள முடியவில்லை. கேரள மாநிலத்திலே அடங்கல்களின் எண்ணிக்கையைக் குறைத்து அதைச் சுருக்கி அதன்மூலமாக மிகத் திறமையாக அவற்றைக் கையாண்டு வருகின்ற ஒரு நிலையை ஏற்படுத்தி செயல்பட்டுவருவதாக நான் கேள்விப்படுகிறேன். ஆகவே அதுபோன்று நாமும் இங்கே ஏராளமாக இருக்கின்ற அடங்கல்களின் எண்ணிக்கையைக் குறைத்து அவற்றைச் சுருக்குவதற்கு ஒரு நடவடிக்கை எடுத்தால் பணிகள் துரிதமாக நடப்பது சாத்தியமாகும். அடுத்து இன்றைக்கு சில டெக்னிகல் ஆஃபீஸர்ஸ் என்ற வகையிலே சீஃப் இன்ஜினியர்கள் போன்றவர்களிடத்திலே இருந்து சில ப்ராஜக்ட்ஸ் பற்றிய ரிப்போர்ட்டுகள் வருகின்றது. அது வருகின்றபோது அதன் மூலமாக அதாவது கரன்ட் ஃபைலிலே இருந்து நோட் ஃபைல் எழுதப்படுகின்றது.

நோட் ஃபைல் எழுதக்கூடிய நேரத்திலே அதிகமான மாற்றங்களைச் செய்வதற்கு முடியாது. அதுவும் டெக்னிகல் பியூப்பிள் எழுதக்கூடிய நோட் ஃபைல்களில் கொஸ்டின் பண்ணவே இவர்களுக்கு வழி கிடையாது. அப்படி இருந்தபோதிலும் அந்த ஃபைல் அசிஸ்டெண்ட் வரைக்கும் போய் நோட் பைல் மறுபடியும் அவர்களால் எழுதப்பட்டு—எந்தவித மாற்றமும் இல்லாமலேயே அந்த நோட் ஃபைல் வரக்கூடிய நிலைமை இருக்கிறது; இதனால் அதிகாரிகளுக்கு அந்த ஃபைல் போய் சேரக்கூடிய நேரத்திலே காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, சீப் என்ஜினியரிடத்திலிருந்து வரக்கூடிய ஃபைல்களை நேரிடையாக அதிகாரிகளுக்கு அனுப்பி பைனான்சியல் கமிட்மெண்ட்ஸ்களில் ஏதாவது மாற்றம் தேவையிருந்தால் அந்த திருத்தங்களை செய்து உடனடியாக அவைகளை முடிவு எடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும்.

அடுத்து, தலைமைச் செயலகத்திலே இருக்கக் கூடிய செயலாளர்களுக்கு செக்கரட்டரீஸ் போன்றவர்களுக்கு தன்னிச்சையாக பைனான்ஸ் மேட்டரில் உத்தரவு கொடுக்கக் கூடிய வரம்பு 5,000 என்றுதான் உள்ளது. அது மிகவும் குறைவான அதிகாரம். அதை அதிகப்படுத்த வேண்டும். ஒரு சீப் என்ஜினியர், டைரக்டர் போன்றவர்களுக்கே 50,000 1 லட்சம் என்று அதிகார வரம்பு இருக்கும் போது, 5,000–க்கு மேல்



ஃபைல் போயிற்று என்பதற்காக அமைச்சர்களுக்கு சர்குலேஷனில் ஃபைல் அனுப்ப வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு ரெட் டேபிசம் ஒழிய வேண்டும் என்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். ஆகவே, ரெட் டேபிசங்களை தவிர்ப்பது மிக முக்கியமான—அவசியமான ஒன்று என்ற வகையில் இன்றைக்கு இருக்கக் கூடிய முறைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டு முடிக்கிறேன். வணக்கம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கை எண்கள் 9, 11 ஆகிய "மாவட்ட நிர்வாகம், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்" பற்றிய கோரிக்கைகளின்கீழ் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய உணர்வுகளை உங்கள் மூலமாக இந்த மன்றத்திலே வைக்க முன்வருகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த அரசு ஏற்பட்ட பிறகு, ஏற்பட்டிருக்கக் கூடிய மாவட்டத் தொழில் மையம், மாவட்ட வளர்ச்சி மன்றம், மாநில தொழில் ஆராய்ச்சி நிறுவனம், வெளிநாடுகளில் தொழில்—பணிபுரிய செல்வோர்க்கு தனிப் பயிற்சிக் கூடம், மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலகம், மாவட்ட அரிசன நல அலுவலகம் போன்ற இப்படிப்பட்ட பல நிறுவனங்கள் எல்லாம் அமைக்கப்பட்டு, மக்களுக்கு எந்த அளவிற்கு நேரிடையாக தேவையானவற்றை நிறைவேற்ற வேண்டும் என்பதிலே இந்த அரசுக்கு எந்த அளவிற்கு விருப்பம் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் வகையிலே அமைக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

தன்னிறைவுத் திட்டம் இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழ் நாட்டிற்கென்று இருக்கிற ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். இந்த ஆட்சியிலேதான் இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சர்வ ஜாக்கிரதையாக காப்பாற்றப்படுகிறது என்பதையும் யாரும் மறந்துவிட முடியாது. அது மட்டும் அல்லாமல் ஆட்சிக் கட்டிலில் இதுவரை ஏறியவர்கள், முதலமைச்சராக இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர் அதற்குப் பிறகு தனக்கே அரசை பயன்படுத்திக் கொண்டு தன்னுடைய பிறந்த நாள் விழாவினைக் கொண்டாடிக் கொண்டு அரசு செலவிலே செய்யக் கூடிய தொகை, அரசு வழங்கக் கூடிய உதவி, அரசு கொடுக்கக் கூடிய சலுகைகள்,–இவைகள் எல்லாவற்றையும் தங்களுடைய பிறந்த நாள் விழாவினைக் கொண்டாடுவதற்கே பயன்படுத்தி காட்சி அளித்துக் கொண்டிருப்பார்கள், ஆனால் அந்த நிலையை மாற்றி, உழைப்பவர்களுக்கு பெருமை தேடித் தரும் வகையில், இந்த நாட்டை உருவாக்கியவர்களுக்கு, அரசியல் விற்பன்னர்களுக்கு, தமிழ் அறிந்த மேதைகளுக்கு, தமிழகத்திலே உருவான பல்வேறு தலைவர்களுக்கு அவர்களுடைய கட்சி, ஜாதி

மதம் இவைகளையெல்லாம் பாராமல், பெரியார், அண்ணா, காந்தி, ஜீவா, முத்துராமலிங்கம், டாக்டர் அம்பேத்கார், இராஜாஜி, காமராஜ் ஆகிய சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் பிறந்த நாள் விழாவினை அரசு சார்பாகக் கொண்டாடி, அதன் காரணமாக இந்த அரசு மிக மிகப் பெருமைக்குரியதாக, நற்பண்புகளுடன் நடக்கக் கூடிய ஆட்சி என்பதும், ஒரு கட்சி ஆட்சி நடத்தாமல், ஒரு மக்கள் ஆட்சி நடக்கிறது என்பதற்கு இவைகளெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக ஆகும் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

அது மட்டுமல்லாமல், ஏற்கனவே ஒரு திட்டத்தை இந்த அரசு கொண்டுவந்து, எதிர்க் கட்சிகள் ஒத்துக்கொள்ளாத காரணத்தினால், நாம் விட்டு விட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட திட்டத்தை மீண்டும் கொண்டு வரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். பொருளாதார அடிப்படையிலே உதவி, சலுகை, திட்டம், கடன் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், இந்த நாட்டிலே நாம் என்ன எதிர்பார்க்கிறோமோ அதிலே நாம் வெற்றி பெறமுடியும். 'ஜாதி இரண்டொழிய வேறில்லை', 'இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்' என்ற கருத்தை வகுக்கமுடியும். புதிய ஐயர், புதிய நாயுடு, புதிய முதலியார், புதிய செட்டியார் என்பதை உருவாக்காமல் தடுக்க வழிசெய்ய முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையை மீண்டும் உருவாக்குவதற்கு, பொருளாதார அடிப்படையிலே சலுகைகள் இருக்கவேண்டும். இதனை இந்த அரசு உணர்ந்து, இந்தத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், சாதி மாநாடுகளில் அமைச்சர்கள், பொதுநல வாதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளக் கூடாது என்று திட்டவட்டமாக சர்க்கார் முடிவெடுத்து, அதற்கான வழிவகை காணவேண்டும்.

மாவட்ட நிர்வாகம் என்று சொல்லுகின்றபோது, மேல் மட்டத்தில் உயர் மட்டத்திலே அதிகாரிகளை நியமிக்காமல், அடிப்படை ஊழியர்களை அதிகமாக, தேவையான அளவுக்கு நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், உயர்மட்டத்திலே அதிகாரிகளைப் போடுகிறோம் என்று சொன்னால், அவர்கள் அடிக்கடி டூர் போவதற்கும், மீட்டிங் போடுவதற்கும், இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கும் அவர்கள் நேரம் சரியாகப் போய் விடுகிறது. அது மட்டுமல்லாமல், அவர்களுடைய உதவியாளர், அதற்கு வேண்டிய கடைநிலை ஊழியர் ஆகியோர் எல்லோரும் சேர்ந்து டி. ஏ., டீ. ஏ., வாங்குகிறார்கள்; அதோடு அவர்களை வரவேற்பதற்காக அங்குள்ள அதிகாரிகள் எல்லாம், அவர்கள் வேலையைவிட்டு வருகின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றது.



அதோடு, மேல் நிலையிலுள்ள அதிகாரிகளுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டும். இந்த நிலைகள் எல்லாம் இருப்பதால், அடிப்படை ஊழியர்களை அதிகமாக நியமிக்க வேண்டும் என்ற தத்துவத்தை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்..

மேலும், இந்த அரசு ஏற்பட்ட பிறகு 100 வட்டத்தை 150 வட்டங்களாக உயர்த்தியிருக்கிறது. அதைப்போல், பல்வேறு மாவட்டங்களை நிர்வாக வசதிக்காக பிரிக்கின்ற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. 900 பிர்க்காக்கள் இருந்ததை, 1,070 பிர்க்காக்களாக உயர்த்தியிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், மேலும் நிர்வாகத்தை சீர்திருத்துகின்ற வகையில் 376 ஒன்றியங்களைக்கூட, 376 வட்டங்களாக, தாலூகா சென்டர்களாக மாற்ற வேண்டுமென்று இந்த அரசு கருதிக் கொண்டிருப்பதாக அறிகிறேன். தாலூகா, ஒன்றியம் ஆகிய இரண்டையும் ஒன்றாக்கி, மக்களுக்கு நேரடியாக சேவை செய்வதற்கு வழிவகைகள் செய்வதற்கான ஒரு திட்டத்தைக் கூட கொள்கை அளவிலே அரசு ஏற்றுக் கொண்டிருப்பதாக அறிகிறேன். அதை அமுல் படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

அடுத்தபடியாக, இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு படித்த பட்டதாரிகளுக்கு பார்ட்-டைம் வேலை செய்ய அவர்களுக்கு வாய்ப்பளிக்கவேண்டும். அவர்களுக்கு 150 ரூபாய் சம்பளம் என்று சொல்லி பார்ட்-டைம் ஒர்க்கர்சைப் போட்டால், கொஞ்ச காலம் அவர்கள் வேலை செய்தபிறகு, அவர்கள் முழு நேர ஊழியர்களாக தகுதி பெறுவதற்கு, அவர்களே வேண்டிய சர்வீசை செய்வதற்கு ஒரு வழிவகை காண முடியும். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேவையில்லை என்ற நிலை வரலாம். தற்போது உத்தியோகத்தில் இருந்துகொண்டு, படித்த பட்டதாரிகள் பயிற்சி பெறுவதற்கு, அவர்களுக்கு பார்ட்-டைம் தேவையாக இருந்து, அவர்கள் பாஸ் செய்தால், நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று சொன்னால், அவர்கள் நல்லமுறையிலே வேலை செய்வார்கள்; பயிற்சி பெறுவார்கள். அப்படிப்பட்ட நிலையில் அவர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்க முடியும். அவர்களுக்கு 150 ரூபாய் சம்பளம் கொடுத்து, பலவிதமான காரியங்களைச் சாதித்துக் கொள்ள முடியும். இதை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, நாம் சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகளுக்கு மேலானபிறகு, ஏற்கனவே இருந்த ஒரு ஆட்சி பல பார்வேர்ட் கம்யூனிடிகளை பேக்வேர்ட் கம்யூனிடிகளாக ஆக்கினார்கள். பார்வேர்ட் கம்யூனிடிகளிலே இருக்கக் கூடியவர்களை, பேக்வேர்ட் கம்யூனிடிகளோடு இணைத்தார்கள். ஒரு அரசாங்கம் சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால் வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், சிறந்திருக்கிறது என்று சொன்னால், பேக்வேர்ட் கம்யூனிடியிலே உள்ளவர்கள் பார்வேர்ட் நிலைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகளுக்கு மேலான பிறகு, பார்வேர்ட் பேக்வேர்ட் ஆகிறது என்று

சொன்னால், பொருளாதார வளர்ச்சியில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு பெரிய முன் உதாரணம். ஆகவே, இப்படிப்பட்ட நிலையில் பார்வேர்ட், பேக்வேர்ட் ஆன காரணத்தினால், உண்மையிலேயே பேக்வேர்டாக இருக்கக் கூடியவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் அந்த சலுகையை அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். அதாவது உண்மையிலேயே ஏழை எளியவர்களாக உள்ள பின்தங்கியவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இதை இந்த அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும். அதைப் பொருளாதார அடிப்படையிலே கொண்டு வந்தால், எல்லாம் சரியாகப் போய்விடும். இந்த அரசு அதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கான்டக்ட் சர்டிபிகேட் என்றிருக்கிறது அது தேவையற்றது. எப்போதோ, வெள்ளைக்காரன், ஆங்கிலேயன் காலத்தில் தமிழனா, இந்துவா அல்லது வேறு இனத்தைச் சார்ந்தவனா, யார் யார் இந்து என்பன போன்றவற்றை தெரிந்துகொள்வதற்காக அப்போது வழங்கப்பட்டது. அதை இப்போது கேட்டதில் அர்த்தமில்லை. அதற்காகப் பலர் இடைத்தரகர்களிடம் திரிகிறார்கள். அப்படி கான்டக்ட் சர்டிபிகேட் வாங்குவதிலே பல தொல்லைகள் ஏற்படுகின்றன. எனவே, அது தேவையற்றது. அதேபோல், கம்யூனிடி சர்டிபிகேட். கொடுக்கின்ற புத்தகத்திலேயே இருக்கிறது. தவிர, அப்படி கேட்கக் கூடாது. அதனால், சாதியை ஒழிக்க முடியாது. எனவே, அது அவசியம் தானா என்பதை இந்த அரசு பரிசீலனை செய்யவேண்டும். மேலும், இந்த மார்க்குகள் அடிப்படையிலே கல்லூரிகளிலே சேருகின்ற நிலை இருக்கிறது. நகரத்திலே படிக்கின்ற மாணவன், 500-க்கு 450, 480 என்று முதல் மார்க்கு வாங்குகிறான்.

நகரத்திலே வசிக்கக்கூடியவர்கள் 500-க்கு 350 மார்க்கை கடைசி மார்க்காக வாங்குகிறார்கள். ஆனால் தர்மபுரி போன்ற மாவட்டத்திலே, கிராமப்புற பகுதிகளிலே இருக்கிறவர்கள் 500-க்கு 320 மார்க்கை முதல் மார்க்காக வாங்குகிறார்கள். அவர்கள் 500-க்கு 210 மார்க் கடைசி மார்க்காக வாங்குகிறார்கள். எந்த ஜென்மத்திலேயும் உருப்படியாகாமல் போவதற்கு இது உதவியாக இருக்கிறது. ஆகவே மாவட்ட அளவிலே யார் யார் எந்த அளவிற்கு வாங்கியிருக்கிறார்கள் என்பதை பார்த்து அதைக் கொண்டு வந்தால் தான், மாவட்ட அளவிலே முன்னுரிமை கொடுத்தால் தான் அது நல்லமுறையில் இருக்கமுடியும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்

அதுமட்டுமல்ல, போலீசுக்கு சலுகை விலையில் உணவுப் பொருள்கள் வழங்குகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதைப்போல அரசு கடைநிலை ஊழியர்கள், குறைந்த வருமானம் உள்ளவர்கள், துணை வருவாய் இல்லாதவர்கள் அவர்களுக்கு சம்பளத்திற்கு மேல் ஒரு கிம்பளம் பெற முடியாதவர்களுக்கு பியூன், டிரைவர், வாட்ச்மேன், ரெக்கார்டு கிளார்க் போன்ற கீழ்த்தட்டிலே இருக்கின்றவர்களுக்கும் இந்த சலுகை முறையில் வழங்குவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக்



கொள்கிறேன். கீழ்த்தட்டிலே இருக்கிற இந்த ஊழியர்களுக்கு இந்த சலுகையை தருவது மிக மிக நியாயமாகவும், தேவையானதாகவும் இருக்கும் என்பதை எண்ணி அரசாங்கம் இதை பரிசீலனை செய்ய் வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் இங்கே எழுச்சி நாள் கொண்டாடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும்—இரும்பு ஆலைக்கு எதிர் கட்சிகள் கொண்டாட தயார் என்று ஒப்புதல் கொடுத்தார்கள். நான் எதிர்கட்சிகளைப் பார்த்துக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்திய துணைக்கண்டத்திலே ஒரு மாநில சர்க்கார் நல்ல முறையிலே இருக்க வேண்டுமானால், இநதிய ஒருமைப்பாடு நிலைக்க வேண்டுமானால்—— வட நாட்டிலே வெள்ளத்தால் 600 கோடி ரூபாய் நஷ்டம் என்று சொல்கிறார்கள்; தென்னாட்டிலே வறுமையால் 540 கோடிக்கு மேல் ஒரு ஆண்டுக்கு நஷ்டம் வருகிறது என்று ஒரு கணக்கு சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் இந்திய ஒருமைப்பாடு தேவையென்று சொல்லக்கூடியவர்கள் கங்கை—காவிரியை இணைக்க முன் வர வேண்டும். இதற்கு நாம் அனைவரும் போராட வேண்டும். சேலம் இரும்பாலையைக் கொண்டு வருவதற்கு நாம் எழுச்சி நாள் கொண்டாட வேண்டும். ஒகனேக்கல் திட்டம், நதிநீர் பிரச்சினை, மத்திய சர்க்கார், மாநில அரசை கலைக்கும் அதிகாரம்; கங்கை—காவிரி இணைப்பு; இப்படிப்பட்டதல்லாமல் ஏற்கனவே மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை குறைப்பதற்கான எண்ணங்களைப் போக்குவதற்கான அளவில் இங்கே தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா அரசியல் கட்சிகளும் எழுச்சி நாள் கொண்டாடுவதற்கு முன் வரவேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும்; அப்போதுதான் நாம் எப்படி இப்படிப்பட்ட ஜனநாயக மரபை காப்பாற்றுகிறோம்; இந்தியாவிலே தமிழகம் தான் ஜனநாயகத்தின் தொட்டில் என்பதை நிலை நிறுத்துவதற்கு, யார் ஆட்சிக் கட்டிலில் இருந்தாலும, யார் போய், யார் வந்தாலும் கூட நமக்கு அந்த சங்கடமும் ஏற்படும் என்பதை எதிர்க்கட்சிகள் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட நிலையில் நீங்கள் செய்வீர்களென்றால் இந்த நாடு மேலும் உங்களை நம்பி பின் வரக்கூடிய நிலையில் இருக்கும். எதிர்கட்சிகள் கூட சிதையாமல் மேலும் வளர்வதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொள்வதற்கு இது பயனுள்ளதாக அமையும்.

அது மட்டுமல்லாமல் மத்திய அரசிலே ஒரு அமைச்சர் கூட சொல்லியிருக்கிறார், சில மாநிலங்களில் மாநில கட்சிகள் ஆட்சி செய்வதால் தொழில்கள் வளர்ச்சி வாய்ப்பில்லாமல் போய் விட்டன என்று ஒருவர் சொன்னதாக கருத்து இருக்கிறது. அது தான் காரணம் என்று சொன்னால் அந்த காரணத்தை மாற்றக் கூடிய வகையில் இருக்கிற, தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கக் கூடியவர்கள், விரும்பக்கூடியவர்கள் அதற்கு நல்லதொரு பதில் சொல்லத்தக்க வகையில் அமைய வேண்டும்.

இங்கே ஒருமுறை பேசுகின்றபோது சேஷசாயி மில்லிலே இருக்கக்கூடிய சேர்மென் நியூஸ் பிரிண்ட் இண்டஸ்ட்ரியல் சேர்மென்னாக அமர்த்தப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். அப்படிச் சொன்னார்கள் என்று சொன்னால், சரித்திரம் காணாத புதுமையாக சர்க்கரை ஆலைக்கு தலைவராக பாண்டிச்சேரி முதலமைச்சர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தனக்குத் தானே சிலை எடுத்து திறந்து வைத்துக்கொண்டு இடி அமீனைப் போல அந்த அடிப்படையிலே, அதை தமிழகத்தினுடைய எதிர்க் கட்சித் தலைவர், பாண்டிச்சேரி ஆளும் கட்சித் தலைவர் ஏற்கிறாரா என்பதைப் பற்றி நான் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் இன்றையதினம் அவர் இங்கே இல்லையென்றாலும் இதற்கு பதில் நாளை வரும். அப்படிப்பட்ட நிலையில் அதைப் பற்றி அவருடைய கருத்து என்ன? அதை விட ஊழல் குற்றம் வேறு எதுவும் இருக்க முடியுமா? அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த அரசைப் பொறுத்தவரையில் தகுதியானவர்களை நியமிப்பதற்கு இருக்கிறதே தவிர முதலமைச்சரே தனி ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு தலைவராகக் கூடிய அளவு அங்கே இருக்கிற அவர்கள் அரசாங்கம்; அவர்கள் இங்கே வந்து ''ஊருக்கு உபதேசமடி பெண்ணே, உனக்கு இல்லையடி கண்ணே'' என்ற தத்துவத்தின் அடிப்படையில் வார்த்தைகளை பேசுகிறார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசுகின்ற போது கூட ஒன்றைச் சொன்னார்கள். நாங்கள் யாருடைய டைரக்ஷனிலோ இருப்பதாகச் சொன்னார்கள்.

[முற்பகல் 11-10]

நாங்கள் யாருடைய டைரக்ஷனிலும் இல்லை. எங்கள் வழியில் நாங்கள் செல்கிறோம், அஸ்ஸாமிலே கூட காங்கிரஸ் அரசு பிழைப்பதற்கு கம்யூனிஸ்ட் உதவியிருக்கிறது. நாங்கள் எதிர்க்கவில்லை. காரணம் அந்த மாநிலத்தில் அவர்கள் நிலைமை அப்படி இருக்கலாம். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் தமிழகத்து மக்கள் உரிமைகள் பாதிக்கப்படாமல், தன் மானம் பாதிக்கப்படாமல் எந்த எந்த வகையிலே எல்லாம் முடியுமோ அதைத்தான் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. இங்கே பேசியபோது திரு. சித்தன் அவர்கள்கூட சொன்னார்கள். வறட்சிக்குப் பணம் தேவை, கல்விப் பணம் தேவை, மின்சாரத்திற்குப் பணம் தேவை, ஆனால் விசாரணைக் கமிஷன் கூடாதா என்று கேட்டார்கள். அது வேறு விஷயம். மத்திய அரசுக்கு என்று அதிகாரங்கள் வகுக்கப்பட்டுள்ளன, மாநில அரசுக்கு என்று அதிகாரங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தன் மகளைத் தானே திருமணம் செய்து கொள்கின்ற பைத்தியக்காரத்தனம் இருப்பது நல்லதல்ல.

**திரு. கு. ரமணி :** மாற்றுத் தலைவர் அவர்களே, டாக்டர் சமரசம் அவர்கள் பேசுகின்றபோது அஸ்ஸாமிலே காங்கிரஸ் கட்சியினுடைய அரசாங்கம் பாதுகாக்கப்படுவதற்கு கம்யூனிஸ்டுகள் காரணமாக இருந்தார்கள் என்ற பொருள்பட குறிப்பிட்டார்கள். அது உண்மையல்ல. அஸ்ஸாமிலே மார்க்சிஸ்ட



கம்யூனிஸ்ட் கட்சி பயங்கரமான வகுப்புவாதத்திற்கும் இடம் அளிக்காமல் காங்கிரஸ் கட்சிக்கும் இடம் அளிக்காமல் தன்னுடைய நிலையைக் காப்பாற்றிக்கொண்டது என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. சமரசம் :** அது பொதுவான விஷயம். எந்த எந்த வகையில் என்ற விவரங்கள் வேண்டுமென்றால் நான் தனியாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இந்த அரசு மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டு வந்தது. இங்கே எதிர்க்கட்சிகள், குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்றவர்கள் குறை பட்டுச் சொன்னார்கள். மதுவிலக்கு என்பது 13 வயதுள்ள பருவப் பெண்ணாக இருந்தாள். அந்த பெண்ணை 13 வயது முதல் 22 வயது வரை காங்கிரஸ்காரர்கள் கன்னி மாடத்தில் வைத்திருந்தார்கள். ஆனால் அந்தப் பெண்ணை 5, 6 ஆண்டுக் காலம் சிவப்பு விளக்குப் பகுதியில் கொண்டு வைத்தார் கலைஞர். பிறகு மீண்டும் அவளை கன்னிமாடத்தில் வைத்துவிட்டு குலப் பெருமை, பெண்ணின் பெருமை பேசுகிறார். ஆனால் புரட்சித் தலைவர் அவர்களோ கன்னிமாடத்திற்கும் அனுப்பாமல் சிவப்பு விளக்குப் பகுதிக்கும் அனுப்பாமல் அந்தப் பெண் யாரை விரும்புகிறாளோ, யார் அந்தப் பெண்ணை விரும்புகிறானோ அவர்கள் இருவரும் இணைந்து சுகம் பெறலாம் என்ற முறையிலே ஒரு பொதுத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட முடிவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மதுவிலக்குக் கொள்கையில் எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர்கள் பிரச்சினைகள் பற்றிச் சொன்னார்கள். தொழிலாளர்கள் பிரச்சினைகளில் கம்யூனிஸ்டுகளுக்கு போதுமான அளவுக்கு திருப்தியில்லை என்று சொன்னார்கள். ஓரளவுக்கு அவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம். ஒரு தொழிற் சங்கப் பிரச்சினை என்று சொன்னால் பிரதிநிதிகள் எல்லாம் உட்கார்ந்து பிரச்சினையைத் தீர்க்க முயல்கிறபோது கம்யூனிஸ்டுகள் அவர்களுடைய கொள்கையை விடுவதில்லை, காங்கிரஸ்காரர்கள் அவர்கள் கொள்கையை விடுவதில்லை. முதலாளிகள் அவர்களுடைய கொள்கையை விடுவதில்லை, வங்கியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய பைனான்ஸ் கொள்கையை கைவிடுவதில்லை. ஆனால் ஆளுங் கட்சி எப்படியாவது சுமூகமாக எல்லாம் நடக்கவேண்டுமென்ற முறையில் தொழிலாளர்கள் வாழவேண்டும், முதலாளிகள் தொழிலை நடத்தவேண்டும், தொழிற்சங்கங்கள் வாழவேண்டும் என்ற நிலையில் இருக்கிறது. ஆகவேதான் ஒவ்வொருவரும் நவக்கிரகமாக இருக்கிறார்கள், நவக்கிரகங்களைச் சுற்றிவந்து இந்த நாட்டில் உள்ள சர்ச்சையைத் தீர்க்கக்கூடிய முறையிலே ஆளுங் கட்சி செயல்பட்டு வருகிறது. குறைந்த பட்சம் அந்தக் கொள்கையை நிறைவேற்றக் கூடிய முறையிலே நடைபெற்று வருகின்றது, ஆனால் முடிந்தபிறகு சர்ச்சைகள் ஏற்படுகின்ற முறையிலே ஜனநாயகம் இருக்கிறது. ஆகவே இதைப்பற்றி

நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று சொல்கிறது தமிழ்க் கொள்கை. சோவியத் அறிஞன் தாஸ்தா உஸ்கிஸ் சொன்னான்: எல்லா ஊர்களிலும் மக்கள் இருக்கிறார்கள். எங்கேயும் அவர்கள் பிழைத்துக் கொள்ளலாம், ஆனால் மனிதனாக இருக்க வேண்டுமென்று. மனிதன் வாழமுடியாத இடம் இல்லை. அவன் வாழ்வதற்கு போராட்டம், அவன் சந்ததி வாழ்வதற்கு போராட்டம், அவன் சாக விரும்பாமல் அதை எதிர்த்து வாழவேண்டும் என்று சொன்னான். இதுதான் தமிழ்த்தன்மை. இன்றைய நிலையில் தமிழ்த் தன்மையில் புரட்சித் தலைவர் அவர்களே, தமிழ் இனக் கருத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் வாழையடி வாழையாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். வாழை இருக்கிறது என்று சொன்னால் வாழை குலை தள்ளியபிறகு கன்றுக்கு நீர் விட்டுவிட்டு மீண்டும் தண்ணீரை தான் எடுத்துக் கொள்வதில்லை. தாவர இயல் ஆராய்ச்சி நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். வணக்கத்துக்குரிய புரட்சித் தலைவரவர்கள் எந்த அளவிற்குத் தன்னை வைத்துக் கொண்டிருந்தார்கள், அவர்கள் எப்படி வாழ்ந்திருந்தார்கள் என்பதெல்லாம் அவருடைய வரலாற்றைப் படித்தவர்களுக்குத் தெரியும். முதலமைச்சராக ஆன காரணத்தினால் இன்றையதினம் அவர்கள் சூழ்நிலையின் கைதி என்று சொல்லுகின்ற வகையில் எந்த அளவுக்கு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியுமோ, தேவைகளைக் குறைத்துக்கொள்ள முடியுமோ, ஆசைகளை ஒதுக்கித் தள்ள முடியுமோ அந்த அளவுக்கு செய்து, இன்றைய தினம் மக்கள் வாழ்வதற்கு ஒரு வாழையாக இருக்கிறார்கள் என்பதைச் சொல்லி முடிக்கிறேன்.

* திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது எங்கள் கட்சியின் கொள்கைகளையும், என்னுடைய அபிப்பிராயத்தையும் சொல்லலாம் என்று முன்வந்திருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் பேசும்பொழுது, மதுவிலக்கை ஏன் தளர்த்தியிருக்கிறோம் என்பது பற்றியும், அதனுடைய நோக்கம் என்னவென்பதைப் பற்றியும் அவர்களுடைய பாணியிலே மிகவும் நன்றாகக் கூறினார்கள். அவர்களுடைய பாணியிலே அந்த அளவிற்கு கூறாவிட்டாலும் ஓரளவிற்கு இதைப்பற்றி சொல்ல முன்வருகிறேன்.

மதுவிலக்குக் கொள்கையில் காங்கிரஸ் கட்சித் தீவிரமாக இருந்தது. தமிழகத்தைப் பொறுத்த மட்டிலே, மதுவிலக்குக் கொள்கையை ஆரம்பத்திலே மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். அதற்குப் பின் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் மதுவினால் மக்கள் படும் அவதியை குறிப்பாக ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் படும் அவதியைக் கண்டு, மதுவிலக்குக் கொள்கையைத் திவிரப்படுத்தி தமிழகம் தழைத்தோங்க நல்ல பல காரியங்களைச் செய்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே தங்களுடைய முன்னேற்றத்தை நோக்கி பத்துப் படிகள் எடுத்து வைத்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு வந்த ஆட்சியாளர்கள் மதுவிலக்குக் கொள்கையிலே தீவிரம் காட்டாததால் ஏற்கனவே முன்னேறியிருந்த தாழ்த்தப்பட்ட மக்களும், பின்தங்கிய மக்களும் 10 படிகள் முன்னேறியிருந்தவர்கள் இன்னும் பத்துப் படிகள் கீழே தள்ளப்பட்டார்கள். இதை நாடறியும், நாட்டு மக்கள் அறிவார்கள், குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர்கள் அறிவார்கள்.



பெருமதிப்பிற்குரிய நம்முடைய முதல்வரவர்கள் தாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு, தாய்க்குலத்திற்காக மதுவிலக்கைத் தீவிரப்படுத்துகிறேன் என்று சொல்லி, மது குடித்திருந்தாலும் சரி, காய்ச்சினாலும் சரி அவர்களை நாடு கடத்துவேன் என்று மிகவும் தீவிரப்படுத்தி சட்டம் கொண்டு வந்தார். ஆனால் இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளேயே அதே தாய்மார்களின் நன்மைக்காக மதுவிலக்கைத் தளர்த்துகிறேன் என்றுதளர்த்தி, இப்பொழுது ஒரேயடியாகத் தளர்த்துவதன் மூலம் மது விலக்கைத் தீவிரப்படுத்தாமலும், தளர்த்தாமலும் மது விலக்குக் கொள்கை இரண்டுங்கெட்டான் நிலையிலே இருக்கிறது.

ஆகவே, இந்த அரசுக்கு மதுவிலக்குக் கொள்கையில் நிலையான எண்ணம் இல்லை. மதுவிலக்கைத் தளர்த்தி இந்த மாநில மக்களுக்குப் பல கெடுதிகளைச் செய்யவிருக்கிறார்கள். ஆகவே, மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்த இயலாத இந்த ஆட்சியாளர்களுக்கு ஒரு காரியத்தை செய்து முடிக்கின்ற திறமை இல்லை என்பதைத்தான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பற்றி குறிப்பிடும் போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஐ. ஏ. எஸ். படித்தவர்கள். அவர்கள் சில நியாயமான காரியங்களைச் செய்து முடித்தார்கள். ஆனால் சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் இருந்த பஸ் ரூட்டுக்காகக் கொடுக்கக் கூடிய அதிகாரத்தை ஆர். டி. ஏ. யிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஒரு வேளை இந்த ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக இதில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயல்படவில்லையோ என்ற ஐயப்பாடுதான் இந்த சமயத்தில் எழுகின்றது. ஆர். டி. ஏ. விடம் இருந்தால் நாம் எந்த வகையிலேயும் அவர்களை ஆட்டி வைக்கலாம், யாருக்கு வேண்டுமானாலும் பஸ் ரூட்டுக்கான லைசென்ஸ் கொடுக்க நாம்

உத்தரவிடலாம்; நம்முடைய உத்தரவு பிரகாரம் ஆர். டீ. ஏ.க்கள் கேட்பார்கள்; ஆனால் மாவட்டக் கலெக்டர்கள் சிலர் தங்களுடைய இஷ்டப்படி கேட்காமல் நியாயம் எது என்பதைக் கண்டுபிடித்து மற்றவர்களுக்குக் கொடுக்கிறார்கள் என்ற எண்ணமோ ஐயப்பாடோ தெரியவில்லை, திடீரென்று மாநில ஆட்சித் தலைவர்களிடமிருந்த அந்த அதிகாரத்தைப் பிடுங்கி ரீஜினல் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டி என்ற அதிகாரிகளிடம் கொடுத்திருக்கிறார்கள். இது மிகவும் வருந்தத் தக்கது; கண்டிக்கத்தக்கது. மேலும் ஊழலுக்கு அடிகோலுவதற்கு ஊக்குவிக்கின்ற நிலையை நாம் எய்துவோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இப்பொழுது ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்கள் இரண்டு மூன்று தாலுக்காக்களுக்கு ஒருவர் என்ற நிலையில் இருக்கிறார்கள். அதை மாற்றி ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், ஒவ்வொரு பிர்காவுக்கும் ஒரு தாசில்தார் என்ற விகிதத்தின் அடிப்படையிலே புதிதாக அப்பாயின்ட்மென்ட் கொடுத்து இந்த வேலைவாய்ப்பை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் குறிப்பாக ஏழைகளுக்கு அல்லது தாழ்த்தப்பட்டவர்களுக்கு நில அடைமானம் கோருதல், வீட்டு வசதிக்கு ஆர்ஜிதம் செய்தல் போன்றவற்றில் வருடக் கணக்கில் நீண்டுகொண்டிருக்கிறது. இதற்கு உடனடியாகப் பரிகாரம் காணவும் உடனடியாக ஏழை மக்களுக்கு வீட்டு மனை போன்றவற்றைக் கொடுக்கவும் ஒவ்வொரு பிர்க்காவுக்கும் ஒரு தாசில்தார் என்று போட்டு, செய்ய வேண்டிய காரியங்களை உடனடியாக செய்ய வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11–20]

மேலும் நில அடமான பாங்க் மற்றும் சொஸைட்டி மூலம் கடன் வழங்கப்படுகிறது. அதிகமான ஆட்களைக் கொண்டிருப்பதால், சர்க்காருடைய பணம் வீண் விரயமாக்கப்படுகிறது. அதை தாலுக்கா ஆபீஸ் மூலமாக தாசில்தார்மூலமாகக்கூடக் கொடுத்தால் சீக்கிரமாகப் பணம் கொடுக்க முடியும். அந்தப் பணத்தைச் சீக்கிரம் வசூலிக்கவும் வாய்ப்பு ஏற்படும். மேலும் சொஸைட்டி மூலம் கொடுத்த பணத்தைத் திருப்பி வாங்குவதற்கு தாசில்தாரை அணுக வேண்டியிருக்கும். ஆகவே, கொடுப்பதும் வசூல் செய்வதும் ஒரே கையாக இருந்தால் நன்றாக இருக்கும். ஆகவே, சொஸைட்டி மூலம் கொடுப்பதைத் தாலுகா ஆபீஸ் மூலம் கொடுத்தால் சிறந்ததாக இருக்கும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், நியாயவார கோர்ட், குத்தகைப் பதிவு கோர்ட், ாத்தகை வசூல் கோர்ட் என்று இதுமாதிரி கோர்ட்டுகளை குவிசில்தார்களிடத்திலும், ஆர். டீ ஓ-க்களிடமும் ஒப்படைக் தறார்கள். குறிப்பாக, நியாயவார கோர்ட் என்பதில் ஏழை வம்சாயிகளுக்கு ஒரு நியாயமும் கிடைக்கவில்லையென்று கூட இநா சொல்ல முடியும். குறிப்பாக, நியாய வார கோர்ட்டை



எடுத்துக் கொண்டால் சில வழக்கறிஞர்களே கூடக்கூறுகிறார்கள், அது நியாய வார கோர்ட் அல்ல, அநியாய வார கோர்ட் என்று. ஏனென்றால். ஆர். டீ. ஓக்களே அந்த கோர்ட்டுகளில் இருக்கிறார்கள். அதை மாற்றி, நியாய வார கோர்ட், ரெக்கார்ட் ஆப் ரெண்ட் கோர்ட், அல்லது ரெவினியூ கோர்ட் போன்றவற்றை மாவட்ட முன்சீப்பிடமோ அல்லது அதற்கென தனியாக கோர்ட் அமைத்து அதன் மூலமாக, அந்த நடவடிக்கைகளை நிர்ணயம் செய்தால், உண்மையாக விவசாயிகளுக்கும் நியாயம் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த கோர்ட்டுகளை நடத்தும் தாசில்தார் லா கிராஜுவேட் கூட இல்லை. எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்தவர்கள் எல்லாம் நடத்துகிறார்கள். கோர்ட் ப்ரொசீஜரே அவர்களுக்குத் தெரியவில்லை. என்ன செய்ய வேண்டுமென்று தெரியாமல், அந்தந்தச் சமயத்திலே யார், யார் வேண்டிய வழக்கறிஞர்களோ அவர்களுடைய கைட்லைன்ஸைப் பெற்று, அதற்குத் தகுந்தவாறு தீர்ப்பு அளிப்பதை நாம் காண்கிறோம்.

குத்தகை பதிவு செய்வதைப் பற்றி மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கூடப் புதிதாக ஒரு சட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறார்கள். ஓரல் சரண்டரை பிலிவ் பண்ணி, சில தாசில்தார்கள் தீர்ப்பு கூறுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஓரல் சரண்டரை பிலிவ் பண்ணி, குத்தகைதாரரை குத்தகை நிலத்தை விட்டு வெளியேற்ற முடிவு செய்தால், நிச்சயமாக இந்த நாட்டிலே ஒரு குத்தகைதாரர்கூட நிலத்திற்கு குத்தகைதாரராக இருக்க முடியாது என்பதை இந்தச் சமயத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் நிலச்சுவான்தார்கள், தாசில்தார் போன்றவர்களை இன்ஃப்ளுயன்ஸ் பண்ணி, தங்களுக்குச் சாதகமாக தீர்ப்பு வாங்கிக் கொண்டு, இதுமாதிரி காரியங்களைச் செய்துவிடுவார்கள் என்று அங்கங்கே குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே, இது போன்றவைகளை, அந்தந்த மாவட்ட முன்சீப்புகள் மூலமாகவோ, அல்லது கோர்ட் மூலமாகவோ நடத்தி, நீதி வழங்கிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இங்கு மாண்புமிகு அருமை சகோதரர் குறிப்பிட்டதுபோல் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இருக்கின்றன. இரண்டு மாதத்திற்கொரு முறை அல்லது மூன்று மாதத்திற்கொரு முறை அது கூடுகிறது. அந்த மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே எடுக்கப்படும் முடிவுகள், சிபாரிசு செய்து அனுப்பப்படும் முடிவுகள் எந்த வகையில் இருக்கின்றன என்றால, ஏதோ மாவட்ட வளர்ச்சிமன்றக் குழுக்கள் போஸ்ட் ஆஃபீஸ் போலத்தான் செயல்படுகின்றனவே ஒழிய உண்மையாக அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களினால் அனுப்பப்படும் காரியங்கள் எதுவுமே நடைபெறவில்லை. நான் கூட பலமுறை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே பல தீர்மானங்களை

அனுப்பியிருக்கிறேன். அனுப்பியதோடு சரி, அதற்கு எந்த விதமான எஃபெக்டும் இல்லை, நியாயமும் கிடைக்காமல் அது அப்படியே இருக்கிறது. ஆகவே, மாவட்ட வளர்ச்சிமன்றங்கள் இந்த சமயத்திலே உண்மையில் வெறும் போஸ்ட் ஃபீஸ் களாகத்தான் பயன்படுகின்றனவே ஒழிய, உண்மையிலே மாவட்ட வளர்ச்சிமன்றங்கள் கொடுக்கும் எந்தத் திட்டங்களும் இந்த அரசால் நிறைவேற்றப்படவில்லை. அதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றால், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் எடுக்கும் முடிவை, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முடிவு செய்வதை, கவனத்தில் கொண்டு, அதற்கு வேண்டிய உதவிகளை அமைச்சர் செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட வளர்ச்சி பற்றிய முக்கிய பிரச்சனைகள் எல்லாம், அங்கங்கே இருக்கின்ற எம். எல். ஏக்களுக்கும் மாவட்ட கலெக்டருக்கும் தெரியும், எதற்கு பிரையாரிட்டி கொடுக்க வேண்டும், எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும், எவை களை உடனடியாகச் செய்ய வேண்டுமென்ற நிலைமை தெரியும். ஆகவே, அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வெண்டுமென்று இந்த சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னைப் போன்ற எதிர்க்கட்சி எம். எல். ஏ.க்கள் இருக்கிறோம். நாங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமோ அல்லது, அதிகாரிகளிடமோ கொடுக்கும் மனுக்களுக்கு எந்தவித மான பதில் அறிவிப்பும் கிடைக்கவில்லை. ஆகவே, எதிர்க்கட்சி வரிசையிலே உட்கார்ந்திருக்கும் என்னைப் போன்ற எம். எல். ஏக்களுக்கு, நாங்கள் கொடுத்த மனுவின் மீது என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது? கொடுக்கப்பட்ட மனுவிற்குப் பரிகாரம் கிடைத்திருக்கிறதா, இல்லையா என்பதைப்பற்றி தெரிவிக்க வேண்டுமென்று அருள்கூர்ந்து இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் தொகுதிகளுக்குச் செல்லும் போது, எங்களிடம் பலர் மனுக்கள் கொடுக்கிறார்கள். நாங்கள் உடனே மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ, அல்லது மாண்புமிகு அமைச்சர்களிடமோ அல்லது செயலாளர்களிடமோ கொடுக் கிறோம். திரும்ப நாங்கள் தொகுதிக்குச் செல்லும்போது, மனு கொடுத்தோமே, என்ன செய்தீர்கள், என்ன நடவடிக்கை எடுத்தீர் கள், என்ன நிலைமையில் இருக்கிறது என்று அவர்கள் திருப்பிக் கேட்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அப்போது நாங்கள் பதில் சொல்ல முடியாத நிலையில் நிற்க வேண்டி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கொஞ்சம் அக்கறை காட்டி, நாங்கள் கொடுக்கும் மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன, அரசின் முடிவு என்ன என்பதை அறிவிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.



டாக்டர் சமரசம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் பிற்பட்டவர்கள் பட்டியலில் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் தற்சமயம் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டினார்கள். திருச்சியில் ரெட்டியார் வகுப்பைச் சேர்ந்த வர்கள் கொண்டா ரெட்டி என்று சொல்லிக் கொண்டு சலுகை பெற்று வருகிறார்கள். அதைப்போலவே, நாய்க்கர்கள், காட்டு நாய்க்கர்கள் என்று உண்மைக்கு மாறான வகையில் சர்ட்டிபிகேட் பெற்று பிற்பட்டோருக்கு உண்டான சலுகை களைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால்தான் அரசாங்கம் தரும் பல்வேறு சலுகைகள் உண்மையான பிற்பட்டோருக்கும் மலைவாசிகளுக்கும் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே, உண்மையான வகையில் தாழ்த்தப்பட்டோர் யார், ஷெட்யூல் வகுப்பினர் யார், பிற்பட்டோர் யார், மலைவாசிகள் யார் என்பதைக் கண்டறிந்து அவர்களுக்கு அரசாங்கம் சலுகைகளை வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக்கோரிக்கை எண் 9, மற்றும் 11 ஆகியவற்றை வரவேற்று, ஆளும் கட்சியாக உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில கவர்னரிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் வரை நிர்வாகத்திலே நிலவுகின்ற சூழ்நிலைகளை மக்கள் விரும்புகின்ற வகையில் மாற்றங்கள் செய்து, ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு ஆட்சி கருதுகின்ற எண்ணங்களை செயல்படுத்துவதற் குரிய விதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிய கண்ணோட்டத்தில் கொண்டு வந்து இருக்கும் இந்தத் திட்டத்தைப் பாராட்டுவதற்கு நான் முதலில் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்று மாநில கவர்னரைப் பற்றி எனக்கு முன்பு பேசிய வர்கள் பல்வேறு கோணங்களில் விமர்சனம் செய்தாலும், விமர்சனம் செய்வதற்கு உரிய நிலையில் இன்று மாநில ஆளுநர் இருந்தாலும், அந்தப்பதவி கடந்த பல ஆண்டுகாலமாக சுதந்திர இந்தியாவில் பிரபலப்படுத்தப்பட்டுவிட்ட பதவியாக, மாநிலம் ஏற்றுக்கொள்ளக் கூடிய பதவியாக அது மாறி வந்து இருக்கிறது என்பதையும், மனசாட்சிப்படி அந்த மாநில ஆளுநர் பதவி தேவை இல்லை என்று நாங்கள் கருதுகிறோம் என்று சொன்னாலும், அதை சொல்வதற்குரிய அதிகாரம் நம்மிடம் இல்லாத காரணத்தால் நான் அதைப்பற்றிப் பேசுவதை இதோடு விட்டுவிடக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்று மாநில முதலமைச்சராக மீண்டும் மக்களின் வாக்குகளைப் பெற்று முதலமைச்சராக மாறி இருக்கிற மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் வேகமான திட்டங்களை, மக்கள் முன்னேற்றத்திற்காகத் தீட்டி, அதனை விரைவாக செயல்படுத்துவதன் மூலம் மக்கள் அந்தத் திட்டங்களின் பலனைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு சில வேகமான, தீவிரமான நடவடிக்கைகளை சட்டத்தாலும் அல்லது ஆட்சியில் இருக்கிறோம் என்ற காரணத்தால் நல்ல திட்டங்களாலும் நாட்டு மக்கள் முன் வைத்து இருக்கும் நிலையை நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

ஒரு அமைச்சர் பெருமகன் அல்லது மாநில முதலமைச்சர் அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதி எழுதுகிற எழுத்துக்கள், அல்லது விரும்புகின்ற எண்ணங்கள் அல்லது செய்ய வேண்டும் என்று நினைக்கிற நினைப்புகள் ஆகியவற்றை நிறைவேற்ற நிர்வாகத்தில் இருக்கும் அதிகாரிகள், அல்லது அலுவலர்கள் அல்லது உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் எவ்வளவு சிரமத்தோடு தங்களுடைய மனப்பக்குவத்தை ஜனநாயகத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர் பெருமக்களோடு ஒன்றி உறவாடி நிலையான வகையில் காரியங்களை ஆற்றுவதற்கு தங்களைத் தாங்களே பக்குவப்படுத்திக் கொள்ள எந்த அளவிற்கு முன்வருகிறார்களோ அந்த அளவிற்குத் தான் அந்தத் திட்டங்களை வெற்றி பெறச் செய்ய முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஜனநாயகத்திலே வாக்களித்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம், ஏழை விவசாயிகளாக இருக்கலாம், உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். ஆனால் படித்து மிகப்பெரிய பட்டத்தைப் பெற்றவர்கள் இன்று நிர்வாகத்தில் பலபேர் இருந்தாலும், நிர்வாகத்தில் இருக்கும் அத்தனை பேரும் எந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அந்த ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ள அந்தக் கருத்துகளை நிறைவேற்றுவதற்கு உரிய வகையில் தங்களுடைய எண்ணங் களையும், தங்களுடைய மனதையும் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

1917 ஆம் ஆண்டு ஜார் மன்னனை ஒடுக்கிய லெனின் சோவியத் பெருநாட்டில் செங்கொடியை உயர்த்தி தன்னுடைய ஆட்சியை துவக்கிய நேரத்தில், அங்கே இருந்த அதிகாரிகள் ஜார் மன்னனுக்கு பக்க பலமாக இருந்து பழகிப்போனவர்கள் அந்த பழக்கத்தில் ஊறித்திளைத்தவர்கள், லெனின் தீவிரமான கொள்கைகளை நாட்டு மக்கள் மத்தியில் பரப்ப முன்வரவில்லை. ஆனால், லெனின் சொன்னான்—நான் உழைக்கும் வர்க்கத்தை உயர்த்தப்போகிறேன், உழுபவனுக்கே நிலத்தைக் கொடுக்க



போகிறேன், வேலை இல்லாதவர்களுக்கு வேலை அளிக்கப் போகிறேன், தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப் போகிறேன், கல்வியை கிராமப்புறங்களில் பரப்பப்போகிறேன், இந்த நாட்டைப் பொன்கொழிக்கும் நாடாக செய்யப் போகிறேன் என்று சொல்லி, இரண்டு ஆண்டு காலம் அந்த சோவியத் புண்ணிய பூமியை ஆண்ட லெனின் கூட போராடினான் :

[முற்பகல் 11-30]

ஆனால் நிர்வாகத்தில் இருந்தவர்கள் லெனினுடைய அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலைக்குத் தங்களைப் பக்குவப்படுத்திக் கொண்ட காரணத்தால், லெனினோடு ஒத்துப் போக முடியாத காரணத்தால், லெனினுடைய தத்துவங்களை, கருத்துக்களை மக்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல எண்ணங் களை அந்த நிர்வாகத்தில் இருந்த அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலைக்கு வந்தபிறகு லெனினுக்கே 19 8 ஆம் ஆண்டு ஒரு சோதனை சோவியத் நாட்டில் ஏற்பட்டது. மிக உச்சகட்டமான அதிகாரத்தை லெனின் வைத்திருந்த காரணத்தால் அன்று கம்பீரமான லெனின் இரவு 12 மணிக்கு அந்த சேவியத் புண்ணிய பூமியில் ஒரு அறிவிப்பை கொடுத்தான். நாளை மாலைக்குள் என்னுடைய நிர்வாகத்தின் கீழ் இந்த நாட்டில் இருக்கிற அலுவலர்கள் என்னுடைய கொள்கைகளை ஏற்று நிறைவேற்றக் கூடியவர்களாக தங்களுடைய நெஞ்சங்களைப் பக்குவப்படுத்திக்கொண்டு தங்களுடைய பேனாக்களைப் பிடிக்க வேண்டும். வெறும் மையைக் கொண்டு உபயோகப்படுத்துகின்ற அந்த எழுதுகோலால் கோப்புகளில் நான் போடுகின்ற கையெழுத்தை உயிருள்ள பொருளாக நீங்கள் கருத வேண்டும். ஏதோ வெறும் பேப்பரிலே எழுதுகின்ற எழுத்து, அது ஒரு ஜடப் பொருள் என்று நீங்கள் கருதிக்கொண்டு குப்பையிலே போடுவீர்களேயானால், காலதாமதப்படுத்துவீர்களேயானால், நாட்டின் வேகமான முன்னேற்றத்திற்கு அக்கறையோடு என்னைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு நான் பதில் சொல்ல முடியாது. ஆகவே, நாளை மாலைக்குள் உங்களுடைய மனதை பக்குவப் படுத்திக் கொண்டு, என்னுடைய சோசலிஷ எண்ணங்களை, என்னுடைய சிந்தாந்தங்களை என்னுடைய கருத்துக்களை, ஏழைகள் பக்கம் நான் இருக்க வேண்டுமென்ற எண்ணங்களை பிரதிபலிக்க நீங்கள் தவறுவீர்களேயானால் என்னுடைய கட்சிக் காரர்கள் உங்களுடைய இடத்தையும், நீங்கள் என்னுடைய கட்சிக்காரர்கள் பாடுபடுகிறார்களே, பாட்டாளிகள் அந்தப் பாட்டாளிகள் இடத்தையும் அடைவீர்கள். உயர்ந்த பதவியிலே இருக்கிற நீங்கள் பாட்டாளிகள் இடத்திலே அமர்த்தப்படுவீர்கள் என்று அன்றைக்கு லெனின் சொன்னான்.

இன்றைய புரட்சித் தலைவர் அப்படிச் செல்லக் கூடிய நிலையில் இல்லை. சொல்லக்கூடிய அதிகாரம் இந்திய ஜனநாயகத்தில் இல்லை என்ற காரணத்தால்தான் கோப்புகளில் அமைச்சர் பெருமக்கள் அல்லது நிர்வாகத்தின் உயர்ந்த இடத்தில்

இருக்கின்றவர்கள் ஏழை எளிய மக்களுடைய எண்ணங்களைக்
கருதி, போடுகின்ற கையெழுத்து, தலையெழுத்து, ஏழைகளால்
தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் போடுகின்ற கையெழுத்து,
அது ஜடப்பொருள் அல்ல; ஜீவனுள்ள உயிரோட்டமுள்ள
கையெழுத்து என்ற அடிப்படையில் அமைச்சர் பெருமக்களுக்கு
கீழே இருக்கிற நிர்வாகிகள் பணியாற்ற மறுப்பார்களானால்,
திட்டங்களை நிறைவேற்ற. ஆட்சியை செம்மைப்படுத்த
மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை எப்படிச் செய்ய
முடியும் என்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கூறிக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாட்டினுடைய ஜனநாயக அமைப்பு என்பது
வெள்ளை ஏகாதிபத்தியத்தின் வெறிச்சோடிபோன தன்மைக்கு
இந்த நாடு ஆளாக்கப்பட்ட பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்டு,
தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு இன்றைக்கு போடப்பட்ட சட்டங்கள்
என்பதை நான் பரிதாபத்தோடு கூறிக்கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன்.

பழைய நமூனாக்கள், பழைய தஸ்தாவேஜ்கள், பழைய
பத்திரப் பதிவுகள்—இவைகள் கூட இன்று சுதந்திர இந்தியாவில்
32 ஆண்டுகள் கழித்தும்கூட இருக்கிறன என்பதை, எவ்வளவு
தான் கம்பீரமான தத்துவங்களை எண்ணங்களைக்
கொண்டிருக்கிற முதலமைச்சராக இருந்தாலும் அமைச்சர்
பெருமக்களாக இருந்தாலும் நிர்வாக அமைப்புமுறை என்பது,
இந்த ஜனநாய கோட்பாடு என்பது, இந்த ஜனநாயக அமைப்பு
என்பது, இந்த ஜனநாய நீதி, நிர்வாகம் என்பது எந்த ஆட்சியும்
பணக்காரனுக்கு பல்லிளித்து பல்லக்கு தூக்கக்கூடிய அளவுக்கு
இந்த நாட்டினுடைய ஜனநாக அமைப்பு இருக்கிறது என்பதை
வேதனையோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன்.

மதுவிலக்குக் சொள்கையில் மாநில முதலமைச்சர் கடைப்
பிடித்து இருப்பது குழப்பமாக இருக்கிறது என்று இந்திய தேசிய
காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள்.
வேண்டுமானால் உச்ச அதிகாரத்தைப் பெற்றிருக்கிற மத்திய
சர்க்கார் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் யாரும் மதுவிலக்கை
ரத்து செய்யக்கூடாது என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வருவார்
களானால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம்
இருக்கிற 22 மாநிலங்களில் 21 மாநிலங்களும் மதுவிலக்கை
வைத்துக்கொண்டு நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்
போது தமிழ்நாடு அந்த நிலைக்கு ஆளாகி ஒரு தீவுப்போல் இருந்து,
தமிழ்நாட்டிலிருந்து பெங்களூருக்குச் சென்று குடிப்பது, தமிழ்
நாட்டிலிருந்து கேரளாவுக்குச் சென்று குடிப்பது, தமிழ்நாட்டி
லிருந்து பாண்டிச்சேரிக்குச் சென்று குடிப்பது, தமிழ்நாட்டி
லிருந்து ஆந்திராவுக்குச் சென்று குடிப்பது என்று சொன்னால்
இந்த வருமானம் வெளியே போகிறது என்பதை இந்திய தேசிய
நீரோட்டத்தில் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டிருப்பவர்கள்
சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன்.



ஜனநாயக அமைப்பு சொல்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்
பட்ட ஒரு சர்க்கார் சொல்கிறது. மாநில முதலமைச்சர்
சொல்கிறார். வருவாய்த் துறை அமைச்சர் சொல்கிறார்.
உழைக்கும் வர்க்கத்திற்கு 60-40 என்பதை 75–25 என்று பிரி.
ஏழைகளை நம்பித்தான் இந்த ஆட்சி அமைக்கப்பட்டது.
ஆகவே ஏழைகளுக்கு 75% கொடு, 75 விழுக்காடு கொடு என்று
சொல்கிறார். ஆனால் இந்த ஆட்சியினுடைய ஜனநாயக
அமைப்பு அதை கொடுக்காதே என்று தடைவிதிக்கிறது. ஒரு
நாட்டினுடைய முதலமைச்சர், ஒரு நாட்டினுடைய பணம்
பக்கத்து மாநிலத்தில் இருக்கிற ஒரு தனி நபரால் நடத்தப்படுகிற
பரிசுச்சீட்டு மூலம் கொள்ளையடிக்கப்படுகிறது. அந்த பரிசுச்
சீட்டை தடை செய் என்று ஜனநாயகத்தால் தேர்ந்தெடுக்கப்
பட்ட ஒரு ஆட்சி சொல்கிறது. ஆனால் இந்த நாட்டினுடைய
ஜனநாயக அமைப்புச் சொல்கிறது. அது தனி நபர் பாண்டிச்
சேரியிலிருந்து நடத்துகிற பரிசுச்சீட்டா? தடை செய்கிறதா?
தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்காரா ? அந்த தடையை உடை.
நான் தருகிறேன், பரிசுச்சீட்டை விற்றுக்கொள் என்று சொன்னால்
எப்படி இதை நிறைவேற்ற முடியும் என்பதைத்தான் நான்
பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது. உணவு
சேகரித்து வைக்கின்ற கூடாரங்கள் காலியாகிக் கொண்டிருக்
கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே உணவைப் பத்திரப்படுத்த
வேண்டும் என்ற காரணத்திற்காக நாம் லெவி முறையினைக்
கொண்டு வந்தால் அந்த லெவிக்குகூட இந்த நாட்டிலே உள்ள
ஜனநாயக அமைப்புக்கள் எதிர்ப்பு தெரிவித்து அதை ரத்து
செய்யச் சொல்கிறது. அந்த லெவியைச் செய்யாதே அந்த
லெவிக்கு நாங்கள் தடை ஏற்படுத்துகிறோம் என்று சொன்னால்
என்ன பொருள்? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி
மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கருதி சட்டங்கள்
என்ற பெயரால் திட்டங்களைப் போடுகின்றபோது அவற்றை
நிர்மூலமாக்கவேண்டும் என்று எதிர்த்தால் மக்களின் நிலைமை
என்ன ஆகும். ஆகவே அவ்வாறு எதிர்க்கின்ற அந்த நிலைமைக்கு
மாற்றம் தேவை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்
கிறேன்.

அடுத்து மேலும் ஒருசில கருத்துக்களை நான் பணிவோடு
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாவட்ட வளர்ச்சி மன்றக்
கூட்டங்களைப் பொறுத்தவரையிலே மராட்டிய மாநிலத்திலே
தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள்தான் தலைமை
தாங்குகிறார்கள். அதே போன்று தமிழ்நாட்டிலும் மாவட்ட
வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட
பிரதிநிதிகள் தலைமை தாங்குகின்ற நிலையினை ஏற்படுத்தித்
தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கூட்டத்
திற்கு கோரம் என்ற அடிப்படையிலே குறிப்பிட்ட எண்ணிக்கை
உறுப்பினர்கள் வரவில்லை என்று சொன்னால் அந்த மாவட்ட
வளர்ச்சிமன்றக் கூட்டம் தள்ளி வைக்கப்படுகின்றது. ஆகவே அந்த
கோரத்தை குறைக்கின்ற ஒரு சட்டத்தை இந்த கூட்டத்தொட
ரிலேயே மாண்புமிகு முதல்வர்அவர்கள் கொண்டு வரவேண்டும்
என்று நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்
கிறேன்.

அடுத்து அந்தந்த இலாக்காக்கள் சம்பந்தப்பட்ட வகையிலே ஒரு குறிப்பிட்ட பணிக்கு செலவு செய்யவேண்டும் என்றால் அதற்குரிய தொகையினைப் பற்றி பரிசீலித்து அனுமதி பெறுவதற்காக நிதி இலாக்காவைத் தேடுகிறார்கள். அந்தக் குறையினைப் போக்குவதற்கு ஒவ்வொரு இலாக்காவிலேயும் டெபுட்டி செக்கரட்டரி என்ற நிலையிலே ஒரு துணை நிதிச் செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அந்தந்த இலாக்காவிலே உள்ள பணிகள் சம்பந்தப்பட்ட வகையிலே தேவையான தொகையினை அந்த துணை நிதிச் செயலாளரே பரிசீலித்து அளிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

அடுத்து வேலை வாய்ப்பு பற்றி இன்று காலையிலே கூட பேசப்பட்டது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுப்போம் என்ற ஒரு சுலோகத்தை எழுப்பி அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே இந்த நாட்டின் ஜனநாயகத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. வேலைவாய்ப்பினைப் பெறுத்தவரையிலே வயது வரம்பு இருக்கின்றது. ஆனால் வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்துவிட்டு பல ஆண்டுகளாக வேலை வாய்ப்புகள் கிடைக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பை உறுதி செய்கின்ற வகையிலே வேலைவாய்ப்பு அலுவலகத்திலே அவர்கள் பதிவு செய்த ஆண்டுகளைக் கணக்கிட்டு அதிலேயிருந்துதான் அவர்களுடைய வயதினைக் கணக்கிடுகின்ற ஒரு முறையினை ஏற்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்று சொல்வதைப் பொறுத்தவரையிலே எந்தக் குடும்பத்தினர் ஏற்கனவே அரசுப் பணியிலே இருக்கிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை தராமல் யார் அரசுப்பணியிலே இல்லாமல் இருக்கிறார்களோ, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய ஒரு தன்மையினை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி நான் விடைபெறலாம் என்று கருதுகிறேன். இன்றையதினம் நாட்டு மக்களின் மனதிலே ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களின் தன்மைகளுக்கேற்ப நாட்டுமக்களுக்காக வேகமாகக் காரியங்களைச் செய்கின்ற வகையிலே அரசின் கீழே நிர்வாகத்திலே அங்கம் வகிக்கின்றவர்கள் தங்களைத் தாங்களே செயல்படுத்துவதற்குரிய வகையிலே தங்களது மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும்.

அடுத்து நம்முடைய நிதிநிலை அறிக்கை மார்ச் மாதத்திலே வருகின்றது, அவ்வாறு வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்ட பணிகளுக்கென்று நிதியினை ஒதுக்கி அதை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள்ளாக செலவழிக்கவேண்டும் என்ற முறை இருக்கிறது. ஆகவே அந்த மாதத்திற்குள்ளாகவே அந்த நிர்வாகப் பணிகளை முடிக்கவேண்டும் என்பது அதாவது மார்ச் மாதத்திற்குள்ளாக முடிக்கவேண்டும் என்பது கஷ்டமாக இருக்கின்றது ஆகவே மார்ச் மாதம் என்பதை மாற்றியமைக்க வேண்டும்,



அடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பதுபோல், மாவட்ட அளவிலே முன்னேற்ற வேலைகளைக் கவனிப்பதற்கு என்று மாவட்ட வளர்ச்சி அதிகாரி என்று அதாவது டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் ஆபீசர் என்று ஒருவரை உள்ளாட்சித் துறையின் மூலமாக நியமிப்போம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த முறையினை சீக்கிரமாக நிறைவேற்றி மாவட்ட வளர்ச்சி அதிகாரிகளை நியமிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பட்டாக்கள் வழங்குவது என்பது பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. இந்த நாட்டிலே புறம்போக்கு நிலங்களே இல்லை, ஆகவே பட்டா வழங்கவேண்டிய அவசியமே இல்லை என்ற நிலைமையினை ஏற்படுத்துகின்ற வகையிலே வட்ட ஆட்சியரை அதிகமாக நியமித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஏழை மக்களுக்கும் துரிதமாகப் பட்டாக்களை வழங்குவதற்குரிய ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இந்த மானியக்கோரிக்கையை வரவேற்று விடைபெறுகிறேன்.

[முற்பகல் 11-40]

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

* திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண். 9, 11, மாநில ஆட்சித் தலைவர் அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம் போன்ற மானியக் கோரிக்கைகளின் மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே, சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

நம்முடைய இந்த கோரிக்கையின் அடிப்படையில் மாவட்ட நிர்வாகம் என்கிற முறையில் ஒவ்வொரு மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கே இருக்கக் கூடிய வேலைகள் என்பது மிக அதிகபட்சமாக இருக்கிறது என்பது அரசுக்கே தெரியும். மாவட்ட ஆட்சி நிர்வாகத்தின் கீழ் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு வட்டத்திலும், ஏன் ஒவ்வொரு தாலுக்காவை எடுத்துக் கொண்டாலும், ஏன் பஞ்சாயத்துக்களையே எடுத்துக் கொண்டாலும் வேலைப்பளு மிக அதிகமாக இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. இதற்கு அடிப்படையான காரணம் பெரிய பெரிய மாவட்டங்களாக இருப்பதுதான். ஆகவே அப்படி பெரியதாக இருக்கும் மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து, இரண்டு தனித் தனி மாவட்டங்களாக மாற்றினால் வேலைப் பளு சற்றுக் குறையும் என்று முதலிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

இரண்டாவதாக, பஞ்சாயத்துக்கள்தோறும் ஏற்கனவே அறிவித்துள்ளபடி மக்கள் குழுக்கள் அமைத்து, அந்த குழுக்கள் செல்லும் நேரத்தில் பஞ்சாயத்துப் பணிகளைச் செய்வதோடு உடனடியாக கிராமப்புற மக்களுக்கு ரேஷன் கார்டுகள் வழங்குவது போன்ற பணியையும் மேற்கொள்ளும் அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். ஏ. பூங்காவனம்] [1981 மே 8

அதேபோல ஒவ்வொரு இடத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகத்திற்கு அடுத்து ஆர். டி. ஓ. ஆபீஸ் இருக்கிறது. அந்த ஆர். டி. ஓ. அலுவலகத்திற்கு பக்கத்தில் தாலுக்கா அலுவலகமும் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் அல்லது குறிப்பிட்ட வட்டத்தில், அல்லது குறிப்பிட்ட இடத்தில் பட்டா கொடுக்கப்பட வேண்டும் என்றால், சம்பந்தப்பட்ட அந்தக் கிராம பிரஜை பட்டா வேண்டுமென கோரி மனு செய்தால், அந்த மனு முதலிலே தாசில்தாரிடம் சென்று ஆர். டி. ஓ.விடம் சென்ற பிறகு மாவட்ட கலெக்டரிடம் செல்ல வேண்டியதிருக்கிறது. இப்படி 3 அடுக்குக்கு அந்த மனு பயணம் செய்ய வேண்டிய நிலை இருப்பதை சற்று சிந்தித்துப் பார்த்து, இதனால் வேலைகள் நடப்பதில் தாமதம் ஏற்படுவதை தவிர்க்க, ஆர் டி. ஓ. அலுவலகம் என்று இடையிலே ஒன்று இருப்பது அவசியம் தானா என்பதை ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அரிசனங்களுக்கு பட்டா வழங்குவதற்கு என்று தனியாக வெல்பேர் ஆபீசர்கள் போட்டிருக்கிறார்கள். அந்த அதிகாரி கிராமங்களுக்குச் சென்று அந்த அரிசன மக்களை சந்தித்து பட்டா கொடுப்பதற்கோ அல்லது விசாரிப்பதற்கோ அவருக்கு போக்குவரத்திற்கென்று ஜீப் வண்டி எதுவும் வழங்கப்படுவதில்லை. அந்த நிலையை மாற்றி, உடனடியாக அவருக்கு ஜீப் வசதியையும், வண்டி வாகன வசதியையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல் முதியோர் பென்ஷன், பட்டதாரிகள் பென்ஷன், விதவைகள் பென்ஷன், சிமென்ட் பெர்மிட் போன்ற பிற வேலைகள் எல்லாம் தாலுக்கா அலுவலகங்களிலேயே பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது; இதனால் அவர்களுக்குள்ள பழைய வேலைகளைச் செய்ய முடியாத நிலைமை ஏற்படுகிறது. தேவைகள் எல்லாம் அதனால் காலதாமதம் ஆகின்றன. என்னுடைய காட்பாடி தொகுதியைப் பொறுத்தவரையில் கூட 54 ஆம் ஆண்டிலிருந்து பட்டா கேட்டு மனு செய்த மக்கள் இன்னும் வாங்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றனர். அதற்குக் காரணம் இது போன்ற பல வேலைகளும், தாலுக்கா அலுவலகங்களிலேயே செய்யப்படுவதுதான். ஆகவே இது போன்ற மக்களின் அவசிய தேவைகளை உடனடியாக தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது போன்ற பணிகள் செம்மையாக காலதாமதம் இன்றி நடைபெற வேண்டும் என்றால், அவர்களுடைய வேலைப்பளுவைக் குறைக்க வேண்டும். அப்படி குறைப்பதற்கு அடிமட்டத்தில் உள்ள அந்த ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். அப்படி அதிகப்படுத்துவதன் மூலமாக தேங்கிக் கிடக்கும் வேலைகளை துரிதப்படுத்த முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதுகிற கடிதங்களுக்கு, பதில்கள் சரிவர கிடைப்பதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் மரியாதைக்குரிய மன்றத்தின் உறுப்பினர்கள். மக்களின்



1981 மே 8] [திரு. என். ஏ. பூங்காவனம்]

பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்கிற எண்ணமே இருப்பதில்லை. பதில்கள் வருவது தாமதப்படுவதோடு, வருகிற பதிலிலும் எந்தவித விளக்கமும் இருப்பதில்லை. உதாரணமாக என்னுடைய தொகுதியிலே-காட்பாடி தொகுதியிலே ஏலந்தாங்கல் என்னும் கிராமத்தில் குடிதண்ணீர் இல்லை என்கிற பிரச்சினை இருப்பது பற்றி மக்கள் கொடுத்த மனுவை வைத்து 14-8-80-ல் நான் ஒரு கடிதம் அனுப்பினேன். 14-8-80 இல் அனுப்பிய அந்தக் கடிதத்திற்கு 27-4-81-ல் எனக்கு பதில் வருகிறது. அந்தப் பதிலிலே என்ன சொல்லியிருக்கிறது என்று சொன்னால், நாங்களால் இந்த தேதியில் கொடுக்கப்பெற்ற கடிதம் சம்பந்தப்பட்ட துறைக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது என்பதை தங்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று நான் பணிக்கப்பட்டுள்ளேன் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

குடிதண்ணீர் ப்ரச்னைக்காக எழுதப்பட்ட ஒரு கடிதத்திற்கு 8 மாத காலத்திற்கு பிறகு இப்படிப்பட்ட பதில் வருமேயானால் எவ்வாறு அந்தப் பகுதியில் குடிதண்ணீர் பிரச்னையை தீர்க்க முடியும்? இப்படிப்பட்ட காலதாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம்? காலதாமதத்தோடு பதில் அனுப்புவது என்பது மாத்திரம் அல்ல; சில நேரங்களில் ஆங்கிலத்திலேயும் பதில் அனுப்புகிறார்கள்.

இப்படிப் பல நிகழ்ச்சிகளை, இந்தச் சட்டப் பேரவையில் உள்ள அத்தனை பேர்களும் ஆங்கிலம் படித்தவர்கள் அல்ல. படிக்காத பல உறுப்பினர்களும் இருக்கிறார்கள். இந்தப் பேரவை தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவை. தமிழ் பேசுகிற மக்கள் நிறைந்த பேரவை. ஆகவே அனுப்புகிற கடிதங்கள் தமிழில் வரவேண்டும் அதற்கான முயற்சியையும் ஆணையையும் இந்த அரசு பிறப்பிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, அமைச்சர்களைப் பார்க்க வேண்டுமென்ற நிலை வருமானால், அவசியம் பார்க்கவேண்டும் என்றுகருதுகிற போது, கட்டாயம் பார்க்கவேண்டும் என்று விரும்புகிறபோது அமைச்சர் அறைக்குச் சென்றால் நிறைய தோழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும், அமைச்சர்களைப் பார்ப்பதில் தவறு இல்லை. பார்க்க அனுமதிக்கவேண்டும். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளே சென்று சொல்லப்போகிற விஷயங்கள் பல்வேறு விஷயங்கள் உள்ளன. பல கருத்துக்கள், விஷயங்கள் அமைச்சர் அவர்களுக்கு மட்டும் தெரிய வேண்டும் என்ற சூழ்நிலை இருப்பதால் சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த நேரத்திலிருந்து எந்த நேரம் வரை பேசலாம் என்ற ஒரு நியதியை ஒரு நிலையை, ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை நிர்ணயித்து ஒதுக்கவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் உள்ளே நுழைகிறபோது, பெரும் கூட்டம் இருக்கிறது. அவர்களை எழுப்பிவிட்டு நாம் பேசுவது என்பது பண்பு அல்ல, ஜனநாயகம்

அல்ல. நீதி அல்ல, தமிழ் மரபு அல்ல. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ஒரு நேரத்தை ஒதுக்கித்தாருங்கள். அப்படிச் செய்தால் நாங்கள் அமைச்சர்களைச் சந்தித்து நேரில் முறையிட உதவியாக இருக்கும்.

மாவட்ட நிர்வாகம் சம்பந்தமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் அங்கே நடக்கிற வேலைகளை எடுத்துக் கொண்டால் கலெக்டரிடம், வளர்ச்சிமன்றக் கூட்டங்களில். குடிநீர் வேண்டும், சாலைகள் வேண்டும், மருத்துவமனைகள் வேண்டும், வேலைவாய்ப்பிற்கான புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்ற வகையில் பல கோரிக்கைகளை எழுப்புகிறோம். நீண்ட நேரம் பேசுகிறோம் எல்லாக் கூட்டங்களிலும். எங்கள் மாவட்டத்தில் ஒரு கூட்டம் தான் நடந்திருக்கிறது. குடிநீருக்காக பல கூட்டங்கள் நடத்தியிருக்கிறோம். அந்தக் கூட்டங்களில் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்கள் சம்பந்தமாக இதுவரை இன்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள், இன்ன காரியங்கள் நடந்திருக்கின்றன என்ற பதில் இல்லாமல் துரித நடவடிக்கைகள் எடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று கடிதம் வருகிறதே தவிர வேலையை செய்து முடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். இங்கே ரோடு போடுகிறோம், இந்தப் பள்ளியைக் கட்டுகிறோம், அல்லது இந்த மருத்துவ மனையைக் கட்டுகிறோம் என்ற குறிப்போடு சில நிகழ்ச்சிகள் வருமானால் வாக்காளப் பெருமக்களுக்கு, வரி தருகிற மக்களுக்கு கிராம மக்களுக்கு நாம் நன்மை செய்வதோடு அல்லாமல் மனநிறைவு ஏற்படும். அதைக் கூட செய்யவில்லை என்ற நிலையில் தொகுதிக்கு நாம் செல்வதற்கே கடினமாக இருக்கிறது. துரதிஷ்டவசமாக இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு. தமிழ்நாடு முழுவதும் எந்தத்தொகுதியை எடுத்துக் கொண்டாலும். வேலைவாய்ப்பா, பின்னால் பார்க்கலாம், வேறு பல நெருக்கடியா, பின்னால் பார்க்கலாம். குடிக்க தண்ணீர் இல்லை என்றால் அதையும் தீர்க்க முடியாத ஒரு அவல நிலை. வேலையற்ற வாலிபர்போல் வீடு இல்லாத வேறு நாட்டு பிரஜைபோல், இலங்கையிலிருந்து வந்த அகதிகள்போல் சட்டமன்ற உறுப்பினர்களை ஆக்காமல் இருக்கவேண்டுமென்று சொன்னால் சில காரியங்களையாவது சில நன்மைகளையாவது உடனே செய்வதற்கு மாவட்ட நிர்வாகம் தயாராக இருக்கவேண்டும்.

வளர்ச்சி மன்றக் கூட்டங்கள். எடுக்கப்படும் எந்த முடிவுகளும் நடைமுறைக்கு கொண்டுவரப்படுகின்றனவா என்று பார்த்தால் கொண்டுவரவே இல்லை, எவ்வளவு மனுக்கள் போட்டாலும் எவ்வளவு முறையீடுகள் கொடுத்தாலும் அவை நடைமுறைக்கு வருவதில்லை. அதைத் தவிர்க்க வேண்டுமென்றால் எனது அன்புக்கும் மரியாதைக்கும் உரிய திரு. கோவைத்தம்பி அவர்கள் அழகாகப் பேசினார்கள். நல்லபல கருத்துக்களைச் சொன்னார்கள். அரசாங்க இயந்திரம் செயல்பட குறுக்கே நிற்பது யார்? இந்த



அரசு நினைத்தால் 24 மணி நேரத்திற்குள் ஏன் வீட்டுக்கே அனுப்பலாம். மக்களுக்கு எதிராக, அரசுக்கு எதிரான, திட்டங்களுக்கு எதிரான காரியங்களில யார் செயல்பட்டாலும் அவர்களை வெளியேற்ற சகல வல்லமை படைத்த அதிகாரம் நிரம்பிய சபை என்ற காரணத்தால் தக்க நடவடிக்கை எடுக்கலாம், அவர்களை வெளியேற்றுவதன் மூலம் வேறு அதிகாரிகள் முறையாகச் செயல்படத் தக்க வகையில் மக்களுக்கு நன்மை கிடைக்க அரசாங்கம் ஆவன செய்ய முன்வர வேண்டும்.

[முற்பகல் 11-50]

ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஈரோடு வட்டத்திலிருந்து பெருந்துறை தனி வட்டமாகப் பிரிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும், அங்கே வட்ட ஆட்சியாளர் கட்டிடம் கட்டுவதற்கு 6 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டும் இதுவரையில் கட்டிடம் கட்டாமல் இருப்பதை, உடன் கட்ட வேண்டும். இது ஒரு உதாரணம். மாவட்டத்தை பெரிது என்று பிரிக்கிறோம், வேலை வாய்ப்புக்காக நடைமுறையைத் துரிதப்படுத்துவதற்காகப் பிரிக்கிறோம்; அப்படி பிரிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு 2 ஆண்டு காலமாகியும், அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் அந்தக் கட்டிடம் அங்கே கட்டப்படவில்லை. எனவே, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் இதற்கான துரித நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அப்படி இதிலே கவனம் செலுத்தினால்தான், அங்கே வட்டார வளர்ச்சி அலுவலகம், மாவட்ட அலுவலகம், வேறு பல அலுவலகங்கள் கட்டுவதற்கான வேலைகள் நடைபெறும். ஆகவே, இதிலே துரித கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள கல்வி மையத்தில் உள்ளவரைப் பற்றி பல முறை பல மனுக்கள் கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது, அந்தக் கல்வி மையத்தில் திரு. டி. டீ. இராதா கிருஷ்ணன் என்பவர் வேலை செய்கிறார், 28 ஆண்டுகளாக அங்கே அவர் வேலை செய்கிறார். அவர் எங்கு வேலைக்குச் சேர்ந்தாரோ, அந்த அலுவலகத்திலேயே அமர்ந்து வேலை செய்கிறார். அவர் மீது தொடர்ந்து பல குற்றச்சாட்டுகள் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும், எம் எல். ஏ.க்களும் பல குற்றச்சாட்டுகளைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த 28 ஆண்டுகளில் அவர் 3 முறை மாற்றப்பட்டிருக்கிறார். இந்த 3 முறையும் அவர் வெளியே போகவில்லை. அங்கேயே வந்திருக்கிறார். அவர் கல்வி இலாகாவிலே, தலைமை அலுவலகத்திலே, இயக்குநர் அலுவலகத்திலே செல்வாக்குள்ளவர், அவருக்கு வேண்டியவர்கள் அங்கே இருக்கின்ற காரணத்தால், புதிய நியமனங்களில், வேலை வாய்ப்பு அல்லது

[திரு என். ஏ. பூங்காவனம்] [1981 மே 8

மாறுதல் செய்வது, வேறு இடங்களுக்கு மாற்றுவது போன்ற வகையில் அவர் செய்யும் பல்வேறு முறைகேடுகள் நேராகவே சொல்லப்பட்டிருக்கின்றன. தெளிவாக ஊர் அறிய பணம் கொடுத்தால்தான் காரியம் நடக்கும் என்று பல்வேறு முறைகேடுகள். ஊழல்கள் செய்கின்ற நிலை இருக்கிறது, பல்வேறு மாவட்ட கல்வி அதிகாரிகள் பதவி மாறி அங்கே வருவார்கள். ஆனால் இவர் மட்டும் அங்கேயிருந்து போகமாட்டார், அவர் காலத்தில் எத்தனையோ முதலமைச்சர்கள் வந்து போனார்கள். ஆனால், அவர் தன் ஆயுள் பூராவும் தன் வேலையை இந்த அலுவலகத்திலே செய்து முடிப்பேன் என்று சொல்கிறார். இதற்கு என்ன காரணம்? காமராஜர் காலத்திலே, ஓ. பி. ராமசாமி காலத்திலே, 47-க்கு முன்னால் என்றால், இன்னும் குமாரசாமி ராஜா போன்றவர்கள் காலத்திலே இருந்து, நீண்ட நாட்களாக குறிப்பிட்ட ஒரு இடத்திலே அந்த ஊழியர் வேலை செய்துகொண்டிருக்கிறார் என்றால் அதற்கு என்ன காரணம்? அவர் பின்னாலே யார் இருக்கிறார்கள்? அந்த அடிப்படையிலே அவர் அங்கேயே இருக்கிறார் என்பதை கல்வி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கவனிக்கவேண்டும். ஏற்கனவே, 3 மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவர் மட்டும் இன்னும் போகவில்லை; போகச் செய்ய முடியவில்லை. அதற்கு என்ன காரணம்? என்பதை அருள் கூர்ந்து கவனித்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தலைமை அலுவலகத்தில், அதிலும், குறிப்பாக, சட்டமன்றப் பேரவையில் பல ஊழியர்கள் தற்காலிகமாகவே பணியாற்றுகிறார்கள். அவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்படாமல், நீண்ட நாட்களாக, வேலை வாய்ப்புத் தருகின்ற அந்த அலுவலகத்திற்கும் போக முடியாமல், இங்கேயே குறைந்தபட்ச ஊதியத்திலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாநிலத்தின் பல்வேறு இடங்களிலுள்ள தொழிற்சாலைகளில், பாக்டரிகளில் உள்ள முதலாளிகள் தங்களுடைய தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி கொடுக்கவேண்டும். நிரந்தரமாக்க வேண்டுமென்று நாம் சட்டம் போடுகிறோம். ஆனால், நாம் மட்டும் 5, 6 கொடுத்து கொண்டு, அவர்களை நிரந்தரமாக்காமல் இருந்தால் தொழில் அதிபர்கள் எப்படி நாம் போடுகின்ற சட்டத்தை ஏற்றுக்கொள்வார்கள்? எப்படி நிறைவேற்றுவார்கள்? என்பதைப் பற்றி நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். எனவே, இந்த ஊழியர்கள் மீது அனுதாபம் செலுத்தி, அவர்கள் வாழ வழி செய்வதற்கு ஏற்பாடு செய்யும்படி விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்

வால்பாறைத் தொகுதியிலே, குள்ளேக்கவுண்டனூரில் புறம்போக்கு இடமாகக் கிடந்த மேடு பள்ளங்களை மாற்றி வேலன் என்ற அரிசன் விவசாயம் செய்ததை அவ்வூரில் உள்ள மேல்ஜாதிக்காரர் பிடுங்கிக்கொண்டு, அந்த புறம்போக்கு நிலத்தில் தென்னை நாற்றுகளை நட்டுவிட்டார்.



1981 மே 8] [திரு என். ஏ. பூங்காவனம்]

ஆகவே இந்த கிராமத்தில் நீண்டகாலமாக உள்ள, வேலை செய்யும் சாதாரண விவசாயி, அதிலேயும் அரிசன விவசாயி என்று சொன்னால் அவனைப்பற்றி அவைமுழுவதும் பேசுகிறோம். பேசிப் பேசியே அவர்களுக்கு அனுதாபமும், ஆதரவும் சொல்கிறோமே தவிர நடைமுறையிலே சாத்தியமான உதவிகள் கிடைக்கக் கூடியகாரியங்கள் நடைபெறுகிறதா என்று சொன்னால் இல்லை என்பதற்கு இந்த நிலத்தைப் பிடுங்கி கொண்ட ஒரு நிகழ்ச்சி நம்முடைய அரசாங்கத்தின் கவனத்திற்கு பணிவோடு கொண்டு வர விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் பல்வேறு வகையாக மாநிலம் முழுவதிலும் நடந்து கொண்டிருக்கின்றன, அந்த நிலையிலே மாற்றம் கொண்டு வருவதற்கு ஆட்சியும், அமைச்சர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர்கள் தொகுதிக்கு வருகிறபோது தமிழகம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அரசு விழாக்கள் நடக்கும் பொழுது எந்தக் கட்சியைய சார்ந்த உறுப்பினராக இருந்தாலும் அந்த தொகுதியிலே நடக்கிற நிகழ்ச்சிக்கு அவரையும் அழைத்து பக்கத்திலே வைத்துக்கொண்டு நிகழ்ச்சியை நடத்துவதுதான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு மிகப் பாதுகாப்பாக இருக்கும், பயமுறுத்துவதாக தயவுசெய்து நினைக்க வேண்டாம். அது பாதுகாப்பாக மட்டுமல்லாமல், கௌரவமாகவும் இருக்கும். மக்கள் மத்தியிலே நல்ல மதிப்பாகவும் இருக்கும். இணைந்து செயல்படுகிறார்கள், நமக்கு செய்வார்கள் என்ற உணர்வு வரும் என்ற காரணத்தால் தனியாக போவது நல்லதல்ல; கட்சிக் கூட்டங்களுக்கு நீங்கள் தனியாகச் செல்லுங்கள், நான் ஆட்சேபிக்கவில்லை- பொது நிகழ்ச்சி என்று சொல்கிறபோது தொகுதி உறுப்பினருடன் சேர்ந்துதான் செல்ல வேண்டும். அப்படிச்செல்வதுதான் ஜனநாயக மரபிற்கு ஒத்ததாக இருக்கும். அமைச்சரவர்கள் மூன்று காரியங்கள் அவசியம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (1) தொகுதிக்கு போகிறபோது சட்ட மன்ற உறுப்பினரை எந்தக் கட்சி உறுப்பினராக இருந்தாலும் அவரையும் அழைத்துச் சொல்ல வேண்டும்; (2) எழுதுகிற கடிதங்களுக்கு உடன் பதில் கிடைக்க வேண்டும்; (3) காலம் கடந்து ஆங்கிலத்திலேயோ வேறு மொழியிலோ நீங்கள் பதில் அனுப்பினால் உறுப்பினர்கள் புரிந்து கொள்ள முடியாமல் மேல் நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது. அதை தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். துணைத் தலைவர் அவர்களை மேலும் தொல்லைபடுத்தாமல், இந்த அளவிற்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற மாவட்ட நிர்வாகம், ஆட்சித் தலைவர் தலைமை இடத்து நிர்வாகம், ஆகிய மானியக்கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்தைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய கருத்தைக் சொல்ல விழைகிறேன்.

மாவட்ட நிர்வாகத்தினுடைய அடிப்படை ஊழியர்களாக கிராமப்புறத்திலே பணி புரிந்து கொண்டிருந்தவர்கள் கிராம அதிகாரிகள் கிராமப்புற நிர்வாகத்திலே ஒரு சீர்திருத்தத்தை கொண்டுவரவேண்டுமென்றால், கிராமப்புறத்து ஜீவகீதமே கிராமப்புற நிர்வாகத்தை சீரமைப்பதுதான் என்கிற நேருஜியின் வாக்குக்கு ஒப்பவும். இப்படிப்பட்ட நிர்வாக நடைமுறைகளை மாற்ற வேண்டுமென்ற பல்வேறு கட்டங்களில் குழுக்கள் சொன்ன பரிந்துரைகளை ஏற்று அந்த கிராம அதிகாரிகளுடைய பதவி ஒழிக்கப்பட்டிருக்கிறது. ஒழிக்கப்பட்டிருக்கிற அதே சமயத்தில், ஒழிக்கப்பட்டும்கூட இந்த அடிப்படை ஊழியர்கள் என்று சொல்லப்படுகிற கிராம அதிகாரிகள் இன்னும் இந்த மாநில அரசுக்கும் சவாலாக உச்சநீதி மன்றத்திலே வழக்கு தொடுத்திருக்கிறார்கள். வழக்கிலே கூட புதிதாக நியமிக்கப்படுகிற பணிகள் சம்பந்தமாக பணிகளை வேண்டுமானால் மேற்கொள்ளலாம், ஆனால் நியமனம் செய்யக் கூடாது என்ற தடையுத்தரவை உச்ச நீதி மன்றம் விதித்திருக்கிறது. இதனால் இந்த அரசு இன்றைக்கு கிட்டத்தட்ட 45 லட்சம் ரூபாய் வீணாக செலவழித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த அரசுக்கு எதிராக கிராம அதிகாரிகள் கொடுத்திருக்கிற அந்த வழக்குகளை உச்சநீதி மன்றத்தில் துரிதப்படுத்தி, முடிக்கின்ற பணிகளை அரசு மேற்கொள்ள சிறப்பான கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகம் பற்றி பேசுகின்றபோது மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏதோ அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் சர்க்கார் மதுவிலக்கை தளர்த்துவதற்கு வழி வகை செய்து விட்டார்கள் என்பதைப் போல குற்றச்சாட்டினை மாண்புமிகு உறுப்பினர் தங்கவேல் ர. ஜா அவர்கள் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) வேண்டாம், 'ஐ வில் எக்ஸ்பிளெய்ன்'. நான் மெத்தப் பணிவுடன் அவர் இங்கே இல்லையென்றாலும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்கை தளர்த்துவதற்கு வழி காட்டியது, விழியசைத்து அந்த போக்கை உருவாக்கியதே காங்கிரஸ் இயக்கம்தான். 1959 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பாராளுமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்திய துணைக் கண்டத்திலே மதுவிலக்கை கடுமையாக அமுல் படுத்த வேண்டுமென்று. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே உங்கள் மூலமாக தெரிவிக்க விரும்புகிறேன், அப்படிப்பட்ட தீர்மானத்தை பாராளுமன்றத்தில் ஆய்வு செய்கிறபோது ஆந்திரத்திலே 11 மாவட்டங்களில் மதுவிலக்கு அமுலில் இருந்தது, மைசூரில் 7 மாநிலங்களில் அமுலில் இருந்தது; மகாராஷ்டிரத்தில் முழுமையாக மதுவிலக்கு அமுலில் இருந்தது: மதுவிலக்கை அமுல் படுத்தவேண்டுமென்று 1959–ம் ஆண்டிலே தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.





[நண்பகல் 12–00]

அப்படி நிறைவேற்றிய சமயத்திலே கிட்டத்தட்ட பெரும்பான்மையான மாநிலங்கள் பாதிக்கு மேற்பட்ட மாவட்டங்களில் மதுவிலக்கு அமலில் இருந்தது. அந்தத் தீர்மானத்தை இந்திய துணைக்கண்டத்தினுடைய உயர்ந்த அமைப்பான பாராளுமன்றத்தின் அத்தாணி மண்டபத்திலே நிறைவேற்றிவிட்டு நீங்களே அந்தத் தீர்மானத்திற்குப் பிறகு அந்த மாவட்டங்களிலே மதுவிலக்கு தளர்த்தப்படுகிறது என்று சொன்னால், ரத்து செய்யப்படுகிறது என்று சொன்னால் வழிகாட்டியவர்கள் யார்? விழி அசைத்தவர்கள் யார் ?

திரு. எல். இளையபெருமாள் : அந்த தீர்மானம் போட்டது உண்மை. அந்த மாநிலங்களில் தளர்த்தப்பட்டது உண்மை. எனக்கு ஆட்சேபணையில்லை. ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன். இது மாநில சப்ஜெக்ட். மாநிலத்தின் சப்ஜெக்டை மாநிலம் தான் செய்யவேண்டுமென்று அரசியல் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆட்சியின்போது கொண்டுவரப்பட்ட மதுவிலக்கு கடுமையாக அமல்நடத்தப்பட ஆவன செய்யப்பட்டது. ஆனால் தளர்த்தியது உங்களோடு தி.மு.க. என்று சேர்ந்தவர்களும் இன்றைக்கு உள்ள அண்ணா தி.மு.க.வாகிய நீங்களும் இந்த இரண்டு பேர்களும் சேர்ந்து தான் தளர்த்தியிருக்கிறீர்கள். அந்தப் பாவ காரியத்தை காங்கிரஸ் அரசு செய்யவில்லை. அகில இந்திய ரீதியிலே செய்யப்படவில்லை. இங்கே மாநிலத்திலே செய்யப்பட வேண்டிய கடமையை தி.மு.க. தான் முன்னே தளர்த்தியது, அண்ணா தி.மு,க. தான் பின்னே தளர்த்தியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : நாங்கள் 17 வருஷம் இங்கே இருக்கும்பொழுது எவ்வளவோ பிரமாதமாக இந்த புரகிபிஷனை அமல் நடத்திக்கொண்டு வந்தோம், நியர் சக்சஸ் என்ற முறையிலே. ஆனால் நீங்கள் வந்திருக்கும்போது அவசியம் நீங்கள் டோட்டல் சக்சஸ் என்று கொண்டுவரவில்லை. If only the Government wants it to do effeciviely, they would have done it. Why they have left it? Now it has become a laughing stock for everybody to say that there is no prohibition at all in Tamil Nadu.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்குப் பிரச்சினை டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ், வழிகாட்டும் நெறியிலே இருக்கிறது.

திரு ப. நெடுமாறன் : துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் கொள்கையில் அழுத்தமான பற்றுக் கொண்டவன் நான் என்பது இந்த அவைக்குத் தெரியும். இந்தப் பிரச்சினையில் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த அந்தக் கட்சியின் தலைவரும் மாண்புமிகு உறுப்பினர் திரு இளையபெருமாள் அவர்களும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு இளையபெருமாள் அவர்கள் திரு பாலசுப்பிரமணியன் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்கிறபோது சொன்னார்கள். மது என்பது மாநிலங்களின் சப்ஜெக்ட் ஆகவே மத்திய அரசு தலையிட

முடியாது என்று சொன்னார்கள், பாராட்டுகிறேன். அதிலே நீங்கள் உறுதியாக இருக்கவேண்டும். மது மாநிலங்களின் சப்ஜெக்ட் என்றால் மது சம்பந்தமாக எரிசாராய ஊழலில் மத்திய சர்க்கார் விசாரணை கமிஷன் போடுவது எந்த வகையில் நியாயம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் விளக்குவாரா என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் தலைவர் ஒன்றைச் சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது மதுவிலக்கு இருந்தது என்று இங்கே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியிருக்கிறபோது மதுவிலக்கு ரத்து செய்யப்படவில்லை. அவர்கள் அந்தக்காலத்திலே பணக்காரர்களுக்கு பீர், விஸ்கி, பிராந்தி போன்றவற்றை குடிக்க அனுமதி கொடுத்தார்கள். இங்கே ஏழைகள் குடிக்க 2 ரூபாய் என்ற அளவில் பர்மிட் கொடுக்கப்படுகிறது. அவர்கள் பணக்காரர்களின் பல் இளிப்பில் பகவானைக் கண்டிருக்கிறார்கள், நாங்கள் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டு கொண்டிருக்கிறோம். நாங்கள் மதுவிலக்கை ரத்து செய்யவில்லை, எல்லோரும் குடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வார்னிஷ் ஷாப் தீமையாக இல்லாமல் இருப்பதற்காக இது ஒரு வகை செய்கிறது.

திரு. எல். இளையபெருமாள்: அப்படிக் கொடுக்கப்பட்டது கூட மருத்துவத்திற்காகவும் டாக்டர்கள் நோயாளி தன்மை இருப்பதாக சொன்னதாலும் கொடுக்கப்பட்டதே தவிர இது மாதிரி அல்ல; முடியாத நிலையிலே தள்ளிவிட்டோம் என்று சொன்னால் அரசாங்கத்திற்கு எந்தக் கேவலமும் வந்துவிடாது. முடியவில்லை, ஆகவே விட்டுவிட்டோம் என்று சொன்னால் யார் மீதும் குற்றம் இல்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் திரு இளையபெருமாள் அவர்கள் உணர்ச்சிப்பெருக்கோடு கொஞ்சம் அதிலே அதிக நம்பிக்கை வைத்திருக்கிற பாங்கோடும் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். பணக்காரர்கள் பெர்மிட் வாங்கிக் குடிப்பதால் அது மருத்துவர்கள் கொடுத்த உதவி, ஆனால் ஏழைகள் வாங்கிக் குடித்தால் அது துரோகம் என்று சொல்வதோ அல்லது உரிமையல்ல என்று சொல்வதோ நியாயம் அல்ல, இன்னும் ஏதாவது சொன்னால் நான் பதில் சொல்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: திரு இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் அல்ல; வழிகாட்டும் நெறியிலே அது இருக்கிறது. மாநிலத்திற்கு மட்டும் சொந்தமல்ல, அப்படியே வைத்துக்கொண்டாலும் பிரதமர் இந்திரா காந்தி அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள், கன்சாலிடேஷன் ஆப் நேஷனல் வெல்த் என்ற புத்தகத்திலே. மதுவிலக்கை



சட்டம் போட்டுத் தடுப்பது என்பது முடியாத காரியம்; அதைப்பற்றிப் பிரச்சாரம் செய்துதான் மக்களைத் தடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஒரு படி கூடுதலாகப் போய்ச் சொல்ல வேண்டுமென்றால் இந்த மதுவிலக்கைத் தளர்த்துவதற்கு வழி காட்டியவர்களே நீங்கள்தான் என்ற குற்றச்சாட்டை நான் மீண்டும் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. இளையபெருமாள் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தியத் துணைக் கண்ட அளவிலே மதுவிலக்குப் பிரச்னையை எப்படி அமல்படுத்தலாம் என்பதற்கு டேக்சண்ட் கமிட்டி என்ற ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. இந்தக் கமிட்டி 1962 ஆம் ஆண்டு இந்த மாநிலத்திலே சுற்றுப் பயணம் செய்தபொழுது அன்றைய முதலமைச்சர் சொன்னாரா, சொல்லவில்லையா என்பது என்னுடைய பிரச்னை அல்ல என்று சொன்னதாக அந்தக் கமிட்டி ரிப்போர்ட்டிலே கூறப்பட்டிருக்கிறது. இன்று ஒவ்வொரு கிராமத்திலும் பத்து பேர், பதினைந்து பேர் குடிக்கின்றவர்களாக இருக்கிறார்கள், அவர்களுக்குப் பர்மிட் கொடுத்துவிட்டால் கள்ளச்சாராயத்தை இந்த மாநிலத்திலே ஒழித்துவிட முடியும் என்று 1962ஆம் ஆண்டு இக்கருத்தை இந்த மாநிலத்திலே அன்றைக்கு ஆண்டு கொண்டிருந்த முதலமைச்சர் டேக்சன்ட் கமிட்டியினிடத்திலே சொல்லி, அது டேக்சன்ட் கமிட்டியினுடைய ரிப்போர்ட் வால்யூம் நெம்பர் 2–லே இருக்கிறது. அதை வேண்டுமென்றால் நான் பெரியவர் அவர்களுக்குக் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன். இப்பொழுது புரட்சித் தலைவரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தப் பர்மிட் முறையைப்பற்றி எதையெதையோ சொல்லிக்கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன், மதுவிலக்கைத் தளர்த்தியவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது புரட்சித் தலைவரவர்களின் அரசோ அல்ல; அதற்கு வழிகாட்டியவர்கள் யார் என்பதற்காகச் சொல்கிறேன். 1959ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலே தீர்மானத்தைப்போட்டு அமல்படுத்துவோம் அமல்படுத்துவோம் என்று சொல்லி அதற்காக எத்தனையோ பிரச்னைகளுக்குச் செலவு செய்கின்ற மத்திய அரசு மதுவிலக்கை அமல்படுத்துவதிலே அக்கறை காட்டவில்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டேன்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னபிறகு நான் ஒன்றும் சொல்ல வேண்டாமென்றுதான் நினைத்தேன். ஆனால் அருமை சகோதரர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னபிறகு நான் இப்பொழுது சொல்கிறேன். ஒரு நல்ல காரியத்தை ஒரு மாநில சர்க்கார் 17 ஆண்டுகள் கிட்டத்தட்ட நடத்தி, ஒரு தலைமுறைகள், சாராயம் என்றால் என்னவென்றே தெரியாமல் இருந்த ஒரு நிலையை மாற்றிப் பாவகாரியத்தை யார் செய்தாலும் குற்றம் என்பதை மறைத்து விடுவதில் பயன் இல்லை. முதலமைச்சரவர்கள் சொன்னதைப்போல நாம் கடுமையான நடவடிக்கை

எடுத்தும், அது வெற்றிபெறாமலே போய், வீணான கேடு வந்ததால் நான் என்னையே நொந்து இதைத் தளர்த்து விட்டேன்; எடுத்து விட்டேன் என்று சொன்னாலும் கூட நான் ஆட்சேபணை சொல்லவில்லை. ஆனால் காங்கிரஸ்காரர்கள் செய்தார்கள். வட மாநிலத்தில் செய்தார்கள், ஆகவே நாங்கள் செய்வது நியாயம் என்ற நிலையில் சொன்னால் ஒருவர் தவறு செய்தார் என்பதற்காக நாமும் அந்தத் தவற்றைச் செய்வோம் என்றால் அது சரியாக இருக்காது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேல்ராஜ் அவர்கள் பேசுகின்றபொழுது மதுவிலக்கைத் தளர்த்தியது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான், காங்கிரஸ் கட்டிக் காத்து வந்த கொள்கையை இவர்கள் தளர்த்தி விட்டார்கள் என்று சொன்னதால். காங்கிரஸ்காரர்கள்தான் வழிகாட்டினார்கள், விழியசைத்தார்கள் என்கின்ற கருத்துக்காகத்தான் நான் இவ்வளவு ஆதாரங்களைச் சொன்னேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, 1962ஆம் ஆண்டு அன்றைக்கிருந்த முதலமைச்சரவர்கள், கிராமத்திலே பத்து பேர், பதினைந்து பேருக்குப் பர்மிட் கொடுத்து விட்டால் இந்தப் பிரச்னையை ஓரளவு தீர்த்துவிடலாம்; கள்ளச்சாராயத்தை ஒழித்துவிடலாம் என்ற கருத்தைத் தெரிவித்ததாக டேக்சன்ட் கமிட்டி ரிப்போர்டில் சொல்லப்பட்டிருப்பதாக திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னார்கள். அன்றைக்கு பத்துப்பேர் பதினைந்து பேருக்கு பர்மிட் கொடுக்கலாம் என்று தான் கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு நீங்கள் கிட்டத்தட்ட கிராமத்திலுள்ள அத்தனைபேர்களுக்கும் பர்மிட் என்ற பெயரால் வெறும் போலி அல்ல; உண்மையிலேயே நீங்கள் கடையைத் திறப்பதற்காக அந்தப் பெயரை மாற்றிச் செய்திருக்கிறீர்களே தவிர, புரொகிபிஷனை ரிலாக்ஸ் செய்திருக்கிறோம் என்று சொல்கிறீர்களே தவிர, நீங்கள் ஒட்டுமொத்தமாக புரொகிபிஷனை ரத்து செய்திருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தமாகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே டேக்சன்ட் கமிட்டியில் பத்துப் பேருக்குப் பர்மிட் கொடுத்தால் போதும் என்று அன்றைய முதலமைச்சர் சொன்னதாக இல்லை பத்துப்பேர், பதினைந்து பேர்தான் கிராமத்தில் குடிக்கிறார்கள். ஆகவே பர்மிட் முறையை அமல்படுத்தி விட்டால் கள்ளச்சாராயம் ஒழிந்துவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று அப்பொழுது மதுவிலக்கு அமலில் இருந்தது பேரியக்க கட்சி — காங்கிரஸ் கட்சி ஆண்டுகொண்டிருந்த மகாராஷ்டிர மாநிலத்திலே மதுவிலக்கு இருந்தது. அந்த டேக்சன்ட் கமிட்டியினுடைய ஆலோசனையை ஏற்று இன்று புரட்சித் தலைவரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இதே பர்மிட் முறையை மகாராஷ்டிர மாநிலம் அமல்படுத்தியிருக்கிறது என்கின்ற



கருத்தை மட்டும் நான் முன் வைக்க விரும்புகிறேன். ஆகவே, பத்துப்பேர், பதினைந்து பேர்களுக்கு மட்டுமே பர்மிட் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை; குடிப்பவர்கள் பத்துப்பேர், பதினைந்து பேர்தான் இருக்கிறார்கள், ஆகவே, பர்மிட் சிஸ்டத்தை இன்ட்ரொடியூஸ் செய்து விட்டோம் என்றால் கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரவர்கள் சொன்ன பொழுதுகூட வெற்றிகரமாக அமல் நடத்தினோம் என்று சொன்னார்கள். டேக்சன்ட் கமிட்டியிலே காவிரிக் கரையிலே கள்ளச்சாராயம் காய்ச்சப்படுவது பற்றி 27 பக்கங்கள் புகைப்படத்துடன் எழுதப்பட்டிருக்கிறது, 1962–லே. ஆகவே, வெற்றிகரமாக யாராலும் செயல்படுத்த முடியவில்லை இந்தியத் துணைக்கண்டத்திலே என்பதற்கு டேக்சன்ட் கமிட்டி சாட்சியாக இருந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) காவிரிக்கரை கள்ளச்சாராயம் காய்ச்சுகின்ற இடமாக இருக்கிறது என்பதை 1962 ஆம் ஆண்டு சொல்லியிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

[பிற்பகல் 12–10]

அடுத்து மாவட்ட நிர்வாகத்திற்கு நான் போகின்றபொழுது, மாவட்ட நிர்வாகம் சிறப்பாகவும் சீராகவும் இருக்க வேண்டுமென்பதற்கு மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். மாவட்டங்கள் சிறப்பாக அமைய வேண்டுமென்றால், மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்ற கருத்தினை நிர்வாகச் சீர்திருத்தத்திற்கென அமைக்கப்பட்ட வர்கீஸ் கமிட்டி 1973 ஆம் ஆண்டு ஒரு அறிக்கையிலே சமர்ப்பித்திருக்கிறது. நான் மெத்த பணிவுடன் மாண்புமிகு புரட்சித் தலைவருடைய கனிவான பரிசீலனைக்கு வைக்கின்ற பிரச்னை, இந்த மாவட்டங்களைப் பிரிக்கின்ற பிரச்னையில் வர்கீஸ் கமிட்டி மிகத் தெளிவான அட்டவணையைப் போட்டுக் காட்டியிருக்கிறது. எந்தெந்த மாவட்டங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்பதற்கு ஒன்றிரண்டு என்று 8 மாவட்டங்களைக் கோடிட்டுக் காட்டி, அவைகள் பிரிக்கப்பட வேண்டுமென்றபொழுது, 3–வது இடத்திலே மதுரை மாவட்டம் பிரிக்கப்பட்டு, திண்டுக்கல் மாவட்டமாக ஆக்கப்பட வேண்டும். அப்படி ஆக்குகின்றபொழுது திருச்சி மாவட்டத்தினுடைய மேற்குப் பகுதி அங்கே இணைக்கப்பட வேண்டும். இப்படிச் செய்யப்படுகின்ற காரணத்தினால், எல்லா மாவட்டங்களையும் பிரிக்கின்ற நிலை மாறி, குறிப்பிட்ட 5, 6, மாவட்டங்களைப் பிரிக்கின்ற நிலை உருவாகும் என்றும் திண்டுக்கல்லைத் தனி மாவட்டமாகப் பிரிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்றும் வர்கீஸ் கமிட்டி தன்னுடைய சிபாரிசிலே 1973 ஆம் ஆண்டு குறிப்பிட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கருத்தினை மாண்புமிகு புரட்சித் தலைவருடைய கனிவான பரிசீலனைக்கு இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் ஏராளமான பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் குவிக்கப்பட்டிருக்கின்றன என்றாலும் கூட மாவட்ட ஆட்சித்துறைத் தலைவர், வளர்ச்சித் துறை அதிகாரிகளைக் கண்காணிக்கின்றவராகவும், ரெவினியூ அதிகாரிகளைக் கண்காணிக்கின்றவராகவும் மட்டும் இருந்து வருகிறார். இந்த நிலையை மாற்றி, மாவட்டத்திலேயிருக்கிற அனைத்துத் துறை அதிகாரிகள், டெக்னிக்கல் ஸ்டாப் போன்றவர்களாக இருந்தாலும் கூட, டிஸ்டிரிக்ட் மெடிக்கல் ஆபிசராக இருந்தாலும், பொதுப்பணித்துறை அதிகாரியாக இருந்தாலும், போக்குவரத்துத்துறை அதிகாரியாக இருந்தாலும், அவர்களையும் கண்காணிக்கின்ற அந்தப் பணியினை ஒட்டுமொத்தமாக உட்கார்ந்து, அந்த மாவட்டத்திலே என்ன, என்ன காரியங்களை செய்ய வேண்டுமென்று, என்ன காரியங்களைச் செய்ய முடியும் என்று முடிவினை எடுக்கின்ற பொறுப்பினை பரிசீலிப்பதற்காக மாவட்ட அளவிலே அந்த மாவட்ட கலெக்டருக்கு இன்னும் கூடுதலாக அதிகாரம் கொடுத்து, ஓர் கோஆர்டினேஷன் கமிட்டி அமைக்கவேண்டும். ஏனென்றால், வளர்ச்சிப்பணி சம்பந்தமாக ஆட்சித் தலைவரிடம் கேட்டால், விஷயங்களைச் சொல்கிறார், ரெவின்யூ துறையைப் பற்றிச் சொல்கிறார். அதே சமயம் மருத்துவத் துறையைப் பற்றிச் சொல்கிறபொழுது, சம்பந்தப்பட்ட அதிகாரியை பார்ததுத்தான் செய்ய வேண்டுமென்ற நிலையிருக்கிறது. மாநிலத்தினுடைய நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டுமென்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி விவாதிப்பதைப் போல மாவட்டத்தினுடைய முற்போக்குப் பணிகள், வளர்ச்சிப் பணிகள் மாவட்டத்திலே அன்றைக்கன்று எழுகிற பிரச்னைகள், இவைகளைப் பற்றி முடிவு எடுக்கவும், அவைகளைப் பற்றி பரிசீலிப்பதற்கும் மாவட்ட டிஸ்டிரிக்ட் கோஆர்டினேஷன் கமிட்டி ஒன்று அமைத்து, அங்கே அனைத்துத் துறையுடைய அதிகாரிகள், அது போக்குவரத்துத் துறை அதிகாரியாக இருந்தாலும், அது பொதுப்பணித் துறை அதிகாரியாக இருந்தாலும், மருத்துவத் துறை அதிகாரியாக இருந்தாலும் அங்கே வந்து அமர வேண்டுமென்றும், அங்கே பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பதைப் பற்றி விவாதிப்பதுடன் இந்த அரசு சொல்கின்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது, அங்கே களத்திலேயிருக்கிற பணியாளர்களுக்கு—பீல்டு ஆபிசர்களுக்கு, என்ன, என்ன சிக்கல்கள் வருகின்றன, எப்படி, எப்படி நடைமுறைப் படுத்துவதிலே மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்கின்ற ஆலோசனைகளை அந்தக் குழுவிலே எடுக்கலாம். நான் இந்த நேரத்திலே மெத்தப் பணிவுடன் தெரிவித்துக்கொள்வது, பல்வேறு கட்டங்களிலே மாவட்ட அளவில், இந்த ஆட்சியினுடைய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்ற அக்கறையுடன் சில சிறிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்று ஆலோசனைகளைச் சொன்னால்கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்வதை, இங்கே, தலைமைச் செயலகத்திலேயிருக்கிற உயர்ந்த அதிகாரிகளுடன் திரும்பச் சென்று விடுகிறது. அது சரியல்ல. நான் மெத்தப் பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம்,



அப்படிப்பட்ட மாவட்டத்தினுடைய வளர்ச்சியைக் கருத்திலே கொண்டு அமைக்கப்படுகின்ற கோஆர்டினேஷன் கமிட்டியிலே, நிறைவேற்றுவதற்காக சொல்லப்படுகிற ஆலோசனைகள், நிர்வாகத்திலே இவைகளை மாற்றிப் பார்க்கலாம், நடைமுறையிலே சிக்கல் இருக்கிறது, இவைகளுக்குச் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்று கோஆர்டினேஷன் கமிட்டி பரிந்துரை செய்யுமேயானால், நிச்சயமாக அந்தப் பரிந்துரைமீது தலைமைச் செயலகத்திலேயிருக்கிற அதிகாரி முடிவு எடுக்கக் கூடாது, அது சரியானதுதானா, அமுல்படுத்தலாமா என்கின்ற முடிவு எடுக்கின்ற பொறுப்பு அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு இருக்கவேண்டும். மாவட்ட அளவிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களும். மாவட்ட கோர்ஆர்டினேஷன் கமிட்டி தருகின்ற ஆலோசனைகளை சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தலைமைச் செயலாளர் மூலம் பரிந்துறை செய்து அனுப்பவேண்டும். அந்த நடைமுறையை மாற்றிப் பார்க்கலாம், அதிலே திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்று முடிவை எடுப்பது சம்பந்தப்பட்ட அமைச்சராகத்தானிருக்கவேண்டும். ஏனென்றால், எத்தனையோ கஷ்டத்திற்குப் பிறகு, அனுபவரீதியாக இருக்கிற சிக்கலைக் களத்திலே பார்த்து அந்த அதிகாரிகள் சொல்கின்ற ஆலோசனைகளை சம்பந்தமே இல்லாமல், இங்கே இருக்கிற துறை அதிகாரி ஏற்றுக்கொள்ள முடியாது என்று திருப்பி அனுப்பினால், எப்படிபட்ட ஆர்வம் மிக்கவர்களிடமும் ஆர்வம் குறைந்து விடும். அப்படிப்பட்ட முடிவுகளை, அப்படிப்பட்ட ஆலோசனைகளை ஏற்பதா இல்லையா என்பதனைத் தீர்மானிக்கின்ற பொறுப்பு சம்பந்தப்பட்ட துறை அமைச்சரிடம்தான் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட குழுக்கள் மாதம் ஒருமுறை மாவட்டத்திலே செய்யப்பட்டிருக்கிற பணிகளை. செய்யப்பட வேண்டிய பணிகளை, அரசுக்குத் தெரிவிக்கின்ற வகையிலே இருக்கவேண்டும்.

உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்கிறேன், என்னுடைய தொகுதியிலே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் செய்தபொழுது வடமதுரை என்ற நகரிலே தண்ணீர்ப் பஞ்சம் என்பதால் இரண்டு குழாய்கள் போட உத்தரவிட்டு, குழாய்கள் போடப்பட்டன. கிணறு ஒன்று வெட்ட ஆணையிடப்பட்டது. இப்படியிருக்கிற அதே நிலையில், அந்த நகரை ஒட்டிய 1—வது பர்லாங்கில் தேசிய நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ஒரு கிணறு எந்தவிதமான பலனும் இல்லாமல், ஐடிலாக, சும்மாவே கிடந்தது. இப்பொழுது நான் சொன்ன அந்த கோர்ஆர்டினேஷன் கமிட்டி உட்கார்ந்து பேசினால், அந்த தேசிய நெடுஞ்சாலைத் துறை அதிகாரி சொல்லியிருப்பார். தேசிய நெடுஞ்சாலை அதிகாரி எங்கள் துறைக்குச் சொந்தமான ஒரு கிணறு அந்தப் பகுதிக்கு அருகாமையில் இருக்கிறது என்று சொல்லி இருப்பாரேயானால், அந்த கிணறு வெட்டுவதற்கான செலவு தவிர்க்கப்பட்டு இருக்கும். அந்த மக்களின் குடிநீர் பிரச்னையும் உடனடியாகத் தீர்க்கப்பட்டு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, தண்ணீர் குழாய்களைப் பராமரிக்கும் பொறுப்பு நெடுஞ்சாலைத் துறையிடத்தில் இருந்தபோது, அந்த 'ஹேண்ட் பம்பு'களை ரிப்பேர் செய்வதற்காக் ஒரு மெக்கானிக் ஒவ்வொரு ஏரியாவுக்கும் நியமிக்கப்பட்டு வந்தனர். அந்த குழாய்கள் பராமரிக்கும் பொறுப்பை குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாற்றப்பட்டபோது, அந்த மெக்கானிக்குகளையும் கூடவே மாற்றாததால், அந்த மெக்கானிக்குகள் நெடுஞ்சாலைத் துறையிலேயே நின்று விட்டார்கள். அவர்கள் எந்த வேலையும் செய்யாமல் தற்போது சும்மா இருக்கிறார்கள். ஆகவே, இந்த அதிகாரிகளிடையே ஒரு 'கோ-ஆர்டினேஷன்' இருக்குமானால், இப்படிப்பட்ட பல்வேறு செலவுகளைத் தவிர்ப்பதோடு மட்டுமல்லாமல், அரசின் செலவில் சிக்கனமும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு 'கோ-ஆர்டினேடிங் கமிட்டி' அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நிர்வாகத்தில் உள்ள சில நடைமுறைகளை மாற்றவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் கிராம அதிகாரிகள் அடங்கல் போன்ற கணக்கு எழுதி வைக்கின்றனர். அதைப் போலவே பிறப்பு, இறப்பு கணக்கு எழுதி வருகின்றனர். ஒருவருக்கு அடங்கல் நகல் ஒன்று வேண்டும் என்று சொன்னால் அவர் சம்பந்தப்பட்ட தாசில்தாரிடம் மனு கொடுத்து, அந்த தாசில்தார் அந்த கிராம அதிகாரிகளுக்கு சம்மன் அனுப்பி, அவர் அந்த அடங்கல் புத்தகத்தைக்கொண்டு வந்த பின்பு அதில் இருந்து அடங்கல் நகல் எடுத்துத் தரும் முறை தற்போது இருந்து வருகிறது. இதனால் பலநேரங்களில் வீணான காலதாமதம் ஏற்படுகிறது. ஒரு அடங்கல் நகல் பெருவதற்கு ஏழை எளிய மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த அடங்கல் நகல்கள் இரண்டு தயாரிக்கப்பட்டு, ஒன்று கிராம அதிகாரிகளிடத்திலும், மற்றொன்று தாசில்தாரிடத்திலும் வைத்திருப்பது என்கிற முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தால், யார் வேண்டுமானாலும் உடனடியாக அடங்கல் நகல் பெற்றுக்கொள்ளமுடியும். இன்றைக்கு அப்ளிகேஷன் கொடுத்தால் மறுநாள் நகல் பெற்றுக்கொண்டு விடமுடியும். அதுமட்டுமல்ல, இந்த அடங்கல், மற்றும் பிறப்பு இறப்பு பதிவேடுகள் எவிடென்ஸ் ஆக்ட் படி பப்ளிக் டாகுமென்ட்ஸ். யார் வேண்டுமானாலும் அதனுடைய நகல் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே, இந்த முறையைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்றையும் இங்கே தெரிவிக்கவிரும்புகிறேன். இப்படி நகல் கேட்டு வருகிறபோது, அவர்களிடத்தில் நீதிமன்றத்தில் இருந்து இந்த நகல் வேண்டும் என்று சான்றிதழ் பெற்றுவா என்று அலைக்கழிக்கிறார்கள். அல்லது, அந்த வழக்கை நடத்தும் வழக்கறிஞர்களிடத்தில் கடிதம் பெற்றுவா என்று சொல்கிறார்கள். இது ஒரு வீணான வேண்டாத நிலை.



இதையும் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். யார் விண்ணப்பித்தாலும் அவர்களுக்கு அந்த நகல் கிடைக்கின்ற வகையில் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஏராளமான பணிகள் இருக்கின்றன. அவருக்கு சட்ட ஆலோசனை சொல்லும் வகையில் ஒரு சட்ட ஆலோசகர் மாவட்டந்தோறும் நியமிக்கப்படவேண்டும். அவர், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கிரிமினல், சிவில் குறித்த வழக்குகளுக்கு ஆலோசனை சொல்வதற்கும், மற்றும் சில நடைமுறையில் இருக்கும் பிரச்னைகள் குறித்து சட்ட ஆலோசனை அளிக்கவும் முடியும். ஏற்கனவே மாவட்ட அளவில் அரசாங்க வழக்கறிஞர்கள் இருந்தாலும் அவர்கள் தனியாக வெளியே தொழில் நடத்துவதால் அங்கே போய் இவர்கள் காத்துக்கொண்டு இருக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சட்ட ஆலோசகர் ஒருவர் நியமிக்கவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் பணிவாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றியங்களில் உள்ள பி. டி. ஓ. க்களுக்கு ஜீப் வசதி இருக்கிறது. ஆனால் ஒரு 10–15 ஒன்றியங்களை மேற்பார்வை பார்க்கும் டி. டி. ஓ. க்களுக்கு ஜீப் வசதி கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு எல்லாம் ஜீப் வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு முக்கியமான பிரச்னை ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அரசு செய்யும் சாதனைகள், நல்ல காரியங்கள் மக்கள் மத்தியில் சரியான முறையில் விளம்பரப் படுத்தப்படவில்லை. அதைப்போலவே மக்கள் நலன் கருதி, அரசு அளித்து இருக்கும் சலுகைகள், குறிப்பாக ஏழைகளுக்கு குடிசைகளுக்கு விளக்குப்போட்டுத் தரும் திட்டம் – மக்கள் மத்தியில் உண்மையிலேயே சரியான வகையில் விளம்பரப்படுத்தப்படவில்லை, என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். ஆகவே, மக்களுக்கு அரசின் திட்டங்களைத் தெரிவிக்கும், அரசு அளிக்கின்ற சலுகைகளை மக்கள் தெரிந்து கொள்ளவும், மாவட்டந்தோறும் 'டிஸ்டிரிக்ட் க்ரிவன்ஸ்ஆபீசர்' பதவி ஏற்படுத்தி, அவர் மூலம் இவைகள் மக்கள் மத்தியில் பரப்பப்படவேண்டும். அது மட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல்வேறு அலுவல்களில் இருப்பதால், அவர்கள் திங்கட்கிழமை தோறும் 'கிரிவன்ஸ் டே' நடத்தினாலும் அவர்கள் அந்தக் குறைகளை முழுமையாக கேட்டு நிவர்த்தி செய்யமுடியவில்லை. மேலும் மக்களுக்கு அந்தக் குறைகளை யாரிடத்தில் போய் சொல்வது, எப்படி அதற்கு நிவாரணம்பெறுவது என்று தெரியாமல் இருக்கிறார்கள்;

ளாட்சித் துறையில் எடுத்து, பராமரிக்கவேண்டுமென்றால் பி. டி. ஓ. ஆபீசில் ஒரு கோப்பு. ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்டி ஒரு கோப்பு சி.இ. ஆபீசில் ஒரு கோப்பு அவர்கள் அங்கிருந்து தலைமைச் செயலகத்திற்கு எழுதுவார்கள். ஆகவே அது சம்பந்தமாக தலைமைச் செயலகத்தில் ஒரு கோப்பு.

ஆக ஒரு காரியத்திற்காக ஒரு இலாக்காவிலே அதாவது ஊராட்சி ஒன்றியத்திலே வைத்து பராமரிக்கப்படவேண்டிய ஃபைல் அதாவது ஒரு சிறிய காரியத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஃபைல் 5,6 கோப்புகளாக மாநிலத்திலே உலவிக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. அந்த நிலைமையை மாற்றி கோரிக்கை எங்கே கொடுக்கப்படுகின்றதோ அங்கேயுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே தான் அந்தக் கட்டுகளை அனுப்பி அவர் வைத்திருக்கின்ற நிலையைக் கொண்டுவர வேண்டும். என்னென்ன உத்தரவுகள் இடப்படுகின்றதோ அது தொடங்கப்பட்ட இடத்திலே இருந்துதான் வரவேண்டும். அப்போதுதான் ஒரு குறிப்பிட்ட பணியைப் பொறுத்தவரையிலே என்னென்ன செய்திருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். ஆகவே அந்த ஒற்றைக் கோப்பு முறையினை அமல் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தலைமைச் செயலகத்தைப் பொறுத்தவரையிலே பணிகள் தாமதப்படுவதற்குக் காரணம் சில காரியங்களைப் பொறுத்தவரையில் நிதித்துறை, சட்டத்துறை, பொதுத்துறை ஆகிய அனைத்துத் துறைகளுக்கும் சென்றுவிட்டு வந்த பிறகு தான் பணிகளை மேற்கொள்ளவேண்டிய நிலைமை இருக்கின்றது. ஆகவே இந்த நிலையினை மாற்றுகின்ற வகையிலே ஒவ்வொரு துறைக்கும் நிதித்துறையிலே இருந்து ஒருவரையும், சட்டத்துறையிலே இருந்து ஒருவரையும், அட்வைசர்கள் என்ற அளவிலே நியமிக்க வேண்டும. அதாவது இன்டர்னல் அட்வைசர் என்ற அளவிலே அவர்கள் நியமிக்கப்பட வேண்டும். உதாரணமாக போக்குவரத்துத் துறையை எடுத்துக்கொண்டால் அந்த துறையிலே நிதி சம்பந்தப்பட்ட வகையிலே ஆலோசனைகளைச் சொல்வதற்கு நிதித் துறையிலே இருந்து ஒருவரையும் சட்ட சம்பந்தப்பட்ட வகையிலே ஆசோசனைகளைச் சொல்வதற்கு சட்டத்துறையிலேஇருந்துஒருவரையும் நியமிக்கவேண்டும்.இப்படிச் செய்தால் ஒவ்வொரு காரியத்திற்காகவும் ஒவ்வொரு ஃபைலையும் நிதித்துறைக்கும், சட்டத்துறைக்கும் அனுப்பி அங்கே பைல்கள் குவிந்துவிடுவதன் காரணத்தால் உரிய காலத்திலே காரியங்கள் ஆற்ற முடியாத நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே கால தாமதத்தைத் தவிர்க்கின்ற வகையிலே இந்த முறையினை ஏற்படுத்த வேண்டும் என்று நான் வலியுறுத்திக்கேட்டுக் கொண்டு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளின் மீது பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்காக



நான் முதலிலே நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ஆனாலும் சரி, அரசாங்கத்திலே இருக்கின்ற உயர் அதிகாரிகளாக இருந்தாலும் சரி அவர்கள் எல்லாம் நிரந்தர ஆட்சியாளர்கள். அவர்கள் ஒரு அரசாங்கத்தினுடைய முதுகெலும்பு என்று சொன்னாலும் கூட அது மிகப் பொருத்தமாகும். சில அதிகாரிகள் சிறப்பான முறையிலே வேலை செய்கிறார்கள். சில அதிகாரிகளை ஊக்குவிப்பதற்காகவும் சில அதிகாரிகள் திருந்தவேண்டும் என்பதற்காகவும் சில கருத்துகளைக் சொல்ல நான் விரும்புகிறேன். அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையிலே ஆட்சிக்கு வரும் போகும். ஆனால் அதிகாரிகள் நிரந்தர ஆட்சி செலுத்துகின்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் துரிதமாகவும் வேகமாகவும் இன்று செயல்படவில்லை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காவல்துறை மானியக் கோரிக்கையிலே நான் சிலவற்றைக் குறிப்பிட்டுப் பேசியதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று நான் நேற்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் பதில் சொல்லவில்லை. உதாரணமாக காவல் துறையிலே வையர்லெஸ் பிரிவினருக்கு காவலர்கள் என்ற அங்கீகாரம் அளிக்கப்பட்டு இன்றுவரை அவர்களுக்கு காவலர்களுக்குரிய சலுகைகள் எதுவும் வழங்கப்படவில்லை, அதே போன்று காவலர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று 1979-லே ஆணையிடப்பட்டும் இன்றுவரை அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. இதே போன்று பொதுமக்களிடத்திலே இருந்து வருகின்ற குறைகளும், மனுக்களும் ஏராளமாக தேங்கிக் கிடக்கின்றன. ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக லைசன்ஸ் பெறவேண்டும் என்றால் அல்லது அரசிலிருந்து வேறு ஏதேனும் அனுமதியைப் பெறவேண்டும் என்றால் அதற்கு நீண்ட காலதாமதம் ஏற்படுகின்றது. அந்த காரியங்களுக்காக கடன் வாங்கியோ அல்லது எப்படியோ கஷ்டப்பட்டோ பணம் வைத்திருந்தால் கூட அது அதற்கான அனுமதி வருகின்றபோது செலவழிந்துவிடுகிற சூழ்நிலை இருக்கின்றது. அந்த நிலைகள் எல்லாம் மாற அதிகாரிகள் விரைந்து செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பிரிட்டிஷின் அடிமை நுகத்தடியிலிருந்து விடுதலைப் பெற்றிருக்கிறோமே தவிர, அவர்களுடைய சட்டத்திட்டங்களிலிருந்து நாம் இன்னும் விடுதலைப் பெறவில்லை. பிரிட்டிஷ் ரூலிலிருந்து விடுதலை பெற்றோம். பிரிட்டிஷ் ரூல்ஸிலிருந்து விடுபடவில்லை. அதனால்தான் ரெட்டேபிசம் என்று சொல்லப்படும் சிகப்பு நாடாவில் நாம் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் நிலைமை உள்ளது. எனவே பொறுப்பாக வேகமாக செயல்பட வேண்டும் என்ற மனப்போக்கு அரசு அதிகாரிகளுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30]

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை முறையாக பரிசீலிப்பதற்காகவும், அமைச்சர்கள் அவைகளின் மீது உடனடியாக முடிவெடுப்பதற்காகவும், அந்நடவடிக்கைகளைப் பற்றி பொது

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1981 மே 8]

மக்களுக்கு திருப்பிச் சொல்வதற்காகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு ஆலோசனைக் குழுவை, ஒவ்வொரு அமைச்சருக்கும் அமைத்தால் நல்லது என்று கருதுகிறேன். பாராளுமன்றத்தில் கூட அந்த முறை கையாளப்படுவதாகச் சொல்கிறார்கள். மாவட்ட ஆலோசனைக் குழு இருந்தால், அந்தந்த நிர்வாகத்திலே என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு சொல்வதோடு மட்டும் அல்ல, சட்டமன்ற உறுப்பினர்களிடம் பொது மக்கள் கொடுக்கிற மனுக்களின் மீது அமைச்சர்களோ மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது வேறு அதிகாரிகளோ என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்றோ, அல்லது என்ன முடிவு ஏற்பட்டிருக்கிறது என்றோ ஒரு வார காலத்திற்குள் பதிலாக அந்தந்த குழு உறுப்பினர்களிடம் கொடுத்தால், அவர்கள் அதை திருப்பி, யாரிடம் இருந்து மனுவை பெற்றார்களோ அவர்களிடம் கொடுத்து நிலைமையை விளக்கிச் சொல்ல முடியும்.

அப்படிச் சொல்கிறபோது சட்டமன்ற உறுப்பினர்களும் சும்மா இருக்கவில்லை ஏதோ வேலையைச் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள் என்கிற எண்ணம் பொதுமக்களுக்கு வரும். ஆகவே ஆலோசனைக் குழுவை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல பெட்ரோல் விலை மிக அதிகமாக உயர்ந்து கொண்டே போகும் இந்த நிலையில் பொதுமக்களுக்கு அது கிடைப்பது மிக அரிதாக இருக்கும் நிலையில், சில அதிகாரிகள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கார்களை, ஜீப்புகளை எல்லாம் தங்களுடைய குடும்பங்களுக்கு மட்டும் அல்லாமல், சில நண்பர்களுக்குக் கூட கொடுத்து உதவுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். வறட்சி நிலவுகிற இந்த நேரத்தில் பொதுமக்களுடைய பணத்தை இவ்வளவு வீணான வழிகளிலே செலவாகும் விதத்தில் கவனித்து, காரியங்களை செய்ய வேண்டுமா என்பதை அதிகாரிகள் அத்தகைய முறைகேடுகள் நடைபெறாமல் நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பட்டாக்கள் கொடுப்பது சம்பந்தமாக 50, 60 ஆண்டுகள் காலமாக அனுபவித்து வருகிற இடங்களுக்கு பட்டாக்களை கொடுப்பதே இல்லை. மாறாக திடீர் திடீர் என்று புறம்போக்கு நிலங்களில் உருவாகும் குடிசைகளுக்கு பட்டா போட்டு கொடுக்கிற நிலைமைகள் இருந்து வருகின்றன. அப்படி கொடுக்கப்படுகிற பட்டாக்களிலும் ஊழல்கள் இருப்பதாகக் கூறுகிறார்கள். இவைகளையெல்லாம் கருத்திலே கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தாலும் சரி, வேறு பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, இத்தகைய முறைகேடுகள் ஏற்படா வண்ணம் நடந்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்று வேண்டிக்கொள்கிறேன்.



[1981 மே 8] [திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்]

அடுத்து தாலுக்காகளைப் பிரிக்க வேண்டும் என்கிற ஒரு நிலைமை இப்போது இருக்கிறது. ஆனால் அப்படி ஒரு பெரிய தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கிறபோது, அந்தப்பகுதியில் உள்ள மக்கள் அத்தனைபேரும் அதை விரும்புகிறார்களா என்று முதலிலேயே கவனித்துக் கொள்ள வேண்டும். என்னுடைய ஆலங்குளம் தொகுதியில் தென்காசி தாலுக்காவில் இருக்கிற தாலுக்கா அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று ஒரு எண்ணம் இருப்பதால், அங்கே ஒரு போராட்டம் எழக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே அனைத்து மக்களும் விரும்பினால்தான் அந்த தாலுக்காவை இடம் மாற்ற வேண்டுமே தவிர இல்லை என்று சொன்னால் அதை முன்பு இருந்ததைப் போலவே விட்டு விடலாம். நமக்கு முக்கியமான வேலைகள் பல இருக்கின்ற காரணத்தால், மக்கள் விரும்பாத இந்த மாற்றத்திற்கு அதிக அளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதேபோல சட்டமன்றத் துறையைப் பொறுத்தவரையில் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் குறுகிய கால வினாக்களாகவும், வேறு பல வகைகளில் வினாக்களாகவும் பதில் வினவுகிறபோது, அமைச்சர்கள் பதில் சொல்லத் தயாராக இருந்தாலும் கூட அதிகாரிகள் சரியான தகவல்களை அனுப்புவது இல்லை. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். வரதட்சிணை கொடுமையினால் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டு, தற்கொலை செய்து கொண்டவர்கள் எத்தனை பேர்கள் என்ற கேள்வி எழுப்பப்பட்டபோது, அப்படி ஒரு தகவலே அரசுக்கு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால் நாம் பத்திரிகையிலே பார்த்தோம், எத்தனையோ பெண்கள் வரதட்சிணை கொடுமையினால் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொண்டதாயும், அல்லது மாமியார் மற்றவர்கள் போன்றவர்கள் மண்ணெண்ணெய் போன்றவற்றை ஊற்றி கொளுத்திய நிகழ்ச்சிகளையும்—செய்திகளாக பார்த்தோம்.

அதே மாதிரி கத்தி, ஈட்டி, பாலி போன்றவற்றை வைத்திருப்பவர்களுக்கு லைசன்ஸ் முறை வரவேண்டும் என்று பத்திரிக்கையிலே வந்திருப்பதைப்பற்றி, குறுகிய கால வினாவாக போட்டும் இதுவரை எந்தவித பதிலும் வரவில்லை. கிட்டத்தட்ட 200க்கு மேற்பட்ட கேள்விகளை நான் கொடுத்திருக்கிறேன். ஆனால் இன்னும் ஒரு கேள்விக்காவது எந்த பதிலும் வரவில்லை. அந்த அளவிற்கு இந்தத் துறையினர் என்ன செய்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

எனவே மாவட்ட ஆட்சித்தலைவர்களாக இருந்தாலும் சரி அல்லது மற்ற உயர்தர அதிகாரிகளாக இருந்தாலும்சரி அவர்கள் மற்றவர்களுக்கு ஒரு முன் உதாரணமாக விளங்கவேண்டும். ஒவ்வொரு அமைச்சரகத்திலும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு ஏற்படுத்த இந்த அரசு முன்வரவேண்டும்.

அப்படிச் செய்தால் அமைச்சர்களோடு ஏற்படுகிற தொடர்பு களை மக்களுக்கு எடுத்து விளக்கிச் சொல்ல அது உதவிகரமாக இருக்கும். எனவே அப்படிப்பட்ட ஆலோனைக் குழுவை அவசியம் போடவேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மாவட்ட நிர்வாகம்,, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு மாவட்ட நிர்வாகம் பற்றி பல்வேறு நல்ல கருத்துக்களையெல் லாம் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டத்தி லுள்ள அனைத்து நிர்வாகங்களையும் நடத்தி வரும்போது, மாவட்ட ஆட்சித்தலைவரிடம் பல்வேறு குறைகளை வைக்கிற போது பல துறைகளிலிருந்து அவருக்கு சரியான தகவல்கள் கொடுக்காமல் அல்லது அவர்கள் விடுகிற கோரிக்கைகள் அல்லது கட்டளைகளை நிறைவேற்றாத நிலைமையில் பொதுப்பணித் துறை, மருத்துவத்துறை போன்ற துறைகள் இருக்கின்றன என்று எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார் கள். அந்த நிலைமை இன்னும் இருந்துக்கொண்டுதானிருக் கிறது. அங்கே அவர்கள் டெக்னிக்கல் என்ற முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லி நாங்கள் செய்யவேண்டிய தில்லை என்ற நிலையில்தான் அவர்கள் நடந்து கொள்கிறார்கள். எனவே அதை மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதைக் கண்காணிக்கும் பொறுப்பினை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டத்தின் வளர்ச்சியில் அதிகக் கவனத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்துக்கொள்ளவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பல பொறுப்புகள் இருப்பதால் அதைச் செய்யமுடியாத ஒரு நிலை இருக்கிறது. எனவே நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் கேட்டுக்கொள்கிறேன். அண்டை நாட்டில் ஸ்ரீலங்காவில் மாவட்ட அமைச்சர்கள் என்று சொல்லி மாவட்டத் திற்கு அங்கே ஒரு அமைச்சரை நியமித்திருக்கிறார்கள். அந்த மாவட்ட அமைச்சர்கள் அவரவர்கள் மாவட்ட வளர்ச்சி பொறுப்பை கவனித்து அந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறார்கள். அதேபோல் தமிழ் நாட்டிலும் நம் மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்குப் பதிலாக அந்த மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு தலைமை வகிக்குப் அளவில் ஒருவரை நியமித்து அந்தப் பொறுப்புக்களை அவர்களிடம் கொடுத்து அவர் மூலம் அந்த மாவட்டம் வளர்ச்சி பெறுவதற்கான காரியங்களை நிறைவேற்றலாம். அதைச் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல மாவட்ட நிர்வாகம் பொறுத்தவரையில், கிழக்கு தஞ்சை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். ஏழை எளிய மக்கள் அதிகமாக வாழும் மாவட்டமாகும் அது. தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. அந்த மாவட்டத்தின் தலைநகர் மேற்குப்பகுதியில் தஞ்சையில் இருக்கிறது. மாவட்டங்களைப் பிரிக்கிறபோது தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும். தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதால் உடனடியாக அதிகச் செலவுகள் வந்துவிடாது. ஏனென்றால் இப்போது அங்கே காவல் துறையில் இரண்டு மாவட்டங்களாகத்தான் இருக்கிறது. நீதித்துறையில் இரண்டு மாவட்டங்களாகத்தான் இருக்கிறது. கூட்டுறவு மத்திய வங்கிகள் என்று எடுத்துக்கொண்டால் இரண்டு வங்கிகள் இருக்கின்றன. ஆகவே அதை இரண்டாகப் பிரிப்பதா னால் ஒரு மாவட்ட ஆட்சித்தலைவரையும் இன்னும் சில அதிகாரிகளையும் மட்டுந்தான் அங்கே தனியாகப் போடவேண்டி வரும். ஆகவே அதை இரண்டாகப் பிரிப்பதால் உடனடியாக அதிகச் செலவு ஆவதற்குக் காரணமில்லை. ஆகவே தஞ்சையை இரண்டு மாவட்டங்களாகப் பிரித்து நாகபட்டணத்தை புது மாவட்டத்தின் தலைநகராக உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புதிய மாவட்டங்களாகப் பிரித்தால் இன்று புதுக்கோட்டை மாவட்டம் என்று பிரிக்கப்பட்ட பிறகு அந்த மாவட்டம் இன்று நல்ல முறையில் வளர்ச்சி அடைந்திருக் கிறது. அதேபோல் கிழக்குத் தஞ்சை மாவட்டம் என்று பிரித்து அங்குள்ள மக்கள் பலன்பெறும் வகையில் அம்மாவட்ட முன்னேற்றத்திற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

அதற்குப் பின்னரும் மாநில ஆட்சித் தலைவர் பொறுப்பு நமக்குத் தேவையில்லை என்று சொன்னாலும், இன்று இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கின்ற பிரதமர் அவர்கள், இன்று ஆட்சியிலே இருக்கிறவர்கள், இருந்தவர்கள் ரிடையரானவர்களை இந்த ஆட்சிப் பொறுப்பை நடத்துவதற்கு அமர்த்துகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இன்னும் தொடர்ந்து நடந்துக்கொண்டிருக்கிறது. பேர றிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல், இந்த மாநில ஆட்சித் தலைவர் வேண்டாம் என்று சொன்னாலும, மத்திய அரசாங்கத் திற்கு ஏஜெண்டாக இருப்பதற்கு அவர்கள் இங்கே அனுப்பப் பட்டிருக்கிறார்கள். எனவேஅந்தச் செலவை நம்முடைய அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை; மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலே விட்டுவிட வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல், இங்கே புரோடகல்ஸ்ஸை எடுத்துக்கொண்டால், மாநில ஆட்சித் தலைவருக்குப் பின்னாலே, முதலமைச்சர், மற்றும் அமைச்சர்களும் வருகிறார்கள். ஆனால், மாநில அமைச்சர் கள், முதலமைச்சர் உட்பட, வெளியே செல்லுகின்றபோது,

அவர்களுக்குப் பிரயாணப்படி வழங்கப்படுவதைவிட, தலைமைச் செயலாளர், இரண்டாவது காரியதரிசி, மற்றும் உள்ள காரிய தரிசிகள் அதிகமான பிரயாணப்படி பெறுகிறார்கள். அப்படிப் பட்ட நிலையை மாற்றி, அமைச்சர்களுக்கு காரியதரிசிகளைவிட அதிகமான அளவிலே கொடுப்பதற்கு உத்தரவிட வேண்டும். அதன் மூலமாக, நமது அமைச்சர்கள் காரியதரிசிகளைவிட அதிக மான நிலைமையில் இருக்கின்ற நிலையை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சபையில் கலந்துகொள்கிறபோது, படி வழங்கப்படுகிறது. ஆனால், மாநில அமைச்சர்களுக்கு படி வழங்கப்படுவதில்லை. இதனால், சட்டமன்றக் கூட்டங்களில் அவர்கள் அதிகமாகக் கலந்து கொள்வதற்கு விரும்புவதில்லை. எனவே, அப்பேர்பட்ட நிலைமையை மாற்ற, அவர்களுக்கும் படி வழங்க வேண்டும். அப்படிச் செய்தால், இன்னும் அதிகமாக சட்டமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு, ஒத்துழைப்பார் கள் என்று கேட்டுக்கொண்டு, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அமருகிறேன்.

*திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்னும் நிர்வாகக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த மைக்கு எனது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, என் உரையை ஆரம்பிக்கிறேன்.

மாநில ஆட்சித் தலைவர் என்பது ஒரு சம்பிரதாய பூர்வமான ஒரு பொறுப்பாக இருக்கிறது. அதற்கு ஏகப்பட்ட செலவு, தமிழக கஜானாவிலே இருந்து செலவிடப்படுகிறது. அந்தச் செலவைக் குறைப்பதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதாகிலும் மனுக்கள் கொடுத்தால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு அமைச்சர்கள் பதில் அளித்தால் நலமாக இருக்கும். உதாரணத்திற்கு ஒன்றை குறிப்பிட விரும்பு கிறேன். காஞ்சிபுரத்தில் போக்குவரத்துத் துறையைச் சார்ந்த ஒரு அதிகாரி பேருந்துகள்விட சரியாக செயல்படவில்லை என்று நம்முடைய அமைச்சர் இடத்திலே ஒரு மனுவைக் கொடுத்தேன். அந்த மனு மேற்படி அதிகாரிக்கே திருப்பி அனுப்பப்பட்டு' அவர் பரிசீலனையில் இருப்பதாக எனக்கு தகவல் அளிக்கிறார். அந்தத் தகவலைப் பெறும்போது நான் மிகவும் வருத்தப்பட்டேன். தவறு செய்கிற அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டு மென்று கொடுக்கப்பட்ட மனு. அந்த அதிகாரிக்கே திருப்பி அனுப் பப்பட்டு, அந்த அதிகாரியும் அதைப் பரிசீலனை செய்கிறேன் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை எற்பட்டிருக்கிறது. அதை மாற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற கோரிக்கைகள் மீது அமைச்சர்கள் நேரடியாக பதில்களை அளித்து, தாங்கள் என்ன நடவடிக்கை எடுக்கிறோம் என்று அறிவித்தால், அது சட்டமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்டு தங்கள் பணியைச் செம்மையாக



ஆற்றுவதற்கு உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பாராளுமன்றத்திலே இருப்பதைப் போல, ஒவ்வொரு அமைச்சருக்கும் ஆலோசனைக் குழு அமைத்தால், அது சம்பந்தப் பட்ட பிரச்னைகளை சட்ட மன்ற உறுப்பினர்களோடு, அமைச்சர்கள் கலந்து கொண்டு, அவைகள் பற்றி என்ன முடிவெடுத்தால் நலமாக இருக்கும் என்று யோசனை சொல்வ தற்கு வசதியாக இருக்கும். எனவே, இப்படிப்பட்ட ஆலோசனைக் குழுக்களை அமைக்கும்படி எனது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை நான் இந்த நேரத்திலே விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு அமைச்சர்களும், அந்தந்தத் தொகுதிக்கு வரும் போது சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தகவல் கொடுத்து, அந்தந்தத் தொகுதிகளிலே இருக்கின்ற பிரச்னைகளை அவர்களோடு நேரடியாக தெரிந்து கொள்ளுகின்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் நலமாக இருக்கும்

அடுத்து, தலைமைச் செயலகத்திலே கோப்புகள் பாதுகாப் பாக இல்லை என்பதை எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். அந்த கோப்புகள் பாதுகாக்கப் பட நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலும், குறிப்பாக அரசுத் துறையிலே உள்ள செயலாளர்களாக இருப்பவர்கள் பலர் பல மாற்றுப் பெயரில் தங்கள் பெயர்களை மாற்றி வைத்துக் கொண்டு, பத்திரிகைகளிலே அரசியல் ரகசியங்களை, அரசைக் குறை கூறி எழுதி வருகிறார்கள். இதுபோன்ற அலுவலர்கள் மீது நம்முடைய அரசு கடுமையான நடவடிக்கை எடுத்தால் தான், வருங்காலத்திலே அரசின் ரகசியங்கள் வெளியே போகாமல் தடுக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படும். அதுபோன்ற அதிகாரிகள் மீது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடுமை யான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு இலாகாவிற்கும் கொடுக்கப்படுகிற மனுக்கள் எவ்வளவு காலக்கட்டத்திற்குள், அதற்கான பதிலை அனுப்ப வேண்டுமென்ற ஏற்பாட்டை ஒவ்வொரு அமைச்சரும் இதற்கான ஒரு கால கட்டத்தை நிர்ணயம் செய்து அதற்குள் பதில்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைக்க வேண்டுமென்ற நியதியை வகுத்துக் கொள்ள வேண்டு மென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக சட்டப் பேரவைத் துறையிலே எழுதிக் கொடுத்த கேள்விகள், நான் சட்டமன்ற உறுப்பினராக ஆகி ஓராண்டிற்கு பிறகு கூட எழுதிக் கொடுத்த கேள்விகள் அங்கீ கரிக்கப்பட்டதா இல்லையா என்பது தெரியவில்லை. நல்ல முறையிலே சீக்கிரம் பதில் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரசு, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் வேகமாக உத்தரவுகள் அனுப்பினாலும்

சம்பந்தப்பட்ட இலாக்காவில் உள்ள அதிகாரிகள் அதை செயல்படுத்துவதில் மெத்தனமாக இருக்கிறார்கள் என்று அறிகிறேன். உதாரணமாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாய உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு நம்முடைய அண்ணன் மாண்புமிகு முனு ஆதி அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார் அலுவலகத்தில் இவருக்கு உதவி செய்வதற்கு எந்தவிதமான அதிகாரிகளும் முன்வரவில்லை. உத்தரவிடப்பட்டும், அதிகாரிகள் அதை செயல்படுத்துவதில் மெத்தனமாக இருக்கிறார்கள் என்று அறிகிறேன். அந்த நிலையை மாற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாகத்தைப் பற்றி ஒருசில கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். என்னுடைய செங்கல்பட்டு மாவட்டத்தை, காஞ்சிபுரம் மாவட்டமாக, பேரறிஞர் அண்ணா மாவட்டமாகப் பிரிக்க வேண்டுமென்று பல காலமாக என்னுடைய பகுதி மக்கள் வேண்டி வருகிறார்கள். அந்தச் செங்கல்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதிக்குப் பேரறிஞர் அண்ணா மாவட்டம் என்று பெயர் வைத்துக் கொடுக்க நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை எங்கள் தொகுதி மக்கள் சார்பிலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அமைச்சர்களுக்கு இருப்பதைப் போல அட்வைசரி கமிட்டி, ஆலோசனைக் குழு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அமைத்துக் கொடுத்தால் நலமாக இருக்கும். அதிலும் குறிப்பாக தொழிற்சாலைப் பகுதிகளில் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒரு லேபர் ஆபீசர், தொழில் சட்டங்களை அறிந்த ஒருவர் அவருக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டால் அந்தப் பகுதியில் இருக்கிற தொழில் பிரச்சினைகளை ஆட்சித்தலைவர் அவர்கள் அணுகுவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதுகிற கடிதங்களுக்கான பதிலை மாவட்ட ஆட்சித் தலைவரே நேரடியாக எழுதினால் அந்தக் கோப்பினுடைய முடிவு என்னவென்பதை சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு இருக்கும். தற்போதுள்ள சூழ்நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் அளிக்கப்படுகிற மனுக்கள் சாதாரணமாக ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் வருகின்றன. அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்ன செய்கிறார் என்பது யாருக்கும் தெரிவதில்லை. அது போன்ற சூழ்நிலை தற்போது இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கிற மனுக்கள் மீதாவது மாவட்ட ஆட்சித் தலைவர், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, அந்த கோரிக்கை என்னவாயிற்று என்பதை நேரடியாகத் தெரிவித்தால் நலமாக இருக்கும். அதிலும் குறிப்பாக அந்த



மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப்பகுதி மக்களுக்கு பட்டா வழங்குதல் பற்றிய பிரச்சினைகள் சம்பந்தமாக மனுக்கள் கொடுக்கிறோம். அந்த மனுக்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது எங்களுக்குத் தெரியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த மனுக்கள் மீது அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள், எவ்வளவு காலத்தில் முடிவு எடுத்து முடிக்க வேண்டுமென்று அரசு ஒரு காலத்தை நிர்ணயம் செய்தால் நலமாக இருக்கும். சாதாரணமாக, பொதுமக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கும், வட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் சென்று வருகிற கால விரயம், அவர்கள் படுகிற கஷ்டங்கள் குறையும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[பிற்பகல் 12-50]

அடுத்தபடியாக, வட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் நிர்வாகத்தில் மெதுவாகச் சென்று கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. இந்த நிர்வாகம் வேகமாக முடுக்கிவிடப்படக் கூடிய முறையிலே நம்முடைய அரசு வட்ட ஆட்சித் தலைவர் மீது ஒழுங்கான முறையிலே கண்காணிப்புச் செய்து அந்தக் குறைகளைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போதுள்ள நடைமுறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் பஞ்சாயத்து நிர்வாகத்தை கவனித்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது அவர்களுக்குக் கீழ டி.டி.ஓ. என்ன நடவடிக்கை எடுத்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதல் பெறாமல் எந்தக் காரியமும் செய்யப்பட முடியவில்லை. ஆகவே ரீஜினல் டெபுடி டைரக்டர் என்ற ஒருவரைப் போட்டு அவர் மூலமாக கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு உத்திரவிடக்கூடிய வழிவகைகளைச் செய்து வேகமாக பணிகளைச் செய்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோட்ட வளர்ச்சித் தலைவர் போன்றவர்களுக்கு ஜீப் வசதிகள், போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படவில்லை. அந்த வசதிகளைச் செய்து தந்தால் உதவியாக இருக்கும். மாவட்ட வளர்ச்சிக் குழு கூடுகிறது. ஆனால் அந்தக் குழுவிலே சம்பந்தப்பட்ட அலுவலர்கள் முறையான பதில்களை அளிப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறது. அந்தச் சூழ்நிலையை மாற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்த அந்த இலாகாவில் உள்ள அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கச் செய்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் என்னதான் செய்தாலும்கூட பொதுவாக விளம்பரம் செய்யவில்லை என்றால் பலன் தராத சூழ்நிலை இருக்கிறது. இந்தியாவிலேயே நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள்தான் சன்னிறைவுத் திட்டத்தைத் தீட்டி அதன் மூலம் கிராம மக்கள் பலன் பெறக்கூடிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களின் பலன்களைப் பற்றி போதுமான அளவுக்கு விளம்பரம் கொடுக்கப்படாத நிலைமை

[திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்] [1981 மே 8

இருக்கிறது. அந்தத் திட்டத்தின் மூலமாக மக்கள் பலன்களைப்
பெறுவது பற்றியும் அந்த இலாகா என்ன நடவடிக்கையை
எடுத்திருக்கிறது என்பதைப்பற்றி மக்கள் தெரிந்து கொள்ளவும்
அந்தத் திட்டத்தினுடைய பலன்களை நல்ல முறையிலே
விளம்பரம் செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய நண்பர் 'ரெட்
டேப்பிசம்' பற்றிச் சொன்னார்கள். பிரிட்டிஷார் நமக்கு
விட்டுச் சென்ற பரம்பரை சொத்து இந்த 'ரெட் டேப்பிசம்'.
இதை மாற்றி சம்பந்தப்பட்ட இலாகாக்கள் விரைவாக
நடவடிக்கை எடுக்கின்ற முறையிலே வாய்ப்பு அளிக்கவேண்டும்.
அதற்கான ஏற்பாடுகளை முதல்வர் அவர்கள் செய்ய வேண்டும்
என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி
வணக்கம்.

*திரு. ப. நெடுமாறன்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர்
அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளிலே பேசுகின்ற
வாய்ப்புக் கொடுத்தமைக்காக நான் உங்களுக்கு நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலே இருக்கக்கூடிய
அத்தனை மாவட்டங்களும் பிரிக்கப்பட வேண்டிய நிலைமை
யிலே இருக்கின்றன. வெள்ளையர் காலத்திலே பிரிக்கப்பட்ட
எல்லைகளைக் கொண்டவையாக இருக்கின்றன. இந்த 33
ஆண்டுக்காலத்திலே மக்கள் தொகை அதிகமாகியிருக்கிறது.
சில மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.
எல்லா மாவட்டங்களும் ஏறத்தாழ இரண்டாகப் பிரிக்கப்பட
வேண்டிய நிலைமை இருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்னாலே
இந்த மாவட்டங்களிலே வாழ்ந்த மக்கள் தொகைக்கும்
இன்றைக்கு வாழ்கிற மக்கள் தொகைக்கும் உள்ள மிகப் பெரிய
வேறுபாட்டினை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த
மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பதற்காக
அரசு குழு அமைத்து அறிக்கையையும் அந்தக் குழு
கொடுத்திருக்கிறது. அரசும் சில நடவடிக்கைகளை எடுத்தி
ருக்கிறது. உதாரணத்திற்கு இராமநாதபுரம் மாவட்டம், கிழக்கு
இராமநாதபுரம் ஆகவும் மேற்கு இராமநாதபுரம் ஆகவும்
பிரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படைக்கு
சில காரியங்களை அரசு ஏற்கெனவே செய்திருக்கிறது.
இப்போதே மாவட்ட போலீஸ் அதிகாரிகள் தனித்தனியாக
நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் இரண்டிற்கும். இதுபோன்ற
நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். மாவட்டங்கள்
இரண்டாகப் பிரிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்க
ளுடைய மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டு
மென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இங்கே
பேசிய திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் கூட அதை வலி
யுறுத்திப் பேசினார்கள்.

திண்டுக்கல்லை ஒரு மாவட்டத் தலைநகராகக் கொண்டு
அதை ஒரு மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை
ரொம்ப நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. அதையும்
இங்க அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டும்.



1981 மே 8] [திரு. ப. நெடுமாறன்]

அதைப்போல, தஞ்சை மாவட்டத்தையும் கிழக்குத் தஞ்சை மாவட்டம், மேற்குத் தஞ்சை மாவட்டம் என்று பிரிக்க வேண்டும்.

அதைப்போலவே வடாற்காடு மாவட்டத்தை வேலூர் மாவட்டமாகவும், திருவண்ணாமலை மாவட்டமாகவும் இரண்டாகப் பிரிக்கலாம்.

தென்னார்க்காடு மாவட்டத்தை கடலூர் மாவட்டம் என்றும், திண்டிவனம் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கலாம்.

எந்த மாவட்டமாக இருந்தாலும் அதில் நான்கு தாலுக்காக்கள், அதிகபட்சம் போனால் ஐந்து தாலுக்காக்களுக்கு மேலே இருக்கக் கூடாது. மாவட்டத்தின் எல்லைகள் அப்படிச் சுருங்கியிருந்தால்தான் அங்கே நிர்வாகம் செம்மையாகவும், திறமையாகவும் நடக்கக்கூடிய வழிவகைகள் ஏற்படும். ஆகவே, சகல மாவட்டங்களின் எல்லைகளையும் பிரித்தமைத்து, நான்கைந்து தாலுக்காக்களுக்கு அதிகமாக இல்லாதபடி மாவட்டங்களை அமைக்க வேண்டுமென்று நம்முடைய அரசுக்கு நான் கோண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூடுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அதிலே அங்கம் வகிக்கிறார்கள். அந்த மாவட்டத்திலுள்ள அதிகாரிகளும் அதற்கு வருகிறார்கள். அந்த மாவட்டத்தின் வளர்ச்சி பற்றிய திட்டங்களெல்லாம் அதிலே விவாதிக்கப்படுகின்றன. மக்கள் பிரதிநிதிகள் என்ன குறைகளை எடுத்துச் சொன்னாலும், அங்கே விவாதித்தாலும் அவற்றை உடனடியாக அமல் நடத்துகின்ற முறையிலே சில தடங்கல்கள் இருக்கின்றன. அதிலே மாவட்ட ஆட்சித் தலைவரினால் மட்டும் எல்லா இலாகாக்களின் அதிகாரிகளையும் ஒருமுகப்படுத்தி இணைக்கின்ற வேலைகளைச் செம்மையாகச் செய்ய முடியவில்லை, அவருக்கு இருக்கக்கூடிய வேலைப்பளுவின் காரணமாக.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவைத் தம்பி அவர்கள் பேசும்பொழுது ஒரு யோசனையைச் சொன்னார்கள். இந்த டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் தலைமை தாங்கவேண்டும் என்று. அது நல்ல யோசனை. அதற்கும் ஒரு படி மேலே போய் நான் இன்னொரு யோசனையையும் வற்புறுத்த விரும்புகிறேன்.

நம்முடைய அமைச்சரவையிலே 18 அமைச்சர்கள் இருக்கிறார்கள். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடக்கும்பொழுது அதிலே ஒரு அமைச்சர் வந்திருந்து அமைச்சரின் முன்னாலே அல்லது தலைமையிலே அந்தக் கூட்டம் நடைபெறுமேயானால் மக்கள் பிரதிநிதிகள் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதைக் கண்காணிப்பதற்கு இயலும். அது மக்களின் பிரச்னைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கும் வழிவகை செய்ததாக இருக்கும்.

அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த அமைச்சர்களே அங்கே தலைமை தாங்க வேண்டுமென்பதில்லை. அதைச் சுற்று முறையிலே கூட வைக்கலாம். ஒரு மாவட்டத்திற்கு ஒரு அமைச்சர் இந்த ஆண்டு வந்தால், அடுத்த ஆண்டு இன்னொரு அமைச்சர் அந்த மாவட்டத்திற்கு வரலாம். ஆக, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்கு அமைச்சர்கள் வந்திருந்து, அவர்கள் முன்னாலே, அவர்கள் தலைமையிலே அந்தக் கூட்டங்கள் நடைபெறுவது மக்கள் பிரச்னைகளை விரைவாகத் தீர்ப்பதற்கு உதவும் என்று நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே மக்கள் பிரதிநிதிகள் சென்று தங்களுடைய தொகுதி மக்களின் குறைகளைச் சொல்கிறார்கள். இது தவிர ஒவ்வொரு தொகுதியிலேயும் மக்கள் குறை கேட்கும் நாள் என்று ஒரு நாளை வைத்து, அதை அந்தத் தொகுதியிலே அறிவித்து, மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றும் இதர மாவட்ட மட்டத்திலே இருக்கின்ற அதிகாரி களும் அந்தத் தொகுதிக்கு வந்து இந்தத் தேதியில் இத்தனை மணிக்கு மக்கள் குறையைக் கேட்பதற்கு அதிகாரிகள் வருகி றார்கள் என்று அறிவித்து, அந்தத் தொகுதி பூராவும் விளம்பரம் செய்து, மக்களைத் திரட்டி அந்த இடத்திலே மக்களின் குறைகளைக் கேட்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு தொகுதியிலும் இப்படிப்பட்ட மக்கள் குறை கேட்கும் நாட்கள் அனுஷ்டிக்கப்படும்பொழுது அந்தத் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினரும் அங்கே இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் மக்களின் குறைகளை உடனடியாக அந்தச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்து அங்கேயே தீர்க்கக்கூடிய பிரச்னைகளுக்கு அங்கேயே தீர்வு காண நடவடிக்கை எடுக்க முடியும்; பின்னால் செய்யக்கூடிய பிரச்னைகளைப் பற்றி பின்னால் முடிவு செய்வதற்கு வழி வகைகள் ஏற்படும். ஆகவே, இந்த யோசனையையும் நம்முடைய அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்பு கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் இயங்கிய நேரத்திலே ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களில் அந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள வழிவகை செய்யப் பட்டிருந்தது.

[பிற்பகல் 1-00]

சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமாந்திரத் தொகுதியிலிருந்து வருபவர்களுக்கு ஊராட்சி ஒன்றிய ஜீப்புகள் ஒவ்வொரு மாதமும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் கிராமப் பகுதிகளுக்குச் சென்று மக்கள் குறைகளைக் கேட்பதற்கான வசதி செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் நகரத் தொகுதியிலிருந்து வந்திருக்கக்



கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த நகராட்சிக் கூட்டங் களிலோ, அல்லது மாநகராட்சிக் கூட்டங்களிலோ கலந்து கொள்ள முடியாத ஒரு நிலைமையிருக்கிறது.

அது மட்டுமல்ல, அந்த நகராட்சி சம்பந்தமான கூட்டங் களிலே அவர்கள் கலந்து கொண்டால்தான் அந்தப்பிரச்னைகளை எடுத்துச் சொல்வதற்கு வழிவகை இருக்கும். ஊராட்சி ஒன்றி யங்களிலே கிராமாந்திர தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும்போது, அதைப்போல் நகரத் தொகுதியிலேயிருந்து வந்திருப்பவர்களுக்கு அந்த உரிமை மறுக்கப்படுவதிலே எந்த நியாயமும் இல்லை. கிராமந்திரத் தொகுதியிலேயிருந்து வருபவர்களுக்கு வசதிகளைச் செய்து தருவதைப் போல், நகரத் தொகுதியிலேயிருந்து வந்திருப்பவர் களுக்கும் அதே வசதி செய்து கொடுக்க நம்முடைய அரசு முன் வரவேண்டுமென்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய மாநில நிர்வாகத்தைப் பற்றியும் சிலவற்றை இந்த அவையின் முன்னாலே வைக்க விரும்புகிறேன். நம்முடைய ஐ. பி. எஸ்., ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் திறமைசாலிகள், ஆற்றல் நிறைந்தவர்கள் என்பதிலே சந்தேகம் இல்லை. அவர்களுடைய அறிவாற்றலுக்கும் அனுபவத்திற்கும் குறிப்பிட்ட எந்தத் துறை களுக்கு, எந்த வேலைகளுக்கு, அவர்களைப் பயன்படுத்த வேண்டுமோ, அந்தக் துறைகளுக்கு, அந்த வேலைகளுக்கு அவர்களைப் பயன்படுத்த வேண்டும். அவர்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட நிர்வாகப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அந்தப் பயிற்சியைப் பெற்று வருபவர்களை, எதெதற்குப் பயன் படுத்த வேண்டுமோ, அதெதற்கு நாம் பயன்படுத்த வேண்டும். ஆனால், இன்றைக்குத் தெரிந்தோ தெரியாமலோ அவர்களுக்குச் சம்பந்தம் இல்லாத துறைகளிலே கூட அவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கிற ஒரு நிலைமை இருக்கிறது. நம்முடைய போக்குவரத்துக் கழகங்களிலே ஐ.பி. எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், தலைவர்களாக நியமிக்கப்படு கிறார்கள். அதைப் போல், ஃபையர் சர்வீஸ், அனிமல் ஹஸ்பென்ட்ரி, டான்சி போன்ற டெக்னிக்கல் நாலெட்ஜ் உள்ளவர்களின் சேவை தேவைப்படும் இடங்களிலே அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்படுகிற ஒரு நிலைமையை நாம் பார்க்கிறோம். விவசாயப் பல்கலைக் கழகத்திற்குத் துணைவேந்தராகக் கூட ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார். டாக்டர் ரங்கசாமி போன்ற புகழ் பெற்ற விவசாய விஞ்ஞானிகள் வகித்த பதவியில், அவர் சென்ற பின்னாலே, இன்றைக்கு ஐ.ஏ எஸ். அதிகாரிகள் உட்கார்ந்து நிர்வாகம் செய்யக்கூடிய நிலைமையிருக்கிறது. அதிலே, இரண்டுவிதமான தவறுகள் ஏற்படுகின்றன. ஒன்று, அந்தத் துறையிலே சம்பந்தப்பட்டவர்கள் டெக்னிக்கலாக அந்தத் துறையில் ஆர்வமும் அனுபவமும் வாய்ந்தவர்கள் புறக்கணிக்கப்படுவது. அவர்களின் அனுபவமும் அறிவாற்றலும் வீணாவது மற்றொன்று. அதே நேரத்திலே, ஐ.ஏ.எஸ். ஆஃபீ சர்களும், ஐ.பி.எஸ். ஆஃபீசர்களும், அதிலே நியமிக்கப்படுவ

தாலே, அவர்கள் செய்ய வேண்டிய அந்த வேலையும் அவர்களுடைய திறமையும் வேறு காரியங்களாலே வீணாக்கப்படுகிற ஒரு நிலைமையிருக்கிறது. அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கவனமாக ஆழ்ந்து பரிசீலனை செய்து, அதிலே என்ன, என்ன மாற்றங்கள் செய்ய வேண்டுமோ அதைச் செய்வதற்கு முன்வர வேண்டுமென்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு இன்னொன்றையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மதுரை மாநகராட்சி, இங்கேயிருக்கிற சென்னை மாநகராட்சிக்கு அடுத்தபடி தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகராட்சியாகும். அதிலே கமிஷனராக நியமிக்கப்படுபவர் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியாகத்தானிருக்க வேண்டுமென்ற நியதி பல காலமாகவே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயிருந்தே வந்து விட்டது. அதிலே என்ன தவறு ஏற்படுகிறதென்றால், ஐ.ஏ.எஸ். ஆபீசர்களிலே யார் ஜூனியரோ அவர்தான் அங்கே கமிஷனராக நியமிக்கப்படுகிறார். அவர் ரெவினியூ நிர்வாகத்திலே பயிற்சி பெற்றவர். அவர் அங்கே நகராட்சி நிர்வாகத்திற்கு வருகின்ற பொழுது, அந்த நிர்வாகத்தைப்பற்றி அவர் முழுமையாக அறிந்து கொள்வதற்கு ஏறத்தாழ ஓராண்டு, 1½ ஆண்டு ஆகி விடுகிறது. ஆனால், அவர் அங்கே இருக்கும்போதே, நாம் அடுத்து எந்த இடத்திற்குப் போகலாம்? மாவட்ட ஆட்சித் தலைவராக எப்பொழுது போவது? அல்லது வேறு இடத்திற்கு எப்போது போவது என்ற நினைப்பிலே பணியாற்ற வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

மதுரை போன்ற பெரிய நகராட்சியிலே, நகராட்சிகளிலே சேவை செய்து, அனுபவம் வாய்ந்த ஏறத்தாழ சீனியர்மோஸ்ட் அதிகாரியாக யார் இருக்கிறாரோ, அவரைக் கொண்டு வந்து ஆணையராக கமிஷனராக நியமித்தால்தான் அவர்களுக்கு நகராட்சி நிர்வாகத்தைப் பற்றிய அனுபவமும் அறிவும் இருக்கிற காரணத்தாலே, மதுரை போன்ற பெரிய நகராட்சிகளைச் செம்மையாக நடத்த முடியும். ஐ. ஏ. எஸ். ஆபீசர்தான் இருக்க வேண்டும் என்பதற்காக, ஜூனியர் ஐ. ஏ. எஸ். ஆபீசரை அந்த இடத்தில் போடுவதால், அவருக்கு அந்த முனிசிபல் நிர்வாகத்தைப் பற்றி அறிந்து கொள்கிற அனுபவம் இல்லாததால் அவர்கள் பதவியேற்ற உடனே அதைப் பற்றி தெரிந்து கொள்ள முடியாமல், அவர்களுக்குக் கீழே வேலை பார்க்கும் அதிகாரிகளையே நம்பி செயல்பட வேண்டிய நிலையில் இருப்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பொது நிர்வாக விஷயம் குறித்து இன்னொன்றையும் நான் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நேருஜி அவர்கள் இந்தியாவின் பிரதம அமைச்சராய்ப் பொறுப்பேற்றுக் கொண்ட உடனேயே ஒரு நல்ல சம்பிரதாயத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்று தன்னுடைய அமைச்சர் அவையில் இருந்த அமைச்சர்களுக்கு உத்தரவிட்டார். அன்றிலிருந்து இன்று வரையில் அந்தச் சம்பிர



தாயம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மக்கள் கோரிக்கையைப் பற்றி ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், ஒரு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் என்று சொன்னால், அல்லது பிரதம அமைச்சருக்குக் கடிதம் எழுதுவார் என்று சொன்னால், அந்தக் கடிதத்திற்கு உரிய பதிலை அந்த உறுப்பினருக்கு அனுப்புகிறபோது அதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சரோ அல்லது பிரதம அமைச்சரோ கையெழுத்துப் போட்டு அனுப்ப வேண்டும். இந்த முறையினை இன்றைக்கும் மத்திய அரசில் பின்பற்றி வருகிறார்கள். ஆனால் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுகிற போது, அதற்குரிய பதில்களை அவர்களுக்குக் கீழே பணியாற்றுகிற அதிகாரிகள் கையெழுத்திட்டு அனுப்புகிற நிலை இருக்கிறது. அதை மாற்றி, மக்கள் பிரதிநிதிகளுக்கு உரிய மதிப்பு கொடுத்து, சம்பந்தப்பட்ட அமைச்சரே அந்தப் பதிலை அனுப்புவாரானால் எங்களுக்கும் அது மகிழ்ச்சியாக இருக்கும், பெருமையாக இருக்கும். மக்கள் மத்தியிலும் அது பெருத்த மரியாதையை ஏற்படுத்தும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய அரசாங்க நிர்வாக அமைப்பிலே தலைமைப் பீடமாக இருப்பது தலைமைச் செயலகம். இந்தத் தலைமைச் செயலகத்திற்கு வருகின்ற கடிதங்கள் ஒவ்வொரு துறைக்கும், தனித்தனியே அனுப்பப்படுகின்றது. அப்படி அனுப்பப்படுகின்ற நேரத்தில், அந்தத் துறையின் கீழ் மாவட்டத்தில் உள்ள அலுவலகத்தில் முறையாக அது பரிசீலிக்கப்பட்டு இங்கே முடிவுக்காக அனுப்பப்படுகின்றது. அதை அந்தத் துறையின் தலைவரும் பரிந்துரைத்துதான் அரசு செயலகத்திற்கு அனுப்புகிறார். அப்படி இருந்தும் மறுபடியும் அந்தத் திட்டத்திற்கான ஆய்வு கீழ் மட்டத்தில் இருந்து—கிளார்க் முதல் செயலாளர் வரை—பரிசீலித்து, பின் அமைச்சரின் பார்வைக்கு, ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிறது. ஒரு துறைத் தலைவர் முடிவு எடுத்து அரசுக்குப் பரிந்துரை செய்து விட்டால் அது முடிந்த முடிவாக இருக்கவேண்டும். அதிலே ஏதேனும் சந்தேகம் கேட்பது, விளக்கங்கள் கேட்பது என்பதற்குக் கீழ் மட்டத்தில் இருந்து பரிசீலிக்க வேண்டியது இல்லை. இதனால் வீணான கால தாமதம் ஏற்படுகிறது. அதனால் மக்களுடைய பிரச்னைகளை உடனுக்குடன் தீர்வு காண முடியாமல் இருக்கிறது. அதனால் 'ரெட் டேப்பிசம்' என்று சொல்வார்களே அதன் காரணமாக பலவிதமான தடங்கல்கள் ஏற்பட்டு, அந்தத் திட்டங்கள் செயல்படுவதில் காலதாமதம் ஆகின்றது. ஆகவே, சில முக்கியமான துறைகளில் உள்ள தலைவர்களுக்கு அடிஷனல் செக்ரடரி என்ற அந்தஸ்து அளிக்க வேண்டும். அவர் அந்தத் திட்டத்தின் தகுதி, தேவையைப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற முறையைக் கொண்டு வந்தால் இந்தக் காலதாமதங்கள் தவிர்க்கப்படுவதோடு, மக்கள் பணம் வீணாக விரயம் ஆவதையும் தடுக்கவும், திட்டங்களையும் விரைவில் செயல்படுத்த முடியும்

என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கு வங்கம், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் பல துறைகளின் தலைவர்கள் அடிஷனல் செக்ரட்ரிகளாக உள்ளார்கள். அந்த முறையைத் தமிழகத்தில் கொண்டுவர முயற்சிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே இலாகாக்கள் அமைச்சர்களுக்குப் பிரிக்கப் பட்டு இருப்பதைப் பற்றி நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சியில் இருக்கக்கூடிய எல்லா அமைச்சர்களுமே திறமைசாலிகள்தான். ஆனால் இன்றைக்கு ஒரு துறை பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, பல அமைச்சர் களிடத்தில் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றால் நிர்வாகத்தில் ஏற்பட்டு இருக்கும் சங்கடங்கள், மக்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதிலே ஏற்படுகின்ற வீணான காலதாமதங்கள் ஆகிய வற்றை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

தொழில் துறை இருக்கிறது என்றால் அது இரண்டாகப் பிரிக்கப்பட்டு, இரண்டு அமைச்சர்கள் கையில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது; அதைப்போல மதுவும் மதுவிலக்கும் மூன்றாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆயத்தீர்வை ஒரு அமைச்சர் கையிலே இருக்கிறது. மது அனுமதிச் சீட்டு வழங்குவது இன்னொரு அமைச்சர் கையிலே இருக்கிறது. மதுவிலக்கை அமல்படுத்துவது வேறொரு அமைச்சர் கையிலே இருக்கிறது. இப்படி மூன்று அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அதிலே கால தாமதம் ஏற்படுகிறது.

அதைப்போல தொழிலாளர் நலத் துறையை எடுத்துக் கொண்டால், தொழிலாளர் நலம் ஒரு அமைச்சரிடம் இருக் கிறது; கொத்தடிமை தொழிலாளர் நலம் இன்னொரு அமைச் சரிடம் இருக்கிறது.

அதைப்போல் இன்றைக்கு பி. டபிள்யூ. டி. பொதுப் பணித் துறையை எடுத்துக் கொண்டால் அது 6 அமைச்சர் களிடம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாசனம் ஒரு அமைச்சரிடம், பொதுப்பணித் துறையினுடைய நிர்வாகம் இன்னொரு அமைச்சரிடம்; குடிநீர் சம்பந்தப்பட்ட பாசனத் திட்டங்கள் இன்னொரு அமைச்சரிடம், வெள்ளத் தடுப்புப் பணி ஒரு அமைச்சரிடம்; நெடுஞ்சாலை பராமரிப்பு இன்னொரு அமைச்சரிடம் என்று இப்படி 6 அமைச்சர்கள் இந்தத் துறையைப் பராமரிக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக் கிறது.



எல்லா அமைச்சர்களும் திறமைசாலிகள்தான். அதிலே நான் ஒன்றும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. இந்த யாராவது ஒருவரிடம் ஒப்படைத்தால் நிர்வாகம் செம்மையாக நடைபெற உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

வறட்சி நிவாரணப் பணி வேலைகள் தமிழகத்தில் வேக மாக முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று வறட்சி நிவாரண வேலைகளை எவ்வளவு விரைவாக செம்மையாகச் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாகவும் செம்மையாகவும் முடிக்க வேண்டுமென்று அதிகாரிகளைக் கூப்பிட்டு ஆணையிடுகிறார்கள், ஆனால் பொதுப் பணித்துறை 6 அமைச்சர்கள் கையில் இருக்கின்ற காரணத்தால் இந்த வறட்சி நிவாரணப் பணிகளில் தேவையற்ற காலதாமதம், தடங்கல் ஏற்படுகிறது. எந்த அமைச்சரிடமிருந்து எந்த உத்தரவு வர வேண்டும் என்பதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. அதனால் பல்வேறு பணிகள், திட்டங்கள் முடங்கிக் கிடக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஒருங்கிணைந்த ஒரு வேலைத் திட்டம் என்பது இதன் மூலம் இல்லாமல் இருக்கிறது. இதன் காரணமாக அதிகாரிகள் மத்தியிலே தடுமாற்றம் ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சரின் முன் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். அதை நானும் வலி யுறுத்துகிறேன். அதிலே முதலமைச்சருக்கு எந்தத் தயக்கமும் தேவையில்லை. அவர்கள் இதிலே உடனடியாகச் செயல்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறேன் நம்முடைய அமைச்சர் களுக்கு நீங்கள் 1000 ரூபாய் ஊதியம் கொடுக்கிறீர்கள். ஒரு நாள் படி 15 ரூபாய் கொடுக்கிறீர்கள்; அதே மாதிரி சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு 750 ரூபாய் சம்பளமும் சட்டமன்றத் திற்கு வருகிற நாளில் 50 ரூபாய் படியும் அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் சுட்டிக்காட்டி யதைப்போல அதிகாரிகளுக்கு இதைவிட அதிகமான படி வழங்கப்படுகிற நிலை இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அமைச்சர்கள் எல்லாம் சாமானியர்களில் இருந்து வந்தவர்கள் என்று சொல்வார்கள். அவர்கள் இன்னும் அப்படித் தான் இருக்கிறார்கள். அவர்களின் நிலைமையை நீங்கள் உயர்த்துவதிலே எந்தவிதமான தயக்கமும் தேவையில்லை. 1000 ரூபாய் ஊதியம் என்பதை மேலும் நீங்கள் உயர்த்திக் கொடுங்கள். அதனால் அதிகமான செலவு ஒன்றும் வந்து விடப் போவதில்லை. அதையும் முதலமைச்சர் எண்ணிப்பார்த்து அவர்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

தாலுகா அலுவலகத்திலிருந்து, கலெக்டர் அலுவலகம் வரை இருக்கக்கூடிய அந்த முறையிலே என்னென்ன மாற்றங்கள் செய்தால் நன்றாக இருக்கும் என்பதை எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் வேடசந்தூர் பாலசுப்பிர மணியன் அவர்கள் தெளிவாக, விளக்கமாகச் சொன்னார்கள். அதுதான் இன்றைக்கு உண்மை நிலை. சின்னச்சின்ன பிரச்சனை களுக்குக்கூட ஏழை எளிய மக்கள் இழுத்தடிக்கப்படுகிற நிலை இருக்கிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும், இது ஏழை எளிய மக்களுடைய அரசு என்ற உணர்வினால் அவர்கள் அரசு அலுவலகங்களுக்கு வந்து வீணான அலைச்சலுக்கு ஆளாகும்போது, அவர்கள் பெரும் ஏமாற்றம் அடைகிறார்கள்.

இந்த ஏமாற்றம் ஏழை எளிய மக்களுக்கு வரக்கூடாது. இப்படிப்பட்ட சின்னச் சின்ன பிரச்சினைகளில் கூட அவர்கள் வீணாக இழுத்தடிக்கப்படக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தியாகிகள் மானியம் என்று வழங்கப்படுகின்றது. தியாகிகளுக்கான மானியம் வழங்கவேண்டும் என்று நம்முடைய அரசு முடிவு செய்து பென்ஷன் கொடுக்கப்படுகிறது. அவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்த வரையிலே அது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு போகின்ற ஒன்றல்ல. தியாகிகளைப் பொறுத்த வரையிலே ஒரு தலைமுறையினர், அதாவது சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்கள் என்ற அளவிலே அவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டுதான் வரும். அந்தத் தியாகிகளுக்கு பென்ஷன் கொடுப்பதைப் பொறுத்தவரையிலே அவர்கள் எவ்வளவு தூரம் வீணான அலைச்சலுக்கும் ஏமாற்றத்திற்கும் ஆளாகிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். சிறையிலே அவர்கள் இருந்த காலத்திலே அவர்களுடன் இருந்த முன்னாள் அமைச்சர்கள் யாராவது சான்றிதழ் கொடுத்தால்தான், அவர்களுடைய சான்றிதழைப் பெற்று வந்தால்தான் மனுச் செய்யவேண்டும் என்று சிறைச்சான்றிதழைக் கொண்டு வாருங்கள் என்றும் சொல்லப்படுகின்றது. சிறைச் சான்றிதழ்கள் எல்லாம் அழிந்துவிட்டன. அவர்களில் எவ்வளவு பேர் அமைச்சர் களாக இருந்தவர்களுடன் சிறையிலே இருந்திருக்க முடியும் எத்தனை பேருக்குத் தெரிந்திருக்க முடியும்? ஆகவே சிலருக்குத் தான் அந்தச் சான்றிதழ் கிடைக்கின்றது, மற்றவர்களுக்குக் கிடைப்பதில்லை. கிடைக்காதவர்கள் இன்னும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். பலர் அந்தப் பென்ஷனைப் பெற முடியாமல் இறந்துகூடப் போய்விடுகிறார்கள். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அதாவது வயது முதிர்ந்த தியாகிகள் யார் யார் என்று பார்த்து தாலுக்காவிற்கு ஒருவர் வீதம் தேர்ந்தெடுத்து அவர்கள் முன்னிலையிலே தியாகிகள் பென்ஷனுக்காக மனுசெய்த மற்றவர்களையும் அழைத்து வைத்துக்கொண்டு இவரை உங்களுக்குத் தெரியுமா, இவர் சுதந் திரத்திற்காகப் பாடுபட்டவர்தானா என்று கேட்க வேண்டும்



அப்போது அங்கே அவர்களால் கொடுக்கப்படுகின்ற அந்தச் சான்றினை வைத்து தீர விசாரித்து உடனடியாக அவர்களுக்குத் தியாகிகள் பென்ஷன் கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், அப்படிச் செய்தாலொழிய அவர்கள் பென்ஷனுக்காக அலைந்து கொண்டிருக்கின்ற நிலைமை மாறாது.

தியாகி ஒருவர் இறந்து விட்டால் அவருடைய துணைவி யாருக்குத் தொடர்ந்து அந்த பென்ஷன் கொடுக்கப்படும் என்று நம்முடைய அரசு அறிவித்திருக்கின்றது. ஆனால் இதிலே அடியைப் பிடி பாரதபட்டா என்று சொல்வதுபோல மீண்டும் அந்த தியாகி சிறையிலே இருந்ததற்கான சான்றிதழ்களை எல்லாம் கொண்டுவந்தால்தான் அவருடைய மனைவிக்கு பென்ஷன் தரப் படும். யாராவது முன்னாள் அமைச்சர்கள் அவர்களுடன் சிறை யிலே இருந்திருந்தால் அவர்களுடைய சான்றிதழைக் கொண்டு வந்தால்தான் பென்ஷன் தரப்படும் என்று சொல்லப்படுகின்றது. அப்படித் தியாகிகளுக்கு கொடுக்கப்பட்ட மாதிரி அதே சான்றி தழ்களைத் திரும்பவும் பெற்றுக் கொண்டுவர முடியாமல் தியாகிகளின் துணைவியார்கள் தெருவிலே அலைகின்ற பரிதாப கரமான நிலைமையினை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது நல்லதல்ல. ஆனால் இன்னார் மனைவிதான் இவர் என்பதற்குச் சான்றிதழ் கேட்டால் அது சரியானது. ஆகவே அந்தச் சான்றிதழை மட்டும் பெற்றுக்கொண்டு அந்தத் தியாகிகளின் துணைவியார்களுக்கு பென்ஷனை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நமக்குச் சுதந்திரம் வந்த ஆகஸ்ட் மாதம் முழுவதும் தியாகிகளும் அவர்களது துணைவியார்களும் அரசுப் போக்கு வரத்துக் கழகப் பேருந்துகளிலே இலவசமாக பயணம் செய்வதற் கான ஒரு உத்தரவை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்க வேண்டும். அவ்வாறு செய்வது அவர்களுக்குச் செய்கின்ற பேருதவியாக இருக்கும். வயதான காலத்திலே அவர்கள் ஏதோ புண்ணியஸ்தலங்களுக்குச் சென்று நிம்மதியாக இருக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும், ஆகவே இதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனதிலே கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தியாகிகளின் குழந்தைகளுக்கு மருத்துவம் மற்றும் இன்ஜினியரிங் போன்ற பல்வேறு படிப்புகளிலே இட ஒதுக்கீடுகள் இருக்கின்றன. ஆனால் அது முறையாக அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அதிலே பல்வேறு தடைகளும் இடையூறுகளும் இருக்கின்றன. அதையும் கவனித்து ஆவன செய்வதோடு கொஞ்சம் கொஞ்சமாக அருகிக்கொண்டிருக்கின்ற அந்தத் தலைமுறையினர் இறுதிக் காலத்திலே நிம்மதியோடு வாழ்வதற்கான வழிவகைகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்யவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பினை நல்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

[பிற்பகல் 1-20]

**திரு. என். வரதராஜன்:** மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம்
என்ற மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன். மாவட்ட நிர்வாகம் என்பதில் பெரிய மாவட்
டங்களாக இருப்பதை நிர்வகிப்பதிலே மாவட்ட ஆட்சித்
தலைவருக்கு மிக சிரமம் இருக்கிறது என்பதை நேரிடையாக
நாம் பார்க்க முடிகிறது. மதுரை மாவட்டம், தஞ்சை மாவட்டம்
முகவை மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் போன்ற பெரிய
மாவட்டங்களில் கிட்டத்தட்ட 50 லட்சம் 47 லட்சம் என்று
ஜனத்தொகை இருக்கிறது என்று சமீப மக்கள் தொகை கணக்
கெடுப்பிலேயிருந்து தெரிகிறது.

ஆகவே, ஏற்கெனவே இந்த மாவட்டங்கள் பிரிக்கப்பட
வேண்டும் என்கிற ஒரு நிலை இருப்பதை மனதிலே கொண்டு
படிப்படியாக அந்த மாவட்டங்களைப் பிரிப்பதற்கான திட்டங்
களை நாம் அமுல்படுத்த வேண்டும். அப்போதுதான் மாவட்ட
நிர்வாகம் சரியாக நடப்பதற்கு அது உறுதுணையாக இருக்கும்
என்பதை இந்த நேரத்திலே வற்புறுத்த விரும்புகிறேன். ஏற்
கெனவே திண்டுக்கல்லை தலைநகராகக் கொண்டு ஒரு திண்டுக்கல்
மாவட்டம் உருவாக்கப்பட வேண்டுமென, ஒரு நீண்ட நாள்
வேண்டுகோள் இருக்கிறது. அதையும் கவனத்தில் கொள்ள
வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக நிர்வாகம் என்று சொல்கிறபோது வருவாய்த்துறை
தான் அப்போதைக்கப்போது சூழ்நிலைக்கேற்றவாறு பெரிய
அளவிற்கு உப்பிக் கொண்டே போகிறது என்பதைக் குறிப்பிட
வேண்டும். அதற்கென்று ஏராளமான பணிகள் இருக்கின்றன.
கடன் நிவாரணம் அதனிடத்திலே இருக்கிறது. குத்தகைப்
பதிவு இருக்கிறது. முதியோர் பென்ஷன் இருக்கிறது, குடும்ப
கார்டு வழங்குவது இருக்கிறது. லைசன்ஸ் வழங்குவது, சிமெண்ட்
பெர்மிட் கொடுப்பது, மற்ற சர்டிபிகேட்டுகள் கொடுப்பது இது
போன்ற பல்வகை வேலைகள் அன்றாடம் வளர்ந்து கொண்டே
வருவதால் அந்த நிர்வாகமும் தினசரி உப்பிப் பெருத்துக்
கொண்டே இருக்கிறது. ஆகவேதான் எதையுமே முழுமையாகக்
கவனிக்கக் கூட முடியாமல் போகக்கூடிய ஒரு ஆபத்தும் இதில்
இருக்கிறது. ஆகவே இதில் நான் வற்புறுத்த விரும்புவதெல்லாம்
சிவில சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்று சொல்லக்கூடிய
நிறுவனத்தின் மூலமாகவே குடும்பக் கார்டுகள் ஒப்படைப்பது,
பண்டங்கள் வினியோகிப்பது போன்ற வேலைகளை முறைப்
படுத்தக் கூடிய வகையிலே அக்கரை செலுத்தக்கூடிய காலத்தில்
நாம் இருக்கிறோம் என்பதுதான்.

முக்கிய பண்டங்களின் விலைகள் எல்லாம் உயர்ந்து
கொண்டே போகிற காரணத்தால் மக்கள் இப்போது இதை
நோக்கி அதிகமாக வருகிறார்கள். குடும்பக் கார்டுகள் கொடுத்து
நீண்ட காலம் ஆகிறது. அதை புதுப்பித்தாக வேண்டிய நிலை
இருக்கிறது. அன்றைக்கு நமது நிதியமைச்சர் அவர்கள் கூட



சொல்கிறபோது, போலி கார்டுகள் அதிகமாக இருப்பதைச்
சொன்னார்கள். நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஒரு
பக்கம் போலி கார்டுகள் இருக்கிறபோதே குடும்பக்
கார்டுகள் கிடைக்காத உண்மையான குடும்பங்களும்
ஏராளமாக இருக்கின்றன. ஆகையினால் இவ்வளவு பெரிய
நிர்வாகத்தை தாசில்தாரிடம் ஒப்படைக்கிறபோது, கடன்
நிவாரண மனுக்கள் லட்சக்கணக்கில் தேங்கிக் கிடக்கின்ற
காட்சியை நாம் பார்க்கிறோம். குத்தகைப் பதிவும் அதைப்
போலவே தேங்க்கிடக்கின்ற நிலையைப் பார்க்கிறோம், ஆகவே
தான், அந்த தாசில்தார்களுக்கு உதவி தாசில்தார்களைக் கூடுதலாக
ஒருபக்கம் நியமனம் செய்கிறபோதே, இந்த சிவில் சப்ளைஸ்
கார்பரேஷனை ஒரு தனி நிர்வாகமாக அமைத்து உருவாக்க
வேண்டும் என்று ஆலோசித்தால் கூட நல்லது என்று கருதுகிறேன்.
அவ்வளவு பெரிய வேலைகள் அந்த நிர்வாகத்திலே தேங்கிக்
கிடக்கின்றன என்பதைக் கவனித்து அதை முறைப்படுத்துவதில்
அக்கறை செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் நாம் அனைவருமே வருத்தப்படக் கூடிய
அளவில் சில நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. உதாரணமாக
தமிழ்நாட்டிலே சிமெண்ட் மூட்டைகள் என்று சொன்னால் அது
தேவைப்படுகிறவர்களுக்கு நியாயமானவிலையில் கிடைப்பதில்லை.
40 ரூபாய் 50 ரூபாய் என்று அதிகமாக கொடுக்கிறபோது கிடைக்
கிறது. இதற்குண்டான காரணங்கள் என்ன என்பதை நாம்
அனைவரும் முழுமையாக அறிவோம். ஆகவே, நிர்வாகத்தை
சரியாகப் பிரித்து நம்முடைய அரசு இடக்கூடிய உத்தரவுகள்
சரியாக அமுல்படுத்தப்படுகிறதா என்று பார்ப்பதற்கே இது
போன்ற பிரிவுகள் தேவைப்படுகின்றன என்பதை நான் இங்கே
வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்ததாக நான் சொல்ல விரும்புவது அமைச்சர்கள் அவர்
களுடைய சுற்றுப் பயணத்திலே மிகச் சரியாக சில முறைகளை
கையாள வேண்டும். அப்போதுதான் மிகப் பெரிய அளவில்
மக்களுக்கு உதவியும் நன்மையும் கிடைக்கும். அவர்களுடைய
சுற்றுப் பயணங்களை பார்க்கிறபோது, அமைச்சர் ஒருவர்
இரவிலே திருநெல்வேலியிலே பொதுக்கூட்டம் போட்டு பேசி
விட்டு, மறுநாள் கோயம்புத்தூரிலே ஒரு நிகழ்ச்சியிலே கலந்து
கொள்வார். ஆகவே அவ்வளவு வேகமாகச் சுற்றுப் பயணம்
செய்வது அவர்களுக்கும் நன்மை இல்லை. எங்களைப்
போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களை அணுகி, எங்கள்
தொகுதி விஷயங்களை சொல்வதற்கும் வாய்ப்பில்லாமல் இருக்
கிறது. ஆகவே அவர்களுடைய சுற்றுப் பயணங்களை முறைப்
படுத்திக் கொள்வது நல்லது என்று கருதுகிறேன். ஒரு ஊருக்கு
சுற்றுப்பயணம் வருகிறபோது அரை மணி அல்லது 1 மணி
நேரம் மக்களிடமிருந்து மனுக்களை பெறுவதற்கென்றே ஒதுக்கி
விட வேண்டும்.

சமீபத்தில் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்
திண்டுக்கல்லுக்கு வந்திருந்தார்கள்; அவர் அப்படி அரை மணி

நேரம் அந்த மனுக்களை வாங்கும் வேலைக்கு ஒதுக்கியபோது பார்த்தேன் 100 பேர்களுக்கு மேல் வந்து மனுக்கள் கொடுத்து அவர்கள் சொல்ல விரும்பியதை சொல்லி விட்டுப் போனார்கள். அப்படி ஒரு நடைமுறை ஒதுக்கீடு அந்தச் சுற்றுப் பயணங் களிலே இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசில் இருக்ககூடிய அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுதுகிற கடிதங்களுக்கு நேரடியாக அவர்களே கையெழுத்து போட்டு பதில் அனுப்புகிறார்கள். நம்முடைய துறையில் நாம் அனுப்புகிற கடிதங்களுக்கு யாராவது ஒரு டெப்டி செகரட்டரி கையெழுத்து இட்டு சட்டமன்ற உறுப்பினர் களுக்கு கடிதங்கள் வந்துகொண்டிருப்பதைப் இன்று பார்க் கிறோம். சில கடிதங்களுக்குப் பதிலே வராத நிலையையும் பார்க்கிறோம். ஆகவே நம்முடைய அமைச்சர்கள் நேரடியாக கையெழுத்து இட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் அனுப்புகிற கடிதங்களுக்காவது பதில் அனுப்பவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள்—சுற்றுப் பயணம் போகிற நேரங்கள் தவிர பாக்கி நேரங்களில்—ஒரு மணி நேரமாவது வெளியே நூற்றுக்கணக்கான பேர்கள் உட்கார்ந்து கொண்டிருப்பதை அறிவேன். ஒதுக்கி அமைச்சர்களைப் பார்ப்பதற்கு வசதி செய்து கொடுத்தால் வருகிறவர்கள் குறிப் பிட்ட வேலைகளை முடித்துக்கொண்டு போக வசதியாக இருக்கும். அப்படிப்பட்டதொரு ஏற்பாட்டை அமைச்சர்கள் செய்து தர வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வரும்போது சில சமயங்களில் சங்கடப்பட வேண்டியிருக்கிறது. அவர்களுக்குக் கூட இது மிகப் பெரியஉதவி செய்யும்.

அடுத்தபடியாக. நம்முடைய நிர்வாகம் பற்றியது. இன்றிருக்கக்கூடிய சங்கடங்கள் எதுவாகயிருந்தாலும், மாவட்ட நிர்வாகம், மாநில நிர்வாகம் இவற்றில் தமிழிலேயே எல்லாவித மான கடித போக்குவரத்துக்களும் வைத்துக் கொள்ளவேண்டும் என்ற ஒரு நிலையை நாம் உருவாக்கவேண்டும். மத்திய, மாநிலத் திற்குள்ள உறவுகள் என்ற அடிப்படையில் ஆங்கிலத்தில் கடிதப் போக்குவரத்து வைத்திருப்பது அல்லது சட்டத்துறையிலுள்ள சங்கடங்களைத் தீர்ப்பதற்கு இப்போது ஆங்கிலம் இருக்கக்கூடிய சில முறைகளை நாம் கைவிட முடியாது என்று சொன்னாலும் கூட சாதாரணமாக ஒரு விவசாயிக்குக் கடிதம் போடுவதில் இன்று பல துறைகளிலிருந்து , ஆங்கிலத்தில்தான் போகக்கூடிய ஒரு நிலை இருப்பதை அடிப்படையில் தவிர்ப்பதற்குள்ள முயற்சியை அரசு எடுக்கவேண்டும். சகலமும் தமிழே என்ற கொள்கையை அமல்படுத்த அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து. மிக மிக முக்கியமாகச் சொல்ல வேண்டிய ஒன்று நிர்வாகத்தில் ஒருவிதமான இணைப்பும் கிடையாது, மதுரை மாநகரில் ஒரு நாள் காலை பார்க்கிறேன், 15 இலட்சம் ரூபாய் செலவு செய்து டவுன் ஹால் ரோடில் அருமையான ரோடு போடுகிறார்கள். மறுநாள் காலை மின்சார இலாகாவிலிருந்து முழுவதையும் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு அவசரமாகச் செய்யக்கூடிய காரியத்தில் சொல்லவில்லை. மின்சாரத்துறை என்று சொல்வதால் மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கோபப்பட வேண்டாம். ஒவ்வொரு துறையிலும் பார்க்கிறோம். குடிநீர் வடிகால் வாரியம் ஒருபுறம் தோண்டும் இன்னொரு பக்கத்தில் மாநகராட்சியை சேர்ந்தவர்கள் ஏதாவது செய்வார்கள். 15 இலட்சம் ரூபாயில் ஒரு ரோடு போடும்போது ஒரு ஆறு மாதத்திற்காவது என்ன வேலைகள் செய்யப் போகி றோம் என்று நிர்வாகத்திற்குள் ஒரு இணைப்பு இருக்க வேண்டாமா? இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து போட்ட ரோட்டை ஒரு பகுதியில் தோண்டி அதை படுகுழியாக்கியிருக்கக் கூடிய காட்சியைப் பார்க்கிறோம். நிர்வாகத்திற்குள் ஒரு இணைப்பு இல்லை. அப்படிப்பட்ட நிலைகள் ஏற்படுகிறபோது ஊழல்களுக்கு இடம் இருக்கிறது. லஞ்சலாவண்யத்திற்கு இடம் இருக்கிறது. பெருத்த சிரமங்களை மக்கள் தாண்ட வேண்டி யிருக்கிறது. ஆகவே இதை மனதில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதே போல் மதுரையில் நாம் உலகத் தமிழ் மாநாடு நடத்தினோம். அவ்வளவு சிறப்பு வாய்ந்த மாநாட்டை நடத்தி பலவிதமான சீர்திருத்தங்களைச் செய்தும், அபிவிருத்திப் பணிகளைச் செய்தும் மதுரை பைப்பாஸ் ரோடில் இருக்கக்கூடிய பெரிய பாலத்தில் இன்று மின்விளக்குகள் போட முடியவில்லை. மாநகராட்சி போடுவதா அல்லது பொதுப் பணித் துறை போடு வதா என்று இவற்றிற்குள் சர்ச்சை. ஆகவே போட முடிய வில்லை. ஆக, நிர்வாகத்திற்குள் ஒரு இணைப்பு ஏற்படுத்தாத தால் நிர்வாகம் சிறப்பாகச் செயல்பட முடியாமல் இருக்கிறது. ஆகவே ஒரு இணைப்பை ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும்? மாவட்டத் தலைநகரில் அல்லது வட்டத் தலைநகரில்தான் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் மாதம் ஒரு தடவை உட்கார்ந்து பேசலாம். சட்டமன்ற உறுப்பினர்கள். மற்றும் மக்கள் பிரதிநிதிகளோடு விவாதிக்கலாம். அவ்வாறு செய்தால் இந்தவேலைகள் சிறப்படைய அது உதவி செய்யும்.

அதேபோல் ஆளும் கட்சித் தரப்பிலிருந்தும் மற்றக் கட்சித் தரப்பிலிருந்தும் வலியுறுத்தப்பட்டது, ஒவ்வொரு அமைச்சர்துறைக்கும் ஆலோசனைக் குழுக்கள் என்று அமைத்தால் இடையில் சட்டமன்றக் கூட்டம் இல்லாத காலத்தில் விவாதிக்கப் பட்டுஆலோசனைகள் பெறுவதற்கும் நீங்கள் என்னென்ன முடிவு களை எடுக்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ளவும் அது உதவி செய்யும். ஆகவே அதை முக்கியமாகக் கடைபிடிக்க வேண்டும். பாராளுமன்றத்தில் அது ஓரளவு சரியாக, சிறப்பாகச் செயல்படுவ

தாக சொல்கிறார்கள். ஆகவே இங்கே நம் மாநிலத்திலும் ஒவ்வொரு அரசுத் துறைக்கும் அல்லது ஒவ்வொரு அமைச்சர் துறைக்கும் ஒரு ஆலோசனைக் குழு அமைக்க, அமல்படுத்த முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-30]

கடைசியாக முதல் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மிக முக்கியமான வேண்டுகோள். அரசு ஊழியர்கள் சம்பந்தமாக அவர்கள் நேற்று பதில் அளிக்கும்போதும் அல்லது நேற்று ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தபோதும் திரும்பத் திரும்ப சில கருத்துக்களை சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்கு இதை விண்ணப்பமாக தெரிவிக்கிறார்கள். அவர்கள் போலீஸாருக்கு அல்லது தீயணைப்புப் படையினருக்குச் சிலவிதமான சலுகைகளை வழங்கினார்கள். அதை, வரவேற்கிறேன்.

அதேபோல் அரசுத்துறையில் இருப்பவர்களுக்கு, கடைநிலை ஊழியர்களுக்கு டாக்டர் சமரசம் அவர்கள் கூட சொன்னார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் இன்று போலிஸ்காரர்களைவிட மிக்க குறைந்த வருவாய் உள்ளவர்கள் என்று நான் கருதுகிறேன்.

அப்பேர்பட்டவர்களுக்குக் கூட மலிவு விலையில் தானியங்களை கொடுப்பது போன்றவைகளைச் செய்கிறபோது, இன்று அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள், மிரட்டுகிறார்கள் என்பதை மட்டும் கவனத்தில் கொள்ளாமல், இன்று இருக்கின்ற நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு, இந்த இரண்டையும் இணைக்கின்ற பாலமாக இந்த அரசு திகழ வேண்டும்: அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். சிலருக்கு என்ன நப்பாசை இருக்கிறது என்பதல்ல பிரச்னை. இன்று அந்தச் சிப்பந்திகள் மத்தியிலே அதிகம் செலவாகிறது, தேவையிருக்கிறது. எனவே, அவர்கள் அகவிலைப்படி வேண்டுமென்று கேட்கிறார்கள், நமக்குச் சங்கடம் இருக்கிறது. ஆகவே அதை இணைக்கக்கூடிய பாலமாக இந்த அரசு திகழ வேண்டுமென்றும், இந்தப் பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

6 அரசினர் தீர்மானம்

விதி 31–ஐ தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

> "ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணிநேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்சென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள பேரவை விதி 31 தளர்த்தப்பட்டு, நாளை, 9-5-1981 அன்று மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் தொடங்கப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: நாளை தேதியிட்டு ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள வினாக்கள் பட்டியல் வேறொரு நாள் எடுத்துக் கொள்ளப்பெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (9-5-1981) காலை 9மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

சட்டப் படிக்கான விதிகளும் ஆணைகளும்.

273, வருவாய்த் துறையில் 7-9-1971-ஆம் தேதியன்று வெளியாகி, 8-9–1971ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில்.—பாகம்–2, பிரிவு–1, பக்கம் 2ல் வெளியான II–1, 3987 (ஆ)/1971-ஆம் எண் அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 20-8-1980-ஆம் தேதியிடப்பெற்ற 1945–ஆம எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1969–ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

274. சென்னை மாநகர், ஜீவா நகரத்திற்கான விரிவான மேம்பாட்டுத் திட்டத்தை வெளியிடுவது குறித்து, வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27.9.1981–ஆம் தேதியிடப் பெற்ற 1264–ஆம் எண் அரசாணயில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1971–ஆம் ஆண்டு நகர–நாட்டுப்புறத் திட்ட அமைப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரரவைமுன வைக்கப் பெற்றது].

275. சென்னை மாநகர், திட்ட அமைப்புப் பகுதி 11.1 கிருஷ்ணாம் பேட்டைப் பகுதிக்கு விரிவான வளர்ச்சித் திட்டத்தை வெளியிடுவது குறித்து, வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1-10-1980-ஆம் தேதியிடப்பெற்ற 1286 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971–ஆம் ஆண்டு நகர–நாட்டுப்புறத்திட்ட அமைப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

276. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1979-80ஆம் ஆண்டிற்கான 6-வது ஆண்டு அறிக்கை (தமிழ், ஆங்கிலம்). 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-அ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

197. கோரிக்கை எண். 11— மாவட்ட நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக்குறிப்பு 1981-82 (தமிழ், ஆங்கிலம்)

இணைப்பு.

[..23..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 956க்கான விடையைக் காண்க.]

(அ) தமிழ்நாட்டில் ஆறுகள் மற்றும் ஓடைகளில் ஓடும் தண்ணீரில் (மழைத் தண்ணீரையும் சேர்த்து) 95 சதவீதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மழைக்கால வெள்ளம் கடலில் கலப்பதைத் தடுத்து, அதனைப் பயன்படுத்த வேண்டும் என்ற பொதுவான நோக்கத்தோடுதான் நடுத்தரப்பாசனத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சில காலங்களில் மட்டுமே, எதிர்பாராத அளவிற்கு மழை பெய்யக்கூடும். அவ்விதம் கிடைக்கும் மழை நீரை, எல்லா ஆறுகளிலும் அணைகளைக் கட்டி, தேக்கி வைப்பது என்பது சாத்தியமானதல்ல. பொருளாதார ரீதியிலும் சாத்தியமல்ல. ஆகவே, அந்தக் குறிப்பிட்ட காலத்தில் மிகுதியான மழை நீர் கடலில் சென்று கலப்பதைத் தவிர்க்க முடியாது.

(ஆ) & (இ) : பொது பணித்துறையில் நீர்பாசன திட்ட ஆய்விற்காக ஒரு தனித் தலைமைப் பொறியாளர் இருக்கிறார். மேலும், இருக்கின்ற நீர்வளங்களை பாசனம், குடிநீர் மற்றும் தொழிற்சாலை உபயோகத்திற்கு பயன்படுத்துவது குறித்து பரிசீலனை செய்து அரசுக்கு பரிந்துரை செய்வதற்காக ''நீர் உபயோகத் திறன் குழு'' (Water Utilisation Committee) ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிறது.

# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

**1981 மே 9, சனிக்கிழமை,**

**சித்திரை 27, துன்மதி திருவள்ளுவர் 2012**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

''இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது''

இனிய சொற்கள் இன்பம் பயத்தலை காண்கின்றவன் அவற்றிற்கு மாறான வன்சொற்களை வழங்குவது என்ன பயன் கருதியோ?

## 1. அறிவிப்புகள்.

**அ. எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (ஆ. இ).**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 2. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

**அ. எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவு தமிழ்நாடு 1981.**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. வரவு-செலவுத் திட்டம் 1981-82—வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்—(தொடர்ச்சி)

குறிப்பு : ஓர் உரையின் முன் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

(ஆ) கோரிக்கை எண். II மாவட்ட நிர்வாகம் (தொடர்ச்சி)

திரு. நா சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இரண்டு மானியக் கோரிக்கைகள் மீது எங்கள் கருத்தைச் சொல்வதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காகத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் மாநில நிர்வாகம் மத்திய அரசாங்க நிர்வாகத்தோடு ஒரு சுமுகமான உறவோடு இருக்க வேண்டும் என்பதுதான் நாங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்த அவையிலே தெரிவித்திருக்கிறோம். நேற்றைக்கு முன்தினம் மேற்கு வங்க முதலமைச்சர் மாண்புமிகு ஜோதி பாசு அவர்கள் தமிழக முதலமைச்சர் அவர்களை சந்தித்து பல்வேறு கருத்துக் களை பேசி விட்டு, கடைசியாக விமானம் ஏறுகிற நேரத்திலே ஒரு சில கருத்துக்களை நிருபர்கள் மத்தியிலே, முதலமைச்சர் அவர்களும், தமிழக முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக் கொண்டிருப்பதாக அவர்கள் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். எங்களை பொருத்த வரை சுமுகமான உறவு என்பது வேறு. அதே நேரத்தில் மத்திய அரசுக்கு எதிரான பெரிய ஒரு தீமை அல்லது மாநில அரசை தன்னுடைய பக்கத்திலே இழுத்து, அதன் மூலமாக மத்திய அரசாங்கத்துக்கு எதிராக ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிற சூழ்நிலையை இன்னொரு மாநில முதலமைச்சர் தமிழ்நாட்டு முதலமைச்சரை சந்தித்து அதற்கான ஏற்பாடுகளை செய்வார்களானால் நான் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழக முதலமைச்சர் அவர்களின் கருத்து என்ன? (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதி பாசு அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை சொல்லிவிட்டு அதைப்பற்றி பேசுவது உதவியாக இருக்கும்.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஒரு மாநில முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் மற்றும் கேரளா மாநிலத்தில் எரிசாராய ஊழல் சம்பந்தமாக, தமிழக முதலமைச்சர் அதை எதிர்க்கிறார். நாங்களும் அதை எதிர்க்கிறோம் என்று சொல்லி, தமிழக முதலமைச்சரும் வெஸ்ட் பெங்கால் முதலமைச்சரும் சந்தித்து.... (குறுக்கீடு)

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, நம்முடைய மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவர் சுந்தரராஜன் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். அவருக்கு நான் ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தி திணிப்பதைப் பற்றி ஆராய்வதற் காக தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாட்டினை





தமிழ்நாட்டில் சென்னையிலே கூட்டினார். அதற்கு இந்திரா காங்கிரஸ் முதலமைச்சர்கள் ஆந்திரா முதலமைச்சர் டாக்டர் சென்னா ரெட்டி அவர்களும், கர்நாடகத்தின் மதிப்பிற்குரிய அர்ஸ் போன்றவர்கள் எல்லாம் வந்தார்கள். இதிலே கட்சி வித்தியாசம் இல்லை. தென் மாநிலங்களுக்கு ஒரு பாதிப்பு வந்தபோது இந்திரா காங்கிரஸ் முதலமைச்சர்கள் உள்பட அந்த மாநாட்டிற்கு வந்தார்கள் எல்லோரும் பேசி ஒரு மனதாகத் தீர்மானத்தை ஜனதா ஆட்சிக்கு அனுப்பி வைத்தார்கள். அதே போல மேற்கு வங்காள முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், இன்னும் சில முதலமைச்சர்களும் சந்தித்துப் பேசுவதிலே எந்த தவறும் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவர் அவர்களே, இந்தித் திணிப்பைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தெளிவான கருத்தைச் சொல்லியிருக்கிறது. அந்த ரூபத்திலேயும் இந்தி திணிக்கப்படக்கூடாது என்பது மட்டுமல்ல, மத்தியிலே பொறுப்பிலே இருக்கிற பிரதம மந்திரி அவர்களும் மற்ற எல்லா அமைச்சர்களும் இந்தியை எந்த ரூபத்திலும் திணிக்க மாட்டோம் என்று பல்வேறு சந்தர்ப்பங்களிலே எடுத்துக் கூறி இருக்கிறார்கள். ஆகவே அது சம்பந்தமாக இங்கே ஒரு மாநாடு கூட்டுவதிலே தவறு இல்லை; கருத்து சொல்வதிலே தவறு இல்லை. ஆனால் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலை வேறு. இன்னொரு மாநில முதலமைச்சர் ஜோதிபாசு இங்கே வந்து தமிழ் நாட்டு முதலமைச்சரை சந்தித்து மத்திய அரசுக்கு எதிரான போராட்டத்திற்கு முயற்சியெடுத்துக் கொண்டு இருக்கிறேன். மற்ற மாநிலங்களின் முதலமைச்சர்களுடைய கருத்தைக் கேட்டு அவர்களையும் எங்களோடு பெரிய போராட்டத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்வதன் மூலமாக தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அரசியல் சட்டத்தில் நம்முடைய ஜனநாயக அமைப்பு 3 வகையான தூண்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒன்று பாராளுமன்றம், இன்னொன்று நீதி மன்றம் மற்றொன்று நிர்வாகம். ஒன்றுக்கொன்று ஊடுருவல் செய்வதோ இன்னொன்றிலே மற்ற பிரிவு தலையிடுவதோ கூடாது. ஆனால் சமீபத்திலே ஆந்திர மாநிலத்திலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பிலே அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சருக்கு அறிவுரை என்றல்ல, உத்திரவு என்ற அடிப்படையிலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு போலீஸ் போர்ஸ் டெப்லாய் செய்ய வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலே நிர்வாகம் ஸ்தம்பிக்கிற நிலை இருக்கின்றது என்று சொன்னால் மிகையாகாது. கிராமங்களில் உள்ள கிராம அதிகாரிகளை நீக்கினார்கள்

அவர்களை நீக்கியதன் விளைவாக என்ன சாதனை புரிந்திருக்கிறீர்கள். ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. ஒரே ஒரு சம்பளம் கொடுத்து ஒருவரை ஒவ்வொரு கிராமத்துலேயும் வைத்திருந்த அந்த இடங்களுக்கு இன்றைக்கு மூன்று சம்பளம் கொடுக்க கூடிய நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. ஒன்று, பதவி யிழந்த கிராம அதிகாரிகள் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்று அவர்களுடைய தீர்ப்பிலே—அந்த தீர்ப்பு வெளிவருகிற வகையிலே அவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும்என்று—கொடுக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலே அவர்களுக்கு சம்பளம் கொடுக்கிறீர்கள். இன்னொன்று, தாலுக்கா அலுவலகம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆகியவற்றில் பணியாற்றி வருகிறவர்கள் அந்த கிராமங்களுக்கு சென்று கிராம அதிகாரிகளுடைய பணியைச் செய்ய வேண்டுமென்று சொல்லி அதற்காக அவர்களுக்கு சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், இது இரண்டாவது சம்பளம். அடுத்து செக்ஷன் ரைட்டர் என்ற பெயரால் ஒருவரைப் போட்டு அவரை வேலையில் அமர்த்தி 150 ரூபாய் கொடுத்து வருகிறீர்கள். ஆகவே ஒரு நபருக்கு 150 ரூபாய் கொடுத்த நிலைமை மாறி, இன்றைக்கு 3 நபர்களைப் போட்டு கிட்டத்தட்ட 600 ரூபாய் வரையில் சம்பளம் கொடுக்கக் கூடிய அவல நிலை இருக்கிறது. நான் இதை வருத்தத்தோடு அல்ல, உங்களுடைய நிர்வாகத் திறமையின்மையைத்தான் எடுத்துக்காட்டுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம அதிகாரிகள் ஏதோ தவறு செய்து விட்டார்கள். அங்கே நடந்த தொழிலாளர் போராட்டத்திலே அங்கே இருக்கின்ற தொழிலாள நலத் துறை அமைச்சரின் மருமகன்—அவர் தொழிலாளர் தலைவராக இருக்கிறார்—ஆகவே அங்கு தீர்ப்பு கொடுக்கப்படுகிறது. தன் மருமகன் தொழிலாளர் தலைவராக இருப்பதால் அவர் அப்படி இருக்கிற வரையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் இலாக்காவை அவர் கவனிக்கக் கூடாது. அந்தப் பொறுப்பிலே இருக்கக்கூடாது என்ற அடிப்படையிலே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் ஒரு முதலமைச்சருக்கு வழங்கப்பட்ட அறிவுரை என்பது மட்டுமல்ல, முதலமைச்சருடைய நிர்வாகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய பிரதிநிதிகளுடைய கருத்துக்கு மாறாக நீதி மன்றங்களின் கருத்துக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலே இன்றைக்கு இருக்கிறது. நீதிமன்றமே அரசாங்கத்தின் நிர்வாகத்திலே மட்டுமல்ல. நீதிமன்றத்தின் நடவடிக்கைகளிலே ஊடுருவல் செய்து வருவதாக இருக்கிறது. ஆகவே தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அது போன்ற சந்தர்ப்பங்கள் வரவில்லை. வராமல் இருப்பதற்கு அமைச்சர்களும் சட்டமன்றமும் நிச்சயமாக அரணாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டினுடைய தலைமைச் செயலகம் நம்முடைய கோட்டைதான். ஆனால் கோட்டையிலே ஆட்சி புரிகிறவர்கள் தமிழ்நாட்டு மக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். தேர்ந்



தெடுக்கப்பட்டவர்கள் வருகிற போது, கோட்டையைச் சுற்றி பார்க்கிறபோது ஏதோ ராணுவ தளத்தைப் போல—ராணுவ இடத்திற்கு உள்ளே நாம இருந்தாலும் கூட—காவலருடைய எண்ணிக்கை காக்கி சட்டையை அணிந்து கொண்டு அதிகமாக நடமாடுவதன் மூலமாக வந்து பார்க்கிற மக்கள் தங்களுடைய பிரதிநிதிகள் என்ன சொல்கிறார்கள், எப்படி செயல்படுகிறார்கள் என்று பார்க்கிற போது அவர்கள் அச்சத்தின் காரணமாக பயப்படுகிற சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. காரணம் காவல் போட்டு இருக்கிறோம் முதலமைச்சருக்கும், மற்ற அமைச்சர்களுக்கும், சட்டமன்றத்திற்கும் காவல் போட்டு இருக்கிறோம் என்று சொல்லி பல்வேறு காவல் துறையின் அதிகாரிகள் இங்கே நடமாடுவதும் மக்களைத் தடுப்பதும் தேவையில்லாத ஒன்று. முதலமைச்சருக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பதிலே எங்களுக்கு வேறுபாடு கிடையாது. முதலமைச்சருக்கு முழுமையான பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

[முற்பகல் 9. 10]

இவர்களெல்லாம் பெருந்தன்மையானவர்கள், தவறே செய்யாதவர்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் ...ன்பு 5 ரூபாய் 10 ரூபாய் இலஞ்சம் வாங்கினார்கள் என்றால் இப்பொழுது அதே 5 ரூபாய் கொடுத்து செய்து கொண்ட வேலைக்கு 500 ரூபாய், 200 ரூபாய், 300 ரூபாய் என்று கொடுத்துச் செய்யக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறது என்று ...ங்கள் சொன்னால் அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள ...ட்டீர்கள். ஆனாலும்கூட எங்களுடைய இந்தக் கருத்தைச் ...சால்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருவருக்கு கான்ராக்ட் சம்பந்தமாக குறிப்பிட்ட கண்மாய், ...றிப்பிட்ட இடம்—ஆயக்கட்டுக்கு இடம் உண்டா என்பதற்கான ...ர்டிபிகேட் வழங்க வேண்டுமென்றால், முன்பெல்லாம் ...கவும் பயந்து கொண்டு செய்தார்கள். ஆனால் ஒரு ...சென்ட் நிலம் கூட இல்லாதவருக்கு 11 ஏக்கர் நிலம் ...ருக்கிறது என்று கிராமத்தில் உள்ள ரெவின்யூ ...ன்ஸ்பெக்டர் சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார். அதை ...திகாரிகள் மறுத்த பிறகும், தாசில்தாருக்கு தசவல் ...னுப்பிய பிறகும் சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை ...டுக்கப்படவில்லை. ஏன் இந்த நிலைமை ஏற்படுகிறது? ...தற்கு என்ன காரணம் என்றால், யார் கவனிக்கப் ...ாகிறார்கள் நாம் தானே அதிகாரி என்ற எண்ணத்தில் ...யல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே முன்பிருந்ததை ... பல மடங்கு நூறு மடங்கு கிராமத்தில் தவறுகள் ...க்கின்றன.

அதுமட்டுமல்ல ஒரு அதிகாரியைப் போட்டு விட்டு 15 இடங்களை பார்க்க வேண்டும் என்று சொன்னதன் விளைவாக கிராமங்களில் இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன; வெட்டப்பட்டு கடத்தப்பட்டு அதனால் பல நபர்கள் பெரிய இலாபத்தை அடைந்திருக்கிறார்கள். அரசாங்கம் உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுத்தாக வேண்டும்; சுப்ரீம் கோர்ட்டிலுள்ள வழக்கை உடனடியாக முடிப்பதற்கு அந்த அரசாங்கம் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமங்களில் ஒரு பழமொழி சொல்வார்கள்; ஹெட்மாஸ்டர் வந்தால் தான் வாத்தியார்கள் வருவார்கள் என்று. ஆனால் முதலமைச்சரவர்கள் அநேகமாக இந்த அவைக்கு வராத சந்தர்ப்பத்தில் அமைச்சர்களும் வராத நிலைமை இருக்கிறது. இங்கே கூட ஒரு நாள் கேள்வி நேரத்தின் பொழுது அமைச்சர்கள் இல்லாத காரணத்தால் அவையை சிறிது நேரம் ஒத்தி வைக்க வேண்டிய நிலைமை கூட ஏற்பட்டது. கேள்வி நேரத்தில் பல சந்தர்ப்பங்களில் அன்றாடம் சில அமைச்சர்களின் கேள்விகள் அவர்கள் வராத காரணத்தால் ஒத்தி வைக்கப்படுகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம். இது சம்பந்தமாக எங்கள் கட்சியைச் சார்ந்த கட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சித்தன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார்கள் அமைச்சர்கள் வராத நிலை அடிக்கடி வருகிறதே என்ற கருத்தை கூறிய நேரத்தில் அதற்கு அமைச்சரவர்கள் பதில் கூறினாலும் அது எங்களுக்குத் திருப்தியை அளிக்கவில்லை. Then first and primary responsibility lies on this Assembly. இந்த அரசாங்கத்தை நல்ல முறையில்நடத்த வேண்டுமென்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கின்ற பிரதிநிதிகள் உள்ள இந்த மன்றத்திற்கு முதன்மையாக உங்கள் பொறுப்பைக் காட்ட வேண்டும். ஆனால் இங்கே அவ்வாறு இல்லாத காரணமாக ரெஸ்பான்சிபிலிட்டியை ஷர்க் பண்ணுகிறார்கள்; பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார்கள் என்று தான் அதற்குப் பொருள். ஆகவே, முதலமைச்சரவர்கள் இந்த அவைக்கு வரவேண்டும்; முதலமைச்சர் வந்து உட்கார்ந்தால் பிறகு எல்லா அமைச்சர்களையும் இங்கே பார்க்க முடிகிறது; முதலமைச்சர் வந்து உட்கார்ந்தால் ஆளுங்கட்சியில் உள்ள எல்லா உறுப்பினர்களும் வருவதைப் பார்க்க முடிகிறது; ஆகவே முதலமைச்சரவர்கள் இங்கே தொடர்ந்து வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன். 1967 ஆம் ஆண்டுக்கு முன்பாக அமைச்சர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் சட்ட மன்றத்திலே இருப்பார்கள் அல்லது அவர்களுடைய அறையிலே இருப்பார்கள் அல்லது வீட்டிலே இருப்பார்கள். ஆனால் சமீப காலங்களில் அமைச்சர்களை எங்கே பார்க்க



வேண்டுமென்றால் தனியாக எங்கேயோ ஒரு அறையிலே. ஏ. சி. ரூமிலே உட்கார்ந்து ஃபைலை பார்க்கப்போகிறோம் என்று சொல்லிவிட்டுப் போகிறார்கள். ஃபைலைப் பார்க்க வேண்டுமென்றால் அதற்குத் தனியாக ஒரு அறை தேவைதானா? நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன், ஏன் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது? தங்களுடைய அறையிலே உட்கார்ந்து ஃபைலைப் பார்க்க முடியாதா? அரசாங்கத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து உங்களுக்காக அறையைத் தனியாக அமைத்துத் தந்திருக்கிறார்கள்; அங்கே உட்கார்ந்து ஃபைலைப் பாருங்களேன் அல்லது வீட்டிலே உட்கார்ந்து பாருங்கள். எதற்காக எங்கேயோ ஒரு ரூமிற்குச் சென்று பார்க்கிறீர்கள்? யாருக்கும் தெரியாத இடத்திலே நாங்கள் சென்று ஃபைலைப் பார்க்கிறோம் என்று சொல்வது விசித்திரமாகவும், வேடிக்கையாகவும் இருக்கிறது. 1967-க்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அமைச்சர்கள் காலை எட்டு மணிக்கு முன்னால் வந்து பார்வையாளர்கள் வருவதற்கு முன்னால் வந்து தங்கள் ஃபைலைப் பார்ப்பார்கள் அல்லது மாலை 5 மணிக்குப் பிறகு உட்கார்ந்து இரவு 8 மணி வரையில் ஃபைலைப் பார்ப்பார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது அவருடைய வீட்டிலேயே கூட ஃபைலைப் பார்ப்பார்கள். அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் அலுவலகத்திற்கு வந்து ஃபைலைப் பார்ப்பார்கள். அப்படிப்பட்ட நிலையை நீங்களும் வைத்துக் கொண்டால் என்ன? அதற்குப் பதிலாக தனியாக எங்கேயோ சென்று ஒரு அறையில்—கெஸ்ட் ஹவுசில் உட்கார்ந்து ஃபைலைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்வது தேவையில்லாத ஒன்று; ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிகாரிகளைப்பற்றி குறை கூறியிருக்கின்றார்கள். பெரிய அதிகாரிகளைப் பற்றிக் குறை கூறியிருக்கின்றார்கள். இதன் விளைவாக அந்த அதிகாரிகள் மத்தியிலே ஒரு சோர்வுத்தன்மை நிலவுகிறது. அதை முதலமைச்சரவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

திருவண்ணாமலையில் நிருபர்கள் கூட்டத்தில் முதலமைச்சரவர்கள் பேசும் பொழுது சில அதிகாரிகள் வறட்சி நிவாரணப் பணிகளில் மெத்தனமாக நடந்து கொண்டதற்காக சென்னைக்குச் சென்றதும் மாற்றப் போவதாகவும் சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, வடார்க்காடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்கின்ற பொழுது அதிகாரிகளைக் கண்டிக்கிறார். பொதுமக்கள் கூடியிருக்கின்ற கூட்டத்திலேயே சொல்கிறார், எனக்குத் தவறான தகவலைக் கொடுத்துவிட்டார்கள்: வறட்சி இவ்வளவு கடுமையாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை, இந்த அளவிற்கு கடுமையாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இவ்வாறு அதிகாரிகள் தகவல் கொடுக்காமல் இருக்கிறார்கள்

இருக்கக் கூடாது அல்லது இருக்க முடியாது என்ற கொள்கை உங்களுக்கு இருக்குமானால், முதலமைச்சர் சொல்வார்கள் பல சந்தர்ப்பங்களிலே 'ஆக்ஷனுக்கு ரியாக்ஷன்' என்று. தமிழ்நாட்டிலே ஒரு ஆக்ஷன் வந்தால், தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிகாரிகள், வட மாநிலங்களிலே, பல 100 பேர்கள் வேலை செய்கிறார்களே, பல மாநிங்களிலே வேலை செய்கிறார்களே, அவர்களுடைய கதி என்னவாகும்? ரியாக்ஷன் ஏற்படாதா? ஆகவே, நான் கேட்டுக் கொள்கிறேன் இன்னொரு மாநிலத்தைச் சேர்ந்தவர் இங்கே பணியாற்றுகிறார் என்று சொன்னால், அவரை நாம் எந்த அளவுக்குப் பாதுகாப்பாக, வைத்திருக்க வேண்டும் அவர், தவறு செய்தால் நடவடிக்கை எடுங்கள், கருத்து வேறுபாடே இல்லை. ஆனால், தவறே செய்யாத ஒரு அதிகாரி, பாரபட்சம் இல்லாத ஒரு அதிகாரி, எல்லா மக்கள் மத்தியிலும், அதிகாரிகள் மத்தியிலும் நேர்மையான ஒரு அதிகாரியை இந்த அளவு 'அப்ரப்ட்' டாக ஒரு அசிங்கமாக இன்றைக்கு மாறுதல் செய்வது என்பது ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் மத்தியிலே ஒரு குழப்பமான சூழ்நிலையை, ஏற்படுத்தும். நிர்வாகத்திலே இருப்பவர்கள் நாளைக் காலை நாம் இருப்போமா என்ற அச்சத்தின் காரணமாக, அவநம்பிக்கையின் காரணமாகத் தான் அவர்கள் பணியாற்ற முடியும்? இன்னும் 10 நாட்கள் நாம் தொடர்ந்து இருப்போம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படுமானால், அல்லது ஒரு மாதத்திற்குத் தொடர்ந்து இருப்போம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்குமானால், அவர்கள் பணியை ஒழுங்காகச் செய்ய முடியும், இன்றைக்கு அவர்கள் காலையிலே, அலுவலகத்திலே, சொந்தப் பொருள்களை எடுக்கக் கூட முடியாத அளவிலே, 27—ந் தேதி இரவு போகிறார், வீட்டுக்கு. 28 ஆம் தேதி காலை 10 மணிக்கு அலுவலகத்துக்கு வருவோம் என்ற நம்பிக்கையில். ஆனால், 8 மணிக்கே போகிறார். ஆனால், புதிய கலெக்டர் அங்கே வந்து உட்கார்ந்து விட்டார் என்று சொன்னால், அவர் எப்படி அந்த அலுவலகத்திற்குப் போக முடியும். இது எவ்வளவு அநியாயமான ஒரு மாறுதல் என்று சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். சாதாரண அதிகாரி என்பது வேறு. ஆனால், ஒரு மாவட்டத்தினுடைய நிர்வாகத்திலே, பெரிய பொறுப்பிலே இருக்கக்கூடியவர், மாவட்டத்தினுடைய நிர்வாகத்திலே, எல்லா மக்கள் மத்தியிலும், எல்லா அதிகாரிகள் மத்தியிலும், ஒரு அச்சத் தன்மை உருவாக்கக் கூடிய அதிகாரி அவர்——நல்ல திறமை படைத்தவர். அவருக்கே இந்த கதி என்றால், சாதாரண நிலைமையிலே இருக்கிற அதிகாரியினுடைய நிலைமை என்ன ஆகும் என்று தான் எனக்குத் தெரியவில்லை.

[முற்பகல் 9. 20]

அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 1967-க்கு முன்பு எந்த ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியும் ராஜினாமா செய்தது இல்லை. ஆனால் நீங்கள் வந்த பிறகு, இன்றைக்கு திரு. குகன் பைனான்ஸ் செக்ரட்டரியாக இருந்தவர், திரு. மகாதேவன் இன்டஸ்டிரிஸ் செக்ரட்டரியாக இருந்தவர், திரு. இராமகிருஷ்ணன், இங்கே பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனில் பணியாற்றி பின்னர் டைரக்டர் ஆப் டவுன் அண்டு கன்ட்டிரி பிளானிங்காக பணியாற்றியவர். திரு. வி. சங்கரன், டைரக்டர் ஆப் ஸ்டாடிஸ்டிக்ஸ்ஆகப் பணியாற்றியவர், திரு. கே. வி. சிவசுப்பிரமணியம், போர்டு பர்ஸ்ட் மெம்பராக இருந்தவர், திரு. வெங்கட்டராமன் சேர்மன், அக்ரோ இன்டஸ்டிரிஸ் கார்ப்பரேஷனாக இருந்தவர். இவர்கள் அத்தனை பேர்களும் ராஜினாமா செய்திருக்கிறார்கள். ஒரு அதிகாரி மர்மமான முறையில் இறந்திருக்கிறார்—பாங்கோ--என்று பெயர் செக்ரட்டரியாக இருந்தவர் இன்றைக்கு நாகராஜன் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அவர்கள் கட்டாய ஓய்விலே செல்லுமாறு பணிக்கப்பட்டிருக்கிறார் (குறுக்கீடு) இல்லை என்றால் திருத்திக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலேதான் இத்தனை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ராஜினாமா செய்திருக்கிறார்கள். திரு. ராமகிருஷ்ணன் அவர்கள் தான் விடுப்பிலே செல்லும்போது, இந்த அரசாங்கத்தில் – ஏன் இந்த ஊழல் உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக அரசாங்கத்திலே பணியாற்ற விரும்பவில்லை என்று கோப்பிலே எழுதிவைத்து விட்டுச் சென்று இருப்பதாக அறிகிறேன். இத்தனை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் ராஜினாமா செய்ய வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? சில அதிகாரிகள் தாங்கள் சென்ட்ரல் கேடருக்கு போகிறோம் என்று எழுதிக் கொடுத்த போதும், மத்திய அரசு அவர்களுடைய சேவை அந்த மாநிலத்திற்கு தேவை என்று மத்திய அரசு கோரிக்கை விட்டும் கூட. மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலே அனுப்ப முடியாது, சென்ட்ரல் கேடருக்கு நாங்கள் அனுப்ப மாட்டோம், என்றும் இங்கேயே அவர்களை வைத்து பழிவாங்கி அவர்களை ஒன்றும் இல்லாதவர்களாக செய்வோம் என்று நீங்கள் செயல்படுகிறீர்கள் என்ற குற்றச் சாட்டை வைப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். நான் சொல்லிக் கொள்ள விரும்புவது. அந்த அளவுக்கு ஒரு குழப்பமான நிலைமை, மன அமைதியின்மை அவர்களிடத்திலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் மட்டுமல்ல, ஒரு சீப்-இன்ஜினியர் மணவாளன் என்று பெயர் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கின்றது—அவர் இன்னும் 1½ ஆண்டு காலம் பணியில் இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால் பல்வேறு கருத்து வேறுபாடுகள் காரணமாக சீப் மினிஸ்டர்ஸ் கான்பரன்ஸ்—காவேரி தண்ணீர் வழங்குவது- பிரச்சினை முன்பாகவே. ஒரு மாத காலத்திற்கு முன்பு மெடிக்கல் லீவில் சென்றார். பின்னர் 1 மாதத்திற்குப் பின்னால் பணியிலே சேருகிறேன் என்று விண்ணப்பம் போடுகிறார். ஆனால் அரசாங்கம் அவரைப் பணியிலே சேருவதற்கு அனுமதி வழங்கவில்லை. என்ன காரணம் என்பது தெரியாது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காவல் துறை மானியத்தில் பேசும்போது எப்படியெல்லாம்

பேசினார்களோ அதேபோல் இன்றும் தவறான தகவலை நம்பி பேசிக் கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக இறுதியிலே பேசும்போது திரு. மணவாளன் என்ற தலைமைப் பொறியாளரைப் பற்றிச் சொன்னார்கள். கட்டளைக் கால்வாய்த் திட்டத்தைத் தந்தவரே அவர்தான். கட்டளைக் கால்வாய்த் திட்டம் தந்து அரசு பல்வேறு வகைகளில் வாதிக்க வாய்ப்பு தந்து, மற்றப் பொறியியல் தலைவர்களை எல்லாம் வைத்துப் பேசி, இறுதியில் கட்டளைக் கால்வாய் பொறுத்தம் உடையது என்றுநம்பிக்கையை ஏற்படுத்தி, அதற்காக பல ரூபாய்களை செலவுசெய்து, மீண்டும் பரிசீலித்து விரிவான அறிக்கைத் தந் தார்கள். அதற்குச் சில மாதங்கள் ஒதுக்கப்பட்டன, அதற்கு பிறகு தான் இந்த அரசு அதை ஏற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை யில், அவருடைய அறிக்கையை நம்பி அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்றக் கருத்தை வெளியிட்டது.

பல அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் எதிர்த்துப் பேசியும்கூட, இந்தமன்றத்திலே உள்ள பல கட்சி உறுப்பினர்கள் எதிர்த்துப் பேசியும்கூட நாங்கள் அதை ஏற்றுக் கொண்டதற்குக் காரணம், அவருடைய திறமை, அவருடைய நேர்மை, அவருடைய கடமையை நம்பித்தான். ஆனால் திட்டம் தீட்டிய பிறகு எத்தனை ஆண்டுகளில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் எவ்வளவு செலவாகும் என்று கேட்டபோது புள்ளி விவரங்களைத் தந்தார்கள்.

இதற்கு நாங்கள் குறிப்பிட்டு எழுதும்போது ஒன்றைச் சொ னோம். இதை சரிவர குறிப்பிட்டக் காலத்திற்குள் நிறைவேற் யாக வேண்டும் என்று முடிவெடுத்து அவருக்குச் சொன்னோம் ஒரு 3-4 வாரங்கள் கழித்து, என்று கருதுகிறேன்-என் நினை சரியாக இருக்குமானால் உலக நாடுகள் அவையிலே விரைவிலே ஒரு பெரிய பொறுப்பு வருகிறது. அதற்குப் போக வேண்டு என்று விருப்பம் வெளியே தெரிவிக்கப்பட்டது. அதை ஏற்று கொள்ளமுடியாது என்றும், இந்தத் திட்டத்தைத் தந்த அவ அதை நிறைவேற்றிவிட்டுச் செல்ல வேண்டுமென்றும் அதற்கு பிறகு போகலாம் என்றும் எங்கள் கருத்தை வெளியிட்டோம் அதற்குப்பிறகு, புள்ளி விவரங்களோடு அவர் குறிப்பிட்ட தொகை எப்படி வருகிறது என்று அவரிடத்தில் விளக்கங்கள் கேட் போது, அவர் என்ன சொன்னார் என்றால் போகப்போக வேலை நடக்கும்போது ஒரு வேளை அதிகம் ஆகலாம் என்று சொ னார். நான் நேரிலும் சொன்னேன். பின்னால் கோப்புக லும் எழுதினேன். இது வாடிக்கையாகிவிட்டது, 2-3 ஆண் களுக்குள் ஒரு திட்டத்தை நிறைவேற்றுவது என்று திட்ட தருவதும் ஒரு தொகை குறிப்பிடுவதும், குறித்த காலத்தி அதை முடிக்காமல் 3–4 ஆண்டுகளில் ஒரு திட்டம் முடிக் வேண்டுமென்றால், அதை 7 ஆண்டுகள், 8 ஆண்டுகள் நீட்டி கொண்டு போவதும் ஒவ்வொரு ஆண்டிலும் முன்பு குறிப்பிட் தொகையை விட ஒரு பங்கு, இரண்டு பங்கு என்று அதிகமாகி கொண்டு போவதும் ஒரு வழக்கமாகிவிட்டது. ஆகவே, குறி பிட்ட காலத்திற்குள், குறிப்பிட்ட தொகைக்குள், அ



நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் எழுதியபோது — நான் இங்கே வருத்தத்தோடு சொல்கிறேன் - ஒரு பொறுப்புள்ள அதிகாரிபோல் அவர் இல்லாமல், நான் அப்படி செய்வதற்கு முயற்சிக்கிறேன் என்று சொல்லாமல், இன்னின்ன காரணங்களால் அந்த அதிகப்படிச் செலவு ஆகலாம் என்று சொல்லாமல் நிச்சயமாக உத்தரவாதம் தர இயலாது, எவ்வளவு நாள் ஆகும் என்று உத்தரவாதம் தர முடியாது, அதிலே பல இடங்களில் பாறை இருக்கலாம், அதனால் செலவு அதிகமாகலாம், தாமதமாகலாம் என்று இப்படி ஒரு பொறுப்புள்ள அதிகாரியாகியுள்ள அவர் கடிதம் எழுதியதன் விளைவாக அவரைக் கண்டிக்க வேண்டி வந்தது. இன்னும் பல தவறுகளுக்கு அவர் பொறுப்புள்ளவராக இருப்பதால் அவர் மீது விசாரணை வைக்க வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது. எனவே தான் அவரை வெளியே அனுப்பவில்லை. அவர் விரும்புகிறபடி— ஓய்வு பெறுகிற நாளுக்கு முன்பே-அவர் ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிப்பட்ட செய்திகளைச் சொல்லி இருக்கிறார்கள். பின்னால் அதற்கெல்லாம் விளக்கம் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்:** துணைத் தலைவர் அவர்களே, ஆகவே, முதலமைச்சர் அவர்கள் சொல்லியதற்கு ஏற்ப சம்பந்தப்பட்ட சீப்-இன்ஜினீயருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருக்கிறது என்பது உண்மை. அதன் காரணமாகத்தான் அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காக அவர் கம்பல்சரி ரிடயர்மென்ட் வேண்டும், ஓய்வுப் பெற இன்னும் $1\frac{1}{2}$ ஆண்டுகள் இருந்தாலும் முன்பாக ஓய்வு பெறவேண்டும் என்று கேட்டாலும், அரசாங்கம் அவரை விடுவதாக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்,

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் மெத்தப்பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர் மீது நான் மிகவும் நம்பிக்கை வைத்து இருக்கிறேன். அவருக்கு என்று இருக்கின்ற முறையிலே தான் அவர் பேசவேண்டுமே தவிர வேறு பாணியைப் பின்பற்றி விடக்கூடாது என்பதை நான் வேண்டுகோளாக விடுக்க விரும்புகிறேன்.

திரும்பத் திரும்ப இல்லாததைப் பேசக்கூடாது, கருத்து வேறுபாடு எதனால் வந்தது? ஹோசூர் பக்கத்திலே என்று நினைக்கிறேன்- ஒரு அணைக்கட்டு கட்டுவதற்கான ஏற்பாடு செய்தோம். பல லட்சக்கணக்கான ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டது. செலவும் செய்யப்பட்டது. ஆனால் இந்த திரு. மணவாளன் என்ன செய்கிறார் என்றால் - அவர் மீது என்ன குற்றச்சாட்டு என்றால்—அந்த இடத்தை விலைக்கு பேசி அவர் வாங்கவில்லை. அதனால் அது வழக்கு மன்றத்தில்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 மே 9

இருக்கிறது. ஒரு அரை பங்கிற்கு மேல் அந்த அணையைக் கட்டி
விட்டார்கள். இவ்வளவு செலவு செய்த பிறகு, அந்த வழக்கு
நடந்து கொண்டு இருக்கிறதே தவிர, அதைச் சுமுகமாக
முடிக்க வேண்டும் என்றோ, பொறுப்போடு காரியம் ஆற்ற
வேண்டும் என்றோ அவர் செயல்படவில்லை. இது கருத்து
வேறுபாடு அல்ல. அவர் மீதுள்ள குற்றச்சாட்டு. ஆகவே,
கருத்து வேறுபாடு என்பது வேறு. குற்றச்சாட்டுக்கு ஆளாகின்ற
நிலைமை என்பது வேறு. ஆகவே, தயவு செய்து மாமன்ற
உறுப்பினர் இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவர் அவருக்கே
உள்ள தகுதியோடு இப்படிக் கேள்விப்படுகிறேன், உண்மையா
என்று சொல்லுங்கள் இது தான் உண்மை என்று சொல்லிவிடா
தீர்கள் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 9.80]

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே,
இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை
சொல்லியிருக்கிறார்கள், எங்களுக்குக் கிடைத்த சில தகவல்கள்
உண்மையா என்று பரிசீலித்த பிறகு தான், முழுமையாக அதை
ஆராய்ந்த பிறகு தான் பேசுகிறோமே தவிர 'ஹயர் சே' என்ற
அடிப்படையில் நாங்கள் பேசவில்லை. அந்தப் பழக்கம்
எங்களைப் பொறுத்த வரையில் இல்லை என்
பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சர
வர்கள் சொல்கிறார்கள் "கட்டளைக் கால்வாய் திட்டம் சம்பந்
தமாக அவர்தான் திட்டத்தைத் தயாரித்தார், அவர்தான்
4 கோடி ரூபாய் அளவுக்கான அந்தத் திட்டத்தை தயாரிப்பதற்
கான வழியைச் செய்தார். நாங்கள் அதற்கான ஒதுக்கீடுகளைச்
செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டோம். ஆனால்
கடைசியிலே 400 கோடி ரூபாயிலே அந்தத் திட்டம்
முடியாது. போகப் போக அதிகமாகும் என்று சொன்னார்கள்.
ஆகவே எப்படி ஒரு அதிகாரி இப்படி நடந்துகொள்கிறார்கள்,
எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்போகிறேன்
என்றால் ஏனென்றால் இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செல
வாகும் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லுங்கள் என்றால்
சொல்ல முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆகவே அவர்
மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றெல்லாம் சொன்
னார்கள். அப்படியானால்......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர்
அவர்களே, நான் மீண்டும் பணிவோடு தெரிவித்துக்கொள்
கிறேன். மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சியின் துணைத்
தலைவர் அவர்கள் ஏதோ கட்டளைக்கால்வாய் சம்பந்தமாகச்
சொல்கிறார்கள். ஒரு அணைக்கட்டு கட்டி அதைப் பாதியிலே
நிறுத்திவிட்டு, அதாவது அதை எங்கே கட்டியிருக்கிறார்
களோ அந்த இடத்தைக் கூட விலைக்கு வாங்காமல் பொறுப்
பற்று அதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் என்ற
காரணத்திற்காக நடவடிக்கை எடுக்கப்படுவது பற்றி நான்
சொன்னால மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ கட்டளைக்
கால்வாய் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பது என்று சொல்வது
பொருத்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



[1981 மே 9

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, ஒரு இலாக்கா
விலே ஒரு பிரச்சினை என்றால் அதாவது ஒரு திட்டம் நிறைவேற்
றப்பட வேண்டும் என்று சொன்னால் அதற்குப் பொறுப்பு ஏற்க
வேண்டியவர்கள் அமைச்சரிலே இருந்து சாதாரணப் பணியாளர்
கள் வரைதான். ஆகவே ஒரே ஒரு சீஃப் இன்ஜினியரை
மட்டும் சிங்கிள் அவுட் பண்ணி இவர்தான் அதற்கு பொறுப்பு
ஆகவே இவர் மீது நடவடிக்கை எடுக்கப் போகிறேன் என்று
சொல்வது எப்படிப் பொருத்தமாகும்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் அவர்களுக்குப் பணிவோடு தெரி
வித்துக் கொள்கிறேன். எல்லோரும் பொறுப்புதான். ஆனால்
மண்ணைத் தூக்கிப் போடுவது வரை அந்த நிலத்தை வாங்கா
மல் அப்படிப்பட்ட இடத்திலே ஏன் மண்ணைத் தூக்கிப்
போட்டாய் என்று தொழிலாளியை நாம் கேட்க முடியாது.
ஆகவே ஒரு திட்டம் சம்பந்தப்பட்ட வகையிலே பொறியியல்
நிபுணர் போன்று யார் அதற்குப் பொறுப்பாக இருக்கிறார்
களோ அவர்களைதான் கேட்கிறோமே தவிர அவர்களுக்குக்
கீழே இருக்கின்ற அத்தனை லட்சக்கணக்கான பேர்களையும்
நாம் கேட்பது இல்லை. ஒரு சாலையை அமைக்கிறார்கள்
என்றால் அதற்கு யார் கான்ட்ராக்டர், யார் பொறியியல்
நிபுணர் என்று கேட்கிறோம். அவர்கள் மீது நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று சொல்கிறோம், அங்கே சாலையைப்
பழுது பார்த்த அல்லது சாலையைப் போட்ட தொழிலாளியைப்
போய் நாம் கேட்பதில்லை. அதுபோன்று இந்த அரசைப்
பொறுத்த வரையிலே எல்லோருக்கும் பொறுப்பு என்பது போல
நிர்வாகத்தினருக்கும் பொறுப்பு இருக்கின்றது; ஆகவே நிர்
வாகத்தினர்தான் அவற்றுக்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ள முடி
யும். ஆகவே சில நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்ற வகை
யிலே அந்த அதிகாரிகளை நீக்கினோம். அதற்கு உடந்தை
யாக எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்ற கணக்கைப் போட்டு
கிடைப்பது கஷ்டம். அதை ஏன் கவனிக்கவில்லை ஏன்
செய்யவில்லை என்பதுதான் கேள்வியாகிறது. இங்கே சிலசமயம்
எம்.ஜி.ஆர். தலைமையிலே இயங்குகின்ற மந்திரிசபையின் மீது
நம்பிக்கையில்லை என்று சொல்கிறார்கள் — வேறு யாராவது
இங்கே முதலமைச்சராக இருந்தால் அவர்கள் மீது நம்பிக்கை
வரலாம்— ஆகவே ஒரு நிலைமை என்று வருகின்றபோது
எம்.ஜி.ஆர். தலைமை, திருமதி இந்திரா காந்தி தலைமை
என்று சொல்கிறோம், அப்படி குறிப்பிட்ட ஒருவரை மட்டும்
குறித்துதான் பேசப்படுகிறது. அது போலதான் இதுவும். யார்
அதற்கு பொறுப்பான பதவியிலே இருக்கிறார்களோ அவர்கள்
தான் பதில் சொல்லியாக வேண்டும், அதற்குப் பிறகு
விசாரணையிலே இன்னும் வேறு சிலர் சம்பந்தப்பட்டிருக்
கிறார்கள், என்றால் அவர்களையும் சேர்க்கவேண்டும் என்ற
அவசியம் இருந்தால் அவர்களையும் சேர்த்து சட்டப்படி
நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்
கிறேன்.

1981 மே 9]

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே ஹோசூர் அணை....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள் நேரம் அதிகமாகிவிட்டது.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, ஹோசூர் அணைக்கட்டு சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஹோசூரிலே அணைக்கட்டு சம்பந்தமாக பிரச்சினை என்று சொன்னால் அதாவது லேண்ட் அக்விசிஷன் என்றால் நில ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்றால் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யார் என்று பார்த்து அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது. நில ஆர்ஜிதம் செய்வது சம்பந்தப்பட்ட வகையிலே அதற்கு பொறுப்பு ஒரு சீப் இன்ஜினியரா? இதற்காகத்தான் நான் முதலிலேயே சொன்னேன். ஒரு சீப் இன்ஜினியர் இதிலே சம்பந்தப்பட்டு இருக்கிறார் என்ற காரணத்திற்காக அவரை சிங்கிள் அவுட் செய்ய வேண்டாம், அதுபற்றி முழுமையான விசாரணை நடத்துங்கள், அந்த விசாரணையிலே யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டதற்குப் பிறகு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ எடுங்கள் அவ்வாறு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைக்கு குறுக்கே நாங்கள் நிற்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல.

அடுத்து நம்முடைய தலைமைச் செயலகத்திலே பணி யாற்றுகின்ற அதிகாரிகள் மத்தியிலே ஒரு கோஷ்டி மனப் பான்மை நிலவுகிறது. அதாவது காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட் கட்சி என்று நாம் சொல்லக் கொள்வது போன்று அவர்கள் மத்தியிலேயும் ஒவ்வொரு கோஷ்டி மனப் பான்மை நிலவி வருகிறது. ஆகவே அரசாங்கம் அதிகாரிகள் மத்தியிலே ஒரு சுமுகமான உறவு இருப்பதற்குரிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சென்னையிலே இருக்கின்ற அதிகாரிகளைப் பொறுத்த வரையிலே பல பெரிய அதிகாரிகளுக்கு சொந்தமாக கார் இருக்கின்றது. நம்முடைய அரசாங்கம் சிக்கனம் சிக்கனம் என்று ஒரு பக்கம் பேசிக்கொண்டிருக்கின்றது. ஆனால் அதே நேரத்திலே இன்னொருபக்கம் என்ன நடக்கின்றது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு அதிகாரியை அவருடைய வீட்டிலே இருந்து சென்னைக்குக் கூட்டிக்கொண்டு வரவேண்டும் என்றால் இங்கே இருந்து கார் அவருடைய வீட்டிற்கு செல்கிறது. வீட்டிற்குச் சென்று அவரைக் கூட்டிக்கொண்டு இங்கே அலுவலகத்திற்கு வருகின்றது. பிறகு மாலையிலே அவரைக் கொண்டுபோய் வீட்டிலே விட்டு விட்டு இங்கே கொண்டு வந்து காரை நிறுத்துகிறார்கள். இப்படி ஒரு அதிகாரியை கூட்டிக்கொண்டு வருவதற்காகவும் கொண்டு



1981 மே 9] [திரு நா. சுந்தரராஜ்]

போய் விடுவதற்காக மட்டுமே அவருக்கு நிறைய பணம் செலவழித்து கார் வாங்கிக் கொடுக்கிறோம் என்றால் என்ன அர்த்தம். கூட்டி வருவதும் கொண்டு போய் விடுவதும்தான் அந்தக் காருக்கும் அந்த டிரைவருக்கும் உள்ள வேலை. இப்படி ஒன்றரை மணி நேரம் செய்யப் படுகின்ற வேலைக்காக இவ்வளவு பணமதிப்புள்ள ஒரு காரை வைத்துக்கொண்டிருக்க வேண்டுமா?

அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்றால் அந்த அதிகாரிகள் சொந்தக் காரில் அலுவலகத்திற்கு வர ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய நிதி உதவி செய்யலாம் அல்லது கார் அலவன்ஸ் என்று ஏதாவது ஒரு வகையில் உதவி செய்து, அரசாங்க காரை அவர்கள் பயன்படுத்துவதை நிறுத்த நடவடிக்கை எடுத்தால் இன்றைக்கு பல இலட்சம் ரூபாய் சிக்கனமாகும், செலவு குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ரெட் டேப்பிசம். நேற்றைக்கு முன்தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை மானியத் திற்கு பதில் அளிக்கும்போது சொன்னார்கள். அது முன்னோர் விட்டுச் சென்ற சொத்து என்று சொன்னார்கள். அது சொத்து அல்ல; நமக்குத் தேவையும் அல்ல. அரசு தீவிரமாக செயல் பட வேண்டுமென்று சொன்னால் இந்த ரெட் டேப்பிசத்தை முதலில் ஒழித்தாக வேண்டும். அதற்கு அதிகாரிகள் மட்டுமல்ல சர்வ கட்சித் தலைவர்களையும் கொண்ட அல்லது உங்களுக்கு விருப்பமானவர்களை கொண்ட ஒரு குழுவோ அல்லது ஏதாவது ஒரு முறையில் ஒரு அமைப்பையோ ஏற்படுத்தி, இந்த ரெட் டேபிசத்தை ஒழிக்க வழிவகை காணவேண்டும். அப்போதுதான் தமிழகம் முன்னேற சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1977 ஆம் ஆண்டு இந்த அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து இந்நாள் வரையில் பல நூற்றுக்கணக்கான கடிதங்கள் பல அமைச்சர்களுக்கு நான் எழுதியிருக்கிறேன். ஆனால் இதுவரையில் ஒரு கடிதத்திற்குக் கூட எந்த அமைச்சரிடமிருந்தும் எனக்கு பதில் வரவில்லை. என்னுடைய சொந்தக் கோரிக்கைகாக நான் கடிதம் எழுதவில்லை. பொது கோரிக்கைகளுக்காக நான் எழுதினேன். ஒன்றுக்கும் பதில் வரவில்லை. சில சமயங்களல் வருகிறது. யாரிடமிருந்து? யாரோ ஒரு அன்டர் செக்ரட்ரி, சார்புச் செயலாளர் பதில் எழுதுகிறார். உங்களுடைய கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது என்றுதான் பதில் வரும். இதற்காகத்தான் நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டோமா? தயவுசெய்து நீங்கள் சிந்திக்க வேண்டும்.

அதே நேரத்தில் மத்திய அரசு நிதி அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினேன். எங்கள் ஊரில் ஒரு ஸ்டேட் பாங்க் கிளை திறக்கப்பட வேண்டுமென்று எழுதினேன். ஒரு மாதத்திற்குள்

அவரிடமிருந்து பதில் வந்தது. என்னென்ன சிரமம் இருக்கிறது என்று கேட்டு கடிதம் வந்தது. அதோடு விரைவில் உங்கள் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று எழுதி, 'ஆர். வெங்கட்ராமன்' என்று அவரே கையெழுத்துப்போட்டு அனுப்பியிருக்கிறார். உங்களுக்கு வேலை அதிகம், பதில் எழுத நேரமில்லை. ஆனால் இந்தியாவின் நிதி அமைச்சர் வேலையில்லாமல் இருக்கிறார். இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர் எழுதும் கடிதத்திற்கு அவரே கைப்பட பதில் எழுதுகிறார். ஆனால் இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர் எழுதும் கடிதங்களுக்கு நீங்கள் பதில் அனுப்புவதில்லை.

எங்கள் கருத்தைக் கேட்க வேண்டியது நீங்கள்தானே தவிர அதிகாரிகள் அல்ல. அவர்களுக்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை. காரணம் நாங்கள் அவர்களிடம் கேட்டாலும் அவர்கள் சொல்வதில்லை. நேற்று ஒரு அதிகாரியிடம் ஒரு விவரத்தைக் கேட்டேன். அவர் சொல்கிறார். நாங்கள் சொல்ல முடியாது, மினிஸ்டரிடம் தான் நீங்கள் கேட்க வேண்டும் என்று சொல்கிறார். நாங்கள் மினிஸ்டரிடம் கேட்க வேண்டுமென்றால் நீங்கள்தானே பதில் அனுப்ப வேண்டும்? அண்டர் செக்ரட்டரி ஏன் பதில் அனுப்புகிறார்? நாங்கள் உங்களுக்கு எழுதும் கடிதங்களுக்கு நீங்கள்தான் பதில் அனுப்ப வேண்டும். நீங்கள் எங்களை அலட்சியப்படுத்துவதாக இருந்தால் நாங்களும் உங்களை அலட்சியம் செய்ய வேண்டிவரும்.

எனக்கு முன்னால் சிலர் பேசினார்கள். அமைச்சர்கள் சில நாட்கள் வரவில்லை. அவர்களுக்கும் பேட்டா கொடுங்கள், வருவார்கள் என்று சொன்னார்கள். அதை நாங்கள் சொல்லவில்லை; உங்கள் கட்சிக்காரர்கள்தான் சொன்னார்கள்.

அதைப்போல தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அங்கே நடைபெறுகிற அரசு விழாக்களில் கலந்து கொள்ள அழைப்பு அனுப்பவில்லை என்று சொன்னார்கள். அதுவும் உங்கள் கட்சிக்காரர்கள்தான் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைகளை மாற்றி, நீங்கள் சுமுகமான நிலையை ஏற்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் சீக்கிரம் முடியுங்கள். ஒரு மணிக்கு கில்லட்டின் இருக்கிறது. அதனால் சொல்லவேண்டிய பாயின்ட்ஸை விரிவாகச் சொல்லாமல் சுருக்கமாகச் சொல்லி, சீக்கிரம் முடியுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: நான் எப்படி பேச வேண்டுமென்று தயவுசெய்து கற்றுக்கொடுக்க வேண்டாம்.

மதுவிலக்கை தளர்த்தியிருக்கிறீர்கள் இப்போது. மதுவிலக்கை தளர்த்தியதனால் நீங்கள் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கலாமே தவிர சட்டம், ஒழுங்கு நிச்சயமாக இருக்காது. காரணம் இன்றைக்கு இருக்கிற காவல்துறை அதிகாரிகளுக்கு



கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுடமிருந்து பணம் வருவது குறைந்து விடும். அந்த நிலை வரும் போது அவர்கள் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்குத்தான் ஆதரவாக இருப்பார்கள்; அவர்களை ஊக்குவிப்பார்கள். அதனால் அரசு சார்பிலே தயாரித்து விற்பதற்கும் கள்ளச்சாராயம் விற்பதற்கும் இடையே ஒரு பெரிய மோதல் தமிழ்நாட்டில் விஸ்வரூபம் எடுக்கும். அதை ஒடுக்க தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

முதலமைச்சர் சில நாட்களுக்கு முன்னால் தமிழகத்தின் தலைநகரை வேறு இடத்திற்கு மாற்றுவதாக அறிவித்தார், முதலில் மதுரை என்றார். பிறகு திருச்சிக்கும் தஞ்சைக்கும் இடையில் ஒரு இடம் என்று சொன்னார். அதற்குக் காரணம் அங்கே தண்ணீர் அதிகமாக கிடைக்கிறது என்று சொன்னார். வேலை வாய்ப்பும் அதிகமாக கிடைக்கும் என்று சொன்னார். அது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை, எங்கள் கட்சி அதை ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம், 400 கோடி அல்லது 500 கோடி ரூபாய்ச் செலவில் மாற்றி விட முடியாது, பல கோடி ரூபாய் அதற்குத் தேவைப்படும். அது மட்டுமல்ல, அங்கே தண்ணீர் கிடைக்கிறது என்ற காரணத்தால் கொண்டு போகிறோம் என்பது சரியான வாதம் அல்ல, நாம் எங்கே இருக்கிறோமோ அங்கே தண்ணீரைக் கொண்டு வரவேண்டும். வேலை வாய்ப்பை அதிகமாக ஏற்படுத்த வேண்டுமானால் தலைநகரை மாற்றத் தேவையில்லை. இங்கேயே, தமிழ்நாட்டில் பல நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் பல நூறு வருஷங்களுக்கு முன்னால் கட்டப்பட்டவை. அவைகளையெல்லாம் இடித்துவிட்டு புதிதாகக் கட்டச் சொல்லுங்கள். அதனால் ஏராளமானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அது

[முற்பகல் 9–40]

மட்டும் அல்லாமல் இன்றைக்கு டி. டி. சி.யைப் பொறுத்த வரையில் பல சந்தர்ப்பங்களிலே இங்கேயே பேசப்பட்டிருக்கிறது. டி. டி. சி. என்பது வெறும் அட்வைசரி பாடியாக இருக்கிறது. வெறும் ஆலோசனைக் கூட்டமாகத்தான் இருக்கிறது. அது கூட இன்றைக்கு நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், இதிலே மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராக இருக்கும் முறை வேண்டாம் என்று சொன்னார்கள். எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் – இன்றைக்கு இருப்பவர் என்று இல்லை.– என்றைக்கு இருந்தாலும் சரி, மாவட்ட ஆட்சித் தலைவர் உட்காருவதற்கென்று இந்த டி.டி.சி. கூட்டத்திலே பெரிய மேடை இருக்கும். அந்த மேடையிலே அவர் உட்கார்ந்திருப்பார். சட்டமன்ற உறுப்பினர்களானாலும் சரி, நாடாளுமன்ற உறுப்பினர்களானாலும் சரி, கீழே உட்கார்ந்திருப்போம். அவர் உட்கார்ந்து கொண்டே பேசுவார். நாங்கள் நின்று கொண்டே பேச வேண்டும். இது எவ்வளவு பெரிய அவல நிலைமை பாருங்கள்?

ஒரு டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலிலே மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பவர்—சாதாரண கலெக்டர் அந்தஸ்தில் இருப்பவர்தான். சீப் செக்ரட்டரி கூட அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியும்கூட அல்ல, அவர் நம்முடைய சபாநாயகர் அவர்கள் உட்கார்ந்து இருப்பதைப் போன்று உயரமான மேடையில் அதைவிட உயரமான மேடையில் உட்கார்ந்திருப்பார். அதிலே உட்கார்ந்துக் கொண்டே கேள்விகள் கேட்பார், நாங்கள் நின்று கொண்டே பதில் சொல்ல வேண்டிய நிலைமை. ஒன்று நீங்கள் இந்த முறையை மாற்றியாக வேண்டும் இல்லை என்று சொன்னால், என்னைப் பொறுத்தவரையில் இனிமேல் அந்த டி. டி. சி. மீட்டிங்கில் கலந்து கொள்வது இல்லை என்ற முடிவுக்குத்தான் வரவேண்டிய நிலைமை இருக்கிறது. காரணம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கீழே உட்கார்ந்து கொண்டு, அரசாங்கத்தில் சம்பளம் வாங்கிக் கொண்டு இருப்பவர் மேலே உட்கார்ந்து கொள்வது என்பது என்ன நியாயம்? ஆகவே அதை மாற்றுவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு மது குடிப்பது சம்பந்தமாக 1 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள், நிதிநிலை அறிக்கையிலே அதற்கான வழிவகைகளையும் செய்திருக்கிறீர்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். தமிழகத்தில் லஞ்சம் லஞ்சம் என்று பறை சாற்றிக் கொண்டேயிருக்கிறோம். எல்லாத் துறையிலும் லஞ்சம் இருக்கிறது. தயவு செய்து யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. ஆகவே லஞ்சத்தை ஒழிப்பதற்கான பெரிய நடவடிக்கைகளை தீவிர நடவடிக்கைகளை, லஞ்சம் வாங்கினாலும் குற்றம், கொடுத்தாலும் குற்றம், அதற்குக் கடுமையான தண்டனை உண்டு என்று சட்டங்கள் கொண்டு வாருங்கள் — நாங்கள் அதை ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். லஞ்சத்தை ஒழிப்பதற்காக கடுமையான சட்டம் கொண்டு வாருங்கள் அதை நாங்கள் ஆதரிக்கிறோம்.

இன்றைக்குச் சொல்கிறார்கள், சாதாரண நபர்கள் கூட அண்ணா நகரில் லட்சக்கணக்கான ரூபாயிலே வீடு கட்டுகிறார்கள் என்று. 100 ரூபாய், 500 ரூபாய் சம்பளம் வாங்குபவர்கள் 5 லட்சம், 7 லட்சம் செலவு செய்து அண்ணா நகரிலோ மற்றும் அதிக விலையுள்ள இடமான பெசன்ட் நகர் போன்ற இடங்களிலோ வீடு கட்டுகிறார்கள் என்று சொன்னால், லஞ்சம் இல்லாமல் அது வேறு என்ன? ஆகவே, அதை ஒழிக்க கடுமையான சட்டத்தைக் கொண்டு வாருங்கள், அதை நாங்கள் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சிறிய மாவட்டம் தான், அதில் புதுக்கோட்டை டிவிஷன் என்பது பெரிய டிவிஷன். கிட்டத்தட்ட 8 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. அதை இரண்டாகப் பிரித்து இரண்டு டிவிஷன்



களாக மாற்ற வேண்டும். அதைப்போல இராமநாதபுரம் மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும். இராமநாதபுர மாவட்டத்திலேயே அதன் தலைநகரை உண்டாக்கி, அதிலேயே கலெக்டர் ஆபீஸ்கள் போன்ற முக்கியமான அலுவலகங்களை அமைத்தால், இன்றைக்கு அங்கே எழுகிற பல மோதல்களுக்கு இடம் இருக்காது என்று சொல்ல விரும்புகிறேன்.

அது போல புதுக்கோட்டை டிவிஷனில் காமராஜபுரம் என்ற ஒரு இடம் இருக்கிறது. அந்த இடத்திலே அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களை தனி நபர்கள் வைத்துக் கொண்டு, நான் இந்த இடத்தை உனக்குத் தருகிறேன், அந்த இடத்தை உனக்குத் தருகிறேன், நீ எனக்கு இவ்வளவு பணம் கொடு என்று பேரம் பேசி பட்டா போட்டுக் கொடுக்கிற நிலைமை இருக்கிறது. இதைப்பற்றி இந்த அவையிலே விரிவாக பேசவேண்டும் என்பதற்காக நான் ஒத்தி வைப்புத் தீர்மானமோ அல்லது 54 வது விதியின் கீழோ கொடுத்திருந்தேன். அமைச்சர்களிடத்திலும் மனு கொடுத்திருக்கிறேன்.

ஆனால் இராமநாதபுரத்திலே அந்த தனி அரசாங்கம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அப்படி அரசுக்குச் சொந்தமான நிலங்களை பலருக்கு பட்டா போட்டுக் கொடுத்து, ஆயிரக்கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அந்த இடங்களில் தற்போது குடியிருப்பவர்களை காலி செய்து விட்டு, அரசாங்க அதிகாரிகளை நேரிடையாக வைத்து, ஏழைகளுக்கு வினியோகிக்கும் முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் அங்கே உண்மையிலேயே இந்த அரசாங்கம் நடைபெறுவதாக அர்த்தம். ஆகவே, அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூட பல்வேறு சந்தர்ப்பங்களிலே சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சிதான் மத்தியிலே ஆட்சியில் இருக்கிறது. இந்தியா பூராவும் ஆளுகிறது. தமிழகத்தில் இருக்கிற பெரிய கட்சிகளில் ஒன்று. ஆனால் இந்திராகாந்தி அம்மையார் தமிழகத்திற்கு வருகை தந்ததற்காக இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவு $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய்—அதை இந்திரா காங்கிரசினால் கொடுக்க முடியவில்லை என்று சொன்னால், நம்முடைய நாராயணசாமி நாயுடு அவர்களால் எப்படி பாக்கியைக் கொடுக்க முடியும், அவரைக் கொடுப்பதற்கு நாம் கட்டாயப்படுத்த முடியுமா என்று சொன்னார்கள். நான் அவருடைய கருத்தை ஏற்றுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த காலத்தில் மத்திய அரசிற்கு கட்ட வேண்டிய இன்கம்-டாக்ஸ் பாக்கியாக நிலுவையில் இருக்கிறதே, அதைப்பற்றி நாடாளுமன்றத்திலே கூட சொல்லப்பட்டது. அது கிட்டத்தட்ட 7,81,000 ரூபாய் என்று சொல்லப்பட்டது.....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லாத ஒன்றை நான் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். நான் இந்த அவையிலேயே அதைப் பெருந்தன்மையோடு கொடுத்துவிடுவார்கள் என்று எதிர் பார்க்கிறேன் என்று தான் சொன்னேனே தவிர, நாராயணசாமி நாயுடுவைப் பற்றி எடுக்கவே இல்லை. அது வேறு; இதுவேறு. அவர் கொடுக்க முடியாது என்று சொல்வதற்கான காரணங்கள் வேறு. காங்கிரஸ் கட்சி கொடுக்காமல் இருப்பதற்கு காரணங்கள் வேறு. அதையும் இதையும் ஒன்று படுத்துவதில் பொருளே இல்லை........

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் இந்த அவையிலே பேசியபோது அதைச் சொல்லவில்லை. வெளியிலே சில இடங்களில் பேசிய போது சொன்ன கருத்தைத்தான் சொன்னேன். அப்படி பேசும்போது, காங்கிரஸ் கட்சி இந்த நாட்டிலே ஆளுகின்ற கட்சி; தமிழ்நாட்டிலே பெரிய கட்சி இந்த காங்கிரஸ் கட்சி—அவர்கள் இந்திரா காந்தி அம்மையார் வருகை தந்ததற்கான பாக்கியை தரவில்லை என்று சொன்னால், நாராயணசாமியிடம் நாம் எப்படி கேட்பது என்று பொருள்படச் சொன்னார்......

(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் சொல்வது தான் உண்மை. நான்தான் ஒன்றுமே இல்லை என்று சொல்கிறேன். நாராயணசாமி நாயுடு வரிப்பணம் கொடுக்க மாட்டேன் என்ற கருத்து வேறு, காங்கிரஸ் கட்சியிலிருந்து பாக்கி வராமல் இருப்பது வேறு. இரண்டையும் முடிச்சுப் போடுவது பொருத்தமும் அல்ல, நான் சொல்லவும் இல்லை, சொல்லவும் மாட்டேன்.

திரு. நா. சுந்தரராஜ் : வெளியே பேசும்போது அவ்விதம் கூறினார் என்று கூறினேன். இப்போது நான் சொன்னதை இல்லை என்று சொன்னார்கள், அதில் கருத்து மாறுபாடு இல்லை.

முதல் அமைச்சர் அவர்களைப் பற்றி மத்திய நிதி அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பதில் சொல்லும்போது எவ்வளவு பெருந்தன்மையோடு, முதலமைச்சர் அவர்கள் மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் வைக்காமல் பெருந்தன்மையாக பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம் அரசு ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் பாக்கியிருந்தாலும் மாவட்ட கலெக்டர், எஸ். பி., போலீஸ் அதிகாரிகள் இவர்கள் ஆயிரம் பேர்கள் சேர்ந்து கிராமத்திற்குப்போய் முற்றுகையிட்டு கெடுபிடி செய்து, ஜப்தி செய்து வசூல் செய்கிற அந்தத் தன்மை வேறு. நம்முடைய பாராளுமன்றத்தில் முதல் அமைச்சர் அவர்களுக்கு இன்று எவ்வளவு பாக்கியிருந்தாலும் சரி எவ்வளவு பெருந்



தன்மையோடு அவர்களுக்கு ரூ. 7,81,000 பாக்கியிருக்கிறது, விரைவில் கட்டிவிடுவார்கள் என்று நம்புகிறேன் என்று சொல்லக் கூடிய அளவிற்கு நம் மத்திய நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிச் சிந்தித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே இப்படி கிராமங்களில் கெடுபிடி வசூலை நிறுத்துங்கள். இங்கே பேசும் போது சொன்னார்கள், அமைதிப் பூங்கா என்று. ஆகவே அப்படிப்பட்ட அமைதிப் பூங்காவாக உருவாக்குங்கள் தமிழ் நாட்டை. ஆகவே கிராமங்களில் உள்ள விவசாய மக்களிடம் கெடுபிடி செய்யாதீர்கள், இடையூறு செய்யாதீர்கள் என்று சொல்லிக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கோரியுள்ள மானியங்கள் மீது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை அனுபவத்தின் கருவூலமாக அதை ஆக்கி இங்கே தந்திருக்கிறார்கள். அனுபவத்தை நாம் மதிக்காவிட்டால் உண்மையை நாம் பெறமுடியாது, சந்திக்க முடியாது என்ற நிலமை ஏற்பட்டுவிடும். அந்த வகையில் இந்த மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பில் ஒரு விளக்கத்தை நான் முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உங்களுக்கெல்லாம் தெரிந்தது தான். புதிதாக எதுவும் சொல்லப் போவதில்லை.

ஆங்கிலேயர்கள் இந்தியத் துணைக் கண்டத்தை பல்வேறு பிரிவுகளாக, சிற்றரசுகளாக அரசுகளாக, இருந்ததை ஒன்றாக்கி இந்திய துணைக்கண்டம் என்று அதற்கு பெயரிட்டு இதை ஒரு மாபெரும் நிலப்பரப்பாக உருவாக்கினார்கள் என்றால் அது அவர்கள் அவர்களுடைய வியாபாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள; அந்த வியாபாரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் அதை செம்மைப்படுத்திக் கொள்ளவும் கொஞ்சம் கொஞ்சமாக இந்த நாட்டை அவர்கள் அவர்களது ஆட்சிக்கு உட்படுத்திக் கொண்டு அவர்கள் மிகப் பெரிய வல்லரசாக தோற்றம் அளிப்பதற்கு உதவியாக இருந்தது. காரணம், வழக்கம் போல் இந்திய துணைக்கண்டத்திலிருக்கிற பல்வேறு மக்கள் பிரிவுகள், பிரிவு மனப்பான்மைக்கு அடிமையாகி எப்படி யாவது நாங்கள் பதவிக்கு வந்தால் போதும் அல்லது வாழ்வு கிடைத்தால் போதும் எங்களுக்கு என்ற எண்ணத்தில் அவர்கள் ஒத்துழைத்ததின் விளைவுதான் இன்றைக்கு இப்படி இந்த இந்திய பூபரப்பைக் காண்கிறோம். அந்த வகையில் அங்கங்கே அவர்கள் ஏற்படுத்திய அமைப்புகள்தான் இன்னமும் இங்கே இதுபோன்ற நிர்வாகத்தில் இருக்கிறது என்பதை நாம் ஒருகணம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். உங்களுக்குத் தெரிந்தது தான், அதை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாவிட்டால் அதை முன்னிருத்திக்கொண்டு என் கருத்தைப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜில்லா போர்ட் என்று ஒன்றிருக்கிறது என்று சொல்ல முடியாது ஆனால் ஜில்லா பரீஷத் என்று வேறு மாநிலங்களில் இருக்கின்றன. இங்கே மூன்று ஆட்சி இருந்தது. இப்போது இரண்டு ஆட்சிதான். மாவட்ட ஆட்சி, மாநில ஆட்சி. முன்பு ஜில்லா போர்ட் என்று

இருந்தது. அது இப்போது இல்லை என்பதை நினைவுபடுத்திக் கொண்டால் இங்கே பேசிய கருத்துக்களை இதைப்பற்றி வெளியிட்டவர்கள் அதை நினைவுப்படுத்திக்கொண்டு, பேசியதை கொஞ்சம் கூர்ந்து மனதில்கொண்டு வந்து நிறுத்தி அதைப்பற்றி விமர்சிக்க விரும்பினால் அந்தப் பேச்சு தேவையற்றதாகக் கூட அவர்களுக்குத் தோன்றி விடலாம் என்பதில் சந்தேகமில்லை.

இன்னும் இதுபோன்ற பல பிரச்னைகளை இங்கே பேசியிருக்கிறார்கள். ஒரு நிர்வாகம் என்றால் அடித்தளத்திலிருந்து உயர் மட்டம் வரையில் ஒரே வழியான ஒரே மாதிரியான வழக்குகளை அதாவது பரம்பரையாக கிடைத்தாலும் சரி பாதியில் ஏற்பட்டாலும் சரி இதுதான வரலாறு என்று சொன்னாலும்சரி.

[முற்பகல் 9.50]

அந்த வகையில் அதை வைத்துக்கொண்டு, அந்தப் பின்னணியை நாம் கவனித்துப் பார்த்தால், அந்த நிர்வாகத்தினுடைய தொடர்பு, எங்கே, எந்த இடத்திலும், தலைமையில் என்ன சொல்கிறோமோ, நிறைவேற்றுகிறோமோ, உருவாக்குகிறேமோ, அதை செய்து, சொல்லி அல்லது திட்டமிடுகின்ற நிலைமைகள் நாட்டிலே இருந்தாக வேண்டும். அது இன்று இல்லை. அதை மாமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். இந்த ஒருமித்த கருத்து இல்லை என்பதால்தான், ஆங்காங்கே நிர்வாகத்தில் சீர்கேடு, குழப்படி அல்லது தாமதம் இவைகள் எல்லாம் ஏற்படுகின்றது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஊராட்சியிலிருந்து மாநில ஆட்சி வரையில் ஜனநாயகம் இருந்தாக வேண்டும். அது முன்னோர்களுடைய கருத்து, நம்முடைய கருத்தும்கூட. அதற்காக நாம் முயன்று கொண்டிருக்கிறோம்.

இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்ற பிறகு, வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்று சொன்ன பிறகு, உலகத்திலே முதல் முன்னுரிமைப் பெறக்கூடிய, அதிக மக்களைக் கொண்ட வாக்குகளை அளிக்கின்ற ஜனநாயகத்தை நடத்திச் செல்லுகின்ற நாடு இந்தியா என்று சொல்ல நமக்கு உரிமை இருக்கிறது. அதைப் பெற்ற பின்னரும்கூட, அதை நிறைவேற்றுவதில் நாம் எந்தெந்த வகையில் அதைப் பயன்படுத்திக் கொண்டோம் என்பதை எண்ணிப் பார்த்தால், வாக்குகள் அளிக்கப்படுகின்றன; தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஊராட்சி மன்றங்களிலே முன்னால் இருந்த நிலைமைகளை எண்ணிப் பார்ப்போம். அந்த ஊராட்சி ஒன்றியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் காப்பதற்கே ஒரு பெரிய படை தேவைப்பட்டது. ஊராட்சி மன்றங்களிலே தலைவர் தேர்தல் இல்லாத காரணத்தினால், எந்தக் கட்சியாக இருந்தாலும், எந்த ஜாதியை சார்ந்தவர்களாக இருந்தாலும்; எந்தக் கொள்கையை சார்ந்தவர்களாக இருந்தாலும், பதவி ஏற்றுக் கொண்டிருந்தாலும்கூட, வற்புறுத்தல், எச்சரிக்கை, பயமுறுத்தல், கடத்தல்—பொருள்களை கடத்துதல் என்று சொல்வார்கள், இப்போதெல்லாம் பதவிக்காக ஆட்களைக் கடத்துதல்— [illegible] நிலைமைகள் இருந்தன என்பதையும்



அதிலே ஊராட்சி மன்றத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு மக்களுக்கு உரிமை அளிக்கப்பட்ட பிறகு அது குறைந்தது என்பதையும் நாம் காண்கிறோம். ஆனால், ஒன்றியத்தில் அது இல்லை. அதனால், பிரச்னை உருவாகிறது. மக்களால் தேர்ந்தெடுப்பட்ட ஒரு தலைவர் இல்லை என்கிற வகையில் அந்த உறுப்பினர்கள் தயவில் இருக்கவேண்டிய அவர்கள், அந்த உறுப்பினர்கள் பிரச்னையில் வசதியுள்ளவர்கள் வன்முறையில் அதிக காரியங்களைச் செய்யக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்கள் தங்களுடைய பதவியைப் பெற எப்படியெல்லாம் விளையாடினார்கள், விளையாடிக் கொண்டிருந்தார்கள் என்பதை நாம் கவனப்படுத்திக் கொள்வது நமது கடமை என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதையும் மாற்றி, அந்த ஒன்றியத் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு முடிவெடுத்தது, உங்கள் அனுமதியுடன். அதைப்போல், நகர சபையிலும் இன்று அந்த நிலைமை—சில தாழ்த்தப்பட்டவர்களுக்கு, தாய்மார்களுக்கு எல்லாம் அதிலே விகிதாசாரப் பிரதிநிதித்துவம் கொடுக்க முடியவில்லை, குறிப்பிட்ட அளவிற்கு இருந்தாக வேண்டும், கொடுக்கப்பட வேண்டுமென்ற நிலைமையை நாம் உருவாக்கினோம். நாம் உருவாக்கியிருக்கிறோம் என்றால், நாம் எந்த எண்ணத்தை நல்ல நோக்கத்தோடு சொன்னோமோ மக்கள் வாக்குகளைப் பெற்று வந்திருக்கின்ற நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்கள். அது சட்டமாக இருக்கிறது, செயல் ஆக்கப்பட இருக்கிறது. தேர்தலை விரைவிலே நடத்தவேண்டும் என்று பல்வேறு எண்ணங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். எந்தப் பிரச்னைகள், எந்தக் கோரிக்கைகள் முன்வைத்தாலும், இது போன்ற மானிய கோரிக்கைகள் வந்தபோதெல்லாம், இந்தப் பிரச்னையில் எங்கே ஊராட்சி ஒன்றியத் தேர்தல் என்று கேட்கிறீர்கள். நாங்களும் கேட்டுக் கொள்கிறோம்.

18 வயது வந்தவர்கள் வரையில் வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற கருத்தை ஒருகாலத்தில் ஏற்றுக்கொண்டீர்கள். அந்த வகையிலே இந்த அவையும் ஏற்றுக்கொண்டது. ஆனால் அதற்குள் இந்தியாவிலே ஒட்டு மொத்தமாக மக்களுடைய தொகையை கணக்கெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதால், தாமதிக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டது. ஒரு ஆண்டு காலம், ஆறு மாத காலம் என்று வைத்தால் கூட, அல்லது இரண்டு மாதம் வைத்தால், அல்லது இரண்டு மணி நேரம் என்று வைத்துக் கொண்டால் கூட 18 வயதான பல பேர்கள் அதிலே விடுபட்டு போயிருப்பார்கள். இதை கணக்கிடும்போது 18 வயதானவர்கள் பற்றி நாளைய தினம் இந்த கணக்கு எடுக்கும் பொழுது இந்த எண்ணிக்கை கூடும். இந்த நிலையில் ஜூன் மாதம் முடிய எந்தவிதமான மாறுதல்களையும் அமைப்புகளிலே செய்ய வேண்டாம் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டது. இது அவர்களுடைய திட்டத்திற்கு உதவும் என்கிற வகையில் அதை நாம் ஏற்றுக் கொண்டோம். அந்த வகையிலே நாம் கொஞ்சம் தாமதித்திருக்கிறோம். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டவுடனே அந்தத் தேர்தல்களைப் பற்றி முடிவெடுக்க நாம் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்திலே இந்த அமைச்சரவையின் சார்பாக சொல்லப்பட்டது. இன்னும்

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றும் சொல்கிறேன் இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல இந்த தொடர் கூட்டம் முடிந்த பிறகு ஒருசில நாட்களுக்குள் உங்கள் பிரதிகளை எல்லாம், வெளியே இருக்கிற கட்சிகளின் பிரதிநிதிகளை எல்லாம் அழைத்து எந்த தேதியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை வைத்துக் கொள்ளலாம் என்று இந்த குழுவிலே முடிவெடுக்கிறதோ, அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே உறுதி கூறிக்கொள்கிறேன். அதிலே மாற்றம் கிடையாது, சந்தேகமே இனி தேவையிருக்காது; அதில் ஐயப்பாடு எழக்கூடிய செய்திகள் இனிமேல் ஏடுகளில் கூட வராது என்று நான் எதிர்பார்க்கிறேன், நம்புகிறேன். அந்த பிரச்னையை நாம் இந்த அளவில் விட்டு விட்டு, இந்த ஜனநாயக தன்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு. இந்த மாநில அமைப்பு உங்கள் அதிகாரத்தின், அனுமதியின் பேரில் சில சட்டங்களை அமலாக்க முடியும்போது அதற்கு ஆதரவு தரப்படுகிற நிலைமை எவ்வளவு என்பதை நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம் நாம் அதைக் கணக்கிட்டு பார்க்கிற போது தான், இங்கே சொன்னவர்கள் கூட வெளியே பேசும்பொழுது குழுவிலே ஒத்துக் கொண்டவர்கள் கூட வேறு கருத்தை சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை நான் இங்கே நினைவு கூற விரும்புகிறேன். எந்த சூழ்நிலையில் என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அப்படி செய்தாக வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏற்றுக் கொள்ள வேண்டிய, சந்திக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். உதாரணமாக நான் ஒன்றைச் சொல்லலாம். மொழிப் பிரச்சினையோ, தண்ணீர் பிரச்சினையோ, நகர மாற்றங்கள் பற்றியோ, மாவட்ட பிரிவினை பற்றியோ இவைகள் எல்லாவற்றையும் பற்றியும் நாம் எந்த கருத்துக்களைச் சொன்னாலும், வெளியே போய் 15 நாட்கள், ஒரு மாதம் ஆன பிறகு எந்த கட்சியை சார்ந்தவர்களும், அவர்களுக்கு ஆதரவு தந்த மக்களின் கருத்தை ஏற்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தத்திலோ அல்லது அவர்கள் கட்சி மேலிடம் சொல்கிறது என்கிற காரணத்தினலோ சில எண்ணங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

அந்த வகையில் இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும், பிரிப்போம் என்பதை நான் முன்னமே சொல்லியிருக்கிறேன். ஒரு பகுதிக்கு தேவர் பெயரை சேர்த்து இணைப்போம் என்பதை இந்த மாமன்றத்திலே கூட சொல்லியிருக்கிறேன். ஆனால் அதை எடுத்துக் கொள்வதற்கு முன் அதை அமலுக்கு கொண்டு வந்த எந்த பகுதி எந்த பிரிவிற்கு தலைநகராக ஆக்கவேண்டும் என்கிற பிரச்சினையை பற்றியெல்லாம் அதிகாரிகளோடு ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்பாகவே சிலருக்கு சில தேவைகள், இங்கே இருக்கிற மக்களுடைய வற்புறுத்தல்கள், அவைகளால் இந்த இ[illegible]த்தை தான் தலைநகராக்க வேண்டும், இன்னென்ன கா[illegible]ல் என்று ஒரு நல்ல விவரம் தெரிந்த. திறமை[illegible]



கூடிய வழக்கறிஞர்கள் கூட தங்களுடைய எண்ணங்களை வெளியிட முன் வருகிறார்கள். அதிலே நான் குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் இராமநாதபுரம் மாவட்டத்தை எவ்வளவு விரைவில் பிரிக்க வேண்டும், அதை மேற்கு இராமநாதபுரம் மாவட்டம், கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் என்று; இன்று கூட சொன்னார்கள் அந்த கிழக்கும், மேற்கும் என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் கூட, தெற்கு வடக்கு என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் கூட, இதிலும் வடக்கு இந்த விஷயங்களிலே உயர்ந்திருக்கிறதா, தாழ்ந்திருக்கிறதா அல்லது தென்னகம் உயர்ந்திருக்கிறதா தாழ்ந்திருக்கிறதா என்பதை பார்க்க விரும்பாவிட்டாலும் கூட பிரச்சினையை முன் நிறுத்தும் போது, இந்தப் பகுதியில வளர்ச்சி இல்லை, ஆகவே அதற்கு இதைத் தலைநகராக்க வேண்டும் என்றெல்லாம் சொல்கிற நிலைமை உருவாகிறது. இதைவிட மிகப் பெரிய இராணுவ போராட்டம் போல உருவாக்கி விடலாமா என்று கூட சிலர் இதை பயன்படுத்தி அரசியல் லாபம் பெறக் கூட விரும்புகிறார்கள், என்பதையும் சிலர் பேச்சிலிருந்து நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

[முற்பகல் 10·00]

ஒன்றைக் குறிப்பிட நான் மிகவும் ஆவலோடு விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையில் தஞ்சையானாலும் சரி, மதுரையானாலும்சரி, கோவையைப் பிரித்துவிட்டோம்—வட ஆற்காடானாலும்சரி, தென்னாற்காடானாலும்சரி இதுபோன்ற மாவட்டங்களைப் பிரிக்கும்போது அந்த மாவட்டங்களின் தலைநகர் என்ன எங்கே என்பதை மக்களுடைய வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றுவதுதான் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாமருந்து என்று இந்த அமைச்சரவை கருதுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் ஏதோ விருப்பு வெறுப்புகளுக்குட்பட்டு யாருக்காகவோ சில காரியங்களைச் செய்வதுபோல சிலர் நினைக்கின்றார்கள். அந்த வகையில் நான் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே எந்தப் பகுதி எதோடு இணைக்கப்பட வேண்டுமென்பதில் அவ்வளவு அக்கறை இல்லை. பிரச்சினைகளைச் சுமுகமாக தீர்ப்பதற்காக எளிமையான முறையான முறையிலே தீர்க்கப்படுவதற்காக எவ்வளவோ திட்டங்களை எண்ணங்களை எல்லாம் நிறைவேற்றக்கூடிய எவ்வளவு குறுகிய அளவில் அந்த அதிகார வரம்பை குறைத்துப் பிரித்து வைக்கிறோமோ அந்த அளவுக்குக் காரியங்கள் விரைவில் குழப்பமின்றி மற்றவர்கள் குறை கூற இடமின்றி செயல்பட்டு நிறைவேற்றப்பட வழிவகுக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். திண்டுக்கல் பற்றி மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் சொன்னார்கள். எங்கள் பக்கத்திலேயும் சொன்னார்கள், மற்ற நண்பர்களும் சொல்கிறார்கள், இல்லையென்று சொல்லவில்லை. அது திண்டுக்கல்தானா என்பதை முடிவு செய்யவேண்டிய நிலைமை அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கவேண்டும். அதைப் போலவே இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு எது எது எங்கு என்று தீர்மானிக்கிற உரிமையை அந்த மக்களுக்கு அளிப்பது பிரச்சினையைத் தீர்க்கும். வேறு எந்த வகையில் செய்தாலும் அது பிரச்சினையாகிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருந்தது. அது இப்போது இல்லை என்பதை நினைவுபடுத்திக் கொண்டால் இங்கே பேசிய கருத்துக்களை இதைப்பற்றி வெளியிட்டவர்கள் அதை நினைவுப்படுத்திக்கொண்டு, பேசியதை கொஞ்சம் கூர்ந்து மனதில்கொண்டு வந்து நிறுத்தி அதைப்பற்றி விமர்சிக்க விரும்பினால் அந்தப் பேச்சு தேவையற்றதாகக் கூட அவர்களுக்குத் தோன்றி விடலாம் என்பதில் சந்கேதமில்லை.

இன்னும் இதுபோன்ற பல பிரச்னைகளை இங்கே பேசியிருக்கிறார்கள். ஒரு நிர்வாகம் என்றால் அடித்தளத்திலிருந்து உயர் மட்டம் வரையில் ஒரே வழியான ஒரே மாதிரியான வழக்குகளை அதாவது பரம்பரையாக கிடைத்தாலும் சரி பாதியில் ஏற்பட்டாலும் சரி இதுதான வரலாறு என்று சொன்னாலும்சரி.

[முற்பகல் 9.50]

அந்த வகையில் அதை வைத்துக்கொண்டு, அந்தப் பின்னணியை நாம் கவனித்துப் பார்த்தால், அந்த நிர்வாகத்தினுடைய தொடர்பு, எங்கே, எந்த இடத்திலும், தலைமையில் என்ன சொல்கிறோமோ, நிறைவேற்றுகிறோமோ, உருவாக்குகிறேமோ, அதை செய்து, சொல்லி அல்லது திட்டமிடுகின்ற நிலைமைகள் நாட்டிலே இருந்தாக வேண்டும். அது இன்று இல்லை. அதை மாமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். இந்த ஒருமித்த கருத்து இல்லை என்பதால்தான், ஆங்காங்கே நிர்வாகத்தில் சீர்கேடு, குழப்படி அல்லது தாமதம் இவைகள் எல்லாம் ஏற்படுகின்றது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஊராட்சியிலிருந்து மாநில ஆட்சி வரையில் ஜனநாயகம் இருந்தாக வேண்டும். அது முன்னோர்களுடைய கருத்து, நம்முடைய கருத்தும்கூட. அதற்காக நாம் முயன்று கொண்டிருக்கிறோம்.

இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்ற பிறகு, வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்று சொன்ன பிறகு, உலகத்திலே முதல் முன்னுரிமைப் பெறக்கூடிய, அதிக மக்களைக் கொண்ட வாக்குகளை அளிக்கின்ற ஜனநாயகத்தை நடத்திச் செல்லுகின்ற நாடு இந்தியா என்று சொல்ல நமக்கு உரிமை இருக்கிறது. அதைப் பெற்ற பின்னரும்கூட, அதை நிறைவேற்றுவதில் நாம் எந்தெந்த வகையில் அதைப் பயன்படுத்திக் கொண்டோம் என்பதை எண்ணிப் பார்த்தால், வாக்குகள் அளிக்கப்படுகின்றன; தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஊராட்சி மன்றங்களிலே முன்னால் இருந்த நிலைமைகளை எண்ணிப் பார்ப்போம். அந்த ஊராட்சி ஒன்றியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் காப்பதற்கே ஒரு பெரிய படை தேவைப்பட்டது. ஊராட்சி மன்றங்களிலே தலைவர் தேர்தல் இல்லாத காரணத்தினால், எந்தக் கட்சியாக இருந்தாலும், எந்த ஜாதியை சார்ந்தவர்களாக இருந்தாலும்; எந்தக் கொள்கையை சார்ந்தவர்களாக இருந்தாலும், பதவி ஏற்றுக் கொண்டிருந்தாலும்கூட, வற்புறுத்தல், எச்சரிக்கை, பயமுறுத்தல், கடத்தல்—பொருள்களை கடத்துதல் என்று சொல்வார்கள், இப்போதெல்லாம் பதவிக்சாக ஆட்களைக் கடத்துதல்—இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தன என்பதையும்



அதிலே ஊராட்சி மன்றத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு மக்களுக்கு உரிமை அளிக்கப்பட்ட பிறகு அது குறைந்தது என்பதையும் நாம் காண்கிறோம். ஆனால், ஒன்றியத்தில் அது இல்லை. அதனால், பிரச்னை உருவாகிறது. மக்களால் தேர்ந்தெடுப்பட்ட ஒரு தலைவர் இல்லை என்கிற வகையில் அந்த உறுப்பினர்கள் தயவில் இருக்கவேண்டிய அவர்கள், அந்த உறுப்பினர்கள் பிரச்னையில் வசதியுள்ளவர்கள் வன்முறையில் அதிக காரியங்களைச் செய்யக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்கள் தங்களுடைய பதவியைப் பெற எப்படியெல்லாம் விளையாடினார்கள், விளையாடிக் கொண்டிருந்தார்கள் என்பதை நாம் கவனப்படுத்திக் கொள்வது நமது கடமை என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதையும் மாற்றி, அந்த ஒன்றியத் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு முடிவெடுத்தது, உங்கள் அனுமதியுடன். அதைப்போல், நகர சபையிலும் இன்று அந்த நிலைமை—சில தாழ்த்தப்பட்டவர்களுக்கு, தாய்மார்களுக்கு எல்லாம் அதிலே விகிதாசாரப் பிரதிநிதித்துவம் கொடுக்க முடியவில்லை, குறிப்பிட்ட அளவிற்கு இருந்தாக வேண்டும், கொடுக்கப்பட வேண்டுமென்ற நிலைமையை நாம் உருவாக்கினோம். நாம் உருவாக்கியிருக்கிறோம் என்றால், நாம் எந்த எண்ணத்தை நல்ல நோக்கத்தோடு சொன்னோமோ மக்கள் வாக்குகளைப் பெற்று வந்திருக்கின்ற நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்கள். அது சட்டமாக இருக்கிறது. செயல் ஆக்கப்பட இருக்கிறது. தேர்தலை விரைவிலே நடத்தவேண்டும் என்று பல்வேறு எண்ணங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். எந்தப் பிரச்னைகள், எந்தக் கோரிக்கைகள் முன்வைத்தாலும், இது போன்ற மானிய கோரிக்கைகள் வந்தபோதெல்லாம், இந்தப் பிரச்னையில் எங்கே ஊராட்சி ஒன்றியத் தேர்தல் என்று கேட்கிறீர்கள். நாங்களும் கேட்டுக் கொள்கிறோம்.

18 வயது வந்தவர்கள் வரையில் வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற கருத்தை ஒருகாலத்தில் ஏற்றுக்கொண்டீர்கள். அந்த வகையிலே இந்த அவையும் ஏற்றுக்கொண்டது. ஆனால் அதற்குள் இந்தியாவிலே ஒட்டு மொத்தமாக மக்களுடைய தொகையை கணக்கெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதால், தாமதிக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டது. ஒரு ஆண்டு காலம், ஆறு மாத காலம் என்று வைத்தால் கூட, அல்லது இரண்டு மாதம் வைத்தால், அல்லது இரண்டு மணி நேரம் என்று வைத்துக் கொண்டால் கூட 18 வயதான பல பேர்கள் அதிலே விடுபட்டு போயிருப்பார்கள். இதை கணக்கிடும்போது 18 வயதானவர்கள் பற்றி நாளைய தினம் இந்த கணக்கு எடுக்கும் பொழுது இந்த எண்ணிக்கை கூடும். இந்த நிலையில் ஜூன் மாதம் முடிய எந்தவிதமான மாறுதல்களையும் அமைப்புகளிலே செய்ய வேண்டாம் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டது. இது அவர்களுடைய திட்டத்திற்கு உதவும் என்கிற வகையில் அதை நாம் ஏற்றுக் கொண்டோம். அந்த வகையிலே நாம் கொஞ்சம் தாமதித்திருக்கிறோம். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டவுடனே அந்தத் தேர்தல்களைப் பற்றி முடிவெடுக்க நாம் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்திலே இந்த அமைச்சரவையின் சார்பாக சொல்லப்பட்டது. இன்னும்

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றும் சொல்கிறேன் இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல இந்த தொடர் கூட்டம் முடிந்த பிறகு ஒருசில நாட்களுக்குள் உங்கள் பிரதிகளை எல்லாம், வெளியே இருக்கிற கட்சிகளின் பிரதிநிதிகளை எல்லாம் அழைத்து எந்த தேதியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை வைத்துக் கொள்ளலாம் என்று இந்த குழுவிலே முடிவெடுக்கிறதோ, அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே உறுதி கூறிக்கொள்கிறேன். அதிலே மாற்றம் கிடையாது, சந்தேகமே இனி தேவையிருக்காது; அதில் ஐயப்பாடு எழக்கூடிய செய்திகள் இனிமேல் ஏடுகளில் கூட வராது என்று நான் எதிர்பார்க்கிறேன், நம்புகிறேன். அந்த பிரச்னையை நாம் இந்த அளவில் விட்டு விட்டு, இந்த ஜனநாயக தன்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு. இந்த மாநில அமைப்பு உங்கள் அதிகாரத்தின், அனுமதியின் பேரில் சில சட்டங்களை அமலாக்க முடியும்போது அதற்கு ஆதரவு தரப்படுகிற நிலைமை எவ்வளவு என்பதை நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம் நாம் அதைக் கணக்கிட்டு பார்க்கிற போது தான், இங்கே சொன்னவர்கள் கூட வெளியே பேசும்பொழுது குழுவிலே ஒத்துக் கொண்டவர்கள் கூட வேறு கருத்தை சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை நான் இங்கே நினைவு கூற விரும்புகிறேன். எந்த சூழ்நிலையில் என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அதை செய்தாக வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏற்றுக் கொள்ள வேண்டிய, சந்திக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். உதாரணமாக நான் ஒன்றைச் சொல்லலாம். மொழிப் பிரச்சினையோ, தண்ணீர் பிரச்சினையோ, நகர மாற்றங்கள் பற்றியோ, மாவட்ட பிரிவினை பற்றியோ இவைகள் எல்லாவற்றையும் பற்றியும் நாம் எந்த கருத்துக்களைச் சொன்னாலும், வெளியே போய் 15 நாட்கள், ஒரு மாதம் ஆன பிறகு எந்த கட்சியை சார்ந்தவர்களும், அவர்களுக்கு ஆதரவு தந்த மக்களின் கருத்தை ஏற்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தத்திலோ அல்லது அவர்கள் கட்சி மேலிடம் சொல்கிறது என்கிற காரணத்தினலோ சில எண்ணங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

அந்த வகையில் இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும், பிரிப்போம் என்பதை நான் முன்னமே சொல்லியிருக்கிறேன். ஒரு பகுதிக்கு தேவர் பெயரை சேர்த்து இணைப்போம் என்பதை இந்த மாமன்றத்திலே கூட சொல்லியிருக்கிறேன். ஆனால் அதை எடுத்துக் கொள்வதற்கு முன் அதை அமலுக்கு கொண்டு வந்த எந்த பகுதி எந்த பிரிவிற்கு தலைநகராக ஆக்கவேண்டும் என்கிற பிரச்சினையை பற்றியெல்லாம் அதிகாரிகளோடு ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்பாகவே சிலருக்கு சில தேவைகள், இங்கே இருக்கிற மக்களுடைய வற்புறுத்தல்கள், அவைகளால் இந்த இந்த நகரத்தை தான் தலைநகராக்க வேண்டும், இன்னென்ன காரணங்களால் என்று ஒரு நல்ல விவரம் தெரிந்த, திறமையோடு வாதாடக்



கூடிய வழக்கறிஞர்கள் கூட தங்களுடைய எண்ணங்களை வெளியிட முன் வருகிறார்கள். அதிலே நான் குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் இராமநாதபுரம் மாவட்டத்தை எவ்வளவு விரைவில் பிரிக்க வேண்டும், அதை மேற்கு இராமநாதபுரம் மாவட்டம், கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் என்று; இன்று கூட சொன்னார்கள் அந்த கிழக்கும், மேற்கும் என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் கூட, தெற்கு வடக்கு என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் கூட, இதிலும் வடக்கு இந்த விஷயங்களிலே உயர்ந்திருக்கிறதா, தாழ்ந்திருக்கிறதா அல்லது தென்னகம் உயர்ந்திருக்கிறதா தாழ்ந்திருக்கிறதா என்பதை பார்க்க விரும்பாவிட்டாலும் கூட பிரச்சினையை முன் நிறுத்தும் போது, இந்தப் பகுதியில் வளர்ச்சி இல்லை, ஆகவே அதற்கு இதைத் தலைநகராக்க வேண்டும் என்றெல்லாம் சொல்கிற நிலைமை உருவாகிறது. இதைவிட மிகப் பெரிய இராணுவ போராட்டம் போல உருவாக்கி விடலாமா என்று கூட சிலர் இதை பயன்படுத்தி அரசியல் லாபம் பெறக் கூட விரும்புகிறார்கள், என்பதையும் சிலர் பேச்சிலிருந்து நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

[முற்பகல் 10·00]

ஒன்றைக் குறிப்பிட நான் மிகவும் ஆவலோடு விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையில் தஞ்சையானாலும் சரி, மதுரை—யானாலும்சரி, கோவையைப் பிரித்துவிட்டோம்—வட ஆற்காடானாலும்சரி, தென்னாற்காடானாலும்சரி இதுபோன்ற மாவட்டங்களைப் பிரிக்கும்போது அந்த மாவட்டங்களின் தலைநகர் என்ன எங்கே என்பதை மக்களுடைய வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றுவதுதான் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாமருந்து என்று இந்த அமைச்சரவை கருதுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் ஏதோ விருப்பு வெறுப்புகளுக்குட்பட்டு யாருக்காகவோ சில காரியங்களைச் செய்வதுபோல சிலர் நினைக்கின்றார்கள். அந்த வகையில் நான் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே எந்தப் பகுதி எதோடு இணைக்கப்பட வேண்டுமென்பதில் அவ்வளவு அக்கறை இல்லை. பிரச்சினைகளைச் சுமுகமாக தீர்ப்பதற்காக எளிமையான முறையான முறையிலே தீர்க்கப்படுவதற்காக எவ்வளவோ திட்டங்களை எண்ணங்களை எல்லாம் நிறைவேற்றக்கூடிய எவ்வளவு குறுகிய அளவில் அந்த அதிகார வரம்பை குறைத்துப் பிரித்து வைக்கிறோமோ அந்த அளவுக்குக் காரியங்கள் விரைவில் குழப்பமின்றி மற்றவர்கள் குறை கூற இடமின்றி செயல்பட்டு நிறைவேற்றப்பட வழிவகுக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். திண்டுக்கல் பற்றி மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் சொன்னார்கள். எங்கள் பக்கத்திலேயும் சொன்னார்கள், மற்ற நண்பர்களும் சொல்கிறார்கள், இல்லையென்று சொல்லவில்லை. அது திண்டுக்கல்தானா என்பதை முடிவு செய்யவேண்டிய நிலைமை அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கவேண்டும். அதைப் போலவே இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு எது எது எங்கு என்று தீர்மானிக்கிற உரிமையை அந்த மக்களுக்கு அளிப்பது பிரச்சினையைத் தீர்க்கும். வேறு எந்த வகையில் செய்தாலும் அது பிரச்சினையாகிவிடும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது அதைப்போல் மாவட்ட வளர்ச்சி மன்ற குழுக்கள் தங்களுடைய பணியை ஒழுங்காகச் செய்கிறதா, செய்யப்படுகிறதா, கேள்வி கேட்கப்பட்டது இங்கே. எனக்குத் தெரிந்து விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். முதலில் அமரர் அண்ணா அவர்கள் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதல்வராக இருந்தபோது தண்டலம் என்ற ஊருக்கு அவர்களை அழைத்துச் சென்று மக்களுடைய எண்ணங்களை எல்லாம் சொல்லச் செய்து அதை முறையாக ஏற்படுத்தித் தந்து வழியைக் காட்டினார்கள். எந்த அளவில் நிறைவேற்றப்பட்டது என்பதைப்பற்றி விமர்சனம் செய்ய இந்த நேரத்தை பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதைப்பற்றி மட்டுமல்ல, இன்றைக்கு மனுநீதி என்று சொல்லப்பட்டது. இங்கே சொன்னவுடனே இப்போது மனுநீதியை எரித்ததாக சொல்கிறார்களே அந்த மனுநீதி அல்ல, நான் சொல்வது மனு கொடுக்கிற அந்த மக்களுக்கு நீதி வழங்குகிற தன்மை. ஆகவே அதை நிறைவேற்றமுயன்றார்கள்முயன்றும்எத்தனையோ. அதிகாரிகளை உடன் அழைத்துச் சென்று சொல்லிச் செய்தும் அவர்கள் முழுமையாக அந்தப் பணிகளைச் செய்து இருப்பார்களானால் இந்த அரசுக்கோ இந்த மாமன்றத்திற்கோ இவ்வளவு பிரச்சினைகள் இருந்திருக்காது, அதை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு என்ன காரணம் என்பதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நிறைவேற்ற முடியாமல் போனதற்கு உடனுக்குடன் உள்ள பிரச்சினையாக அதை மக்கள் கருதினார்கள், ஆராய்ந்து பார்த்து பதில் சொல்லவேண்டிய பிரச்சினை என்று அதிகாரிகள் நினைத்தார்கள். அதன் விளைவாகத்தான் நாளுக்கு நாள் அது இல்லாமற்போய்விட்டது. அதைப்போல் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ அதிகாரி வரம்புக்குட்பட்ட பட்டாக்கள் போன்றவைகளை கொடுப்பது பற்றி எல்லாம் ஒட்டுமொத்தமாக ஒரு நல்ல கருத்தைச் சொல்லி, இதைச் சொன்னார்கள். ஆனால் சொன்னால் கூட நிறைவேற்றப்படுகிறதா என்று கேட்கும்பொழுது இல்லையென்று சொன்னார்கள்.

இன்றைய தினம் கிராம அதிகாரிகள் தங்கள் பணிகளைச் சரிவர செய்ய முடியாததால் அவர்களுக்கு வேலை இல்லாமல் போய்விட்டது. ஆகவே அதனால் 3 செலவுகள் ஏற்பட்டுவிட்டது, என்று அரசியலை, சட்டத்தை, வரலாற்றை அன்றாடம் நடைபெற்ற நிகழ்ச்சியை முதன்முதலில் தெரிந்த அதைப்பற்றி கவனித்துச் சொல்லுகிற வாய்ப்பைப் பெற்றுக்கொண்டிருக்கின்ற பெற்றிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த அதிகாரிகள் இருந்தபோது சாதாரண மக்கள் கொத்தடிமைகளாக இருக்கிற நிலைமை கிராமங்களில் இருந்தது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது என்பதை நான் கொஞ்சம் துணிந்தே சொல்கிறேன். சிலர் தவறு செய்திருக்கலாம்; பெரும்பான்மையானவர்கள் தவறு செய்யவில்லை என்று கூறலாம். ஆக சிலர் என்று அந்தப் பக்கத்திலே உள்ளவர்கள் சொன்னாலும், பலர் என்று இந்தப் பக்கத்திலே உள்ளவர்கள் சொன்னாலும், எது எப்படியிருந்தாலும், அந்தக் கிராம மக்கள் நலன் பெற



முடியவில்லை இந்தப் பரம்பரை உரிமையால் என்பதையும், அதற்கு ஒத்தாசை செய்த சட்டங்களும் பின்னால் உதவி செய்யவில்லை. மேலும் அந்த நிர்வாக அமைப்பை மாற்ற சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி உத்தரவை போட்டோம் என்பதையும், அது இன்றையதினம் சட்டமாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் சொல்லிக் கொள்கிறேன், நினைவுபடுத்திக்கொள்கிறேன்.

ஆனால், இந்தக் கிராம அதிகாரிகள் கலெக்டரையும் மதிப்பதில்லை—மதித்தது இல்லை. பெரும்பாலும் என்று வேண்டுமானால் வைத்துக்கொள்வோம் சிலருடைய ஆத்ம திருப்திக்காக. கலெக்டரை மட்டுமல்ல; கோட்டாட்சித் தலைவராக இருந்தாலும் சரி, வட்டாட்சித் தலைவராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் எந்த அதிகாரியாக இருந்தாலும் கொஞ்சம் கூட கவலைப்படுவதில்லை; அக்கறைப்படுவதில்லை என்பதையும் காவல்துறையைச் சேர்ந்தவர்களைப்பற்றிக் கூடச் சொல்லப் போனால் விசாரணைக்கு அங்கே போக வேண்டுமென்றால் அந்தத் தலைவருடைய வீட்டிலேயிருந்துகொண்டு, குற்றம் சாட்டியவர்களை அழைத்தால் எந்த நபர் வந்து அந்த அதிகாரிக்கு எதிராக அவர்களுடைய வீட்டில் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு விசாரணை நடத்துகின்ற அதிகாரிகளிடம் சொல்ல முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த வழக்கம் நீண்ட நெடும் காலமாக வந்துவிட்டது. ஒன்றாக இணைத்தார்கள் ஆங்கிலேயர்கள் மாநிலங்களாக மாற்றப்பட்டன. அதற்குப்பிறகு மாவட்டங்களாக மாற்றப்பட்டன. இதற்கிடையில் அமரர் வல்லபாய் பட்டேல் அவர்கள் இந்தியத் துணைக்கண்டத்திலே இருந்த சமஸ்தானாதிபதிகளை ஒழித்தார்கள். பிறகு ஜமீன் ஒழிக்கப்பட்டது. ஆனாலும் அந்தத் தன்மை தனி மனிதர்களிடமிருந்து இன்னமும் ஒழிக்கப்படவில்லை என்பதையும் நான் இங்கே வேதனையோடு சொல்லிக்கொள்வேன்.

சிலர் தன்னை ராஜாக்கள் என்று நினைத்துக்கொள்கிறார்கள் நான் இதைச் சொல்லும்பொழுது புதுக்கோட்டை இளைய அரசர் அவர்கள் தவறாகக் கருதக்கூடாது; அவர்கள் அதற்கு அப்பாற்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அண்ணன் அவர்கள் ராஜா என்ற பெயருக்குச் சொந்தக்காரராக இருந்தாலும் எளிமையான, மக்களோடு இணைந்து வாழ்கின்ற ஒரு எளியவராக இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடும்பொழுது, ஏதோ ஒரு சர்ச்சையை உண்டாக்க விரும்புகின்றவர்களுக்குத் தீனி கிடைக்காமல் செய்வதற்காக இந்த விளக்கத்தை இதில் தர வேண்டியவனாக இருக்கிறேன்.

சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பினாமி நிலங்களை வைத்துக் கொண்டு எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, அது எங்கள் கட்சியானாலும் சரி, வேறு கட்சியானாலும் சரி

ஆனால் அவர்கள் இன்றையதினம் எத்தனை பேர்களை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் காண்கிறோம். சில சமயம் சொல்லி விடுகிறார்களாம். பத்திரிகையில் வருவ தெல்லாம் உண்மையென்று சொல்ல முடியாவிட்டாலும், பத்திரிகையில் எழுதுகின்றவர்கள் எழுதுகின்றார்கள், படித்தவர்கள் படிக்கின்றார்கள். அங்கே பத்திரிகையிலே வரும்பொழுது செய்தி வேறு வழியாக வருகிறது. இன்றையதினம் சில செய்திகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்கள் படித்துச் சொன்னார்களே அதுபோல. ஆகவே, அந்த வகையில் பல பிரச்சினைகளைப்பற்றி நான் இங்கே சொல்ல விரும்பும்பொழுது சிலர் சொன்னார்களாம், எங்களுக்கென்ன 5000 ஏக்கரா தானே இருக்கிறது என்று. இந்தக் கேள்வியை அவர் கேட்டிருந்தால் அதிசயிக்கக் கூடியது அல்லவா? நான் 'இருந்தால்' என்று 'இஃப்' போட்டுக்கொள்கிறேன், ஆகவே, தவறாகக் கருத வேண்டாம்.

ஆகவே, இப்படிப்பட் நிலையில் இருந்தாலும் அவர்கள் அங்கே என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஜாதியைத் தூண்டி விடுகிறார்கள், தங்கள் வசதியைப் காப்பாற்றிக்கொள்ள. பணத்தைக் கொடுத்துத் தேர்தலிலே விளையாடுகிறார்கள் தங்களுடைய அந்த அதிகாரப் பதவியை—வழக்கத்தில் இருக்கின்ற பதவியை—சட்டப்படி அல்ல, அதைக் காப்பாற்றிக் கொள்ள. வேறு நபர்கள் வேறு நிலைமைகளிலே அந்தப் பதவிக்கு வந்துவிட்டால் தங்களுடைய செல்வாக்கு குறைந்து விடும் என்று பல்வேறு வகைகளிலே இன்னமும் பல அரசியல் கட்சிகளிலே சில பொறுப்புள்ள பதவிகளிலேகூட இருந்து கொண்டு விளையாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது, உண்மையிலேயே நமக்கெல்லாம் வேதனையாக இருக்கிறது. சமஸ்தானாதிபதிகளை ஒழித்து, ஜமீன்களை ஒழித்து, கொத்தடிமையை ஒழிக்க வகை செய்து, எல்லாம் இருந்தும் இன்றுகூட நாம் கேள்விப்படுகிறோம், எங்கெங்கே யார் யார் தங்களுடைய அலுவலர்கள் என்று வைத்துக் கொண்டு, வேலைக்காரர்கள் என்று வைத்துக்கொண்டு, பண்ணையாள் என்று வைத்துக் கொண்டு எந்தெந்த மிராசுதாரர்கள் எப்படியெல்லாம் தங்கள் வாழ்க்கையைச் செல்வம் மிக்கதாக, செழிப்பு மிக்கதாக, செல்வாக்கு மிக்கதாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் காணுகிறோம்.

[முற்பகல் 10.10]

அதை நிச்சயமாக, நாம், இங்கேயிருக்கிற கட்சித் தலைவர்கள்' கட்சிப் பிரதிநிதிகள் மட்டும் அல்ல, வெளியே இருக்கிறவர்களும் ஒன்று சேர்ந்து, அதை முறியடித்தாக வேண்டும், அதை ஒழித்தாக வேண்டும். அதற்கு அடிப்படை வழியைக் கண்டு பிடித்து, 1973, 1974-ல் போட்ட திட்டங்கள், 1954-ல் போட்ட



திட்டங்கள், அவைகளை எல்லாம் வைத்துத்தான், இந்தத் தமிழக அரசு, அடிப்படையை, நிச்சயமாக, அந்த ஆணி வேரை அகற்றியிருந்தால அந்த விஷம், நிச்சயமாகப் பரவாமல், அதனுடைய ஏகாதிபத்திய கொடுங்கோன்மைக் கரங்கள், இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட, ஒருவேளை மந்திரிகளைக் கூட தாக்காமல் தடுப்பதற்கு முடியும் என்கிற வகையில் அதைச் செய்ய வேண்டிய கட்டாயம் நம் தலையில் சுமத்தப்பட்டிருக்கிறது. அதைச் செய்தாகவேண்டும். அதை மக்களுக்குச் சொல்லியாக வேண்டும். அதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. அதைச் சொல்லி, அதைச் செய்து முடிக்கும் போதுதான் நாம் அனைவரும் ஒரே எண்ணத்தை நிறைவேற்றுகின்ற அந்தப் புகழுக்கும் பெருமைக்கும் சொந்தக்காரர்களாக ஆக்கப்படுவோம் என்பதைமட்டும் நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசியவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னாலும், அவைகளுக்கெல்லாம் தனித்தனியாக நான் பதில் சொல்ல முடியாவிட்டாலும், ஒரு முக்கியமான கருத்தை இங்கே நான் சொல்லியே தீரவேண்டும். அதிகாரிகள் ராஜிநாமா செய்துவிட்டு, எங்களுடைய கொடுமை தாங்காமல் ஓடி விட்டார்கள் என்பது ஒரு வகையான குற்றச்சாட்டு. இது இங்கே 18-வது தடவையோ, 20-வது தடவையோ சொல்லப் பட்ட குற்றச்சாட்டு என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இங்கே இல்லை. அவர் சொல்லி, சொல்லி, அவரைச் சேர்ந்தவர்கள் சொல்லி, சொல்லி, மற்றவர்கள் எல்லாம் பத்திரிகைகளிலே எழுதி, மேடையிலே பேசி, கடைசியாக இன்றைய தினம் காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் சுந்தரராஜ் அவர்கள் வாயிலாக சொல்லப்பட்டிருக்கிறது. அதிலேயும் ஒருவர் மர்மமாக மறைந்து விட்டார் என்றார். அப்புறம் மாற்றிக்கொள்ளலாம் அவர் சொன்னதை. மறைந்து விட்டார் என்றால் பொருத்தம். அவர் மரணம் அடைந்து விட்டார் என்பது....

THIRU K.S.G. HAJA SHAREEF: Sir, I can assure the Hon. Chief Minister that it is his own idea and not a borrowed idea from any other party leader.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: உங்கள் மூலமாக, துணைத் தலைவர் அவர்களே, நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், எங்களுடைய தலையீடு காரணமாக அல்லது, இங்கே சொன்னது போல், யாரோ சொல்லிவிட்டுச் சென்றார்களாம். இந்த ஊழல் அரசில் பணியாற்ற விருப்பம் இல்லையென்று சொன்னதாக இங்கே சொன்னார்கள். இங்கே நான் அதைத்தான் சொன்னேன்; உண்மையிலே யாரோ நண்பர், அதாவது உள்ளூர எதிரி, அவருக்கு நண்பராக இருக்கின்றார், இந்தச் செய்தியைக் கொடுக்கின்றார் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, நான் காவல் துறை மானியத்திலே பேசும்பொழுதும் சரி, இப்பொழுது பேசும்பொழுதும் சரி, இன்றைக்கு அல்ல, என்றைக்கும் சரி, நாங்கள் எங்களுக்குக் கிடைக்கின்ற தகவல் உண்மையானதா, பொய்யானதா என்பதைப் பரிசீலனை செய்து, அரசாங்கத்திலே ரெக்கார்ட் இருப்பதை எங்களால் கண்டு பிடிக்க முடியாது. மற்ற தகவல்களை நாங்கள் முழுமையாகப் பரிசீலனை செய்த பிறகுதான், எங்களுடைய கட்சி அனைத்தும் கருத்து தெரிவித்த பிறகுதான் நாங்கள் அதை இங்கே அவையிலே வைக்கின்றோமே தவிர, யாரும் சொல்லிக் கொடுக்கின்ற அளவுக்கு இன்னும் கீழே போகவில்லை, போகவும் மாட்டோம். தொடர்ந்து உங்களுடைய எதிர்க்கட்சி என்ற அடிப்படையிலே, உங்களுக்கு எதிரிக் கட்சி அல்ல. எதிர்க்கட்சி என்ற அடிப்படையிலே எங்களுடைய பணியை நாங்கள் முழுமையாகச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. இந்தப் பரிசீலிப்பது என்பது என்ன என்று எனக்குத் தெரியவில்லை. இங்கே, இரகசியமாக கோப்பிலே இருப்பது என்ன என்று எனக்குத் தெரியாது. ஆனால், நாங்கள் அதைப்பற்றி நன்றாகப் பரிசீலித்து முடிவு எடுத்ததற்குப் பிறகுதான் இங்கே சொல்கிறோம் என்று சொல்கிறார்கள். கோப்பிலே எழுதியுள்ளதைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லிவிட்டு, கோப்பிலே என்ன எழுதி இருக்கிறது என்று தெரியாது. ஆனால், பரிசீலித்து விட்டேன் என்பது நியாயம் அல்ல.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, கோப்பிலே என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பது எங்களுக்கு போட்டோ ஸ்டேட் காப்பி கிடைக்காது. ஆனால், எங்களுக்குக் கிடைக்கிற தகவலை வைத்துத்தான் நாங்கள் சொல்ல முடியுமே தவிர, மற்றபடி ஒன்றும் அல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: ஆகவே, சந்தேகம், விளக்கம் இங்கே துணைத் தலைவரைக் கேட்கலாம். இப்படி கேள்விப் படுகிறோம், இது உண்மையா, ஆதாரம் இருக்கிறதா? என்று நாங்கள் பரிசீலித்து உண்மை என்று தெரிந்த பிறகுதான் பேசுவோம் என்று சொன்னால், நல்ல எண்ணத்தை நான் மதிக்கின்றேன். ஆனால் ஏமாற்றப் படுகிறீர்கள். கட்சி கொடுத்தாலும், தனி மனிதன் கொடுத்தாலும், உங்கள் நண்பர்கள் கொடுத்தாலும், உங்கள் கட்சி நண்பர்கள் கொடுத்தாலும், அதிகாரிகள் வழங்கினாலும்—சொன்னார்கள் போட்டோ ஸ்டாட் காப்பி கிடைக்காது என்று—அந்தத் தனித் திறமை சிலருக்குத்தான் உண்டு, அவர்களுக்குத்தான் அதிகாரிகளிடத்தில் தொடர்பு இருக்கின்றது, அப்படிப்பட்ட சில அதிகாரிகள்தான் போயிருப்பார்கள். அல்லது உண்மையிலேயே அவர்களுக்கு ஓய்வு தேவை என்பதற்காகத்தான் போயிருப்பார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன்.



இன்டஸ்டிரீஸ் செக்ரட்டரியாக ஒருவரைப் போட்டோம். அவரைப் போட்ட சில வாரங்கள் என்று கருதுகிறேன். ஓய்வு வேண்டும் என்று கேட்டார். ஒரு கடிதம் எனக்கு எழுதுகின்றார் 'நான் பத்திரிகையிலே அக்கறை செலுத்தி சேவை செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்' என்று எனக்கு தனிப்பட்டக் கடிதம் எழுதுகிறார். நான் அது முறையல்ல என்று தலைமைச் செயலாளருக்கு எழுதி எனக்கு அப்படி எழுதி கேட்கக் கூடாது, அதை அனுமதிக்க முடியாது என்று சொன்னேன். பிறகு அவர் வற்புறுத்திக் கேட்ட பிறகு நாங்கள் அனுமதித்தோம். இப்போது எங்கே வேண்டும் என்றாலும் அவர் வேலை செய்யலாம். அதேபோல பணம் அதிகமாகக் கிடைக்கிறது என்ற காரணத்தை, பதவியிலே இன்னும் பெரிய புகழ் பெறலாம், மக்கள் மத்தியிலே செல்வாக்குப் பெறலாம் என்ற காரியத்தில் அக்கறை கொண்டு போகிறார்கள் என்பதையும், சிலர் உண்மையிலேயே அவர்கள் ஓய்வு எடுக்க விரும்புகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே திரு. ராயப்பா அவர்கள் ஓடியதைப் போல இப்போது யாராவது ஓடி இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தெரியாது. இனிமேல் ஓடுவார்களோ என்னமோ? ஓடுவது வேறு, ஓட்டப்படுவது வேறு.

திரு. செ. சிவசாமி: திருத்திக் கொள்கிறேன். ஓட்டப் படுவது. இதுவரையில் யாராவது ஓட்டப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்ரன்: ஓட்டப்பட யாரும் இல்லை. அந்தக் காரியத்தை செய்ய நாங்கள் தயாராக இல்லை.

அந்த 8 பேர்களிலே திரு. கே. சிவசுப்பிரமணியம், திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன் ஆகியோர், தாங்கள் 20 ஆண்டுகளுக்கு மேல் அரசில் பணிபுரிந்ததால், தாங்கள் ஓய்வு பெறுவதற்கு அரசின் அனுமதி கோரினார்கள். அவர்களுடைய வேண்டுகோள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. முதலிலே மறுக்கப்பட்டது. மீண்டும் வற்புறுத்தினார்கள். பின்னர் அவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. காரணம் அவர்கள் மேல் வழக்கு நடத்தவேண்டிய சில குற்றச்சாட்டுகள் இருந்தன. ஆனால் அதற்குப் பல பிரச்சினைகளை உருவாக்கி, யாருக்காவது ஏதாவது தொல்லைகளை—இந்த நாட்டுக்கல்ல, அரசுக்கு அல்ல அப்படிப்பட்டவர்கள் ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காக மட்டுமல்ல, நீங்கள் சொன்னீர்களே அந்த ஐ.ஏ.எஸ். போன்ற அதிகாரிகள் அச்சத்தோடு இருக்கிறார்கள், என்றைக்கு வெளியே போகவேண்டுமோ, என்றைக்கு வெளியே போகச் செய்வார்களோ என்றெல்லாம் நினைக்கிறார்கள் என்று எல்லாம் கருத்தைச்

சொன்னீர்களோ, அப்படி யாரும் இல்லை என்பதையும் அதற்காக அவர்கள் போகவில்லை என்பதையும்—குகன் அவர்கள் நல்ல நிர்வாகத் திறமை மிக்க, பொருளாதாரம் தெரிந்தவராக இங்கே இருந்தார்கள். அவருக்கு உலக நாடுகள் அவையிலே ஒரு பிரிவிலே வேலை கிடைத்தது என்று சொல்லும்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் அந்தப் புகழை பெறவேண்டும் என்றும், வருமானத்தையும் பெறட்டும் என்பதற்காகத்தான் அனுமதித்தோம். திரும்பி வந்த பிறகு அவர்கள் தானாகவே இயங்கவேண்டும் என்று விரும்பி அப்படி செய்ய ஆரம்பித்தார்கள். இதுதான் காரணம். இதற்காகத்தான சொன்னேன், தவறான தகவலை எல்லாம் சொல்லி வைத்து உங்களை அவமானப்படுத்த வெண்டும் என்ற எண்ணம் இருக்காது—மற்றவர்கள் பார்த்து சிரிக்கவேண்டும் என்பதற்காக ஏதாவது சொல்லி, அல்லது இதன் விளைவாக உங்களுக்கும் எங்களுக்கும் ஏதாவது பேச்சு வராதா ஒருவரை ஒருவர் கேவலமாகப் பேசிக் கொள்ள மாட்டார்களா இவர்களும் வெளிவந்துவிட்டால் எங்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ள முடியாதா, காரணம் இல்லாமல் அவர்கள் எப்படி வெளியே வருவார்கள் என்றெல்லாம் தேடிக்கொண்டிருக்கின்றவர்களுக்கு ஒரு வேளை இது திருப்திகரமாக இருக்குமே தவிர, வேறு ஒன்றும் அல்ல. இன்னும் சொல்லப்போனால், அவர்கள் எழுதிக் கொடுத்து இருக்கிறார்கள். குகன் அவர்கள் முதல் அமைச்சர் அவர்களுடைய முழு நம்பிக் கையைப் பெற்றிருந்தவர்கள் என்ற கடிதத்தை எழுதி இருக்கிறார்கள். இதையும் நான் இங்கே குறிப்பிட முடியும். உங்களுக்கே நேரம் இல்லை என்று சொன்னதால் நானும் அதிக நேரம் எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை. இருந்தாலும் சிலவற்றைச் சொல்லியாக வேண்டும்.

ஏதோ மாவட்ட ஆட்சித் தலைவர்களை எல்லாம் நாங்கள் அடிக்கடி மாற்றி வருகின்றோம் என்றெல்லாம் சொன்னார்கள். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் முத்துசாமி அவர்கள் ஒரு வருடம் பணிமுடித்துவிட்டு இயற்கையான முறையில், ரொட்டீனாக மாற்றப்பட்டார். புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஷ்டோஜி அவர்களும் ஒரு வருடம் பணி முடித்து விட்டார் அவர் நல்லவர். ஆனால் வறட்சி நிவாரணப் பணி திறமை இன்மைக் காரணமாக மாற்றப்பட்டார். இதை இப்படி சொல்லலாமா என்று கேட்பார்கள். குற்றத்தை உங்களிடம் சொல்லாமல் நிலைமையை உங்களிடம் விளக்காமல், நான் யாரிடம் சொல்வது? வெளியே சொன்னால், வெளியே சொல்லலாமா என்கிறீர்கள், இங்கே சொன்னால் இங்கே ஏன் சொல்கிறீர்கள் என்று கேட்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். இங்கே சொல்லலாம் அல்லவா?

(முற்பகல் 10.20)

திரு. நா. சுந்தரராஜ்: ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் வறட்சிப் பணியில் திறமையாக பணியாற்றவில்லை அதனால் மாற்றினேன் என்று சொன்னார்கள். மாற்றுவதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லை என்று நான் சொல்லவில்லை. 27-ம் தேதி



மாலை 5 மணிக்கு அவர் மாற்றப்பட்டு விட்டதாகத் தொலைபேசி மூலம் செய்தி தரப்படுகிறது. 28-ம் தேதி காலையில் அவருக்குப் பதிலாக புதிதாக நியமிக்கப்பட்டவர்—இங்கேயிருந்து முதல் நாள் மாலை 5 மணிக்கு காரில் கிளம்பி அங்கே காலை 8 மணிக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறார் என்றால், இப்படிப்பட்ட அவசரம் ஏன்? அவரை ரெகுலராக மாற்றியிருக்கலாமே? அவருக்கு ஜாயினிங் டைம் கொடுத்து அதைச் செய்து இருக்கலாமே? அவசர அவசரமாக, முன்னறிவிப்பு இல்லாமல் இப்படி மாற்றியதைப் பற்றித்தான் நான் சொன்னேன். மற்றபடி உங்களுடைய அதிகாரம் பற்றி நான் கூறவில்லை.

மாண்புமிகு திரு. எம் ஜி இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பணி மிகத் தாமதமாக நடைபெறுகிறது என்பது இங்கே மாமன்றத்திலே சொல்லப்பட்ட குற்றச்சாட்டு. வறட்சிப் பணியில் நாம் உடனடியாகச் செயல்பட்டாகவேண்டும். நான் போய் சுற்றிப் பார்த்து வந்த பிறகு, அவருடைய நாணயத்தில், நேர்மையில் தவறு இல்லை. ஆனால் மிக விரைவாக கண்டிப்பாக வேலை வாங்க முடியவில்லை என்பதால் அவர் மாற்றப்பட்டார். 15 நாள் அவகாசம் கொடுத்து, வறட்சிப் பணி முடிந்தபிறகா இன்னொருவரைக்கொண்டு போய் அங்கே போடமுடியும்? வறட்சிப் பணி அவசரமாக நிறைவேற்றப்படவேண்டிய ஒன்று என்கிற அவசியம் கருதி அவர் மாற்றப்பட்டார்.

(திரு. நா. சுந்தரராஜ் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இப்படி அடிக்கடி என் அனுமதி இல்லாமல் குறுக்கிடுவது சரியல்ல. அது முறையும் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு நா. சுந்தரராஜ்: ஒரே ஒரு விளக்கம் மட்டும் கேட்டுவிடுகிறேன். வறட்சிப் பணி சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அறிந்தவரையில், வறட்சிப் பணி மேற்கொள்வதற்காக அன்றைய தினத்தில் எந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் பணம் வழங்கப்படவில்லை. அன்றைக்குப் பணம் இல்லாததால் எந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் எந்தக் பணியும் செய்யவில்லை. வடாற்காடு மாவட்டத்தில் கூட முதலமைச்சர் அவர்கள் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் சரிவர பணியாற்றவில்லை என்று குற்றச்சாட்டு சொன்னார்கள். ஆனால் அவர் மாற்றப்படவில்லை.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நண்பர் சுந்தரராஜ் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதையொட்டி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இடையிலே ஒரு 4 மாத காலம் நடந்த ஆளுநர் ஆட்சியில் மதுரை மாவட்ட கலெக்டராக இருந்த சிரியாக் டெலிகிராபிக்காக டிரான்ஸ்பர் செய்யப்பட்டார்கள், அது முறைப்படி செய்யப்பட்டதா என்பதையும் நான் அறியவிரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அந்தப் பைலைப் பார்த்தால் தான் தெரியும். இப்போது எப்படிச் சொல்லமுடியும். அதற்கு அதிகாரிகளிடத்தில் தான் கேட்கவேண்டும். அல்லது எங்களிடத்தில் பைல் கொடுத்தால் பதில் சொல்ல முடியும்.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது எப்படி நிகழ்ந்தது என்பது எனக்குத் தெரியாது. மாண்புமிகு முதலமைச்சர் வேண்டுமானால் அந்தப் பைலைப் பார்த்து அது சம்பந்தமாகச் சொல்லட்டும். அது மட்டுமல்ல, டெலிகிராபிக்காக மாற்றுவது என்பது வேறு, டெலிபோனில் மாற்றுவது என்பது வேறு. இங்கே டெலிபோனில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, சில சமயம் தொலைபேசியில் பேச ஆரம்பித்தால் எவ்வளவு நேரம் ஒவ்வொருவரும் பேசுகிறார்கள் என்பது தெரியும். அந்த அனுபவம் ஒவ்வொருவருக்கும் இருக்கும். இதன் காரணமாக எவ்வளவு பணம் செலவாகிறது, யார் யார் குறுக்கிட்டுப் பேசுகிறார்கள் என்பதும் தெரியும். சில கால்கள் கிடைப்பதே இல்லை. நான் கூட காலையில் இருந்து முக்கியமான ஒரு விஷயம் பேசவேண்டும் என்பதற்காக 7—8 முறை முயற்சித்தேன். கிடைக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சரான எனக்கே இந்த நிலை என்றால்—எவ்வளவோ பாதுகாப்பு எனக்கு இருக்கிறது—மற்றவர்கள் நிலை எப்படி இருக்கும் என்பதை நான் விளக்கவேண்டியது இல்லை. ஆகவே, டெலிபோன் மூலம் செய்வது என்பதிலும் சிரமம் இருக்கிறது. அங்கே இரண்டொரு நாட்களில் மத்திய அரசாங்கத்தால் வறட்சி நிலை குறித்து பார்வையிட அனுப்பப்பட்ட குழு வர இருந்தது. அதையும் நினைவில் கொள்ள வேண்டும். பணியை நாம் ஒழுங்காகச் செய்யவில்லையென்றால், பணத்தைப் பெற முடியாது. ஆகவே, வேலையும் ஒழுங்காகச் செய்யவேண்டும், மக்களுக்கும் உடனடியாகத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்;

இங்கே பணம் கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். பணம் கொடுக்கப்படவில்லை என்பது இல்லை என்கிற காரணத்தால் அல்ல. அங்கே பணம் கொடுக்கப்படவில்லை என்று வட ஆற்காடு மாவட்டத்தில் நான் பேசவில்லை. வேலைகள் சிறப்பாக இன்னும் அதிகமாக நடைபெற வேண்டுமென்று சொன்னதற்குக் காரணம் நான் இரண்டொரு கடைகளிலே நுழைந்து என்ன நடக்கிறது என்று பார்க்கும்போது திருவண்ணாமலையிலே அந்தக் கலெக்டர் இருந்தும் கூட குறைகளை கவனிக்காமல் இருந்துவிட்டாரே என்பதுதான் குற்றச்சாட்டு. அதை இப்போதும் சொல்கிறேன். மக்கள் நியாயவிலைக் கடைகளை நம்பிச் செல்லும்போது அங்கே 4 ரூபாய்க்கு கொடுக்க வேண்டிய துணி எங்கிருந்து அனுப்பப்பட வேண்டுமோ அங்கிருந்து அனுப்பப்படு



கிறது. ஆனால் வந்து சேர்ந்ததற்கு எந்தவிதமான குறிப்பும் இல்லை. விற்கப்பட்டதற்கு வவுச்சர் இல்லை. பில் இல்லை. என்ன செய்வது? இதை ஏன் இத்தனை ஆண்டாக கவனிக்கவில்லை, கண்காணிக்கவில்லை என்பதை எல்லாம் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பேற்க வேண்டுமென்ற நிலையில் நாம் சொல்லியாகவேண்டும். இதை ஏன் மறைக்க வேண்டும்? ஆங்காங்கே பேசுகின்றீர்கள். ஆகவே. அதிகாரிகளுக்கு அக்கரை போய்விடுகிறது.

ஒத்துழையாமை நிலை இல்லை என்றாலும் அக்கரையோடு காரியம் ஆற்றவில்லை என்பதை மாண்புமிகு சுந்தரராஜன் அவர்கள் சொன்னார்கள். நான் மீண்டும் சொல்கிறேன். எத்தனை நாளைக்கு மூடி மறைக்க முடியும்? ஏதோ ஒருவரைப் பற்றிச் சொன்னார்கள். நாகராஜன் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். நான் படித்துக்காட்டக் கூடாது, தேவைப்பட்டால் துணைத் தலைவரிடம் மட்டும் காட்டலாம் என்று நினைத்திருந்தேன். இருந்தாலும் நான் படிக்க வேண்டியிருக்

அந்தத் தொடர்பு உடையவருக்கு இந்த அக்கரை என்ன? ஒரு கட்சியில், காங்கிரஸ் கட்சியில் தலைவராக யாரை தேர்ந்தெடுத்தால் என்ன? இராஜிநாமா செய்தால் என்ன? ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கு என்ன கவலை? பகிரங்கமாகச் சொல்லட்டும். இராஜிநாமா செய்துவிட்டு போய்ச் சொல்லட்டும்.

ஆனால் இது மட்டுமல்ல. இன்னும் பலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். மூப்பனாரின் இராஜிநாமாவை தலைமை ஏற்றுக் கொண்டது. விரைவில் வேறு தலைவர் நியமிக்கப்படுவார் என்ற அறிவிப்பு ஜனநாயகத்தை மதித்து நடத்தும் செயலாகத் தோன்றவில்லை. இவருக்கு இதுதானா வேலை? எந்தக் கட்சி ஜனநாயகத்தின்படி நடக்கிறது? சர்வாதிகாரத்தின்படி நடக்கிறது என்பது நமக்குள் கூட சில சமயம் அதுபற்றி பேசுவது வேண்டுமா, வேண்டாமா? பேசுவது நியாயம்தானா என்ற கேள்வியில் இருக்கிறோம். ஆனால் ஐ.ஏ.எஸ். அதிகாரி, அவர் பதவியில் இல்லாத நேரத்தில் இதைச் செய்திருக்கிறார் என்றால் இவர் எப்படி நாணயமான அதிகாரியாக இருக்க முடியும்?

[முற்பகல் 10.30]

இன்றையதினம் அவர் விடுப்பிலே சில நாட்கள் எடுத்துக் கொண்டு டெல்லியிலே உட்கார்ந்து கொண்டு அங்கே வேலைகள் தேடுகிறார் என்ற செய்தி எனக்கு வந்திருக்கின்றது. இப்படி இங்கே ஏதாவது சிக்கலிலே மாட்டிக்கொண்டால் உடனே போய் விடுகிறார்கள் டெல்லி மாநகரத்திற்கு. அங்கே போய் யார் யாரை வைத்துக்கொண்டு என்னென்ன சொல்லவேண்டுமோ சொல்லி அங்கே இடம் பிடிப்பதற்கு முயற்சிக்கிறார்கள். இது தான் நிலைமை. இப்படிப்பட்டவர்களை எப்படி நாம் அனுமதிப்பது, எப்படி வெளியே சொல்லாமல் இருப்பது? ஆனால் எல்லோரும் இப்படியா? இது எப்படிக் கிடைத்தது என்பதை நாங்கள் சொல்லக்கூடாது. ஆனால் கிடைத்திருக்கின்றது. அந்தக் கையெழுத்துப்பிரதி இது. நமது தலைமைச் செயலாளர் அவர்கள் கேள்வி கேட்டு பதில் பெறுவதற்காக எழுதப்பட்ட கடிதம் இது. 'இந்திரா காந்தி என்பவர்' என்று இருக்கின்றது. அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் என்றால் ஒத்துக்கொள்கிறவர்கள் இங்கே சொல்கிறார்கள் 'இந்திரா காந்தி என்பவர்' என்று. நாங்களாவது தேர்தலின்போது பேசினாலும் இன்னார் இன்னாருடைய மகள், எவ்வளவு அனுபவம் இருக்கின்றது என்று சொல்லி நாங்கள் எதிர்த்தோம் தேர்தல் நேரத்திலே. ஆனால் இவர்களோ யாரோ ஒருவர், எங்கோ ஒரு மூலையிலே இருக்கின்ற ஒருவர் என்று பொருள் படுகின்ற விதத்திலே "இந்திரா காந்தி என்பவர் பழைய முறையிலே தான் செயல்படுவார் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம், ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு தலைவரை நியமனம் செய்யவில்லை என்பது இன்னும் கேள்விக்குறி" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவருக்கு ஏன் இவ்வளவு அக்கறை. அவர்கள் நியமித்தால் என்ன? நியமிக்காவிட்டால் என்ன? எவ்வளவு வேறுபாட்டு உணர்வுகளை அங்கே உருவாக்குவதற்கு



இந்த ஐ. ஏ. எஸ். அதிகாரி வேலை செய்கிறார் என்றால். இந்த ஐ. ஏ. எஸ். அதிகாரிக்கு யார் உதவி செய்வது? யார் இதைப் பற்றி சொல்வது? யார் தூண்டிவிடுவது? அதைப்பற்றித்தான் நாங்கள் கவலைப்படுகிறோம் ஒரு தனி நபர் அப்படிச் சொல்லி விட்டால் கூட மன்னிக்கலாம் இனிமேல் செய்யாதே என்று. ஆனால் இந்தக் கருத்துக்களைச் சொல்லும்போது அதற்கு பின்னாலே ஒரு சக்தி இருந்து அவரை உருவாக்குகின்றது, அதுபோன்று இன்னும் சிலர் இருக்கிறார்களோ என்று ஐயப்பாட்டுக்கு நாமெல்லாம் வரவேண்டி இருக்கிறது. காரணம், நீங்கள் சொன்னீர்களே, போட்டோஸ்டெட் காப்பி, அது எல்லாம் இப்படிப்பட்டவர்களிடமிருந்துதான் போகிறதா என்று நாம் ஏன் ஐயப்படக்கூடாது. இதை இங்கே சொல்லக் கூடாதா? நீங்கள் நம்புகிறீர்கள் எங்களை எல்லாம். எவ்வளவு தான் நாங்கள் விவரங்களைச் சொல்வதற்கு முன்பு நீங்கள் ஆத்திரப்பட்டாலும், கருத்துக்களைச் சொன்னாலும் கூட நாங்கள் விளக்கம் தந்ததற்குப் பிறகு இன்னும் கொஞ்ச நாள் நம்புவோம் என்று எண்ணி உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் வலியுறுத்தாமல் திரும்பப் பெறுகிறீர்கள். அதற்கு என்ன காரணம்? நம்பிக்கை. எங்களது நம்பிக்கையை இவர்கள் பெற வேண்டாமா? நீங்கள் சொல்கிறீர்கள், அரசு வேறு, அதிகாரிகள் வேறு என்று. முதலமைச்சர் உத்தரவிட்டும் நடைபெறவில்லை என்றால் இங்கே ஒருமை இல்லை, தொடர்பு இல்லை என்று சொல்கிறீர்கள். இப்படி இருந்தால் தொடர்பு எங்கே இருக்கும்? வெளியே இருக்கின்ற அரசியல் கட்சிகள் உள்ளே இருக்கின்ற அதிகாரிகளைத் தூண்டிவிட்டு சமயத்திற்கேற்ப அந்தந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப அந்தந்த கட்சிகளுக்கு எதிராகத் தூண்டிவிட்டு என்னென்ன செய்து வைக்கலாமோ அதைச் செய்யச் சொல்வது, செய்ய அனுமதிப்பது முறைதானா?

சரி இது போகட்டும். இன்னும் சிலவற்றைச் சொல்கிறேன். எங்களை விட்டு வைத்தாரா. "அண்ணா தி. மு. க. அரசு ஒரு முக்கியமான நிதி நிறுவனத்திற்கு தலைவரைப் போட லாயக்கு இல்லை" என்று சொல்கிறார். அப்படியானால் இவரைப்போட்டு வைத்திருப்பதும் அந்த லாயக்கு இல்லை என்பதால் தானா? அப்படித் தலைவரைப் போடுவதற்கு லாயக்கு இல்லை என்றால் இந்த ஐ. ஏ. எஸ். அதிகாரியைப் போட்டு வைத்திருப்பதற்கும் நாங்கள் அனுமதித்துக்கொண்டு இருப்பது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும் இதுபற்றி நான் பத்திரிகைகளுக்கு கொடுக்க இருக்கிறேன். இங்கே சொல்லி விட்டுத் தான் அந்த முழு விவரத்தையும் நான் அவர்களுக்குக் கொடுப்பேன். படித்துப்பார்த்துக் கொள்ளட்டும். மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பாவிட்டால் நான் இதைக் கொடுத்திருக்க மாட்டேன். காரணம் அப்படிக் கொடுக்கவேண்டிய அவசியம் எனக்கு இல்லை. அவருக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். ஆனாலும் இந்தச் சூழ்நிலையிலே இந்த ஆட்சியினை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் அக்கறையோடு கவனிக்க

வேண்டும். மத்திய அரசிலே என்ன நடக்கின்றது? பலபேர் அங்கே இருந்து தூக்கப்படுகிறார்கள். அதற்குக் காரணம் முன்னாலிருந்த கட்சிகளின் கருத்துக்களோடு அங்கே சிலர் பணியாற்றி இன்றைய தினம் ஆளுகின்ற கட்சிக்குத் தொந்தரவு செய்கிறார்கள், ஒத்துழைக்க மறுக்கிறார்கள் என்ற வகையிலே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கின்றது. எங்களுக்கும் மற்றவர்களுக்கும் வேறுபட்ட கருத்துக்கள் இருப்பதால் நான் வெவ்வேறு கட்சிகளாக இருக்கின்றது. ஆனால் நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதில் நமக்கு நிச்சயமாக மாறுபட்ட கொள்கைகள் இருக்க முடியாது. ஆனால் அதை அணுகுவதிலே நாம் வேறுபட்டு நிற்கலாம். எவ்வளவோ கட்சிகள் இருந்தாலும் அதுதான் உண்மை. ஆனால் நிலைமை என்ன? இவ்வளவையும் நான் சொல்வது எதற்காக என்றால் அதிகாரிகளை முன்னாலிருந்த அரசு பாழடித்துவிட்டது. நிர்வாகத்தையே குட்டிச்சுவராக்கிவிட்டது என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். நாளை வேண்டுமானாலும் அந்த நண்பர்கள் இங்கே வந்து என்னுடைய வேண்டுகோளை ஏற்று பதில் சொல்லலாம். நானும் ஆதாரங்களை சொல்லத் தயாராக இருக்கிறேன். காரணம் அந்த நிலைமை அவர்களுக்கு எப்படி வருகிறது? எந்த தைரியத்தில் வருகிறது? எதைச் செய்தாலும் பின்னால் தப்பித்துக் கொள்ளலாம்; எந்தக் கமிஷன் போட்டு குற்றம் சொன்னாலும், பின்னால் சாக்கு சொல்லி மாற்றிக் கொள்ளலாம். மைய அரசை நம்ப வைத்து வழக்குகளை வாபஸ் வாங்கிக் கொள்ளலாம் என்று அவர்கள் கற்பனை செய்வார்களே யானால், மைய அரசை பற்றி அவர்கள் என்ன மதிக்கிறார்கள்? மைய அரசு நியமித்த அந்த கமிஷனைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? கமிஷனின் தீர்ப்பைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்—அப்போது சாட்சி சொல்கிறவர்களை—சொன்னவர்களை பற்றி, அந்த நியதிகளை எல்லாம் பற்றி அவர்கள் என்ன மதிக்கிறார்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டாமா?

அந்த வகையில்தான் சொல்கிறேன். தமிழக அரசு ஏதோ வட நாட்டுக்காரர்கள் என்பதற்காக யாரையும் மாற்றுவது இல்லை. அந்த எண்ணம் இருந்தால், இரண்டு வடநாட்டுக்காரர்களை, நாங்கள் நிறுத்தி வெற்றி பெறச் செய்து, மக்கள் வாக்குகளைப் பெற்று, இங்கே அனுப்பியிருக்க மாட்டோம். இங்கேயிருந்து தேர்ந்தெடுத்து அங்கே ராஜ்ய சபாவிற்கும் அனுப்பியிருக்க மாட்டோம் (மேசையைத் தட்டும் ஒலி). நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம். அவர்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்தாக வேண்டும். ஆகவே, இந்த நம்பிக்கை எதில் உருவாகிறது? நாட்டு மக்களுக்காக தீட்டப்படும் திட்டங்களை நிறைவேற்றுவதில் அக்கறை காட்ட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தாக வேண்டும். ஆகவேதான் இராமநாதபுரத்திற்கு இன்றையதினம் போடப்பட்டிருப்பவர் ஒரு வடநாட்டுக்காரர்—பாண்டே. ஏன் போட்டோம். வடநாட்டுக்காரர்கள் என்பதற்காக அப்படி போடாமல் இருக்கிறோமா என்ன? இப்படி இன்னும் பலர் இருக்கிறார்கள்.



நீங்கள் சொன்னீர்கள்—மாண்புமிகு சுந்தரராஜன் அவர்கள் சொன்னார்கள். ஏதோ ஒரு அதிகாரி பாங்கோ என்கிறவர் மர்மமான முறையில் மறைந்துவிட்டார் என்று சொன்னார்கள். பின்னால் சண்ணியத்தோடு செத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். அந்தந்த தினத்தில் குறிப்பு எழுதுவார்களே, அப்படி அவர் சாகும் வரை, அதற்கு முதல்நாள் வரை எழுதிய குறிப்பு புத்தகம் எங்கள் கையிலே இருக்கிறது. அவர் கைப்பட எழுதியது. அந்த ராமகிருஷ்ணனைப் பற்றிக் கூட சொல்லியிருக்கிறார்கள்—கப்பலைப்பற்றி, அவர்தான் முதலிலே சிபாரிசு செய்தார். அந்தக் கப்பலைத்தான் வாங்க வேண்டும் என்று. அதுதான் நல்ல கப்பல் என்று எழுதியவர் ராமகிருஷ்ணன் அவர்கள் தான். அந்தக் கடிதமும் அவர்களிடத்திலே இருக்கிறது. கோர்ட்டுக்கு வந்திருக்கிறது. வழக்குமன்றத்திற்கு வழக்காட வரட்டும், காண்பிக்கலாம் என்று இருந்தேன்.

இங்கே நீதிமன்றத்தைப் பற்றிச் சொன்னார்கள். நீதிபதி தலையிடுகிறார். ஆந்திராவிலே தீர்ப்பு கூறிவிட்டார் என்று. அதேபோலத்தான் தீர்ப்பு இந்த அதிகாரிகள் வழக்கிலேயும் கிடைத்திருக்கிறது. இங்கே விரிவாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். உத்தரவு என்ன போடுகிறார்கள்? இது எல்லாம் நிறைவேறி ஒழுங்கு ஏற்படுகிறவரையில் அவர்களுக்கு மாத சம்பளம் கொடு என்று சொல்கிறார்கள். நாம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இது ஜனநாயகம் அல்லவா? சட்டத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டாமா? நீதிக்குத் தலைவணங்க வேண்டாமா? ஆகவே என்ன செய்வது? நீதிபதிகளுக்கு நாம் சில சட்டங்களை, தீர்மானங்களையெல்லாம் விதிமுறைகளையெல்லாம் வகுத்துக் கொடுக்கிறோம் அவர்கள் எப்படி அதை விளக்கம் செய்து, தீர்ப்புக் கொடுக்கிறார்களோ, அதை நாம் கடைபிடிக்க வேண்டியதிருக்கிறதே. அதுபோலத்தான் இங்கேயும் வந்திருக்கிறது. இந்த தீர்ப்புத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தீர்ப்பை மாற்று என்று சொல்லும் அதிகாரம் இல்லை. கொடுத்திருக்கிறோம்.

நீங்கள் உத்தரவு தந்து விட்டீர்கள். இனி அவர்கள் உத்தரவு தர வேண்டும், வேலை தொடர்ந்து நடக்கும். அதிகாரிகள் இல்லாததால் எல்லாம் கெட்டுவிட்டிருக்குமானால், அன்று மைய அரசிலிருந்து வந்தவர்கள், இதுபோன்ற இடங்களைப் பார்த்துவிட்டு, ஒழுங்காக பணி நடக்கிறது உதவ வேண்டும் என்று பிரதம அமைச்சருக்கோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கோ, அவர்கள் பரிந்துரை செய்திருக்க முடியாது. ஏறத்தாழ 60 கோடி ரூபாய் வரை கொடுக்கப்படும் என்ற எண்ணத்தையும் இங்கே வெளியிட்டிருக்க முடியாது. ஆகவே நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன் அரசாங்கத்தில் இருப்பவர்களில் சிலர் ஆங்காங்கே தவறு செய்கிறார்கள் என்பதற்காக, ஒட்டுமொத்தமாக, அத்தனை அதிகாரிகளையும் நாம் அதே வகையில் அதே கருத்தில்

அதே தகுதியில் நிர்ணயிப்பது நியாயம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த அரசைப் பொறுத்தவரையில் இன்னும் பல்வேறு பிரச்னைகளைப் பற்றி சொல்லவேண்டும் என்றாலும், நேரம் அதிகம் இல்லை என்று சொல்கிறார்கள்.. ஆனால்..

[முற்பகல் 10.40]

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் நம்பிக்கை யூட்டும் வகையில் ஜூன் மாதத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டு பேசி தேர்தல்கள் நிச்சயமாக நடைபெறும் என்று உறுதி கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து நம்பிக்கையோடு இருக்கிறோம். அதேசமயத்தில் கேரள மாநிலத்திலும் ஆந்திரா மாநிலத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சட்ட ரீதியாக கார்ப்பரேஷன்ஸ், முனிசிப்பாலிட்டிகள், பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்து சமிதிகள் தொகுதிக்கு தகுந்தாற்போல் மக்கள் விகிதாசார அடிப்படையில் ரிசர்வேஷன் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும், அரசாங்கம் என்ன செய்யப்போகிறது; எல்லா கட்சித் தலைவர்களையும், சர்வ கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டு முதல் அமைச்சர் அவர்கள் இந்தப்பிரச்னையை எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் தன்னுடைய ஐயப்பாட்டிற்கு விளக்கம் கேட்டார்கள். நான் முன்னமேயே என் கருத்தைச் சொல்லியிருக்கிறேன். இதுவரையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தொகுதி வைத்து தேர்தல் நடந்ததில்லை. அதைச் செய்ய இருக்கிறோம். தாய்மார்களுக்கும் இடம் அளிக்க வேண்டுமென்று விரும்புகிறோம் அப்படிக் கிடைக்கவில்லை என்றால் நாமினேஷன் மூலமாகவாவது அவர்களுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று விரும்புகிறோம் அதிலே யார் யாருக்கு எவ்வளவு இடங்கள் என்று பேசி முடிவு செய்துகொள்ளத் தயாராயிருக்கிறோம். எது நல்லது என்று நாம் அனைவரும் சேர்ந்து முடிவு எடுக்கிறோமோ அதை இந்த அரசு நிச்சயமாக பரிசீலித்து ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்களுக்குச் சொல்வதன் மூலம் அனைவருக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. மைய அரசை மாநில அரசு எதிர்த்துப் போராட எதோ உருவாக்கப்படுகிறது என்று ஒரு சந்தேகத்தின் அடிப்படையில் திட்டம் உருவாகிவிடுமோ என்கிற சூழ்நிலையை எண்ணி ஒரு கருத்தை வெளியிட்டு மிகத் திறமையாக என்னிடமிருந்து பதிலைப் பெற காத்துக்கொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள். நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். அவர்கள் என்னோடு பேச வருவதற்கு மேற்கு வங்காளத்திலிருந்து புறப்படும்போது எந்தவிதமான தொடர்பும் வைத்துக்கொண்டு இங்கே அவர்கள் வரவில்லை. இங்கு வந்த



பிறகு சட்டமன்ற உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் தொலைபேசியில் பேசி காலையில் சந்திக்க முடியுமா என்றார்கள். அப்படியானால் காலையில் வாருங்கள், சீக்கிரமாக நான் சட்டசபைக்கு போகவேண்டியிருக்கிறது வாருங்கள் என்று கூறி வந்தார்கள். ஒரு அரைமணி நேரம் பேசினோம் என்றால் அதில் இருபது நிமிடங்கள் நாங்கள் சிற்றுண்டி அருந்துவதில் நேரம் போய் விட்டது. அதையும் நான் சொல்லியாகவேண்டும். ஏனென்றால், பத்திரிகைகளில் போடுகிறார்கள் பிரமாதமாக. அரை மணி நேரம் பேசினார்கள். என்னென்ன பேசியிருப்பார்கள், என்னென்ன திட்டங்கள் உருவாகியிருக்குமோ என்று இப்படியெல்லாம் ஒரு கற்பனையைத் தோற்றுவிக்கிறார்கள். நாங்கள் பொதுவாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை மக்களுடைய விருப்பத்திற்கு எதிராக காரணமின்றி நீக்குவது தகாது, அது முறை அல்ல, அதுபற்றி மக்களுக்கு விளக்கம் தர வேண்டும் என்பது பற்றிப் பேசினோம். இது திட்டம் அல்ல. இது ஒரு அழிவு சக்திக்கு அடிப்படையான உருவகத்தை ஏற்படுத்துவதற்காக நடைபெற்ற பேச்சல்ல. ஜனநாயகத்தில் எப்படி நாம் மக்களைச் சந்திக்கிறோம் என்று சொல்கிறோமோ அதேபோல் உண்மையைச் சொல்லவேண்டும், நிலைமைகளை எடுத்து வைக்க வேண்டும் என்று கருதித்தான் கருத்துக்கள் பரிமாறிக்கொண்டோம் இது தவறு அல்ல. சொல்லிக்கொண்டிருக்கிறோம், சொல்கிறார்கள், அது உண்மை. அதேபோல் அங்குள்ள மேற்கு வங்காளத்தில் உள்ள நிலைமைகள் பற்றிக் கேட்டேன். தமிழகத்தைப் பற்றி அவர்கள் கேட்டார்கள். மேற்கு வங்காளத்தைப்பற்றி கேட்டபோது, என் மானியக் கோரிக்கை வருகிறது. நான் போகிறேன் என்று சொன்னபோது எப்போது தேர்தல் என்றார்கள். இருவரையும் கூட்டி முடிவு எடுத்திருக்கிறோம் என்று சொன்னேன். நான் அவர்களிடம் கேட்டேன், உங்கள் ஊரில் எப்படி என்று? எறத்தாழ பத்து பதினைந்து ஆண்டுகளாகி விட்டன சில இடங்களில் தேர்தல் நடந்தது என்று சொன்னார்கள், உள்ளாட்சியில். பதினெட்டாண்டுகள் தேர்தல் நடைபெறாமல் இருக்கிறது நகரசபையில் என்று—என் ஞாபகம் சரியாக இருக்குமானால் பதினெட்டு ஆண்டுகள் தேர்தல் நடைபெறாமல் இருக்கிறது என்றும் தேர்தல் வைக்க இருக்கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். இதெல்லாம் திட்டம் அல்ல. ஒருவருக்கொருவர் தங்கள் மாநிலத்தைப் பற்றி தெரிந்து கொள்ள—நான் போகாத காரணத்தால். ஆகவே அந்த நேரத்தில் நான் அவர்களிடம் சொன்னேன், இன்னும் கொஞ்சம் நேரத்தை ஒதுக்கி வைத்துக் கொண்டு வாருங்கள், எல்லோரும் உட்கார்ந்து கொண்டு பேசுவோம், பல்வேறு பேச்சுக்கள், கொடுக்கல் வாங்கல் பற்றி, அங்கிருந்து மீன்கள் போன்றவை எல்லாம் வரவேண்டும், இங்கிருந்து உப்பு போன்றவை எல்லாம் போகலாம்—இது போன்றெல்லாம் பேசுவதற்குகொஞ்சநேரத்தைவைத்துக்கொண்டு வாருங்கள் என்று சொன்னேன். எவ்வளவோ முறை நான் வந்து விட்டேன், நீங்கள்தான் வரவில்லை வரவேண்டும் என்று சொன்னார்கள். நான் கண்டிப்பாக வருகிறேன் என்று சொன்

னேன். அங்கே பாரதி சிலை வைக்கவேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் பாரதி சாலை என்றே பெயர் வைக்கிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இதெல்லாம் ஒருமைப்பாட்டிற்குத் தான் உகந்த இலக்கணமே தவிர, பிரிவினைக்கோ, ஒரு போராட்டத்தைத் தூண்டுவதற்கோ அடிப்படையான இலக்கணமல்ல. ஆக, யாரும் சந்தேகிக்க வேண்டாம். நாங்களும் தெளிவாக இருக்கிறோம்; அவர்களும் தெளிவாக இருக்கிறார்கள். தெளிவை யாரும் குழப்பாமல் இருந்தால், பிரச்னை வராது என்பதுதான் எங்களுடைய நோக்கம் என்பதைச் சொல்லி, இந்த அளவிலே யாருக்காவது பதில் சொல்லவில்லை என்றால், நேரமில்லை என்று எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, பதிலளிப்பதில் அக்கறை காட்டாமல் ஒதுக்கி விட்டேன் என்று யாரும் முடிவெடுத்துக்கொள்ளக் கூடாது. அப்ரோப்ரியேஷன் பில் எல்லாம் வருகிறது; ஒரு மணிக்குள் முடித்தாக வேண்டும். நேற்று இங்கே கேட்டேன், பதிலளிக்கவில்லை என்று மாமன்ற உறுப்பினர்கள் சிலர் குறை பட்டுக் கொண்டார்கள். காவல் துறையிலே முழுவதும் பதிலளிக்க வேண்டுமென்றால் நேரம் அதிகமாகும். அப்படிப் பேசினால் 8 மணி நேரம் எம். ஜி. ஆர். பேசினார் என்ற கருத்தும், அப்படிப் பேசாவிட்டால் பதில் வரவில்லை என்றும் சொல்லப்படுகிறது. யார் யார் பேசினார்கள் என்பதையெல்லாம் குறித்து வைத்துக்கொண்டு, விளக்கமாக பதில் சொல்ல வேண்டுமென்றால், பேரவைத் தலைவர், துணைத் தலைவர் அதற்கு நேரம் ஒதுக்கவேண்டும். இவைகளுக்கெல்லாம் நிச்சயமாக பதில் சொல்ல வேண்டும். அவைகளுக்கெல்லாம் பதில் சொல்ல இன்னும் சந்தர்ப்பம் நிறைய இருக்கிறது என்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, இதன்மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் சஸ்பென்ஸ் ஒன்றைச் சொன்னார்கள். கில்ஜி என்ற புனைப் பெயரிலே எழுதியிருப்பது சங்கமுத்து என்று சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதைத் தெளிவுபடுத்த வில்லை. அவர் வாசித்த கட்டுரை எழுதிய நாகராஜன் என்பவரும், அந்த கில்ஜி என்பரும் ஒருவர்தானா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் இரண்டு கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஒன்று, புனைப் பெயரில் கில்ஜி என்று எழுதுபவரும் அவர்தான், யுவன் என்று எழுதுபவரும் அவர்தான் என்று சொல்லப்படுகிறது இங்கே இருக்கிற ஆதாரம் யுவன் என்று குறிப்பிடுகிறது. பத்திரிகையிலே வருகின்ற தகவல் கில்ஜியும் அவர்தான் என்று சொல்லுகிறார்கள். விசாரணையில்தான் தெரிய வரும்.



திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட மானியத்திலே சில விவரங்களை அரசாட்சியிடம் பெற்றுக்கொள்ள விரும்புகிறோம். துரதிருஷ்டவசமாக சபையிலே சில விஷயங்களிலே திசை திரும்பிவிடுகிறது. நான முதலமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம், நேற்றைய தினம் ஆளும் தரப்பு, எதிர் தரப்பு என்று மட்டுமில்லாமல், மாவட்ட வளர்ச்சிக் குழு கூட்டங்கள், அதனுடைய நிர்வாகம் ஒரு ஜனநாயக உள்ளடக்கத்தோடு நடைபெற்று வர வேண்டும் என்று இந்த மாமன்றம் வெளியிட்டது. அதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே இன்னும் சிலவற்றைப் பற்றிப் பேசலாம் என்றிருந்தேன். நண்பர் வரதராஜன் அவர்கள், கேட்டிருக்கிறார்கள்—மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் சரிவர நடைபெறவில்லை, அதைச் சரிவர நடைபெறச் செய்ய வேண்டும் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், வறட்சிப் பணி, அமைதிப் பணி இவைகளுக்காக பல்வேறு கட்சி களைச் சார்ந்த குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதால், அவைகள் இந்தப் பணிகளை செய்வதால், இந்தப்பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்று நாங்கள் நம்புகிறோம்.

அதோடு, நான்—கெஜடட் ஆபீசர்கள் என்று அழைக்கப் படுகின்ற ஆட்சியிலே பணியாற்றுகின்றவர்கள் சில கோரிக்கை களை வைத்திருக்கிறார்கள், அனைத்துக் கோரிக்கை களையும் ஏற்றுக்கொள்ள அரசால் முடியாதென்றாலும், ஓர் இரண்டு கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளலாம் என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. இதுவரையில் 7 முறைகள் நாம் மைய அரசு கொடுத்த அந்தப் பணத்தை ஆண்டு ஆண்டு கொடுத்துக் கொண்டு வந்ததற்குப் பிறகு, 78-லே இருந்து இரண்டு ஆண்டுகளுக்குக் கணக்குப் போட்டால், 7 முறைகள் 12 கோடி ரூபாய்க்குக் குறையாமல் ஆண்டு ஒன்றுக்கு நாம் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அது போக, 8வது முறையாக மைய அரசு அறிவித்திருக்கிறது. அதையும் மார்ச்சு 1 ஆம் தேதியி லிருந்து அந்தப் பணம் கொடுக்கப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.50]

அதோடு வீட்டு வாடகைப் படியை பற்றி அவர்களுக்கு ஒரு குறை இருக்கிறது. வீட்டு வாடகைப் படியையும் பிடித்துக் கொள்கிறார்கள், இத்தனை ரூபாய் என்று, சம்பளத்திலும் இத்தனை சதவீதம் என்று பிடித்துக்கொள்கிறார்கள். இரண்டும் கூடாது என்கிறார்கள். அடிப்படை ஊழியர், என்ற வகையில் ஆதார நிலை ஊழியர், காவல் துப்புறவு ஊழியர், நீர் எடுக்கும் ஊழியர், தபேதார், துப்புறவு சிப்பந்தி, சுகாதார ஊழியர் சௌக்கிதார், மஸால்ஜி, மஸ்தூர், அலுவலகப்பையன், துப்புறவாளர் லிப்ட்மேன், லிப்ட் இயக்குநர், வான ஓட்டுநர், பதிவறை எழுத்தர், ஊர்தி ஓட்டுநர், தேர்வுநிலை பதிவறை எழுத்தர், தேர்வுநிலை

ஊர்தி ஓட்டுநர் இவர்களுக்கு வீட்டு வாடகைப் படியை வாங்கிக் கொள்வது வழக்கம், அது போக பெர்சென்டேஜி என்று வைத்திருக்கிறார்களே, அதை இனி பிடிப்பதில்லை என்று இந்த அரசு தீர்மானித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு என். வரதராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

அ. மானியக் கோரிக்கை எண். 9.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி—

மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 1845,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

ஆ. மானியக் கோரிக்கை 11.

திருவாளர்கள் கே. எம். தங்கமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவை துணைத்தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 11— மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 28,35,88,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண். 7-மாநிலச் சட்டமன்றம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 7-மாநிலச் சட்டமன்றம், என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 93,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.



**திரு. கே. எம். தங்கமணி**: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 'To discuss policy' என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

மானியக் கோரிக்கை எண்.—7 மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 93,84,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்**: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வருடத்திற்கு 100 நாட்களுக்குக் குறைவில்லாமல் சட்டமன்றத்தை நடத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 93,84,000— இல் ரூ 100 குறைக்க வேண்டும்''.

**திரு. பொ. உத்திராபதி**: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சென்னையில் பழைய சட்டமன்ற பகுதியில் கொசுத் தொல்லையை போக்குவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 93,84,000– இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

(ஈ) கோரிக்கை 8—தேர்தல்கள்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 26,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

**திரு. கே. எம். தங்கமணி**: மாண்புமிகு தலைவரவர்களே, 'To discuss policy' என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 26,22,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

**திரு. கே. ஆர். சுந்தரம்**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாக்குச் சாவடிகள் அமைத்து, வாக்காளர் எண்ணிக்கையில் இல்லாமல் ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்தின் ஒவ்வொரு வார்டிலும் ஏற்படுத்தித் தந்து அந்த மக்களுக்கு வாய்ப்பைத் தரவேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: —

''மானியக் கோரிக்கை எண் 8— தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 26,22,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

ஊர்தி ஓட்டுநர் இவர்களுக்கு வீட்டு வாடகைப் படியை வாங்கிக் கொள்வது வழக்கம், அது போக பெர்செண்டேஜி என்று வைத்திருக்கிறார்களே, அதை இனி பிடிப்பதில்லை என்று இந்த அரசு தீர்மானித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு என். வரதராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

அ. மானியக் கோரிக்கை எண். 9.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

“மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 1845,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

ஆ. மானியக் கோரிக்கை 11.

திருவாளர்கள் கே. எம். தங்கமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவை துணைத்தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

“மானியக் கோரிக்கை எண். 11— மாவட்ட நிர்வாகம்என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 28,35,88,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்”.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண். 7-மாநிலச் சட்டமன்றம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண் 7-மாநிலச் சட்டமன்றம், என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 93,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”,



**திரு. கே. எம். தங்கமணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ‘To discuss policy’ என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

மானியக் கோரிக்கை எண்.—7 மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 93,84,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்”.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வருடத்திற்கு 100 நாட்களுக்குக் குறைவில்லாமல் சட்டமன்றத்தை நடத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

“மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 93,84,000— இல் ரூ 100 குறைக்க வேண்டும்”.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சென்னையில் பழைய சட்டமன்ற பகுதியில் கொசுத் தொல்லையை போக்குவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

“மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 93,84,000- இல் ரூ. 100 குறைக்க வேண்டும்”.

(ஈ) கோரிக்கை 8—தேர்தல்கள்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

“மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 26,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”.

**திரு. கே. எம். தங்கமணி:** மாண்புமிகு தலைவரவர்களே, ‘To discuss policy’ என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

“மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 26,22,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்”.

**திரு. கே. ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாக்குச் சாவடிகள் அமைத்து, வாக்காளர் எண்ணிக்கையில் இல்லாமல் ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்தின் ஒவ்வொரு வார்டிலும் ஏற்படுத்தித் தந்து அந்த மக்களுக்கு வாய்ப்பைத் தரவேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: —

“மானியக் கோரிக்கை எண் 8— தேர்தல்கள் என்ற தலைப்பின கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 26,22,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்”.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கை பற்றி விவரக் குறிப்புகள் ** அளிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் மீது விவாதம் நடைபெற்றதற்கு பிறகு என்னுடைய உரையை தரலாம் என்று கருதுகிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் திறமையாக செயல்படவும், மக்கள் வரிப் பணத்திலே இருந்து பயனுள்ள வகையிலே செலவிடப்படுவதற்கும் எல்லா ஒத்துழைப்பும் காட்டப்படவேண்டும். சட்டமன்றம் கூடுகிறபோது ஒவ்வொரு நிமிஷத்திற்கும் எத்தனையோ ஆயிரக்கணக்கான ரூபாய் செலவிடப்படுகிறது என்ற உணர்வு எல்லாத் தரப்பினர்களுக்கும் ஏற்பட வேண்டும். தன் பெயர் பத்திரிகைகளில் அல்லது ரேடியோவில் பெரிய விளம்பரமாக வர வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு பேசுவதோ, அல்லது நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ தவிர்க்கப்பட வேண்டும். எல்லாக் கட்சிகளிலும் புதிய உறுப்பினர்களுக்கும் சரி, பழைய உறுப்பினர்களுக்கும் சரி அந்த அந்தக் கட்சித் தலைவர்கள் ஒரு பயிற்சியை ஏற்படுத்தித் தந்தால் உபயோககரமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. கேள்விகள் எப்படி கேட்கப்படவேண்டும், உபயோககரமான முறையிலே பல கேள்விகள் கேட்பதன் மூலமாக விவரங்களை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் எல்லாம் இருந்தால் நேரம் மீதப்படும், வேலைகள் துரிதமாக நடைபெறவாய்ப்பு உண்டு. சாதாரணமாகக் கேள்விகள், ஜெனரல் நேச்சரில், பொதுத்தன்மையுடையதாக இருக்கின்றன. அதனால் உபகேள்விகள் கேட்பதற்கு வாய்ப்பு இல்லை. தனித்தனி ஊர்கள், தனித்தனிப் பகுதிகள் பற்றிய கேள்விகள் அதிகமாக இருக்கின்றன வருங்காலத்திலே மாநில முழுமையும் கருத்தில்கொண்டு நிர்வாகத்தில் உள்ள சீர்கேடுகளை எடுத்துக்கூறுகிற வகையில் கேள்விகளைக் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறேன்.

சாதாரணமாக இங்கே பேசுகின்ற பேச்சுகள் எல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்களிலே அல்லது வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே பேசக்கூடிய கருத்துக்கள் அடங்கிய முறையிலே இங்கே அதிகமாகப் பேசப்படுகின்றன. இங்கே பேசப்பட்டு வருகிற விவாதத்தினுடைய தரம் உயர்ந்ததாக இருக்கக்கூடிய வகையில் எல்லாத் தரப்பினரிடம் இருந்தும் ஒத்துழைப்புக் கொடுக்கப்படுகிற முறையிலே இந்த மாமன்றத்திற்கு ஏற்கெனவே இருந்துவருகின்ற நல்ல பெயர் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

** ....ம் பக்கங்களில் இணைப்பு..ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



அடுத்து ஒரு கோரிக்கையை நான் பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

* * **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது சட்டமன்றம் பற்றிய விவாதம். ஆனால் தாங்கள் சபைத் தலைவரைப்பற்றிப் பேசுவதாக இருக்கிறது. அந்த அந்தச் சூழ்நிலைகளில் சில சில சூழ்நிலைகளில் சில வார்த்தைகளை நீக்க வேண்டியிருக்கும். ஆகவே அந்த வாசகம் வேண்டாம்.

**திரு உ. சுப்பிரமணியன்:** அந்த தைரியத்திலே பல காரியங்கள் நடைபெறுகின்றன, அது தவிர்க்கப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு தான் சொன்னேன். எடுத்துக்கொண்டால் எடுத்து கொள்ளுங்கள். இல்லையென்றால் உங்கள் விருப்பம். அதிலே எனக்குக் கருத்து வேறுபாடு கிடையாது.

கவர்னர் உரை கூட்டுக் கூட்டத்தில் ஆற்றப்படுகிறது. பேரவை மேலவை ஆகியவை அடங்கிய கூட்டுக் கூட்டத்திலே நடைபெறுகிறது. ஆனால் பட்ஜெட் தனியாக பேரவையிலே சமர்ப்பிக்கப்படுகிறது. இங்கே சமர்ப்பிக்கப்பட்ட பிறகு சில நாட்கள் கழித்து மேலவையிலே அது கொண்டுவரப்படுகிறபோது அதற்கு முக்கியத்துவமோ விசேஷத் தன்மையோ இல்லாமல் போய்விடுகிறது. சட்டத்திலே இடர்ப்பாடோ அல்லது அரசியல் அமைப்புச் சட்டத்திலே இடையூறுகளோ இருந்தால் நீக்கி இரண்டையும் ஒரே கூட்டத்திலே நடத்துவதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்ற என்னுடைய சிறிய ஆலோசனையை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

சட்டமன்றம் இன்னும் அதிகமான தடவைகள் கூடவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை, ஏனென்றால் சென்ற ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடர் நடந்தது. ஆகவே ஒரு கூட்டத் தொடருக்கும் இன்னொரு கூட்டத் தொடருக்கும் இடைவெளி அதிகமாக இருக்கிற காரணத்தினால் அரசாங்கத் தரப்பிலிருந்து பல அவசரச் சட்டங்கள் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது, அவசரச் சட்டங்கள் என்றாலே மக்களுக்கு அலர்ஜியாக இருக்கிறது, ஆகவே அவசரச் சட்டங்கள் கொண்டுவந்தால் ஏற்படுகிற அந்த அவப்பெயரை இந்த அரசுக்கு ஏற்படுத்திக்கொள்ளவேண்டாம். அதிகமான அளவுக்கு கூடுகிற நிலைமை இருந்தால் மக்களுடைய பிரதிநிதிகள் தங்கள் கருத்தை சொல்லலாம், சொன்னால் ஏற்பதை ஏற்று தள்ளுவதை தள்ளுவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே அதிகமான கூட்டத் தொடர்களைக் கூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, இந்தக் கட்டிடம் பல ஆண்டுகளுக்கு முன்னாலே குறைந்த எண்ணிக்கை உடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்த காலத்திலே கட்டப்பட்டது. ஆகவே இதை விஸ்தரித்து நல்ல

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முறையிலே கட்டப்படவேண்டும் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்றாலும்கூட விரைவாக அதை அமல் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜப்பானிலே நேஷனல் டயட் என்ற அமைப்பு இருக்கிறது அது நன்றாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. சபைத் தலைவருக்கு வலது புறமும் இடதுபுறமும் அமைச்சர்கள் இருக்கும்படியான ஒரு நிலையை ஏற்படுத்தி உள்ளார்கள். இங்கே அமைச்சர் பெருமக்கள் இப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்களையே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தலைவருக்கு இரண்டு புறமும் அவர்கள் அமர்ந்தால் ஒட்டுமொத்தமாக சபை முழுவதையும் பார்ப்பதற்கு வாய்ப்பு இருக்கும், அவர்கள் சபையை நோக்கிப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும். அது மட்டுமல்லாது சபைத் தலைவருக்குப் பக்கத்திலே வலது புறத்திலே பிரதம செயலாளர் இருக்ககூடிய வாய்ப்பு இருக்கிறது.

[முற்பகல் 11.00]

ஆகவே, செயலாளர் அவர்கள் சபாநாயகர் அவர்களுக்கு யோசனை சொல்லவோ, அல்லது சபாநாயகரவர்கள் செயலாளர் அவர்களிடம் விவரங்கள் கேட்கவோ வசதியாக இருக்கும். அவ்வாறின்றி ஒவ்வொரு முறையும் செயலாளர் அவர்கள் எழுந்து செல்வது என்றால் கொஞ்சம் சிரமமாகத் தெரிகிறது; மேலும் சில நெருக்கடியான நேரங்களில் செயலாளர் அவர்கள் சபாநாயகரிடம் சென்று, அதன்பிறகு சபாநாயகரவர்கள் ஏதாவது தீர்ப்பு சொன்னால் இந்தச் செயலாளர் அவர்கள்தான் சபாநாயகர் அவர்களிடம் சென்று தவறான கருத்தைச் சொல்லி மன்ற உறுப்பினர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறார்களோ என்ற உறுத்தலும் ஏற்படுகிறது. ஆகவே, இதையெல்லாம் தவிர்ப்பதற்காக அந்த முறையை ஏற்படுத்திக் கொண்டால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜப்பான் தேசீயப் பாராளுமன்றத்திலே வட்ட வடிவிலே சீட்டுகள் போடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, புதிதாக வந்த உறுப்பினர்களுக்கு அதாவது ஜூனியர் மெம்பர்களுக்கு உள் வரிசையிலே இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது; அனுபவம் உள்ள சீனியர் மெம்பர்களுக்கு வெளி வரிசையிலே அதாவது பின்னால் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையையும் இங்கே அமல் படுத்தினால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

டோக்கியோ, கோலாலம்பூர் பாராளுமன்றக் கட்டிடத்திற்கு அருகிலேயே உறுப்பினர்களுக்கு அலுவலக அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதனால் அங்கேயே தங்களுடைய தொகுதி மக்களைப் பார்க்கவும், பாராளுமன்ற நடவடிக்கைகளைக் கவனிக்கவும் வசதியாக இருக்கிறது ஆனால் இங்கே உறுப்பினர்களைச் சந்திக்க வருகின்ற தொகுதி மக்களுக்கும் உறப்பினர்களுக்கும் இடையில் ஒரு இரும்புத் திரையே போடப்பட்டுள்ளது. விடுதியிலேயும் சந்திக்க முடியவில்லை; சட்டமன்றத்திலேயும் சந்திக்க முடியவில்லை. ஆகவே, இதற்கு ஒரு வழி காண்பதற்காகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகங்கள்கூடக் கட்டலாம். மாண்புமிகு



துணை சபாநாயகரவர்கள் அனுமதித்தால் ஜப்பானிலே உள்ள படங்களையெல்லாம் காண்பிக்க தயாராக இருக்கிறேன். அதைப் பார்க்கும்பொழுது எங்களுக்குப் பொறாமையாகக்கூட இருக்கிறது. இங்கேயும் அப்படிப்பட்ட சூழ்நிலைகளை அமைத்துக்கொடுத்தால் நல்லமுறையில் சிந்தித்துச் செயலாற்றுவதற்கான வாய்ப்பிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற விடுதியிலே இப்பொழுது நெருக்கடி காரணமாகப் பல்வேறு தொல்லைகள் இருக்கின்றன. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எப்படி தனித்தனி வீடுகள் கொடுக்கப்படுகின்றனவோ அதைப்போல இங்கேயும் தனித்தனி வீடுகள் கொடுக்கப்பட்டால் பலவகைகளில் உதவியாக இருக்கும். குறிப்பாகத் தற்பொழுது பட்ஜெட் கூட்டத்தொடர் ஏறக்குறைய இரண்டு மாதங்கள் தொடர்ந்து நடக்கிறது. இடைவேளை வருகின்ற நேரத்தில் நாங்கள் உணவுக்காகப் படும் கஷ்டத்தை அறிவதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் எங்களுடைய கான்டீனுக்கு வந்து ஒருவேளை சாப்பிட்டுப் பார்த்தால் அந்த அருமை, பெருமை, கஷ்டம் தெரியும். எத்தனை கான்ட்ராக்டர் களை மாற்றினாலும்கூட அதனுடைய தரம் போய் விட்டிருக்கிறது. அந்தக் குறையைப் போக்குவதற்காக விரும்புகின்ற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் குடும்பத்தினரை அழைத்து வந்தோ அல்லது சமையல்காரரை அழைத்து வந்தோ அவர்கள் மூலம் சாப்பிடும் வசதியை ஏற்படுத்த வேண்டுமென்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

லாபியைப் பொறுத்தவரையில் சரியாக இல்லை. பழைய கட்டிடமாக இருப்பது காரணம் என்று சொல்லலாம். எதிர்க்கட்சி களுக்கு ஒரு பகுதியும், ஆளுங்கட்சிக்கு ஒரு பகுதியும் என்று இருப்பதால், சட்டமன்றம் கூடுகின்ற நேரங்களில் அவர்கள் ஒன்றர கலந்து பேசுவதற்கான வாய்ப்பு இல்லை. பாராளுமன்றத்தில் உள்ளதைப்போல இங்கே சென்ட்ரல் ஹால் கிடையாது. இதனால் இரண்டு தரப்பினரும் ஒன்றரக் கலக்க முடியாத நிலையிலே இருக்கிறது. ஆகவே. மத்திய இடத்திலே எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் சந்தித்துப் பிரச்னைகளைப் பற்றி விவாதிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்குப் பக்கத்தில் நிறையக் காலி இடம் இருக்கிறது. அதில் அழகான பூங்காக்களை ஏற்படுத்த வேண்டும். மாலை நேரங்களில் ஓய்வு நேரங்களில் பொழுதுபோக்காக விளையாடுவதற்கு வாலிபால், பேட்மின்டன், டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களுக்கு வசதி செய்து தர வேண்டும். காலையிலிருந்து மாலை வரையில் சட்டமன்றத்தில் கலந்து கொண்டுவிட்டு, மற்ற நேரங்களில் தொகுதியிலிருந்து வருகின்றவர்களைச் சந்தித்துப் பேசுவதோடு மட்டுமல்லாமல்,

Mental relaxation as well as physical relaxation

[திரு. உ. சுப்பிரமணியன்] [1981 மே 9

போன்ற ஒரு ஓய்வையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்புகளை தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நூல்நிலையத்தைப் பொறுத்தவரையில் இங்கே மிகப்பெரிய அளவில், இந்தியாவிலேயே தரமான நூல்நிலையம் இருக்கிறது என்று மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சென்ற ஆண்டு கூறியுள்ளார். இருந்தாலும் அங்கே போய் இருந்து படிப்பதற்கான சூழ்நிலையை இன்னும் நல்லமுறையில் அமைக்க வேண்டும். இப்பொழுது விரிவுபடுத்தியிருக்கிறார்கள், மகிழ்ச்சி. ஆனால் சாவதானமாகப் படிப்பதற்கும், குறிப்பு எடுப்பதற்கும், உட்கார்ந்து எழுதுவதற்கும் அங்கே வகையில்லை.

ஆகவே அதற்கான வசதிகளையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே சட்டமன்றத்திலே வேலை செய்கின்ற பியூன்கள் எல்லாம் நீண்ட நெடுங்காலமாக, தற்காலிமாக இருப்பதாக நாங்கள் அறிகிறோம். சிலர் 1962—லிருந்தே இருக்கிறார்கள். ஆஸ்டலிலும் பணி புரிகிறார்கள். நீண்ட நெடுங்காலமாக இருப்பவர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பினைக் கொடுத்து, அவர்களைச் சட்டமன்றம் கூடாத காலங்களில், வேறு வகையிலே பயன்படுத்திக் கொண்டால், அவர்களுக்கும் ஒரு பயன் கிடைக்கக்கூடிய வகையில் இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், சபை நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில், லைவ் டெலிகாஸ்ட் டெலிவிஷன் மூலமாக, அன்றாடம் நடக்கின்ற நிகழ்ச்சிகளை ஒளி பரப்புவதற்கான ஏற்பாடு செய்தால், பல வகையில் பயன் உள்ளதாக இருக்கும். ஏனென்றால், இங்கே விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் பல நடக்கின்றபொழுதுகூட அதைப் பொது மக்கள் கவனிப்பதற்கு வாய்ப்பிருக்கும், ஒட்டுமொத்தமாக நாங்கள் செல்லும்போது, சட்டசபை உறுப்பினர்கள் என்றாலே, கடந்த ஒரு வாரகாலமாக, ரொம்ப கேவலமான முறையில் பொது மக்கள் பேசக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, யார், யார் தவறு செய்கிறார்கள் என்று அந்தத் தொகுதி மக்களும், பொது மக்களும் நேரிடையாகப் பார்ப்பதற்கு வசதியாக, வாய்ப்பு ஏற்படுத்தக்கூடிய வகையிலே, லைவ் டெலிகாஸ்ட் செய்து கொடுத்தால், அதுநிச்சயமாகப் பயன்படும் என்று கருதுகிறேன்.

மேலும், இப்பொழுது பார்வையாளர்கள் காலரியிலிருந்து நோட்டீஸ்களோ, வேறு விரும்பத்தகாத பொருள்களோ எறிவதை தடுப்பதற்காக வலைகள் போடப்பட்டிருக்கின்றன. என்னுடைய சிறிய யோசனை அதேபோல் இங்கும் நடுவிலே ஒரு வலை இருந்தால், இங்கிருந்து அங்கோ, அங்கிருந்து இங்கோ வீசப்படுகின்ற பொருள்கள், விரும்பத்தகாத பொருள்கள் தடை செய்யப்படும். அவைகள் நம் கட்சித் தலைவர்கள் தலையிலே விழக்கூடிய வாய்ப்பிருக்கிறது அதைக் கருதிக்கூட அந்த நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க வாய்ப்பிருக்கும். ஆகவே, அதற்காகக்கூட துணைத் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் நினைக்கின்றேன்.



1981 மே 9] [திரு. உ. சுப்பிரமணியன்]

இப்பொழுது முன்னாள் எம். எல். ஏக்களுக்குச் சில வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், நேற்றுவரை சட்டமன்ற உறுப்பினராக, மரியாதையான நிலையிலே இருந்தவர்களும் இன்று பஸ் ஸ்டாண்டில், டிக்கட் வாங்குவதற்கு, இடம் வாங்குவதற்கு முடியாத மிகவும் அவலமான ஒரு நிலையிருக்கிறது. அதை மாற்றுவதற்கு நீங்கள் இலவசமாக அவர்களுக்கு பாஸ் கொடுக்காவிட்டாலுங்கூட, ஒரு அடையாள கார்டாவது கொடுப்பீர்களானால் அவர்கள் தாங்கள் இழந்த பெருமையை. நிலைநாட்டி சிறு வசதி பெறுவதற்கு வாய்ப்பிருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மருத்துவ வசதி கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்களுடைய குடும்பங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதையும் அவர்கள் நல்கினால் அரசாங்கத்திற்குப் பெரிய நஷ்டம் ஏற்படப் போவதில்லை. ஆகவே, அதையும் மனதிலே கொண்டு, அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இப்பொழுது ரெயில்வே பாஸ்கூட கொடுத்திருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்றபொழுது, இங்கே ஆளுங்கட்சி, எதிர்க் கட்சிகளுக்கிடையிலே ஒரு வலை இருந்தால் நல்லது என்று குறிப்பிட்டார்கள். அது நடவடிக்கை குறிப்பேட்டிலே இருக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். அவருடைய அனுமதி பேரிலே......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது இருக்கலாம். ஒன்றும் தவறல்ல.

திரு. உ. சுப்பிரமணியன்: துணைத் தலைவருக்கு யோசனையாக சொன்னேன், விரும்பினால் வைத்துக்கொள்ளுங்கள். இல்லையானால் விட்டுவிடுங்கள். நான் ஒன்றும் அன்பார்லிமென்டரியாகச் சொல்லவில்லை. அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பார்லிமென்டரி, அன்பார்லிமென்டரி அல்ல. பொதுவாக, இரண்டுக்கும் மத்தியிலே ஒரு திரை இருக்க வேண்டாம். எதிர்க்கட்சி ஆளுங்கட்சிக்கு மத்தியிலே திரை இருக்க வேண்டாம்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ரெயில்வே கட்டணங்கள் கூடியிருக்கிற காரணத்தால், கூப்பன்களின் மதிப்பை அதற்குத் தகுந்த அளவுக்கு ஏற்றிக் கொடுக்குமாறு நான் கேட்டுக்கொள்வதோடு, தற்செயலாகப் பிரயாணம் செய்ய முடியவில்லை அல்லது ரிசர்வேஷன் கிடைக்காமல் உபயோகப்படுத்தாத டிக்கட்டுகளுக்கு ரீஃபண்ட் வாங்குவதற்கான வழிவகை ஏற்படுத்தியிருப்பதாகத்

[திரு. உ. சுப்பிரமணியன்] [1981 மே 9

தெரியவில்லை. எனக்கே, இரண்டு தினங்களுக்கு முன்னால் அந் நிலை ஏற்பட்டது. ஆகவே, அதற்கும் ஒரு வழிவகை ஏற்படுத்தி கொடுக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

பல உறுப்பினர்கள் கடைசியில் என்னிடம் சொன்ன தகவலை என்வாயிலாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டார்கள், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே அதை உங்கள் மூலமாகச் சொல்லுவதற்காக இரண்டொரு நிமிடங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே சென்ற பட்ஜெட்டிலே உறுப்பினர்களுக்கு டெலிபோன் வசதிக்காக அதிகப்படியான தொகையை கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் யாருக்கும் வழங்கப்படவில்லை. அது ஏன் அமல்படுத்தப்படவில்லை என்று கேட்கவிரும்புகிறேன். உடனடியாக அதை அமல் படுத்தவேண்டும் என்றும், அந்தச் சலுகை எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் அநேகமான உறுப்பினர்களின் விருப்பம் என்னவென்றால், இப்பொழுது தங்களுடைய சட்டமன்ற அலுவல்களைச் சரியாக நிறைவேற்றவேண்டும் என்பதற்காக ஒரு எழுத்தர் அல்லது கிளார்க்கு தரப்படவேண்டும். குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களிலே சேர்மன் கிளார்க்கு என்று ஒருவர் இருப்பார். நாம் அங்கே செல்லுகின்ற நேரங்களில் தொகுதி வேலைகளை அவர் செய்வார். அதைப்போல இருப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கிளார்க்கை கொடுத்து அதிகமான செலவு இல்லாமல் வசதி ஏற்படுத்தித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பதவியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள்இறந்தால் தற்சமயம் ஒரு தொகை கொடுக்கப்படுகிறது, அதை கணிசமான அளவுக்கு உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எத்தனையோ முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வறுமையால் வாடிக் கொண்டு இருக்கிறார்கள். எங்கள் கட்சியை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் வால்மீகி அவர்கள் இறந்த பின்னர் அவர் குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறது. எனவே அந்த இறந்த சட்டமன்ற உறுப்பினர்களின் குடும்பத்திற்கு அந்தத் தொகையை கணிசமான அளவுக்கு உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தனித்தனி வீடுகள், பழுதுபார்த்து நீண்ட நாட்களாகிவிட்டன. அந்த வீடுகளை உடனடியாக பழுதுபார்த்து கொடுத்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.



1981 மே 9] [திரு. உ. சுப்பிரமணியம்]

*திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற மாநில சட்ட மன்றங்கள் பற்றிய மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களை சொல்ல வாய்ப்பளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற பணிகள் பலப்பல. அந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அமெரிக்காவில், இங்கிலாந்தில் இருப்பதைப்போல, அலுவலகம் அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு பொதுப்பணியிலே உதவி செய்வதற்கு ஒரு தட்டெழுத்தர், எழுத்தர், மற்றும் தட்டெழுத்து இயந்திரம் அளித்து உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மற்றத் துறைகளில் கொடுக்கப்படுகின்றதைப்போல 'சர்வீஸ் ஸ்டாம்ப்'களை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுத்தால் அவர்கள் தபால் செலவு மிச்சம் செய்கின்ற வாய்ப்பிருக்கும். அதேபோன்று சர்வீஸ் ஸ்டாம்ப்புகளை வழங்கவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மிகவும் பெரியதாக உள்ளது. அதனால் அங்கே சுற்றுப்பயணம் செய்வது மிகவும் கடினமாக உள்ளது. அந்தக் கஷ்டங்களைத் தவிர்க்கும் வகையில் அந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்யும்போது, ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஜீப்புகளை மாதம் இரண்டு முறையாவது இந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய உபயோகத்திற்கு ஒதுக்கித் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் தொலைபேசியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் சொல்ல விரும்புவது, தொலைபேசி அலவன்ஸ் என்று கொடுப்பதைவிட ஏதாவது ஒரு இடத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அமைத்துத் தந்து, அந்தத் தொலைபேசியின் முழு செலவையும் அரசே ஏற்றுக்கொண்டால் மிகவும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களைப் போன்று கிராமப்புறங்களிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் தொலைபேசியை அமைத்துக் கொள்வது என்றால் ஒரு கிலோ மீட்டருக்கு 300, 400 ரூபாய் கூடுதலாக கட்டணம் செலுத்த வேண்டிய சூழ்நிலை அந்த இலாகாவிலே இருக்கிறது. அதைத் தவிர்த்து இந்தத் தொலைபேசி செலவை நம்முடைய அரசே ஏற்றுக்கொண்டால் மிகவும் உதவியாக இருக்கும்.

அடுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியூருக்குச் செல்லும் போது குறைந்த பட்சம் ஒருவரை அவருடைய உதவியாளரை அழைத்துச் செல்ல வாய்ப்பளித்தால் அவர்கள் தங்களுடைய பணியை மேலும் சிறப்பாக ஆற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

[திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்] [1981 மே 9

சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நிறைய கேள்விகளைச் சட்டமன்றக் கேள்வித் துறைக்கு அனுப்புகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், பல கேள்விகளைச் சட்டமன்றத் துறைக்கு அனுப்பியிருக்கிறேன். அந்தக் கேள்விகள் அனுமதிக்கப் 'பட்டு இருக்கின்றனவாக, அல்லது உயிரோடு இருக்கின்றனவா என்கிற நிலைமை தெரியாமல் இருக்கிறது. இதுபோன்ற நிலைமைகளை மாற்றி, சட்டமன்ற உறுப்பினர்கள் அளிக்கும் கேள்விகள், சட்டமன்ற விதிகளுக்கு உட்பட்ட காலத்திற்குள் பதில் அளிக்கக்கூடிய சூழ்நிலையை நம்முடைய அரசு செய்துதர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக, இந்தச் சட்டமன்றத் துறையிலே சில கேள்விகளுக்குத் தவறான தகவல் தரும் சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லி இந்த நேரத்தில் விளக்கலாம் என்று கருதுகின்றன. என்னுடைய தொகுதியான காஞ்சீபுரத்தில் கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் கட்டுவதற்கு உத்தேசம் உண்டா என்று கேட்டு இருந்தேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்காக 7 லட்ச ரூபாய் ஒதுக்கி, அதற்கான வேலைகள் துவக்கப்பட்ட பிறகு, அந்தச் சட்டமன்ற உறுப்பினருக்கு அச்சடித்துத் தரப்படுகின்ற புத்தகத்தின் பதிலில் அதற்கான யோசனை இல்லை என்று தரப்படுகிறது. இதுபோன்ற குறைகளை தவிர்க்கக்கூடிய வரையில், சட்டமன்றக் கேள்வி நேரத்தில் இதுபோன்ற கேள்விகள் வந்தால், அதற்கான துணை வினாக்கள் கேட்பதன் மூலம் இதுபோன்ற தவறுகள் தவிர்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர்—தலைமை)

எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியவர் அவர்கள் நூலகம் பற்றி விரிவாக எடுத்துப் பேசினார்கள். நம்முடைய நூலகத்திற்குக் குறைந்த தொகை தான் ஒதுக்கப்படுகிறது. அண்மை மாநிலமான கேரளாவில் கூடுதலான தொகை ஒதுக்கப்பட்டு, நூலகங்கள் நல்ல முறையில் பராமரிக்கும் சூழ்நிலை இருக்கிறது. அதுபோன்ற சூழ்நிலையை நம்முடைய தமிழகத்தில் உருவாக்க கூடுதல் தொகை ஒதுக்கீடு செய்ய வேண்டும். அந்த நூலகத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே உறுப்பினர்கள் உட்காருவதற்கு வசதியாக நாற்காலிகள் போடப்பட வேண்டும். ஏதோ ரிப்பேராகிவிட்ட பஸ் சீட்டுகளை தற்போது அங்கே கொண்டு வந்து போட்டுள்ளார்கள், அந்த நூலகம் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். அந்த நூலகத்தில் உறுப்பினர்கள் உட்கார்ந்து நல்ல வசதியான முறையில் படிக்கலாம் என்ற சூழ்நிலையை நம்முடைய அரசு செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



[1981 மே 9 (திரு.ப. வெங்கிடசுப்பிரமணியம்)

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியைப் பற்றி ஏற்கனவே பலமுறை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஒருவர் தொடர்ந்து 20–30 நாட்கள் சாப்பிட்டால் அவர் உயிரோடு இருக்க முடியுமா என்ற சூழ்நிலையில் அங்கே உணவுகள் பராமரிக்கப்படுகின்றன. நல்ல தரமான உணவை சட்டமன்ற விடுதியிலேயே கூட பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால், தமிழகத்தில் மற்ற இடங்களில் எப்படி இருக்கும் என்பதை எடுத்துக்காட்டத் தேவையில்லை என்று சொல்லி, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் இருக்கும் ஓட்டல்களில் உணவுகள் நியாயமான முறையிலும், தரமான முறையிலும் வழங்க ஏற்பாடு செய்ய அரசு முன்வர வேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தெரிந்தோ, தெரியாமலோ சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு டிரங்கால் புக் செய்து விட்டால், அது வருமா, வராதா என்ற சூழ்நிலை இருக்கிறது. இரவு பூராவும் கண்விழித்து காத்து இருந்து, காலையில் கேட்டாலும் கிடைப்பது இல்லை. இதுபோன்ற குறைகள் தயவு செய்து தவிர்க்கப்பட வேண்டும். முடிந்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தனியாக ஒரு தொலைபேசி நிலையமும், தபால் நிலையமும் ஏற்பாடு செய்து தந்தால் இதுபோன்ற குறைகள் தவிர்க்க வாய்ப்பு எற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் நூலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பகுதி மிகவும் குறைவாக இருக்கிறது. அதற்கு கூடுதல் இடவசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றக் கூட்டத்தொடர் நடக்கின்ற நேரங்களில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பணிகளை அந்தத் தொகுதி மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளை செய்ய முடியாத சூழ்நிலை தொடர்ந்து 40 நாட்கள், 50 நாட்கள் என்று கூட்டம் நடைபெறுகிற காரணத்தால் இருக்கிறது. அந்தத் தொகுதியில் உள்ள குறைபாடுகளை, அதிலும் குறிப்பாக தற்போதுள்ள வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்த்து, மேலும் எந்தெந்த இடங்களில் அத்தகைய பணிகள் செய்யவேண்டும் என்று ஆராய்ந்து சொல்கிற அளவிற்கு முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் இதுபோன்ற காலங்களில் தங்களுடைய தொகுதிக்குச் சென்றுவர வாய்ப்பு ஏற்படுத்துகின்ற வகையில் இங்கே நடைபெறுகிற கூட்டத்தொடர் கொஞ்சம் இடைவெளி விட்டு நடத்தினால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.20]

அடுத்து, சட்டமன்ற அலுவலகத்திற்கு வந்தால், எங்களைப் பார்க்க வருகின்ற பார்வையாளர்கள் சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் மரத்தடியில் நிற்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்க சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்க வருகின்ற பார்வையாளர்களுக்கு ஒரு அறை ஒதுக்கி, அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியிலிருந்து வருகின்ற பார்வையாளர்களைச் சந்திக்க ஒரு ஏற்பாட்டைச் செய்துகொடுத்தால் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த சட்டமன்றத்தில் பல காலமாக தற்காலிகமாக பல தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அதைப்போன்று சட்டமன்ற விடுதியிலும் பல்லாண்டுகளாக தற்காலிகமாக வேலை செய்கிறார்கள். அவர்களுடைய வேலையை நிரந்தரமாக்க எந்தவகையில் செய்தால் உதவியாக இருக்கும் என்று அரசு பரிசீலனை செய்து, அதற்கு ஏற்ற ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்றுகூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

இப்போது தேர்தலைப் பொறுத்தவரையில், உறுப்பினர்கள் தாங்களாகவே செலவு செய்து, சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றார்கள். இந்த தேர்தல் செலவைப்பற்றி ஏற்கனவே மாநில அரசும் மத்திய அரசும் ஒரு கொள்கை முடிவை எடுக்கவேண்டுமென்ற ரீதியிலே, தேர்தல் செலவில் ஒரு குறிப்பிட்ட பகுதியை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ரீதியிலே பரிசீலனை செய்துகொண்டிருப்பதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்து இதைப்போன்ற நல்லதொரு அருமையான சந்தப்பத்தை உருவாக்கி, நேர்மையான முறையில், நல்ல முறையில் சட்டமன்றத் தேர்தல் நடக்கின்ற முறையில் மத்திய அரசு அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் வகையில் மாநில அரசு தேர்தலுக்கான ஒரு குறிப்பிட்ட பங்கை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ரீதியிலே என்னுடைய கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சட்டமன்ற மேலவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட காலம் பொறுப்பிலே இருந்துவிட்டு அவர்கள் செல்கிறபோது அவர்களுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டுமென்ற ஒரு ஏற்பாட்டை, சட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த பென்ஷன் கொடுக்கும்போது, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 1956–லே அந்த மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைக்கப்பட்ட பின்னால், அந்த பென்ஷனைக் கணக்கிடும்போது அதற்கு முன்னால் அந்தப் பணியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது 1956 ஆம் ஆண்டுக்கு முன்பு அந்த கால கட்டத்திலே அவர்கள் கேரளத்திலே அந்த அரசு சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். நம்முடைய அரசு உறுப்பினர்களுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டத்தை செயல்படுத்திக் கொடுக்கிற இந்த நேரத்தில் அவர்களுடைய அந்த காலகட்ட சர்வீசையும் இணைத்து பென்ஷன் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலே ஏராளமான உறுப்பினர்கள் நிச்சயமாக வரமாட்டார்கள். குறைந்த பணச் செலவுதான் ஆகும். அதனால் கன்னியாகுமரி மாவட்டத்திலும் செங்கோட்டைத் தாலுகாவிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பயன்படும் வகையில் ஒரு நிலைமை இருக்கிறது. அவர்கள் கூட ஏற்கெனவே மாநில அரசுக்கும் சட்டமன்ற செயலாளருக்கும் கடிதப் போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு அதில் சிறிது கருணை காட்டி 56-க்கு முன்னால் பணியில் இருந்த அவர்களுக்கு அந்தப் பணியையும் கணக்கிலே எடுத்துக்கொண்டு பென்ஷன் கொடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கு அந்த உரிய வாய்ப்பை, நன்மையை அளிக்க வேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாக நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



அதற்கு அடுத்தபடியாக, தொகுதிகளைப் பொறுத்தவரையில் சில கிராமங்கள் அந்தந்த தொகுதிக்கு சம்பந்தம் இல்லாமல் 5 மைல், 6 மைல், 15 மைல் என்றுகூட சொல்லலாம். அவ்வளவு தூரத்தில் இருக்கின்றன. ஒரு தொகுதிக்கும் இன்னொரு தொகுதிக்கும் இடைப்பட்ட தூரம் மிக அதிகமாக இருக்கிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் புத்தேரி என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊருக்கு இந்தப் பக்கம் பார்த்தால் நாகர்கோவில் தொகுதி இருக்கிறது; அடுத்த பக்கம் பார்த்தால் கன்னியாகுமரி தொகுதி இருக்கிறது. இந்த இரண்டு தொகுதிக்கும் சம்பந்தமில்லாமல் அந்தக் கிராமம் குளச்சல் தொகுதியில் இணைக்கப்பட்டிருக்கிறது. இதை மாற்றி, அந்த புததேரி என்ற ஊரை ஒன்று கன்னியாகுமரி தொகுதியோடு இணைக்க வேண்டும் அல்லது நாகர்கோவில் தொகுதியோடு இணைக்க வேண்டுமென்று தேர்தல் கமிஷனுக்கு நம்முடைய அரசு சிபாரிசு செய்து, புத்தேரி கிராமத்தில் இருக்கிற மக்களுக்கு நன்மை அளிக்கிற வகையில் இந்த மாற்றத்தைச் செய்ய நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொகுதி வேலைகளைச் கவனிப்பதற்காக இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியில் எல்லாப் பகுதிகளுக்கும் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அந்த சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க வருபவர்களுக்கு ஓரளவுக்கு சௌகரியங்களை ஏற்படுத்துகின்ற வகையிலே ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு அலுவலகத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்—அவருடைய தொகுதியிலே.

[திரு. சு. முத்துகிருஷ்ணன்] [1981 மே 9

பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களைப் பொறுத்தவரையிலே அவர்களுக்கு டெலிஃபோன் வசதி இருக்கின்றது. அவர்களுக்குரிய டெலிஃபோன் செலவினைப் பொறுத்தவரையிலே அந்த பஞ்சாயத்து யூனியனே ஏற்றுக்கொள்கின்றது. இது இப்போதுள்ள சட்டப்படி இருக்கின்ற நிலைமை. ஆனால் ஒரு சட்டமன்ற உறுப்பினரை எடுத்துக் கொண்டால் அவர் கிட்டத்தட்ட மூன்று பஞ்சாயத் யூனியன்கள் சேர்ந்த அளவிலே தொகுதிப் பணிகளைக் கவனிக்க வேண்டி இருக்கிறது. உரிய நேரங்களிலே உரிய இடங்களிலே ஆங்காங்கே பல கடமைகள் குறித்து டெலிஃபோன் செய்யவேண்டி இருக்கின்றது. அப்படி டெலிஃபோன் செய்வதைப் பொறுத்தவரையிலே அதனுடைய சார்ஜை சட்டமன்ற உறுப்பினர்கள்தான் தரவேண்டி இருக்கின்றது. பொதுமக்கள் காரியங்கள் சம்பந்தமாக அவ்வாறு டெலிபோன் செய்ய வேண்டியதிருப்பதால் அந்தச் செலவினையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தொகுதிப் பிரச்சினைகளை கவனிப்பது குறித்து ஒரு ஃபோன் செய்யவேண்டும் என்றால் ஃபோன் செய்துவிட்டு அந்தத் தொகுதி பிரச்சினை சம்பந்தமாக வந்திருப்பவர்களிடம் டெலிபோனுக்கான காசைக் கொடுத்துவிடுங்கள் என்று சொன்னால் அவர்கள் முறைத்துவிட்டுச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஏன் இதைக் குறிப்பாகச் சொல்கிறேன் என்றால் பஞ்சாயத்து யூனியன் சேர்மனைப் பொறுத்த வரையிலே அவர்கள் தைரியமாகச் செய்கிறார்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த வாய்ப்பே இல்லை. இரண்டு மூன்று பஞ்சாயத்து யூனியன் சேர்மனைப் பொறுத்தவரையிலே அவர்கள் தைரியமாகச் செய்கிறார்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தவாய்ப்பே இல்லை. இரண்டு மூன்று பஞ்சாயத்து யூனியன்களைப் உள்ளடக்கியதாக இருக்கின்ற ஒரு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதிப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டும் என்றால் டெலிஃபோன் மிகவும் அவசியமாக இருக்கின்றது.

ஆகவே புரட்சித் தலைவர் அவர்களின் இந்த அரசு நிச்சயமாக இந்தப் பிரச்சினையை கருணை மனதோடு பரிசீலித்து அந்தக் கட்டணத்தை நிச்சயமாக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்து சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையிலே தொகுதியிலுள்ள பொதுமக்கள் தங்களது பிரச்சினைகள் குறித்து மனுக்கள் போன்றவற்றை சட்டமன்ற உறுப்பினர்களிடம் தந்து அதுபற்றிய காரியங்களை மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதற்கான வசதிகள் இல்லை. ஆகவே ஒவ்வொரு சட்டமன்ற உறிப்பினருக்கும் அவரவர்களுடைய தொகுதியிலே ஒரு அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டும். அங்கே டெலிஃபோன் வசதியும் இருக்க வேண்டும். அதுபோன்று அங்கே தட்டெழுத்தர், கிளார்க் என்ற வகையிலே ஒரு பதவியினையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் தேவையான முறையிலே பொதுமக்கள் பிரச்சினையை அணுகி அவர்களுக்குரிய பதில் கிடைக்கின்ற முறையிலே காரியங்களை ஆற்ற முடியும். இந்த



1981 மே 9] [திரு. சு. முத்துகிருஷ்ணன்]

சௌகரியங்களைப் புரட்சித் தலைவரின் அரசு செய்து தரும் என்ற நம்பிக்கையோடு நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். புரட்சித் தலைவர் அவர்கள் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதையும் செய்து தருவார்கள் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது இரயில்வே கூப்பன் கொடுக்கப் படுகிறது. அதாவது இரண்டாயிரம் ரூபாய் என்ற அளவுக்கு அந்த கூப்பன் கொடுக்கப்படுகிறது. ஆனால் சென்னையிலிருந்து விழுப்புரம் செல்லக்கூடியவர்களுக்கும் இரண்டாயிரம், சென்னையிலிருந்து கன்னியாகுமரி, திருநெல்வேலி வரை செல்பவர்களுக்கும் இரண்டாயிரம் என்ற வகையில் அந்த கூப்பன் கொடுப்பது நிச்சயமாக பொருத்தமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தென் மாவட்டங்களிலிருந்து வருகின்றவர்களுக்கு இந்தக் கூப்பனைப் பொறுத்தவரையிலே சற்று அதிகமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இந்த அரசு 5,000 ரூபாய் அளவுக்கான கூப்பன் கொடுப்பதற்காகவாவது பரிசீலனை செய்து கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்திலே பேசுவதற்கு சற்றுக் கூடுதலாக நேரம் அளித்து எனக்கு உதவிய மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி.

[முற்பகல் 11.30]

*திரு.கு. ரமணி: சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, மாநில சட்ட மன்றம், தேர்தல்கள், ஓய்வு ஊதியங்கள், இன்னும் பலவகை செலவுகள் என்ற முறையில் வைக்கப்பட்டுள்ள இந்த மானியங்களின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களை, பயன் உள்ள கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

முதலாவது மாநில சட்டமன்றத்தினுடைய கூட்டங்கள் ஒரு வருடத்தில் 3 முறையாக இந்தக் கூட்டங்கள் நடத்தப்பெற வேண்டும். இத்பொழுது நாம் நடத்திக் கொண்டு வருகிற முறை நம்முடைய தொகுதி வேலைகளுக்கும், இதர வேலைகளுக்கும், ஏன் அமைச்சர்களுடைய வேலைகளுக்கும் கூட மிகப் பெரிய இடைஞ்சலை, கஷ்டங்களை கொடுப்பதாகவே இருந்து வருகிறது. ஆகவே, அதிகப்படியான நாட்களுக்கும் சட்டமன்றக் கூட்டம் நடைபெற வேண்டியிருக்கிறது. குறைந்தது ஒரு வருடத்தில் 100 நாட்கள் நடைபெற வேண்டும் என்று வகுத்து, அதை மூன்று முறைகளாக பிரித்து, குறைந்தபட்சம் ஒரு முறையில் ஒரு மாதத்திற்கு நடக்கும்படி ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக மக்களிடமிருந்து பலர் இந்த சட்டமன்றத்திற்கு வந்து, இந்த தலைமை அலுவலகத்திற்கு வந்து, மனுக்களை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும், சட்டமன்றத்தைட்

பார்ப்பதற்கும், அமைச்சர்களையும், மற்றவர்களையும் பார்த்து நேரிடையாக தங்கள் குறைகளைச் சொல்வதற்கும்—அந்தந்தப் பகுதிகளில் உள்ள கீழ் மட்ட அலுவலர்களிடத்தில் பலமுறை சொல்லி நடைபெறாத விஷயங்களை—காரியங்களைப்பற்றி எடுத்துச் சொல்வதற்காக வருகிறார்கள். அப்படி வருபவர்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொள்வதற்கும், அவர்கள் வந்து பார்த்து வேலைகளை முடித்துக் கொண்டு போவதற்கும் சில வசதிகளை நாம் அவர்களுக்குச் செய்து கொடுத்தாக வேண்டும்.

ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது, அமைச்சர்கள் இங்கே இருக்கிறபோது அவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அவர்களுடைய குறைகளை கேட்டு, அனுப்ப வேண்டும். அப்படி வந்து போக தேவையான இடங்களை தனியாக ஏற்படுத்த வேண்டும். இப்போது அவர்கள் மரத்தடிகளிலே நின்றுகொண்டும் அல்லது வேறு கண்ட இடங்களில் நின்றுகொண்டும், அமைச்சர்களைப் பார்க்க முயலுகிறார்கள். அப்போது காவலர்கள் அவர்களை விரட்டும் இடத்திற்கெல்லாம் அவர்கள் போய் நிற்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலைமை இருப்பது சரியல்ல. ஜனநாயகத்திற்கே முரணானது, ஆகவே, அது மாற்றப்பட வேண்டும். அந்த மக்கள் இங்கே வந்து நம்பிக்கையோடு, தங்கள் குறைகளைச் சொல்ல தக்க வசதி செய்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் அதாவது ஒவ்வொரு மினிஸ்டிரிக்கும் ஒரு ஆலோசனைக் குழு கன்சல்டேடிவ் கமிட்டி என்று ஒன்று ஏற்படுத்த வேண்டும். பாராளுமன்றத்தில்கூட இன்றைக்( அப்படிப்பட்ட ஒரு நடைமுறை இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் கொண்ட அந்த குழுவிற்கு அமைச்சர்கள் தலைமை தாங்கி நடத்த வேண்டும். சட்டமன்றக் கூட்டம் நடைபெறாத காலங்களில் அரசாங்கம் எடுக்கும் சில நடவடிக்கைகள், சில முடிவுகள் உறுப்பினர்களுக்கு தெரிவதே இல்லை. மறுபடியும் சட்டமன்றம் கூடும்போதுதான் அதைப்பற்றி பேச வாய்ப்பு கிடைக்கும்போது பேச முடிகிறது. இல்லையென்றால் அந்த நியூஸ் அவர்களுக்கே ஒரு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. sometimes they were taken by surprise அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கக்கூடாது. அப்படி இல்லாமல் இருக்க, இந்த ஆலோசனைக் குழு இருந்தால், அதன் கூட்டங்களைக் கூட்டி, அதில் அமைச்சர்கள் பேசலாம். அந்தந்தத் துறையைப் பொறுத்தவரையில், என்னென்ன செய்யப் போகிறார்கள் என்பதை சொல்லலாம். அதைப்பற்றி கருத்துக் களைப் பறிமாறிக் கொள்ளலாம். அது பயன் உள்ளதாகவும், நல்ல ஜனநாயக மரபாகவும் இருக்கும். அப்படி பாராளுமன்றத்தில் நடைபெற்று வருகிறது. பாராளுமன்ற நடவடிக்கைகளை பின் பற்ற வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் இந்த நேரத் தில், இதையும் தயவுசெய்து ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதும் கடிதங் களைப் பற்றி. இங்கே எனக்கு முன்னாலே பேசிய பல உறுப்பினர் களும் எடுத்துச் சொன்னார்கள். அனுப்பும் கடிதங்களுக்கு



முதலிலே பதிலே வருவதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுகிறார்கள் என்றால், எடுத்தவுடனேயே எல்லா காரியங்களுக்கும் எழுதுவதில்லை. எல்லா வகையிலும் முயற்சி செய்து பார்த்துவிட்டு, முடியாமற் போகும் நிலையில்தான், அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுகிறார்கள். கடிதங்கள் வந்து சேர்ந்ததா இல்லையா என்பதற்குக் கூட அத்தாட்சி கடிதம் வருவதில்லை. அப்படியே வந்தாலும் மிகவும் தாமதமாக வருகிறது. அதுகூட நேரிடையாக அமைச்சரிடத்திலிருந்து வருவதில்லை. இங்கே இருக்கக்கூடிய சார்புச் செயலாளரோ, அல்லது இணைச் செயலாளரோ, நான் இவ்வாறு தெரிவிக்கும்படி பணிக்கப்பட்டிருக்கிறேன் என்று பதில் எழுதுகிறார்.

அதற்குப் பிறகு அது என்ன ஆச்சு, அதன் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன என்பதெல்லாம் ஒன்றுமே தெரிவதில்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் திரும்பவும் அமைச்சரிடத்தில் அதைப் பற்றி கேட்க வரும்போது, அது சம்பந்தமான கோப்புகள், ரெப்ரென்சுகள் அனைத்தையும் நாமே கொண்டு வந்து கொடுக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இவைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும். அவர்கள் கொடுக்கும் கடிதத்திற்கு, வந்து சேர்ந்ததற்கான அத்தாட்சி பதிலை முதலில் அனுப்பிவிட்டு, அதற்குப் பிறகு, ஒரு 4, 5 நாட்கள் அல்லது 1 வாரத்திற்குள் கேட்கப்பட்ட கோரிக்கைகள், முடிவுகள் என்ன ஆயிற்று என்பது பற்றிய விவரங்களை எழுத்து மூலமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அமைச்சர்களே பதிலாக அனுப்பினால் நல்லது. அதை நாங்கள் மக்களிடத்தில் காட்ட முடியும், அது ஜனங்களுக்கு நாங்கள் செய்ய வேண்டிய ஒரு கடமையும் கூட, ஆகவே அந்த வகையில் ஒரு நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாராளுமன்றத்திலே அப்படிச் செய்கிறார்கள் என்பதற்கு இங்கேகூட பலர் உதாரணமாக எடுத்துச் சொன்னார்கள். அது உண்மை.

அங்கே நாங்கள் ஒரு கடிதம் எழுதியனுப்பினால் 48 மணி நேரத்திற்குள், கடிதம் கிடைத்தது என்ற செய்தி அமைச்சர்களிடமிருந்து கையெழுத்து இட்டு வருகின்றன. இப்போதுகூட மங்களூர் மெயில் ஒரு நேரம் போகும்போது கோவையை தொடாமல் போகிறது என்று செய்தி வந்தவுடன் அந்த விஷயத்தை நான் அங்குள்ள போக்குவரத்துத்துறை அமைச்சருக்கு எழுதினேன். ஒரு வாரத்திற்குள் எனக்கு உங்கள் கடிதம் கிடைத்தது அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று பதில் வருகிறது. ஆகவே இந்த நிலை இங்கும் கையாளப்பட வேண்டும்.

இன்னொரு விஷயம். இங்கு சட்டசபை நடக்கும்போது பார்த்தால் அமைச்சர் பதில் சொல்லத் தயாராகிக் கொண்டிருப் பார்கள். அப்போது ஒரு உறுப்பினர் கொண்டுபோய் கடிதங் களைக் கொடுப்பார்கள். அமைச்சர்களுக்கும் இடைஞ்சல், எங்களுக்கும் இடைஞ்சல். ஒவ்வொரு அமைச்சரும் எங்கே

இருக்கிறார் என்று தேடிப்பார்த்து இங்கேதான் சந்திக்கிற இடம் என்று இந்த உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். இயற்கையாக அந்த எண்ணம் ஏற்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட ஒரு நிலைக்கு இடம் இல்லாமல் 'ஒரு நோட்டீஸ் ஆபீஸ் என்று ஒரு' அறை இங்கேயே ஒரு அறைக்குள்ளே ஒரு இடத்தை ஏற்பாடு செய்து கொள்ளலாம். ஒன்றிரண்டு க்ளார்க்ஸ், அதற்கு பொறுப்பான ஒரு செகரட்டரி என்று போடப்பட்டு ஒரு உறுப்பினருக்கு என்னென்ன கடிதங்கள் எழுத வேண்டும், அமைச்சர்களுக்கு என்னென்ன விஷயங்களை எழுதப்பட வேண்டியிருக்கிறது அல்லது குறிப்புகள் அல்லது கடிதங்கள் எழுத வேண்டும்—அவர்கள் சம்பள பில்ஸ் பூர்த்தி செய்வது உட்பட சகலத்தையும், மெம்பர்கள் கொடுக்க வேண்டியதை அந்த நோட்டீஸ் ஆபிசில் வைத்திருக்கும்படியான விதத்தில் ஒரு ட்ரேக்குள்ளே போட்டு விடலாம். உடனே ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்குள் அமைச்சர் அறைக்கு அல்லது அமைச்சர் கைக்கு போய் விட வேண்டும். இப்படி பாராமன்றத்தில் நடக்கிறது என்றால் அது பெரிய மாந்திரீக சக்தி அல்ல. அங்கே இப்படி வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு ஆர்கனைஸேஷன் அங்கிருக்கிறது. உடனுக்குடன் அவர்கள் பார்த்து அதற்கு பதில் தயார் செய்து நான்கு நாட்களுக்குள் தகவல் வருகிறது. ஆகவே அப்படி ஒரு நோட்டீஸ் ஆபீஸ் இங்கே ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போது எம்.எல்.ஏ.க்கள் எழுத வேண்டியவைகளையெல்லாம் எழுதி அதில் போடலாம். பாராளுமன்றத்தில் இந்த முறை உள்ளது. அது அனுபவத்தில் நல்லமுறை. அப்படிப்பட்டதொரு முறையை இங்கும் ஏற்படுத்த வேண்டும்.

சட்டசபை கட்சிக் காரியாலயங்கள் என்று எல்லாக் கட்சிகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. அங்கே நாற்காலிகள் மேஜைகள் எல்லாம் சரியாக இல்லை, தண்ணீர் வசதி இல்லாமல் இருந்தது. இப்போது ரிப்பேர் செய்யப்பட்டு ஓரளவு சரி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே போன் வசதி இல்லாமல் இருக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கட்சிக் காரியாலயங்கள் என்றால் இந்த மன்ற நடவடிக்கைகள் நடப்பதற்கு ஒரு உதவி இடமாக அந்தக் கட்சிக் காரியங்கள் பயன்படுகின்றன. பல்வேறு காரியங்களை நடத்த வேண்டியிருக்கிறது. ஆகவே அதைச் செய்ய வேண்டும்.

அதேபோல் ஹாஸ்டலில் டெலிபோன் கால் கிடைப்பதிலும் இப்போது ஸீரோ டயல் செய்து கொடுப்பதிலும் கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே லைன்களை அதிகப்படுத்த வேண்டும். லோட் ஹெவியாக இருந்து அது தாங்க முடியாததால் கஷ்டம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே லைன்களை அதிகப்படுத்த வேண்டும். ஓல்ட் ஆன்ட் நியூ ஹாஸ்டல்கள் பொறுத்த வரையில் எல்லா அறைகளிலும் டெலிபோன் வசதி கிடையாது. அங்கு நிச்சயமாக டெலிபோன் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.



சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் உள்ள ஊழியர்கள், டிக்கட்ஸ் வாங்க சென்ட்ரல் ஸ்டேஷன் அல்லது எக்மோருக்கு ஆள் அனுப்பவேண்டும் என்றால் ஆள்கள் இல்லை என்று சொல்லி சில எம்.எல்.ஏ.க்கள் புகார் கூறுகிறார்கள். எனவே உறுப்பினர்களுக்கு ரெயில்வேயின் டிக்கட்ஸ் வாங்க இந்தக் கோட்டையிலேயே ஒரு கவுண்டர் ஓப்பன் செய்யலாம். அதற்கு ரெயில்வேயோடு தொடர்பு கொண்டு ஒரு ஏற்பாடு செய்யலாம். அப்படிச் செய்தால் மற்றவர்கள் சகாயம் இல்லாமல், ஆள்களை அனுப்பாமல் நாமே நேரில் சென்று கொஞ்சம் முன் உரிமையோடு அந்த விஷயத்தைக் கவனிக்க உதவியாக இருக்கும். பாராளுமன்றத்தில் அப்படி எல்லாம் இருக்கின்றன. எங்களுக்கு வேண்டிய சகலவிதமான வசதிகளும் காப்பி க்ளப் உட்பட அதன் உள்ளேயே வைத்திருக்கிறார்கள். அங்கே விமானம் அல்லது ரெயிலுக்கு டிக்கட்ஸ் புக் செய்ய ஆள்களை வைத்திருக்கிறார்கள். அதே மாதிரி இங்கும் ஏற்பாடு செய்யவேண்டும். டிக்கட் கவுண்டரில் சபை நடக்கிற காலத்திலும், சபை நடக்காத காலத்திலும் ஒரு ஆளைப்போட்டு வரக்கூடியதை சரி செய்து கொள்ளலாம்.

பஸ் பாஸ் இப்போது கொடுக்கப்படுகிறது. அதிலுள்ள கஷ்டங்கள் பற்றிய உறுப்பினர்கள் சிலர் சொன்னார்கள். அது உண்மையும் கூட. முன்னால் வி.ஐ.பி.ஸ்க்கு என்று இரண்டு ஸீட்ஸ் ஒதுக்கியிருப்பார்கள். பஸ் புறப்படும் முன் கடைசி நேரம் வரை ஆள்கள் வரவில்லையென்றால் அந்த இடங்கள் வேகண்டாக இருக்கின்றன என்று வேறு ஆள்களை ஏற்றிச் செல்கிறார்கள். ஆகவே இடையில் ஒரு இடத்தில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஏறவேண்டுமென்றால் இடம் கிடைக்காமல் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே அதற்கு தகுந்த முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினரும் எந்த ஒரு பஸ் ஸ்டாண்டிலும் இடம் இல்லை என்று நிற்கும்படியான நிலை ஏற்படக் கூடாது.

[முற்பகல் 11–40]

அதேமாதிரி, இந்த பஸ்பாசிலே மனைவியை அழைத்துக் கொண்டு போகலாம் என்றிருக்கிறது. உறவினரையோ அல்லது வேறு ஒருவரையோ அழைத்துக் கொண்டு போகக் கூடாது. ஆனால், ரயில்வே பாசில் அப்படியில்லை; அதிலே அந்த உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பஸ் பாசிலேகூட, தங்களுக்கு தேவைப்படுகின்றவர்களை, தங்கள் பாதுகாப்பிற்காக ஒருவர் அழைத்துக் கொண்டு போகலாம். அப்படிப்பட்ட அவசியம், சந்தர்ப்பம் ஏற்படும். எனவே, மனைவி அல்லது ஒரு நெருங்கிய உறவினர் என்று அதை மாற்றி உபயோகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தால், அது சரியாக இருக்கும் என்று நினைக்கிறோம்.

அதேமாதிரி, ரயில்வே டிக்கட்டைப் பற்றி ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். 2000 ரூபாய்க்கு கூப்பன் கொடுக்கிறார்கள். ஆனால், இரண்டு தரம் ரயில்வே

கட்டணம் உயர்த்தியிருக்கிறார்கள். அந்தக் கட்டணத்தை ஈடு செய்கின்ற அளவிற்கு அதை ஈடு செய்யவேண்டும். நாங்கள் அதிகம் வேண்டுமென்று கேட்கவில்லை; வசதியும் கேட்கவில்லை. எந்த அளவுக்குக் கட்டணம் உயர்ந்திருக்கிறதோ, அந்த அளவுக்கு இந்த ரூ. 2,000 என்பதை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்,

அதேமாதிரி, ஓட்டல் உணவு; இதைப்பற்றி விளக்க வேண்டிய அவசியமில்லை. நாம் சென்றால் அங்கே இலை இருக்காது; குடிக்க தண்ணீர் கிடைக்காது. கொஞ்ச நேரம் கழித்துச் சென்றால், அவர்கள் அதை எல்லாம் விற்று காசாக்கி விடுவார்கள்; நமக்காக காத்திருக்க மாட்டார்கள். அவர்கள் நமக்காக கடை வைக்கவில்லை. ஆகவே, அரசாங்கமே பொறுப் பேற்றுக் கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நாங்கள் அறுசுவை உணவு வேண்டுமென்றுகூட கேட்கவில்லை, ஒரு சாதாரண மனிதன் 500, 600 சம்பாதிக்கக் கூடிய மனிதன் சாப்பிடக்கூடிய அளவிற்கு அங்கே உணவு சாப்பிடுவதற்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். அரசாங்கமே அதை நடத்த வேண்டும். வேறு என்ன சர்க்கஸ் வித்தை பண்ணிணாலும் அந்த ஓட்டல் முதலாளிகளை நாம் ஒன்றும் செய்ய முடியாது. அந்த நம்பிக்கை இல்லை. ஆகவே, அதற்கு என்ன செலவாகும் என்பதை அரசாங்கமே முதலில் செலவு செய்து, அதற்கு என்ன ஆகிறது என்று சொன்னால், அதை நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். எனவே இதற்கு அரசே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு முக்கியமான விஷயம். இந்த சட்டமன்றத் திலே நம் எல்லோரையும் பாதுகாக்கின்ற, நமக்காக பாடு படுகின்ற ஊழியர்களின் அவல நிலையைப் பார்க்கவேண்டும்; படு மோசமாக இருக்கிறது. அவர்கள் இன்னும் தினக் கூலிகளாகவே இருக்கிறார்கள். 450 நாட்களுக்கு மேல் ஒரு தொழிலாளி அப்படி யிருக்கக் கூடாது என்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சட்டம் கொண்டு வரப்போவதாகச் சொல்லியிருக் கிறார்கள். ஆனால், அது இந்த ஊழியர்களுக்கு சம்பந்தப் படாது. இந்த சட்டமன்ற ஆளுகைக்குள் இருக்கக்கூடியவர்களை நாம் தினக் கூலிகளாக வைத்துக் கொள்ளக் கூடாது; அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். அவர்கள் மாதச் சம்பளம் வாங்க வேண்டும் இன்றைக்கு அவர்கள் தினக்கூலியாக ரூ. 10 பெறு கிறார்கள். சட்டமன்றம் இருக்கும்போது இந்த வேலை; அதற்குப் பிறகு அந்த வேலையும் இல்லை. இப்படி 365 நாட் களில், உயர்ந்த பட்சம் 80, 90 நாட்கள் மட்டுமே வேலை; பாக்கி நாட்களில் அவர்கள் என்ன மூட்டை சுமப்பதா? அவர்கள் வேறு என்ன வேலை செய்ய முடியும்? இந்த அவல நிலை இந்த சட்டமன்றத்திலே வேலை செய்யக்கூடியவர்களுக்கு இருக்கக் கூடாது. அடி மட்டத்திலே இருக்கக் கூடிய ஊழியர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; சட்டமன்றக் கூட்ட நாட்களில்





மட்டும் வேலை; மற்ற நாட்களில் வேலையில்லை என்ற அவல நிலை மாற்றப்பட வேண்டும். அவர்களுக்கு வேறு ஏதாவது வேலை கொடுக்கவேண்டும்; அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும்; அவர்களுக்கு குறைந்தபட்சம் மாதம் ரூ. 300 சம்பளமாகக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் மனிதர்களாக வாழ முடியும். அதுவும் குறைவு என்றுதான் நாங்கள் சொல்வோம். காரணம், போக்குவரத்துத் துறையில் நாங்கள் தொழிலாளர்களுக்கு ஒப்பந்தம் செய்திருக்கிறோம், குறைந்த பட்ச சம்பளம் ரூ. 320 என்று.

இங்கேதான் ரூ. 300 என்று சொல்கிறோம். அதுகூட குறைவுதான். இருந்தாலும், அந்த முறையிலாவது கொடுக்க வேண்டும். இதிலே, பலபேர்கள் 10 வருட, சர்வீஸ் உள்ளவர்கள் அதாவது 4, 5 பேர்கள் அவ்வாறு இருப்பதாகவும், 50 பேர்கள் 3 வருஷம் சர்வீசில் இருப்பதாகவும் ஒரு 60 பேர்கள் ஜூனியர் அசிஸ்டென்டாகவும், குமாஸ்தாவாகவும் 3 வருஷங்கள் இருப் பதாகவும் சொல்லப்படுகிறது. இவர்களுக்கெல்லாம் இங்கேயே நேரடியாக வேலை கொடுக்க வேண்டும். கலெக்டர் ஆபீசிலே இருந்தும், எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சிலே இருந்தும் கொண்டு வரக்கூடாது. நமக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கக் கூடியவர் களுக்கு இங்கே நிரந்தரமாக வேலை கொடுக்க வேண்டும். எனவே அத்தனை பேர்களும் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

அதேபோல், சட்டமன்றம் நடக்கும் நாட்களில் இவர்களுக்கு பஸ் பாஸ் கொடுக்க வேண்டும். இது ஏற்கெனவே, 25-4-79 அன்று இன்றைக்கு இல்லாவிட்டாலும், அன்றைக்கு ஆளுங் கட்சியிலே நிதி மந்திரியாக இருந்த மனோகரன் அவர்கள் கூட கொடுத்த வாக்குறுதி, மனோகரமாக இருந்தது. ஆனால், நடைமுறைக்கு வரவில்லை. 7–11–79-லே வாக்குறுதி அளிக்கப்பட்டது; அதுவும் துரதிருஷ்ட வசமாக நடை முறைக்கு வரவில்லை. இப்படி அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் அவைக் குறிப்பிலே கூட இருக்கிறது. அதையெல்லாம் இங்கே கோட் பண்ணி பேசுவதற்கு நேரமில்லை. ஆகவே, அவர் களுக்கு பஸ் பாஸ் கொடுக்க வேண்டும். இந்த அவை கூடுகின்ற நாட்களில் அவர்களுக்கு கட்டாயம்பஸ்பாஸ் கொடுக்கவேண்டும். அதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். இதிலே சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்.

தினப்படியை எடுத்துக் கொண்டால், காவலர்களுக்கு ரூ. 4 கொடுக்கப்படுகிறது. ஆனால், இன்றைக்கு சட்டமன்றத்திலே பணி யாற்றுகின்றவர்களுக்கு அவ்வாறு கொடுக்கப்படும் ரூ. 4 என்பதை ரூ. 5 ஆவது கொடுக்கவேண்டும். எக்ஸ்-எம். எல். ஏ.க்களைப் பற்றி பல சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். அவர்கள் உயிருடன் இருக்கும்பொழுதே ஆறு மாதத்திற்கு ஒருமுறை நாங்கள் உயிரோடு இருக்கிறோம், உயிரோடு இருக்கிறோம் என்று சொல்லி எழுதிக் கொடுக்க

வேண்டுமென்று கேட்கப்படுகிறது. உயிரோடு இருக்கிறவர்களுக்குத்தான் பென்ஷன் கொடுக்கிறோம். ஒவ்வொரு தரமும் ஆறு மாதத்திற்கு ஒரு முறை இது போன்று கொடுக்கவேண்டுமென்று கேட்கக் கூடாது. இந்த கேவலமான நிலை இருக்கக் கூடாது. இதை கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ஆசிரியர்களுக்கு கொடுக்க வேண்டிய.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் :** (திரு. செ. சிவசாமி) : 12.30 மணிக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும். ஆகவே சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, முடித்துவிடுகிறேன். இதற்கே நாம் எவ்வளவு குஸ்தி போட வேண்டியிருக்கிறது பாருங்கள். தேர்தல்களை நடத்தி வைப்பதும் பட்டியல் தயார் செய்வதும், ஓட்டர்ஸ் என்ரோல் பண்ணுவதும் முழுவதும் பள்ளிக்கூட ஆசிரியர்கள்தான். அந்த வேலை முடிந்தால் ஒரு வார காலத்திற்குள் கொடுக்க வேண்டிய அந்த விசேஷ ஊதியத்தை கொடுக்க வேண்டும். மாத கணக்கில் கிடைப்பதில் மன எரிச்சல் இருக்கிறது. நிதி அமைச்சர் அவர்கள் இதில் பிரத்யேகமாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சட்டமன்றம் முறையாக நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சட்டமன்றம் பற்றிய ஏழாம் மானியக் கோரிக்கை, தேர்தல்கள் பற்றிய 8–ஆம் மானியக் கோரிக்கை ஆகிய இரண்டையும் வரவேற்று ஒருசில கருத்துககளை சுருக்கமாகச் சொல்ல விழைகிறேன். இன்று சட்ட மன்ற உனப்பினர்களாக மாறியிருக்கின்றவர்கள் பெறுகிற எழுது பொருள்கள் போன்ற பொருள்கள் மிகக் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால், தரப்படுகிற இந்த எழுது பொருள்களை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது அமைச்சர்கள் அல்லது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகின்றபோது நடவடிக்கை குறிப்பேட்டில் சுருக்கெழுத்திலே எழுதுவதற்கு பதிலாக புதிவு செய்யப்பட்ட நாடாக்களில் பதிவு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி, மதிப்பிற்குரிய அமைச்சர்கள், போன்றவர்கள் முக்கிய கொள்கை விளக்கங்களைப் பற்றி இந்த மாமன்றத்திலே அறிவிக்கின்றபொழுது, சென்னை மாநகரத்திலுள்ள தொலைக்காட்சி, டெலிவிஷன் இவைகளை நாட்டு மக்களுக்குக் காட்டக்கூடிய நிலையில் முக்கியமான விவாதங்கள் ஏற்படுகிறபோது டெலிவிஷன் காட்சிகளை படம் போடுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.



வெறும் விளம்பரங்களுக்கு, ஆர்ப்பாட்டங்களுக்கு அரசியல் முக்கியத்துவம் கொடுக்கிற போக்கு கடந்த காலததிலே இந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் ஒருசில பத்திரிகைகள் வாயிலாக ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே நான் வருத்தத்தோடு குறிப்பிட்டு கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சட்டமன்றப் பேரவையை நடத்துகிற பேரவைத் தலைவர் ஆடம்பரமான விளம்பரங்களுக்காகவும், ஆணித்தரமான கொள்கைகளை கேவலப்படுத்துவதற்காகவும் சண்டை போட்டால்தான் பேப்பரில் எட்டு பத்தி நியூஸ் வரும் என்று வேண்டுமென்றே சண்டை போட்டு, அதற்காக முயற்சிப்பதும் அந்த முயற்சிக்கு முத்தாய்ப்பு வைப்பதும் நாட்டுமக்களின் மனதிலே பரவலாக, பரபரப்பை ஏற்படுத்துவது என்பது பண்பாட்டிற்கும், கலாச்சாரத்திற்கும், கண்ணியத்திற்கும் குறைவு ஏற்படுத்துவதென்று அந்த எண்ணத்தோடு மாமன்றத்தினுடைய தலைவர் அவர்கள் எந்தவிதமான ஆர்ப்பாட்டங்கள் ஏற்பட்டாலும், இவைகள் எல்லாம் தள்ளுபடி செய்து பத்திரிகை குறிப்பேட்டிலே வராமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை நாடி செல்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றும்போது மாண்புமிகு அமைச்சர்கள் மட்டத்தில் நடக்காது என்பதை தெரிந்து பிறகுதான் முதல் அமைச்சர் அவர்களை நாட வேண்டுமென்ற எண்ணத்தை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் ஏற்படுத்திக் கொள்வது நல்லது என்பதை நான் பணிவோடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தைப் பொறுத்தவரை இந்த மாமன்றத்தின் முதலமைச்சராக மாறி இருக்கின்றவர் பலதரப்பட்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் என்பதையும், மற்ற மாநில முதலமைச்சர்களுக்கும், இந்த முதலமைச்சருக்கும் வித்தியாயம் இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்தியாவைக் காப்பாற்றுங்கள் என்று ஸ்லோகன்களை கடந்த காலத்தில் இந்திய தேர்தல் மன்றம் சொன்னது என்பதையும், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் முதலமைச்சரை தேர்ந்தெடுக்கும் பொழுது எம். ஜி. ஆரைக் கூப்பிடுங்கள், ஏழைகளைக் காப்பாற்றுங்கள் என்ற ஸ்லோகன்களை முன் வைத்து இந்த முதலமைச்சர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஆகவே தீவிரமான கொள்கை விளக்கங்களைத் தேடிக் கொள்வதற்கும், உன்னதமான லட்சியங்களை ஏற்படுத்துவதற்கும் மாமன்ற உறுப்பினர்களானாலும், பாராளுமன்ற உறுப்பினர்களாலும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் முடியாது என்ற கட்டத்திற்கு வரும்பொழுதுதான் முதலமைச்சரை பார்ப்பது தர்மம் என்ற ரீதியில் நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் குடும்பங்களுக்கு அந்த பென்ஷன் பெறுகிற முயற்சியில் இருக்கிறாரா, இல்லையா என்று உறுப்பினர்களே தேடித் தரவேண்டிய நிலை இருக்கிறது

[முற்பகல் 11-50]

என்பதையும் மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நிலைக்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். லாபியில் ஒரு நேரடி டெலிபோன் தொடர்பு வசதி இருக்கவேண்டும். அப்படி நேரடி டெலிபோன் தொடர்பு வசதி இல்லாத காரணத்தால் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன, அதேமாதிரி விடுதியிலும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய கட்சிக்காரர் ஒருவர் மற்றவர்களால் குத்திக்கொல்லப்பட்டு அவர் குற்றுயிரும் கொலையுயிருமாய் கிடக்கிறார் என்ற செய்தி தொலைபேசி மூலமாக விடுதிக்குத் தெரிவிக்கப்பட்டும் கூட பல மணி நேரம் கழித்துத்தான் அந்தச் செய்தி தெரியக்கூடிய அவல நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விடுதிகளில் நேரடித் தொலைபேசி வசதிகளை ஒவ்வொரு அறைக்கும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்றத் தொடர்கூட்டம் என்று சொன்னால் சக்தியை இழக்கக் கூடிய நிலை இன்று இருக்கின்ற அந்த விடுதியின் உணவின் மூலம் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒரு முறை இந்த மாமன்றத்தின் தலைவர் அல்லது துணைத் தலைவர் அங்கே வந்து அந்த விடுதியில் சாப்பிடுவார்களானால் எவ்வளவு வேதனையோடு சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பது தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலப்படத்தை நாடுமுழுவதும் தேடி அலைவதைவிட சட்டமன்ற உறுப்பினர்கள் சங்கமம் ஆகின்ற அந்த சட்டமன்ற உறுப்பினர் விடுதியை நீங்கள் ஒரு முறை வந்து பார்ப்பீர்களானால் கலப்படத்திற்கு ஒரு உச்ச கட்டத்தை நீங்கள் பார்க்க முடியும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். வருகிறவர்களுக்கு வயிற்றுவலி, வருகிறவர்களுக்கு கேஸ் டிரபிள், நெஞ்சுவலி, கால்வலி, கண்வலி எல்லாம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும், பெண்டுபிள்ளைகளை எல்லாம் வைத்துக்கொண்டு கஞ்சி காய்ச்சிக் குடிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொண்டு மாமன்றத் தலைவர் ஒரு முறை வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரெயில்வே டிக்கட்டுகள் இங்கே இருக்கின்ற ஆர். ஆர். செக்ஷன் மூலமாக ஒரு நாளைக்கு 20 டிக்கட்டுகள் கோட்டா என்று வைத்துக் கொண்டு போகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தால் டிக்கட் கொடுக்கலாம் இல்லையென்று சொன்னால், வரவில்லையென்று சொன்னால் அதை கேன்சல் செய்து விடலாம். அந்த நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர்கள் இல்லங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் செல்கின்ற வகையில் மாலை நேரங்களில் சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்தபிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து கிரின்வேஸ் ரோட்டிற்கு அமைச்சர்கள்



இருக்கின்ற ரோடுக்கு ஒரு பஸ் வசதியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாங்குகிற பேட்டாவிலே இங்கே டாக்சிக்கும் ஆட்டோவுக்கும் கொடுப்பதற்கு கூட மிகவும் சங்கடமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு பரிதாபகரமான நிகழ்ச்சியை தெரிவிக்கிறேன். சட்டமன்றத் தொடர் கூட்டம் முடிந்த பிறகு ஊருக்கு தைரியமாகத் திரும்பிப் போகமுடியுமா என்ற நிலைமை ஏற்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் ஆளுங்கட்சியின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்வது எல்லாம் முன்பு இந்த மாமன்றத்திலே நான் இந்தப் பிரச்சினையை எழுப்பினேன். மக்களோடு தொடர்பு இல்லாமல் மக்களோடு தொடர்பு வைத்துக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறவர்கள் அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தனியாக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வேண்டுமானால் ஏற்படலாம். ஆனால் பல்லாயிரக் கணக்கான லட்சக் கணக்கான தொண்டர்களுக்கு சொந்தமாக இருக்கக்கூடிய முற்போக்கு இயக்கங்களுக்கு சொந்தம் கொண்டாடுகிறவர்கள் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் தனியாக இருப்பது பைத்தியம் பிடிப்பதுபோல் ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதையும் தெரிவித்து சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு வருகிறார்கள் கட்சியைக் கட்டிக்காத்து வளர்த்தவர்கள் தியாகம் செய்தவர்கள், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், புடம்போட்ட தங்கங்கள், கட்சிக்காக தங்களுடைய இன்னுயிரை ஈந்தவர்கள் அந்த ஏழடுக்கு மாளிகையைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சுவிட்டு நம்மாலே தேர்ந்தெடுக்கப்பட்டவன் உறங்கிக் கொண்டு இருக்கிறான் என்றும் வேண்டுமென்றே இல்லையென்று சொல்கிறான் என்றும் சொல்கிற வம்பு வருகிறது என்பதையும் அதற்கு ஏற்ப ஒரு சூழ்நிலையை உருவாக்கிட சட்டமன்றப் விடுதியில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தனியாக ஒரு தொலைபேசியை வைத்து அதன் மூலம் தொடர்பு கொண்டு இன்னார் வந்திருக்கிறார்கள், நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா என்ற நிலையை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற விடுதிக் கட்டடத்திற்கு முன்பு ***போல் காட்சி அளிக்கிறது என்பதையும் அங்கே வெறும் எருக்கம் செடிதான் நின்று கொண்டிருக்கிறது என்பதையும் கீழே வந்து காற்றாட கொஞ்சம் ஓய்வு எடுக்கலாம் என்று சொன்னால் கல்லும் முள்ளும் மண்ணும் தான் இருக்கிறது என்பதையும் அது கேட்பாரற்ற அநாதைக் கூடமாக இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த விடுதியின் சுற்றுப்புற படிக்கட்டுகள் இருக்கிற இடத்தில் தனியாக ஒரு அறை மின்சாரத்திற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. வருகிறவர்கள் அந்த மின்சாரத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற

* * மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அறையை சிறுநீர் கழிப்பிடங்களாக மாற்றியிருக்கிறார்கள் என்பதையும் அந்த நாற்றம் அங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வியாதியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற சூழ்நிலைய உருவாக்கியிருக்கிறது என்பதையும் தெரிவித்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள இந்த குறைபாடுகளை நீக்குவதற்கு பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. சிவசாமி) :** * * * என்ற வார்த்தை நீக்கப்படுகிறது.

**திரு. கோவைத்தம்பி :** ஒரே ஒரு கருத்தை மாத்திரம் கூறி விடைபெறலாம் என்று நினைக்கிறேன். அமைச்சர்களுக்குப் பாதுகாவலர்களாக இருக்கின்றவர்கள் அல்லது பணியாளர்களாக இருக்கின்றவர்கள் இந்த சட்டமன்றத்திற்குள்ளே பணியாற்றுகிறவர்கள் அல்லது பாதுகாவலர்களாக இருக்கின்றவர்கள் அவர்களுக்கு எல்லாம் நம் ஆட்சியில் சர்க்கார் பஸ்ஸில் இலவசமாகச் செல்வதற்கு வழிவகை செய்யவேண்டும். அமைச்சர்கள் காரில் செல்கிறபோது சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்களும் காரிலே செல்கிறோம். திடீரென்று பி. ஏ.வை அல்லது மற்றவர்களை அல்லது பணியாளர்களைப் பார்த்து நீங்கள் இறங்கி வீட்டுக்கு வாருங்கள் என்று சொன்னால் திடீரென்று அவர்கள் கையில் காசு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. இந்த நேரங்களில் அவர்களிடம் பாஸ் இருந்தால் நல்லது; அவர்கள் பஸ்ஸில் எங்கு வேண்டுமானாலும் செல்லக்கூடிய நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பினால் மதியம் இங்கேயே சாப்பிடுவதற்கான ஒரு வசதியை மாமன்றத்தின் பேரவைத் தலைவரவர்கள் உருவாக்கிக் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சாப்பாட்டிற்குப் பல ரூபாய்களை செலவு செய்ய வேண்டியிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் சாப்பிடுவதற்கே பயமாக இருக்கிறது. இந்த நிலையைப்போக்க இந்த மாமன்றக் கட்டிடத்திற்குள்ளேயே ஒரு விடுதியை ஏற்படுத்திக் கொடுத்து, ஒன்றரை மணிக்குப் பிறகு உறுப்பினர்கள் இங்கேயே சாப்பிடலாம் என்ற நிலையை உருவாக்கித் தர வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளையெல்லாம் மாமன்றத் தலைவரவர்களும், நிதியமைச்சரவர்களும் நிறைவேற்றித்தர வேண்டு





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் தோழர் திரு. ரமணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவைத்தம்பி அவர்களும் பல விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அவைகளைப்பற்றி நான் திரும்பவும் சொல்ல வேண்டியதில்லை. இருந்தாலும் கூட ஒருசிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய சட்டமன்றக் கூட்ட நடவடிக்கைகளைக் குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு அதிகமாக இடைவெளி போகாமல் கூட்ட வேண்டுமென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் நாட்டிலே நடக்கின்ற பல சம்பவங்களைப் பற்றியும்' பல முக்கியமான விவரங்களைப் பற்றியும் இந்தச் சட்டமன்றத்தில் நாம் விவாதிக்கின்ற பொழுதுதான் ஆங்காங்குள்ள நிர்வாகம் சரியாக நடவடிக்கை எடுக்கவும், மற்றுமுள்ள காரியங்களைத் துரிதமாகச் செய்யவும் ஏதுவாக இருக்கும். இப்பொழுது 6 மாதங்கள் வரை இடைவெளி என்பதில் காலதாமதம் வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதோடு, இனிமேல் எந்தக் காரணத்தை முன்னிட்டும் மூன்று மாதங்களுக்கு மேல் இடைவெளி இல்லாமல் கூட்ட வேண்டும்; அதுவும் 100 நாட்களுக்குக் குறையாமல் ஒரு வருடத்தில் நடத்த வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு பொதுமக்கள் மத்தியிலே இருந்து மனுக்கள் மூலம் பல கோரிக்கைகள் வருகின்றன. அதை அமைச்சர்களிடம் கொடுக்க வேண்டுமென்றால் இந்தச் சட்டமன்றம் நடக்கின்ற இடத்திற்குப் பக்கத்திலே சரியான ஏற்பாடுகள் இல்லை. நாங்கள் அமைச்சர்களிடத்தில் கொடுப்பதற்காக மேலே போய்க் கொடுக்க வேண்டியிருக்கிறது. அங்கே போகின்ற நேரத்தில் சிலசமயங்களில் அவர்களைப் பார்க்க முடிவதில்லை. அது சம்பந்தமாகச் சீராக, எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கை நடைபெறவில்லை என்ற மனக்குறை எங்களிடத்திலே இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பாராளு
மன்றத்தில் இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்
பதாகச் சொன்னார்கள். அந்த முறையில் சட்டமன்ற உறுப்
பினர்களுக்கு வரும் மனுக்களை எந்த அமைச்சருக்குக் கொடுக்க
வேண்டுமோ அதற்காகத் தனியான ஏற்பாட்டைச் செய்து
விட்டால் அது அங்கே போய்ச் சேரும்; நடவடிக்கை எடுக்கப்
படும். அது சம்பந்தமாகத் துரிதமான பதிலும் வர வேண்டும்.
இப்பொழுது எப்படி வருகிறது என்றால், உங்களுடைய மனு
கிடைத்தது, இன்னாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று
மொட்டையாகப் பதில் வருகிறது. அதுவும் மூன்று மாதங்கள்
கழித்துக் கூட வருகிறது. பல இலட்சக்கணக்கான மக்களின்
பிரதிநிதியாக இருக்கின்ற ஒரு சட்டமன்ற உறுப்பினர்,

அவர்களுக்கு வருகின்ற விஷயங்களை—சில முக்கியமான விஷயங்களைப் பற்றி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அனுப்பப்பட்ட மனுவுக்குக்கூட மூன்று மாதங்கள் கழித்து, உங்கள் மனு கிடைத்தது என்ற பதிலைச் சொல்வதில் என்ன பொருள் இருக்கிறது? எனவே, இதற்குத் துரிதமான ஒரு ஏற்பாட்டைச் செய்ய நிதியமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய சட்டமன்றத்தில் பணிபுரியும் பணியாளர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், காவலர்கள் இங்கே காலையிலிருந்து இருக்கிறார்கள். நாம் சபையை 9 மணிக்கு ஆரம்பிக்கிறோம் என்றால் அவர்கள் காலை 8 மணிக்கே வந்துவிட வேண்டும். சில நேரங்களில் சபை மாலையிலும் நடக்கிறது; 3 மணிக்கு மேலேயும் நடக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற தினப்படி 4 ரூபாய் என்பது என்ன நியாயம்? சட்டமன்ற உறுப்பினர்களாகிய நமக்கு 50 ரூபாய் கொடுக்கும் பொழுது இவர்களுக்கு 4 ரூபாய் தினப்படி கொடுப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? சட்டமன்றம் நடைபெறும் காலத்தில் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்; மீதி நேரங்களில் அவர்கள் பணியைச் செய்ய ஸ்டேஷனுக்குச் சென்று விடுகிறார்கள். ஆகவே அவர்களுக்கும் இங்கேயுள்ள மின் ஊழியர்களுக்கும், ஏனைய ஊழியர்களுக்கும் சட்டமன்றம் நடக்கக்கூடிய காலத்தில் பணியாற்றுகின்ற அந்த ஊழியர்களுக்கு அவர்கள் பணியாற்றுகின்ற அந்தக் காலங்களுக்குத் தினப்படி 4 ரூபாய் என்பதை மாற்றி 10 ரூபாய் ஆக்க வேண்டும். 4 ரூபாய் என்பது மிகமிகக் குறைவு. இரண்டு வடை ஒரு டீ சாப்பிட்டால் 4 ரூபாய் தீர்ந்து விடும். ஆகவே, இந்தப் படியை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

இன்னும் ஒன்று. நம்முடைய சட்டமன்றக் கட்சிகளுக்கு அலுவலகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அலுவலகங்களுக்கு எந்தவிதமான ஃபோன் வசதியும் இல்லை. ஃபோன் வேண்டுமென்று நாங்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். அது செய்யப்படவில்லை.

அது மட்டுமல்ல, நாங்கள் அலுவலரை நியமித்திருக்கிறோம். சட்டமன்றக் கட்சிக்குச் செயலாளர். அவர் போய் வருவதற்கு, அங்கிருந்து இங்கு வருவதற்கு அல்லது நாங்கள் சொல்லக்கூடிய வேறுபல வேலைகளை, வெளியே போய் செய்வதற்கு அல்லது வேறு அலுவலகங்களுக்குச் செல்வதற்கு, நாங்கள் கொடுக்கின்ற தபால்களைக் கொடுத்து விட்டு வருவதற்கு, அந்தச் சட்டமன்றக் கட்சி அலுவலகத்திலே பணியாற்றுகின்ற அலுவலர் ஒருவருக்கு பஸ் பாஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அது கொடுக்கப்படவில்லையென்று தெரிகிறது



அது மட்டுமல்ல, ஒவ்வொரு கட்சிக்கும் அலுவலகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், உறுப்பினர்களுக்கு வீடு கொடுக்க வேண்டும். ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் குடும்பத்துடன் தங்கி சமைத்துச் சாப்பிட வசதியாக இருக்கும். சில கட்சியினருக்கு வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில கட்சியினருக்குக் கொடுக்கப்படவில்லை. எங்களுடைய கட்சியைப் பொறுத்த வரைக்கும் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். இன்று வரை கொடுக்கப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியைச் சுற்றியிருக்கிற இடங்களிலே வீடுகள் இருக்கின்றன. அந்த வீடுகள் இன்றுவரை எங்கள் கட்சியினருக்குக் கொடுக்கப்படவில்லை. கொடுக்கப்படாததற்கான காரணங்களை நாங்கள் அறிய முடியவில்லை.

ரெயில்வே கூப்பன் சம்பந்தமாக பல பேர்கள் சொன்னார்கள். நாங்கள் ஊருக்குப் போக வேண்டுமென்றால், அவசரமாக அந்த டிக்கட்டை வாங்குகிறோம். சட்டமன்றக் கூட்டம் முடியாமலிருக்கும் போது, வாங்கிய டிக்கட்டைத் திரும்பக் கொடுக்க முடியவில்லை, பணத்தைத் திரும்பத் பெற முடியவில்லை. அதனால் கூப்பனை இழக்க வேண்டியிருக்கிறது, ஆகவே, பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கிற மாதிரி, ரெயில்வே சம்பந்தப்பட்ட மட்டிலும், கூப்பனுக்குப் பதிலாக, பாஸ் கொடுக்க வேண்டும். கூப்பன் கொடுத்து டிக்கட் வாங்கி விட்டு, சில நேரங்களிலே ஊருக்குப் போகமுடியவில்லையென்றால், கூப்பனையும் திரும்பப் பெற முடியவில்லை ரீஃபண்டும் வாங்க முடியவில்லை. ஆகவே, அதனை மாற்றி, பாஸ் கொடுக்கின்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அடுத்து, நம்முடைய பஸ் பாஸ் சம்பந்தமாகச் சொன்னார்கள். அதிலே என்ன போட்டிருக்கிறார்கள்? பெண் உறுப்பினராக இருப்பவர் யாரையும் துணைக்கு அழைத்துப் போகலாம் என்றிருக்கிறது. ஆண் உறுப்பினர் துணைவியாரை அழைத்துச் செல்லலாம் என்றிருக்கிறது. அதை, துணைவியார் அல்லது உதவியாளர் என்று சேர்க்க வேண்டும். சிலருக்குப் பாதுகாப்புக்கோ, வேறு வேலைகளுக்கோ ஆள் தேவைப்படுகிறது. ஆகவே, துணைவியார் அல்லது உதவியாளர் என்று சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, இன்றைக்கு ஒல்டு ஹாஸ்டலில் பார்த்தால் ஃபோன் கிடையாது. வெளியிலிருந்து 'கால்' வருகிறது. ஆனால், 3 நிமிஷம், 4 நிமிஷம் கழித்துத்தான் பேச முடிகிறது. ஆகவே, அதிகமான கட்டணம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆகவே, அங்கு ஒவ்வொரு அறையிலும் ஒரு ஃபோன் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, சாப்பாட்டைப் பற்றி, ஏற்கனவே மாண்புமிகு ரமணி அவர்கள் சொன்னார்கள். வேறு பல சட்டமன்றங்களைப் பார்த்தபோது, அங்கெல்லாம் அரசாங்கமே அவர்களுக்கு நல்ல உணவு விடுதி நடக்க வேண்டிய நடவடிக்கை

எடுத்திருப்பதை அறிந்தோம், அந்தமாதிரி உணவுவிடுதி நடத்தி, ஆகிற செலவை, நஷ்டம் இல்லாமல் கணக்கிட்டு, உறுப்பினர்களிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாம். அப்படி ஒரு விடுதியை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்னும் ஒன்று. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோவை தம்பி சொன்ன மாதிரி சட்டமன்றத்தைச் சுற்றி சுகாதாரக் கேடு இருக்கக்கூடிய அளவில், மிகமிக மோசமாக இருக்கிறது. குப்பையைக் கூட அங்கேதான் கொட்டுகிறார்கள். பால் நிறுவனம், அங்கு ஒரு கடை வைத்திருக்கிறது. அந்த மிச்சப் பாலை அங்கேயே கொட்டுகிறார்களோ என்னவோ தெரியவில்லை, ஒரே துர்நாற்றமாக இருக்கிறது. ஹாஸ்டல் முன்னாலே, என்ன என்ன செடி இருக்கிறதோ, அத்தனையும் முளைக்கின்றது. சீரான முறையிலே, நல்ல பூந்தோட்டம் மாதிரி வைத்து, மாலை நேரங்களிலே உட்கார்ந்து ரேடியோ கேட்க வசதி செய்து கொடுக்கலாம். இப்பொழுது, அங்கு ரேடியோ இருக்கிறது. அதை வைப்பதும் கிடையாது, அது பாடுவதும் கிடையாது. பாடினாலும் கேட்க முடியாத அளவு ஒரே இரைச்சலோடு இருக்கிறது. அதையெல்லாம் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பந்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே அவர்களுக்குப் பென்ஷன் கொடுத்திருக்கிறோம். அவர்களுக்கு வைத்தியச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தற்போதுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் அதே வைத்திய உதவி அவர்களுக்கு இனாமாக அளிக்கப்படுகிறது. ஆனால், அவர்களுடைய குடும்பங்களுக்கு அந்த வசதி கிடையாது. இப்பொழுதுள்ள சட்டமன்ற உறுப்பினர் குடும்பங்களுக்கும் எந்த அளவு வைத்திய உதவி கொடுக்கப்படுகிறதோ அதே வகையில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வைத்திய உதவி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய பென்சன் சம்பந்தமாக சொல்ல விரும்புகிறேன். இதிலே சொல்வதற்கு சம்பந்தம் இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்கு மிகக் குறைந்த அளவுக்கு பென்சன் வருகிறது. 30-ந் தேதிக்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்கு குறைந்த பென்சன். 1-ந் தேதிக்குப் பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு அதிகமான பென்சன் கிடைக்கிறது. ஒரே பணியில் இருந்தவர்கள், ஒரே தரத்தில் இருந்தவர்கள் ஒரு நாள் முன்னதாக ரிடையரானவர்கள் குறைந்த பென்சன் வாங்குகிறார்கள் என்றால் அது சரியாக இல்லை. அவர்களுக்கு நியாயமான பென்சன் கொடுக்க வேண்டும். அது போலீஸ்காரர்களாக இருந்தாலும் வேறு யாராக இருந்தாலும் 30-ந் தேதிக்கு முன்னால் ரிடையரானவர்களுக்கும் 1-ந் தேதிக்குப்



பிறகு ரிட்டையரானவர்களுக்கும் ஒரேமாதிரியான பென்சன் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வயோதிக பென்சன் பற்றி எல்லாம் முன்னாலேயே சொல்லப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் சொல்லி நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது ஒரு வட்டாரத்திலே 4,000 பேர்களுக்குக் கொடுப்பதாக உள்ளது. அதிலே யாராவது 4 பேர்கள் இறந்து போனால், அந்தப் பட்டியலிலே இருந்து 4 பேர்களை எடுத்து போடும் அளவுக்கு இருக்கிறது. இந்த எண்ணிக்கை 1967 ஆம் ஆண்டில் இருந்து வந்துள்ளது. எனவே எந்தவிதமான ஆதரவும் இல்லாமல், வேலை பார்த்து ரிட்டையர்டு ஆகி இருப்பவர்களுக்கும் பென்சன் கொடுக்கவேண்டும். இதற்காக 100 கோடி 200 கோடி அதிகமானாலும் பரவாயில்லை. எனவே 60 வயதுக்கு மேற்பட்டு இருக்கின்ற அனைவருக்கும் குறைந்த பட்சம் 50 ரூபாய் கிடைக்கத்தக்க வகையில் ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலும் இந்தப் பென்சன் சம்பந்தமாக பணியாற்றுவதற்கு தனியாக எந்த அதிகாரியும் இல்லை. அங்கே இருக்கின்ற தாசில்தார் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்கின்றது. பல வேலைகள் காரணமாக அவர்களால் இந்தப் பணியை முழுமையாகச் செய்ய முடியவில்லை. எனவே இந்தப் பென்சன் கொடுக்கும் வேலைகளைக் கவனிப்பதற்காக தனியாக அலுவலர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கு தங்கள் கடமைகளை சரியாகச் செய்வதற்கு—நாங்கள் ஊதிய உயர்வு கேட்கவில்லை—எல்.டி.சி. அளவுக்கு ஒரு அலுவலரை நியமிக்க வேண்டும். எங்களுக்கு வரக்கூடிய மனுக்களைப் பெற்று சரியாக அவைகளின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கும், தொடர்பு கொள்வதற்கும் அவர்களை நியமிக்கவேண்டும். இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதற்காக ஊராட்சி ஒன்றியங்களில் அலுவலகம் இருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அங்கே போய் பார்த்தால் உடைந்த நாற்காலி, எங்கே போய் பார்த்தாலும் குப்பைகூளங்கள், இருக்கின்றன. அவர்களுக்கு சரியாக எந்த அலுவலகமும் கொடுப்பதில்லை. எனவே தொகுதியிலே இருக்கின்ற 2 ஊராட்சி ஒன்றியங்களில் ஏதாவது ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் அந்த அலுவலகத்தை அமைத்து, அந்த சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்புகிற ஒருவரை நியமித்து, அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற மனுக்களை வாங்கி அந்த உறுப்பினர்களுக்கு உதவி செய்கின்ற வகையிலே, ஒரு எல்.டி.சி. லெவலிலே கொடுத்து உதவி செய்தால் மிகவும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தபால்களுக்கு விரைவாகப் பதில் எழுதவும், அதன் நிலைமைகளை

[திரு. சோ. அழகர்சாமி] [1981 மே 9

அறிந்து பொதுமக்களுக்குத் தெரிவிக்கவும் இப்படிப்பட்ட ஏற்பாட்டினைச் செய்து கொடுத்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்வதற்கு ஏதுவாக யிருக்கும். நாங்கள் எழுதுகின்ற கடிதங்களுக்கு வேகமாக நடவடிக்கை எடுப்பதற்கும், அமைச்சர்களுடைய பி.ஏ.க்கள் இருக்கின்றார்கள், இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் களுடைய கடிதங்களைத் தனியாக கவனிப்பதற்கு, இதற்கென்று தனியாக ஒரு அலுவலரை நியமித்து அந்தக் கடிதங்களுக்குப் பதிலைக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12.10]

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே முன்வைத்து இருக்கின்ற சட்டமன்றம், தேர்தல், மற்றும் பிற மானியக் கோரிக்கைகள் மீது நடைபெறுகின்ற விவாதத்திலே காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்வதற்கு நீங்கள் அனுமதி அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றம், அது செயல்படுகின்ற விதம் இவைகளைப் பற்றி எல்லாம் நமது அருமைக்கும், பெருமைக்கும் உரிய உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவை களிலே பல கருத்துக்கள் எங்களுக்கும் உடன்பட்ட கருத்துக்களாக இருக்கின்ற காரணத்தால், அவைகளைத் திருப்பிச் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன். ஆனாலும், இந்தச் சட்டமன்ற வளாகத்திலே நாம் பார்ப்போமானால், சட்டமன்ற உறுப்பினர்கள் சிறிது நேரம் தங்கியிருந்து வருவதற்கு இருக்கின்ற 'லவுஞ்ச்' மேலவை உறுப்பினர்களுக்கு எந்த அளவிற்கு இருக்கிறதோ அந்த அளவிற்குக் கூட இல்லை, அங்கே இருக்கின்ற வசதி கூட இங்கே கிடையாது. இங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை அந்த 'லவுஞ்சில்' உட்கார்ந்து சிறிதும் கேட்க முடியாது, அதற்கு ஒலிப்பெட்டிகள் வைக்கப்படவில்லை. அங்கே உட்கார்ந்து வெளியே யாருடனாவது தொடர்பு கொள்ள வேண்டும் என்று எண்ணினால், தொலைபேசி தொடர்பு வசதி இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் இவைகளைக் கருத்தில் கொண்டு, அந்தச் சிறிய வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பக்கத்திலே நின்று கொண்டு காப்பி கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் அங்கே சர்க்கரை இல்லாத காப்பி கிடைக்குமா என்று கேட்டு, கிடைக்காத காரணத்தால், சர்க்கரை போடப்பட்ட காப்பியையே சாப்பிட்டுக் கொண்டு போகிற நிலை ஏற்படுகிறபோது அவர்களுக்கு உடல் நலக் குறைவு இருந்தால் அது பாதிக்கும் என்பதோடு, சர்க்கரை போட்ட காப்பி சாப்பிடுவதால் உடல்நலக்குறைவு ஏற்படும் என்பதாலும், இப்படிப்பட்ட சிறுசிறு வசதியினை நீங்கள் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1981 மே 9] [திரு. குமரி அனந்தன்]

விடுதியைச் சுற்றி இருக்கும் சூழ்நிலையைப் பற்றி இங்கே பேசினார்கள். சுற்றி இருக்கும் சூழ்நிலை எப்படி இருக்கிறது என்று சொன்னால் பூங்கா வேண்டுமென்று ஒரு பக்கம் கேட்டுக் கொண்டு இருக்கிற நேரத்தில், தண்ணீர் தேங்காமல் இருக்குமா என்ற வினாவையும் ஒரு பக்கத்தில் எழுப்ப வேண்டியிருக்கிறது. இந்த மாதிரி குறைகளைப் போக்கவேண்டும். நல்ல பூங்கா ஒன்று ஒவ்வொரு விடுதிக்கு முன்னாலும்—ஒவ்வொரு விடுதி என்று சொன்னால் அங்கே 3 விடுதிகள் இருக்கின்றன—அமைக்க வேண்டும். அந்த 3 விடுதிகளுக்கு பெயர் சொல்லி அழைப்பதிலே கூட சில குழப்பம் இருக்கிறது. ஒரு விடுதி—புது விடுதி என்று சொல்லப்படுகிறது. இன்னொரு விடுதி பழைய விடுதி என்று சொல்லப்படுகிறது. மற்றொரு விடுதி 'பழைய புதிய விடுதி' என்று சொல்லப்படுகிறது. தமிழிலே ஏராளமான நல்ல சொற்றொடர்கள் இருக்கின்றன. நாம் எல்லாம் மற்றவர்களை அழைப்பதற்காக பெயர்களை வைக்கின்ற வகையிலே—இந்த விடுதிகளுக்கும் ஏதாவது ஒரு பெயர் சூட்டலாமா என்று அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பெயர்கள் எளிதாகவும் அதே நேரத்தில் நம்முடைய பெருமையைப் பறைசாற்றுகின்ற முறையிலும் இருக்கவேண்டும். முத்தமிழுக்கும் இந்த நாட்டிலே பெருமை தேடித் தந்த அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னர்களான 'சேரன், சோழன், பாண்டியன்' ஆகியவர்களை நினைவுபடுத்தி, ஒரு விடுதிக்கு 'சேரன் விடுதி' என்றும், மற்றொரு விடுதிக்கு 'சோழன் விடுதி' என்றும், மற்றொரு விடுதிக்கு 'பாண்டியன் விடுதி' என்றும் நம்முடைய தமிழ் பெருமையைப் பறைசாற்றுகின்ற முறையிலும், எளிதாக இருக்கும் வகையிலும் அந்தப் பெயர்களை வைக்க வேண்டும் என்ற கருத்தை நான் மாண்புமிகு முன்னவர் அவர்களின் பரிசீலனைக்கு வைக்க விரும்புகிறேன்.

அதேபோல், உறுப்பினர்கள் அந்த விடுதிகளில் தங்கி இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த விடுதிகளில் எல்லா அறைகளிலும் தொலைபேசி தொடர்பு இல்லை. இன்னும் சொல்லப்போனால் 'பழைய புதிய விடுதி' என்று சொல்லப் படுகிறதே அதில் ஒவ்வொரு அறைக்கும் தனித்தனியாக தொலைபேசி தொடர்பு வைக்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முன்னவர் அவர்கள் 1974 ஆம் ஆண்டிலே முன்னவ ராக இருந்த நேரத்தில் உறுதி அளித்து இருக்கிறார்கள் அந்த உறுதி கொடுத்து கிட்டத்தட்ட 7-8 ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தால், கட்டாயமாக இந்த முறை நீங்கள் அந்த வசதியைச் செய்து தரவேண்டும் என்று பணிவோடு நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக நான் சொல்ல விரும்புவது—உறுப்பினர்கள் பயணம் செய்வதற்காக சில சீட்டுகள் கொடுக்கப்படுகின்றன. ரூ 2,000 அளவிற்கு நாங்கள் ரயில் பயணம் செய்யலாம் என்று கொடுக்கிறார்கள். மாம்பலத்தில் இருக்கிறவருக்கும் ரூ 2,000 அள விற்குச் செல்ல சீட்டு, மதுராந்தகத்தில் இருந்தாலும் ரூ 2,000 அளவிற்கு செல்ல சீட்டு நீலத்திரைகடலோரத்தில் இருக்கிறவர் களுக்கும் ரூ2,000 அளவிற்குச் சீட்டு என்று சொன்னால், கன்னியா

குமரியில் இருக்கின்ற ஒருவர் 5 தடவை அவர் தொகுதிக்குச் சென்று வந்தால் அந்த ரூ 2,000 சீட்டு இருக்கிற இடம் தெரியாமல் போய்விடும். ஆகவே, இவற்றைக் கருத்தில் கொண்டு, அதிக தூரம் பயணம் செய்பவர்களுக்கு தனிச் சலுகை தர இயலுமா என்பதைப் பார்க்கவேண்டும். பலருக்கு பஸ் பயணம் பிடிப்பது இல்லை. ஆகவே, சிலருக்கு அந்தச் சலுகை தரவேண்டுமே என்று இல்லாமல், தமிழ் நாடு பூராவும் போய்பார்த்து விட்டு வருவதற்கு ஏற்ற வகையில் எல்லா உறுப்பினர்களுக்கும் இலவச ரயில் பாஸ் கொடுப்பதாக இருந்தால், பயணம் செய்வதற்கும் எளிதாக இருக்கும், அவர்கள் மக்கள் பணி செய்வதற்கும் உதவி கரமாக இருக்கும். ஒரு உறுப்பினர் தன்னுடைய தொகுதியில் மட்டும் இருந்து பணி செய்கிறார் என்று கூறிவிட முடியாது, அவரது கடமையைப் பல்லாற்றானுக்கும் செய்வதற்கு, கடப்பாடு உடையவராக இருக்கிறார். ஒரு தொகுதிக்கு மட்டும் கடமை ஆற்ற கடப்பாடு உடையவராக அவர் இருந்து விட முடியாது. தமிழகம் முழுமைக்கும் அவர் சென்று காரியம் ஆற்ற வேண்டியிருக்கிறது. ஒரு சில பொதுப் பிரச்னைகளிலே அவர் தனது கடமையை ஆற்ற வேண்டியவராக இருக்கிறார். ஒரு இடத்தில் வறட்சி, ஒரு இடத்தில் கலவரம், ஒரு இடத்தில் தீ விபத்து என்று சொன்னால், அல்லது இயற்கையின் மற்ற உற்பாதங்கள் ஏற்படுகின்றபோது மட்டுமல்ல, சில நல்ல திட்டங்களையும் பார்த்து வருவதற்கு அவர்களுக்கு விருப்பம் இருக்கலாம், அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் காரியங்கள் ஆற்றுவதற்கு இப்படிப்பட்ட சிலசில சலுகைகளைக் கொடுப்பதன் மூலம் பெரிய சேவைகளை அவர்கள் புரிவதற்கு அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இங்கே இருக்கின்ற சில வசதிகளைப் பற்றி நான் சொல்லவேண்டும். அதிகாரிகள் எல்லாம் நீங்கள் சொல்கிற செய்திகளைத் தெரிந்து கொள்வதற்கும், உறுப்பினர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்களை அறிந்து கொள்வதற்கும் இங்கே வந்து இருக்கிறார்கள். சில நேரங்களிலே அதிகாரிகள் நிற்பதற்கே இடம் இல்லாமல் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிற காட்சியினை நான் பார்க்கிறேன். அவர்களுக்கெல்லாம் இன்னும் சிறிது அதிகமான வசதிகள் செய்து கொடுக்க முடியுமா என்று பாருங்கள். அதைப்போலத்தான் இங்கே பணிப் பார்த்துக் கொண்டிருக்கிறவர்கள், சட்டப்பேரவை பணியாளர்களாக இருக்கிற பல ஏவல் பணியாளர்கள், அதிலும் குறிப்பாக, நான் இன்று பார்த்தாலும், 5, 6 பேர்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக நிரந்தரம் ஆக்கப்படாமல் அப்படியே இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியே இருக்கின்றவர்களை நிரந்தரமாக்க வேண்டும்.

வரவேற்பாளர்களாக தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவர்கள் எல்லாம் நிரந்தர வரவேற்பாளர்கள் நியமிக்கப்படும் போது அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போகிற காரணத்தால்



ஏற்கெனவே தற்காலிகமாக இருக்கிறவர்களை நிரந்தரமாக்க வழி இருக்கிறதா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பாராளுமன்றத்திலே இருக்கிற வசதிகள் சில இங்கே இல்லைதான். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பாராளுமன்றத்திலே நாடாவிலே பதிவு செய்கின்ற முறை இருக்கிறது. பேசுகின்ற பேச்சுக்கள் எல்லாம் நாடாவிலே பதிவாகிவிடுகிறது. ஒருவர் சுருக்கெழுத்தில் எழுதும்போது அவருக்கு என்று சில சிக்கல்கள், தடுமாற்றம் ஏற்பட்டது என்றால் மாலையிலே அவர் தன்னுடைய தனி அறையிலே உட்கார்ந்து போட்டுப் பார்த்து சீர்செய்து, செம்மைப்படுத்திக் கொண்டு, ஒழுங்குபடுத்தி நிரல் நிறையாக அதை வகுத்துக் கொள்ள முடியும். ஆனால் இங்கே எழுதுகின்றவர்கள் எல்லாம் தங்களுடைய மனோ வேகத்தோடு கையை ஓடவிட்டால்தான் முடிகிறது. அப்படி ஒரு 21 பேர்கள் இருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். அவர்களுடைய திறமைக்கு ஏற்பவும், அவர்களுடைய கடுமையான வேலைக்கு ஏற்பவும் நீங்கள் அவர்களுக்கு சற்று சிறப்பான ஊதியம் கொடுப்பதற்கு வழி இருக்குமானால், தயவுசெய்து பரிசீலித்தால் நாங்கள் மகிழ்ச்சியுடையவர்களாக இருப்போம். இந்த அவை முழுவதும் அதை வரவேற்கும் என்பதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

அதைப்போலத்தான் நீங்கள் சில புதிய திட்டங்களையும் கொண்டுவரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். உதாரணமாக இங்கே பத்திரிகையாளர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் பத்திரிகையாளர்கள் எல்லாம் இங்கே பேசப்படுகின்ற நல்ல கருத்துக்களுக்கு எல்லாம் பெரிய விளம்பரம் கொடுக்கின்றவர்களுக்கு, அதற்குரிய ஏதாவது ஒரு அளவுகோலை நீங்கள் ஏற்படுத்திக்கொண்டு, பரிசுகள் கொடுக்கின்ற ஒரு முறையைக் கொண்டுவருவீர்களானால் நல்ல கருத்துக்கள், சிறந்த கருத்துக்கள், அந்தக் கருத்துக்கள் சொல்லப்படுகின்ற நேரத்திலே அதற்கு தகுந்த முக்கியத்துவம் கொடுத்து விளம்பரப் படுத்தப்படுகின்ற நேரத்திலே, பிரசுரிக்கின்ற நேரத்திலே இங்கே வருகின்ற உறுப்பினர்களுக்கும் ஒரு எண்ணம் தோன்றும். இந்த அவையினுடைய பொன்னான நேரத்தை நாம் எப்படி பயன்படுத்த வேண்டுமென்று சொல்லி, ஒரு சிந்தனை அவர்களுக்கு ஏற்படும். நல்ல கருத்தோடு வந்தால் மட்டுமே போதும், நமக்கு நல்ல விளம்பரம் கிடைத்துவிடும் என்ற எண்ணம் அவர்களுக்கு வருதல் வேண்டும். புதிய, புதிய கருத்துக்களை, நல்ல சிந்தனைகளை மட்டுமே சொன்னால் போதும், நமக்கு விளம்பரம் கிடைத்துவிடும். ஏனென்றால் விளம்பரத்தை எதிர்பாராத மனிதனே கிடையாது. உலகத்திலேயே சொல்வார்கள், ரோமாபுரியிலே இருந்துகொண்டிருந்த மாபெரும் வீரன் சீசருக்கு மட்டும்தான் புகழ்ச்சி பிடிக்காது என்று. அவனிடம் கூட ஒருவன் போய் நின்று ''உங்களுக்கு புகழ்ச்சியே பிடிக்காது'' என்று சொன்னால் அதையே அவன் புகழ்ச்சியாக எடுத்துக்

கொள்வானாம். அந்த அளவுக்கு புகழ்ச்சியே பிடிக்காத மனிதன் இல்லை என்ற காரணத்தால் அந்தப் புகழும், விளம்பரமும், பெயரும் நல்லது சொன்னால் வரும் என்ற எண்ணத்தை ஊட்டுகின்ற நல்ல பத்திரிகையாளர்களுக்கு நிச்சயமாக நாம் அதிகமான பரிசைக் கொடுத்து ஊக்குவிப்போமானால், நல்ல சலுகை கொடுத்து ஊக்குவிப்போமானால் எல்லோரும் அதைப்போல எண்ணிடவும் ஆரம்பிப்பார்கள், எல்லோரும் நல்லதையே பேசவும் ஆரம்பிப்பார்கள், இந்த அவையின் நேரம் நல்லமுறையிலே பயன்படும் என்று நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

இதை நான் சொல்லுகின்ற நேரத்திலே இன்னொன்றையும் நான் உடனடியாகச் சொல்வேன். கேள்விகளை நாங்கள் கொடுத்திருக்கிறோம். பல கேள்விகளை நாங்கள் கொடுத்தாலும் கூட அதற்குரிய தகவல் எங்களுக்கு வரமாட்டேன் என்கிறது. சில ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்தால் உண்மையிலேயே அந்தத் தீர்மானங்களை ஒற்றி வைத்து விட்டோமோ என்று சொல்லக்கூடிய அளவுக்கு மீண்டும் திருப்ப முடியாத, அளவுக்கு ஒற்றி வைத்து விட்டோமோ என்ற ஐயப்பாடுகள் எங்களுக்கு வருகின்றன.

மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பற்றி இங்கே அதிகமாகச் சொல்லாவிட்டாலும், மற்ற வினாக்களை எடுத்துக்கொண்டாலும் கூட—நான் ஒரு குறுகியகால வினா வாஞ்சிநாதன் பெயர் சூட்டுவதுபற்றி இந்த தமிழக அரசு என்ன கருத்துக்கொண்டிருக்கிறது என்பதுபற்றி அறிவதற்காக வினாவைக் கொடுத்துவிட்டு, மிக ஆர்வத்தோடு பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற நேரத்தில் அரசே அதற்கு சாதகமாக இருக்கக்கூடிய நிலையை வேறு வகையிலே நான் தெரிந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறதே தவிர அந்த வினாவுக்கு விடை என்ற வகையிலே நான் தெரிந்துகொள்ள முடியவில்லை.

உங்களுக்கு இன்னொன்றையும் சொல்வேன். சில நேரங்களில் வினாக்களுக்கு விடையளிக்கின்ற அமைச்சர்கள் நாங்கள் எந்த அளவுக்கு பதிலை எதிர்பார்க்கிறோமோ அந்த அளவுக்கு ஆழமாகப் பதில் சொல்லாமல் மேலோட்டமாக பதில் தருவதைப் பார்க்கிறோம். அதற்கு நான் அமைச்சர்களை மட்டும் குறை சொல்ல மாட்டேன். காரணம் அவர்களுக்குத் தரப்படுகின்ற அந்தத் தகவல் சரியான அடிப்படையிலே தரப்படவில்லையோ என்று கருதுகிறேன். எனவே அதை நன்றாக முறைப்படுத்தி, செம்மைப்படுத்தி தரவில்லை என்ற என்னுடைய மனக்குறையை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் தெரிவித்துக்கொள்கிறேன். சில நேரங்களிலே மானியத்திலே பேசுகின்றோம், பட்ஜெட்டிலே பேசுகின்றோம். வரவு-செலவுத் திட்டத்திலே பேசுகின்றபோது விரிவாகப் பேசுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பேசி முடித்த உடனே அவை முன்னவர் அல்லது முதலமைச்சர் பதில்



சொல்லுவதை உடனே வைத்துக்கொள்ள வேண்டுமா? தயவு செய்து மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, எனக்கு இந்த ஒன்றை விளக்குவதற்கு அனுமதியும் நேரமும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறுபட்ட கருத்துக்களை எல்லோரும் சொல்லுகின்றார்கள். உடனடியாக முதலமைச்சர் அதற்கு பதில் சொல்வது என்பது—அவர் திறமையாகப் பதில் சொல்கிறார், மிகப் பாராட்டக்கூடிய வகையில் பதில் சொல்கிறார்; மிக நன்றாக இருக்கிறது; உண்மை. ஆனாலும் கூட அத்தனை குறிப்புகளையும் அதிகாரிகள் எடுத்துக்கொண்டு, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அத்தனை பேர்களும் பேசி முடித்தபிறகு வரிசை வரிசையாக உடனே அவைகளுக்கு பதில் சொல்ல முடியுமா? அத்தனைக்கும் வரிசையாக பதில் சொல்லுகின்ற நிலையில் ஒதுக்கிக் கொண்டால் நன்றாக இருக்காதா?

[பிற்பகல் 12-20]

உதாரணத்திற்குச் சொல்லப்போனால் வெள்ளிக்கிழமையன்று எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய பேச்சை முடிக்கிறார் என்றால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் திங்கள்கிழமை தான் பட்ஜெட் விவாதத்திற்குப் பதிலளிப்பது என்று வைத்துக் கொண்டால் சனியும் ஞாயிறும் அவர்களுக்கு சிந்திப்பதற்கும் மற்ற அதிகாரிகளைக் கலந்து பேசுவதற்கும் தானே சில புதிய திட்டங்களை உருவாக்கிக்கொடுத்து அதாவது உறுப்பினர்கள் கொடுத்த அந்த எண்ணத்திற்கேற்ப செயல்படுவதற்கு வாய்ப்பான வகையிலே அறிவிப்புக்களை வெளியிடுவதற்கும் வாய்ப்பாக இருக்கும் அல்லவா? எனவே அப்படிச் செய்தால் ஒரு இரண்டு நாட்களாவது இதைப்பற்றிச் சிந்தித்துப் பேசுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வாய்ப்பாக இருக்கும். இப்போது செய்வது மிகப் பாராட்டுக்குரியதாக இருந்தால் இதைவிட மிக மிகப் பாராட்டுக்குரியதாக அந்தப் பதில்கள் வரும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே நான் இதைச் சொல்கிறேன்.

அதைப்போலத்தான் மானியக் கோரிக்கைகளும் கூட. மானியக் கோரிக்கைகளைப் பொறுத்தவரையிலே நாமெல்லாம் இப்போது பேசிய உடனே மாண்புமிகு முன்னவர் அவர்கள் மிகத் திறமையாகப் பதில் சொல்வார்கள். அவர் மெத்தக் கற்ற வித்தகராக இருக்கின்ற காரணத்தாலே, முத்தமிழ்க் கடலிலே மூழ்கி முத்து எடுத்தவராக இருக்கின்ற காரணத்தாலே, அற்புதங்கள் விளைவிக்கின்ற அருமையான பதில்களைச் சொல்வார். அதிலே ஐயமில்லை. ஆனாலும் கூட நாங்கள் எங்கிருந்தோ எங்கள் நெஞ்சத்திலே கொண்டுவருவதை எல்லாம் ஏற்கெனவே அமைச்சரவர்களிடத்திலே சொல்ல முடியாமல் அப்போதுதான் சொல்கிறோம். ஆதலினாலே கணப் பொழுதுக்கு முன்னாலே சொன்னதற்கு உடனடியாகப் பதில் சொல்வதற்கு பதிலாக மறுநாள் அவர்கள் மற்ற மானியக் கோரிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கு முன்னாலே, முன்னாலே பேசிய விவாதத்திற்கு, அதாவது முந்தைய நாள் பேசிய விவாதத்திற்கு தொடர்புடைய அமைச்சர் பதில் கூறிவிட்டு அன்றைக்குள்ள

மானியக் கோரிக்கையினை எடுத்துக் கொண்டால் சிறப்பாக அமையாதா என்பதையும் சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் நான் பேசவேண்டிய பல கருத்துக்கள் இருந்தாலும் கூட அதாவது தேர்தல்கள் போன்றவற்றை உடனே நடத்த வேண்டும் என்கின்ற கோரிக்கைகள் நீண்ட நாட்களாக இருக்கின்றன. அதுபற்றிக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். அவற்றிற்கான தேதிகளை எல்லாம் அறிவிக்க வேண்டும் என்று சொல்கின்ற கோரிக்கைகள் எல்லாம் இருக்கின்றன. அதுபற்றி எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளிப்பார்கள் என்று நான் நிச்சயம க நம்புகிறேன்.

இன்னும் ஒரே ஒரு செய்தி. அது என்னவென்று சொன்னால் இங்கே பல தகவல்கள் சொல்லப்படுகின்றன. நாங்கள் சொல்வதை எல்லாம் பரிவோடு கவனிக்கின்ற அமைச்சர்கள் பரிசீலிக்கப்படும், ஆவன செய்யப்படும், செய்து முடிக்கப்படும் என்றெல்லாம் பலவிதமான உறிச்சொற்களைப் பயன்படுத்தி தங்களுடைய வினை முடிப்பதற்கான காலங்களையும் அல்லது வினை முடிப்பதற்கான துடிப்புக்களையும் இங்கே அறிவிக்கிறார்கள். ஆனால் எத்தனை கவனத்தில் கொள்ளப்படும் என்று சொல்லபடுகின்றன, எத்தனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லப்படுகின்றன, எத்தனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்படுகின்றன என்பது போன்ற ஒரு இன்டெக்ஸ் போல் ஒன்றை வைத்துக்கொண்டால் சிறப்பாக இருக்கும். இப்போது உறுதிமொழிக்குழு மட்டும்தான் இருக்கின்றது. அஷ்யூரன்ஸ் கமிட்டி மட்டும் தான் இருக்கின்றது. அந்த உறுதிமொழிகள் சொல்வதைப்பற்றித் தான் தெரிந்து கொள்ள முடிகிறதே தவிர பரிசீலனை செய்வது ஆய்வுக்கு எடுக்கப்பட்டிருப்பது எவை எவை என்பதைத் தெரிந்துகொள்ள முடியாத நிலைமை இருப்பதால் அதுபற்றியும் ஒரு குறிப்பு எடுத்து அங்கே நூலகத்திலே ஒரு கருவி போல எடுத்து வைத்திருந்தால் எங்களுக்கு அது வழிகாட்டுகின்ற குறிப்புக்களைத் தரக்கூடும் என்ற காரணத்தால் இந்த எண்ணத்தை உங்களுக்கு சொல்லிக்கொள்கிறேன். அங்கே நூலகத்திலே பலவிதமான வசதிகள் தேவை. படிப்பதற்குரிய சூழ்நிலைகள் நிறைய இருந்தாலும் கூட இன்னும் தேவைப்படுகிறது. உங்களைப் பாராட்டி இத்தோடு என்னுடைய உரையை நிறைவு செய்ய நினைக்கிறேன். லெஜிஸ் அலர்ட் என்று சொல்லப்படுகின்ற குறிப்பினை நீங்கள் எல்லோருக்கும் அனுப்பிக் கொண்டு இருக்கிறீர்கள். அது மிக்க நன்றாக இருக்கின்றது. அதைப் பார்த்து என்னென்ன நூல்கள் வந்திருக்கின்றன, என்னென்ன நல்ல கட்டுரைகள் வந்திருக்கின்றன என்று நாங்கள் பார்த்துப் படிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறீர்கள். இதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொண்டு மற்றவைகள் எல்லாம் உங்களுடைய பார்வையிலே வைப்பதற்குரியதுதான். பாராட்டுவதற்கு நிறைய இருந்தாலும் கூட அதிலே நேரத்தை எடுத்துக்கொண்டால் உங்களுக்கு செம்மைப்



டுத்துவதற்குரிய வாய்ப்பினைக் கொடுத்து மேலும் பிறரால் கழப்படுகிற வாய்ப்பைத் தடுத்துவிடக் கூடாதே என்பதற்காகத் ான் நான் தென்படுபவைகளை எல்லாம் சுட்டிக்காட்டினேன் ன்று சொல்லி என்னுடைய உரையினை நிறைவு செய்கிறேன். ணக்கம்.

திருமதி எ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவையின் முன்னவர் அவர் ளால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கை யினை ஆதரித்து ஒருசில கருத்துக்களை நான் சொல்ல விரும்பு கிறேன். இந்தச் சட்டமன்றம் ஒரு நாளைக்கு 20,000-லிருந்து 15,000 ரூபாய் வரை மக்களுடைய வரிப்பணத்தைச் செலவழித்து இங்கே நடத்தப்படுகின்றது. அப்படி நடத்தப்படுகின்ற இந்தச் சபையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கனம் அங்கத்தினர்கள் இன்று சபையிலே ஏதோ ஒரு கோளாறை வைத்துக் கொண்டு இங்கே பலநல்ல காரியங்களைச் சொல்லாமல் அவர்கள் வெளியிலே சென்றுவிடுவார்களேயானால் அது உண்மையிலேயே ஓட்டுப் போட்ட மக்களுக்கு செய்யக்கூடிய ஒரு பாதகம் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்தச் சபையைப் பொறுத்தவரையிலே நாங்கள் எல்லாம் கொஞ்சம் படித்தவர்கள் தான். அதாவது எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் தான். முன்பு நாங்கள் இருந்த காலத்திலே 1957-லே இருந்து 1967 வரை ஒரு நாளைக்கு நாங்கள் வாங்கிய படி $12\frac{1}{2}$ ரூபாய் ஒரு மாதத்திற்கு 150 ரூபாய். அதற்குப் பிறகுதான் அடுத்த பீரியேடில் அதை 15 ஆக உயர்த்தி, கொஞ்ச கொஞ்சமாக இப்போது ரூ. 250 ஆக ஆக்கியிருக்கிறார்கள். இன்றைக்கெல்லாம் சட்ட சபையிலே பி.ஏ. படித்தவர்கள், எம்.ஏ. படித்தவர்கள், பி.ஏ., பி.எல்., எம்.ஏ., பி.எல். படித்தவர்கள் போன்ற படித்த இளைஞர்கள் இருக்கிறீர்கள். அப்படிப்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டிருக்கக்கூடிய இந்தச் சபையிலே, அதேபோல ஆற்றல் மிக்க அமைச்சர்கள் இருக்கக்கூடிய இந்த சபையிலே ஏதேனும் ஒரு காரணத்திற்காக இங்கே மணிக்கணக்கில் கலாட்டாக்கள் நடந்துக் கொண்டே வருமேயானால், அது மிகவும் வருந்தக்கூடிய, வேதனைப் படக்கூடிய ஒன்று என்பதைத்தான் நான் முக்கியமாக குறிப்பிட விரும்புகிறேன். இதைச் சொல்வதற்காகத்தான் முக்கியமாக இப்போது நான் பேச எழுந்தேன்.

ஒரு சமயம் நம்முடைய மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஒரு ஸ்டேட்மெண்டைப் படிக்க வந்தார்கள். அப்போது சபாநாயகராக இருந்த திரு. சிவசண்முகம் அவர்கள் நாட்-அலவ்ட் என்று சொன்னார்கள். மீண்டும் இராஜாஜி அவர்கள் படிக்கத் தொடங்கியபோது, அவர் சொன்னார் ; "The Honible Chief Minister cannot issue a statement like this. I won't allow. Please sit down." என்று சொன்னார். அப்படி அவர் சொன்னவுடனேயே இராஜாஜி அவர்கள், அந்த அறிவுலக மேதையவர்கள், ஆடாமல் அசையாமல் அப்படியே அமர்ந்து விட்டார்கள். அந்த மரபை நாம் கடைப்பிடிக்கவேண்டும். சில சமயங்களில் நாங்கள் கூட, வயது முதிர்ந்தவர்கள் கூட,

பாநாயகர் அவர்களிடத்திலே பேசுவதற்கு நேரம் அதிகமாகக் கேட்டு கொஞ்சம் வாதாடுகிறோம். அது கூட கூடாது. ஏனென்றால் இந்த அவையின் மரபை நாம் காப்பாற்ற வேண்டும்.

அந்த அடிப்படையிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய இருப்பிடத்திற்கு வந்து உட்கார்ந்து, கொஞ்சம் திரும்பிப் பார்ப்பாரேயானால், ஆளும் கட்சியைச் சேர்ந்த அத்தனை அன்பு சகோதரர்களும் ஆடாமல், அசையாமல் அப்படியே இருந்துவிட வேண்டும். அதுதான் மரபு. அது போலவே எதிர்க்கட்சியிலே இருக்கும் நாங்களும் ஒரு நியதியைக் கடைப்பிடிப்போமேயானால், நிச்சயமாக இலட்சக்கணக்கான ஓட்டுக்களைப் போட்டு நம்மை இங்கே அனுப்பியிருக்கும் தமிழக மக்களுக்கு நாம் இன்னும் அதிகமான அளவில் சேவை செய்ய முடியும். அவர்களுடைய தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய அளவிலே பெருமை பெற்றிருக்கும் இந்த அவை, அதனுடைய அங்கத்தினர்களுக்கு மக்கள் மத்தியில் மதிப்பைத் தேடித் தரவேண்டும். அந்த அடிப்படையிலே நாம் அனைவரும் நடந்து கொண்டால் இப்போது நிறைவேற்றி வரும் திட்டங்களைப்போல பலகோடி ரூபாய்களை ஒதுக்கி இன்னும் அதிகமான அளவில் மக்களுக்கு தேவையான காரியங்களைச் செய்து கொடுக்க முடியும். அந்த வகையிலே நாம் சபையை நடத்துவோமேயானால் அது சற்றுச்சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

இங்கே கூட கடந்த 4,5 நாட்களாக ரொம்ப நிம்மதியாக சட்டசபை நடந்துக் கொண்டிருக்கிறது என்பேன். ஏனென்றால் நாம் இந்த அவையில் இருப்பதையே சில சமயம் மறந்து விடுகிறோம். ஏதோ ஒரு கலாட்டா செய்ய வேண்டும் என்று நினைக்கிறோம். அப்படி நாம் நினைத்து செயல்பட்டால் அது மக்களுக்கு இழைக்கக் கூடிய பெரும் பாவம் என்பதை இந்த நேரத்தில் மீண்டும் ஒரு முறை சுட்டிக் காட்டி, இந்த சபை ஒழுங்காக நடக்க வேண்டும்; அதற்கு இந்த சபையிலுள்ள அத்தனை பேர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. இந்த சபை கட்டுக்கோப்பாக இருந்து மரபுகளைக் காப்பாற்ற வேண்டும். அந்த வகையில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று எல்லோருக்கும் என்னுடைய வேண்டுகோளாக விடுத்து அடுத்தாற்போல் என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

சட்டமன்றத்திலே ஒரு நூலகம் இருக்கிறது. அந்த நூலகத்திலே போய் உட்கார்ந்து நாங்கள் படிப்பதற்கு சரியான இடம் கிடையாது. புத்தகங்களை சரியாக அடுக்கி வைக்க சரியான பீரோக்கள் இல்லை. அதையெல்லாம் சற்று ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டும். அது மட்டும் இல்லாமல் இங்கே பேசிய அங்கத்தினர்கள் எல்லோரும் அதைப்பற்றிச் சொன்னாலும் கூட, நானும் சொல்லவிரும்புகிறேன். சட்டமன்றத்திலே பணியாற்றக் கூடிய அந்த அலுவலர்கள் பாவம் மிகவும் பரிதாபமானவர்கள். அவர்களுக்கு பாஸ் கொடுக்கவேண்டும், பேட்டா கொஞ்சம் கூட்டிக் கொடுக்கவேண்டும். எந்தவித தயக்கமும் காட்டாமல் அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்றி அவர்களுக்கு பாஸ் கொடுக்க வேண்டும்.



இங்கே வாயில்களில் நிற்கக் கூடிய காவலர்கள் பாவம் நாள் முழுவதும் நின்றுக்கொண்டேயிருக்கிறார்கள். அவர்களுக்கு 4 ரூபாய் தான் நாள் ஒன்றுக்கு கொடுக்கப்படுகிறது. நாம் 50 ரூபாய் வாங்குகிறோம். அவர்களுக்கு இது மிக மிகக் குறைவு என்று சுட்டிக் காட்டி அதை கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கவுன்சிலிலே இருக்கும் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற லவுஞ்ச் பெரியதாக இருக்கிறது. நல்ல இடவசதி இருக்கிறது. மிக நன்றாகவும் இருக்கிறது. ஆனால் இங்கே மன்ற உறுப்பினர்ளுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் லவுஞ்ச் குறுகிய இடம் உள்ளதாக இருக்கிறது. நான் தலைவர்—தம்பி நெடுமாறன் அவர்களுடன் சென்று பேசிக் கொண்டிருக்கும்போது பார்த்தேன். என்னால் அங்கே வசதியாகஉட்காரக்கூட முடியவில்லை. குறுகிய இடமாக இருக்கிறது. மைக் வசதியும் இல்லை. ஆனால் எங்களுக்கு, பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் அறையிலே எல்லா வசதிகளும் இருக்கின்றன. மைக் வசதி இருக்கிறது. போன் வசதியும் இருக்கிறது. ஆகவே அது போலவே ஆண் உறுப்பினர்களின் லவுஞ்சுக்கும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே இருக்கும் காண்டீனில் நின்று கொண்டுதான் காப்பி குடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அங்கே போனால் நிறையப் பேர்கள் கூடி இருப்பார்கள், அவர்களை இடித்துத் தள்ளிக் கொண்டு, கும்பலில் முட்டி மோதிக் கொண்டு போய், கியூவில் நின்று டோக்கன் வாங்கி பிறகு காப்பியை நின்று கொண்டுதான் குடிக்க வேண்டும் என்கிற நிலை இருக்கிறது. ஆகவே, அதனை சற்று பெரியதாக எல்லோருக்கும் வசதியாக, முக்கியமாக சட்ட மன்ற உறுப்பினர்கள் வந்து உட்கார்ந்து நிம்மதியாக காப்பி சாப்பிடுவதற்கு, டிபன் சாப்பிடுவதற்கு வசதியாக காண்டீன் ஒன்று இங்கேயே சட்டமன்றக் கூட்டத் தொடர் நடக்கும் இடத்திற்கு அருகிலேயே ஒன்று அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு கடைசியாக நாங்கள் இங்கே கேட்பதற்காக எழுதிக் கொடுக்கப்பட்ட கேள்விகள் இருக்கின்றனவே அவைகள் 42 நாட்கள் கழித்துத்தான் எடுத்துக் கொள்கின்ற நிலைமை இருக்கிறது. அவ்வாறு இருப்பதை மாற்ற வேண்டும். ஒரு வாரம் அல்லது 10, 15 நாட்களுக்குள்ளாக கேள்விகளுக்கான பதில்கள் வரும்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எம்.எல்.ஏ. க்களின் சார்பாக உண்மையிலேயே நான் அரசைப் பாராட்டுகிறேன். நாங்கள் முன்பு உறுப்பினர்களாக இருந்தபோது இந்தச் சலுகைகள் எல்லாம் எங்களுக்குத் தெரியாது. பஸ்ஸுக்குப் போகவேண்டும் என்றால் கூட கியூவில் நின்று. டிக்கெட் வாங்கித்தான் போகவேண்டும். அதில் கோபப்படுகிற

எம். எல். ஏ.க்களாக இருந்தால், சண்டை பிடித்துக் கொண்டு, பதிலுக்கு அந்த அதிகாரிகள் உங்களுக்கு என்ன கொம்பா முளைத்திருக்கிறது என்று கேட்டார்கள், அப்படிப்பட்ட நிலைமை முன்பு இருந்தது. நான் எப்போதுமே அத்தகைய கேள்விகளுக்கெல்லாம் இடம் வைத்தது இல்லை. ஏனென்றால் எப்படி ஆபீசர்களை அப்ரோச் பண்ண வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். ஏனென்றால் நம்முடைய பதவி நிரந்தரமானது அல்ல. முறையாக அவர்களை அணுகி ஒழுங்காகக் கேட்டால் சரியான முறையிலே நமக்கு மதிப்பைத் தருவார்கள் மரியாதையைத் தருவார்கள். அது நான் அறிந்த உண்மை.

[பிற்பகல் 12-30]

இன்று பஸ் பாஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி ரெயில்வே கூப்பன்கள் கொடுத்திருக்கிறார்கள். இதை பணம் கட்டித்தான் நாம் மத்திய அரசிலிருந்து வாங்கியிருக்கிறோம். நமது அமைச்சரவை எம். எல். ஏ.க்களுக்காக பணம் கட்டித்தான் இரண்டாயிரம், இரண்டாயிரம் கட்டித்தான் கூப்பன்ஸ் வாங்கப்பட்டிருக்கிறது. இதை எடுத்துக்கொண்டு டிக்கட்ஸ் வாங்கச் சென்றால்—நமக்கு அவசரமாக ஊருக்குப் போகவேண்டுமென்று இரண்டு டிக்கட்டுகள் வாங்க வேண்டும் என்றால் ஒரு மணி நேரம் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. உங்களுக்கு ப்ரபரன்ஸ் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். பிறகு தெரிந்தவர் ஒருவரைப் பிடித்து இரண்டு பர்ஸ்ட் க்ளாஸ் டிக்கட்ஸ் வாங்குவதற்கு ஒரு மணிநேரம் காத்திருக்கவேண்டியதாயிற்று. நானே போயிருந்தேன். ஆகவே அந்த நிலையை மாற்றி எப்படி பஸ் பாஸ் கொடுக்கப்படுகிறதோ அப்படி கூப்பனுக்குப்பதில் ரெயில்வேயிலும் பாஸ் கொடுத்துவிட்டால் சாலச்சிறந்ததாக இருக்கும். மத்திய அரசை அணுகி இந்த ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு க்ளார்க்ஸ் கொடுப்பது பற்றி திரு. சோ. அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள். உண்மையில் எவ்வளவோ பேப்பர்கள் டிஸ்போஸ் செய்யவேண்டியிருக்கிறது. கிறுக்கு பிடிக்கும் போலிருக்கிறது. வந்திருக்கிற எல்லாத் தபால்களுக்கும் பதில் எழுதியாக வேண்டும். இவற்றிற்கு கவர்ஸ் கார்ட்ஸ் என்று வாங்குவதற்குப் பதிலாக ஸ்டாம்ப் கொடுத்து விடுங்கள். எவ்வளவு ஆகிறதோ அதைக் கொடுத்துவிடுகிறோம். ஆகவே எல்லா மன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு க்ளார்க்—கம்—டைப்பிஸ்ட் கொடுத்துவிடுங்கள்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ 750 கொடுக்கப்படுகிறது. அமைச்சர்களுக்குக் கூட கொடுக்கப்படுகிற சம்பளம் ரொம்பக் குறைவாகும். அமைச்சர் ஒருவருக்கு ரூ. 1000 என்பது ரொம்பவும் குறைச்சல். எங்களுக்கு ரூ. 750 என்றால் அமைச்சர்கள் ரூ. 2500 எடுத்துக் கொள்ளுங்கள். எடுத்துக்கொண்டு வேலைகளை ஒழுங்காகச் செய்யவேண்டும். வீட்டில் கஷ்டமில்லாமல் இருக்க வேண்டும். அந்தளவுக்குச் செய்யவேண்டும். உறுப்பினர்களுக்கு. ஒவ்வொருவருக்கும் ஒரு க்ளார்க்—கம்—டைப்பிஸ்ட் அதற்கு



அரசாங்கம் பாதிப் பணம் நாங்கள் பாதிப் பணம் என்று கொடுக்கிறோம். அப்படிச் செய்தால் எங்களுக்கு உடனடியாக [illegible]களை செய்ய [illegible] வாய்ப்பாக இருக்கும். (மணியடிக்கப்பட்டது.)

நாம் எல்லோரும் கோபித்துக் கொள்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் உள்ள, ஒரு ரூமில் என் பிள்ளை, பேரன், பேத்தி என்று வைத்துக் கொள்கிறேன் என்றால் அபிப்பிராயம் இல்லை. அப்படிச் செய்யக்கூடாது. ஒரு ரூம் என்றால் இவ்வளவு குடிநீர் ஆகும் என்று வைத்திருக்கிறோம். இவ்வளவு கக்கூஸ் என்று வைத்திருக்கிறோம். ஒரு ரூமில் பத்து பதினைந்து பேர்கள் இருக்கிறார்கள் என்றால் எவ்வளவு தண்ணீர் வேண்டும், அப்படி பத்து பதினைந்து பேர்கள் ஒரு ரூமில் இருந்தால் அந்தக் கட்டடம் எப்படி உருப்படியாக இருக்கும்? ஆகவே வரக்கூடிய தொகுதி மக்களுக்காக — சுடுகாடு என்று சொன்னார்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவைத்தம்பி அவர்கள், உண்மையில் நன்றாகத்தான் இல்லை — கூரை ஷெட்ஸ் போட்டு அங்கே போன் வசதி செய்து கொடுத்து அவர்கள் உறுப்பினர்களோடு தொடர்பு கொண்டால் நாங்கள் ஓடோடி வந்து அவர்களைப் பார்த்துக் கொள்வோம். சட்டசபைக் கட்டடத்திற்குள்ளே, உறுப்பினர்கள் விடுதிக்குள்ளே இவ்வளவு கூட்டத்தை வைத்துக் கொள்வது என்பது கஷ்டமான காரியம். கீழ்ப்படியில் இறங்கும் போது வெற்றிலை எச்சிலைத் துப்பிச் செல்கிறார்கள். பக்கத்தில் ஒன்றுக்கு இருந்துவிட்டு ஒரே நாற்றம், சகிக்கவில்லை. சாயங்காலம் ஜன்னல்களை திறந்து வைத்தால் நாற்றம் தாங்கமுடியவில்லை. ஆகவே உறுப்பினர்களைப் பார்க்க வருபவர்களுக்கு நான்கைந்து கக்கூஸ்கள் போட்டு குடிநீர் வசதியும் செய்து கொடுக்கவேண்டும். வெளியே ஷெட்கள் அமைத்துக்கொடுத்தால் அங்கிருந்துகொண்டு அவர்கள் உறுப்பினர்களைப் பார்க்க தகவல் அனுப்பலாம்.

அந்தக் காலத்தில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2·50 வாடகை கொடுத்து வந்தோம். என் கூட என் அப்பா, அம்மா, வீட்டுக்காரர், மகன், மகள் இருந்தால் ரூ. 4 கொடுக்கவேண்டும். இப்போது எல்லாவற்றையும் ஃப்ரீ என்று வைத்து விட்டோம். அப்படி ஃப்ரீ என்று [illegible] [illegible]தான் [illegible]றோம். [illegible] [illegible]ட்டச் [illegible] [illegible]றோம். [illegible]றால் சுத்தமாக இருக்கவேண்டும். அந்த [illegible] அதைச் செய்துகொடுக்கவேண்டும்.

[illegible]த்திற்கு போன் வசதி [illegible]. கட்சி [illegible] அவர்களுக்கு பாஸ் கொடுக்கவேண்டும். அதோடு கூட இப்போது கொடுக்கப்படுகிற [illegible] போதாது. அதை இன்னும் ஜாஸ்தியாக்கவேண்டும். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மானியக் கோரிக்கையின் மீதும், தேர்தல் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதும் மாமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சிறப்பான முறையில் எடுத்து வைத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற மானியக் கோரிக்கை எவ்வளவு இன்றியமையாத ஒன்று. ஒரு துறையைப் பற்றியது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஒரு ஜனநாயக ஏற்பாடாக சட்டமன்றத் துறையும் தனித்து இயங்கக் கூடிய நீதித் துறையும், சட்டமன்றம் இயற்றுகின்ற சட்டங்களை நடைமுறை படுத்துகின்ற தனித்து இயங்குகின்ற நிர்வாகத் துறையும் ஆக 3 துறைகளும் 3 கால்களாக அமைகின்றன. இந்த 3 கால்களிலும், முக்கியமான முதல் கால் சட்டமன்றம் என்றும், ஆக ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் சார்பாக எடுத்துத் தெரிவிப்பார்கள், அந்த முறையிலே சட்டமன்றத்தை பொறுத்துத் தான் ஜனநாயக ஆட்சி முறை அமைகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே தங்களுடைய கருத்துக்களை சிறப்பாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையிலே சட்டமன்றம் மதிக்கப்பட வேண்டும். சட்டமன்றம் மதிக்கப்பட வேண்டுமென்று வருகிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள் மதிக்கப்பட வேண்டும். மற்றவர்கள் மதிக்க வேண்டுமென்கிறபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் மதிக்கத்தக்க அளவுக்கு நடந்து கொள்ள வேண்டும். ஆக அந்த அளவுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பண்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். தங்கள் நடைமுறையிலே அத்தனையையும் வெளிப்படுத்த வேண்டும். காரணம், நாடு அவர்கள் செய்வதை கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் உணர வேண்டும். இந்த மன்றத்திலே இருக்கின்ற 235 உறுப்பினர்களும், மேலவையிலே இருக்கின்ற 63 உறுப்பினர்களும், தற்போது 41 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் செய்வதை இந்த நாடு கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு தொகுதியும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது. யார் யார் தங்களுடைய கடமைகளை முறைப்படி ஆற்றுகிறார்கள் என்று தெரிகிறது. யார் யார் பண்போடும், அன்போடும், ஜனநாயகமுறைகளுக்கு கட்டுப்பட்டும் நடக்கிறார்கள் என்பதையும் கவனித்துக் கொண்டு வருகிறது. ஆகவே, சட்டமன்றத்தின் தரத்தை உயர்த்த வேண்டுமென்றால் சட்டமன்ற உறுப்பினர்களுடைய தரம் உயர்ந்த அளவுக்கு அமைய வேண்டும். இந்த வகையிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், ஒரு சிலரைத் தவிர, நான் துணிவோடு, பெருமையோடு கூறிக் கொள்வேன், மிகப் பெரும்பாலோர் என்று சொல்லவேண்டும், இந்த மன்றத்தினுடைய பெருமை புகழ் காப்பாற்றப்பட வேண்டும் என்ற தங்கள் நோக்கங்களைச் சிறப்பாக நிறைவேற்றும் அளவிற்கு நடந்து கொண்டு வருகிறார்கள். அதற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ...



சட்டமன்றத்தினுடைய நடவடிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்புணர்ச்சியோடு, கடமையுணர்ச்சியோடு, மிகச் சிறப்பான முறையிலே தங்கள் பொறுப்புக்களை ஆற்ற வேண்டும். அந்தப் பொறுப்புணர்ச்சியையும், கடமையுணர்ச்சியையும் பார்க்கும் போது, சட்டமன்றத்திற்கு உறுப்பினர்கள் கட்டாயம் வரவேண்டும் என்பது இந்தப் பொறுப்புணர்ச்சியிலே ஒன்று. நாள்தோறும் தவறாமல் வரவேண்டுமென்பது மற்றொன்று, ஆக அப்படி வந்தாலும் கூட, கடைசிவரையில் இருக்க வேண்டும் என்பது இன்னொன்று என்பதையும் வலியுறுத்த வேண்டும். சட்டமன்றத்திற்கு வருகின்ற அத்தனை பேர்களுக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குப் பிறகு, அவர்கள் நாள்தோறும் வரவேண்டுமென்பதல்லாமல், அக்கறையோடு வந்து, விவாதத்திலே பங்கு கொள்ளுகின்றவர்களுக்கு இரண்டு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, அவ்வாறு வரும் ஒருசில உறுப்பினர்களைத் தான் திரும்பத் திரும்பப் பார்க்கிறேன். சட்டமன்றக் கூட்டம் 1 30 மணிக்கு முடிந்தாலும் 2.30 மணிக்கு முடிந்தாலும் அல்லது மீண்டும் மாலையில் கூடினாலும் சரி, அவர்களுடைய முகங்களைத் தான் திரும்பத் திரும்பப் பார்க்க முடிகிறது. இரண்டு பக்கங்களிலேயிருந்தும் அவர்களைப் பார்க்க முடிகிறது. அவர்களுக்கு 3 நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இவர்களுக்கு இன்னும் அதிக நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். காரணம், அவர்களால்தான் இந்த மன்றம் நடக்கிறது என்றுகூடச் சொல்லலாம். அவர்கள் அவ்வாறு வரவில்லையென்றால் இந்த மன்றமே நடைபெற முடியாமல் போய்விடும், அந்த அளவுக்கு காப்பாற்றுகின்ற உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மன்றம் இயற்றுகின்ற சட்டம், இந்த நாட்டை ஆளுகின்ற சட்டம். இந்த அவையினுடைய கருத்துக்கள், இந்த நாட்டினுடைய கருத்துக்களாக மாறுகின்றன. வருகின்ற அத்தனை உறுப்பினர்களும், நாட்டு மக்களுடைய எண்ணங்களை அறிந்து, அவர்களுடைய தேவைகளை உணர்ந்து, அதற்கேற்ப இங்கே கோரிக்கைகளை வழங்கி வருகிறார்கள். நாம் அவர்களுடைய பிரதிநிதிகளாக வருகிறோம். வாக்குரிமைச் சீட்டுகளைப் பெற்று வருகிறோமே தவிர, டிக்கட் என்ற பெயரில் அல்ல. டிக்கட் என்றிருந்தால், யாரும் அதை வாங்கிவிடலாம் ஆனால், டிக்கட் என்ற பெயரிலே அல்லாமல், வாக்குரிமையை மக்கள் நம்மிடத்திலே தந்திருக்கிறார்கள். வாக்குரிமையை பெற்று நாம் இங்கே வந்திருக்கிறோம். அந்த வாக்குரிமையின் அடிப்படையில் இங்கே கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. சட்டங்கள் இயற்றப்படுகின்றன. அந்த வகையில் அத்தனை உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பும், தன்மையும் மூலம் இயங்கி வருவதன்காரணமாக ஓரளவுக்கு சிறப்பான முறையில் மன்றத்தை நடத்த முடிகிறது. இன்னமும் நம் மாநிலம் பல்வேறு மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கத்தக்க அளவிற்கு

தமிழக சட்டமன்றம் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றது என் ஒரு பெயர் நம் காதுகளில் வந்து அவ்வப்போது விழுந்தால், அதுதான் நாம் இந்த மன்றத்திற்குத் தேடித் தந்த பெருமிதமாக இருக்கும். அதற்கு மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்; அந்த ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்று இவரை நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12,40]

இங்கே இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அவர்களையும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல மன்ற உறுப்பினர்கள் கூட தெளிவில்லாமல் இருக்கிற நிலை இருக்கிறது. சில வழிகளிலே பயிற்சி அளிப்பது கூட நல்லது, ஆகவே இதில் வருகிற விளக்கங்கள் 'டெபிசிட் பட்ஜெட்' என்றாலும் கூட தெரியாது; சாட்டப்பட்டத் தொகை என்றால் என்னவென்று தெரியாது. கூட்டப்பட்டத் தொகை என்றால் என்னவென்று தெரியாது. இதுபோன்ற விளக்கங்கள் எல்லாம், வினாக்கள் எப்படி கேட்க வேண்டும். எப்படிப்பட்ட வினாக்கள் கேட்கப்பட்டால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் இதற்கெல்லாம் புதியவர்களாக இருப்பவர்களுக்கும், மற்றவர்களுக்கும் அறிவிக்கிற முயற்சியை எடுத்துக் கொண்டால் நல்லது; என்று சொன்னார்கள்; அப்படி இருப்பதற்கு 'காமன் வெல்த் பார்லிமெண்டரி அமைப்பு' என்று ஒன்று வைத்திருக்கிறோம். அதன் மூலமாக சிறந்தவர்களை, அனுபவம் உள்ளவர்களை, பாராளுமன்றத் துறையிலே பேரும் புகழும் உள்ளவர்களை, அதிலே நீண்ட நெடும் நாட்களாக இருந்து வருபவர்களை எல்லாம் அழைத்து மாதத்திற்கு ஒரு கூட்டம், இரண்டு வாரத்திற்கு ஒரு கூட்டம் என்று கூட கூட்டச் செய்யலாம். உறுப்பினர்கள் வரவேண்டுமே என்பது தான் அதிலே இருக்கிற அக்கறையே தவிர, நாம் அவர்களை கூப்பிட்டு விட்டு நாலு பேர், ஐந்து பேர் என்று கூடுவார்களானால் கூப்பிட்டவர்களுக்கும் அது நன்றாக இருக்காது. நமக்கும் அது நன்றாக இருக்காது. ஆகவே உறுப்பினர்கள் விரும்புவார்களானால் கருத்தரங்கம் வைக்கவும் ஏற்பாடு செய்யலாம் அங்கே விவாதிக்கலாம். மிகச் சிறந்தவர்களை அழைத்து கருத்துக்களை வழங்கும்படிச் செய்யலாம். நமக்கு எடுத்துச் சொல்கிற வகையிலே அமையக் கூடும். வகுப்புகளிலே பேராசிரியர் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கிற ஒரு முறை. மேடையிலே ஏறி அரசியல் தலைவர்கள் பொதுக் கூட்டங்களிலே பேசுவதற்கு இருக்கிற ஒரு முறை, நீதிமன்றங்களில், வழக்கறிஞர்களுக்கு வாதாடுவதற்கு ஒரு முறை; சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிற ஒரு முறை; ஆக நான்கு முறைகளும் வெவ்வேறு; பொது மேடையிலே இருக்கிற முறையை சட்டமன்றத்திலே கடைபிடித்தாலும் சரியாக வராது; சட்டமன்றத்திலே கடைபிடிக்கிற முறையை பொதுக் கூட்டத்திலே கடை





பிடித்தாலும் அது சரியாக வராது; அங்கே விளங்காமல் செய்யாது; ஆனால் இங்கே சட்டமன்றத்திலே இருக்கிற முறையை நீதிமன்றங்களிலே கடைபிடித்தால் நீதிபதி ஏற்றுக் கொள்ளவும் மாட்டார். நீதிமன்றத்திலே கடைபிடிக்கிற முறையை சட்டமன்றத்திலே கொண்டு வந்தால் உரிமைப்பிரச்சினைகள் அதிகமாக வந்தாலும் வரும். இவ்வளவு தலைமைகளுக்கு ஏற்ப, சட்டமன்ற பாங்குக்கு ஏற்ப நிலைமைகள் ஒழுங்காக வேண்டும் என்று எடுத்துச் சொன்னதும் சரிதான். எல்லா உறுப்பினர்களும் சொன்ன கருத்துக்களை தவறு இருப்பதாக நான் கூறவேயில்லை; அவைகளில் இருக்கிற குறைபாடுகளை ஏற்படுத்தித் தரவேண்டிய வசதி, வாய்ப்புகளை பற்றி சிறப்பாக எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். அவைகளுக்கு காரணம் என்னவென்று கேட்டால் இந்த மன்றமே 1920-க்கு முன்னால் அமைக்கப்பட்டு, அப்போதிருந்த அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கொண்டு இந்த மன்றம் நடத்தப்படுவதாக, அதாவது தமிழகம் மட்டுமல்ல 'காம்போசிட் ஸ்டேட்' என்று சொல்லப்படுகிற ஒரு பரந்த 'ராஜதானியை' ஆளுவதற்கு வைக்கப்பட்டிருக்கிற ஒரு சிறு அமைப்பாக இருந்த ஒரு மன்றம். ஆனால் அந்த அமைப்பு அப்படியே இருக்கிறதே தவிர ஆட்சியகம் விரிவடைந்து, விரிவடைந்து உறுப்பினர்கள் எண்ணிக்கை பெருகப் பெருகி, தேவைகள் பெருகப் பெருகி உறுப்பினர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் தொடர்புகள் மிக அதிகமாகி பிரச்சினைகள் அதிகமாக சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகத் தீர்க்கப்படவும் என்ற ஒரு நிலை ஏற்பட்டு அப்படி வளர்ச்சியடைந்த வகையிலே தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்கள் கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள், அந்த கஷ்டங்களை எல்லாம் அரசு நன்றாக உணர்கிறது என்பதையும், குறிப்பிட்டு கூறிக்கொள்கிறேன். அது அத்தனைக்கும் காரணம் நமக்கு இருக்கிற இட நெருக்கடி காரணமாகத் தான் இங்கே மன்ற உறுப்பினர்கள் சொன்ன கஷ்டங்களும், சிரமங்களுக்கும் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. ஆகவே புதியதொரு சட்டமன்ற கட்டிடம் கட்டவேண்டுமென்ற ஒரு தன்மையை நாம் சென்ற ஆண்டே சொன்னோம். அதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஆகவே எவ்வளவு செலவு பட்டாலும் எவ்வளவு வகைகளிலும் ஆனாலும் கூட அதற்கு கூடுமான வரையில் விரைவில் ஒரு முடிவு எடுத்து, இரண்டு அல்லது மூன்று ஆண்டு காலத்திற்குள் புதியதொரு கட்டிடத்தை அமைப்பதற்கு வசதி, வாய்ப்போடு கொண்டு வந்தால் தான் இந்த பிரச்சினையிலே முக்கியமான பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியும். சட்டமன்ற பேரவை, சட்டமன்ற மேலவை கூடுவதற்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியது மாதிரி, எதிர்கட்சி உறுப்பினர்கள், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் கலந்து உரையாடி, பேசி கருத்துக்களை பரிமாறிக் கொள்வதை பார்க்கிற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். ஒரு வகையான சூழ்நிலை இருக்கின்ற நிலை ஏற்படுவதற்கு கூட ஒரு வாய்ப்பு ஏற்படும். இப்போது எதிர்கட்சி உறுப்பினர்கள் ஒரு புறம் ஆளுங்கட்சி

உறுப்பினர்கள் மறுபுறம் சென்றால் ஒருவருக்கொருவர் காண்பதற்கு வசதி ஏற்படுவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை என்று கூறினார்கள். ஆகவே தனிக் கட்டிடம், எல்லோரும் ஒன்றாக சேர்ந்து பழகுவதற்கான அளவிலே புது கட்டிடத்தை நாம் அமைக்க முடியும்.

நூல் நிலையம் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதுவும் முக்கியமான தன்மை தான். நூல் நிலையத்தில், மற்ற மாநில சட்டமன்ற நூல் நிலையங்களில் இருக்கிற நூல்களை விட அதிகமான அளவு நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அதை விட 'ரேர் புக்ஸ்' என்று சொல்லத்தக்க அளவு மிக அருமையான புத்தகங்கள் எல்லாம் நம் நூல் நிலையத்தில் இருக்கின்றன. ஆனால் ஒரே இடத்தில் நூல் நிலையம் இல்லாமல், நான்கு, ஐந்து இடங்களில் பரவலாக வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மாதிரி போய், உட்கார்ந்து நிம்மதியாக படித்து வருகிற அளவிற்கு வசதி வாய்ப்புகள் இல்லை. எனவே இருக்கிற இடத்திலே ஓரளவுக்கு வசதிகளைச் செய்து கொடுத்து இருக்கிறோமே தவிர, உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு உட்கார்ந்து நிம்மதியாகப் படிப்பதற்கு ஏற்ற வாய்ப்பும் வசதியும் இருக்கின்றது என்று சொல்லமுடியாது. ஒரு பெரும் பகுதி புத்தகங்கள், ஏற்கெனவே இதற்கு முன்னால் நடைபெற்ற சட்டமன்ற நிகழ்ச்சிகள் வெள்ளைக்காரர் ஆண்ட காலத்தில் நடைபெற்ற சட்டமன்ற நிகழ்ச்சிகள் எப்படி நடைபெற்றன என்று அறிந்து கொள்ள வேண்டுமென்று பல உறுப்பினர்கள் விரும்புவார்களானால் அதைப்பற்றிய ஏடுகள், அகில இந்திய ஏடுகள் மத்திய அரசு பற்றிய ஏடுகள் ராஜாஜி மண்டபத்திற்குக் கீழே உள்ள ஒரு பெரிய அறையிலே கோடவுனில், கிடங்குகளிலே அவ்வளவு நூல்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே யாரும் போகமுடியாது. இங்கேயும் இரண்டு மூன்று இடங்களிலே வைத்திருக்கிறோம். வராண்டாவிலே வைத்திருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மாதிரி உறுப்பினர்கள் போய் உட்கார்ந்து படிக்கவும் அவர்களுக்கு ஏதேனும் ஐயப்பாடு ஏற்பட்டால் அங்கே இருக்கின்றவர்கள் அதை விளக்கவும் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றி உறுப்பினர்கள் தங்களுக்கு அதுபற்றிய விளக்கங்கள் வேண்டுமென்று கேட்டால் உடனே நூலகத்தைச் சேர்ந்தவர்கள் மேகஜின்ஸிலிருந்தோ அல்லது நாளிதழ்களிலிருந்தோ அல்லது குறிப்பிட்ட புத்தகத்திலிருந்தோ அல்லது லோக் சபா புரீசிடிங்ஸியிலிருந்தோ கொண்டு வந்து தருகின்ற அளவுக்கு உறுப்பினர்களுக்கு உதவி செய்கின்ற அளவுக்கு ஆட்கள் இருந்தால்தான் சட்டமன்ற நடவடிக்கைகள் தெளிவாக நடைபெற முடியும். அதற்கான வழிவகைகளைப் பெற முடியாமல் இருப்பதற்குக் காரணம் புதிய கட்டடம் வருவதற்கு இயலாமல் இருப்பதுதான். மாண்புமிகு உறுப்பினர்கள் கேண்டின் பற்றி பலவித கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். அது உண்மை தான். இங்கே வருகின்றவர்கள் கேண்டின் வசதி பெறமுடியாமல் பட்டினியாக இருந்து முடிந்த பிறகு விடுதிக்குச் சென்று சாப்பிடுகிற சூழ்



நிலை இருக்கிறது. அதையும் அதன் மூலமாகத்தான் பெற முடியும். உறுப்பினர்கள் தங்குவதற்கான நிலைமைகளையும் மற்றவர்கள் அவர்களைக் காணுவதற்கான நிலைமைகளையும் கஷ்டங்களையும் சொன்னார்கள். சட்ட மன்றத்திற்கு வருகிறபோது அரை மணி நேரம், ஒரு மணி நேரம் அமைச்சர்களைப் பார்ப்பதற்கு வசதியிருக்க வேண்டுமென்று சொன்னார்கள். பாராளுமன்றத்திலே ஆங்காங்கே ஒவ்வொரு அறை அமைச்சருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, அந்த அறையிலே பாராளுமன்றம் நடக்கிறபோது உறுப்பினர்கள் அமைச்சர்களைக் காணலாம். அங்கே பாராளுமன்ற உறுப்பினர்களும் சரி, வெளியே இருந்து வருகிறவர்களும் சரி காணுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பாராளுமன்றம் நடக்கிறபோதே அமைச்சர்கள் வெளியே ஒரு மணி நேரம் வந்து பார்த்துவிட்டு உடனே உள்ளே போய் விடுகிற வசதி இருக்கிறது. அதையெல்லாம் மனதிலே வைத்துக் கொண்டுதான் நாம் செய்கிற சூழ்நிலையை வைத்திருக்கிறோம். செலவு கொஞ்சம் கூடினாலும் கூட இன்னும் பல ஆண்டுகளுக்கு பயன்படத்தக்க அளவில் ஒரு நிரந்தரமான கட்டத்தை கட்டவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அந்த எண்ணத்தைத்தான் சென்ற ஆண்டு வெளிப்படுத்தினோம். அப்படி வெளியிட்டதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு ஒரு கடிதத்தை அதற்கான இடத்தை கோட்டைக்குள்ளேயே ஒதுக்கித்தரவேண்டுமென்றும் இங்கே இருந்தால்தான் அதற்கான பாதுகாப்பு இருக்கும், செக்ரடேரியட் பக்கத்தில் இருப்பதால், இது தொலைவிலே போய் விடுமானால் பல சங்கடங்கள் ஏற்படும் என்று நீண்ட கடிதம் ஒன்றை எழுதினார்கள். எழுதியதற்குப் பிறகு நானும் முதலமைச்சர் அவர்களும் டெல்லிக்குச் சென்றுவந்தபோது கூட மாண்புமிகு பிரதமர் அவர்களை நேரடியாகப் பார்த்து இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொன்னோம். ஆகவே அவர்கள் கூட கேட்டார்கள், கோட்டைக்குள்ளே தான் இருக்க வேண்டுமா என்று, கோட்டைக்குள்ளே செக்ரடேரியட் இருப்பதன் காரணமாகத்தான் இருக்கவேண்டியிருக்கிறது, செக்ரடேரியட் கோட்டைக்குள்ளே தான் இருக்கிறது என்று சொன்னவுடனே அவர்களும் விளங்கிக்கொண்டு ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார்கள். அதன்படி ஏற்பாடு செய்து இங்கே இருக்கிற ராணுவத்தினருக்கு அறிவிப்பு செய்து தேவையான இடத்தை ஒதுக்கித் தரும்படியாகவும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்ட இடத்தைத் தந்து மூன்று இடங்கள் சொன்னோம். அதிலே ஒரு குறிப்பிட்ட இடத்தை அவர்கள் தருவதற்கு ஏற்றுக்கொண்டு இங்கே இருக்கின்ற ராணுவ கட்டடத்தை இடிப்பதற்கான செலவை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் ஒரு மாற்றும் இடம் நாம் தரவேண்டும் என்றும் அந்த நிபந்தனையின் பேரில் வேண்டுமானால் இடத்தைத் தரலாம் என்று சொல்லி மத்திய அரசு நமக்கு தருகிறது. இங்கே இருக்கின்ற ராணுவ அதிகாரியும் சட்டமன்றத் துறையினரும் தலைமைச் செயலாளரும் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறார்கள், விரைவிலே அதற்கான இடம் கிடைத்து விடுமானால் அதற்

உறுப்பினர்கள் மறுபுறம் சென்றால் ஒருவருக்கொருவர் காண்பதற்கு வசதி ஏற்படுவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை என்று கூறினார்கள். ஆகவே தனிக் கட்டிடம், எல்லோரும் ஒன்றாக சேர்ந்து பழகுவதற்கான அளவிலே புது கட்டிடத்தை நாம் அமைக்க முடியும்.

நூல் நிலையம் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதுவும் முக்கியமான தன்மை தான். நூல் நிலையத்தில், மற்ற மாநில சட்டமன்ற நூல் நிலையங்களில் இருக்கிற நூல்களை விட அதிகமான அளவு நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அதை விட 'ரேர் புக்ஸ்' என்று சொல்லத்தக்க அளவு மிக அருமையான புத்தகங்கள் எல்லாம் நம் நூல் நிலையத்தில் இருக்கின்றன. ஆனால் ஒரே இடத்தில் நூல் நிலையம் இல்லாமல், நான்கு, ஐந்து இடங்களில் பரவலாக வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மாதிரி போய், உட்கார்ந்து நிம்மதியாக படித்து வருகிற அளவிற்கு வசதி வாய்ப்புகள் இல்லை. எனவே இருக்கிற இடத்திலே ஓரளவுக்கு வசதிகளைச் செய்து கொடுத்து இருக்கிறோமே தவிர, உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு உட்கார்ந்து நிம்மதியாகப் படிப்பதற்கு ஏற்ற வாய்ப்பும் வசதியும் இருக்கின்றது என்று சொல்லமுடியாது. ஒரு பெரும் பகுதி புத்தகங்கள், ஏற்கெனவே இதற்கு முன்னால் நடைபெற்ற சட்டமன்ற நிகழ்ச்சிகள் வெள்ளைக்காரர் ஆண்ட காலத்தில் நடைபெற்ற சட்டமன்ற நிகழ்ச்சிகள் எப்படி நடைபெற்றன என்று அறிந்து கொள்ள வேண்டுமென்று பல உறுப்பினர்கள் விரும்புவார்களானால் அதைப்பற்றிய ஏடுகள், அகில இந்திய ஏடுகள் மத்திய அரசு பற்றிய ஏடுகள் ராஜாஜி மண்டபத்திற்குக் கீழே உள்ள ஒரு பெரிய அறையிலே கோடவுனில், கிடங்குகளிலே அவ்வளவு நூல்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே யாரும் போகமுடியாது. இங்கேயும் இரண்டு மூன்று இடங்களிலே வைத்திருக்கிறோம். வராண்டாவிலே வைத்திருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மாதிரி உறுப்பினர்கள் போய் உட்கார்ந்து படிக்கவும் அவர்களுக்கு ஏதேனும் ஐயப்பாடு ஏற்பட்டால் அங்கே இருக்கின்றவர்கள் அதை விளக்கவும் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றி உறுப்பினர்கள் தங்களுக்கு அதுபற்றிய விளக்கங்கள் வேண்டுமென்று கேட்டால் உடனே நூலகத்தைச் சேர்ந்தவர்கள் மேகஜின்ஸிலிருந்தோ அல்லது நாளிதழ்களிலிருந்தோ அல்லது குறிப்பிட்ட புத்தகத்திலிருந்தோ அல்லது லோக் சபா புரீசிடிங்ஸிலிருந்தோ கொண்டு வந்து தருகின்ற அளவுக்கு உறுப்பினர்களுக்கு உதவி செய்கின்ற அளவுக்கு ஆட்கள் இருந்தால்தான் சட்டமன்ற நடவடிக்கைகள் தெளிவாக நடைபெற முடியும். அதற்கான வழி வகைகளைப் பெற முடியாமல் இருப்பதற்குக் காரணம் புதிய கட்டடம் வருவதற்கு இயலாமல் இருப்பதுதான். மாண்புமிகு உறுப்பினர்கள் கேண்டின் பற்றி பலவித கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். அது உண்மை தான். இங்கே வருகின்றவர்கள் கேண்டின் வசதி பெறமுடியாமல் பட்டினியாக இருந்து முடிந்த பிறகு விடுதிக்குச் சென்று சாப்பிடுகிற சூழ்



நிலை இருக்கிறது. அதையும் அதன் மூலமாகத்தான் பெற முடியும். உறுப்பினர்கள் தங்குவதற்கான நிலமைகளையும் மற்றவர்கள் அவர்களைக் காணுவதற்கான நிலமைகளையும் கஷ்டங்களையும் சொன்னார்கள். சட்ட மன்றத்திற்கு வருகிறபோது அரை மணி நேரம், ஒரு மணி நேரம் அமைச்சர்களைப் பார்ப்பதற்கு வசதியிருக்க வேண்டுமென்று சொன்னார்கள். பாராளுமன்றத்திலே ஆங்காங்கே ஒவ்வொரு அறை அமைச்சருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, அந்த அறையிலே பாராளுமன்றம் நடக்கிறபோது உறுப்பினர்கள் அமைச்சர்களைக் காணலாம். அங்கே பாராளுமன்ற உறுப்பினர்களும் சரி, வெளியே இருந்து வருகிறவர்களும் சரி காணுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பாராளுமன்றம் நடக்கிறபோதே அமைச்சர்கள் வெளியே ஒரு மணி நேரம் வந்து பார்த்துவிட்டு உடனே உள்ளே போய் விடுகிற வசதி இருக்கிறது. அதையெல்லாம் மனதிலே வைத்துக் கொண்டுதான் நாம் செய்கிற சூழ்நிலையை வைத்திருக்கிறோம். செலவு கொஞ்சம் கூடினாலும் கூட இன்னும் பல ஆண்டுகளுக்கு பயன்படத்தக்க அளவில் ஒரு நிரந்தரமான கட்டத்தை கட்டவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அந்த எண்ணத்தைத்தான் சென்ற ஆண்டு வெளிப்படுத்தினோம். அப்படி வெளியிட்டதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு ஒரு கடிதத்தை அதற்கான இடத்தை கோட்டைக்குள்ளேயே ஒதுக்கித்தரவேண்டுமென்றும் இங்கே இருந்தால்தான் அதற்கான பாதுகாப்பு இருக்கும், செக்ரடேரியட் பக்கத்தில் இருப்பதால், இது தொலைவிலே போய் விடுமானால் பல சங்கடங்கள் ஏற்படும் என்று நீண்ட கடிதம் ஒன்றை எழுதினார்கள். எழுதியதற்குப் பிறகு நானும் முதலமைச்சர் அவர்களும் டெல்லிக்குச் சென்றுவந்தபோது கூட மாண்புமிகு பிரதமர் அவர்களை நேரடியாகப் பார்த்து இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொன்னோம். ஆகவே அவர்கள் கூட கேட்டார்கள், கோட்டைக்குள்ளே தான் இருக்க வேண்டுமா என்று, கோட்டைக்குள்ளே செக்ரடேரியட் இருப்பதன் காரணமாகத்தான் இருக்க வேண்டியிருக்கிறது. செக்ரடேரியட் கோட்டைக்குள்ளே தான் இருக்கிறது என்று சொன்னவுடனே அவர்களும் விளங்கிக்கொண்டு ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார்கள். அதன்படி ஏற்பாடு செய்து இங்கே இருக்கிற ராணுவத்தினருக்கு அறிவிப்பு செய்து தேவையான இடத்தை ஒதுக்கித் தரும்படியாகவும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்ட இடத்தைத் தந்து மூன்று இடங்கள் சொன்னோம். அதிலே ஒரு குறிப்பிட்ட இடத்தை அவர்கள் தருவதற்கு ஏற்றுக்கொண்டு இங்கே இருக்கிற ராணுவ கட்டடத்தை இடிப்பதற்கான செலவை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் ஒரு மாற்றும் இடம் நாம் தரவேண்டும் என்றும் அந்த நிபந்தனையின் பேரில் வேண்டுமானால் இடத்தைத் தரலாம் என்று சொல்லி மத்திய அரசு நமக்கு தருகிறது. இங்கே இருக்கின்ற ராணுவ அதிகாரியும் சட்டமன்றத் துறையினரும் தலைமைச் செயலாளரும் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறார்கள், விரைவிலே அதற்கான இடம் கிடைத்து விடுமானால் அதற்

ஆக தனி அறை அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் கட்டடத்தை எப்படிக் கட்டவேண்டுமென்பதைப்பற்றியெல்லாம் ஆராய்வதற்காக, இது வந்து முடிந்தால் கட்டடம் எவ்வளவுக்கெவ்வளவு விரைவிலே பணிகளை ஆற்ற முடியுமோ அந்த அளவுக்கு ஆற்றி இந்தத் தொடருக்குள்ளாகவே அதிலே குடியேறுகிற அளவுக்கு ஆக்குவோமானால் மிக நல்லது என்ற எண்ணம் இருக்கிறது. இதோடு சேர்த்தே பின்னொன்றையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுடைய மதிப்பு காப்பாற்றப்பட வேண்டுமென்பதிலே அரசுக்கு அக்கறை இருக்கிறது. ஆனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் மதிப்பு காப்பாற்றப்படுகிற அளவுக்கு சட்டமன்ற உறுப்பினர்களின் மதிப்பு காப்பாற்றப்படவில்லை என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். எப்படி காப்பாற்றப்படவேண்டுமென்ற நிலை இருக்கிறதோ, காப்பாற்றப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. இப்போது இருக்கின்ற விடுதி அதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது என்று எல்லோரும் எடுத்துத் தெரிவித்தார்கள். ஆகவே டெல்லியிலும் பிற இடங்களிலும் அமைந்துள்ளதைப்போல ஒவ்வொரு உறுப்பினர்க்கும் தனித்தனி வீடு என்ற அளவில் ஒரு 6 வீடுகள் கொண்ட தனித் தனி பிளாட்டுகளாக அமைத்து புதிய சட்டமன்றக் கட்டத்தோடு இதையும் சேர்த்தே ஒரே வேளையாக எடுத்துக்கொண்டு செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அப்படி அதற்கு ஒரு வழியை ஏற்படுத்தினால் அவர் படுக்கை, வீடுபாடு, சமையல்பாடு சாப்பாடு பாடு என்று அவரவர்களுக்குச் சொல்லிவிட்டால் இவ்வளவு தொல்லைகளும் மற்ற வசதிகளும் வராது, அவர்களுக்கே ஒப்படைத்து விடலாம்.

[பிற்பகல் 12.50]

அவர்களைப் பார்க்க வருகின்ற தொகுதி மக்களும், மற்றவர்களும் அவர்களை நேரடியாகப் போய்ப் பார்க்க, அவர்களுக்கு இடம் கொடுக்க, வசதி வாய்ப்புகளைச் செய்வதற்கான நிலை ஆகிய வசதிகள் ஏற்படும்.

எவ்வளவோ செலவு செய்கின்ற இந்த அரசு, 1,139 கோடிக்கு நீங்கள் ஒப்புதலை செய்கின்றீர்கள்; ஆனால் இந்தச் சட்டமன்றத்திற்கு நாம் செலவழிப்பது 96 இலட்சம் ரூபாய்கள்தான். ஆனால் இவ்வளவு செலவாகிற அரசு [illegible] தருகின்றவர்களுக்குக் கொஞ்சம் கூடுதல் செலவானாலும் பாவமில்லை என்ற எண்ணம் கொண்டவன்தான் நான். அதற்கான அளவிற்கு இரண்டையும் ஒரே நடைமுறையில் எடுத்துச் செய்யலாமா என்ற எண்ணத்தில், அதற்கான இடத்தையும் பார்த்து, விரைவிலே அதற்கான தன்மைகளைச் செய்யவேண்டும் என்பதுதான். இங்கே சட்டமன்றப் பேரவை மேலவை உறுப்பினர்களுக்குச் சேர்த்து அதற்கான வசதி வாய்ப்புகளை விரைவிலே செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அவ்வாறாயின் என்னென்ன வசதி வாய்ப்புகளைக் கூடுதலாகச் செய்ய முடியுமோ அவைகளைச் செய்வதற்கு நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம்.



உறுப்பினர்களுடைய தொலைபேசி பற்றிய தன்மைகளையெல்லாம் சொன்னார்கள். இப்பொழுது 25 உறுப்பினர்கள் வெளி இடத்திற்கு, நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம். அந்த அளவிற்கு வாய்ப்பு வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 25 பேர்களுக்கு மேல் ஒரே சமயத்தில் பேசத் தொடங்கினால் முடியாது. ஆனால் உள்ளேயிருக்கின்ற தொடர்பை வைத்துக் கொண்டு, 300 இணைப்பு வைத்திருக்கிறோம், அங்கே தொடர்பு கொண்டு தொடர்பு கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. இருந்தாலும்கூட, இதனுடைய தன்மையை இந்த ஆண்டு இன்னும் எந்த அளவிற்குக் கூட்டலாம் என்று கூட்டி, அதிகமான அளவிற்கு வசதி வாய்ப்பைத் தந்து, நேரடியாகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு வசதி செய்வதற்கு, தொலைபேசி இலாக்கா எந்த அளவிற்கு ஒத்து வருகிறது என்று பார்த்து, அவர்களோடு சேர்ந்து அதையும் செய்வதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்கிறோம்.

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியைப் பொறுத்தவரையில் சிலபல கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்ததற்கான காரணமே உறுப்பினர்களுடைய கோரிக்கைகளின் பேரில்தானே தவிர, மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் தாங்களாகக் கொண்டு வரவில்லை. உறுப்பினர்களே சிலபேர் தங்களுக்கு வசதியில்லை, நிம்மதியாகப் படிக்க முடியவில்லை; உலாவ முடியவில்லை; அங்கே எந்தக் காரியமும் செய்ய முடியவில்லை; ஒரே கூட்டமாக வருகிறது; டிஸ்டர்பன்ஸ் அதிகமாக இருக்கிறது; திருட்டுப் போகிறது; எந்தச் சாமானையும் வைத்துவிட்டு வர முடியவில்லை என்று இப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் சொன்னதற்குப் பிறகுதான், சர்வகட்சித் தலைவர்களையும் வைத்து மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் ஒரு விதமான ஏற்பாட்டைச் செய்து, ஒரு கட்டுதிட்டத்தை ஏற்பாடு செய்தார்கள். அந்தக் கட்டுதிட்டத்திற்கு உறுப்பினர்கள் தான் மதிப்பு தர வேண்டும்; மற்றவர்களுக்கு எடுத்துத் தெரிவிக்க வேண்டும். ஏற்கனவே அனுபவித்த உரிமையில்லையே என்று சில பேர் ஏங்கினாலும்கூட, வேறு பல மாநிலங்களிலே—இப்பொழுது கேரளாவை எடுத்துக்கொண்டால் கேரள சட்டமன்ற உறுப்பினருடைய அறைக்குள்ளே வேறு யாரும் போகவே முடியாது; வேறு சில மாநிலங்களில் கண்டிப்பாக நிறைவேற்ற முடிகிறது. குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு அந்த வளாகத்திற்குள்ளேயே நுழைய முடியாத அளவிற்குப் பல இடங்களிலே வைத்திருக்க முடிகிறது; அங்கேயெல்லாம் முடியும்பொழுது இங்கே முடியாது என்று சொன்னால் சரியாக வராது. ஆகவே இதற்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு தருவார்களேயானால் நாளாவட்டத்தில் உறுப்பினர்களுக்கு மதிப்பு ஏற்படும். அதை ஏற்படுத்த வேண்டும். ஆனால் அதிலே ஏதாவது சங்கடங்கள் இருக்குமேயானால் அவர்கள் சொன்னதுமாதிரி வருகின்றவர்கள் மரத்தடியில் நிற்கின்றார்கள், வேறு இடங்களிலே நிற்கின்றார்

கள் என்ற அளவிற்கான சூழ்நிலைகள் இல்லாமல், அதற்கான ஏற்பாட்டை விரைவிலே இந்தத் துறையின் மூலமாகக் கவனித்து, அவர்கள் வந்து தங்கியிருந்து, தொடர்பு கொண்டு, உறுப்பினர்களுடைய அறைக்குப் போகிற அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்வதற்கு இந்தக் குறுகிய காலத்தில் முடியாததன் காரணத்தினால் அது வரவில்லை. அடுத்த தொடர் கூடுவதற்குள்ளாக என்ன ஏற்பாடு செய்யலாம் என்று கண்டறிந்து, வந்து பார்க்கின்றவர்களை அவமதிக்கக்கூடாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்; அவர்கள் மரத்தடியிலும், வெளியிலும், வேறு இடங்களிலும் நிற்கிறார்கள் என்ற நிலைக்கு இடமில்லாமல் அந்த வசதிவாய்ப்புக்களைச் செய்வதற்கும், ஒத்துழைப்பு தருவதற்கும் முயற்சி செய்யலாம்.

ஜப்பான் சட்டமன்றத்தைப் பற்றிக்கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய நாட்டினுடைய ஜனநாயக முறைப்படி, உறுப்பினர்களோ, அமைச்சர்களோ அவைத் தலைவரைப் பார்த்துத்தான் பேச வேண்டுமென்ற முறையைத்தான் வைத்திருக்கிறோம். அவைத் தலைவர்தான் தலைமை தாங்குகிறார்; மற்றவர்களெல்லாம் ஒருநிலையில் இருக்கிறார்கள் என்ற முறை. ஆனால் அவைத் தலைவருக்கு இரண்டு பக்கமும் அமைச்சர்களைக் கொண்டு போய் வைத்து விட்டு உறுப்பினர்களைப் பார்த்து அமைச்சர்கள் பேசுவது என்று வருகின்றபொழுது, அமைச்சர்கள் ஒரு பக்கமும், உறுப்பினர்கள் இன்னொரு பக்கமும் என்று ஆகிவிடும். நம்முடைய நாட்டு மரபுக்கு ஏற்றபடிதான் வைத்திருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட முறைகள் இல்லாமல், பாராளுமன்ற முறையில், வேறு பல இடங்களில் இருப்பதுமாதிரி செமி சர்க்கிள் என்று வைப்போமேயானால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

இப்பொழுது 6 பேர், 7 பேர்களை ஒரேயிடத்தில் அடைக்கும்பொழுது ஒவ்வொருவரையும் தட்டித் தட்டி உள்ளே வந்து உட்காருகிறார்கள். புதிதாகக் கட்டும்பொழுது, இரண்டே இரண்டு பேருக்கான சீட்டாக வைக்கும்பொழுது இந்தப் பக்கம் ஒருவரும், அந்தப்பக்கம் ஒருவருமாக உட்காருகின்ற அளவிற்கு நாம் ஏற்பாட்டைச் செய்து விடுவோமேயானால் இடைஞ்சல் வராது.

அடுத்து, ஒலிபெருக்கிகளைக் கூடுதலாக்க இப்பொழுது வாய்ப்பில்லாத காரணத்தினால் இந்தத் தொடர் கூட்டத்தில் வைக்க முடியவில்லை. இந்தப் பகுதிக்கும், அந்தப் பகுதிக்கும் இன்னும் மூன்று நான்கு, இங்கே வைத்திருப்பதைப்போல, இது கொக்குத் தலை ஒலிபெருக்கி— Goo e head mike என்கிறார்கள். ஆகவே, அதுமாதிரி ஒலிபெருக்கியை இங்கே புதிதாகக் கட்டிடம் கட்டி முடிக்கின்ற வரையில் இந்த ஏற்பாடுகளைச் செய்யலாம் என்பதற்கான முயற்சிகளிலே நாம் ஈடுபட்டு வருகிறோம்.



சட்டமன்றம் கூடுகின்ற நாட்களைப் பொறுத்தவரையிலேயும், கூடுதலாக ஆக வேண்டுமென்று உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஆண்டுக்காண்டு அதனுடைய அவசியத்தைக் கருதி, தேவையைக் கருதி நாம் அதனுடைய நாட்களைக் கூட்டிக்கொண்டுதான் வருகின்றோம். 1962-லே 40 நாட்கள்; 1966-லே 50 நாட்கள்; இப்படி 50-க்கும் 40-க்கும் இடையிலேதான் 1962-லேயிருந்து 1966 வரை சட்டமன்றம் நடந்தது. 42-லிருந்து 55 நாட்களுக்குள்தான் 1967-லிருந்து 1970-வரையிலும் சட்டமன்றம் நடந்தது. 1971-ல், 63 நாட்கள், 1972-ல் 59 நாட்கள் 1973-ல் 66 நாட்கள், 1974-ல் 73 நாட்கள், 1975-ல் 63 நாட்கள். பிறகு, 1977-லே 44 நாட்கள், 1978-லே 57 நாட்கள், 1979-லே 71 நாட்கள். ஆனால், இந்த அண்டு இதுவரையிலும், நாம் கூடியிருப்பது 67 நாட்கள் இந்த 14-ஆம் தேதியோடு முடிந்துவிடுகிறது. இந்த ஆண்டு, கிட்டத்தட்ட, இன்னும் இரண்டு தடவையாவது கூட வேண்டி வரும் என்று நான் கருதுகிறேன். இன்னொரு 85 அல்லது 90 நாட்கள் இந்த ஆண்டு கூட வேண்டி வரும். ஆகவே, வேலை எவ்வளவு இருக்கிறதோ, மன்றத்தினுடைய பணிகள் எவ்வளவு இருக்கிறதோ, விவாதிக்க வேண்டிய அவசியம் எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவுக்கு நாட்களை ஒதுக்குவது பற்றி எந்த மறுப்பும் இல்லை. ஆனால், இவ்வளவு நாள் கூட வேண்டுமென்று வகுத்துக்கொள்வதற்கு இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது மாதிரி 3 கூட்டம் அல்லது, 4 கூட்டங்களாகப் பிரித்துக்கொண்டு, ஒரே தடவையாகச் சேர்ந்து, இரண்டு மாதம், இரண்டரை மாதம் வைக்காமல், ஆளுநர் உரையின்மீது விவாதம் வைத்து, பட்ஜெட்டுக்குத் தனியாக கூட்டம் வைத்து, அதற்குப் பிறகு ஒரு தடவை, அதற்குப் பிறகு ஒரு தடவை என்று 4 அல்லது 3 கூட்டங்களாகப் பிரிக்கலாம் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு எதிர்பாராத நிலைமை காரணமாக காலந்தாழ்ந்து விட்டதன் காரணமாக இந்த நெருக்கடி ஏற்பட்டதே தவிர, அடுத்த ஆண்டிலேயிருந்து அதைச் செய்யலாம்.

இந்த அவையையும், மேலவையையும் அடுத்த தொடர் கூட்டத்திற்குள்ளாக ஏர்-கண்டிஷன் செய்வதற்கான முயற்சிகளையும் அரசு எடுத்துக் கொண்டிருக்கிறதென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். புதிய கட்டிடம் வருகிற வரையில் காத்துக் கொண்டிருக்க முடியாது. ரூ. 20, 25 இலட்சம் இரண்டுக்கும் ஆகும் என்றார்கள். ஆனாலுங்கூட இருந்து நிம்மதியாக, மாலையிலும், மத்தியானமும் செய்ய வேண்டிய வேலைகள் இருப்பதன் காரணமாக, இந்த மண்டபத்தையே ஏர் கண்டிஷன் செய்வதன் மூலமாக, இங்குள்ள ஃபான்களை எல்லாம் கூட எடுத்துவிடலாம். அவையை நடத்தும்போது, இறைச்சல்கள் வராமல், நாம் தெளிவாகப் பேச்சைக் கேட்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அதற்கான நடவடிக்கையை இந்த அரசு முறைப்படி மேற்கொள்ளும் என்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 மே 9

மேலும், பல்வேறு வசதி, வாய்ப்புகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பல வகைகளிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விடுதியைப் பொறுத்து, அதனுடைய தன்மையைப் பொறுத்து, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற வசதி, வாய்ப்புகளைப் பொறுத்தெல்லாம், எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலுங்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் வசதி வாய்ப்புகளைப் பெருக்க வேண்டுமென்று சொல்கிறபொழுதெல்லாம், நிதிநிலைமை குறுக்கிடுகிறது. ஆனால், நிதிநிலைமை வருகிறபொழுது, மற்றவர்களுக்கெல்லாம் சேர்த்து நாம் பார்த்துக்கொண்டு வருகிறபொழுது, கூடுமான வரையில் நிதியினுடைய அடிப்படையில் செய்து வருகின்றோம், அந்த வகையில் பார்க்கும்போது, பிற மாநிலங்கள், மற்றவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கே, மாண்புமிகு உறுப்பினர்கள் 4, 5 மாநிலங்களுக்கு மேல் குறைவாகத்தான் வாங்குகிறர்ர்கள். 4, 5 மாநிலங்களுக்கு மேல் நம்மை விடக் கூடுதலாக வாங்குகிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய பணிகளைச் செம்மையாகச் செய்வதற்கு வசதி வாய்ப்புகளைப் பெருக்கவேண்டுமென்ற கருத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது. இப்பொழுது நேரம் சரியாக இல்லாததன் காரணமாக, பின்னால், அதற்கான சில வகைகளிலே நிலைமைகளை ஆராய்ந்து செய்யவேண்டுமென்றாலுங்கூட, ரூ. , 39 கோடி ஒதுக்கிய உங்களுக்கு ஏதேனும் தராமல் போனால் அது நியாயமாக இருக்காதே என்று கருதி, ஏதேனும் தர வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது என்ற காரணத்தினாலே, இப்பொழுது ரெயில்வே கூப்பன் ரூ. 2,000 என்று இருப்பதை மே 1 ஆம் தேதியிலிருந்து ரூ. 2,500 அளவுக்குத் தரப்பட இருக்கிறது. கூப்பன் தந்து, அதைப் பயன்படுத்தி, திருப்பி வாங்க முடியவில்லையென்பதற்கு, அந்தக் கூப்பன் கொடுத்து, பயன்படுத்தப்படாமல் இருந்தால், குறிப்பிட்ட அளவு 15 சதவீதத்திலிருந்து கொடுக்கிற நோத்திலிருந்து அவர்கள் கழிக்கிறார்கள், ஆனால், ஒவ்வொன்றாகப் பிரித்து, ஒட்டுமொத்தமாகக் கொடுக்கின்ற முறையை வைத்திருக்கிறோம். அதற்கென்று தனித் தன்மைகள் இருப்பதன் காரணமாக, அவர்கள் 0%, 15% கழித்தாலும், நாம் 10% கழிக்க வேண்டி இருக்கும். ஆகவே, அதைக் கழித்துக் கொண்டு, 70, 75 தவீதத்தைத் திருப்பிக் கூப்பனாகவே, உறுப்பினர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்வது என்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

உறுப்பினர்களுக்கு ஏற்கனவே இருக்கிற அடிப்படை சம்பளம் ரூ 250 அப்படியே இருக்கிறது. காம்பன்சேட்டரி அலவன்ஸ் ரூ. 350 கொடுத்ததோடு, ரூ. 50 சேர்த்து, ரூ. 400 மே 1 ஆம் தேதியிலிருந்து தரப்படுகிறது.

தொலைபேசிக் கட்டணம் ரூ. 150 என்று இருந்ததை ரூ. 100 சேர்த்து, ரூ. 250 இப்பொழுது தரப்படுகிறது. ஆகவே, கூடுதலாக ரூ. 150 தருகிறேன். வறட்சி நிலையைப் பொறுத்து இதை ஏற்றுக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு, ஆராய்ந்து, அடுத்த கூட்டத்திலே, நிலைமை சீர்படுமானால், வேறுபல நிலைமைகளைக் கண்டறிந்து செய்வேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 மே 9]

நான் உங்களிடத்திலே கேட்கலாம் என்று தான் இருநதேன், வறட்சி ஏராளமாக இருப்பதாலே, நன்கொடை தருவீர்களா என்று. இருந்தாலும் கேட்டதற்குக் கொடுக்காமல் இருந்தால்,

ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று

என்று வந்து விடுமே என்று கருதி, தானம் கொடுப்பது என்ற அளவு, இந்தத் தொலைபேசிக் கட்டணம் மே 1 ஆம் தேதியிலிருந்து ரூ. 150/-லிருந்து, ரூ. 250 ஆகிறது. காம்பன் சேட்டரி அலவன்ஸ் ரூ. 350 ரூ. 400/ ஆக ஆகிறது. அதே மாதிரி, ரூ, 2,000 ஆக இருந்த கூப்பன், ரூ. 2,500/ ஆக ஆகிறது. கூப்பன் பயன்படுத்தப்படாமல் இருந்தால், அதைத் திருப்பிக் கொடுக்கிற வாய்ப்பும் வசதியும் ஏற்படுகிறது என்பதை எடுத்துக்கூறி, மற்றவைகள் நேரம் ஏற்படும்போதும், வசதி ஏற்படும்போதும் செய்யப்படும் என்று தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**மானியக் கோரிக்கை எண் 7— மாநில சட்டமன்றம்**

திருவாளர்கள் கே. எம். தங்கமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி —

''மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ், ரூ. 93,84.000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 8—தேர்தல்கள்**

திருவாளர்கள் கே. எம். தங்கமணி, கே. ஆர். சுந்தரம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி ''மானியக் கோரிக்கை எண் 8— தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 26,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்

[1981 மே 9

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(உ) கோரிக்கை எண் 42 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ், ரூ. 30,43,34,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஊ) கோரிக்கை எண் 43 பல்வகை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 43 பல்வகை என்ற தலைப்பின் கீழ், ரூ. 69,61,63,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது

(எ) கோரிக்கை எண் 55 பல்வகை மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 55 பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ், ரூ. 11,91,50,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

(ஏ) கோரிக்கை எண் 56 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—



1981 மே 9]

"மானியக் கோரிக்கை எண் 56, மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,55,75,06,000 -க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

1. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

2. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஆ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு. 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவையின் முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. தகவல் கோரல்

கள்ளுக்கடைகள் திறப்பை சில மாதங்கள் ஒத்திவைத்தல்

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் பலமுறை சொனனோம், இந்த கள்ளு சாராயக் கடைகளைத் திறக்க வேண்டாம், கொஞ்சம் தள்ளி வையுங்கள் என்று சொன்னோம். அதையும் கேட்காமல் நம்முடைய அமைச்சரவை கொண்டு வந்தது. இப்போது அதைக் கொஞ்சம் நிதானமாகச் செய்யலாம் அவசரக் கோலமாக அந்தச் சட்டத்தினைக் கொண்டு வருவோமானால், அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடிய வருமானம் கிடைக்காது. ஆகையினாலே இந்த ஒரு மாதம் 2 மாதம் தள்ளிப் போடவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இதற்கு ஏதாவது வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே இந்த மன்றத்திலே இருப்பவர்கள் எல்லாம் தீர்மானம் செய்து இதைத் திறப்பதாகவும், சட்டத்தைத் தளர்த்தவில்லை என்றும் அதில் திருத்தம் என்றுதான் சொல்லி இருக்கிறேன். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறபோது அதை நாங்கள் விரைவுபடுத்துகிறோம் என்று சொன்னார்கள். அப்படி விரைவு படுத்துகிறபோது அரசுக்கு வருகிற வருமானம் தேவையான அளவுக்கு வராது என்று சொல்லி இருக்கிறார்கள். எனக்குக்கூட பலர் அவ்விதமாக எழுதி இருக்கிறார்கள். இதிலே மிகவும் அனுபவம் கொண்டவர்கள் பலர் கடிதம் எழுதி இருக்கிறார்கள். சொல்லப்போனால், உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். தஞ்சாவூர் பரிசுத்த நாடார் — நான் சிறிய பையனாக இருந்த நேரத்தில் இருந்து அறிவேன் — அவர் தஞ்சாவூரில் இருந்து அறந்தாங்கி வரை கடை எடுப்பார், மற்றொரு பக்கம் கும்பகோணம் வரை கடை எடுப்பார். அப்படிப் பட்டவர்கள் எல்லாம் இன்றைக்குப் பிரபரேஷன் ஆப் டைம் போதாது. பிரபரேஷன் டைம் இல்லாததால் அரசுக்கு வர வேண்டிய வருமானம் வராது, நீங்கள் ஏலம் போடுவதைத் தள்ளிப்போட வேண்டும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். இப்படி பாவலாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு இருப்பதால், அதை நாங்கள் யோசித்து, இன்றைக்கு 1-6-81 அன்று கடைகளைத் திறக்கலாம் என்று தீர்மானம் போட்டு, நோட்டிபிகேஷன் கொடுக்கப்பட்டு இருப்பதை — 1-6-81 என்று சொன்னால் இன்னும் 20 நாள் தான் இருக்கிறது — அந்த நேரம் போதாது என்பதை அரசு ஏற்றுக்கொண்டு — அந்த 1-6-81 என்பதை 1-7-81 என்று மாற்ற முடிவு செய்துள்ளோம். இந்த வகையில் செய்தால் பிரபரேஷன் ஆப் டைம் அதிகம் கிடைக்கும். ஏலம் அதிகம் போகும். 12ம் தேதி ஏலம் என்றால், இன்னும் விளம்பரம் போடவில்லை. இன்று 9 ம் தேதி விளம்பரம் போட்டாலும், ஏலம் எடுக்க அதிகம் பேர் வரமாட்டார்கள். அரசுக்கு அதிகமாக வருமானம் வராது. ஆகவே, விளம்பரம் செய்ய 10 நாள் எடுத்துக் கொண்டு, ஏலம் போடுவதை 12 ம் தேதி என்பதை 25ம் தேதி என்றும் திருத்தி, கடைகள் ஆரம்பிப்பது 1-6-81 என்பதற்கு பதிலாக 1-7-81 என்று திருத்தி, இது எல்லோருக்கும் உதவிகரமாக இருக்கும் என்று இந்த அரசு கருதுகிறது என்று சொல்லி, இந்த வகையில் அரசின் முடிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன், முடிவுற்று, 11.5.1981 (திங்கட்கிழமை) காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

198. கோரிக்கை எண். 8 — தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

199. கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

200. கோரிக்கை எண் 43—பல்வகை கடல்கடந்த நாடுகளிலிருந்து வந்த இந்திய அகதிகளுக்கும் குடி பெயர்ந்தோர்களுக்கும் துயர் தணிப்பும் புதுவாழ்வும் (தமிழ், ஆங்கிலம்).

201. மறுவாழ்வுத் துறையின் 1981—82 ஆம் ஆண்டிற்கான சாதனை வரவு-செலவுத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

202. கோரிக்கை எண்கள், 43 மற்றும் 55— பல்வகை— தூத்துக்குடி அனல்மின் உற்பத்தித் திட்டம் பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

203. கோரிக்கை எண் 55—பல்வகை —மூலதனச் செலவு பற்றிய கொள்கை அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

204. கோரிக்கை எண் 55—க்கான துணை வெளியீடு பொதுச் சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குதலுக்கான முதலீடு 1981—82 (தமிழ், ஆங்கிலம்).

205. கோரிக்கை எண் 56— மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

திங்கட்கிழமை, 1981, மே 11.

சித்திரை 29, துன்மதி, திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'' இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.''

அசைவற்ற தெளிந்த அறிவினையுடையவர் துன்பத்தில் சிக்குண்டாலும் அத்துன்பத்தைத் தீர்ப்பதற்காக இழிவான செயல்களைச் செய்யமாட்டார்.

**1. வினாக்கள்–விடைகள்—**

**உடுக்குறியிட்ட வினாக்கள்.**

**மத்திய அரசு இம் மாநிலத் திட்டங்களுக்கென ஒதுக்கிய தொகை.**

***வினா எண் 1047—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1977-1978, 1978-1979, 1979-1980ஆம் ஆண்டுகளில் மத்திய அரசு இம்மாநிலத் திட்டங்களுக்கென ஒதுக்கிய தொகைகளில் எந்தெந்த இனங்களில் எவ்வளவு ரூபாய் செலவிடப்படாமல் மத்திய அரசுக்கு திரும்ப அளிக்கப் பட்டது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 1977-78, 1978-79, 1979-80 ஆம் ஆண்டுகளில் மத்திய அரசு இம்மாநிலத் திட்டங் களுக்கென ஒதுக்கிய தொகைகள் முழுவதும் கிடைக்கப்பெற்று பயன்படுத்தப்பட்டு விட்டன. ஆகவே எந்த தொகையும் செலவிடப்படாமல் மத்திய அரசுக்கு திரும்ப அளிக்கப்பட வில்லை.

**பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை அரசு விடுமுறையாக அறிவிக்கும் திட்டம்.**

***வினா எண் 1048— திரு. மி. வின்செண்ட் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை அரசு விடுமுறையாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. மி. வின்சென்ட்:** தலைவரவர்களே, நாட்டுத் தலைவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு, இந்திய நாட்டில் பிற மாநிலங் களில் வேறு எந்த தலைவர்களுக்காவது விடுமுறை வழங்கப் பட்டுள்ளதா? எந்த எந்த மாநிலங்களில் விடுமுறை விடப்பட்டி ருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்;** தலைவரவர்களே, நாட்டுத் தலைவர்களுக்கு வேறு மாநிலங்களில் எந்த எந்த தலைவர்களுக்கு விடுமுறை விட்டிருக்கிறார்கள் என்று குறிப்பு இந்த மாநில அரசைப் பொறுத்தமட்டில் இல்லை. நம்முடைய மாநிலத்தில் திருவள்ளுவர் பிறந்தநாளை விடுமுறை விட்டு, கொண்டாடுகிறோம். அதைப் போல அண்ணல் காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2-ம் நாளை அரசாங்க விடுமுறை நாளாகக் கொண்டாடுகிறோம்.

**திரு. மி. வின்சென்ட்:** தலைவரவர்களே, தாழ்ந்து கிடந்த தமிழகத்தை தலை நிமிரச் செய்த அந்த அண்ணாவின் திருவுருவப் படத்தை அனைத்து அரசு அலுவலகங்களிலும் வைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, யார், யார் படங்களை நாம் வைக்கலாம் என்ற குறிப்புகள் ஏற்கெனவே அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே அறிஞர் அண்ணாவின் படமும் இடம் பெற்றிருக்கிறது.

**திரு. கோவைத்தம்பி :** தலைவரவர்களே, அண்ணா பிறந்த நாள் அன்று மட்டும் விடுமுறை விட்டு விட்டு, மற்ற ஒரு நாள் விடுமுறை நாளாக வருகின்ற ஏதாவது ஒரு சனிக்கிழமை பணி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவை அரசு கொண்டாடுகிறது. தமிழ்நாட்டுக்குப் பெருமையும் புகழும் சேர்த்துத்தந்த தலைவர்களுக்கு பிறந்த நாள் விழா கொண்டாடப் படுகிறது. ஆனால் விடுமுறை விடுவது என்பது அண்ணல் காந்தியடிகள் ஒருவருக்கு மட்டுமே ஒருநாள் விடுமுறை விடப் படுகிறது. ஏற்கெனவே பல்வேறு வகையிலும் 20 நாள் விடுமுறையாக அமைந்துவிட்டது. மேற்கொண்டும் விடுமுறை விடுவதாக இல்லை. அறிஞர் அண்ணா, பெரும் தலைவர் காமராஜ் போன்றவர்கள் உழைக்க வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர ஓய்வு பெறவேண்டுமென்று அவர்கள் சொல்லவே இல்லை. அவர்களுக்கெல்லாம் பெருமை தேடி தருகின்ற வகையில் உழைத்து பணியாற்றினால்தான் பெருமை தருவதாக இருக்கும்.

**திரு. ஆர். மணிமாறன் :** தலைவரவர்களே, அறிஞர் அண்ணா அவர்களுடைய திருவுருவப் படம் அரசு அலுவலகங்களிலே இருத்தல வேண்டுமென்று அரசு அறிவித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படி இருந்த போதிலும் கூட பல்வேறு அலுவலகங்களில் அண்ணா



அவர்களுடைய படம் இல்லாத நிலை இன்றும் இருந்து வருகிறது. அதை எடுத்து அறிவித்தால், அரசு அலுவலகங்களில் அந்தப் படங்களைக் கண்டிப்பாக மாட்டவேண்டுமென்ற விதி முறையை அந்த அலுவலகங்களுக்கு அரசு சார்பிலே தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, படத்தை கட்டாயம் மாட்டியே தீரவேண்டுமென்று உத்தரவு இல்லை. அண்ணல் காந்தி அடிகள், பண்டித ஜவஹர்லால் நேரு, முன்னாள் முதலமைச்சர்களாக இருந்த பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜ் ஆகியோர் படங்களும், திருவள்ளுவர் படமும் அரசு அலுவலகங்களில் வைக்கப்படுவதில் ஆட்சேபணை இல்லை என்று உத்தரவில் இருக்கிறதே தவிர கட்டாயம் வைத்துத் தீரவேண்டும் என்று இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேல் என். ஜி. ஓக்களுக்குக் கொடுக்கும் சலுகைகளையும் சம்பள உயர்வையும் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவில் பிறந்த தினத்தை முன்னிட்டு அறிவிக்கப் படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்பொழுதுதான் என்றால், ஆண்டுக்கு ஒரு முறைதான் சொல்லவேண்டி வரும். அதுவரையில் அவர்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டி வரும். அவர்களையெல்லாம் காத்துக் கொண்டிருக்கும்படியான பணியைச் செய்வதிலே அவர் வெற்றி பெறுவாரேயானால், அப்படி ஒரு முடிவைக் கூட நாம் எடுக்கலாம். ஆனால் அந்தச் சலுகைகளையும், சம்பள உயர்வையும், அவ்வப்போது எடுக்க வேண்டிய முடிவுகளாக இருப்பதால், குறிப்பிட்ட நாளிலே அதற்கென ஒதுக்கித் தர இயலாது என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன்:** தலைவரவர்களே, நம் நாட்டினுடைய தேசீய விடுதலை இயக்கத்தில் ஒரு ஆண்டில் ஒரு வாரத்தை எடுத்து அந்த வாரத்திலே, ஒவ்வொரு நாட்களுக்கும் ஒரு விதமான குணத்தை ஏற்படுத்தி அதாவது சமுதாய சமதர்மத்திற்கு ஜாதி மத ஒழிப்பிற்கு, வகுப்பு வாத ஒற்றுமைக்கு, இவ்வாறு சில விதமான வாரங்களைக் கொண்டாடுகிற முறையிலே தமிழக அரசு ஒரு வாரத்தை ஏற்படுத்தி, தேசீயத் தலைவர்களுடைய சீரிய கொள்கைகளை அமுல் நடத்தப் பிரச்சாரம் செய்யக்கூடிய வகையில் ஒரு வாரத்தை உருவாக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற அத்தகைய எண்ணம் இல்லை. இப்பொழுது தமிழக அரசைப் பொறுத்தவரையில் ஞாயிற்றுக் கிழமை நீங்கலாக 2 வது சனிக்கிழமை விடுமுறை விடப்படுகிறது. ஆக மொத்தம் 60 நாட்கள் அந்த வகையில் அரசு விடுமுறைகளாக வருகின்றன. மேற்கொண்டும் 20 நாட்கள் விசேஷ தினங்களை முன்னிட்டு விடப்படுகிறது. ஜனவரி முதல்நாள்: பொங்கல்

திருநாள், திருவள்ளுவர் நாள், உழவர் திருநாள், குடியரசு நாள், பக்ரீத் பண்டிகை, முகரம், தெலுங்கு புத்தாண்டு நாள், தமிழ் புத்தாண்டு நாள், பெரிய வெள்ளிக் கிழமை, மே தினம், சுதந்தர தின நாள், விநாயகர் சதுர்த்தி, காந்தி ஜெயந்தி, ஆயுத பூஜை, தீபாவளி, ரம்சான், கிறிஸ்து பிறந்த நாள் போன்ற காரணங்களுக்காக விடப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று, இந்த தினங்களில் தலைவர்களுடைய பெயர்களில் யாருடைய பெயரையாவது ஏற்று அந்த நாட்களாக அவர்களுடைய நினைவில் சமதர்ம நாள் என்றோ, ஜனநாயக நாள் என்றோ, மக்கள் நலம்பெறும் நாள் என்றோ, அல்லது நாம் இப்போது ஏற்படுத்தியிருப்பதைப் போல காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம மக்கள் நலம் பெறுகிற வாரம் என்று கொண்டாடுவதைப் போல, ஏற்றுக்கொள்ளலாமே தவிர, மேற்கொண்டு நாட்களை ஒதுக்கி விடுமுறை தருகிற அளவிற்கு சட்டம் இடம் தரவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்,

பின்னலூர் கிராமம் வாலாஜா ஏரிப் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு,

*வினா எண் 1049—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சிதம்பரம் வட்டம் பின்னலூர் கிராமத்தில் வாலாஜா ஏரி என்ற பெயரில் உள்ள நிலங்களைத் தாழ்த்தப் பட்ட மக்கள் பயிரிடுபவர்களுக்கு 5 மடங்கு தீர்வை போட்டு அவர்கள் மகசூலை அனுபவிக்க முடியாது செய்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், ஏன் பட்டா செய்யப்படவில்லை?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் தரத் தீர்வையாகவும், தண்டத் தீர்வையாகவும் 10 ரூபாய் தான் போடப்பட்டிருக்கிறது. ஏரியின் உள்புறம் இருக்கும் இடங்களைப் பட்டா போட்டுக் கொடுப்போமேயானால் அதனுடைய ஆயக்கட்டு பாதிக்கப்படும் என்று மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியும், மாவட்ட ஆட்சித் . தலைவரும் தெரிவித்திருக் கிறார்கள்.

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதிலிருந்து உண்மையான தகவலை அவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று நினைக்கிறேன். காரணம் ஒரு ஏக்கருக்கு 10 ரூபாய் என்று சொல்லிய பிறகும் 50 ரூபாய் கட்டியதற்கான ரசீதும் இருக்கிறது என்பது உண்மை. அத்தோடு கூட, அதே தாலுகாவில் வளையமாதேவி, திருநாரையூர், வீராணநல்லூர் போன்ற இடங்களில் அதேபோன்று, ஏரியின் உள்ளே இருக்கும்



பகுதிகளை அரசு பட்டா போட்டு கொடுத்திருக்கிறது என்பதும், இதே அதிகாரிகளே அவைகளுக்கு சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்பதையும் இந்த அரசு அறியுமா என்று தெரியவிரும்புகிறேன்,

**மாண்புமிகு, திரு . எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தகவலின்படி, தண்டத் தீர்வையை 5 மடங்கு கொடுக்கவில்லை என்றுதான் எனக்கு எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, அந்த ஏரியைப் பொறுத்தவரையில், நீண்ட நாட்களாக அவர்கள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள் என்றும். ஆக்கிரமிப்பாளர்களுக்கு பட்டா கொடுப்பதிலே சில சங்கடங் கள் இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால் அந்த ஏரியினுடைய ஆயக்கட்டு 16,485 ஏக்கர். தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பெரிய ஏரிகளில் ஒன்று இந்த ஏரியும் ஆகும். அந்த ஏரியினுடைய பரப்பளவே 557? ஆகும். ஆனால் இப்படிப்பட்ட ஏரிக்கு தண்ணீர் கொண்டு வரப்படுகிறபோது சேத்தியாதோப்பு அணைக்கட்டு மூலமாகத்தான் தண்ணீர் கொண்டுவரப் படுகிறது,

ஆகவே, அதில் நாம் பட்டா போட்டுக் கொடுத்துவிட்டால், அதன் கீழ் இருக்கிற ஆயக்கட்டுகள் பாதிக்கப்படும் என்று வருவாய்த்துறை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். யாரோ ஒரு சிலர் பணம் கட்டி இருக்கலாம். இன்னும் சொல்லவேண்டுமானால் இப்படிப்பட்ட மடங்குத் தீர்வை போடப்பெற்று கொஞ்சம் வசூல் செய்யப்பெற்றிருந்தாலும். இன்னும் 18 ஆயிரம் ரூபாய் இதுவரையில் வசூலே செய்யப் பெறவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-10]

**திரு. எல். இளையபெருமாள்:** அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசுக்கு அந்த எண்ணம் இருந்தாலும், ஒருவருக்கு பட்டா கொடுக்க சிபார்சு செய்து வேறு ஒருவருக்குக் கொடுக்காமல் இருப்பது என்பது சரியா? தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்து முட்டாரம்பாக்கம் ஏரியில் ஒரு பகுதியில் சிலருக்கு மகசூல் செய்ய கொடுத்துவிட்டு இன்னொரு சமுதாய மக்களுக்குப் பயிரிட்டதை, மகசூலையே அழித்திருக்கும் நிலை இருக்கிறது. வாலாஜா ஏரியில் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு அனுமதித்துவிட்டு ஒரு சிலர் பயிர் செய்திருப் பதை அழித்திருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே இதைப் பற்றி விசாரித்து எதிர்காலத்திலாவது நியாயம் வழங்க எல்லோருக்கும் பட்டா செய்து கொடுக்கும் முறையில் அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** எனக்குக் கிடைத்துள்ள தகவல்படி வாலாஜா ஏரி பற்றிய தகவல்மட்டும் இப்போது என்னிடமிருக்கிறது. வேறு தகவல்கள் இப்போது என்னிடம் இல்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்

போது இன்னார் இன்னார் வேளாண்மைப்படுத்திய நிலத்தை அழித்திருக்கிறார்கள், இன்னார் இன்னார் வேளாண்மைப் படுத்திய நிலத்தை அனுமதித்திருக்கிறார்கள் என்று தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எல். இளையபெருமாள்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி, வாலாஜா ஏரியில் 'எ' பிரிவில் பயிரிட்டதை அவர்கள் அழித்து 'பி' பிரிவில் மகசூலை அறுக்கும்படி செய்தது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே வருங்காலத்தில் அதிகாரிகள் நியாய உணர்வோடு பயிர்களை அழிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அதேபோல் தண்ணீர் பிடிக்காத பகுதிகளை, நீர்ப்பிடிப்பு இல்லாத பகுதிகளை பட்டா செய்துகொடுக்க அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** நீதி தராசு முறையில் வழங்கவேண்டும் என்றுதான் இந்த அரசு கருதுகிறது. எங்களுடைய பாரம்பரியம்—முதலில் தராசுதான் எங்கள் சின்னமாக இருந்தது என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆகவே எங்கேயாவது அநியாயம் நடந்திருந்தால் அதைப் பற்றித் தெரிவித்தால் அதைக் கண்டிக்கவும் மீண்டும் அப்படிப்பட்ட காரியங்கள் நடக்காமலிருப்பதற்கும் இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளும்.

### திருவில்லிபுத்தூர் தொகுதி திருவண்ணாமலை கிராமத்திலுள்ள புஞ்சை நிலத்தை 'நத்தமாக' மாற்றும் திட்டம்

*வினா எண் 1050 திரு இரா தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

திருவில்லிபுத்தூர் தொகுதி திருவண்ணாமலை கிராமப் பொதுமக்கள் குடியிருக்கும் க. எண் 530/ஏ4 ஏ1சி புஞ்சை நிலத்தை நத்தமாக மாற்றும் குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு. திரு. எஸ், டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறபடி சர்வே எண் 530 என்பதற்குப் பதிலாக 530—4(எ) 4 (1) என்று தான் அங்கிருக்கிறது. 42 பேர்கள் குடியிருக்கிறார்கள்: அது புன்செய் நிலம்,

**திரு. இரா. தாமரைக்கனி :** திருவில்லிபுத்தூர் தொகுதி திருவண்ணாமலை கிராமத்தில் 530/ஏ4 குடியிருப்பில் இருப்பவர்கள் ஏழை எளிய மக்கள், பிற்பட்ட வகுப்பு மக்கள். அடித்தளத்திலிருக்கிற மக்கள். அவர்கள் வீடற்றவர்கள், ஆகவே ஏழை எளிய மக்களுக்கு 'நில ஆர்ஜிதம் செய்து கொடுப்பது போல் இது தனியார் நிலமாயிருப்பதால் இந்த பிற்பட்ட மக்களுக்கும் அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து அந்த வீடு இல்லாத மக்களுக்குப் பட்டா கொடுக்க ஆவண செய்யப்படுமா?



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி இது தனியாருடைய பட்டா, புன்செய் நிலம். தனியாருடைய பட்டா நிலத்தில் அவர்கள் குடியிருக்கிறார்கள். இவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் அல்ல. இவர்கள் நாயக்கர் வகுப்பை, பிள்ளை வகுப்பை, தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இன்றிருக்கிற அரசின் கொள்கைப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தான் அரசு விலைக்கு வாங்கிக்கொடுக்கும். அரசு நிலமென்றால் கொடுக்கலாம். ஆனால். மற்றவர்கள் நிலத்தில் இருக்கும்போது அரசு அந்த நிலங்களை வாங்கிக் கொடுக்க இயலாது.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** இம்மாதிரி ஹரிஜனங்கள் அல்லாத பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு குடியிருப்புக்காக நிலங்கள் ஆர்ஜிதம் செய்து கொடுக்க உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அரசாங்கக் கொள்கை இன்று அல்ல தொன்றுதொட்டு இருந்துவரும் கொள்கை என்னவென்றால் ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் அரசாங்க நிலங்களைக் குடியிருப்பிற்காகக் கொடுத்தும், அரசாங்க நிலங்கள் அல்லாத நிலங்களையும் அரசாங்கம் விலைக்கு வாங்கிக்கொடுக்கும். ஆனால் ஆதிதிராவிட மக்கள் அல்லாத மக்களுக்கு அவர்கள் ஏழைகளாக இருந்தால் அவர்களுக்கு அரசாங்க நிலம் கிடைத்தால் கொடுக்கும், அரசாங்க நிலத்தில் குடியிருந்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப் பேற்றதற்குப் பிறகு எத்தனை ஏழை எளிய மக்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பொதுக் கேள்வி. லட்சக்கணக்கான பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்,

கேள்வி எண்கள் 1051 முதல் 1053 வரை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

### சதுரங்கப்பட்டணம், புதுப்பட்டணம் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 1054 திரு. கோ. ஆனூர். ஜெகதீசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கம் அணுமின் திட்டத்தை அடுத்துள்ள சதுரங்கப்பட்டணம், புதுப்பட்டணம் ஆகிய இரு பகுதிகளுக்கும் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் நிறைவேற்றப் படும்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) சதுரங்கப் பட்டணம், புதுப்பட்டணம் ஆகிய இரு கிராமங்களுக்கு கிராம குடிநீர் திட்ட அடிப்படையில் குடிநீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இத்திட்டம் 1981-82-ல் நிறைவேற்றப்படும்.

**திரு. பு. கோ. ஆனூர். ஜெகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு பெரிய கிராமங்களுக்கும் தனித்தனியான திட்டங்களா அல்லது கூட்டுத் திட்டங்களா? எவ்வளவு தொகை இவைகளுக்கு மதிப்பீடு போடப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம் தன்னிறைவுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டுள்ள 150 ஒன்றியங்களிலே ஒன்று. எனவே, இவ்வூராட்சி ஒன்றியத்திலே அடங்கியுள்ள இந்த இரண்டு கிராமங்களுக்கும் 1981-82லே குடிநீர் வசதி செய்யப்படும் என்ற தகவல்தான் என்னிடத்திலே இருக்கிறது.

**திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிகள் இரண்டும் நகரங்களுக்குச் சமமான பகுதிகளாகும். இந்த இரு பகுதிகளுக்கும் இதுவரையில் குடிநீர் வழங்கப்படவில்லை, காரணம். கடலுக்கு அருகாமையில் இருக்கின்ற காரணத்தினால் உவர்ப்பு தண்ணீர் கிடைப்பதால் இதுவரையில் குடிநீர் கொடுக்கவில்லை. ஆகவே, 8,000, 7,000 என்ற அளவிலே ஜனத்தொகை இருக்கக்கூடிய இந்த இரண்டு கிராமங்களுக்கும் மிகப் பெரிய திட்டமாக, போதுமான அளவிற்கு திட்டம் போட்டு அரசு இதனைச் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் வருகின்ற காரணத்தால். இந்தத் திட்டங்களைத் தீட்டும் போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றி சம்பந்தப் பட்டவர்களோடு பேசினால் ஆவன செய்வதுபற்றி கவனிக்கப் படும்.

**திரு, ஆ. வெள்ளைச்சாமி;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் குடிநீர் பிரச்னை தீர்க்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 1974 வறட்சிப் பணியில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கல்பாக்கம் அனல் மின் நிலையத்திற்குப் பக்கத்தில் உள்ளது. நீங்கள் 1974க்குப் போகிறீர்கள். கேள்வியாகக் கேளுங்கள்.



**திரு. ஆ. வெள்ளைச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கப்படும் திட்டமா, கூட்டு முயற்சியிலே இருந்துவரும் குடிநீர் திட்டமா? (பதில் இல்லை),

## குடிசை மாற்று வாரியத்தின் மூலம் தர்மபுரியில் வீடுகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 1055 **திரு. எஸ். அரங்கநாதன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) தமிழக குடிசை மாற்று வாரியத்தின் மூலம் தர்மபுரி நகரில் உள்ள குடிசைகளை மாற்றி வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

ஆ) செய்ய முடியுமென்றால் எப்போது செய்யப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** நிதிப் பற்றாக்குறை நிலையின் காரணமாக குடிசைமாற்றுத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டப்படும் பணி தற்போது செயல்பட்டுவரும் கோவை, திருச்சி மதுரை, சேலம் ஆகிய நான்கு மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டால் போதும் என்றும், இப்பணி ஏனைய வெளியூர் மாவட்டத் தலை நகரங்களுக்கும் சிறு நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டாம் என்றும் அரசு முடிவெடுத்துள்ளது. எனவே தர்மபுரி நகரில் இத்திட்டத்தின்கீழ் குடிசைகளை மாற்றி வீடுகள் கட்டித் தருவதற்கில்லை. ஆனால், இங்கு இருக்கும் குடிசைவாழ் மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின்மூலம், நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்களின் விதி முறைகட்குட்பட்டு கடன் உதவி தொடர்ந்து கொடுக்கலாம் என்று அரசு முடிவெடுத்துள்ளது.

**திரு. கா. கோபாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அரசால் வீடுகள் கட்டித் தரப்படுகின்ற போது, அந்த வீடுகள் ஒன்றிரண்டு ஆண்டுகள் கழித்து பழைய வீடுகள் ஆகிவிடுகின்றன. அதன் காரணத்தினால், ஆண்டுக்கு ஒரு முறை மராமத்து, வெள்ளை அடித்தல் போன்ற பணிகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் சென்னை, கோயம்பத்தூர், திருச்சி, சேலம் போன்ற மாவட்டங்களிலே கட்டப்படுகின்றன. ஆகவே, தேவைப்படுகின்றபோது அந்த வீடுகள் பழுதுபார்க்கப்படுகின்றன.

**திரு ஏ. சி. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியம் நடப்பு ஆண்டில் 4, 5 மாவட்டங்களில் மட்டும் இம்மாதிரியான வீடுகள் கட்டாமல், மற்ற மாவட்டத்

தலைநகரங்களிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்துமா? அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு வேண்டிய நிதியாதாரங்கள் இல்லாத காரணத்தினால் விரிவுபடுத்துவது சாத்தியம் இல்லை

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பதிலிலே தர்மபுரி மாவட்டத்தில் குடிசை மாற்று வாரியத்தின் கீழ் எடுத்துக் கொள்ள முடியாது என்று சொன்னார்கள். மேலும் கடன் கொடுக்கலாம் என்றும் சொன்னார்கள். நகர்புறத்திற்கு கடன் பெறுபவர்களுக்கு ஒரு வீட்டுக்கு எவ்வளவு கடனாக கொடுக்கப்படுகிறது; கிராமப்பகுதியில் எவ்வளவு அளிக்கப்படுகிறது என்பதைத் தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே வீடுகள் கட்டுவதற்கு இரண்டு லட்சம் வீடுகள் என்று கொண்டு வந்திருக்கிறோம். அந்த திட்டத்திலே அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கேள்விக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை, இருந்தாலும் அங்கே 1½ சென்ட் சொந்தமாக உள்ளவர்கள் அரிசனங்களாக இருந்தால் மூவாயிரம் ரூபாய் தரப்படுகிறது; அதில் ஆயிரம் ரூபாய் மானியமாக தரப்படுகிறது. இதற்கு வட்டியில்லை. ஆகவே அதைப்போல அரிசனமல்லாதவர்களுக்கும் மூவாயிரம் ரூபாய் தரப்படுகிறது. இது நீண்ட கால தவணையில் தரப்படுகிறது. அரிசனங்கள் அல்லாதவர்கள், அரிசனரோடு இணைந்து வாழ்வார்களானால் 'இதிலே சப்ளிமெண்டரி கேட்க முடியாது, 'எக்ஸ்ட்ராவாக' சொல்கிறேன் அவர்களுக்கு இந்த ஆயிரம் ரூபாய் மானியமாகத் தரப்படும்.

### பண்ணைக்காட்டில் குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண். 1056— திரு. கா. கோபாலகிருஷ்ணன் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

அ) கொடைக்கானல் தாலுகா பண்ணைக்காட்டில் குடிநீர் வழங்குவதற்கு போடப்பட்டதிட்டமும் வேலைகளும் பாதியிலேயே நின்று இருப்பது அரசுக்குத் தெரியுமா?

ஆ) ஆம் எனில் விரைந்து குடிநீர் கிடைக்க ஆவன செய்யப்படுமா!

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ). திட்டம் நிறுத்தபடவில்லை. தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.



ஆ) திட்டத்தை விரைவில் முடிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. கா. கோபாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கான்ட்ராக்டர் வேலையை முடித்துத் தருவதாக ஒப்புக் கொண்ட காலம் என்ன? காலதாமதத்திற்குக் காரணம் என்ன? வேண்டுமென்றே அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்துவதால், கான்ட்ராக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்திற்குத் தேவையான புவிஈர்ப்பு குழாய்கள் பதிக்கும் வேலைகள் மலையைச் சார்ந்த இடங்களில் செய்யவேண்டியிருப்பதால் இக் குழாய்களை எடுத்துச் செல்லும் பணிகளில் மிகுந்த சிரமம் இருக்கிறது. பொருள்களுக்கும், ஆட்களுக்கும் ஆபத்து விளைவிக்க கூடியதாக உள்ளது. மேலும் திறமை வாய்ந்த வேலையாட்களும் உடனடியாக கிடைப்பதில்லை. ஆகவே இவ்வேலைகளில் முன்னேற்றம் காட்டுவதில் சில நேரத்திலே மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆயினும் இந்த வேலைகளை சீக்கிரம் ஒரு ஈடுபாட்டு உணர்வுடன் ஜூன் 1981க்குள் செய்து முடிக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

### தஞ்சை மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கும் சாகுபடிக்கும் தண்ணீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 1057 திரு. எம். செல்லமுத்து. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து தஞ்சை மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைத்து சிறு விவசாயிகளுக்கும் சாகுபடிக்கும் தண்ணீர் கொடுக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தஞ்சை மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு சாகுபடி செய்வதற்கு தேவையான தண்ணீர் கொடுக்க, குழாய் கிணறுகள் அமைக்கத் திட்டமிட்டு உபரி நிதியிலிருந்து 50 விழுக்காடும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் உதவித்தொகையாக 50 விழுக்காடும் பெற்று இத்திட்டம் தொடங்க உத்தரவிடப்பட்டது. 1979–80ஆம் ஆண்டில் பரிட்சார்த்தமாக 170 ஆழ் குழாய் கிணறுகள் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு அவை அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன. நடைமுறையில் இந்த சமுதாயக் கிணறு திட்டத்தின் வெற்றியைக் கொண்டு மேலும் பல கிராமங்களுக்கு 1981-82 ஆம் ஆண்டில் விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த சமுதாய கிணறு என்பது தஞ்சை மாவட்டத்திலும் நம்முடைய மாநிலத்திலும் விவசாய அபிவிருத்திக்கு மிகப்பெரிய அளவில் உதவி செய்யக்கூடிய திட்டம். இன்று ஊராட்சி மன்றங்களிலே பொது நிதியே மிகக் குறைந்தளவில் இருக்கிறபோது இந்தத் திட்டங்கள் எவ்வாறு நிறைவேறும். ஆகவே பாசனத் துறையும், ஊராட்சித் துறையும் ஒன்றாக சேர்ந்து சிறப்புத் திட்டம் ஒன்றை விரைவிலே எடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை 1800 ஆழ் குழாய் கிணறுகள் போட வேண்டுமென்று ஒரு திட்டம் அரசினுடைய பரிசீலனைக்கு வந்து, இன்று 170 ஆழ் குழாய் கிணறுகள் 1979-80-லே போடப்பட்டது. குறிப்பாக இந்தத் திட்டத்தின் மூலமாக தஞ்சை மாவட்டத்திற்கு அது தனி சிறப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காகத் தான் ஆழ் குழாய் கிணறுகளை அந்த பகுதியிலே போட்டோம். காரணம் கோடை காலத்திலே பணப்பயிர்கள் பயிரிடுவதற்கும், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுகிற காலத்தில் நாற்றங்கால் முதலிலே ஏற்படுத்துவதற்காகத் தான் இந்த ஆழ் குழாய் கிணறுகள் உதவியாக இருக்குமென்று அரசினுடைய பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இந்த குழாய் கிணறுகள் போடப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் உபரி நிதியிலிருந்து தான் 50 விழுக்காடு நாம் கொடுத்திருக்கிறோம். அதைப்போல சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டம், இப்போது அந்தத் திட்டம் இல்லையென்று சொன்னாலும், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழாக இவைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாயக் கிணறுகள் அமைக்கும் திட்டம் ரொம்ப சிறந்த திட்டம். தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஊராட்சி ஒன்றியங்களிலே இந்தச் செயல் படுத்துகிறார்கள், நானும் அந்தக் கிணறுகளைப் பார்த்திருக்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களிலே உபரி நிதியில்லாத காரணத்தினாலே அரசாங்கமே அதை முழுவதையும் கொடுத்து தஞ்சை மாவட்டத்திலே இன்னும் பாக்கி இருக்கக்கூடிய கிணறுகளையும் கட்டி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்மிபுகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு ஒன்றியங்களிலே உபரி நிதி இருக்கிறது. இப்போதும்கூட பல ஊராட்சி ஒன்றியங்களிலே பணம் செலவழிக்கப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. நான் சென்று கேட்டேன்,. அங்கே உள்ள ஆணையர்களையும் மற்ற அதிகாரிகளையும் நீங்கள் மக்களுக்காக நல்லமுறையிலே எப்படிச் செலவு செய்யவேண்டுமோ அந்த முறையிலே அந்தப் பகுதியிலே திட்டங்களை நிறைவேற்ற



வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். உபரி நிதி இருக்கின்ற காரணத்தினால் தஞ்சை மாவட்டத்திலே இன்னும் பல கிணறுகளை ஏற்படுத்தலாம்.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்படுவதைப் போன்று மற்ற மாவட்டங்களிலேயும் வறட்சி நிலையைக்கருத்திலே கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயன் கொடுக்கிற முறையிலே இந்தத் திட்டத்தை செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஆவன செய்யும்.

உத்ரமேரூர் ஏரி மராமத்துப்பணி.

*வினா எண். 1058- திரு. எஸ். ஜகத்ரட்சகன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் ஏரியை விஸ்தரிப்பு செய்து ஆழப் படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) உத்திரமேரூர் ஏரியை விரிவுபடுத்தும் திட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றும், முன்னுரிமை பெற்ற திட்டங்களின் மீது ஆய்வுகள் முடிவுற்றபின், உத்திரமேரூர் ஏரியை விரிவுபடுத்தும் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுக்காலமாக ஆழப்படுத்தப்படாத ஏரிகளை, இந்த வறட்சியைப் பயன்படுத்தி, அனைத்து ஏரிகளையும் ஆழப்படுத்துவதற்கு செயலாக்கத்திட்டம் நிறைவேற்றப்படுமா? மத்திய அரசு கொடுக்கவேண்டிய பணம் தமிழகத்திற்குக் கொடுத்து விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை).

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உத்திரமேரூர் ஏரியின் கொள்ளளவு எவ்வளவு? எத்தனை ஏக்கர்கள் அதன் மூலம் பாசன வசதி பெறப்படுகிறது? இந்தத் திட்டம் காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஏரியைப் பயன்படுத்தி 4978 ஏக்கர் பாசன வசதி பெற்று வருகிறது. அதனுடைய கொள்ளளவு 958 மில்லியன் கன அடி. அதிலே 351 மில்லியன் கன அடி கொள்ளளவை அந்த ஏரி இழந்திருக்கிறது. திரும்ப அதை எடுத்துச் செய்யலாம் என்று நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்திலே நடுத்தர பாசனத் திட்டத்தை பெரிய அளவிலே செய்யவேண்டுமென்று கருதிய காரணத்தினால் ஏற்கனவே 29.50 லட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு செயல்படுகிறபோது பெரிய அளவிலே செய்யவேண்டிய நிலைமை இருப்பதால் அவ்வாறு செய்யலாம் என்று அரசு கருதியிருக்கிறது.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : தலைவர் அவர்களே, இந்த உத்திரமேரூர் ஏரி மிகப் பெரிய நீர்ப்பாசன ஏரி. அதனுடைய கொள்ளளவைக் கொண்டு பரப்பளவைக்கொண்டு விரைவாக செயல்படுத்வதிலே இந்த ஆண்டே நிறைவேற்ற கூடிய திட்டம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, தான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல் ஒரு அரைஅடி நீர்த் தேக்கத்தினுடைய கொள்ளளவை அதிகப்படுத்தவேண்டும். அதிலே 351.81 மிலியன் கன அடி கொள்ளளவை அது இழந்து இருக்கிறது. அதைப் போக்கவேண்டுமென்று சொன்னால் 242 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவேண்டும். அதற்காக கூடுதலாக 29 அல்லது 34 லட்சம் செலவு செய்யவேண்டுமென்ற முறையிலே திட்டம் தயாரிக்கப்பட்டு 242 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து இவ்வளவு ரூபாய் செலவு செய்தாலும்கூட எதிர்பார்க்கிற பலன் கிடைக்குமா என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேதான் ஏரிகளை நவீனப்படுத்துகின்ற திட்டத்தின் அடிப்படையிலே நீங்கள் சொல்வதைப்போன்று சாதாரணக் கரைகளைக் கட்டுவதாலோ அல்லது கொள்ளளவை அதிகப்படுத்துவதாலோ வராது. 5448 ஏக்கர் பாசன வசதி பெறக்கூடிய நிலைமை இருக்கும். ஆகவே பெரிய அளவிலே செய்யவேண்டுமென்ற கருத்து இருக்கிறது.

[முற்பகல் 9.30]

**கங்கைகொண்ட சோழபுரத்திற்கருகிலுள்ள பொன்னேரியை விரிவு படுத்தும் திட்டம்.**

*வினா எண். 1059. திரு. பி. தங்கவேலு : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகாமையிலுள்ள பொன்னேரியை விரிவுபடுத்தும் திட்டத்தை அரசு செயல் படுத்துமா?

(ஆ) ஆம் எனில் இத்திட்டத்தை அரசு எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, உடையார்பாளையம் வட்டத்தில் உள்ள பொன்னேரியை விரிவுபடுத்தும் திட்டம் எதுவும் இல்லை என சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடையார்பாளையம் தாலுக்காவிலே பொன்னேரி என்ற ஏரி ஒன்று இருக்கிறது. அங்கே லோயர் அணைக் கட்டிலிருந்து வருஷாவருஷம் இந்த ஆண்டைத் தவிர, வெள்ளக் காலத்திலே அதிகப்படியான நீர் வீணாகக் கடலுக்குச்



செல்கிறது. ஆகவே, லோயர் அணைக்கட்டுக்கு மேல்புறம் அந்தப் பொன்னேரிக்கு தண்ணீர் விட வேண்டுமென்று திருச்சி ஜில்லா கலெக்டர் டெவலப்மெண்ட் கவுன்சில் மூலம் வேண்டுகோள் அரசுக்கு வந்திருக்கிறதா? அல்லது எதிர்காலத்திலேயாவது அந்தத் தண்ணீர் கடலில் வீணாகச் செல்வதைத் தடுத்துச் செய்வதற்காக அதைப்பற்றி யோசிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, மூலக் கேள்வி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகாமையிலுள்ள பொன்னேரியை விரிவுபடுத்தும் திட்டத்தை அரசுசெயல்படுத்துமா என்பது, இல்லை என்று நான் சொல்லியிருக்கிறேன். அந்த ஏரியை விரிவுபடுத்துகின்ற திட்டம் தேவை இல்லை. காரணம், அதனுடைய பரப்பு 1,625 ஏக்கரா. இப்பொழுதே 1,553 ஏக்கராவிலே பாசன வசதி பெற்று வருகிறது. 72 ஏக்கருக்குப் பாசன வசதி இல்லை. இப்பொழுது நீங்கள் கேட்பது வேறு ஒரு அடிப்படையிலே கேட்கிறீர்கள். தண்ணீர் வீணாகிறது என்றால் எங்கே விணானாலும் அதைத் தடுத்துத்தான் ஆக வேண்டும். அதற்காகத்தான் நாம் இப்பொழுது பேச்சு வார்த்தைகள் வேறுவிதமாக இருந்தாலும்கூட flood carrier என்று சொல்லக்கூடிய அளவிற்கு உபரியாகத் தண்ணீர் மழைக்காலங்களிலே கிடைக்கிறபொழுது வேறு ஒரு பகுதிக்கு எடுத்துச் சென்று அதைத் தேக்கிவைத்து பயன்படுத்தலாமா என்றெல்லாம் நாம் இப்பொழுது ஆய்வு செய்து கொண்டிருப்பதால் இந்தக் குறிப்பை நான் தனியாகக் கவனத்தில் எடுத்துக்கொள்கிறேன். ஆனால் மூலக் கேள்வியைப் பொறுத்தவரையில் இப்பொழுது அது தேவையில்லை என்று அரசு கருதுகிறது; அந்த ஏரியை விரிவுபடுத்துவது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

**உப்பாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.**

*வினா எண். 1060- திரு. க. பாரமலை: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதியில் செய்களத்தூர் கிராமம் அருகில் உப்பாற்றின் குறுக்கே அணைக்கட்டி, மேலநெட்டூர் தெற்கு சந்தனூர் போன்ற கிராமங்களுக்கு கால்வாய் மூலம் தண்ணீர் வழங்கும் திட்டம் அமுல் செய்வது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த உப்பாற்றின் குறுக்கே அணை கட்டுவதாகத் திட்டமிடப்பட்டு ஏற்கனவே பல மைல் தூரத்திற்குக் கடுமையான hard rock என்று சொல்வார்களே அதில்கூட வாய்க்கால்கள் வெட்டி, ஏறக்குறைய ஆறேமு மைல் தூரத்திற்கு வெட்டப்பட்டுருக்கிறது, அது இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த உப்பாற்றின் தண்ணீர் மழைக் காலங்களிலே வீணாகச் செல்வதால் அந்தச் செய்களத்தூர் திட்டம் உபயோகரமான திட்டம் என்று அங்கிருக்கின்ற மக்கள் நினைக்கிறார்கள். அதோடு நிரந்தரமான பாசனம் இல்லாத சில கிராமங்கள் இதனால் பயன் பெறும் வாய்ப்பு இருப்பதால் அதை மறுபரிசீலனை செய்து அந்த வேலை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, உப்பாற்றின் குறுக்கே செய்களத்தூர் கிராமத்திற்கு அருகிலே ஒரு அணைகட்டி, கால்வாய் வெட்டி செய்களத்தூர் மற்றும் 25 கண்மாய்களுக்கு நீர் வழங்க சுமார் 2657.49 ஏக்கர் நிலங்கள் பயன் அடையும் திட்டம் ஒன்று 1979-80-லேயே முடிக்கப்பட்டு விட்டது. ஆனால் இத்திட்டத்தின் தெற்கு சந்தனூர் கண்மாய் சேர்க்கப்பட்டிருக்கிறது; ஆனால் மேலநெட்டூர் கண்மாய் சேர்க்கப்படவில்லை. அதற்குக்காரணம் இங்கே 1979ஆம் வருஷம் உள்ள ஆலங்குளம் கண்மாய் வரை தண்ணீர் முதலிலே விடப்பட்டிருக்கிறது. இரயில் பால கட்டுமான வேலைகள் அப்பொழுது முடியாமல் இருந்த காரணத்தாலேயே அப்பொழுது அது தாமதமாக இருந்து, இரயில்வே பாலம் கட்டி முடிக்கப்பட்டதற்குப் பிறகு அந்தக் கண்மாய் வேலைகளும் முடிவு பெற்று இருக்கின்றன. ஆனால் போதிய நீர் வரத்து இல்லாத காரணத்தாலே அந்தக் கால்வாயிலே இப்பொழுது தண்ணீர் விடப்படவில்லை. வாய்ப்பு கிடைக்கின்றபொழுது தண்ணீர் கொடுக்கப்படும்.

திரு. க. பாரமலை: தலைவரவர்களே, இந்தத்திட்டம் பூர்த்தி ஆகிவிட்டது என்று அமைச்சரவர்கள் தெரிவித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இன்னும் பலயிடங்களிலே அது முடிவு பெறாமல் இருக்கிறது. அந்த வேலைகளை முடிவு பெறச் செய்வதற்கும், சந்தனூர் கண்மாயை அந்த ஆயக்கட்டைப் பயனடையக் கூடிய ஆயக்கட்டுத் திட்டத்திலே சேர்த்துக் கொள்வதற்காக அமைச்சரவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, சாதாரணமாக அணையினுடைய தலைப்பிலே 100 கன அடிக்கு மேலே தண்ணீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருந்தால்தான் அந்தக் கால்வாய்களிலே நீரோட்டம் விட்டுப் பார்ப்பதற்கே வாய்ப்பு இருக்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக 1979-லே ஏற்பட்ட அந்த வெள்ளம் புயல் காரணமாகப் பலயிடங்களிலே உடைப்பு ஏற்பட்டுச் சில கால்வாய்களின் பகுதிகளே கூட மூடப்பட்டு விட்டன. அதையெல்லாம் இப்பொழுது நாம் திரும்பவும் ரிப்பேர் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். முடிந்துவிட்டதாக இங்கே குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அந்தப் பணி சரியாக முடிவுறவில்லை என்று உறுப்பினரவர்கள் கருதுவார்களேயானால் அதையெடுத்துச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. மற்றபடி வேறு ஏதாவது அங்கே செய்ய வேண்டுமென்று உங்களுடைய கருத்து ஏதாவது இருக்குமேயானால் தனியாக எழுதிக் கொடுப்பீர்களேயானால் அதுகுறித்து நடவடிக்கை எடுக்க நான் தயாராக இருக்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 1061 மற்றும் 1062 ஆகியவை மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

தமிழகத்திலுள்ள 'குரும்பர்' எனப்படும் ஜாதி

*வினா எண். 1063 திரு. மா. சின்னராஜ்; திரு. கே. குப்புசாமி மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

'குரும்பர்' எனப்படும் ஜாதி தமிழ்நாட்டில் சில மாவட்டங்களில் ''மலைவாசிகள்'' என்றும் சில மாவட்டங்களில் ''பிற்படுத்தப்பட்டோர்'' என்றும் இருக்கும் முரண்பாட்டைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: ''குரும்பாஸ்'' இனம் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் மற்றும் ''குருமான்ஸ்'' தமிழ்நாடு முழுவதும் பழங்குடியினர் என்று இந்திய அரசியலமைப்புச் சட்ட (பழங்குடியினர்) ஆணையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையினை குடியரசுத் தலைவர் தான் வெளியிட முடியும். இம்மாநில அரசு வெளியிட்டுள்ள பிற்பட்டோர் பட்டியலில் ''குரும்பா'' இனம் தமிழ்நாடு முழுவதும் பிற்பட்டோர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதுவுமின்றி மிகவும் பிற்பட்டோர் பட்டியலிலும் இக் ''குரும்பா'' இனம் இடம் பெற்றுள்ளது. ''குரும்பர்'' இனத்தவரும் ''குருமான்ஸ்'' இனத்தவரும் ஒரு இனத்தவரே என்று அறிவிக்க வேண்டுகோள்கள் வந்ததன்பேரில் இந்த இரண்டு இனங்களைப் பற்றியும் ஓர் ஆய்வு நடத்த கருத்துரு ஒன்றினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். சின்னராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அளித்த பதிலிலிருந்து ஏற்கனவே மத்திய அரசாங்கத்தினுடைய பட்டியலில் இரண்டு இனங்களுமே ஆதிவாசிகள் இனம் என்று குறிப்பிடப்பட்டதாகத் தெரிகிறது. எனவே, அதைப்பற்றி ஆய்வுகூடத் தேவை இல்லை. குருமான்ஸ்.குரும்பாஸ் இரண்டுமே ஆதிவாசிகள் இனம் என்ற ஆதாரங்களையும் அவர்கள்மாநாடுகள் மூலமாகவும், கோரிக்கைகள் மூலமாகவும் எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, மேலும் தொடர்ந்து ஆய்வு செய்யாமல்,

[1981 மே 11

அந்த இரண்டு பெயருடைய இனமும் ஆதிவாசிகள், மலைவாசிகள் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் உடனடியாக அதை ஆதிவாசிகள் பட்டியலில், மலைவாசிகள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்த அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாக நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். சென்ற ஆண்டு கோவை மாவட்டத்திலே நடந்த குரும்பர் மாநாட்டுக்கு நானும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் சென்றிருந்தபொழுது, அத்தகைய கோரிக்கைகள் எங்களுக்கு அளிக்கப்பட்டன. அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் தான் தற்போது இந்த அரசைப் பொறுத்தவரையிலே, இந்த ஆய்வைச் செய்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பி இருக்கிறார். அதில் இந்த இரு இனத்தவரும் ஓர் இனம்தான் என்று அறியப்பட்டால், அந்த முடிவு மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, பாராளுமன்றத்திலே பழங்குடியினர் பட்டியலைத் திருத்த சட்ட முன்வடிவு கொண்டு வரும்போது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதற்கு இந்த அரசு ஆவன செய்யும்.

திரு. கே. குப்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வுக் குழுவினுடைய அறிக்கை எப்பொழுது வரும்? வந்த வுடனே விரைந்து அந்த நடவடிக்கை மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அது முடிக்கப்படும்.

திரு. எம். சின்னராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுக் குழுவின் அறிக்கையைப் பெற்று, அதை இணைப்பதற்கு ஓரளவு காலதாமதம் ஆகும். ஆகவே, அதுவரையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், அவர்களுக்கென்று வாதாட சட்டமன்றத்தில் கூட ஒரு உறுப்பினர் இல்லை; அந்த அளவு இருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஓரளவு பதவிகளிலும், இதர கல்வி நிலையங்களிலும் இட ஒதுக்கீட்டில் முன்னுரிமை கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களை இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்கு முன்னதாக, அத்தகைய முன்னுரிமை அளிப்பது என்பது இயலாத ஒன்றாகும்.





## கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகை.

*வினா எண்—944 திரு. என். பழனிவேல் மாண்புமிகு [ஆ]திதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு [வி]டையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் பயிலும் அரிசன மாணவர்களுக்கு [கொ]டுக்கப்படும் உதவித் தொகை எந்த ஆண்டு நிர்ணயிக்கப்[ப]ட்டது?

(ஆ) அதை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:

(அ) 1971—72-ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது.

(ஆ) இது பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனை[யி]ல் உள்ளது.

திரு. குமரிஅனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் [அ]வர்களே, இதுபற்றிய செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனை[யி]ல் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்[த]ார்கள். கல்லூரிகளில் பயிலுகின்ற அரிசன மாணவர்களுக்குக் [கொ]டுக்கப்படுகின்ற உதவித் தொகை, அவர்கள் கல்லூரிக்கு 90 [வி]தவீத நாட்கள் வந்தால்தான் கொடுக்கப்படும் என்று சொல்[கி]ன்ற விதி முறையின்கீழ் அது வருகிறதா? ஏழை, எளிய [மக]க்களாக இருக்கிற காரணத்தாலே, அவர்கள் சில பணிகளைச் [செ]ய்து வரும்போது, காலதாமதமோ வாராமையோ ஏற்படக்[கூ]டும். எனவே, மற்ற மாணவர்களுக்கு இருக்கிற அளவுக்குத்தான் [இ]வர்களுக்கும் நிபந்தனை என்ற வகையில், மற்ற மாணவர்கள் [6]0, 75 விதவீதம் வந்தால் போதும் என்றும், இவர்களுக்கு 90 [வி]தவீதம் என்றும் வைக்கப்பட்டிருப்பதை, மாற்றியமைத்து, [ச]மநிலை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா [எ]ன்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.40]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டைப் பொறுத்தவரையிலே அத்தகைய ஒரு நிலை இருப்பதை உணர்ந்து இந்த அரசு அதற்கான ஆணைகளைப் பிறப்பித்து இருக்கின்றது. வருகின்ற ஆண்டுகளில் இதைப் போன்ற நிலைமைகள் ஏற்படாத வண்ணம் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரியிலே பயிலுகின்ற மாணவர்களுக்கு 1974-ல் நிதி ஒதுக்கப்பட்டதாகவும், இப்போது பரிசீலனையில் இருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த பரிசீலனையில் இருக்கக் கூடிய நிதியை இந்தக் கல்வி ஆண்டிலேயே கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கப்பட்டது 1971-72 ஆம் ஆண்டு என்று சொல்லவில்லை. இத்தகைய உதவித் தொகை எந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது என்று கேட்டார்கள். நிர்ணயிக்கப் பட்ட ஆண்டைத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

திரு. எஸ். வேரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கும், மேல் நிலைப் பள்ளிகளிலே படிக்கும் மாணவர்களுக்கும், உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கும் வருடாவருடம் கொடுக்கும் அந்த உதவித் தொகையை, வருடாவருடம் ஏறுகின்ற விலைவாசியைப் பொறுத்து, கூட்டிக் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எம்.விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு உதவித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர் களுக்குத் தற்போது வழங்கப்படுகிற உணவு, உறைவிடம் போன்ற உதவிகளை தற்போதுள்ள விலைவாசியைக் கருத்தில் கொண்டு, 1981-82 கல்வி ஆண்டு முதல் உயர்த்தி ஆணையிட வேண்டும் என்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் இயக்குநர் தற்போது அரசுக்கு செயல் குறிப்பு அனுப்பியிருக் கிறார்கள். அதன் அடிப்படையில்தான் இத்தகைய நடவடிக்கை களை அரசு எடுத்து வருகிறது.

திரு.வி.பி. வேடசுந்தர் பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் உதவித் தொகை வழங்கப் படுகின்றபோது ஒரு குடும்பத்தில் 2 பேர்களுக்குத்தான் உயர்ந்த பட்சம் உதவி வழங்க வேண்டும் என்று விதி இருக்கின்றது. அப்படி விதி இருந்தாலும், அந்தக் குடும்பத்தின் வருமானத்தைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு அவர்களுக்கும் அது அளிக்கப் படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்புகள் தற்போது என்னிடத்திலே இல்லை. இருந்த போதும் அதிலே அடங்கி இருக்கின்ற அந்த நியாய உணர்வின் அடிப்படையில் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். இராசபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற போது அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். கடந்த ஓராண்டு காலமாக பல கல்லூரி மாணவர்கள் முதலமைச்சர் அவர் களையும், ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களையும் நேரில் சந்தித்து, அந்தப் பண பற்றாக்குறை காரணமாக, பணம் கொடுக்க முடியாமல், விடுதியை விட்டு வெளியே போக வேண்டும் என்று நோட்டீஸ் ஒட்டப்படுவது அரசுக்குத் தெரியுமா? அங்கே கிவைடிங் சிஸ்டம் இருப்பதால் மற்ற மாணவர்கள் கொடுக்கிற அளவுக்கு அவர்களும் கொடுக்கவேண்டி இருக்கிறது. இந்த



மாணவர்கள் அந்த விடுதியிலே தங்கிப் படிக்க முடியாத அவல நிலைமை இருப்பதை உணர்ந்து, அவர்களுக்கு என்ன செலவாகிறதோ அதே தொகையை வருங்காலத்தில் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு.எம்.விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், என்னையும் சந்தித்து, இத்தகைய கோரிக்கைகளைத் தந்ததன் விளைவாகத் தான் தற்போது அரசு இத்தகைய முயற்சிகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மைய அரசின் உதவித்திட்டத்தின் கீழ் எல்லா மாணவர்களுக்கும் சேர்த்து ஏற்படும் ஒட்டு மொத்தமான தொகையை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்கப்பட்டது. இது சம்பந்தமாக இவ்வரசின் முன் மொழிவுகள் மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதன் அடிப்படை யில் இந்த அரசு இதனைப் பொருத்த அளவிலே இத்த கய முயற்சிகளை மேற்கொண்டு மைய அரசின் ஆலோசனைப் பெற்று தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும்.

### ஆதிதிராவிடர் நல வட்டாட்சியர் அலுவலகங்களில் சர்வேயர்களை நியமித்தல்.

*வினா எண்.945 திரு. அ. நன்னிலம் கலையரசன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) புதிதாக நிறுவப்பட்டுள்ள 29 அரிசன நல வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் தேவையான சர்வேயர்கள் நியமனம் செய்யப்படாததால் நில ஆர்ஜித பணிகள் தடைப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் புதிய சர்வேயர்களை அரசு எப்போது நியமிக்கும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ): புதிதாக நிறுவப்பட்டுள்ள 29 அரிசன நல வட்டாட்சியர் அலுவலகங்களுக் கும் தேவையான சர்வேயர்கள் நியமனம் செய்வது பற்றிய செயற்குறிப்பு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நல இயக்குநர் அவர்களிடமிருந்து அரசுக்கு கிடைத்துள்ளது. அச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. நில ஆர்ஜித பணிகள் கூடுதலான சர்வேயர்கள் நியமிக்கப்படாததால் தடைப்பட்டுள்ளதாக தகவல் ஏதும் இதுவரை அரசுக்கு வரவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, தற்போதுள்ள அரிசனநல வட்டாட்சியர்அலுவலகங்களில் போதுமான அளவிற்குச் சர்வேயர்கள் இல்லாத காரணத்தால், அந்த அரிசன மக்களுக்கு

வழங்கப்பட்ட வீட்டு மனைகள் கூட சர்வே செய்து கொடுக்கப் படாமல் ஆண்டுக்கணக்கில் தாமதமாகி வருகிறது. அது மட்டுமல்ல, இரண்டு மூன்று வட்டங்களுக்குச் சேர்ந்து ஒரு அரிசன நல வட்டாட்சியர் இருக்கிறார். அவருக்கு ஜீப் வசதி கூட கிடையாது. அந்த வசதி இல்லாததால் வேலைகள் மிகமிகத் தாமதமாகிறது. மத்திய அரசு வீட்டுமனைகள் கொடுக்கும் நிதி கூட சரிவர பயன் படுத்தப்படமுடியாமல் இருக்கிறது. ஆகவே, வட்டத்துக்கு ஒரு அரிசன நல வட்டாட்சியர், போதுமான சர்வேயர்களை நியமித்து, அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தி, அந்த வேலை களைச் செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் 29 உதவியாளர் பதவிகளும், 2 இளநிலை உதவியாளர் பதவிகளும் 29 ஆய்வாளர் பதவிகளும், 31 எழுத்தர் பதவிகளும் மற்றும் அலுவலகங்களுக்குத் தேவையான நாற்காலி மேஜை போன்ற மரச் சாமான்கள் வாங்குவதற்கும், அந்த 29 தனி வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் அமைக்க மற்றும் மின்சாரம் போன்ற சில வசதிகளும் சேர்த்து மொத்தமாக ஒரு மதிப்பீட்டை ஆதிதிராவிட இயக்குனர் அரசுக்குச் சமர்ப்பித்து உள்ளார். அந்த மதிப்பீட்டுத்தொகை ரூ.10 லட்சத்திற்கு இருக்கிற காரணத்தால், அதை அரசு பரிசீலித்து, அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. வட்டத்திற்கு ஒரு தனி வட்டாட்சியர் என்ற முறை இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை. அதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே. 10 ஆண்டு காலமாக வீட்டு மனை கொடுத்தும், அந்த இடங்கள் சர்வே செய்யப்படாமல் இருப்பதால், யார் யாருக்கு எந்தெந்த இடம் என்று தெரியாமல் இருக்கிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட காலத் திற்கு அந்த நிலத்தை சர்வே செய்து அந்தந்த இடங்களை அவர்களுக்குக் கொடுக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

## பேரையூரில் ஆதிதிராவிடர் மாணவர்கள் தங்கும் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண் 946 திரு கே. தனக்கோடித்தேவர்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பேரையூரில் அரிசன நலத்துறையால் மாணவர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி:

அ) இராமநாதபுரம் மாவட்டம் பேரையூரில் ஆதிதிராவிடர் நலத்துறையால் மாணவர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இது குறித்து மாவட்ட நல அலுவலரிடம் தொடர்பு கொண்டு தேவையையும் நிதி நிலையையும் முன்னிட்டு தக்க தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு பி. மொக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமனாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே ஏழை எளிய மக்கள் காலம்காலமாக வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அங்கே இருக்கும் மக்களுக்கு அந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் பேரையூரில் புதிதாக இந்த ஆண்டிலேயே ஒரு விடுதி துவக்கி அந்த அரிசன மாணவர்களைக் காப்பாற்ற இந்த அரசு முன் வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு துவக்குவதற்கு இயலாது. மாவட்ட ஆதித்திராவிடர் நல அலுவலரிடமிருந்து அறிக்கை பெற்றபின்தான் அந்த வேலை துவங்கப்படும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் இணைப்பை பார்க்க]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன,

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.

## 2. தகவல் கோரல்.

### அ. கால் பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற மோகன் பேகன் அணிக்குப் பாராட்டு

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, அகில இந்திய கால்பந்தாட்டப் போட்டி, ஒரு மாதகாலமாக சென்னையில் நடந்து நேற்றையதினம் முடிந்து, மோகன் பேகன் அணி வெற்றி பெற்று இருக்கிறது அதற்கு தமிழக மக்களின் பல்லாயிரக் கணக்கானவர்களின் வாழ்த்துக்களோடு அந்த அணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெடரேஷன் கப் பரிசு வழங்கி இருக்கிறார்கள் அந்த அணி போட்ட இரண்டு கோல்களில் ஒரு கோலை அந்த அணியைச் சேர்ந்த உலகநாதன் போட்டு

[திரு. மி. வின்சென்ட்] [1981 மே 11

தமிழகத்திற்கு பெருமை தேடித் தரும் வகையில் அந்த சாதனையைப் புரிந்துள்ளார். தமிழகம் எங்கும் நல்ல விளையாட்டு வீரர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்கிற வகையில். அந்த பெடரேஷன் கோப்பையை வென்ற அந்தக் குழுவின் தலைவரை சட்டமன்ற பேரவைத் தலைவர் அழைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து, விருந்து அளிக்க மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல கருத்து, ஆலோசிக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்கிறேன்.

[முற்பகல் 9.50]

ஆ. வேளாண்மைத் துறை தொழில் நுட்ப அலுவலர்கள்

உண்ணாவிரதம்

திரு எம். தங்கவேல்ராஜ்: தலைவரவர்களே, தற்போது தமிழ்நாடு வேளாண்மைத்துறை தொழில் நுட்ப அலுவலர்கள் சில கோரிக்கைகளை வைத்து, அதற்காக 2.5.81 முதல் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பற்றி தனியாக கவன ஈர்ப்புத் தீர்மானமாகவே அல்லது ஒத்தி வைப்புத் தீர்மானமாகவே கொண்டு வாருங்கள்.

திரு. சே. அழகர்சாமி: தலைவரவர்களே, வேளாண்மை தொழில் நுட்ப அலுவலர்கள் 5 நாட்களுக்கு மேலாக சாகும்வரை உண்ணாவிரதம் என்ற போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அது பற்றி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் போலீஸ் நிலையத்தில் ஒருவர் செத்து விட்டது பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் பட இருக்கிறது. நாம் தினந்தோறும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் கொடுத்திருக்கிறார்கள். அவைகளுக்கு முதலில் பதில் வரவேண்டும். வந்தபின்னால் அதிகமான தீர்மானங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமானால் அலுவல் ஆய்வுக்குழுவில் முடிவு செய்ய வேண்டும். ஆகவே, இன்றைக்கு பகல் 12 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவை கூட்ட இருக்கிறேன். அதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால் அதன்படி நான் அவையை நடத்திச் செல்ல தயாராக இருக்கிறேன்.

திரு சே. அழகர்சாமி: தலைவரவர்களே, ஆசிரியர்கள் மறியல் போராட்டம் நடத்தி, ஏராளமானவர்கள் உள்ளே இருக்கிறார்கள். அதுபற்றி....



1981 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி எல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசலாம். அதோடு, இன்றைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வரவில்லை. அவருடைய வேண்டுகோளுக்கிணங்க அவர் சம்பந்தப்பட்ட வினாக்களை இன்றைக்கு ஒத்தி வைத்திருக்கிறேன். சம்பந்தப்பட்ட அமைச்சர் இல்லாத போது, இப்படி திடீரென்று ஒரு பிரச்சனையை எழுப்பி, எப்படி அதற்கான பதிலை பெற முடியும்?

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, நாம் மூன்று மாதங்களாக சட்டமன்றப் பேரவையை நடத்திக்கொண்டிருக்கிறோம். இன்னும் மூன்று நாட்கள்தான் இந்தத் தொடர் கூட்டம் நடைபெற இருக்கிறது. ஆனால் முடிவு பெறாத பிரச்சனைகள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனால்தான் ஏற்கெனவே சொன்னேன், இன்றைக்கு நடைபெற இருக்கின்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடிப் பேசி, முடிவு செய்து, அதன்படி பிரச்சனைகளை எடுத்துக்கொள்ளலாம்.

3. ஒத்திவைப்பு தீர்மானம்

குளச்சல் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் காவல் நிலையத்தில் 16.4.81-ல் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட டேவிட்ராஜ் என்பவர் காவல் நிலையத்தில் இறந்ததால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்னும் தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கேட்டுக் திருவாளர்கள் டி. மணி எல். பழனிவேல், ஜெ. ஹேமச்சந்திரன், ரா. கிருஷ்ணன் ப. பொன்னுரங்கம், எஸ். இரத்தினராஜ், பாபு ஜனார்த்தனம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் முன்னறிவிப்பு கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியம் என்பது குறித்து சுருக்கமாக கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. டி. மணி

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல்காவல் நிலையத்திற்குரிய விளையச் சேர்ந்த திரு. டேவிட் ராஜ் என்பவரை 17.4.1981 அன்று, ஒரு நபர் கொடுத்த மனுவை ஆதாரமாகக் கொண்டு, சந்தேகத்தின் பெயரில் போலீசார் அழைத்துக் கொண்டு சென்றார்கள். அந்தக் கைதியை மிருகத்தனமாக அடித்ததன் விளைவாக 4 திங்கள் கழித்து இறந்து விட்டார் என்று எங்களுக்கு செய்தி கிடைத்திருக்கிறது. இரண்டாவது நாளே அந்தக் கைதி பல்வேறு ரத்தக்காயங்களோடு காட்சியளித்தார் என்றும் தெரிகிறது. அந்தக் கைதியை அவருடைய மனைவியார் பார்க்க வந்தபோது அந்த லாக்கப்பின் உள்ளேயே, அவர் பலவித ரத்தக்காயங்களோடு காட்சியளித்தார் என்றும் அதனால் அவரை

ஜாமினில் விடுவிக்க சில முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கும் போதே மூன்றாம் நாள் அவருக்கு கிடைக்கிற தகவல், அந்தக் கைதி போலீசாருடைய பிடியிலிருந்து தப்பித்து வெளியே ஓடிச் சென்று, பக்கத்திலிருந்த தண்ணீர் இல்லசத கிணற்றிலே குதித்து இறந்து விட்டார் என்றும் தகவல்களை, போலீசார் திரு.டேவிட் ராஜ் உடைய மனைவியாருக்குக் கொடுக்கிறார்க்ள்.

இதிலே என்ன முக்கியமான பிரச்னை என்றால், சாதாரணமாக சந்தேகத்தின் பேரில் அழைத்துச் சென்ற கைதிதான் அவர். ஒரு வழக்கு நடைபெற்று, நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று தீர்ப்பு வழங்கப்பெற்று, வாரண்ட் பிறப்பிக்கப்பெற்று அதன் அடிப்படையில் கைது செய்துக் கொண்டிருந்தால், இப்படி போலீசார் சொல்வதை புரிந்துக் கொள்ள முடியும். ஆனால் சந்தேகத்தின் பேரில் கைது செய்து கொண்டு செல்லப்பட்ட நபர் தான் அவர். இதற்கு முன்னாலே கூட குலசேகரம் காவல் நிலையத்தில் இதே போன்று சந்தேகத்தின் பெயரால் கைது செய்யப்பெற்று அழைத்துச் செல்லப்பெற்ற ஒரு நபர் அழைத்துச் சென்ற 4, 5 மணி நேரத்திற்குள்ளாகவே இறந்து விட்டார். இப்போது, டேவிட் ராஜ் என்னும் நபர் குளைச்சல் போலீசாரால் 3. 4 தினங்கள் கடுமையாக தாக்கப்பட்டதன் விளைவாத்தான் அவர் இறந்து விட்டார். இதை நான் குறிப்பாகச் சொல்வதற்குக் காரணம் அந்தக் கிணற்றிலிருந்து பிரேதத்தை எடுப்பதற்காக சென்றவர்கள். நகரத்திலே இருக்கும் தீயணைப்பு படை ஊழியர்கள், இவர்களின் அலுவலகம் என்னுடைய காரியாலயத்திற்கு அருகில் தான் உள்ளது.

இந்த நிகழ்ச்சிக்கு மறுநாள் அவர்கள் அந்த பிரேதத்தை வெளியே எடுத்தபிறகு. வெளியே கடைகளில் நின்று பேசிக் கொண்டிருந்தது என்னவென்றால் மிருகத்தனமாக தாக்கி விட்டார்கள் அதனால் செத்து விட்டான் என்று தீயணைப்பு நிலய ஊழியர்கள் பேசிக் கொண்டார்கள்] என கூறப்படுகிறது. இந்த நிகழ்ச்சி நடந்ததற்குப் பிறகு இந்த நிகழ்ச்சியை கண்டித்து, சர்வ கட்சிகளும், ஆளும் கட்சி உட்பட திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்பட, அனைத்து கட்சிகளும் கண்டித்து பெரும் அளவில் ஆர்ப்பாட்டமும் ஊர்வலமும் நடத்தியுள்ளார்கள். இப்படி கண்டன ஊர்வலம் நடந்த உடனேயே, அது நீதி விசாரணைக்கு வழி எற்படுத்திவிடும். பிரச்னை கிளப்பப்படும் என்ற எண்ணத்தைக் கொண்டு, போலீசார்கள் அந்த ஊர் பிரமுகர்களைக் கூப்பிட்டு பேசும்போது. ஏதோ அந்தக் கைதி போலீசாரின் பிடியிலிருந்து தப்பித்துக கொண்டு வெளியே ஓடும் போதுதான் கிணற்றில் சாடி இறந்து விட்டார் என்று சொல்லி அதற்கான ஆதாரங்களை சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள்.



நான் கேட்க விரும்புவதெல்லால் என்னவென்றால் ஏற்கனவே இதற்கு முன்னாலேயும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அந்த மாவட்டத்தில் நடைபெற்றிருக்கின்றன. இந்த பிரச்னை சம்பந்தப்பட்ட இந்த கைதியை அழைத்துச் சென்று இரண்டு நாட்களுக்குப் பிறகு இறக்கிறார் என்றால் அது போலீசாருடைய பொறுப்பற்ற நிலையை காட்டுகிறதா அல்லது மிருகத்தனமான படு மோசமான நிலைமை உருவாகி வருவதை காட்டுகிறதா என்பதைத்தான் அறியவிரும்புகிறேன்?

அது மட்டும் அல்ல ஏற்கனவே குளைச்சல் பிராந்தியத்தில் மீனவ வகுப்பு மக்களுக்கும். முஸ்லீம் இன மக்களுக்கும் இன விரோதம் ஏற்பட்டு, சிககலான சூழ்நிலை அங்கே ஏற்கனவே நிலவி உள்ளது. அதே போல காஞ்சாபுரத்திலே ஒரு நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்லாமல், இந்த மாவட்டத்தில் உள்ள சில தனி நபர்களின் லாரிகளில் அந்தப் பிராந்திய மக்களுக்கு தேவையான அடிப்படை அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்பவர்கள் சில சமூக விரோதிகளால் தடுக்கப்படுவதும் அந்த தடுக்க போலீஸ் முன்வராததும் அந்த பிரதேசத்தில் ஒரு பதட்ட நிலை உருவாக்கியுள்ளது.

(முற்பகல் 10.00)

எனவே இந்தப்பிரச்னை சம்பந்தமாக குளச்சல் காவல் துறையைச் சார்ந்த மேல்மட்ட அதிகாரி டி.ஒய். எஸ். பி., சர்க் கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் —— இதற்குக் காரணமாக இருந்தவர்களை தாற்காலிக வேலை நீக்கம் செய்து ஒரு பகிரங்க விசாரணை நடத்த வேண்டும் என்று கோருகிறேன். காரணம் அந்த மாவட்ட மக்கள் மத்தியில் ஒரு பதட்ட நிலை உருவாகி வருகிறது. ஆகவே அந்த பதட்ட நிலையை தணிப் பதற்கும்' சாதாரண ஏழை எளிய மக்களுக்கு நியாயம் கிடைக்க வும் ஒரு முன் உதாரணமாக அமைய தக்க வகையில் இது பற்றி விவாதிக்க பேரவையில் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-3-1981 காலை 8.00 மணிக்கு தம்பிஆபிரகாம் மனைவி ரூத்பத்மா குளச்சல் காவல் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் கொடுத்தார். அதில் பருத்திவிளை லஷ்மி புரம் கிராமத்தைக் சேர்ந்த பத்தேல்புரத்திலுள்ள தனது இல்லத் தில் 17-3-81 இரவு அவர் தூங்கிக்கொண்டிருந்தபோது இரவு 2.00 மணி அளவில் யாரோ ஒருவர் ஜன்னல் கம்பிகளை வளைத்து படுக்கையறையில் நுழைந்து தன் இடது காதணியையும் சுமார்

ஆறு பவுன் எடையுள்ள இரண்டு சங்கிலிகளையும் திருடிச் கொண்டு ஓடினார் என்றும், தான் எழுந்து சப்தமிட்டு அவரைத் தடுக்க முயன்றும் முடியவில்லை என்றும், திருடன் சுமார் 5,000 ரூபாய் மதிப்புள்ள நகைகளுடன் தப்பிவிட்டான் என்றும் கூறியிருந் தார். மேலும் சம்பவத்தின்போது திருடன் கொண்டு வந்த டார்ச் லைட்டை அங்கு விட்டுச் சென்றான் என்றும் அவர் புகாரில் கூறியிருந்தார். இது குற்ற. எண் 105/81-ல் வழக்கு பதிய பட்டது. சம்பவத்தின்போது ருத்பத்மாவுக்கு இடது காதில் ஏற்பட்ட சிறு காயத்திற்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. கண்டு பிடிக்கப்படாத குற்றவாளிகளை கண்டுபிடிக்க குளச்சல் காவல் துறை ஆய்வாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. மேலே குறிப்பிட்ட திருட்டு வழக்கில் கரியவிளை, மந்தைக்காடு முத்தையா நாடார் மகன் டேவிட் (வயது 2) என்பவர் சம்பந்த பட்டிருக்கலாம் என்று இப் புலனாய்வுக் குழுவிற்கு உறுதியான சந்தேகம் ஏற்பட்டது. 17.4.81 மாலை 5.30 மணியளவில் குளச்சல் காவல் நிலையத்திலிருந்து சுமார் 2 பர்லாங் தூரத்தில் பெரியப்பள்ளி தெருவில் டேவிட் காணப்பட்டார். புலனாய்வுக் குழுவைச் சேர்ந்த காவலர்கள் கிருஷ்ணன் நாயர், ர சாலய்யன் ஆகியோர் டேவிட்டை விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். கொஞ்ச தூரம் அவர்களுடன் சென்ற டேவிட் வழியில் தான் சிறுநீர் கழிக்கவேண்டுமென்று அனுமதி கேட்டு சிறுநீர் கழிப்பதுபோல் பாவனை செய்து உட்கார்ந்து திடீரென எழுந்து குளச்சல் பயணிகள் விடுதி பக்கம் ஓடினார். திருடன், திருடன் என்று காவலர்கள் சப்தமிட்டு விரட்டினர். அவர்களுடன் பொது மக்களில் சிலரும் சேர்ந்து விரட்டினர். சாஸ்தான்கரை தெரு வழியே ஓடிய டேவிட் காவல் நிலைய வளாகத்திலுள் பின்புறமாக நுழைந்து காவலர்கள் குடியிருப்புக்கு முன்னால் உள்ள கிழக்குப்புற வளாகச்சுவரில் ஏறி குதித்து வெளியே ஓட முயன்றார். ஆனால் சினிமா தியேட்டருக்கு முன் னால் கூடியிருந்த பொதுமக்களை கண்டு தெற்கு நோக்கி ஓடி பிறகு திரும்பி காவல் நிலைய வளாகத்தில் வட கிழக்கு மூலை யிலுள்ள சுமார் 60 அடி ஆழமுள்ள நீர் இல்லாத கிணற்றில் திடீரென குதித்து உடனே இறந்து விட்டார். இது குறித்து குளச்சல் காவல் நிலையத்தில் குற்ற எண். 134/81-ல் குற்ற விசாரணை முறை சட்டத்தின் 174-வது பிரிவின்படி வழக்கு பதியப்பட்டுள்ளது. பத்மநாபபுரம் சப்கலக்டர் பிரேதண விசாரணை செய்தார். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு டேவிட் உடல் அவர் மனைவிடம் ஒப்படைக்கப்பட்டது. டேவிட் தப்பி யோட முயன்றதையும் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதையும் பொது மக்களில் பலர் அறிவர் என்று கூறப் படுகிறது. சப்கலெக்டர் மேலும் விசாரணை செய்து வருகிறார். டேவிட் காவலர்களால் அடிக்கப்பட்டு கிணற்றில் எறியப்பட்டார் என்பது சரியல்ல என்றும் இச்சம்பவம் பட்டப்பகலில் பொது மக்களில் பலர் அறிய நடந்தது என்றும், டேவிட் கிணற்றில் விழுந் ததால் ஏற்பட்ட அநேக எலும்பு முறிவுகள்தான் அவருடைய மரணத்திற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. சப்கலெக்டரின் விசாரணை அறிக்கை கிடைத்த பிறகு முழுவிவரங்களும் தெரிய வரும்.



ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்கள் அடிப்படையிலும் சரி, சப்கலெக்டர் விசாரணை அறிக்கை வந்த பிறகு அதன்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. சப்கலெக்டர் தீவிரமாக விசாரிக்க முன்வந்திருக்கிறார்கள். மன்றத்தில உறுப்பினர் அவர்கள் தெரி வித்த கருத்தும அவர்கள் நினைவிற்கு வரும். அறிக்கை வந்த பிறகு அதன் மீது அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும். எனவே அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி மேலும் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலு வல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க முதல் கவன ஈர்ப்பு ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது.

## 4. கவன ஈர்ப்பு.

அரசு கஸ்தூர்பாகாந்தி மருத்துவமனையில் பெனிசிலின் ஊசி போட்ட தால் ஏற்பட்ட மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ( ) திருவாளர்கள் எஸ். இராசாராமன், பாபு ஜனார்த்தனன், ரா. கிருஷ்ணன், டி. மணி, ந. பழனிவேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ப. பொன்னுரங்கம், மு. அரங்கநாதன். அ. செல்வராசன், என். எஸ். வி. சித்தன். அ. ரகுமான்கான், வி. பி. பாலசுப்பிர மணியன், ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன், எஸ். என். இராம சாமி, ட. தீர்த்தராமன், ப. வெங்கடசுப்பிரமணியம், பெ. சு. திருவேங்கடம், இரா. தாமரைக்கனி ஆகியோர் கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

> "சென்னை கஸ்தூர்பா காந்தி அரசு மருத்துவமனையில்
> 22-4-1981 அன்று பெனிசிலின் ஊசி போட்டதால்
> ஒரு மாணவி இறந்தது குறித்து"

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "சென்னை கஸ்தூர்பா காந்தி அரசு மருத்துவமனையில் 22-4-1981 அன்று பெனிசிலின் ஊசி போட்டதால் ஒரு மாணவி இறந்தது குறித்து"

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திரு. சுந்தரேசன் என்பவரின் மகளும், என். கே. டி. மகளிர் உயர்நிலைப் பள்ளியின் மாணவியுமான 14 வயது சாந்தி சென்னை கஸ்தூரிபா காந்தி மருத்துவ மனையிலுள்ள பள்ளி சுகாதார வெளியிருப்பு நோயாளி பகுதிக்கு 15.4.81 அன்று காலை 9.30 மணிக்கு சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு வலது கண்ணில் ஏற்பட்ட கட்டிக்காக ஸ்ட்ரெப்டோமைசினும், ப்ரொக்கெய்ன் பெனிசிலினும் போடும்படி பள்ளி மாணவர்கள் சிகிச்சைப் பிரிவிற்கான மருத்துவ அதிகாரியால் பணிக்கப்பட்டது. மேற்படி ஊசி மருந்து செவிலியரால் போடப்பட்டது. ஊசி போட்ட ஐந்து நிமிடங்களில் நோயாளி வாந்தி எடுத்ததுடன் மயக்க முற்றார். பாயில்ஸ் கருவியின் மூலம் செயற்கை முறையில் சுவாசிக்க வைக்கும் முறை மேற்கொள்ளப்பட்டது. நோயாளிக்கு நரம்புமூலம் குளுகோஸ் மற்றும் டெரிபிலின் ஊசி மருந்துகள் செலுத்தப்பட்டன. முக்கிய முதலுதவி அளித்தபின் நோயாளியை தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டார். இ. ஸி. ஜி. எடுக்கப்பட்டது, நோயாளியின் நிலைமை 11 மணியிலிருந்து தேற ஆரம்பித்தது. மூச்சு விடுதல், நாடித் துடிப்பு, இரத்த அழுத்தம் முதலியன தேறின. ஆனால், பகல் 1 மணிக்குமேல் நோயாளிக்கு பல்மோனரி ஈடிமா (Pulmonary oedema) ஏற்பட்டது. இருதய சிகிச்சை நிபுணர் நோயாளியை பார்த்து இரத்த ஓட்டம் நின்றுவிட்டதாக அறிவித்தார். மேலே கூறப்பட்ட சிகிச்சைகளுடன் லோமோடெக்ஸ் I. V. ட்ரிப் நோயாளிக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் ஏற்கனவே, பல தடவை இந்த ஊசி போடப்பட்டுள்ளதால் இப்பெண்ணிற்கு 15-4-81 அன்று சோதனை ஊசி (Test dose) போடவில்லை என்று மருத்துவமனை கண்காணிப்பாளர் அறிவிக்கிறார். ஸ்ட்ரொப்டோமைசின் மற்றும் பெனிசிலின் ஊசிகள் (காம்பினேஷன்) போட்டதால் ஏற்பட்ட விளைவு என்றும்கூறுகிறார். இந்த இறப்பு மருத்துவர்களின் சக்திக்கும் மீறியதாகும்.



இந்த செய்தியைக்கேட்டவுடன் மருந்து ஆய்வாளர் மருத்துவமனையில் ஏனைய வார்டுகளிலிருந்து பெறப்பட்ட இம்மருந்தின் இருப்பிலிருந்து சோதனைக்காகச் சிறிது எடுத்துக் கொண்டார் என்றும், 75 வயால் (vial) ஸ்ட்ரொப்டோமைசின் 2 வயால் புரோ—பென்சைல் பெனிசிலின் இருப்பை நோயாளிக்குக் கொடுக்கக் கூடாதென்று தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டது என்று மருந்து கட்டுப்பாடு அதிகாரி அறிவிக்கிறார், இதே இருப்பிலிருந்து போடப்பட்ட ஊசியினால் மற்ற நோயாளிகளுக்கு எந்த விதமான ஊறும் ஏற்படவில்லை என்று மருந்து ஆய்வாளர் அறிவிக்கிறார். இந்த மருந்தின் தரத்தைப் பற்றிய அறிக்கை கிங் நிலையத்திலுள்ள சோதனைக் கூடத்தினின்று மருந்து கட்டுப்பாடு அதிகாரியால் எதிர்பார்க்கப்படுகிறது. மராட்டிய மாநிலத்தில் செய்யப்படும் ஸ்டிரப்டோமைசின் ஊசி மருந்தின் தரத்தை ஆய்வு செய்யுமாறு மகாராட்டிர மாநில அரசு கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மருந்து கட்டுப்பாடு அதிகாரி தெரிவிக்கிறார். ஐ.டி.பி.எல் (I.D.P.L) நிறுவனத்திற்சாக இன்டிராக் (Int ac) நிறுவனம் தயாரிக்கும் புரோ—பென்சைன் பெனிசிலினை ஆய்வு செய்யுமாறு காஞ்சிபுரத்திலுள்ள முதுநிலை மருந்து ஆய்வாளர் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறார்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சிறுமிக்கு 1977ஆம் ஆண்டிலிருந்து பல தடவைகள் ஸ்ட்ரெப்டோ பெனிசிலின் ஊசி போடப்பட்டுள்ளதாக இந்த விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால், 1977ஆம் ஆண்டிலிருந்து போடப்பட்ட அந்த ஊசியில் எந்தவிதமான எதிர் நடவடிக்கையும் இல்லாமல், தற்சமயம் போடப்பட்ட அந்த ஊசியால் அந்த மாணவி இறந்திருக்கிறார் என்று சொன்னால், ஸ்ட்ரெப்டோ பெனிசிலின் ஊசிக்குப் பதிலாக வேறு ஏதாவது ஊசி போடப்பட்டதா? அதனால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாமல் தடுப்பதற்கு அந்த அதிகாரி, டாக்டர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ட்ரெப்டோ பெனிசிலின் ஊசிதான் போடப்பட்டது. அதற்குப் பிறகு எந்த வயாலில் போடப்பட்டதோ, அந்த வயாலின் பேச் நம்பர் எல்லாம் எடுத்து, அந்த பேச்சிலே இருக்கக்கூடிய மருந்து, இந்த குறிப்பிட்ட வயாலில் மிகுதியாக இருந்த மருந்து, அதாவது ஒரு சொட்டு இருந்தாலும்கூட, அதை எடுத்து சோதனை செய்ததில், எந்தவிதமான கோளாறும் இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டது. துரதிருஷ்டவசமாக அனபலோக்டிக் ஷாக் என்று சொல்லக்கூடிய ஷாக் ஏற்பட்டது. எவ்வளவுதான் எச்சரிக்கையாக இருந்தாலும்கூட, சிலநேரங்களில் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்பட்டு விடுகின்றது. அந்தமாதிரியான விபத்து இது என்று கருதப்படுகிறது.

[1981 மே 11

அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக்குழு

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவன் என்ற முறையில்,

1. ஆதரவற்றவர்கள், சோம்பித் திரிபவர்கள் ஆகியோரது பிரச்னைகள்பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் இரண்டாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையையும்

2. சிறப்பங்காடிகள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் மூன்றாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையையும்

இந்த அவை முன் வைக்கிறேன்.

6. அரசினர் தீர்மானம்.

பேரவைக் குழுக்களின் பதவிக் காலம் நீடிப்பு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1980 ஆம் ஆண்டு ஜூலை-ஆகஸ்டு திங்களில் அமைக்கப் பெற்ற—

1. பேரவை விதிகள் குழு,
2. உரிமைக் குழு,
3. அவைக் குழு,
4. சட்ட விதிகள் ஆய்வுக் குழு,
5. அரசு உறுதிமொழிக் குழு,
6. பொதுக் கணக்குக் குழு,
7. பொது நிறுவனங்கள் குழு,
8. மதிப்பீட்டுக் குழு.

ஆகியவை பேரவை விதிகளின்படி சில, அமைக்கப் பெற்றத் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்கான காலவரம்பிலும், மற்றவை நிதியாண்டு இறுதி வரையிலும் உள்ளது. இதை முறைப்படுத்தும் வகையில் அந்தந்த பேரவை விதிகளைத் தளர்த்தி தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து 31-3-1982 வரையில் அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும்"

"பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, மதிப்பீட்டுக் குழு மற்றும் சட்டவிதிகள் ஆய்வுக் குழு ஆகியவற்றில் தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் மேலவை உறுப்பினர்களே தொடர்ந்து 31-3-1982 வரையிலும் பணியாற்ற மேலவையின் ஒப்புதலைப் பெறலாம்",



1981 மே 11]

திரு சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குழுக்கள் சம்பந்தப்பட்ட வரைக்கும் ஒவ்வொரு ஆண்டும், புதிதாக தேர்ந்தெடுப்பதுதான் முறையாகும். அதற்கு இந்த விதிகளைத் திருத்தி, அதை அடுத்தவரை சென்ற ஆண்டிலே இருந்தவர்களையே அந்தக் குழுக்களில் நியமிப்பது என்பது அவ்வளவு சரியாக இல்லையென்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே, சொல்லப்பட்டது — இந்த குழுக்கள் பூராவும் 8 மாதங்கள்தான் பணியாற்றின, ஆகவே, இந்தக் குழுக்களை மேலும் ஓராண்டு காலம் வரை நீட்டிக்கலாம் என்று எல்லாக் கட்சித் தலைவர்களின் கருத்து அறிந்து, அதற்குப் பிறகுதான் இந்தத்தீர்மானம் வருகிறது.

[முற்பகல் 10.10]

திரு. சோ. அழகர்சாமி பேசும் பொழுது இப்படியெல்லாம் சொல்வதாகச் சொன்னார்கள். அப்படியானால் அவர்களே திரும்ப வரவேண்டுமென்றுச் சொன்னால், நாமினேஷன் கொடுத்து அதே ஆட்கள் வருவதற்கு ஆட்சேபணை இல்லை. ஆகவே தேர்ந்தெடுக்கக்கூடிய முறை ஒவ்வொரு வருஷமும் தேர்ந்தெடுக்கிற முறையிலே இந்த திட்டத்தை போடவேண்டுமென்று அலுவல் ஆய்வுக் குழுவிலே சொன்னேன். ஆகவே அதே ஆட்கள் இருக்கலாம் என்று சொல்கிறார்கள் என்று நீங்கள் கேட்டீர்கள். நானும் அவர்களே வரவேண்டுமென்றால் நாமினேஷன் கொடுக்கட்டும் என்று சொன்னேன். ஆண்டுக்காண்டு அதை மாற்றுவதுதான் சரியாக இருக்கும் என்று என்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறேன். இப்போதிருப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மார்ச் மாதம் 27-ம் தேதி கூட்டிய அலுவல் ஆய்வுக் குழுவிலே இதுபற்றி நாம் முடிவு செய்தோம். ஆகவே எட்டு மாதங்கள் என்றாலும் கூட இப்போது மூன்று, நான்கு மாதங்களில் எந்த பணிகளும் நடப்பதற்கு வாய்ப்பில்லை. இடையிலே கேட்டால் நான்கு மாதங்களில் எல்லா குழுக்களும் பணியாற்றுகிற நிலை இருந்தது. எல்லாக் குழுக்களும் ஏற்றுக் கொண்ட பணிகள் எல்லாம் அரை குறையாக இருந்தன. இவைகளையெல்லாம் வைத்து பேசுகின்ற பொழுதுதான் இன்னும் ஓராண்டிற்கு நீடிக்கலாம் என்று பொதுவாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று ஒரு மாதத்திற்கு முன்னாலே சொல்லியிருந்தாலும் கூட, நாம் அதற்கான நாட்களை எல்லாம் வைத்து மறுபரிசீலனை செய்திருக்கலாம். ஆக பண்ணக்கூடாது என்பதல்ல. மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களின் கருத்தை உணர்ந்தாலும் கூட, இதற்கு இப்போதிருக்கிற சங்கடங்கள் என்னவென்று சொன்னால் மார்ச் 27-ம் தேதியே முடிவு செய்து விட்டோம்,

அதற்குப் பிறகு ஒரு 15 நாள் கழித்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கருத்தைச் சொன்னாலும் கூட நாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்து மறுபரிசீலனைக்கு, இதற்கான நாட்களை ஒதுக்கி தந்து, மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் கூறுவது போன்றோ, அல்லது மற்றபடியோ அதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கலாம். இது கடைசி கட்டமாக இருப்பதால் இனிமேல் அனுமதிப்பதற்கு இல்லை. இப்போது அந்த தீர்மானத்தை நிறைவேற்றா விட்டால் அடுத்த குழு கூடி நாம் முறைப்படி தீர்மானத்தை நிறைவேற்றுகிறவரை எந்தக் குழுவும் செயலாற்றவே முடியாது. ஆக அந்த இக்கட்டான நிலை ஏற்படுவதன் காரணமாக இந்த தீர்மானத்தை நிறைவேற்றித்தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த குழு சம்பந்தமாக ஏதாவது சொல்வதென்றால் கட்சித்தலைவர் மூலமாக குழுவிற்கு செய்தி அனுப்பலாம்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, ஹவுஸ் ரூல்ஸ் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே கருத்துக்களை எல்லாம் அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்க முடியாது. இந்த கருத்துக்ளை எல்லாம் கட்சித் தலைவர்கள் மூலம் சொல்லியனுப்பகவண்டும். இது தான் முடிவு. கட்சிகளிலே இருக்கிற விவாதம் நீங்கள் விவாதித்துக் கொள்ள வேண்டியது. ஹவுஸ் ரூல்சை மாற்றுவதற்காகத் தான் இந்த தீர்மானம் இப்போது வருகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் கூறிய கருத்திற்கு மதிப்பளித்தோம். நேரம் இல்லையென்ற காரணத்தால் விடுபட்டது என்று சொன்னேன். உறுப்பினர் கருப்பையா அவர்கள் சொல்வதைத் தளர்த்துவதற்காகத் தான் இந்த தீர்மானம்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே,........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானம் நிறைவேற்றியாகி விட்டது. இனிமேல் இதிலே எந்தவிதமான கருத்துக்களும் இல்லை. கருத்துக்களை ஏற்பதற்கு இல்லை. மாண்புமிகு கருப்பையா அவர்களைப் போன்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து இருக்கலாம். ஆகவே இந்தப் பிரச்சினையிலே இனிமேல் கருத்தைச் சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. வேறு ஏதாவதிருந்தால், அலுவல் ஆய்வுக் குழுவில் நாம் பேசிக் கொள்ளலாம்.



*டாக்டர் கே. சௌரிராஜன். மாற்றுத் தலைவர் அவர்களே. எனக்கு சந்தேகங்களை விளக்கவேண்டும்மென்று நான் அனுமதி கேட்டேன். நான் சந்தேகங்களை விளக்கமுடியாது என்று சொன்னால் நான் உட்கார்ந்து விடுவதற்குத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.வி.வி. சுவாமிநாதன்). மசோதாவின் மீது விவாதம் நடக்கிறபோது முழுவிவாதமும் செய்யலாம். இப்போது அறிமுகப்படுத்துகிறபோது அடையாளப் பூர்வமாக ஆட்சேபனைத் தெரிவிததால் போதும்.

DR.K.SOURIRAJAN; I said teat I was opposing the Bill at the time cf iutroduction itself. Am I not entitled to oppose

Thiru V.V.SWAMINATHAN(TEMPORARY CHARMAN); The hon.Member is ontitled to make his objection.

DR.K.SOURIRAJAN, My objection must be validated by arguments. How can 1 object without validation. I must raise my point of doubts.
ஆகவே ஆர்டிகிள் 14.19 இரண்டையும் சேர்த்து வைத்துப் படிக்கிற நேரத்திலே தமிழகத்திலே அங்கே உள்ளவன் செலுத்துவது குறைவாசு இருக்கும் ஆனால் சென்னை நகரத்திலே உள்ளவன் அதிகமாகக் கட்டக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. வியாபாரிகள் செங்கற்பட்டிலோ தாம்பரததிலோ உள்ளவர்கள் குறைவாகக் கட்டுகிறபோது சென்னை நகரிலே இருக்கிறவர்கள் மட்டும் அதிகமாக செலுத்தக் கூடிய நிலைமை முன்னிக்குபபின் முரனாக இருக்காதா என்ற வினாவை எழுப்ப விரும்புசிறேன். It is my humble opinion that it is the brain-wave of the Finarce Secretery.
மாண்புமிகு நாவலர் அவர்கள்கூட சட்டப்பேரவையிலே நிதிநிலை அறுக்கையிலே ரையாற்றுகிற நேரத்திலே வருகிற வரியிலே இருந்து ஒரளவு சென்னை மாநகரத்திதகுக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கிறார்கள். மென்னை மாநகராட்சியிலே மேல் உள்ள அனுதாயத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இங்கே உள்ள நிதித்துறை செயலாளர் அவர்கள் ஒரு காலத்திலே சென்னை மாநகாரட்சியின் ஆணையராக ளருக்கிறார். அதற்கு மாற்றுவழியிருக்கிறது. ஆர்ட்ராய் வரிவை சென்னை முன்சிபல் ஆக்டின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று நான் மாநசராட்சி உறுப்பினராக லஇந்தபோதே பல முறை எடுத்துச் ொலையும் அரசாங்கம் அந்த முறையீட்டிற்கு செவிசாய்க்கவில்லை. அடிஷனல் சர்சார்ஜ என்பது சட்டத்திற்குப் புறம்பாக உள்ளது, மக்களை டிபரன்ஷியேட் பண்ணுவதாக உள்ளது, நீதிமன்றத்திலே நிற்குமா என்ர் ஐயப்பாட்டை நான் தெரிவித்துக்கொண்டு அறிமுகம் செய்யப்படுகிறபோதே பேரவையில் 46 பறுப்பினர்கள் சட்டக் கல்லூரியிலே பயின்றவர்கள் இருக்கின்றார்கள் நம்திடைய பேரவையிலே அதைக் கொண்டுவராது, வாபஸ் பெற்றுக்கொண்டு பலருடைய ஆலோசனையைக் க ந்து கொண்டு அறிசிகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1981 மே 11

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி .வி. சுவாமிநாதன்). பேரவைமுன்னுள்ள கேள்வி. ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனைவரி (மேல்வரி) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோறுகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம். இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செங்கறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.வி.வி.சுவாமிநாதன்). இச்சட்ட முன்வடிவு அறிமுகம் சேய்யப்பெற்றிருக்கிறது.

(மாற்றுத் தலைவர் திரு. பி. வி. சுவாமிநாதன் தலைமை) அதைப்போல் இந்தச் சட்டம் ஆகிவிடக்கூடாது என்ற பயத்தின் காரணமாக இங்கே நான் இத்த சட்டமுன்வடிவை ஆரம்பக் கட்டத்திலேயே எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்குள்ள சில நியாயமான சந்தேகங்களை நீங்கள் விளக்க வேண்டு மென்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். சர்சார்ஜ் என்றாலே எக்ஸ்ட்ரா சார்ஜ் ஓவர் சார்ஜ் என்று தான் டிக்ஷனரியிலேயே அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடிஷனல் சர்சார்ஜ் என்று சொன்னால் எக்ஸ்ட்ரா சர்சார்ஜ் என்று தான் பொருள்படுமே தவிர வேறு எந்த அளவுக்கு பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை. குறிப்பாக சில பகுதிகளிலே இந்த அடிஷனல் சர்சார்ஜ் விதிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டத்திலே உள்ள நிலைமைகளைப் பார்க்கிறபோது ஆர்டிகிள் 14 ஆப் தி கான்ஸ்டிட்யூஷன்படி, சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்ற உரிமையை கொடுத்தி ருக்கிறார்கள். ஆர்டிகிள் 19 ஆப் தி கான்ஸ்ட்டியூஷன் படி இந்த நாட்டிலே எந்த இடத்திற்கும் யார் வேண்டுமானாலும் சென்று தங்களுடைய தொழிலை அல்லது வியாபாரத்தை தொடங்கலாம் என்று சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது, அடிப்படை உரிமை ஒவ்வொருவருக்கும் தரப்பட்டு இருக்கிறது. ஆர்டிகிள் 14 ரெட் ஆலாங் வித் ஆர்டிகிள் 19 ஆப் தி கான்ஸ்ட் டியூஷன் என்று எடுத்துக் கொண்டால் நிச்சயம் தமிழ்நாட்டிலே சென்னையிலே உள்ள ஒருவர் அதிகமான அளவுக்கு சர்சார்ஜ் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு வி. வி. சுவாமிநாதன்): முழு விவாதம் மாதிரியிருக்கிறது. சுருக்கமாக உங்கள் ஆட்சேபணை யைத் தெரிவிக்கலாம்.

[முற்பகல் 10.20]

அறிவிப்புகள் (தொடர்ச்சி)

ஆ. 1981 (ஆ இ) பொது விற்பனை வரி (திருத்தம்) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) :— பேரவைக்கு ஓர் அறிவிப்பு : தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தம்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.



1981 மே 11]

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

ஆ. பொது விற்பனை வரி (திருத்தம்) சட்ட முன்வடிவு, தமிழ்நாடு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :— தலைவர் அவர்களே, தமிழ்நாடு 981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தம்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :— இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) :— இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

இ. பட்டா பாஸ் புத்தகம் வழங்கல் சட்டமுன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பட்டா பாஸ் புத்தகம் வழங்கல் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:- இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமி நாதன்):— இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக் கிறது.

7. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

இ. இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு 1981 (ஆ. இ).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்);— பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (தொடர்ச்சி).

ஈ. இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் — இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்):— இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 7. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

ஈ.. சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 (ஆ.இ.).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி, வி. சுவாமிநாதன்):— பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 8. அரசினர் சட்டமுன்வடிவுகள்— தொடர்ச்சி.

(உ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெஞ்செழியன்:- தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த)சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெஞ்செழியன்:—இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்):- இச்சட்ட முனவடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஊ) நிதி ஒதுக்க (எண் 3)சட்டமுன்வடிவு, தமிழ்நாடு 1981.

(சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 46/1981).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:— தலைவர் அவர்களே "தமிழ்நாடு 981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1981) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

---

*1981ம் ஆண்டு மே மாதம் 9-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



*திருமதி த. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுத் திட்டங்களை நிறைவேற்றி நிர்வாகம் செய்வதற்கு இந்த மன்றத்தின் அனுமதியைப் பெற்றுவரும் இந்த அரசு, மாண்புமிகு உறுப்பினர்சள் பலர் கட்சிப் பாகுபாடின்றிப் பல நல்ல ஆலோசனைகளை இங்கே கூறியிருப்பதைக் கவனத்திற்கொண்டு செயல்பட வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். புகழுரைகளை மறந்து இடித்துரைகளை ஏற்றுச் சிறந்த நிர்வாகத்திறமையுடையது இந்த அரசு என்ற பெருமையை நிலைநாட்டி நிறுத்த மாண்புமிகு அமைச்சர்கள் உறுதியாக உழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு ஆட்சியின் ஆணிவேராக விளங்குவது கிராம நிர்வாகம் தான். அந்தக் கிராம ஆட்சி முறை முற்றிலும் இல்லாமல் போய் சீர்கேடான நிலைமை ஏற்படும் அளவிற்கு ஊராட்சி ஒன்றியங்களைக் கலைத்த கையோடு கிராம அதிகாரிகளையும் அகற்றிவிட்டு, கிராமங்களைச் சூனியப் பிரதேசமாக இந்த அரசு ஆக்கியிருக்கிறது.

அடுத்த மாதம் பள்ளிகளும், கல்லூரிகளும் திறந்தவுடன் ஜாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் ஆகியவற்றை வாங்குவதற்கு ஏழை எளிய, மிகவும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சா ந்த பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்கு ஜாதிச் சான்றிதழ் வாங்குவதற்கு இந்த அரசு எப்படி வழிகாட்டப் போகிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

உதாரணமாக என்னுடைய தொகுதியில் தெற்குத் தியாகனூர் என்ற கிராமத்தில்—சாதாரணமாக தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் அந்தப் பகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் பலமுறை அதிகாரிகளை அணுகி அந்த ஊரிலே உள்ள கிணற்றுக்கு உருளை போடச் சொல்லிப் பலமுறை கேட்டும் இதுவரையில் அதிகாரிகள் அதைச் செய்யவில்லை.

இப்படி இருக்கிற இந்தச் சூழ்நிலையில் மக்களது துயரம் பலவும் இந்த அதிகாரிகளுக்கு நேரடியாகத் தெரிய எந்தவிதத்தி லும் நியாயம் இல்லை என்ற குற்றச்சாட்டை வைக்கிறேன். பழம் பெருஞ்சாளிகள் பஞ்சாயத்துக்களைச் சுரண்டி விட்டன என்பது போலக்கூறி பஞ்சாயத்துக்களைக் கலைத்தீர்கள். இன்றைய உங்களின் அதிகாரிகள் ஊழலற்றவர்கள் என நிருபிக்க கடந்த ஓராண்டில் பஞ்சாயத்து நிதியிலிருந்து மக்களுக்குப் பயன் உள்ள சில சட்டதிட்டங்களைத் தீட்டி, அவைகளை நடைமுறைப்படுத்துகிறோம் என்று கூறிக் கொண்டிருக்கும் இந்த அதிகாரிகள் செய்துகொண்டிருக்கும் செலவுகளைப் பட்டியல் போட்டு விளம்பரப்படுத்த நீங்கள் முன்வருவீர்களா? அவர்

களுடைய நடைமுறை மக்களுக்குப் பயன்பட்டுள்ளதா என்று தெரிந்துகொள்ள, அவைகளை விளம்பரப்படுத்துவீர்களா என்று தெரிந்துகொள்ள விருப்புகிறேன். எனவே, இதுபோன்ற குறைகளுக்கு முடிவுகட்ட மாண்புமிகு முதல்வர் இந்த மாமன்றத்தில் உறுதி அளித்தபடி விரைவில் உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும். அதில் ஆதி திராவிடர்களுக்கு குறிப்பாக, பெண்களுக்கும் வாய்ப்புகளை நிச்சயம் உருவாக்கித் தருவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

பஸ் கட்டணங்களைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். திறமைக் குறைவின் காரணமாக அரசு போக்குவரத்துக் கழகங்கள் சுமக்கின்ற பெரும் செலவினங்களை ஈடுகட்ட, பயணிகள் கட்டணங்களைக் கூட்டிக்கொண்டே போவதில் எள்ளளவுகூட நியாயம் இல்லை. வேகத்தடை அரசு பேருந்துகளுக்குமட்டும்தானா? தனியார் பஸ்களுக்கு இல்லையா என நான் கேட்க ஆசைப்படுகிறேன். அப்படியானால். இந்த அரசு மறைமுகமாகத் தனியாருக்கு உதவிசெய்து, பொதுத் துறைக்குத் துரோகம் இழைக்கிறது என்று குற்றம் சாட்டவிரும்புகிறேன். இதுபோன்ற தாறுமாறான முடிவுகளால் தனியார் பேருந்து. பயணிகளைக் கவர்ந்து வசூல்களைக் குவித்துக் கொள்ளும்; இனி பஸ் போக்குவரத்தைத் தனியார்களிடமே ஒப்படைத்து விட்டால் என்ன என்கிற பிற்போக்கான எண்ணத்திற்கு இன்று மக்களை இந்த அரசு வலிய தள்ளி வருகிறது என்பதையும் இந்த மன்றத்தில் நான் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, இவ்வளவு பெரிய வரவுசெலவுத் திட்டத்தில் ஆதிதிராவிட மக்களுக்கும் பழங்குடியினருக்கும் 3%தான் இந்த அரசு ஒதுக்கியுள்ளது. பன்னெடுங்காலமாக, சமூக அநீதிகளுக்கு ஆளான ஆதி திராவிடர்களுக்கு ஏதோ அள்ளிக் கொடுப்பதைப் போன்ற ஒரு பிரமையை சிலர் வளர்ப்பதைப் பார்க்க எனக்கு வியப்பாக இருக்கிறது. சாதி வெறியர்களால் என் இன மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் இழிபுக் கொடுமைகளை நோக்க இந்தச் செலவு மிகச் சாதாரணம் என்பதை இந்த அரசுக்கு நான் உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

5 வயது தொடங்கி, 60, 70 வயது வரையிலும் கண்பார்வையிலும், வயல்களிலும், காடுகளிலும், தொழுவங்களிலும் உள்ள வரையிலும் உடலில் ஒரு சொட்டு ரத்தம் உள்ள வரை சாக்கடைகளிலும் கடையர்களாய் நின்று ஒய்வு ஒழிவின்றி தெருச் உழைக்கின்ற என் அன்புச் சகோதர மக்கள் இன்று பாதுகாப்பற்ற நிலையில் தவிக்கின்றனர்.

பகுத்தறிவுச் சிங்கங்கள் வாழ்ந்த இந்தத் தமிழ் மண்ணில் தீண்டாமையை, சாதி வெறிகளை அகற்றுவதில் இந்தியாவிலேயே முன்னிலை வகித்த இந்த இன்பத் தமிழகத்தில், சாதிக் கலவரங்



கள் இன்று சாதாரணமாகிவிட்டன. ஆளுங்கட்சி சமுதாயத்தின் தாழ்ந்த மக்களுக்கு ஆதரவாய் இல்லையென்பதே இதற்குக் காரணம். பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஆண்டுக்காண்டு தங்களுக்கு நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை பெரும் அளவில் வளர்க்க இந்த அரசு மறந்துவிட்டது. இன்றைக்குத் தீண்டாமைக் குற்றங்களைத் தண்டிப்பதிலே, சாதிச் சண்டைகளை அகற்றுவதிலே, தமிழ்நாடு காவல் துறைக்கு மெய்யான நம்பிக்கை இருப்பதாக என் போன்றவர்களுக்குச் சிறிது கூட நம்பிக்கையில்லை என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் புளியங்குறிச்சி என்கிற ஊரில் ஜாதி இந்துக்களால் அரிசனங்கள் கடந்த 3 ஆண்டுகளாக அனுபவிக்கும் தொல்லைகளுக்கும் துயரங்களுக்கும் எல்லையே இல்லை. பொது வாக, அங்கு ஜாதி இந்துக்களின் அக்கிரமச் செயல்களுக்குத் துணைபோகிற அரசு அரிசனங்களின் நியாயங்களுக்கு ஆதரவாய் நிற்கவே இல்லை. நாங்கள் அங்கு நடைபெற்ற சோகச் சம்பவங்களை முழுமையாக விசாரிக்கும்படி மாவட்டக் காவல் துறை தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாண்புமிகு முதல்வர், மேலும் தாழ்த்தப்பட்ட சமுதாய அமைச்சர் ஆகியோரைப் பல முறை நான் அணுகிக் கேட்டும், இதுவரை எதற்கும் ஓர் விடிவு ஏற்படவில்லையென்பதை மிகவும் கவலையுடன் நான் இந்த மன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுபோன்ற கொடுமைகள் எல்லாம் இன்றைக்குப் பல இடங்களில், பல நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி, மக்களுக்கு மிகவும் பெரும் துன்பத்தையும் துயரத்தையும், மறக்க முடியாத சம்பவங்களையும் ஏற்படுத்தி உள்ளன என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, அரிசன தாழ்த்தப்பட்ட ஏழை மக்களுக்கு இந்த ஆட்சியில் போதிய பாதுகாப்பு இல்லையென்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு நிகழ்ச்சி. ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் பொது நிதியிலிருந்து மருத்துவமனை ஒன்றைக் கட்ட ஊராட்சி ஒன்றியம் அனுமதி அளிக்க முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு இந்த அரசும் அனுமதி அளித்துள்ளது. ஆனால், அதில் என்னுடைய கோரிக்கை ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து செலவு செய்யும் தொகை பெருவாரியாக மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்பதாகும். 3,000 மக்கள் தொகை உள்ள சிறிய ஊருக்கு மருத்துவமனை கொடுக்கவேண்டுமா? 50,000 ஜனத்தொகை உள்ள ஊருக்கு மருத்துவமனை கொடுக்க வேண்டுமா என்று நானும் இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நவம்பர் மாதத்திலிருந்து போராடுகிறேன். இந்த அரசு தன்னுடைய கொள்கையில் பிடிவாதமாக இருக்கிறது.

[முற்பகல் 10.30]

ஊராட்சி ஒன்றியக்குழுவால் மறுதளிக்கப்பட்ட பிரச்சினை,
மக்கள் குழுவில் ஏற்றுக்கொள்ளப்படாத பிரச்சினை,
டி.டி.ஓ.கோட்ட வளர்ச்சி அலுவலர் இருக்கும்போது மன்றத்திலே
வைக்கப்பட்டு அனுமதித்து அரசு தனிப்பட்ட ஒரு நபரின்
அதிகாரத்திற்குட்பட்டு, அந்த அதிகாரியின் முன்மொழிவை
அனுப்பி அங்கீகாரம் பெற்றுவிட்டார்கள். இது தவறு. மக்களுக்கு
பயன்படும் வகையில் ஊராட்சி ஒன்றிய பொது நிதி, மக்களுக்கு
நல்ல முறையில் பயன்படவேண்டும் என்றால், கண்டிப்பாக பெரு
வாரியான மக்கள் வாழும் அந்த ஊருக்குத்தான் கொடுக்க
வேண்டும் என்று இன்று வரையில் எல்லா அமைச்சர்களையும்
ஒவ்வொருவராகக் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டேன். ஆனால்
இன்று வரை அது நடைபெறவில்லை. இதன் மர்மம் என்ன
என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல. முன்னுரிமை கொடுக்க வேண்டியதுதான்.
அதாவது இப்போது நாங்கள் கொடுத்துவிட்டோம். அடுத்து
அந்த ஊருக்குக் கொடுக்கிறோம் என்ற கொள்கையை கண்டிப்
பாக நான் ஏற்றுக் கொள்ள மறுக்கிறேன். ஏன் என்று சொன்னால்,
தகுதியுள்ள ஊருக்கு முதலிலே முன்னுரிமை கொடுத்துவிட்டு,
பின்னர் நம்முடைய பட்ஜெட்டிலே மீதி இருந்தால், பணம்
அதிகமாக இருக்குமானால் அடுத்த ஊருக்குக் கொடுக்கவேண்டும்
என்பதை நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் தலைவாசலில் ஆரகமூர் கோவில் மிகவும் பிரசித்த
பெற்றக் கோவிலாகும், அந்தக் கோவிலுக்குச் சொந்தமான ஒரு
பொருள். அது நீண்ட நாட்களாகப் பழம் பெருமை வாய்ந்த
கோவில் என்பதால் அதில் உள்ள அனைத்தும் பதிவேட்டில்
வரவில்லை. ஆனால் ஒரு சிலர் பெரிய மனிதர்கள் என்று கூறிக்
கொள்பவர்கள், அந்த ஊர் பொதுமக்கள், அந்தப் பொருளை
எடுத்துச் சென்று விற்க முயன்றபோது முன்னெச்சரிக்கையாக
இந்த அரசுக்கு நான் அறிவித்தேன். ஆனால் அங்கே என்ன
நடந்தது. 20 ஆண்டுகளாக கலப்புத் திருமணம் செய்து கொண்டு
பல சிக்கல்களுக்கு இடையில் அந்த மக்களோடு ஒன்றி வாழ்ந்து,
குழந்தைகளையும் வைத்துக் கொண்டு அவதிப்படும் எனக்கு இந்த
அரசு கொடுத்தது அவமானந்தான் என்பதை நான் சொல்லிக்
கொள்ளாமல் இருக்க முடியாது. அங்கே சென்ற காவலர்கள்,
அங்கே சென்று உங்கள் சட்டமன்ற உறுப்பினர் உங்கள் மேல்
புகார் கொடுத்திருக்கிறார் என்று சொன்னவுடன் அவர்கள் தாங்
களாகவே ஒரு சின்னக் கூட்டத்தைப்போட்டு, அவர்கள் எல்லோ
ருடைய கையெழுத்தையும் பெற்று அந்தப் பொருள்களை விற்கத்
தயாராகி, அது வேறு வழியில் திசை திருப்பப்பட்டு, மற்றவர்
களைக் காம்ப்ரமைஸ் செய்து, அந்தப் 'பொருள்கள் விற்கப்
பட்டது. இந்த ஆட்சியில், இப்படிப்பட்ட அரசுக்குச் சொந்தமான
பல பொருள்கள், தங்களைப் பெரிய மனிதர்கள் என்று கூறிக்



கொண்டு இருப்பவர்கள், விற்று அது மக்களுக்குப் பயன்படாத
நிலையை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த
அரசின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, நாம் பெண் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பை
கட்டி கொடுத்துள்ளோம். அந்தக் குடியிருப்புகள் உள்ள ஊரில்
பெண் ஆசிரியர்கள் கண்டிப்பாக நியமிக்கவேண்டும் என்பது
என்னுடைய கோரிக்கை. ஆனால் இதுவரையில் அந்தக் குடி
யிருப்பில் பெண் ஆசிரியர்கள் இல்லை. அதற்கென வாடகைப்
படியும் பிடித்தம் செய்யப்படவில்லை. இந்த அரசு ஆயிரக்
கணக்கான கோடிக்கணக்கான தொகையை செலவழித்து
ஆசிரியர்கள் குடியிருப்பு மனைகளைக் கட்டியும், அதைப் பயன்
படுத்தி அந்த அதிகாரிகள் அதற்கான வாடகையை வசூல்செய்து
அரசிடம் ஒப்படைக்கத் தவறுகிறார்கள். அதை சட்டமன்ற
உறுப்பினர் என்ற முறையில் எடுத்துக்கூறியும் அவர்கள் கேளாக்
காதினராக இருந்துவிட்டார்கள். அதை இந்த மன்றத்தில் உள்ள
அமைச்சர்களிடத்திலும் சொன்னேன். அதற்கும் எந்தவிதமான
பரிகாரமும் இதுவரை தேடப்படவில்லை.

அதுமட்டுமல்ல, சீனியாரிட்டி அடிப்படையில், தகுதியின் அடிப்
படையில் யார் யார் எந்தப் பள்ளிக்கு நியமிக்கப்பட வேண்டும்
கணவன் மனைவியைப் பிரிக்கக் கூடாது என்பது போன்ற
சட்டத்திற்கு உட்பட்ட சில கோரிக்கைகளைக்கொடுத்தும்,
அதை மீறி நடைமுறைப்படுத்தாமல் விட்டுவிட்டார்கள்.
அதுமட்டுமல்லாமல், அதற்கென ஒரு பெரிய அதிகாரியை
அதாவது ஜாயின்ட் டைரக்டரை அங்கே விசாரணை செய்ய
அனுப்பினார்கள், அந்த ஜயின்ட் டைரக்டர் வருகிறார் என்ற
செய்தியைகூட எனக்குக் கொடுக்கவில்லை. ஆனால் துரதிருஷ்ட
வசமாக நான் அங்கே சென்றபோது அவரிடம் பேச நேர்ந்தது.
அப்படிப் பல விவகாரங்கள் சட்டதிட்டத்திற்கு உட்பட்டு செய்ய
வேண்டும் என்று அவரிடம் வற்புறுத்திக் கூறியும் பலன் அளிக்க
வில்லை. அந்த அதிகாரிகள் செய்ததுதான் நியாயம் என்ற
அடிப்படையில், இந்த அரசு அவர்களுக்கு மாறுதல் அளித்து பல
குடும்பங்களை சின்னாபின்னமாக ஆக்கியுள்ளது. ஆசிரியர்கள்
நல்ல முறையில், நல்ல ஆசிரியர்கள் பள்ளிக்குச் சென்று, பிள்ளை
களின் முன்னேற்றத்திற்கு பாடுபடும் அந்த ஆசிரியர்கள் மிகவும்
தொல்லைக்கு ஆட்படுத்தப்பட்டார்கள். ஆனால் உண்மையிலேயே
பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படாமல், நிம்மதியாக இருக்கும்
அந்த ஆசிரியர்கள் நல்லபடியாக மாறாமல், பிள்ளைகளுக்குச்
சொல்லிக் கொடுக்கக்கூட இல்லாமல் காலத்தை ஓட்டி, இந்த
அரசின் பணத்தைப் பெற்று வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்
கிறார்கள் என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஒரே ஒரு சின்ன பிரச்னையைக் குறித்து நான் நீண்ட நாட்
களாகச்சொல்லிவருகிறேன். கிராமப்புறங்களில் உள்ள பெண்
களுக்கு 'ட்ரை லெட்ரின்' வேண்டும் என்று சொல்லி, அதற்கான
படம்கூட போட்டுக்காண்பித்து இருக்கிறேன். அதுபோன்

செய்து கொடுத்தால் அரசுக்கும் செலவு கம்மியாக ஆகும். மக்களுக்கும் பயன்படுத்துவதற்கு உதவிகரமாக இருக்கும். என்னுடைய தொகுதியில் இரண்டு கக்கூஸ்கள் கட்டியிருக் கிறார்கள். தற்போதுள்ள வறட்சி நிலையில் தண்ணீர் கிடைக் காத காரணத்தால் அந்தக் கக்கூஸ்களை பயன்படுத்துவது சிரமமாக இருக்கிறது. நாம் எவ்வளவோ காசைச் செலவழிக் கிறோமே தவிர, அதை மக்களுக்குப் பயன்படும் வகையில் பயன் படுத்துவது இல்லை. எங்களைப் போன்றவர்கள் குறைகளைச் சொன்னால், அதை கருத்தில்எடுத்துக்கொள்ளாமல், அதிகாரிகள் சொல்வதை வைத்துக்கொண்டு அவர்கள் வைத்ததுதான் சட்டம் அவர்கள் சொல்வதுதான் நியாயம் என்கிற முறையில் இந்த அரசு இயங்குகிறது என்று குற்றம்சாட்டி, அவற்றைக் கண்டிப் பாக நிவர்த்தி செய்தால் மக்களுக்கு நல்ல பலன் ஏற்படும் என்பதைச் சொல்லி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. என். வரதராஜன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1981-82ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு பெற்று, இந்த மாநில அரசு நல்ல காரியங்களைச் செய்ய முயற்சிக்கிறபோது, அது கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டிய மிகமுக்கியமான பிரச்னை என்ன என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

ஜனநாயகம் நம்முடைய நாட்டில் நிலைபெற்று இருந்தால் தான் நீங்கள் இந்த நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு ஜனங்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய முடியும். இன்று ஜனநாயகத்திற்குச் சோதனை ஏற்பட்டு இருக்கும் காலம் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசு, 5 ஆண்டு, காலம் ஆளுவதற்கு அதிகாரம் பெற்று இருக்கும் மாநில அரசு, எந்தவிதமான காரணமும் இல்லாமல் கலைக்கப்படும் என்ற ஒரு பயமுறுத்தல் இந்த நாட்டில் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நேற்றைக்கு முன்தினம் நம்முடைய மாநில முதலமைச்சர், மேற்கு வங்க முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினார் கள். இந்த நாட்டில் ஒரு மாநில முதலமைச்சர் மற்றொரு மாநில முதலமைச்சரைச் சந்தித்துப் பேசுவது ஒரு பாபமான காரியமா? இந்த மாநிலத்திற்கு வந்த வேறு ஒரு மாநில முதலமைச்சரைச் சந்தித்து, இந்த மாநில முதலமைச்சர் தன்னுடைய மாநிலத்தில் என்ன நிலைமை இருக்கிறது, அந்த மாநிலத்தில் என்ன நிலைமை இருக்கிறது என்று பேசி கருத்துப் பரிமாறிக்கொள்ளக்கூடிய ஒரு காரியம் பாவமான காரியமா? மேற்கு வங்க முதலமைச்சர் என்ன தீண்டத்தகாதவரா, அப்படிப்பட்ட சூழ்நிலையில் மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதி பாசு அவர்களை காங்கிரஸ் கட்சி கருது கிறதா? இந்தச் சட்டசபையிலேயே காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் திரு. சுந்தரராஜ் அவர்கள் நேற்றைக்குப் பேசுகிற



போது, இந்த மாநில அரசை மிரட்டுகிறார்கள்—நீங்கள் என்ன அவரோடு பேசினீர்கள் என்று கேட்கிறார்கள். இப்படி ஒரு நாட்டின் முதலமைச்சரைப் பார்த்து அவர் சொல்லவேண்டிய அவசியம் என்ன?

இந்த நாட்டில் 1959 முதல் 1980 பிப்ரவரி 17-ம் தேதி வரை மத்திய அரசாட்சி மாநில அரசுகளைக் கலைத்ததுதானே வரலாறு. மாநில அரசுகளா மத்திய அரசைக் கலைத்தது. இந்த ஜனநாயக பறிமுதல் கூடாது. மத்திய அரசின் ஜனநாயக விரோதப் போக்கு களை விமர்சிப்பதே ஆபத்து என்ற முறையிலே இன்றைக்கு நிலைமைகள் இருக்கின்றன. யாராவது ஒரு அமைச்சர் மத்திய அரசைக் குறைகூறிப் பேசிவிட்டால், அல்லது ஒரு மாநில முதலமைச்சர் பேசிவிட்டால், உடனடியாக மத்திய அரசு தன்னுடைய தண்டாயுதத்தை அந்த மாநில அரசின் மீது தாக்கும். இந்தப் போக்கை நம்முடைய மாநில அரசு உணர்ந்து, உஷாராக இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்,

ஆகவே, நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புவது—இந்தத் தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய 5 கோடி மக்களையும் இந்த ஜனநாயகத்திற்கு ஆதரவாக ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற் காக நீங்கள் திருப்பிவிடவேண்டிய கட்டாயத்தில் இருக் கிறீர்கள். நீங்கள் 1,200 கோடி ரூபாய் அளவிற்குச் செலவுசெய்யப் போகிறீர்கள். ஆகவே, உங்களுடைய கடமையை நீங்கள் உணர வேண்டும். இந்த மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் அரசு, இன்றைக்குள்ள சட்டப்படியும், நியாயப்படியும் நம்முடைய நாட்டின் அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் உரிமைப் படியும் அது 5 ஆண்டு காலம் தொடர்ந்து ஆட்சியில் இருப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. அதில் தலையிடுவதற்கு எந்த ஆட்சிக்கோ அரசுக்கோ அதிகாரமில்லை. அதை நாம் அனுமதிக்கவும் கூடாது என்ற வகையிலே இந்த மாநிலத்திலே உள்ள மக்களை உணர்ந்து கொள்ளச் செய்கிறவகையில் இந்த அரசு செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைத்தான் இன்றைக்கு நீங்கள் செய்தாகவேண்டும். இதை யாரோ செய்யவேண்டும் என்று இருப்பது கூடாது. அப்படிப்பட்டக் கடமையைச் செய்யவேண்டிய அவசியம் தற்போது காத்து நிற்கிறது என்பதை மட்டும் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு மட்டும் தேவையில்லை. நம்முடைய மக்களின் நல்வாழ்வுக்காக நாம் ஆற்ற வேண்டிய பணிகளுக்காகவும் தேவைப்படுகிறது. இந்த அரசு போய்விடும், இந்த அரசு போய்விடும் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தால், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், இந்த நாட்டின் நிர்வாகத்தை நடத்துகின்றவர்கள், உறுதியாக இந்த அரசுடன் நின்று, அவர்கள் ஏற்படுத்திய சட்டதிட்டங்களை அமல் நடத்து

வதற்கு உறுதுணையாக இருப்பார்களா என்கிற ஐயம் ஏ
படுகிறது. அவர்கள் எண்ணம் ஊசலாடும் வகையில் இந்த
நிலைமைகள் போகும், ஆகவே, காரியங்கள் ஆற்றுவதிலும்
தயக்கம் ஏற்படும். ஆகவே, நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன். தமிழ் நாட்டு மக்களின் முழு ஆதரவு பெற்று
நாம் இந்த ஆட்சிபீடத்தில் அமர்ந்து இருக்கிறாம் என்கிற
தெம்போடு, அந்த மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள் என்கிற
தைரியத்தோடு, நீங்கள் செயல்படுங்கள். அஞ்சத் தேவையில்லை
பயப்படத் தேவையில்லை. நீங்கள் உங்களுடைய அதிகாரத்தை
ஜனநாயகத்தைப் பாதுகாக்க உபயோகப்படுத்துங்கள். இந்
நாட்டில் உள்ள ஜனநாயக சக்திகளோடு சேர்ந்து நின்று இந்
மாநில அரசை நடத்துகின்ற முறையில் நீங்கள் ஆட்சிபீடத்தில்
கொலுவீற்றிருங்கள். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை
நிறைவேற்றுங்கள். அந்த வகையில் இந்த ஆண்டு நீங்கள் போட்
டுள்ள திட்டங்களை அமல்படுத்துங்கள் என்று வற்புறுத்திக் கூற
விரும்புகிறேன்.

[முற்பகல் 10-40]

அடுத்து, அரசினுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர
விரும்புகிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டில் விவசாயிகள்,
தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், நடுத்தர வர்க்க ஊழியர்கள்
ஆகியோர் பல இயக்கங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
இது எதிலிருந்து தோன்றுகின்றது? 1971 ஆம் ஆண்டிலே
இருந்து கல்லூரியில் படிக்கின்ற மாணவன் ஒரு உதவித்தொகை
வேண்டுமென்று கேட்கிறான், அந்த உதவித் தொகை அரசிட
மிருந்து கிடைக்கும் என்று ஆவலோடு எதிர்பார்க்கிறான்;
ஆனால், இதுவரை அது முடியவில்லை. அவன் ஏமாற்றமடை
கிறான். பல்வேறு எண்ணங்கள் அவன் மனதிலே ஏற்படுகின்றன.
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசிலிருந்து
உதவித் தொகை நமக்கு கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றத்தின்
எதிரொலி பல்வேறு எண்ணங்களுக்குக் காரணமாக இருக்கிறது.

அதைப்போல வேளாண்மைத் தொழில் நுட்ப அலுவலர்கள்
கடந்த சில நாட்களாக கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.
அதன் காரணமாக இன்றைக்கு 900 பேர்கள் சென்னை
சிறையில் இருக்கிறார்கள். ஐந்து நாட்களாக உண்ணாவிரதப்
பேராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒருவருடைய
நிலைமை, அவருடைய உயிர் ஊசலாடுகிறது என்று தகவல்
வந்திருக்கிறது. மாநில அரசு இதை அலட்சியம் செய்யக்கூடாது.

அதைப்போல தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்
நடத்தி, கிட்டத்தட்ட 3,700 பேர்கள் கைதாகியிருக்கிறார்கள்.
அவர்கள் சில கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள்.
நாட்டிலே வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு
இருக்கிறது. இந்த நேரத்தில் மக்களிக்கு துன்பம்
ஆசிரியர்கள் மக்களுக்குச் சேவை செய்ய அரசு ஊழியர்கள் அல்லது
கருத்து வித்தியாசம் இல்லை. வேண்டும் என்பதில்



கடந்த 33 ஆண்டுகளாக இந்த மன்றம் கண்டது என்ன? இந்த நாடு பார்த்தது என்ன? மக்களுக்காக பல்வேறு திட்டம் போட்டு, அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கப்பட்டது எதற்காக? ஜனங்களுக்குச் சேவை செய்ய என்று சொல்லப்பட்டது. இந்த 33 ஆண்டு காலத்தில் ஆசிரியர்கள் பணியாற்றி இருக்கிறார்கள், அரசு ஊழியர்கள் பணியாற்றி இருக்கிறார்கள். இருந்தாலும் நூற்றுக்கு 63 பேர்கள் இன்றைக்கு வறுமைக் கோட்டிற்கும் கீழேதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு இந்த ஆசிரியர்கள் காரணமா? அரசு ஊழியர்கள் காரணமா? அல்லது தொழில் நுட்ப அலுவலர் காரணமா? இல்லை. அரசு மற்ற கவனத்தை இதிலே ஈர்க்கக்கூடாது.

நடைபெற்றிருக்கின்ற சூழ்நிலை இன்றைக்கு நம்முடைய அரசு உருவாக்கியது அல்ல. இந்த நாட்டிலே 5 ஆண்டுத் திட்டங்களால் ஏற்பட்ட சாபக்கேடு இது. அதனால் ஏற்பட்ட மன உணர்ச்சிகள். இதைப் புரிந்துகொண்டு, நாம் நடைமுறைகளை கையாள வேண்டும். அவர்கள் 5 கேட்டால் 3 பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும். வன்முறை என்று சொல்லி அடக்க முயற்சி செய்யாதீர்கள். தண்டாயுதத்தைத் தூக்காதீர்கள். அவசரச் சட்டத்தைக் காட்டாதீர்கள். அதற்குப் பதிலாக உங்கள் அன்பைக் காட்டுங்கள்; நியாயத்தைக் காட்டுங்கள்; மாநில அரசின் நிதிநிலையை எடுத்துச் சொல்லுங்கள். அவர்களும் நீங்களும் பேசி, பிரச்னைகளை சுமுகமாகத் தீர்க்க வேண்டும். அந்த முறையிலே அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழில் நுட்ப அலுவலர்கள் இன்னும் மற்றவர்களுடைய பிரச்னைகளை எல்லாம் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு தமிழகத்திலே பலர் பல இயக்கங்களை நடத்துகிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை என்ன என்பதை இந்த மன்றத்திலே தொடர்ந்து வெளியிட்டு வருகிறோம். ஆனால் அரசுக்கு ஒரு நிலையைத் தெளிவுபடுத்த விரும்புறேன். இன்றைக்கு தமிழ்நாட்டில் ஜப்தி நடவடிக்கை தீவிரப்படுத்தப்படுகிறது. 5 ஏக்கருக்கு மேல் நிலம் உள்ளவர்கள் மீதுதான் ஜப்தி நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்தத் தகவல் சரியல்ல என்பதற்கு என்னிடம் பல விவரங்கள் இருக்கின்றன. 5 ஏக்கருக்குக் கீழ்பட்டவர்களிடம் கூட ஜப்தி நடவடிக்கை எடுத்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது. ஜப்தி நடவடிக்கைக்குப் போகும்போது 20 வேன்களில் போலீசார் போகிறார்கள். கிட்டத்தட்ட ஒரு உள்நாட்டு யுத்தம்போல் நடக்கிறது என்று சொல்லட்படுகிறது. அது இந்த அரசுக்கு நல்லதல்ல.

இன்றைக்கு மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்ய சில நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். பாக்கிகள் பல ஆண்டுகளாக நின்றுவிட்டன. எல்லாவற்றையும் ஒரே தடவையில் வசூல் செய்ய முடியாது என்பதால் 1 பிளஸ் 1 என்ற அடிப்

படையில் வசூல் செய்கிறோம். உடனடியாக எல்லாவற்றையும் கட்ட முடியாது என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறோம். அதைப் போல 5 ஏக்கர் நன்செயும் 10 ஏக்கர் புன்செயும் உள்ளவர்கள் பயிர் கடனை ரத்து செய்து, அதற்கு மேலே உள்ளவர்களுக்கு வட்டி நிவாரணம் கொடுத்து, 7 ஆண்டுகளில் தவணை முறையில் கடன் வசூல் என்று சொன்னால் கடன் ஒழுங்காக வசூலாகும். இல்லாவிட்டால் வேறு ஒரு பக்கம் திசை திருப்பும் முயற்சியில் ஈடுபடுகிறார்களே அதற்கு இடம் கொடுத்துவிடும். ஆகையால் வறட்சியாக இருக்கிற இந்த நேரத்தில் வசூல் நடவடிக்கை எடுக்காமல் 7 ஆண்டு அல்லது 10 ஆண்டு தவணைகளில் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். 35,000 ரூபாய் கடன் பெற்ற ஒருவர் 20,000 ரூபாய் கொடுக்கிறார். பாக்கியை பின்னால் கட்டுவதாகச் சொல்கிறார். அதிகாரி அதை மறுக்கிறார். எல்லா வற்றையும், 35,000 ரூபாயையும் இப்போதே கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார். இது சரியல்ல.

இன்று விவசாயிகளைக் கொண்ட உயர்மட்டக் குழு அமைத்திருக்கிறோம். அதிலே பேசி, அதற்கு நீண்ட நாள் ஆகாமல், இந்த சட்டமன்றத் தொடர் கூட்டம் முடிந்த உடனேயே கூடிப்பேசி, விவசாயிகளுக்கு நியாயமான நிவாரணம் கொடுத்து, கடனை வசூல் செய்ய உரிய வழிமுறைகளை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விலைவாசி ஏறி இருக்கிறது. நிதி அமைச்சர் பல முறை இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். 20%, 25% இந்த ஆண்டு பல பொருள்களின் விலை ஏறியிருக்கிறது என்ற உண்மை நிலையைச் சொன்னார்கள். அவர்கள் பட்ஜெட்டை சமர்ப்பிக்கும்போது விலைவாசி என்பது ஒரு மாநில அரசால் கட்டுப்படுத்தக் கூடியது அல்ல என்று சொன்னார்கள். மத்திய அரசின் கொள்கை, பணப் புழக்கம் வரிக் கொள்கை, மற்ற பல காரணங்களால் இன்றைக்கு விலைவாசி ஏறியிருக்கிறது. அப்படிப்பட்ட விலை ஏற்றம் பயங்கரமாக ஏறுகிற இந்தக் காலத்திலே நாம் நடத்துகிற இந்த 17 ஆயிரம் நியாய விலைக் கடைகளும் நல்ல முறையில் நடக்கிறதா என்று அரசு உன்னிப் பாகக் கவனிக்க வேண்டும். அரிசி, சீனி, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய், விறகு போன்ற வற்றிற்கு, அதாவது குறிப்பிட்ட 10, 15 அத்தியாவசியப் பொருள்களை, ஆலை விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு விற்கிற இடைத்தரகர்கள் இல்லாமல், நியாயமான விலையில் ஏழை எளியவர்கள் எளிதாக வாங்கக் கூடிய வகையில், இந்தப் 17,000 நியாயவிலைக் கடைகளிலும் விற்பதற்கு ஏற்பாடு செய்தால் மிக நன்மையாக இருக்கும். அப்படி கொடுக்கும்போது, குடும்பக் கார்டுகள் இல்லாத உண்மையான குடும்பங்களுக்கு, குடும்பக் கார்டுகளைப் புதிதாக வழங்கியும், நாம் குடும்பக் கார்டுகள் கொடுத்து 5 ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தால்



கிழிந்து பழுதுபட்ட நிலையில் அந்த கார்டுகளை வைத்திருப்ப வர்களுக்கு புதுப்பித்துக் கொடுத்தும், இந்த அத்தியாவசியப் பொருள்களை அனைவரும் வாங்கக் கூடிய வகையில், ஏற்பாடு செய்தால் அது மக்களுக்கு மிகவும் நன்மையை அளிக்கும்.

இதன் காரணமாக ஒரு 100 கோடிரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. அப்படி ஒரு ஏற்பாட்டை செய்ய அரசு முன்வரவேண்டும். வேண்டுமானால் இந்த நஷ்டத்தை மதுவிலக்கு தளர்த்துவதில் வரும் இலாபத்தை வைத்துக் கொண்டு ஈடுகட்டிவிடலாம். இந்த மதுவிலக்கை தளர்த்தும் பிரச்சனையிலும் இப்படி அரைக்கிணறு தாண்டிக் கொண்டிராமல் முழு அளவில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கூட இந்த மாதம் ஏலம், அடுத்த மாதம் ஏலம் என்று இங்கே நம்மை ஏலம் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள் என்று கேட்கிறேன் ? சுற்றியுள்ள மாநிலங் களிலிருந்தெல்லாம் பாடம் எடுத்தது போல் நம்முடைய மாநிலத்தை ........ (குறுக்கீடு)

மாண்புமிகு திரு எஸ். டி சோமசுந்தரம்:— மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மனிதனை மனிதன் ஏலம் விடும் வழக்கம் இந்த 20 ஆம் நூற்றாண்டில் இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் அதை இந்த அவையிலே சொல்லுகிறபோது, விளக்கமாகவே சொன்னேன்—இன்றைக்கு அரசுக்கு வரவேண்டிய நியாயமான வரி குறையக் கூடாது என்பதுதான் நம் எல்லோருடைய நல்லெண்ணமும் ஆகும்.

தமிழகத்திலே உள்ள பல்வேறு பகுதிகளில் இருந்தும் இதற்கு நேரம் போதாது, இன்னும் அதிகம் வேண்டும் என்று கேட்டிருக் கிறார்கள். குறிப்பாக தஞ்சையைச் சேர்ந்த பரிசுத்த நாடார் போன்றவர்கள், 1949-க்கு முன்பிருந்தே 100 கடைகளுக்கு மேல் எடுக்கக் கூடியவர்கள் எல்லாம், நேரம் இன்னும் அதிகமாகப் பெற வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கை நியாயமானதே. பனை மரங்களிலோ, அல்லது தென்னை மரங்களிலோ, முதலில் பட்டையடிக்கப்பட்டு, கள் பானைகள் கட்டப்பட்டு, பிறகு சில நாட்கள் சென்று கள்ளை இறக்க வேண்டும். அதில் மரம் ஏறும் தொழிலாளிகள் எவ்வளவோ சங்கடங்கள் இருப்பதாகச் செல்கிறார்கள். அவைகளை ஓரளவிற்கு நான் அறிவேன். எனக்கு மரம் ஏறத் தெரியாது என்றாலும், கிராமப்புறங்களில் அவற்றைப் பார்த்திருக்கிறேன். ஆகவே அவர் களுடைய கோரிக்கையின் அடிப்படையில்தான் ஏலம் விடுவதை தள்ளி வைத்திருக்கிறோம், ஒத்தி வைத்திருக்கிறோமே தவிர, நிச்சயமாக நிறுத்திவிடவில்லை. நிச்சயமாக கடைகளைத் திறப்போம். மாண்புமிகு வரதராஜன் அவர்கள் குடிக்கா விட்டாலும், மற்றவர்கள் வாங்கிக் குடிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: [1981 மே 1

மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய ஒரு விளக்கத்தைத்தான் நான் எதிர்பார்த்தேன். நான் மனிதரை ஏலம் விடுவதைப்பற்றிச் சொன்னபோது அதை ஒரு அன்போடுதான் சொன்னேனே தவிர, எந்த உள் கருத்தையும் வைத்தும் அந்த வார்த்தையை உபயோகப்படுத்தவில்லை.

நானும் அதிகமான அளவில் வருமானம் நமது அரசாங் கத்திற்கு, அந்த மதுவிலக்கினை தளர்த்துவதிலிருந்து வர வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். 200 கோடி அல்லது 300 கோடியை பெற்றால் கூட, அது ஒன்றும் சூதாட்டமான முறையில் மக்களை ஏமாற்றி வாங்கிய வருவாய் அல்ல. அந்தப் பணத்தை மக்களுக்கே மிக நல்ல முறையில் பயன்படுத்தக் கூடிய அளவில் பல நல்ல திட்டங்களை நீங்கள் பதிலுக்குச் செய்ய முடியும் என்பதைக் கூறிக் கொண்டு, நான் முன்பே எடுத்துக் கூறியதைப் போல, அத்தியாவசியமான 10, 15 பொருள்களை நியாயவிலைக் கடைகளில்—ஆலை விலைக்கு, கட்டுப்படியாகக் கூடிய நியாயமான விலைக்கு மக்களுக்கு கிடைக்கும்படி—விற்பனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் ஒரு 100 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நட்டம் வந்தாலும் அதை ஏற்று நிறைவேற்றுவது, கிராமப் புறங்களில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, நகர்ப்புறங்களில் இருக்கும் தொழிலாள வர்க்கத்தினருக்கு தேவை யான உணவுப் பொருள்கள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்யும். அது உங்களை நம்பி ஓட்டளித்து தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கும் ஜனங்களுக்கு நீங்கள் செய்கிற பெரிய உபகார மாகவும் இருக்கும் என்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு இன்றைக்கு நியாயவிலைக் கடைகளில் இருக்கும் நிலைமையைப் பார்த்தால் மிக பரிதாபகரமாக இருக்கிறது. ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு கடை என்று இருப்பதால் அங்கே கூட்டம் தாங்க முடியாமல், பெரிய கியூ நிற்கவேண்டியிருக்கிறது. இதன் காரணமாக பல தவறுகள் நடைபெறக் கூட வழி ஏற்படுகிறது. ஆகையினால் அதை மாற்றி 500 அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக்கடை என்று அமைத்துக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, தயவு செய்து நான் குறிப்பிட்ட இந்த காரியங்களை நீங்கள் முனைந்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் இருக்கும் சூழ்நிலையில் ஏறுகின்ற விலைவாசி களை கட்டுப்படுத்தக் கூடிய அதிகார நிலைமை மாநில அரசுகளுக்கு இல்லை, மாநில அரசினால் அது முடியாது. மாநில எல்லோருக்கும் தெரியும். ஆனால், நம்மால் முடிந்த இந்த அது வேலைகளைச் செய்தால், அது மக்களுக்கு பெரும் பயனைக் கொடுக்கும், அவர்கள் உங்களை வாழ்த்துவார்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



1981 மே 11] [திரு. என். வரதராஜன்]

அடுத்து நம்முடைய மாநிலத்திலே தேவையான உணவு இருப்பு இல்லை. இதுவும் அனைவருக்கும் தெரியும். ஆனால் முன்னாலேயே மாநில சர்க்கார் தேவையான அளவு முயற்சி செய்திருந்தால், சம்பா அறுவை நடக்கிற நேரத்திலேயே, அதை நேரிடையாக அரசு வாங்கியிருந்தால், தேவையான அளவு அல்லது ஓரளவு நெல்லை அரசு இருப்பு வைத்திருக்க முடியும். ஆனால் எந்த காரணத்தாலோ இந்த விஷயத்தில் சரியான கொள்கையை கையாளாததின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

[முற்பகல் 10–50]

இப்போது நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 150 வேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள். ரூ. 100 கொடுத்தாலும் பரவாயில்லை என்று நான் சொல்கிறேன். சட்டத்துறை அமைச்சர் இரண்டு நாட்களுக்கு முன்னால் என்று கருதுகிறேன், ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 150 என்று கூட்டுறவுத் துறை மூலம் கொள்முதல் செய்வதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்ற செய்தி எல்லாம் சொன்னார்கள். மாநில அரசுக்கு எது சாத்தியமோ, அந்த ரூ. 150 கொடுத்தாலும் நாங்கள் ஏற்கிறோம் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக. ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 150 கொடுக்க முடியும் என்று அறிவிப்புக் கொடுத்து நம் கையில் ஐந்து அல்லது பத்து லட்சம் டன் இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி ஒரு கொள்கை வேண்டும் மாநில அரசுக்கு. இந்த மாநிலத் தில் உற்பத்தியாகும் விவசாய விளைபொருட்களுக்கு கட்டுபடியான விலை இல்லை என்று விவசாயி கண்ணீர் வடிக்கிறான். ஆகவே அறுவடைக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னால் விலை நிர்ணயிக்க வேண்டும். மத்திய அரசு ஒரு விலை நிர்ணய கமிஷன் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றால் அது இருக்கட்டும். நம் மாநிலத்தில் ஒரு விலை நிர்ணயக் கமிஷன் ஏற்படுத்தி விவசாயிகளுக்கு, அவர்கள் விளைபொருட்களை நெல்லுக்கு கரும்புக்கு, அல்லது நவதானியங்களுக்கு, கடலைக்கு இன்ன விலை இந்த ஆண்டு கொடுக்க இயலும் என்று நீங்கள் அறிவித்தால் அது மத்திய அரசை நிர்பந்தப்படுத்த, மத்திய அரசு விலை நிர்ணயக் கமிஷனை நியாய பூர்வமாக பார்ப்பதற்கு உதவி செய்யும். இது ஒரு மிக முக்கிய விஷயமாகும்.

விவசாய விளைபொருள்களுக்கு நியாயவிலை கிடைக்கவில்லை என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் உண்டு. கடலை எண்ணெய்யாக மாறுகிறது, வனஸ்பதியாக மாறுகிறது, சோப்பாக மாறுகிறது. கரும்பு ஜீனியாக மாறுகிறது. சாக்கலேட்களாக மாறுகிறது. விலை ஏறுகிறது. மக்களை எதிர்த்து தாக்குகிறது. ஆகவே இந்த நாட்டிலுள்ள விவசாயிகளை நாம் கைதூக்கிவிடவேண்டும். ஆகவே

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மொத்தமாக 1358, கோடி ரூபாயை செலவு செய்வதற்கு இந்த அரசினுடைய அனுமதியைப் பெற்று, இன்றைக்கு கொண்டு வந்திருக்கிற மசோதாவை ஒட்டி என் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

இந்த சட்டமன்றத்திற்கு முதன் முதலாக நான் வரும்போது, 67-லே என்று நினைக்கிறேன், அப்போது 340 கோடியோ, 400 கோடியோ தான் இருந்தது இப்போது இவ்வளவு அதிகமான பணத்தைச் செலவு செய்யக்கூடிய ஏற்பாட்டை நான் வரவேற்கிறேன். சாதாரண ஏழை, எளிய மக்களுக்கு வேண்டிய வசதிகளை அளிக்கக்கூடிய முறையிலே இந்த செலவழிக்கப்படக்கூடிய தொகையின் மூலமாக அந்த பலன் ஏற்படக்கூடிய அளவிலே அது அமைய வேண்டும் என்பதில் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற வறட்சியான நேரத்தில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட ஆங்காங்கு, அந்த மாவட்டங்களுக்குச் சென்று இருக்கக்கூடிய நேரத்தில், இந்தக் கொடுமையான வறட்சி நம்முடைய அதிகாரிகள் சொன்னதை விட அதிகமான அளவிலே இருக்கிறது என்பதைச் சொல்லி, துரிதமான நடிவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று சொன்னார்கள். இப்போது எனக்கு வந்த தகவல்களின் அடிப்படையிலே நான் சொல்கிறேன். குடிதண்ணீர் இல்லாத கிராமங்களில் ஆங்காங்கு போர் போட்டு வைத்திருக்கிறதே தவிர தண்ணீர் வருவதற்கு வேண்டிய குழாய்கள் பொருத்தப்படாத நிலை இன்றும் பல இடங்களில் இருக்கின்றன. குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டப்படக்கூடிய வடாற்காடு மாவட்டத்தில் பல இடங்களில் அந்தப் பணிகள் செய்யப்படவில்லை, என்று கேள்விப்படுகிறேன் ஆகவே அந்தப் பணிகளை வேகமாக செய்யவேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இன்று நாடு முழுவதிலும் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடி சம்பந்தமாக ஏற்கனவே இந்த அவையில் எல்லா உறுப்பினர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்கட்சியைச் சார்ந்தவர்களும், மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடி, இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னால், 2 அல்லது 3 ஆண்டு காலத்திலே வந்த நெருக்கடி என்று யாரும் சொல்ல முடியாது. கடந்த பத்து, பன்னிரெண்டு ஆண்டு காலமாக விவசாயத்திலே ஒரு புது மாதிரியான நிலைமை. அதாவது விவசாயத்திற்கு அதிகமான முதலீட்டைப் போட்டு நவீனமான வித்துக்களையும், உரங்களையும், பூச்சி மருந்துகளையும் போட்டு இதுபோன்ற பொருள்களைப் போட்டு



உற்பத்தி செய்யவேண்டிய ஒரு கட்டாயமான சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாகவும், அதேநேரத்தில் அவர்கள் உற்பத்தி பண்ணக்கூடிய பொருள்களை சரியாக விற்கக்கூடிய வசதிகள் இல்லாத நிலையில் ஏகபோகமான, வர்த்தக சூதாடிகளிடம் கொண்டுபோய் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக உள்ளது. விவசாயத்திற்கு வேண்டிய இடு பொருள்கள், உரமாகட்டும், பூச்சி மருந்தாகட்டும் அல்லது பம்பு செட்டு போன்ற பொருள்களை, எந்த பொருள்களாக இருந்தாலும் அவற்றை பெறுவதற்கும் அதை வர்த்தக சூதாடிகளிடம், மற்றும் அதிபர்களிடம் சென்று அதிகமான விலைக்கு வாங்கி, இவர்கள் விற்கிற பொருள்களை குறைவான விலைக்கு விற்கிற நிலையினால் இந்த நாட்டிலே உற்பத்தி பெருகி, நாம் எதிர்பார்த்த அளவிற்குமேல் மிக அதிகமாக உற்பத்தி பெருகியிருந்தாலும் கூட விவசாயிகளுடைய கஷ்டங்கள் நீங்காததின் காரணமாக மக்களுக்கு நிவாரணம் வேண்டுமென்று நீண்ட நெடும் காலமாக போராட்டங்கள் நடத்தி, இந்த ஆட்சி என்று சொல்லவில்லை, தொடர்ந்து அந்த போராட்டங்களின் காரணமாக விவசாயிகள் பலர் உயிர் இழந்திருக்கிறார்கள். நம்முடைய அரசு கடந்த காலத்தில் சில நிவாரணங்களை அளித்திருக்கிறது. அதை அன்றைக்கு நான் சொல்கிற நேரத்தில், இதற்கு முன்னால் இருந்த அரசை விட இந்த அரசு கூட்டுறவு சங்கங்களிலே விவசாயிகள் கட்ட முடியாத கடனுக்காக ஏறக்குறைய ஒரு 70 கோடி வரை இது ஒரு சரியான ஏற்பாடு என்று சொல்லி அதை வரவேற்கிறேன். இதற்கு குறுக்காக, இந்த காரியங்கள் செய்யக்கூடாது என்று சொல்கிற முறையிலே, அதிகமான நிதியாதாரங்களைப் பெற்றிருக்கிற அரசு, விலைவாசிகளை கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரத்தை வைத்துக் கொண்டிருக்கிற ஒரு அரசு இன்றைக்கு மாநிலங்களுக்கு வேண்டிய கடனுதவிகளை பூராவும், வறட்சியானாலும், புயலானாலும் ஏற்பட்டிருக்கிற எந்த நெருக்கடியானாலும் காலாகாலத்தில் உதவி செய்வதற்கு கடமைப்பட்டிருக்கிற அரசு இன்றைக்கு இந்த மாதிரி ஒரு நிவாரணத்தை செய்வதுகூட சரியல்ல, வேறு பல மாநிலங்களிலே, காங்கிரஸ் ஆட்சியிருக்கிற மாநிலங்களிலே கூட இந்த மாதிரி ஒரு கோரிக்கை வரும். ஆகவே கடன் நிவாரணம் அளிக்கக்கூடிய ஒரு ஏற்பாடு கூடாது என்றும், கொடுக்கக் கூடாது என்று அடம் பிடிப்பதாகவும், அதை தடுப்பதாகவும் கேள்விப்படுகிறேன். அது மட்டுமல்ல, நாட்டிலே மிகப் பிரதானமாக விவசாயிகள் வைத்து கொண்டிருக்கின்ற கோரிக்கை விளைபொருட்களுக்கு நியாயமான விலை கொடுக்கவேண்டுமென்பது, அதைக் கொடுப்பதற்கு மாநில அரசைவிட மத்திய அரசுக்கு அதிகப் பொறுப்பும் கடமையும் உண்டு. அதை செய்ய வைப்பதற்காக பல காரியங்களை நாம் செய்யவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வறட்சிக்காக மத்திய அரசு அதிகமாக தொகை கொடுப்பதற்குப் பதிலாக— அந்தக் குழு இங்கே வந்து பார்த்து விட்டுப் போய் இருக்கிறது — இங்கேகூட நாம் எதிர்பாரா செலவு என்ற முறையில் கொண்டு வந்திருக்கிறோம், வந்தால் அதை ஈடுகட்டிக்கொள்வதற்காகத்தான் சொல்கிறோம், ஆகவே

அதைத் துரிதமாகப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து இந்த நிவாரண வேலைகள் ரொம்ப ரொம்ப தாமதமாக நடைபெறுகின்றன, ஆமை வேகத்தில் செல்கிறது, அதைத் துரிதப்படுத்த வேண்டும். விவசாயிகள் சில கோரிக்கைகளை வைத்து மிகப் பெரிய போராட்டங்களை எல்லாம் நடத்தினார்கள். அரசாங்கம் அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி சில முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். மின்சாரத் தொகையைப் பொறுத்த வரையிலே இன்றைக்கு முழுமையாக 4 இலட்சம் பேர்கள் கட்டி விட்டார்கள். ஒரே ஒரு சங்கத்தினர்தான் நாராயணசாமி நாயுடு அவர்களுடைய சங்கம் மட்டும்தான் கட்டவேண்டாமென்று சொல்கிறார்கள். நானும் ஒரு சங்கத் தலைவர்தான், எல்லா சங்கங்களும் கூட்டாக மின்சாரக் கட்டணத்திலே பாக்கி செலுத்துவதிலே சலுகை வேண்டுமென்று கேட்டு அது கிடைத்தவுடனே அதிலே இனியும் கடுமையாக இருக்கவேண்டிய தேவையில்லை. இப்போது ஒன் பிளஸ் ஒன் என்ற முறையிலே பழைய பாக்கி 1, புதியது 1 என்ற முறையிலே கட்டணத் தொகையைச் செலுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அடுத்தபடியாக விவசாயிகளுக்கு மிகப்பெரிய பளுவாக இருப்பது இந்த கடன் பிரச்சினைதான். இங்கே முதலமைச்சர் அவர்கள் கூட நாங்கள் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு உயர்மட்டக் குழுவொன்றை மாண்புமிகு முன்னாள் பேரவைத் தலைவர் திரு. முனுஆதி அவர்கள் தலைமையிலே அமைத்திருக்கிறார்கள். மற்ற எல்லா சங்கங்களும் பங்கு பெற்றிருக்கின்றன, அந்த ஒரு சங்கமும், தி.மு.க.வை சேர்ந்தவர்களும்தான் பங்குபெறவில்லை. அவர்கள் பங்குபெற வேண்டுமென்று கேட்டாலும்கூட பங்குப் பெறவில்லை. இத்தனை சங்கங்கள் எல்லாம் கேட்டு இந்த அரசாங்கத்திற்கு இருக்கின்ற நெருக்கடி நிலையிலேயும் செய்வதற்கு முன்வருகிறபோது மத்திய அரசு இந்த நிவாரணத்தை கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் கொடுக்கிற நிவாரணத்தை எதிர்க்கிறபோக்கு நமக்கு எல்லாம் தெரியும். அது மட்டுமல்ல, அந்தப் பொருட்களுக்கு நெல்லானாலும், கரும்பானாலும், பருத்தியானாலும் நியாய விலையைக் கொடுப்பதற்கு மறுக்கின்ற போக்கு விவசாயிகளுக்கு விரோதமான போக்காக இருக்கிறது என்பதை எல்லாம் விவசாயிகளும் உணர்ந்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் பரிகாரம் காணுவதற்காக இந்தியா முழுவதும் விவசாயிகள் போராடுகிறபோது அத்தனை விவசாயிகளும் ஒன்று சேர்ந்து போராடுவார்கள். கடன் சம்பந்தமாக நிவாரணம் தருவதாக சொல்லியிருக்கிறார்கள். 5 ஏக்கர் நஞ்சையாக இருந்தாலும் 5 ஏக்கர் புஞ்சையாக இருந்தாலும் அவர்களுக்கு கடந்த 3 ஆண்டுக்காலத்திலே புயல், வெள்ளம் ஏற்பட்ட காலத்திலே அவர்கள் கன்வெர்ஷன் போட்டிருந்தால் மத்திய காலக் கடனாக மாற்றியவர்களாக இருந்தால்தான் அவர்களுக்கு மட்டும் இந்த நிவாரணம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. இப்போது இரண்டு, ஒன்று, அரை ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் வறட்சியின் காரணமாக அவர்கள் கன்வர்ஷன் போடவில்லை, வறட்சி என்றாலே அந்தப் பகுதியிலே



விளையவில்லை என்றுதான் அர்த்தம். கூட்டுறவு சங்கத்திலே அவர்கள் அதனால் வட்டியைக் கட்டவில்லை, கன்வர்ஷன் செய்யவில்லை என்ற காரணத்தினால்—நான் கட்டியிருந்தால் எனக்கு உண்டு, ஒரே ஊரிலேயே இன்னொருவர் அதைச் செய்யவில்லை என்றால் அவருக்கு இல்லை என்ற நிலைமை இருக்கிறது—அந்த நிவாரணம் இல்லை என்று சொல்கிறார்கள். இந்தக் குறையைப்போக்க வேணடும். 5 ஏக்கர் நஞ்சை என்றாலும் புஞ்சை எனறாலும் ஒன்றுதான் என்று வைத்திருப்பது சரியாக இருக்காது. 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்து சிறிய விவசாயிகளுக்கும் முழு நன்மைகள் பெறக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டும், வாங்கிய கடன்களைக் கட்டுவதற்கு முடியாமல் பல இடங்களிலே கஷ்டப்படுகிறார்கள். ஆனால் கட்டுவதற்கு அவர்கள் சம்மதிக்கிறார்கள், நான் பல இடங்களிலே கேட்டுப் பார்த்தேன், கடனுடைய வட்டி அதிகமாகிவிட்டது, இந்தியாவிலே உள்ள மாநிலங்களிலே இருப்பதைவிட இங்கே வட்டி அதிகமாக இருக்கிறது. நாங்கள் கூட்டுறவு சொஸைடிஸ் பில் செலக்ட் கமிட்டியோடு மகாராட்டிர மாநிலத்திற்கு சென்றிருந்த போது அங்கே சொன்னார்கள், அதைப்பார்க்கிறபோது இங்கே வட்டி அதிகமாக இருக்கிறது. இங்கே இடைத் தட்டிலே 3 அடுக்குகள் 4 அடுக்குகள் என்று வைத்துககொண்டு ஒவ்வொரு அடுக்கிலும் 2 சதவீதம் என்று உயர்த்தி—ரிசர்வ் வங்கியிலே 6 சதவீதத்துக்கு வாங்கி—விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறபோது 13, 14 சதவீதம் ஆகி அபராத வட்டியுடன் சேர்த்தால் 16 சதவீதமாகி அசலைப் போல 2 மடங்குக்கு வந்துவிடுகிறது. ஆளுங்கட்சிக்காரர்களே சொல்கிறார்கள். ஆனால் ஆளுங்கடசிக்காரர்கள் சிலர் சொல்கிறார்கள், டிராக்டர்கள் போன்று வைத்திருக்கின்றவர்களிடமிருந்து வசூல் செய்தால் என்ன என்று கேட்கிறார்கள். அப்படி ஒன்றிரண்டுதான் இருக்கும். ஆனால் அந்த ஆட்கள் பெயரால் அத்தனை விவசாயிகளிடமிருந்தும் ஜப்தி செய்வது நடக்கிறது.

[முற்பகல் 11-10]

பத்து ஏக்கர்களுக்கு மேலேயிருந்து, 5,000 ரூபாய்க்கும் மேலே கடன் வாங்கியிருப்பவர்களிடம் மட்டும் ஜப்தி என்று சொல்லப்படுகிறதே தவிர திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர் பகுதியில் உள்ள தென்திருப்பேறை என்ற ஊரில் உள்ள கூட்டுறவுச் சங்கத்திலே' மாணிக்கவாசகம் என்பவர் 800 ரூபாய்தான் பாக்கி, 5 ஏக்கருக்குக் குறைந்த அளவிற்குத்தான் நிலம் உள்ள சிறு விவசாயி, அந்த 800 ரூபாய்க்காக வீட்டிலே சென்று ஜப்தி செய்வோம் என்று மிரட்டி, அங்கே எதுவும் இல்லை என்றவுடன் அவருடைய மனைவியினுடைய கைகளிலே இருந்த வளையல்களைக் கழற்றி எடுத்து ஜப்தி செய்து கொண்டுபோயிருக்கிறார்கள். இது என்ன கொடுமை? இவ்வளவு காரியங்கள் நடந்திருக்கின்றன.

அதைப்போல இராம ஐயங்கார் என்பவர் சிறு விவசாயி. 1,000 ரூபாய் பாக்கி வைத்திருக்கிறார். அவர் வீட்டிலும் ஜப்தி நடந்திருக்கிறது. அதே தென்திருப்பேரையைச் சேர்ந்தவர்கள்.

பத்திரிகையிலேகூட செய்தி வந்திருக்கிறது, மன்னார்குடியிலே சொக்கலிங்கம் என்ற வக்கீல் ஒருவர் டிராக்டர் வாங்கியிருக்கிறார். அவர்களுடைய கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் அவர்களுக்குப் போடப்படும் அபராத வட்டி மிகவும் கொடுமையான வட்டியாக இருக்கிறது. இந்த வட்டியைத் தள்ளுபடி செய்துவிட்டு, அவர்களால் கொடுக்கப்படக்கூடிய தவணைகளிலே கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்கிறோமே தவிர, அதை ஒட்டு மொத்தமாகத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் சொக்கலிங்கம் என்ற அந்த வக்கீலின் டிராக்டரை ஜப்தி செய்து கொண்டு போயிருக்கிறார்கள். அவர், நான் ஒரு பகுதியைக் கட்டிவிடுகிறேன், பத்தாயிரம், பதினைந்தாயிரம் கட்டிவிடுகிறேன் மீதியை இரண்டு மூன்று தவணைகளிலே கட்டிவிடுகிறேன் என்று சொல்லியும்கூட, நீங்கள் மொத்தமாகக் கட்டவில்லை என்று சொல்லி டிராக்டரை ஜப்தி செய்து கொண்டு போயிருக்கிறார்கள்.

மன்னார்குடி கூட்டுறவு நிலவள வங்கியிலே 15ஆம் தேதி 18 ஆம் தேதி, 20 ஆம் தேதி, 22 ஆம் தேதி ஏலம் என்று 5 டிராக்டர்கள் ஏலம் விடப்போவதாகப் பத்திரிகையில் வந்திருக்கிறது. கொஞ்சம் தவணையில் கட்டுகிறோம் என்று அவர்கள் சொன்னால், மொத்தமாகத்தான் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களால் ஒட்டுமொத்தமாகக் கட்ட முடியாமல் வேதனைப்படுகிறார்கள்.

டிராக்டர்கள் வைத்துக்கொண்டிருக்கின்ற பெரிய முதலாளிகளுக்குப் பரிந்துகொண்டு நான் பேசுவதாக நினைக்கக்கூடாது. ஆனால் பெரிய விவசாயிகள் என்று சொல்லி சாதாரண விவசாயிகளிடமும் ஜப்தி நடக்கிறது. அந்தப் பாக்கியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தவணை முறையில் வசூலிப்பதற்கான நடிவடிக்கை[illegible] எடுக்க வேண்டும். ஜப்திக்குச் செல்லும் பொழுது, ஒரு பகுதியை இப்பொழுது நாங்கள் கட்டுகிறோம், ஒரு பகுதியை நாளைக்குக் கட்டுகிறோம் என்று சொன்னால்கூட, அதெல்லாம் முடியாது, உடனடியாகக் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி பகுதியில் உள்ள திருச்சிற்றம்பலம் என்ற கிராமத்தில் கடுமையான வகையில் ஜப்தி நடக்கிறது. வைரவ சேர்வை என்ற விவசாயியின் வீட்டிலே புகுந்து, அந்த விவசாயி வீட்டிலே இல்லாத நேரத்திலே. பெண்கள் உள்ள நேரத்தில் வீட்டில் உள்ள நெல், பீரோ, மேஜை, பேன் ஆகிய வற்றை ஜப்தி செய்திருக்கிறார்கள். நாளைக்கு



ஒரு நாள் தவணை தாருங்கள், பாக்கியில் ஒரு பகுதியைக் கட்டச் சொல்கிறோம் என்று கேட்டுக்கொண்டும்கூட அவர்கள் முடியாது என்று சொல்லி ஜப்தி செய்திருக்கிறார்கள்.

அம்மையாண்டி என்ற இடத்தில் கே. எம். நடராஜன் என்பவர் இருக்கிறார்; அவர் காங்கிரஸ் கட்சியின் பொருளாளர். அவர் தன் வீட்டின் ஒரு பகுதியைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வாடகைக்கு விட்டு வாடகைகூட 2,000 ரூபாய் பாக்கியிருக்கிறது. அப்படிப் பாக்கியிருக்கும்பொழுது, அதில் கொஞ்சம் கொடுக்கிறேன், மீதிக்குக் கொஞ்சம் தவணை கொடுங்கள் என்று கேட்டும் முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். பக்கத்தில் இருந்த ஆர்.டி.ஓ. அவர்கள் தவணை கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆனாலும்கூட அந்தக் கூட்டுறவு அதிகாரிகள் ஜப்தி செய்தால்தான் ஒழுங்காக வருவார்கள் என்று சொல்லி ஜப்தி செய்து கொண்டு போயிருக்கிறார்கள்.

இவைகளையெல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு அரசு நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அப்படி நிவாரணம் அளிக்காத பொழுது எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படும் என்பதை உணர்ந்து ஒரு சில விவரங்களை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

கிணற்று லோன், நீண்ட காலக் கடன், பம்பு செட்டுக்கு லோன் என்று வாங்கியிருக்கிறார்கள். 10.000 ரூபாய் வரையில்கூட வாங்கியிருக்கிறார்கள். பத்தாண்டுகளில் அதைத் திருப்பிக் கட்ட வேண்டும். ஒருவர் அந்தக் கடனை வாங்கியிருக்கிறார். 1970 ஆம் ஆண்டில் வாங்கிய கடனை, 1971 ஆம் ஆண்டிலேயும், 1972 ஆம் ஆண்டிலேயும், 1973 ஆம் ஆண்டிலேயும், 1974 ஆம் ஆண்டிலேயும், 1975 ஆம் ஆண்டிலேயும் ஒழுங்காக 5 ஆண்டுகள் கட்டியிருக்கிறார். 1976 ஆம் ஆண்டு வறட்சி, பஞ்சம், புயல் காரணத்தினால் கடன் ஒத்தி வைக்கப்படுகிறது. பிறகு பிறகு விவசாயிகள் போராட்டம் வந்தது. 1981 ஆம் ஆண்டு வரையில் கட்டவில்லை. அவர் 5 ஆண்டுகளிலே வட்டிக்கும், அசலுக்கும் சேர்த்து 8,490 ரூபாய் கட்டியிருக்கிறார்கள். உடனே அவரிடம் போய் அசல் 6,275.90, வட்டி 2,214 ரூபாய், அபராத வட்டி 3,180 ரூபாய் என்று சொல்லி ஆகமொத்தம் சுமார் 11.670 ரூபாய் ஒரேடியாகக் கட்டப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னவுடன் வீட்டிலே உள்ள பொருட்களை எடுத்துச் செல்லுவோம் என்று சொல்லும் முறையில் அரசாங்கத்தின் கூட்டுறவு அதிகாரிகள், அத்துடன் போலீஸ் படையும் சேர்ந்து விவசாயிகளை நிர்ப்பந்தம் செய்கின்ற முறையை உடனடியாக நிறுத்த வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு உயர்மட்டக் குழுவில் கடன் சம்பந்தமாகப் பரிசீலனை நடக்கிறது. அனைத்துக் கட்சிகளின் ஆதரவைப் பெற்ற விவசாய சங்கத்தினர் பங்கு பெற்றிருக்கிறார்கள். அதில் யார் யாருக்கு நிவாரணம் அளிக்கலாம்; யார் யாருக்கு முழுவதும் தள்ளுபடி செய்யலாம்; யார் யாருடைய கடன்களைப் பகுதி அளவில் நிவாரணம் அளிக்கலாம், யார் யாரிடம் எத்தனை தவணைகளில் வசூல் செய்யலாம் என்று உயர் மட்டக் குழு முடிவு செய்வதற்குமுன் விவசாயிகளிடம் கொடுமையான முறையில், கடுமையான அளவில், வீட்டிலே புகுந்து ஜப்தி செய்வதற்காக போலீஸ் படையோடு இருபது, முப்பது ஜீப்களோடு போகிறார்கள். பெரிய லாரிகளோடு போய், வீட்டிலேயிருக்கிற பொருள்களை எல்லாம், அப்படியே தூக்கிப் போட்டுக்கொண்டு வருவது என்பது, இன்றைக்கு விவசாயிகள் மத்தியிலே, இந்த ஆட்சியின மீது மிகக் கடுமையான ஆத்திரத்தையும் மிகப்பெரிய எதிர்ப்பையும் ஏற்படுத்துகிறது. அந்தச் சூழ்நிலை வேண்டாம். ஆகவே, விவசாயிகளுடைய பிரச்னைகள் என்ன, கோரிக்கைகள் என்ன என்று பார்க்கவேண்டும். அதை நீங்கள் பரிசீலனை செய்து, வேண்டிய நிவாரணம் அளிக்கவேண்டும். அதற்கு மத்திய அரசு குறுக்கே நிற்கிறதா என்றால் குறுக்கே நிற்கிறது. அதைத்தான் மாண்புமிகு வரதராஜன் அவர்கள் இங்கே சொன்னார்கள். இன்றைக்கு இரண்டு முதலமைச்சர்கள் சேர்ந்து பேசினாலே, ஆகா பேசுகிறார்களே என்று காங்கிரஸ்காரர்களுக்குக் கோபம் வருகிறது. பேசுவதில் என்ன தப்பு? ஏன் இரண்டு பெரியமுதலமைச்சர்கள் பேசக் கூடாதா? காங்கிரஸ் முதலமைச்சர்கள் இரண்டு பேர் சந்தித்துப் பேசவில்லையா? ஆகவே, காங்கிரஸ் இல்லாத மாநிலங்களில் ஆட்சி நடத்தக்கூடிய இரண்டு முதலமைச்சர்கள் மத்தியிலே இருக்கிற அரசு, எப்படி மாநில மக்களுக்கு வேண்டிய நிவாரணங்களைச் செய்வதற்குக் குறுக்கே நிற்கிறது? இப்போது மாநிலங்களுக்கு இருக்கிற கொஞ்ச அதிகாரத்தையும் மத்திய அரசு பறிக்கிறது? இருக்கிற அதிகாரத்தை எப்படி மேன்மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது? என்னென்ன காரணங்களை வைத்துக் கொண்டு, மாநில அரசுகளை பயமுறுத்தலாம், அல்லது ஏதாவது காரணத்தை வைத்துக் கொண்டு நீக்கலாம் என்று யோசனை செய்து கொண்டிருக்கிற மத்திய அரசை எப்படி சமாளிப்பது? எப்படி எதிர்ப்பது? அதை எதிர்த்து இந்தியாவிலே இருக்கிற ஜனநாயக சக்திகளின் அணியில் மக்களை ஒன்று சேர்ப்பது என்று ஆலோசித்தால் என்ன தப்பு? அதைப் பேசுவதில் என்ன தவறு ? அப்படிப் பேசுவதைக் கூட, என்னமோ பேசுகிறார்கள் என்று இங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்கள் சொல்வது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஏனென்றால், காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, இந்த மாநிலத்தினுடைய முன்னேற்றத்திற்கு, இந்த மாநில மக்களுடைய முன்னேற்றத்திற்கு



மக்களுடைய கஷ்டங்களைப் போக்க உதவாமல், மத்திய அரசு அடம் பிடிப்பதை இங்கே இருக்கிற காங்கிரஸ் நண்பர்களும் சேர்ந்து எதிர்க்க வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற வறட்சி சாதாரண வறட்சி அல்ல. இந்த வறட்சியை போக்க அதிகமாக நிதி ஆதாரங்களை மைய அரசுதான் கொடுக்க வேண்டும். நோட் அச்சடிப்பதிலிருந்து சகல அதிகாரங்களையும் தன் கையிலே வைத்திருக்கிற மத்திய அரசு ரூ. 100 கோடி ரூ. 200 கோடி, வேண்டுமென்றால், தாராளமாகக் கொடுக்கவேண்டும்.

அது மட்டுமல்ல, ரிசர்வ் வங்கி, முன்னாலே 3 சதவீதம் வட்டிக்குக் கடன் கொடுத்தது. இன்று அது 6 % ஆக உள்ளது. அதைக் குறைப்பதற்கு நம்முடைய மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்கள் முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால், இது மக்களுடைய பிரச்னையே தவிர, கட்சிப் பிரச்னை அல்ல. ஆகவே, மாநிலத்திற்கு மத்திய அரசு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல, இந்த நாட்டிலே உள்ள பெருங்குடி மக்களான விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டியது மத்திய அரசு. அதே மாதிரி கடனுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்றால் ரிசர்வ் வங்கிதான் அவர்களுக்குப் பச்சை விளக்கு காட்ட வேண்டும். அவர்கள்தான் அதற்கு உதவி செய்ய வேண்டும். இன்றைக்கு மாநில சர்க்காருக்கு எவ்வளவு இடைஞ்சல்கள் கொடுக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். நான் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தினுடைய தலைவராக இருக்கிறேன். ஏறக்குறைய ரூ. 50 இலட்சம் கடன் கொடுத்திருக்கிறோம். ஆனால், 1 வருஷ காலமாகக் கடன் கொடுக்கவில்லை. காரணம், எல்லா மாநிலங்களுக்கும் எல். ஐ. சி. கடன் கொடுக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கு மட்டும், அரசாங்கம் காரண்டி கொடுத்தாலும்கூட, உங்களுக்கு $10\frac{1}{2}$ % வட்டிக்குத்தான் பணம் தருவோம். முன்னால் உங்களுக்குக் கொடுத்தது போல் 8 % வட்டிக்குத் தர மாட்டேன், வேறு மாநிலங்களுக்கு $8\frac{1}{2}$ % வட்டிக்குத் தருவேன் என்று சொல்லக்கூடிய வகையிலே, பணம் பெறாமல், பல கூட்டுறவுச் சங்கங்களில் வீடு கட்டக் கடன் கொடுக்க முடியாத நிலைமையிருக்கிறது. நம்முடைய சீஃப் செக்கரட்டரி எழுதியிருக்கிறார்—இங்கிருந்து எல். ஐ. சி. சேர்மனுக்கு எழுதுகிறார். ஆனால், அவர்கள் உங்களுடைய மாநிலத்திற்குக் கொடுப்பதற்குத் தடங்கல் இருக்கிறது என்று எழுதுகிறார்கள் என்ன தடங்கல் இருக்கிறது? என்ன, என்ன காரணங்கள், சொல்கிறார்களோ, தெரியாது. வேறு மாநிலங்களுக்கு $8\frac{1}{2}$ %—க்குக் கடன் தொகை கொடுக்கும்போது, நமக்கு $10\frac{1}{2}$% வட்டிக்குத்தான் தருவோம் என்று இப்படி ஒரு நிபந்தனை விதித்திருக்கிறார்கள். ஆகவே, நான் சொல்லிக்கொள்கிறேன்,

மாற்றுக்கட்சிகள், வேறு கட்சிகள் ஆட்சி பண்ணக்கூடிய அரசுகளை எல்லாம் எந்த, எந்த வகையிலே தொந்தரவு கொடுக்கலாம் என்று, அவைகளைத் தங்களுடைய வலைக்குள், தங்களுடைய சொல்படி ஆடக்கூடிய அரசாக ஆக்கலாம் என்று எண்ணுவது சரியல்ல.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அது ஜனநாயகத்திற்கு விரோதம். அது ஜனநாயகம் என்னும் கொள்கையைக் காக்க விரும்புகிற அத்தனை பேருக்கும் வேதனை அளிக்கக்கூடிய மட்டுமல்ல, அத்தனை பேரும் சேர்ந்து அதற்கு மேலும் ஒரு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிக முக்கியமாக நம்முடைய முன்னால் உள்ள பிரச்னை, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், விவசாயிகளுடைய பிரச்னையை அக்கறையோடு கவனிக்கவேண்டும். இன்றைக்கு கமிட்டி போட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டி முடிவு தெரியும் வரை ஜப்தி போன்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். இன்றைக்கு ரூ. 10,000 கடன் வாங்கி கிணறு வெட்டி. கிணற்றிலே தண்ணீர் வரவில்லையென்றால், கட்ட முடியாமல், வட்டியோடு, அது மொத்தமாக ரூ. 21,000ஐக் கூடத் தாண்டிவிடுகிறது. அவ்வளவையும் மொத்தமாக அவனால் கட்ட முடியாது. ஆகவே, யாருக்கு நிவாரணம் அளிக்க வேண்டும்? சுலபமாக யாரிடத்தில் வசூல் செய்ய வேண்டுமென்பதை முடிவு செய்ய ஒரு கமிட்டி போட்டிருக்கிறீர்கள். மாவட்ட அளவிலே கமிட்டிகள் போட இருக்கிறார்கள். அந்த கமிட்டிகள் முடிவு செய்யட்டும். அதுவரை கெடுபிடி, ஜப்தி போன்ற நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி சம்பந்தமாக பல இடங்களிலே, ஆமை வேகத்தில், வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்திலே போட்ட போர்களிலே, குழாய்கள்கூடப் பதிக்கப்படவில்லை. பம்பிலே தண்ணீர் எடுக்க முடியாமல் அப்படியே இருக்கிறது. ஆகவே, துரிதமாக குடிநீர் கிடைக்கக் கூடிய அந்த ஏற்பாட்டை வேகமாகச் செய்வதோடு. இன்றைக்கு வறட்சி நிவாரணத்திற்காக அதிக நிதியை மத்திய அரசிடம் கேட்டுப் பெறவேண்டும்.

நான் இன்னொன்று சொல்வது, எல்லா கிராமங்களுக்கும் நியாய விலைக் கடைகளை, நியாயமாகத் திறந்து அத்தியாவசியப் பொருள்களை வழங்கவேண்டும். அவற்றின் விலை ஏறிக் கொண்டே போகிறது. அவை மலிவான விலையில் கிடைப்ப



தற்கு நடவடிக்கை எடுத்து, கிராமங்களுக்கு அந்தப் பொருள்
களுக்கு நியாயமான விலைக்கு அளிப்பதற்கும், பல புதிய
கார்டுகளைக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்வதோடு, நம்மு
டைய, மாண்புமிகு வரதராஜன் அவர்கள் சொன்னதைப் போல,
பக்கத்திலே உள்ள கேரள மாநிலத்திலே, விவசாயத் தொழி
லாளர்களுக்குப் பென்ஷன் கொடுக்கிறார்கள், அதே வகையில்
விவசாயத் தொழிலாளர்களுக்கும், வறுமைக் கோட்டுக்குக் கீழே
உள்ள அத்தனை பேருக்கும் பென்ஷன் கொடுக்கின்ற ஏற்
பாட்டை உடனடியாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.20]

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால்
கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க
சட்டமுன்வடிவு குறித்து என்னுடைய உணர்வுகளை உங்கள்
மூலமாக இந்த மன்றத்தின் முன் வைக்க முன் வருகிறேன்.

மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த அரசு
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு
ஏற்பட்ட பிறகு, உருவான தன்னிறைவுத் திட்டம் என்பது மிக
மிக பாராட்டக்கூடிய இந்தியத் துணைக்கண்டத்திலேயே
பாராட்டக்கூடிய, ஏழைகள், எளியவர்கள் கிராமப் புறங்களிலே
இருக்கக் கூடியவர்கள் எல்லாம் வளர்ந்து வரும் நகரம் போன்று
வாழ்வதற்கு வேண்டிய வாய்ப்பினை உருவாக்கக்கூடிய மிகப்
பெரிய சிறந்த திட்டமாகும். அதுமட்டுமல்லாமல், இந்தத்
தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆட்சியிலே இது
வரையிலும் எந்தத் திட்டங்களையும், உதவாத திட்டங்களாக.
உறுப்படியாகாத திட்டங்களைச் செய்யவில்லை என்பதையும்,
மிக மிகத் தேவையானது எது என்பதை வரையறுத்து செல
வழிக்கின்ற வகையில் அந்தத் திட்டங்களை உருவாக்கி வருகிறது
என்பதை இந்த நாடு பாராட்டுகிறது. உலகம் பாராட்டுகிறது,
நாங்களும் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் இவ்வளவு திட்டங்
களைச் செய்திருந்தாலும்கூட, திட்டங்களை செய்யாமல் போடா
மல் விளம்பரம் செய்து கொண்டிருந்தவர்கள் இருந்தார்கள்.
அடிக்கல்நாட்டுகின்றபோதே அதைச் செய்து முடித்துவிட்டதாக
வும் ஒரு ஊருக்கு மின்சாரக் கம்பம் நடுவதற்கு முன்பாகவே,
மின்சாரப்பூர்த்தி விழா நடந்துவிட்டது என்றெல்லாம் சொல்லக்
கூடியவர்கள் எல்லாம் இங்கே இருந்தார்கள். இங்கே தண்ணீர்
வருகிறது என்று சிலை வைத்துவிட்ட உடனேயே தண்ணீர் வந்து
விட்டது என்று சொல்லக்கூடிய மேஜிக் வேலைகளை எல்லாம்
செய்துகூட இருக்கிறார்கள். ஆனாலும்கூட இந்த அரசு இது
வரையிலும் என்ன பெரிய சாதனைகள் செய்தும்கூட அதற்குத்
தேவையான, நியாயமான விளம்பரத்தை செய்யாமல் இருப்பது
மிக மிக பரிதாபத்திற்குரிய விஷயமாகும். இந்த விளம்பரம்

தேவை. இந்த அரசாங்கம் ஏற்பட்ட பிறகு, என்னென்ன வகையில் இவ்வளவு தொகை, இன்ன காரியத்திற்கு, எவ்விதம் செய்யப்பட்டிருக்கிறது என்ற விளம்பரம் மிக மிகத் தேவை. இன்னும் சொல்லப்போனால் எப்போதுமே காணாத வகையிலே வறட்சி ஏற்பட்டு, அந்த வறட்சியை நீக்குவதற்கு வளர்ச்சித் திட்டங்களைப் போட்டு நாம் பல கோடி ரூபாய்களை செலவழித்துக் கொண்டு வருகிறோம், இதனை எல்லாம் படம் பிடித்து, வறட்சி எப்படி இருக்கிறது என்பதை எல்லாம் படம் பிடித்து, வளர்ச்சித் திட்டங்கள் எந்தெந்த வகையிலே ஏற்பட்டிருக்கிறது என்பதைக்கூட சினிமாப் படமாகப் பிடித்து வெளியிடவேண்டும். அப்போதுதான் மாறுதல் தெரியும். ஒரு யூனியன் என்று சொன்னால், அந்த ஒன்றியத்திலே இந்தப் பாதை அமைத்திருக்கிறோம், அதற்கு இவ்வளவு தொகை; இந்தப் பாலம் அமைத்திருக்கிறோம், அதற்கு இவ்வளவு தொகை; இன்ன கட்டிடம் கட்டி இருக்கிறோம், அதற்கு இவ்வளவு தொகை என்று தனித் தனியாக, பொதுமக்களே பார்த்துத் தெரிந்து கொள்ளும் வகையில் ஒரு விளம்பர போர்டு வெளியிலே எழுதி வைத்திருக்கவேண்டும். எந்தக் காரியத்தை, என்றைக்குச் செய்திருக்கிறோமோ, அங்கே இன்னாரால், இந்த காரியம் இவ்வளவு தொகைக்கு இப்போது செய்யப்பட்டது என்று இருக்க வேண்டும். அப்போதுதான் இதிலே குற்றங்குறைகள் ஏற்படுமேயானால், இவ்வளவு தொகை என்று சொல்லுகிறார்களே இவ்வளவு போதாது என்று அங்கே பொதுமக்கள் குறைகள் சொன்னால்கூட, அதை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு, இடைத் தரகர்கள் இடையிலே நுழைந்து அதைச் சாப்பிட்டு விடாமல், ஜீரணம் செய்துவிடாமல் இருக்கக்கூடிய அளவுக்கு அல்லது, வேலியே பயிரை மேய்கின்றது என்பதைப் போல, நிதி ஒதுக்கீடு செய்து செலவு செய்யக்கூடிய அந்த அதிகாரிகளேகூட சில தவறுகள் செய்து விட்டார்கள் என்று சொல்லக்கூடிய புகாருக்கு இடம் இல்லாமல், எதிர்கட்சியேகூட வாய்திறந்து நம்மை ஏதும் சொல்லுகிற வகையில் எந்த வார்த்தையும் இல்லாமல் இருப்பதற்கு இவை முன்னுதாரணமாக அமையும் என்ற காரணத்தால் இதுபோன்ற விளம்பரங்கள் தேவை என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. மரம் வளர்ச்சி என்று பார்க்கிறபோது உண்மையிலேயே நாடு முழுவதும் சீராகவும் செம்மையாகவும் அந்த மரம் வளர்ச்சி திட்டத்தை அருமையாக இப்போது செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். இன்னும் 10 ஆண்டுகளில் பார்த்தால் தமிழ்நாடே ஒரு பார்க் டவுனாக மாறிக் கொண்டிருக்கின்ற அளவுக்கு, மிகப் பெரிய அளவுக்கு, வனாந்திரங்கள் எல்லாம், மரங்கள் சாலைகள் எல்லாம் இருக்கக்கூடிய பகுதியிலேதான் தமிழகம் அமைந்திருக்கிறது என்று சொல்லத் தக்க வகையிலே, இந்தப் பணி மிகவும் செம்மையாக நடைபெற்று வருகிறது.



அதே நேரத்தில் காடு வளர்ப்பு என்று இருக்கிறது. மக்கள் எங்கு அதிகமாக விவசாயம் செய்கின்றார்களோ, நெடு நாட்களாகவே 20, 30 ஆண்டுகளாக விவசாயம் செய்யக்கூடிய பகுதியிலே அதை, காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் சேர்த்து, அங்கே மரம் வைக்க இன்றையதினம் அரசினர் முன்வந்திருக்கிறார்கள். அவை பல சங்கடங்களுக்கு உரிய இடமாக இருக்கிறது, அப்படிப்பட்ட இடங்களிலே அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வன அலுவலர்களை எல்லாம் சேர்த்து முடிவு செய்து, அதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்ற நிலையில் அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் ராசாம்பாள் அவர்கள் 3%தான் ஆதித்திராவிடர்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த அரசாங்கம் வந்தபிறகுதான், அரிசனங்களுக்கு வேண்டிய அத்தியாவசியமான எல்லாச் சலுகையையும் கொடுத்து வருகிற என்று சொன்னால் அது மிகையாகாது. அரிசனங்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற நிலை மாறி இந்த நாட்டு மக்களில் அவர்களும் ஒரு 'இந்நாட்டு மன்னர்' என்று சொல்கிற வகையில்–காந்தியடிகள், ஜெயப்பிரகாஷ் நாராயணன், வினோபாபாவே போன்றவர்கள் என்னென்ன கனவுகளைக் கண்டார்களோ, என்னென்ன வார்த்தைகளை எடுத்துச் சொன்னார்களோ, அந்த வார்த்தைகளையெல்லாம் நடைமுறைக்குக் கொண்டு வந்து இருப்பது புரட்சித் தலைவர் அரசுதான்.

அரிசனங்கள் சுடுகாட்டுக்குச் செல்வதற்கு வழி அமைத்துக் கொடுத்தது யார், அனைத்திந்திய அண்ணா தி. மு. க. ஆட்சி இல்லையா? அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு திட்டம் தீட்டி, அதற்கான நிதி ஒதுக்கம் செய்து அதற்கான மானியம் கொடுத்தது யார், இந்த ஆட்சி இல்லையா? அதுமட்டுமல்லாமல், அரிசனங்கள் இந்துக்களோடு சேர்ந்து வாழ்ந்தால் அவர்களுக்கும் கூட மானியம் கொடுக்கிறோம் என்று ஏழை, பணக்காரன், இந்து, அரிசன் என்ற நிலையை மாற்றி ஒரு சமதர்ம நோக்கத் தக் கொண்டு வந்தது இந்த அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு இல்லையா? அவர்களுக்கு வேண்டிய கடன், மானியம், கைத்தொழில் செய்வதற்கு வேண்டிய கடன், அதற்குரிய சலுகை என்று வகைவகையாக, அரிசன ஏழையாக இருந்து இறந்துவிட்டால், அவனுடைய ஈமச் சடங்கு செய்வதற்கு 50 ரூ. கொடுக்க திட்டம் கொண்டு வந்தது யார்? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தானே என்பதை மாண்புமிகு உறுப்பினர் ராசாம்பாள் உணர வேண்டும் என்பதை இந்த நேரத்தில் மிகப்பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் கே. சமரசம்] [1981 மே 11

அரசாங்கத்திலே பொதுவாகப் பணத்தை ஒதுக்கி செலவு செய்வது எல்லாம் பொதுப்பிரச்சனையிலே வந்துவிடுகிறது. அதனாலே அரிசனங்களுக்கு என்று தனியாக மருத்துவமனை வைப்பது இல்லை. அரிசனங்களுக்கு என்று தனியாக சில காரியங்கள் செய்வது இல்லை. பொதுவில் எல்லாம் அரிசனங் களுக்குப் பங்கு கிடைக்கிறது. அவை எல்லாம் போக ஒதுக்கி இருப்பதுதான் இந்த 3% என்பதை நான் அந்த உறுப்பினரின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நான் ஏற்கனவே பல முறை இந்த மன்றத்தில் குறிப்பிட்டு இருக்கிறேன். ஜாதி அரசியலைத் தவிர வேறு இல்லை என்று சொல் கிறோம், இடதுசாரி பெரியோர், இடதுசாரி மூழு குலத்தோர் என்று சொல்கிறோம். ஆகவே, பொருளாதார ரீதியில் உதவிகள் செய்யவேண்டும். இன்று நாயுடுகள் எல்லாம் சோற்றிலே கை வக்கிற பெரிய பிரமுகர் எல்லாம் நாராயணசாமி நாயுடு அவர்கள் மாறிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டுமானால், பொருளாதார ரீதியில் உதவி செய்யவேண்டும். ஏழை யார், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் யார், அவர்களுடைய பெயர் என்ன, முகவரி என்ன, அவர்களுக்கு அரசாங்கம் எப்படி உதவி செய்கிறது, அதற்கு வட்டி உண்டா, இல்லையா. மானியம் எவ்வளவு என்பதையெல்லாம் தெரிந்து, ஏழைகள் என்பதற்குத் தெளிவான ஒரு விளக்கம் இருக்குமானால், நாம் புதிய ஜாதிகளை-புதிய ஐயர், புதிய நாய்க்கர்களை; புதிய முதலியார்களை, புதிய பள்ளையாட்சிகளை, புதிய கவுண்டர் களை உருவாக்காமல் இருப்பதற்கு வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் ஏற்கனவே ஒரு சட்டம் கொண்டு வந்தோம். எதிர்க் கட்சிகள் அதற்கு ஒத்துழைப்புக் கொடுக்காததால் அதை ஒத்தி வைத்து இருக்கிறோம். நாம் மீண்டும் அதை நிச்சயமாகக் கொண்டு வந்து நிறைவேற்றிட இந்த அரசு முனைப்பான காரியங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவிலேயே தமிழகம் தான் ஜனநாயகத்தின் தொட்டிலாக இருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்திலேயே, 'லா அன்ட் ஆர்டர்' பற்றிப் பார்க்கும்போது, எந்த மாநிலத்தையும்விட- கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்த் தால் கூட நம்முடைய மாநிலத்தில் தான் அது சிறப்பாக இருக்கிறது என்று அவர்களே கூட ஒப்புக்கொள்வார்கள். ஜோதி பாசு அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே ஏதோ மட்டம் போட்டப்படுகிறது குண்டு போடப்படுகிறது என்று கருத்துக்கள் சொல்லப்பட்டிருக் கின்றன. அப்படிப்பட்ட முறையில் நாட்டிலே எங்கே எது எப்படி இருந்தாலும்கூட, தமிழகம் தான் தனித்தன்மையோடு நடந்து கொண்டு இருக்கிறது.



1981 மே 11] [டாக்டர் கே. சமரசம்]

அந்த வகையில் தமிழ்நாடு மக்கள் தொகை கட்டுப்பட்டை குடும்ப நலத் திட்டத்தை ஒழுங்காக, நியாயமாகக் கடைபிடித்து வந்த காரணத்தால், மத்திய அரசின் அந்தத் திட்டத்தை ஒழுங்காக நிறைவேற்றி இருக்கிற காரணத்தால், 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று தமிழகத்திற்கு இருந்தது இன்றைக்கு 38 எனகிற அளவில் குறைந்துவிட்டது என்பதை காங்கிரஸ்காரர்கள் உணரவேண்டாமா? மக்கள் தொகையின் அடிப்படையில் பாராளுமன்ற இடங்கள் கொடுக்கின்ற காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டதை காங்கிரஸ் பெரியவர்கள் உணர்ந்து பார்க் வேண்டும். குடும்ப நலத் திட்டத்தை அமல் படுத்தியதற்கு இது தான் பரிசா? இன்னும் அதனைத் தீவிரமாக நிறைவேற்றினால் 40, 38ஆனது போல், 38 மேலும் குறைந்துவிட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மக்கள் தொகை அடிப்படையில் இந்த இடங்கள் ஒதுக்குவது இல்லாமல், தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டு இருக்கும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை குறையாமல் மத்திய அரசு கொடுக்கவேண்டும் என்று வாதாடிப் பெறவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்புத்தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதி காரங்கள் பல வகையில் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போதுதான் மக்கள் ஆட்சித் தத்துவத்தின் அத்தியாயமே இந்தியாவிலே தமிழகத்தில் தான் ஆரம்பமாகியிருக்கிறது என்பதற்கு இது ஒரு முன்உதாரணம் என்பதைச்சொல்லிக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.30]

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு எந்தப் பிரச்னை யாக இருந்தாலும், கிராமங்களுக்கு பாதைகள் போடுவதாக இருந்தாலும், குடிதண்ணீர் பிரச்னையாக இருந்தாலும், இன்ன பிற அவசியமான மக்களின் தேவைகளையெல்லாம் தானாகவே பூர்த்தி செய்கிற அளவிற்கு அதிக அதிகாரம் கொடுக்க வழி செய்யப்பட்டுள்ளது. அந்த உண்மையிலேயே நான் பாராட்டு கிறேன்.

அடுத்தபடியாக உதவி என்று வருகிறபோது. அரசு ஊழியர் களுக்கும், போலீசார்களுக்கு உதவிசெய்வது போன்று. அதாவது அரசு கடைநிலை ஊழியர்களுக்கு, ரெகார்டு கிளார்க், பியூன், வாட்ச்மேன், ஸ்கேவன்சர்ஸ் டிரைவர் போன்ற கடை நிலை ஊழியர்களுக்கு, உணவுப் பொருட்களை அரசு சலுகை விலையிலே கொடுப்பது பற்றி அரசு மறுபரிசீலனை செய்தால் சரியாக இருக்கும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பட்டதாரிகளுக்கு இப்போது 50 ரூபாய் கொடுக்கிறோம். அப்படி கொடுப்பதை தவிட அவர்களுக்கு 150 ரூபாய் கொடுத்து, பகுதி நேர பயிற்சி வேலையாகவும் அவர்களை நியமித்தால் சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இன்றைக்கு பல இடங்களிலே, பல பகுதிகளிலே இருக்கக்கூடிய சங்கங்கள், தொழிற் சங்கங்கள், அல்லது அரசு ஊழியர்களின் சங்கங்கள், அந்தந்த அலுவலக நேரத்திலேயே செயல்படுகிறது என்று சொல்லவிரும்புகிறேன். வேலை நேரத்திலே அவர்கள் எப்படி நடந்துக் கொள்கிறார்கள் என்பதைப் பார்த்தால் நமக்கு மிக மிக தர்மசங்கடமாக இருக்கிறது. அவர்களுக்கு இருக்கிற உரிமைகளை அவர்கள் கேட்பது பற்றி நான் எதுவும் கூற முன் வரவில்லை. ஆனால் அந்த உரிமைகளை அந்தக் கோரிக்கைகளை எந்த நேரத்தில் எப்படி எழுப்பப்பெற வேண்டும் என்கிற முறை இருக்கிறது. அவர்கள் மற்ற ஓய்வு நேரங்களை விட்டு, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பெற்ற வேலை நேரங்களிலேயே பிரச்னைகளை எழுப்புகிறார்கள். அப்படி இல்லை என்றால் யாருக்கும் பாதகம் இல்லை. ஆனால் வேலை நேரத்திலேயே பிரச்னைகளை எழுப்பினால், குழப்பங்கள் ஏற்படுகின்றன. அவசியமான அரசுச்சக்கரம் வேகமாக சுழல் முடியாத நிலைக்கு தள்ளப்படுகிறது. நல்ல முறையில் அச்சங்கங்கள் இயங்குவதற்குரிய ஜனநாயக அமைப்பும் மாறுபடுகிறது.

தொழிற் சங்கங்களுடைய கூட்டங்களை அவர்கள் வேலை நேரத்திலேயே நடத்துகிறார்கள். அவர்களுடைய ஊர்வலங்கள் அந்த நேரத்திலேயே நடக்கிறது. அவர்களுடைய பேச்சுக்கள் சொற்பொழிவுகள் அந்த நேரத்திலே நடைபெறுகின்றன. இதை அரசாங்கம் கவனித்து தக்கபடி அதனை சீர்செய்ய வேண்டும். சட்டப்படி அவர்கள் நடக்கலாம், ஆனால் சர்க்கார்-படியும் அவர்கள் இயங்கவேண்டும். ஆனால் அவர்களில் சிலர் இஷ்டப்படி போகிறார்கள். அவர்கள் மீது இந்த சர்க்கார் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கடமையைச் செய்யத் தவறியவர்கள் மீது கண்டிப்பான நடவடிக்கை தேவை. அப்போதுதான் நாட்டிலே ஜனநாயகம் நல்லமுறையில் இருக்க முடியும்.

நான் இன்னொன்றையும் சொல்லவிரும்புகிறேன். அம்மா திராவிட முன்னேறறக் கழகத்தைப் பற்றி நான் ஆச்சரியப்படவும் இல்லை. கலைஞருடைய காங்கிரஸைப் பற்றி நான் கவலைப் படவும் இல்லை. நாட்டிலே தற்போது நம்முடைய நிலைமை என்ன? நாம் என்ன செய்துக் கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். குற்றங்களே நடைமுறையானால் நாட்டிறகு தேவையான திட்டங்களும், சீர்திருத்தச் சட்டங்களும் தேவையில்லையா என்பதை கொஞ்சம் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் உணர வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையிலே நம்மை நாம் மாற்றிக் கொள்ளத் தவறினால், இந்த நாட்டிலே எதையுமே எப்பொழுதுமே செய்வதற்கு நாம் தகுதியற்றவர்களாக மாறி விடுவோம் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.



அடுத்து விவசாயம் என்று பார்க்கிறபோது, கரும்புக்கு இது வரையில் அதாவது 1947 லிருந்து கிடைக்காத ஒரு விலையை இப்போது நாம் கொடுத்திருக்கிறோம். தக்காளி போட்டால் நிலத்தின் மதிப்பே உயருகிறது. ஒருமுறை மகசூலிலே அந்த நிலத்தின் மதிப்பையே பெறத்தக்க வகையில் இன்றையதினம் நிலைமை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், மா, பலா, தென்னை, வாழை போன்றவைகளைப் போடுவதற்கும் இன்னும் அதிகபடியான அளவில் வசதி வாய்ப்புகளை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் நாட்டிலே வறட்சி ஏற்பட்டிருப்பதால், சில விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கலாமே தவிர, அவர்கள் உருவாக்குகிற, உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு விலை இல்லை என்றோ, அதன் காரணமாகத் தான் பாதிக்கப்படுகிறோம் என்றோ எந்த விவசாயியும் சொல்லவில்லை. ஏனென்றால் அப்படிச் சொல்லக் கூடிய நிலைமை இல்லை.

அடுத்தபடியாக, நாம் நாட்டிற்காக எவ்வளவு சிறப்பாக நல்ல பல திட்டங்களை உருவாக்கினாலும், எவ்வளவு பெரிய பிரச்னையாக இருந்தாலும் அதை மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்ற வகையில் நிறைவேற்றி வைத்தாலும் கூட எதிர்க் கட்சியாக இருப்பவர்கள் பொதுவாகவே, எதையுமே எதிர்த்துப் பேச வேண்டும் என்பதையே தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். தென்னை மரத்தின் மீது ஒருவன் ஏறினானாம். தோட்டக்காரன் பார்த்துவிட்டான். தோட்டக்காரன் பார்த்து விட்டான் என்பதைத் தெரிந்துக் கொண்டு, மரத்தின் மீது ஏறியவனும் கீழே இறங்கி வந்து விட்டான். தென்னை மரத்தின் மீது ஏன் ஏறினாய் என்று தோட்டக்காரன் கேட்டால், அவன் சொன்னானாம் இளம் கன்றுக்கு புல் இல்லை அதைப் பறிப்பதற்காக ஏறினேன் என்று. தோட்டக்காரன் கேட்டானாம் என்னடா புல் போய் தென்னை மரத்திலே இருக்குமா என்று. அது இல்லை என்று தெரிந்து தான் இறங்கி வந்து விட்டேன், ஏன் இப்படி அர்த்தம் இல்லாமல் கேள்வி கேட்கிறாய் என்று தோட்டக்காரனைப் பார்த்து சொன்னானாம். அதுபோன்ற வகையில்தான் இங்கே விவாதங்கள் நடைபெறுகிறதேஒழிய நாட்டுக்கு தேவையான கருத்துக்களையோ ஆலோசனைகளையோ தெரிவிக்கும் வகையில் இங்கே எதிர்க் கட்சிகள் இயங்க முன் வருவதில்லை என்று, கூறிக்கொண்டு, அவைகள் இனிமேலாவது நாட்டினுடைய நன்மைக்கு உதவி செய்கிற வகையில் சீர்திருத்தங்களை சொல்கிற வகையில், இங்கே இருக்க வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன். வணக்கம்.

திருமதி. தா. இராசாம்பாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அருமை சகோதரர் அவர்கள் நான் பேசியதில் குற்றம் குறை கண்டு பேசியதாகத் தெரிகிறேன்.
(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு வி. வி. சுவாமிநாதன்) : நீங்கள் பேசியதில் ஒரு குற்றத்தையும் அவர் கூறவில்லை. அவருக்கு தெரிந்த ஒன்றை அவருடைய கருத்தாக சொன்னார்கள். உங்கள் மீது எதுவும் சொல்லவில்லை உட்காருங்கள். திரு. பொ. விஜயராகவன்.

* திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவின் மீது ஒருசில கருத்துக்களை நான் சார்ந்திருக்கிற ஜனதாக் கட்சி சார்பில் சொல்ல முற்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள்——தமிழ்நாடு ஜனநாயகத்தின் தொட்டில், தமிழகத்தில்தான் மக்கள் ஆட்சித் தத்துவமே மலர்ந்திருக்கிறது, மக்கள் ஆட்சியில் இங்குதான் பூக்காடுகள் நிறைந்து காணப்படுகின்றன என்ற அளவில் மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். ஒன்றை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இன்றைக்கு பஞ்சாயத்துக்களுக்கு தேர்தல் என்பதை ஒத்தி வைத்துவிட்டு, நகரசபைத் தேர்தல்கள் நடத்த முடியாமல், கார்ப்பரேஷன் தேர்தல் நடத்த முடியாமல் கூட்டுறவுத் துறையில் இயங்குகிற நிறுவனங்களில் எல்லாம் தனி அதிகாரிகளைப் போட்டு வைத்துவிட்டு, இவ்வளவையும் செய்துவிட்டு, ஜனநாயக உணர்வுகளின் குரல்வளை முறிக்கப்பட்டிருக்கிறபோது தமிழ்நாடு எப்படி ஜனநாயகத்தினுடைய தொட்டிலாக மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகிற அளவிற்கு இருக்க முடியும் என்பதை தயவு செய்து அரசாங்கம் உணர்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவைகளுக்கெல்லாம் காலத்தை நீட்டிக் கொண்டு போகாமல், அடிப்படை ஜனநாயக உணர்வுகளை, அடிப்படை ஜனநாயக உரிமைகளை மக்களுக்கு வழங்குவதற்கு இந்த அரசு முற்படவேண்டும் என்று முனைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கிற நிலைமைகள் குறித்து ஒட்டுமொத்தமான சில கருத்துக்களைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கூட்டுறவுத் துறையில் இன்று விவசாயிகள் மத்தியில் ஜப்தி என்ற பெயரால் விவசாய மக்கள் அடக்கு முறைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு விவசாயிகள், சிறு விவசாயிகள் என்ற அளவில் அவர்கள் இருந்தாலும்கூட அந்த விவசாயிகள் இன்னும் பெரிய அளவில் தொல்லைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஜப்தி என்ற பெயரால் அதிகாரிகள் விவசாயிகளை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை நிறுத்தப்பட்டு விவசாயிகளிடமிருந்து நியாயமான முறையில் அன்பான முறையில் அவர்களிடமிருந்து பணத்தைத் திருப்பிப் பெறுவதற்கு உண்டான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





இன்று தமிழகத்திலிருக்கிற அரசாங்க ஊழியர்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால், வேளாண்மைத் துறையைச் சார்ந்த ஊழியர்கள் இன்று காலவரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அதே போன்று அந்தத் துறையில் பணியாற்றுகிற சில ஊழியர்கள் இன்று சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். பலர் உயிர்களுக்குக் கூட கவலைப்படும்படியான சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. அதே போல் ஆசிரியர்கள் மறியல் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசு ஊழியர்கள் அவர்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி அரசிடமிருந்து பெறவேண்டியவற்றை பெற, அவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டப் பாதையில் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றை வளர்க்காமல் அவர்களோடு நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்தி அவர்கள் கோரிக்கைகள் குறித்து அன்போடும் பரிவோடும் ஆய்வு செய்ய அரசு முன்வரவேண்டும். அதல்லாமல் காலம் கடந்த பிறகு நடவடிக்கைகள் எடுப்பது என்றால் அது எந்த வகையில் சரியாகும் என்று கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்று, என்னுடைய மாவட்டத்தைப் பற்றி ஒருசில கருத்துக்கள் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்ட 1967—க்கு பின்னால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்துவருகிறது. இந்த ஆட்சி வந்த பிறகு, இதற்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் செய்ததை விட மாறுபட்டு எல்லா மக்களுக்கும் நல்லது செய்வார்கள் என்று சொன்னார்கள். அந்த அளவில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உரிய நிதி வசதி, உரிய பங்கு கிடைக்கும் என்று எதிர்பார்த்த மக்களின் எதிர்பார்ப்புகள் இன்று வீணாகப் போகக் கூடிய வகையில்தான் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின் தங்கியதொரு மாவட்டமாகும். அதை தொழில் துறையில் பின் தங்கிய மாவட்டமாக அறிவிக்கவேண்டும். அப்படி அதை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்காவிட்டாலும்—இன்று தமிழ்நாட்டில் பல்வேறு தாலுக்காக்கள் சிறுதொழில்களில் பின்தங்கியிருக்கிற காரணத்தால் அவை பின் தங்கிய தாலுக்காக்கள் என்று அறிவிக்கப்பட்டு அவற்றிற்கு தமிழ்நாடு அரசின் சலுகைகள், பல்வேறு சலுகைகள் கிடைத்து வருகின்றன.

[முற்பகல் 11.40]

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தாலுகாவிற்குகூட அந்தச் சலுகை கிடையாது. சிட்கோ என்று சொல்லப்படுகின்ற சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், அந்த நிறுவனத்தினுடைய அலுவலகம்கூட எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் இரு

கிறது. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத் தலைநகரான நாகர்கோயிலிலே அந்த அலுவலகம் கிடையாது. அங்கே உள்ளவர்கள் சிறுதொழில்கள் துவங்குவதற்கான கடன் வசதி, மற்றும் ஆலோசனைகள் பெறவேண்டுமானால், திருநெல்வேலி செல்லுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, சிறு தொழில் வளர்ச்சி நிறுவன அலுவலகத்தை நாகர்கோவிலில் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

டான்சி என்று சொல்லப்படுகின்ற நிறுவனத்தை எடுத்துக்கொண்டாலும், இந்த நிறுவனம் தமிழகத்தினுடைய பல பகுதிகளிலும் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த டான்சி என்று சொல்லக்கூடிய நிறுவனம் தொடங்கப்படவில்லை. இவைகளையெல்லாம் சொல்லுகிறோம் என்று சொன்னால், ஒருவேளை காழ்ப்புணர்ச்சி என்ற அளவிலே எடுத்துக்கொள்ளாமல், நாங்கள் அந்தப் பகுதியிலே இருந்து வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள். அங்குள்ள மக்கள் பிரதிநிதிகள், அந்தப் பகுதியிலே உள்ள மக்களின் குறைகளை எடுத்துச் சொல்கிறோம் என்ற அந்த நல்லெண்ணத்திலே எடுத்துக்கொண்டு, இனிமேலாவது உடனடியாக அவைகள் எல்லாம் இந்தப் பகுதிகளிலே நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிலாளர்கள் நலனைப் பொறுத்தவரையில்; இன்றைக்கு தமிழகத்திலே பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகளிலே, அங்குள்ள தொழிலாளர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அரசு நிறுவனங்களிலே தொழிலாளர்கள் சட்டங்கள் ஒழுங்காக நிறைவேற்றுவது கிடையாது. அரசு நிறுவனங்கள் என்று சொல்லுகின்றபோது, கூட்டுறவு நூற்பாலைகளை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு அங்கே தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படாமல் குறைந்த ஊதியம் பெற்றுக் கொண்டு, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டு வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. அங்கே அவர்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக கூட்டுறவு நூற்பாலைகளிலே குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையிலும், சேலம் நூற்பாலையிலும் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஊழியர்கள் பல ஆண்டுகளாகப் பணியாற்றியும் அவர்கள் தற்காலிகமாகவே இருந்துகொண்டு, நிரந்தரமாக்கப்படாமல் இருப்பவர்களை உடனடியாக நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு நிரந்தரமான தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய எல்லா உதவிகளும் சலுகைகளும் அளிக்க முன்வரவேண்டும்.



எங்கள் மாவட்டத்தில் ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் பல தோட்டங்களிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசு ரப்பர் தோட்டத்திலே பணியாற்றக்கூடியவர்கள், இந்த அரசுத் தோட்டத்திலே இருப்பவர்கள் நல்ல லாபத்தை ஈட்டிக் கொடுக்கிறார்கள். பல கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்கு வருமானம் வருகின்றது. ஆனால், இந்த அரசு ரப்பர் தோட்டத்திலே பணியாற்றக்கூடியவர்களுக்கெல்லாம் போனஸ் கிடையாது. ஆனால், தனியார் தோட்டங்களிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு அரசாங்கமே முன்வந்து, போனஸ் வாங்கிக் கொடுக்கிறது. தனியாரைப் பொறுத்தவரை ஒரு முறை, அரசு ரப்பர் தோட்டத்தைப் பொறுத்தவரை ஒரு முறை என்றால் இது எந்தவிதத்திலே முறையாகும்? ஆகவே, உடனடியாக அரசுத் தோட்டங்களிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கும், அவர்கள் ஈட்டக்கூடிய லாபத்திலே போனஸ் வழங்குவதற்கு உடனடியாக முயற்சிகள் எடுத்துக்கொண்டு, இந்த அரசாங்கம் அவர்களுக்குத் தரவேண்டும்.

அதேபோல், அரசு சிங்கோனாத் துறையில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கும் இதே நிலைதான் பின்பற்றப்பட்டு வருகிறது. சிங்கோனாத் துறையாக இருந்தாலும் சரி, ரப்பர் தோட்டமாக இருந்தாலும் சரி, அந்தத் தோட்டங்களிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு நிச்சயமாக போனஸ் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதேபோல், முந்திரித் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் எங்கள் மாவட்டத்தில் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள், பெரும்பாலோர் பெண்மணிகள், இளைஞர்கள். ஆனால், அவர்களுக்கு முழு நேரம் நிச்சயமாக வேலை கிடையாது. காரணம், கச்சா முந்திரி கிடைக்காமல் இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முந்திரித் தொழிற்சாலைகளிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலியைக் கொடுக்க உடனடியாக ஒரு குழுவை அமைத்து இந்த குறைந்தபட்ச கூலியை உடனடியாக நிர்ணயம் செய்யவேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஐ.ஐ.டி. என்கின்ற தொழிற்பயிற்சிப் பள்ளி ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது, அதிலே போய்ச் சேருவதற்கு மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது, அப்படி அங்கே ஒன்றே ஒன்று இருப்பதால், அங்குள்ள தேவையை அது பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு இன்னொரு ஐ.ஐ.டி-யைத் தொடங்குவதற்கு அரசாங்கமே முன்வர வேண்டும், அதேபோல் அங்கே ஒரே ஒரு பாலிடெக்னிக்தான் நாகர்கோயிலிலே இருக்கிறது. அதிக வாய்ப்பு பெறக்கூடிய வகையிலே அங்கே இன்னொரு பாலிடெக்னிக்கை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், அதேபோல் அங்கே பெண்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களில்

[திரு. பொ. விஜயராகவன்] [1981 மே 11

முதலிடம் வகிக்கின்ற காரணத்தினால், பெண்களுக்கென்று ஒரு தனி பாலிடெக்னிக் ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் அதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று அங்கே தேசிய நெடுஞ்சாலை 47. இந்த தேசிய நெடுஞ்சாலை 47—ல் கன்னியாகுமரியிலிருந்து, களியக்காவளை வரையில் சாலையைப் பார்ப்போமானால் மிக மோசமான சூழ்நிலையில், அதை எப்படி சொல்வது என்றே தெரியாத ஒரு நிலையில் இருக்கிறது. மற்ற தேசிய நெடுஞ்சாலைகளோடு இந்த நெடுஞ்சாலையை ஒப்பிட்டுப் பார்த்தால் இது உண்மையிலேயே தேசிய நெடுஞ்சாலை என்று சொல்லமுடியாத, சீர்கேடடைந்த நிலையில் இருக்கிறது. இதற்காக 98 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, அதற்கான வேலை நடைபெறும் என்கிற அளவில் சொன்னார்கள். வேலை துவங்குவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் எந்த அறிகுறிகளும் இல்லை,

நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு பாலங்கள், பல்வேறு மாவட்டங்களில் கட்டப்படும் என்று சொன்னார்கள். மற்ற மாவட்டங்களில் கட்டப்படுவதில் எங்களுக்கு பொறாமை கிடையாது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏதாவது ஒரு பலம் கட்டுவதற்கு திட்டம் இந்த வரவு செலவுத் திட்டத்தில் இருக்கிறதா என்று பார்த்தால், என்னைப் போன்றவர்கள் மிகுந்த ஏமாற்றத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். கணபதியான்கடவு, திக்குரிச்சி போன்ற கட்டவேண்டிய பாலங்கள், இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை; யாரிடம் சொல்வது என்று இருக்கிறோம். ஆகவே அதற்கான வேலைகள் உடனடியாக செயல்படுத்தவேண்டும்.

பல ஆண்டு காலமாக வற்புறுத்தப்பட்ட கருங்கல் குடி தண்ணீர் திட்டம் இன்னும் செயல்முறைக்கு வராமல் காலம் தாழ்ந்து கொண்டே போகிறது. வறட்சி காலத்தில் கருங்கல் பகுதியில் வாழ்கிற மக்கள் குடம் தண்ணீர் ஒரு ரூபாய் என்று வாங்குகிற சூழ்நிலை இருக்கிறது. உடனடியாக போர்கால நடவடிக்கையைப் போன்ற முறையிலே கருங்கல் என்ற நகர பஞ்சாயத்து பகுதிகளுக்கு, அதையொட்டி சில பஞ்சாயத்து பகுதிகளுக்கும் அந்த குடி தண்ணீர் திட்டம் வெகு விரைவில் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

Thiru T. VENKATA REDDY: Hon'ble Mr. Chairman, while welcoming the Act of 1981 I should like to state some of the facts which the Government has to consider it very carefully. While speaking at the outset Thiru Varadarajan had criticised the Central Government for having spread the rumour that this Government will be thrown



1981 மே 11]

out by the Central Government. In this connection I should like to state that our beloved Prime Minister has made a categorical statement that non-Congress Government will not be removed from power unless they themselves are responsible for it. That is the categorical statement made by our beloved Prime Minister. When that categorical statement is there, there is no need for the apprehension either by the Chief Minister of West Bengal or our Government that it will be removed. But with that assurance I only request our present Government to consolidate all their power and energy alleviate the grievances and also the difficulties of the poor people.

While submitting this I should like to state the agriculturist plight. When I submit this, so far as Dharmapuri District is concerned I have submitted a Memorandum to the Chief Minister and also the Government in the month of September 1980 with regard to the drought conditions and other difficulties which the agriculturists face. But our Government has not taken care to look into the grievances till our beloved Chief Minister visited some of the drought plane areas in the fag end of the year. This only shows our Government has not been very careful, diligent in knowing the sufferings of the people. If only the Government has taken appropriate steps at the proper time in the month of September or October it would have got more funds from the Central Government.

As soon as our Government has represented this matter to the Central Government, immediately within 8 days the Central Government has sent people to know about the drought conditions of this State. They visited various parts in TamilNadu in terms and have also submitted their reports. We have also seen in the papers that the Central Government has also given a substantial amount for the drought affected areas. That only shows the Centre is keen in helping this State and also circumventing the situation due to which our State is now suffering due to lack of funds.

I would like to point out the coercive methods which our Government is adopting in collecting the loans from the so called rich farmers. Government have sent some 30, 40 police along with the officials to collect the dues from the so called rich farmers, which is unheard of by any State at any time. There act, will create a very bad impression in the minds of the people. Our Government which has been proclaimed as

the Government for the people, for the benefit of the people, I do not wish to say any harsh words, is adopting a means which is unwarant .d Such methods should b. avoided in order to ge a fair name for the Government. The Gov rn nent, the Hon. Minister and also Hon. Chi f Minister must look into difficulti s which even rich f rmers are facing The Government has also acknowle ged that mos. of the S.ate has been under drought. Even th rich farmer could n t grow any crop in Dharmapuri Distric , even the farm rs who own more then 50 acres face the difficulty of the drought. They are not able to raise any crop.

There are no wells with water. Irrigated wells are also dried up. Most of the tanks are dried up. Therefore the Governm nt has to see the plight of the rich p rsons too. I do not say that you should not collect from the rich farmers. But they should be giv n some ti.ne for payment on some instalment basis, so that they can pay dues in instalments. I request the Goverument to consider this suggestion so th.t the rich farmers need not also suffer. I am able to s.e some of the farmers, even the rich farmers selling their meagre jew.ls they have got in order to pay pack their dues. They are selling away even in their lands. So such a si uation has aris n especially in our district. Ionly request the Hon. Minister to look into this asp.ct an. direct the officials not to adopt coersive methods in collecting the dues from the rich farmers.

The rich farmers have to pay. But in collecting this amount they must be given certain a nount of latitude. They can be allowed to pay in instalment.

I would like to submit another aspect so far as Hosur Taluk is concerned. Hosur is in the process of industrial development. Hosur town is developing very fast. There are many industries in that area But unfortunately the Industries there a e not functioning for the people of Hosur or Dharmapuri District. Most of the graduates and S.S.L.C. boys who have been educated in that area are denied jobs in these industries. They are not given proper employment in those industries. It has been the feeling by all M.L A.s of this dis rict. Whenever we approach for employment they give some excuse or other and they are not em loying the people belonging to that District.



The Government has given lot of concessions for the industries. The industries are es ablished in that area so that the under-developed area people in that under-developed area can get some ben fit. With that intention in view the Government has establ shed some industries in that area. They are also giv n subsidies. So many concessi ns have been giv n by the Government to the industries. They are enjoying those facilities. But while enjoying those facilities they must also think of helping the people of that area who have even lost th ir lands for the establishment of the industries. The people who live in these places also should get benefit. But those benefits are at present denied. I have been representing this to our Industries Minister with regard to this matter time and again. I request our Government that the people in Dharmapuri District should be allowed some percentage of jobs in those industries, because Dharmapuri District is a very backwa d district in the whole of Tamil Nadu. It is also a drought-prone area. I request the Governm nt to direct the Industrialists there to allot certain percent ge of seats for the people coming from the local area.

Another aspect I would like to point out is that Hosur is becoming a big city. In t e course of two years the population of Hosur may reach more than one lakh. That place needs a college. I have also represented to the Minister of Educ.teon and this year the Ministea has to announce a college for that arer which is an absolute necessity there.

Though a Dairy Development Corporation has been constituted fo the devel pment of Hosur Cattle Form, no official recognition has ye been given and no fund has yet been allotted. Work has not yet been started by the Dairy Development Board. I reqnest the Hon. Minister for Animal Husbandry to see that development work by the Board atleast starts from June 1st onwards, so that that area can develop well.

There are two Technical Institutions in Dharmapuri District. One is at Polytechnic at Krishnagiri and another is at I.T.I. at Hosur. In those two places a mark system is being adopted in selecting candidates Students from all parts of Tamil Nadu apply for seats in these two places Unfortunately Dharmapuri District people are backward both economically and educationally. So, our boys are not able to compete with the boys who are coming from outside, particularly from Madurai Coimbatore and Madras, so far as marks are concerned. These two institutions get boys with brilliant records. Hence Dharmapuri District people are denied are seats.

I request the Government to take into consideration the backwardness of the area educational backwardness also, some percentage of seats must be reserved both in the I.T.I. and in the Polytechnic for the Dharmapuri District people.

When I approched the Minister for starting smoe new technical colleges Ministers have been expressing lack of funds. In this context I request that polytechnic and I.T.I. Institutions can have shift system i.e night classes. The strength of Hosur I.T.I. is 150. If the shift system is adopted another 150 seats can be provided. with the samo staff, with the same industries, with the same equipments they can havea shift system so that more boys can get I.T.I. and polytechnic Training. This will help more young boys to get technical qualification.

I would like to submit another aspect. In Block Development are where the self-sufficiency schemes are included most of the funds are being wasted by the Gramasevaks The Gramasevaks are given full auth-ority in executing those works. I want to point out that most of the Gramasevaks are not living in the places where they are given employment. Most of the Gramasevaks live in by towns. They rarely live in the places where they have to work

Most of the Gramasevaks do not know the villages.

TEMPORARY CHAIRMAN (THIRU V.V.SWAMINATHAN) Please conclude, Mr. Reddy.

THIRU T. VENKAT REDDY: Therefore, I request the Government to see that the gramasevaks at least must be instructed to see their villages and report the matter to the concerned about the needs of the villages. Then only development in villages will take place and the villages will be able to progress.

With these words. I thank the Hon. Temporary Chairman for giving me an opportunity to speak on the subject.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற நிதி ஒதுக்க மசோதாவில் பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாநிலத்தில் தேசப்



பிதா காந்தி கண்ட கனவு நனவாகிற வகையிலே, தன்னிகரில்லாத திட்டமாகத் தன்னிறைவுத் திட்டத்தை அமுல் நடத்துகிற வகையில், இந்த அரசை நல்லெண்ணம் கொண்டவர்கள் பாராட்டுகின்ற வகையில் இந்தத் திட்டம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இந்திய துணைக்கண்டத்திற்கே வழிகாட்டும் வகையில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, காந்திஜி கண்ட கனவை நனவாக்கும் வகையிலே, கிராமங்களுக்குக் குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலே இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. நான் இந்த நேரத்தில் மெத்தப் பணிவுடன் இங்கேயிருக்கிற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், எதை, எதையோ பற்றி பேசுகின்ற நீங்கள், இந்தியத் துணைக் கண்டத்திற்கு வழிகாட்டுகின்ற திட்டமாகச் செயல்படுகிற இந்தத் திட்டத்தை, கிராமப்புறத்திலே நித்தநித்தம் வாடிக் கொண்டிருக்கிறானே ஏழை, அந்த ஏழை மகனுக்குத் தேவையான குறைந்தபட்ச திட்டத்தை. வசதிகளைச் செய்கின்ற இந்தத் திட்டத்தை நடத்துகின்ற இந்த அரசுக்கு மத்திய அரசு தன்னிறைவுத் திட்டத்திற்கு உதவி கொடுக்கவேண்டுமென்கிற குரலை, அதிகாரிகள் மாற்றம் பற்றி, ஆசிரியர் மாற்றம் பற்றி, விவசாயிகள் பிரச்னைபற்றி பேசுகிற நீங்கள் எழுப்பவேண்டும். சாதாரணமாக, கிராமத்திலே துன்பத்திலே உழல்கின்ற மக்களுக்குக் குறைந்தபட்சச் சாலை வசதி, குறைந்தபட்சப் போக்குவரத்து வசதி, குறைந்தபட்ச மருத்துவ வசதி ஆகியவைகளை அளிக்க. இந்திய துணைக் கண்டத்தில் எந்த மாநிலமும் துணிந்து நிறைவேற்றாத நிலையில், தமிழகத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அப்படிப்பட்ட குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை கிராம மக்களுக்கு செய்து கொடுத்தாக வேண்டுமென்ற புரட்சிகரமான திட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறபொழுது, இந்தத் திட்டத்திற்குத் துணையாக இருக்க வேண்டுமென்ற வகையிலே மத்திய அரசுக்கு குரல் கொடுக்க வேண்டுமேயொழிய, அதைவிடுத்து அதிகாரிகள் மாற்றத்தைக் குறித்து ஒரு பிரச்னையாகவும், ஆசிரியர்கள் மாற்றத்தைக் குறித்து ஒரு பிரச்னையாகவும், இங்கேயிருக்கிற அருமை நண்பர்கள் பேசினார்கள்.

ஊராட்சிமன்றக் கலைப்பு பற்றியும், ஊராட்சிமன்றத் தேர்தலைப் பற்றியும்கூட மிகப் பெரிதுபடுத்தி இங்கேயிருக்கிற உறுப்பினர்கள் சொன்னார்கள். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊராட்சிமன்றத் தேர்தல்களைப் பொறுத்தமட்டில் நேற்றையதினம் கூட புரட்சித் தலைவர் அவர்கள் எந்தச் சூழ்நிலையில் இந்தத் தேர்தலை நடத்த முடியாமல் போயிற்று என்பதை மிகத் தெளிவாகக் கூறினார்கள். மேலும், ஊராட்சி மன்றத்தினுடைய தேர்தல்களை நடத்த வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எத்தனை அக்கறையோடு இருக்கிறது என்பதை அனைத்துக் கட்சித்

தலைவர்களையும் கூப்பிட்டு, அவர்கள் எப்பொழுது நடத்த வேண்டுமென்று சொல்கிறார்களோ அந்த நேரத்தில் நாங்கள் நடத்தத் தயார் என்ற விருப்பத்தினையும் தெரிவித்தார்கள். எப்படிப்பட்ட சால கட்டங்களில் அந்தத் தேர்தல் நடப்பது ஒத்திவைக்கப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். கடந்த முறை ஆட்சி நடந்தபொழுது, தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று எண்ணிய நேரத்தில், சில அரசியல் சகுனிகள் செயலால் ஆட்சி கலைக்கப்பட்டது, தேர்தல் தடைபட்டது. 18 வயதானவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்து, ஊராட்சிமன்ற, உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டுமென்று புரட்சித் தலைவர் அரசு முனைப்பாகச் செயல்பட்டபொழுது மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்தபிறகுதான் தேர்தல் நடத்த வேண்டுமென்று மைய அரசினுடைய ஆணைக்கிணங்க தேர்தல் ஒத்திப் போடப்பட்டிருக்கிறது என்றும் தேர்தலை நடத்துவதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தயங்கவில்லையென்றும் கருத்தினை சொன்னார்கள். அப்படிப்பட்ட கருத்தினைச் சொல்லி, அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் கூட்டப்பட்டு, அவர்கள் சொல்கிற தேதியில் தேர்தல் நடத்தத் தயார் என்று முதல்வர் சொன்ன நேரத்திலுங்கூட, இங்கேயிருக்கிற காங்கிரஸ் நண்பர்கள், ஏன் ஜனதா கட்சி உறுப்பினருங்கூட, ஊராட்சித் தேர்தல்கள் நடத்தப்படாததைப் பற்றிச் சொன்னார்கள். நான் ஏதோ இட்டுக்கட்டிப் பேசுவதாக தயவு செய்து நினைக்கவேண்டாம். தமிழகத்தைப் பொறுத்த மட்டில், உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு நடைபெறாததற்கான காரணங்களை மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறது. 3 காரணங்களாலே, தேர்தல்கள் நடைபெறவில்லை. ஒன்று, ஆட்சி கலைக்கப்பட்டது. அடுத்தது, 18 வயதானவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற சட்டம். மூன்றாவது, மத்திய அரசு மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகு நடத்தப்பட வேண்டுமென்பது. ஆனால், அருமை காங்கிரஸ் நண்பர்களே, உங்களை நான் தயவுசெய்து கேட்கிறேன் கர்நாடக மாநிலத்திலே பெங்களூர் மாநகராட்சிக்கு தேர்தல் நடந்து 11 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அதிகாரியைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஐதராபாத் மாநகராட்சிக்கு தேர்தல் நடந்து 15½ ஆண்டுகள் ஆகின்றன. அங்கு அதிகாரிகள் தான் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக, நான் தமிழகத்திலே தேர்தல் நடத்தாமல் இருப்பதை நியாயப் படுத்தவில்லை. தேர்தல் வைப்பதிலே ஏற்பட்ட சில தாமதங்களுக்கான காரணங்களை புரட்சித் தலைவர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். மூன்றே மூன்று சூழ்நிலைகளால் தேர்தலை நடத்த முடியவில்லை. ஆகவே, ஊராட்சிமன்றத் தேர்தல்களைப் பொறுத்தவரையில், அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு, அவர்கள் சொல்கின்ற நாளில் தேர்தலை நடத்துவேன் என்று புரட்சித் தலைவர் அறிவித்திருக்கிறார். அதை நான் பாராட்டுகிறேன்.



அதே போல், நேற்று பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள், இன்று பேசியவர்கள்கூட, அதிகாரிகள் மாற்றத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் இதை ஒரு பிரச்னையாக்க வில்லையென்றாலும்கூட, அதிகாரிகளின் மாற்றத்தைப் பொறுத்தமட்டில், இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழ் நாட்டிலும், கேரளாவிலும்தான் பிரச்னை இல்லாமல் அதிகாரிகள் மாற்றம் செய்யப்படுகிறார்கள். கடந்த 4 ஆம் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே அகில இந்தியா முழுவதும் சர்வே செய்து, சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் இருக்கிற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எந்த அளவு நடத்தப்பட்டிருக்கிறார்கள் என்று அதிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதிலே சொல்லியிருக்கிற விஷயங்களையெல்லாம் சொன்னால், உண்மையிலே காங்கிரஸ் கட்சி நண்பர்கள் ஆத்திரம் கூடப் படுவார்கள்.

எந்தெந்த மாநிலங்களில், எந்தெந்த வகையில், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தூக்கி எறியப்படுகிறார்கள், ஐ.ஏ.எஸ்.ஏ அதிகாரி களை மாற்றுவது என்பது முதலமைச்சர்களுடைய பொழுது போக்கு என்ற வாசகங்கள் எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஏன்? பெங்களூர் மாநகராட்சியினுடைய அதிகாரி 6 மாதங் களுக்குள் 7 முறை மாற்றப்பட்டிருக்கிறார். கர்நாடக மாநிலத்திலே 12 நிர்வாகத் துறையிலே ஐ. பி. எஸ். அதிகாரி கள் இருக்கிறார்கள். செய்தித் துறையிலே ஒரு ஐ.பி.எஸ். அதிகாரிக்கு தலைமைப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளை நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அந்தப் பத்திரிகையிலே மிகத் தெளிவாக கடைசியிலே எழுதிக் காட்டி இருக்கிறார்கள். இந்தியத் துணைக்கண்டத்திலேயே ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரிகளும், சிவில் அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் உயர்மட்டத்திலே தொல்லை கொடுக்காமல், மாற்றாமல் இருப்பதில் கடந்த 6 மாதமாக முதலிடம் வகிப பது தமிழகம், இரண்டாவது இடம் வகிப்பது கேரள மாநிலத்தைச் சேர்ந்த அந்த அரசு என்று இருக்கிறது. நான் இதை இங்கே சுட்டிக்காட்டக்கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்பு பேசிய டாக்டர் சமரசம் அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல, அமைதிப் பூங்காவாக இருப்பது தமிழகம் தான் என்பதற்கு, இப்படி இந்திய துணைக்கண்ட அளவிலே நடத்தி இருக்கின்ற சர்வே ஒன்றே போதும்.

அடுத்து நான் வேண்டி விரும்பி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, மொழிப் பிர்ச்சினை சம்பந்தமாக இங்கே பேசிய காங்கிரஸ் கட்சி உ ப்பினர்கள் ஏதோ தாங்கள் இருமொழிக் கொள்கையை ஆதரிக்கின்றவர்கள்தான் என்றும் இந்தியைத் திணிக்க வேண்டும் என்று சொல்லுகின்றவர்கள் அல்ல என்று சொன்னாலும் கூட, சமீபத்திலே நடந்து கொண்ட ஒரு சில நடைமுறையில்

பாராளுமன்றத்திலே மத்திய அமைச்சர் அவர்கள் பேசுகின்ற பேச்சு இந்தி திணிப்பு வருமோ என்கின்ற அச்சத்தை உருவாக்குகிறது. இதற்கு இந்த அரசு என்று இல்லாமல், இங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் கடுமையான கண்டனத்தைத்தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சமீபத்தில் 20-4-1981 அன்று பாராளுமன்றத்திலே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கின்றபோது மத்திய துணைக் கல்வி அமைச்சர் கவுல் அவர்கள், மும்மொழித் திட்டத்தை தமிழ்நாடு கட்டாயம் அமல் நடத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தப் பட்டிருக்கிறது என்று சொல்லி, அது செய்தியாக வந்திருக்கிறது. இதுகுறித்து தமிழக சர்க்கார் உடனே பாராளு மன்றத்திலே இந்த அமைச்சர் சொன்ன விவரங்களைப் பார்க்க வேண்டும். அது பத்திரிகையிலே 21-4-81 மாலைமுரசு, இந்துப் பத்திரிகை போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளிலே வந்திருக்கின்றது. உண்மையிலேயே ஒரு தியாகமிக்க போராட்டத்தை இந்த மாநில மக்கள் இந்தியைத் திணிக்கக் கூடாது என்பதற்காக நடத்தினார்கள். இந்த மாமன்றம் இருமொழிக் கொள்கையைத் தான் ஏற்றுக்கொள்கிறது என்று பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் மிகத் தெளிவான தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு இப்படிப்பட்ட ஒரு விடையை பாராளுமன்றத்திலே பொறுப்புள்ள கல்வி துணை அமைச்சர் கவுல் அவர்கள் சொல்லுகிறார்கள் என்றால் இது உண்மையிலேயே இந்த மாநில மக்களை, இந்த மாநில சர்க்காரை சீண்டிப் பார்க்கின்ற விவகாரமாக இருக்கின்றது. இதை நமது தமிழக சர்க்கார் கண்டுபிடித்து, அப்படிச் சொல்லியிருந்தால் இந்த மன்றத்தின் மூலமாக அந்த அமைச்சரின் கூற்றுக்கு, அப்படி மும்மொழித் திட்டத்தைக் கட்டாயமாக இந்த மாநிலத்தில் அமல்படுத்த வேண்டும் என்ற கருத்தை எங்கள் மீது மத்திய அரசு திணிக்கக் கூடாது; அதை நாங்கள் ஏற்க மாட்டோம் என்ற கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும் என்ற கருத்தினை இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்து விவசாயிகள் பிரச்னை பற்றி மிகத் தெளிவாக மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் அழகர்சாமி அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். உண்மையிலேயே சமீப காலமாக விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்கள் ஆணவத்தின் உச்சாணிக்கொம்புக்கே போய்க் கொண்டு இருக்கிறார்கள். அதைச் சரிகட்டுவதற்கு பெரியவர் அழகர்சாமி சொன்ன யோசனையை இந்த அரசு பரிவோடு கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அனைத்து அரசியல் கட்சிகளிலும் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் நாராயணசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், என்னை மட்டும் அழைத்தால் தான் பேச வருவேன் என்று மாண்புமிகு வெங்கடரெட்டி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள், இப்படி போலீஸ் துணையுடன் போய் வசூல்





செய்கிறார்களே, இது எந்த மாநிலத்திலும் நடைபெறாத ஒன்று என்று. நான் மெத்தப்பணிவோடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த மாநிலத்திலே விவசாயிகள் சட்டையை எடுத்தால், பட்டையை எடுப்பேன் என்று சொல்கிறார்கள். வரி வசூல் செய்ய வருகின்ற அதிகாரிகளின் உயிருக்கு நாங்கள் பொறுப்பு அல்ல என்ற தட்டிகளை கிராமங்களிலே எழுதிப் போட்டதாக வரலாறு உண்டா? இல்லை. அப்படிப் பட்ட நடவடிக்கைகளில் இங்கே ஈடுபடுகின்றபோது, ஒரு சர்க்காருக்கு அரசின் பணிகளைச் செய்கிற அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய கடமை இருக்கிறது. கட்டாய வசூல் தவிர்க்க வேண்டியது நியாயம் என்றாலும் கூட, அருமை வெங்கடரெட்டி சொன்னார்கள், எந்த மாநிலத்திலும் போலீஸ் துணையுடன் சென்று வசூலிக்கவில்லை என்று. நான் மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எந்த மாநிலத்திலாவது இப்படிப்பட்ட ஆணவம் மிக்க விவசாயத் தலைவர் இருக்கிறாரா என்றால் இல்லை. மகாராஷ்டிரத்திலே சரத் பாவார் போராடுகிறார். அவர் ஒரு பேட்டியிலே சொல்லியிருக்கிறார். பிரதமர் உங்களுக்கு பேட்டி கொடுக்க மறுத்துவிட்டார்களே என்று கேட்டபோது, எனக்கு யார் என்பதைப் பற்றி கவலையில்லை, டெல்லிப் பட்டணத்திலே செகரடேரியட்டிலே இருக்கிற ஒரு பியூனிடத்தில் கூட நான் விவசாயிகள் பிரச்னையை விவாதிக்கத் தயாராக இருக்கிறேன், இது என்னுடைய கவுரவப் பிரச்னை அல்ல, விவசாயிகளுடைய பிரச்னை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்கே ஒரு நாராயணசாமி நாயுடு என்னை மட்டும்தான் அழைக்கவேண்டும் என்று சொல்கிறார்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக விவசாய சங்கத்தில் இருப்பவர்கள் விவசாயிகள் அல்லவா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பின்னாலே விவசாயிகள் இல்லையா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் விவசாயிகள் இல்லையா, என்னை மட்டும் அழைத்தால் தான் வருவேன், என்னிடம் மட்டும்தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று சொல்வது அவர் ஆணவத்தின் உச்சாணிக்கொம்புக்கே போய்விட்டார் என்பதைத் தான் காட்டுகிறது. உண்மையிலேயே அவருக்கு விவசாயிகளுடைய பிரச்னையில் அக்கறை இல்லை. இந்த நேரத்தைப் பயன்படுத்தி ஒரு சில சலுகைகளை அளித்தால், அது நாராயணசாமி நாயுடு அவர்களுடைய ஆணவம் அழிவதற்கு அடிகோலுகின்ற வகையிலே இருக்கும். ஆகவே, சில திட்டங்களை நாம் அறிவிக்கவேண்டும்.

[பிற்பகல் 12–10]

உண்மையிலேயே விவசாயிகளுடைய பிரச்னையிலே அவருக்கு அக்கறை இருக்குமானால், அவர் எத்தனையோ இடங்களில் கேட்டு இருக்கலாம். சமீபத்தில் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்துச் சில கோரிக்கைகளை அவர் சமர்ப்பித்தபோது, மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்கள் தெளிவாகச்

சொல்லியிருக்கிறார்கள். ''உங்கள் மாநிலத்திலே முடிந்த வரையில் விவசாயிகளுக்கான பிரச்னைகளைச் செய்து இருக்கிறார்கள். இதற்கு மேல் செய்வதற்கு ஒன்றும் இல்லை'' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே வாய் வீரம் பேசவில்லை. அங்கே போய் கோதுமைக்கு 60 கோடி ரூபாய் உதவி கொடுக்கிறீர்களே, இங்கே தமிழகத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு நெல்லுக்கு ஏன் உதவி கொடுக்கவில்லை என்று கேட்க அவருக்கு வாய் எழவில்லை. நித்தநித்தம் டாடுபடுகின்ற விவசாயிகளுடைய உற்பத்திச் செலவைக் கூட்டுகின்ற வகையிலே உர விலையைக் கூட்டுகிறீர்களே கொஞ்சம் குறையுங்கள் என்று மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களிடத்தில் கேட்பதற்கு நா எழவில்லை. நான் இவைகளை எதற்குச் சொல்கிறேன் என்றால், உண்மையிலேயே விவசாயிகளின் பிரச்னையில் அக்கறை இருக்குமானால், அங்கே சென்றபோது, தமிழக சர்க்கார் முடிந்த அளவிற்கு செய்து இருக்கிறது என்று சொன்னவுடன், அங்கே ஊமையாக இருந்துவிட்டு வந்த நாயுடு அவர்கள் இங்கே வந்து நான் வரி கட்டமாட்டேன் என்கிறார். என்னை மட்டும் அழைத்தால்தான் வருவேன் என்று சொல்கிறார். இந்த நேரத்தில் நான் ஒன்றை மாத்திரம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில் பாக்கிகளை 1 மாதம், 1 மாதம் என்கிற வகையில் புதிய மின் கட்டணத்தைச் செலுத்துகிறபோது செலுத்தினால் போதும் என்று அரசு சொன்னவுடன், நாராயணசாமி நாயுடுவை நம்பியிருந்த விவசாயிகளில் பாதிக்கு மேல் அந்த மின் கட்டண பாக்கிகளைச் செலுத்திவிட்டார்கள். அப்படிப்பட்ட சலுகைகளை கடன் தொகைகளைப் பொறுத்தவரையிலும் கொண்டு வந்தால், பழைய கடன்களை 2 அல்லது 3 பகுதிகளாகப் பிரித்து கொண்டு வந்தால் நாராயணசாமி நாயுடு சங்கமே இருககாது, தமிழக விவசாயிகள் பூராவும் இந்த அரசாங்கத்தின் பக்கம் இருப்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நான் சார்ந்து இருக்கின்ற வேடசந்தூர் தொகுதி பற்றி மட்டும் ஒரு கருத்தைச் சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வேடசந்தூர் தாலுக்காவாக இருந்தும்கூட அங்கே ஒரு தாலுக்கா மருத்துவமனை இல்லை. தாலுக்காவாக இருந்து தாலுக்கா மருத்துவமனை இல்லாத இடம் மதுரை மாவட்டத்தில் இரண்டு தாலுக்காக்கள் இருக்கின்றன, தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஏழே ஏழு தாலுக்காக்கள் தான் இருக்கின்றன. ஆகவே வேடசந்தூர் மக்கள் கிட்டத்தட்ட 60–70 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள திண்டுக்கல் தாலுக்கா மருத்துவமனைக்குச் சென்று தான் மருத்துவ வசதி பெற வேண்டியிருக்கிறது. இதனால் திண்டுக்கல் மருத்துவமனையில் அதிகம் கூட்டம் வந்து விடுகிறது. ஆகவே, திண்டுக்கல் மருத்துவமனையில் இருக்கும் கூட்டத்தைக் குறைக்கவும், வேடசந்தூர் தாலுக்காவாக இருந்தும் தாலுக்கா மருத்துவமனையில்லை என்கிற 1 ஆண்டு கால குறையைத் தீர்க்கும் வகையிலும், வேடசந்தூரில் ஒரு தாலுக்கா மருத்துவ



மனையைத் துவக்கவேண்டும் என்று இங்கேயிருக்கிற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு இந்தப் பேரவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது. சென்ற ஒன்றரைத் திங்களாக நடைபெற்ற சட்டப்பேரவை கூட்டங்களிலே பல்வேறு துறைகளின் சார்பாக எடுத்து வைக்கப்பட்ட மானியக்கோரிக்கைகளின் அடிப்படையிலே 1358 கோடியே 45 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் இந்தப் பேரவையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. மாநில தொகுநிதிக்கு சாட்டப்பட்ட வகையில் 303 கோடியே 58 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் சாட்டப்பட்ட வகையிலும் சேர்ந்து, இந்த நிதி ஒதுக்க சட்டமுன்வடிவின் மூலமாக 1662 கோடியே 4 லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு இந்த நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாக எல்லா மானியக் கோரிக்கைகளைப் பற்றி எல்லாக் கருத்துக்களையும் விட்டும், தொட்டும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவை அத்தனைக்கும் இப்போது நான் விடையிறுத்த நேரம் இடம் தராது. அதற்கான விவரக் குறிப்புகளும் என்னிடத்தில இருக்க வழியில்லை. மேலும், அவ்வப்போது நடைபெற்ற மானியக் கோரிக்கையின் மீது பேசும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியுள்ள வினாக்களுக்கும் பல்வேறு மாண்புமிகு அமைச்சர்கள் தங்கள் துறைகளைப் பற்றி அவ்வப்போது விடை தந்து இருக்கிறார்கள். விடை தராத இனங்கள் குறிக்கப்பட்டு, அந்தந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அதன் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இன்றும் உறுப்பினர்கள் பலரும் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் பல வினாக்களை எழுப்புவதாகவும், பல விளக்கங்களைக் கோருவதாகவும் உள்ளன. இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் அத்தனைக்கும் நான் விடையளிக்காவிட்டாலும், இங்கே வைக்கப்பட்ட கருத்துக்கள் அத்தனைக்கும் பரிகாரம் காண்பதற்கான முயற்சிகளை அந்தந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், அலுவலர்களும் முறைப்படி மேற்கொள்வார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கைகள் எல்லாம் முடிந்து இன்றைக்கு கடைசிக் கட்டத்திலே, நிதி ஒதுக்கீடு என்ற அளவுக்கு வந்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே தெரிவித்தார்கள். ஜனநாயகத்தைப் பற்றியும், மன்றத்தின் பண்புகள் பற்றியும், ஜனநாயகப் பாங்கினைப் பற்றியும் பல்வேறுபட்ட கருத்துக்களை இங்கே தெரிவித்தார்கள்.

மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதம் நடைபெற்ற போது கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல நலம் பயக்கும் கருத்துக்களை, அமைச்சர்களுக்குத் தெளிவாக்கும் கருத்துக்களை, அரசுக்கு எதிர்காலத்திலே உதவியாக இருக்கும் கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் சில மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ச்சிவசப்பட்டு, உணர்ச்சி வேகத்தில் கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் இந்த மாமன்றத்திலே எந்தக் கருத்துக்களைச் சொன்னாலும், எங்களுக்குப் பயன்படுகின்ற கருத்துக்களைச் சொன்னால், அரசுக்குப் பயன்படுகின்ற கருத்துக்களைச் சொன்னால் அது பயனுடையதாக இருக்கும், இந்த சபையை நடத்திச் செல்ல உதவியாக இருக்கும்.

அது அல்லாமல், அரசியல் மாச்சரியங்களோடு, அரசியல் காழ்ப்பு உணர்ச்சியோடு இங்கே சொல்லுகின்ற கருத்துக்கள் எல்லாம் மாலை வேளையில் பொதுக் கூட்டத்தில் வெளிப்படுத்த வேண்டிய உணர்ச்சிகளை எல்லாம் இங்கே சட்டமன்றத்தில் கொட்டித் தீர்த்தார்கள் என்ற நிலையில்தான் அமையுமே தவிர வேறு எந்த வகையிலும் அது பயன்படாது.

பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். கருத்துக்களைச் சொல்லும்போது பல்வேறு குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்; பல்வேறு குற்றங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதை எல்லாம் இந்த அரசு மனப்பூர்வமாக வரவேற்கிறது. ஆனால் நியாயமான, நேர்மையான, உண்மையான குறைகளை, குற்றச்சாட்டுகளை நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். அந்தக் குற்றங்களை, குறைகளை எடுத்துச் சொல்லுகின்ற அளவுக்கு இருந்தால்தான் ஒரு அரசு சிறப்பாகச் செயல்பட முடியும். அமைச்சர்களுக்கு எல்லாம் தெரியும், அமைச்சர்கள் எல்லாவற்றையும் அறிவார்கள் என்று சொல்லிவிட முடியாது. நீங்கள் குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டும்போதுதான் அமைச்சர்கள் தெளிவுபட முடிகிறது. நீங்கள் சொல்வதை வைத்து அதிகாரிகளை விளக்கம் கேட்கிறோம். நீங்கள் இங்கே திட்டவட்டமாகச் சொல்லுகின்ற குற்றங்களை, குறைபாடுகளை மேல் அதிகாரிகள் புரிந்து கொண்டு, எந்தக் கட்டத்திலே இந்தக் குற்றங்கள், குறைபாடுகள் நடைபெறுகின்றனவோ அந்தக் கட்டத்தில் அவைகளை களைந்தெறிய, மேலும் அத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க வழிவகை காண ஏதுவாகிறது. அந்த வகையில் குற்றச்சாட்டுகளை வைக்க வேண்டுமே தவிர, காழ்ப்பு உணர்ச்சியோடு சொல்லப்பட்ட குற்றச்சாட்டாக இருந்தால், ஏதோ குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டோம் என்ற அடிப்படையில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டாக இருந்தால் அதனால் சொல்பவருக்கும் பயன் இல்லை; இந்த மன்றத்திலே கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கும் பயன் இல்லை. அதனால் எந்த விளக்கமும் பெற வழி ஏற்படாது.





அந்த வகையில் ஜனநாயகப் பண்பு அடிப்படையில், இந்த மாமன்றத்திற்கு உதவியாக இருக்கக்கூடிய சீரிய கருத்துக்களை கூறியதன் காரணமாக, அந்த வகையில் சொல்லப்பட்டக் கருத்துக்களின் அடிப்படையில் அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும்போது அதில் இருக்கிற காரிய சாத்தியக் கூறுகளுக்கு நாங்கள் ஆக்கம் தந்து, நிதிநிலை அறிக்கை மூலம் அவைகளைக் கொண்டுவர முயற்சிகள் செய்கிறோம்.

ஜனநாயகத்தைப்பற்றி இங்கே சொன்னார்கள். அதிலே நாம் பெருமையோடு இருக்கிறோம். உலகத்திலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. 68 கோடி மக்களைக்கொண்டு, ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை வைத்து, இந்திய ஆட்சி நடைபெற்று வருகிறது. கடந்த 33, 34 ஆண்டுக்காலமாக ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதிலே இந்தியாவில் இருக்கிற அத்தனைக் கட்சிகளும் சேர்ந்து பாடுபட்டு வருகிறோம் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இங்கே ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இருக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும், ஜனநாயக அமைப்பு இருக்கிற பாங்கினைப் பற்றியும் சொன்னார்கள்.

''செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க

செய்யாமை யானும் கெடும்''

என்று 2000 ஆண்டுகளுக்கு முன்னால் வள்ளுவர் பெருந்தகை சொல்லியிருக்கிறார். செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல் விட்டுவிட்டால் குறைபாடு; அதைப்போல செய்யக்கூடாதவைகளை செய்வதும் குற்றம். இந்த இரண்டையும் எடுத்துச் சொன்னார்கள். இந்த இரண்டையும் சுட்டிக்காட்டுகின்ற வகையிலே கூறப்பட்டக் கருத்துக்களை ஆளும் கட்சியும் அமைச்சர்களும் வரவேற்கிறோம் என்பதை கூறிக்கொள்கிறேன்.

The ruling party has its way and the Opposition has its say. என்று பொதுவாக ஜனநாயகத்தைப்பற்றிச் சொல்வார்கள். அந்த வகையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நியாயமான குற்றச்சாட்டுக்களை, குறைகளை சுட்டிக்காட்ட வேண்டும். The Opposition has its say. என்பார்கள். The ruling party has its way. என்பார்கள். அந்த வகையில் இந்த மாநில ஆட்சி கலப்பைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை பரிமாறி இருக்கிறார்கள். இந்த ஆட்சியைக் கலைப்பது வேண்டுமா, வேண்டாமா என்பது இன்றைக்கு அரசியல் அறிஞர்களிடம், அரசியல் வித்தகர்களிடம் ஒரு பெரும் விவாதமாக நாடெங்கும் நடைபெற்று வருகிறது. ஆனால் மாநில அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. மத்தியஅரசும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது, 22 மாநில அரசுகள் சேர்ந்தது மத்திய அரசு.

[பிற்பகல் 12–20]

மத்திய அரசிற்கு என்று தனியாக மக்களோ, குடிபடைகளோ இல்லவே இல்லை. மாநில அரசிற்கு இருக்கிற குடிபடைகள் தாம் மத்திய அரசிற்கும் இருக்கின்றன. ஆகவே 22 மாநிலங்களும் ஒன்று சேர்ந்ததுதான் மத்திய அரசு. ஆக, மத்திய அரசினுடைய பொறுப்பு இந்தியாவைக் காப்பாற்றுவதும், இந்தியாவினுடைய எல்லையைக் காப்பாற்றுவதும், அந்நிய நாடுகளோடு தொடர்பு கொள்வதும், அந்நிய நாடுகளோடு உறவு கொள்வதும், அன்னிய நாடுகளோடு ஒருமித்த கருத்துக் கொண்டு இந்திய நாட்டின் போக்குவரத்து, அன்னியச் செலவாணி, வாணிபம் முதலிய பிரச்னைகளைக் கவனிப்பதாகும். இந்தப் பிரச்னைகளை ஏற்கிற பொறுப்பு மத்திய அரசிற்கு இருக்கிறது என்று சொன்னால் அது பெடரேஷன் என்று சொல்லப்படும் கூட்டாட்சியின் அமைப்பிலக்கணங்களைப் படித்துப் பார்த்தோமேயானால் தெரியும், மத்திய அரசிற்கென்று இந்தப் பொறுப்புகளை எல்லாம் வகுத்திருக்கிறார்கள் என்று.

ஆகவே, டிபென்ஸ் என்கிற பாதுகாப்பு வகைகளையெல்லாம் மத்திய அரசே வைத்துக் கொண்டு, எல்லையைக் காப்பாற்றுகிற, பிற நாட்டின் படையெடுப்பை தடுத்து நிறுத்த, நாட்டின் உரிமையைக் காப்பாற்ற, சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புகளெல்லாம் மத்திய அரசிற்கு இருக்கிறது. ஆனால் மக்களை வாழ வைக்க வேண்டிய பொறுப்புகள் அதிகாரங்கள் எல்லாம் மாநிலங்களுக்கே வகுக்கப்பட வேண்டும் என்பதுதான் கூட்டாட்சித் தத்துவம். ஆகவே மக்களை வாழவைக்கிற பொறுப்பு வேறு, இந்தியாவை காப்பாற்றுகிற பொறுப்பு வேறு. இந்தியா வலிமையாக இருக்க வேண்டுமா வேண்டாமா என்று கேட்டால், ஸ்டிராங் இந்தியா வேண்டும், வலிமை பொருந்திய இந்திய நாடு தேவை என்பதை யாரும் உணர்வார்கள், எவரும் வேண்டாம் என்றும் சொல்ல மாட்டார்கள். ஸ்டிராங் இந்தியாவும் வேண்டும், வளமான இந்தியாவும் வேண்டும். அப்படி ஸ்டிராங் இந்தியாவாக உருவாக்குவதை மத்திய அரசு செய்ய வேண்டும், ஆனால் வளமான இந்தியாவை 22 மாநிலங்களும் சேர்ந்துதான் உருவாக்கித் தர முடியுமே தவிர, மத்திய அரசினால் மட்டும் முடியாது. ஆகவேதான் கூட்டாட்சி அமைப்பின் சிறப்பைப் பற்றி பல பெரியவர்கள் எடுத்துச் சொல்லிச் சென்றிருக்கிறார்கள்.

ஆகவேதான் மாநில அரசுகள் எதுவுமே டிபென்ஸ் வேண்டும் என்று கேட்பதே இல்லை. பட்டாளம் வேண்டும், பீரங்கிகள் வேண்டும், எங்களுக்கு குண்டுகள் சப்ளை செய்ய வேண்டும் என்றெல்லாம் மாநில அரசுகள் கேட்பதே இல்லை. அவைகள் மத்திய அரசிடம்தான் இருக்க வேண்டும். அதேபோல போக்குவரத்து சாதனமும் மத்திய அரசிடம் தான் இருக்க வேண்டும் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையில் இருக்கிற போக்குவரத்துகள் எல்லாம் அவர்களிடம் தான் இருக்க வேண்டும். கரன்சி கூட அவர்களிடம் தான் இருக்க வேண்டும். மாநிலங்களுக்கு மாநிலம் ரூபாய் நோட்டுகளை தனியாக அடித்துக் கொண்டேபோனால், ஒரு மாநிலத்தின் மதிப்பு இன்னொரு மாநிலத்தில் கெட்டு போனாலும் போகும். ஆகவே, கரன்சி ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். அப்படிப்பட்டவைகள் அவர்களிடத்தில் இருக்க வேண்டுமே தவிர, கொசுக்களை ஒழிப்பது, சிறிய பாசனத் திட்டங்களை செயல்படுத்துவது; பாலங்கள் கட்டுவது; கல்வி வசதிகள், சுகாதார வசதிகள் ஏற்படுத்தி தருவது போன்ற மக்களை வாழ வைக்கும் திட்டங்கள் எவைகளோ அவைகள் அனைத்தும் மத்திய அரசிடம் போய் விடுவதன் காரணமாகத்தான், டெமாக்கிரசியிலே ஜனநாயகத்திலே, காலக்கெடு அதிகமாக இருக்கிறது, அல்லது காலத்தாழ்வு ஏபற்படுகிறது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.



ஆகவே, மாநில அரசும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு; மத்திய அரசும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இதிலே பல பேருடைய கருத்து என்னவென்றால், ஒரு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, இன்னொரு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கலைக்கக்கூடாது, அது ஜனநாயகம் ஆகாது என்பது தான். ஆனால் நம்முடைய இந்தியாவினுடைய அரசியல் அமைப்புச் சட்டம் மத்திய அரசு மாநில அரசுகளை சில பல காரணங்களைச் சொல்லி, சில பல சூழ்நிலைகளை சொல்லி கலைப்பதற்கு, அதற்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. ஆனால் ஒன்றோ அல்லது பலவோ மாநிலங்கள் ஒன்று சேர்ந்தால், அந்த மெஜாரிட்டி அடிப்படையிலே கூட மத்திய அரசை கலைப்பதற்கு, எந்தச் விதியும் அரசியல் அமைப்புச் சட்டத்திலே இல்லை.

நாம் பல உலக நாடுகளைப் பார்க்கிறபோது, அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் அதிலே 54 மாநிலங்கள் இருக்கின்றன. அதிலே ஒரு மாநிலத்தைக் கூட கலைக்கிற அதிகாரம் மத்திய அரசிற்கு இல்லை. அதேபோல மத்திய அரசை கலைக்கிற அதிகாரம் மாநிலங்களுக்கு கிடையாது. 20க்கு மேற்பட்ட ரிப்பப்ளிக் குடியரசுகள் சோவியத்திலே இருக்கின்றன. என்றாலும், ஒரு ரிபப்ளிக்கை கூட கலைப்பதற்கு மத்திய அரசிற்கு அங்கே அதிகாரம் கிடையாது. ரஷ்யாவிலும் கிடையாது அமெரிக்காவிலும் கிடையாது, வேறு பல இடங்களிலும் கிடையாது. அது வேண்டும் என்று தான் கேட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர, அதிலே சண்டை சச்சரவுகள், மாச்சரியங்கள் படையெடுப்புகள் என்று எதுவும் கிடையாது.

அப்படி ஒரு சட்டத் திருத்தம் வந்தால் ஜனநாயகம் நிலைபடும், மக்கள் அச்சமின்றி வாழமுடியும். மக்கள் அச்சத்திற்கிடையே ஆட்பட வேண்டிய அவசியம் இருக்காது, ஆகவே மக்களுடைய விருப்பப்படி நடப்பதற்கான நிலைமை ஏற்படும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு மாநிலங்களின் அரசை கலைப்பதற்கு இங்கே வாய்ப்பு இருக்கிறது. அப்படி ஒரு வாய்ப்பு இருக்கிற காரணத்தால் சில பேர் கலைத்தால் நல்லது என்று ஆசைப்படுகிறார்கள். கலைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இப்படி ஜனநரயக முறை

யிலே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கலைப்பதற்கு, இறக்கு வதற்கு வேறு வழி இல்லாத காரணத்தால், இது ஒரே வழிதான் இருக்கின்ற காரணத்தால், பல பேர் ஆசைப்படுகிறார்கள். இது கலைக்கப்பட்டால் நல்லது. இன்னும் 15 நாட்களில் கலைக்கப் பட்டால் நல்லது: 7 நாட்களிலே இருந்தால் கூட ரொம்ப சௌகரியம். ஒரு மாதம் போனால் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும் என்று அவர்கள் விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்த விருப்பத்திற்கு நான் பதில் சொல்ல வேண்டிய தில்லை.

இந்தியாவின் பிரதமர் மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அம்மையாரே ஒரு தடவைக்கு பல தடவையாக சொல்லி விட்டார்கள். 'எந்த மாநில அரசாங்கத்தையும் கலைக்கிற எண்ணம் எங்களுக்கு இல்லை.' என்று காஷ்மீரத்திலே கூட சொன்னார்கள். எந்த மாநில அரசாங்கத்தையும் நாங்கள் கலைப்பதாக இல்லை என்று, குறிப்பிட்டே சொன்னார்கள். (குறுக்கீடு)

திரு கே. எஸ். ஜி. ஹாஜா செரிப்; சார், ஒரு பழமொழி சொல்வார்கள் ''அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'' என்று. நாங்கள் ஒன்றுமே சொல்லவில்லை. படிப் படியாக இந்திரா காந்தி அம்மையாரே சொல்லிக் கொண்டு வருகிறார்கள் எந்த மாநில அரசாங்கத்தையும் கலைப்பதற்கு எனக்கு எந்தவிதமான நோக்கமும் இல்லை என்று, அதை விட்டு விட்டு, அங்கத்தினர்கள் ஏன் இது மாதிரி பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; திரு ஹாஜா செரிப் அவர்களைப் பொறுத்தவரையில் இந்தக் குற்றச்சாட்டை யாரும் சாட்டவில்லை. பத்திரிகைகளில் படித்துப்பார்த்தால் அரசியல் கட்சித் தலைவர்கள் பல பேர்கள் ..........................

திரு ட. நெடுமாறன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய திரு ஹாஜா செரீப் அவர்கள் அச்சம் இருக்க வேண்டியதில்லை என்று சொன்னார்கள். ஆனால் அச்சம் இன்று மாநில அரசுகள் தரப்பில் இருப்பதாக தெரியவில்லை· மேற்கு வங்க முதலமைச்சர் அவர்கள் நமது மாநில முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள் என்பதுப் பற்றி நேற்றுமுன் தினம் இங்கே இந்திரா காங்கிரஸ் கட்சி சார்பில் அச்சம்தெரிவித்தார்கள். எதற்காக அவர்கள் கூடிப்பேசினார்கள், மத்திய அரசுக்கு விரோதமாக சதி நடக்கிறதா என்றெல்லாம் அவர்கள் பேசினார்கள். ஆக, அச்சம் என்பது அவர்கள் தரப் பில்தான் இருக்கிறது. அதிகமான அதிகாரங்களை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.. நீங்கள் அந்த அதிகாரங்களில் கொஞ்சம் மாநிலங்களுக்கு கொடுங்கள் மக்களுக்கு நன்மை செய்வதற்கு உதவியாக இருக்கும் என்று மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கோருகிறார்களே தவிர மத்திய அரசுக்கு எதிராக அல்ல, ஆகவே நண்பர் திரு ஹாஜா செரீப் அவர்கள் அச்சப்படத் தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



இல்லை பவர் இல்லையென்று கேட்டுக் கொண்டிருந்தால் அது சரியான ஒரு எண்ணம் அல்ல என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திரு. ஹாஜா செரீப் அவர்களுக்கு அந்த வாய்ப்பு ஏற்படாததின் காரணமாக அந்த உணர்வுகள் ஏற்படவில்லையேத் தவிர காங்கிரஸ் ஆளுகிற மாநிலங்களில் இருக்கிற முதல் அமைச்சர்கள் கூட அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று—எந்தளவிற்கு அதிகாரங்கள் வேண்டும் என்பது வேண்டுமென்றால் விவாதத்திற்குரியதாக இருக்கலாம். இப்போது இருப்பதே போதுமானது, அதிகம் தேவை இல்லை என்றளவிற்கு யாரும் இல்லை, நான் அவர்கள் சார்பாகத்தான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்கள். எந்த மாநில அரசையும் நாங்கள் கலைப் பதாக இல்லை, ஆகவே வருகிற அமைச்சர்கள் ஒருவருக்குப் பின் ஒருவராகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்..........

திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, இங்கே பேசுகிறபோது பல கருத்துக்கள் பரிமாறப்பட்டன. நம் பிரதமர் அவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எதை எப்போது இல்லை இல்லை என்று சொல்லிக் கொண்டு வருகிறார் களோ அது நடைமுறையில் உண்டு உண்டு என்று ஆகிவிடுகிறது. எது உண்டு உண்டு என்று சொல்கிறார்களோ அது நடைமுறை யில் இல்லை என்று ஆகிவிடுகிறது. ஆகவே, அதுதான் இந்த அச்சம் ஏற்படுவதற்கு காரணம். இதற்கு முன்னால் பல்வேறு நிகழ்ச்சிகளில் இல்லை இல்லை என்று சொல்லப்பட்டவைகள் எல்லாம் அவைகள் உண்டு உண்டு என்று ஆக்குகிற நிலைமை களைப் பார்த்தோம். ஆகவேதான் இந்த அச்சம் ஏற்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதனால்தான் நாம் நம்புவோமாக என்று சொல்கிறேன். • அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். வருகிற அமைச்சர்களும், அதைத் தான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சில அடிப்படையில் சொல்கிறோம். இங்கிருக்கிறவர்கள் சிலருக்கு அந்த எண்ணம் இருக்கிறது. நம் நாட்டில் 22 மாநிலங்கள் உள்ளன. ஏழு எட்டு யூனியன் டெரிட்டரீஸ் இருக்கின்றன. என். டி. ஸி. மீட்டிங்கில் கேரளா முதலமைச்சர் அவர்கள், மேற்கு வங்க முதல் அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள், எல்லோரும் கலந்துக் கொண்டார்கள். கேரள முதல் அமைச்சர் அவர்களும், மேற்கு வங்க முதல் அமைச்சர் அவர் களும் அங்கே பேசும் போது கூட மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும், எங்கள் அரசுக்கும் எந்தத் தகராறும் கிடையாது. நாங்கள் பகை எண்ணம் கொண்டு எந்த முடிவையும் எடுக்கவில்லை, எங்களுக்கு எந்த அளவிலும் மாச்சரியங்கள் கிடையாது, நாங்கள் சில பல வகைகளில் காரியங்களை இயற்ற முடியாமல் இருப்பதை மேற்கு வங்காள முன்னாள் முதல்

அமைச்சர் டாக்டர் பி. சி. ராய் அவர்கள் கூட தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் காலத்திலிருந்தே நாங்கள் தொடர்ந்து தெரிவித்துக் கொண்டிருக்கிறோம், கருத்துக்கள் சிலவற்றில் வேறுபடுகிறோமே தவிர மத்திய அரசுக்கு மாறுபட்டு பகைமை உணர்ச்சிக் கொண்டு நாங்கள் நடைபெறவில்லை என்று மேற்கு வங்க முதல் அமைச்சர் அவர்களும், கேரள முதல் அமைச்சர் அவர்களும், நம் மாநில முதல் அமைச்சர் அவர்களும் திட்டவட்டமாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது கூட அந்த மாச்சரியங்கள் இருக்கின்றன என்று சொல்லவில்லை. கலைக்கத்தக்க அளவிற்கு மத்திய மாநில அரசு கட்சிக்கு கட்சி வேறுபாடு இருக்கலாம். கட்சித் தலைவர் கட்சித் தலைவர் களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம். கட்சிக்கு கட்சி வேறுபாடு வேறு, கட்சிகளுக்கு இடையே இருக்கிற உறவுமுறை வேறு. காங்கிரஸ் கட்சி (வெர்ஸஸ்) ஏ. ஐ. எ. டி. எம். கே. என்பது வேறு. அந்தக் கட்சித் தலைவர் (வெர்ஸஸ்)' புரட்சித் தலைவர் என்பது வேறு. ஆனால் கட்சி வேறுபாடு இருக்கலாம். ஆனால் சென்ட்ரல் கவர்ன்மென்ட் வெர்ஸஸ் ஸ்டேட் கவர்ன்மென்ட், தமிழகத்தைப் பொறுத்தவரையில் பகைத்துக்கொள்கிற நிலையோ அல்லது மாறுபடுகிற நிலையோ அல்லது சண்டைப் போடுகிற நிலையோ அல்ல. உரிமைக்குரல் எழுப்புகிற அளவிற்கு மற்றவர்களுக்கு விப் கொடுப்பதன் காரணமாக எழுப்பமுடியாமல் இருக்கிறார்கள், நாங்கள் எழுப்புவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால் எழுப்புகிறோம். இது வேண்டுமென்றுக் கேட்கிறோம். மாச்சரியங்கள் இல்லை. இப்போது உறவு இல்லை என்றோ உதவி இல்லை என்றோ சொல்ல வரவில்லை.

[பிற்பகல் 12.30]

இப்போது மத்திய அரசிலே இரண்டாயிரத்து சில்லரைக் கோடி ரூபாய் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு போட்டிருந்த காலத்திலும் கூட நாங்கள் இருக்கிற நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, 3150 கோடிக்கு ஒதுக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் உறவு இருக்கிறது என்றுதான் பொருள். இப்போதுகூட, எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு வறட்சி நிலைமையைப்பற்றி நம் மாநில அரசின் சார்பில் 137 கோடி ரூபாய் அளவிற்கு வேண்டுமென்று கேட்ட நேரத்திலே கூட, குழுக்கள் அமைத்தார்கள். இரண்டு குழுக்கள் அமைத்தால்தான் விரைவாக பணிகள் ஆற்றமுடியும் என்று எடுத்துச் சொன்னோம். இரண்டு குழுக்களை அனுப்பினார்கள். இரண்டு குழுவினரும் போய்ப் பார்த்து, ஒரு 60 கோடி ரூபாய்க்கு உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள் இதற்கு முன்னால் எந்த ஒரு காலத்திலும் இவ்வளவு பெருந்தொகை நிவாரண நிதியாக அளிக்க சிபார்சு செய்யப்பட்டதில்லை. அதை ஆராய்ந்து மத்திய அரசுகூட 57 கோடி ரூபாய் அளவிற்கு, 60 கோடி சிபார்சு செய்திருந்தாலும் ஏற்றுக் கொள்கிறது. இதிலே உறவு எதுவும் கெடும் நிலை இல்லை. யார் கெடுக்கப் பார்த்தாலும், கெடுகிறமாதிரி இல்லை. கெட்டு



விடுகிற மாதிரியும் யாரும் இல்லை. அப்படியே கெடுக்கப் பார்த்து கெட்டாலும், இங்கே அச்சப்படுகிற மாதிரிஇல்லை. ஆனால். சென்ற ஆண்டினுடைய நிலைமை என்ன ஆயிற்று என்பது உலகத்திற்கும், இந்த நாட்டிற்கும் தெரியும், மற்றவர்களுக்கும் தெரியும். பிப்ரவரியிலே கலைக்கப்பட்டாலும் கூட, மக்கள் மன்றம் ஜூனிலே அதற்குத் தீர்ப்பு அளித்திருக்கிறது. அதை நாம் பேச வேண்டிய அவசியம் இல்லையென்றாலும், உறவு கெடவில்லை என்பதைக் குறிப்பிடுகிறேன்.

இன்னொன்றையும் திரும்பத் திரும்ப பலர் சொல்லுகிறார்கள். வெளியிலே பேசுகிறார்கள்; பத்திரிகைகளிலே வருகிறது. இந்த அரசாங்கம் திவாலாகிவிட்டது. கஜானா காலியாகிவிட்டது: அவர்கள் ஓவர் டிராப்ட் வாங்கி விட்டார்கள் பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்: இன்னும் கொஞ்ச நாளில் இந்த அரசாங்கம் கவிழப் போகிறது. அப்படி கவிழப் போவதற்கு ஒரே காரணம் பணமில்லை. ஆக, கஜானாவிலே பணமில்லை என்ற காரணத்தைச் சொல்லி, கவிழ்க்கலாம். அரசியல் அமைப்புச் சட்டத்திலே, வேறு எந்தக் காரணம் இல்லையென்றாலும், இந்த ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு கலைப்பார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். உள்ளபடியே, இதற்கு முன்னாலும்கூட 1971–72, 73–லே ஓவர் டிராப்ட் வாங்கக்கூடிய நிலைமை இந்த மாநிலத்திற்கு இருந்தது. இதுவரைக்கும் நாம் ஓவர் டிராப்ட் வாங்கவில்லை. வாங்க வேண்டிய நிலைமையும் இல்லை. வாங்க வேண்டிய அவசியமும் இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பின்வாங்குகிற நிலைமையும் நமக்கில்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன்: 1977-78-ம ஆண்டு மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 260.28 கோடி. ஆனால், திட்ட நிதி உதவி தந்தது ரூ. 136.59 கோடி. ரூ. 260.28 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்படலாம், 1977–78-லே நம்முடைய நிதி ஆதாரங்களையும் சேர்த்து நாம் மொத்தத்தில் செலவழித்தது ரூ. 271.20 ஆகும். ஆனால், அவர்கள் ஒப்புதல் தந்தது 260 கோடி: நாம் செலழித்து இருப்பதோ 271 கோடி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், 1978-79–லே மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 305.6 கோடி. திட்ட நிதி ஒதுக்கீடு தந்தது ரூ. 156.10 கோடி. ஆனால், நாம் செலவழித்தது ரூ. 331.60 கோடி. அவர்கள் ஒப்புதல் அளித்தது 305 கோடியாக இருந்தாலும், நாம் கூடுதலாகப் போட்டு செலவழித்தது 331 கோடிக்கு கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறோம். அதேபோல், 1979-80 லே கணக்கெடுத்தால், ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 331 கோடிதான்; ஆனால் நாம் செலவழித்தது 370 கோடியாகும். ஆக, நிதி ஆதாரங்களைப் பெருக்கி, திட்டச் செலவை மிகுதிப்படுத்துகின்ற அளவிற்குத்தான் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு பிரச்னைகளை எடுத்துச் சொன்னாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக விவசாயிகளுடைய பிரச்னையைப் பற்றித்தான் எடுத்துச் சொன்னார்கள். விவசாயிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு அழகர்சாமி அவர்களும் மற்ற உறுப்பினர்களும் எடுத்துத் தெரிவித்திருப்பதுபோல், எல்லோருக்கும் இந்த கவலை இருக்கிறது. 100-க்கு 70 பேர்கள் ஈடுபட்டிருக்கின்ற தொழிலைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கும் இருக்கிறது. அது காப்பாற்றப்பட்டால் தான் மற்றத் தொழில்களும் காப்பாற்றப்படும். விவசாயிகள் நன்றாக இருந்தால்தான் மற்றத் தொழில்களும் நன்றாக இருக்கும் என்ற தெளிவு நமக்கிருக்கிறது. ஏனென்றால் அவர்கள் தான் கன்சீம்யவர்களாக இருக்கிறார்கள், விவசாயிகளிடத்தில் பணம் 300, 400 என்றிருந்தால்தான் அம்பத்தூர் சைக்கிளை வாங்குகின்ற எண்ணம் உருவாகும். அவன் கையிலே பணம் உருவாகாவிட்டால், அந்த அம்பத்தூர் சைக்கிள், அந்த அம்பத்தூரிலேயே இருக்கும், அதைவிட்டு நகராது, ஆவடியிலே இருக்கின்ற பொருள் அந்த ஆவடியிலே தான் இருக்கும். ஆக, பல்க் ஆப் தி பாபுலேஷனாக இருக்கின்ற இந்த விவசாயிகளுடைய பொருளாதார நிலை உயரவேண்டும் நம்முடைய நாட்டிலே அக்ரிகல்சர் பாபுலேஷன்தான் அதிகம். கிராமங்களிலே வாழக்கூடியவர்கள், 100க்கு 80 பேர்கள் அந்தத் தொழிலிலே நேரடியாக ஈடுபட்டிருக்கிறவர்கள். 70 பேர்கள் பாக்கி அந்தத் துணைத் தொழிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் 10 பேர்கள் ஆக, அவர்கள் கையிலே பணம் இருந்தால்தான், நாட்டிலே உற்பத்தியாகின்ற பொருள்கள் எல்லாம் விலை போகும். இல்லாவிட்டால். தேக்கம்தான் ஏற்படும். அவர்களுடைய நிலைமையை கூடுமானவரைக்கும் அனுதாபத்தோடு கவனிக்கின்ற நிலைமையிலே நாம் இருக்கிறோம்,

இந்த வரி விதிப்பு தன்மையை எல்லாம் எனக்கு நேரமில்லாத காரணத்தினால் விடுகிறேன். குறைந்த அளவு வரிகட்டுகிற சமூகமாக இருப்பவர்கள் விவசாயிகள் தான். ஒவ்வொரு இனமாக எடுத்துக் கொண்டு மத்திய அரசு, ரிசர்வ் பாங்க் கணக்கிட்டு சொல்லியிருப்பதிலே குறைந்தளவிலே இருந்தாலும் தாங்க முடியாத அளவிற்கு இந்த நாடு மட்டுமல்ல, உலகத்திலே எந்த நாடுமே அப்படித்தான் இருக்கக்கூடும். அந்த அடிப்படையிலே எந்த நாடும் பொருளாதாரத்தில் திடீரென்று வளரவே முடியாதுதான். ஆனால் இங்கே இருக்கிற கஷ்டங்களை நம்முடைய சக்தியையும் மீறி எல்லோருடைய ஒத்துழைப்பினாலும், ஆதரவாலும்தான் நாம் செய்து கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையிலேதான் அவர்களுக்கு என்னென்ன சலுகைகளை அளிக்க முடியுமோ, ஏழை எளிய விவசாயிகள் சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் அவர்களுக்கு கடன் வழங்குவது, மானியம் வழங்குவது உதவியாக இருப்பது நாலாயிரம் ரூபாய்க்கு வண்டி மாடு வாங்கினாலும் கூட இரண்டாயிரம் மாட்டுக்கு இரண்டாயிரம் வண்டிக்கு என்று கொடுத்தாலும் அதில் ஆயிரம் ரூபாய் மானியமாக கொடுத்து 4 சதவீத வட்டியிலே வங்கிகளிலே கடன் வாங்கி தருவதற்கான



வசதிகளைச் செய்து தருகிறோம். ஆனாலும்கூட சிறு விவசாயிகள் 5 ஏக்கருக்கு கீழ் சென்ற ஆண்டு குறிப்பிட்டதைப்போல் 5 ஏக்கருக்கு கீழே இருக்கிற பாதிக்கப்பட்ட முடியாத எந்த வகையிலும் திருப்பிகட்ட முடியாமல் வசதிகளை இழந்த, பயிர்களை இழந்த, தாங்கள் கட்ட வேண்டுமென்றால் நகை, நட்டுகளை விற்றாலொழிய, வீட்டை விற்றாலொழிய அண்டா குண்டாவை விற்றாலொழிய முடியாது என்ற நிலை உள்ளவர்களுக்குச் சௌகரியம் செய்யவேண்டுமென்ற நிலையில்தான் சென்ற ஆண்டு திட்டம் கொண்டு வரப்பட்டது. 1979–80-லே கூட விவசாயிகளுக்கு பல்வேறு வகையிலே 40 கோடிக்கு சலுகை அளித்திருக்கிறோம். சென்ற ஆண்டு 42 கோடி என்று சொன்னேனே தவிர கடைசியில் கணக்கிட்டு பார்ப்போமேயானால் 52 கோடி விவசாய சங்கங்களின் மூலமாக அரசு பொறுப்பேற்றுக் கொண்டு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணம் தர வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொண்டது. ஐந்து ஏக்கருக்கு கீழே புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மட்டும் இருக்கிற கடனை நாம் அறவே நீக்குவதற்கு அரசு ஏற்றுக் கொண்ட பொறுப்பு 42 கோடி என்று நான் சொன்னேன். ஆனால் உள்ளபடியே ஆனது 52 கோடி. தக்காவி கடனை நான் 16 கோடி என்று சொன்னேன், ஆனால் உள்ளபடியே ஆனது 20 கோடி. கிட்டத்தட்ட 73 கோடி. அதைத்தவிர விவசாயிகள் சிலபேர் நாணயமாய் நேர்மையாய், விவசாயத் தலைவர் பெயரை சொன்னார்களே, அவர் சொல்லியதையும் கேட்காமல் கட்டியவர்கள் 20 கோடி கட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு திருப்பித் தருவதென்று ஏனென்றால் மற்றவர்களுக்கு சலுகை தருகிறபோது நாணயமாக கட்டியதற்கு அவர்களை பாதிக்கக் கூடாது என்று சொல்லி இந்த ஆண்டிலே இந்த 20 கோடியை நாம் அட்ஜஸ்ட் செய்து கொள்கிறோம். அவர்களுடைய கணக்கிலே வரவு வைத்துக் கொள்கிறோம் என்று சொல்கிறோம். கிட்டத்தட்ட 93 கோடி சென்ற ஆண்டு திட்டத்தில் மட்டும் வருகிறது. அதற்கு முன்னால் ஒரு 40 கோடி. 133 கோடி வருகிறது. இந்த ஆண்டிலும் ஒருவித சலுகையை நாம் அளித்திருக்கிறோம், ஜூன் 30–க்குள் 5 ஆண்டு, 8 ஆண்டு, 10 ஆண்டு என்று வழங்கின கடன், அவர்கள் சாதாரண வட்டி, தண்ட வட்டி ஆக சாதாரண அசலை மட்டும் இந்த ஜூன் 30–க்குள்ளே கட்டி விடுவார்களானால் தண்ட வட்டி நீக்கப்பட்டு விடும் அறவே; அது 7 வருஷம், எட்டு வருஷம் ஆனாலும் சரி, சாதாரண வட்டி நீக்கப்படும் என்ற ஒரு சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

ஐந்து ஏக்கருக்கு மேலே இருக்கிற மற்றைய விவசாயிகள் அவர்கள் அசலையும் வட்டியையும் கட்டி விடுவார்களானால் அவர்கள் மீதி கட்டவிருக்கிற தண்ட வட்டியை நீக்குகிறோம்

128–104–13

என்று சொல்லியிருக்கிறோம். இது முழுவதும் நிறைவேறுமானால் கூட அரசு 40 கோடி பொறுப்பு ஏற்றுக்கொண்டு, இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு தரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆனாலும் கூட சிலர் சில பல கஷ்ட நிலைமைகளையும் சொன்னார்கள். ஜப்தியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமியும், மற்றவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இதுபற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டிய தன்மையிலே அரசு இருக்கிறது. அது மின்சார கட்டணத்திற்கு எப்படி சர்வ கட்சி தலைவர்களையும், மற்றவர்களையும் கூப்பிட்டு வைத்து ஒரு ஏற்பாடு செய்து அந்த ஏற்பாட்டினுடைய அடிப்படையிலே வசூல் செய்வதென்று வசூலித்த மாதிரி இந்த விவசாய கட்டணத்தையும் பொறுத்தவரை பெறவேண்டுமென்ற விருப்பம் தெரிவித்தார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டு அதற்காக ஒரு குழுவை கூட்டுவோம் என்றார்கள். இதற்கு பிறகு மாண்புமிகு திரு. முனுஆதி அவர்கள் தலைமையைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு அதில் பல்வேறு கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அந்த குழு ஆராய்ந்து தன்னுடைய அறிக்கையைத் தருமென்று கூறப்பட்டிருக்கிறது. இப்போது ஜப்தி நடவடிக்கைகள் கூடுமானவரையில் ஏழை, எளிய மக்களாக இருக்கிறவர்களை வாட்டக் கூடாது, வருத்தக் கூடாது என்றெல்லாம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிக்கைகள் விட்டிருக்கிறார்கள். யாருக்கு நாம் ஜப்தி செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறதென்றால், கட்ட வேண்டிய காலத்திலே கட்டாமல் இருந்த 200 ஏக்கர், 300 ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டு, இரண் மூன்று கார்களை வைத்துக்கொண்டு, எல்லா வசதிகளையும் கொண்ட இரண்டு மூன்று பங்களாக்களை சென்னையிலே வைத்துக் கொண்டு, மற்ற இடத்திலேயும் வைத்துக் கொண்டு 40 ஆயிரம், 50 ஆயிரம், 70 ஆயிரம்கூட கடன் என்று சொல்லிக் கொண்டு, அப்படிப்பட்டவர்களிடம் பார்த்து, கட்ட முடிந்தும் கட்டாது இருக்கிறவர்களிடத்திலே வசூலிக்க வேண்டிய கட்டத்தைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்களும் மற்றவர்களும் சொன்னதைப் போல ஏழை, எளியவர்களாக இருந்து வாழ்க்கை, நடத்த அதைத் தவிர வேறு வழியே இல்லை, வாழ்க்கை அடியோடு பாதிக்கப்படும் என்ற நிலைமை இருக்குமானால் அவர்களை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்றும், அரசாங்கம் நடவடிக்கை எடுக்க கூடாது என்றும் சொன்னார்கள். அனுதாபத்துடன் தக்க நடவடிக்கை அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு திரு. முனுஆதியை தலைவராக கொண்ட அந்த குழு ஒரு இடைக்கால அறிக்கையை, மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னதைப் போல உட்கார்ந்து யோசித்து பரிந்துரைகளை அனுப்புவார்களானால், நீண்ட காலம் ஆராய்ந்து -திட்டத்திட்ட மாவட்ட வாரியாக அமைத்து, மாவட்டங்களில் எல்லாம் சென்று உடனடியாக அறிக்கையை அனுப்புவாரானால்



[பிற்பகல் 12-40]

அதை அரசு பரிசீலித்து அதனுடைய அடிப்படையிலே இந்தக் கஷ்டங்கள் மற்றவைகள் இல்லாமல் இருப்பதற்கு எதை எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு அரசு முயலும் என்பதை இந்த வாய்ப்பிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு துறைகளைப்பற்றிய கருத்துக்களை இங்கே தெரிவித்தார்கள். ஜாதி சண்டை பற்றியும் மதச் சண்டை பற்றியும் சொன்னார்கள். அது நாமே வெட்கப்பட வேண்டிய ஒன்று. இந்த 1981 ஆம் ஆண்டிலே ஜாதியின் பெயரால் மதத்தின் பெயரால் மனிதன் மனிதனின் உயிரினை வாங்கக்கூடிய அளவிலே நிலைமைகள் இருக்கின்றன. தலைவர்களும் மற்றவர்களும் அற நெறியாளர்களும் பொதுத் தொண்டர்களும் ஈடுபட்டு ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வளவு எல்லாம் சொன்னாலும்கூட காவல் துறையை மீறி இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. அதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நல்ல எண்ணத்திலே தெரிவித்துள்ள கருத்துக்களின் மூலமாக நாட்டிற்குத் தெளிவும் விளக்கமும் ஏற்படும் என்று நான் நம்புகிறேன். அப்படி ஏற்படுவதின் மூலமாக எடுத்துக் கொள்ளப்படுகிற நிலைமைகளும் சிறப்பாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றக் கருத்துக்களுக்கு எல்லாம் பதில் தெரிவிக்க முடியும் என்றாலும் கூட நேரமில்லை, அந்தக் கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்து எதை எதை ஏற்றுக்கொள்ளமுடியுமோ அதை ஏற்றுக் கொள்வதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்ணாவிரதம் பற்றிச் சொன்னார்கள். கூடுமான வரையில் நியாயத்தின் அடிப்படையில் அரசாங்கத்தினுடைய நிலைமை, நாட்டின் நிலைமை, நிதி ஆதாரங்களின் நிலைமை அவர்களுடைய நிலைமை ஆகியவற்றைப் பேசி முடிவு காண்பதுதான் பொருத்தமான நிலைமை. திரும்ப திரும்பச் சொல்கிறார்கள். நான் இந்த மன்றத்தின் மூலமாக உண்ணாவிரதம் இருக்கின்றவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன். பேச்சு வார்த்தையின் மூலமாக நியாயமான முடிவுக்கு வரவும், ஏதேனும் ஒரு கட்டத்திலே நடுவிலே வந்து நிற்கவும், ஒரு முடிவைக் காணக்கூடிய நிலைமைக்கு வரவேண்டுமென்று நான் இந்த மாமன்றத்தின் மூலமாக உண்ணாவிரதம் இருக்கிறவர்களை கேட்டுக் கொள்கிறேன். உண்ணாவிரதம், போராட்டம், அறப்போராட்டம் என்று சொல்கிறபோது ஒரு ஜனநாயக அரசை வற்புறுத்தி சிலபல முடிவுகளுக்கு இணங்கவைத்து விடுகின்ற நிலைமைகள் வருமானால் ஜனநாயகம் சரியாக நடைபெறுவதற்கு, ஒழுங்காக நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்காது. அரசு அனுதாபத்தோடு கவனித்துக் கொண்டிருக்கிறது. குறைபாடுகள் இருக்கலாம், குறைபாடுகள் நியாயம் என்று தெரிந்தால் அதைப் போக்குவதற்கான வழிவகைகளைச் செய்யலாம். ஆனால் கூடுதலான வசதிகள், புதிய வசதிகள், புதிய நிலைமைகளை வற்புறுத்துகிறபோது நிதி நிலைமையை கவனத்திலே

கொள்ளவேண்டும், ஆசிரியர்களானாலும், வேளாண்மை உதவியாளர்களாக இருந்தாலும் வேறு பல துறைகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அந்த அந்தக் குறிப்பிட்ட அமைச்சர்களைச் சந்தித்துப் பேசியோ அல்லது நிதியமைச்சராக இருக்கின்ற என்னைச் சந்தித்துப் பேசியோ அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கண்டுபேசியோ முடிவு காணலாம். அதற்கு உதவி புரிகின்ற நிலைமைகளை ஏற்படுத்த அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களும் உதவி செய்யவேண்டும். அவர்கள் உதவி செய்வார்களானால் ஒரு சுமுகமான நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைக்கு முன்னாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அடிப்படை அரசு ஊழியர்களுக்கு வீட்டுவாடகைபற்றியெல்லாம் ஒரு அறிவிப்பைத் தந்தார்கள். அவர்கள் சம்பளத்திலிருந்து சதவீதம் கழிப்பது பற்றியும் வீட்டு வாடகை பற்றியும் சொல்கிறபோது அவர்களுக்கு வழங்குகிற வீட்டுவாடகைப் படியை மட்டும் செய்வது என்றும் இதுவரை அவர்கள் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்து வந்த 10 சதவீதம் ஊதிய பணத்தையும் இனிமேல் பிடித்தம் செய்வது இல்லையென்றும் அறிவித்தார்கள், அந்த அறிவிப்பு அப்படியே இருக்கிறது. அந்த அறிவிப்பின் படியே செயல்முறையில் அது நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கொண்டும் ஒன்றைக் அறிவிக்க அவர்கள் இருந்தார்கள். இப்போது விடுபட்டதை நான் அறிவிக்க விரும்புகிறேன். அடிப்படை அரசுப் பணியாளர்களுக்கான அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க இந்த அரசு ஒரு கோடி ரூபாய் நிதியை ஒதுக்க முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைக்கு முன்னாளே அறிவிக்க இருந்தார்கள். அது இன்றைக்கு அறிவிக்கப்படுகிறது. நேற்றைக்கு முன் நாள் அறிவித்த சலுகையோடு இந்தத் திட்டமும் அறிவிக்கப்படுகிறது என்பதை தெரிவித்து இந்த நிதிஒதுக்க சட்டமுன்வடிக்கு உங்களுடைய முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு வி. வி. சுவாமிநாதன்):** பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு) எண் 46/1981 ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறைவேற்றப் பெற்றன,



பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.46/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) பேரவை அலுவல்

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்):** அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்றைக்கு நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க பேரவையின் சட்டம் நாளை 12-5-81 அன்று பிற்கலிலும் கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (எ) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டசபை முன்வடிவு எண் 45/1981).

**மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 45/1981) ஆய்வுக்கு *எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

***திரு. சே. கலிதீர்த்தன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, நாவலர் அவர்களால் இன்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்ட எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவின் மீதான விவாதத்தின் பொழுது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது நம்முடைய புரட்சித் தலைவரவர்களுடைய அரசு ஏற்பட்டதிலிருந்து அப்பொழுதும் சரி, இப்பொழுதும் சரி, அப்பொழுது புயலும் வெள்ளமும் ஏற்பட்டும், இப்பொழுது வறட்சியும் ஆக இத்தனை சங்கடமான சூழ்நிலைகளைச் சமாளித்து பொதுமக்களுக்குத் தொந்தரவு இல்லாமல் பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அப்படிச் செயல்படுத்தி வரும் பொழுது இங்கே உள்ள அனைத்து உறுப்பினர்களும் அறிவார்கள். இதற்குமுன் இருந்த அரசுகளெல்லாம் செய்த அவ்வளவு பெரிய கெடுபிடிகளையோ, வேறுவிதமான கடுமையான காரியங்கள் எதுவுமோ நம்முடைய புரட்சித் தலைவரவர்களுடைய அரசிலே செய்தது கிடையாது என்பதையும் நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

---

* 1981 ம் ஆண்டு மே மாதம் 9ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

நம்முடைய புரட்சித் தலைவரவர்களின் அரசு எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும் அதை எடுத்து வைத்தால், அதிலே நியாயம் இருந்தால் அதை ஏற்றுத் தமிழக மக்களுக்கு எந்த விதத்திலே நன்மை செய்ய முடியுமோ அவைகளைச் செய்து வருகிறது என்பதை ஆணித்தரமாக கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த வறட்சியான நிலையிலே என்னுடைய பகுதியிலே நம்முடைய அரசு வறட்சிப் பணிகளைத் தீவிரமாகச் செயல்படுத்துகிறது. அரசு அதிகாரிகளும், பொதுமக்களும் இந்தப் பிரச்சினையிலே மிகவும் ஒத்துழைப்பாக இருந்து, ஆங்காங்கே உள்ள மக்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கிறார்கள். கிராமப்புறங்களிலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களையும் ஆங்காங்கே உள்ள நியாய விலைக் கடைகளின் மூலமாக அரசு கொடுத்து இந்த வறட்சி நிலையை மிகவும் நல்ல முறையிலே சமாளித்ததற்காக நம்முடைய புரட்சித் தலைவரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே உள்ள சில பிரச்னைகளைப் பற்றிக் கூற ஆசைப்படுகிறேன். இப்பொழுது கள்ளக்குறிச்சி பெரியதொரு வட்டமாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் என்னுடைய சங்கராபுரம் தொகுதிக்கு வந்திருந்தபொழுது சங்கராபுரத்தை ஒரு வட்டமாகப் பிரித்துக் கொடுப்பதாகக் கூறி வந்தார்கள். ஆனால் இங்கே அப்படிப்பட்ட எந்தவொரு குறிப்பும் இந்த ஆண்டறிக்கையிலே கிடையாது. எனவே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் என்னுடைய சங்கராபுரத்தை ஒரு வட்டமாக ஆக்கிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்ராயன் மலைப் பகுதியைச் சேலத்திலே சேர்க்க சில அதிகாரிகள் முயற்சிப்பதாகத் தெரிகிறது. அந்த நிலையைத் தடுத்து, கல்ராயன் மலைப்பகுதி என்னுடைய பகுதியிலே இருக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்ராயன் மலைப் பகுதி அடிவாரத்திலே உள்ள பொதுமக்களும் அங்கேயுள்ள மலைவாழ் மக்களும் மிகவும் ஒன்றுபட்டு செயல்பட்டு வருகிறார்கள். ஆனால் அதை மாற்றுகின்ற அந்த நிலையை ஏற்படுத்தினால் அங்கேயுள்ள மக்கள் மிகவும் அவதிப்படும் நிலைமை ஏற்படும் என்பதையும் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழக அரசின் சார்பாகச் செயல்பட்டு வரும் திட்டத்திலே மலைவாழ் மக்களுக்காக உறைவிடப் பள்ளிகளும் பள்ளிக்கூடங்களும் நடத்தப்படுகின்றன. அந்த மக்களுக்கு ஒரு விளக்குத் திட்டத்தையும் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்களே சென்றுகூட இந்த ஒரு விளக்குத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் சீமெண்ணெய் விளக்கையே கண்டறியாதவர்கள். அப்படிப்பட்ட இடத்தில் மின்சாரத்தைக் கொண்டு சென்று அங்குள்ள மக்களுக்குச் செயல்பட்டு வருகிறது என்பதை இங்கேயுள்ள மாமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அவர்கள் செல்வதற்கான சாலை வசதி கிடையாது. ஆனால் இப்பொழுது அரசினுடைய தீவிரத் திட்டத்தின் கீழ் பிளாக்காடு ஊர் வரையில் சாலை வசதி செய்து பஸ் போக்குவரத்து செல்ல வசதி செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சாலையிலே விரைவிலே பஸ் விடுவதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கேயுள்ள மலைவாழ் மக்களுடைய நிலங்களைச் சர்வே செய்த சர்வேயர்கள் வன இலாக்காவில் சேர்த்துவிட்டதாக சர்வே செய்திருக்கிறார்கள். ஆனால் அங்கேயுள்ள மக்கள் கல்வி அறிவில்லாதவர்கள்: அரசாங்கம் எடுத்துக்கொண்டது என்பதற்கு ஆங்கிலத்திலே எழுதிக் கொடுத்துவிட்டார்கள். அவர்கள் ஏமாளி மக்கள். அவர்கள் அந்த நிலம் திரும்பக் கிடைக்க வேண்டுமென்றால், அந்த நிலம் உங்களுக்குக் கிடையாது என்று வன இலாக்கா சொல்வதன் காரணமாக அவர்கள் அதிருப்தி அடையக் கூடிய நிலையில் இருக்கிறது.

[பிற்பகல் 12.50]

எனவே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அதைத் திரும்பவும் சர்வே செய்ய ஏற்பாடு செய்து, அந்த மக்களுக்கு அவரவர்கள் பயிர் செய்யக்கூடிய நிலத்தினை, அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய சங்கராபுரத்திலே உள்ள அரசு மருத்துவமனையை ஆரம்பித்து 80 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், 80 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அதே மருத்துவ மனைதான் இருக்கிறதே ஒழிய, அதிலே எந்தவிதமான மாற்றமும் கிடையாது. நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்துவதற்கு அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

திரு. செ. சிவசாமி : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த மாநிலத்திலேயே, தலைநகரம் இல்லாத ஒரு மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே இங்கே பேச வேண்டிய ஒரு அவலநிலை எனக்கு இருந்து கொண்டிருக்கிறது. தொடர்ச்சியாக 4 ஆண்டுகள் அல்ல, 32 ஆண்டுகளாக தலைநகரம் மாவட்டத்திற்குள்ளே வர வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைய வரைக்கும் செய்ய முடியாத அரசுகள்தான் இருந்து கொண்டிருக்கின்றன. கூடிய சீக்கிரத்திலே இந்த அரசாவது அதைப் பரிசிலனை செய்து உடனடியாக மாவட்டத்திற்குள்ளேயே தலைநகரைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. செ. சிவசாமி] [1981 மே 11

இன்றைக்கு வறட்சி நிலைமையில், திடீர்ச் செலவுகள் ஏற்படக் கூடிய காலத்திலே, அதற்காகக் கிட்டத்தட்ட ரூ. 110 கோடி வேண்டுமென நிதியமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதிலே, பிரதானமாக வறட்சிக்காகத்தான் திடீர்ச் செலவுகள் ஏற்படும் என்ற நிலையிலே, வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்ச்சியாக நடக்கிறதா என்று பார்த்தால், எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, வறட்சி நிவாரணப் பணிகள் மிகமிக மட்டமாக நடந்து கொண்டிருக்கின்றன. இளையாங்குடி தொகுதியிலே கிட்டத்தட்ட 55 பஞ்சாயத்துக்கள் இருந்தாலுங்கூட, 250 கிராமங்களுக்கு மேல் இருக்கிறது. அந்த சுமார் 250 கிராமங்களுக்கு ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு ஊருணி வெட்டிவிட்டு, ரூ. 2,000-க்குச் செய்து விட்டு, பஞ்ச நிவாரண வேலை முடிந்துவிட்டது என்ற நிலையிலே அரசாங்கம் கணக்கு சொல்ல வேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும், குடிதண்ணீர் பிரச்னை தீர்க்கப்படவில்லை. குடி தண்ணீருக்காக, 3,4,5 மைல்களுக்கு மேல் போனாலுங்கூட, குடிநீர் கிடைக்கவில்லை. ஆங்காங்கே ஒருசில இடங்களிலே குடிநீர் கிடைத்தாலுங்கூட, இப்பொழுது போர்களைப் போட்டு விட்டு, அத்தனையையும் மூடி வைத்து இருக்கிறார்கள். 5,6 மாதங்கள் ஆகின்றன. எங்குமே தண்ணீர் எடுக்கப்படவில்லை. குறிப்பாக, இளையாங்குடியிலே தண்ணீர் வேண்டுமென்று 32 வருஷங்களாகக் கேட்டாலுங்கூட, இந்த அரசு வந்த பிறகு அது நடக்கும் என்று எதிர்பார்த்து பல தடவைகள் கோரிக்கைகள் கொடுத்தோம். நாங்களும் செய்ய முடியாது. அப்படிப்பட்ட அவல நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம் என்று தொடர்ச்சியாக நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றவேண்டும். இளையாங்குடியில் நாங்கள் தீர்மானம் போட்டு, நாங்கள் எங்களுடைய பங்குத் தொகையைக் கொடுக்கிறோம், எங்களுக்குத் தண்ணீர் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டோம் அசையவில்லை. ஆகவே, அந்தப் பகுதிக்குத் தண்ணீர் கொடுக்க, கிழக்கு இராமநாதபுரம் முழுவதையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு, அந்தத் தொகுதி முழுவதற்கும் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி வறட்சி நிவாரணப் பணிகளைப் பொறுத்த அளவிலே, மிக மிக மோசமாக இங்கு கணக்குகள் சொல்லப்பட்டாலும், நடைமுறையிலே எந்த வேலையும் நடக்காத ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. கிராமங்கள் மட்டுமல்ல, பஞ்சாயத்துக்களுக்கு ரூ. 2,000 என்ற முறையிலே அங்கே ஒரு ஊருணியைச் சுரண்டிப் போட்டிருக்கிறார்கள். அதுகூடச் சரியாக வெட்டப்படவில்லை. ரோடுகள் எதுவுமே பழுதுபார்க்கப்படவில்லை. அப்படிப்பட்ட ஒரு அவல நிலை. அந்த நிலைமையை மாற்றி எல்லா பகுதிகளிலும் குடிநீர் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.



1981 மே 11]

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே. எதிர்பாராத செலவு பற்றி இந்த மசோதாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன். இன்றையதினம் எதிர்பாராத செலவுகள் என்பது நமக்கு ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. ஒன்று அதிகமாக மழை, புயல் வந்து அதன் மூலம் பெரிய சிரமங்கள் வரும். அல்லது வறட்சி ஏற்பட்டு அதன் மூலம் பெரிய சிரமங்கள் ஏற்படும் அல்லது ஆக்சிடென்ட் போன்ற விபத்துக்கள் ஏற்பட்டு சிரமங்கள் ஏற்படும். அப்படி விபத்துக்கள் ஏற்படுகின்ற நேரத்தில் அரசு பல உதவிகளைச் செய்து கொண்டு வந்தாலும் கூட, அந்த உதவி கிடைப்பதில் மிகவும் காலதாமதம் ஏற்படுகின்றன. உதாரணமாக சில விபத்துக்கள் ஏற்பட்டு, வறட்சி ஏற்பட்டு, புயல் ஏற்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு, சம்பந்தப்பட்டவர்களுக்கு மனுக்கள் கொடுக்கப்பட்டால் உதவிகள் மிகமிக காலதாமதமாகக் கிடைக்கின்றன. அல்லது சில இடங்களில் கிடைக்காமலேயே போய்விடுகின்றது. ஆகவே விபத்து என்று ஏற்பட்டால் உதவிகள் தானாகவே முன் வந்து கொடுப்பதற்கு அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிடவேண்டும். மேலும் தற்போது கொடுக்கப்படுகின்ற உதவிகள் போதுமானதாக இல்லை. உதாரணமாக தீ விபத்து ஏற்பட்டு, பலலாயிரக் கணக்கான ரூபாய்கள் சேதம் அடைகின்றன. வீடுகள் எரிந்து போய் பொருள்கள் அனைத்தும் நாசமடைகின்றன. அப்படிப் பட்டவர்களுக்கு 100 ரூபாய் 200 ரூபாய்கள் கொடுக்கிறார்கள். அது பிரயோசனப்படாமல் இருக்கிறது என்பதை சிந்தித்து அந்தத் தொகையை ஓரளவுக்கு உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வறட்சி நிவாரண வேலைகளுக்கு பல லட்சக் கணக்கான தொகையை ஒதுக்கி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில ஏரியாக்களில் குளங்கள் ஆழப்படுத்தப்படுகின்றன, குடிநீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. இது குறித்து சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் குறிப்பே கொடுத்திருக்கிறார்கள். ஒரு வாரத்திற்கு மேல் ஆகிறது. ஆனால் அங்கே போய் பார்த்தால் 20 வேலை என்று சொன்னால் 5 வேலைகள் தான் நடைபெறுகின்றன. பாக்கி வேலைகள் ஆரம்பிக்கப்படவே இல்லை. இதற்கிடையிலே கோடை மழை வேறு ஆரம்பித்து விட்டது. இந்த நிலையிலே அறிவிக்கப்பட்ட வேலைகள் நடைபெறுமா என்று சந்தேகப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே அறிவிக்கப்பட்ட வேலைகள் உடனடியாக நடைபெற வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணிகள் மிகவும் நல்ல முறையில் சிறப்பாக நடைபெறவேண்டும் என்பதற்காகத்தான், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சமுதாயத் தொண்டர்கள் என்ற நல்லவர்களைக் கொண்டு குழு போட்டிருக்கிறோம். ஆனால் உங்களுடைய விருப்பப்படி ஞாயிற்றுக் கிழமை தோறும்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 மே 11

கமிட்டிக் கூட்டம் போடச் சொல்லி இருக்கிறது. அது மட்டுமல்லாமல், எங்குகெங்கு வேலை நடைபெறவில்லை என்பதையும். எந்தத் துறை பார்க்கிறது என்பதையும் உறுப்பினர்கள் அறிவிப்புத் தரவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இவ்வளவு விளக்கமாக அரசு சார்பிலே உத்தரவு போடப்பட்டிருக்கின்றது. நான் இங்கே சொல்லுகிற போதெல்லாம் சொன்னேன். உங்களுடைய உதவி இந்த அரசுக்கு தேவை என்று விளக்கமாகச் சொல்லி இருக்கிறேன். நான் இங்கே உள்ள உறுப்பினர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம், எங்கே வேலைகள் தாமதமாக இருக்கின்றது என்பதை குறிப்பாக இந்தத் தொகுதியில் இந்த ஊரில், இந்த வேலைகள் நடைபெறவில்லை என்று குறிப்பாகச் சொன்னால்தான் நாங்கள் வேண்டிய விளக்கங்களைக் கேட்டு விவரம் தரமுடியும். பொத்தாம் பொதுவிலே மொத்தமாக நடைபெறுகிறது என்றால் அது சரியாகாது. எனவே நமது சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தெந்த இடத்தில் எந்தெந்த ஊரில் இன்னின்ன வேலைகள் குறைவாக நடக்கிறது, மெதுவாக நடக்கிறது என்று எழுதிக் கொடுத்தால் ஆவன செய்கிறேன். அதுமட்டும் போதாது என்று சொன்னால் நீங்கள் எல்லாம் விருப்பப்பட்டால் உங்களுடைய மாவட்டத்திற்கு நானே வந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கூட்டி வைத்து பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்— தலைமை)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பற்றி அதிகமாக விவாதிக்கத் தேவையில்லை. எதிர்பாராத செலவு ரூ. 30 கோடி வரையில் செலவழிக்கலாம் என்று ஏற்கெனவே இருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் தற்காலிகமாக அதை 110 கோடி என்கிற அளவிற்கு உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. காரணம், வறட்சி நிவாரணப்பணிகள் உடனுக்குடன் செய்ய வேண்டியுள்ளது. அதனுடைய செலவுகள் வளர்ந்து கொண்டே போகின்றன. அதற்கு வழிவகை செய்யவேண்டும் என்ற அடிப் படையில் இந்த ஆண்டு 30 கோடி ரூபாய் என்று இருப்பதை ரூ. 110 கோடி என்று உயர்த்த அரசு முடிவு செய்து, அதற்கு ஏற்ற வகையில் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட் டுள்ளது இந்த ஆண்டு மட்டும்தான் இந்த உயர்வு. அதற்காக வழிவகை செய்ய இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''



1981 மே 11] [மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்]

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறை வேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்து கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 45/1981) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு 1981 (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1981)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்'' என்று மொழிகிறேன்.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திருத்தத்தை நான் வரவேற்கின்ற அதே நேரத்தில் இந்த நீட்டிப்பு 1 மாதம், 1½ மாதம் என்பது போதாது. இந்த ஆண்டு டிசம்பர் மாதம் முடிகின்ற வரையில் இது கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி நீடிப்பது என்பது லட்சக்கணக்கான கிராம மக்கள் வாழ்வில் நலம் பயக்கும். அதோடு, குறைந்த வருமானம் என்கிற சான்றிதழ் பெறுவதற்காக இன்றைக்கு — கிராம அதிகாரிகள் இல்லாததால் — ரெவின்யூ இன்ஸ்பெக்டரைத்தான் மக்கள் நாடிச்செல்லவேண்டியிருக்கிறது. அதில் பல சங்கடங்கள் இருக்கின்றன.

இப்படிப்பட்ட சான்றிதழ் கோரி மனு செய்கிறவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இந்த சான்றிதழ் பெறுவதில் உள்ள காலதாமதத்தால் மிகவும் சிரமப் படுகிறார்கள், இத்தகைய நிலைமை மாநிலம்முழுவதும் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் ஏற்பட்டுள்ள ஒரு நிலைமையைச் சொல்லவிரும்புகிறேன். இந்தச் சான்றிதழ் கொடுப்பதற்கான தாமதத்திற்கான காரணம் கேட்டால், அவர்கள் சொல்கிறார்கள். இந்தச் சான்றிதழ் பெறுவதற்கு அந்தக் கடன் கொடுத்தவரையும் அழைத்து விசாரித்த பின்னர்தான் கொடுக்கப்படும் என்று

---

* 1981 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிட பெற்றுள்ளது.

சொல்கிறார்கள். பல இடங்களில் கடன் கொடுத்தவர்களை அழைத்தால் வருவது இல்லை. இரண்டு முறை மூன்று முறை அழைத்தும் வருவது இல்லை. இதனால் தாமதம் ஏற்படுகிறது. மேலும், கடன் கொடுத்தவர்கள் நகரத்திலே வசதி படைத்தவர்களாக இருந்தால், ஒரு சில அதிகாரிகள் சான்றிதழ் கொடுக்க தாமதப்படுத்துகின்றனர். இப்படி சான்றிதழ்கள் பெறுவதில் தாமதம் ஏற்படுவதால், கடன் கொடுத்தவர்கள் கோர்ட்டுக்குச் சென்று, வழக்குத் தொடர்ந்து அதில் தீர்ப்பும் பெற்று, அவனுடைய சொத்துக்களை ஜப்தி செய்கின்ற நிலைமைகள் கூட ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்து இருக்கின்றன என்று இன்றைக்குக் கூட திண்டுக்கல்லில் இருந்து கடிதம் வந்து இருக்கிறது. சான்றிதழ் கேட்டு இருக்கிறோம், கிடைக்கவில்லை என்று கோர்ட்டில் சொன்னால் கூட அங்கே அதை ஏற்றுக்கொள்வது இல்லை. இப்படி அவர்களுடைய சொத்துக்கள் ஜப்திக்கு வருகின்ற நேரத்தில் குறைந்த ஏலத்தில் அவைகள் விடப்படுகின்றன என்கிற தகவல்கள் கூட தரப்பட்டு இருக்கின்றன.

அது மட்டுஅல்ல. நான் கேள்விப் படுகிறேன். இந்த சான்றிதழ் வாங்குவதற்கு — நான் எல்லா ஊழியர்களையும் சொல்லவில்லை ; ஒருசில இடங்களிலுள்ள ஊழியர்கள்—1,000 ரூபாய். 2,000 ரூபாய் கடன் தள்ளுபடி செய்ய சான்றிதழ் கேட்கிறீர்கள் ; அதனால் எங்களுக்கு ஏதாவது கொடுக்கக் கூடாதா என்று கேட்டு, சான்றிதழ் கொடுப்பதிலே காலதாமதத்தை ஏற்படுத்துகிறார்கள். இந்த நிலைமைகள் முழுவதுமாக மாற வேண்டும். மக்களுக்கு நியாயமாக அரசு அளிக்கின்ற சலுகைகள் கிடைக்க வேண்டும். அதற்கு, இந்த சான்றிதழ்கள் வழங்க தனியாக தாசில்தாரரோ அல்லது மற்ற அலுவலர்களோ நியமிக்கப்பட வேண்டும். ஒருவர் சென்று சான்றிதழ் வேண்டுமென்று கேட்டால் அதற்கு மனு செய்தால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதுதான் உதவிகரமாக இருக்கும்.

இப்போது ஒரு தாலுக்காவுக்கு 2 எம். எல். ஏ. அல்லது 3 எம். எல். ஏ. க்கள் தான் இருக்கிறார்கள். அவர்களையும் மற்ற ஒன்றிரண்டு அலுவலர்களையும் கொண்ட ஒரு குழு அமைத்து இதற்கு ஒரு வழி காணலாம். 10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறை அவர்கள் கூடி, வந்திருக்கிற மனுக்களைப் பரிசீலித்து, இவை நியாயமானவை, சான்றிதழ் வழங்கலாம் ; இவை தேவையில்லை, தள்ளிவிடலாம் என்று முடிவு செய்து சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்யலாம். அப்படி இருந்தால் அரசின் நல்ல எண்ணத்திற்கு பலன் ஏற்படுவதாக இருக்கும். அதோடு இந்த ஜூன், ஜூலை என்று காலக்கெடு வைத்திருப்பது போதாது. டிசம்பர் வரையில் காலக்கெடு வைக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.



**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த கடன் நிவாரணம் சம்பந்தமாக அமைச்சரவர்கள் 2, 3 சட்டங்களை நல்ல எண்ணத்தோடு கொண்டு வருகிறார்கள். ஆனால் சட்டங்கள் எத்தனை வந்தாலும், இலட்சக்கணக்கான மனுக்கள் ஆங்காங்கே முடிவு செய்யப்படாமல் கிடக்கின்றன. அவைகளை அவர்கள் பரிசீலித்து ரிக்கார்டு பூர்வமாக எழுதி வைக்க போதிய அளவுக்கு குமாஸ்தாக்கள் இல்லை. அதோடு இந்த வேலையை தாசில்தாரிடம் ஒப்படைத்திருக்கிறோம். அமைச்சருக்கும் தெரியும். தாசில்தாருக்கு பல வேலைகள் இருக்கின்றன. அந்த வேலைகளோடு இந்த வேலையையும் செய்யச் சொன்னால், அவர்களால் முடியவில்லை. எத்தனை மனுக்கள் வந்தன, எத்தனை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன, யார் வாங்கினார், யார் வாங்கவில்லை, வாங்கவில்லை என்றால் என்ன காரணம் என்பதை அறிவதற்கு ஒரு வழியும் இல்லை. தள்ளுபடி செய்கிறோம் அல்லது தள்ளி வைக்கிறோம் என்று நல்ல எண்ணத்தோடு சொல்கிறீர்கள். ஆனால், தள்ளி வைத்தால் அவர்களுக்கு அவதிதான் ஏற்படுகிறதே தவிர அவகாசம் கிடைப்பதில்லை. இந்த நல்ல எண்ணம் நிறைவேற வேண்டுமென்றால் வருகின்ற மார்ச் மாதம் வரையில் இதை தள்ளி வைத்து, போதிய அதிகாரிகளையும் நியமிக்கவேண்டும். இப்போது கிராம அதிகாரிகள் இல்லாத நிலைமையில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் அந்த கிராம அதிகாரிகள் வேலையைப் பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். சான்றிதழ் வேண்டுமென்றால் ரெவின்யூ இன்ஸ்பெக்டரை எங்கே போய் பார்ப்பது ? அவர் எங்கே இருப்பார் என்பதே தெரியவில்லையே. அவருக்கு 20 கிராமங்களைப் பார்க்க வேண்டுமென்று கொடுத்தால் அவர் எந்த நேரத்தில் எந்த கிராமத்தில் இருப்பார் என்பது யாருக்குத் தெரியும் ? ஆகவே, காலத்தை ஒத்தி வைப்பதோடு போதிய பணியாளர்களையும் நியமித்தால்தான் நல்ல எண்ணத்தோடு கொண்டுவரப்பட்ட சட்டம் மக்களுக்கு நன்மை அளிப்பதாக இருக்கும்.

பின்தங்கிய மக்கள், ஆதி திராவிடர் மக்கள், மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு போதிய அவகாசம் இல்லை அதனால் சான்றிதழ் கேட்பதில் அவதி இருக்கிறது. இவைகளை கருத்திற்கொண்டு காலத்தை ஒத்திவைத்து, அதற்கு வேண்டிய ஆணையிடுகிற நேரத்தில் சான்றிதழ் வழங்க அரசு தனியாக அலுவலர்களையும் நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எத்தனை கேஸ் வந்தது, எவ்வளவு தீர்க்கப்பட்டது. இன்னும் எவ்வளவு தீர்க்கப்பட வேண்டும், அதை தீர்ப்பதற்கு அரசு சார்பிலே என்ன காரணம் சொல்கிறார்கள். இரண்டு அல்லது மூன்று மாதங்களில் இந்த காரியங்கள் எல்லாம் செய்யப்பட முடியுமா என்று கேட்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் காலத்தை ஒத்திவைத்து, புதிய பணியாளர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன். வணக்கம்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு துணைத் தலைவர வர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்டம் இரண்டாவது திருத்த மசோதாவின் மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த காலவரையறையை நீட்டிப்பது சம்பந்தமாக, நாம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி, ஆளுநர் ஒப்புதல் பெற்று, இதை அறிவிக்கும் தேதியிலிருந்து இந்தக்காலக் கெடுவைப் பார்க்கும்போது இது மிகவும் குறைந்த காலவரையறையாக இருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். ஆகவே குறைந்த பட்சம் இதை அறிவிக்கும் தேதியிலிருந்து 3 மாதம் அவகாசம் அளிக்கின்ற வகையில் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு நடைமுறையில் பல சிரமங்கள் இருக்கின்றன. கடன் சம்பந்தமாக, கடன் பெற்றிருக்கக் கூடியவர் வருமான சான்றிதழ் பெறுவதிலே இருக்கக்கூடிய கஷ்டங்களை எண்ணிப்பார்க்கும் போது, தினசரி ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் வருகின்றன, அவைகளை பைசல் செய்து சான்றிதழ் பெற்று, கடன் நிவாரணம் பெறுவதிலே ஏராளமான சிரமங்கள் இருக்கின்றன.

ஆகவே, இந்தச் சிரமங்களிலிருந்து அவர்களை விடுவிப்பதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே குத்தகை பதிவு சம்பந்தமாக, ஒரு சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்தார்களே, அதில் பதிவு செய்யக் கூடிய அதிகாரிகளோடு, பொது மக்களிடமிருந்து, அதாவது விவசாயிகளிடமிருந்து பிரதிநிதிகள் இடம் பெற்று ஒரு குழுவை அமைக்கும் வகையிலே ஏற்பாடு செய்வது சம்பந்தமாகக் கொண்டு வந்தார்கள். அதுபோலவே இதற்கும் ஒரு குழுவை அமைக்கும் வகையிலே ஏற்பாடு செய்வது சம்பந்தமாக கொண்டு வந்தார்கள். அதுபோலவே இதற்கும் ஒரு குழுவை அமைக்கும் வகையிலே, திருத்தம் கொண்டு வந்தால், அது பொது மக்களுக்கு நல்ல பயனைக் கொடுக்கும் என்று கருதுகிறேன்.

[பிற்பகல் 1-10]

மூன்றாவதாக நான் குறிப்பிட விரும்புவது, கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ், ஏழை எளிய மக்கள் அதை பயன்படுத்திக் கொண்டு பலனடைய வேண்டும் என்ற எண்ணத்தில், அவர்களுடைய நகைகளை அடகுக்காரர்களிடம் அடமானம் வைத்திருக்கும் நகைகளை, இந்த கடன் நிவராணச் சட்டத்தின் கீழ் திரும்பப் பெற வேண்டும் என்பதற்காக மனு போட்டு தாசில்தார் அலுவலகத்திடமிருந்து அதற்காக உத்தரவையும் பெற்று வந்து பார்க்கிறபோது, அந்த அடகுக் கடைக்காரர்கள் யாருமே அங்கே இல்லாமல் இருக்கும் சூழ்நிலையை, கடைகளே மூடிக் கிடக்கும் நிலைமையில் தங்களுடைய நகைகளை திரும்பப் பெற இயலாதவர்களாக அந்த ஏழை மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.



அந்த நகைக் கடைக்காரர்கள் ஊரைவிட்டே ஓடி விட்டார்கள் என்ற முறையில் இருக்கின்றன. இதனால் அந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ், அரசு கொடுத்த சலுகைகளின் கீழ் ஏழை எளிய மக்கள் பயனடைய த நிலைமை இருக்கிறது எனவே, அப்படி கடைகளை மூடிக்கொண்டு, ஊரைவிட்டே சென்றிருக்கும் அந்த அடகுக் கடைக்காரர்களை கண்டுபிடித்து இந்தச் சட்டத்தின் கீழ் நகைகளை திருப்பித் தர மறுக்கும் அந்த தனியார்களின் மீது, கிரிமினல் நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுத்து, சிறைக்கு அனுப்பும் வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும். அதற்கான நடவடிக்கையை எடுக்கும் வகையிலே, சட்டத்திலே திருத்தம் கொண்டு வரவேண்டிய அளவிலே கால நீட்டிப்புத் தேவை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மள் : கனம் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர் களால் கொண்டு வரப்பட்டிருக்கிற, இரண்டாவது திருத்த கடன் நிவாரணச் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வராமல் இன்னும் சற்றுக் காலம் கடத்தினால், தற்போது நிலுவையில் இருக்கிற எல்லா மனுக்களையும் பரிசீலனை செய்து, மக்கள் அனைவருக்கும் இந்த சட்டத்தின் பலனை அடையச் செய்ய முடியும் என்று கூறிக் கொள்கிறேன். ஏனென்றால் மக்கள் அதற்கான சான்றிதழ்களைப் பெறுவதற்கே 3 மாதம் 4 மாதம் ஆகிவிடுகிற காரணத்தால், எல்லா மக்களுக்கும் பயன் அளிக்கக் கூடிய வகையில், இந்தச் சட்டம் இருக்கிறது. ஆகவே அதன் நோக்கம் முழுமையாக நிறைவேற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல் தாசில்தார் அலுவலகங்களில் வேலை பளு ஏற்கெனவே மிகுதியாக இருக்கிற காரணத்தால் ஒரு உதவி தாசில்தார் அவர்களை தனியாக, இதற்கென இந்தக் கடன் நிவாரணத்திற்கென நியமித்து தனியாக இதை கவனித்து அனைத்து மக்களும் பயன் அடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டும் அல்லாமல், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் தெரிவித்ததைப் போல, நகைகளின் மீது வட்டிக்கு கடன் கொடுக்கும் அந்தத் தனியார்கள், அநியாய மாக 3 வட்டி 2 வட்டி என்று வாங்குவதோடு மட்டுமல்லாமல் எழுதிக் கொடுக்கும் தாள்களில் ஒரு வட்டி என்றே எழுதிக் கொடுக்கிறார்கள். அல்லது 5,000 கொடுத்தால், 15,000 என்று எழுதி வாங்கிக் கொள்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல அவர்கள் ஓடிவிடுகிற சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்டவர்களையெல்லாம் கண்டு

பிடித்து, அவர்களுக்கு தண்டனை அளிப்பதோடு, சம்பந்தப்பட்ட அந்த ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய நகைகளை திரும்பக் கிடைக்கச் செய்யும் அளவிற்கு நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும்.

அப்படிப்பட்ட திருத்தங்களை கொண்டு வர சற்று காலம் தேவைப்படும். ஆகவே டிசம்பர் மாதம் வரையிலாவது இதனை நீட்டித்துக் கொடுத்தால்தான், அனைத்து மக்களுக்கும் உதவி செய்யக் கூடிய நிலைமையும் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல மல் வட்டிக்கு கடன் கொடுக்கக் கூடியவர்கள், ஆயிரம் ரூபாய் வைத்திருந்தால் போதும் அதை வட்டிக்கு விட்டு, வட்டிக்கு வட்டி போட்டு, கடன் வாங்கிய ஏழைகளின் ரத்தத்தை—சொத்துக்களை உறிஞ்சி, அவர்கள் குடும்பங்களை நடுத்தெருவில் நிற்க வைத்து விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களை கண்டு பிடித்து தண்டிப்பதற்கும், அவர்களுடைய பிடியிலிருந்து ஏழை மக்களை விடுவிப்பதற்கும் வழி வகைகளை செய்தாக வேண்டும். சில நேரங்களில் கடன் கொடுக்கும் போது சம்பந்தப்பட்டவர்களின் சொத்துக்களின் மீது ஒத்தி என்றோ அல்லது ஈடு என்றோ எழுதாமல் கிரயம் எழுதிக் கொண்டு கடன் கொடுக்கின்றார்கள். அந்த கடனை வட்டியும் முதலுமாக கட்டப் போகும் போது வாங்கிக் கொள்ள மறுப்பதோடு நிலத்தையோ சொத்தையோ அப்படியே பிடுங்கிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்களையெல்லாம் கண்டு பிடித்து, அவர்களை தண்டிப்பதோடு அவர்களிடமிருந்து ஏழை எளிய மக்களை விடுவித்தாக வேண்டும். அந்த வகையில் சட்டத்திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும். அதற்கு காலத்தை நீட்டித் தர வேண்டியது மிக அவசியம் என்று கூறிக் கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்லாமல், யார் யார் இப்படி அநியாய வட்டி போடுகிறார்களோ, யார் யார் இப்படி ஏழை எளியவர்களை சுரண்டியே பணக்காரர்களாகியிருக்கிறார்களோ, அவர்களைக் கண்டு பிடித்து அப்படிச் சேர்த்த சொத்தை அவர்களிடமிருந்து பிடுங்கி அரசாங்கமே எடுத்துக் கொள்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கும் அளவில் ஒரு சட்டத்திருத்தத்தைக் கொடுப்போமேயானால் அது ஏழை எளிய மக்களுக்கு மிகுந்த பாதுகாப்பாக இருக்கும் என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கடன் நிவாரண இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களைச் சொல்கிற போது எல்லோருமே இதை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்வதெல்லாம் கொடுத்திருக்கிற காலம் பற்றாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த



31–12–80 வுடன் காலக்கெடு முடிந்துவிட்டிருக்கிறது. ஆனால் இந்த அரசு ஏன் இதைக் கொண்டுவந்தது என்றால் இந்த நிவாரணச் சட்டம் மூலமாக நடைமுறையில் பயன் அடைய தகுதியுள்ளவர்கள், பெரும்பாலும் கிராம மக்களுக்கு இதைப்பற்றி சரியான அளவில்மனுக்கள் செய்து நன்மை அனுபவிக்க முடியவில்லையே என்ற எண்ணம்தான் இதற்கான காலத்தை நீட்டித்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 31–12–80 முடிகிறகால த்தவணை 30-9-1981 வரையில் நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அருமைச் சகோதரர் திரு. கருப்பையா அவர்கள் சொல்கிறபோது அதிலிருந்து மூன்று மாதக்காலம் அதாவது இந்தச் சட்டம் அமலுக்கு வருகிறபோது மூன்று மாதங்கள் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். 30–9–81 என்கிற போதும் மூன்று மாதத்திற்கு அதிகமாக வருகிற அளவிற்கு கொடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை சகோதரர் பேசுகிறபோது சொன்னார் என்று கருதுகிறேன், ஏலம் விட்டுவிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கிற சட்டப்படி ஏலத்தை யாரும் போட முடியாது. ஏலம் போடுவது என்றால் அவர்கள் அடகு வைத்து கொடுப்பது, அல்லது கடன் கொடுப்பதற்கு பதிவு செய்தவர்களானால் ஏலம் விடவேண்டுமென்றால் வருவாய் கோட்ட அதிகாரி அனுமதி வழங்க வேண்டும். அனுமதி வாங்குவது மட்டுமல்ல, அவர்கள் எங்கே ஏலம் விடப்படுகிறது என்று பலர் அறிய அங்கே விளம்பரப்படுத்த வேண்டும். அதற்குப் பிறகு தான் ஏலம் போட முடியும். குறிப்பிட்டு எங்கேயாவது அப்படி ஏலம் போட்டிருந்தால்—அவர்களுக்கு மட்டும்சொல்ல வில்லை இப்படி இந்தச் சட்டப்படி இந்தச் சட்ட நிவாரணம் அளிக்கப்படுகிற, அடைகிறவர்கள், யாராவது, அதை அடையமுடியாமல் போகிற அளவிற்கு ஏலம் போடப்பட்டிருக்கிறது என்று இங்கே தெரிவித்தாலும் சரி, இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றவர்கள் தெரிவித்தாலும் சரி, அல்லது இதற்குப் பிறகுப் அந்த தகவலை சேகரித்துக் கொடுத்தாலும் அதற்கு யார் யார் காரணம் எப்படி ஏலம் விடப்பட்டது என்பதைக் கண்டு பிடித்து அவர்கள் மீது நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதி வாங்காமல் ஏலம் எடுக்கப்பட்டிருந்தால் அவர்களை தண்டனைக்கும் உள்ளாக்குவதற்கு இந்த அரசு தயாராயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை சகோதரர் திரு. இளையபெருமாள் சொல்கிறபோது வருமானச் சான்றிதழ் பெறுவதில் சில சங்கடங்கள் இருக்கிறது என்று சொன்னார்கள். வருமானச் சான்றிதழ் பெறுவதில் சங்கடங்கள் இல்லாத அளவிற்கு எந்த அளவிற்கு இதை பார்த்துக் கொள்ளமுடியுமோ அப்படி பார்த்துக் கொள்வதற்கு இந்த அரசு தயாராயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு, ரெவன்யூ
இன்ஸ்பெக்டர்களுக்கு இதைப்பற்றி ஏழை எளியவர்களுக்கு
உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்றும் இதில் இந்த அரசு
எப்படியும் எல்லோரும் நன்மை அடைய வேண்டும் என்பதற்
காகத்தான் விரைவாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது
இவ்வளவு காலத் தவணை எல்லாம் கொடுத்துக்கொண்டு
வருகிறோம். இதை நல்லமுறையில் செய்யவேண்டும் என்பதற்
காகத்தான் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்
அதுமட்டுமல்ல. இந்தச் சட்ட முன்வடிவு இங்கே வருகிறபோது
இதுவரை 69,000 மனுக்கள் வந்து இருக்கின்றன. இன்றைக்கு
இதுவரை கொடுக்கப்பட்ட நிவாரணம் எவ்வளவு என்று கேட்டால்
அது ஏறக்குறைய ஒன்றேகால் கோடி ரூபாயாகும். ஆனால் இந்த
ஒன்றேகால் கோடி ரூபாய் போதாது என்ற முறையில்தான்
ஏதோ இன்னும் இதை தீவிரமாகச் செய்ய வேண்டும் என்பதற்
காகத்தான் காலத் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக்
தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.20)

ஆனால், இந்தச் சட்டம் 1976-லே கொண்டுவரப்பட்டது
என்பது உங்களுக்குத் தெரியும். அப்போது குடியரசு ஆட்சித்
தலைவர் காலத்திலே செய்யப்பட்டது என்பதும் உங்களுக்குத்
தெரியும். அப்படி கொண்டு வருகிறபோது, இந்தச் சட்டம்
கிராமப்புறத்து மக்களுக்காக மட்டும் கொண்டு வரப்பட்டது.
1976-லே சிறிய விவசாயிகள், நிலமற்ற ஏழை வேளாண்மைத்
தொழிலாளர்கள் அவர்களுக்கு மட்டுமே அப்போது இது
செல்லும். அது மட்டுமல்ல ஒரு வருஷத்திற்கு ரூ. 2,400, அல்லது
அதற்குக் குறைவான வருமானம் வரக்கூடியவர்களுக்கு மட்டும்
செல்லும் என்று கொண்டு வரப்பட்டது. ஆனால், இது மற்ற
தொழில் செய்பவர்களுக்குச் செல்லாது என்பதும் உங்களுக்குத்
தெரியும். இந்த அரசு வந்ததற்குப் பின்னால், தமிழக முதல்வர்
அவர்கள் மற்றவர்களையும் கவனிக்க வேண்டுமென்பதற்காக
கொண்டு வருகிறபோது, அவர்கள் விவசாயத் தொழிலாளர்களாக
இருந்தாலும் சரி,வேறு எந்தத் தொழிலைச் செய்பவர்களாக இருந்
தாலும் சரி, அவர்கள் வருஷத்திற்கு ரூ. 4,800 அல்லது அதற்குக்
குறைவாக வருமானம் இருந்தால், அவர்களுக்கும் செல்லும்
என்று கொண்டு வரப்பட்டது என்பதை நான் உங்களுக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இந்த மூலச் சட்டம்
1976-க்கு முன்னால் வாங்கிய கடனுக்கு மட்டும் கொண்டு வரப்
பட்டது. ஆனால், இந்த அரசு 1976-க்குப் பிறகும், 31-12-1979
வரையிலும் வாங்கிய கடன் அதாவது ஆண்டுக்கு ரூ. 4,800
அல்லது அதற்குக் குறைவாக வருமானம் இருந்தால், அவர்களுக்
கும் செல்லும் என்று கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை
நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இதிலே, இன்னும் எந்த அளவிற்கு நன்மை செய்ய முடியுமோ
வைகளையெல்லாம் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்
றது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டு
ல்ல. இன்றைக்கு இதற்கு தனி தாசில்தார் போட்டு கவனிக்க
வண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்
றார்கள். இதை தாசில்தார்கள் கவனித்துக் கொண்டு
ருகிறார்கள். ஆனால், பல பேர் உயர்நீதி மன்றத்திற்கு, நீதி
ன்றத்திற்குப் போய், தடை வாங்கிவிடுகிறார்கள். ஆகவேதான்
திலே சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. இருந்தாலும்,
ிரைவிலே ஆவன செய்வதற்கு இந்த அரசு முன்னுக்கு
ருமென்று நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே,
ின்றைக்கு 9 மாதங்கள் நீட்டிக்கப்படுகின்ற இந்தச் சட்டத்தை
ிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த மாதிரி திருப்பித் தரப்படுகின்ற
பொருள்களை விற்றுவிட்டு லேவாதேவிக் கடைக்காரர்கள்
ங்காவது போய்விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறதே,
அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது
ன்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத்
துணைத்தலைவர் அவர்களே, அவர்களுக்கு லைசன்ஸ் கொடுக்க
ப்படுகின்றபோது, இவைகளையெல்லாம் நன்கு விசாரணை
செய்து, அவர்களுடைய அட்ரசைப் பார்த்து, அவர்கள்
சொத்துக்களைப் பார்த்து கொடுக்கப்படுகிறது. ஆனால்,
உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். சிலபேர் எங்காவது
ஓடிப் போய் விடுகிறார்கள். எங்காவது என்றால், வேறு
நாட்டுக்கல்ல. இந்திய நாட்டிற்குள் தான். இப்படி அவர்கள்
ஊரை விட்டு ஊர் போகின்றபோது, அவர்களைப் பிடித்து
விடலாம். ஆனால், இந்திய மக்கள் என்றால் அவர்களுக்கு
ஒரேவிதமான உரிமையிருக்கிறது. யார் வேண்டுமானாலும்,
இந்திய எல்லைக்குள் அதாவது காஷ்மீரத்திலிருந்து
கன்னியாகுமரி வரையிலும், மேற்கு வங்காளத்திலிருந்து குஜராத்
வரைக்கும் எந்த மாநிலத்திலும், எந்தத் தொழிலையும்
செய்யலாம். அப்படி வரும்போது இந்த இந்தியக் குடியுரிமை
அடிப்படையிலே சில வியாபாரிகள் வேறு மாநிலத்திற்குப் போய்
விடுகிறார்கள். அது உண்மைதான். இதைப்பற்றியெல்லாம், யார்
யார் எங்கே போகிறார்கள் என்பதையும் இந்த அரசு கவனிக்
கிறது. உங்களுக்குத் தெரியுமானால், தகவல் கொடுங்கள்.
அவர்களைக் கண்டுபிடித்து, அவ்வாறு வெளி மாநிலத்திற்கு ஓடிச்
சென்றால், அந்த மாநிலத்தோடு தொடர்புகொண்டு, அவர்களைக்
கைதுசெய்து கொண்டு வருவதற்கும் இந்த அரசு தயங்காது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தில் இடைக்காலத்
தடை கோர்ட் வெகேஷனிலே இருக்கும்போது, ஆர்.டி.ஓ. பர்மிஷன்

வாங்கிக்கொண்டு, ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள் களை 200, 300-க்கு ஏலம் விடப்பட்டதாக சொல்லப்படுகிறது; இப்படியெல்லாம் நடந்திருக்கிறது. ஆனால் ஏலம் விட்டது சரியல்ல. அந்தப் பொருள்கள் திருப்பித்தரப்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள்கூட கூட்டங்களிலே பேசியிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக இப்போதும்கூட ஏலம் விடப்படுகிறதாகச் சொல்லப்படுகிறதே, அவைகளையெல்லாம் திரும்பிப் பெற என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் யோசனை வைத்திருக்கிறார்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முறையற்ற முறையில் அனுமதி வழங்குவதற்கு கோட்டாட்சித் தலைவரால் முடியாது. அப்படி அனுமதி வழங்கியிருந்தால் அவர்கள்மீது அவர்கள் யாராக இருந் தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பிட்ட எந்தெந்த இடங்களில், சமுதாயத்திற்கு நன்மை செய்ய வேண்டுமென்றால், ஒருவரால் மட்டும் செய்ய முடியாது. இங்கே இருக்கிற உங்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன். பேசியவர்கள், பேசாதவர்கள், பேசியதை கேட்டுக்கொண்டிருந்தவர்கள், இங்கே இல்லாமல் வெளியே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களையும், எங்கேயாவது இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்குமானால் அவைகளை எழுத்து மூலமாக கொடுத்தால் நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை இந்த அவையின் முன்னால் உறுதி கூறுகிறேன்.

**திரு. கே. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, தாசில்தார்கள் சான்றிதழ் வழங்குவதற்கு, அந்த தொகுதி யிலிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் உதவியாக இருப்பார்கள் என்று ஆலோசனை கூறினேன். அரசு அதற்கு உதவியாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இங்கே நான் பேச வந்த பிறகு அப்படிப்பட்ட எண்ணங்களை நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். அந்த குழுக்களை போட்டபிறகு தான் நன்மை ஏற்படுமென்ற நிலைமை ஏற்பட்டால் அதை செய்வதற்கும் இந்த அரசு தயங்காது, வேண்டிய நடவடிக்கையை எடுப்பதற்காக யோசித்து,—நாம் நீட்டித்திருக்கிறோம், முடியாவிட்டால் அதுமாதிரி செய்வதற்கு இந்த அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. எம். தங்கமணி:** மாண்புமிகு தலைவரவர்களே, திண்டிவனம் தாலுகாவில், மரக்காணம் பேரூராட்சியில் சுக்கராஜ் என்ற வடமாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் அடகு கடை வைத்து பல லட்ச ரூபாய்கள் பெறுமானமுள்ள மோசடி செய்து, இன்றைய தினம் ஊரைவிட்டே போயிருக்கிறார். முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், சம்பந்தப்பட்ட துறைக்கும் கொண்டு வரப்



பட்டிருக்கிறது. இது வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே இனிமேலாவது புகார் மேல் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்து, குற்றவாளியை கண்டு பிடித்து, இழந்துவிட்ட பொருள்களை அந்த மக்களுக்கு மீட்டு அரசு தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என்றால், நடவடிக்கை பரிசீலனையில் இருக்கும் என்று தான் கருதுகிறேனே தவிர கொடுக்கப்பட்ட மனுக்கள் பரிசீலிக்காமலே தள்ளிவிடப்படுகிறது என்று சொல்வதற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் அதை விரைவுப் படுத்துவதாக உறுதி அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன் னுள்ள கேள்வி. ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் பேரவை முன்னுள்ள கேள்வி. பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரியப் பகுதி யாக்கப் பெறவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

In clause 2, —— (1) in sub-clause (i),—

(a) in item (a), for the word ''June'' substitute the word ''September;''

(b) in item (b), for the word ''July'', substitute the word ''October;''

(2) in sub-clause (ii), for the word ''July'', substitute the word ''October''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது. பிரிவு 2 திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ''பிரிவு 3 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In clause 3,——

(1) In sub-clause (i)'

a in item a ,)ror the word "June", substitute the word "September;

b in item b for the word "July" substitute the word October

(2) In sub-clause (ii) ,for the "July" substitute two word "October"

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம். தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1981) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 12–5–1981 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.29 மணிக்கு ஒத்திவைக்க பெற்றது.



9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

277. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது அறிக்கையும், மற்றும் அதன்மீதான அரசின் ஆய்வுரையும் (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்1/1956) 561-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

206. ஆதரவற்றவர்கள், சோம்பித்திரிபவர்கள் ஆகியோரது பிரச்னைகள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழு அளிக்கும் இரண்டாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை), 1980-81 (தமிழ்).

207. சிறப்பங்காடிகள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழு அளிக்கும் மூன்றாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை), 1980-81 (தமிழ்).

315 530 இக்கு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1981 மே, 13

சித்திரை 31: துன்மதி—திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்

பொன்றாது நிற்பதுஒன்று இல்

உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பொருளாக அழியாமல் நிலை நிற்க வல்லது வேறு ஒன்றும் இல்லை.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

1980 ஆம் ஆண்டுக்கான தமிழ்ப் பாட புத்தகங்களிலிருந்து நீக்கப் பெற்ற பாடங்கள்

*வினா எண். 1051 திரு ப. நெடுமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) நடப்பு ஆண்டில் 7 ஆம் வகுப்புத் தமிழ் பாடப் புத்தகத்தில் திலகர், வ.உ.சி. பற்றிய பாடங்களையும், 8 ஆம் வகுப்பு தமிழ்ப் பாடத்தில் பகத்சிங் பற்றிய பாடமும் நீக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில் அதற்குக் காரணம் என்ன

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ மற்றும் ஆ) பாடத் திட்டக்குழு வல்லுநர்கள் பரிந்துரைகளின் அடிப்படையில், 1978-79 முதல் பல்வேறு பாடங்களில், பாடநூற் பளுவைக் குறைக்க அதாவது வகுப்பில் கற்றுத்தர வேண்டாம் என்றும், தேர்வுக்கு கிடையாது என்றும், ஆணையிட்டபொழுது கேள்வியிற் குறித்துள்ளது போன்று எட்டாம் வகுப்புப் பாடத்தில் பகத்சிங் பாடம் மற்றும் ஒரிரு பாடங்கள் கற்றுத்தர வேண்டாத பாடங்களில் சேர்க்கப்பட்டன. ஏழாம் வகுப்புப் பாடப் புத்தகத்தில் திலகர், வ.உ.சி. பற்றிய பாடங்கள் இல்லை.

திரு ப. நெடுமாறன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சாதாரணமாக வேலைப் பளுவின் காரணமாக இது மாதிரி செய்யப்பட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

சொன்னார்கள். ஆனால் திலகர், வ. உ. சி. பகத்சிங் போன் இந்த தேசம் சுதந்திரம் பெறுவதற்காக சர்வபுரித்தியாகம் செ தவர்களுடைய வரலாறுகளை மாணவர்களுக்குக் கற்றுத் தர வேண்டாம் என்று நீக்கிவிட்டதாகச் சொன்னது சரியல்ல அதைப்போன்று தியாகம் செய்தவர்களின் வரலாறுகளை மாணவ கள் அறிந்தால் தான் அவர்கள் இந்த நாட்டின் மீது பற்றுள்ளவ களாக இருக்க முடியும். ஆகவே, அதுபோன்ற தலைவர்களைப் பற்றிய பாடங்களை நீக்காமல் இருக்கவும், நீக்கப்பட்ட பாடங் களை மீண்டும் சேர்க்கவும் இந்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, மாணவர்களுக்குத் தேசபக்தி, தியாக உணர்வு இருக்க வேண்டும் என்பதில் இங்கே யாருக்கும் கருத்து வேறுபாடு கி டயாது. நாம் அந்தப் பாடப் புத்தகங்களில் உள்ள பாடங்களை நீக்குகிற போது, அதே போன்ற கருத்துக்கள் அல்லது வரலாற்றுச் செய்தி கள் வேறு வகுப்புகளில் அல்லது வேறு பாடங்களில் மாணவர் கள் தெரிந்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்குமானால், அந்த அடிப்படையிலே அந்தப் பாடங்களைநாம் எடுத்து விடுகிறோம். வேறு பாடங்களில் அந்த தேசபக்தி, தியாக உணர்வு போன்ற வைகளைச் சொல்லிக்கொண்டு இருக்கின்றபோது, எல்லாப் பாடங்களிலும் இது போன்ற பாடங்களை மட்டுமே சொல்லிக் கொடுக்க வேண்டும் என்கிற நிலை இருந்தால் மாண வர்கள் பல்வேறு செய்திகளைத் தெரிந்து கொள்ள முடியாமல் போகும்.

**திரு ப. நெடுமாறன் ;** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுதந்திரப் போராடடத்தில் ஈடுபட்டு மிகப்பெரிய தியாகங்களைச் செய்த வ.உ.சி. சுப்பிரமணிய பாரதி, சுப்பிர மணிய சிவா, திருப்பூர் குமரன், பெரும் தலைவர் காமராஜ் போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்கள் அறிந்து கொள்கிற வகையில் பாடத் திட்டத்தில் சேர்க்க இந்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ அரங்கநாயகம் ;** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் மற்றும் ஆங்கிலப் பாட நூல்களில் நான்–டீடெயில்டு பாட நூல்களிலும் வரலாற்றுப் பாட நூல்களிலும் காந்திஜி, நேரு, படேல் போன்றவர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றைப் பற்றி நல்ல முறையிலே நம்முடைய பாடப்திட்டத் திலே சேர்க்கப்பட்டுள்ளன. இப்படி நிறைய தலைவர்களின் வரலாற்றை நாம் சேர்த்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பி னர் அவர்கள் எல்லாத் தலைவர்களின் வரலாற்றையும் சேர்க்க வேண்டும் என்பதைப்போன்று இந்தக் கேள்வியைக் கேட்டு இருக் கிறார்கள். இப்போது இப்படிப்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகள் ஆங்கிலப் பாடங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தமிழ்ப்பாடங் களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வரலாற்றுப் பாடங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நான்–டீடெயில்ட் பாடங்களில் சேர்க்கப்பட வாய்ப்பு இருக்கிறது, இப்படி திருப்பித் திருப்பி ஒருவரைப் பற்றியே சொல்லித் தருகிற ஒரு தவறு நம்முடைய பாடத் திட்டங்களிலே இருக்கிறது என்பதை நான்



சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், உதாரணமாக அக்பர், அசோகர் போன்றவர்களைப் பற்றி மாணவர்கள் தமிழ்ப்பாட நூல்களிலும் வரலாற்றுப் பாடநூல்களிலும் சொல்லித் தரும் நிலை இருக்கிறது. துணைப்பாடங்களிலும் இதைச் சொல்லித் தருகிறோம். 6-வது வகுப்பிலே சொல்லித் தருகிறோம். 10-வது வகுப்பிலும் சொல்லித் தருகிறோம். இதுபோன்று ஒன்றைப் பற்றியே பல இடங்களில் நாம் சொல்லித் தரும் தவறுகள் இருக் கின்றன என்பதை நாம் ஒப்புக்கொண்டு. இதுபோன்ற தவறுகள் மேலும் நிகழாமல் இருப்பதற்குப் பாடநூல் தயாரிக்கின்றவர்கள் தனிக்கவனம் செலுத்தவேண்டும் என்று தெரிவித்துக் கொள் கிறேன். நம்முடைய நோக்கம் மாணவர்களுக்கு தியாக உணர்வும், தேசப்பற்றும் இருக்க வேண்டும். அதற்கு எந்தந்தத் தலை வரைப் பற்றி மாணவர்கள் தெரிந்துக் கொள்ளவேண்டுமோ அப்படிப்பட்ட பாடங்களைச் சொல்லித் தரும் வகையில் கவனம் செலுத்த வேண்டும் என்று அந்தப் பாடத்திட்டக் குழு வைக் கேட்டுக்கொள்ளலாம்.

**திரு வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** தலைவரவர்களே, இந்தப் பாடங்களைச் சேர்ப்பதுபற்றி கேட்டார்கள். தற்போது பாடப் புத்தகத்திலே இல்லாத விவரமும் இருக்கிறது. உதாரண மாக விற்கப்பட்ட சமயநல்லூர் அனல் மின் நிலையம் இயங்கி வருவதாக 4–வது வகுப்பு பாடப் புத்தகத்தில் இருக்கிறது. அது தவறான தகவல். இப்படி தவறான தகவல் தருகின்ற பாடங் களை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேசியத் தலைவர்கள் பற்றி யது கேள்வி, சமயநல்லூர் அனல் மின் நிலையத்திற்கும் இதற் கும் சம்பந்தம் இல்லை.

**திரு எல். இளையபெருமாள்:** மாண்புமிகு சபாநாயகர் அவர் களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது வேலைப்பளு காரணமாக அந்தப் பாடங்கள் நீக்கப்பட்டன என்று சொல்லி யிருந்தால் சரி. ஆனால் சேர்க்கப்பட்டபோது நல்ல எண்ணத் தோடுதானே சேர்க்கப்பட்டிருக்கும். பிறகு வேலைப்பளு என்று சொல்லி எப்படி எடுக்கப்பட்டன. காழ்ப்பு உணர்ச்சியின் காரணமாக யாராவது சொல்லி எடுக்கப்பட்டதா அல்லது வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா.

**மாண்புமிகு திரு செ: அரங்கநாயகம:** தலைவரவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வியிலே பகத்சிங்' திலகர், வ. உ. சி. என்று மட்டும் கேட்டு அதற்குப் பதில் சொல்லிக்கொண்டிருப் பதால் இந்தப் பதிலைக் கொடுக்கின்றபோது ஏதோ அவர்களைப் பற்றி மட்டும் ஒரு காழ்ப்பு உணர்ச்சி வந்து, பாடப்புத்தகத்தி லிருந்து நீக்கப்பட்டது என்பது சரியல்ல. பாடங்கள் பளுவாக இருக்கின்றன; ஆகவே சில பாடங்களை நீககவேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். அந்த வகையில் நீக்கப்பட்டிருக்கிற அதே நேரத்தில் அதே பொருளைப்பற்றி வேறு வகுப்புகளில், வேறு பாடங்களில் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் நீக்கலாம் என்ற இந்த இரண்டு அடிப்படையிலே

நீக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே எடுத்துக் கொண்டால் இப்போது இரண்டாவது வகுப்பில் நீக்கப் பட்ட பாடங்கள் 'உழைத்தால் உணவு' 'மணல் வீடு', 'வெண் ணி லாப் பாட்டு' , 'நல்ல தங்கை' , 'ஞாயிற்றுக்கிழமை' இப்படி இருக்கின்றன. இந்தப் பாடங்களை நீக்குவதற்குக் காரணம், தமிழ்பாடப்புத்தகத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தால் அதே பொருள் பற்றி ஆங்கிலத்தில் தெரிந்து கொள்ள, வரலாற்றில் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்ற அடிப்படையில் நீக்கியிருக் கிறோம். ஆகவே, காழ்ப்பு உணர்ச்சி காரணமாக நீக்கப்பட வில்லை. இப்படி எந்த எந்த பாடங்கள், எந்தெந்த வகுப்பு களில் நீக்கப்பட்டிருக்கின்றன என்ற பட்டியலைப் படித்தால் நீண்டுகொண்டே போகும்.

திரு என். வரதராஜன் தலைவரவர்களே, பொதுவாக கணக்கு சைன்ஸ், வேறு சில பாடங்கள் உயர்ந்த அளவுக்கு நம்முடைய நாட்டு வரலாற்றுப் பாடங்கள் உயரவில்லை என்ற பலகீனம் நீண்டகாலமாக இருந்துகொண்டிருக்கிறது. அப்படி இருக்கும் போது ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் முன்னேறிக்கொண்டே போகிற மாணவனின் அறிவுக்குத் தகுந்தாற்போல் வரலாற்றுப் பாடங்களை வைக்க அரசுக்கு என்ன சங்கடம் இருக்கிறது. தகுந்த முறையில் வரலாற்றுப் பாடங்களை வைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மாண வர்களின் தியாக உணர்வைத் தடுக்கின்ற வகையில் பாடங்கள் அமைந்திருக்கின்றன என்று சொல்லியிருந்தால் இந்தக் கேள்வி சரியாக இருக்கும். தியாக உணர்வை மாணவர்களுக்கு ஊட்ட வேண்டும், அந்த வகையில் பாடங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பதிலே இந்த அரசுக்குக் கருத்துவேற்றுமை இல்லை. இன்னும் சொல்லப் போனால் அழுத்தம் திருத்தமாக இந்த உணர்வில் இருக்கிறோம். அதற்கான பாடங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதேபாடங்களைத் தான் படிக்க வேண்டும், வேறு செய்தி களை சொல்லித்தரக்கூடாது என்ற நிலைமைக்குப் போகாமல், வேறு செய்திகளையும் தெரிந்துகொள்ளுகின்ற வகையில் அந்தப் பளுவைக் குறைக்கும்போது ஒரு வகுப்பில் இதைப்போன்ற பாடங் களை நீக்கவேண்டியிருக்கிறது. காந்தி, நேரு, பட்டேல், பிற விடுதலை வீரர்கள், வ.உ.சி. போன்றவர்களைப் பற்றிய பாடங் களை நாம் பல்வேறு வகுப்புகளில், பல்வேறு பாடங்களில் வைந்திருக்கிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, நம் முடைய நாடு சுதந்திரத்திற்கு முன்பு எப்படி இருந்தது. சுதந் திரத்திற்கு பின்பு நடந்த நிலை என்ன சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டு தங்களைத் தாங்களே அழித்துக் கொண்ட தியாகிகளின் வரலாறுகளை, 'நான் டீச்டெயில்' ஆக 8, 9-வது வகுப்புகளில் சேர்த்து, எல்லா மாணவர்களும் அதைத் தெரிந்துகொள்ளும் வகையில் செய்ய அமைச்சரவர்கள் முன்வருவார்களா



[முற்பகல் 9. 10]

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்குச் சொல்லித் தரவேண்டும் என்ற அந்த நிலைமையை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள் கிறேன். ஆனால், இன்றைக்கு விடுதலை வாங்குவதற்காக நம்முடைய நாட்டிலே நடைபெற்ற போராட்டத்தின் தன்மையை உணர்ந்துகொள்ளாத நிலை மாணவர்கள் மத்தியிலே மட்டுமல்ல, எல்லோர் மத்தியிலேயும் இருக்கின்றது. அதனால்தான் பல்வேறு கஷ்டங்களை நாம் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, விடுதலைப் போராட்டத்தை நடத்தியதினுடைய தன்மையைப் பற்றியும், அதற்காகப் பலர் எடுத்துக் கொண்ட சிரமங்கள் பற்றியும் மாணவர்கள் மட்டுமல்ல, சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை உணரவேண்டும். ஆகவே அந்தக் குறையினை நிச்சயமாகக் கல்வித்துறை வைக்காது. எந்தெந்த இடங்களில் அந்த உணர்வுகளைப் புகுத்த முடியுமோ அந்தந்த இடங்களில் அந்த உணர்வுகளைப் புகுத்துவோம். போராட்டத்தின் தன்மை களை உணர்ந்து கொள்ளாத நிலைமை இருக்கின்றது என்பதை அரசு நன்றாக உணர்ந்திருக்கின்றது.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, பொது வாழ்க்கையில் தேசிய சுதந்திரத்திற்காகத் தூய்மையாக உழைத்த தந்தை பெரியார், அமரர் அண்ணா, அமரர் காமராஜர் போன்ற பெருந்தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள் துணைப் பாட நூல்களாக உயர்நிலைப் பள்ளியில் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அவர்களைப் பற்றியும் மாணவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்றுதான் அதற்கான வாய்ப்புகளைக் கூடுமானவரையில் செய்து வருகிறார்கள்.

ஒட்டப்பிடாரம் தாலுகா குறுக்கு சாலையிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்

*வினா எண். 1052- திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தாலுகா குறுக்குச் சாலையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் உடனடியாக செப்பனிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) மற்றும் (ஆ) : இப்பள்ளியில் 4 வகுப்பறைகள் கொண்ட ஒரு ஓட்டுக்கட்டடம் மட்டும் பழுதடைந்துள்ளது. இக்கட்டிடத்தைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1981 மே 13

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக் கட்டிடம் இடிந்து விழும் தறுவாயில் இருக்கின்றது என்று அரசுக்குத் தெரிவித்து 10 மாதங்கள் ஆகிவிட்டன. இன்றுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. வருகின்ற ஜூன் மாதத்திலே பள்ளிக்கூடம் ஆரம்பித்துவிடும். ஆகவே, உடனடியாக மாற்று இடவசதியைச் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று நான் பதில் சொல்லி இருக்கிறேன். நடவடிக்கை எடுத்து பள்ளி நடக்கின்ற அளவுக்குக் கல்வித்துறை பார்த்துக்கொள்ளும்.

கோவை மாவட்டத்திலுள்ள முதியோர் கல்வி நிலையங்கள்

*வினா எண். 1053- திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் முதியோர் கல்வி நிலையம் எத்தனை உள்ளது?

(ஆ) எவ்வளவு பேர் கல்வி கற்று வருகிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) 647 மையங்கள்

(ஆ) 18,564 பேர்

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இந்த முதியோர் கல்வித் திட்டத்திற்காக மத்திய அரசு கொடுத்து வந்த உதவி தற்போது நிறுத்தி விடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றதே, அது உண்மையா? அப்படியானால் அதை மீண்டும் பெற அரசு என்ன முயற்சி எடுத்து வருகின்றது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் செய்து வந்த உதவியைப் பற்றி புதிய அரசு ஏற்பட்டதற்குப் பிறகு அவர்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். மறுபடியும் தருவதாக அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி அவர்கள் முடிவு எடுத்து அந்தப் பணத்தைத் தருவதற்கான வாய்ப்புக்கள் கூடிய விரைவிலே ஏற்படும்.

திரு. ஏ. டி. கருப்பையா : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே முதியோர் கல்வி நிலையங்கள் எத்தனை உள்ளன அங்கே எத்தனை முதியோர்கள் கல்வி கற்று வருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 647 மையங்கள். அதிலே படிப்பவர்கள் 18,564 பேர்.



1981 மே 13]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, 600-க்கு மேற்பட்ட மையங்களிலே முதியோர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஊராட்சி நிறுவனங்கள், பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சிகள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்கள் அப்படிப்பட்ட மையங்களை நடத்தி வருகிறார்களா? அல்லது சமுதாய சேவை செய்யக்கூடிய ஸ்தாபனங்கள் மட்டும் அதை நடத்தி வருகிறார்களா? சமுதாய சேவை செய்யக் கூடியவர்கள் அப்படி நடத்துவதற்கு முன்வந்தால் அவர்களுக்குத் தகுந்த உதவி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாடு முழுவதும் 61 ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 100 மையங்கள் வீதம் 6100 மையங்கள் சென்ற ஆண்டு நடைபெற்று இருக்கின்றன. தனிப்பட்ட தொண்டு நிறுவனங்கள் நடத்துகின்ற பள்ளிகளைப் பொறுத்தவரையில் முதியோர்கள் அந்தப் பள்ளிகளுக்கு வந்து படிக்கின்ற அளவுக்கு நடத்துவது அல்லது முதியோர்கள் இருக்கின்ற இடங்களுக்கே சென்று சொல்லித் தருவது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் அரசின் சார்பிலே நடத்துவதைப் பொறுத்த வரையிலே பெருமளவுக்குத் தோல்வி ஏற்பட்டு வருகின்றது என்பதை நாம் அனுபவத்திலே பார்க்கிறோம் தொண்டுள்ளமும் சேவை மனப்பான்மையும் உள்ளவர்கள் அதிலே பங்கெடுத்துக்கொண்டு செய்வார்களேயானால் அது ஓரளவுக்கு வெற்றி அடையும் என்பதை நாம் அனுபவத்திலே பார்த்து வருகிறோம். ஆகவேதான் தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு முக்கியத்துவத்தை இந்தத் திட்டத்திலே தருகிறோம். அப்படித் தருகின்றபோது தவறான காரியங்களுக்கு இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி விடக்கூடாது என்பதற்காக நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறோம்.

தோல் ஏற்றுமதி கழகம்

*வினா எண். 1061- திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோல் ஏற்றுமதி சென்டர் கான்பூருக்கு மாற்றப்பட்டது உண்மையா?

(ஆ) சென்னையிலிருந்து ஏற்றுமதி செய்யும் சென்டரை உருவாக்க தமிழ்நாடு அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:—

(அ) மற்றும் (ஆ) 1956ம் ஆண்டில் சென்னையில் முதல் முதலாக தோல் ஏற்றுமதி முன்னேற்றக் கழகம் நிறுவப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது. பிறகு 1962-63-ல் தோல் மற்றும் தோல் பொருள்கள் ஏற்றுமதி முன்னேற்றக்கழகம் கான்பூரில் நிறுவப்பட்டது. இந்த இரண்டுக்கழகங்களின் பணிகள் வெவ்வேறு. இது தவிர, தோல் தொழில் முன்னேற்றப் பணிகளை முன்பு ஆக்ராவிலும், தற்போது டில்லியிலும் உள்ள பாரத் லெதர் கார்ப்பரேஷன் கவனித்து வருகிறது.

[1981 மே 13

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவ
அவர்களே, இந்த பாரத் லெதர் கார்ப்பொரேஷனுக்கு
ஏற்றுமதிக்காக வருகிற பொருட்களில், நம்முடைய மாநிலத்தில்
ருந்துதான் அதிக அளவு தோல் உற்பத்தியாகிற காரணத்தால்
அதிக அளவு தோல் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. ஆகவே
அத்தகைய நிறுவனத்தைத் தமிழகத்திலே நிறுவும் வகையில் அரசு
ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அனைத்து இந்திய ஏற்றுமதியில், நம்முடைய
சென்னை மாநிலத்திலிருந்துதான் 82 சதவீதம் தோல் மற்றும்
தோல் சார்ந்த பொருள்கள் வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதி
யாகின்றன. எனவே, இங்கே சென்னையிலே இருக்கிற அந்த
அலுவலகத்தை, முழு அளவிலான தோல்கள், அதாவது பினிஷ்ட்
லெதர், செமிபினிஷ்ட் லெதர் அதேபோல தோல் பொருள்கள்,
தோல்கள்ஆகியவைகளை ஏற்றுமதி செய்வதற்கான முழு அளவி
லானகார்ப்பொரேஷனாக மாற்ற வேண்டும் என்று மத்திய
அரசை தொடர்ந்து தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது.
மத்திய அரசு அதைப் பற்றித் தன்னுடைய இறுதி முடிவை
அறிவிக்கவில்லை.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தியாவிலே தமிழகத்தில்தான் அதிகமான அள
தோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதுவும் வட ஆற்கா
மாவட்டத்தில் இருந்துதான் அதிகமான அளவில் தோல் ஏற்றுமதி
செய்யப்படுகிறது. ஆகவே, அதைக் கருத்தில் கொண்டு
வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய பகுதிகளில் ஏற்றுமதி சென்டர்கள்
அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஏற்றுமதி சென்டர் ஏற்கெனவே
சென்னையிலே இருக்கிறது. ஆனால் இப்பொழுது தமிழக
அரசின் சார்பிலே புதிதாக தமிழ்நாடு லெதர் டெவலப்மெண்ட்
கார்ப்பொரேஷன் என்று தனியாக ஒரு நிறுவனத்தை நிறுவ
வேண்டும் என்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. அதற்குத்
தான் மத்திய அரசையும் அனுமதி கேட்டிருக்கிறது. அந்த
நிறுவனத்தின் மூலமாகத் தமிழகத்தில் தோல், தோல்சார்ந்த
பொருள்களுடைய தொழிற்சாலைகள் நிறுவி, அதிகமாக
உற்பத்திசெய்து, அதன் மூலம் ஏற்றுமதியையும் பெருக்க
வேண்டும்; அந்த வகையில் அதை விரிவு படுத்தவேண்டும் என்பது
அரசின் குறிக்கோள். அந்த வகையில் தமிழ்நாடு லெதர் டெவலப்
மெண்ட் கார்ப்பொரேஷன் முனையும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த பாரத் 'லெதர் கார்ப்பொரேஷன்
வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தோல்களில் வரும்
வருமானத்தில்ஒரு சதவீத பணத்தை கழிவு நீர் சுத்தப்படுத்துதல்



1981 மே 13]

போன்ற பணிகளுக்காக நிறுத்தி வைக்கிறார்கள். இந்தியாவில்
ஏற்றுமதியாகும் தோல் பொருள்களில் 3/4 சதவீதம் தமிழகத்தில்
இருந்துதான் ஏற்றுமதியாவதால், அப்படிப் பிடிக்கப்படும் 1சதவீத
தொகையில் 3/4 பாகம் தமிழகத்திற்குத்தான் செலவிட வேண்டும்
என்று வற்புறுத்த தமிழக அரசு முன் வருமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழகத்திற்கு உரிய பங்கைப் பெறுவதற்குத் தமிழக
அரசு எல்லா வகைகளிலும் முயற்சித்துக்கொண்டுதான இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஃபுல்லி பினிஷ்ட் தோல்கள்தான் ஏற்றுமதி செய்ய
வேண்டும்; மற்றவைகளைச் செய்யக் கூடாது என்று மத்திய அரசு
ஏதாவது தடைவிதித்திருக்கிறதா? அந்த மாதிரி தடை இருப்பது
உண்மையானால், அதன் காரணமாகத் தமிழகத்தில் உள்ள சிறு
சிறு தோல் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான
தொழிலாளர்கள் வேலை இழந்திருப்பதும் உண்மையா? அதை
மாற்ற தமிழக அரசு, சிறு தோல் பதனிடும் தொழிற்சாலைகளைப்
பாதுகாக்கக் கூடிய முறையில் செமி பினிஷ்ட் தோல்களையும்
ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று மத்திய அரசை
வற்புறுத்துமா என்று அறியவிரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பினிஷ்ட் லெதர்தான்
அனுப்பவேண்டுமென்று மத்திய அரசு தடை விதித்துத்தான்
இருக்கிறது. ஏற்கனவே போன கேள்விக்குப் பதில் சொன்னேன்.
அதை மாற்றி முழு அளவிலான ஏற்றுமதிக்கு மத்திய அரசு
இணங்கவேண்டும் என்று மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி
வருகிறது, தொடர்ந்து வலியுறுத்தும்.

## அரசு உதவி பெறும் தனியார் பஞ்சாலைகளில் வேலைக்கு ஆள் எடுத்தல்

*வினா எண். 1062- திரு. என். பழனிவேல் : மாண்புமிகு
தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

அரசு உதவி பெற்று இயங்கும் தனியார் பஞ்சாலை மற்றும்
நூல்மில்களில் வேலைக்கு ஆள் எடுக்கும் முறை வேலைவாய்ப்பு
அலுவலகத்தின் மூலம் நடைபெறுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனியார் பஞ்சாலை
களில் வேலை வாய்ப்பு நிறுவனம் மூலமே ஆட்களை வேலைக்கு
எடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை.

திரு. என். பழனிவேல் : தனியார்துறையில் இயங்கக்கூடிய
பஞ்சாலைகள் மற்றும் ரைஸ்மில்களில் வேலைவாய்ப்பு அலுவல
கத்தின் மூலம்தான் வேலைக்கு ஆள்களை எடுக்கவேண்டும் என்ற
நிர்ப்பந்தம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

அரசாங்க உதவி பெற்று இயங்கக்கூடிய இம்மாதிரி நிறுவனங்களில் அவரவர்கள் இஷ்டப்படி தங்களுக்கு வேண்டியவர்களை, அவர்கள் சமூகத்தாரைப் பார்த்து வேலைக்கு எடுத்துக்கொள்கிறார்கள். இதைப் போக்குவதற்கு அரசாங்கம் இனியாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தேசிய பஞ்சாலைக் கழகத்திடமிருந்தும் அதேபோல் மத்திய நிதி அளிக்கிற நிறுவனங்களிடம் இருந்தும் பஞ்சாலைகள் தொடங்குகிறபோது நிதி பெற்றுக்கொள்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், தனியாக தொழில் துவங்கும்போது இதுபோல் நெருக்கமான கட்டுப்பாடுகள் வைத்தால் வேலைக்கு ஆட்களை எடுப்பதில் காலதாமதம் போன்ற பல நிகழ்ச்சிகளால் தொழில் வளர்ச்சி பாதிக்கபடும் என்ற அடிப்படையில் தொடர்ந்து பல ஆண்டுகளாக இப்படியே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் பொதுத் துறையைச் சார்ந்த நிறுவனங்கள், பப்ளிக் செக்டார், ஜாயின்ட் செக்டார் அல்லது அரசு நடத்துகிற நிறுவனங்கள், டிட்கோ போன்று தனியாரோடு சேர்ந்து நடத்துகிற மற்றத் தொழில்களில் இந்த வரைமுறையைக் கடைப்பிடித்து அதன் மூலம் வேலைக்கு ஆட்களை எடுக்கிற அந்த முறை நடைமுறையில் இருக்கிறது.

திரு. கோவைத்தம்பி : மாநில அரசிடம் மானியம் பெறுகிறார்கள். மாநில அரசிடம் பெரும்தொகையை கடனாகப் பெறுகிறார்கள். ஆனால் பணியில் சேர்க்கும்போது தன் ஜாதிக்காரர்களைமட்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்கிறார்கள். இந்த நிலை தமிழ்நாட்டில் பல நூற்பாலைகளில் இருக்கின்றன, இந்த நிலையை மாற்றி இனி ரிட்டயராகும்போது அவர்களுக்குப் பதிலாகப் புதிதாக வேலைவாய்ப்பு அளிக்கும்போது தாழ்த்தப் பட்டவர்களுக்கு 1 சதவீதமாவது வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடிய வகையில் இப்போதுள்ள நிலையை மாற்றியமைக்க அரசு முன்வருமா? அப்படி முன்வராத ஆலைகளை அரசாங்கமே மேற்கொண்டு நடத்துவதற்கு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பொதுவாக பஞ்சாலைகளாக இருந்தாலும் சரி, வேறு எந்தத் தொழிலாக இருந்தாலும் சரி தொழிலை ஆரம்பிக்கும்போது அது எந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்படுகிறதோ அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதைக் கடைபிடிக்கவேண்டுமென்று தொழில் துவங்குபவர்களை நாம் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. என். பழனிவேல் : அரசு உதவி பெற்று இயங்கும் நிறுவனங்களை நாம் இப்படித்தான் ஆள்களை வேலைக்கு எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் தொழில்கள் ஆரம்பிக்க முன் வரமாட்டார்கள் என்ற அச்சத்தின் காரணமாக அரசாங்கம் பயந்துகொண்டு இதைச் செய்யாமல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிகிறது. இம்மாதிரி தனி நபர்களுக்கு அரசு பயந்துகொண்டு இருந்தால் இலட்சக்கணக்கான தாழ்த்தப்



பட்ட மக்களுக்கு வேலை கிடைக்க சந்தர்ப்பம் கிடைக்காது போய்விடும். ஆகவே அவர்களுக்கு வேலைக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனியார் தொழில்கள் துவங்கும்போது இதுபோல நெருக்கமான கட்டுப்பாடுகள் வைத்தால் காலதாமதம் ஏற்படும் என்றுதான் நான் சொன்னேன். அது இப்போது அல்ல, இந்த அரசாங்கம் மட்டுல்ல, இதற்குமுன் ருந்த அரசாங்கமும் அதற்குமுன் இருந்த அரசாங்கமும் இந்த றையைத்தான் பின்பற்றி வந்திருக்கின்றன. அதைத்தான் இந்த சும் பின்பற்றுகிறது.

சென்னை நகரில் நடைபெற்ற கொலை, களவு நிகழ்ச்சிகள்.

* வினா எண். 1079 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

1979-1980-ஆம் ஆண்டில் நகரில் நடைபெற்ற கொலை, ளவு நிகழ்ச்சிகளில் துப்பு துலக்கப்படாமல் இருக்கும் வழக்குகள் த்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

1. 1979–80 ஆம் ஆண்டில் சென்னை நகரில் நடந்த கொலைகள் — 39

   அவற்றுள் துப்புத் துலக்கப்படாமல் இருக்கும் வழக்குகள் — 1

2. 1979–80 ஆம் ஆண்டில் சென்னை நகரில் நடந்த கூட்டுக்கொள்ளைகள். — 7

   இந்த 7 வழக்குகளும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன.

3. 1979–80 ஆம் ஆண்டில் சென்னை நகரில் பதிவுசெய்யப்பட்ட கொள்ளை வழக்குகள் — 64

   துப்புத் துலக்கப்படாமல் இருக்கும் வழக்குகள். — 4

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே நடைபெற்ற கொலை, கொள்ளை ஆகிய வைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். துப்பு துலக்காமல் இருக்கின்ற கணக்கைப பற்றிச் சொன்னார்கள். இருக்கின்றது எந்தெந்த வழக்குகளில் துப்பு துலக்காமல் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்தபடி கொலை வழக்குகள் 39. அதிலே 38 கொலைகள் பற்றி துப்பு துலக்கப்பட்டு, ஒரே ஒரு வழக்கிலே மட்டும் துப்பு துலக்கப்படவில்லை.

சென்னை மாநகர் ஓட்டேரியில் வசிக்கும் அப்துல் காதர்
என்பவரின் மகனான சாகிமுல்லா (40 வயது) என்பவரை 9-5-79
அன்று அடையாளம் தெரியாத சிலர் தாக்கிவிட்டு தப்பி
விட்டனர். 11-5-79 அன்று சாகிமுல்லா மருத்துவமனையில்
இறந்துவிட்டார். கொலை செய்தவர்களைப் பற்றிய துப்பு
இன்றுவரை எதுவும் கிடைக்கவில்லை. குற்றவாளிகளைக் கண்டு
பிடிக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது.

கொள்ளை 64 வழக்குகள். 60 வழக்குகளில் துபபுதுலக்கப்
பட்டு விட்டது. ஆனால், 4 வழக்குகளில் துப்பு துலக்கப்பட
வில்லை.

1. அபிராமபுரம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட இராஜா
அண்ணாமலைபுரம், 3வது மெயின் ரோடு, 27ஆம் எண்ணுள்ள
வீட்டின் எதிரில் 9-10-79 அன்று ரூ. 10,000 மதிப்புள்ள 15
சவரன் தங்கச்சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டது. 30-12-79ந்
தேதி வழக்கு துப்புத்துலக்க முடியவில்லை என்று முடிக்கப்
பட்டுள்ளது.

2. திருவல்லிக்கேணி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட
அரசினர் தோட்டம், கோசன் பிளாக் 182 ஆம் எண்ணுள்ள
வீட்டில் 29-10-79 அன்று ரூபாய் 5,000 மதிப்புள்ள தங்க
நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. வாதிகளுடைய விசாரணை
களிலிருந்து இந்த வழக்கில் வாதி உண்மையைத் தவறுதலாக
பிராது செய்துவிட்டார் என்று கருதி 4-11-79 அன்று வழக்கு
கைவிடப்பட்டது.

3. தேனாம்பேட்டை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட
போயஸ ரோடு, 3/5ஆம் எண்ணுள்ள வீட்டில் 30-12-79
அன்று ரூபாய் 500 மதிப்புள்ள தங்க நகைகள் கொள்ளை
யடிக்கப்பட்டன. இவ்வழக்கு சம்பந்தமாக சென்னை—18
திரு.வி.க. குடியிருப்பு 206 எண் வீட்டைச் சேர்ந்த காமாட்சி
என்பவரின் மகன் வேல்முருகன் மற்றும் சென்னை ஏழு கிணறு
6, குமரப்ப முதலித் தெரு சுப்பிரமணி என்பவரின் மகன்
பொன்முடிபாலன் என்கிற ரமேஷ் என்பவர்களைக் கைது செய்து
இவ்வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்ததில் வாதி
உண்மையைத் தவறுதலாகப் பிராது செய்துவிட்டார் என்று
கருதி 30-2-80 அன்று வழக்கு முடிக்கப்பட்டது.

4. மைலாப்பூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட
சுந்தரேஸ்வரசாமி தெரு 11—ஆம் எண்ணுள்ள வீட்டில் 13-2-80
அன்று ரூபாய் 73,000 மதிப்புள்ள தங்கநகைகள், டேப்ரிக்கார்டர்,
டிரான்சிஸ்டர் மற்றும் ரொக்கம் ஆகியவை கொள்ளையடிக்கப்
பட்டன. குற்றவாளி யாரென்பது தெரியவில்லை. இன்னும்
புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது



## ஆலங்குளம் காவல் நிலையம்

*வினா எண். 1080—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:
மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆலங்குளம்
போலீஸ் ஸ்டேசன் சமூக விரோதிகளால் 1980 நவம்பர் முதல்
வாரத்தில் தாக்கப்பட்டு கைதியை விடுதலை செய்தார்கள்
என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய முழு விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். (ஆ)
1-11-80 அன்று ஆலங்குளம் காவல் நிலைய அதிகாரிகள்,
அன்னைவிலாஸ் தேநீர் விடுதியின் உரிமையாளர் திரு. வட்டும்
பெருமாள் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் பாலசுப்பிர
மணியன் என்பவரைக் கைது செய்து காவல் நிலையத்திற்குக்
கொண்டு வந்து, அவரைக் காவல் அறையில் வைப்பதற்கான வழி
முறைகளை ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். 1/2-11-80
நள்ளிரவு நேரத்தில் கைது செய்யப்பட்ட பாலசுப்பிரமணியத்தின்
தந்தை, ஆறுமுக கரையாளர், தன்னுடன் பலரை அழைத்து
வந்து காவல் நிலையத்தில் இருந்த இளம் உதவி ஆய்வாளரையும்,
பாரா காவலரையும் பயங்கர ஆயுதங்களுடன் சூழ்ந்துகொண்டு
பாலசுப்பிரமணியத்தை விடுவித்துச் சென்றார். மறுநாள் காவல்
அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு இச்சம்பவத்திற்குக் காரண
மாயிருந்த முக்கியமான குற்றவாளிகளை கைது செய்து வழக்கு
களைக் பதிவு செய்தனர். வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல்
செய்யப்பட்டுள்ளது. தங்கள் அதிகாரத்தை சரிவர பயன்படுத்தி
முறையாகச் செயல்படாத காரணத்தால் சம்பந்தப்பட்ட காவல்
அதிகாரிகள்மீது காவல்துறையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்
பட்டு வருகிறது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆலங்குளம் காவல் நிலையத்தில் நடைபெற்ற சம்ப
வத்தில், அங்கிருக்கக்கூடிய காவலர்களில் ஒரு பகுதியினர் அந்த
குற்றவாளிக்கு உடந்தையாக இருந்தது அரசுக்குத் தெரியுமா ?
அப்படிப்பட்ட காவலர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா
என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே
நான் விடையிலேயே குறிப்பிட்டேன். ஆகவே, அதிலே
நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டு
வருகிறது. யார் யார் மீது என்பதைப் பற்றித தக்க நடவடிக்கை
கள் எடுக்க மேலதிகாரிகள் மேற்கொண்டு, அறிக்கை வருகின்ற
அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## Selling Of Firewood through Fair Price Shops in Madras City

* Q. No.987.. THIRU N. KITTAPPA.. Will the Hon. the Minister for Finance be pleased to State..

a) whether the Civil Supplies Corporation had arranged to sell firewood to card—holders in Madras City through fair price shop; and

b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—

(அ) ஆம்.

(ஆ) வெளிச்சந்தையில் விறகின் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சென்னை நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் நடத்திவரும் சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதத்திற்கு ஐந்து குண்டு விறகு கீழ்க்கண்ட விலைகளில் விற்கப்படுகின்றது :—

| | | விலை (25 கிலோ) குண்டு ஒன்றுக்கு. |
|---|---|---|
| சவுக்கு உருட்டுக்கட்டை | .. | ரூ. 10.50 |
| சவுக்கு உடைத்தது | .. | ரூ. 11.00 |
| காட்டுவிறகு உடைத்தது. | .. | ரூ. 9.00 |

இதுவரை நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் 32 சில்லறை விற்பனைக் கடைகளிலும் கூட்டுறவு சங்கங்கள் நடத்தும் 25 சில்லறை விற்பனைக் கடைகளிலும் விறகு வழங்கப்படுகின்றது.

## பிற்பட்ட சமுதாய மக்களின் மேம்பாட்டுக்காக வாரியம் அமைக்கும் திட்டம்.

* வினா எண். 988— திரு. ரமணி திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பிற்பட்ட சமுதாய மக்களின் முன்னேற்றத்துக்கு உதவும்பொருட்டு வாரியம் ஒன்றை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டத்தின் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) பிற்பட்ட சமுதாய மக்களின் முன்னேற்றத்துக்கு உதவும் பொருட்டு ரூபாய் பத்து கோடி ஒப்பிய மூலதனத்துடன் கடன் தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்



பாட்டு வாரியம் (Tamil Nadu Backward Classes Economic Development Corporation) ஒன்றை கம்பெனி விதியின் கீழ் நிறுவுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) இவ்வாரியத்தின் தலைவர் சமூக நலத்துறையின் செயலாளர் ஆவார். பிற்பட்டோர் நல இயக்குநர் நிர்வாக இயக்குநர் ஆவார். இவ்வாரியத்தில் ஐந்து அலுவல் சார்புள்ள உறுப்பினர்களும் இரண்டு அலுவல் சார்பற்ற உறுப்பினர்களும் உள்ளனர். சிறு வியாபாரங்கள் துவங்க, கைவினைக் கலைஞர்கள் சொந்த தொழில் நடத்த, விவசாய முன்னேற்றச் சார்புள்ள தொழில்கள் துவங்க, ஆடுமாடுகள் வளர்க்க, தமது வாழ்க்கையில் முன்னேற உதவும் எந்தத் துறையிலும் தொழில் புரிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்கள் துவக்க உள்ள தொழிலுக்கேற்ப குறைவான வட்டியில் "மார்ஜின் (Margin)" பணத்தை இந்தக் கழகம் கடனாக அளிக்கும். பின்தங்கிய வகுப்பினரை முன்னேற்றுவதற்காகத் தேவை என்று கருதப்படுகின்ற வணிகம், தொழில் மற்றும் பொதுவான நடவடிக்கைகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இவ்வாரியம் மேற்கொள்ளும்.

[முற்பகல் 9.30.]

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசினுடைய ஒரு பிரிவாக ஒரு அமைச்சரும், அதற்கான இந்த இலாக்காவும், பிற்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்கு இன்று செயல்பட்டு வருகிறது. அந்த நடவடிக்கையில் திருப்திகரமாக இல்லை, அதனால் கொடுக்க வேண்டிய சௌகரியங்கள் அவர்களுக்குச் செய்ய முடியவில்லை என்பதால் இந்தப் புதிய வாரியம் அமைத்துக் கொண்டு அதன்மூலம் கடன் வழங்குவது, இதர வசதிகளை செய்யலாமென்று அரசு வந்துள்ளது. என்ன காரணத்தால் இந்த வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த வாரியம் அமைப்பதினுடைய நோக்கமே நாம் ஒப்பிய மூலதனமாக 10 கோடி அளவிலே இன்று ஏற்பாடு செய்திருக்கிறோம். பங்கு மூலதனமாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறோம். இந்த வாரியத்தைத் தனியாக அமைப்பதற்குக் காரணம், வாரியம் அமைப்பதால் இதிலே வங்கிகளிடமிருந்தும், எல்.ஐ.சி.யிடமிருந்தும் நாம் கடன் வாங்கி அதை குறைந்த வட்டிக்கு வாங்கி பிற்பட்ட நலத்துறைக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் தரலாம். அரசாங்கமே பாங்குகளிடம் அல்லது எல்.ஐ.சி.யிடம் கடன் வாங்க வழியில்லை. அரசுத் துறை வாங்க முடியாதென்ற காரணத்தால்தான் அந்த வாய்ப்பையெல்லாம் பயன்படுத்தி, பிற்பட்ட வகுப்பினருக்கு நாம் பயக்க வேண்டுமென்பதற்காக இந்த வாரியம் தனியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

[1981 மே 13

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிற்பட்ட மக்களின் புனர் வாழ்விற்காக வாரியம் அமைக்க வந்த அரசுக்கு நன்றி சொல்வதோடு தமிழகத்தில் ஏறக்குறைய 70 சதவீதம் பிற்பட்ட மக்களைச் சார்ந்தவர்கள் இருப்பதால் ஒரு வாரியத்தின் மூலமாக அனைத்து மக்களுக்கும் நலன் உடனே கிடைத்து விடுமா என்றால் முடியாது என்று சொல்லி தன்னிறைவுத் திட்டத்தை இப்போது செயல்படுத்தி வருவதைப் போல, பிற்பட்ட ஒருசில மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தன்னிறைவு படுத்தும் வகையில் இந்த வாரியத்தின் மூலம் முன்னுரிமை கொடுத்து ஒவ்வொரு மாவட்டமும் பயன்பட செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேறு பல துறைகள் சார்பாக பிற்படுத்தப்பட்டோர்கள் வசதி வாய்ப்புகளை, நலனை பூராவும் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிற்பட்ட நலத்துறையின் சார்பாகவும், பிற்பட்டோர்களுக்குப் பல்வேறு வசதி வாய்ப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதைத் தவிர ஏழை, எளியவர்களாக இருப்பவர்கள், ஒரு தொழில் நடத்த வேண்டுமென்று முயற்சி செய்கிறவர்கள் ஆகியவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று மாநிலம் தழுவிய வகையிலே தான் இந்த வாரியம் இருக்கிறதே தவிர ஒரு குறிப்பிட்ட இரண்டொரு மாவட்டங்களை எடுத்துச் செய்கிற நிலையில் இல்லை. இந்த வாரியம் அமைத்து முழுவதும் செயல்படத் துவங்கிய பிறகு, இருக்கிற சாத்தியக்கூறுகளை எல்லாம் அவர்கள் ஆராய்ந்து எந்தெந்த வழிகளிலே சாதாரணமாக தொழில் நடத்தக்கூடிய அறிவு, ஆற்றல் இருந்து, ஆனால் வசதியில்லாமல் இருப்பவர்களுக்கு வசதியளித்து அவர்களுடைய அறிவுத் திறனையும், ஆற்றலையும் பயன்படுத்தித் தொழில் நடத்த ஊக்குவிக்கும் என்பதுதான் இதனுடைய முக்கிய நோக்கம். அதைப் பரவலாகச் செய்யலாமே தவிர குறிப்பிட்ட இடத்தில் அல்ல. குறிப்பிட்ட மாவட்டங்களிலே தொழிற்துறை தனி ஏற்பாடுகள் செய்து வருகிறது.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்தின் மூலம் 10 கோடி ரூபாய் மூலதனத்தோடு வேறு பலவிதத்திலும் கடன்களைப் பெற்று தரக்கூடிய வசதிகளைப் பெற்றுக்கொண்டு பிற்பட்டோர்கள் தொழில்களைச் செய்வது என்பது வரவேற்கத் தக்க விஷயம். ஆனால் பணத்தைக் கடன் கொடுத்தால் அவர்கள் அதை வாங்கி தொழில் செய்து வாங்கிய கடனை ஈடு செய்யக்கூடிய முறையிலே, அவர்களுக்குக் கொஞ்சமாவது கடனைக் கட்டுவதற்கான முறையிலே ஈடுசெய்யக்கூடிய முறையிலே சொத்து இருந்தால் கடன் கொடுக்கப்படுமா அல்லது சொத்தே இல்லாமல் உழைத்துப் பிழைக்கின்றவர்களுக்குச் சாதாரண மக்களுக்குக் கடன்கள் கொடுக்கப்படுமா?



1981 மே 13]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்த வாரியம் இன்னும் செயல்பட ஆரம்பிக்கவில்லை. அமைப்பதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. வரைவு விதிகள் எல்லாம் அரசுக்கு ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டிருக்கின்றன. வாரியம் தொடங்கப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் கூறுவதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து எது ஏற்றதோ அதைச் செய்வதற்கு அந்த வாரியம் முற்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவர் அவர்களே, பிற்பட்ட சமூகநலத் துறையில் பல வகுப்பினர்கள் சேர்ந்து பிற்படுத்தப் பட்ட மக்கள் பட்டியலில் அவர்கள் இருக்கிறார்கள். அந்த மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது பிற்படுத்தப் பட்ட மக்கள் பட்டியலில் குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். இந்த வாரியத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற 10 கோடி ரூபாயில் குற்றப் பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு என ஒரு 50 விழுக்காட்டை தனியாக ஒதுக்கி நன்மைகள் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி இந்த வாரியம் செயல்பட தொடங்கியதற்குப் பிறகு அவர்கள் திறனைப்பற்றி, கூறுபாடுகளைப்பற்றி ஆராய்வார்கள், அப்படி ஆராய்ந்து அவர்களுடைய தேவை எவ்வளவு, கொடுக்க வேண்டிய அளவு என்ன, யார் யாருக்குச் செய்யவேண்டும் என்று எல்லாம் பார்க்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று விழுக்காடு ஒதுக்க வேண்டுமா வேண்டாமா என்பதை அந்த நிலையில்தான் கண்காணிக்க முடியும். இப்போது என்ன நடைமுறைகள் என்று சொல்வதற்கு இல்லை. வாரியம் செயல்படத் தொடங்கும்போதுதான் அந்த விவரங்கள் தெரிய வரும்.

திரு. வ. சத்தியமூர்த்தி: பிற்பட்டோர் நல வாரியத்தில் நான்-அபிஷியல் மெம்பர்கள் என்ற முறையிலே இரண்டு பேர்களை மட்டும் போடப்போவதாக அறிக்கையிலே சொல்லப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பொது மக்கள் பிரதிநிதி என்ற முறையிலே ஒருவரைப் போட்டால் அந்த வாரியத்தின் பணிகள் நல்ல முறையிலே நடைபெறுவதற்கும் அந்த அந்த மாவட்டங்களிலுள்ள பிரச்சினைகள் நல்ல முறையிலே அணுகப்பட்டு ஆக்கப்பூர்வமாகச் செயல்படுதற்கும் வாய்ப்பு இருக்கும். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவரை உறுப்பினராகப் போடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த வாரியம் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற அளவுக்கு தலைவராக சமூக நலத் துறை செயலாளரும், நிர்வாக இயக்குநராக பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரும் நிதிச் செயலாளர் ஒரு உறுப்பினராகவும் தொழில் துறைச் செயலாளர் ஒரு உறுப்பினராகவும் வேளாண்மை துறைச் செயலாளர் ஒரு

உறுப்பினராகவும் இவர்கள் தவிர அலுவல் சார்பற்ற முறையிலே இரண்டு பேர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். இதைப் பெருக்கிக்கொண்டே போனால் பணிகள் தடங்கல்படுமே தவிர விரைவாகச் செய்யப்படுவதற்கு வாய்ப்பு இருக்காது. 6 மாதம் அல்லது 1 ஆண்டுக்கொரு முறைதான் கூடும். ஆனால் பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு என்று ஒன்று இருக்கிறது. அதிலே வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போன்று ஏராளமானவர்களைப் போடுவதற்கு ஆலோசிக்கலாம். ஆனால் இதைப் பொறுத்த வரையில் எவ்வளவு சுருக்கமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு விரைவிலே கூட்ட வாய்ப்புகள் இருக்கும் என்ற காரணத்தினாலே தான் இரண்டு பேர்கள் அலுவல் சார்பற்றவர்கள் உறுப்பினர் களாக நியமிக்கப்பட்டு இருக்கின்றனர்.

ஐ.ஏ.எஸ். போட்டித் தேர்வுக்குப் பயிற்சியளிக்கும் நிலையங்கள்.

*வினா எண். 989—திரு. வேடந்தூர் வி. வி. பி. பாலசுப்பிர மணியன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ். போட்டித் தேர்வுக்கு பயிற்சி அளிக்கும் நிலையம் மாநிலத்தில் எத்தனை செயல்பட்டு வருகிறது?

(ஆ) தென் மாவட்டங்களுக்கான அத்தகைய பயிற்சி நிலையம் ஒன்றினை மதுரையில் அமைக்க அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில் எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஐ.ஏ.எஸ். முதலிய போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி அளிக்க சென்னை நந்தனத்தில் ஒரு சிறப்புப் பயிற்சி நிலையம் அரசால் நடத்தப் பட்டு வருகிறது. இது தவிர ஐ.ஏ.எஸ். முதலிய பணிகளுக்கான துவக்கத் தேர்வுகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் முதலிய இடங்களில் பிராந்திய பயிற்சி நிலைலங்களும் துவக்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ) மேற்குறிப்பிட்டபடி மதுரையில் ஏற்கனவே ஒரு பிராந்திய பயிற்சி நிலையம் ஒன்று துவக்கப் பட்டுள்ளது. சென்னையில் உள்ளது போல் சிறப்புப் பயிற்சி நிலையம் மதுரையிலும் துவக்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது அரசின் பரிசிலனையில் இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, அந்தப் பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டதிலிருந்து எத்தனை பேர்கள் அந்த நிலையத்தின்மூலமாக ஐ.ஏ.எஸ். தேர்வு பெற்றிருக்கிறார்கள்? ஐ.ஏ.எஸ். தேர்வு பெறுகின்றவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? ரெகுலராக போடப்பட்டிருக்கின்ற ஆசியர்களோடு ஒவ்வொரு பாடத்திலேயும் சிறப்பான தகுதிகளைப் பெற்று பேரும், புகழும் பெற்றிருக்கின்ற பேராசிரியர்களைக் கொண்ட குழுவை நியமித்து அவர்கள் போட்டிக்கு உரிய பாடங்களைக் கற்பித்து அதன் மூலமாகப் போட்டியிடுகின்றவர்கள் அதிகமாகத் தேர்ச்சி பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?



[முற்பகல் 9-40]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1972–73 இல் 50 பேர்கள் பயிற்சி அளிக்கப்பட்டார்கள். அவர்களில் தேர்வு எழுதியவர்கள் 34 பேர்கள். அதிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 3 பேர். 1973–74-லே பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் 46 பேர்; தேர்வு எழுதியவர்கள் 33–2. 1977–78-லே பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் 42–தேர்வு எழுதியவர்கள் 34–1. 1978–79-ல் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் 49, தேர்வு எழுதியவர்கள் 28, ஆனால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், ஐ.ஏ.எஸ்.க்கு 3 பேர். ஆனால் சென்ற ஆண்டு நாம் மகிழத்தக்க அளவிற்குப் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் 49 பேர். சென்ற ஆண்டு 6 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அவர்களுக்கு எந்தெந்த வகைகளிலே பயிற்சிகள் அளித்தால் அவர்கள் தேர்வைச் சிறப்பாக எழுதுவார்கள் என்பதற்கான முறைகள் வகுக்கப்பட்டு அதற்கான முறையில் பயிற்சிகள் அளிககப்பட்டு வருகின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட அகில இந்திய அளவிலான போட்டித் தேர்வுகளில் தமிழகத்திலேயிருந்து தேர்வு எழுதுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் அளவிற்கு வழிவகை செய்யும் வகையில் இப்படிப்பட்ட ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதுபவர்களுக்கு இந்த நிறுவனங்களின் மூலமாகத் தபால் மூலம் பயிற்சியளிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சென்னை சைதாப்பேட்டையிலே மட்டும் நாம் ஏற்கனவே 50 பேர்களுக்குப் பயிற்சியளிப்பது என்று வைத்திருந்தோம். இப்பொழுது மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலேயும் ஐம்பது, ஐம்பது பேர்களுக்கு மேற்கொண்டு பயிற்சி அளிக்கின்ற அளவிற்கு வைத்திருக் கிறோம். ஆகவே, நேரடியாகப் பயிற்சி அளிக்கின்றபொழுதே போதுமான அளவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படவில்லை. நாம் ஐம்பது பேர்களுக்குப் பயிற்சி அளித்தாலும் 34 பேர்கள் எழுதுகிறார்கள். அதிலே பார்த்தால் 3 பேர்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவேதான் நேரடிப் பயிற்சி யிலேயே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்பொழுது தபால் மூலம் அளிக்கப்படுகின்ற பயிற்சி போதுமான அளவிற்கு அமையாது. ஆகவேதான் நேரடிப் பயிற்சி வேண்டும், அதற்கான வசதி வாய்ப்புகளெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, ஐ.ஏ.எஸ். க்குத் தேர்வு செய்யப்படுகின்ற தமிழர்களில் பெரும் பாலானவர்கள் வட மாநிலங்களிலுள்ள சர்வகலாசாலைகளில் பயின்றவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா? அப்படியிருந்தால் இங்குள்ள சர்வகலாசாலைகளில் பயிற்றுவிக்கப்படுகின்றவர்களின் தரத்தை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஒரு கூற்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. என்றாலும், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று எடுத்துச் சொல்கிறோம். இன்னொன்று, ஒவ்வொரு கல்லூரியிலும் படிக்கின்றபொழுது ஆயிரக்கணக்கான மாணவர்களை எடுக்கும்பொழுது அந்தந்தக் கல்லூரியைச் சேர்ந்த முதல்வர்கள் மாணவர்களினுடைய தகுதி, திறமை, அவர்களுடைய படிப்பு ஆகியவற்றையெல்லாம் கண்டறிந்து அவர்களைத் தேர்ந்தெடுத்து, நீ, ஐ.ஏ.எஸ். பரீட்சை எழுதுவதற்குத் தகுதி படைத்தவன், நீ அதிலே முயற்சி செய்யலாம் என்று ஊக்குவிப்பார்களேயானால் அத்தகைய நிலைமைகள் வரும். பலபேருக்கு அந்த ஊக்குவிப்பு இல்லாமல் ஆசைப்படுகின்றவர்கள் வந்து சேர்கின்றார்கள். ஆசைப்படுகின்றவர்களெல்லாம் தேறுவார்கள் என்று சொல்வதற்கில்லை. திறமை படைத்தவர்களைத் தேர்ந்தெடுத்து ஊக்குவிக்கின்ற நிலைமைகளில் ஒவ்வொரு கல்லூரியிலும் எடுத்துக் கொள்வார்களேயானால், அவர்கள் ஒவ்வொரு கல்லூரியிலேயும் 3 பேர், 4 பேர்களைச் சிபார்சு செய்து கொண்டு சேர்ப்பார்களேயானால் அவர்களிலே கிட்டத்தட்ட கால்வாசிப் பேர்களுக்கு மேலேகூட வெற்றி பெற வைக்க முடியும். இப்பொழுது யார் வருகிறார்கள் என்றால் தான் ஐ.ஏ.எஸ். ஆக வேண்டுமென்று ஆசைப்படுகின்றவர்கள் வருகின்றார்கள். ஆசை இருக்கிறதே தவிர அவர்களுக்குத் திறமை இல்லை. ஆகவேதான் இத்தகைய நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்த நிலைமைகளை ஏற்படுத்த வேண்டுமென்று நாம் கல்லூரி முதல்வர்களுக்கெல்லாம் சொல்லி வைத்திருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களில் பெரும்பகுதியினர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்க அரசு சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவரவர்களே, மற்ற மாநிலங்களை ஒப்பிட, நம்முடைய மாநிலத்திலிருந்து ஐ.ஏ.எஸ். தேர்வு பெறுகின்ற எண்ணிக்கை குறைந்துகொண்டிருக்கிறது. இதுபற்றி முழுமையாக ஆராய ஒரு குழு அமைத்து அந்தக் குழுவினுடைய அறிக்கையின்பேரில் நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஒருகாலத்திலே மற்றைய மாநிலங்களெல்லாம் விழிப்புணர்ச்சி பெறாதிருந்த காலத்தில் தமிழகம் விழிப்புணர்ச்சி பெற்று அந்த இடங்களையெல்லாம் பெறுகின்ற நிலைமை இருந்தது. ஒரு காலத்திலே இந்திய அரசாங்கத்திலே 18 செயலாளர்களில் 16 செயலாளர்கள் தமிழ்நாட்டிலேயிருந்துதான் சென்றார்கள். அந்தக் காலத்திலே மற்ற மாநிலங்கள் விழிப்புணர்ச்சிப் பெறவில்லை. இப்பொழுது எல்லா மாநிலங்களும் விழிப்புணர்ச்சி



பெற்று தங்கள் தங்களுக்கு இந்தக் கோட்டா வேண்டுமென்ற போட்டி வருகின்றபொழுது, தேர்வு நடத்துகின்றவர்களும் மாநிலங்களையும் மனதிலே வைத்துக்கொண்டு இடங்களையும் மனதில் வைத்துக்கொண்டு இன்னின்ன மாநிலங்களுக்கு இத்தனைபேரைத்தான் தேர்ந்தெடுப்பது என்ற முறையையும் கொண்டிருப்பதனால்தான் நமக்குக் குறைகிறது என்ற நிலை வருகிறதே தவிர இல்லாவிட்டால் வேறு நிலை இல்லை. இருந்தாலும் இந்தத் தரத்தை உயர்த்துவதற்கும், தகுதி படைத்தவர்களை, திறமை படைத்தவர்களை அந்தத் தேர்வுக்கு அனுப்புகின்ற முயற்சியிலேயும் நாம் ஆழ்ந்து சிந்தனை செலுத்தி வருகிறோம்.

### உள்நாட்டு மீனவர்களுக்கும் வீடுகள் கட்ட கடன் வசதி அளிக்கும் திட்டம்.

*வினா எண். 990—திரு. செ. செம்மலை: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலோர மீனவர்கள் போல முழு நேரமும் மீன் பிடிக்கும் தொழிலையே நம்பியிருக்கிற உள்நாட்டு மீனவர்களுக்கும் வீடுகள் கட்ட கடன் வசதி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கும் அந்தத் திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோர மீனவர்கள் போல உள்நாட்டு மீனவர்களிலே சிலரும் முழுக்க முழுக்க அந்தத் தொழிலையே நம்பியிருக்கிறார்கள். எனவே, அப்படிச் சொந்தமாக நிலம், வீடு மற்றும் சொத்துக்கள் இல்லாத உள்நாட்டு மீனவர்களுக்கு இதுபோன்ற திட்டத்தை விரிவுபடுத்த அரசு இனிமேலாவது ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கடலோரப் பகுதியிலே வாழ்கின்ற மீனவர்கள் குடிசைகள் எல்லாம் மிகவும் பாதிக்கப்படுகிற சூழ்நிலையிலே இருக்கிறார்கள். அடிக்கடி புயலால் பாதிக்கப்பட வேண்டிய நிலைமையும் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட வேண்டிய நிலைமையும், கடல் அரிப்பால் பாதிக்கப்பட வேண்டிய நிலைமையும், கடலோர மீனவர்களுக்குத்தான் அதிகம் இருக்கிறது. அவர்களுக்கே நம் நிதி ஆதாரங்களுடைய அடிப்படையில் போதுமான அளவுக்கு வீடு கட்டித் தர முடியவில்லை ஓரளவுக்குத்தான் நாம் ஆண்டுக்காண்டு ஏற்றுக்கொண்டு

வருகிறோம். அந்த அளவில் பார்க்கும்போது முதல் உரிமை கடலோர மீனவர்களுக்குத்தான் தர வேண்டியிருக்கிறது. ஆகவே தான் உள்நாட்டு மீனவர்களைப் பற்றி நாம் கவனித்து, அவர்களுக்கு அந்த வகையில் நிதி ஒதுக்க இயலவில்லை. பின்னால் நிதி ஆதாரங்கள் வருகின்றபொழுது யோசிக்க வேண்டியதே தவிர, இப்பொழுது அதைப்பற்றிய செயற்குறிப்பில்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது இறந்துவிட நேரிட்டால், அவர்களது குடும்ப நிவாரணத்திற்கு ரூ. 5,000 நிதி கொடுக்கப்படுவதாக கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சலுகை உள்நாட்டு மீனவர்களுக்கும் பொருந்துமா என அறியவிரும்புகிறேன். அப்படியில்லையென்றால், அவர்களுக்கும் அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது இறந்துவிடுகின்ற மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்படுகிற உதவித் தொகையே தவிர, இறந்துவிடுபவர்களுக்குக் கொடுக்கப்படுவது அல்ல. அது மாதிரி குளத்திலோ, ஏரியிலோ நீந்தி மீன்பிடிக்கின்ற தொழிலில் ஈடுபடும்போது இறந்து விடுகின்ற நிலையென்றால், அவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகை தரலாமே தவிர, சாதாரணமாக இறந்து விடுகிறவர்களுக்குத் தரலாம் என்ற அளவில் ஈடுபட்டால் அரசாங்கத்தினுடைய நிதி இடம் தராது. ஆகவேதான் எதிர்பாராது இறந்துவிடுபவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். தியாகராசன்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, சபை முன்னவர் அவர்கள் கடலோர மீனவர்களுக்கு மட்டும் வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்று இங்கே சொன்னார்கள். கிராமப் பகுதியிலே உள்ள மீனவர்கள் இன்று தொழில் நடத்த முடியவில்லை. காரணம், மழை இல்லாமல், மீனும் இல்லை; நல்ல வருமானமும் இல்லை. கடலோரப் பகுதியிலேயிருக்கிற மீனவர்களுக்கு நல்ல வருமானம் இருக்கிறது. எனவே கிராமப் பகுதியில் கஷ்டப்பட்டுத் தொழில் நடத்த முடியாமல் இருக்கக்கூடிய அந்த மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா? அல்லது மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அவர்களுடைய வறுமையைக் கணக்கில் வைத்து நாம் வீடு கட்டித் தருகிற நிலையில் இல்லை. அவர்களுக்கு ஏற்படுகிற ஆபத்துச் சூழ்நிலையை வைத்துத்தான் அதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. கடலோரப் பகுதியில் இருக்கிறவர்கள் புயலால், கடல் கொந்தளிப்பால், அரிப்பால் பாதிக்கப்படுகிற காரணத்தால்தான் முன்னுரிமை தரப்படுகிறது. போதுமான அளவுக்கு நிதி ஆதாரம் நமக்குக் கிடைக்கும்போது வேண்டுமென்றால், உள்நாட்டு மீனவர்களுக்கு ஒரு பங்கு, மற்றவை



கடலோர மீனவர்களுக்கு என்று ஒதுக்கப்படுகிற நிலைமை ஏற்படலாம். இப்பொழுது அந்த நிலைமைகள் இல்லாத காரணத்தால்தான் முன்னுரிமை கடலோரப் பகுதி மீனவர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டு வருகிறது.

ஸ்கூட்டர்களுக்கான வரிவிதிப்பு.

*வினா எண். 1081—திரு. கா. கோபால கிருஷ்ணன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஸ்கூட்டர்களுக்கு மற்ற அண்டை மாநிலங்களை விட வரி விதிப்பு அதிகமாயிருப்பதால் குறைக்க அரசிற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்களிலே ஸ்கூட்டர், கார் முதலியவற்றிற்கு வரி குறைவாக இருப்பதால் ஸ்கூட்டர் விலை ரூ. 1,000 குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது, ஆதலால் ஸ்கூட்டர்களுக்கு மற்றும் கார்களுக்கு அண்டை மாநிலங்களில உள்ளது போல் வரியைக் குறைக்கும் நிலையில் மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் ஸ்கூட்டரைப் பற்றித்தான் இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா பொருள்களின் வரி என்ன என்பதை என்னால் ஞாபகம் வைத்துக்கொள்ள முடியாது. மூலக் கேள்வியைப் பற்றி மட்டும்தான் சொல்ல முடியும். ஸ்கூட்டரைப் பற்றி சொல்ல வேண்டுமானால் ஸ்கூட்டருக்கு நம்முடைய மாநிலத்தில் 15% விற்பனை வரி போடுகிறோம். கர்நாடக மாநிலத்தில் 15% போடுகிறார்கள், அதுதான் அண்டை மாநிலம், பக்கத்து மாநிலம். கேரள மாநிலத்திலே 15% போடுகிறார்கள். ஆந்திராவில் 12% மகாரஷ்டிராவில் 12%, ஒரிசாவில் 13%. பாண்டிச்சேரியில் 7%. நாம் வரி போடுகிறபொழுது, மற்ற மாநிலங்களிலே வரி குறைவாக இருந்தால், எவ்வளவு வரி நஷ்டமாகும் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் வரி போடப்படுகிறது. இப்பொழுது பாண்டிச்சேரியிலே 7% இருந்தாலும், அது நம்முடைய மாநிலத்தைப் பாதிக்கவில்லையென்று, கணக்குப் பார்க்கும்போது நமக்குத் தெரிகிறது. கர்நாடகம், ஆந்திரம், கேரளத்தைப் பார்க்கும்போது, அதிகமான வரியென்று கூறுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்றால், ஸ்கூட்டரைப் பொறுத்த வரைக்கும் அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லையென்றுதான் நாம் 15% போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-50]

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு வரவேண்டிய வரி, அடுத்த மாநிலங்களில் ஸ்கூட்டர் வாங்குவதனால் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட வாகனங்களை மீண்டும் நமது மாநிலத்திலே பதிவு செய்யும்போது அந்த வரி இழப்பை வசூலிக்க முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற கணக்குப்படி ஸ்கூட்டருக்கு 15 சதவிகிதம் ஒருமுனை வரி இருப்பதால், வேறு இழப்பு இல்லை என்று கணக்கு இருக்கிறது. வேண்டுமானால் மீண்டும் இதை ஆராய்ந்து இதனால் வரி நஷ்டம் வரும் என்றால் மறுபரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது.

சிதம்பரம் காட்டுமன்னார்கோயில் தாலுக்காக்களை இணைத்து தனி வருவாய் கோட்டம் ஆக்கும் திட்டம்.

*வினா எண். 1042 திரு. வி வி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் காட்டுமன்னார் கோயில், கடலூர், பண்ருட்டி ஆகிய நான்கு தாலூக்காக்கள் கொண்ட வருவாய்த்துறை டிவிஷனில் உள்ள சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் ஆகிய இரண்டு தாலுக்காக்களையும் தனியாகப் பிரித்து ஒரு சப்-டிவிஷனாக ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: உள்ளது.

திரு. வி.வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் ஏற்கனவே வருவாய்க் கோட்ட அலுவலகக் கட்டடமும் வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு வீடும், தாசில்தாருக்கு வீடும் இருக்கின்றன மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் ஆய்வாளர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்தான் திறந்து வைத்தார்கள். ஆகவே சிதம்பரம் தாலூகாவையும், காட்டுமன்னார் கோவில் தாலூகாவையும் தனியாகப் பிரித்து, சிதம்பரத்திலேஒரு வருவாய்க்கோட்ட அலுவலகமும் காட்டுமன்னார் கோவிலில் ஒரு வருவாய்க் கோட்ட அலுவலகமும், தனியாக அமைப்பதற்கு இந்த நிதி ஆண்டிலேயே அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், விருத்தாசலம், திருக்கோவிலூர், திண்டிவனம் ஆகிய 4 கோட்டங்கள் இருக்கின்றன. சிதம்பரம் கோட்டத்தைப் பொறுத்த வரையில் சிதம்பரம், கடலூர், பண்ருட்டி ஆகிய 3 தாலூகாக்கள்தான் முன்னாலே இருந்தன. இப்போது காட்டுமன்னார் கோவில் தாலூகா சென்ற ஆண்டு ஏற்பட்டது. ஆனால் 3-3-1981 வரையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுத்து முடிக்கும் வரையில் புதிதாக எந்தவிதமான நிர்வாக மாற்றமும் செய்யக் கூடாது என்ற மத்திய அரசின் ஆணைக் கேற்ப இதைச் செய்யவில்லை. ஆனால் அதற்குப் பிறகு 5-5-1981 அன்று வருவாய்த்துறைஅமைச்சருடைய தலைமையில், வருவாய் ஆணையர், வருவாய்த் துறை செயலாளர், நிதித் துறை செயலாளர் ஆகியோரை வைத்து, சிதம்பரம் கோட்டம் மிகப்பெரிய கோட்டமாக இருக்கின்ற காரணத்தால், அதை இரண்டாகப் பிரிக்க அரசு வேண்டிய ஆணையை இட்டிருக்கிறது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திருவில்லிபுத்தூர் கான்வென்ட் பள்ளிக்கான விளையாட்டுத்திடல்

*வினா எண் 1083—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் நகர் கான்வென்ட், பள்ளிக்கூடத்தின் விளையாட்டுத் திடலின் நடுவில் உள்ள அரசு நிலத்தை மேற்படி பள்ளிக்கு விளையாட்டு இடத்திற்காக அரசு குத்தகைக்கு கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்த இடம் 1951 ஆம் ஆண்டு 18.50 காசுக்கு ரங்கப்ப நாயுடுவுக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்டது. வாடகைக்குக் கொடுக்கிறபோதே நிலத்தை விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும். அரசு தேவைப்பட்டால் திருப்பி எடுத்துக் கொள்ளும் என்று ஆணையிட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் கான்வென்ட் பள்ளி இருக்கின்றது. 2 ஏக்கருக்கும் அதிகமாக விளையாட்டுத் திடல் இருக்கின்றது. அதற்கு நடுவில் 37 சென்ட் அரசாங்கப் புறம்போக்கு நிலம் இருக்கின்றது. அந்த இடத்தில் தீ அணைப்பு நிலையம் வருவதாக இருந்தது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரும் விஜயம் செய்தார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் விஜயம் செய்தார்கள். அந்த இடத்தை கான்வென்ட் பள்ளிக்கு ஜாரி செய்வதாகச் சொன்னார்கள். அந்த நிலத்தை இப்போது குத்தகைக்கு விடுவதற்கு அரசு முயற்சி செய்கின்றதா அல்லது பட்டா கொடுப்பதற்கு முயற்சி செய்கின்றதா? அல்லது விலைக்குக் கொடுப்பதற்கு முயற்சி செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அரசு எந்தவிதமான முயற்சியையும் செய்யவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இந்த அரசு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இந்தக் கேள்வியை எதற்காகப் போட்டேன் என்றே எனக்குத் தெரியவில்லை. அந்தப் பள்ளி தமிழ்நாட்டிலேயே முதல் தரமாக இருக்கிற காரணத்தால் அந்தப் பள்ளிக் கூடத்திற்கு அந்த இடத்தைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் எப்போது வாடகைக்குக் கொடுக்கப்பட்டது என்றால் 1951 ஆம் ஆண்டு. அந்த நாயுடு இப்போது இல்லை. அவர் இறக்கிறபோதே 1963 ஆம் ஆண்டு அந்தப் பள்ளிக்கு அரசு நிபந்தனைக்கு விரோதமாக வாடகைக்கு விட்டு விட்டார்கள். அது தவறு என்று சொல்லி வருவாய்த் துறை அதிகாரிகளை அதை ரத்து செய்யும்படி சொல்லியிருக்கிறோம்

இந்த அவையின் மூலமாக வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு சொல்லிக்கொள்வேன். விரைவிலே இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை உடனே ரத்து செய்ய வேண்டும். அந்த முயற்சியில் வருவாய்த்துறை ஈடுபடவேண்டும். அந்த இடம் பள்ளிக்குத் தேவைப்படுவதால்—குறைந்த இடம் தான், நான் நேரிலே பார்த்திருக்கிறேன்—விளையாட்டு மைதானத்திற்குத் தேவைப்படுவதால், அதை உடனே ஆர்ஜிதம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை வருவாய்த் துறை அதிகாரிகள் விரைவிலே எடுக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேலவையில் இருப்பதால், வினா எண்கள் 1084 முதல் 1086 வரை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

### கும்பகோணம் நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கான குடியிருப்புகளைப் புதுப்பிக்கும் திட்டம்

வினா எண் 1087—*திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகராட்சியில் துப்புரவுத் தொழில் செய்யும் நகர சுத்தி தொழிலாளர்கள் வசிக்கும் பழைய மீன் மார்க்கெட் காலனி குடியிருப்புகளைப் புதுப்பித்து வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில் கட்ட திட்டமிட்டுள்ள திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :(அ) மற்றும் (ஆ) நிதி பற்றாக்குறை நிலையின் காரணமாக குடிசை மாற்று திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படும் பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் கோவை, திருச்சி, மதுரை, சேலம் ஆகிய நான்கு மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டால் போதும் என்றும், இப்பணி ஏனைய வெளியூர் மாவட்டத் தலை நகரங்களுக்கும், சிறு நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டாம் என்றும் அரசு முடிவெடுத்துள்ளது. எனவே, கும்பகோணம் பழைய மீன் மார்க்கெட் பகுதியில் குடிசை மாற்றும் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 72 குடியிருப்புகள் ரூ 7.035 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்குரிய திட்டம் தற்போது செயல்படுத்துவதற்கில்லை.

திரு. நன்னிலம் அ. கலையரசன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிற நோக்கத்தைப் பார்க்கிற போது மாவட்டத் தலைநகரங்களில் மட்டும்தான் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் இப்படிப்பட்ட நகர சுத்தித் தொழிலாளர்களுக்கான வீடுகள் கட்டும் பணி செய்யப்பட்டு, அதற்கு அடுத்தபடியாகத்தான் நகரத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க முடியும் என்று தெரிகிறது. மாண்புமிகு





அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்த இடத்தைப் பார்த்து இருக்கிறார்கள். ஏற்கனவே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவரும் அந்த இடத்தைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டில் இருக்கும் பல்வேறு காலனிகளிலேயே இந்தக் காலனி மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், இன்றைக்கு அவைகள் கீழே விழும் நிலையில் இருப்பதால் அந்தக் காலனிக்கு அரசு தனிக்கவனம் செலுத்தி மீண்டும் ஆலோசனை செய்து, அந்தக் கும்பகோணத்தில் உள்ள பழைய குடியிருப்புகளைக்குடிசை மாற்று வாரியத்தின் மூலம் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இரண்டு முறை ஆலோசனை செய்யப்பட்டது. ஆனால் கோவை, திருச்சி, மதுரை, சேலம் ஆகிய நான்கு மாவட்டத் தலைநகரங் களில் மட்டும் செய்தால் போதும். நிதி ஆதாரம் இல்லை என்ப தால் மற்ற இடங்களில் விரிவுபடுத்த வேண்டாமென்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது.

திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியத்தின் மூலமாகக்கட்ட இயல வில்லையென்றால், அங்கேயிருக்கும் கும்பகோணம் நகராட்சி அரசு மூலமாகக் கடன் வாங்கிக் கட்டுவதற்கு இயலுமா? அந்த வகையில் ஆலோசனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்தக் கேள்வி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்கவேண்டும்.

திரு. இ. எஸ், எம். பக்கீர் முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும் என்று சொன்னார்கள். எந்தத் துறையில் இது செய்யவேண்டியிருந்தாலும். இந்த அரசு அங்கேயிருக்கும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தர முன் வரவேண்டும். அங்கேயிருப்பவர்கள் மிகவும் மோச மான நிலையில் இருக்கின்ற வீடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். பல ஆண்டுகாலமாக இது சம்பந்தமாக அவர்கள் நகராட்சி ஆணையர் மூலமாக முறையீடு செய்து கொண்டு இருக்கிறார் கள். இது சம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருப்பதாகச் சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தத் துப்புரவுத் தொழி லாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. எஸ். ஆர். இராதா அவர்களுடைய பெருமுயற்சியின் காரணமாக அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள நானும் போய்ப் பார்த்து

இருக்கிறேன். நிதித் துறையில் அதற்கு ஆதரவு கொடுக்காத காரணத்தால் ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டபடி கோவை. திருச்சி, மதுரை, சேலம் ஆகிய நான்கு மாவட்டத் தலை நகரங்களில் மட்டும் குடிசை மாற்று வாரியம் மூலம் செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டது. இதற்கு மேல் இப்போது ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, நிதிநிலை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள், ஒப்புக்கொள்கிறேன். அந்த வீடுகள் பிரிட்டிஷ் பீரியடில் கட்டப்பட்டவை. இப்போது மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன; பாதிக்குமேல் இடிந்து விட்டன. அவர்கள் எல்லாம் நகர சுத்தித் தொழிலாளர்கள்; உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அரசின் நிதிநிலை சரியில்லை என்றாலும் அவர்களுடைய சொந்த முயற்சியில் சீர்செய்துகொள்ள உத்தரவு பிறப்பிக்கப் படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கும்பகோணத்தில் இருப்பதைப் பற்றிச் சொல்கிறார்களா அல்லது வேறு இடமா என்று தெரியவில்லை. நானும் அதைப் பார்த்திருக்கிறேன். அந்த குடியிருப்புகள் பிரிட்டிஷ் காலத்தில் கட்டப்பட்டதா எனத் தெரியவில்லை. அவை வெறும் குடிசை வீடுகள்தான்,

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, நான் விவாதத்திற்காகச் சொல்லவில்லை. அமைச்சரவர்கள் இரண்டு இடங்களைப் பார்த்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது).

This is a vital question. Either the Government must come forward to construct their houses. Or they should be allowed to construct at their own cost.

MR. SPEAKER: There are so many places like that.

திரு. எல். இளையபெருமாள்: அரசாங்கம் கட்டிக்கொடுக்க நிதிநிலை சரியில்லை என்றால் அவர்களுடைய சொந்த முயற்சியால் கட்டிக்கொள்ள உத்தரவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சொந்த முயற்சியில் கட்டுவதற்கு அவர்கள் கேட்க வேண்டு மென்றால் அங்குள்ள நகராட்சியில்தான் கேட்க வேண்டும். இங்கே விபரம் தெரிய வேண்டுமென்றால் உள்ளாட்சித் துறை



அமைச்சரிடம் கேள்வி போட வேண்டும். நான் குடிசைமாற்று வாரியம் சம்பந்தப்பட்ட கேள்விக்குத்தான் பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி குடிசைமாற்று வாரியம் பற்றியதால் இந்த அளவுக்குத்தான் பதில் எதிர் பாக்க முடியும்.

அம்மைநாயக்கனூர் பேரூராட்சிக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 1088 —திருமதி ஏ. எஸ், பொன்னம்மாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்மைய நாயக்கனூர் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

(இ) அம்மைய நாயக்கனூர் பேரூராட்சியில் இணைந்துள்ள கிராமங்கள் அனைத்திற்கும் இத்திட்டத்தின் மூலம் குடி தண்ணீர் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) திட்ட வேலைகள் முடிவு பெறும் நிலையில் உள்ளன.

(ஆ) 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப் பட்டது.

(இ) அம்மாபட்டி, மாவுத்தன்பட்டி, கோடைரோடு. ஜகன்னாதபுரம், சொக்கலிங்கபுரம். புதூர், அம்மை நாயக்கனூர் மற்றும் இடையப்பட்டி ஆகிய ஏழு குடியிருப்புகளுக்கு மட்டும் குடி தண்ணீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அம்மை நாயக்கனூர் பேரூராட்சியில் 19 'ஹாம்லெட்'கள் இருக்கின்றன. அந்த 19-ல் வெறும் ஏழை மட்டும் எடுத்துக் கொண்டால் பாக்கி பேர்கள் தண்ணீர் இல்லாமல் என்ன செய்வார்கள்? அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் நீர் எடுத்துச்செல்லும் குழாய் செல்லும் வழியில் 'வே சைடு வில்லேஜஸ்' என்ற அளவில் கீழ்க்கண்ட குடியிருப்புகளுக்கு மட்டும் தற்போது குடிநீர் வழங்க வழிவகைச்

செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அந்தக் குடியிருப்புகள், அம்மாபட்டி, மாவுத்தன்பட்டி, கோடைரோடு, ஜகன்னாதபுரம், சொக்கலிங்கபுரம் புதூர். அம்மையநாயக்கனூர் மற்றும் இடையபட்டி ஆகியவை. மற்ற கிராமங்களில் இருப்பவர்கள் இதுவரை என்ன செய்துகொண்டிருந்தார்களோ அதையே செய்ய வேண்டும். மேல் முறையீடு செய்தால் அது பற்றி பின்னால் கவனிக்கலாம்,

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** தலைவரவர்களே, ஒரே பேரூராட்சிக்கு உட்பட்ட கிராமங்கள்தான் அத்தனையும். நாம் 'வாட்டர்' கொடுக்காமல் 'வாட்டர் செஸ்' என்று வசூல் செய்கிறோம். அப்படிச் செய்யும்போது நல்ல தண்ணீர் கொடுக்காமல் மற்ற கிராமங்களை ஒதுக்கிவைத்தால் அந்த மக்களுடைய வெறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ளுமா? அவர்களுடைய வெறுப்பை ஏற்றுக்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறதா? ஆகையால் மறுபரிசீலனை செய்து அனைத்துக் கிராமங்களுக்கும் நல்ல தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? நிலக் கோட்டையிலிருந்து தண்ணீர் வருகிறது. அந்த வழியில்தான் சிலுக்கார்பட்டி பஞ்சாயத்து இருக்கிறது. ஆகவே, அதையும் இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே மக்கள் யாரும் இந்த அரசை கோபித்துக்கொள்ள மாட்டார்கள். காரணம் சுதந்திரம் அடைந்து இதுவரையில் அந்த இடம் இப்படியே இருக்கிறது. ஆகையால் புரட்சித் தலைவர் என்றைக்காவது செய்தால் போதும் என்று இருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டு 26.40 இலட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் அந்தக் காலத்தில் போடப்பட்டது. 'வே சைடு வில்லேஜஸ்' என்ற முறையில் அந்தத் திட்டத்தின் பைப் லைனை ஒட்டி இருக்கிற கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இன்னும் விரிவுபடுத்த வேண்டுமென்றால் 26.40 இலட்சத்திற்கு மேல் போகும். வேண்டுமென்றால் கீழ்க் குழாய் வைக்க வேண்டிய 'ஆகுமென்டேஷன் ஸ்கீம்' போடலாம். அதைப் பின்னால் பரிசீலிக்கலாம்.

### சென்னையிலுள்ள செங்கற்பட்டு மாவட்ட மண்டலத்துணை இயக்குநர் அலுவலகம்.

**வினா எண் 1089— திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம்;** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள செங்கற்பட்டு மாவட்ட மண்டலத் துணை இயக்குநர் அலுவலகத்தை (நகர் ஊரமைப்புத் துறை) காஞ்சீபுரத்திற்கு மாற்ற வேண்டுமென கோரிக்கை உள்ளதா?



(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது சென்னையில் இயங்கிவரும் நகர் ஊரமைப்புத்துறை செங்கற்பட்டு மண்டல துணை இயக்குநர் அலுவலகத்தை அடுத்த கல்வியாண்டு துவங்குவதற்குமுன் காஞ்சிபுரத்திற்கு மாற்ற வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்காக நகர் மற்றும் ஊரமைப்புத்துறை இயக்குநர் உடனே காஞ்சிபுரத்தில் தகுந்த கட்டிடம் தெரிந்தெடுத்து அலுவலகத்தை அரசு முடிவுப்படி காஞ்சிபுரத்திற்கு மாற்றும்படி கேட்கப்பட்டுள்ளார்.

### தர்மபுரியில் அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி அமைக்கும் திட்டம்,

***வினா எண் 1084 திரு. எஸ். அரங்கநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் பெண்கள் அரசுக் கலைக்கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா

(ஆ) ஆம் எனில் நடப்பு ஆண்டிலேயே தொடங்கப் படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு, எஸ் அரங்கநாதன்:** தலைவர் அவர்களே, தமிழகத்திலே எல்லா மாவட்டங்களிலும் பெண்கள் கல்லூரி இருக்கின்றது. ஆனால் தர்மபுரி மாவட்டத்திலே அந்த நிலை இல்லை. அந்த மக்கள் மட்டும் ஏன் அதைப் பெற முடியாமல் தவிக்கிறார்கள். ஆகவே புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே அருமை அண்ணன் கல்வி அமைச்சர் அவர்கள் அதைச் செய்வதற்கு வழிவகை செய்து தருவார்களா? இதற்கு முன் இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பூர்ணலிங்கம் அவர்களும் அது பற்றி அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். திரு. அசோக்குமார் அவர்களும் அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அண்ணன் கல்வி அமைச்சர் அவர்கள் கேள்விக்கு இடம் இல்லை என்று தெரிவித்துவிட்டார்கள். ஆகவே இதற்கு ஆவன செய்வார்களா?

**மாணபுமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, புதிதாகக் கலைக் கல்லூரிகளைத் துவங்குவது இல்லை என்ற ஒரு முடிவிலே அரசு இருக்கின்றது. அதுபற்றி பரிசீலிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றது. அப்படிப் புதிதாக கலைக் கல்லூரி ஆரம்பிக்கின்ற நிலைமை வருகின்றபோது அந்தந்தப் பகுதிகளை அனுசரித்து, பொதுமக்களின் ஆர்வத்தையும் அடிப்படையாக வைத்து புதிய கல்லூரிகளைத் துவங்குவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. பி.எஸ். துரைசாமி; பேரவைத் தலைவர் அவர்களே, அது மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பது அரசுக்குத் தெரிந்த விஷயம். ஆகவே இப்போது இல்லை என்று தெரிவித்தாலும் பெண்களுக்கு அங்கே கல்லூரி அவசியம் என்பதைப் பற்றி பரிசீலனை செய்யுமா அரசு என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தர்மபுரி என்று கேட்டதனால் நான் இல்லை என்று சொல்லி இருக்கிறேன். வேறு இடத்தைக் குறிப்பிட்டுக் கேட்டால் கூட இல்லை என்ற பதிலைத்தான் நான் சொல்லி இருப்பேன். அதற்குக் காரணம் மூன்று ஆண்டு காலத்திற்கு கல்லூரிகளை எங்கேயும் துவங்குவதில்லை என்ற முடிவிலே இருக்கிறோம். ஆனால் அதை மாற்றி புதிதாகக் கல்லூரிகளை ஆரம்பிக்கலாமா என்ற யோசனை இப்போது இருக்கின்றது. ஆகவே அப்படி முடிவு எடுத்ததற்குப் பிறகு பார்க்கலாம்.

திரு. க. இரா. சின்னராசு; தலைவர் அவர்களே, தமிழகத்திலே புதிதாகக் கல்லூரிகள் எதுவும் துவக்குவதாக இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே இரண்டு ஆண்கள் கலைக் கல்லூரிகள்தான் இருந்துகொண்டு இருக்கின்றன. ஆகவே பெண்கள் வெளி இடங்களுக்குச் சென்றுதான் படிக்க வேண்டிய நிலைமை இருப்பதால் இதுபற்றி ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ் அங்கே பெண்கள் கலைக் கல்லூரியை ஏற்படுத்த அரசு முன்வருமா அமைச்சர் அவர்கள் அதற்கான முயற்சியினை எடுப்பார்களா

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் ; தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற கலைக் கல்லூரிகளின் மூலமாகவே போதுமான அளவுக்கு கல்வியினைத் தரமுடியும் என்ற நிலையிலே இருந்துகொண்டிருக்கிறோம். புதிதாகத் துவங்குவது என்பதைப் பொறுத்தவரையிலே பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம் என்னவென்றால் அடிப்படைக் கல்வியினையே முழுமையாகத் தர முடியாத அளவுக்கு நிலைமைகள் இருக்கின்ற போது கல்லூரிக் கல்விக்குப் போய் பணத்தச் செலவு செய்து கொண்டிருக்க வேண்டுமா என்று மத்திய அரசு இந்த 5, 6 ஆண்டுக் காலமாக கல்லூரிகள் புதிதாக ஆரம்பிப்பதைத் தடுத்து வருகின்றது. வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றது. ஆகவே நாம் அதுபற்றிப் பரிசீலனை செய்கின்றபோது சிறப்பான நிலைமைகளை அனுசரித்துதான் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.



## திருப்பூர் சிக்கண்ணா அரசினர் கலைக்கல்லூரியில் முதுகலை வரலாற்று வகுப்பினை ஏற்படுத்துதல்

* வினா எண். 1085—திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) திருப்பூர் சிக்கண்ணா அரசினர் கலைக்கல்லூரி மாணவர்கள் முதுகலை வரலாற்று வகுப்பு வேண்டும் என்று கோரிக்கை எழுப்பியுள்ளார்களா ?

(ஆ) அப்படியென்றால் முதுகலை வரலாற்று வகுப்பு ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) ஆம்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரியினை ஆரம்பித்த காலத்திலே இருந்தே முதுகலை வகுப்பு வேண்டும் என்ற கோரிக்கை பலமாக அரசுக்கு தெரிவிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இப்போது அப்படி ஏற்படுத்துகின்ற உத்தேசம் இருக் ின்றது என்று அமைச்சரவர்கள் சொல்லி இருப்பதற்காக நன்றி யினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அது எப்போது துவக்கப்படும்? அதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்ந்து உடனடியாக அது அமைக்கப்படுமா?

[முற்பகல் 10.10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அதற்கான அனுமதியைக் கேட்டு பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பம் அனுப்பப் பெற்றிருக்கிறது. அவர்கள் அங்குள்ள வசதி வாய்ப்புகளை ஆராய்ந்து, கொடுக்கிற முடிவுகளுக்குப் பிறகுதான் வகுப்புகள் ஆரம்பிக்கப் பெறவேண்டும். இந்த ஆண்டே வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில், அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று இன்னொரு கோரிக்கையும் எழுப்பப் பட்டிருக்கிறது. சென்ற ஆண்டுதான் பி. எஸ். ஸி.-கெமிஸ்ட்டிரி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது: தற்போது ஜுவாலஜி வகுப்பு வேண்டும் என்று கோரிக்கைகளை எழுப்பியிருக்கிறார்கள். அதற்கான மனு கூட அரசுக்கு அனுப்பப் பெற்றிருக்கிறது. பல்கலைக் கழகத்திற்கும் மனு அனுப்பியிருக்கிறார்கள். ஜுவாலஜி வகுப்புக்குத் தேவையான அத்தனை நடவடிக்கை களையும் அங்கே ஏற்கெனவே அமைத்து வைத்திருக்கிறார்கள். சோதனைக் கூடங்கள் கூட கல்லூரியின் சார்பிலே கட்டப் பட்டிருக்கிறது. ஆகவே, அந்த கோரிக்கையும் ஏற்று, அந்த வகுப்புகளையும் ஏற்படுத்தி தருவதற்கு அரசு ஆவன செய்யுமா? அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறியவிரும்புகிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக வகுப்புகளைத் துவக்குவது என்பது ஒவ்வொரு கல்லூரிக்கும் இருக்கும் வசதிகளை அடிப்படையாக வைத்து, ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது ஒரு வகுப்பினைத் தொடங்குவதாக இருக்கிறோமே தவிர, ஒரே வருடத்தில் ஒரு கல்லூரிக்கே இரண்டு மூன்று வகுப்புகளைத் துவக்குவது சரியில்லை. அதுவும் திருப்பூர் போன்ற இடங்களில் துவக்குவது கடினமான காரியம், இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில். ஆகவே இரண்டில் ஏதாவதொன்றை, ஒன்று முதுநிலை வகுப்புகள் அல்லது ஜுவாலஜி பட்டப்படிப்பை துவங்குவதற்கு, அரசு முயற்சிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கான மதிய உணவு

* வினா எண். 1086—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவிற்கு பதினைந்து காசு என்பதை உயர்த்த அரசிடம் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு உயர்த்தப்படும்?

(இ) எப்போது முதல் அமுல் நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ). இல்லை. (ஆ). மற்றும் (இ):—இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு இப்பொழுது கொடுக்கக் கூடிய அந்த மதிய உணவிற்கான தொகை 15 காசு என்று சொல்லப்படுகிறது. அதுவும் இந்த ஆண்டிலிருந்துதான் நிர்ணயிக்கப்பட்டது என்பதை அறிவதோடு, இந்த மதிய உணவுத் திட்டத்திற்கு அந்தந்த ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தும் பணம் கொடுக்கப்படுவதாக தெரிகிறது. அதில் பல பஞ்சாயத்துக்களில் நிதி இல்லாத காரணத்தால், இந்தப் பணம் கொடுப்பது தாமதமாகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? அதேபோல இன்றைக்கு இருக்கக் கூடிய விலைவாசிகளைக் கணக்கில் கொண்டு, ஒரு கத்தரிக்காய் வாங்கவேண்டுமானாலும் கூட 2 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது—ஆகவே இதைக் கணக்கில் கொண்டு, இந்த மதிய உணவுத் திட்டத்திற்கான தொகையை இன்னும் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா என்றும் அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1957 முதல் 30-9-1974 முடிய அரசு இந்தத் திட்டத்திற்காக கொடுக்கும் மானியம் 6 காசு, உள்ளாட்சி மன்றங்கள் கொடுக்கும் மானியம் 4 காசு, ஆக 10 காசாக



அப்போது இருந்தது. தற்போது அரசு கொடுக்கும் மானியம் 1-10-74 லிருந்து 10 காசு, உள்ளாட்சிகள் கொடுப்பது 5 காசு, ஆக மொத்தம் 15 காசு செலவழிக்கப்படுகிறது. நிதி ஆதாரங்கள் அதிகமாக உள்ள உள்ளாட்சி மன்றங்கள் 5 காசுக்கு அதிகமாகவும் தரலாம் என்ற ஒரு வாய்ப்பும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி தற்போது அதை உயர்த்துவதற்கான உத்தேசம் இல்லை என்று சொல்வதற்குக் காரணம், இப்பொழுதே நாம் அதிகப்படியான பணத்தைத் தந்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான். அதிகப்படியான குழந்தைகளுக்கும் இந்த உணவு தந்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, தற்போது இருக்கிற நிதி ஆதாரங்களை வைத்து பார்க்கிறபோது, அதை உயர்த்துவதற்கான உத்தேசம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிய உணவுத் திட்டத்திற்குக் கொடுக்கக் கூடிய தொகையை 3 பிரிவுகளாக கொடுக்காமல், அரசே இந்தத் தொகை முழுவதையும் ஏற்று, நேரிடையாகக் கொடுப்பதற்கு முன் வருமா என்று கேட்டுக் கொள்வதோடு, இன்று கிராமப்புறங்களிலே பாலர் பள்ளிகள் என்ற பெயரில் 5 வயதுக்கு கீழ் உள்ள பிள்ளைகளுக்காக தொடங்கப்பட்டிருக்கிறதே அந்தக் குழந்தைகளுக்கும் மதிய உணவு வழங்க அரசு பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு, தென்னாற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில், மைய சமையல் கூட திட்டம் என்று ஒரு திட்டத்தை நாம் அமுல் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் முழு செலவும் நேரிடையாக அரசு பணத்திலிருந்துதான் தரப்படுகிறது. அந்தந்த மாவட்டங்களில் இருக்கிற உள்ளாட்சி மன்றம் அதன் பங்குத் தொகையை, அரசு கருவூலத்தில் செலுத்தி விடுகின்றன. நாம் மொத்தமாக தந்து விடுகிறோம். அந்த மைய சமையல் கூடங்களில் சமையல் செய்யப்பட்டு, எல்லா இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. அந்த திட்டம் தற்போது செங்கல்பட்டு, தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் அமுலில் இருக்கிறது. தற்போது தர்மபுரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க முடிவு செய்து, அதற்கான அனுமதியை மத்திய அரசிடம் கேட்டு, கிடைக்கப் பெற்று, தர்மபுரி மாவட்டத்தில் 14 சமையல் கூடங்களையும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 34 சமையல் கூடங்களையும் ஏற்படுத்துவதற்கான நிதி உதவியை கோரி, மத்திய அரசை அனுமதி கேட்டிருந்தோம்.

அதிலே, 1979-80ல் ஐந்து சமையல்கூடங்கள் மட்டுமே உதவி பெற மையஅரசு அனுமதி தந்திருக்கிற காரணத்தால் அந்த இரண்டு மாவட்டங்களிலும் இந்த மைய சமையற்கூடத் திட்டம் சில இடங்களில் வர இருக்கிறது. அது வரும்போது மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் நேரடியாகச் செய்கிற நிலை ஏற்படும். ஆசிரியர்களுக்கும் இந்தப் பொறுப்பு குறைவாக இருக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : நம்முடைய அரசாங்கத்தினிடம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் ஊதிய உயர்வு வேண்டும், பஞ்சப்படி உயர்வு வேண்டும் என்று போராட்டம் நடத்தி அதன் மூலம் பல்வேறு கால கட்டங்களில் பெற்றிருக்கிறார்கள். எனவே போராடத் தெரியாத இந்தச் சின்ன குழந்தைகள், பிஞ்சு வயது குழந்தைகள் நன்றாக உண்டு படிப்பில் நன்கு கவனம் செலுத்தும் வகையில் இந்த ஆண்டிலிருந்தாவது இந்த மதிய உணவிற்கான தொகையை உயர்த்திக் கொடுக்குமா? இந்த ஆண்டு தாராளமாக மதுக்கடைகளைத் திறக்க இருக்கிறோம். நிறையவருமானம் வரும். ஆகவே மதிய உணவிற்காக அளிக்கப்படுகிற தொகையை இந்த ஆண்டிலிருந்தாவது அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வருமானம் வரும் என்பதை அடிப்படையாக வைத்துக்கொண்டு நாம் செலவை ஏற்படுத்துவது என்பதல்ல. அதற்கு வேறு செலவுகள் இருந்து கொண்டிருக்கின்றன. எதிர்பாராத வறட்சி நிவாரணம், விவசாயிகள் கடன்களைத் தீர்ப்பது என்ற பாரத்தை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது, அதற்கு மத்தியஅரசு உதவி கிடைக்கும் என்று நம்பியிருந்தோம். அது கிடைக்காது என்ற காலம் வந்து விட்டது. அதுவும் எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்ட ஒன்றுதான். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவெனில், குழந்தைகளைப் போராட வேண்டுமென்று தூண்டுகிறமாதிரி....

திரு. என். எஸ். வி. சித்தன் : 'போராடத் தெரியாத' என்றுதான் சொன்னேன். பிஞ்சு உள்ளங்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். நமக்குத் தெரியாமல் இருக்கிறது என்று சொல்லமுடியாது. மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் இருக்கிறபோது குழந்தைகளுக்காக தாராளமாகப் பேசலாம், போராடலாம், வாதாடலாம். ஆனால் இருக்கிற நிலையில் நம்மிடம் இருக்கிற நிதி ஆதாரங்களை வைத்து பார்க்கிறபோது இப்போது நாம் அதை அதிகப்படுத்துகிற நிலைமையில் இல்லை.

திரு. சி. கோபால் : இந்த மதிய உணவிற்கு வழங்குகிற தொகையை உயர்த்துவது பற்றி அரசுக்கு உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மதிய உணவு என்பது ஏழை எளிய குழந்தைகளுக்குத்தான் அளிக்கப்பட்டு வருகிறது. அதிலே கோடைவிடுமுறையில் மூன்று மாத காலம், அரை ஆண்டு விடுமுறையில் சில நாட்கள், கால் ஆண்டு



விடுமுறையில் சில நாட்கள் என்று விடுமுறை விடும்போது அந்த விடுமுறை நாட்களில் இந்த சிறு குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கப்படுவதில்லை. ஆகவே அடுத்த ஆண்டிலிருந்தாவது எந்தநேரத்திலும் இந்தக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டும் குழந்தைகளுடைய குடும்பங்கள் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டும் விடுமுறை நாட்களில் கூட இந்தக் குழந்தைகளுக்கு மதிய உணவு போடலாமா என்ற ஒரு யோசனையை, விருப்பத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அப்படி அந்த முடிவு ஏற்படுமானால் விடுமுறை நாட்களில்கூட அந்தக் குழந்தைகள் அங்கு வந்து மதிய உணவு பெறமுடியும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தற்போதிருக்கிற பொருளாதாரச் சூழ்நிலையில் 15 காசுக்கு அதிகமாக கூட்டிக்கொடுப்பதற்கில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 15 காசு கொடுக்கிற இந்தக் காலத்தில் மைய சமையற்கூடங்களுக்கு அரிசி போன்றவை மலிவுவிலையில் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 15 காசில்மட்டும் சாப்பாடு போட்டுக்கொண்டிருப்பதாக நான் சொல்லவில்லை. ஒன்பது கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களை 20 இலட்சம் மாணவர்களுக்கு 'கேர்' ஸ்தாபனம் உதவி செய்து கொண்டிருக்கின்றது. அப்படிப்பார்த்தால் அது ஆண்டு ஒன்றுக்கு ரூ 45 உதவியாக வருகிறது. ஒரு நாளைக்கு $22\frac{1}{2}$ காசு வருகிறது, நாம் கொடுக்கிற 15 காசையும் சேர்த்தால் $37\frac{1}{2}$ காசு அல்லது 40 காசுக்கு சமமான உணவை அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. செ. சிவசாமி : ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு, மதிய உணவு இதுவரை போடப்படாத பள்ளிகளுக்கு மீண்டும் சப்ளை செய்யப்படுமா? அப்படிப்பட்ட பள்ளிகள் எவ்வளவுஇருக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் என்று சொல்லப்படுகிற 1 முதல் 8 வகுப்பு வரை இருக்கிற அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு, 1 முதல் 5 அல்லது 1 முதல் 8 வரை என்று இப்படி இருக்கிற தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளில் உள்ள 20.2 இலட்சம் மாணவர்களுக்கு நாம் உணவு தந்து கொண்டிருக்கிறோம் என்ற கணக்குதான் இருக்கிறது. அப்படி தரப்படாத பள்ளிகள் ஏதேனும் இருந்தால் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் மதிய உணவிற்கு ஏற்பாடு செய்யப்படும்.

[முற்பகல் 10-20]

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நெருக்கடி நிலைமையின் காரணமாக மதிய உணவிற்கு அதிகத் தொகை ஒதுக்க முடியவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நம்முடைய மாநில அரசின் பொருளாதாரம் சவுண்டாக இருக்கின்றது என்று சொன்னார்கள். ஆகவே, நான் கேட்க விரும்புவதெல்லாம், இன்றைக்கு இல்லாவிட்டாலும் அடுத்த 3 மாதங்கள் கழித்தாவது, இதை புனர் பரிசீலனை செய்து, ஒரு மாணவனுக்கு 25 பைசா என்ற அளவிற் உயர்த்திக் கொடுக்க இந்த அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரம் இம்ப்ருவ் ஆகும்போது அதைப்பற்றி மறுபடியும் பரிசீலனை செய்யலாம். ஆனால், இப்போது இருக்கிற நிலைமையில் அவர்கள் சவுண்டாக இருக்கிறது என்று சொன்னார்கள். 15 காசு கொடுக்கக்கூடிய நிலைமையில் நிதி நிலை சவுண்டாக இருக்கிறது.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளிகளிலே உள்ள மாணவர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பள்ளிப் படிப்பு முடிந்த பிறகு, கல்லூரிக்கு வருகின்ற மாணவர்கள் பல பேர்கள் இன்றைக்கு மதிய உணவுக்கு வழி இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இதைக் கருத்திலே கொண்டு தான் நான் சென்னை லயோலா கல்லூரியிலே படித்துக் கொண்டிருந்தபோது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அந்தக் கல்லூரியிலே படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கு மதிய உணவுக்கு வழியில்லாத மாணவர்களுக்கு 11,000 ரூபாய் நன்கொடையாகக் கொடுத்து, மதிய உணவுத் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். இப்போது பொறுப்பேற்றுள்ள இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு, கல்லூரியிலே படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு அளித்திடும் சிறப்புத் திட்டம் ஏதாகிலும் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எந்தவிதமானத் திட்டமும் இப்போது அரசிடம் இல்லை. 6வது, 7வது, 8வது படிக்கின்ற உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு,நாம் கொடுக்காமல் இருக்கிறோம். ஆகவே, இதே வயதுள்ள குழந்தைகளுக்கு உயர்நிலைப் பள்ளிக் குழந்தைகளுக்கு மதியஉணவு தருவதைப் பற்றி ஆராய்ந்து, யோசித்து முடிவெடுத்த பிறகு, கல்லூரியிலே உள்ளவர்களைப் பற்றி கவலைப்படலாம், இப்படி அவர்களிடமிருந்து இப்போது எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை.



கொடைக்கானலில் கெடிகார தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 1090— திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் நகரில் கெடிகார தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் ஒரே பதிலில் இல்லை என்று கூறி விட்டார்கள். கொடைக்கானல் சீதோஷ்ண நிலை தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்றதாக இருப்பதால், பெரியகுளம் தொகுதியில் எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லை என்ற குறையைப் போக்க, கொடைக்கானலிலே ஒரு கடிகார தொழிற்சாலை அமைப்பதற்கு மறு பரிசீலனையை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடிகாரத் தொழிற்சாலை ஒன்று துவக்குவதற்கான பரிசீலனை அரசிடம் இருக்கிறது. ஆனால், இடம் வேறு இடமாக இருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 2 மில்லியன் கடிகாரம் உற்பத்தி செய்கின்ற யூனிட் கொண்டதாக 6 கோடி ரூபாய் அளவில் டிட்கோ நிறுவனம், டாட்டா நிறுவனத்தைக் கூட்டுத்துறை முனைவராக சேர்த்துக்கொண்டு பிரான்சு, ஸ்விட்சர்லாந்து நாடுகளின் தொழில் நுட்ப உதவியோடு 6 கோடி மதிப்பீட்டில், 1000 பேர்களுக்கு வேலை கொடுக்கின்ற அளவில் ஒரு கைக்கடிகார தொழிற்சாலையைத் துவங்கயிருக்கிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஒசூரில் துவங்கயிருப்பதாகச் சொன்னார்கள். கொடைக்கானலில் இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஏதேனும் அந்தப் பகுதியில் ஆய்வு செய்யப்பட்டதா அல்லது பரிசீலனை செய்யப்பட்டதா? அதற்காக என்ன இடத்திலே என்று ஏதாவது சர்வே செய்யப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு பல இடங்களிலே நடைபெற்றிருக்கலாம். ஆனால், ஒசூரில் தான் அந்தத் தொழிற்சாலை நிறுவப்படும் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

## கூட்டுத்துறையில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்துதல்

* வினா எண். 1091—திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு நிறுவனமான டிட்கோவும் அசோக் லேலண்ட் நிறுவனத்தாரும் சேர்ந்து கூட்டுத்துறையில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை புதுக்கோட்டையில் ஏற்படுத்த உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் டிட்கோ மூலதனம் என்ன? அசோக் லேலண்ட் மூலதனம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்;

(ஆ) இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு ஏறக்குறைய 15 கோடி ரூபாய்; சுமார் 500 பேருக்கு வேலை கிடைக்கும் விதத்தில் அசோக் லேலண்ட் நிறுவனமும் டிட்கோ நிறுவனமும் இணைந்து இந்த நிறுவனத்தை புதுக்கோட்டையிலே ஆரம்பிக்க இருக்கிறார்கள்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு தலைவரவர்களே, புதுக்கோட்டையிலே ஆரம்பிக்கப்படவிருக்கிற அந்த தொழிற்சாலைக்கு எத்தனை ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதுக்கோட்டையிலே வெகு விரைவில் அந்த தொழிற்சாலை துவங்கவேண்டுமென்று காட்டுகிற ஆர்வத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது முடிவுகள் எடுத்த நிலையில் இருக்கிறது. நில ஆர்ஜித வேலை இன்னும் நடக்கவில்லை. வெகு விரைவில் அந்த பணிகள் முடிவுறும்.

## சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான ஐ. ஏ. எஸ் பயிற்சி நிலையம்.

*வினா எண். 1092—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஐ. ஏ. எஸ். பயிற்சி கொடுக்கும் நிலையத்தில் (P.E.T.C.) ஆண்டுக்கு எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?

(ஆ) முழு ஒதுக்கீடு நிரப்பப்படாமல் காலி இடங்கள் ஏற்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

[*172ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]



திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஐ. ஏ. எஸ். பயிற்சி கொடுக்கும் பயிற்சி நிலையத்தில் கடந்த 14 ஆண்டுகளாக சேர்ந்த மாணவர்களின் அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள். கடந்த 14 ஆண்டு காலமாக அதனுடைய மொத்த அளவான 60 என்ற எண்ணிக்கை நிரப்பப்படாமலே இருந்து வருகிறது. இதற்கான காரணம் என்ன? அரசு இது பற்றி ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறதே, தாழ்த்தப்பட்ட மாணவர்களை முன்னுக்கு கொண்டு வருவதற்கு அதற்கான முயற்சியிலே அரசு இவ்வளவு 'அசால்ட்டாக' இருக்கிறதே, இந்த நிலை ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்த வரையில் இத்தகைய மாணவர்களுடைய நன்மையைக் கருதி தான் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. ஆனால் இந்த பயிற்சி நிலையத்திற்கு மாணவர்களை தேர்வு செய்கிறபோது, மாணவர்களுடைய விண்ணப்பங்கள் போதுமான அளவிற்கு வராததின் காரணமாக முழு எண்ணிக்கையில் சேர்க்க முடியவில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது போதுமான அளவிற்கு மாணவர்கள் வரவில்லை என்று இப்போது சொல்லியிருக்கிறார். ஆனால் கொடுத்திருக்கிற விவர அறிக்கையில் சுற்றுப்புற சுகாதார வசதிகள் போதியனவாக இல்லாததால் ஒவ்வொரு ஆண்டும் குறைவாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பதிலுக்கும், கொடுத்திருக்கிற அறிக்கைக்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் இந்த ஐ.ஏ.எஸ். பயிற்சி பெற்று கலெக்டர்களாக வந்தால் அந்த சமுதாயத்திற்கு உதவி செய்வதற்கு வழியாக இருக்கும். தங்கிப் படிப்பதற்கு பயிற்சி இடங்கள் நல்ல முறையில் வைத்து, மாணவர்கள் பயிற்சி பெற அரசு முயற்சிகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பயிற்சி நிலைய கட்டிடத்தைப் பொறுத்தவரை தற்போது அரசு இரண்டாயிரம் ரூபாய் மாத வாடகையாக தந்து வருகிறது. இந்த கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருக்கிற காரணத்தால், கட்டிட உரிமையாளர் அதற்குத் தேவையான வசதிகளை செய்து தருவதற்கு மறுத்திருப்பதன் காரணமாகவும், அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இது தவிர வேறு மாற்று வாடகை கட்டிடம் சென்னையில் கிடைக்காததால் இந்த கட்டிடத்தை விலைக்கு எடுத்து, அதில் இருக்கிற குறைகளை போக்குவதற்கு அரசு

முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இந்த தாழ்த்தப்பட்ட மாணவர்கள் நல்ல பதவியிலே வந்து, சமுதாயத்திற்கு தொண்டாற்றுகிற நிலைக்கு வரவேண்டுமென்று நல்ல நோக்கத்தோடு தான் இந்த அரசைப் பொறுத்தவரை முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன், சென்ற ஆண்டைப் பொறுத்தவரை 60 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; ஆனாலும் அவர்கள் சேர்கிற நிலை வந்தபோது 53 பேர்கள் மட்டுமே சேர்ந்து ஜூன் 81-ல் நடக்கவிருக்கிற முதல்நிலை தேர்வுக்கு தற்போது பயின்று வருகிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சொன்னார்கள். மாணவர்கள் சரியாக வரவில்லை என்று, ஆனால் இது சரியானது அல்ல. காரணம் ஒவ்வொரு ஆண்டு தேர்விலும் நான் 'டைரக்டர் ஆப் ஹரிஜன் வெல்பேர், மற்ற அதிகாரிகளை சந்தித்து பேசியிருக்கிறேன். மாணவர்கள் நிறைய வந்திருக்கிறார்கள். இடவசதி பற்றாக்குறை, பாத்ரூம் இல்லாத குறை, போதுமான மேசை, நாற்காலி இல்லாத நிலையில், அதிகாரிகள் தான் இவ்வளவுதான் எடுக்க முடியும் என்று எடுக்கிறார்களே, இது அரசுக்கு தெரியுமா என்பதோடு, நாம் மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாய் வீதம் வருஷத்திற்கு 24 ஆயிரம் வீதம் 14 வருஷங்கள் வாடகை கொடுத்து இருக்கிறோம். அதிக வாடகை கொடுக்கிறோம் ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு கட்டடத்தை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா? அதோடு மாணவர்கள் அதிகமாக வந்தார்கள், ஆனால் இடவசதிக் குறைவு என்ற காரணத்தினால் அந்த அதிகாரிகள் தான் குறைத்து எடுத்தார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

[முற்பகல் 10.30]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே கட்டடத்தைப் பொறுத்த வரையில் நல்ல வசதிகளோடு இல்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். அங்கே மாணவர்கள் வந்து தங்கி வசதியாகப் படிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே தான் அரசு அந்தக் கட்டடத்தை விலைக்கு வாங்கி ரிப்பேர் செய்து நல்ல முறையிலே மாணவர்களுக்கு செய்து தரவேண்டுமென்று முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. இடவசதியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே சொன்னதைப் போன்று 60 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் சேர்த்துக் கொள்ளகூடிய காலம் வந்தபோது 53 பேர்கள் வந்தார்கள் என்பதை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இடவசதி இல்லாத நிலைமையும் அதற்கு ஒரு காரணமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.





கூவத்தூர் ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண். 1093—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி கூவத்தூர் ஆதி திராவிட மாணவர் விடுதி கட்டும் வேலை எந்த நிலையில் உள்ளது?

(ஆ) கட்டடம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மதுராந்தகம் தொகுதி கூவத்தூர் ஆதி திராவிட மாணவர் விடுதி கட்டும் வேலை ரூபாய் 3.80 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து ஏஜென்சியும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது.

(ஆ) இவ்வருடம் செப்டம்பர் மாதத்திற்குள் முடிவடைந்துவிடும் என திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவத்தூர் ஆதிதிராவிட மாணவர்கள் விடுதிக் கட்டட வேலை 1977 ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டது என்று எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. கால தாமதத்திற்கு என்ன காரணம்? யார் பொறுப்பு? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, 1977 அல்ல, 1975 இல் இந்தக் கட்டடம் தொடங்கப்பட்டு அடித்தளம் வரையில் கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் நிதி நிலைமை காரணமாக 75 இல் நிறுத்தப்பட்டது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 1980 இல் ஆணை அங்கீகரிக்கப்பட்டு அதற்காக ரூ. 3.80 லட்சத்தில் ஒதுக்கி அதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது.

கீழ்பாகம் கிராமம் வடிவேல்நகர் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குதல்.

*வினா எண். 1094—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி ஆண்டாங்கோவில் கீழ்பாகம் கிராமம் வடிவேல் நகர் ஆதிதிராவிடர்கட்கு வீட்டுமனைப்பட்டாவிற்கு நிலத்தைக் கையகப்படுத்தும் முறை நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூர் வட்டம், ஆண்டாங்கோவில் கீழ்பாகம் கிராமம் வடிவேல் நகரில் 28 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கும் திருக்கம்புலியூர் கிராமத்தில் 107 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கும் வீட்டுமனை வழங்க ஆண்டாங்கோவில் கீழ்பாகம் கிராமம் நில அளவை எண் 603-ல் 7.78 ஏக்கர் புன்செய் நிலம் கையகப்படுத்த மாவட்ட ஆட்சியரின் 4 (1) அறிவிக்கை முன்மொழிவிற்கு சமூகநலத்துறையின் 1-2-78 நாளிட்ட வாலாய அரசாணை எண் 257-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் 6 விளம்பல் முன்மொழிவை அரசுக்கு அனுப்பி வைத்தார். நிலச்சொந்தக்காரர் கையகப்படுத்தலை எதிர்த்து அரசுக்கு மனு அளித்தார். இவை அரசின் ஆய்வில் இருக்கையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் சட்டம் நடைமுறைக்கு வந்தது. புதிய சட்டத்தின்கீழ் நிலம் கையகப்படுத்தல் நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சியர் கோரப்பட்டார். மாவட்ட ஆட்சியர், நிலச்சொந்தக்காரர் கையகப்படுத்த அறிவிக்கை செய்யப்பட்ட நிலத்தை வீட்டு மனைகளாக்கி வீடற்றவர்களுக்கு விற்றுவிட்டாரெனவும் மனைகளை வாங்கியவர்கள் வீடற்றவர்களாக உள்ளதால், வேறு நிலம் கையகப்படுத்த வேண்டி உள்ளதெனவும் தெரிவித்தார். அவரது கருத்தினை ஏற்று வேறு நிலம் கையகப்படுத்தும்படி மாவட்ட ஆட்சியர் கோரப்பட்டார். இதன்மீது மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார். எனவே கையகப்படுத்தல் நடவடிக்கை நிறுத்தப்படவில்லை.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாற்று நிலம் பார்க்கிற திட்டம் கூட ஒரு ஆண்டுக்காலமாக அப்படியே நிலுவையிலே இருக்கிறது. ஆகவே குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, 3, 4 மாதம் என்று வரையறுத்து அதற்குள்ளாக அந்த நிலத்தை கையகப்படுத்த வேண்டுமென்று அரசு தக்க உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டிருந்த நிலத்தின் நீக்கல் அறிவிப்பு 1-4-81 அன்று அரசு பதிவிதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆகவேதான் அதற்கான தாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் கரூரில் உள்ள ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியரிடமிருந்து முன் மொழிவைப் பெற்றவுடன் அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு உடனடியாக அந்த நிலத்தினைக் கையகப்படுத்த வேண்டுமென்று மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தும்.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை அமைக்க நிலத்தைக் கையகப்படுத்தும்பொழுது அதிக விலையுள்ள நிலங்களைக் குறைந்த விலைக்கு அரசு கேட்பதால் நிலச் சொந்தக்காரர்கள் தர மறுத்து சற்றுக் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இவற்றைப் போக்குவதற்கு மாற்று வழிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று அதிலே இருக்கின்ற நியாய உணர்வுகளை உணர்ந்து குறையை நீக்குவதற்காக என்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ அத்தகைய முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

கெம்ப்ளாஸ்ட் தொழிற்சாலைக்கு அளிக்கப்பட்ட வரி விலக்கு.

* குறுகியகால வினா எண். 20—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெம்ப்ளாஸ்ட் என்ற தொழிற்சாலைக்கு அரசு வரி விலக்கு ஏதேனும் அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

(இ) அந்த நிறுவனம் கட்ட வேண்டிய வரி பாக்கி எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) 1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் வரி விலக்கு கொடுக்கப்பட்டது. 1965 ஆம் ஆண்டிலிருந்து 74 ஆம் ஆண்டு வரையிலும் அரசுக்கு அதனாலே நஷ்டம் 82,84,83,972 ரூபாய் 82 பைசா. இப்பொழுது அவர்கள் வரி கொடுக்க வேண்டியது பாக்கி 94,04,412 ரூபாய்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நிறுவனத்திற்கு எந்த ஆண்டு அனுமதி அளிக்கப்பட்டது? எவ்வளவு மூலதனத்தோடு இந்தத் தொழிற்சாலை துவக்கப்பட்டது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, நான் சொல்கிறபொழுது சொன்னேன், 1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் தேதி என்று சொல்லி விட்டேன். அதற்கு மூலதனம் அப்பொழுது அவர்கள் போட்டது 947 இலட்சம். அதாவது 9.47 கோடி.

திரு. எம். எஸ். மாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, வரிவிலக்கு எத்தனை ஆண்டுகளுக்குக் கொடுக்கப்பட்டது? இதைப் போல மற்ற எந்த நிறுவனங்களுக்காவது வரிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, வரிவிலக்கு கொடுக்கிறபொழுது புதிதாக ஆரம்பிக்கிற தொழிற்சாலை என்று அதற்காக வரிவிலக்கு இத்தனை ஆண்டு என்றுதான் கொடுப்பது வழக்கம் என்று நான் கருதுகிறேன்

ஆனால் அப்பொழுது எந்த ஆண்டு என்று சொல்லாமல் ஓ பனாகப் போட்டு விட்டார்கள்; உனக்கு வரி விலக்கு என்று. ஆனால் அதிலிருந்து அன்றைக்குக் கொடுத்த வரி விலக்கினாலே இன்றைக்கு நான் முதலிலே குறிப்பிட்டபடி 65-லிருந்து 74 வரையிலும் அரசுக்கு 82 கோடிக்கு அதிகமான நஷ்டம். ஆனால் இன்றைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன், இன்றைக்கு இது போன்று வேறு எந்த நிறுவனங்களுக்கும் வரி விலக்கு கொடுத்ததாக என்னிடத்திலே தகவல் இல்லை. ஆனால் இன்றைக்கு வரைக்கும் இந்த வரி விலக்கு கொடுத்ததனால் அரசுக்கு நஷ்டம் 200 கோடி. ஆனால் போட்ட முதலீடு ஒன்பதரை கோடிக்குக் குறைவாகும்; ஒன்பதரைக் கோடிக்கும் 3 இலட்சம் குறைவாக முதலீடு போட்டிருக்கிறார்கள். ஆனால் அரசுக்கு வரியிலிருந்து மட்டும் நஷ்டம் ஏழரை கோடி. இலாபம் எவ்வளவோ எனக்குத் தெரியாது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த கெம்ப்ளாஸ்ட் என்ற தொழிற்சாலைக்குச் சொந்தக்காரர் யார்? அந்தத் தொழிற்சாலைக்கு வரி விலக்கு அளிக்க வேண்டிய காரணம் என்ன? அந்த வரிவிலக்கு எப்பொழுது யார் காலத்தில் எந்த ஆட்சியிலே அளிக்கப்பட்டது? இதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க இப்பொழுது உத்தேசித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, கெம்ப்ளாஸ்ட் என்பது மட்டும்தான் எனக்குத் தெரியுமேயொழிய அதற்கு யார் சொந்தக்காரர்கள் என்ற விவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால் விசாரித்துச் சொல்லலாம், சொந்தக்காரர் பெயரெல்லாம் எனக்குத் தெரியாது.

[முற்பகல் 10.40]

THIRU R. UMANATH: It is an incidental question.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வருவாய் அமைச்சரிடம் ஆளைப் பற்றிக் கேட்கக் கூடாது, அவருக்கு வர வேண்டிய வருவாய் வந்து சேரவேண்டும்.

திரு. ரா. உமாநாத்: வரி விலக்கைப் பற்றி சொல்லும் போதே, It is an incidental question. He must be ready for that.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் நான் மிக்க வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன், நான் யாரையும் காப்பாற்றுவதற்கு முயலமாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியும். இங்கே அவர்களுக்கு எவ்வளவு இலாபம் என்று எனக்குத் தெரியாது என்று சொல்லும்போது, அரசுக்கு ரூ. 200 கோடி நஷ்டம் வந்திருக்கிறது என்றேன். பேப்பரிலே நன்றாக,





8 காலம் எழுதவேண்டுமென்று நான் ஒன்றன் பின் ஒன்றாக மெதுவாக சொன்னது உங்களுக்குத் தெரியும். கெம்ப்ளாஸ்ட் நிறுவனத்தின் சொந்தக்காரர் யார் என்பது எனக்குத் தெரியாது. தெரிந்தால் சொல்லத் தயாராக இருக்கிறேன். எந்த அரசு காலத்தில் கொடுக்கப்பட்டது என்ற கேள்விக்கு நான் பதில் சொல்லிவிட்டேன். 1965 ஜனவரி மாதம் 29 ஆம் தேதி என்று சொல்லி விட்டேன். ஆகையால் எந்த அரசு என்று நீங்கள் கேட்க வேண்டியது இல்லை. ஆனால், இதற்கு முந்தைய அரசாக இருந்தாலும்' ஒரு காரணம் காட்டி, புதிதாக வருகிற நிறுவனம். இது மக்களுக்குத் தேவைப்படுகிறது, இன்றைக்குத் தேவைப்படுகிறது, என்றால் அதற்காக வரி விலக்குக் கொடுக்க அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால், கொடுத்த அரசாங்கத்தின்மீது நடவடிக்கை எடுப்பதற்கு முடியாது. அப்பொழுது கொடுத்திருக்கிறார்கள். நிலைமையை மட்டும்தான் நான் இங்கே சொன்னேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெம்ப்ளாஸ்ட் நிறுவனத்திடமிருந்து 1974—க்குப் பிறகு அரசு எவ்வளவு வரி வசூலித்திருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் வரி விலக்கு 1965 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் தேதி கொடுத்தார்கள். ஆனால் அதற்கும் பிறகு 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29—ஆம் தேதி அந்தச் சலுகையில் சிலவற்றைக் குறைத்தார்கள். அந்தச் சலுகைகளைக் குறைக்கிற பொழுது, உங்களுக்குச் சொல்லவேண்டுமானால்' அதிலே இருக்கிற ஆயத்தீர்வை ரூ. 8 கட்ட வேண்டும் விட்டருக்கு. ரூ. 8 கட்ட வேண்டாம். இனி 16.6 பைசா கட்டினால் போதும் கால்வனைஸ்ட் ஃபீஸ் ரூ.1 கொடுத்ததற்குப் பதிலாக 10 பைசா கட்டினால் போதும் என்று சொன்னார்கள். அப்பொழுது அப்படி போட்டதன் மூலமாக. 1974-லிருந்து 1978 வரையிலும் ரூ. 1 கோடியே 5 இலட்சம் வந்தது. அந்தக் காலத்திற்குள் அவர்கள் கட்டவேண்டியது எவ்வளவு என்றால், ரூ. 52 கோடியே 9 இலட்சம். 1974-லிருந்து 1978 வரையிலும் வரி விலக்கு இல்லா விட்டாலும், கட்டவேண்டியது ரூ. 52 கோடி. ஆனால், ரூ. 1 கோடிதான் அப்பொழுது வசூலிக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த அரசு வந்த பிறகு அதிகம் வசூலிக்க முயற்சி செய்தாலும்' உச்ச நீதி மன்றத்திலே அதற்குத் தடை உத்தரவு வாங்கி இருக்கிறார்கள், வழக்காடி கொண்டிருக்கிறார்கள். அரசு தீவிர நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, தமிழகத்திலே எத்தனையோ தொழிற்சாலைக இருக்க ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலைக்கு வரி விலக்கு கொடு பதற்கு ஏதாவது நிச்சயமான காரணம் இருந்திருக்க வேண்டு

அப்பொழுது அந்த நிறுவனத்தினர் என்ன காரணத்தைக் காட்டி, அரசிடம் வரி விலக்கு கேட்டார்கள். என்ன காரணங்களை ஏற்றுக்கொண்டு அரசு அவர்களுக்கு வரி விலக்கு கொடுத்தது. அவர்கள் தயாரித்த பொருள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே பி. வி. சி. என்ற பைப் தயாரிக்கிற நிறுவனம் இது மட்டும்தான் இப்பொழுதுகூட. அப்பொழுதும் இதுமட்டும்தான் இருந்தது. நான் முதலிலேயே சொன்னேன், ஒரு தொழிற்சாலை வந்தால் மக்களுக்குப் பயன்படுகிற பொருள்களை உற்பத்தி செய்தால், அவர்களுக்கு வரி விலக்கு அந்த அரசு கொடுத்திருக்கிறது என்றால், அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்று நான் சொல்லி இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்

### அ. செய்திச் சுருக்கம்-குழுக்கள் நியமனம்

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, குழுக்கள் நியமனத்தைப்பற்றி நாம் காலத்தை நீட்டித்து தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம். ஆனால் அது அனுப்பப்பட்டுள்ள ஜிஸ்ட் ஆப் புரொசீடிங்கில் சேர்க்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய முன் தினம் நடந்த கூட்டத்திலே அரசின் ஒரு தீர்மானத்தின் மூலமாக குழுக்கள் எல்லாம் ஓர் ஆண்டு காலத்திற்கு நீட்டிக்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதுபற்றி திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்கு அச்சடித்து அனுப்பப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆ. ஸ்டான்லி மருத்துவமனையில் காணப்பெறும் குறைபாடு.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, கடந்த 5,6, நாட்களாக சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் நோயாளிகளுக்கு ரொட்டி, பழம், பால் போன்றவைகள் எதுவும் சப்ளை செய்யப்படவில்லை. நேற்றையதினம் நான் ஸ்டான்லி மருத்துவமனைக்குச் சென்றிருந்தபோது.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் ஸ்டான்லி மருத்துவமனைக்குச் சென்றதற்கு நன்றி. இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரிடம் புகார் கொடுங்கள்.



## 3. உரிமை பிரச்சினைகள்

அ. பேரவை நடைபெறும்போது அரசின் கொள்கைப் பற்றிய அறிவிப்புகளை அவையில் வெளியிடுவதற்கு முன் துறை அதிகாரி நாளேடுகளுக்குத் தெரிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 246—வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. ப தீர்த்தராமன், திரு. எஸ். என். இராமசாமி, திரு. இ. முத்துராமலிங்கம் ஆகியோர், அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப என் அனுமதி கேட்டு முன்னறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள்.

காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் 5-5—1981 அன்று பேரவையில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கையில் 3-5-1981 நாளிட்ட ''தினமணி'' நாளேட்டில் அத்துறையில் எடுக்கப்பட இருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி உள் துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்றும் இது அவை உரிமை மீறிய செயலாகும், என்றும் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அரசின் கொள்கைப் பற்றிய அறிவிப்புகள், பேரவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பேரவையில்தான் செய்யவேண்டும் என்பது மரபுதானேயொழிய, அப்படிச் செய்யாதது உரிமை மீறல் ஆகாது என்று பல தீர்ப்புகள் உள்ளன. இதே போன்று இதில் அவை உரிமை மீறல் இல்லை என்று தான் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

எனவே இங்கு எழுப்பப்பட்ட பிரச்சினையிலும் அவை உரிமை மீறல் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன். ஆயினும் இப்படி நிகழ்வது இது முதல் முறை இல்லை என்பதாலும் துறைகளுக்கு அறிவுறுத்த இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாம் என்று நான் கருதுவதாலும் இப்பிரச்சினையை பேரவையில் எடுத்து எனது தீர்ப்பினை அளிக்கிறேன். கொள்கை பற்றிய ஒரு பிரச்சினையை, அதுவும் மானியக் கோரிக்கை பேரவையில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கையில், பத்திரிகையில் வெளியிடுவது சரியான மரபாகாது. எதிர்காலத்தில் இப்படி வெளியிடுவது தவிர்க்கப்பட வேண்டும். துறைகள் எச்சரிக்கையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

### ஆ. சட்டமன்றக் குழுக்களுடன் அரசுத் துறைகள் ஒத்துழைப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. பேரவையின் 246-விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்ப என் இசைவைக்கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் ஓர் முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார். என் இசைவை ஏன் அளிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களைச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

[1981 மே 13

திரு. ரா. உமாநாத் மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவையின் செயல்பாடுகளுக்குத் தடங்கல் யார் எற்படுத்தினாலும் அது அவையை அவமதிப்பதாக ஆகும். அதேபோல இந்த அவையின் குழுவின் வேலைகளைத் தடங்கல் செய்வது என்று வந்தாலும் கூட, அதுவும் அவையை அவமதிப்பதாக ஆகும். இந்த உரிமை மீறல் பிரச்சினை, பொதுக் கணக்குக் குழுவின் வேலையை அரசு இலாகாவில் உள்ள பல்வேறு முக்கியமான அதிகாரிகள் தடங்கல் செய்வது சம்பந்தமாகத்தான். பொதுக் கண க்குக் குழு, எந்த இலாகா விடம் இருந்து அப்ரோபிரியேஷன் அக்கவுன்ட்ஸ் சம்பந்தமாக, விளக்கக் குறிப்புகள் கேட்டால், அது கட்டாயமாக, தாமதமின்றி கொடுக்கப்படவேண்டும் என்பது தான் மரபல்ல.

It is the legal statutory duty on the part of the Government Department in the Secretariat.

கொடுப்பதில் அதிகமான காலதாமதம், காலதாமதமாகக் கொடுத்தாலும் அரைகுறையாக கொடுப்பது அல்லது விளக்கக் குறிப்பைக் கொடுக்காமலேயே இருந்தாலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த அவையில் குழுவின் வேலையைத் தடங்கல் செய்கிறார்கள் என்று பொருள். தமிழக அரசின் பல இலாகா அதிகாரிகள் நீண்டகாலமாக இந்த அரசு வருவதற்கு முன்னாலேயும் இப்படித் தடங்கல் செய்து வருகிறார்கள். இந்த அரசு வந்ததற்குப் பிறகும் தொடர்ந்து அவமதிக்கிறார்கள். எவ்வளவு ரிமைன்டர்கள் அனுப்பினாலும், விளக்கச் குறிப்புகளை பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டிக்கு அனுப்புவதில்லை. விளக்கமும் கொடுப்பதில்லை. அதைக் 'கேர்' பண்ணுவதுமில்லை. சிலர் மிகவும் தாமதமாகக் கொடுப்பது அப்படித் தாமதமாகக் கொடுத்தாலும், அரைகுறையாகக் கொடுப்பது, சிலர் 20 மாதம் ஆகியும் கூட விளக்கக் குறிப்பை அந்த குழுவிற்குக் கொடுக்க வில்லை. இது 7-வது ரிப்போர்ட்டு. 6-வது ரிப்போர்டிலேயே அதை ஸ்பெசிபிக்காக சொல்லி, வார்ன் செய்து இருக்கிறது. அப்படி வார்ன் பண்ணியதற்குப் பிறகும் கூட, அந்த நிலைமை இன்னும் தொடர்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்ந்து கட்டுப்படாமல் இருக்கக் கூடிய நிலையில், பொதுக் கணக்குக் குழு நிராதரவாக இருக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு இருக்கிறது.

[முற்பகல் 10.50]

நான் சொன்னது அவ்வளவும் உண்மை என்று ஊர்ஜிதம் செய்யக்கூடிய முறையிலே, இந்த அவமதிப்பு தாங்கமுடியாத சூழ் நிலையே அவர்கள் டெஸ்பரேட்டர்க கூறியிருக்கிறார்கள்.

In the First Report of the Public Accounts Committee 1980-81 of the Seventh Assembly, para 10 of 'Summary of Recommendations it is stated as follows:



1981 மே 13] [திரு ரா. உமாநாத்]

"The Committee observes that many Departments have taken unduly long time to furnish explanatory notes to the Committee in respect of appropriation accounts items. Some departments have not furnished explanatory notes at all or have furnished the notes at the last moment just before the meeting was convened to discuss this item. Even the notes furnished ofter such long delay have been incomplete in a number of cases.

என்ற முறையிலே அவர்களே அதைக் குறிப்பிட்டுள்ளார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இதன் பொருள் என்ன என்பதை நாம் புரிந்து கொள்வது என்று சொன்னால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இந்த அவையின் குழுவைப் பற்றி சற்றும் மதிப்பு இல்லை என்பது பொருளாகும். இந்த அவையின் குழுவை துச்சமாக மதிக் கிறார்கள் என்பது பொருளாகும. குறிப்பு கொடுக்காவிட்டால் இந்த கமிட்டி ஆக்ஷன் எடுக்குமே என்ற அச்சம் சிறிதும் அவர் களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. 'தே ஆர் நாட் அப்ரய்ட் ஆப் தி கமிட்டி' என்று தெரிகிறது. மேலும், இந்த அவை நடவடிக்கை எடுக்காதா? இது அவை ஏற்படுத்திய கமிட்டி ஆயிற்றே, அவை நடவடிக்கை எடுக்காதா என்ற பயம் கிஞ்சித்தும் இல்லை என்று தெரியவருகிறது. 'மாஸ்டர் அண்ட் சர்வென்ட்' என்ற முறையிலே 'பிட்வீன் தி கமிட்டி அன்ட் கர்சர்ன்ட் ஆபீசர்ஸ்' எல்லா அதிகாரிகளும் இல்லை சில அதிகாரிகள்-பழைய பிரிட்டிஷ் பீரியட்டில் இருந்த 'மாஸ்டர் அன்ட் சர்வென்ட் ஆட்டிட்டியூட்' இருக்கிறது. இதை நாம் டாலரேட் செய்ய முடியாது.

அந்தக் கமிட்டி கூறியிருக்கின்றவைகள்—நான் படித்துக் காட்டினேனே அந்தப் பாராவிலே குறிப்பிட்டு இருப்பது—வெறும் கருத்தாகக் கருதாமல், சிபார்சாகக் கருதாமல், உண்மையிலே நடக்கின்ற ஒன்றைத்தான் அந்தக் கமிட்டி சொல்லியிருக்கிறது—தி கமிட்டி ஹேஸ் ஸ்டேட் தி பேக்ட்-என்ற முறையிலே, இது தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒரு நிலைமை என்ற உண்மை யைத்தான் அந்தக் கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது என்ற முறையிலே, அந்தக் கமிட்டியின் வேலையைத் தடங்கல் செய்து வருகிறார்கள். என்று அவர்கள் அனுபவித்து வரும் உண்மையைத்தான் குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்பதால் அவைத் தலைவர் அவர்கள் இதைக் குறைத்து மதிப் பிடக்கூடாது, இதைப் பொறுத்தவரையில் 'தி லா ஈஸ் வெரி கிளியர்' அதிலே இந்தப் பிரச்சினை வராது. எந்தப் பிரச்சினை என்று சொன்னால், வேண்டுமென்றே கொடுக்காமல் இருந் தார்களா என்ற பிரச்னை வராது. வேண்டுமென்றே கொடுக் காமல் இருந்தார்களா? அல்லது நோக்கமே இல்லாமல் கால தாமதம் ஆயிற்றா என்ற பிரச்னையே இல்லை. கமிட்டியின் வேலையை 'ஹேம்பர்' செய்வதே 'கன்டம்ட்' அது வேண்டு

மென்றே இல்லாமல் செய்தாலும் கன்டெம்ட்தான். நீங்கள் அடிக்கடி படித்துக் காட்டுவீர்களே அந்த ஷக்தார் ரிப்போர்ட்டில் இருந்து நான் படிக்கின்றேன்.

Shri S. L. SHAKDHER: Contempt of the House may be defined generaly as any act or omission which obstructs or impedes either House of Parliament in the Performance of its functions or which obstructs or impedes any member or officer of such House in the discharge of his duty or which has a tendency, directly or indirectly.— அவ்வளவு தூரம் அவர்கள் போகிறார்கள் நேரடியாக 'அப்ஸ் டெக்ர்ட் செய்யவில்லையென்றாலும் அவர்கள் செய்கை 'அப்ஸ் டெக்ர்ட்' பண்ணக்கூடிய ஒரு முறையிலே இருந்தால் என்றுகூட சொல்கிறார்கள்.

which has a tendercy directly or indirectly to produce such results, even though there is no precedent of the offence

If any act, though not tending directly to obstruct or impede the House in the performance of its functions, has a tendency to producee this result, indirectly by bringing the House into odium, contempt or redicule.

இங்கே 'ரெடிகூல்' வரும் அல்லது 'இம்பீட்' செய்தார்கள் என்ற முறையில் 'கன்டெம்ட்' வரும். இதிலே நோக்கப் பிரச்னை கிடையாது, மேலும், or by lowering its authority. ஆகவே, இதிலே நோக்கப்பிரச்னை கிடையாது. அவர்கள் இன்னொரு பாராவிலே சொல்கிறார்கள்.

Disobedience to the orders of a committee of the House is treated as a contempt of the House itself, provided the order disobeyed is with the scope of the Committees authority. To prevent, delay, obstruct or interfere with the execution of the orders of the House or a Committee thereof is also a contempt of the House.

Example: Disobedience to orders for the production before Commitees of papers or other documents. ஆகவே, விளக்கக் குறிப்பு என்பது papers called for by the Committee அதைத்தான் அவர்கள் கொடுக்காமல் இருந்து இருக்கிறார்கள். ஆகவே எங்களுடைய அலுவல்களை தடை செய்திருக்கிறார்கள் என்று கமிட்டி சொல்லியிருக்கிறது; இதிலே 'ப்ரைமா ப்பேசி' இருக்கிறதா என்று பார்க்க வேண்டியதில்லை; ஸ்ட்ரேட்டவே நீங்கள் அனுப்பி விடலாம்.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பலகீனமான வழக்கைக்கூட சாமர்த்தியமாக வாதாடக் கூடியவர் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் என்பதை இந்த உரிமைப் பிரச்சினையை அவர்கள் எழுப்புவதன் மூலம் நன்கு வலியுறுத்தி இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.





இந்த பேரவையோ அல்லது இந்த பேரவையினுடைய குழுவோ நன்றாக இயங்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய தலையாய நோக்கம். ஏனென்றால் சட்டமன்றம் கூடி பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கம் செய்கிறது. அந்த நிதி ஒதுக்கங்கள் எல்லாம் சரியாக செலவிடப்பட்டனவா என்று முழுசட்டமன்றமும் கூடி பார்ப்பது என்பது இயலாது. அதனால்தான் இத்தகைய குழுக்கள் இருக்கின்றன. அதுவும் குறிப்பாக பொதுக் கணக்குக் குழு என்பது செலவினங்களை தணிக்கை செய்து, என்னென்ன தவறுகள் நடந்திருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து நிர்வாகத்தை செம்மைப்படுத்த இயங்கக்கூடிய ஒரு குழு அதனால்தான் அதற்கு தலைவராக எதிர்க்கட்சித் தலைவரைப் போடுவது, நியமிப்பது வழக்கம். ஆகையால் அந்தக் குழு, நிர்வாகம் இயங்குவதிலே உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது இயல்பு. காலதாமதத்தை சுட்டிக் காட்டுவது இயல்பு. தருகின்ற விவரங்கள் சரியா இல்லையா என்று எடுத்துச் சொல்வது அவர்களுடைய கடமை. மேலும் தருகின்ற பதில் திருப்தியாக இல்லை என்றால் அதையும் எடுத்துச் சொல்வது அவர்கள் கடமை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவதைப் போல் அல்லாமல், பொதுக் கணக்குக் குழு நிர்வாகத்திலே உள்ள குறைபாடுகளை, அதிகாரிகள் சிலரால் ஏற்படுகின்ற தவறுகளை சுட்டிக்காட்ட வேண்டுமென்பது தனது கடமை என்பதால் எடுத்துச் சொல்லியிருக்கிறதே தவிர வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அவர்கள் இங்கே குறிப்பிட்ட பரிந்துரை பொதுவான தன்மையில் இருக்கிறது. ஒரு குறிப்பிட்டத் துறையில் ஒரு குறிப்பிட்ட அதிகாரி இந்த பொதுக் கணக்குக் குழு தங்களுக்கு வேண்டுமென்று கேட்ட தகவல்களை தன் கையிலே வைத்துக் கொண்டிருந்தும் தர மறுத்தார் என்றோ அல்லது வேண்டுமென்றே காலதாமதப்படுத்தினார் என்றோ பொதுக் கணக்குக் குழு பரிந்துரை தந்திருக்குமானால் நமக்கு அது எளிதாக இருந்திருக்கும். ஏனென்றால் பொதுவாக ஒரு நிர்வாகத்தைச் சுட்டிக்காட்டி, நிர்வாகத்தில் இருக்கிற அத்தனை பேர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுவது என்பது எந்த இயற்கையின் நியதிக்கும் சரியாகாது என்பதை மாண்புமிகு உமாநாத் அவர்கள் எற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆக, இரண்டாவதாகச் சொல்வது 'இட் இஸ் நாட் ஸ்பெசிபிக்'

மூன்றாவதாகச் சொன்னார்கள். அந்த பொதுக் கணக்குக் குழுவுக்கு விவரங்கள் கொடுப்பதில் காலதாமதம் செய்தாலோ அல்லது தடங்கல் செய்தாலோ அது உரிமை மீறியது என்று சொன்னார்கள். நானும் கூட நினைத்தேன், அவர்கள் பேசுகின்ற போது ஒலிபெருக்கியில் தடங்கல் ஏற்பட்டது. அதனால் ஒலிபெருக்கியை இயக்குபவர் சரியாக இயக்கவில்லை என்று சொல்லி, அவர்மீது உரிமை மீறல் பிரச்சனைக் கொண்டு வருவாரோ என்று நினைத்தேன். ஆனால் என்ன நினைத்தாரோ கொண்டுவரவில்லை. காரணம் வேண்டுமென்றே ஒலிபெருக்கியை தடை செய்யவில்லை. ஆகவே, மூன்றாவதாகச் சொல்ல

விரும்புவது, வேண்டுமென்றே காலதாமதம் செய்தார் என்றோ தடங்கல் செய்தார் என்றோ இந்த கமிட்டி அறிக்கையில் கூறப்படவில்லை.

அடுத்து, அவர்களுடைய மேலான கவனத்திற்குக் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். அந்தக் குழு திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் தலைமையில் இயங்கி இந்த அறிக்கையைத் தந்திருக்கிறது. அந்தக் குழு பல்வேறு பரிந்துரைகளைத் தந்திருக்கிறது. அதிலே இதுவும் ஒன்று. அவர்கள் பொதுவாக நிர்வாகத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது முகவுரையாகத் தந்திருக்கிற அறிக்கையைப் பார்க்கிறபோது, முதல் பக்கத்திலே மிகவும் அழகாக, திரு.என்.எஸ்.வி. சித்தன் அவர்கள், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் அவர்கள் அழகாக குறிப்பிட்டிருக்கிறார்கள். முதல் பக்கத்தைப் படிக்காமல், 10-வது, 12-வது பக்கங்களுக்கு நிச்சயமாகப் போயிருக்க மாட்டார்கள். அதுவும் ஒரு எழுத்தும் விடாமல் படிக்கின்ற நம்முடைய மாண்புமிகு உமாநாத் அவர்கள் போயிருக்க மாட்டார்கள்; முதல் பக்கத்திலே படித்திருப்பார்கள். ஒருவேளை வேண்டுமென்றே அவர்கள் இந்தத் தகவலை சபைக்குத் தெரிவிக்காமல் இருக்க வேண்டுமென்று கருதுகிறார்களோ என்னவோ.

[முற்பகல் 11.00]

நிச்சயமாக அவர் உரிமை மீறுகிறார் என்று நான் சொல்ல மாட்டேன். அதன் முதல் பக்கத்திலே 5-வது பத்தியிலே மிக அழகாக சொல்லி இருக்கிறார்கள்.

The Committee records its appreciation of the valuable asistance rendered by the Sec etary' Legislative Assembly, Accountant-General and II, Deputy Secretary, Finance Department and the Secretaries of other Departments in its deliberatiosn.,

அங்கே தான் கவனிக்கவேண்டும்.

The Secretaries of other departments in its deliberations. ஆகவே அவர்களிடத்திலே இருந்து பெற்ற மொத்தத் தகவல்களை எல்லாம் பார்க்கின்றபோது அந்தக் குழுவினுடைய நடவடிக்கைகளுக்கு துணை புரிந்த அவர்களுக்கெல்லாம் பாராட்டு தெரிவித்து போற்றி இருக்கிறார்கள். ஆகவே முதல் பக்கத்தை விட்டுவிட்டு இப்படி மாண்புமிகு உமாநாத் அவர்கள் நம்மை எல்லாம் மற்ற பக்கங்களுக்கு அழைத்துச் செல்வார் என்று நான் நிச்சயமாக கருதவில்லை. இருந்தாலும் இந்த அவையின் குழுவினுடைய நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கின்ற வகையிலே எந்த அதிகாரிகள் செயல்பட்டாலும் அத்தகைய குறிப்பிட்ட தகவல்களை அரசின் கவனத்திற்கு இத்தகைய குழுக்கள் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க நாங்கள் தயங்க மாட்டோம், அவை உரிமையைக் காப்பாற்றுவோம், அவையின்



கண்ணியத்தைக் காப்பாற்றுவோம், அந்தக் கடமை எங்களுக்கு இருக்கின்றது என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, ஒரு சின்ன கிளாரிப்பிகேஷன். தலைவரவர்கள் முடிவு சொல்லிவிட்டீர்கள் என்றால் அதற்குப் பிறகு நான் சொல்ல முடியாது. ஆகவே ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். நான் படித்த கொட்டேஷன் சம்மரி ஆஃப் ரெக்கமன்டேஷனிலே, ஃபைனான்ஸ் டிப்பார்ட்மென்ட் என்று குறிப்பிட்டு பாரா மூன்றிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே இது ஜெனரல் அல்ல.

The Committee is unhappy to note that although the ins'tructions relating to the head of account were effective frcm 1st April 1974 the provisions of funds etc. etc.,

அப்படி என்று அதிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இங்கே தான் வருகின்றது ஃபைனான்ஸ் டிப்பார்ட்மென்ட் பற்றி.

"The Committee expresses its strong disapproval and displeasure over the failure of the Department to furnish explanatory notes to the Committee in respect of these items for 20 months and recommends that the responsibility for this failure should be fixed and suitable action against the persons responsible for this failure".

ஆகவே பொதுவல்ல. ஒவ்வொரு டிப்பார்ட்மென்ட் பற்றியும் புக் பூராவும் படித்தால் அதிலே உண்டு என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே வேண்டும் என்றே செய்யவில்லை என்று பிரச்சினை வராது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அவரைப்பற்றி கொடுத்த முன்னுரையினை அவர் தெளிவாக நிரூபித்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுக்கணக்குக்குழு, மதிப்பீட்டுக்குழு ஆகியவற்றைப் பொறுத்தவரையிலே ஒவ்வொரு டிப்பார்ட்மென்டிலே இருந்தும் ஏராளமான ஐட்டம்கள் வரும், அதிலே ஒவ்வொன்றாக அவர்கள் சரிபார்ப்பார்கள், அப்போது சிலவற்றிலே அவர்களுக்கு மன நிறைவு இல்லை என்றால் அதற்குக் குறிப்பு எழுதுவார்கள். ஆகவே ஒரு துறை முழுவதும் மோசமாக நடக்கின்றது என்ற முடிவுக்கு குழுவை நடத்துகிறவர்கள் வர மாட்டார்கள். ஒரு குறிப்பிட்ட ஐட்டத்திலே திருப்தி இல்லை என்றால் தான் அது பற்றிச் சுட்டிக் காட்டுவார்கள். ஆனால் பொதுவாக அவர்கள் எடுத்துச் சொன்னதை நான் தெரிவித்திருக்கிறேன். பொதுவாக அவர்களுக்கு துறையினர் முழு ஒத்துழைப்புத் தந்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குழு இயங்குவதற்கு எல்லா வகையிலேயும் எங்களுக்கு உதவினார்கள் என்பதற்காக பாராட்டுகிறோம் ஃபைனான்ஸ் டிப்பார்ட்மென்ட் உட்பட என்று அதிலே குறிப்பிட்டுச் சொல்லியே பாராட்டி இருக்கிறார்கள் என்பதை அவர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பிரச்சினை குறித்து திரு. உமாநாத் அவர்கள் வற்புறுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன். எனவே இப்பிரச்சினையில் மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என நம்புகிறேன்.

ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்கு அளித்துள்ள உறுதியின் மேல் அரசுத் துறைகள் இனிமேலாவது காலதாமதமின்றி அவைக் குழுக்களின் அலுவல்களில் எவ்வித தாமதமும் ஏற்படாது உடனுக்குடன் பதில்களை அளிக்க வேண்டும் என்ற முறையை கடைபிடிக்கவேண்டும் என்பதை அரசு அவர்களுக்குக் கண்டிப்பாக வற்புறுத்தவேண்டும்.

## இ. எதிர்க்காட்சித் தலைவர் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து உரிமை மீறல் பிரச்னை. பேரவையின் 246-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் ஒரு அவை உரிமை மீறல் பிரச்னையை பேரவையில் எழுப்புவதற்கான இசைவை கேட்டுள்ளார்கள். அதற்கு என் இசைவை ஏன்அளிக்க வேண்டும் என்று சுருக்கமாகக் குறிப்பிடும்படி கேட்டுக் கொள்கிறேன், திரு. ப. நெடுமாறன்.

* திரு ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக் கூடிய மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள் மே 10 ஆம் தேதியன்று மதுரையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் பேரவைத் தலைவர் அவர்களின் ஒரு தீர்ப்பைப் பற்றி கூறியுள்ள சில கருத்துக்கள் பேரவைத் தலைவர் அவர்களை குற்றம்சாட்டும் தன்மையில் அமைந்திருக்கின்றன. பேரவைத் தலைவர் அவர்களின் மதிப்பைக் குறைக்கும் வகையில் பேசுவதும், தீர்ப்பைப் பற்றி விமரிசனம் செய்வதும் அவையின் உரிமையை மீறிய செயலாகும். அது சம்பந்தமாக நான் இந்த உரிமைப் பிரச்னையை எழுப்புகிறேன்.

மதுரையிலேயிருந்து வரக்கூடிய மதுரைமணி பத்திரிகையிலே அந்தப் பேட்டியின் எல்லாப் பகுதிகளும் வந்திருக்கின்றன. அதிலே ஒரு கேள்வி பத்திரிகையாளர்கள் கேட்கிறார்கள். ''ஆளும் கட்சியின் தவறான போக்குகளை கண்டிப்பது எதிர்க் கட்சியின் வேலை. அதைப்போல இப்பொழுதும் கண்டனம் தெரிவித்து விட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் சட்டசபைக்கு போகலாமே ஏன் போகவில்லை என்று கேட்கிறார்கள்.'' அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அளித்த பதிலில் ''ஆளும் கட்சிக்கு ஆதரவாக சபாநாயகர் அவர்க்ள் நடந்துக் கொண்டு எதிர் கட்சிகளுக்கு உரிய நீதியை வழங்கத் தவறி விட்டார் என்று சபாநாயகர் அவர்களைத் தெளிவாகவே குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.



அதைப்போலவே இன்னொரு இடத்திலே, ''இந்த ஜனநாயகத்துக்கு விரோதமான, சட்டசபை மரபைக் காக்க தவறியதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்ட, சட்டசபையின் இந்தக் கூட்டத் தொடருக்கு வரவில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்தது என்று சொல்லியிருக்கிறார்.'' ஜனநாயக விரோதமான போக்கு என்றும், சட்டசபை மரபைக் காக்க சபாநாயகர் தவறிவிட்டார் எனறும் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள். இது உள்ளூர் பதிப்பிலே 10-5-1981-லேயும் வெளியூர் பதிப்பு 11-5-81லேயும் வந்திருக்கிறது. அடுத்து மதுரையிலேயிருந்து வரக்கூடிய மாலை முரசு பத்திரிகையிலேயும் இதுபற்றிய செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதிலேயும் நம்முடைய மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ''எதிர்க்கட்சிகளுக்கு உரிய நீதியை வழங்குவதற்கு தவறி விட்ட காரணத்தால், அதை கண்டிப்பது எங்கள் கடமையாகி விட்டது என்று ஒரு இடத்திலே சொல்லியிருக்கிறார்கள்.'' அதாவது எதிர்க்கட்சிகளுக்கு உரிய நீதியை வழங்குவதற்கு சபாநாயகர் அவர்கள் தவறி விட்டார் என்று இதிலேயும் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள்.

இன்னொரு இடத்திலே, ''அவர்களுடைய ஜனநாயக விரோதப் போக்கை, சட்டசபை மரபுகளை காக்க தவறிய போக்கை நாட்டு மக்களுக்கு உணர்த்தவே இந்த தொடர் கூட்டத்திலே கலந்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்திருக்கிறோம்'' என்று அதிலேயும் தெளிவாகவே சபாநாயகர் அவர்களை குற்றம் சாட்டி சொல்லியிருக்கிறார்கள். மாலைமுரசு பத்திரிகையின் 5-5-81 மதுரை பதிப்பிலேயும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ''செருப்பு வீசியது சம்பந்தமாக அ.தி.மு.க. வின் மீது நடவடிக்கை எடுக்காமல், அலுவல் ஆய்வுக் குழுவின் மீது பாரத்தை போடுவது எதிர்கட்சிகளை நசுக்கும் சூழ்ச்சியாகும்'' என்று அதிலேயும் தெளிவாகவே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

இதிலே சபாநாயகர் அவர்களை மட்டும் அவதூறு செய்யவில்லை, அலுவல் ஆய்வுக் குழுவையும் குற்றம் சாட்டி, அலுவல் ஆய்வுக் குழு சபாநாயகருக்கு உடந்தையாக இருந்து செயல்படுகிறது என்ற குற்றச்சாட்டையும் சொல்லியிருக்கிறார்கள். அதைப் போலவே முரசொலி பத்திரிகையிலே சென்னை பதிப்பு 4-5-1981-லே கொட்டை எழுத்திலே ''சபாநாயகர் உரிமைக் குழுவிற்கு அனுப்புவது ஏற்கத் தக்கதாக இல்லை'' என்று சொல்லி சட்டப் பேரவையின் முழுமையான நடவடிக்கை அனைத்தையும் அவைத் தலைவர், உரிமைக் குழுவிற்கு அனுப்பியது என்பது பொருத்தமானதோ அல்லது போதுமானதோ அல்ல,'' என்று சபாநாயகர் அவர்களின் நடவடிக்கையை இதிலே அவர்கள் குறை கூறியிருக்கிறார்கள்.

அதுவும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் செய்தியாக விடுத்த பேட்டியிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, திட்டவட்டமாகவும், தெளிவாகவும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்

சபாநாயகர் அவர்களை சர்ச்சைக்குரிய ஒருவராக ஆக்கி அவருடைய நடவடிக்கையிலேயும், அவருடைய தீர்ப்பிலேயும் குற்றம் சொல்லி, வெளியிலே பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்திருக்கிறார்கள்.

[முற்பகல் 11.10]

அதன் மூலம் சபாநாயகரின் மரியாதையைக் குறைக்கும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நான் இந்த அவை முன்னால் வைக்க விரும்புகிறேன்.

சபாநாயகர் சர்ச்சைக்கு அப்பாற்பட்டவர். அவர்கள் எந்த நிமிடம் சபாநாயகர் ஆகிறாரோ அதற்குப் பின்னால் அவர்கள் கட்சிக்கு அப்பாற்பட்டவர், சபையின் மரியாதையையும், கண்ணியத்தையும், மரபையும் காக்கிறவராக அவர் இருக்கிறார். சபாநாயகரின் மரியாதையை குலைக்கிற முயற்சியில் யாரேனும் ஈடுபடுவது இந்த சபையின் மரியாதையையும் இந்த மன்றத்தின் மதிப்பையும் குறைக்கிற செயலாகும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதுபற்றி பல்வேறு சட்டமன்ற நடவடிக்கைகளில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

Practice and Procedure of Indian Parliament

என்ற நூலில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

There is no doubt that a statement containing an insinuation or partiality directed against the Chair and publication of such an insinuation constitutes in the opinion of the Chair a grave breach of privilege of the House

என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். இது சபையின் உரிமையை மீறிய செயலாகும் என்று தெளிவாக அதில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது; அதே நேரத்தில் இன்னொரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

The speaker has to guard and maintain his reputation for the impartiality of all things that he does and he cannot do so if he allows such suggestions or insinuations to pass unnoticed.

சபையின் மரபுகளைக் காக்கவேண்டிய பொறுப்பில் இருக்கிற சபாநாயகர் அவர்கள் அவதூறு செய்யப்படுவாரானால் அவர்கள் அந்தப் பொறுப்புகளை நிறைவேற்ற முடியாது என்பதை அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இங்கிலாந்து நாட்டில் இருப்பது போல் நம் இந்திய நாட்டு நாடாளுமன்றமானாலும் சரி அல்லது மாநில சட்டமன்றங்களானாலும் சரி அங்கெல்லாம்

Indian Speaker cannot be questionedord iscussed by Members



அவைத்தலைவர் அளிக்கிற தீர்ப்பு பற்றியோ அவர்களுடைய நடவடிக்கை பற்றியோ எந்த உறுப்பினரும் எந்தக் கட்டத்திலும் விவாதிக்கமுடியாது என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதை நான் உங்கள்கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதே போல் Parliamentary procedures in India என்பதிலும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.The privileges after the Government of India Act அதில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. to cast reflections on the House and the Chair

சபையின் மீதோ அவைத் தலைவரின் மீதோ 'ரிப்ளக்ஷன்' ஏற்படுகிற வகையில் ஏதாவது சொன்னால் அது அவையின் உரிமையை மீறிய செயலாகும் என்பது இந்திய அரசாங்கத்தின் 1935ம் சட்டத்தில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது,

அதேபோல் மேற்கு வங்க அசெம்பிளியில் 1939ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தில்

Reflections on the character and conduct of the Speaker or accusations of partiality against him

அவைத்தலைவரின் காரக்டர், காண்டக்ட் பற்றி விமர்சனம் செய்வதோ அல்லது அவர்கள் மீது அவர்கள் ஒருதலைப்பட்சமாக நடக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டுவதோ அவை உரிமையை மீறிய செயலாகும் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதே போல் ஒரு உதாரணத்தை நான் இந்த அவை முன்னால் வைக்க விரும்புகிறேன். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. மதுலிமாயி அவர்கள் ஒருமுறை பேசும்போது உரிமைப் பிரச்னையைக் கிளப்புவதற்கு அனுமதிக்கவில்லை அவைத் தலைவர் என்ற காரணத்திற்காக அவைத் தலைவரை நோக்கி

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

So long as you do not leave the Congress Party, the dignity and decorum of this House cannot be maintained

என்ற குற்றச்சாட்டின் விளைவாக அவர் மீது உரிமைப் பிரச்னை கிளப்பப்பட்டு, அவரும் உரிமைக் குழுவிற்கு முன்னால் பகிரங்கமாக மன்னிப்பு கேட்ட பின்னரே, அவர் அந்த அவையின் நடவடிக்கைகளில் தொடர்ந்து கலந்து கொள்வதற்கு அனுமதித்ததை நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் புதிதாக சட்டமன்றத்திற்கு வந்தவர் அல்ல. 1957 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து சட்டமன்றத்தில் உறுப்பினராக இருக்கக்கூடியவர். 7 ஆண்டு காலம் இங்கே முதலமைச்சராக இருந்து, இந்த சபையின் நடவடிக்கைகளில் பங்கு கொண்டவர்.

அவருக்கு இந்த அவையின் விதிகள் தெரியாது என்று யாரும் சொல்ல முடியாது. அவரைப் பொறுத்தவரையில் 12 ஆண்டு காலம் இந்த சட்டமன்றத்தின் சகல நடவடிக்கைகளைப் பற்றியும் பரிபூரணமாகத் தெரிந்தவர். ஆனாலும் கூட, அவைக்கு வெளியே போய் பத்திரிகையாளர் கூட்டத்தில், அவைத் தலைவரைப் பற்றி, மரியாதையை குறைக்கின்ற வகையிலே, அவைத் தலைவர் அளித்த ஒரு தீர்ப்பைப் பற்றி விமர்சனம் செய்வது என்பது வேண்டுமென்றே அவையின் உரிமையை மீறிய செயலாகும் என்பதைத் தான் நான் உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த அவையிலே சில நாட்களுக்கு முன்னால் நடைபெற்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் எல்லோராலும் கண்டிக்கப்பட்டன. இதுசம்பந்தமாக அவைத் தலைவர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தைக் கூட்டினார்கள். மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் உள்பட, சகல கட்சித் தலைவர்களும் அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் அத்தனை பேரும் கலந்து கொண்டு, ஒரு தடவையல்ல, இரண்டு தடவையல்ல, மூன்று தடவைகளில் இந்தப் பிரச்னையைப் பற்றி, தெளிவாக, பரிபூரணமாக மனம் விட்டு எல்லோரும் விவாதித்துத்தான் ஒரு முடிவெடுத்தோம். அவைத் தலைவரைப் பொறுத்த வரை இதை அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தைக் கூட்டி, இந்த பிரச்னை பற்றி முடிவெடுக்க வேண்டிய ஒரு அவசியமில்லை; மரபில்லை. ஆனாலும் கூட இந்தப் பிரச்னையில் அவர் கூட்டத்தைக் கூட்டி அபிப்பிராயத்தைக் கேட்டார்கள். எல்லோரும் சேர்ந்து எடுத்துச் சொன்ன ஆலோசனையை ஏற்று, அவைத் தலைவர் அவர்கள் இந்த நிகழ்ச்சியை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தார்கள். ஆக அவைத் தலைவர் செய்தார் என்று சொல்வதும், அலுவல் ஆய்வுக் குழுவை தன் இஷ்டம் போல் ஆட்டி வைக்கிறார் என்று சொல்வதும், அலுவல் ஆய்வுக் குழுவை அவமதிப்பதாகும். அலுவல் ஆய்வுக் குழுவில் இருக்கக் கூடிய பல்வேறு கட்சித் தலைவர்களை அவமதிப்பதாகும். இந்த அவையை அவமதிப்பதாகும். இந்த அவையின் உரிமையை மீறிய செயலாகும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இறுதியாக, அலுவல் ஆய்வுக் குழு ஒரு வேண்டுகோள் விடுத்தது. திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தது. ஆயினும், அலுவல் ஆய்வுக் குழுவின் மீது குற்றஞ் சாட்டுவது அவமரியாதை செய்யும் செயலில் ஈடுபட்டிருப்பது வருந்தத்தக்கது. ஆகவே, அவையில் உரிமைகளை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வேண்டுமென்றே மீறி இருக்கிறார் என்பது இந்த ஆதாரங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பாயிண்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் படித்த பிறகு அனுமதிக்கிறேன்.



இப்பிரச்னை குறித்து மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு எழுதி, விளக்கம் ஏதேனும் தர விரும்பினால், தரலாம் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அவரிடமிருந்து விளக்கம் பெற்று. விளக்கத்தையும் பரிசீலித்து இப்பிரச்னை குறித்து எனது தீர்ப்பைப் பின்னர் தெரிவிக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பாயிண்ட் ஆர் ஆர்டர். பொதுவாக நம்முடைய சபையில் நாம் பின்பற்றுகின்ற மரபு ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினர் மீது உரிமைப் பிரச்னை கொடுத்தால். சம்பந்தப்பட்ட உறுப்பினர்க்கு அந்தத் தகவலைக் கொடுத்து, அவரும் இங்கே வந்து, அவருடைய முன்னிலையில் எடுத்துக் கொள்வது என்பதுதான் நாம் பின்பற்றி வருகின்ற மரபாகும். ஆனால், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவர் கட்சியைச் சார்ந்தவர்களும் இதற்கு முன்னாலேயே இந்த சட்டமன்றம் முடிகின்றவரையில் கலந்து கொள்வதில்லை என்று அறிவித்த பின்னர், அவர்கள் நிச்சயமாக வர மாட்டார்கள் என்பது தெரிந்ததற்குப் பின்னால், இன்றைக்கு இந்த உரிமைப் பிரச்னையை எடுத்துக் கொள்வது என்பது முறைதானா? அவர்கள் வந்ததற்குப் பிறகு எடுத்துக் கொள்வது சரியா இருக்காதா? உங்கள் தீர்ப்பை நான் கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அலுவலகத்திலிருந்து தபால் அனுப்பி, இந்தப் பிரச்னை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் தீர்மானங்கள்.

அ. விதி 58ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு ஒரு பொருள் பற்றி எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற பேரவை விதி 58-ஐ தளர்த்தி, இன்று பேரவையில் இரண்டு பொருள்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

[முற்பகல் 11-20]

5. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

இந்தி கற்றால்தான் பதவி உயர்வு என்பதன் மூலம் இந்தி திணிக்கப்பெறுவது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ரா, உமாநாத், இரா. கிருஷ்ணன். பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ப. நெடுமாறன் ஆகியோர் மத்திய அரசு பணிகளை

இந்தி மொழியில் நிர்வகிக்கும் ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை அளிக்க செய்வதன் மூலமாக மத்திய அரசு மறைமுகமாக இந்தியை திணிப்பதற்கு முடிவு செய்ததன் விளைவாக ஏற்பட்டுள்ள பாகுபாடு பற்றியும், பதட்டநிலை குறித்தும், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களுள் ஒருவர், மிகச் சுருக்கமாக விளக்கும் படி கேட்டுக் கொள்கிறேன். திரு ரா. உமாநாத்

திரு ரா உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உலக தமிழ் மாநாட்டிற்கு பிரதமர் திருமதி காந்தி அவர்கள் வந்த பொழுது, தமிழ்நாட்டு மக்களுக்கு வாக்குறுதி ஒன்றை அளித்தார்கள். அது உங்களுக்கு தெரியும். இந்தி தெரியாத மக்கள் மீது இந்தி திணிக்கப்பட மாட்டாது என்ற வாக்குறுதி. ஆனால் அன்றைக்கே நாங்கள் சொன்னோம். மத்திய அரசாங்க அலுவலகங்களிலே மறைமுகமாக இந்தி திணிக்கப்படுகிறது என்று நாங்கள் எச்சரித்தோம். பலராலும் நாங்கள் அன்றைக்கு சொன்னதை நம்பமுடியவில்லை. ஆனால் ஆளும் கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் அதற்கு பிறகு அவர்களுடைய செயற்குழுவிலே கூட மறைமுகமாக இந்தி திணிப்பதை கண்டித்து ஒரு தீர்மானம் போட்டார்கள். அந்த நிலைமை பிறகு ஏற்பட்டது. ஆனால் நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் திருமதி காந்தி இருக்கும் வரை இந்தி திணிப்பு இருக்காது என்ற பொருள்படும் படி அவர் பேசியது இந்த அவையில் நமக்கு தெரியும். ஆனால் 3–1–81 தேதியன்று புதுடெல்லியில் இருந்து வந்திருக்கக் கூடிய யு. என். ஐ. டெஸ்பாச், மெயில் பத்திரிக்கையில் வந்தது. அந்த டெஸ்பாச்சில் தெளிவாக கூறப்பட்டது என்னவென்று சொன்னால்-யு. என். ஐ. டெஸ்பாச் இந்தியா முழுவதும் வருகிறது. மைய அரசு செயலக அரசாங்க மொழி சர்வீஸ்; என்ற பெயருடன் ஒரு புதிய சர்வீஸ் உண்டாக்குவது என்று முடிவு செய்துள்ளது. இந்தி மொழியில் அரசாங்க அலுவல்களை நடத்துபவர்களுக்கு போதிய அளவு உத்தியோக உயர்வு வாய்ப்பினை வழங்குவது தான் இந்த புதிய சர்வீசின் நோக்கம். நேற்றுக் கூட்டப்பட்ட மைய அரசாங்கம் மந்திரி சபை முடிவாகும் இது. கேபினட் டெசிஷன், என்று சொல்லி ஆங்கிலத்தில் வந்தது. இது நாடு முழுவதும் பரப்பப்பட்ட யு. என். ஐ. டெஸ்பாச். இன்றைய வரைக்கும் 'கான்ட்ரடிக்ஷன்' இல்லை. 'தட் மீன்ஸ் இட் டீஸ் எ பாக்ட்'. இந்தியில் அலுவலகம் நடத்துபவர்களுக்கு விஷேச உத்தியோக உயர்வு என்றால் இதன்படி அது தானே; இந்தி தெரியாத அலுவலர்கள் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் ரிட்டயாமென்ட் காலம் வரை அந்த பொசிஷன்லேயே சென்ட்ரல் கவர்ன்மென்ட் சர்வீசிலே இருப்பார்கள், இருக்கவேண்டும் என்று அர்த்தம். அரசாங்க அலுவலர்கள் இரண்டு ரகமாக பிரிக்கப் பட்டிருக்கிறார்ாள். ஒரு ரகம் இந்தி தெரிந்தவர்கள் அது 'ஏ' கிளாஸ் அலுவலர்கள்; இனனொரு ரகம் இந்தி தெரியாதவர்



கள். அது 'பி' கிளாஸ் அலுவலர்கள். ஆகவே உத்தியோக உயர்வு கொடுப்பதற்கு இங்கே இந்த பிரச்சினையை நாம் டிஸ்கஸ் பண்ணவேண்டும் என்றால்..(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுருக்கமாக முடித்து விடுங்கள்.

திரு ரா உமாநாத் : தலைவரவர்களே, உத்தியோக உயர்வு பற்றி நான் லிங்க் பண்ண வேண்டுமா, இல்லையா? இது மிக முக்கியமான லேங்வேஜ் பிரச்சினை. உத்தியோக உயர்வு கிடைப்பதற்கு நிர்ப்பந்தமாக இந்தி கற்றுக் கொள்ள வேண்டுமல்லவா? இல்லையெனில் பிரமோஷன் இல்லை 'புரோமோஷனுக்காக' தானாகவே கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். 'இன்டைரக்ட் கம்பல்ஷன்'. இது மறைமுக இந்தி திணிப்பு அல்லவா? ஆகவே இதை நாம் டிஸ்கஸ் பண்ண வேண்டும். அப்படியே இந்தி தெரியாதவர்கள் மறைமுக கம்பல்ஷனில் இந்தி கற்றுக் கொண்டாலும் கூட, தாய் மொழி இந்தியாக இருக்கிறவர்களுக்கும் தாய் மொழி அல்லாதவர்கள் கற்றுக் கொண்டு பேசும் அங்கே உட்கார்ந்து பரீட்சை எழுதுவதற்கும் நிச்சயமாக் நமக்கு 'டிஸ்–அட்வான்டேஜ்' உண்டு. அதில் சந்தேகம் இல்லை. இதற்கு பிறகு ஒரு பன்னிரெண்டு நாள் கழித்து மறைமுக திணிப்பு சம்பந்தமாக இன்னொரு செய்தியும் வந்தது. அதன்படி ராணுவத்தில் 'கமிஷன்ட் ஆபீசர்ஸ்'–க்கு கீழே இருக்கும் ராணுவத்தினர் இந்தி கற்றுக் கொண்டால் தான். இந்தி தேர்வு பாஸ் ஆனால் தான் அவர்களுக்கு உத்தியோக உயர்வு என்று வந்திருக்கிறது. 12 நாள் கழித்து அது வந்தது.

நமது முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி ஆட்சேபித்து கண்டித்தார். சில கூட்டங்களிலே நாம் பார்த்திருக்கிறோம். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் காங்கிரஸ்சைச் சேர்ந்த ஒரு தலைவர் அந்த முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பை கண்டித்து அவர் என்ன சொன்னார் என்றால், முதலமைச்சர் வெறும் பூச்சாண்டி கிளப்புகிறார் என்றும் அப்படி ஒரு ஏற்பாடு இல்லையென்றும் அவர் சொல்கிறார். இதனாலே இது பூச்சாண்டி இல்லை; பூச்சாண்டி என்றால் விட்டு விடும்.

திரு என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். ஹவுசை அட்ஜர்ன் பண்ணி விட்டீர்களா?

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களை, சாதாரணமாக பேசினாலே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் என்ன செய்வது இப்படி குறுக்கிடுவதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அட்ஜர்ன் பண்ணவில்லை, அவர் விளக்கமாகச் சொல்கிறார்.

திரு ரா. உமாநாத் ; நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் சர்க்கார் பாதுகாப்பு இலாகா அமைச்சர் திரு சிவராஜ் பட்டீயல் டிப்ளை பண்ணியதிலிருந்துதான் அது வந்தது. அவர் கேள்விக்குப் பதில் கூறியபோது கூறியது, I am saying it from official records.

பூச்சாண்டி அல்ல, பாராளுமன்றத்திலே என்ன பதில் சொன்னார் இராணுவத்திலே கமிஷன்டு ஆபீஸர்கள் பதவிக்குக் கீழே இருக்கும் இராணுவத்தினர் இந்தியில் தேர்ச்சி பெறவில்லையென்றால் அவர்களுடையபதவி உயர்வு வாய்ப்புகள் பாதிக்கப்படும் a serious charge especially when any question comes இது, நாடாளுமன்றத்திலே கொடுத்த பதில். ஆகவே நமது முதலமைசசர் தோற்றுவித்த பூச்சாண்டி அல்ல, மத்திய அரசு தோற்றுவித்ததுதான் அபாயம் என்று கூற விரும்புகிறேன். அதனால்தான் டிஸ்கஸ் பண்ணவேண்டியிருக்கிறது மத்திய அமைச்சர் நாடாளுமன்றத்திலே கூறியதன் பொருள் என்ன? இந்தி பாஸாகவில்லையென்றால் இந்தி தெரியாத சிப்பாய்கள் வெளியேற்றப்பட மாட்டார்கள். ஆனால் பதவி உயர்வு அவர்களுக்குக் கிடையாது. பதவி உயர்வை மறுப்பதின் மூலம் இந்தியை மறைமுகமாக திணிப்பதாகாதா? It is a sort of indirect intimaidtion.

இதை விவாதிக்க இன்னொரு அவசியம் கூட நமக்கு எழுகிறது இந்த மறைமுகத் திணிப்பை நம்முடைய ஆட்சேபத்திற்காக அவர்மீது இன்னொரு குற்றச்சாட்டும் சமீபத்திலே சாட்டப்பட்டிருக்கிறது. ஏன் என்றால் இந்தித் திணிப்பு சர்ச்சை இராணுவம் சம்பந்தமானது, இராணுவம் நமது பாதுகாப்புக்குப் பொறுப்பானது. இந்த சர்ச்சையை இராணுவத்திற்குள்ளே கொண்டு போனால் பாதுகாப்புக்கு ஆபத்து இல்லையா. முதலமைச்சர் இப்படிப் பேசுவதன் மூலமாக பாதுகாப்புக்கே ஆபத்து உண்டாக்குகிறார் என்று disaffection and 'தேசத்துரோகம் நம்முடைய எதிர்க்கட்சி தி.மு.க.வைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இன்னொரு படிகூட முன்னுக்குப் போனார், நான் வருத்தப்படுகிறேன். அவர் பேசுகின்ற போது இராணுவத்தில் மறைமுக இந்தித் திணிப்பை முதல்வர் எதிர்ப்பதன் மூலம் முதல்வர் இராணுவத்தில் டிஸ்அபக்ஷன், அதிருப்தி பரப்புவதாகவும் தேசத் துரோக குற்றம் புரிவதாகவும் அவர் கூறினார். தமிழக மக்களின் நலன்களைக் காப்பாற்றுவது என்பது தேசத் துரோகம் என்கிறார் அந்த நண்பர். இதை விவாதிக்க வேண்டாமா should we not discussit.

ஆகவே உண்மை இப்படியிருக்க முதல்வரை ஏன் குற்றஞ்சாட்டுகிறார்கள்1 இராணுவத்தில் அதிருப்தி உண்டாக்குகிறார் என்ற குற்றத்தைச் சாட்டுவதின் மூலம் மறைமுக திணிப்பை முதல்வர் எதிர்க்காமல் இருக்க மத்திய அரசு அச்சுறுத்துவதாக indirect intimation என்று நான் கருதுகிறேன். இந்தக்கருத்தை இராணுவத்திற்குள்ளே கொண்டுபோனது நம்முடையமுதல்வர் அல்ல. இந்தி பாஸானால் இராணுவத்தில் புரமோஷன் என்ற முறையை இராணுவத்திலே புகுத்துவதன் மூலம் மத்திய அரசாங்கம் தான் இந்தச் சர்ச்சையை இராணுவத்திற்குள்ளே கான்ட்ரோவர்சியாக கொண்டு போய் இருக்கிறது, நம்முடைய முதல்வர் அல்ல. It is the Central Government which has started this



மூன்றாவதாக வந்திருக்கின்ற செய்தி ஆல் இண்டியா ரேடியோவிலே வந்திருக்கின்ற இன்னொரு செய்தி. அந்தச் செய்தி என்னவென்று சொன்னால் அரசு அலுவலக வேலைகளில் இந்தி பரப்புவதை அடிக்கடி பரிசீலிக்க ஒரு கமிட்டி அமைக்க மைய அரசு முடிவு எடுத்துள்ளதாக சமீபத்திலே ஆல் இண்டியா ரேடியோவிலே ஒரு செய்தி வந்தது, Government has brought it there in an organized form

இப்படி ஒரு மினிஸ்டிரியல் லெவல் கமிட்டி அந்த ஸ்தாபனம் எதற்காக என்றால் இந்த மறைமுக திணிப்பின் முன்னேற்றத்தை அவ்வப்போது பரிசீலிப்பதற்காகத் தான் organised form

கொடுத்தாகிவிட்டது, மறைமுக திணிப்புக்கு ஒரு வடிவம் கொடுத்தாகிவிட்டது. ஆகவே கொடுத்த வாக்குறுதிகளை காலில் போட்டு மிதித்துவிட்டு மறைமுக இந்தித் திணிப்பை வெகு வேகமாக மக்கள் உணர்வதற்கு முன்னாலேயே திணிக்கிறார்கள் அதற்குக்கடிவாளம் போடவில்லையென்றால் நம்முடைய நிலைமை மோசமாகிவிடும். ஆகவே நம்முடைய அரசு வன்மையாகக் கண்டிக்க வேண்டும். ஆட்சேபிக்க வேண்டும் அரசே ஒரு தீர்மானம் இங்கே கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். ஆகவே, இந்த விஷயங்களை விவாதிக்கத் தேவையிருப்பதால் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

[முற்பகல் 11.30]

*திரு. ப. நெடுமாறன்: மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, இந்தித் திணிப்பினால் தமிழக மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கின்ற கவலை குறித்து எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னை இந்தி பேசாத மக்கள் அத்தனை பேரையும் பாதிக்கின்ற பிரச்னை. இந்தி பேசாத மக்களுக்கு, மறைந்த பிரதமர் மனிதருள் மாணிக்கம் ஜவஹர்லால் நேரு அவர்கள் அளித்த வாக்குறுதிதான் இன்றைக்கும் அவர்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற காலம் வரை ஆங்கிலம் இணை மொழியாக நீடிக்கும் என்ற வாக்குறுதியை நேருஜி அவர்கள் அளித்தார்கள். அந்த வாக்குறுதிக்கு அரசியல் சட்டப் பாதுகாப்பு வேண்டுமென்பதுதான் தமிழக மக்களின் கோரிக்கை. இந்தி பேசாத மாநில மக்களின் கோரிக்கை. அந்த அரசியல் சட்டப் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக இன்றைக்கு நேருஜி அளித்த வாக்குறுயைத் துச்சமாக மதித்து, அதைத் தூர தூக்கியெறிந்துவிட்டு, இந்தியை எல்லாத் துறைகளிலேயும் திணிக்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கது.

மறைந்த மாபெருந் தலைவர் காமராஜ் அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தபொழுது, 1965-ஆம் ஆண்டிலே தெளிவாகச் சொன்னார்கள். அவர் அகில

இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக அப்பொழுது இருக்கிறார். இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த ஒரு கட்சியின் தலைவராக அவர் இருந்த நேரத்திலே, இதே தமிழகத்திலே சென்னை நகரத்திலே நடைபெற்ற ஒரு கூட்டத்திலே சொன்னார், இந்தியிலே உத்தரவு வருமேயானால் அதைக் கிழித்துப் போடுங்கள் என்று தெளிவாகச் சொன்னார்.

அந்த அடிப்படையிலே பார்க்கும்பொழுது இந்தி எவ்வளவு வேகமாக எல்லாத் துறைகளிலேயும் திணிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அடுக்கடுக்காக ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டினார்கள். மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் பட்டீல் அவர்கள் இராணுவத்திலே இந்தி படிக்காதவர்களுக்குப் பதவி உயர்வு இல்லை என்று அறிவித்ததையும் சுட்டிக்காட்டினார்கள்.

இந்திய இராணுவம் தேச ஒற்றுமையின் சின்னமாக விளங்கி வந்திருக்கிறது. மத, ஜாதி, மொழி வேறுபாடுகள் இந்திய இராணுவத்தில் இதுவரையில் தலை காட்டியது இல்லை. இராணுவ வீரர்கள் ஒற்றுமையாக இருந்து அவர்களுக்குள் எந்தவிதமான மனவிகற்பமும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்திய ஒற்றுமையின் சின்னமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற இராணுவத்திலே இந்த உத்தரவின் காரணமாக அது இரண்டாகப் பிளவுபடுவதற்கான அபாயம் இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1965-ஆம் ஆண்டிலேயும், 1971-ஆம் ஆண்டிலேயும் பாகிஸ்தானுடன் நாம் நடத்திய போரிலே நாம் மகத்தான வெற்றியை அடைந்தோம் என்றால் அதற்கு யார் காரணம்? இராணுவ வீரர்கள் தாங்கள் எந்த மாநிலத்திலேயிருந்து வந்தவர்கள், எந்த மொழியைப் பேசுபவர்கள், எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று பார்க்காமல் ஒன்றுபட்டு சிந்திய இரத்தம்தான் நமக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது. இந்தி படித்தவர்கள் இந்தி படிக்காதவர்கள் என்ற வித்தியாசமில்லாமல் அவர்கள் போராட்டத்திலே குதித்தார்கள். இந்த நாட்டுக்காகப் போராடி வெற்றியைத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள்.

தேசீய ஒற்றுமையின் சின்னமாக விளங்குகின்ற இராணுவத்தையே பிளவுபடுத்துகின்ற நடவடிக்கையிலே மத்திய அரசு ஈடுபட்டிருப்பதை இந்த அவையிலே வன்மையாகக் கண்டிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அவர்கள் அவ்வாறு செய்வதன் மூலம் இந்திய இராணுவம் பிளவுபடுமேயானால் அதற்குப் பின்னால் இந்த நாடு பிளவுபடுவதற்கு ரொம்ப நேரமாகாது.

இந்திய இராணுவத்தின் புகழ்பெற்ற தலைமைத் தளபதிகளாக இருந்த ஜெனரல் கரியப்பா, ஜெனரல் திம்மையா ஜெனரல் சவுத்திரி, இவை எல்லாவற்றிற்கும் மேலாக வங்க தேசப்போராட்டத்திலே



வெற்றியைத் தேடிக்கொடுத்த இந்தியாவிலேயே முதலாவது ஃபீல்ட் மார்ஷலான மானெக்ஷா ஆகிய இவர்கள் இந்தி மாநிலத்தைச் சேராதவர்கள். இந்தி மாநிலத்தைச் சேராத அந்த மாபெரும் தளபதிகள்தான் இந்தியாவின் புகழ்பெற்ற தளபதிகளாக இருந்திருக்கிறார்கள்.

இந்தி படித்தால்தான் இராணுவத்திலே பதவி உயர்வு கிடைக்கும் என்ற அந்த உத்தரவு போடப்படுமேயானால் இவர்களை போன்ற வீரத் தளபதிகளின் முன்னேற்றம் தடைப்படும். இவர்களின் பதவி உயர்வு தடைப்படும் என்பதை இந்தக் கட்டத்தில் நாம் மிக்க கவலையோடு எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த அபாயத்தைச் சுட்டிக்காட்டினார்கள். இந்த அபாயத்தின் மூலம், இந்தி பேசாத மக்கள் மத்தியிலே, தமிழக மக்கள் மத்தியிலே பெருத்த கவலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதன் காரணமாக அவர்கள் தேச விரோத நடவடிக்கையிலே ஈடுபடுகிறார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.

ஆகவே, இது ஒரு முக்கியமான பிரச்னை. நம்முடைய இராணுவத்தையே பிளவுபடுத்தக் கூடிய ஒரு பிரச்னை. இந்தி பேசாத மக்களின் நலன்களைப் பாதிக்கக் கூடிய பிரச்னை. இந்தியாவின் ஜனநாயகச் சிற்பியாக விளங்கியமனிதருள்மாணிக்கம் நேருஜி இந்த நாட்டிலுள்ள இந்தி பேசாத மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மீறுகின்ற பிரச்னை. ஆகவே, இதைப்பற்றிப் பரிபூரணமாக விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்கள் வாழும் நாடு நமது நாடு, நம் நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் முன்னேற வேண்டுமென்பதில் நமக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. மொழியால் ஒரு சாரார் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதிலே நாம் அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றோம். மதிப்பிற்குரிய நமது பாரதப் பிரதமர் அவர்களும் அண்மையில் மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நிகழ்ச்சியில் பங்கு கொண்டு பேசும்பொழுது மத்திய அரசு இந்தி ஒரு தொடர்பு மொழியாக இருக்க வேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்தி வந்தாலும் இந்தி மொழி பேசாதவர்கள் மீது அம்மொழி ஒருபோதும் திணிக்கப்படமாட்டாது என்ற உறுதியை எடுத்துக் கூறியதோடு டில்லி இந்தியைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டுள்ளது என்பது தவறு என்றும் ஒரு மொழியை நலிவடையச் செய்துதான் இன்னொரு மொழி வளர முடியும் என்பது சரியல்லவென்றும் தமிழ் ஆங்கிலத்தைக் கண்டோ அல்லது இந்தியைக் கண்டோ அச்சப்பட வேண்டியதில்லையென்றும் அரசியலமைப்புச் சட்டம் 8-வது பட்டியலில் கூறப்பட்டுள்ள அனைத்து மொழிகளையும்

ஊக்குவிப்பது தான் மத்திய அரசின் கொள்கை என்றும் திட்ட வட்டமாகத் தெரிவித்து உள்ளார்கள். அந்த விவரங்கள் எல்லாம் செய்தித் தாள்களில் வந்துள்ளன.

இப்பொழுது இம்மாமன்றத்தில் மத்திய அரசு இந்தியை
மறைமுகமாகத் திணிக்க முடிவு செய்திருக்கிறது என்றும் தமிழகத்
திலிருந்து நாட்டுப் பணி புரிவதற்காக இராணுவத்தில் சேர்ந்த
வர்களுக்கு இந்தி மொழித் தேர்வில் தேறாமல் இருந்தால் பதவி
உயர்வு மறுப்பதன் மூலம் இந்தி மறைமுகமாக திணிக்கப்படு
கிறது என்ற கருத்தினை எடுத்து வைத்துள்ளார்கள். சென்ற
மாதம் பாராளுமன்றத்தில் அதுபற்றிய ஒரு கேள்விக்குப் பதில்
அளிக்கையில் கீழ்க்கண்ட விவரம் தெரிவிக்கப்பட்டது. கப்பல்
படை, விமானப் படை மற்றும் இராணுவப் படைத் துறைகளில்
பணியாற்றும் ஆணை பெற்ற படை அதிகாரிகளைப் பொறுத்த
வரை at the level of Commissioned Officers உயர்பதவிகள் பெற
இந்தி தெரிந்திருக்க வேண்டுமென்கிற விதி இல்லை. இந்தி
தெரியவில்லை என்பதால் எந்த அதிகாரியும் பதவி உயர்வு பெற
வில்லையென்ற நிலை ஏற்பட்டதில்லை. கப்பல்; மற்றும் விமானப்
படையில் அதிகாரிகள் பதவிகளுக்குக் கீழ் நிலையிலுள்ளவர்
களுக்கும் பதவி உயர்வுகளுக்கு இந்தி தெரிந்திருக்க வேண்டு
மென்ற விதியில்லை. இருப்பினும், இராணுவப் படையில்
ஆணைபெற்ற அதிகாரிகளின் நிலைக்குக் கீழ் below the
level of Commissioned Officers உள்ளவர்களுக்கு அவர்களுக்கு
இடப்படும் ஆணைகளையும் அறிவுரைகளையும் நன்றாகப்
புரிந்து கொள்ளும் வகையில் இந்தி பயிற்றுவிக்கப்படுகிறது
பதவி உயர்வின் நிமித்தம் குறிப்பிட்ட சில தேர்வுகள் நிர்ண
யிக்கப்பட்டுள்ளன. இத்தகுதிகளில் பணி புரிவதற்கேற்ப இந்தி
அறிவு உள்ளதா என சோதிக்கப்படுகிறது. இவையெல்லாம்
நாடாளுமன்றத்தில் சொன்னவை. இந்தியிலோ அல்லது வேறு
பாடங்களிலோ குறைவான மதிப்பெண்கள் வாங்குபவர்களுக்கு
தனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவ்விதத் தனிப் பயிற்சிக்கு
பின்னும் இந்தியில் ஒருவர் தேர்ச்சி பெறவில்லையென்றால்
அவருடைய பதவி உயர்வுகள் பாதிக்கப்படலாம். இவையெல்
லாம் பார்லிமெண்டில் சொன்னவை. இந்த நிலை எந்தப் பகுதி
யிலிருந்து வந்தவராக இருந்தாலும் பாதுகாப்புப் பணியிலுள்ள
அனைவருக்கும் பொருந்தும் இதை உள்ளூரக் கவனிக்கும்போது
இந்தி மொழி அறிவு பெறுவதில் தேர்ச்சி பெறாமல் போனால்
பதவி உயர்வுக்கு வழியில்லை என்று தெரிகிறது. இதனால்
தமிழகத்திலிருந்தும் மற்ற இந்தி பேசாத மாநிலங்களிலிருந்தும்
சென்றுள்ள பாதுகாப்புப் பணியாளர்கள் பாதிப்புக்குள்ளா
வார்கள் என்பது உறுதி.

அதுபற்றி முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட
சமீபத்தில் டெல்லியில் வகுப்பு ஒற்றுமைப்பற்றி நடந்த தேசிய
ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் இவ்வரசின் நிலை தெளிவு
பட எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதை மத்திய அரசு கவனித்து
ஆவன செய்யும் என இந்த அரசு நம்புகிறது.



மற்றும் 1-5-1981 அன்று நடந்த கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பிறந்தநாள் விழாவிலும், நாட்டின் பல பகுதிகளி லிருந்து வந்த பல மொழிகள் பேசுபவர்களைக் கொண்ட இராணுவத் துறையில் இந்தி வேண்டுமென்று வற்புறுத்தலினால் உண்டாகும் நிலையை மத்திய அரசு எண்ணிப் பார்க்கவேண்டு மென்ற கருத்தை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து உள்ளார்கள்.

[முற்பகல் 11.40]

இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வு களை நடுவணர் அரசு நன்கு புரிந்து கொள்ளும் என்று நாம் எதிர்பார்க்கலாம். மாண்புமிகு உறுப்பினர்களின் ஐயப்பாடுகளும், எந்த மொழியும் இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்படக் கூடாது என்ற உரிமைக் கருத்தினை இங்கே வெளியிட்டு உங்களின் கருத்துக்கள் மைய அரசைச் சிந்திக்க வைக்கும் என்பதாலும், இந்தியப் பிரதமர் தந்திருக்கின்ற வாக்குறுதி இத்தகைய எண்ணங்களை வெளியிட்டவர்களின் கருத்தை செயலாக்காது தடுத்து நிறுத்தும் என்றும் நாம் நம்புவோம். இந்த மாமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சியினர்களுக்கும் தமிழ்மொழி இரண்டாவது இடத்திற்கு தள்ளப்படக்கூடாது என்பதில் ஒருமித்த கருத்து உள்ளதை மைய அரசுக்கு அறிவிக்க இந்தத் தீர்மானம் ஏதுவாக இருக்கும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும், மாண்புமிகு நெடுமாறன் அவர்களும் பேசுகின்றபோது, மற்ற சில பிரச்சினைகளையும் சொன்னார்கள். மத்திய அரசிலே இந்த ஆட்சி மொழியை அமல்படுத்துவதற்கு என்று ஒரு தனிப் பணித் தொகுதி Central Secretariat Official Languages Service என்று ஒன்றை ஏற்படுத்தி, அதை நிறைவேற்றுவது என்று மத்திய அமைச்சரவை முடிவெடுத்திருப்பதாகவும், ஒவ்வொரு துறையிலேயும் இந்தி படிப்பவர்களுக்குத் தனிச் சலுகைகள் வழங்குகின்ற வகையிலே இந்தப் பணித் தொகுதி அமைந்து இருக்கிறது என்ற கருத்தை அவர்கள் இங்கே எடுத்துச் சொன் னார்கள். அதுபற்றிய விவரம் முழுவதும் தற்போது அரசிடம் திலே இல்லை என்ற காரணத்தினாலே, அதைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. அதேபோல அகில இந்திய வானொலியில் எந்த அளவுக்கு இந்தி வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்ப்பதற் காக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் சொன்னார்கள். இப்படி ஒவ்வொரு துறையாக இந்தியைப் புகுத்துவதும், அது வளர்ந்திருக்கிறதா என்று பார்க்கவுமான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பது உண்மை. நமக்கு எல்லோருக்கும் தெரியும், இந்தியாவிலே மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் உள்ள நம்முடைய தூதரகங்களில்கூட இந்தி மொழி எந்த அளவுக்கு வளர்ந்திருக்கின்றது என்பதைப் பார்ப்பதற்காக, அதற்காக ஒரு நாடாளுமன்ற குழுவே சென்றது என்றும், அதிலே இந்தி மொழியினுடைய வளர்ச்சியிலே அதிக அக்கறை கொண்ட நம்முடைய நாட்டைச் சேர்ந்த தி.மு.க. நாடாளு மன்ற உறுப்பினர்களும் சென்றார்கள் என்பதையும் நாம் எல்லாம் நன்கு அறிவோம். இந்தி மொழியினுடைய திணிப்பு கூடாது என்று சொல்வது, ஏதோ இந்தி மொழியின் மீது நமக்கு

இருக்கிற வெறுப்பின் காரணமாக அல்ல. நமது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, இந்தி என்று சொல்லுகிறபோது இந்தியாவிலே எந்தப் பகுதியிலேயும் ஒரு குடிமகன் பிறந்தாலும், சமவாய்ப்பு கொடுக்கவேண்டும். அவர் எந்த இனத்தவரானாலும், எந்த ஜாதியினரானாலும், எந்த மொழியினரானாலும் எந்த மதத்தை அவர் சார்ந்தவராக இருந்தாலும், எக்காரணத்தைக் கொண்டும் சமவாய்ப்பு அவர்களுக்கு இல்லாமல் போய்விடக் கூடாது. அதைத்தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். அரசுப் பணிகளில், அது மாநில அரசானாலும், மத்திய அரசானாலும் பதவி உயர்வுகள் என்ற தனிச் சலுகையை அளிப்பதற்கு இந்தி தெரிந்து இருக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது, இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத பல கோடிக்கணக்கான மக்களுக்கு அந்தச் சமவாய்ப்பு இல்லாமல் போகிறது.

அதனாலேதான் அதிலே 2 பிரிவு வருகிறது என்று சொன்னார்கள். இது இரண்டு பிரிவாக வந்தாலும் பரவாயில்லை. உயர் ரகம், கீழ் ரகம் என்று அதிலே ஒரு பிரிவுக்கு— அந்த பிரிவே கூட ஒரு வேற்றுமையை உட்படுத்தி வருமேயானால்—அது இந்திய ஒற்றுமைக்கே அல்லது நம்முடைய சமவாய்ப்பு என்று அரசியல் சட்டத்திலே சொல்லி இருக்கிற கோட்பாட்டுக்கே அது உகந்ததாக இருக்காது என்ற காரணத்தினால்தான், திரும்பத் திரும்ப நாம் இந்தக் கருத்தை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி வருகிறோம். மேலும் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைப் பற்றி, இத்தகைய நடவடிக்கைகள் மக்களிடத்திலே ஒரு மன அமைதியின்மையை ஏற்படுத்தி விடக்கூடும், என்கிற அச்சத்தின் காரணமாக, மத்திய அரசுக்கு உரிய நேரத்திலே அதை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இதுதான் ஒரு மாநில அரசினுடைய முதலமைச்சர் தேசத்திற்கு செய்யவேண்டிய கடமை. தேச ஒற்றுமைக்கும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் என்னென்ன சக்திகள் குந்தகம் விளைவித்து விடுமோ என்று ஆய்ந்து பார்த்து அந்தச் சக்திகளை அடையாளம் காட்டி, தேசத்திற்கு உதவக் கூடிய காரியத்தை நம்முடைய முதலமைச்சர் செய்து இருக்கிறார். அதுவும் மிகவும் முக்கியமான துறையாக இருக்கக்கூடிய பாதுகாப்புத் துறையிலே, அந்த மொழி வேறுபாட்டின் காரணமாக அந்தத் துறையில் குந்தகம் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு, அவர்கள் மத்திய அரசுக்கு உரிய நேரத்திலே சுட்டிக்காட்டி அந்த நடவடிக்கையை எடுக்கவேண்டும்; தயவு செய்து இந்தியைப் புகுத்தி ஒரு வேற்றுமையை உருவாக்க வேண்டாம் என்று, ஒற்றுமையின் அடிப்படையில் குறிப்பிட்டதை, அது தேசத் துரோகம் ஆகும் என்று சொல்லி இருக்கிறார்கள் என்று நினைக்கிறபோது உண்மையிலேயே நாம் வேதனைப் படாமல், வேறு ஒன்றும் செய்ய முடியாது.

இங்கே உண்மையிலேயே இந்தி எதிர்ப்பிலே ரொம்ப தீவிரமாக ஒரு கொள்கையைக் கடைபிடித்து வருவது எங்களுடைய கட்சி தான் என்று நாங்கள் எண்ணிக்கொண்டு இருக்கிறோம்.



மாண்புமிகு மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் உமாநாத் அவர்கள் இங்கே இந்தப் பிரச்னையை எழுப்பி இருப்பது எங்களுக்கு கொஞ்சம் இதமாகக்கூட இருக்கிறது. ஆனால், இங்கே இருந்து இந்தப் பிரச்னையை எழுப்ப வேண்டியவர்கள் இல்லையே என்ற கவலையும் இருக்கிறது. நான் யாரைக் குறிப்பிடுகிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு வேளை அவர்கள் நாடாளுமன்றத்திலே இதை தேசத்துரோகம் என்று குறிப்பிட்டுவிட்ட காரணத்தாலே இங்கே பிரதான எதிர்க் கட்சியாக இருந்து அந்தப் பிரச்னையை எழுப்பி விளக்கியிருந்தால் இன்னும் நன்றாக இருந்து இருக்கும். அண்மையிலே கூட மத்தியக் கல்வி அமைச்சர் அவர்கள் வந்தபோது ஏதோ அரசாங்கம் தான் இந்தி எதிர்ப்பைக்கொண்டு இருக்கிறதே தவிர தமிழக மக்கள் இந்தியை எதிர்க்கவில்லை என்று பேசியிருப்பதாக நான் பத்திரிகையில் படித்தேன். இங்கே எல்லோரும் சேர்ந்து இந்தக் கருத்தைச் சொல்லியிருப்போமானால், இது மக்கள் கருத்து என்பதை மத்தியஅரசு அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருந்து இருக்கும். ஆனால் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இந்தி மொழியை எதிர்த்து — அதாவது — மறைமுகத் திணிப்பை எதிர்த்து ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று பேசினார்கள். இதை வெளியிலேயும் — இந்தத் தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்று — பேசியிருப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. என்றாலும், இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்தால், தங்களுடைய பாடு ரொம்பத் திண்டாட்டமாக ஆகிவிடுமே, அந்தத் தீர்மானத்தை ஆதரித்தால் அம்மா கோபித்துக் கொள்வார்களே, ஆதரித்தால் அண்ணா தி.மு.க.வோடு சேர்ந்தவர்களாக ஆகிவிடுவோமே என்ற உணர்வு பிரதான எதிர்க்கட்சிக்கு ஏற்பட்டிருக்குமோ என்னவோ எனக்குத் தெரியாது. இந்தி எதிர்ப்புத் தீர்மானம் இங்கே கொண்டு வந்தால், பிரதான எதிர்க்கட்சிக்கு ஒரு தர்மசங்கடம் வந்துவிடுமோ அப்படி ஒரு நிலை ஏற்பட்டு விடுமோ என்று அவர்கள் அஞ்சுவதாக நான் அறிகிறேன். தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட சட்டசபையிலே நாங்கள் கலந்து கொள்ளவேண்டும் என்று கேட்டதாகவும், அதற்கு அவர்கள் தலைவர் சொன்னாராம் — இந்தி எதிர்ப்புத் தீர்மானம் வரப்போகிறது, அந்த வம்பில் ஏன் நாம் மாட்டிக்கொள்ளவேண்டும். அதற்காகத்தான் நான் இந்த வழியைக் கையாண்டேன் என்று சொன்னதாகவும் தகவல் வந்தது. அது சரியான தகவலாக இருக்காது என்று தான் நான் நம்புகிறேன். ஏனென்றால் இந்தித் திணிப்பு எதிர்ப்பிலே எதிர்க்கட்சித் தலைவர் ரொம்ப அழுத்தமான நம்பிக்கைக் கொண்டு இருக்கிறார் என்று தான் நான் இன்னும் நினைத்துக் கொண்டு இருக்கிறேன். இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே போய் இந்தி எதிர்ப்பு தேசத்துரோகம் என்று பேசியிருக்கிறார். ஒரு வேளை அவருக்கு கூட தெரியாமல் பேசியிருக்கலாம். இருந்தாலும் இங்கே அவர்கள் ஒரு பிரதான எதிர்க்கட்சி என்ற காரணத்தால் அப்படி பயந்து வெளியே இருக்காது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். என்ன இருந்தாலும் அவர்கள் இங்கே வந்து

இருந்து எல்லா உணர்வுகளையும் எடுத்துச்சொல்லியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்து இருக்கும் என்று எடுத்துச்சொல்லி, நம்முடைய உணர்வுகள் எல்லாம் மத்திய அரசுக்கும், பிரதம அமைச்சருக்கும் தெரியும். ஆகவே, அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்ற அந்த அடிப்படையில், இது குறித்து விவாதிக்க இச்சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

ஆ. கூட்டுறவுத் துறையினர் விவசாயக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் சோ. அழகர்சாமி, எம். ஆறுமுகம், பொ. உத்திராபதி, ஏ டி. கருப்பையா, மு. அம்பிகாபதி, தி. கா. நல்லப்பன், செ. சிவசாமி எஸ். ஆண்டித்தேவர், நா. சுந்தரராஜ், என். பழனிவேல், என். வரதராஜன், டி. மணி, என். எஸ். சித்தன், ப. தீர்த்தராமன் ஆகியோர் "விவசாயிகள் செலுத்தவேண்டிய கடன் பாக்கிகளை 30-6-1981—க்குள் செலுத்தினால் வட்டிச் சலுகை அளிக்கப்படும் என்று அரசு அறிவித்திருந்தும், கூட்டுறவு அதிகாரிகள் அதற்கு முன்பே தமிழகம் முழுவதும் ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து' ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களுள் முதலில் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.50]

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே இந்த பழைய பாக்கிகளை எல்லாம் ஆரம்ப காலத்திலிருந்தே ஒத்திவைத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். 1974–75, 1975–76 ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கும்போது பாக்கிகளை வசூல் செய்வதை ஒத்திவைத்திருந்தார்கள். 1976-77—ல் அவசரக் காலத்தை ஒட்டி, கவர்னர் ஆட்சி இருந்தபோது வசூலை நிறுத்தி வைத்திருந்தார்கள். அதற்குப் பின்னாலே அண்ணா தி.மு.க. ஆட்சியிலும் 1977–78—ல் பழைய பாக்கிகளை வசூல் செய்ய முடியாமல் ஒத்தி வைத்திருந்தார்கள். இப்படி ஒத்தி வைத்திருந்த கடன்களை எல்லாம் இப்போது தரமுடியாமல் இருக்கிறார்கள் என்பதை பலமுறை நாம் ஏற்கெனவே இந்த மன்றத்திலே விவாதித்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், விவசாயிகள் இந்த வரட்சி, புயல் போன்றவைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான விலை விளை பொருளுக்கு கிடைக்க வில்லை. அதன் காரணமாகவும் இந்த பாக்கிகளைக் கட்ட



முடியாமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களால் அவர்கள் வாங்கிய கடனை 1974 ஆம் ஆண்டிலிருந்தே ஒத்தி வைத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கடன்களை எல்லாம் மொத்தமாக இப்போது கட்ட வேண்டுமென்று சொல்லி, ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது நியாயம்தானா என்பதை அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கடன்கள் எல்லாம் இப்போது வசூல் ஆகாமல் இருப்பதற்கும் விவசாயிகள் கட்டாமல் இருப்பதற்கும் யாரோ தூண்டி விடுகிறார்கள் என்ற தவறான எண்ணத்திற்கு நீங்கள் இடம் கொடுக்கக்கூடாது. தூண்டி விடுவதினால் விவசாயிகள் வேண்டுமென்றே கடனைக் கட்டாமல் இருக்கமாட்டார்கள். அந்தமாதிரி நாம் நினைக்கக்கூடாது. ஆகவே, இந்த நேரத்தில் விவசாயிகளுடைய கடன்களை முழுமையாக ரத்து செய்து, அவர்களுக்கு முழு நிவாரணம் அளிப்பதுதான் நியாயம். ஆனால் மத்திய அரசு சரியாக இதிலே ஒத்துழைப்பு தராமல் இருப்பதால் அந்த அளவுக்கு செய்ய முடியவில்லை. இன்றைக்கு இருக்கக் கூடிய கிராம பொருளாதாரமே சீரழிந்து மிகப்பெரும் நஷ்டத்தை, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்க்கான நஷ்டத்தை விவசாயிகள் அடைந்திருக்கிறார்கள் என்பதை அவ்வப்போது அமைச்சர்கள் எங்களைப் போன்றவர்களை சந்திக்கிறபோது, விவசாயிகளைப் சந்திக்கிறபோது விசாரித்து தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் இதற்கெல்லாம் மத்திய அரசு ரிசர்வ் வங்கி மூலம் வேண்டிய உதவிகளைச் செய்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் செய்யவில்லை. இந்த மாநில அரசு நிவாரண நடவடிக்கை எடுக்கும்போதுகூட இந்தமாதிரி கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்யும்போது 5 ஏக்கருக்கு கீழே நிலம் வைத்திருப்பவர்களுடைய கடன்களை தள்ளுபடி செய்யும்போது கூட கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்தால் கிராம சிவில் சிஸ்டத்தை சீர்குலைக்கும் என்று சொல்கிறார்கள், மத்திய அரசிலே இருப்பவர்கள். பிரதம அமைச்சரோ மத்திய நிதி அமைச்சரோ இந்தமாதிரி கடன்களைத் தள்ளுபடி செய்யக் கூடிய ஒரு காரியத்தைச் செய்யக்கூடாது என்று சொல்லி வருகிறார்கள்.

இந்த நிலையில் இன்றைக்கு நாம் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் கட்டாயத்தில் இருக்கிறோம். வருகின்ற ஜூன் 30-ந் தேதிக்குள் தங்களுடைய கடன்களை கட்டிவிட்டால் சிறு விவசாயிகளுக்கு முழுமையாக அபராத வட்டி, சாதாரண வட்டிகளை தள்ளுபடி செய்து, அசலை மட்டும் செலுத்தினால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு அபராத வட்டியை மட்டும் தள்ளுபடி செய்து மற்ற வட்டியையும் அசலையும் கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

மொத்த கடன்பாக்கி, 5 ஏக்கருக்கு மேலுள்ளவர்கள் 3,95,000 பேர்கள் பாக்கி வைத்திருப்பதாக தகவல் இருக்கிறது. அவர்கள் கட்டவேண்டிய பாக்கி 21,45,00,000 ரூபாய்;

அபராத வட்டி 5,65,00,000 ரூபாய். 5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள், கடன் செலுத்த வேண்டியவர்கள் 10,14,000 பேர்கள். அவர்கள் கட்டவேண்டிய பாக்கி 24,44,00,000 ரூபாய்; அபராத வட்டி 6,95,00,000 ரூபாய். ஆக அரசுக்கு கடனாகவும், அபராத வட்டியாகவும் செலுத்த வேண்டிய பாக்கியில் கிட்டத்தட்ட 37 கோடி ரூபாயை நீங்கள் தள்ளுபடி செய்து விட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள். மேற்கொண்டும் விவசாயிகள் கட்ட வேண்டிய பாக்கி கிட்டத்தட்ட 21 கோடி ரூபாய்.

விவசாயிகள் எங்களுக்கு வட்டி, அபராத வட்டிப் பளு அதிகமாகி விட்டது. ஆகவே, வட்டியையும் அபராத வட்டியையும் தள்ளுபடி செய்து, கடனை தவணைமுறையில் வசூல் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். சிறு விவசாயிகள் உண்மையிலேயே கட்டமுடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளித்திருக்கிறோம். ஆனால் அந்த நிவாரணம் அளிப்பதிலே 5 ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளவர்களுக்கு நிவாரணம் என்று அரசு அறிவித்திருக்கிறது. 5 ஏக்கர் நன்செய்யும், 5 ஏக்கர் புன்செய்யும் நிச்சயமாக சமமாகாது. கூட்டுறவு அமைச்சரவர்கள் விவசாயிகளை கூப்பிட்டு கேட்கும்போது பல மாவட்டங்களில் நன்செய்க்கும் புன்செய்க்கும் ஏகப்பட்ட வித்தியாசம் இருப்பதை அறிந்திருக்கிறார்கள். ஆகவே, 5 ஏக்கர் நன்செய் அல்லது அதற்கு சமமான புன்செய் நிலம் உள்ளவர்கள் எல்லாம் சிறு விவசாயிகள் என்று அறிவித்து, அவர்களுடைய கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். அதற்கு மேல் நிலம் வைத்திருக்கிற விவசாயிகள் வாங்கிய கடனுக்கு டிராக்டர் கடன் போன்ற பெரிய கடனை வாங்கியிருந்தால் அதற்கு அபராத வட்டி, சாதாரண வட்டிகளை முழுமையாக தள்ளுபடி செய்து, தவணை முறையிலே அசலை மட்டும் வசூல் செய்ய வேண்டும். டிராக்டர் கடனுக்கு அபராத வட்டியை மட்டும் தள்ளுபடி செய்தால் போதும். அபராதம் தேவையில்லை. அதை மட்டும் நீக்கி விட்டு, அவர்கள் செலுத்த வேண்டிய கடனை மொத்தமாகக் கேட்காமல் 5 வருஷ பாக்கியை 5 தவணைகளில் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். உலக வங்கி என்று சொல்லி, நம்மை நிர்ப்பந்திப்பதின் காரணமாகத்தான் இன்றைக்கு ஜப்தி நடவடிக்கை தேவைப்படுகிறது என்று பரவலாகச் சொல்லப்படுகிறது.

ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது என்று பழமொழி ஒன்று உண்டு. அதுபோன்று இந்த உலக வங்கி எந்தெந்த நாடுகளுக்குக் கடன் கொடுத்ததோ அந்தந்த நாடுகள் பூராவும் உருப்படியாகவில்லை. ஏனென்றால் அவர்கள் பல நிபந்தனைகளைப் போடுகிறார்கள். அதன் காரணமாக கடந்த காலங்களிலே பலவிதமான சங்கடங்களுக்கு ஆளாக்கி இருக்கிறார்கள். ஆகவே அதற்கெல்லாம் நீங்கள் பயப்படாமல் மக்களின் நலனைப்பற்றியே அக்கறை எடுத்துக்கொண்டு விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்கக்கூடிய வகையிலே காரியங்களை செய்யவேண்டும். ஆகவே தற்போது எடுக்கப்படுகின்ற ஜப்தி நடவடிக்கைகளை எல்லாம் எடுக்காமல் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற வகையிலே கடன்களை எல்லாம் ரத்து செய்துவிட்டு, அதற்கு மேலே நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் வாங்கிய கடனுக்குரிய வட்டியை ரத்து செய்து விட்டு அசலை தவணை முறையிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதையும் மொத்தமாகக் கட்டச் சொல்லக்கூடாது. தவணை முறையிலே வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஒருசிலர் வேண்டுமானால் மொத்தமாகக் கட்டக்கூடிய தகுதி உடையவர்களாக இருக்கலாம். ஆனால் பெரும்பாலான விவசாயிகளால் அப்படி மொத்தமாகக் கட்ட முடியாது. ஆகவே தவணை முறையிலே கட்டக்கூடிய ஒரு வாய்ப்பை அளிக்கவேண்டும். எப்படி நாம் மின்சாரக் கட்டணப் பாக்கியை பொறுத்தவரையிலே அதை தவணை முறையிலே கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோமோ அதேபோன்று இந்த கடனையும் தவணை முறையிலே வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் இப்பொழுது மின்சாரக் கட்டணத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் கட்ட வேண்டும் என்ற ஏற்பாடு செய்யப்பட்டதற்குப் பிறகு விவசாயிகளும் கட்டிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, அதுபோன்று இதற்கும் ஏற்பாடுசெய்ய வேண்டும்.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பல இடங்களிலே பெரிய விவசாயிகள்தான் கடனைக் கட்டாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எனக்கு வந்த தகவல்படி தர்மபுரி மாவட்டத்திலே பாப்பிரெட்டிபட்டி என்ற இடத்திலே தோழர் பி. பி. ராஜூ என்பவர் கிணறு வெட்டுவதற்கு கடன் வாங்கி இருந்தார். ஆனால் கிணறு வெட்டினால் தண்ணீர் வரவில்லை. பொய்த்துவிட்டது. ஆகவே அந்தக் கடனை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கலெக்டருக்கும் கூட்டுறவு அதிகாரிகளுக்கும் மனு செய்திருக்கிறார். அப்படி இருந்தும் அவருடைய வீட்டுக்கு பெரிய அதிகாரிகள் பெரிய படையோடு சென்று ஜப்தி செய்யச் சென்று இருக்கிறார்கள். அப்போது அவர் 5,000 ரூபாய் கடனைக் கட்டிவிடுகிறேன், மீதிக் கடனைப் பற்றி நான் மனு செய்திருக்கிறேன், அதன்படி எனக்கு நிவாரணம் கிடைக்கும் என்று கருதுகிறேன் என்று சொல்லி இருக்கிறார். அப்படிச் சொன்னதற்குப் பிறகும் முடியவே முடியாது என்று சொல்லி அதிகாரிகள், வீட்டிலே இருக்கின்ற அத்தனை சாமான்களையும் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

அடுத்து தென்திருப்பேரையில் திரு. நாராயண நாடாரின் மகன் மாணிக்கவாசகத்திற்கு 3 ஏக்கர் நஞ்சை நிலம் இருக்கின்றது, அவருக்கு 540 ரூபாய் பாக்கி இருக்கின்றது என்ற காரணத்திற்காக அவருடைய வீட்டிலே ஜப்தி நடந்திருக்கின்றது.

திரு. வெங்கடாசலமய்யங்கார் அவர்களுக்கு 940 ரூபாய் பாக்கி இருக்கின்றது என்று அவருடைய வீட்டிலே ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது, அவருக்கு சொந்த நிலம் கூட இல்லை. 3½ ஏக்கர் குத்தகை நிலம்தான் இருக்கிறது.

அடுத்து முகமது மீரா சாகிப் என்பவருக்கு 1400 ரூபாய் பாக்கி, அவரிடத்திலே ஜப்தி நடந்திருக்கின்றது.

அடுத்து வீரமாணிக்கம் என்ற கிராமத்திலே 3 பேர் சிறு விவசாயிகள், அவர்களிடத்திலே ஜப்தி நடந்திருக்கின்றது.

அடுத்து தஞ்சை மாவட்டத்திலே முத்துப்பேட்டை என்ற பகுதியிலே ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப் பல இடங்களில் கூட்டுறவு அதிகாரிகள் புகுந்து மிகப் பெரிய படையோடு சென்று ஜப்தி நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். ஆகவே இது சம்பந்தமாக நாங்கள் சொல்கின்ற யோசனை என்னவென்றால் 5 ஸ்டான்டர்டு ஏக்கர் அல்லது 5 ஏக்கர் நஞ்சைக்குச் சமமான புஞ்சை நிலம் உடையவர்களின் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்யவேண்டும். மற்றவர்களுக்கு வட்டியை ரத்துசெய்துவிட்டு அசலை 5 தவணை என்ற வகையிலே வசூலிக்கவேண்டும்.

அடுத்து மத்திய அரசு ரிசர்வ் வங்கியின் மூலமாக கொடுக்கக் கூடிய கடனைப் பொறுத்தவரையிலே 3 சதவீத வட்டி என்று இருந்ததற்குப் பதிலாக இப்போது 6 சதவீதம் வட்டி என்று உயர்த்தி இருக்கிறார்கள். அதைத் திரும்பவும் 3 சதவீதமாக ஆக்கவேண்டும் என்று நமது அரசு மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டும்.

அடுத்து உயர்மட்டக்குழு நடந்துக்கொண்டிருக்கிறது. அந்தக் குழுவிலே இந்தக் கடன்களைப் பொறுத்தவரையிலே எப்படி எப்படி ரத்து செய்ய வேண்டும், எப்படி எப்படி கடனை மட்டும் தவணை முறையிலே வசூலித்து வட்டியை ரத்து செய்ய வேண்டும் என்பது பற்றி எல்லாம் ஒரு முடிவு எடுக்கின்ற வரையிலே ஜப்தி நடவடிக்கைகளை நாம் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இது 4½ கோடி மக்களின் சம்பந்தப்பட்ட பிரச்சினை. பல காரணங்களால் விவசாயிகளின் கடன் சுமை ஏறிக்கொண்டு வந்திருக்கின்றது. ஆகவே தற்போது எடுக்கப்படுகின்ற ஜப்தி நடவடிக்கைகளை எல்லாம் நிறுத்தி வைக்கவேண்டும் என்ற வகையிலே அதுபற்றி விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[நண்பகல் 12.00]

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழகத்தில் இருக்கிற 80 சதவீதம் விவசாயிகளுக்கு, நீண்ட நெடுங்காலமாக கூட்டுறவுத் துறை மூலமாகவும் மற்ற கடன் நிறுவனங்கள் மூல



மாகவும் கொடுக்கப்பட்ட கடன்கள் பல்வேறு காரணங்களால் 1970 ஆம் ஆண்டிலிருந்து தள்ளிப்போடப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக 1976-77 ஆம் ஆண்டுகளிலும் 1978-79 ஆம் ஆண்டுகளிலேயும் தமிழகத்தில் நிலவிய வறட்சியின் காரணமாக மற்றும் உள்ள சில பிரச்சினைகள் காரணமாக, அவர்களுடைய கடன்கள் எல்லாம் தள்ளி போடப்பட்டு, வசூல்கள் நிறுத்தி வைக்கப்பட்டது நமக்கெல்லாம் தெரியும்.

அதற்குப் பின்னாலே தமிழகத்திலே நடந்த விவசாயப் போராட்டத்தின் காரணமாக, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்கள் வசூல் செய்யப்படாமல் இருந்தது சம்பந்தமாக இந்த மன்றத்திலேயே விரிவாக விவாதித்து இருக்கிறோம். அதற்கு மேலே தமிழக அரசு ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறது. 5 ஏக்கருக்கு கீழே உள்ள விவசாயிகளுடைய கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று, இது பாராட்டக்கூடிய செய்தியாக இருந்தாலும், 5 ஏக்கருக்கு கீழே உள்ள விவசாயிகள் என்று சொல்கிறபோது, நஞ்சையும் புஞ்சையும் ஒரே தரமாக வைத்துதான் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அதை 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று மாற்ற வேண்டும் என்று பல்வேறு கட்டங்களிலே இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறோம்.

அடுத்து பெரிய விவசாயிகளுக்குத்தான் ஜப்தி என்றும், அதிலே டிராக்டர் லோன் போன்றவை போட்டிருப்பவர்களுக்கும் ஜப்தி என்றும் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் ஜப்தி என்று இருப்பதை மட்டும் கருத்தில் கொண்டு, அந்த ஆணையை அதிகாரிகள் கையிலே எடுத்துக் கொண்டு, இந்த அரசுக்கு தவறான பெயர் ஏற்படுகிற வகையில் நூற்றுக்கணக்கில் போலீஸ்காரர்களையும் அழைத்துக் கொண்டு கிராமப்புறங்களுக்கு செல்கிறார்கள். சிறு சிறு கிராமப்புறங்களில் 100 வீடுகள், 50 வீடுகள் இருக்கிற ஒரு பகுதியில் ஒரே ஒரு பெரிய விவசாயியை ஜப்தி செய்யச் செல்கிறோம் என்ற பெயரால், நூற்றுக்கணக்கில் போலீஸ்காரர்களையும் துணைக்கு அழைத்துக் கொண்டு, அவர்களோடு கூட்டுறவுத் துறை அதிகாரிகளும் சேர்ந்துக் கொண்டு ஒரு படையாக, ஏதோ கொள்ளைக் கூட்டத்தைப் பிடிப்பது போல், மதிய உணவையும் எடுத்துக் கொண்டு, அதற்கான செலவுகளை எல்லாம் கூட்டுறவுத் துறையை ஏற்றுக் கொள்ளச் செய்து, அந்தக் கிராமப் புறங்களுக்குச் சென்று பெரிய விவசாயிகளோடு, சிறிய விவசாயிகளையும் ஜப்தி செய்கிற ஒரு நிலைமை இருந்து வருகிறது.

இதற்கு முக்கியமான காரணம், கூட்டுறவுத் துறை வங்கிகளில் பணி புரியும் அந்த ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை இருப்பதும், இப்படி வசூல் செய்துதான் அவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கியிருப்பதும்தான் என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு சம்பளம் கொடுக்கவில்லை என்றால், அதை அரசுதான் ஏற்றுக் கொடுக்க வேண்டுமே தவிர, ஜப்தி நடவடிக்கை எடுத்து வசூல்

செய்து. சம்பளம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லக் கூடாது. அப்படிச் சொல்வதன் மூலமாக கிராமப்பகுதிகளிலே இன்றையதினம் ஒரு பதட்டநிலை உருவாகியிருக்கும் சூழ்நிலை எழுந்திருக்கிறது.

கூட்டுறவு வங்கிகளில் பெரிய விவசாயிகள் மட்டும்தானா கடனைப் பெற்றிருக்கிறார்கள்? உபதொழில்கள் செய்துக் கொண்டிருக்கும் சிறிய சிறிய பாக்டரி வைத்திருப்பவர்களும் கூட பெரிய விவசாயிகள் என்ற போர்வையில், டிராக்டர் லோன், மோட்டார் லோன் போன்றவைகள் போட்டு கடனாகப் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை ஜப்தி செய்ய உத்தரவு இட்டால், அதை நாங்கள் வரவேற்கிறோம், மறுப்பு எதுவும் சொல்லவில்லை. ஆனால் அப்படிப்பட்டவர்களை ஜப்தி செய்யப்போகிற போது நான் ஒன்றை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு தெளிவாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், அந்த நேரத்திலே, அந்தத் துறையிலுள்ள பெரிய பெரிய அதிகாரிகள். அந்த உபத்தொழில் செய்பவர்களுக்கு, பாக்டரி வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு பெரிய விவசாயிகள் என்ற போர்வையில் 5 லட்சம் ரூபாய் 6 லட்சம் ரூபாய் என்று கடன் நிலுவை வைத்திருப்பவர்களுக்கு, முன்கூட்டியே தெரிவிக்கிறார்கள். என்னவென்று, நாங்கள் இன்ன தேதியில் வரப்போகிறோம்; நீங்கள் அன்று இருக்கவேண்டாம். உங்கள் கார்கள்கூட வைத்திருந்தால் அங்கே வேண்டாம். அப்படி இருந்தால் அதை ஜப்தி செய்யச் சொல்ல வேண்டி வரும் என்று சில உயர் அதிகாரிகள் செய்தி அனுப்புகிறார்கள். பிறகு காட்சிக்காக பல அதிகாரிகளை உடன் அழைத்துக்கொண்டு, அத்தனை பேர்களுடைய செலவுகளை எல்லாம் அந்தக் கூட்டுறவு வங்கியின் மீதே சுமத்திவிட்டு, ஏமாற்றுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அப்படி விவசாயிகள் என்ற பெயரில் உப தொழில் செய்பவர்கள் மீது டிராக்டர்கள் லோன் போட்டு அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் மீது நீங்கள் ஜப்தி நடவடிக்கை எடுப்பதில் எங்களுக்கு எந்தவித மாறுபட்ட கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் கூட்டுறவு வங்கியில் பணிபுரிபவர்களுக்கு சம்பளக் கொடுக்கபட வேண்டுமானால் ஜப்தி செய்துதான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருப்பதன் காரணத்நால் தான், கிராமப்பகுதிகளில் உள்ள பெரிய விவசாயிகள் மட்டுமல்ல, சிறிய விவசாயிகளும் அவதிப்படுகிறார்கள். விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் யாரோ தூண்டுகிற காரணத்தால்தான் அனைத்து விவசாயிகளும் பணம் கட்டவில்லை என்ற ஒரு தவறான கருத்தின் அடிப்படையில் இம்மாதிரி செய்யக்கூடாது. எல்லா விவசாயிகளும் அவ்வாறு இல்லை. பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகள் இந்த அரசை ஆதரித்து வாக்களித்து இருக்கிறார்கள். ஆகவே விவசாயச் சங்கம் என்று சொன்னால், அது ஒன்றுதான் என்ற நிலையில் அரசு எந்தவித கருத்தையும் எடுத்துக் கொள்ளக் கூடாது.





நம் அரசு, ஐந்து ஏக்கர். பத்து ஏக்கருக்கு கீழ் உள்ள விவசாயிகளுக்கு இந்த ஆண்டு வறட்சி காரணமாக கட்ட முடியாத நிலை இருப்பதால் இந்த ஆண்டு வசூலை தள்ளிப் போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் 30—6—81க்குள் கடனைக் கட்டினால் அவர்களுக்கு வட்டி இல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் பல கோடி ரூபாய் நிவாரணமாகக் கொடுத்துக் கொண்டு இருக்கிற இந்த அரசு 30-6-81 என்பதை அடுத்த ஆண்டு வரை அவர்கள் முதலை மட்டும் கட்டினால் இந்த ஆண்டு பருவமழை பெற்று அதில் வருகிற வருமானத்தின் மூலம் அடுத்த ஆண்டு முதலை மட்டும் கட்டினால் கூட சிறு விவசாயிகளுக்கு வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கவேண்டும்.

திரு. அழகர்சாமி அவர்கள் ஜப்தி நடவடிக்கை பற்றி சொன்னார்கள். அதேபோல் எங்கள் பகுதியிலும் சோழவந்தான், உசிலம்பட்டி போன்ற இடங்களில் சிறிய விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அப்படி ஜப்தி செய்கிற அதிகாரிகள் மீது அதே தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். பெரிய விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிற கடன்கள் காரணமாக அரசுக்கு ஒரு ஆபத்து இருக்கிறது என்று அந்த மானியக் கோரிக்கை விவாதத்தின் போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரிசர்வ் பாங்க் டளாக் மார்க் கொடுக்கிறார்கள், பெரிய விவசாயிகளிடம் இருந்து வசூல் செய்து காட்டினால்தான் அடுத்த ஆண்டு கடனாவது கொடுக்க முடியும் என்று தெளிவான கருத்தைச் சொன்னார்கள். அதற்காக ரிசர்வ் பாங்க்குக்கு கொடுக்கவேண்டும் என்பதற்காக சிறு விவசாயிகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது என்பது சரியாக இருக்காது.

ஜப்தி செய்கிறபோது போலீஸ் அதிகாரிகளை வைத்து மிரட்டுகிறார்கள் சாதரணமாக ரெவன்யூ அதிகாரிகளைப் போன்றவர்கள், கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஜப்தி செய்தால் சட்டம் இருக்கிறது, சட்டப்படி ஒரு பொருளை ஜப்தி செய்தால் அதற்குரிய நமூனாக்களை பூர்த்தி செய்தால் போதும் என்றிருக்கிறது. ஏன் நூற்றுக்கணக்கான போலீஸ் அதிகாரிகளை எடுத்துசெல்கிறீர்கள் அது இந்தஅரசுக்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்துகிறது. இப்போதிருக்கிற நிலையில் கூட்டுறவு கடன்கள் மற்றக் கடன்களை விவசாயிகள் மத்தியில் கட்ட முடியாத நிலை இருக்கிறது. அவர்கள் வாங்கும் சக்தியை இழந்திருக்கிறார்கள். ஆகவே இது சம்பந்தமாக இந்த அவையில் விரிவாக விவாதிப்பதற்காக அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய கடன் பிரச்சினை பற்றியும் இன்றைக்கு விவசாயிகள் மத்தியின் அரசாங்க அதிகாரிகள் செய்கிற கெடுபிடி வேலைகள் பற்றியும். ஜப்தி

நடவடிக்கைகள் பற்றியும் இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரில் பல்வேறு சமயங்களில் இந்த வரிசையிலிருந்து பேசியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் சில நாட்களுக்கு முன்னால் ஒரு ஓத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்து இந்த அவையின் தமிழக மக்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறோம். ஆனால் இந்த வரிசையில் இருந்து நாங்கள் என்னதான் சொன்னாலும் கூட, அரசு தரப்பிலிருந்து என்னதான் உறுதிமொழி கொடுத்தாலும் கூட, ஆறுதல் வார்த்தைகள் சொன்னாலும்கூட இன்றைய தினம் விவசாய பெருங்குடி மக்கள் மத்தியில் அரசாங்க அதிகாரிகள் நடந்துகொள்கிற கெடுபிடி முறைகள் கொஞ்சமும் குறையவில்லை என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது விவசாயப் பெருங்குடி மக்களின் கடன் பிரச்னையைப் பற்றி அந்தக் கட்சியானாலும் சரி அல்லது இந்தக் கட்சியானாலும் சரி, பேசும் போது இன்றைய ஆளும் கட்சி சார்பில் கூட அந்தப் பிரச்னை பற்றி பேசும்போது விவசாயிகள் கடன்களை ரத்து செய்கிறோம் என்று அன்றைய தினம் மக்கள் மத்தியில் வாக்குறுதி கொடுக்கப் பட்டது. இப்படி சொன்னதிலிருந்து ஜப்தி நடவடிக்கைகள் போன்றவை இருக்காது என்றுதான் பொருள். முதல் அமைச்சர் அவர்கள் அன்றையதினம் சொன்னார்கள், ஜப்தி நடவடிக்கைகள் இருக்காது என்று சொல்கிறார்கள், ஆகவே கடன்களை தள்ளுபடி செய்ய மாட்டார்கள் என்றுதான் பொருள், நான் சொல்கிறேன், நாங்கள் ஆட்சிப் பொறுப்புககு வந்தால் நிச்சயமாக விவசாயிகள் கடன்களை ரத்து செய்கிறோம் என்று ஒரு முறை அல்ல பல முறை சொன்னார்கள். இன்று அவர்கள் பொறுப்பேற்று ஒரு ஆண்டு ஆகிறது. கொஞ்சம் நாங்கள் ரத்து செய்கிறோம் வருகிறநான்கு ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாக ரத்து செய்கிறோம்; சிறு விவசாயிகள் கடன் என்றுதான் அதற்குபொருள். சிறு விவசாயிகள் கடன்களை ரத்து செய்கிறோம் என்று பலயிடங்களில் பல்வேறு நேரங்களில் முதல் அமைச்சர் அவர்களாலும், இந்த அரசுத் தரப்பிலும் சொல்லப்பட்டு வருகிறது. நான் சொல்லிக்கொள்ளவிரும்புவது, தேர்தல் காலத்தில் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். மத்திய அரசு ஒத்துழைப்பு தருகிறார்களோ இல்லலயோ, மத்திய அரசின் அனுமதி இல்லாமல்தான் அந்த வாக்குறுதி கொடுக்கப்பட்டது. மத்திய அரசு பிற மாநிலங்களுக்கு இதுமாதிரியான தள்ளுபடி செய்யவில்லை. ஆகவே இந்த அரசு தன் பொறுப்பில் விவசாயிகள் கடன்களை தள்ளுபடி செய்வதற்கான முழு முயற்சியை எடுத்துக் கொள்ளவேண்டும். இன்றையதினம் வறட்சியால், தமிழ்நாடு விவசாயிகள் வாடிக் கொண்டிருக்கிற நிலையில் போதியமழை இல்லாமல் மின்சாரப் பற்றாக்குறையோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் விவசாயப் பெருங்குடி மக்களை அரசாங்க அதிகாரிகள் படைபட்டாளத்தோடு சென்று ஜப்தி செய்வது என்பது கோவை, தர்மபுரி, மதுரை போன்ற மாவட்டங்களில் தொடர்ந்து நடை பெற்று வருகிறது என்பதை நான் வேதனையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



[பிற்பகல் 12.10.]

விவசாயபெருமகனிடம் ஜப்தி என்ற பெயரால், வியசாயிகளின் வீடுகளிலே ஆண்கள் இல்லாத நேரத்தில் போய்; திடீரென்று இந்த ஜப்தி நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதற்கு முன்னாலேகூட நான் இதைப்பற்றி எடுத்துச் சொன்னேன். ஆக, விவசாயிகளிடம் கடன் வசூலிக்கப் போகிறோம் என்று சொல்கிறபோது, ஒரு பெரிய பட்டாளத்தோடு, நிறைய வாகன வசதிகளோடு, உள்நாட்டுப் போர் என்று சொல்லுகின்ற அளவிலே அதிகாரிகள் அங்கே சென்று, ஈவு இரக்கமற்ற முறையில் அந்த விவசாய பெருமகன் வைத்திருக்கும் தானியம் பொருள்கள் ஆகியவைகளை சூறையாடி, அபகரித்து வரக்கூடிய ஒரு ஆபத்து இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்னமும் சொல்ல வேண்டுமானால், எங்களுக்கு தகவல் நாள்தோறும் வந்து கொண்டிருக்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில், ஒரு விவசாயி வீட்டில் இல்லாத நேரத்தில் தட்டுமுட்டுச் சாமான்கள், ஆடு மாடுகள் போன்ற கால்நடைகள், புடவை, வெங்காயம், நெய் போன்ற பொருள்களையெல்லாம் ஜப்தி செய்திருக்கிறார்கள். இவ்வாறு ஜப்தி என்ற பெயராலே, இத்தகைய செயல்கள் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. இதைவிட வருந்தக்கூடிய நிகழ்ச்சி வேறு இருக்க முடியாது. மேலும் கேள்விப்படுகிறேன், ஒரு விவசாயியின் வீட்டில், அவரது மனைவியிடம் வேறு தங்க நகைகள் இல்லாமல், அவர்கள் கையிலே போட்டிருக்கும் வளையல்களை கழற்ற முடியவில்லை. எனவே, சோப்பு போட்டு கழற்றிச் செல்லுகின்ற ஜப்தி நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. நான் ஏதோ ஆவேசத்தோடு பேசுகிறேன் என்றோ, இந்த அரசாங்கத்தின்மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்பதற்காக பொய்யான குற்றச்சாட்டுகளை புனைந்து பேசுகிறேன் என்றோ கருதக்கூடாது, நான் தெளிவாகவே சொல்ல விரும்புகிறேன்.

இதுமாதிரியான பல்வேறு நிகழ்ச்சிகள் தமிழகத்திலே நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்திலே, திருச்சிற்றம்பலத்திலே, தாலுகா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வைரவன் சேர்வை அவர்கள் வீட்டில், ஆண்கள் இல்லாத நேரத்தில் நெல் மூட்டைகளை எடுத்துச் சென்றார்கள். பீரோவிற்கு சாவி இல்லாத காரணத்தினால், அது உடைக்கப்பட்டு அதிலே உள்ள துணிமணிகள், பேன், கைக் கடிகாரம் போன்றவைகள், இன்னும் சொல்லவேண்டுமென்றால் பூஜை அறையிலே உள்ள குத்து விளக்கு போன்றவைகளை எல்லாம் ஜப்தி செய்யக்கூடிய நிலைமை அங்கே உருவாகியிருக்கிறது. ஆண்கள் இல்லை; 2 மணி நேர அவகாசம் கொடுங்கள், வந்து விடுவார்கள் எப்படியாவது பணம் கொடுக்கிறோம் என்று சொன்ன நேரத்திலுங்கூட. கொஞ்சமும் ஈவு இரக்கமற்ற முறையில் ஜப்தி செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமானால், அம்மையாண்டி என்ற ஊரிலே! எங்கள் வட்டார காங்கிரஸ் கமிட்டிப் பொருளாளர் கே. எம். நடராஜன் வீட்டிலும் இம்மாதிரியாகச் சென்று, அவருடைய வீட்டின் ஒரு பகுதி கூட்டுறவு சங்கம் அமைக்கப் பட்டிருக்கிறது என்றும், 1,000 ரூபாய் அங்கே வாடகை பாக்கி யிருக்கிறது என்றும் எடுத்துச் சொன்ன நேரத்திலேகூட, அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தவிர, இப்போது கொஞ்சம் பணம் கொடுக்கிறோம், நாளைக் காலை மீதியைக் கொடுக்கிறோம் என்று சொல்லியும், அதை ஏற்றுக்கொள்ளாமல் ஜப்தி செய் திருக்கிறார்கள்.

தர்மபுரி மாவட்டம் கடந்த இரண்டு ஆண்டு காலமாக கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தாலும்கூட, அந்த மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருந்தாலும், அங்கே பல்வேறு திட்டங்களை செய்கின்ற நிலை இருந்தாலும், ஜப்தி நடவடிக்கை செய்து கொண்டிருக்கிறார்கள். 29—4—81 அன்று தர்மபுரி நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் டி. சி. பெரியசாமி வீட்டில் ஜப்தி செய்திருக்கிறார்கள், 24 ஆம் தேதி நோட்டீஸ் அனுப்பப்பட்டு, ஒரு வார காலத்திற்குள், அதற்கு முன்னாலே 29 ஆம் தேதி அதாவது ஒரு வார கால அவகாசத்திற்கு முன்னாலே, ஜப்தி செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் எங்களுக்கு கிடைத்திருக்கிறது. நான் இந்த அரசை வேண்டிக் கேட்டுக் கொள்வதெல்லாம். இந்த அரசாங்கம் ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்தார்கள். அந்த உயர் மட்டக் குழுவின் நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, அந்த உயர்மட்டக் குழுவின் சிபார்சுகள் எந்த அளவிற்கு என்று முடிவு வராத நேரத்திலே; இப்படிப்பட்ட ஜப்தி தொடர்வது நியாயம் தானா? தொடர்ந்து எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நிதி நிலை அறிக்கையில் இந்த ஜூன் மாதம் வரை தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். அப்படி தவணையைக் கொடுத்து விட்டு, தவணையைக் கட்டுகிறவர்களுக்கு வட்டியில் சலுகை அளிக்கப்படும் என்று சொல்லிவிட்டு, அதற்கு முன்னாலே இப்படிப்பட்ட கெடுபிடிகளில் வசூல் செய்கின்ற முறை நியாயம் தானா? என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ கடுமையான வறட்சி காரணமாக, அரசாங்கம் வறட்சி நிவாரணப் பணிகளை செய்கின்ற நேரத்தில், எத்தனை யோ பேர் வரி செலுத்தாத சூழ்நிலை இருக்கின்ற நேரத்தில், விவசாய பெருமக்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற முறையில், இத்தகைய கெடுபிடி வசூல் செய்யக்கூடாது. நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். இந்தப் பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் தமிழகத்திலே இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்கள் சார்பிலே உங்கள் மூலமாக மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், இன்றையதினம் இந்த மாமன்றத்தின் மூலம், ஜப்தி நடவடிக்கையை இந்த அரசு நிறுத்தி வைக்கிறது





என்ற ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பை, அத்தகைய ஒரு அறிவிப்பை இந்த மாமன்றத்திலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிச்சயமாக அப்படி அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமானால், விவசாயிகள் விவசாயம்செய்வதற்கு கொஞ்சம் பணம் அவர்கள் கையிலே வந்து, விவசாயம் செய்து, அதன் மூலமாக தமிழகத்தைக் காக்கின்ற சூழ்நிலை உருவாகும் என்றும் அதன் மூலம் தவணையைக் கட்டுகின்ற நிலைமையும் உருவாகும். இதைப்பற்றி எனக்கு முன்னாலே நிறைய பேர்கள் பேசியிருக் கிறார்கள்; ஆகவே, இது முக்கியமான ஒரு பிரச்னை என்ற காரணத்தினால், எப்படியாவது இன்று இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். வரதராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, இன்று தமிழ்நாட்டில் பரவலாக கிராமப்புறங்களிலே கூட்டுறவு கடனுக்காக ஜப்தி நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. இது ஒரு சங்கடமான, அரசு மிகப் பெரிய நெருக்கடியில் இருக்கின்றபோது, களங்கம் கற்பிக்கக்கூடிய ஒரு செயலாக இது அமைந்திருக்கிறது. அரசு இதைக் கவலையோடு கவனித்து இந்தப் பிரச்னையை எப்படி தீர்க்கவேண்டும் என்பதை ஆலோசிக்க வேண்டிய ஒரு நிர்பந்தமான நிலையிலே இந்த அரசு இருக்கிறது என்பதை நான் நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த கடன் என்பது கடந்த ஆறு, ஏழு ஆண்டு காலமாக சிறுக சிறுக வளர்ந்து, இன்று பல்கி பெருகி விவசாயிகள் கஷ்டமான நிலையில் இருக்கக்கூடிய ஒரு காலம். அடுத்து இந்த ஆண்டு கடுமையான வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப் பட்டு இருக்க கூடிய ஒரு காலம். மின்சாரத் தட்டுப்பாட்டி னாலும் விவசாயம் சில சமயங்களில் நெருக்கடிக்கு உள்ளாகி யிருக்கிற ஒரு காலம். இப்படிப்பட்ட காலத்தில் தான் இந்த ஜப்தி நடவடிக்கைகள் நடக்கின்றன என்பதை அரசு கவனிக்க வேண்டும்.

ஏற்கனவே அரசு தன்னுடைய சக்திக்கு உகந்த சலுகைகளை அளித்து இருக்கிறோம். அப்படிப்பட்ட நல்ல முயற்சியை கூட மத்திய சர்க்கார் உதவி கொடுக்காத நிலையில் ஒரு 70, 80 கோடி ரூபாயை உதவி செய்து பலபல சலுகைகளை நாம் கொடுத்திருக்கிறோம். நாம் சலுகைகள் கொடுத்து இருக் கிறோம் என்பதை வரவேற்கிற போது, இன்னொரு பக்கத்திலே சலுகைகளைப் பெற்றிருக்கிற விவசாயிகள் தன்னுடைய கஷ்டங் களை நம் முன்னாலே தெரிவிக்கிறார்கள். இருக்கக்கூடிய நிலைமை எல்லாம் இன்று நாம் கொடுத்திருக்கிற சலுகை என்பது புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு குறுகிய கால கடனை மத்திய கால கடனாக மாற்றிக் கொண்ட, பயிர் கடனாக 5 ஏக்கரும், அந்த 5 ஏக்கருக்கும் கீழே இருப்பவர்கள் கடனை தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். மயில் ராவணனுடைய உயிரை பிடித்த கதையைப் போல

இந்த நிவாரணம் என்பது எங்களுக்கு இருக்கிறது. ஆகவே ஒரு சிறு பகுதியினருக்கு இந்த நிவாரணம் என்பது வருகிறது. பெரும் பகுதி நிவாரணம் கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே கஷ்டங்கள் அதிகமாக இருக்கின்றன என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவேதான் நான் அரசுக்கு முன்னால் வைக்கக்கூடிய ஒரு ஆலோசனை 5 ஏக்கர் நஞ்சை அல்லது அதற்கு ஈடான 10 ஏக்கர் புஞ்சை அப்படிப்பட்ட விவசாயிகளுடைய பயிர் கடன் முழுவதும், அது வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்டிருக்கிறதா என்பது அல்ல. 4, 7 ஆண்டு காலமாக ஏறி வந்திருக்கக்கூடிய இந்த கடன் முழுமையையும் ரத்து செய்து விட்டு, அதற்கு மேல் இருக்கிற விவசாயிகள் பட்டிருக்கிற விவசாய கூட்டுறவு கடன்களிலே வட்டி அல்லது அபராத வட்டியை ரத்து செய்து விட்டு சுலப தவணைகளிலே வசூல் செய்வது என்று நிலைமையை நாம் மேற்கொண்டால் இந்த கிராமப்புறத்திலே, திசை திருப்புகிற சக்திகள், தீய சக்திகள் என்று கருதுகிறோமே, அந்த சக்திகள் விவசாயிகளிடமிருந்து தனிமை படுத்த முடியும். விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய சிரமங்களை ஓரளவு குறைக்க முடியும். ஜப்தி நடவடிக்கையை கட்டுப்படுத்த முடியும். அந்தத் துறையிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று கடனாக ஜப்தி நடவடிக்கைகள், நானே நேரடியாக பார்த்ததை அரசுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 20, 30 போலீஸ் பட்டாளத்துடன் போகிற போது, அரசு நடவடிக்கை எடுப்பதிலே நல்லெண்ணம் இருந்தாலும் கூட, கிராமப்புறத்திலே ஒரு அவப்பெயர் வருவதற்கு ஒரு இடம் இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து விவசாய உயர்மட்ட குழு ஒன்றை அமைத்து இருக்கிறோம். ஒரு வாரம் இங்கே உட்கார வையுங்கள், விவாதிக்கட்டும். என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று முடிவெடுத்து, அரசு இதற்கேற்ப முடிவுகள் மேற்கொள்ள வேண்டும். மேற்கொண்டு இந்த பிரச்சினைகளை விவாதிப்பதற்கு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ப. தீர்த்தராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசியல் லாப நோக்கோடு 1974–75 ஆம் ஆண்டிலிருந்து விவசாயிகளுடைய கடனைத் தள்ளி வைத்து அதனால் விவசாயிகளின் கடன் சுமை அதிகமாகியிருக்கிற நேரத்திலே, வறட்சியால் ஒருபக்கம் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் குறிப்பாக சொல்லப்போனால் தர்மபுரி மாவட்டத்தில் கடுமையான வறட்சி இருந்து வருகிறது. சிறு விவசாயிக்கு ஒரு வறட்சி, பெரிய விவசாயிக்கு ஒரு வறட்சி என்பதல்ல. அனைவருமே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்திலே அந்த கடன் வசூல் செய்வதை பார்க்கின்றபொழுது, இந்த அரசு விவசாயிகளுக்கு, எதிரான அரசா என்று எண்ணுகின்ற அளவிற்கு அந்த அதிகாரிகள் நடந்து கொள்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.





வசூல் செய்யும் நேரத்தில் அதிகாரிகள் ஏறத்தாழ 15, 20 வண்டிகளில், கார்களில், ஜீப்புகளில் போகிறார்கள். வருவாய்த் துறை, கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகளை உடன் அழைத்து போகிற போது ஒரு பெரிய பராந்து வருவதைப் போல, கிராமப்பகுதிகளுக்குச் செல்லும் போது, மக்கள் அதைப்பார்த்து பீதி அடைந்து ஓடுகிறார்கள் என்ற நிலை இன்றைக்கு இருக்கிறது. அதிகப்படியாக ஏதுவும் கிடைக்கவில்லையென்றால், கட்டியிருக்கிற புடவைகளையும் உண்ணுகின்ற தட்டையும், டம்ளர்களையும் ஜப்தி செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே ஏற்பட்டிருக்கிற பதட்ட நிலையை காணும் போது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது.

[பிற்பகல் 12.20]

வசூல் செய்வதிலே எந்த அரசியல் கட்சிக்கும் கருத்து வேறுபாடு கிடையாது என்று சொன்னாலும் இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையை மனதிலே கொண்டு வசூலை சற்று தள்ளிவைக்க இந்த அவையின் அனைத்து நிகழ்ச்சிகளையும் தள்ளிவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது கூட்டுறவுக் கடன் வசூலினைப் பொறுத்தவரைக்கும் சிறு விவசாயிகள் மீது கூட நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற ஒரு தகவலைத் தந்தார்கள். அது ஒரு சிறிதும் ஆதாரமற்றது என்பதை நான் தெளிவாகச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஒட்டுமொத்தமாக இன்று தமிழகத்தில் தவணைக் கடன்களைத் தரவேண்டிய தொகை மட்டுமே 444 கோடி ரூபாய். அந்த 444 கோடி ரூபாயில் 297 கோடி ரூபாய் நிலுவைக் கடன்களாக இருக்கின்றன. அந்த 297 கோடி ரூபாய் நிலுவைக் கடனிலே கூட தற்போது சிறு விவசாயிகள் எனக் கருதப்படுகிற 5 ஏக்கருக்கும் கீழே நிலம் வைத்திருக்கின்றவர்கள் தரவேண்டிய கடன்களுக்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதைப்பற்றி அரசு தெளிவாக்கியிருக்கிறது. 5 ஏக்கருக்குக் கீழே உள்ள சிறிய விவசாயிகள் மட்டுமல்ல, 5 ஏக்கரிலிருந்து 10 ஏக்கர் வரையில் வைத்திருக்கின்ற நடுத்தர விவசாயிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 10 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கின்ற பெரு விவசாயிகள், 10 ஏக்கருக்கு மேல் நிலத்தையும் வைத்துக்கொண்டு இதர வருமானம் தரக்கூடிய உப தொழில்களையும் வைத்துக்கொண்டிருக்கின்ற வளம்படைத்த விவசாயிகள்மீது மட்டுமே தற்போது இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் தர வேண்டிய பணம் மட்டும் 133 கோடி ரூபாய் இருக்கிறது. ஆனால் நடவடிக்கை எடுக்க நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பது கூட 33.94 கோடி பாக்கிக்காகத் தான். 10 ஏக்கருக்குமேலே வைத்திருக்கின்ற வசதி படைத்த விவசாயிகள் பல கோடி

ரூபாய் தரவேண்டியிருந்தும் நோட்டீஸ் தரப்பட்டிருப்பது இந்த 33.94 கோடி ரூபாய் அளவிற்குத் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முக்கியமான காரணம் என்ன என்பதை இந்த அவையிலே ஏற்கெனவே இதுகுறித்த ஒத்திவைப்புத் தீர்மானம் வந்த நேரத்திலேயும், சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை விவாதத்தின் போதும் அரசு தெளிவாக்கியிருக்கிறது. 30-6-81 வரைக்கும்தான் கூட்டுறவு வருடம் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. மைய அரசு மாநில அரசுக்கு மிகத் தெளிவாக பல பல கட்டங்களிலே தெரிவித்து விட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது சொன்னார்கள். மைய அரசு கொடுக்காவிட்டாலும்கூட மாநில அரசு கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். மாநில அரசு வலியவந்து அந்தச் சலுகைகளைத் தரவேண்டுமென்று சொன்னாலும்கூட மைய அரசு கொள்கையளவிலே அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்திருக்கிறோம்.

இதை நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் பாரதத்திலேயே தமிழகத்திலே தான் தற்போது நிலுவை அதிகம் என்பதைக் கருத்திலே கொண்டு மத்திய அரசு இந்த நிலை கூடாது ஒன்று என்றும் கடனை ரத்து செய்கிற பழக்கம் பாரதத்தின் ஒட்டு மொத்தமான பைனான்ஷியல் நிலையை கொலாப்ஸ் செய்துவிடும் என்றும் மாநில அரசுக்கு தெரிவித்திருக்கிறது, இந்தக் கடன் பிரச்சினையில் இந்த அவைக்கு நன்றாகத் தெரியும். ஏ.ஆர்.டி.சி. சில விதிமுறைகள் வைத்திருக்கிறது. உலக வங்கி சில விதிமுறைகளை வைத்து இருக்கிறது. உலக வங்கி ஏ.ஆர்.டி.சி.யினுடைய விதிமுறைகளை கொடுத்து ரிசர்வ் வங்கி மாநில அரசுக்கு விதிமுறைகளை வகுத்திருக்கிறது. உலக வங்கி மாநில அரசுக்கு தருகிறபோது அந்தக் கடனை ஏ.ஆர்.டி.சி. மூலமாக வாங்கி விவசாயிகளுக்குத் தருகிற தபால்பெட்டி என்ற நிலையிலே இருக்கின்ற பணியைத்தான் மாநில அரசுகள் செய்து கொண்டிருக்கின்றன. இந்தக் கடனை வாங்கித் தருவது மைய அரசாக இருக்கிற காரணத்தினாலே சில உறுதிமொழிகள் அடிப்படையில் மத்திய அரசு தான் அந்தக் கடனை வாங்கித் தருகிறது. விவசாயிகளுக்குக் கடனை வாங்கித் தந்து, அந்தக் கடனைத் திருப்பி வாங்கி, ஏ.ஆர்.டி.சி., மூலமாக உலக வங்கிக்குத் திருப்பிக் கட்ட வேண்டிய பொறுப்பும் மாநில அரசுக்கு இருக்கிறது என்பதை மைய அரசு மிகத் தெளிவாக வலியுறுத்தியிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இந்தக் கடனைத் தருகிறார்கள். இந்தக் கடனைத் திருப்பித் தராத நிலை ஏற்படுகின்றபொழுது, ஏ.ஆர்.டி.சி., உலக வங்கி, ரிசர்வ் வங்கி, மைய அரசு தொடர்ந்து மாநில அரசுக்கு சொல்லி விட்டன; "கொடுத்த கடனை நீங்கள் வசூல் செய்தாக வேண்டும்" என்று வலியுறுத்தியிருக்கிறார்கள்.

வறட்சியின் காரணமாக உண்மையிலே விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற அடிப்படையிலே விவசாயிகளினுடைய கடனை ரத்து செய்ய வேண்டும்; பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்



கென தமிழகத்தில் எந்தவொரு ஆட்சிக்காலத்திலேயும் இல்லாத அளவிற்குப் பல கட்டங்களில் முடிவுகளை இந்த அரசு எடுத்தது.

உதாரணமாக, 1977 இல் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் இதுகாறும் விவசாயிகளுக்காக 196 கோடி ரூபாய் சலுகை, எந்த ஆட்சிக் காலத்திலேயும், பாரதத்திலே எந்த மாநிலத்திலேயும் தராத சலுகையை இந்த அரசு தந்திருக்கிறது. அவ்வளவு சலுகைகளையும் செய்தபிறகும்கூட விவசாயிகளைப்பற்றி இந்த அரசு கவனிக்கவில்லை என்று சொல்லிய குற்றச்சாட்டு தேவையற்ற, ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்பதற்காக நான் இதைத் தெளிவாகச் சொல்கிறேன்.

இந்தியாவில் எத்தனையோ மாநிலங்களில் விவசாயிகளின் பிரச்னைகள் இல்லாமல் இல்லை; பிரச்னைகள் இருக்கின்றன. ஆனால் எந்த மாநிலத்திலேயும் தமிழகத்திலே தற்போது—கடந்த மூன்றரை ஆண்டுக் காலமாக விவசாயிகளுக்காகச் செய்யப்பட்டிருக்கின்ற 196 கோடி ரூபாய் சலுகை போன்று எந்த மாநிலத்திலும் செய்யவில்லை.

புரட்சித் தலைவரவர்கள் வாக்குறுதி தந்தார்கள்; இந்த அரசு வாக்குறுதி தந்தது. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பிரச்னைகளை இந்த அரசு அனுதாபத்தோடு கவனிக்கும் என்ற வாக்குறுதியைத் தராமல் இல்லை.

மைய அரசு கூட பல வாக்குறுதிகளைத் தந்திருக்கிறது மைய அரசு அதன் வாக்குறுதிகளையெல்லாம், மைய அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்து பல ஆண்டுகள் ஆன போதிலும்கூட இன்னும் முடிக்க முடியாத நிலையிலே இருக்கிறதேயொழிய ஆட்சிக்கு வந்த ஆறு மாதங்கள் அல்லது ஓராண்டுக்குள்ளே கொடுத்த வாக்குறுதிகளெல்லாம் என்னவாயின என்ற ஒரு வினாவை மைய அரசைப் பார்த்து மாநில அரசுகள் கேட்டுமேயானால் நிலை என்ன என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் போன்றவர்கள் உணர வேண்டுமென்பதற்காகத் தான் நான் இதைச் சொல்கிறேன்.

மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்; இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்தால் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு வாக்களித்திருக்கிறார்கள். ஓராண்டுக் கால ஆட்சிக்கு மக்கள் எங்களுக்கு வாக்களித்து அனுப்பவில்லை; ஐந்தாண்டுக் காலம் ஆட்சியிலே இருக்க இருக்கிறோம். நிதி நிலைத் தட்டுப்பாடு, நிதிநிலையினுடைய அளவு ஆகியவைகளின் அடிப்படையில் படிப்படியாகக் கொடுத்த வாக்குறுதிகளை ஒரு மாநில அரசு நிறைவேற்ற முடியுமேயொழிய அதைவிடுத்து ஆட்சிக்கு வந்தவுடன் ஓராண்டுக் காலத்திற்குள்ளே, பல ஆண்டுகளாக விடப்பட்ட கடன்கள், ஒத்தி வைத்து ஒத்தி வைத்து. விவசாயிகள்

பாதிக்கப்பட்ட பொழுது கடந்த கால ஆட்சியெல்லாம் அப்பொழுதே விவசாயிகளின் கடன்களை உணர்ந்து ரத்து செய்திருப்பார்களேயானால் அத்தனை பிரச்சினைகளும் இந்த ஆண்டு இந்த அரசின்மீது வந்திருக்காது. ஆனால் அவர்கள் ரத்து செய்யவில்லை ; ஒத்தி வைத்தார்கள். ஆனால் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு நாங்கள் ஒத்தி வைத்தது மட்டுமல்ல ; விவசாயிகளின் கடன்களை அளவு கடந்த அளவிற்கு 196 கோடி ரூபாய் அளவிற்குச் சலுகைகளைச் செய்திருக்கிறோம். கடன்களை ரத்து செய்திருக்கிறோம்.

இப்படிப்பட்ட நடவடிக்கைகளைக்கூட மைய அரசு இன்று ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அப்படிக் கடன்களை ரத்து செய்கின்றபொழுதே மற்ற மாநிலங்களிலேயும் இந்த எண்ண உணர்வுகள் விவசாயிகள் மத்தியிலே பரவுமேயானால் ஒவ்வொரு மாநிலத்திலேயும் வாங்கிய கடனைத் திருப்பித் தர மாட்டேன் என்ற நிலையை விவசாயிகள் எடுப்பார்களேயானால், கிட்டத்தட்ட ஆறாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வாங்கிய கடன்களை ரத்துசெய்யவேண்டிய நிலை ஏற்பட்டு, அந்த ஆறாயிரம் கோடி ரூபாய்க் கடன்களை உலக வங்கிக்குத் தர வேண்டிய பொறுப்பை ஏற்கின்ற மண், மைய அரசுக்கு ஏற்பட்டு விடும் என்ற காரணத்தினால் எந்த அளவிற்கு ஒரு அபாயகரமான நிலையினைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதனை மைய அரசு மாநில அரசுகளுக்கு, தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, மற்ற மாநில அரசுகளுக்கும் கூடத் தெரிவித்திருக்கிறது.

உங்களுக்கு வசதியிருந்தால் விவசாயிகளுக்கு நீங்கள் ரத்து செய்யலாமே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மைய அரசு தெளிவாகச் சொல்கிறது, மாநில அரசுகள் உங்களுக்கு வசதியிருக்கின்ற காரணத்தினால் நீங்கள் ரத்து செய்து விட்டால், ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கை எல்லா மாநிலங்களுக்கும் பரவுகின்ற பொழுது அந்த ஆறாயிரம் கோடி ரூபாயையும் ரத்து செய்ய வேண்டிய நிலை பாரதத்திற்கு ஏற்படுமேயானால Total financial collpseஏற்படும் என்பதனை மைய அரசு தெளிவாக்கியிருக்கிறது ; இத்தகைய எச்சரிக்கையை தமிழகத்திற்கு மட்டும் தரவில்லை, மாராட்டிய மாநில அரசுக்கும் தந்திருக்கிறது ; கர்நாடக மாநில அரசுக்கும் தந்திருக்கிறது. எனவே, மைய அரசு ஒரு கொள்கைப் பிரச்னையாக, பாரதம் தழுவிய அளவிலே இருக்கின்ற பிரச்னையாக எடுத்து இதை நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது ; எச்சரித்திருக்கிறது மாநில அரசை.

வாங்கிய கடனை நீங்கள் திருப்பி வசூலித்துக் கட்டவில்லை என்றால் உலக வங்கி தமிழகத்தை, 'Black-list' செய்யக்கூடிய நிலை ஏற்படும் என மைய அரசு வற்புறுத்தியிருக்கிறது ; தெளிவாகக் கூறியிருக்கிறது.



அண்மையில் கூட மைய விவசாய அமைச்சர் திரு. ராம் பிரேந்திரா சிங் அவர்கள் மாநில அரசுக்கு—மாண்புமிகு முதல்வரவர்களுக்கு ஒரு கடிதம் கூட எழுதியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12.30]

அதில் மிகத் தெளிவாக எழுதி இருக்கிறார்கள். You may kindly recall that, while addressing the National Development Council on the 13th February 1981, the Prime Minister had referred to the need for caution in taking decisions concerning recovery of loans advanced for agricultural production/investment by institution such as co-operative and commercial banks எனச் சொல்லி அவர் மீண்டும் அதை வலியுறுத்தித் தெளிவாக எழுதியிருக்கிறார்—

This is despite the fact that the loans advanced by the Co-operative Land Development Banks are essentially given for creation of productive assets. As a result of poor recovery, four or five major States of India run the risk of being denied their share of credit provided by the World Bank to the Agricultural Refinance and Development Corporation என எழுதி, அந்த 4 மாநிலத்திலும் அதிகப்படியான கடனைக் கட்ட வேண்டிய அ சிய நி லயிலே இருக்கிற மாநிலம் தமிழகம் என்பதையும் தெளிவாக்கியிருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், while in some cases, non-payment may be accounted for by adverse seasonal conditions வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலையை மைய அரசு ஏற்றுக்கொண்டாலும் கூட, வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சலுகை கொடுங்கள் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டபொழுது, அவர்கள் கையை விரித்து விட்டார்கள். மாநில அரசினுடைய நிதிப் பிரச்னை, சற்று சிரமமாக இருந்தபொழுதுகூட விவசாயிகளுடைய நலனைப் பேண வேண்டுமென்ற காரணத்திற்காக, விவசாயிகளுக்குச் சில சலுகைகளை அளித்தோம். ஆனால், அதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. முக்கிய காரணம் என்று அவர்கள் சொல்வது, the main reasons for accumulation of loan dues are connected with wilful default and a poor climate for recovery என்று எழுதியிருக்கிறார். எனவே, விவசாயிகள் கடனைத் திருப்பிக் கட்டாமல் இருப்பது—அவர்களுடைய உற்பத்திச் செலவுக்கேற்ற ஊதியம் உண்மையிலேயே பெறமுடியாத நிலையிலும், வருவாய் இல்லாமல் இருந்தாலுங் கூட, மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதை—wilful default என்றே அவர்கள் கணக்கெடுத்து வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

The co-operative credit institutions are the major instruments providing credit to the agriculturists. If their capacity to meet the increasing needs of the rural sector is impaired in any way, the pace of progress in rural areas will itself be jeopardised எனச் சொல்லியிருக்கிறார்.

It is, therefore, necessary to refrain from taking decisions that have long-term adverse effects on the efficient functioning of the co-operative credit institutions like blanket measures for write off.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுக்காக இதைத் தெளிவாகச் சொல்கிறேன். நீங்கள், மாநில அரசு, உங்களுடைய வருவாயிலிருந்து ரத்து செய்யலாமே என்று சொல்கிறீர்கள். மாநில அரசு மற்ற பிரச்னைகள் எதுவாக இருந்தாலும், விவசாயிகள் பிரச்னைதான் எங்களுக்கு உயிர்நாடியான பிரச்னை. கிராமப்புற பொருளாதார முன்னேற்றம் தான் நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணி என்ற ஒரு முடிவெடுத்து, நாங்கள் செய்தாலும்கூட, வேண்டாம் எனத் தெளிவாக எழுதி,

It is, therefore, necessary to refrain from taking decisions that have long term adverse effects on the efficient functioning of the co-operative credit institutions like blanket measures for write-off or suspension of recove y or total ban on the use of coercive/processes.

கடும் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சொல்கிறீர்கள். Coercive process எடுப்பதை நிறுத்தாதீர்கள் என்று மைய அரசு அஞ்சல் மூலமாக மாநில அரசுக்குத் தெரிவித்து இருக்கிறது.

அது மட்டுமல்ல, ஒத்தி வைக்கலாமே எனச் சொல்கிறீர்கள். கடனை ஒத்தி வைக்கக் கூட கூடாது என suspension of recovery கூட கூடாது என மைய அரசு தெளிவாக்கியிருக்கிறது. write off எனச் சொல்கிறீர்கள். மாநில அரசு வருவாயிலிருந்து செய்வதை மைய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. மாநில அரசுக்குத் தெளிவாக எழுதியிருக்கிறது. அத்தனையையும் மீறி, மைய அரசு விவசாயிகளுக்காக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குச் சலுகை செய்வதைக் கூட கொள்கை அளவில் கூடாது என மைய அரசு எழுதிய போதிலும், விவசாயிகளின் பிரச்னையை உணர்ந்த அரசாக இந்த அரசு இருக்கிற காரணத்தால் கிராமப்புற பொருளாதார முன்னேற்றம்தான் நாட்டுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்தும் என்பதிலே அக்கறையோடு அரசு செயல்படுகின்ற காரணத்தால்தான் கிட்டத்தட்ட ரூ. 196 கோடி சலுகைகளை பாரதத்தின் எந்த மாநிலத்திலும் தமிழகத்தின் எந்த கடந்த கால ஆட்சியிலும் தராத சலுகைகளை இந்த ஆட்சி தந்திருக்கிறது. தற்பொழுது எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கை மைய அரசினுடைய அஞ்சலை ஒட்டி ரிசர்வ் வங்கி, எ.ஆர்.டி.சி., உலக வங்கி இட்டிருக்கிற உத்தரவுகளை ஒட்டி, தமிழகம் பிற்காலத்தில், கூட்டுறவுத் துறைக்கு, விவசாயிகளுக்குக் கடன் தரக்கூடிய தகுதியிலிருந்து பிளாக் லிஸ்ட் ஆகிவிட்டால், தமிழகத்தின் ஒட்டு மொத்த விவசாயக்குடும்பங்களுக்கே ஒரு துரோகம் இழைத்தநிலை ஏற்படும் என்பதனை உணர்ந்து செயல்பட வேண்டிய கட்டாய நிலையிலே அனைவரும் கொள்கை மாறுபாடுகளுக்கு அப்பால் நின்று செயலாற்ற வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் இந்த அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அப்படி எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் கூட நான் ஏற்கனவே தெளிவாகச் சொன்னதுபோல், சிறு விவசாயிகள்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆண்டித்தேவர் பேசும்பொழுது கூடச் சொன்னார்.



ஒட்டுமொத்தமாக இருக்கிற விவசாயிகளில், நான் ஏற்கனவே சொன்னதைப் போல், 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கின்ற பெரும் விவசாயிகள் தரவேண்டிய கடன் பல கோடி இருந்த போதிலும்கூட, ரூ. 31 கோடிக்கு மட்டுமே நோட்டீஸ் அனுப்பப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் பேசுகிறபோது இன்னொன்றையும் சொன்னார்கள். 2 மணி நேரம் கூட அவகாசம் கொடுக்காமல் நடவடிக்கை எடுப்பதாகவும், வளையலை சோப்பு போட்டுக் கழட்டி போவதாகவும் சொன்னார்கள். நான் இதற்கு மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுக்குச் சொல்வேன். முன்பு வந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் போது இதேபோன்று நீங்கள் சொன்னீர்கள். $2\frac{1}{2}$ ஏக்கர் 3 ஏக்கர் நிலம் வைத்திருக்கிற ஒரு சிறு விவசாயி மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று சொல்லி அந்த விவசாயியைக்கூட இந்த அவைக்கு வெளியே அழைத்துவந்து என்னைச் சந்தித்துக் கொடுத்தீர்கள். நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லி, உடனடியாக நடவடிக்கை எடுத்தோம். ஆனால் பிறகு நாங்கள் எல்லா வற்றையும் பார்த்தபோது அவர் சொன்ன சர்வே நம்பரில் இருந்த நிலம் $3\frac{1}{2}$ ஏக்கர். ஆனால் அதே விவசாயிக்கு மற்ற சர்வே நம்பர் மூலமாக $14\frac{1}{2}$ ஏக்கர் நிலம் இருந்த காரணத்தினாலேயும், நீங்கள் சொன்னதைப்போல அவர் வாங்கிய கடன் 1500 இல்லை, 30 ஆயிரம் ரூபாய்களை மற்ற நிலங்களை அவர் ஈடு கட்டி வாங்கி இருந்த காரணத்தால்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. நான் இதை சொல்லுவதற்குக் காரணம் (குறுக்கீடு) அதையும் சொல்லுகிறேன். தாலிச் செயினைக் கழட்டி சென்றார்கள் என்பது தவறான தகவல். அவர்கள் 1,500 ரூபாய் பணம் இருக்கிறது, அதை தருவேன் என்று சொல்லிவிட்டு அவர்கள் சென்று பணத்தைக் கொண்டு வந்து தந்திருக்கிறார்கள் 1,500 ரூபாய் என்று சொல்லி கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையைக்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தரத் தயாராக இருக்கிறேன்; வளையலை சோப்புப் போட்டு கழட்டிச் சென்றார்கள் என்று சொன்னார்கள். இது ஏதோ ஒரு பத்திரிகைச் செய்தியை வைத்துக் கொண்டு சொல்லி இருக் கிறார்கள். உண்மை அதுவல்ல. அந்த வளையலை சோப்புப் போட்டுக் கழட்டிய பிரச்சினையைப் பொருத்த வரையிலும் அவர்கள் தரவேண்டிய கடன்களுக்குப் பணத்தை பல வழிகளில் தந்து இருக்கிறார்கள். எந்த கொயர்சன் ஆக்ஷனையும் நாங்கள் எடுக்கவில்லை. அந்த விவசாயி கூட மிகப் பெரிய விவசாயி. 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்து, மற்ற வசதிகளையும் உடைய விவசாயிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வளையலை சோப்புப் போட்டு கழட்டிய நடவடிக்கை எடுக்கப் படவில்லை. தவறான தகவலை செய்தியை வைத்து மாண்புமிகு உறுப்பினர் சொல்லவேண்டாம் என்பதற்காக நான் இதைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு தீர்த்தராமன் அவர்கள் பேசுகின்றபோது புடவை, தட்டுகளைக்கூட ஜப்தி செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அது மிகவும் தவறான தகவல் என்பதை நான் தெளிவாக சொல்ல

விரும்புகிறேன். காரணம் 10 ஏக்கருக்கு கீழ் நிலம் உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவையும் நாங்கள் போட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலெழுந்தவாரியாக சொல்லாமல் எந்தவிவசாயி என்றபெயரைச்சொல்லி, அவருடைய லோன் நம்பரைச் சொல்லி கேட்பார்களேயானால், அரசு உத்தரவையும் மீறி அப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்து, அரசுக்குக் கெட்டபெயர் வரவேண்டும் என்ற நோக்கோடு செயல்பட்ட அந்த அதிகாரி மீதும் கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதனை சொல்லிக் கொள்கிறேன். நடவடிக்கையைப்பொறுத்தவரையில் தவணைமுறையில்அவர்களிடம் வசூலிக்கலாம் என்று சொன்னார்கள். ஒரு விவசாயி 50 ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்று இருந்தால் 15 தினங்களுக்கு முன்னாலே நோட்டீஸ் தரப்படுகிறது. 2 முறை நோட்டீஸ் தரப் படுகிறது. 2 மணி நேரம் அவகாசம் என்று சித்தன் சொல்லியதை போல அல்ல, 15 நாட்கள் அவகாசம் தரப்படுகிறது. ஒரு முறை கொடுத்து மறுமுறையும் அடுத்த 15 தினங்களுக்கு அவகாசம் கொடுத்து, அதற்குப் பிறகுதான் முன் எச்சரிக்கை தெரிவித்து சென்று நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கிறார்கள். அங்கே கூட சென்ற உடன் 50 ஆயிரம் தரவேண்டிய பெரிய விவசாயி, எடுத்த எடுப்பில் தா, இல்லை என்றால் ஜப்தி நடவடிக்கை என்று இறங்கக்கூடாதுஎன்றும்,தொகையைதவணை தவணையாக-இன்று நான் 5 ஆயிரம் தருகிறேன் அடுத்த வாரம் 5 ஆயிரம் தருகிறேன் என்று தந்தாலும் கூட, வாங்கிக் கொள்ளவேண்டும்என்றும்,அந்த முறையை அனுசரிக்கவேண்டும் என்றும் அனைத்து அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். எனவே ஆதாரம் இல்லாமல் யாரோ, எங்கோ சொல்லுகிறார்கள் என்று பத்திரிகையிலே செய்தி வருகிறது என்ற உண்மைக்கு புறம்பான தகவலை வைத்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவையிலே பேசக் கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்லுகிறேன். இந்த அரசு இதுகாறும் விவசாயிகள் நலன் கருதி, பாரதத்திலேயே, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு 196 கோடி ரூபாய்க்கு சலுகை செய்து இருக்கிறது. இந்த அரசு படிப்படியாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அவர்களுக்குத் தேவையான சலுகைகளைசெய்ய அவ்வப்போது நடவடிக்கை எடுத்து இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் மத்திய அரசு, பிரதம அமைச்சர் விவசாய அமைச்சர் உலக வங்கி, ஏ. ஆர். டி. சி. ரிசர்வ் வங்கியினுடைய கண்டிப்பான உத்தரவுகளின் அடிப்படையில் தமிழகம் பிளாக் லிஸ்ட் ஆகி விட்டால் தமிழகத்தின் எதிர்காலமே ஒரு இருண்ட சூழ்நிலைக்குச் சென்றுவிடும் என்பதற்காகத்தான் அக்ரிகல்சுரல் ஃபைனான்சுக்கு பிளாக் லிஸ்ட் உலக வங்கி செய்துவிட்டால் நாணயம் இழந்த ஒரு மாநிலம் என்ற அடிப்படையில் மற்ற டெவலப்மெண்ட் ஆக்டிவிட்டீசுக்கு கடன் தரமுடியாது என்று உலக வங்கி விதி வகுத்து இருக்கிற காரணத்தால் அந்த விதி நடைமுறைப்படுத்து கின்றபோது. தொழில் முன்னேற்றம் மற்ற முன்னேற்றங் களுக்கும், உலக வங்கிக் கடன் கிட்டாமல் போய்விடும் என்ற காரணத்தால்தான் இந்த உத்தரவை நடைமுறைப்படுத்த இந்த குறிப்பிட்ட அளவு நடவடிக்கை விவசாயிகளுக்கு பாதிப்பு





இல்லாமல் எடுக்கப்படுகிறது என்பதை அவை ஏற்று, இதுகுறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவை யில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

[முற்பகல் 12.40]

## 4. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி)

### (ஆ) விதி 54(6)–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:—

''ஒரு கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்கு கொண்டு வரக்கூடாது என்ற தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 54(6)ஐ இன்று தளர்த்தவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

## 6. கவன ஈர்ப்புகள்.

### அ. குளித்தலையில் சூறாவளிக் காற்றால் பயிர்கள் பாதிப்பு.

**திரு. இரா. கருப்பையா:** தலைவர் அவர்களே, ''21-4-1981 அன்று திருச்சி மாவட்டம் குளித்தலையில் வீசிய சூறாவளிக் காற்றால் பயிர்கள் பாதிக்கப்பட்டது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 21.4.1981-அன்று வீசிய சூறாவளிக் காற்றால் 10% வாழைப்பயிர்கள் சேதம் அடைந்துஇருக்கின்றன. குளித்தலை பிர்க்காவில் 2345 ஏக்கரும், நங்கவரம் பிர்க்காவில் 1825 ஏக்கரும் சேதம் அடைந்துள்ளது. சேதத்தின் மதிப்பு ரூ 40,000. அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக விவர அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அதற்கு நஷ்டஈடு கொடுப்பதைப் பற்றி அரசு ஆவன செய்யும்.

**திரு. இரா. கருப்பையா:** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சூறாவளிக் காற்றின் காரணமாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட தகவலின்படியே சுமார் 4200 ஏக்கர் வாழைப் பயிர் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே வாழை மட்டுமல்ல, கரும்பு போன்ற பயிர்களும், தென்னை போன்ற பயிர்களும் பாதிக்கப்

பட்டிருக்கின்றன. வாழை ஒடிந்ததால் வாழ்வே உடைந்து போன விவசாயிகளை நாம் பார்த்து இருக்கிறோம். அந்த மாதிரியான வகையில் விவசாயிகள் இப்போது பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். அம்மாதிரி நஷ்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகளில் இறங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தால் விவசாயிகள் அல்லலுறுகிறபோது சட்டவிதிகளின்படி அவர்களுக்கு உதவிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இப்போது அந்தச் சட்டவிதிகளின்படி உதவிகள் அவர்களுக்கு அளிக்க அரசு தயாராக இருக்கிறது. மாவட்டஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து குறிப்பு வந்தபிறகு அரசு ஆவன செய்யும்.

திரு. இரா. கருப்பையா: துணைத் தலைவர் அவர்களே, இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அவர்கள் அரசுக்கும், மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கும் செலுத்தவேண்டிய கடன்கள் இருக்கின்றன. இந்த விவசாயிகள் ஏற்கனவே கடன் வாங்கி இந்த விவசாயத்திலே முதலீடு செய்து இழந்து இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய விஷயத்தில் இந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இருந்தாலும், இந்தக் கடன் வசூலை ஒத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அரசு கவனம் செலுத்தும்.

(ஆ) தஞ்சை மாவட்டம் மாத்தூர் கிராமக் கூட்டுறவுசேவாசங்கம்

திரு. எஸ். இராசாராமன்: துணைத் தலைவர் அவர்களே' ''தஞ்சை மாவட்டம் மாத்தூர் கிராமக் கூட்டுறவு சேவா சங்கத்தில் டை—அமோனியம் பாஸ்பேட் உரக் கலப்பட வழக்கில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பின் மீது நடவடிக்கை எடுக்காதது குறித்த'' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, நான் பேரவையின் முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மாத்தூர் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள உரத்தில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதாக மாத்தூர் திரு. ஜி. சக்திவேலு என்பவரின் புகாரின் பேரில் மாத்தூர் துணை விவசாய அலுவலர் (உரக் கட்டுப்பாடு) 28-9-77 அன்று மாத்தூர் விவசாய சேவைக் கூட்டுறவு சங்கத்திற்குச் சென்று 5,650 மெட்ரிக் டன் (133 மூட்டை) டை-அமோனியம் பாஸ்பேட் (Di-ammonium Phosphate) உரத்தைக் கைப்பற்றி மாத்தூர் கிராம அதிகாரியிடம்



ஒப்படைத்தார். மேற்படி உரத்தில் குளத்து மண் கலப்படம் செய்யப்பட்டுள்ளதாகத் தஞ்சாவூர் துணை விவசாய அலுவலர் (உரக் கட்டுப்பாடு), தஞ்சாவூர் குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் (நுகர்ப்பொருள்) Crime No. 364/77 என்ற எண்ணில் வழக்கு பதிவு செய்தார். பின் உட்கோட்ட நீதித் துறை நடுவர் மன்றத்தில் (Sub Divisional Magistrate) விசாரிக்கப் பட்டு மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. ஏ. கோவிந்தசாமி காவலர் திரு. ஆர். பால்ராஜ் ஆகியோர் குற்றவாளிகளென முடிவு செய்யப்பட்டு 10-7-79 ஆம் தேதிய தீர்ப்பில் 6 மாதக் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (C. C. W. 382 of 78) தண்டனை அளிக்கப்பட்ட மேற்படி நபர்கள் தற்போது மேல்கோர்ட்டில் மேல்முறையீடு செய்து ஜாமீனில் விடப் பட்டுள்ளார்கள். வழக்கு மேல்கோர்ட்டில் விசாரணையில் உள்ளது. சங்கத்தில் பெற்றிருந்த கடனைத் தவணையில் திருப்பிச் செலுத்தத் தவறியதால், சங்கத் தலைவர் திரு. ஏ. கோவிந்தசாமி 11-2-78-ல் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். சங்கக் காவலர் திரு. ஆர். பால்ராஜ் சங்கத்தின் சேவையில் இருந்து 30-11-78-ல் நீக்கப்பட்டார்.

மாத்தூர் கிராமக் கூட்டுறவுச் சேவா சங்கத்தில் உரக் கலப் படத்திற்குக் காரணமாக இருந்த அதன் முன்னாள் தலைவர் திரு, ஏ. கோவிந்தசாமி அவர்களின் நஞ்சை நிலம் 38 செண்டு, 28 செண்டில் உள்ள தென்னந்தோப்பு உட்பட புஞ்சை நிலம் 35 செண்டு, மாத்தூர் மேல்பாதி ஊராட்சியில் உள்ள 314 ஆம் எண்ணுள்ள ஓட்டுவில்லை வீடு ஒன்று ஆகியவை 3-3-1980 ஆம் தேதியில் தீர்ப்பிற்கு முன் ஜப்தி (Conditional Attachment) செய்யப் பட்டது. இவற்றின் மதிப்பு சுமார் ரூ, 27,900 ஆகும்.

அவருக்கு எதிராக ரூ. 26,559·94க்குத் தொடுக்கப்பட்ட தாவா நடவடிக்கை 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே மற்றும் ஜூன் திங்கள்களில் விசாரணைக்கு வந்தபோது, எழுத்து மூலமான அறிக்கை தாக்கல் செய்ய மேற்படியார் அவ்வப்போது வாய்தா கோரி வந்தார். 8.4.81 அன்று விசாரணை போடப்பட்டு 28-4-81-க்கு ஒத்திவைக்கப்பட்டது. 28-4-81 அன்று நடந்த விசாரணையில் கலப்படம் செய்யப் பட்டதாகக் கூறப்படும் உர மூட்டைகளைத் தன்னிடம் ஒப்படைத்தால், உடனே முழுத் தொகையையும் செலுத்தி விடுவதாக முன்னாள் தலைவர் வாக்கு மூலம் கொடுத்துள்ளார். உர மூட்டைகள் சங்கக் கிடங்கில் பூட்டி சீல் வைக்கப்பட்டு, சாவி நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் அவர், தொடுத்துள்ள மேல் முறையீடு பைசல் செய்யப்பட்ட பிறகு தான் உரமூட்டைகளை எப்படி விற்பனை செய்வது என்பது தெரியவரும். எனவே, தாவா நடவடிக்கையின் விசாரணையை துணைப்பதிவாளர் வாதியின் சம்மதத்துடன் 22-6-81-க்கு மீண்டும் ஒத்திவைத்திருக்கிறார். முன்னாள் தலைவரின் சொத்துக்கள் ஏற்கனவே ஜப்தி செய்யப்பட்டுள்ளதால், சங்கத் திற்குச் சேரவேண்டிய உரத்தின் மதிப்பை வசூலிப்பதில் சிரமம் ஏதும் இல்லை.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் முன்னுக்குப் பின் முரணாக சில தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன. இந்த கூட்டுறவு நாணயச் சங்கத் தலைவர்மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பதாகவும் 6 மாத தண்டனை அளிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது. அப்படி தண்டனை அளிக்கப்பட்டிருந்தும் கூட அந்த உரத்தை கிராம அதிகாரிகளிடம் ஒப்படைத்திருப்பதாக இந்த அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். அதே அறிக்கையிலே பின்பக்கத்தில்' ''இந்த உரமூட்டைகள் சங்கக் கிடங்கில் பூட்டி சீல் வைக்கப்பட்டு, சாவி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது'' என்று தெரிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, தான் பொறுப்பில் இருந்து, கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்த முடியாத காரணத்தால் பதவியிருந்து நீக்கப்பட்டபோது தன் பொறுப்பில் இருந்த உரம், சீனி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்களை எல்லாம் அந்தச் சங்கச் செயலாளரிடம் ஒப்படைக்கும்போது அவர் இந்த உரத்தை ஒப்படைக்கவில்லை. அது மட்டுமல்ல. 17-17 என்ற பாமினி உரம் 2 டன், 850 கிலோ ஒப்படைக்கப்படவில்லை. அதற்கான ரூபாயையும் அவரிடமிருந்து இதுவரை வசூல் செய்யவில்லை. மேலும் மண்ணெண்ணெய், சீனி போன்றவைகளை ஒப்படைக்கும்போது ஷார்டேஜ் ஏற்பட்டதால் அவரிடமிருந்து அப்போது பொறுப்பில் இருந்த அதிகாரிகள் 1,000 ரூபாய்தான் வசூல் செய்திருக்கிறார்கள். மீதியுள்ள ரூபாயையும், பாமினி உரத்திற்கான ரூபாயையும் இந்த அரசு அவரிடமிருந்து எப்போது வசூல் செய்யும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவர்களே' மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல மாறுபட்ட புள்ளிவிவரங்கள் இந்த அறிக்கையிலே இல்லை. உரத்தை கையாடல் செய்தார் என்கிறபோது அந்தச் சங்கத் தலைவர் 1971-லிருந்து, இந்த ஆட்சி வருவதற்கு முன்னாலிருந்தே தொடர்ந்து செய்த நடவடிக்கை என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 28.9.1977 அன்று, இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த மூன்று . மாதத்திற்குள் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. திருடியவர் உரத்தை தன்னுடைய வீட்டிலே வைக்கமாட்டார். பதுக்கி வைத்திருந்தார். நடவடிக்கை எடுத்து, 133 மூட்டை உரத்தை கைப்பற்றினார்கள். வழக்கு பதிவு செய்யப்பட்டது. நீதிமன்றத்தில் 6 மாதம் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. அதற்குமேல் அவர் அப்பீல் செய்திருக்கிறார். அப்பீலில் தீர்ப்பளிக்கப்படும் வரையில் வழக்கு முடிந்துவிட்டதாகக் கருத முடியாது. அதனால் அந்த உரத்தை விநியோகிக்க முடியாத நிலையில், அது அப்படியே இருக்க வேண்டுமென்று நீதிமன்றம்





சொன்னார்கள். அது சரியல்ல. வசூல் நடவடிக்கை எடுத்ததனால் தான் 27,900 ரூபாய் தந்துவிட்டார்; மீதிப் பணம் தரவில்லை. அப்பீலிலே அவர் ஜாமீனில் வந்து, வெளியிலே இருக்கிறார்.

திரு. எஸ். இராசாராமன் : துணைத் தலைவரவர்களே, நீதிமன்றத்தில் 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அவர் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டதும், அந்த உரத்தை யாராவது ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கும். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

அது மட்டுமல்லாமல் அந்தக் கூட்டுறவுச் சங்கம் 1977 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை விவசாயிகளுக்கு உர விநியோகம் செய்யவில்லை என்பதை இந்த அரசு அறியுமா? மேலும் உரம் கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை சுமார் 3 ஆண்டுகளாக அவர்மீது நடவடிக்கை எடுக்காததன் மர்மம் என்ன? அவருடைய சொத்துக்களை பராதீனம் செய்துவிட்டாலோ அல்லது அரசுக்குச் சேரவேண்டிய தொகை அளவுக்கு சொத்து இல்லாவிட்டாலோ இந்த அரசுக்கு நஷ்டம் ஏற்படும் என்பதை அரசு அறியுமா? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவர அறிக்கையை முழுமையாகப் படிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அவர்மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சொத்துக்கள்மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலம்தான் 27,900 ரூபாய் வசூலாகியிருக்கிறது. பக்கம் 2, பாரா 1-ல் இது தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நீதிமன்றம் தண்டனை அளித்த பிறகும், நீதிமன்றம் சொன்னதைப்போல உரத்தை தரவில்லை என்று சொன்னார்கள். கீழ் கோர்ட் தண்டனை தருகிறது. அதை எதிர்த்து அவர் அப்பீல் செய்திருக்கிறார். மேல்முறையீடு செய்து, கீழ் கோர்ட் தீர்ப்புக்கு ஸ்டே வாங்கப்பட்டிருப்பது வழக்கு நடைபெறுகிறது என்றுதான் பொருள்.

[பிற்பகல் 12.50]

அவ்வாறு வழக்கு தொடர்ந்து நடைபெறுகின்றபோது அதாவது சப்ஜெக்ட் மேட்டர் ஆஃப் தி கேஸ் வழக்காக ஆகி இருக்கின்ற காரணத்தால் உரம் வெளியிலே விற்க முடியாது என்பது இருக்கின்ற சட்ட விதிமுறை. அந்த அடிப்படையிலே அது அந்த நிலையிலே இருக்கின்றது. அந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தவறுகளைச் செய்துவிட்ட காரணத்தால் தான்

இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் அது 77-க்குப் பிறகு வந்த சங்கம் அல்ல. அதற்கு முன்பே அந்த சங்கம் நடந்து வருகின்றது. அந்த சங்கத்தை நடத்தி வருகின்றவர்கள் இந்த ஆட்சிக்குச் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல என்பதை தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(இ) குழாய்க் கிணறுகளில் கைப்பம்புகள் வைக்க வேண்டிய அவசியம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வட ஆற்காடு மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் எடுத்த இடத்தில் கைப் பம்புகள் வைக்கவேண்டிய அவசியம் குறித்து திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், எல். பலராமன், என். ஏ. பூங்காவனம், எம். ஆறுமுகம், ப. சுந்தரம், பாபு ஜனார்த்தனன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் எடுத்த இடத்தில் கைப்பம்புகள் வைக்க வேண்டிய அவசியம் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை நான் வைக்கிறேன். அதிலே இரண்டாவது பாராவிலே ''மாநிலத்திலே'' என்று இருப்பதை ''மாவட்டங்களில்'' என்று திருத்தி அமைத்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அறிக்கை

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 18-4-1981 வரை வறட்சி நிவாரணத்திற்காக நிர்மானிக்கப் பட்டுள்ள 262 ஆழ்துளைக் குழாய் கிணறுகளில் 73 கிணறுகளில் கை இறைப்பான்கள் பொருத்தப்பட்டு பயனில் உள்ளன. மீதமுள்ள 189 குழாய்க் கிணறுகளில் உடனடியாக கை இறைப் பான்கள் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. பொதுவாக தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் நிலவி வரும் கடும் வறட்சி காரணமாக, அரசு வறட்சி நிவாரணப் பணியின் கீழ் குடிநீர் வசதி அளிக்க உத்திரவிட்டுள்ள ஒப்பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆனால் வாரியத்தின் கைவசம், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் குடிநீர் திட்டங்களுக்கும், மற்றும் பராமரிப்புத் திட்டங்களுக்கும் தேவையான கைப்பம்பு களே இருந்தன. வறட்சி நிவாரணப் பணிகளை உடனே



மேற்கொள்ள வேண்டியிருந்ததால், இப்பகுதிகளில் துரித நடவடிக்கை மேற்கொண்டு முதற்கட்டமாக குழாய்க் கிணறுகள் நிர்மானிக்கப்பட்டு இருப்பிலுள்ள கை இறைப்பான்கள் முதலில் பொருத்தப்பட்டுள்ளன. வறட்சி திட்டப் பணிகளுக்காக 13,650 கை இறைப்பான்கள் பெறுவதற்கான உத்திரவுகள் பல்வேறு நிறுவனங்களுக்கு இடப்பட்டுள்ளன. இவைகளில் 1,900 கை இறைப்பான்கள் இதுவரை பெறப்பட்டு, அவைகளை மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாக ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணறுகளில் பொருத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பொருத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஏப்ரல் இறுதிக்குள் 2,400 கை இறைப்பான்களும், மே இறுதிக்குள் 2,850 கை இறைப்பான்களும் பெறப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே மே மாதம் முதல் வாரியத்தில் இருப்பில் தேவைக்கு ஏற்ப வைத்துக் கொள்ளும் நிலைமை பெற்று, ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டவுடன் அவைகளில் கை இறைப்பான்கள் பொருத்தப்பட்டு, மக்கள் உடனுக்குடன் குடிநீர் பெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

* திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையிலே வட ஆற்காடு மாவட்டத்திலே 262 ஆழ்துளைக் குழாய் கிணறுகளில் 73 கிணறுகளில் கை இறைப் பான்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றது என்று சொல்லப் பட்டிருக்கின்றது. மீதமுள்ள 189 கிணறுகளில் கைப் பம்புகள் போடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் தேவை என்று கருதி மொத்தம் 13,650 கைப் பம்புகள் போடப் பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் 1,900 கை பம்புகள் வந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே அந்த 13,650-ல் வட ஆற்காடு மாவட்டத்திற்கு மட்டும் 1,900 கைப் பம்புகளா என்பதை விளக்கவேண்டும். அது மட்டு மல்லாமல் இங்கே 73 போடப்பட்டிருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. மற்றவற்றை எப்போது போடுவார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அந்த அறிக்கையைத் தொடர்ந்து படித்தால் அது தெரியும். அதிலே 1900 கை இறைப்பான்கள் பெறப்பட்டு மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அப்படி முன்னுரிமை கொடுத்து கைப்பம்புகளைப் பொருத்துவதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. என். ஏ. பூங்காவனம் : 262 போர் வெல் போட்டிருக் கிறார்கள். இதிலே 60 போர்கள் வேலை செய்யவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? என்னுடைய தொகுதியில் ஆர். எஸ். புரத்தில் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். குடியாத்தம் இரயில்வே ஸ்டேஷன் முன் போடப் பட்ட மெயினில் இருந்து தண்ணீர் எடுப்பதாகக் கடிதம் எழுதி இருப்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 262 ஆழ்துளைக் குழாய் கிணறுகளில் 73 கிணறுகளில் கை இறைப்பான்கள் பொருத்தப்பட்டு பயனில் உள்ளன. மீதம் உள்ள 189 குழாய்க் கிணறுகளில் கை இறைப்பான்கள் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது, இந்த விவரம்தான் என்னிடத்திலே இருக்கின்றது, மற்ற விஷயங்களுக்கு என்னிடத்திலே தகவல் இல்லை.

(ஈ) வேலை நிறுத்தம் செய்துள்ள ஃபைட்டோ கெமிகல்ஸ் நிறுவனத் தொழிலாளர்கள் கைது செய்யப் பெறுவது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மதுரை மாவட்டம் சோழவந்தானில் ஃபைட்டோ கெமிகல்ஸ் நிறுவனத்தில் வேலை நிறுத்தம் செய்து வரும் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டது குறித்து திருவாளர்கள் என். எஸ். வி. சிந்தன், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து, க. பாரமலை, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், ஏ. சந்திரசேகரன், ப. நெடுமாறன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர் அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஏ. சந்திரசேகரன்.

திரு. ஏ. சந்திரசேகரன்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் சோழவந்தானில் ஃபைட்டோ கெமிகல்ஸ் நிறுவனத்தில் வேலை நிறுத்தம் செய்து வரும் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் நான் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றினை வைக்கிறேன்.

அதில் கடைசியில் '11 ஆம் தேதியன்று ஒப்பந்தம் ஏற்பட்டு 13 ஆம் தேதியன்று தொழிலாளர்கள்' வேலைக்குப் போகிறார்கள் என்கிற வரியினையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்,

அறிக்கை.

மதுரை மாவட்டத்திலுள்ள கோத்தாரி ஃபைட்டோ கெமிகல்ஸ் (இண்டர்நேஷனல்) என்னும் நிறுவனத்தில் சுத்திகரிக்கப்பட்ட எண்ணை மற்றும் தாவரங்களிலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட சாறு தயாரிக்கும் பணிநடைபெறுகிறது. இந்நிறுவனத்தில் பணிபுரியும் சுமார் 175 தொழிலாளர்கள் கீழ்க்கண்ட தொழிற் சங்கங்களின் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர்.





(1) கோத்தாரி ஃபைட்டோ கெமிக்கல்ஸ் ஸ்டாப் அண்டு ஓர்க்கர்ஸ் யூனியன், நகரி.

(2) மதுரை ஜில்லா தேசீய கெமிக்கல் அண்டு அலைடு ஓர்க்கர்ஸ் யூனியன், சமயநல்லூர் (ஏ.ஐ.டி.யு.சி.).

2. இவ்விரு சங்கங்களும் 28-3-81 அன்று பஞ்சப்படியில் ஒரு பகுதியை அடிப்படை சம்பளத்தோடு இணைத்தல், 300க்கு மேற்பட்ட புள்ளிகளுக்கு புள்ளி ஒன்றுக்கு ரூ. 1.40 பைசா வீதம் பஞ்சப்படி வழங்குதல், காஷுவல் தொழிலாளர்களை நிரந்தரம் செய்தல் ஆகியவை உட்பட 16 அம்ச கோரிக்கைகளை எழுப்பி 11-4-81 முதல் இக்கோரிக்கைகள் மறுக்கப்படும் பட்சத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக கூறி ஓர் வேலை நிறுத்த அறிக்கை அனுப்பியிருந்தன. இக்கோரிக்கைகள் மீது மதுரை 2-ம் வட்ட தொழிலாளர் துறை அலுவலர் நடப்பு ஆண்டில் ஏப்ரல் மாதம் 2, 6 மற்றும் 9 தேதிகளில் இருதரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தி இப்பேச்சு வார்த்தையின் முடிவை எதிர்நோக்கும்படியும், உத்தேசித்துள்ளபடி வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாம் என்று அறிவுரை வழங்கியிருந்தும் தொழிலாளர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி 12-4-81 முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். மேலும் இது சார்பாக மதுரை 2-ம் வட்ட தொழிலாளர் துறை அலுவலர் ஏப்ரல் மாதம் 20, 24 மற்றும் 27, 30 தேதிகளிலும் சமரசப் பேச்சை நடத்தினார். ஆயினும் சமரசம் ஏற்படவில்லை.

3. பேச்சு வார்த்தைகளின் போது நிர்வாகத்தினர் வேலை நீக்கம் செய்யப்பட்ட திரு. பாலன் என்பவருக்கு மறுபடியும் வேலை கொடுக்க மறுத்து விட்டனர் என்றும் ஆனால் திரு. ஜோசப் என்பவருக்கு, வருத்தம் தெரிவித்து கடிதம் கொடுத்தால் வேலை கொடுப்பதாகவும் கூறினர் என்றும், ஆனால் மற்ற கோரிக்கைகள் குறித்து 12 (3) ஒப்பந்தம் நடைமுறையில் இருப்பதால் அவற்றை கவனிக்க மறுக்கின்றனர் எனவும் ஆனால் தொழிலாளர்கள் தங்களது 16 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிறார்கள் எனவும் மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.

4. மேலும் 22-4-81 அன்று மேற்படி தொழிற்சாலையைச் சேர்ந்த திரு. நாகரத்தினம் மற்றும் 19 பேர்கள், அபாயகரமான ஆயுதங்களுடன் மேற்படி தொழிற்சாலையைச் சேர்ந்த எம்.டி.ஏ. 3376 என்ற லாரியை வழிமறித்து கற்களால் அடித்து கண்ணாடிகளை உடைத்ததாகவும் அதனால் ரூ. 500 நஷ்டம் விளைவித்ததாகவும் அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது. மேற்படி கலவரத்தில் மூன்று நபர்கள் சாதாரண காயமுற்றனர் என்றும் மேலும் லாரி டிரைவர் கொடுத்த புகாரின் மீது சோழவந்தான் காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code) பிரிவுகள் 147, 148, 341, 424 மற்றும் 506 (ii) கீழ், குற்றம் எண். 90/81 ஆக பதிவு செய்யப்பட்டு மேலே சொல்லப்பட்ட திரு. நாகரத்தினமும் மற்றும் 8 பேர்களும் கைது செய்யப்பட்டு அதில் 8 பேர்கள்

காவலில் வைக்கப்பட்டனர் எனவும் அதில் ஒருவர் காவல் நிலையத்திலிருந்து ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார் எனவும் அரசுக்கு தகவல் கிடைத்துள்ளது.

5. 3-5-81 அன்று மதுரை துணை தொழிலாளர் ஆணையர் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தியதில் இருசாரரும் அவர் யோசனைப்படி சமரசம் செய்து கொண்டதற்கான கூறுகளை ஆராய்வதற்கு சிறிது அவகாசம் கேட்டுள்ளனர். இப்பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டு சமரசம் ஏற்படும் என நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. 11 ஆம் தேதியன்று ஒப்பந்தம் ஏற்பட்டு 13 ஆம் தேதியன்று தொழிலாளர்கள் வேலைக்குப் போகிறார்கள்.

திரு. ஏ. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி. ஆனால் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பெற்று கோர்ட்டுக்கு சென்றிருப்பதாக நான் அறிகிறேன். அந்த வழக்குகளை வாபஸ் பெறுவதற்கு அரசாங்கம் அந்த நிர்வாகத்திற்கு முறையாக ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 11 ஆம் தேதியன்று ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. 13 ஆம் தேதி வேலைக்குப் போகிறார்கள் என்ற தகவலை நான் தொலைபேசி மூலமாகப் பெற்று இங்கே தந்திருக்கிறேனே தவிர, ஒப்பந்தத்தின் விவரங்கள் என்ன என்பது தெரியாது. வழக்குகள் சம்பந்தமாக எப்பொழுதும் அரசு கையாளும் முறையை நிச்சயமாக இப்பொழுதும் கையாளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் 11 ஆம் தேதி ஒப்பந்தம் செய்து வேலைக்கு திருப்பி விட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 12 ஆம் தேதி துவங்கிய அந்த வேலை நிறுத்தத்தை இரண்டு சங்கங்களும் முழுமையாக அனுசரித்திருக்கிறார்கள். அதை போலீஸ் வைத்து எப்படியாவது உடைத்துவிட வேண்டும் என்று நிர்வாகம் எடுத்த நடவடிக்கை வெற்றி பெறாததன் காரணமாக, வேண்டும் என்றே அவர்களுடைய ஆட்களை வைத்து லாரியை தாக்கி, அதன் மீது உண்மைக்கு மாறான புகார்களை தொழிலாளர்கள் மீது போட்டு, அதன் விளைவாக எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்த துரைசாமி போன்றவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே வழக்குகளை வாபஸ் செய்வதற்கும், இதிலே சம்பந்தப்பட்டிருக்கிற ஒப்பந்தத்திலே ஏற்கெனவே 8 எலக்ட்ரீஷியன்கள் இருக்கிறார்கள்.





[பிற்பகல் 1.00]

அதில் நான்கு பேர்கள் இப்போது வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நான்கு பேர்கள் எட்டு பேர்களின் வேலையை செய்ய மறுத்ததால், அந்த எட்டு பேர்களின் வேலைப் பளுவை ஏற்க மறுத்த காரணத்தால் பாலன் என்பவரை வற்புறுத்தி அந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று விரட்டியிருக்கிறார்கள். அவர் அந்த வேலையைச் செய்ய மறுத்த காரணத்தால் அவர்கள் வேலைக்கு பணியவில்லை என்று சொல்லி ஒழுங்கு நடவடிக்கை எடுத்து வெளியேற்றியிருக்கிறார்கள். அவரை வேலைக்கு எடுத்துக் கொள்ள அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; அண்மையில் நான் மதுரை சென்றிருந்தபோது கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் அந்தத் தொழிலாளர்களை எல்லாம் அழைத்து வந்து முறையிட்டு என்னிடம் சொன்னார்கள். நான் டி.வி.எல்.—யை அழைத்து விரைவில் உடன்பாடு கொண்டு வாருங்கள் என்று சொன்னேன். காலை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு—கடைசி தகவலாக, லேட்டஸ்ட் தகவலை உங்களுக்குத் தரவேண்டும் என்று தொலைபேசி மூலம் கேட்டு 11—ம் தேதி ஒப்பந்தமாகியிருக்கிறது. 13-5-81 இன்று வேலைக்குப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அவர் அப்படிச் செய்யவில்லை. இப்படிச் செய்யவில்லை என்று சொல்வது good relationship உருவாவதற்கு பாதகம் ஏற்பட்டு விடலாம். ஏதாவது குறைகள் இருக்குமானால், ஒப்பந்தத்தை எல்லாம் படித்து பார்த்து, அங்குள்ள சிரமங்களையெல்லாம் தெரிந்து கொண்டு அதை என்னிடம் சொல்வார்களானால் அதைப் பார்த்து பரிசீலனை செய்து ஆவன செய்ய முயற்சி செய்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள்

### (அறிமுகம் செய்தல்)

(அ) கலவரப் பகுதிகள் (சட்ட விரோதக் கூட்டத்தினால் காயம் அடைந்தவருக்கு இழப்பீடு கொடுக்கும்) சட்ட முன்வடிவு 1981

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கலவரப் பகுதிகள் (சட்டவிரோதக் கூட்டத்தினால் காயம் அடைந்தவருக்கு இழப்பீடு கொடுக்கும்) சட்டமுன்வடிவினை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

Thiru R. UMANATH;- On a point of order, before asking for leave, certain provisions of the Rule – ஐ இங்கே அமுல் படுத்த வேண்டியிருக்கிறது. அந்த ரூலை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். அசெம்பிளி ரூல் 118 இல் என்ன சொல்லியிருக்கிறது என்று சொன்னால்.......

Rule 118 of the Assembly Rules states that "any member who desires to move for leave to introduce a Bill, shall give five days' notice in the prescribed form (Appendix D) of his intention and shall, together with the notice, submit to the Secretary a copy of the Bill'' etc." Provided that in case of a Government Bill, along with the notice, sufficient number of copies of Bill shall be sent to the Secretary for circulation to the Members.'' என்று இருக்கிறது. இதன்படி இதை 2 நாட்கள் முன்னதாக சர்குலேட் செய்திருக்கவேண்டும். ஆனால் அப்படி இது செய்யப்பெறவில்லை. நேற்று இரவு தூங்கப் போகும் நேரத்தில் கொண்டு வந்து கொடுத்தால் எப்படி படித்து பார்ப்பது? But in Shakdhar and Kaul on Parliamentary Practice, page 466, 'Copies of the Bill are printed in two lots. Copies with the superscription" "to be introduced in the Lok Sabha" are printed first for circulation to members atleast two days before the date of introduction'' என்று இருக்கிறது. ஆகவே இது ரொம்ப முக்கியமான பில். அடிப்படை உரிமைகளைப் பாதிக்கக் கூடிய பில். ஆகவே நான் இதில் மெடையிலாக பேச வில்லை-பிறகு பேசிக் கொள்கிறேன். இருந்தாலும் இதை இரண்டு நாள் விட்டு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். லீவ் எடுப்ப தற்கு முன்னதாக 2 நாட்கள் முன்னதாக சர்குலேட் செய்யப் பெறவேண்டும். அந்த முறை கொடுக்காமல் இருப்பது தப்பு.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதிதான் நான் பெறுகிறேனேயொழிய சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே அறிமுகம் செய்வது என்பது இந்த அவையிலே கொண்டு வருவது அவ்வளவுதான். இதைப்பற்றி அந்தச்சட்ட முன்வடிவி னுடைய பிரிவுகள் பற்றி விவாதிப்பதற்கு, எப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறதோ அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் நிறையப் பேசலாம். அதற்கான போதுமான கால அவகாசம் உங்களுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் இங்கே ஒரு விதியைப் படித்துச் சொன்னார்கள். அதாவது ஒரு குறிப்பிட்ட கால அளவு இந்த அறிமுகம் செய்ய அனுமதி கோருவதற்கு முன்னால் இந்தச் சட்டமுன்வடிவு மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தரப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள் கிறேன். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் சில நேரங்களில் ஒருசில நேரங்களில் முக்கியமானது என்று கருதுகிற போதோ அல்லது அவசரத் தேவை என்று எண்ணுகிறபோதோ அத்தகைய கால அவகாசம் இல்லாமலேயே அந்த சட்ட முன் வடிவை அறிமுகம் செய்யலாம் என்று இதே மன்றத்தைச் சேர்ந்த நல்ல அனுபவம் மிக்க உறுப்பினர்கள் ஏற்கனவே விதிமுறை களிலேயும் இடம் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக விதி 177யை அவர்கள் பார்ப்பார்களேயானால் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்வதிலோ ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதிலோ உள்ள கால வரையறையை பேரவைத் தலைவர் அனுமதித்து குறைத்துக்



கொள்ளலாம் என்று ஏற்கனவே நம் முன்னோர்கள் சிறந்த முறையில் விதிகளை வகுத்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எழுப்பிய கருத்தை நான் ஏற்றுக்கொண்டாலும் எதிர்ப்பை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கலவரப் பகுதிகள் (சட்டவிரோதக் கூட்டத்தினால் காயம் அடைந்தவருக்கு இழப்பீடு கொடுக்கும்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

திரு ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நாங்கள் உங்களோடு கரெக்ட்டாக கோவாப்பரேட் செய்யும்போது நீங்கள் சில "நார்ம்ஸை" அப்ஸர்வ் பண்ணவேண்டும். சர்குலேட் செய்து போதிய அவகாசம் கொடுக்கவில்லை. இரவு நேரத்தில் தூங்கும் போது கொண்டு வந்து போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் சில நேரங்களில் தவிர்க்க முடியாது போய் விடுகிறது.

திரு. ரா. உமாநாத் : அப்ஜக்ஷன் என்ன என்று கேட்டு முடிவு செய்வதற்கு முன்னால், நீங்கள் ஓட்டுக்கு விடுவதென்று சொன்னால், If you do not want the co-operation of the Opposition என்றால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை அவர் சரியாக கவனிக்க வில்லை என்று கருதுகிறேன். நான் பதில் சொல்கிறபோது, நான் என்ன சொன்னேன் என்றால், அவருடைய கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன், ஆனால் எதிர்ப்பை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று சொன்னேன். அதற்குக் காரணம் விதி 177-ல், "The Speaker may in his discretion.. அவருடைய விருப்ப உரிமை. பேரவைத் தலைவர் அந்த குறிப்பிட்ட கால அளவு தேவையா' தேவை இல்லையா என்பதைப் பற்றி முடிவெடுக்க உரிமைப் படைத்தவர். அந்த உரிமையைப் பயன்படுத்தி, கால அளவு தேவையில்லை என்ற காரணத்தினால், இதை அறிமுகப்படுத்த அனுமதி தந்திருக்கிறார். ஆகவே, விதிகளின்படி ஒழுங்காக அவை நடவடிக்கைகள் நடந்து வருகின்றன என்பதை அவர்களுக்கு நான்

தெரிவித்துக் கொள்கிறேன். அவர் எங்களுக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு தருகிறார்கள் என்று பணிவோடுதான் நான் சொன்னேன். அதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறபோது, அது சம்பந்தமாக நாம் பிரச்னைகளை பேசிக் கொள்ளலாம் என்று அவருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : The Speaker may, in his discretion dispense with the provisions of this Chapter regarding notice, periods of notice, or interval between any two stages of ligislation, and may, in his discretion allow any motion regarding a Bill or any amendment to be moved without notice, or after such shorter interval, as the may think fit. நான் இப்போது சர்குலேஷனில்தான் இருக்கிறேன். Notice, periods of notice அது நோட்டீஸ் கொஸ்டினைப் பற்றிய வரைக்கும்தான். நான் ரெயிஸ் பண்ணுகிற அப்ஜெக்ஷன் எங்களுக்குக் கொடுக்கவேண்டிய சர்குலேஷனிலே ஒரு ரைட் இருக்கின்றது என்பதை இன்சிஸ்ட் பண்ணுகிறேன். சர்குலேஷன் பண்ணி பிறகுதான் இங்கே கொண்டுவர வேண்டும் என்பதுதான் என்னுடைய அப்ஜக்ஷனே தவிர, நோட்டீஸ் 5 நாளா, அல்லவா என்பதல்ல நான் ரெயிஸ் பண்ணியது. ஸ்பீக்கருக்கு டிஸ்கிரிஷனரி என்பது நாம் போட்டிருக்கக் கூடிய ஒரு டெர்ம்ஸ்தான். ஆனால், சர்குலேஷன் விஷயத்தில் அல்ல. சர்குலேஷன் என்ற புரவிஷன் எதற்கு என்று சொன்னால், இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலே எங்களுக்கு அப்போஸ் பண்ணுகின்ற ரைட் இருக்கிறது; உரிமை இருக்கிறது. அதற்கு முன்னாலே அப்போஸ் பண்ண வேண்டாமா? எங்களுக்குள்ளே ஒரு ஸ்டாண்ட் எடுக்க வேண்டாமா? அதைப் பற்றி மெம்பர்கள் புரிந்துகொள்ள வேண்டாமா? ஆகவே, எங்களுக்கு சர்குலேஷனுக்கு போதிய அவகாசம் கொடுக்காததால், தயவுசெய்து கொடுக்கவேண்டும் இந்த மாதிரி ஹரிபரி பண்ணக் கூடாது. அவர் சொன்னார், இதை இப்போது பாஸ் பண்ணப் போவதில்லை என்று. பாஸ் பண்ணப் போவதில்லை என்று சொல்கிறபோது, இந்த சர்குலேஷனுக்கு எங்களுக்கு டைம் கொடுப்பதிலே என்ன தப்பு? என்ன கெட்டுப் போச்சு? பாஸ் பண்ணாத ஒரு பில்லை இன்ட்ரடியூஸ் பண்ணி, சும்மா வைப்பதிலே என்ன பயன்? அது தப்பு, அது சரியல்ல. Don't do that. Co-operation is two way traffic. It is not one way traffic.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : Sir, I entirely agree as far as the definition for co-operation is concerned. இதிலே விதி 177—ல் பார்த்தால்,

Interval between any two stages of legislation. What Mr. Umanath says is coming under Rule 118, which reads as follows; "Provided that in case of a Government Bill, along with the notice, sufficient number of copies of the Bill shall be sent to the secretary for circulation to the Members".



மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொல்வது விதி 118-ல் உள்ள புரவிசோவிலே, Copies shall be sent to the Secretary for circulation... ஏன் அவருக்கு அந்த நோட்டீஸ் வேண்டுமென்று பேரவைத் தலைவரோ அல்லது பேரவைச் செயலரோ கேட்கின்றார் என்றால், அந்த பில்லினுடைய சட்ட முன்வடிவினுடைய நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டுமென்பதற்காக. ஆகவே, சட்ட முன்வடிவை அனுப்பவேண்டுமென்ற அந்தக் காலத்திற்குத்தான் அவர் குறிப்பிட்ட கால வரையறையை நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த கால வரையறையைக் குறைத்துக் கொள்ளவோ, அல்லது நீக்கிக் கொள்ளவோ, சட்ட முன்வடிவை உடனடியாக அனுப்பி அதை எடுத்துக்கொள்ளச் சொல்வதற்கு பேரவைத் தலைவருக்கு அதிகாரம் உண்டு என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். 2 நாட்கள் என்பது நம்முடைய விதி முறைகளில் கிடையாது. ஆகவே, நம்முடைய விதிமுறைகளிலே மெம்பருடைய கைக்கு அது கிடைக்க வேண்டுமென்பது தான் முக்கியம். நங்களுக்கு இரவு வந்தது என்று தாங்களே தெரிவித்திருக்கிறீர்கள். ஆகவே, சர்குலேஷன் இஸ் ஆல்ரெடி ஓவர்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவருக்கு டிஸ்கிரிஷன் இருக்கிறதென்றால், அதை எங்களுக்கு அகெயின்ஸ்டாக பண்ணக் கூடாது; அதுவும்

[பிற்பகல் 1.10]

மேஜர் பில்லாக இருக்கிறதாலே, அதுவும் பாஸ் பண்ண போகாமல் இருக்கிற போது, எங்களுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல், ஒரு வாய்ப்பு அளிக்காமலே இருக்கிற நேரத்திலே உங்களுடைய discretion-ஐ எங்களுக்கு favourable ஆகத்தான் use பண்ண வேண்டும், because we are in the Opposition.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Discretion ஐ எப்படி use பண்ணுவது என்பதை இரண்டு பேரும் பேரவைத் தலைவருக்குச் சொல்ல வேண்டியதில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, நீங்கள் டிஸ்கிரிஷனை உபயோகித்துள்ளது இப்போது எதற்கு?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அறிமுகம் செய்வதற்கு.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, இன்ட்டிரடொக்ஷனை நான் 'அப்போஸ்' பண்ணுகிறேன். 'அப்போஸ்' பண்ணுகிற போது I can make a statement.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே நம்முடைய விதிமுறைகளிலே சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதற்கு அனுமதி கோருகிற போது ஒரு உறுப்பினர் எழுந்து தங்களுடைய எதிர்ப்பை தெரிவிக்கலாம். அதை சுருக்கமாகத் தெரிவிக்கலாம். அதற்கு பிறகு வாக்கெடுப்பு நடைபெறு

கிறது. வாக்கெடுப்பு நடந்த பிறகு அந்த குறிப்பிட்ட அமைச்சர் அறிமுகம் செய்ய தாங்கள் அனுமதி அளிக்கிறீர்கள். அவர் அறிமுகம் செய்கிறேன் என்று சொல்கிறார். அவ்வளவு தான். அறிமுகம் செய்கிறேன் என்று சொல்கிற பொழுது அதை எதிர்ப்பதற்கோ, எதிர்த்து பேசுவதற்கோ, நம்முடைய விதிகளிலே இடமில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் 'அப்ஜெக்ட்' பண்ணுவதற்கு ரூல் இல்லை என்கிறார் ரூல் இருக்கிறது. 'இண்ட்ரொடக்‌ஷன்லே' ,அப்ஜெக்ட்' செய்ய ரூல் இருக்கிறது. அதைப் படிக்கிறேன்.

Rule 124;

Motion for leave to introduce a Bill:

If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker after permitting, i he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion may without further debate, put the question thereon.

If such a motion is agreed to, the Bill

அப்படி அதிலே இருக்கிறது. அவரும் ஸ்டேட்மென்ட் கொடுக்கலாம். அந்த பேசிசிலே நாம் 'புரோசீட்' பண்ணிக் கொண்டிருக்கிறோம். இந்த உரிமையை நீங்கள் எடுக்க கூடாது, that is not fair.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன் எனச் சொன்னவுடனேயே நீங்கள் எழுந்து பேசினீர்கள் ,அமைச்சர் பேசினார். பின்னர் வாக்கெடுப்பு முடிந்து விட்டது, மேலும் விவாதம் வேண்டாம். ஆய்வுக்கு வரும்போது விவாதிக்கலாம்.

திரு. ரா. உமாநாத்: நாளைக்கு எங்கள் பிரைவேட் மெம்பர்ஸ் பில் டே. அரசாங்க பில்களை நிறைவேற்றவேண்டுமென்பதால் நாங்கள் எங்களுடைய ஸ்டேச்சுட்டரி ரைட்டை கூட விட்டுக் கொடுக்க தயாராக இருக்கிறோம், ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

We accommodated. Why should not the Minister accept that.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: The Bill has been introduced. ஆய்வுக்கு எடுக்கிற போது பேசுங்கள் (குறுக்கீடு).

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்த ஒரு கருத்தின் அடிப்படையிலே திரு. உமாநாத் அவர்கள் அமர்ந்தார்கள். அமைச்சர் அவர்கள் கருத்தை ஏற்று-



கொண்டீர்கள் என்ற அடிப்படையிலே தான் அவர்கள் அமர்ந்தார்கள். அமைச்சர் சொன்னது உங்களுடைய கருத்தை ஏற்கிறேன் உங்களுடைய எதிர்ப்பை ஏற்கவில்லை என்று சொன்னார்கள். ஆகவே எதிர்ப்பை அவர்கள் சொல்கிற வகையில் ஆய்வு செய்வதற்கு முன்பே அனுமதியை மீண்டும் தந்து விடுவது துணையாக இருக்கும். எதிர்க்கட்சியினுடைய உரிமை என்பது வேறு நீங்கள் ஸ்டீம்ரோலர் அடிப்படையிலே வேகமாகக் காரியங்களைச் செய்தால் சற்று சங்கடமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் தயவு செய்து பிரச்சினையை சிக்கலாக்காதீர்கள்.

It is not my private business.

ஹவுஸினுடைய நேரம் வீணாகக் கூடாது என்றுதான் வேகமாக முறையாக நான் பேசுகிறேன். நீங்கள் ஸ்டீம்ரோலர் என்று சொல்கிறீர்கள்.

Don't use such words.

திரு, ரா. உமாநாத்: Tomorrcw is Private Member's day. We are no+ prepared to forego that.

(ஆ) வேளாண் விளை பொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு 1981.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) சம்பளம் வழங்கல் இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு 1981 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 51,1981)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே,) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் இரண்டாவது (திருத்த) (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 51/1981) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்,

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) பல்கலைக்கழகக் கல்லூரித் தேர்வுகள் ஆசிரியர்களும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களும் தேர்வின்போது மாணவர்களை கண்காணித்தல் சட்டமுன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு பல்கலைக் கழக-கல்லூரித் தேர்வுகள் (ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் தேர்வின் போது மாணவர்களைக் கண்காணித்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1980) திரும்ப பெற அனுமதி கோருகிறேன்.

பல்கலைக் கழகத் தேர்வுகளைப் பொறுத்தமட்டில் பல்கலைக் கழக ஆசிரியர்கள் தாங்கள் கண்காணிக்க முடியாது என்று சொல்கிற அளவுக்கு பாய்காட் செய்கிற அளவுக்கு போராட்டம் நடத்துகின்ற முறையை கடந்த 2, 3 ஆண்டுக்காலமாக நாம் பார்த்து வந்தோம், அதனால் பரீட்சைகள் பாதிக்கப்பட்டன. அது மட்டுமல்ல மாணவர்கள் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட நட்டத்தையும் நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகவே, பல்கலைக் கழகம் தேர்வுகளை கண்காணிப்பது அவர்களுடைய கடமையாகும் என்று சொல்கிற முடிவை அரசு எடுத்து அதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வர முடிவுசெய்து அறிமுகம் செய்தோம்.

[பிற்பகல் 1.20]

ஆனால் அதை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் எதிர்த்தார்கள்; கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தைச் சார்ந்தவர்களும் அதை எதிர்த்தார்கள். எதிர்த்து, இனிமேல் அத்தகைய நிலைமைகளுக்கு நாங்கள் இடம் தர மாட்டோம்; நாங்கள் நல்முறையில் ஒத்துழைப்பு தருகிறோம் என்பதனையும் சொன்னார்கள். வேறு வகையிலே அதைப் பணி விதிகளிலே கடமையாக வருகின்ற வகையிலேயும் அரசு செய்வதற்கு அவர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்தார்கள். ஆகவே, இப்பொழுது அரசு கல்லூரிகளின் ஆசிரியர்களுடைய பணி விதிகளிலே பணியினுடைய ஒரு பகுதியாக அதைக் கொண்டு வருவதற்கு நாம் ஒரு 'எக்சிகியூடிவ் ஆர்டர்' போடுவதற்கு ஒரு முடிவை எடுத்திருக்கின்றோம்.



அந்த அளவிற்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்பு தருகின்ற காரணத்தினாலேயும் இப்பொழுது அப்படிப்பட்ட நிலைமைகளை நாங்கள் உருவாக்க மாட்டோம் என்று அவர்கள் சொல்லி வருகின்ற காரணத்தினாலேயும், ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டியதில்லை என்று அரசு கருதுகிறது.

பிறகு அப்படிப்பட்ட நிலைமைகளை அவர்கள் உருவாக்குவார்களேயானால் நிச்சயமாக அரசு சட்டம் கொண்டு வரத்தான் செய்யும்காரணம் நாம் ஆசிரியர்களுடைய உரிமைகளையும் பாதிக்கக் கருதவில்லைஆனால் அதேநேரத்தில் மாணவர்களுடைய கல்வியை நாம் மிக முக்கியமாகக் கருதுகிறோம். அது ஒரு சமூகநலனாக இருக்கின்ற காரணத்தினாலே ஆசிரியர்கள் ஒத்துழைப்பு இருக்கும் என்று கருதி நாம் இன்றையதினம் அந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெறுவது என்ற முடிவை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே இதைத் திரும்ப பெறுவதற்கான அனுமதியை நான் கோருகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவைத் திரும்பப் பெறுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு திரும்பப் பெறப்பெற்றிருக்கிறது.

4. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி)

(இ) பேரவையின் அலுவல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"இன்றைய நிகழ்ச்சி நிரலில்—

இனம் 4, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல் என்ற தலைப்பில் குறிப்பிட்டுள்ள சட்டமுன்வடிவுகளில், இரண்டாவதாகக் குறிப்பிடப்பெற்றுள்ள சட்டமுன் வடிவை நாளை, 14–5–1981 அன்று முதலாவதாக எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும். முதல், மற்றும் மூன்று, நான்கு ஆகிய சட்டமுன்வடிவுகளை, இன்று மாலை 4 மணிக்குக் கூடி பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

உ. தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு 1981 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1981).

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

> "1981-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 43/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

என்று மொழிகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட நாளாக தமிழகத்தில் இருக்கக்கூடிய தொழிலாளிவர்க்கம் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வெளியிலும் இந்த அவைக்கு உள்ளேயும் பல தடவை கோரிக்கைகள் வைத்தது அனைவருக்கும் தெரிந்தது. இன்று கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம்கூட தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழிலாளி வர்க்கம் எந்த முறையிலே இந்தச் சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று விரும்பினார்களோ அந்த முறையிலே முழுக்க முழுக்க அமையவில்லையென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனாலும் இந்தச் சட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். வரவேற்கிற நேரத்திலே இந்தச் சட்டம் சம்பந்தமாக நாங்கள் சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். அதன்மீதும் இந்தச் சட்டம் சம்பந்தமாகவும் சில கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறோம். தமிழகத்திலே இன்று நடைமுறையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய சில உண்மையான பிரச்னைகளையும் சேர்த்துக்கொண்டு இந்தச் சட்டத்தை நாம் பார்க்க வேண்டுமென்று சொல்லவிரும்புகிறேன்.

* 1981ம் ஆண்டு மே மாதம் 5ம்தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



[மாலை 4.10]

குறிப்பாக தமிழகத்திலே அரசினுடைய பல இலாகாக்களிலேயும் எம்ப்ளாயராக மாறப்பட்டதற்குப் பிறகு, தொழிலாளர்களுக்கு ரெபரன்ஸ் கொடுப்பதே மிகவும் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அவையிலே தொழிலாளர் நல மானியக் கோரிக்கை விவாதத்திலும் இதுகுறித்து சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அவையிலே ஒரே ஒரு பிரச்சினையை முக்கியமாக நான் சொல்லவிரும்புவது, தொழில் தகராறு சட்டத்திலே தொழிலாளர்களை வேலையில் இருந்து வெளியேற்றுவதும், அப்படி வெளியேற்றுகிற நேரத்திலே சில நேரங்களில் ஒரு என்குயரி நடத்தப்பட்டது என்று சொல்லி 'ரிக்கார்டுகளை தயார் பண்ணி, கன்சிலியேஷன் ஆபிசருக்குக் கொடுக்கப்பட்டு அதை அவர் வைத்துக் கொண்டு, மேலே ரிப்போர்ட் பண்ணி, பல கேஸ்களிலே உண்மைத் தொழிலாளிக்கு நியாயம் வழங்குவதற்குப் பதிலாக நிர்வாகம் விசாரணை நடத்தி தொழிலாளியை வேலை நீக்கம் செய்து இருக்கிறது. ஆகவே இதில் தலையிடுவதற்கில்லை என்று ரெபரன்ஸ் மறுக்கப்படும் நிலை லேபர் டிபார்ட்மென்டில் கடைபிடிக்கப்படுகிறது என்றும் இதன் காரணமாக இன்று தொழிலாளர்களுக்கு நேரடியாக நீதிமன்றத்திற்குப் போக வேண்டிய வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்றும் நீண்டநாட்களாக கோரிக்கை வைத்திருந்தது. இன்றைக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, நிர்வாகம் இப்படிப்பட்ட நிலைமை வந்ததற்குப் பிறகு சில புதிய நிலைமைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இவை ஃபாக்டரி ஆக்டுக்கு வராமல் இருப்பதற்காக சின்னச் சின்ன யூனிட்டுகளாக மாற்றிப் போடுகிறார்கள். தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்காமல் இருப்பதற்கு தொழில் ஸ்தாபனங்களை மூடிவிடுவது. குளோஷர் என்ற நிலை ஏற்பட்டால், அந்தக் குளோஷரால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் பிரச்சினைகளுக்கு நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாமல் லேபர் டிபார்ட்மென்டு எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிர்வாகங்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதற்காக ஒரு லேபர் ஆபிசருக்கு நிர்வாகம் எழுதி கருத்துக்களைச் சொல்லாமல், குளோஷர் என்று ஏற்பட்டால் Motive of closnre cannot be gone into and is irrelevant அதற்குப் பிறகு 'Workers have no right to claim re-employment on restart under new ownership of the lessee.'

ஆகவே இன்று குளோஷர் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தி இன்று தொழிலாளர்களை பழிவாங்குகின்ற நிலை ஏற்படுகின்றது. இதன் காரணமாக 2(எ) செக்ஷனில் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய dismissal, discharge or termination of service என்ற அதை மட்டும் வைத்து தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்க முடியாது என்பதை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் ஒத்துக் கொள்ளுகிறார்களா? நீண்ட நாள் தொழிற்சங்கத் தலைவராக இருந்த அவருக்குத் தெரியும், இன்று குளோஷரில் போகின்ற தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்கவேண்டும் என்றால், நாங்கள் கொடுத்திருக்கிற திருத்தத்திலே குறிப்பிட்டுள்ளபடி

'or any other case of non-employment' என்ற வார்த்தைக் கூட சட்டத்திலே சேர்க்கப்பட்டால் தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று மற்றொரு நிலை என்னவென்றால், 'dismissal termination' என்ற வார்த்தை வந்ததற்குப் பிறகு, அதிலே இருந்து தப்பித்துக் கொள்வதற்கு 2(எ) டிஸ்மிசல், டெர்மினேஷன் என்ற வார்த்தைகள் இருப்பதற்குப் பதிலாக 'voluntary abandonment' மேனேஜ்மென்டு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களைப் பொருத்தவரையில் அவர்களை வேலைக்கு அமர்த்துகின்ற போது வேஜஸ் ஸ்லிப் இல்லை, சர்வீஸ்புத்தகம் இல்லை. எந்தவிதமான ரெக்கார்டுகளும் இல்லை. அதற்குப் பிறகு லேபர் ஆபிசர் முன்னாலே போகின்றபோது, புகார் கொடுக்கும்போது இப்படிப்பட்ட தொழிலாளர்கள் எங்கள் யூனிட்டில் இல்லை. இப்படிப்பட்ட தொழிலாளர்களை நாங்கள் வேலைக்கு அமர்த்தவில்லை என்று சொல்லுகிறார்கள். இதற்குப் பிறகு வேலையில் இருந்ததாக நிரூபிக்கப்பட்டால் அவனாகத்தான் வேலையை விட்டுச் சென்றுவிட்டான், நாங்கள் அனுப்பவில்லை என்றும் சொல்லுகின்ற நிலை இருக்கின்றது. 'It is a case of voluntary abandonment ef employment.' என்று சொல்லி இதிலே இருந்து தப்பித்துக் கொள்ளும் நிலை இன்றைக்கு இருக்கின்றது.

சென்னை உயர்நீதி மன்றம் கூட இப்போது 2(ஏ) யின் பிரிவில் 'வாலின்டரி அபேன்டென்மென்ட்' வார்த்தை வராது என்று சொல்லி, பல தொழிலாளர்கள் கேஸ்களைத் தள்ளி இருக்கிறது. ஆகவே, 'நான்-எம்பளாயின்மென்ட்' என்ற அந்த வார்த்தை நிச்சயம் சேர்க்கப்பட்டால்தான் தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்கும். அதற்கு அப்பால் இன்று இருக்கும் மற்ற நிலைமைகள் என்னவென்றால் தொழிலாளர்களின் 'பார்கெயினிங் கபாசிட்டி' குறைக்கும் நிலையில் தொழிலாளர்கள் ஏதாவது சங்கத்தில் சேர்ந்து. அவர்களுடைய நிலைமையைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் செயல்பட எண்ணினால், நிர்வாகம் சில தொழிலாளர்களோடு 'அன்பேர் லேபர் செட்டில்மென்ட்' செய்து கொண்டு அநீதி இழைக்கும் நிலைமைகள் இருக்கின்றன. அதுவும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக உள்ள இந்த நேரத்தில், வேலைக்குச் சேருகின்ற நேரத்திலேயே அவர்களிடத்தில் வெள்ளைத் தாளில் கையெழுத்துப் போட்டு, அதிலே தங்களுடைய இஷ்டத்திற்கு அவர்கள் ஷரத்துக்களை எழுதிக் கொண்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுக்காமல், அந்த வெள்ளைத்தாளிலே இவர்களே ராசினாமா கடிதம் எழுதிக் கொண்டு, அவர்களை வேலையில் இருந்து வெளியேற்றும் நிலைமைகளை நாம் பார்த்துப் கொண்டிருக்கிறோம். ஆகவே, இதன் காரணமாக அவர்கள் ஏதேனும் இயக்கம் நடத்த முயற்சித்தால் நீதிமன்றத்திற்குச் சென்று அவர்கள் சிவில் கோர்ட்டில் ஸ்டே வாங்கி: அந்தத் தொழிலாளிச்கு நியாயம் கிடைக்க வழி



ஏற்படுத்தாத நிலைமையை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். எண்ணற்ற இடங்களில் தொழில் தகராறுகளில் இப்படி சிவ்ல் கோர்ட்டில் ஸ்டே கொடுத்த காரணத்தால் அந்த தொழிலாளிக்கு இயக்கம் நடத்த முடியாமல் இருக்கிறது. ஆகவே, அந்தக் தொழிலாளியைப் பொறுத்த வரையில், 'டிஸ்மிஸ்ஸல், டெர்மினேஷன்' என்ற வார்த்தைகள் வராததால் அவர்கள் தொழிலாளியாக அங்கே இருந்ததற்கு ரிக்கார்ட் மூலம் நிரூபிக்க வழியில்லாத காரணத்தால். நியாயம் கிடைக்காமல் போய்விடும் நிலைமை இருக்கிறது.

சிவில் கோர்ட்டில் இன்ஜெங்ஷன் கொடுத்து விடுவதால், அவர்களுக்கு பதிலாக வேறு தொழிலாளிகளை வைத்துக்கொண்டு அந்தக் தொழிற்சாலையை நடத்துவதற்கான நிலைமைகளும் ஏற்பட்டு விடுவதால், தொழிற்சாலை அதிபர்களுக்கு அதனால் நஷ்டம் ஏற்படுவது இல்லை. அவர்களுடைய தொழிலுக்கு எந்தவிதமான குந்தகமும், நிர்பந்தமும் இல்லாத நிலைமையில் லேபர் ஆபிஸர்'கன்சிலியேஷனுக்கு' அழைத்தாலும் அவர்கள் வருவது இல்லை. தங்களுடைய தொழிலையும் மற்றவர்களை வைத்துக்கொண்டு நடத்திவிடுவதால் தொழிலாளிக்கு நியாயம் கிடைக்காத நிலைமையும் ஏற்படுகிறது. ஆகவே நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஷரத்தை சேர்த்துக்கொள்ளவேண்டும். அதை சேர்த்தால்தான் தொழிலாளிக்கு நியாயம் கிடைக்கும்.

இதற்கு மேலும் ஒன்றைச்சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு லாபர் டிபார்ட்மென்டில் ரெபரன்ஸ் கொடுக்கும்போது அவர்கள் சேர்க்கும் வார்த்தைகளில் 'டிஸ்மிஸல், டெர்மினேஷன்' என்பது மட்டுமல்ல. - 'நான் எம்ப்ளாயின்மென்ட்' என்ற வார்த்தையும் உபயோக்கிறார்கள். அதாவது—

The issue of non-employment of such and such worker is reffered for adjudication for such and such labour court.'

அதனால் லேபர் டிபார்ட்மென்டிலே இன்றைக்கு அட்ஜூடுகேஷன் ரெபர்' செய்கிறபோது உபயோகிக்கும் அந்த நான்-எம்ப்ளாயின்மென்ட் என்கிற வார்த்தையை இதிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு அப்படிச் சேர்த்துக்கொள்ள ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள் என்பது என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'நான்-எம்ப்ளாயின்மென்ட்' என்ற வார்த்தையை ரெபரன்ஸ் பர்ப்பசுக்கு லேபர் டிபார்ட்மென்டில் உபயோகிக்கலாம் என்றால், இந்தச் சட்ட முன்வடிவிலும் அதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கொடுத்து இருக்கும் திருத்தத்தை ஏற்றுக் கொள்வதில் சிரமம் இருக்காது என்று நான் எண்ணுகிறேன், ஆகவே, இந்த நேரத்தில் மற்றொரு சமாசாரத்தையும் சொல்லிக்கொள்கிறேன்.

அது என்னவென்றால், லேபர் டிபார்ட்மென்டில் உள்ள 'கனசிலியேஷன் ஆபிஸர்களுக்கு' கொடுக்கப்பட்டிருக்கும் பவர்சில் தொழில் ஸ்தாபனங்களுக்குள்ளே சென்று இன்ஸ்பெக்ட் செய்வதற்கு அதிகாரம் இல்லை. இன்றைக்கு பல நிர்வாகம் தொழி

லாளர்களை வேலைக்கு வைக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு ஆர்டர் கொடுப்பது இல்லை. அதற்கான ரிக்கார்ட் வைப்பது இல்லை, அவர்கள் வேலையில் இருக்கிறார்களா இல்லையா என்பது பல நேரங்களில் சரியாகத்தெரிந்துக் கொள்ள வழியில்லாமல் போய் விடுகிறது. அப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக கன்சிலியேஷன் ஆபிஸர்களுக்கு 'சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன்' செய்ய வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்தால் தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்பு இருக்கும் என்றுசொல்லி நாங்கள் கொடுத்து இருக்கும் இந்தத் திருத்தங்களை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணுகிறேன்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல நீண்ட நெடுங்காலம் தொழிற்சங்க இயக்கத்தில் இருந்த தொழிற்சங்க வாதி என்ற முறையிலே நாங்கள் சொல்லிய யதார்த்ங்களை இன்றைக்கு புரிந்துக் கொண்டு, அந்தத் திருத்தங்களை வற்புறுத்தி, அந்தத் திருத்தங்களை இந்த சட்டமுன்வடிவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத்தை அந்த முறையில் நிறைவேற்றித்தந்தால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நீதிகிடைக்க வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று, இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

[மாலை 4.20]

திரு. எம். சின்னராஜ்: மாமன்றத்தின் துணைத்தலைவரவர்களே, தொழிலாளர் நலத்துறை அமைச்சவரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த தொழில் தகராறு சட்டத் திருத்தம் தொழிற்சங்க வரலாற்றிலேயே ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை எற்படுத்தக்கூடியதாக அமைந்திருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று கொண்டுவந்திருக்கிற இந்த சட்டத் திருத்தத்தினால் நேரடியாக தொழிலாளி தானே தனக்கு கிடைக்கின்ற நீதியை நீதிமன்றத்திலே பெறுவதற்கு வழிவகுத்துக் கொடுப்பது மட்டுமல்ல; கன்சிலியேஷன் லெவலில் சமரசப் பேச்சுவார்த்தை நடப்பதும் அதிகாரிகளுக்கு சிவில் ப்ரொஸீஜர் கோர்ட்டில் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்த வழங்கியிருக்கிறது என்பதை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்கு இந்த சட்டத் திருத்தம் நிறைவேற்றப்படுவதின் மூலம் கன்சிலியேஷன் நடத்துகிற சமரசப் பேச்சு வார்த்தை நடத்துகிற அதிகாரி ஓரளவுக்கு தொழில் நடத்துகிற நிர்வாகிகளை, தொழில் அதிபர்களை சட்டத்தினுடைய விதிமுறைகளைக் காட்டி, சட்டத்தினுடைய சாதக பாதகங்களைக் காட்டி இதுதான், சட்டம். இந்தமுறையில்தான் இந்த முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திப்பதற்கு இந்த சட்டத்தில் வழிவகை ஏற்பட்டிருக்கிறது.



அது மட்டுமல்ல. இன்று தொழிலாளி சாதாரணமாக எந்தத் தொழிற்சங்கத்தை நாடி இருந்தாலும் கூட, தனது உரிமையை, தன்னுடைய தேவைகளை தொழில் நடத்துகிற அந்த அதிபர்களிடமிருந்து பெறுவதற்காகத்தான் தொழிற்சங்கத்தை ஒரு தொழிலாளி நாடுகிறான். இந்தத் திருத்தச் சட்டத்தின் காரணமாக இந்த நிர்ப்பந்தத்திற்கும் ஆட்பட்டு தன்னைக் காத்துத்கொள்ள வேண்டிய அவசியம் ஒரு தொழிலாளிக்கு வராது. தொழில் தகராறு கன்சிலியேஷனுக்கு வந்து தோல்வியடைந்துவிட்டால் யாருடைய தேவையும, ஆதரவும் இல்லாமல் நீதிமன்றத்திற்குப் போகும் வாய்ப்பு இதில் இருக்கிறது என்பதால், இது நமது அரசின் கொள்கையான ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற நிலையை பொதுவாக எதிர்காலததில் அமைத்துக் கொடுக்க ஆதாரமாக அமையும். அந்த வகையில் அமைநதிருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று, இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதன் மூலம் ஓரளவு அந்தத் தொழில் நீதிமன்றங்களில் இருக்கிற வழக்குகள் இனிமேல் வரக்கூடிய வழக்குகள் கூடுதலாக வாய்ப்பு இருக்கிறது.

ஏற்கெனவே தொழில் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இந்த நீதிமன்றங்களிலே தொழிலாளிக்கு நல்ல முறையில் குறித்த காலத்தில் நீதிவழங்கப்படுகிற அமைப்பாக இல்லை. நீலகிரி, கோவை ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் ஒரு நீதிமன்றம் இருக்கிறது. ஏற்கனவே அங்கு பைசல் ஆகாத வழக்குகள் ஏராளமாக இருக்கின்றன. மேலும் இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் கூடுதலாக வழக்குகள் அந்த தொழில் நீதிமன்றங்களுக்கு வரக்கூடும். ஆகவே அந்த நீதிமன்றங்கள் தொழிலாளிக்கு நியாயமான உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கு அந்த நீதிமன்றங்களின் வசதிகளைப் பெருக்க வேண்டும். கூடுதல் நீதிமன்றங்களை பல மாவட்டங்களில் ஏற்படுத்தியாக வேண்டும் ஏனென்றால் தொழிலாளி இன்றைக்கு தன்னுடைய உரிமையைப் புரிந்துச்கொண்டிருக்கிறான். தொழிற் சங்கவாதிகள் அந்த உரிமையைப் பெறுவதற்காக பாடுபடுகிறார்கள். அதனால் தொழில் நீதிமன்றங்களில் அதிக வழக்குகள் வரக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் அதிகமான தொழில் நீதிமன்றங்களை ஏற்படுத்தவேண்டும்.

அதே நேரத்தில் அங்கே பணியாற்றுகின்ற அதிகாரிகளாக இருந்தாலும் குமாஸ்தாக்களாக இருந்தாலும் இதர பணியாளர்களாக இருந்தாலும் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். அவர்கள் கூட தொழில் நீதிமன்றங்களுக்கு என்று நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. சிவில் கோர்ட்டுகளிலிருந்து டிப்யூட்டேஷன் என்ற முறையில் அனுப்பப்பட்டுகிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம், இதர நிலைமைகள் எல்லாம் அந்த அந்த சிவில் கோர்ட்டுகளில் தான் இருக்கிறது. ஆகையால் அவர்கள் இங்கே திறமையாக செயல்படுவதில் குந்தகம் ஏற்படுகிறது. அந்த

நிலையைப் போக்குவதற்கு, தொழிலாளிக்கு விரைவாக உரிய நீதியை வழங்குவதற்கு தொழில் நீதிமன்றங்களில் இருக்கிற ஊழியர்களை தொழில் நீதிமன்றங்களுக்கு என்றே அமைத்து, அந்த நீதிபதிகளின் கீழ் அவர்கள் செயல்பட ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று. கன்சிலியேஷனுக்கு வருகின்ற தொழில் அதிபர்கள் சாதாரணமாக ஒரு விசாரணை வைத்து முடித்துவிட்டுதான் கன்சிலியேஷனுக்கோ அல்லது லேபர் கோர்ட்டுக்கோ வருகிறார்கள். அப்படி வைக்கப்படுகின்ற விசாரணைக்காக யாராவது ஒரு வழக்கறிஞர்களை நியமிக்கிறார்கள். ஆகவே அது பெரும்பாலும் ஒரு சார்புடையதாகத்தான் இருந்துவிடுகின்றது துரதிருஷ்டவசமாக. ஆகவே அதை தவிர்ப்பதற்குரிய வகையிலே அப்படி ஒருவரை விசாரணைக்கு நியமிக்கின்றபோது பார் அசோசியேஷன் என்று சொல்லப்படுகின்ற வழக்கறிஞர் மன்றங்களின் தலைவருக்கு அதுகுறித்து எழுதி அல்லது அங்கே இருக்கின்ற மாவட்ட நீதிபதிக்கு எழுதி அவர்களின் மூலமாக ஒருவரை நியமித்து அனுப்புவதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும். அப்படி நியமிக்கப்படுகின்ற ஒருவர்தான் விசாரணைக்கு வரவேண்டும். வரமுடியும் என்கின்ற வரையறையை அரசு ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும். அப்போதுதான் அங்கே பார்ஷியல் ரிப்போர்ட் ஏற்படாமல் தவிர்க்க முடியும். தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் நியாயமான முறையிலே ஒரு தீர்வைக் காண முடியும்.

அடுத்து தொழிலாளர்கள் தங்களுக்கு என்று தேர்ந்தெடுத்துக்கொள்ளுகின்ற தலைவர்கள் சட்ட அறிவு கொண்ட நல்ல தொழிற்சங்க வாதிகளாக இருந்தால் தான் அந்தத் தொழிலாளர்கள் சட்டப் பலனைப் பெற முடிகின்றது. சில நேரங்களில் தொழிற்சங்கங்களை நடத்துகின்றவர்கள் அல்லது அந்தத் தொழிலாளர்களுக்காக வாதாடுகின்ற வழக்கறிஞர்கள் அனுபவம் இல்லாதவர்களாக இருந்துவிட்டால் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய நீதி கிடைக்காமல் போய் விடுகின்றது. அது அவர்களுடைய குற்றம் அல்ல. அவர் சார்ந்திருக்கின்ற அந்தத் தொழிற்சங்கத்தின் வாயிலாக நியமிக்கப்படுகின்ற அந்த வழக்கறிஞர்கள் மன்றங்களிலே வாதாடுகின்றபோது ஏதாவது குறை ஏற்பட்டுவிடக்கூடும். அதன் காரணமாக தொழிலாளர்களுக்கு அநீதி ஏற்பட்டுவிடும். ஆகவே, இதைப் போக்குவதற்காக தொழில் நீதிமன்றங்களிலே வழக்குகளை நடத்துவதற்காக தனியாக சில வழக்கறிஞர்களைக் கொண்ட குழுவினை நியமிக்கலாம். அதுபற்றி பார் அசோசியேஷனோடு தொடர்பு கொண்டு ஓரளவு தொழிலாளர்களுடைய தொழில் தகராறு சட்டங்களைப் பற்றி தெரிந்து வைத்திருக்கின்றவர்களை அதற்கான வழக்கறிஞர்களாக நியமித்து அவர்களுக்கு ஓரளவு ஊதியத்தையும் நிர்ணயிக்க வேண்டும். அந்த வழக்கறிஞர்களிடம் தொழிலாளர்கள் சென்று வழக்குகளைப் பதிவு செய்துகொண்டால் அவர்கள் வழக்காடி அந்தத் தொழிலாளர்களுக்கு உதவி



செய்கின்ற வகையிலே ஒரு நிலைமை ஏற்படும். அந்த வகையிலே ஒரு அட்வைசரி செல் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் நியமித்துத் தரவேண்டும்.

இந்த வகையிலே சில மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஏற்பட்டதற்குப் பின்னால் சில நாட்களுக்கு முன்னாள் நமது தொழி ாளர் கொள்கையை வன்மையாகச் சாடிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட வரவேற்று புகழத்தக்க வகையிலே இந்த அமென்ட்மென்டைக் கொண்டுவந்திருக்கின்ற அமைச்சர் அவர்களைப் பாராட்டி ஒரே ஒரு விஷயத்தை மட்டும் இறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய பகுதியில், பெரியநாயக்கன்பாளையம் தொழிலாளர் நிறைந்தபகுதியாகும், அவர்களுக்கு வீட்டுவசதிமிகப்பெரிய பிரச்சினையாக இருந்துக் கொண்டிருக்கின்றது. கோவையிலே கூட வீடுகளைப் பெற்றுவிடலாம். ஆனால் பெரியநாயக்கன் பாளையத்திலே வீடுகளைப் பெறுவது என்பது மிகஅரிது. நமது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்களே வீட்டுவசதி அமைச்சராகவும் இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியிலே குறைந்தது 100 ஏக்கர் பூமியையாவது கையகப்படுத்தி அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு — அங்கே பல மில்கள் இருக்கின்றன, எல்.எம்.ஈ. போன்ற தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்றன, — உடனடியாக வீட்டுவசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மிகக் கட்டாயமான ஒரு தேவை. ஆகவே அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து இதை நினைவில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்,

[மாலை 4.30]

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தை, தமிழ்நாடு மாநிலத்திற்கு பொருந்துகின்ற வகையிலே அதை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கருத்துக்களைக் கூறுவதற்கு நான் விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் வேலையினின்றும் நீக்கப்பட்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் நியாயத்தை நேரிடையாக பெறக்கூடிய முறையிலே, வழக்கு மன்றத்திற்குச் சென்று பெறக்கூடிய முறையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது தொழில் தகராறுகளில் முதலாளிகள் பெரிய பெரிய தொழில் நிறுவனங்களை நிர்வகிக்கக்கூடியவர்கள் தொழில் சமரச அதிகாரிகளின் முடிவுகளுக்கு, அவர்களுடைய விசாரணையின் முடிவுகளில் பங்கு கொள்ள மறுக்கிற நேரத்திலே, அந்த முடிவுகள் தாமதப்படுகிற நேரத்திலே, தொழில் தகராறுகள் குறிப்பிட்ட காலத்திற்குள் முழுமையாக தீர்க்கப்படுவதற்காக இன்றைய தினம் இருக்கக்கூடிய சட்டங்களிலே வழி வகை இல்லாத நிலை இருக்கிறது. அதாவது, அவர்களை கட்டாயமாக வந்து தொழிற் தகராறுகள் சம்பந்தப்பட்ட விசாரணையில் கலந்து கொள்ள

வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிற முறையிலே வழி வகைகள் இல்லை என்பதை மாற்றி இந்த இரண்டு திருத்தங்களும் தொழில் தகராறு சட்டத்திலே இன்றைக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

இந்த நாட்டிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களும் பல்லாயிரக்கணக்கான இயக்கங்களும், ஏன் இந்தச் சட்ட மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களில் தொழிலாளர்களின் நலனிலே அக்கறை கொண்டுள்ள பல்வேறு அரசியல் கட்சியினரும், இம்மாதிரியான ஒரு திருத்தம் வேண்டும் அதாவது தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடிய நேரத்தில், வேலையினின்றும் நீக்கப்படுகிற நேரத்தில் நேரிடையாக அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று நீதியை பெறமுடியாத ஒரு நிலைமை இன்றையதினம் இருக்கக்கூடிய சட்டங்களிலே உள்ள ஒரு நிலைமை மாற்றப்பெறவேண்டும் என்று கேட்டு வருகிறார்கள்.

இந்த நடைமுறை சட்டத்திலே குறிப்பாக விசாரணை நடவடிக்கை எடுத்து அதிலே அரசாங்கம் விருப்பப்பட்டால் அதை தொழில் கோர்ட்டுக்கு விடலாம் என்கிற நடைமுறை இருந்து வருகிறது. என்னதான் தொழிலாளர்களின் முழுமையான நலன்களை பாதுகாப்பதற்காக இருக்கிற அரசாங்கம் என்று கூறினாலும், அதிலே பல்வேறு விதமான தொழில் தகராறுகள் இருப்பதன் காரணமாக வேலை நீக்கம் செய்யப்பெற்ற தொழிலாளர்கள் தங்களுடைய நியாயத்தைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது அந்த தாவாக்கள் அரசாங்கத்தால் அனுப்பப்பெற முடியவில்லை என்கிற குறையும் நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சட்டமன்றத்திலே கூட இது சம்பந்தமாக கடந்த 4 மாதங்களாக, தொடர்ச்சியாக விவாதங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன.

ஆகவே, இந்த குறைபாட்டை போக்கக்கூடிய முறையிலே நம்முடைய தமிழக அரசு, அதிலும் குறிப்பாக நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தை கொண்டு வந்திருப்பதை, தொழிற் சங்க இயக்கங்களின் நீண்டகால கோரிக்கையை பூர்த்தி செய்கின்ற முறையிலே இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டம் இயற்றப்படுவதன் மூலமாக ஒரு புதிய நிலை உருவாக்கப்படும் என்று எல்லோரும் கருதுகிறோம். கடந்த காலத்திலே தொழிலாளர்கள், தொழிற்சங்கங்களை அமைத்தாலே, அது முதலாளிகளுக்கு எதிரான நடவடிக்கை என்று கூறி, அதற்காகவே வேலை நீக்கம் செய்யப்பட்டு, பழி வாங்கப்பட்ட தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கிலே, லட்சக்கணக்கிலே இருக்கிறார்கள்

அது மட்டும் அல்ல; போராட்டக் காலங்களில் தொழிற்சங்க இயக்கத்தை முன்னணியிலே நின்று நடத்தக்கூடிய தலைவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களாக இருக்கக்கூடிய தொழிலாளர்கள்



பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். அந்த இயக்கத்தை முறியடிக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு, போராட்டங்கள் முடிந்த பின்னாலும்கூட. சமரசமாக முடிவுறுகிற சூழ்நிலை ஏற்பட்டாலும் கூட, ஒரு நிர்ப்பந்தத்தின் காரணமாக ஒப்பந்தங்கள் ஏற்பட்டாலும்கூட, அதற்குப் பிறகு, அந்தப் போராட்டங்களிலே முன்னணியிலே நிற்கக்கூடிய தொழிலாளர்களை பழி வாங்கக்கூடிய முறையிலே, தொடர்ந்து அந்த தொழிற்சங்கம் இயங்க முடியாத அளவுக்கு நிலைமைகளை கொண்டு போகும் முறையிலே, வேலைநீக்கம் செய்யப்பெற்று, சஸ்பெண்ட் செய்யப் பெற்று, பழி வாங்கப்பட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கை இன்றையதினம் பல்லாயிரக்கணக்கிலே இருக்கிறது என்பதை அனைவரும் அறிவோம்.

வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும் இன்றைய தினம் நீதி வேண்டுமென்று கோரக் கூடிய நேரத்தில் நீதி மன்றத்திற்குச் செல்லவேண்டுமென்றால், நீதி மன்றத்திற்குச் சென்று தாங்கள் குற்றமற்றவர்கள், முதலாளிகளால் அனாவசியமாக பழிவாங்கப்பட்டவர்கள், வேண்டுமென்றே வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்கள் என்று நீதிமன்றத்தில் நிரூபித்து அவர்கள் வேலை பெறுவதற்காக ஒரு வாய்ப்பு தரவேண்டும் என்று நினைக்கக் கூடிய நேரத்தில் இன்றையதினம் இருந்து வரும் தொழில் தகராறு சட்டப்படி லேபர் கோர்ட்டுக்கு அவர்கள் செல்ல வேண்டுமென்றால் அரசாங்க தொழில் சமரச நடவடிக்கைகளுக்குப் பின்னால் அவர்கள் தொழில் சமரச அதிகாரிகளுடைய ஆலோசனையைப் பெற்று, அவர்கள் சிபார்சு பெற்று இறுதியாக அரசாங்கம் இது சரி என்று தீர்மானித்தால்தான் அவர்கள் தொழில் கோர்ட்டுக்குச்செல்லமுடியும் என்ற நிலையில்பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு இருந்துவரும் அந்தநிலை காரணமாக நியாயத்தை நீதியைப் பெறமுடியாமல் இருந்திருக்கிறார்கள் என்றும் இந்த நிலையை மாற்றுவதற்கு இந்தச் சட்டம் உதவி செய்யும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த நிலைமையில் இம்மாதிரியான சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்து இதை நிறைவேற்றுவதற்கு நம் அமைச்சர் அவர்கள் முற்பட்டிருக்கிற அதேநேரத்தில் இதிலே இருக்கிற ஒன்றிரண்டு குறைபாடுகளை நான் சுட்டிககாட்ட விரும்புகிறேன்.

நேரடியாக தொழில்கோர்ட்டுக்குச் செல்வதற்கான வாய்ப்பு இருக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டம் அமையவேண்டும் என்பது என் கருத்து. காரணம், வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் அவர்கள் தொழில் சமரச அதிகாரி முன்பு சென்று அதற்கான தாவாக்களை எழுப்பி தொழில் சமரச நடவடிக்கைகளை மீண்டும் காலம்தாழ்த்தி—இன்றிருக்கக்கூடிய முறைகளில் எந்தளவிற்கு காலதாமதம் ஏற்படுகிறது என்பது அனைவரும் அறிந்த ஒரு உண்மையாகும்—வருடக்கணக்கில் தாவாக்கள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. இதற்குக் காரணம், பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களை

வேண்டுமென்றே மீண்டும் பழி வாங்கவேண்டும் என்றும், அவர்கள் வேலையிழந்து, வாழ்வு இழந்து அந்தத் தொழிலாளர்கள் பரிதவிக்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும் என்றும், அதை மற்றத்தொழிலாளர்கள் பார்த்து தொழில்சங்க இயக்கத்திற்கு எதிராக செல்லவேண்டும் இல்லாவிடில் நாமும் பாதிக்கப்படுவோம் என்ற ஒரு அச்ச உணர்வு ஏற்படவேண்டும் என்பதற்காகத்தான் தொழில் தாவாக்களில், தொழில் சமரச நடவடிக்கைகளில் முதலாளிகள வந்து கலந்து கொள்வதில்லை. வேண்டுமென்றே காலந்தாழ்த்தி செல்கிற அளவிற்கு நிலை இருக்கிறது. இன்றையதினம் முதலாளிகளின் நோக்கம், பெரிய நிறுவனங்களை நிர்வகிப்பவர்களின் நோக்கம் அவர்களுக்கு நீதி கிடைக்கிறது என்றாலும் காலந்தாழ்த்தி, பல ஆண்டுகள் கழித்து பெறக்கூடிய நிலை வந்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், இந்த இயக்கத்தில் இருக்கக்கூடியவர்கள், பாதுகாப்பு இழந்து தங்கள் காலில் நிற்கமுடியாத நிலையில் வாழ்வு இழந்து பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இம்மாதிரி நடவடிக்கைகள்கையாளப்படுகின்றன. தொழில் தாவாக்கள்ளை எழுப்பி தொழில் சமரச அதிகாரிகள் முன்னால் அந்தத் தாவாக்கள் சென்று விசாரணை முடிவுற்ற பிறகு ஒரு உடன்பாடு ஏற்படவில்லை என்றால் அந்தத் தொழிலாளர்கள் நேரடியாகக் கோர்ட்டுக்குச் செல்வதற்கு வாய்ப்பளிப்பது என்பது இன்றைய தினம் வாழ்விழந்து நிற்கக்கூடிய தொழிலாளர்களை மேலும் பழி வாங்கும் உணர்வுக்கு முதலாளிகளுக்கு மேலும் ஊக்கம் தரும் முறையில் இந்த ஷரத்து அமைந்திருக்கிறது என்பதை வருத்தத் தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

[மாலை 4. 40]

இம்மாதிரியான ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற நேரத்திலே, இதன் நோக்கங்கள் பாதுகாக்கப்பட்டு, தொழிலாளிக்கு நாம் வாழ்வளிக்க வேண்டும், நாம் அதை கொடுக்க வேண்டும் என்ற உணர்வோடு கொண்டு வந்திருக்கின்ற நேரத்திலே, அதற்குச் சிறிது ஊனம் உண்டாக்கக்கூடிய முறையிலே இந்த வாக்கியம் அமைந்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, நேரடியாக ஒரு தொழிலாளி வேலைநீக்கம் செய்யப்பட்டால், அப்படி வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளி நேரடியாக, உடனடியாக அவர் தொழில் கோர்ட்டுககுப் போய், தன்னுடைய தாவாவை அங்கே எழுப்பி, அங்கே நீதி பெறக்கூடிய முறையிலே நாம் வழிவகைகளைச் செய்யக்கூடிய முறையில் இது அமையவேண்டும் என்று நான் கேட்டுக கொள்கிறேன். இதன் மூலம்தான் Justice delayed is justice denied என்று சொல்வார்கள். ஆகவே நீதியைத் தாமதப்படுத்தக்கூடிய ஒரு ஆபத்து இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு நீதி கிடைக்காமல் போகக்கூடிய ஒரு ஆபத்தான நிலைமை இருக்கிறது. அந்த உணர்வோடு இதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீதியைத்





தாமதப்படுத்திக் 'கொடுப்பதினால், அவர்கள் பெறக்கூடிய நீதியை 4 ஆண்டுகள் கழித்து அல்லது 5 ஆண்டுகள் கழிந்து இன்றையதினம் அவர்கள் பெற்றால், அவர்களுக்கு அதனால் பயன் ஏற்படாத நிலை ஏற்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மற்றொரு விஷயம். இன்றைக்கு இதனால் என்ன நிலைமை ஏற்படும் என்பது ஒருபுறம் இருந்தாலும், இம்மாதிரி உடனடியாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் இந்த நீதியைப் பெறுவதற்காக,கோர்ட்டிலேபெறக்கூடியவழிவகைகளை செய்யவேண்டும் என்பது என் கருத்து, அந்த முறையிலே அமைந்தால், மேலும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நான் அதே நேரத்தில் குறிப்பிட விரும்புவது, இந்த மன்றத்தில் பல்வேறு கருத்துக்கள், ஸ்கிரீனிங் கமிட்டி என்றெல்லாம் பேசி வந்திருக்கிறோம். ஓரே கல்லிலே, இரண்டு மாங்காய் அடிக்கிறமாதிரி என்று சொல்வார்கள், ஆகவே, இந்த ஸ்கீரினிங் கமிட்டி ஒழிக்கப்பட வேண்டும். இம்மாதிரியான பிரச்சனை இருக்கிறது. அவைகளைப் போக்க வேண்டுமென்றால் அதற்கான வழிமுறைகளைச் செய்ய வேண்டும் என்றால், இந்த ஸ்கீரினிங் கமிட்டி நீக்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் வேலை நீக்கம் செய்யப்படுகின்ற தொழிலாளி சம்பந்தப்பட்ட வழக்கில் ஸ்கிரீனிங் கமிட்டிக்குப் போய், நின்று, குற்றத்திற்காக தண்டனை வழங்கிய நீதிபதி இடத்திலேயே நீதிவழங்கவேண்டும் என்று கேட்கிற நிலை இதிலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த முறையிலே இது இருப்பதால் அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, இந்தக் குறையையும் ஓரளவு போக்குகின்ற வகையிலே இது நீக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றையதினம் முதலாளிகள், நிறுவனத்தை நிர்வகிப்பவர் கட்டாயமாக சமரச நடவடிக்கைகளிலே கலந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தித்தரவேண்டும். அது இல்லாத முறையில்வழக்குகள் காலதாமதம்ஆகின்றன.அந்தக் குறையையும் நீக்கக்கூடிய முறையில், அடுத்து ஒரு திருத்தம் இந்தச்சட்டத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருப்பதால், இதனால் தொழிலாளிகள் பயனடையக் கூடிய முறையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இம்மாதிரியான ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டுவந்த அமைச்சர் அவர்களை நான் பாராட்டுவதோடு, இதிலே இருக்கின்ற இந்த நிலைமையை மாற்றுகின்ற முறையிலே இன்றையதினம அவர்கள் கட்டாயம் சமரச நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய முறையிலே இந்த திருத்தம் அமைந்திருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே இந்தச் சட்டம் பயனுள்ள முறையிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நான் குறிப்பிட்ட ஒரு குறைபாடு இருக்கிறது. அதையும் அமைச்சர் அவர்கள் நீக்கக்கூடிய அறிவிப்பை அறிவிப்பார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்து, இன்றைதினம் விசாரணையில் இருக்கக்கூடிய பல்வேறு வேலை நீக்கங்கள், வழக்கிலே இருக்கின்றன. சமரச நடவடிக்கையிலே இருக்கக்கூடிய நடவடிக்கைகளும் இருக்கின்றன, வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் அனைவருக்கும் உடனடியாக இந்தச் சட்டத்தினால் பயன் கிடைக்க கூடிய முறையிலே, நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அந்த முறையிலே நடவடிக்கை எடுத்தால், அதன் மூலம் நீண்டகாலமாக கோர்ட்டு இருக்கின்றவர்களுக்கு நியாயம் கிடைக்கும். எனவே, நாம் இந்த நேரத்திலே சரியான முறையிலே, நியாய வழங்கின்ற முறையிலே இது அவர்களுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுக்கும். எனவே, அந்த அடிப்படையிலே அதையும் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவைப் பற்றி மூன்று கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பேசினார்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். ஏன் பேசவில்லை என்று தெரியவில்லை.

**திரு. ஏ. சந்திரசேகரன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் காலம் தாழ்ந்து வந்ததாலே இந்த மசோதாவில் என்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நிச்சயமாக நல்லவைகளை ஆதரிக்கிற பக்குவம் உள்ள கட்சியிலேயிருந்து வந்தவன் நான். ஆகவே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேண்டாம். அமைச்சர் அவர்கள் ஆரம்பித்து விட்டார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள் யாரும் பேசவில்லையென்றாலும் அவர்களும் அதை பாராட்டினார்கள் என்று எடுத்துக் கொள்கிறேன். திரு ஹேமச்சந்திரன் அவர்களும், திரு கருப்பையா அவர்களும் பேசுகின்ற போது இந்த சட்டம் வருவதற்கு நிரம்ப போராட்டம் நடந்து அதற்கு பிறகு இது வந்திருக்கிறது. என்று சொன்னார்கள். ஒன்றை தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை தொழிலாளர்கள் நேரடியாக வழக்கு மன்றத்திற்கு போக வேண்டும் என்பது தான். அந்த கொள்கை உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவசரமாக கொண்டு வர வேண்டுமென்று வலியுறுத்தியது உண்மை; எந்த சட்டமாக இருந்தாலும் தீர ஆலோசித்து அதிலே ஓட்டைகள் இல்லாமல் கொண்டு வரவேண்டுமென்ற அக்கறை காரணமாக காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. வேறு ஒரு காரணம் இருந்தது உங்களுக்குத் தெரியும். நடுவிலே அரசு கலைக்கப்பட்டதும் ஒரு காரணம். 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறு சட்டத்திற்கு 1981-ல் நல்ல திருத்தம் கொண்டு வரக்கூடிய ஒரு எண்ணமும், நோக்கமும் புரட்சித் தலைவருடைய ஆட்சிக்கு வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நினைத்து பார்த்து மகிழ்ச்சி அடைவீர்கள் என்று கருதுகிறேன்.





இங்கே திருத்தம் கொடுத்திருக்கிற திரு ஹேமச்சந்திரன் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 'நான்- எம்ப்ளாய் மெண்ட்' என்ற வார்த்தை இருக்கவேண்டுமென்று சொன்னார்கள் அதை விட மிக பொருத்தமாக வார்த்தை இங்கே இருக்கிறது. where the employer discharges, dismisses, retrenches or otherwise terminates என்பது 'நான்-எம்ப்ளாய்மெண்ட்' என்ற வார்த்தையை விட அதிகமான கவரேஜ் உள்ள, மீனிங் உள்ள வார்த்தை என்ற காரணத்தால் இந்த திருத்தத்தை அவர் வலியுறுத்த மாட்டார் என்று நம்புகிறேன். அடுத்து மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் இங்கே inspection in industrial establishment அதை சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போதே தொழில் தகராறு சட்டம் 11 (2)-ல் அந்த அதிகாரம் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. கருப்பையா அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் நேரடியாக வழக்கு மன்றத்திற்கு போக வேண்டுமென்று சொன்னார்கள். இதுவும் தொழிலாளர்கள் வழக்கு மன்றத்திற்குபோவதுதான் தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யபட்டால் நேரடியாக வழக்கு மன்றத்திற்கு போக வேண்டுமென்று தான் அன்றைக்கு சொன்னோம். இன்றைய தினம் நேரடியாக தொழிலாளர்கள் வழக்கு மன்றத்திற்கு போகவேண்டும் என்பது தான், அந்த 2(ஏ) செக்ஷனில் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டால், அந்த தொழிலாளர்கள் நேரடியாக 'கன்சிலியேஷன் புரோசிடிங்கிற்கு' போகலாம். அவர்கள் நேரடியாக லேபர் ஆபீசருக்கு எழுதி, அதன் பின்னர் எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்று சொன்னால் தொழில் கோர்ட்டுக்கு அனுப்புவதற்கு அதிகாரத்தை அப்போது அரசு வைத்திருந்தது. ஆனால் இப்போது we are abdicating the powers சாதாரணமாக யாரும் அதிகாரத்தை விட்டுக் கொடுப்பார்களா? மேலும் அதிகாரம் வேண்டும், மேலும் அதிகாரம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிற இந்த காலத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இருக்கும் அதிகாரத்தை விட்டுக் கொடுத்திருக்கிறோம். ஏனென்றால் சில கழக்குகள் நீதி மன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்று தோழமை கட்சியை சார்ந்தவர்களுக்கு மன வருத்தம் இருக்கிறது. 11(எ) வந்த பிறகு 'அமென்ட்மென்ட்ஸ், என்று வந்ததோ, அன்றைய தினமே வேலைநீக்கம் செய்யப்பட்ட ஒவ்வொரு தொழிலாளிக்கும் நேரடியாக தொழில் நீதி மன்றங்களுக்கு போக வேண்டுமென்ற ஒரு எண்ணம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்திற்கு ஆரம்பித்த காலத்திலேயே இருந்த காரணத்தினால் தான் நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு உரிய சந்தர்ப்பத்திலே அந்த அதிகாரித்தை கொடுத்திருக்கிறோம். அதை நீங்கள் பாராட்டுவீர்கள் என்று நினைக்கிறேன். இது பார்ப்பதற்கு சாதாரணமான மாற்றமாக தெரியும். அப்படியல்ல இது. மாபெரும் புரட்சிகரமான மாறுதல் ஏனென்று சொன்னால் இந்த சட்டம் 1947—லே ஏற்பட்டது.

[திரு. எஸ் இராகாவனந்தம்] [1981 மே 13

[மாலை 4.50]

அதற்குப் பின்னாலே பல ஆட்சிகள் இருந்திருக்கின்றன. நான் தான் தொழிலாளி வர்க்கத்திற்கு பாடுபடுகிறவன், நானே தொழிலாளி, நான் சொல்கிறேன் இவர் தொழிலாளி என்றெல்லாம் சொல்லி 7 ஆண்டுக்காலம் ஆண்டிருக்கின்றவர்கள். அவர்கள் காலத்திலே இதைப்பற்றி சிந்தித்துப் பார்க்கவே இல்லை. புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அந்தத் தொழிலாளி நேரடியாகப் போவதற்கான உரிமை இருக்கவேண்டுமென்று நினைத்துத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் மத்திய அரசு கொண்டுவருவதற்கு முன்னாலே கொண்டுவந்துவிட வேண்டுமென்றமுறையிலே நாம் கொண்டு வந்து இருக்கிறோம். இந்தத் திருத்தங்களைச் சபையிலே கொண்டு வந்திருக்கிறோம். You know it is a Concurrent subjects, but yet we do it at break neck speed திரு. கருப்பையா அவர்கள் சொன்னதைப் போல் கன்சிலியேஷன் இல்லாமல் வேலை நீக்கம் செய்யப்பட்டால் உடனே கோர்ட்டிற்குச் செல்வதற்கான உரிமைகள் இருக்கவேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள்.

அப்படி வந்தால் அது டபுள்-எட்ஜுடு வெப்பனதாகத்தான் இருக்கும். இதிலே ஒன்றும் டிலே ஆகிவிடாது. ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டால் 2 ஏ-இல் கன்சிலியேஷன் போகலாம், லேபர் ஆபிஸருக்கு மனு செய்யலாம். அங்கே பேச்சுவார்த்தை முறிந்துவிட்டால் நேரடியாக கோர்டிற்குப் போகலாம். இப்போது 2ஏ (1) என்று சொல்லி 2ஏ (2) என்று கொண்டு வருகிறோம். ஏற்கெனவே இருந்ததற்கு ஒரு திருத்தம் கொண்டு வருகிறோம். நீங்கள் நினைப்பதுபோல் உடனடியாக கோர்டிற்குப் போவது என்றால் வழக்கு மன்றத்திற்குச் சென்று காலதாமதம் அதிகமாவதை தவிர்த்து நேரடி சமரச முயற்சியிலே ஈடுபட்டு ஒப்பந்தம் வரக்கூடிய சாத்தியக்கூறை கெடுத்து விடுவோம். ஆனால் ஒரு அச்சம் உங்களுக்கு இருக்கக்கூடும். நியாயமான அச்சம். கன்சிலியேஷன் அதிக நாள் ஆகிவிட்டால் என்ன செய்வது, டிராக் ஆன் செய்துவிட்டால் என்ன செய்வது. வெல் பவுன்டட் பியர் அப்படிப்பட்ட உண்மையான அச்சம் உங்களுக்கு இருப்பதை நான் உணர்கிறேன். ஒரு எக்சிகியூடிவ் ஆர்டர் மூலமாக கன்சிலியேஷன் ஆபிசருக்கு இதுமாதிரி 2ஏ பெட்டிஷன்கள் வருவதைஎல்லாம் இவ்வளவு நாட்களுக்குள் தீர்த்துவிட வேண்டுமென்று உத்திரவிடுவதற்கு அரசு காத்து இருக்கிறது. அந்த உத்தரவை செயல்படுத்தமுடியுமா என்றால் இட் இஸ் பாஸிபிள். ஏனென்றால் அடுத்த அமென்ட்மெண்ட் இருக்கிறது, கன்சிலியேஷனுக்கு வராவிட்டால் சம்மனிங் பவர் இருக்கிறது, அதற்காக நாம் இரண்டையும் ஒரே நாளிலே கொண்டு வருகிறோம். டு பேர்ட்ஸ் இன் ஒன் ஷாட். விரைவிலே கன்சிலியேஷன் முடிவதற்கு ஏதுவாக இருப்பதற்கு யாராவது வரவில்லையென்றால் சம்மனிங் பவர் கொடுத்து வரவழைக்கவேண்டும், வரவில்லையென்றால் வரவழைக்கவும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். திரு. கருப்பையா அவர்கள் இந்தத் திருத்தத்தை வலியுறுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன். வரையறுக்க



1981 மே 13] [திரு. எஸ். இராகவானந்தம்]

முறை இல்லை என்று சொன்னால் அப்ரோப்ரியேட் பார்ம் என்ற முறையிலே அதற்கென்று இருக்கிறதல்லவா ஒரு குறிப்பிட்ட பாரம் அதிலே எழுதவேண்டும் என்பது. ஆகவே இரண்டு பேர்கள் கொடுத்திருக்கின்ற இரண்டு திருத்தங்களையும் பின்வாங்கிக் கொள்ளலாம். இதனாலே எந்தவிதமான கேடும் வந்துவிடாது. அரசு கொண்டுவந்திருப்பதே நியாயமானது தான் என்று சொல்லி அதைச் செயல்படுத்துவோம், அதிலே ஏதாவது இன்னும் மாற்றங்கள் வேண்டுமென்றால் புரகிரஸிவ்வாக செய்யவேண்டுமென்றால் பின்னாலே சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முன்வரும்.

We will be receptive to constructive criticism, made on the Floor of the House. புரட்சித் தலைவர் ஆட்சியைப் பொறுத்த வரையில் நீண்டகாலமாக நாம் பார்த்திருக்கிறோம். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் கன்ஸ்ட்ரக்டிவ் கிரிடிசிஸம் என்ற முறையிலே சொன்னால் அதையும் பரிசீலனை செய்து மாற்றங்களைக் கொண்டுவரும், வளைந்து கொடுக்கக்கூடிய நிலைமையிலே புரட்சித் தலைவர் அரசு இருக்கிறது என்பதைச் சொல்லி இந்தத் திருத்தங்களைப் பின்வாங்கிக் கொண்டு இந்தச் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் or otherwise terminates என்று இருப்பது ஒரு பெரிய கவரேஜ் என்று குறிப்பிட்டார். ஆனால் வாலன்ட்டரி அபான்டன்மென்ட் என்ற முறையிலே பல முதலாளிகள் நீதிமன்றத்திலே போய் இருக்கிறார்கள். வாலன்ட்டரி அபான்டன்மென்ட் கேஸை கவரேஜ் செய்யாத காரணத்தினாலே தான் நான்-எம்ப்ளாய்மென்ட் என்ற வார்த்தை இருந்தால்தான் ரெக்கார்ட் இல்லாமல் வெளியே தள்ளப்பட்டு எந்தவிதமான புரட்டக்ஷனும் இல்லாத தொழிலாளர்களுக்கு அது பாதுகாப்பாக இருக்கக்கூடிய முறையிலே இருக்கும். ஆகவே நான்-எம்ப்ளாய்மென்ட் என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, வாலன்டரி அபான்டன்மென்ட் என்பது ஸ்டாண்டிங் ஆர்டரிலே இருக்கிறது. எட்டுநாட்கள் தொழிலாளி லீவ் எடுக்காமல் தன்னிச்சையாக ஆப்சன்ட் ஆகிவிட்டாரானால் He sacrifices his job. அவராகவே வேலையை விட்டுப் போய்விட்டதாகவே அர்த்தம் இருக்கிறது. ஸ்டாண்டிங் ஆர்டரிலே இருக்கிறது. புரட்சித் தலைவர் ஆட்சியிலே என்ன என்ன செய்திருக்கிறோம் என்று ரெக்கல்க்ட் செய்து பார்க்கிறோம். முன்பாகவே திருத்தி It will constitute a mis-conduct, என்ற முறையிலே முடிவு செய்திருக்கிறோம். அது ஒரு தவறுதான், mis-conduct தான். உரிய விசாரணை செய்தபிறகுதான் நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர இதுவரையில் இருந்துவந்ததைப்போல He has abandoned his job since he has absented without leave for more than eight days.

அது இப்போது செல்லாது, அதற்கு வேண்டிய திருத்தங்களை நாங்கள் இப்பொழுது செய்திருக்கிறோம் என்பது உங்களுக்கும் தெரியும் என்று சொல்லி இந்தத் திருத்தங்களைப் பின்வாங்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1981 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 43/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2—பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3-பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : தலைவர் அவர்களே,

"1981 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 43/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஊ) வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்டமுன்வடிவு 1981 (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1981)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்**: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

என்று மொழிகிறேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே குத்தகைகாரர்கள் உரிமைப் பதிவுச் சட்டத்தில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டத் திருத்த முன்வடிவின் மீது என்னுடையக் கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். 1969 ஆம் ஆண்டு தமிழகத்திலே உள்ள குத்தகை

---

* 1981 ம் ஆண்டு ஏப்ரல் மாத 23ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



சாகுபடியாளர்கள் உரிமையைப் பதிவு செய்ய கொண்டுவரப்பட்ட சட்டத்திலே, குத்தகை உரிமைகளைப் பதிவு செய்வதிலே குத்தகைக்தாரர்களுக்கும் நில உடைமையாளர்களுக்கும் இடையிலே இருந்த சிக்கலைத் தீர்த்து வைக்கின்ற மாமருந்தாக இந்த சட்ட முன்வடிவு அமைந்திருக்கிறது.

தாசில்தார் நீதிமன்றத்தில் குத்தகைதாரர்கள் பிரச்னையை அந்த நீதிமன்றத்தால் தீர்த்து வைக்கப்பட முடியாத நிலையில் சட்டப்படியோ அல்லது நீதிமன்றத்திற்குத் தலைமை தாங்குகின்ற தாசில்தார் தீர்த்து வைக்க முடியாத நிலையில், அந்தச் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கு ஆலோசனைக் குழு நியமிக்கின்ற அளவிற்கு வகை செய்யும் விதத்தில் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவது வரவேற்கத் தக்கதாகும்.

1969-ம் ஆண்டுச் சட்டத்தின்படி குத்தகை பதிவு செய்யும் விஷயத்தில் குத்தகைதாரர்களும் சொல்லொணாத் துயரம் அடைந்தார்கள்: அதைப்போல நிலச் சொந்தக்காரர்களும் சொல்லொணாத் துயரம் அடைந்தார்கள். ஏனென்றால் 1969 ஆம் ஆண்டுச் சட்டத்தில்கூட தாசில்தார் நிலம் எந்த இடத்தில் இருக்கிறதோ அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு குத்தகை உரிமைகளைப் பதிய வேண்டுமென்ற விதியிருந்தாலும் கூட, உண்மையிலேயே தமிழகம் முழுவதும் அது நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. அதற்குக் காரணம் தாசில்தாருக்கு இருக்கின்ற பணிகள் காரணமாகவும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற மற்றப் பணிகள் காரணமாகவும் அந்தச் சட்டத்திலே சொல்லிருக்கின்றபடி ஆங்காங்கு சென்று பார்த்து அந்த நிலத்தை யார் சாகுபடி செய்கிறார்கள் என்று லோக்கல் இன்ஸ்பெக்ஷன் செய்து குத்தகை உரிமையைப் பதிய வேண்டுமென்று விதியிருந்தாலும். அந்த விதி எழுத்திலே இருந்ததே தவிர அது நடைமுறைக்கு வராத காரணத்தினாலே உண்மையிலேயே ஒரு ஏழை, நிலத்தை உழுபவன் குத்தகைக்குப் போட்டாலும்கூட அந்த ஊரிலுள்ள நிலச் சொந்தக்காரர்கள் வலுவாக இருந்தால் உண்மையிலேயே பத்தாண்டுக் காலம் குத்தகை போட்டாலும்கூட, தாசில்தார் நீதிமன்றத்தில் அந்த ஏழை நிரூபிக்க முடியாமல் இருந்த காரணத்தினால் கஷ்டங்கள் ஏற்பட்டன. காரணம் விசாரிக்கப்பட வேண்டிய சாட்சிகள் வசதியானவர்களின் கட்டுப்பாட்டிற்குள், ஆளுகைக்குள் இருந்து வந்தார்கள். எனவே, உண்மையிலேயே குத்தகை விவசாயிகள் பதிய முடியாமல் இருந்தார்கள். ஒரு சில விஷயங்களில் குத்தகைக்குப் போடாதவர்களுக்கு—மதுரை மாவட்டத்தில் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் ஏராளம். குத்தகைக்குப் போடாதவர்கள்கூட, குத்தகை உரிமையை அந்த நிலச் சொந்தக்காரர்களுக்கு எதிராக பதிந்து விடுகின்ற கொடுமை இருந்தது. ஆகவே, இந்த ஆலோசனைக் குழுவினுடைய ஆலோசனை அங்கங்கே இந்த ஆலோசனைக் குழுக்களைச் சட்ட பூர்வமான ஆலோசனைக் குழுக்களாக ஆக்கியிருப்பது—என்

(மாலை 5.00 மணி)

நினைவு சாயாக இருக்குமானால்—இந்திய துணைக் கண்டத்திலே தமிழகச் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட பினாமி நில ஒழிப்புச் சட்டம், அதேபோல, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தற்போது கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டம் இந்த இரண்டில்தான் 'மக்கள்குழு', ஆலோசனைக் குழு, என்ற வகையிலே, சட்டபூர்வமான உரிமைகள் கொடுக்கிற, அவை எடுக்கின்ற முடிவுகளை, அவை சேகரிக்கின்ற விவரங்களை, அவை என்ன முடிவுக்கு வருகின்றனவோ, அவைகளை அந்த தாசில்தார் நீதிமன்றம் கவனிக்க வேண்டும். The Tahsildar shall consider என்கிற வார்த்தையிலிருந்து, இந்த ஆலோசனைக்குழு சட்டபூர்வமான ஆலோசனைக் குழுவாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது.

ஆகவே, ஒட்டுமொத்தத்தில் இந்த ஆலோசனைக் குழு, அங்கங்கே, இத்தனை ஆண்டு காலமாக, 1969 ஆம் ஆண்டு சட்டத்தின் அடிப்படையில், தங்களுடைய குத்தகை உரிமையை நிலை நாட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் குத்தகை விவசாயிகளுக்கும், அதே போல், தவறான வழியிலே குத்தகை உரிமையை நிரூபித்து விட்டதனால் அல்லல்படும நிலச் சொந்தக்காரர்களுக்கும் ஒரு மாமருந்தாக இந்த ஆலோசனைக் குழு இருக்கிறது என்று வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் நான் மெத்தப் பணிவுடன் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களையும், புரட்சித் தலைவர் தலைமையிலான அரசையும் சில கருத்துக்களைத் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்திலே போடப்பட்டவைகளிலேயிருக்கிற இடையூறுகளை, அதே போல் இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதால் நடைமுறையில் ஏற்படும் சில சிக்கல்களைத் தவிர்க்க வேண்டும். இந்தச் சட்டம், 1969 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிறகு, பல்வேறு * * * உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். ஒத்திக்கு ஒருவன் ரூ. 5,000 வாங்கிக் கொண்டு..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * * * என்று பேசக் கூடாது. அந்த வாசகங்களை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: சட்டப்படியே கூட, ஒருவன் ரூ. 5,000 கடன் வாங்கிக் கொண்டு தன்னுடைய நிலத்தை ஒத்தி வைத்தால், அந்த ரூ. 5,000 திருப்பிக் கொடுத்தவுடன் அந்த நிலத்தை அவனிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது டிரான்ஸ்ஃபர் ஆஃப் ப்ராப்பர்ட்டியிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தக் குத்தகைச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு 1969 ஆம் ஆண்டு சட்டம் வந்தபிறகு அந்த ரூ. 5,000 ஐ, வட்டியுடன் சேர்த்து ஏழை கட்டினாலும்கூட, உண்மையிலேயே ஒத்தியைப் பெற்றவர் மிகவும் குறைவான விலைக்கு குத்தகையை உருவாக்கிவிட்டால், அத்தனை ஆண்டுகளுக்குக் குத்தகைக்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





கொடுத்தாலும் கூட, அதே அளவில் போட்டுக் கொள்ளலாம், அந்த நிலச் சொந்தக்காரன், அங்கே உள்ளே நுழைய முடியாது என்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புகள் இருப்பது அது உண்மையிலே டிரான்ஸ்ஃபர் ஆக்டில் என்ன? தத்துவங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவே அதற்கு முரணானவைகள் ஒரு வகையிலே. நான் எதற்குச் சொல்கிறேன் என்றால் இந்த அரசினுடைய கொள்கை உழுபவனுக்கு நிலம் சொந்தமாக இருக்க வேண்டும். உழுகின்றவனுக்குச் சொந்தமாக இருந்த 5 ஏக்கர் நிலத்தை வைத்து, அவனுக்கு ஏற்பட்ட வறுமையின் காரணமாக வட்டிக்குக் கடன் வாங்கும்போது, ஒத்தி வைத்து விடுகிறான். அந்த ஒத்தியை வட்டியுடன் கட்டும்போது, கூடவே அந்த நிலத்தை உழுகின்றவனுக்கு நிலம் சொந்தம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் அந்த நிலத்தை உழுகின்ற உரிமை வேண்டும். ஆனால் கடன் கொடுத்தவன் அந்த 5 ஆண்டுக் காலத்திற்குள் யாரோ ஒரு மூன்றாவது நபருக்குக் குத்தகையை உருவாக்கி வைத்து விட்டால், அந்த ஏழை, கடனை வட்டியுடன் அடைத்து அந்த ஒத்தியைத் தீர்த்தால்கூட நிலத்திற்குள் நுழைய முடியாது என்ற அளவுக்கு அந்தச் சட்டங்களிலே அளிக்கப்பட்ட தீர்ப்புகள் இருக்கின்றன. அதே போல் நான் சொன்ன அதே விவரங்கள், மறு கிரயத்திலும் இருக்கிறது. கிரயம் எழுதி வைத்து மறுகிரயம் ஒப்பந்தம் போட்டுக் கொண்டால்கூட கிரயம் பெற்றவர்கள் எழுதி வைத்து விட்டால் போதும் என்ற நிலை இருக்கிறது. அதேபோல், எப்படி குத்தகை அனுபவிக்கின்றவர்களுக்குப் பாதுகாப்பு தருகின்றோமோ, அதேபோன்று சொந்தக்காரருக்கும் பாதுகாப்பு அளிக்க அரசு தீர்க்கமாகச் சிந்திக்கவேண்டுமென்று நான் மிக்கப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

உழைக்கின்றவனுக்கு நிலம் சொந்தம் என்ற தத்துவத்தை இரண்டு பக்கத்திலும் அமுல்படுத்துவதற்கு நாம் தயாராக இருக்க சில திருத்தங்களை, சில விதிவிலக்குகளை, 1969 ஆம் ஆண்டு சட்டத்திற்குக் கொண்டு வருவதற்கு முன் வரவேண்டும். அதற்கு ஒரு நிர்ணயம் செய்யவேண்டும். இத்தனை ஏக்கர் இப்பொழுது குத்தகைக்கு ஒருவர் போட ஆரம்பித்துவிட்டால், நிலச் சொந்தக்காரர் திரும்பப் பெறவே முடியாது என்ற நிலையிருக்கிறது, அதிலே சில திருத்தங்கள் கொண்டு வரவேண்டும். உதாரணத்திற்கு 2 ஏக்கர் நிலம் வைத்திருக்கிற ஒரு அரசு ஊழியர், 58 ஆண்டுக்காலம் பணியிலேயிருந்துவிட்டு, தான் உழ வேண்டுமென்று வந்தால், உழுகின்றவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டும் என்ற தத்துவம் அங்கே தலையிட்டு அடைகின்றது. குத்தகைக்குப் போடுகின்றவர்தான் இருக்கவேண்டும் என்ற நிலையிருக்கிறது. அதே போல், இராணுவத்திலே, இந்த நாட்டைக் காப்பதற்காக உயிரைக் கொடுத்துப் பாடுபட்டுப் பிறகு வீட்டுக்குத் திரும்பும் வரை, தனக்கு இருக்கும் 2 ஏக்கர், 3 ஏக்கர் நிலத்தையும் குத்தகைக்குப் பயிர் செய்யச் சொல்லி கொடுத்திருக்கலாம். அந்தப் பணியை முடித்து விட்டு வருகின்ற பொழுது அந்த 2 அல்லது 3 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரனாக இருந்தாலும்கூட, அந்த நிலத்தினுள்ளே நுழைய முடியாது என்கின்ற கொடுமை இருக்கிறது, அதே போல், ஒரு

விதவைக்கு அவருடைய கணவன் இறந்த சமயத்திலே 2 வயதோ அல்லது 3 வயதோ உடைய குழந்தை இருக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம். அந்த நேரத்திலே ஏகம்பெண்ணாக இருக்கிற தன்னாலோ, 2 வயது 3 வயது உடைய தன் பாலகனாலோ நிலத்தை பயிரிட முடியாது, பாதுகாக்க முடியாது என்ற சூழ்நிலையிலே, தனக்கு வருகின்ற வருவாயைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும், ஏதோ கொஞ்சம் வரட்டும் எனறு குத்தகைக்கு விடுகிறார்கள். அந்தக் குழந்தை 20 வயதானவுடன், தன் தகப்பன் சம்பாதித்து வைத்த 2 ஏக்கர், 3 ஏக்கர் நிலத்தை உழ வேண்டுமென்று நினைத்தால், அதை எடுக்கமுடியாத சூழ்நிலை தானிருக்கிறது.

எந்தக் காலத்தில் குத்தகை உருவாகியதோ அந்தக் குத்தகைத் தொகை செலுத்தித்தான் தொடர்ந்து குத்தகைக்குப் போடுகின்றவரை அனுபவிக்கலாம் என்று இருக்கின்றது. ஆகவே உழைப்பவனுக்கே நிலம் சொந்தம் ஆக்கப்படவேண்டும் என்கின்ற தத்துவத்தை அமல்படுத்துகின்றபோது ஒரு சமுதாயத்திலே ஒரு பகுதி பாதித்துவிடக் கூடாது. அதைக் காப்பாற்றுவது நம் அரசினுடைய கடமை என்பதைக் கருத்திலே கொண்டு இப்படிப்பட்ட சொந்தச் சாகுபடிக்கு குறைந்த அளவு குறிப்பிட்டுக் கூட அத்தனை ஏக்கரும் என்று அல்ல, குத்தகைக்கு தன்னிடம் இருக்கிற நிலம் முழுவதும் குத்தகைக்கு விட்டு விடுகிறேன் என்று வைத்துக் கொண்டால், குறைந்த பட்சம் நிர்ணயம் செய்து அப்படிப்பட்டவைகளை ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு முன் அறிவிப்பு கொடுத்து சுய தொழிலுக்காக சுய விவசாயம் செய்வதற்காக வேண்டும் என்று சொல்லுகிறபோது அதைத் திரும்ப பெறுகின்ற உரிமையை வகை செய்கின்ற வகையிலே ஒரு திருத்தம் வேண்டும். அப்படிப்பட்ட நடைமுறைகள் பல்வேறு கட்டங்களிலே இருக்கின்றன. 20 ஆண்டுகள் பணியாற்றிவிட்டு அரசுப் பணியிலே இருந்து ஓய்வு பெறுகின்ற ஒருவர் அந்த நிலம் தனக்கு உழுவதற்காக வேண்டும் என்று Personal cultivation—க்கு கேட்கிறபோது கொடுக்கலாம். கொடுத்து இந்தத் தத்துவத்திற்கு முரணாக அவர் செயல்பட்டால், அவரிடமிருந்து அந்த நிலத்தை மீண்டும் குத்தகைக்குக் கொடுத்துவிடலாம். அப்படி தன்னுடைய சுய விவசாயத்திற்கென்று பெறுகிற நிலத்தை 2 ஆண்டு காலத்திற்குள் அவர் சுய விவசாயம் செய்யாமல் இன்னொரு மூன்றாவது நபருக்குக் குத்தகைக்குக் விடுவாரேயானால் அப்போது சட்டத்திலே வழி செய்யலாம். முன்பு குத்தகைபோட்ட நபரிடமிருந்து, தன் சொந்தமான விவசாயத்திற்கு என்று சொல்லிப் பெறுகின்றாரோ அவர் முன்பு குத்தகைக்கு போட்டவரிடத்திலேயே கொடுக்கவேண்டும் என்ற வகையிலே ஒரு சேப்டி வால்வாக—அது ரென்ட் கன்ட்ரோல் ஆக்டிலே-கூட இருக்கிறது. பர்சனல் ஆகுபேஷன் என்று வாங்கிக் கொண்டால், 2 ஆண்டுக் காலத்திலே பர்சனல் ஆக்குபேஷனுக்குப் போகவில்லை என்றால், முன்பு வாடகைக்கு இருந்தவருக்கே திருப்பக் கொடுக்கவேண்டும் என்று விதி இருக்கிறது—அதுபோல ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கொஞ்சம் நிலம் வைத்திருக்கிற நில உடமையாளர்கட்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். அவர்கள் குத்தகைக்கு விடுகிறார்கள். அரசு ஊழியர்கள், ராணுவத்திலே



பணியாற்றுகிறவர்கள், நான் முன்பே சொன்னதைப்போல விதவைகள் இவர்களுடைய நிலங்கள் பாதுகாக்கப்படவேண்டும். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் சொந்தமாக விவசாயம் செய்ய வருவோம் என்று முடிவெடுக்கின்ற போது இந்தக் கட்டுப்பாடுகளை விதித்து, அவர்கள் சொந்தமாக விவசாயம் செய்கிறோம் என்றால் அவர்களுக்குக் கொடுக்கலாம். குறிப்பிட்ட 2 ஆண்டுகளுக்குள் அவர்கள் சொந்தமாக விவசாயத்தை மேற்கொள்ளவில்லை என்றால் திரும்ப முதலிலே இருந்தவர்கள்—அப்படிப்பட்டவர்களுக்கே கொடுக்கவேண்டும் என்று—ரென்ட் கன்ட்ரோல் ஆக்டில் ஒரு சேப்டி வால்வ் இருப்பதைப்போல—ஒரு செக்ஷன் போட்டு திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல குத்தகைக்குப் போட்டவர்கள் பாதிக்கின்ற அதே சமயத்தில் பலவீனமாக இருப்பவர்களைப் பாதுகாப்பது அரசினுடைய கடமை. குத்தகை சாகுபடியாளர்கள், குத்தகைகன் பல்வேறு கட்டங்களிலே தள்ளுபடி செய்யப்படுகின்றன ஒத்திவைக்கப்படுகின்றன. நான் மெத்தப்பணிவோடு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் வைக்கிறேன், இப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அரசு மிகவும் தீர்க்கமாக சிந்திக்கவேண்டும். என்ற கருத்தினை நான் முன்வைக்கிறேன். 2 ஏக்கர் நிலம் வைத்திருக்கின்ற விதவைகள் அந்த 2 ஏக்கரையும் குத்தகைக்கு விட்டு விடுகிறார்கள். குத்தகை விவசாயிகள் அந்த 2 ஏக்கருக்கு குத்தகை பாக்கியை செலுத்தாமல் இருக்கவேண்டும் என்று சொல்லுகின்ற அந்தப் பாதுகாப்பை பாராட்டுகின்ற அதே சமயத்தில் இந்த சமுதாயத்தில் இருக்கிற அந்த விதவைகள் அந்த 2 ஏக்கரிலே இருந்து வருகிற வருமானம் கூட இல்லாமல் பட்டினியால் சாவதைப் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. அது நியாயமே அல்ல. குறைந்தபட்சம் அளவுகளைக் குறைக்கலாம். 40 ஏக்கர் 50 ஏக்கர் என்பதை வேண்டுமானால் குறைக்கலாம். அந்தக் குறைந்த பட்சம் 5 ஏக்கர் என்பதை அந்தக் குத்தகை விவசாயிகளுக்கு நாம் கொடுக்கின்ற அதே பாதுகாப்பை அந்த 5 ஏக்கர்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்ற அந்த விதவைகள் பட்டினியால் சாவதை சகித்துக்கொண்டிருக்க முடியாது. அப்படிப்பட்ட பாதுகாப்பினை தரவேண்டும். அதே நேரத்தில் குத்தகை பாக்கிகள் ரத்து செய்யப்படுகின்றன. குத்தகை பாக்கிகள் ரத்து செய்யப்படுகிறபோதும் ஒத்திவைக்கப் படுகிறபோதும் ஒட்டு மொத்தமாக 50 ஏக்கரை குத்தகைக்கு விட்டிருக்கிற விவசாயியும் ஒன்று, இன்று 5 ஏக்கரை நம்பி அதிலே இருந்து வருகின்ற 5 மூட்டையையும் 10 மூட்டையையும், வைத்துக் கொண்டு 100 ரூபாய், 200 ரூபாய்க்கு வாங்கி சாப்பிடுகின்ற விதவையும் ஒன்று என்கின்ற நியதி இருப்பது நியாயம் அல்ல என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும்.

கடன் நிவாரணச் சட்டத்தில் கூட 10 ஆயிரம் ரூபாய் 20 ஆயிரம் ரூபாய் என்று சொத்து மதிப்பு நிர்ணயித்து அந்த சொத்து மதிப்புக்குள்ளே இருக்கின்ற விதவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. அதேபோல் ராணுவத்திலே பணிபுரிகின்றவர்களைப் பார்த்தால், மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும் சஞ்சலா என்ற வழக்கில், உச்சநீதி மன்றத் தீர்ப்பிலே ராணுவ வீரர்களுக்கு எவ்வளவு பெரிய சலுகைகள் கொடுக்கவேண்டும். எந்தச் சட்டமாக இருந்தாலும் ராணுவ வீரர்களுக்கு சலுகைகள் கொடுக்க வேண்டும். ஏனென்றால் இந்த நாட்டைக் காக்கின்றவர்கள் என்று சென்னை உச்ச நீதி மன்றம் சஞ்சலா வழக்கில் தீர்ப்பில் மிகத் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் இந்தக் குத்தகை பாக்கியை ரத்து செய்து குத்தகை விவசாயிகளை பாதுகாக்கின்ற அதே சமயத்தில் ஒரு 4 ஏக்கரோ 5 ஏக்கரோ, அதையே நம்பிக் குடும்பத்தை நடத்துகின்ற விதவைகள் அல்லது 2, 3 ஏக்கர், அதையே நம்பி ஜீவனம் செய்கின்றவர்கள், ஏதோ கந்தர்ப்ப சூழ்நிலையில் குத்தகைக்கு விட்டால் அப்படிப்பட்டவர்களுக்கு விதிவிலக்கு அளித்து அந்தக் குத்தகைப் பணம் செலுத்தவேண்டாம் என்று விதி விலக்கு அளிக்கவேண்டும்.

[மாலை 5.10]

இதிலே, ஒத்தி, மறு கிரயம் போன்றவைகளைப்பற்றி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் குத்தகை போடுகின்றவர்கள் போடலாம் என்று விதி இருக்கிறது. இது உண்மையிலேயே சாதாரண ஏழை எளிய மக்களை பாதிக்கிறது. கடன் வாங்குகிறவர்கள் நாட்டிலே ஏழை எளியவர்கள்தான். அவர்கள் ரூ. 5000 கடன் வாங்கிக் கொண்டு, தங்களுடைய நிலத்தை ஒத்தியாக எழுதி வைத்தால் கூட, திருப்பி அந்தப் பணத்தை வட்டியும் அசலுமாகச் சேர்த்து கட்டினாலும் கூட, அந்தக் கடன் கொடுத்தவர்கள் இந்த ஏழைகளை பழி வாங்கவேண்டும் என்ற வகையிலே ஒரு குத்தகையை உருவாக்கிவிடுகிறார்கள். இது உண்மையான குத்தகையா, இல்லையா என்ற பிரச்னை பெரும்பாலான இடங்களில் ஏற்பட்டு, அது உண்மையற்ற குத்தகைதான் என்று நிலைமைகள் இருந்தாலும், அந்த குத்தகையை உருவாக்கி விட்டதாலே அந்த வசதி இல்லாத ஏழைகள் அசலையும் வட்டியையும் கட்டியபின்பும் தங்களுடைய சொந்த நிலத்தில் நுழைய முடியாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. 1969ஆம் ஆண்டுச் சட்டத்திலே ஒத்தி கொடுத்தால் ஒத்தி எத்தனை ஆண்டுகளுக்குப் பெற்று இருக்கிறார்களோ அத்தனை ஆண்டுகளுக்குத்தான் அவர் குத்தகை உருவாக்க முடியும் என்ற விதியையும், அதைப்போலவே மறுகிரயம் எத்தனை ஆண்டுகளுக்கு என்று போட்டு இருக்கிறார்களே, அந்த மறு கிரயத்திற்காக எத்தனை ஆண்டுகள் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதோ அத்தனை ஆண்டுகளுக்குத்தான் குத்தகை உருவாக்க முடியும் என்று சொன்னால்தான் உண்மையிலேயே உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்கிற தத்துவத்தை முழுமையாக வெற்றிபெறச் செய்யமுடியும் என்கிற காரணத்தால் இந்தக் கருத்துக்களை ஆய்ந்து வருவாய்த் வறை அமைச்சர் அவர்கள் இத்தகைய திருத்தங்களைக் கொண்டு துரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்த அட்வைசரி கமிட்டி அமைக்கப்பட்டு இருப்பது சிறப்பான அம்சம் என்றாலும் கூட, இப்படிப்பட்ட மிகப்பெரிய சொத்துக்கள் சம்பந்தமான பிரச்னை—ஒரு 20 ரூ. வாடகை வருகின்ற வீடு என்றாலும் கூட, அதைக் குறைந்தபட்சம் டிஸ்டிரிக்ட் முன்சீப்தான் விசாரிக்கவேண்டும் என்று சட்டத்திலே இருக்கிறபோது ஒரு 10 ஏக்கர், 20 ஏக்கர் அல்லது பல லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் மீது யாருக்கு குத்தகை உரிமை அல்லது உரிமை இல்லை போன்ற ஒரு பிரச்னையை நிர்ணயிக்கின்ற பெரிய பொறுப்பினை சிவில் நீதிமன்றங்களுக்கு மாற்றம் செய்யும் நிலையை ஆராயவேண்டும் என்றும், இப்படிப்பட்ட வழக்குகள் சிவில் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவேண்டிய நியாயம் இருக்கிறது என்று பல்வேறு நீதிமன்றங்களில் பல்வேறு தீர்ப்புக்களில் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. காரணம், தாசில்தார் நீதிமன்றத்தில் இத்தகைய பிரச்னைகளை நிர்ணயிக்கின்றபோது பல்வேறுபட்ட தவறுகள், நீதிமன்றங்களிலே செயல்படுத்தப்படுகின்ற பல்வேறுபட்ட சட்டங்களின் ஆழ்ந்த நோக்கங்களைப் புரிந்து கொண்டு தீர்ப்பளிக்காமல் போகின்றன என்று நான் சொல்லவில்லை—மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி மோகன் அவர்கள் ஒரு தீர்ப்பிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதையும் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

ஆலோசனைக் குழுவைப் பொறுத்தவரையில், இந்தியத் துணைக் கண்டத்திலேயே சட்டங்களை இயற்றுகின்ற பல்வேறு மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையிலே வெறும் ஆலோசனைக் குழுவாகப் போடாமல் சட்டப் பூர்வமான ஆலோசனைக் குழுவாக—அந்த ஆலோசனைக்குழு சேகரிக்கும் விவரங்கள், அது எடுக்கின்ற முடிவுகள் இவைகளையெல்லாம் தாசில்தார் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் அப்படிச் சொல்கிற தீர்ப்புக்கு முரணான வகையில் தாசில்தார் தீர்ப்பு வழங்குவதாக இருந்தால் அதற்குக் காரணம் எழுதவேண்டும் என்றும் கொண்டு வந்து இருப்பது, மற்றவர்களுக்கு வழிகாட்டுகின்ற வகையிலே இந்தச் சட்டம் இருக்கிறது என்று கூறி, இப்போது நான் வேண்டி விரும்பித் தெரிவித்த திருத்தங்களைப் பற்றியும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் எண்ணிப்பார்த்து, அப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டுவந்து, 1969 ஆம் ஆண்டு குத்தகை உரிமை பதிவாளர் சட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டதோ, அதைச் செயல்படுத்துகின்ற வகையில்—இரண்டு தரப்பாரும் நன்மை அடையும் வகையில்—கடன் கொடுத்தவர் அல்லது குத்தகைதாரர் யார் பலகீனராக இருந்தாலும் அவர்களுக்கும் பயன்தருகின்ற வகையில் அப்படிப்பட்ட திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்தி, வழங்கிய வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. ஏ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண( திருத்த)

(திரு. ஏ. சந்திரசேகரன்) [1981 மே 13

சட்டமுன் வடிவு மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் நான் ஒரு சில வார்த்தைகள் இங்கே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பொதுவாக குத்தகை உரிமைகளைப் பொறுத்தவரையில், எனது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தாசில்தார் வழக்கு மன்றங்களில் பல வழக்குகள் நடக்கும். குத்தகைதாரர்கள் பல்வேறு பிரச்னைகளை முன்வைத்து அதை நடத்திக்கொண்டு இருப்பார்கள். ஆகவே. அந்தக் குத்தகை உரிமையைப் பொறுத்த வரையில் இந்தத் திருத்தம் கொண்டு வந்து இருப்பது நிச்சயமாக போற்றுவதற்கு உரியது, வரவேற்கத்தக்கது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக குத்தகை பெறுபவர்களுடைய நிலங்கள் பல இடங்களில் ரிஜிஸ்டர் செய்யப்படாமல் இருக்கின்றன. அந்த நிலங்களையெல்லாம் ரிஜிஸ்டர் செய்வதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இங்கே குழு அமைப்பதுபற்றிச் சொன்னார்கள். அருமை சகோதரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் அதைப்பற்றிச் சொன்னார்கள். சமூகட்பணிகளில் ஈடுபட்டிருக்கின்றவர்களையும் தொழிலாளர்களையும் மற்றும் பல்வேறு தரப்பினர்களையும் கொண்ட குழுவாக அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் குழு அமைக்கப்படும்போது அங்கங்கே இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களையும் அந்தக் குழுவிலே சேர்த்துக் கொண்டால் நிச்சயமாக அது உங்களுக்கு பயனுடையதாக இருக்கும் உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அருமை சகோதரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னதைப் போல பொதுவாக தாசில்தார்களால்தான் இந்த குத்தகைப் பிரச்சனைகள் விசாரிக்கப்படுகின்றன. பொதுவாக அவர்களுக்கு 'லீகல்' சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் தெரியாத காரணத்தால் பல வழக்குகள் அங்கே சரியாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, முறையாக 5,6 ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றி, நல்ல அனுபவம் உள்ளவர்களைக் கொண்டு இந்தமாதிரி வழக்குகளை விசாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இந்த சட்டத் திருத்தத்தை எங்கள் கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை ஆவணச் சட்டம் 10/69க்கு மாற்றாக கொண்டுவரப் பட்டிருக்கிற இந்தச்சட்டத்தை நான் ஆதரித்து சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் சில நேரங்களில் சிறு விவசாயிகள், நிலம் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் தங்களுடைய நிலங்களை குத்தகைக்கு விட்டு அதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதே நேரத்தில் அவர்கள் தங்களுக்கு ஏதாவது அவசரக் காலம் வந்தால், அப்போது தங்களுக்கு அந்த நிலத்தில் இருக்கிற உரிமையை வைத்து ஒத்தி, மறு ஒத்தி,



1981 மே 13] [திரு. வே. இரா. ஜெயராமன்]

குண்டடிமை போன்றவைகள் மூலம் பணம் பெறுகிறார்கள். அத்தகைய நிலங்களை குத்தகைதாரர்களுக்கு மாற்றிவிட்டால், அந்த நில உரிமையை அவர்கள் திரும்பப் பெறமுடியாது. ஆகவே, அருமை சகோதரர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களும், இந்தச் சட்டத்தைப் பாராட்டி பசிய இந்திரா காங்கிரசைச் சேர்ந்த திரு. சந்திரசேகர் அவர்களும் சொல்லிய கருத்துக்களுக்கு ஒப்ப சில நிலைகளில், சில விதிகளுக்கு விலக்கு அளித்து, விதவைகள், ஏழை எளிய விவசாயிகள், சிறு விவசாயிகள் அந்த நிலங்களை திரும்பப் பெறுவதற்கு உரிமை அளிக்கவேண்டும்.

அதைப்போல, குத்தகைதாரர்களுக்கும், நில உரிமையாளர் களுக்கும் இடையேயுள்ள மனச்சஞ்சலங்களைப் போக்கவும், கிராமப்புறங்களில் நிலவுகின்ற சூழ்நிலைகளுக்கு ஒப்ப நடை முறைகளைக் கைக்கொள்ளவும் அந்தக்குழுக்களை அமைப்பதன் மூலம் நல் முறையில் சாதகமான நிலைமைகளை உருவாக்க குழுக்கள் அமைக்கின்ற இந்தத் திருத்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் தற்போது குத்தகைதாரர்களுக்கும் சிறு விவசாயிகளுக்கும் சில வழிகளில் வித்தியாசம் இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் சிறு விவசாயி களுக்குக் கொடுக்கக்கூடிய பாதுகாப்புகள் சிறு விவசாயிகளாக இருக்கிற குத்தகைதாரர்களுக்கும் இருக்க வேண்டும். கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்வது போன்ற நன்மையாக இருந் தாலும் மற்ற எந்த நன்மையாக இருந்தாலும் சிறு விவசாயி களுக்குக் கிடைக்கிறது. ஆனால் சிறு குத்தகைதாரர்களுக்கு கிடைப்பதில்லை. இந்தக் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி என்பது சிறு விவசாயிகளுக்கு இருப்பதைப்போல சிறு குத்தகைதாரர் களுக்கும் இருக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மத்திய அரசு இன்றைய தினம் மாநில அரசுக்கு எவ்வளவு ரூபாய் கொடுத்திருக்கிறது என்று தெரிய வில்லை. வறட்சி நிவாரணத்திற்காக நாம் 137 கோடி ரூபாய்க்கு மேல் கேட்டிருக்கிறோம். மத்திய அரசு தனது குழுவை அனுப்பி எவ்வளவு பணம் கொடுக்கலாம் என்பது பற்றி அவர்கள் முடிவு எடுத்துவிட்டார்கள். இதுவரை எவ்வளவு கொடுத்திருக்கி றார்கள் என்று தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இன்றைக்கு வறட்சிப் பணிகள் வேகமாக நடை பெற்றுக் கொண்டிருக்கும்போது, என்னுடைய தேனி தொகுதி யில் 2, 3 நாட்களுக்கு முன்னால் வீசிய கடும் காற்று, மழை காரணமாக அங்கே இருந்த பல இலட்சக்கணக்கான வாழை மரங்கள் அடியோடு நாசமாகி விட்டன. அதை ஈடு செய்கின்ற வகையில் வறட்சி நிவாரணம் கொடுப்பதைப்போல அரசு ஏதாவது அங்கே வெள்ள நிவாரணம், பாதிக்கப்பட்ட விவசாயி களுக்குக் கொடுக்க வேண்டும். குறிப்பாக சிறு விவசாயிகளுக்கு உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வளவு புரட்சிகரமாக குத்தகைதாரர்களை பதிவு செய்ய, குழு அமைக்கின்ற இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, ஒரு புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டு வருகின்ற மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டி, இந்த சட்டத்தை வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

[மாலை 5.20]

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் குத்தகை விவசாயிகளைப் பதிவு செய்வதற்கான ஆலோசனைக் குழுக்களை அமைப்பதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த சட்டத் திருத்தத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வரவேற்கிறேன். இன்றைய தினம் குத்தகை விவசாயிகள் என்று சொல்கின்ற போது 1969 ஆம் ஆண்டுச் சட்டம் என்றாலும் ஏராளமான குத்தகை விவசாயிகள் இன்னும் பதியப்படாமல் இருக்கிறார்கள். இந்த குத்தகை விவசாயிகளைப் பதிவு செய்து இப்போது போடப்படுகின்ற குழு எல்லா கிராமங்களுக்கும் சென்று தங்களுடைய விசாரணை மீது தாசில்தார்களிடம் விவரங்களைக் கேட்டு அதன்படி அவர்கள் செய்கின்ற அந்தப் பரிந்துரையை உடனடியாக ஏற்று குத்தகை விவசாயிகளைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்கான முறையிலே சட்டத்திலே திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு நிலப்பதிவேடுகளைப் பொறுத்தவரையிலே அவை தாலுக்கா ஆஃபீசிலே இருக்கின்றன. அந்த நிலப் பதிவேடுகளைப் பெறுவதற்கு விவசாயிகளுக்கு மிகவும் சிரமமாக இருக்கின்றது. ஆகவே அந்த நிலப்பதிவேடுகள் எல்லாம் வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களிலே இருக்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து பட்டா புஸ்தகங்களை சிறு விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் வழங்கப்படுவதைப் போல இந்தக் குத்தகை விவசாயிகளுக்கும் அவர்களுடைய பதிவை அடிப்படையாக வைத்து பட்டா புஸ்தகங்கள் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அப்போது தான் குத்தகைதாரர்கள் கடன் பெறுவது மற்றும் தங்களது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வது போன்றவற்றிற்கு உதவியாக இருக்கும். ஆகவே அவ்வாறு அவர்களுக்கும் பட்டா புஸ்தகங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இப்போது குத்தகை விவசாயிகளைப் பதிவு செய்வதற்கான குழுவினைப் போட இருந்தாலும் கூட இன்றைக்கு இருக்கக்கூடிய குத்தகை விவசாயி



களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியான நிலையின் காரணமாக இன்றைக்கு ஏராளமான குத்தகை விவசாயிகள் குத்தகை பாக்கி என்ற காரணத்திற்காக நிலத்தினின்றும் வெளியேற்றப் படுகின்ற நிலைமை இருக்கின்றது. அத்தகைய அபாயமான சூழ்நிலை இருக்கின்றது. இந்த நிலைமை தஞ்சை மாவட்டத்திலே பரவலாக இருக்கின்றது. ஆகவே இந்த அபாயத்தைத் தடுத்து நிறுத்தி எந்தக் காரணத்தைக் கொண்டும் குத்தகை விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடாது என்று உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்து கொண்டிருக்கக்கூடிய நிலத்தை விநியோகிக்கின்ற போது $1\frac{1}{2}$ ஏக்கர் நிலத்தைத்தான் குத்தகை விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். ஏற்கெனவே 5 ஏக்கர், 3 ஏக்கர் என்று நிலம் வைத்து குத்தகை விவசாயம் செய்து கொண்டிருக்கக்கூடியவர்கள் போதிய வருமானம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே குத்தகை விவசாயிகளிடத்திலே இருந்து எடுக்கப் படுகின்ற நிலத்தை மற்றவர்களுக்குக் கொடுத்துவிடுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதை உடனடியாகத் தடுத்து நிறுத்தி யார் அந்தக் குத்தகை நிலத்திலே விவசாயம் செய்கிறார்களோ அவர்களுக்கு 3 ஏக்கர்களுக்குக் குறையாமல் கொடுக்கக்கூடிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு பொறுப்புக் கழகங்கள், தனியார்கள், கோயில்கள் போன்றவற்றிற்குச் சொந்தமான நிலங்களில் குத்தகை விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கக்கூடிய முறையிலே நிலச்சீர்திருத்த சட்டங்களைக் கொண்டு வருவதற்கு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் தமிழக அரசும் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்தக் குத்தகை விவசாயிகளைப் பதிவு செய்வதற்காக ஆலோசனைக் குழுவைப் போடுவதற்கான இந்த சட்டத் திருத்தத்தை மீண்டும் வரவேற்று எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1969 ஆம் ஆண்டில் இருந்து நேற்று வரையிலும் தமிழகத்தில் பல இலட்சக்கணக்கான விவசாயிகள் நேரடியாக சாகுபடி செய்தும் கூட அவர்களுக்கு இன்னும் குத்தகை பதிவு செய்யப் படாமல் இருந்து கொண்டிருக்கின்ற விவரங்கள் குறித்து பல புகார்கள் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வந்த பிறகு

தான் இந்த சட்ட முன்வடிவை அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக, தஞ்சை, நெல்லை, திருச்சி, வட ஆற்காடு, தென்னாற்காடு, தர்மபுரி போன்ற பல மாவட்டங்களில் இப்படி இலட்சக்கணக்கான விவசாயிகளைப் பதிவு செய்யவில்லை. இன்னும் கூட விழுப்புரத்திற்கு அருகிலே கிராமம் என்றே அழைக்கப்படுகிற கிராமத்திலே இப்படி பதிவு செய்யப் பெறாமல் பல ஆண்டுகளாக அந்த குத்தகை விவசாயிகள் நடையாக நடந்தும் கூட இன்னும் பிரச்னை தீர்ந்தபாடில்லாமல் அவதிப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு பெரும்பாலாக முட்டுக்கட்டை போடுவது கர்ணீகர்கள் தாம். அவர்கள்தாம் பல ஆண்டுகள் ஆகியும் அந்த குத்தகையை பதிவு செய்யாமல் இருப்பதற்கு முழு முட்டுக்கட்டையாக இருந்தார்கள். நிலத்திற்கு சொந்தக்காரர் சிங்கப்பூரிலே இருப்பார். அவருடைய நிலத்தை அந்தக் கிராமத்திலே இருக்கும் ஒரு விவசாயி சாகுபடி செய்துக் கொண்டிருப்பார். குத்தகை நிலம் அவர் பெயரில் பதிவு செய்யப் பெறாமல் இருக்கும்.

கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போய் கடன் கேட்கிற போதுதான் அந்த கர்ணீகர் சொல்லுவார், நிலம் சிங்கப்பூர்காரரின் பெயரில் இருக்கிறது. அவருடைய ஏஜெண்டாக நீங்கள் சாகுபடி செய்வதாக கணக்கில் இருக்கிறது என்று சொல்வார். இப்படி பல்லாயிரக் கணக்கில் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களின் கடன் உதவியைப் பெற முடியாத நிலைமையில் இதனால் தள்ளப்பட்டிருக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. முன்றைக்கு பேசுகிறபோதுகூட, ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் எடுத்துச் சொன்னார்கள், விதவைகளுக்கும், சிறிய நிலச்சுவான்தார்களுக்கும் விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டார்கள். ஏழ்மையில் இருக்கக்கூடிய விதவைகளுக்கும், மற்றும் உண்மையாகவே ஏழையாக இருக்கக் கூடிய மற்ற விவசாயிகளுக்கும், குத்தகை கொடுத்திருந்தால், கிராமப்புறங்களிலே இருக்கக் கூடியவர்களுக்கு, அவர்களை ஏமாற்றுவதற்கான எண்ணம் வராது.

ஆனால் அதே நேரத்தில், தனி நபர்களின் சொத்து உரிமையைப் பயன்படுத்தி, நிறைய பேர்கள் பினாமி நிலங்களை வைத்திருக்கிறார்கள். நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். 1958-லிருந்து 60 ஆம் ஆண்டுவரையிலான பினாமி நிலங்களை எடுப்பதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அதை இங்கே நிறைவேற்றி மத்திய சர்க்காரிடம் அனுமதிக்காக அனுப்பிய போது, அது அங்கே நிராகரிக்கப்பட்டிருக்கிறது. எந்த மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் பினாமி நிலங்கள் இருக்கின்றன.

குறிப்பாக எங்களுடைய மாவட்டத்திலே ஒரு விவசாயி மனைவியின் பெயரால் 10 ஏக்கரும் தன்னுடைய மகன் பெயரால் 15 ஏக்கரும் இன்னும் ஒரு மகனின் பெயரால் 15 ஏக்கரும் என்று இப்படி கிட்டத்தட்ட 00 ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு பெரிய அளவில் சாகுபடி செய்தும், தனி நபர் சொத்துரிமை படி 15 ஏக்கர் வைத்திருக்கலாம் ஒரு நபர் என்ற அந்த சட்டத்தை பயன்படுத்தி நிறைய பினாமி நிலங்களை வைத்திருக்கிறார்.



ஆகவே இவைகளையெல்லாம் கண்டுபிடித்து ஒழுங்குபடுத்துவதற்காகத்தான் நம்முடைய அமைச்சர் அவர்கள், இந்தக் குழுவை அமைப்பதற்கான ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கிறபோது, இந்தக் குழுக்களை அமைக்கிறபோது, பல இடங்களில் சில கட்சிகள் விடுபட்டு விடுவதை அனுபவத்தில் பார்க்கிறோம். அப்படி இல்லாமல், சர்வகட்சிகளும அதனுடைய பிரதிநிதிகளும் கலந்து கொள்கிற வகையில் இந்தக் குழுவை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் முன்னாலேயே பலமுறை இப்படி குழுக்கள் அமைக்கிறபோது சில கட்சிகள் விடுபட்டுவிட்டதை, இந்தச் சட்டமன்றத்திலேயே பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதை நாம் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். ஏனென்றால் வறட்சி நிவாரண குழுக்கள் அமைக்கப்பெற்றபோதுகூட பல இடங்கள் அப்படி சுட்டிக்காட்டப்பட்டன. சிதம்பரத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விடுபட்டுவிட்டது. அதுபோன்ற பல கட்சிகள் பல இடங்களிலே விடப்பட்டன. ஆகவே அப்படி இல்லாமல், இந்தக் குழுக்களை அமைக்கிற போது,—இது மிக உயர்ந்த குழு, முக்கியமான குழு—பினாமிகளை கண்டுபிடிக்கக் கூடிய குழு—உண்மையான விவசாயிகள் யார் என்று தெரிந்து கொள்ள வாய்ப்புத் தருகிற ஒரு குழு—ஆகவே இந்த அமைக்கும் போது, எல்லா அரசியல் கட்சியின பிரதிநிதிகளும் இதில் இடம் பெறுகிற வகையில் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஒரு பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடிய முறையில் கொண்டு வரப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதையும் நடைமுறை படுத்தும்போது, மிகுந்த அக்கறையோடு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சிவில் கோர்ட்டுக்கு போகவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களில் ஒருவர் சொன்னார். சிவில் கோர்ட்டுக்கு போவது என்று சொன்னாலே, அது மிகுந்த காலத்தை எடுக்கும் என்பதோடு, இதுவரையிலும், இந்தியா சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆகிய காலத்திலே இதுவரையிலும், சிவில் கோர்ட்டுகளுக்கு போன இப்படிப்பட்ட வழக்குகளில் யாருக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்டால் பெரிய பெரிய நிலப்பிரபுக்களின் சார்பாகத்தான் அளிக்கப்பட்டிருக்கின்றன.

காரணம், 3 ஏக்கர் குத்தகை செய்யும் சிறிய விவசாயி, சிவில் கோர்ட்டுக்கு வழக்காடச் சென்றால், 5, 6 வருஷங்கள் ஏன் சில நேரங்களில் 10 வருடங்கள் கூட ஆகிவிடும் வழக்கு முடிவுற. இதன் காரணமாக அந்த சிறிய விவசாயி சளித்துப்போய் நம்பிக்கை இழந்து, தானாகவே நிலத்தை விட்டு வெளியில் சென்று விடுகிற சூழ்நிலை ஏற்பட்டு, வழக்குகள் நிலப்பிரபுக்களின் பக்கத்திலேயே அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு அளிக்கும் நிலைமைக்கு

கொண்டு செல்லப்படுகின்றன. ஆகவே அதனை அனுபவத்தில் அறிந்து கொண்டுதான் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இப்படி ஒரு குழுவை அமைக்கவேண்டும் என்று சட்டம் கொண்டு வந்திருப்பதாக நினைக்கிறேன்.

[மாலை 5·30]

அந்த அடிப்படையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் விவசாயிகளை கோர்ட்டுகளுக்கு இழுத்தடிக்காமல் இருக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் லட்சக்கணக்கான விவசாயிகள் இன்று ரெவின்யூகோர்ட்டில் நின்று கொண்டிருக்கிறார்கள். அப்படி இலட்சக்கணக்கான விவசாயிகள் கோர்ட்டுக்குச் செல்வதன் மூலம் அவர்கள் வழக்கறிஞர்களுக்கு செலவு செய்து கோர்ட்டுக்குச் செல்வதன் மூலம் குத்தகை விவசாயிகள் நெல் அளக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே விவசாயிகள் கோர்ட்டுக்குப் போவதற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் இடமளிக்காமல் இந்தக் குழு பரிபூர்ணமாக ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று நிலங்களை எல்லாம் கண்டுபிடித்து உண்மையான விவசாயிகள் யார் யார் என்று பார்த்து அந்த விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்குவதற்கு நம் தமிழக அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோவில்கள், மடங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 75—25 என்று அறிவித்தார்கள். அதை நாங்கள் மனப்பூர்வமாகப் பாராட்டினோம். தமிழகத்தில் எங்கே பொதுக் கூட்டங்கள் நடத்தினாலும். ஆளும் கட்சி எம். எல். ஏ.க்கள் மறந்துவிட்டாலும் நாங்கள் மறக்காமல் 75–25-யை எல்லா விவசாயிகளுக்கும் எடுத்துச் சொல்லி வருகிறோம். அது நல்லதொரு சட்டம். அதில் கூட இன்னும் சில சிக்கல்கள் இருக்கின்றன. மிராசுதாரர்கள் இன்னும் எங்களுக்கு உத்தரவு வரவில்லை என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் தீர்க்கமாக பரிசீலித்து தீர்க்கவேண்டுமென்றால் இந்தக் குழு அவசியம். இந்தக் குழுவிற்கு நல்ல அதிகாரங்களை அளித்து எதிர்காலத்தில் உண்மையான விவசாயிகளைக் கண்டுபிடித்து, பினாமி நிலங்களை எல்லாம் எடுத்து வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு இலட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள்—அந்த நிலங்கள் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய அளவிற்கு அமைச்சர் அவர்கள், தமிழக அரசு, நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டு இச்சட்ட முன்வடிவை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1969 ஆம் ஆண்டு வேளாண்மைக் குத்தகை பதிவுச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவருகிற சட்ட முன்வடிவை வரவேற்று இந்தச் சட்டத்தின் மூலம் குத்தகை பதிவுயில் செய்வதில் ஏற்படுகிற சங்கடங்களைப் போக்குகிற வகையில். அமைந்திருப்பதால் இதை நான் வரவேற்கிறேன்.



எனக்கு முன்னால் பேசிய பல்வேறு உறுப்பினர்கள் எல்லாம் இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்ற அதே நேரத்தில் இந்தச் சட்டத்தை அமுல் படுத்துவதில் இருக்கிற சங்கடங்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் இந்தச் சட்டம் முன்சீப் கோர்ட்டுக்கு அல்லது மற்ற கோர்ட்டுகளுக்கு செல்லக்கூடாது', அதனால் பல சங்கடங்கள் ஏற்படும் என்று எடுத்துக்கூறினார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீதிமன்றங்களில் இன்றைய நிலையில் இப்படிப்பட்ட சீர்த்திருத்தச் சட்டங்கள் செல்கிறபோது வழக்கறிஞர்கள் மட்டும் பலன் பெறுகிற நிலைமை இருக்கிறதே தவிர ஏழைகளுக்கு வருமானம் இல்லாமல் அவர்களுக்கு சங்கடங்கள் வருகின்ற நிலைமை தான் இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட சீர்திருத்தச் சட்டங்கள் எல்லாம் கோர்ட்டுகளுக்கு விடப்பட்டு வழக்கறிஞர்கள் மட்டும் பணம் சம்பாதிக்கிற நிலையை உருவாக்காமல் தாசில்தார்களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். தாசில்தார்களுக்கு சட்டம் தெரியாது. அவர்கள் இந்தச் சட்டங்களை அமுல்படுத்த முடியாது என்று சொன்னார்கள். ரெவின்யூ அதிகாரிகளுக்குத்தான் நிலங்களை யார் சாகுபடி செய்கிறார்கள் எப்படிச் செய்கிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். கடன் நிவாரணச் சட்டத்தை கூட வழக்கறிஞர்கள் தாசில்தார் கோர்ட்டில் வழக்காடக் கூடாது என்றிருக்கிறது.

** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படிப்பேசக் கூடாது.

** **

அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: வழக்கறிஞர்கள் தவறாக நடந்து கொள்கிறார்கள் என்று நான் குறிப்பிடவில்லை. அவர்கள் வழக்கறிஞர்கள். அவர்கள் சரியான முறையில் வாதாடி காலத்தை நீட்டிப்பதற்குக் காரணமாக இருந்து சீர்திருத்தச் சட்டங்களின் பலன் உடனடியாகக் கிடைக்காமல் காலதாமதப்படுத்தும் முயற்சியில் இருதரப்பிலும் வாதாடி பலன் கிடைக்காத நிலை இருக்கிறது என்றுதான் எடுத்துக் கூறினேன். அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் ரெவன்யூ அதிகாரிகள் அதை விசாரிக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. ரெவின்யூ அதிகாரிகள் விசாரிக்கிறபோது பல குறைபாடுகள் வந்துவிடுகின்றன. அதனால் மக்கள் பிரதிநிதிகள் ஆலோசனை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதால், மக்களோடு பழகுகிற, மக்களுக்கு தொண்டாற்றக் கூடியவர்கள் இந்தக் குழுக்களில் இருப்பதால் ஏழைகளின் நலன்களை ஏழை எளியவர்களை பாதுகாக்கக்கூடிய முறையிலே, அவர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையிலே உண்மையான குத்தகைதாரர் யார் என்பதை அறிந்து அவர்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

களுக்கு நிலம் அளிக்கக்கூடிய வகையில், கோர்டுக்குச் சென்று வாதாடக்கூடிய அவசியமில்லை என்று சட்டத்தில் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இந்த தாசில்தார்களும், ரெவின்யூ அதிகாரிகளும் இந்தச் சட்டத்தைச் சிறந்த முறையில் செயலாக்குவார்கள்.

அதைப் போலவே, பினாமி நிலங்கள் ஒழிக்கப்பட வேண்டும்; பினாமி நிலங்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார்கள். ஏழை எளியவர்கள், விதவைகள், ராணுவ வீரர்கள் போன்றவர்கள் குத்தகை விட்டிருந்தால், திரும்ப வருகிறபோது அந்த நிலங்களை அவர்கள் சாகுபடி செய்வதற்கு கொடுக்கவேண்டும். சட்டத்திலே இதை அனுமதிக்க வேண்டும் என்பதற்கு நான் உடன்படுகிறேன். ஏனென்று சொன்னால், இப்படி நிலத்தை குத்தகைக்கு விடுகின்றபோது கிராமத்திலே இந்த குத்தகைதாரருக்கு நஷ்ட ஈடு கொடுத்துவிட்டு, அந்த நிலத்தைப் பெறுகிற வழக்கம் சட்டத்திலே இல்லாவிட்டாலும், பழக்கத்திலே இருக்கிறது. அப்படி அவர்கள் நிலத்தை திரும்பப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. குத்தகைதாரர் பணத்தை வாங்கிக் கொண்டு அந்த நிலத்தை கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. சில இடங்களில் ஏமாற்றப்படுவதும் இருக்கிறது. அப்படியில்லாமல், அந்த நிலத்தைப் பண்படுத்தி, சாகுபடி செய்தவர்களுக்கும் ஓரளவிற்கு பலன் கிடைக்கக்கூடிய வகையில், அந்த நிலத்திலே பாடுபட்டவருக்கு தகுந்த நஷ்ட ஈட்டைக் கொடுத்து, அதன் மூலம் இரண்டு சாரரும் பயனடையக்கூடிய முறையில், இந்தக் கருத்தை வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பினாமி நிலங்களும் இருக்கின்றன. உண்மையிலேயே அப்படி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் தெரிவித்தார்கள். அவர் தெரிவித்தது போல், தஞ்சை மாவட்டத்திலே பல்வேறு பணக்காரர்கள் அங்கே பல்வேறு பெயர்களிலே நிலங்களைச் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். 15 ஏக்கர் என்று சொல்லிவிட்டு, அங்கே பல்வேறு விதமாக 100 ஏக்கர் 200 ஏக்கர் என்று சொல்லக்கூடிய அளவிலே, இன்னும் தென்னந் தோப்புகள் என்ற பெயராலே 1,000 ஏக்கர்கள், 500 ஏக்கர்கள் சாகுபடி செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பணக்காரர்கள் இருக்கிறார்கள். இதையெல்லாம் இந்த நிலச் சீர்திருத்தக் குழு கண்டுபிடித்து அவர்களுடைய நிலங்களை எடுத்து, ஏழை எளியவர்களுக்கு அளிக்க வேண்டும். அதேபோல் 5 ஏக்கர் குத்தகை என்று சட்டத்திலே சொல்லப்பட்டிருந்தாலும், சிலர் 20, 30 ஏக்கர்கள் குத்தகை சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். அதையும் இந்தக் குழு கண்டுபிடித்து, அப்படிப்பட்ட சாகுபடியாளர்கள் நிலங்களையெல்லாம் எடுத்து, ஏழை எளியவர்களுக்கு வழங்கிட வேண்டும்.

இறுதியாக, இப்படி குத்தகை முறையில் சாகுபடி செய்யக் கூடியவர்களுக்கு, அந்த நிலத்தை உழுகின்றவனுக்கே



சொந்தம் ஆக்கும் முறையில், உண்மையானவர்கள் யார் என்பதை இந்தச் சமுதாயத்திற்கு அடையாளம் காட்டுகின்ற வகையில், அந்தக் கருத்து பற்றியும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு திருத்தச்சட்டத்தை வரவேற்று அமர்கிறேன் வணக்கம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குத்தகை திருத்தச் சட்டத்தின்மீது என் ஓரிரு கருத்துக்களை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே இன்றைய தினம் குத்தகைதாரர்கள் நிலத்தை பாதுகாக்கின்ற வகையிலே, வட்டாரத்திற்கு ஒரு குழு அமைக்கின்ற ஒரு சட்டத் திருத்தத்தைக் கூறியிருக்கிறார்கள். இந்தக் குழுவை அமைக்கின்ற நேரத்திலே, இன்றைய தினம் அந்தக் குழுவிலே நிலமற்ற தொழிலாளர் ஒருவரும், ஒரு குத்தகைதாரரும், 3 சமூக சேவகர்களும் இருப்பார்கள் என்று கூறியிருக்கிறார்கள். எனக்கு முன் பேசிய உறுப்பினர் உத்திராபதி அவர்கள் பேசியது போல், இந்தக் குழுவிலே அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் நியமிகக வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், இந்தச் சட்டங்களை நல்ல முறையிலே வாதாடுகின்றவர்கள் வழக்கறிஞர்கள். அவர்கள் அந்த அறிவைப் பெற்றவர்கள். அப்பேர்ப்பட்ட வழக்கறிஞர்கள் அங்கே இருக்கக்கூடிய குத்தகைதாரர்களின் வழக்குகளை நல்ல முறையிலே எடுத்து வைக்க முடியும். அவர்களுக்கு இந்தச் சட்ட நுணுக்கங்கள் தெளிவாகத் தெரியும். இதிலே வேண்டிய விளக்கங்கள் அவர்களால் தான் எடுத்துக் கூற முடியும் என்பதைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாலை 5.40]

அதேபோல், ஆதரைஸ்ட் ஆபீஸர்கள், அதிகாரிகளாக இருக்கின்றவர்களுக்கு ஏரியா அதிகமாக இருக்கிறது. ஒரு ரெவின்யூ டிவிஷனுக்கு ஒரு ஆதரைஸ்ட் ஆபிசர் நியமிக்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதேபோல், பல்வேறு நேரங்களில் இந்த வழக்குகள் ஆதரைஸ்ட் ஆபிசர்களிடமிருந்து கோட்டாட்சி அதிகாரிக்குப் போகிறது. பிறகு அங்கிருந்து திரும்ப இந்த ஆதரைஸ்ட் ஆபிசர்களுக்கு அனுப்பப்படுகிறது. இதுபோன்ற நிலைமை இல்லாமல், ஆதரைஸ்ட் ஆபிசர்களுக்கு இந்த வழக்குகளை விசாரிக்கின்ற ஒரு அதிகாரத்தை வழங்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி வழங்கிவிட்டால் வழக்கறிஞர்கள் நல்ல முறையிலே குத்தகைதாரர்களுடைய நிலைமைகளை எடுத்துச் சொல்லி சட்டத்திலே சாதகமாக இருக்கிறதை எடுத்துச் சொல்லி நல்ல முறையிலே குத்தகைதாரர்களுக்கு நியாயத்தைப் பெற்றுத் தரமுடியும். 'டென்சி ரெக்கார்ட்சை' வைத்திருப்பவர்கள் நல்லமுறையிலே அதை சரியாக வைத்திருப்பதில்லை என்று பொதுவான குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அதை நல்லமுறையிலே பராமரிக்க வேண்டும். அங்கே நிலத்திலே என்ன

பயிர் செய்யப்படுகிறது என்பதை கூட குறித்து வைத்திருக்க வேண்டுமென்று இருக்கிறது. நடைமுறையில் அது அனுசரிக்க முடியவில்லை. நடைமுறையிலே அதைக்கொண்டுவர ஆவனசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேப்போல எனக்கு முன்புபேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதைப் போல எதற்குமே விதிவிலக்கு என்று ஒன்று உண்டு. குத்தகை தாரர்களை விட நிலச் சொந்தக்காரர்கள் சில இடங்களில் வறுமையிலே வாடிக்கொண்டிருப்பார்கள். அவர்களுடைய தகுதியை ஆராய்ந்து போடப்பட்டிருக்கிற குழுக்கள் மூலமாக அவர்கள் எந்த அளவிற்கு இருக்கிறார்கள், ஆதரவில்லாமல் இருக்கிறார்களா என்பதை அறிந்து அவர்களுக்கெல்லாம் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு மாணிக்கம் அவர்கள் கூறியதைப் போல இன்றையதினம் தமிழகத்திலே பல்வேறு இடங்களில் குத்தகை நிலங்களை அதிகமாக பினாமி பெயரிலே வைத்திருக்கிறார்கள். பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் தான் வைத்திருக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. இருந்தாலும் பினாமி பெயரில் அதிகமான நிலங்களை வைத்திருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்களை விட பினாமிதாரர்கள் வசதி வாய்ந்தவர்களாக இருப்பார்கள். ஆகவே இதுபோன்ற பினாமிதாரர்களை கண்டுபிடித்து குத்தகைதாரர்களை வெளியேற்ற வேண்டும். குறைந்த அளவு நிலங்கள் வைத்து இருக்கிற குத்தகைதாரர்களுடைய நிலத்தை சொந்தமாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த திருத்தத்தை வரவேற்று, நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவைப் பற்றி இங்கே எல்லாக் கட்சி உறுப்பினர்களும் ஏழு, எட்டு பேர்கள் வரவேற்று பேசியிருக்கிறார்கள். இந்த சட்டமுன்வடிவு நான் கொண்டு வருகின்ற பொழுது இதை யாருமே பேசாமல் நிறைவேற்றப்படும் என்று நான் கருதினேன். காரணம் இதற்கு எதிர்ப்பவர்களே இருக்காது என்றும், அதிகம் எதுவும் பேசுவதற்கு இடமில்லை என்றும் நான் இங்கே கொண்டு வந்திருந்தேன். ஆனால் இங்கே பல்வேறு உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களை சொல்கிற போது இதை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். சொல்லியிருக்கிற சில திருத்தங்கள் சாதாரண திருத்தங்கள்தான் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது 1950-51-லே ஆரம்பித்து இன்றைக்கு 81-லே வந்திருக்கிறது. இது 'உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் பேசுகிற போது ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான பேர்கள் குத்தகை பதிவு செய்யப்படவில்லை என்பதாலே கொண்டுவரப் பட்டது. அவர்கள் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான பேர்கள் குத்தகை பதிவு செய்யவில்லை என்பதை உணர்ந்து தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் தொடர்ந்து விவசாயிகளுக்கும், விவசாய தொழிலாளர்களுக்கும். குத்தகைகாரர்களுக்கும் பல நன்மைகள் செய்து வருவதை போல இதற்கு சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற குழுக்களை அமைக்கவேண்டுமென்று குத்தகை அதிகப்



படுத்த அவர் தீர்மானித்து அரசின் சார்பிலே இந்த சட்ட முன்வடிவை நான் கொண்டு வந்திருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபற்றி சொல்ல வேண்டுமென்றால் 1950-லே ஆரம்பித்து விட்டது. தஞ்சாவூர் பண்ணையாள்கள் பாதுகாப்பு சட்டம் 1950-லே ஏற்படுத்தப்பட்டது, பாதுகாப்பு சட்டம் என்றால் அவர்களை வெளியேற்றத்திலிருந்து தடுப்பது என்று முதலிலே தஞ்சை மாவட்டத்தில் மட்டும் அந்த பாதுகாப்புச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது என்பது உங்களுக்கு தெரியும். அப்படி ஏற்படுத்தப்பட்ட போது எந்த வகையில் கூலியை நிர்ணயிப்பது என்பது தஞ்சை மாவட்டத்திற்கு நடைமுறைக்குவந்தது. முத்தரப்பு மாநாடு என்று சொல்வார்கள். மிராசுதாரர்கள்இருப்பார்கள். அரசு அதிகாரிகள் இருப்பார்கள். பண்ணையாள்கள் இருப்பார்கள். அதிலே ஒரு முடிவு எடுப்பார்கள். அந்த முடிவின்படி காரியங்கள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டு வந்தது என்பது உங்களுக்குத் தெரியும். தஞ்சை மாவட்டத்திலே மட்டும் இருந்தது. அதற்குப் பிறகு சிதம்பரம், திருச்சி போன்ற இடங்களுக்கு நீட்டிக்கப் பட்டது, என்பதும் அதற்குப் பிறகு அதிலே பல சங்கடங்கள் வந்தது எல்லாம் உங்களுக்குத் தெரியும். பாதுகாப்புச் சட்டம் என்றால் பாதுகாப்புச் சட்டத்திற்கு பிறகு அதிலே எவ்வளவு கூலி, எவ்வளவு நேரம் என்றெல்லாம் நிர்ணயிக்கப்படவில்லை என்றாலும் நிலங்களிலே வெள்ளாமை செய்கின்றவர்களை வெளியேற்றுவதிலிருந்து தடுக்க முடியாமல் பல சங்கடங்கள் ஏற்பட்டது என்பது எல்லாம் உங்களுக்குத் தெரியும். அதற்குப் பிறகு 55 ஆம் ஆண்டிலே தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் என்று கொண்டு வரப்பட்டு தமிழ்நாடு பூராவும் அந்தச் சட்டங்கள் கொண்டுவரப் பட்டது என்பதும், அத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்ட காரணத்தினால் யார் குத்தகைதாரர்கள் என்பதைப்பற்றி 3 மனுக்களில் நிலச் சொந்தக்காரர்கள் யார் குத்தகைதாரர் என்று கையெழுத்துப் போட்டு தாசில்தாரிடத்திலே ஒன்றைக் கொடுத்து விட வேண்டும், ஒன்றை மிராசுதாரர் வைதது்க் கொள்ள வேண்டும், ஒன்றை குத்தகைதாரர் வைத்துக் கொள்ளவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டன. அப்படிப்பட்ட பாதுகாப்புச் சட்டங்கள் வந்தாலும் எவ்வளவு வாரம் என்று நிர்ணயிக்கப்படவில்லை. 1955 இல் வருகிறபொழுது தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம்தான் வந்தது. அதற்குப் பின்னாலே அதிலே எவ்வளவு நியாயக் குத்தகை என்று நிர்ணயிப்பதற்காக 56 இல் ஒரு சட்டம் வந்தது. பயிரிடும் குத்தகைதாரர் நியாயக் குத்தகை செலுத்துதல் சட்டம் என்று கொண்டு வரப்பட்டது. முதலில் கொண்டுவரப்பட்டபோது விளைச்சலிலே 40 பகுதிகுத்தகைதாரருக்கும் 60 பகுதி நிலச் சொந்தக்காரருக்கும் என்று கொண்டுவரப்பட்டது. இங்கே தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியும். அப்புறம் சில சங்கடங்கள் ஏற்பட்ட காரணத்தினாலே 60 குத்தகைதாரர்களுக்கும் 40 நிலச் சொந்தக்காரர்களுக்கும் என்று ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். அது 56 இல் வந்தது. ஆனால் திருப்தியடைய முடியவில்லை.

ஏனென்றால் தேவைப்பட்டது. 1961 ஆவது ஆண்டிலே பொது பொறுப்புக் கழகங்கள் என்று இங்கே பேசினார்கள். கோவில் நிலமானாலும் சரி, அரசு நிலமானாலும் சரி, தனியார் நிலமானாலும் சரி அந்த நிலங்களிலே குத்தகைதாரர்களைப் பாதுகாக்கவேண்டுமென்ற முறையிலே பொதுப் பொறுப்புக் கழகங்களையும் சேர்த்து 1961 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அதற்குப் பிறகு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்தது. இங்கே பலர் பேசினார்கள் நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் நிலத்தை எடுக்கிறபோது அதிலே வெள்ளாமை செய்து கொண்டிருக்கின்ற குத்தகைதாரர்கள் வெளியேற்றப்பட்டால் அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே எல்லாம் வந்தது. இப்படி பல்வேறு சட்டங்கள் 1951 இல் ஆரம்பித்து பல ஆண்டுகளிலே பல சட்டங்கள் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டாலும் நான் நிறைவேற்றியவர்களை பாராட்டுகிறேன். அவர்களை குறை கூறவில்லை. சட்டத்தைக் கொண்டு வருகிறபோது அன்றைக்கு இருக்கின்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அவர்கள் கொண்டு வந்தார்கள். 1981 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இத்தகைய குறைபாடுகள் இருக்கின்றன என்பதைச் சொல்லி அவைகளை நீக்குவதற்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னாலும் அதற்கு மூலக் கருத்தாக இருந்த அவ்வளவு பேர்களையும் சட்டம் கொண்டு வந்த அரசையும் பாராட்டுகிறேன். அது மட்டுமல்ல, இந்தச் சட்டம் எல்லாம் இங்கே கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு மாநிலத்தின் பல பகுதிகளில் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள், லட்சக்கணக்கானவர்கள் சிறைச் சாலைக்குச் சென்றார்கள் என்பது மட்டுமல்ல, அடிபட்டார்கள், கைகால் முறிந்தது என்பது மட்டுமல்ல, பல பேர்கள் ரத்தத்தைச் சிந்தினார்கள் என்பது மட்டுமல்ல துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளானார்கள். உயிர் நீத்தவர்கள் உண்டு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். 1981 ஆம் ஆண்டு இன்றைக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது இன்றைக்கு இருக்கின்ற விவசாயிகள், இன்றைக்கு இருக்கின்ற குத்தகைதாரர்கள் நன்மைபெறும் வகையில் அதற்காகத் தியாகம் செய்தவர்கள் எத்தனை பேர்கள் என்று எண்ணிப் பார்த்தால் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் அதுவும் கீழ்த் தஞ்சை மாவட்டத்திலே எவ்வளவு பேர்கள் என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

[மாலை 5.50]

நான் இங்கு சொல்லவேண்டுமென்றால் எனக்கு வேண்டிய உற்றார் உறவினர்கள் பலர் இப்படிப்பட்ட போராட்டத்தில் உயிர் துறந்திருக்கிறார்கள். துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள்; அவர்கள் இறந்திருக்கிறார்கள் என்று சொல்லும்பொழுது அவர்கள் வீரமரணம் அடைந்திருக்கிறார்கள். விவசாயிகளுக்காகப் போராடியிருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தனைக்கும் பிறகு சில கிராமங்களில் வாய்மொழி மூலம் சொல்லிவிடுகிறார்கள், நீ இவ்வளவு குத்தகை கொடு. நீ



இவ்வளவு நிலம் கொடு என்றெல்லாம் சொல்லிவிடுகிறார்கள். அப்படி வாய்மொழி மூலம் நடப்பதால்தான் சில சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதற்காக அதையெல்லாம் இன்றைக்கு போக்கடிக்கப்பட வேண்டுமென்றுதான் இதைக் கொண்டு வருகிறோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மொழி மூலம் மட்டுமல்ல; பலரும் இங்கே சொன்னார்கள். பினாமி நிலம்கூட இருக்கிறது. சில குத்தகைதாரர்கள் சாதாரணமாக நிலச் சொந்தக்காரர்களைவிடப் பணக்காரர்களாக இருக்கிறார்கள்; 300 ஏக்கர், 400 ஏக்கர் அல்லது 50 ஏக்கர் 25 ஏக்கர் என்று வைத்துக்கொண்டு இருப்பவர்களாக இருக்கிறார்கள். அவைகளையெல்லாம் போக்கடிக்க வேண்டுமென்ற வகையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

உங்களுக்கு நான் சொல்ல வேண்டுமானால், 1950-51-இல் நடந்தாலும், இன்றைக்கு 30 ஆண்டுக் காலம் ஆகியும், அதற்குப் பிறகு இன்றைக்குப் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை எவ்வளவு என்றால், 4,36,000 பேர்கள்தான். இன்னமும் சொல்ல வேண்டுமானால் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றவர்கள், தமிழ்நாடு முழுவதும் 4,36,735 பேர்கள். ஆனால் அதிலே, தமிழ்நாடு முழுவதும் 4,36,000 பேர்கள் என்றால், தஞ்சை மாவட்டத்தில் ஒன்றரை இலட்சம் குத்தகைதாரர்கள்; அந்த ஒன்றரை இலட்சத்தைத் தள்ளிவிட்டால் பாக்கியுள்ள சுமார் 3 இலட்சம் பேர்கள்தான் தமிழ்நாடு பூராவும் இன்றைக்கு பதிவாகியிருக்கிறார்கள் குத்தகைதாரர்களாக என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏறக்குறைய ஆறேகால் இலட்சம் ஏக்கர்கள் தான் இன்றைக்குப் பதிவாகியிருக்கிறது. எனவே, பல இலட்சக்கணக்கான பேர்கள் இன்றைக்குப் பதிவு செய்யப்படாமல் இருப்பதன் காரணமாக, அவர்களைப் பதிவு செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்கின்ற செய்தியினை உங்களுக்கு நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பலரும் பலவற்றைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியன் அவர்கள் பேசுகின்றபொழுது இன்றைக்கு அரசு ஊழியர்கள், இராணுவத்தில் வேலை செய்பவர்கள், விதவைகள் ஆகிய இவர்களெல்லாம் என்ன செய்வார்கள், இவர்களுக்குப் பாதுகாப்பு தரக்கூடாதா என்று கேட்டார்கள். நியாயமான கேள்வியைத்தான் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். பர்சனல் கல்டிவேஷன் நிலத்தை முதலில் கொடுத்து விடுகிறோம். ஆனால் பர்சனல் கல்டிவேஷன் என்று வரும்பொழுது செக்யூரிட்டி இருக்க வேண்டுமே என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள்.

இதிலே அரசு ஊழியர்களுக்குப் பாதகமில்லை. அரசு ஊழியர்களைப் பற்றி நான் இந்தக் கருத்தைக் கூறுகின்றபொழுது இங்கேயிருக்கின்ற அரசு ஊழியர்கள் தப்பாக நினைத்துக்கொண்டாலும்

கூடப் பாதகமில்லை. அரசு ஊழியர்களுக்கு ஒரு குறிப்பிட்ட வருமானம், அது குறைந்ததோ கூடவோ, ஆனால் குறிப்பிட்ட வருமானம் வருகிறது என்ற நிலைமையிருக்கிறது.

ஆனால், விதவைகள் கவனிக்கப்பட வேண்டும். எனக்குத் தெரியும், பல விதவைகள் 4 ஏக்கர், 1 ஏக்கர், 2 ஏக்கர் என்று வைத்துள்ளவர்கள், குத்தகைக்கு விட்டுவிட்டு. இருக்கின்ற நகைகளைக் கழற்றி அடகு வைத்து பிள்ளைகளைப் படிக்க வைத்து, அடகுக்காரர்கள் அந்த நகையை எடுத்துக் கொண்ட பிறகு, அந்த அம்மையார் கஷ்டத்திற்கும் வேதனைக்கும் உள்ளாகியிருக்கிறார்கள். இவையெல்லாம் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றுதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராணுவத்தில் உள்ளவர்களுக்கு மட்டும், அவர்கள் திரும்பி வந்தால் இன்றைக்கிருக்கின்ற சட்டப்பிரிவில் 4 (ஏ) (ஏ) என்ற பிரிவின்கீழ் குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தை மீண்டும் அவர்கள் எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு. சந்திரசேகரன் அவர்கள் கேட்டார்கள், எல்லோரையும் போடுகிறீர்கள், எங்களையும் போட வேண்டுமென்று, ஆனால் நான் சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் என்றால் அது நிலையானது அல்ல; அதைவிட நிலையான பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. அது உங்களுக்கும் தெரியும். 5 ஆண்டு, 10 ஆண்டு என்று சட்டமன்ற உறுப்பினராக இருக்கலாம். இது இடையிலே வந்தது. ஆனால் இப்படி இடையிலே வராமல் ஆதியிலிருந்து கடைசிவரையில் உங்களுக்குஒரு பொறுப்பு இருக்கிறது. ஆகவேதான் அந்தப் பொறுப்பை நான் கொடுத்திருக்கிறேன். அதுதான் சமூகத் தொண்டன் என்பது. சட்டமன்ற உறுப்பினர் என்ற பதவி வரும், போகும். ஆனால் சமூகத் தொண்டன் என்பது நிலையாக உள்ளது. சமூகத் தொண்டர் என்று போட்டால் அதில் நீங்கள் வந்து விடுகிறீர்கள். அதனால்தான் சமூகத் தொண்டர் என்று போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் அருமைச் சகோதரர் தேனி ஜெயராமன் அவர்கள் பேசுகின்றபொழுது, சிறிய விவசாயிகளுக்கு, வங்கிக் கடன்கள், அரசுக் கடன்கள், அரசு செய்கிற அனுகூலங்கள் எல்லாம் குத்தகைதாரர்களுக்கும் வேண்டுமென்று சொன்னார்கள் அவர்கள் இப்படி பேசுவார்கள் என்று தெரிந்திருந்தால், நான் எவ்வளவு இலட்சம் பேர்கள் எவ்வளவு, ஆயிரம் பேர்கள். குத்தகைதாரர்கள் வங்கிக் கடன்களை, அல்லது அரசுக் கடன்களை அல்லது, வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்டபொழுது எவ்வளவு பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லியிருப்பேன். சிறிய விவசாயிகளுக்கு எவ்வளவு நன்மை செய்கிறோமோ அதை நிச்சயமாக குத்தகைதாரர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த உரிமை உண்டு என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



எல்லோரும் வரவேற்றுப் பேசியிருக்கிறீர்கள். இங்கே, அருமைச் சகோதரர் செல்லமுத்து ஒன்று சொல்லியிருக்கிறார்கள் நிலச்திருத்தத்தில் அவர்களுக்கு 1½ ஏக்கர் கொடுக்கப்படுகிறது. அதை 3 ஏக்கராகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குத்தகைதாரர்களுக்குப் பட்டா பாஸ் புத்தகம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பட்டா புஸ்தகம் கொடுப்பதைவிட வேறொன்று கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். பதிவேடு, அத்தாட்சி. பதிவேடு அத்தாட்சி இருந்தால்தான், அதைக் காட்டி அவர்கள் விவசாயத்தின்பொழுது, குத்தகைசெய்பவர்கள். வங்கிகளிலே குறுகிய காலக்கடன்கள் வாங்க உரிமை இருக்கிறது. அந்த உரிமைகளைப் பெற்றுவிட்டாலே அவர்களுக்கு நிலம் அத்தாட்சி ஆகிறது. இன்றைக்கு அதைக்கூடச் செய்ய முடியவில்லை. உரம் வாங்கக் கூட தாசில்தார்தான் வாங்கித் தருகிறார்கள். அதையும் மாற்றுவதற்கு உத்தேசித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை சகோதரர் உத்திராபதி அவர்கள் பல விஷயங்களைச் சொன்னார்கள். எல்லாவற்றையும் வரவேற்றுப் பேசினார்கள். அப்பொழுது ஒன்றைச்சொன்னார். குழுக்களைப் போடுகிற பொழுது மிக நியாயமாக போட வேண்டுமென்று சொன்னார்கள் வரவேற்க வேண்டியது. ஆனால், இந்தச் சட்டத்தைக்கொண்டு வருகிறபொழுது, நான் தெரிவித்துக் கொள்கிறேன், இன்றைக்கு ஆயிரக்கணக்கானவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்களோ, அதைவிட அதிகமாக ஆயிரக்கணக்கானவர்கள்—வெளியே இருக்கிறவர்கள்தான் அதிகமாக மகிழ்ச்சி அடைவார்கள். ஏனென்றால். நேரடியாக அவர்கள் நன்மை அடைவார்கள். அவர்கள் நன்மை அடைவதை நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பீர்கள். நேரடியாக, இலட்சக்கணக்கானவர்கள் வெளியே நன்மை அடைவார்கள். அவர்களைப் பாதுகாக்கும் வகையில் இந்தக் குழுக்கள் நிச்சயமாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோளை விடுக்கத் தயாராக இருக்கிறேன். அருமைச் சகோதரர் உத்திராபதி சொன்னதற்காக அந்த வேண்டுகோளை நான் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சி நிவாரணத்திற்குக் குழுக்கள் போடுவதில அங்காங்கே தவறுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படி இருந்தால் நான் ஏற்றுக்கொள்கிறேன். அப்படியிருந்தால், இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரையும் அல்ல—இங்கேயிருக்கிற அந்தந்தக் கட்சித் தலைவர்கள்—நாளைக்கு ஒரு நாள் சட்டமன்றம் இருக்கிறது—இந்த இடங்களில் போடப்பட்ட குழுக்களில் இன்னின்னார் விடுபட்டிருக்கிறார்கள் : அதற்கு இன்னாரைப் போடவேண்டுமென்று எழுதிக் கொடுத்து விடலாம். இந்த மாவட்டத்தில், இந்த ஊரில் இன்னார் பெயர்

விடுபட்டிருக்கிறது, என்று எழுதிக் கொடுங்கள். எல்லா எம்.எல்.ஏக்களும் எழுதிக் கொடுத்தால் என்னால் பரிசீலிக்க முடியாது. அந்தப்பக்கமானாலும், இந்தப் பக்கமானாலும், எந்தக் கட்சித் தலைவராக இருந்தாலும் சரி, அவர்கள் என்னிடத்தில் எழுதிக் கொடுத்து, இந்த இந்த இடத்தில் வறட்சிப் பணியில் உண்மையான பிரதிநிதித்துவம் இல்லையென்று எழுதிக் கொடுத்தால் நான் அதைக் கவனிப்பதற்கு—கவனிப்பதற்கு என்று சொல்லவில்லை—அதைப் போடுகிறேன் என்று சொல்கிறேன். நான் உறுதியாக சொல்கிறேன், விளக்கமாகச் சொல்கிறேன். வறட்சி நிவாரணப் பணி நன்றாக நடக்கவேண்டும். நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், நாளைக்கு வரும்போது என்னிடத்திலே தரவேண்டும். சி.பி.ஐ. தலைவர் அவர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். நாளைக்கு வரும்போது கொடுக்கவேண்டும் நம்முடைய வரதராஜன் அவர்கள் நாளைக்குத் தரவேண்டும். எந்த, எந்த ஜில்லாவில், எந்த எந்த வட்டத்தில் குழுக்கள் போடப்பட்டிருக்கின்றன விடுபட்டிருக்கின்றன என்றால் சொல்லுங்கள். அதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன என்றால், போட்டுவிட்டுப் போகிறோம். யாருக்கும் நஷ்டம் இல்லை, மக்களுக்கு நன்மை இருக்கிறது. யாருக்கும் நஷ்டம் இல்லை, மக்களுக்கு நன்மை இருக்கிறது என்று சொல்லும்போது அதிலே தடை இல்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அருமை சகோதரர் தேனி ஜெயராமன் அவர்கள் பேசும்பொழுது சம்பந்தப்படாத ஒன்றைச் சொன்னாலும் அதைப் பேசி இருக்கிறாரே என்பதால், அதை நான் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

[மாலை 6.00]

மத்திய அரசிடம் கேட்ட தொகை எவ்வளவு என்றால் 137 கோடி, வறட்சி நிவாரணத்திற்கு. ஆனால் முதல் தவணையாக எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்றால் 10 கோடி ரூபாய், இன்னும் கொடுப்பார்கள். இந்த 10 கோடியிலே 7 கோடி ரூபாய் கடனாகக் கொடுத்துள்ளார்கள். 3 கோடி ரூபாயை மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து இன்னும் கொடுப்பார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்ற கமிட்டியிலே இருப்பவர்கள் யார் யார் என்பது உங்களுக்குத் தெரியும். Landless agricultural labourers belonging to Scheduled Castes or Scheduled Tribes; one Tenant and three Social Workers. அப்பாயின்ட்மெண்டிலே இருந்து 3 வருடம் அவர்கள் இருப்பார்கள். தேவைப் பட்டால் அவர்கள் நீட்டிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வட்ட அளவில் கமிட்டிகள் போடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வட்ட அளவிலே போடுகிற போது, அவர்களுக்கு எல்லாம் என்னென்ன வேலைகள் என்பது எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். இது சட்ட பூர்வமாக அதிகாரம் பெற்ற கமிட்டி. நம்முடைய அருமை சகோதரர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசும்போது, தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்திலேயே





இந்த கமிட்டிகள்தான் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற கமிட்டிகள் என்று சொன்னார்கள். நான் அறிந்த வரையிலும் அதுதான் உண்மை. அந்த வட்டத்தில் உள்ள நிலங்கள், அந்த நிலங்களின் உரிமையாளர்கள், இடைத்தரகர்கள், குத்தகை தாரர்கள் முதலிய விவரங்களை சேகரிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் உண்டு. சம்பந்தப்பட்ட குத்தகை உரிமை பதவி அதிகாரிகளிடத்திலே சொல்வதற்கும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அதை எல்லாம் சொல்லுவதற்கு செல்லுகிறபோது அவர்கள் சங்கடப்படாமல் இருப்பதற்கு அவர்களுக்கு டி. ஏ. கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கமிட்டிகள் மிக விரைவில், மறுதரம் நீங்கள் என்னைப் பார்க்கிற போது, வெளியே பார்ப்பீர்கள். சட்டமன்றத்திலே பார்க்கிற போது, அதற்கு முன்னாலே இந்தக் கமிட்டிகளைப் போடுவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு எடுத்துக் கொள்ளும் என்று சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குத்தகைச் சட்டத்திலே விதவைகளுக்கு விதிவிலக்குக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விதிவிலக்கு என்பதில் எங்களுக்கு உடன்பாடு உண்டு. ஆனால் அதே சமயத்திலே 20 ஏக்கர், 25 ஏக்கர் வைத்திருக்கின்ற விதவைகள் இருக்கிறார்கள். எனவே அந்த விதவைகள் இத்தனை ஏக்கர்தான் வைத்துக் கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகமிக ஏழைகள், விதவைகள் இவர்களைப் பற்றியெல்லாம் கவனிப்பதற்கு இந்தச் சட்டத்திலே இடம் இல்லை. இன்றைக்கு இருக்கிற சட்டத்திலே, ராணுவத்தில் இருந்து திரும்புகிறவர்களுக்கு மட்டும்தான் இடம் இருக்கிறது. இப்போது மட்டுமல்ல பலமுறை நான் இங்கே பேசுகிறபோது விதவைகளைப் பற்றி ஏழைகளைப் பற்றி நான் மிக அனுபத்தோடு கூறுகிறேன் என்றால் நீங்கள் எல்லாம் கூறி இருக்கிறீர்கள், உங்களுடைய கருத்தைத்தான் நான் பிரதிபலிக்கிறேன். நான் தைரியமாக சொல்லுகிறேன் உங்கள் அத்தனை பேர்களுடைய எண்ணத்தைத்தான் நான் பிரதிபலிக்கிறேன்—இப்படிப் பட்ட சட்டத்தைக்கொண்டு வருகிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே இங்கே பேசிய உறுப்பினர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். 40 ஏக்கர் 50 ஏக்கர் குத்தகைக்குப் போடுகிற அளவுக்கு குத்தகைதாரர்கள் உருவாகி இருக்கிறார்கள் என்று. ஆகவே குறிப்பிட்ட அளவுக்கு அந்தக் குத்தகைக்கு போடுவதற்கான உச்சவரம்பு, குத்தகைதாரர்களுக்கு எவ்வளவு என்று

1955 ஆம் ஆண்டு சட்டத்திலேயே இருக்கிறது. அதை இந்தக் குத்தகைதாரர் உரிமைப் பதிவு சட்டத்திலே இன்கார்ப்பரேட் செய்ய வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, முதலிலேயே குத்தகைப் பதிவு சட்டத்திலே எவ்வளவு என்று இருக்கிறது. அது அதிகமா, குறைவா என்பதைப் பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் சொல்லி இருக்கிறோம். ஆனால் இப்போது இந்தக் கமிட்டி முதலிலே இருக்கிற சட்டப்படி உரிமைகளை வழங்குவதற்காக மட்டும்தானே ஒழிய, அதைக் கூட்டுவதற்கோ அல்லது குறைப்பதற்கோ அதிகாரம் படைத்தது அல்ல. சட்டமுன்வடிவிலே அதற்கு இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே.

''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் ஆவண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 41/1981) நிறைவேற்றப்பெறவேண்டும்,''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாவட்ட காவல்–சென்னை மாநகரக் காவல் 'திருத்த சட்டமுன்வடிவு

(எ) (1981 சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1981)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மாவட்டகாவல்–சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்



பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1981) ஆய்வுக்கு * எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்''.

என்று மொழிகிறேன்.

திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திருத்த முன்வடிவை பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். இதனுடைய காரண நோக்கங்களிலே கொடுக்கப்பட்டுள்ள விஷயம்–இம்மாநிலத்தைச் சேர்ந்த, 'மலபார் தனிக்காவற்படைகளும், ஆயுதம் தாங்கிய தனிக்காவற் படை அணிகளும் 1971 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20 ஆம் நாள் ஒருங்கிணைக்கப்பட்டு, தமிழ்நாடு தனிக்காவற்படை அணிகள் என மறு பெயரிடப்பட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட அணிகளுக்கான தனி விதிகள், அந்தப் படைகள் ஒற்றுமைபடுத்திப் பராமரிக்கப்படவேண்டிய தேவையான விதிகள் ஆகியவற்றை ஏற்படுத்துவது பற்றி நமக்கு ஆட்சேபணை இல்லை. அது செய்யப்படவேண்டிய ஒரு நடவடிக்கை தான். ஆனால் இந்தச் சட்டத்திலே மிகவும் ஆட்சேபிக்கத் தக்க, எதிர்க்கத்தக்க மற்றொரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியானது, எல்லேரையும், எல்லா அரசியல் இயக்கங்களையும், தொழிற் சங்கங்களையும், ஜனங்கள் இயக்கங்களையும் பாதிக்கும் அம்சமாக இருக்கிறது. அது இந்தச் சட்டத்தின் அடுத்த பகுதியில் வருகிறது. அந்தப் பகுதியில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால்–1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1888) 71–வது பிரிவு, ஏனையவற்றிற்கிடையே உரிமையாளர் அல்லது அனுபோக தாரரின் அனுமதி இன்றி சுவரொட்டிகள் ஒட்டுகின்ற அல்லது வேறு வகையில் பொது இடத்தை உருக்கெடுக்கின்ற–உருவத்தைக் கெடுக்கின்ற என்பது பொருள்–குற்றத்திற்கு 250 ரூபாய்க்கு மேற்படாத அபராதத் தொகை அல்லது மூன்று மாதங்கள் வரையிலான சிறைத்தண்டனை விதித்து தண்டிக்கப்பட வரையறுக்கப்படுவதாகும். ஏற்கனவே உள்ள சட்டத்திலேயே இந்த விளம்பரம் அல்லது சுவர் ஒட்டி அல்லது வேறு வகையில் விளம்பரங்கள் சுவர்களிலோ அல்லது கட்டிடங்களிலோ செய்வது என்றால் அப்படிச் செய்கின்றவர்கள் மீது எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும், தண்டனை எடுக்கவேண்டும் என்று இருக்கிறது. அதன்காரணமாக பல விதமான இன்னல்களுக்கும், தொல்லைகளுக்கும் பொதுஜன இயக்கங்கள் ஆட்படுத்தப்படு கின்றன. இதனால் மேலும் தொல்லைகள் ஏற்படும். அதற்காக எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் யாரும் எதையும் செய்யலாம் என்று நான் சொல்லவில்லை. நியாயமாக மக்களின் இயக்கங்களுக்கு பாதகம் ஏற்படுத்தக்கூடிய இப்படிப் பட்ட சட்டங்களில் மேலும் கடுமையாகச் செய்வதன்மூலம் அது அதிகம் பாதிக்கும். ஏற்கனவே உள்ள சட்டங்களின் மூலமே தண்டனை அளிக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் இந்தக் காரண விளக்கத்திலேயே என்ன சொல்கிறார்கள் என்றால்–அத்தகைய–அதாவது உரிமையாளர் அல்லது அனுபோகதாரரின்

* 1981 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2–ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

அனுமதியின்றி சுவரொட்டிகள் ஒட்டுகின்ற அல்லது வேறு வகையில் பொது இடத்தை உருக்கெடுக்கின்ற குற்றத்தைச் செய்கின்றவர்களை திறம்பட ஒடுக்கவும்— இந்த வார்த்தையை கவனிக்கவேண்டும்—அந்த வார்த்தையின் தொனியைப் பார்க்க வேண்டும்—அனுமதியின்றி சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட, உருக்கெடுக்கப்பட்ட பொது இடங்களின் உரிமையாளர்கள் அல்லது அனுபோகதாரர் சுவரொட்டிகளை அகற்ற அல்லது உருக்கெடுக்கப்பட்ட பொது இடங்களைச் சீர்செய்ய இயலுகின்ற வகையில், நீதிமன்றம் குற்றவாளியைத் தண்டித்து மேற்குறிப்பிட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குமாறு தீர்ப்பளிக்க வேண்டும் என்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே

[மாலை 6.10]

இப்படிப்பட்ட குற்றத்திற்கு தண்டனை உண்டு. இது 1859 ஆம் ஆண்டு காவல் சட்டத்தின்படி வழங்கப்படுகிறது. அந்தத் தண்டனைப் பெறுகிறவர்கள் மறுபடியும் தாங்கள் செய்த நடவடிக்கையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் அதை சரி செய்வதற்கு வேண்டிய செலவு தொகையை நஷ்டயீடாக அவர்களுக்கு கொடுப்பதற்கு இன்னொரு தண்டனையாக அவர்களுக்கு 500 ரூபாய் வரை அபராதம் அளித்து, அந்தப் பணத்தைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற திருத்தம் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் என்னவெல்லாம் அடங்கி இருக்கிறது?

பகுதி 16-ன்கீழ் ஒரு குற்றத்திற்காக குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்ட ஒரு நபர், ஒரு பொது இடத்தில் அல்லது ஏதேனும் ஒரு கட்டிடத்தில் நினைவுச் சின்னத்தில், சிலையில், மாதிரி உருவத்தில், தூணில், சுவரில், வேலியில்—இனி எந்த இடம்தான் பாக்கி இருக்கிறது—மரத்தில் அல்லது அக்கட்டிடத்திற்குள் அமைந்துள்ள வேறு ஒரு கட்டுமானத்தில் உருக்கெடுக்கப்பட்ட, உருக்குலைக்கப்பட்ட, எழுதப்பட்ட அல்லது வேறு வகையில் குறியிடப்பட்ட பகுதியை அழித்து வண்ணம் பூசுவதற்கு உரிமையாளருக்கு அல்லது அனுபோகதாரருக்கு நியாயமாகச் செலவாகுமென்று நீதிமன்றம் ஓர் ஆணையின் மூலம் உத்தரவிடக் கூடிய 500 ரூபாய்க்கு மேற்படாத ஒரு தொகையை அந்த உரிமையாளருக்கு அல்லது அனுபோகதாரருக்கு இழப்பீடாகக் கொடுப்பதற்கு உட்பட்டவராவார் என்று இருக்கிறது. இந்தத் தண்டனை இப்போது புதிதாகக் கொண்டு வரப்படுகிறது. இது ரொம்பக் கடுமையானது, ஆட்சேபகரமானது. திட்டவட்டமாக தொழிற்சங்க இயக்கம் முதற்கொண்டு ஜனநாயக இயக்கம், அரசியல் இயக்கம் போன்ற இயக்கங்களைப் பாதிக்கும் என்று நாங்கள் பயப்படுகிறோம். இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமல்ல; ஆளும் கட்சி, ஆளாத கட்சி, ஆள நினைக்காத கட்சி, எந்தக் கட்சியாக இருந்தாலும் எப்படி இருந்தாலும் தங்களுடைய கருத்துக்களை, கொள்கைகளை பொதுமக்கள் மத்தியிலே விளம்பரப்படுத்துவதற்கு சுவரொட்டிகளை ஒட்டலாம், அல்லது வேறு வகையிலே,



சுவர்களில், மரங்களில்—ஒருவருக்கு சொந்த நிலத்தில் இருக்கிற மரங்களில் அல்லது அரசுக்குச் சொந்தமான இடங்களில் உள்ள மரங்களில்—ஏதாவது ஒரு இடத்தில் போர்டு மாட்டினாலும் அது இந்தக் குற்றத்திற்குள் வரும்.

அது மட்டுமல்ல. இன்று நாம் தேர்தல் களத்தில் இறங்க இருக்கிறோம். இப்போது நாம் உள்ளாட்சித் தேர்தலுக்குப் போகப்போகிறோம். இந்த தேர்தல் காலத்தில் கிராமங்களில் சுவர்களில் அதிகமாக விளம்பரம் செய்கிறோம்; சுவரொட்டிகள் ஒட்டுகிறோம். நம்முடைய இந்திய நாடானது லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா போன்ற இடங்கள் மாதிரி அல்ல. அது மாதிரி நாம் கருதக்கூடாது. அங்கே ஒவ்வொரு ஓட்டல்களிலும் தாங்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை அச்சடித்துக் கொடுத்து, ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, அப்படிப்பட்ட இடங்கள் அவை. ஆனால் இந்தியாவில் அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லை. இங்கே நாம் ஆயிரக்கணக்கில் மக்களைக் கூட்டங்கள் வாயிலாகக் கூட்டி, கருத்துக்களைச் சொல்ல, குறைகளை எடுத்துச் சொல்ல, ஆளும்கட்சி செய்கின்ற தப்புகளை எடுத்துச் சொல்ல, நாம் என்ன செய்வோம் என்பதைச் சொல்ல, என்ன திட்டங்களுக்காகப் போராடுகிறோம் என்பதைச் சொல்ல, ஒருவகையில் மக்களுக்கு பயிற்சி, எஜுகேஷன் கொடுக்கின்ற வகையில்தான் நம்முடைய நாட்டில் பிரம்மாண்டமான ஜனநாயக அமைப்பு இயங்குகிறது. அதற்கு வேண்டிய விளம்பரங்கள், இலட்சக்கணக்கான விளம்பரங்கள் போடுகிறோம். பணக்காரர்கள், மிட்டா மிராசுதாரர்கள் அதற்காக, அதாவது பல்வேறுபட்ட விளம்பரங்களுக்காக இலட்சக் கணக்கில் செலவு செய்யலாம். அவர்கள் போஸ்டர் ஒட்டிவிட்டு போய்விடலாம். அவர்கள் சினிமா மூலமாகவும் விளம்பரம் செய்யலாம். அவர்களுக்கு அந்த வாய்ப்பு இருக்கிறது. இதையெல்லாம் விட்டுவிட்டு, ஏழைகள் செய்யக்கூடிய விளம்பரம் இருக்கிறதே, அதுதான் சுவரெழுப்பி அல்லது சுவரெழுத்து என்பது. அது இல்லாத இடத்தையே பார்க்க முடியாது. அநேகமாக எல்லா இடங்களிலும் பார்க்கலாம்.

சென்ற தேர்தல் காலங்களிலே எனக்கு அனுபவம் இருக்கின்றது. நான் கோவை கிழக்குத் தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அங்கே பணக்காரர்கள் நிறைந்துள்ள பகுதியில் அவர்களுடைய பங்களாக்களின் சுவர்களிலே எல்லாம் எழுதக்கூடாது, சுவரைக் கெடுக்கக்கூடாது என்றும் அப்படிக் கெடுத்தால் ஓட்டுப்போட மாட்டோம் என்றும் சொன்னார்கள். அவர்கள் நியாயமாகத்தான் சொன்னார்கள். சுவரிலே எழுதிவிட்டால் அதை அழிப்பதற்கு, வண்ணம் பூசுவதற்கு, நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று அவர்கள் கேட்கவில்லை. ஆகவே எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இதுபற்றிய அனுபவம் இருக்கின்றது. அப்படி எல்லாம் அவர்கள் சொன்னாலும் கூட ஏழைகள் இப்படிப்பட்ட விளம்பரங்களைச் செய்ய வேண்டி இருக்கின்றது. அப்படிப்பட்ட விளம்பரங்கள் எல்லாம் இதற்குள்ளே வருமா, வராதா என்றால் வரும். ஆகவே

அவற்றை எல்லாம் உருக்குலைப்பது என்ற பெயரால் அல்லது வேறு ஏதாவது காரணங்களைச் சொல்லி இப்படிப்பட்ட தண்டனைகளை அளிக்கவேண்டும் என்றால் 1888 ஆம் வருஷத்தினுடைய சட்டத்தின் 21-வது பிரிவிலே தண்டனைகள் இருக்கின்றபோது அதைத் தொடர்ந்து இப்போது தண்டனைகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இது சாதாரண ஏழை எளிய மக்களின் இயக்கங்களை பாதித்து அவற்றிற்குப் பெரிய அடியைக் கொடுக்கும். அந்த முறையிலே இது ஒரு ஜனநாயக விரோதமான நடவடிக்கை என்று சொல்வதுதான் சரி. ஆகவே அரசு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் ஜனநாயகத்துறையிலே மக்களுக்கு உதவியளிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். ஆனால் இப்படிப்பட்ட முறையிலே இந்த இரண்டாவது பிரிவைக் கொண்டு வந்திருப்பதை நாங்கள் எவ்வளவு தூரத்திற்கு எதிர்க்கவேண்டிய நிலைமைக்கு வருகின்றோம் என்பதை அமைச்சரவர்களும், அரசும் உணர்ந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் வேறு ஒரு பகுதி இருக்கின்றதே அதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அதோடு சேர்ந்து இந்த இரண்டாவது பிரிவும் வருகின்றது. ஆகவே இந்த சட்டத்தின் இந்தப்பிரிவை நாங்கள் எதிர்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே எங்களது பரிபூரணமான எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இரண்டாவது பகுதியை அகற்றிவிட்டு முதல் பகுதியைத் தாராளமாக நிறைவேற்றலாம். அது நல்லது, தேவையும் கூட. ஆனால் ஜனநாயகத்திற்கு விரோதமான இந்த இரண்டாவது ஷரத்தை நிறைவேற்றக் கூடாது என்று கேட்டுக் கொண்டு அந்தமாதிரியான முறையிலே அமைச்சர் அவர்களும் பதிலளிப்பார் என்று நாங்கள் எதிர்பார்த்து அமருகிறேன் வணக்கம்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் வணக்கத்துக்குரிய புரட்சித் தலைவர் அவர்களின் சார்பாக கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட திருத்தத்தின் மீது நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை உங்கள் மூலமாக இந்த அவையிலே வைக்க முன்வருகிறேன்.

பொதுவாகவே விளம்பரம் என்பது தேவைதான். ஆனால் விளம்பரத்தாலே உயர்ந்தவன் வாழ்க்கை நிரந்தரமாகாது என்பதை எல்லோரும் உணர்ந்திருப்பதில்லை. விளம்பரம் தேவை என்று சொல்லப்படுகின்ற நேரத்தில் அந்த விளம்பரத்தை எப்படியாவது பெற்றுவிட வேண்டும் என்பதற்காக குறுக்கு வழியிலே பாதை தேடக்கூடிய வகையிலே உலகம் இன்றைய தினம் மாறி கொண்டு இருக்கின்றது. ஆனால் நியாயமான தேவையான விளம்பரங்களைச் செய்வது பற்றி நாம் கவலைப் படவில்லை. அவற்றிற்கு அரசும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஊக்கம் கொடுக்கவும் தயாராக இருக்கின்றது. இன்றையதினம் நாடு எந்த நிலையிலே போய்க் கொண்டிருக்கின்றது என்று பார்த்தால் கப்பலிலே பெண்கள் வருகிறார்கள், வேண்டியவர்கள் விண்ணப்பம் போடலாம் என்று



சொன்னார்களாம். அப்போது பாட்டனும் மனுப்போட்டானாம், அப்பனும் மனுப் போட்டானாம், பேரனும் மனுப்போட்டானாம். அதற்குப்பிறகு சொன்னார்களாம் வந்த பெண்ணுக்கு ஒரு நாளைக்கு குறைந்தது 350-லிருந்து 400 ரூபாய் வரையிலேதான் செலவாகும் என்று. உடனே பாட்டனுக்கு வயதாகிவிட்டது என்றும், அப்பனுக்கு நடுத்தர வயதாகிவிட்டது என்றும், பேரனுக்கு இன்னும் திருமணவயது ஆகவில்லை என்றும் சொல்லி பெண் தேவையில்லை என்று சொல்லி விட்டார்களாம். அது போன்றுதான் இன்றைக்கு நாட்டிலே நிலைமை இருக்கின்றது.

[மாலை 6.20]

விளம்பரம் செய்யுங்கள் என்று சொன்னால், தாராளமாக செய்கிறோம் என்று சொல்லி யார் யாரைக் கெடுக்கலாம் என்ற நோக்கத்திலே, கெடுக்கும் எண்ணத்துடனேதான் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. எங்கெங்கு எந்தெந்த விளம்பரங்கள் எல்லாம் செய்யக் கூடாதோ, அந்த வகையிலே எல்லாம் விளம்பரங்களை செய்து வருவார்கள். இன்றையதினம் பள்ளிக் கூடம் இருக்கும் இடங்கள் இருக்கின்றன, மருத்துவமனைகள் நிறைய இருக்கின்றன தாய்மார்கள் கூடும் இடங்கள் இருக்கின்றன சிறு குழந்தைகள் கூடும் இடங்கள் இருக்கின்றன. இந்த இடங்களிலெல்லாம் அப்படிப்பட்ட விளம்பரங்கள் செய்யப் படுகின்றன.

நான் குறிப்பிட்ட அந்த இடங்களில் உள்ள நான்கு புறச் சுவர்களையும் பார்க்கிறபோது, உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது. நாம் எந்த ஜென்மத்திற்கு இதற்கு கழிவு தேடப் போகிறோம் என்று எண்ணத்தக்க வகையிலே நிலைமை இருக்கிறது. அது மட்டும் அல்ல அந்த சுவர்களின் ஒரு பக்கத்திலே பார்த்தால், சாயிபாபாவின் நிகழ்ச்சியைப் பற்றிய விளம்பரமாக இருக்கும், இன்னொரு பக்கத்திலே பார்த்தால் தந்தை பெரியார் அவர்களின் பொன்மொழிகளாக இருக்கும், அதற்கும் அடுத்த பக்கத்தில் கடவுள் இருப்பதும் இல்லாததும் பற்றிய பிரச்னை விளம்பரமாக செய்யப்பட்டிருக்கும். இந்த மூன்றையும் படித்து விட்டு உள்ளே செல்லக்கூடியவர்கள் அந்த நேரத்திலே எந்த முடிவிற்கும் வர முடியாத அளவிற்கு, நாட்டுமக்களை திசை திருப்பும் அளவிலே இந்த விளம்பரங்கள் யார் வீட்டு சுவற்றையோ, யார் வீட்டு காம்பவுண்டையோ, யாருடைய சொத்திலோ அசிங்கப்படுத்திக் கொண்டு காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட மோசமான நிலைமை நாட்டிலே பரவிக் கொண்டிருப்பதை, கட்டுப்படுத்தக்கூடிய முறையிலே அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை, இந்த சீர்திருத்தத்தை கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டு கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களில் சிலர் கீழ்திசை நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்தபோது, ஐப்பானிலே பார்த்தோம். அங்கே 17 அரசியல் கட்சிகள் இருக்கின்றன, பாராளுமன்றத்

திற்கு. ஒரு உறுப்பினரைக்கூட அனுப்பியிராத அரசியல் கட்சிகள் கூட இருக்கின்றன. ஆனால் அங்கே எங்கேயும் இதுபோன்ற விளம்பரங்கள் காணப்படவே இல்லை. அவர்கள் எங்கே விளம்பரம் செய்யலாம் என்று சொல்கிறார்களோ, அந்த இடங்களில் மிகப் பிரமாதமாக செய்கிறார்கள். புதிதாக ரயில் போகிறது, பஸ் போகிறது, சில இடங்களில் முக்கியமான சில நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது என்று சொன்னால், அங்கேயெல்லாம் அவர்களுடைய கொள்கையின்படி என்ன சொல்லவேண்டுமோ அந்த எண்ணங்களை பிரதிபலிக்கிற வகையிலே விளம்பரங்கள் செய்கிறார்கள். ஆனால் இங்கே பார்க்கிறபோது, வீடுகளை எல்லாம் சத்திரம் சாவடிகளைப்போல ஆக்கி, மிகப்பெரிய பண்பாட்டிற்கு உறைவிடமாக இருந்த தமிழகத்தை விளம்பரங்களினால் அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையைத்தான் பார்க்கிறோம்.

கரித்துண்டிலே, நீலக்கட்டியிலே, காவிக் கலரிலே என்று எங்கே பார்த்தாலும், சுவர்களில் எழுதி வைத்து மிகவும் அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற விளம்பரங்களை குறைக்கக் கூடிய முறையில் அரசு கவனமாக இத்தகைய சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் தேவையான விளம்பரங்கள், அது அரசியல் கட்சியாக இருந்தாலும் சரி, தொழிற்சங்கங்களாக இருந்தாலும் சரி, கலைத்துறையாக, சினிமா டிராமா போன்றவைகளுக்காக இருந்தாலும் சரி, ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இடத்தை ஒதுக்கி கொடுத்துவிட்டு, அந்தந்த ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில், அப்படி விளம்பரம் செய்வதற்கான இடங்களை ஒதுக்கி கொடுத்துவிட்டு, அந்த விளம்பரங்களுக்கு சில இடங்களில் கட்டணம் வசூலிக்கலாம். சில இடங்களில் இனாமாகக் கூட அனுமதிக்கலாம். அப்படிச் செய்தால் மிகச் சிறந்த அளவில் ஒழுக்கத்தை வளர்க்கக் கூடிய நியாயத்தை பேணக்கூடிய வகையில் அமையும் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சில விளம்பரங்களை பத்திரிகைகளிலே செய்யலாம். விளம்பரத் தாள்கள் அச்சிட்டுக் கொடுக்கலாம். ஆனால் இனாமாக கொடுப்பதில் கவனமாக இருக்க வேண்டும். எதையும் இனாமாக கொடுத்தால் அது தன் மதிப்பை இழந்து விடும். ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு மிக மிக தேவை, மண், காற்று, தண்ணீர் ஆகிய இம்மூன்றும். ஆனால் இம்மூன்றையும் மனிதனுக்கு, இயற்கை அல்லது இறைவன் இனாமாக கொடுத்திருப்பதால், அதை நாம் அவ்வளவாக மதிப்பதே இல்லை. காரணம் அவைகள் நமக்கு இனாமாக கிடைத்து விடுகின்றன. நாம் மதிப்பது எல்லாம், வாய்ப்பு, வசதி, பட்டம், பதவி, பணம், உயர்வு போன்றவைகளைத்தான்.

ஒரு தவறு நடந்துவிட்ட பிறகு தவறுகள் தொடர்ந்து நடைபெற்று, அது குற்றமாக மாறிவிட்ட பிறகு, அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும் விஷயத்தில் அதிஜாக்கிரதையாக இருக்க வேண்டும், 40 மைல் வேகத்தில் ஒரு காரில் ஒரு



பொருளை திருடிக் கொண்டு ஒருவர் போகிறார் என்று சொன்னால், அதை எடுத்துக் கொண்டு போகையில் 60 மைல் வேகத்தில் சென்றால் அந்த திருடனை துரத்திக் கொண்டு பிடிக்கப் போகிறவர்கள், 80 மைல் வேகத்தில் சென்றால்தான் பிடிக்க முடியும். பிடித்த பிறகு வேண்டுமானால் இருவரும் சேர்ந்து 40 மைல் வேகத்தில் கூட போகலாம்.

ஆகவே அதைப் பிடித்த பிறகு அதற்கப்புறம் இருவரும் சேர்ந்து நாற்பது மைல்வேகத்தில் போகலாம் என்றால் சட்டம் என்ன சொல்கிறதோ, நியாயம் என்ன சொல்கிறதோ, உலகம் என்ன சொல்கிறதோ அந்த நிலையில் செல்வதற்கு யாருக்கும் பிரச்சனை இல்லை. ஆகவே இது போன்று இன்று நாட்டில் நடந்து விட்ட அலங்கோலக் காட்சிகளை ஒழுங்குபடுத்த அறுபது மைல் வேகத்தில், துரித வேகத்தில் அடித்துக் கொண்டு சென்றால் எண்பது மைல் வேகத்தில் சென்றுதான் பிடிக்கமுடியும் என்ற சூழ்நிலை வரும்போது இதுபோன்ற சட்டங்கள் வருவதன் அவசியம் ஏற்படுகிறது என்பதை அனைவரும் உணர வேண்டும். ஆகவே இதுபோன்ற சட்டங்கள் இன்று நாட்டுக்கு மிகமிகத் தேவை என்று சொல்லி வரவேற்கிறேன்.

*திரு. செ.சிவசாமி : பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, தமிழ்நாடு 1981-ம் ஆண்டு மாவட்டக் காவல்—சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டம் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் முன்பகுதியில், 1859ம் ஆண்டு சட்டத்தில் காவல் படையினர் அமைப்பு, சம்பளம், ஏனைய பணி நிபந்தனைகள், ஆகியவற்றை முறைப்படுத்த காவல் துறை சார்நிலை அதிகாரி வேலையிலிருந்து நீக்குதல் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்குதல் அல்லது பதவிக் குறைப்பு செய்தல் ஆகியவற்றுக்கு இனிவரும் ஒரு நாளிலிருந்து அல்லது கடந்த ஒரு நாளிலிருந்து செயல் வடிவம் கொடுத்து விதிகளை இயற்ற அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்க இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்றுசொல்லப்படுகிறது. இதை எல்லோரும் வரவேற்கிறோம். எந்த அளவிற்கு சீர்திருத்த முறையில் அவர்களுக்கு நன்மை செய்ய முடியுமோ அந்த அளவிற்கு அவர்களுக்கு, அவர்களை பழி வாங்காமல் என்னென்ன நன்மைகள் செய்யமுடியுமோ, எந்தளவிற்கு மேலும் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கமுடியுமோ அவைகளைச் செய்வதில் யாருக்கும் ஆட்சேபணையில்லை. ஆனால் பிற்பகுதியில், எந்த ஆண்டு அமைக்கப்பட்டது என்பதில் 1859-ல் ஒரு திருத்தம், 1888-ல் ஒரு திருத்தம் என்றிருக்கிறது.

நாங்கள் எல்லாம் தொடர்ச்சியாக கடந்த தேர்தல் காலத்தில் சொல்லிக்கொண்டு வந்தோம். போலீஸில் இருக்கக் கூடிய மிகப் பெரிய ஆபத்தான சட்டம் முக்காடு சட்டம் என்று ஒன்றிருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று எல்லாக் கட்சிக்காரர்களும், அறு கட்சிக் கூட்டணிக்காரர்களும் அத்தனை பேர்களும் முறையாக சொல்லிவந்தோம். ஆனால் இன்றுவரை திருத்துவதாக இல்லை. அதைத் திருத்துவதற்கு வேண்டிய ஏற்பாட்டினைச் செய்தால் எல்லோரும் அதை உள்ளபடி

[திரு. செ. சிவசாமி] [1981 மே 13

வரவேற்போம். நாங்களும் வரவேற்போம், நீங்களும் வரவேற்பீர்கள். எல்லோரும் வரவேற்போம். அதனால் மக்களுக்கு நன்மை கிடைக்கும். அது குறிப்பாக விவசாய மக்களுக்கு மிக மிகத் தேவை, என்று பல முறை இந்தச் சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிற்பட்ட பகுதியில் வரக்கூடிய இந்தச் சட்டத்தை கடுமையாகக் கண்டித்து கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எதிர்க்கவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். ஏனென்றால் ரூ. 150–க்கு மேற்படாத அபராதத் தொகை அல்லது மூன்றுமாதம் வரை சிறை தண்டனை விதித்து தண்டிக்க வேண்டும் என்று வரை இருக்கிறது. அதை மாற்றி ரூ. 500 அபராதம் போடலாமா என்று ஒரு திருத்தம் கொண்டுவரப்படுகிறது. இது தேவைதானா, என்ன காரணத்தினால் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது என்றால் இப்போது சொல்கிறார்கள் போஸ்டர்கள் ஒட்டுவது, சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும், அதன் காரணமாக பல சிக்கல்கள் ஏற்படுகின்றன, சமுதாயச் சீர்திருத்தம் கொண்டு வர வேண்டுமானால் இப்படிப்பட்ட ஒரு திருத்தம் கொண்டு வந்தால்தான் நல்லதொரு அமைப்பு ஏற்படமுடியும் என்றெல்லாம் எனக்கு முன் பேசிய நண்பர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் உண்மையில் இது யாருக்கு உபயோகப்படும் என்றால் வசதிக்கார ஆளும்கட்சிக்காரர்களுக்குத்தான். மற்றக் கட்சிக்காரர்களுக்கு சுவற்றில் எழுதமுடியாத நிலை ஏற்படும். ஏனெனில் தேர்தல் காலத்தில் எந்தளவிற்கு அதிகம்செலவு செய்ய முடியுமோ அந்தளவிற்கு எங்கு பார்த்தாலும் கம்பங்கள் ஊன்றி அதில் போஸ்டர்கள் ஒட்ட முடியும். சுவற்றில் எழுத முடியாது. கடந்த காலங்களில் பார்த்தால் எங்கு வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எழுதுவார்கள் சுவற்றில். அது நீண்டகாலமாக நடைமுறையில் இருந்துவருகிற பழக்கம். நான் கூட இரண்டு நாட்களுக்குமுன் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் வீட்டிற்குச் சென்றேன். அவர்கள் வீட்டுக்குச் செல்லக் கூடிய நேரத்தில் கடந்த தேர்தல் காலத்தில் அந்தச் சுவற்றில் எழுதப்பட்டிருந்த அந்தப் படங்களையெல்லாம் பார்த்தேன்.

[மாலை 6.30]

இரண்டாவது மாடியில் முதல்வர் அவர்கள் படத்தை கேலிச் சித்திரமாகப் போடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. முன்னாள் தலைவர் அவர்கள் படத்தையும் கேலிச் சித்திரமாகப் போடப்பட்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு இடத்திலும் எழுதப்பட்டிருக்கின்றது. இப்படி பல விதமான படங்கள் இன்னும் அழிக்கப்படாத நிலையிலேயே இருக்கின்றன. அதையெல்லாம் யார் அழிப்பது, யார்மீது இந்தச் சட்டத்தைப் போடுவது என்பதையெல்லாம் சிந்திக்க வேண்டும்.

அது மட்டுமல்ல. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மொத்தமாக எடுத்துக் கொண்டு பார்க்கால், நம்முடைய அஸ்டலைப் பார்க்கால் எங்கெங்க



1981 மே 13] [திரு. செ. சிவசாமி]

களில் எல்லாம் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. ஆஸ்டல் மட்டுமல்ல. கலைவாணர் அரங்கத்தின் சுற்றுச் சுவர்களில் இடமே கிடையாது என்ற அளவிற்கு பலவிதமான போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. யார் மீது இந்தச் சட்டத்தை அமுல் படுத்துவது? யார் மீது அபராதம் போடுவது? யார் அதைச் செய்திருக்கிறார்கள்? தனக்குத் தானே அபராதம் போட்டுக் கொள்ளக்கூடிய நிலைமை வருமா? என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்படி ஒரு சட்டத்தைப் போடுவதன் மூலம், கொண்டு வருவதன் மூலம் ஆளுங் கட்சியிலே உள்ளவர்களுக்கு இது உபயோகமாக இருக்கும். எதிர்க் கட்சிகளைச் சார்ந்த அத்தனை பேர்களையும் கட்சியிலே உள்ள முக்கியஸ்தர்கள் மீது கேஸ் போட்டு அவர்களை உள்ளே தள்ள சந்தர்ப்பம் இந்தச் சட்டத்தின்மூலம் உண்டாகிறது. இன்று இந்தச் சட்டம் அதை உண்டாக்குகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தச் சட்டம் கொண்டுவருவதினால், சர்வசாதாரணமாக கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த தொழிலாளர்களும், அந்த தொழிற் சங்கத்திலே தலைமை தாங்கும் கட்சிகளும் பாதிக்கப்படுவார்கள் என்ற முறையிலே, நாங்கள் இதைக் கடுமையாக இந்தச் சட்ட முன்வடிவை எதிர்க்கிறோம். வணக்கம்.

*திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாக மாண்புமிகு சட்ட–கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை வரவேற்று ஒருசில கருத்துக்களை இந்த அவைமுன் வைக்க விழைகிறேன்.

போஸ்டர்கள் ஒட்டுவதற்கு வரையறுக்கப்படுகின்ற வகையில் பொது இடங்களில் விளம்பரப்படுத்துவதைக் கட்டுப்படுத்துகின்ற முறையில் ஒரு சில விதிகளை விதித்து, அதை மீறுகின்றவர்கள் தண்டனைக்குரியவர்கள் ஆவார்கள் என்ற ரீதியில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், அந்தக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் இது ஏதோ ஏனைய கட்சிகளைப் பாதிப்பதாகவும் சொல்லக் கூடிய உணர்வை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு, என்னுடைய தாழ்மையான கருத்து தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், தேர்தல் காலம் என்பது தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் முடியும் வரை சுவர்களிலே எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களும் எழுதிக் கொள்ளலாம் என்ற திருத்தத்தை ஏற்படுத்தி அல்லது ஒரு சட்டத்தை இடைக்காலத்தில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் பணிவோடு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இது அரசியல் கட்சிகளுக்கு மாத்திரமல்ல. இந்த நிலையை உருவாக்கித் தருகின்ற நேரத்தில் தேர்தல் காலத்தில், நாமினேஷன் பைல் செய்வதிலே இருந்து தேர்தல்

முடிகின்ற வரையில் இருந்தல் நியாயமாக இருக்கும் என்பது என்னுடைய சொந்த கருத்து என்பதையும் நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தனிப்பட்ட முறையில் இன்று விளம்பர போர்டுகளை மாநகராட்சியிடமிருந்தும், நகராட்சியிடமிருந்தும், பேரூராட்சியிடமிருந்தும் வசதி படைத்தவர்கள். மவுண்ட்ரோடில் இருப்பதுபோல், பல இடங்களில் பல விளம்பர போர்டுகளை குறைந்த வாடகையில் பெற்று, பெரிய தொழிதிபர்களாக, பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதிக்கின்ற நிலை, மாதக்கணக்கிலே இருக்கிறது என்பதையும், மாநகராட்சியோ நகராட்சியோ அப்பேர்பட்ட விளம்பரபோர்டுகளை வைக்கலாம், எனவே, முக்கியமான இடங்களை மையகப்படுத்தி அப்படிப்பட்ட மையங்களிலே இந்த மாதிரியான விளம்பர போர்டுகளை வைப்பதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

சுவரில் எழுதப்படுவது குற்றம் என்று கூறாவிட்டாலும், சுவரின் சொந்தக்காரர்கள் அனுமதித்தால், அதில் அரசியல் கட்சிகளின் ஸ்லோகங்களை எழுதுகின்ற நிலை நாளடைவில் நாட்டிலே இருக்கின்ற அரசியல் கட்சிகள் ஏற்படுத்தித் தரும் என்பதையும் சட்ட ரீதியாக ஏற்படுத்தித் தருகின்ற சூழ்நிலை உருவாகுமானால் அல்லது சட்டப்படி அனுமதிக்கக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தினால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்களும் பயன்படும் அளவில் இந்தச் சட்டத்திலே எதுவும் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று கிராமப்புறங்களிலும் அல்லது நகரப்புறங்களிலும் விளம்பரப்படுத்துகின்ற முறையில், அது அண்ணா சிலையாக இருந்தாலும், தந்தை பெரியார சிலையாக இருந்தாலும், எல்லா சிலைகளின் கீழே அரசியல் கட்சிகள் போஸ்டர்கள் ஒட்டுகின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். மிகவும் ஆபாசமான சினிமாப் படங்களை மிகவும் விலை மதிக்கமுடியாத அந்தத் தியாகத் தலைவர்களுடைய உருவங்களுக்குக் கீழே ஒட்டுகிறதை நாம் பார்க்கிறோம். பேருந்துகளிலே தனிப்பட்ட நபர்கள் விளம்பரப்படுத்து என்பது இன்று நாம் நாடெங்கும் பார்க்கின்ற ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. இதற்கு எப்படி நாம் சட்டம் போட்டிருக்கிறோமோ, திருத்தம் கொண்டு வந்திருக்கிறோமோ இதை விட கடுமையாக பேருந்துகளில் விளம்பரப் படுத்துகிறவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். பேருந்துகளில் விளம்பரப்படுத்துவது என்ற முறை பல்வேறு விபத்துக்களை ஏற்படுத்துகிறது என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுப்புற சுவர்களில் விளம்பர மையங்களாக இருக்கிற இடங்களில் போக்கு வரத்து நெரிசல் இருக்கிற இடங்களில், மக்கள் போய் வருகிற இடங்களில் பால் உணர்வுகளை



தூண்டுகிற படங்கள், சினிமாப் படங்கள் வைக்கிறார்கள். பள்ளிகளுக்கு முன்னால் வைக்கும்போது, கோவில் முன்னால் வைக்கும்போது அது சமுதாயத்தில் மிகப் பெரிய கேடுகளை ஏற்படுத்துகிறது என்பதையும் நான் பணிவோடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். வெளிநாடுகளில் விளம்பரப்படுத்துவதற்கென்று ஒரு சில முறைகளை வைத்திருக்கிறார்கள். அந்த முறை உலக தமிழ் மாநாட்டின் மலரில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கையாண்டிருக்கிறார்கள். வளர்ந்து வருகிற ஒரு நாடு ஜன நெருக்கத்தில் பெருகி வருகிற போது உலக தமிழ் மாநாட்டின் மலரில் விளம்பரத்தை அந்த முறையில் பயன்படுத்துகிறார்களே. கலாச்சாரத்தை, பண்பாடு, நாகரீகம், வீரம் நம்முடைய மூதாதையர்களின் வரலாறு இவைகளை கூறுகின்ற விதத்தில் வரலாற்றிற்கும், அந்த நாகரீகத்திற்கும், வீரத்திற்கும், பண்பாட்டிற்கும் மைய இடம் கொடுத்து, இதை விளம்பரப்படுத்தியது யார் என்று சொல்வதைப் போல கீழே சிறிய எழுத்துக்களில் விளம்பரப்படுத்தி இருப்பதை ஒரு புதிய உத்வேகமாக இருக்கிறது என்பதையும் அறியமுடிகிறது. இந்த முறை மிகப் பெரிய மைதானங்களில், மக்கள் கூடுகிற இடங்களில் விளம்பரப்படுத்துகிற முறையை அரசு கையாள வேண்டுமென்று என்னுடைய விருப்பத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோப்பு கம்பெனி விளம்பரமாக இருந்தாலும், பௌடர் கம்பெனி விளம்பரமாக இருந்தாலும் அல்லது உணவுப் பொருள்கள் விளம்பரமாக இருந்தாலும் அழகிய பெண்களைப் போட்டு, ஆடை அலங்காரங்களை நிலை நிறுத்துகிற விதத்தில் ஆபாசத்திற்கு முதல் இடம் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், ஆபாசமான படங்களை பார்க்கிற போது விபத்துகள் ஏற்படுகின்றன என்பதையும். விரசமான எண்ணங்கள் ஏற்படுகின்றன என்பதையும் புரிந்து, பண்பாட்டையும் கலாசாரத்தையும் உருவாக்குகிற விதத்தில் விளம்பரங்கள் அமைய வேண்டுமென்று ஒரு சட்டத்தையும், சட்டமன்றத்தில் கொண்டு வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

சோப்பு கம்பெனி, மிகப் பெரிய விளம்பரம் உள்ள கம்பெனியாக விளம்பரம் கொடுக்கிறது என்று சொன்னால் நம்முடைய பண்பாட்டை, கலாசாரத்தை நிலைநாட்டுகிற முறையிலே தொல்காப்பியத்திலே, கலிங்கத்து பரணியிலே, புறநானூறிலே ஒரு வீர வரியைப் போட்டு அந்த சோப்பு சன்லைட் சோப் அல்லது லக்ஸ் சோப் என்று சிறிய எழுத்துகளிலே போடுகிற முறையை கொண்டு வரவேண்டும். நம்முடைய கலாசாரத்தை, பண்பாட்டை நிலைநிறுத்தி, இன உணர்வுகளை மையகப்படுத்தி மக்களுக்கு காட்டுகிற விதத்தில் அமைய வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த திருத்தத்தை வரவேற்று விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1971 ஆம் ஆண்டு அக்டோபரில் மலபார் ஸ்பெஷல் போலீஸ் பட்டாலியன் என்பதையும், இந்த

ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீஸ் பட்டாலியன் என்பதையும் ஒருங்கிணைந்து தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ் பட்டாலியன் என ஒரு பெயரை வைத்து ஒருங்கிணைத்த பிறகு தமிழ்நாடு டிஸ்ட்ரிக்ட் போலீஸ் ஆக்ட், மதராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட் என்று இரண்டு சட்டங்களுக்கு உட்பட்டு, எடுக்கப்படுகிற நடவடிக்கைகளிலே ரெட்ராஸ் பெக்ட்டிவ் எஃபெக்ட் 1971ஆம் ஆண்டுவரை இல்லாத காரணத்தால் அவைகளுக்கு ரெட்ராஸ்பெக்ட்டிவ் எஃபெக்ட் கொடுக்க வேண்டும் என்ற நோக்கோடு தான் இந்த சட்ட முன்வடிவினுடைய முன் பகுதி கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக காவல் துறையிலே இருக்கிற பணியாளர்களுடைய சம்பளம் முதலியனவும், ஒழுங்கு நடவடிக்கைகள் முதலியனவும் ரெட்ராஸ்பெக்ட்டிவ் எபெக்ட் கொடுக்க வேண்டிய நிலையில் அது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல முன்பெல்லாம் மாஜிஸ்ட்ரேட் என்றால் அது ஒருங்கிணைந்த நிலையில் இருந்தது. தற்போது 1–4–71-க்கு பிறகு Under the new Criminal Procedure Code மாஜிஸ்ட்ரேட்டைப் பொறுத்தவரையில் ஸ்டேட்சுட்டுவரி இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கிற காரணமாக, குறிப்பாக எக்சிகியூட்டிவ் மாஜிஸ்ட்ரேட் என்று காவல்துறையை சார்ந்தவர்கள் சொல்ல வேண்டிய நிலையில் அந்த திருத்தத்தை தற்போது இந்த சட்ட முன்வடிவின் மூலமாக கொண்டு வரப்

[மாலை 6.40]

பட்டிருக்கிறது. அதைப்போலவே சென்னை கமிஷனருக்கும் எக்சிகியூடிவ் மாஜிஸ்ட்ரேட் என்ற பெயர் கொடுக்கப்பட வேண்டுமென்று அதுவும் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இன்னொன்று, ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்திலே 24-வது பிரிவு பி.யில் "Any Police officer may be arrest without warrant any person committing in his view any offence made punishable by this Act" என்று இருந்தது. லா கமிஷன் Criminal Procedure Code of 1898 என்பதைப்பற்றி கருத்து தெரிவிக்கிறபோது in his view என்பது in his opinion எனப் பொருள்படும் என்ற காரணத்தினால் அதை மாற்ற வேண்டுமென்ற காரணத்தினால் in his opinion என்பதை in his presence என திருத்திக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதைப்போலவே Cruelty to animals under Section 53 of the Criminal Procedure Code இல் in his presence என்ற முறையிலே மாற்றம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டாவது பிரிவைப் பற்றி பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் ரமணி அவர்களும், சிவசாமி அவர்களும் இரண்டாவது பிரிவு மக்கள் உரிமையைப் பாதிக்கக்கூடிய பிரிவாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே சட்டத்திலே தெளிவாக இருக்கிறது. இல்லாத சட்டமில்லை. அது போன்றவைகள் குற்றங்கள் என்று கருதப்பட்டு குற்றங்களுக்குத் தண்டனை என்ன என்பதை குறிப்பிடுகிறபோது "Whoever in any public place commit any of the following offence shall be liable for conviction to fine not exceeding Rs. 250/- or to imprisonment which may extend to 3 months" என்று இருக்கிறது. ஆனால் தவறுகளை



இழைக்கிறபோது உருக்குலைக்கிறபோது அந்த உருக்குலைப்புக்கு நட்ட ஈடு அதிகப்படியாக 500 ரூபாய் வரை "It is left to the discretion of the Court. It may be even one rupee or two rupees according to the Commission of the offence" என்ற அடிப்படையிலே வரவேண்டுமென்ற நோக்கத்தோடு இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரமணி அவர்களும், சிவசாமி அவர்களும் பேசுகின்றபோது நோட்டீஸ் போன்றவற்றை எல்லாம் ஒட்டவும் கூடாது, எதையும் எழுதவும் கூடாது என்ற தடை ஏற்படுகிறது என்று சொன்னார்கள். ஒட்டலாம், எழுதலாம், ஆனால் அனுமதியோடுதான் செய்ய வேண்டும்; அனுமதியில்லாமல் செய்கிறபோதுதான் தண்டனை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அனுமதியில்லாமல் செய்கிறபோது தான் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பல வீட்டுக்குச் சொந்தக்காரர்கள்சுவற்றிலே தாரிலே எழுதிவிட்டால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி சொன்னதைப்போன்று எப்போதோ எழுதப்பட்டதை இன்னும் அழிக்க முடியவில்லை, முடியாத நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுடைய கூற்றிலிருந்து எழுகின்ற விளைவே அவர்கள் அழிப்பதற்குக் கூட கையிலே காசு இல்லாத நிலையில் இருக்கின்றார்கள் என்பதுதான் பொருள். ஆகவே சுவற்றிலே எழுதுகின்றவர்கள், போஸ்டர்கள் ஒட்டுகின்றவர்கள், பழுது ஏற்படுத்தினால்——அப்படி அவர்கள் செய்வதாலே பலன்களைப் பெறுகிறார்கள்——அதனால் பிரதிபலனைப் பெறுகின்ற முறையிலே சுவற்றை உருக்குலைக்கிறபோது அதைச் செம்மைப்படுத்தித் தரவேண்டுமென்ற பொறுப்பும் வேண்டும் என்ற முறையிலே தான் இருக்கிறது. சுவற்றை உருக்குலைத்துவிட்டால், பாழ்படுத்திவிட்டால் அதை மீண்டும் செம்மைப்படுத்தித்தரவேண்டும். உரிமையாளர்களின் அனுமதியைப் பெற்று செய்கிறவர்கள் இன்றும் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றிப் பிரச்னையில்லை, ஆனால் அனுமதியில்லாமல் செய்கிறார்கள்.....

திரு. கு. ரமணி : அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அனுமதியைப் பெற்றுச் செய்யலாம் என்று. அனுமதியைப் பெற்றுச் செய்யலாம் என்றால் ஒரு அரசியல் கட்சிவாரியாக அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அவர்களுக்கு இடம் கொடுத்து செய்துவிடலாம். ஆனால் இத்தனை ஜனங்களுக்கு மத்தியிலே அரசியல் கட்சி கொள்கை வேறுபாடு உள்ளவர்கள் ஒரு கட்சிக்காரர் அந்த இடத்திலே செய்ய முடியாத சூழ்நிலை உருவாகாதா ? அப்படி ஏற்பட்டால் ஏற்படக்கூடிய விளைவுகளைப்பற்றி அரசு சிந்தித்ததா ? அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன கருதியிருக்கிறார்கள் என்பதை தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அரசியல் கட்சிக்காரர்கள் இனாமாக அனுமதி பெற்றுச் செய்தால் அது வேறு. ஆனால் அனுமதி பெறாமல் செய்தால் அதற்காக ஏற்படுகின்ற செலவை நட்ட ஈடு என்ற முறையிலே கொடுக்கிறபோது கொள்கை குறுக்கிடாது. ஒரு பெரிய விளம்பரத்தைத் தொடர்ந்து செய்து

வருமானம் பெறுகிறபோது அரசியல் அங்கே குறுக்கே நிற்காது. வருமானம் வருகிறபோது இந்தப் பிரச்னைகள் வராது. முன்னாலே இருந்ததைவிட இன்னொரு மாற்றம் என்ற முறையிலே Whoever என்று இருந்ததை மாற்றி "Whoever whether by himself or by any other person on his behalf" என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனுடைய நோக்கத்தை நான் ஏற்கெனவே வெளியிட்டதைப்போல் அனுமதி பெற்றாக வேண்டும்; அனுமதி பெறாமல் செய்தால் சட்டப்படி குற்றம் என்று ஆகிறபோது திரு. சிவசாமி அவர்கள் சொன்னதைப் போல் பல காலமாக அழிக்க முடியாத அளவிற்கு அவர்கள் இருக்கின்றார்கள் என்றால் அந்த வறுமையிலே இருக்கின்றவர்களுக்கெல்லாம் கூட அப்படிப்பட்ட பிரச்னை எழக்கூடாது என்பதற்காகத்தான், தவறைச் செய்துவிட்டுப் பலன் அடைகின்றவர்கள் பலனைப் பெறுகின்றபொழுது அந்தத் தவறைத் திருத்துவதற்கு அந்த செலவையும், நஷ்டயீட்டையும் ஏற்க வேண்டுமென்ற நோக்கோடுதான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டுமாவட்டக் காவல்-சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண். 33/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2,3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே,
"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மாவட்டக் காவல்-சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1981)" நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.





(ஏ) பட்டா பாஸ்புத்தகம் வழங்கல் சட்ட முன்வடிவு, 1981 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1981)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பட்டா பாஸ் புத்தகம் வழங்கல் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1981) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டமன்றப்பேரவை உறுப்பினர்களும், 8 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க, சட்டமன்ற மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக் குழுவில், கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்றத் தெரிந்தெடுக்கப் பெற வேண்டும்:—

1 திரு. இரெ. இராசமாணிக்கம்
2 திரு. ஏ.டி. குலசேகர்
3 திரு. எஸ். ஆண்டித்தேவர்
4 திரு. என். வரதராஜன்
5 திரு. சோ. அழகர்சாமி
6 திருமதி தா. இராசாம்பாள்
7 திரு. என். எஸ். வி. சித்தன்
8 திரு. சி. வி. வேலப்பன்
9 திரு. ந. குலசேகரபாண்டியன்
10 திரு. வி. வி. சுவாமிநாதன்
11 திரு. கு. அ. செங்கோட்டையன்
12 திரு. இரா. முத்தையா
13 திரு. ஆர். தவசி
14 டாக்டர் கே. சமரசம்
15 திரு. எம். ஆர். கோவேந்தன்
16 திரு. ப. செ. சென்னிமலை
என்கிற கந்தசாமி

தீர்மானம் பேரவை முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

அரசினர் தனித் தீர்மானங்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடன் வரம்பு—மாநில அரசின் செயற் குறிப்பு.

மாண்புமிகு திரு. ச. இராச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தனித்தீர்மானத்தை மொழிகிறேன்.

"1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65ஆவது பிரிவின் (1) உட்பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக நானூறு கோடி ரூபாய் இருக்கலாம் என்று மேற்படிச் சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப் பெறலாம்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

ஆ நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப் பெறும் வரைவு அறிக்கை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (பி) பகுதியின் கீழ் பிறப்பிக்கப்படவிருக்கும் பின்வரும் வரைவு அறிவிக்கை மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் கூறியுள்ளவாறு ஏற்பளிக்கப்படுவதாகுக".

வரைவு அறிவிக்கை.

தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (பி) பகுதியில் வழங்கியுள்ள அதிகாரங்களால் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழே விவர அட்டவணையில் (1) பத்தியில் உள்ள பதிவுகளில் குறிப்பிடப்பட்ட நகர்ப்புறக் கூட்டுப் பகுதியில் சேர்க்கப்பட்டு உள்ளவையும். அதன் (2) பத்தியில் குறிப்பிடப்பட்டவையுமான பகுதிகளில் இந்த அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து, இச்சட்டம் செயலுக்கு வரும் என இதனால் கட்டளையிடுகிறார்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின்ய இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (14-5-1981 ஆம் தேதி) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6-49 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

278. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1969–70 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள். [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (எ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்).

279. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1970–71 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள். [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (எ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்).

280. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1971–1972 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (எ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்).

281. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1972–73 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள். [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17 1961) 125 (2) (எ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்).

282. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1973-74 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள். [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (எ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்).

283. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1974–75 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள். [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (எ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்).

284. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1980 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (எ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

285. தஞ்சாவூர் மாவட்டம், மணல்மேடு காவல் நிலையத்தில் வைக்கப் பெற்றிருந்த மாரிமுத்து 13—9—1978 ஆம் தேதியன்று இறந்தது பற்றி விசாரணை செய்வதற்காக திரு. ஆர். நடராசன், ஐ.ஏ.எஸ். அவர்களைக் கொண்டு நியமிக்கப் பெற்ற தனிநபர் விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) (3) (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது],

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

211 நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் வேலை நிலையைக் கண்டறிய அமைத்த (அரசாணை எண். ஆ.டி.1108, தேதி 21.5.1976) குழுவின் பரிந்துரைகள்.

இணைப்பு I.

(40-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 1092-க்கான விடையைக் காண்க).

(அ) சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ். பயிற்சி கொடுக்கும் முன்னோடி பயிற்சி நிலையத்தில் (P.E.T.C.) 1966 67 ஆம் ஆண்டு முதல் 1980-81 ஆம் ஆண்டு முடிய சேர்க்கப்பட்ட மாணவர்களின் விவரம் கீழ் வருமாறு:—

| ஆண்டு. | | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1966-67 | | 42 |
| 1967-68 | | 44 |
| 1968-69 | | 27 |
| 1969-70 | | 27 |
| 1970-71 | | 25 |
| 1971-72 | | 26 |
| 1972-73 | | 41 |
| 1973-74 | | 28 |
| 1974-75 | | 37 |
| 1975-76 | | 45 |
| 1976-77 | | 40 |
| 1977-78 | | 42 |
| 1978-79 | | |
| முதல் நிலை | | 46 |
| இறுதி | | 30 |
| 1979-80 | முதல் நிலை | 43 |
| | இறுதி | 19 |
| 1980-81 | | |
| முதல் நிலை | | 53 |

(ஆ) ஆம். இப்பயிற்சி நிலையத்திற்கான ஒவ்வொரு வருடத்திய முழு ஒதுக்கீட்டின் எண்ணிக்கை 60. ஆனால் இப்பயிற்சி நிலையத்தில் வகுப்பு அறை, தங்கும் அறை, மற்றும் சுற்றுப்புற சுகாதார வசதிகள் போதியனவாக இல்லாததால் ஒவ்வொரு ஆண்டும் (1979-80 ஆம் ஆண்டு 14 ஆவது தொகுப்பு வரை) சுமார் 45 மாணவர்கள்தான் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1981 மே 14

வைகாசி 1, துன்மதி-திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவை தலைவர்:

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

தாம் வாழும் வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழ்கின்றவர்; புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழாதவர்.

### 1. வினாக்கள்—விடைகள்

அ. உடுக்குறியிட்ட வினாக்கள்

6-வது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழக மின்துறைக்கென்று ஒதுக்கப்பட்ட தொகை

*வினா எண். 1027—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 6-வது ஐந்தாண்டு திட்ட ஒதுக்கீட்டில் தமிழகத்திற்கு மின்துறைக்கென்று ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) தற்போது மின்வெட்டை முழுமையாக நீக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்:—(அ) 6-வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் தமிழகத்திற்கு மின்துறைக்கென்று ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1022.80 கோடி

(ஆ) தற்பொழுதுள்ள மின்வெட்டை முழுமையாக நீக்க அதிக அளவு மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களை மின்வாரியம் தீட்டி வருகின்றது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மின் வெட்டை முழுமையாக நீக்குவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்சார உற்பத்தியிலே அதிகக் கவனம் செலுத்தியிருப்பது உள்ளபடியே வரவேற்கத் தக்க ஒன்றாகும். நம்முடைய அரசு மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக என்ன, என்ன திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே நடைமுறையிலே இருக்கக்கூடிய திட்டங்களை மின் வாரிய நிதி நிலை அறிக்கையின்பொழுது விரிவாக நான் தெரிவித்திருக்கிறேன். அவை போக இன்னும் சுமார் 2,180 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் அளவுக்கு அனல் மின் நிலையங்கள் அமைப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. தூத்துக்குடியில் மேலும் 710 மெகாவாட்; மேட்டூர் அனல் மின் திட்டத்தில் 210 மெகாவாட், வட சென்னையில் 630 மெகாவாட்; எண்ணூரில் 420 மெகாவாட்— அதாவது, இரண்டு 210 மெகாவாட்; பேசின் பிரிட்ஜில் 110 மெகாவாட் ஸ்டேஷனுக்கு நாம் ஏற்கனவே திட்டம் அனுப்பியிருக்கிறோம். அதையும் 210 மெகாவாட் ஸ்டேஷனாக மாற்றுவதென அரசு தீர்மானித்திருக்கிறது. ஆகையால் சுமார் 2,180 மெகாவாட் அளவிற்குக் கூடுதல் மின் உற்பத்தித் திட்டங்களை, அனல் மின் உற்பத்தித் திட்டங்களாகச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்திக்காக மட்டும் செலவுக்கு, நம்முடைய அரசு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறது என்ற விவரத்தையும் அந்தத் தொகை முந்தைய அரசு ஒதுக்கியதைவிட எந்த அளவுக்கு அதிகம் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த ரூ.1,022.8 கோடியில் ரூ. 572.3 கோடி மின்சார உற்பத்திக்கு— ஜெனரேஷனுக்கு என்று இந்த ஐந்தாண்டுகளில் செலவிடுவதாக இருக்கின்றோம். 1969—74, அதாவது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பார்க்கிற பொழுது, ரூ. 7 கோடிதான் மின் உற்பத்திக்காகச்செலவு செய்தார்கள்.

குமரி மாவட்ட கடலோர பகுதிகளில் மின் விளக்கு கம்பங்களை மரத்தினால் அமைத்தல்.

*வினா எண் 1028—திரு. டி. மணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் கடலோர பகுதிகளிலுள்ள மின் விளக்குக் கம்பங்கள் சிமெண்டாலும், இரும்பாலும் அமைக்கப்படுவதால் அக்கம்பங்கள் உப்புக் காற்றுப்பட்டு விரைவில் பழுதடைந்து விடுவதை தடுக்க அப்பகுதியில் மரத்தால் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அது இந்த ஆண்டு நடைமுறைக்கு வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமாரி மாவட்டத்திலே, குறிப்பாக, நம்முடைய எல்லைப் பகுதியிலே நீரே டியிருந்து குமரி முனை வரையிலும், கடற்கரை பக்கத்திலேயிருக்கிற மின்கம்பங்கள் உப்புக் காற்று படுவதால் பழுதடைந்து, போதுமான வெளிச்சம் தருவதில்லை. ஆகையால் மொத்தமாக அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னாலும் ஏற்கனவே சுற்றுலாப் பகுதியாக இருக்கிற குமரி முனையிலும், பகவதி அம்மன் கோயிலுக்குப் பின்னால் இருக்கிற அந்தக் கம்பங்களிலும் விளக்குகள் எரிவதில்லை. எனவே, அந்தப் பகுதிகளிலாவது மரக் கம்பங்களை நட்டு, அலுமினியத்தால் செய்து போடப்பட்டிருக்கிற உறுப்புகளை மாற்றி, நிரந்தரமாக விளக்கு எரியக் கூடிய ஏற்பாட்டைச் செய்ய, மறுபரிசீலனை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கடலோரப் பகுதியில் ஆர். சி. சி. கம்பங்களுக்குப் பதிலாக மரக் கம்பங்களைப் பயன்படுத்துவது என்பது நம்மைப் பொறுத்த வரையிலும் எளிதான காரியம் அல்ல. கேரளாவிலே இருப்பது போல் நமக்கு மரக் கம்பங்கள் கிடைப்பதில்லை. மேலும் ஆர்.சி.சி. கம்பங்கள் நல்ல முறையிலேதான் இருந்து வருகின்றன. விளக்கு எரியாததற்குக் கம்பங்கள் மட்டும் காரணம் அல்ல. அந்தக் கம்பங்களிலே ஏற்படுகிற ஈரப் பசை எல்லாம் கூட காரணமாக இருக்கக்கூடும். அவைகளையெல்லாம் தகுந்த பெயின்ட் அடிப்பதன்மூலம், தகுந்த பராமரிப்பின்மூலம் விளக்குகளை எரிய வைப்பதுதான் பொருத்தமாக இருக்குமே தவிர, கம்பங்களை மாற்றுவது என்பது நடைமுறைக்கு ஏற்றதல்ல.

திரு. டி. மணி: தலைவரவர்களே, கடற்கரை முழுவதும் உள்ள கம்பங்களை மாற்றச் சொல்லவில்லை. குறிப்பாக நம்முடைய குமரி முனையிலே, சுற்றுலா கேந்திரமாக இருக்கக் கூடிய குமரி முனையிலே இப்படிப்பட்ட ஏற்பாட்டினை செய்வார்களா? ஏனென்றால் இரண்டு மாதங்களுக்கு முன்பு கூட அந்தப் பகவதி அம்மன் கோவில் பின் பகுதியில் ஒரு விளக்குகூட எரியாத நிலை இருந்தது. கேட்டால் இதைத்தான் சொல்லுகிறார்கள். உப்புக் காற்று பட்டு அதன் காரணமாகப் பழுதடைந்து விட்டது என்று. ஆகவே, அந்தப் பகுதியிலேயாவது தேக்குமரகம்பங்களை நட்டுஎன்னுடைய மாவட்டத்தில் நிறைய தேக்கு மரங்கள் கிடைக்கின்றன. அப்படி அந்த மரங்களைப் பயன்படுத்தி அதைச் சீர் செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குமரிப் பகுதியைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நான் மின்வாரியத்திலே பணிபுரிகின்றபோது அங்கு இருந்திருக்கிறேன். அங்கே ஏற்கனவே மரக் கம்பங்கள் இருந்து அவைகள் உளுத்துப் போயின. அதை மாற்றுவதற்கும் வழியில்லை. ஆகையினாலே ஆர்.சி.சி. கம்பங்களைப் போட்டோம். அதை மீண்டும்

மாற்றி மரக் கம்பங்களைப் போட்டால் அது சில நாட்களிலே அதுவும் போய்விடுகிறது. அதைவிட கன்னியாகுமரிப் பகுதியில் காற்று மிக அதிகம். இந்தப் பகுதியிலே அன்டர் கிரவுண்டு சிஸ்டத்தை நாம் எந்த அளவுக்கு பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு அரசு இதைப் பரிசீலனை செய்யும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இந்த மின்கம்பங்கள் எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை மாற்றப்பட வேண்டும் என்று ஏதாவது விதி இருக்கிறது. நான் கேட்க விரும்புவதெல்லாம் இம்மாதம் 1-ந் தேதி திண்டுக்கல்லில் மின் கம்பத்தில் வேலை செய்து கொண்டிருக்கும்போது, அந்தக் கம்பம் சாய்ந்து, அதிலே வேலை செய்து கொண்டிருந்த மின்தொழிலாளி இறந்துவிட்டார். எனவே எவ்வளவு காலத்திற்கு இந்தக் கம்பங்களுக்கு சக்தி இருக்கும். அப்படி என்றால் இதை மாற்றி அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆர். சி. சி. கம்பங்களைப் பொறுத்தவரையிலே லைன் இன்ஸ்பெக்ஷன் என்று ஆண்டுதோறும் போவார்கள். அப்படிப் போகும்போது விரிசல் மற்ற கீரல்கள் இருக்குமே யானால் அதைப் பார்த்து அவ்வப்போது மாற்றிவிடவேண்டும். எவ்வளவு காலம் என்று வரைமுறை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதை அப்படிப்பார்த்து மாற்றிக்கொண்டே வருவோமானால் இந்தப் பிரச்சினை வராது. மரக் கம்பங்களைப் பொறுத்தவரையில் 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் என்று வரைமுறை உண்டு.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா என் 1029—திரு. ஜே ஹேமச்சந்திரன்: மாண்புமிகு ஊரத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிற ரப்பரைப் பயன்படுத்தி தமிழ்நாட்டிலுள்ள எல்லா போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவையான புதுபித்த டயர்கள் மற்றும் ரப்பர் பஞ்சு இருக்கைகள் தயாரிப்பதற்கான ரப்பர் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலைமை என்ன?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி:—(அ) மற்றும (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வெற்கிலாம் பியில் நூலிழை ரப்பர் உற்பத்தி செய்யும் தொழில் கூட்டுறவு சங்கம் ஒன்று 11-3-1981 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.





திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சில நாட்களுக்கு முன்னால், மேலவையில் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லக் கூடிய நேரத்தில் ரப்பர் மூலப் பொருள்களை பயன்படுத்தி அங்கே செய்பொருளாக மாற்றுவதற்கான ஒரு தொழிலை துவங்கவேண்டும் என்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது பற்றி ஒரு குறிப்பை அனுப்ப வேண்டும் என்று டேன்சயிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பு வந்தபிறகு அரசு முடிவெடுக்கும் என்று சொல்லி இருக்கிறார். இது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கொடுத்த விவரப்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு ரப்பர் தோட்டத்தில் உற்பத்தி யாகக் கூடிய ரப்பரைக் கொண்டு, அரசு போக்குவரத்துக் கழகங்களின் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு ரப்பர் தொழில் நூலிழை உற்பத்தி செய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கி இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் கேட்பது வனத் துறை அமைச்சர் சொன்ன விவரங்களை வைத்து கேட்கிறீர்கள். தயவு செய்து தனிக் கேள்வியை அவரிடத்தில் போட்டால் அவர் பதில் சொல்வார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழக அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய போக்குவரத்துக் கழகங்களில் ஏறத்தாழ போம் ரப்பர், திரட் ரப்பர் எல்லாம் சேர்ந்து ஒரு டன்னுக்கு தேவை என்று இருக்கிற காரணத் தினாலே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நிர்வாகம் இது சம்பந்தமாக ஒரு பிராஜக்ட் ரிப்போர்ட் தயார் செய்து அரசுக்கு பரிசீலனைக்குஅனுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. வனத்துறையும் இதுசம்பந்தமாக ரப்பர் கொடுப்பதற்கு ஒத்துக் கொண்டது என்றும் தெரியவருகிறது. இது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

(முற்பகல் 9.10.)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் ஏற்கனவே அப்படிப்பட்ட ஒரு கருத்துரு அரசின் ஆய்வுக்குறிப்பில் இருந்தது. ஆனால் மத்திய அரசு ரப்பர் உற்பத்தி செய்யும் தொழிலை சிறு தொழில் பிரிவிற்கு ஒதுக்கிவிட்டதால், அந்தத் தொழிற் சாலையைத் துவங்குவது கட்டபொம்மன் போக்குவரத்து கழகத்தால் நிறைவேற்ற இயலவில்லை. இருந்தாலும் அதை அரசே எடுத்துக் கொண்டு, தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, அதற்காக ரூ. 11 இலட்சத்து 25 ஆயிரம் ஒதுக்கி, தொழிற் கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக, இந்த நூல் இழை ரப்பரை உற்பத்தி செய்து, அரசுக்குச் சொந்தமான போக்கு

வரத்துக் கழகங்களுக்கு உள்ள ரப்பர் தேவையை நிறைவு செய்ய அரசு முயன்று வருகிறது.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தரமான ரப்பர்களைத் தரும் மாவட்டம் குமரி மாவட்டம். அங்கே ரப்பர் தயாரிப்பதற்கான மூலப்பொருள் அதிக அளவில் கிடைப்பதால், அங்கேயே ஒரு ரப்பர் தொழிற்சாலை உருவாக்க அரசு தீவிரமான முயத்சி எடுத்து, அந்தத் தொழிற்சாலையை உருவாக்க அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலில் அங்கே நூல் இழை ரப்பர் உற்பத்தி செய்யும் தொழிலை ஆரம்பிக்க இருக்கிறோம். மற்றவற்றைப் பற்றி தொடர்ந்து பரிசீலிக்கலாம்.

### பத்திரப்பதிவு அலுவலகங்களில் எக்ஸிராக்ஸ் இயந்திரங்களைப் பயன்படுத்துதல்.

*வினா எண். 1030—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலுள்ள துணைப் பத்திரப்பதிவு அலுவலகங்களில் ஆவணங்களுக்கு நகல்கள் எடுக்கும் எக்ஸிராக்ஸ் (XEROX) இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா?

(ஆ) இம்மாநிலத்தில் எக்ஸிராக்ஸ் இயந்திரங்களைப் பயன்படுத்தும் அலுவலகங்கள் எவை, எவை? மாவட்ட வாரியாக?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:**— (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆவணங்களை நகல்கள் எடுக்க எக்ஸிராக்ஸ் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டால், விரைவாக நகல்கள் எடுப்பதற்கு முடியும். அதிலே எந்தவிதமான தவறும் ஏற்படுவதற்கு வழியில்லை. ஆகவே, ஏன் அந்த இயந்திரத்தைப் பயன்படுத்த அரசு தயக்கம் காட்டுகிறது என்று சொல்ல மாட்டேன், தாமதம் காட்டுகிறது என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தயக்கமோ, தாமதமோ காட்டவில்லை, ஆனால் அதற்கு மாறாக 20 சார் பதிவாளர் அலுவலகங்களில் 4 லட்சத்து 17 ஆயிரத்துயதினைந்து ரூபாய் செலவில் போட்டோ காப்பி எடுக்கும் மெஷின்களை பரிட்சார்த்தமாக முக்கிய நகரங்களில் வைபதற்கான கருத்துருவை அரசு ஆராய்ந்து



கொண்டு இருக்கிறது. விரைவில் செயல்படுத்தப்படும். இன்றைக்கு அதன் காரணமாக பல நன்மைகள் ஏற்பட இருக்கின்றன. அதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார் என்று நம்புகிறேன்.

**திரு. ப. நெடுமாறன்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இந்தப் பத்திரப் பதிவு முறையை மலேசியாவில் இருப்பதைப் போல், இங்கே கொண்டு வர அரசு முன் வருமா? மலேசியாவில் பத்திரங்களைப் பதிவு செய்கிற காலத்திலேயே பாஸ்போர்ட் சிஸ்டம்போல் அவர்களே ஒரு அச்சடித்த பாரங்களில் பத்திரங்களைப் பதிவு செய்கிறார்கள். அதனால் உடனடியாகப் பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு நகல் அவர்கள் வைத்துக்கொள்கிறார்கள். இன்னொரு நகல் அரசாங்கமே வைத்துக்கொள்கிறது. அது மாதிரி அந்த சொத்து மாற்றம் செய்கிற போதும், அந்தப் பாரத்திலேயே இன்னொரு காலத்தை பூர்த்தி செய்து கொடுத்தால், அது முடிவு அடைந்து விடுகிறது. ஆகவே இதன் காரணமாக உடனுக்குடன் அந்த பதிவுமுறை முடிந்துவிடுகிறது ஆகவே மலேசியாவில் உள்ள அந்த முறையை இங்கே நம்முடைய நாட்டுக்கு ஏற்ற மாற்றங்களுடன் கொண்டு வருவதற்கு அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பரிசீலனை செய்ய முயல்வோம்.

### சென்னை நகரில் திரையரங்குகள் கட்டுவதற்கான மாநகராட்சியின் திட்டம்

*வினா எண். 1031—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி, சென்னை நகரில் திரையரங்குகள் கட்டக் கருதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு**— (அ) ஆம்.

(ஆ) பட்டினப்பாக்கம் பகுதியில் ஒசியானிக் விடுதிக்கருகில் தெற்குக் கால்வாய் கரைச் சாலையில் ரூ. 97.40 இலட்ச மதிப்பீட்டில் பல்பொருள் நவீன அங்காடியினைக் கொண்ட திரையரங்கு ஒன்றைக் கட்டுவதற்கும் வள்ளுவர் கோட்டம் அருகில் கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் ரூ. 88 இலட்ச மதிப்பீட்டில் பல்பொருள் நவீன அங்காடியினைக் கொண்ட திரையரங்கு ஒன்றைக் கட்டுவதற்கும் சென்னை மாநகராட்சி திட்டம் தயாரித்து அரசின் ஒப்பளிப்புக்காக அனுப்பியிருக்கிறது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. சி. சண்முகம்:—தலைவரவர்களே, இரண்டு திரை அரங்குகளைக் கட்டு து பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அது எப்போது தொடங்கப்படும். மாநகராட்சியே பெங்களூரில் உள்ள 'டிரைவ் இன் தியேட்டர்' மாதிரி கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலுக்காக இந்த இரண்டு திரை அரங்குகளையும் 2 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கு திட்டம் திட்டப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிறது. டிரைவ் இன் தியேட்டரைப் பொறுத்தவரை ஏற்கெனவே பொதுப்பணித் துறை மெரீனா கடற்கரையில் கட்டுவதாக ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறது. அப்படி பொதுப்பணித்துறை கட்டவில்லை என்றால் மாநகராட்சி கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

### கோம்பை ரங்கநாதர் கோவிலில் இருந்து ராமக்கல் மெட்டுவரை பாதை போடுதல்.

*வினா எண். 1032—திரு ஆர். டி.கோபாலன்: திரு வே.இரா. ஜெயராமன்: மற்றும் திரு. கா. கோபாலகிருஷ்ணன் மாண்புமிகு உள்ளாட்சிதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கோம்பை ரங்கநாதர் கோவில் அடிவாரத்திலிருந்து ராமக்கல் மெட்டுவரை கேரள எல்லையிலுள்ள பாதையுடன் இணைக்கும் பாதை போட அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

திரு. ஆர். டி. கோபாலன்: தலைவரவர்களே, இந்த கோம்பை ரங்கநாதர் கோவில் அடிவாரத்திலிருந்து போடப்படும் சாலைக்கு எப்போது வேலை தொடங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்த சாலை மொத்தம் 15 கிலோமீட்டர் நீளம் உள்ளது. இதற்கு மதிப்பீட்டுச் செலவு 70 இலட்சம் ரூபாய். இது 1981-82-வது மாவட்ட பெரும் சாலைகள் திட்டமாக இறுதிப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. வேலைகள் சீக்கிரமாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டவுடன் தொடங்கப்படும்.

### நாட்டாற்றின் குறுக்கே வண்டிப்பாலம் கட்டும் திட்டம்

*வினா எண். 1033—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா



(அ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் மாந்தை கிராம எல்லையில் நாட்டாற்றில் நெடுஞ்சாலைத்துறை கிராமச் சாலைகள் திட்டத்தின் மூலம் வண்டிப்பாலம் கட்ட ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில் மதிப்பீடு எவ்வளவு?

(இ) ஒப்பந்ததாரர் யார்?

(ஈ) ஒன்றியப் பொது நிதியிலிருந்து எவ்வளவு பணம் எந்த தேதியில் செலுத்தப்பட்டுள்ளது?

(உ) ஆரம்ப வேலைகள் துவக்கப்பட்டு விட்டனவா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு—(அ) இந்த வேலை ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது

(ஆ) ரூ. 3,24,000

(இ) திரு. ஆர். கே. ஏ. பொன்னுசாமி காங்கேயர், சீனிவாசபுரம், தஞ்சாவூர்.

(ஈ) மொத்த மதிப்பீட்டில் ரூ. 2,36,000-யை குத்தாலம் ஊராட்சி-ஒன்றிய ஆணையர் நெடுஞ்சாலைத்துறைக்கு நாள் 25-9-79-ல் செலுத்தியுள்ளார்.

(உ) வேலை இப்பொழுது துவக்கப்பட்டுள்ளது.

### ஊரக வளர்ச்சித்துறையின் பணியாளர்களுக்கான பணி விதிகள்

*வினா எண். 1034—திரு வெ. அரங்கராசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊர்நல அலுவலர்கள், உதவியாளர்கள் இவர்களுக்கு ஒரே பணி விதி ஆணையிடப்பட்டும் நாளதுவரை அமுலாக்கப்படவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம்எனில் எப்போது அமுலாக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு—(அ) மற்றும் (ஆ)

ஊரகவளர்ச்சித்துறையின் பல்வேறு பணியாளர்களுக்கு ஒரே பணி விதிகள் ஏற்படுத்துவது பற்றி செயற்குறிப்பு இன்னும் ஆய்வு நிலையிலேயே உள்ளது. விதிகள் வெளியிட்ட பின்னர் அமுல் செய்யப்படும்.

*வினா எண். 1035—திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் மேலாளர், ஊராட்சி வளர்ச்சி அலுவலர், கல்வி வளர்ச்சி அலுவலர் ஆகியவர்களுக்கு ஒரே பணி விதி கொண்டு வரப்பட்டு ஒரு சில மாவட்டங்களில் மட்டும் செயலாக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் மற்ற மாவட்டங்களுக்கும் செயல்படுத்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு— (அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய, மேலாளர்கள் ஊராட்சி வளர்ச்சி அலுவலர்கள், கல்வி வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரிடையே பணிமாற்றங்கள் செய்யலாம் என்பது பற்றிய அரசாணை சேலம், தஞ்சாவூர், தர்மபுரி போன்ற ஒரு சில மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இதற்கிடையில் இப்பிரச்சினை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதனால் மேற்படி அரசாணையை தொடர்ந்து செயல்படுத்தவோ, அல்லது அதை ரத்து செய்யவோ வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. நீதிமன்ற முடிவுக்குப் பின்னர் இதுபற்றி அடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, இந்த ஆணையை செயல்படுத்துவது தடைபட்டு, கோர்ட்டிலே இருப்பதாகச் சொன்னார்கள். சீக்கிரமாக அதை முடிவுக்குக் கொண்டுவர அரசு முயற்சி எடுத்திருக்கிறதா? அதில் எந்த அளவுக்கு பலன் ஏற்பட்டிருக்கிறது? இல்லை என்றால் சீக்கிரம் முடிவுக்குக் கொண்டுவந்து, இந்த ஆணை அமுல் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, சீக்கிரமாக நடத்த வேண்டுமென்றுதான் பல்வேறு கட்டங்களில் பேச்சு வார்த்தைகள் எல்லாம் நடத்தப்பட்டன. இதைப் பொறுத்த வரையில் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தாலும் நீதிமன்றத்தின் முடிவு இன்னும் கிட்டாத காரணத்தாலும் தடை ஏற்பட்டிருக்கிறது. முடிவு கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

குரோம்பேட்டையிலுள்ள அரசு மருத்துவமனை

*வினா எண். 1036—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குரோம்பேட்டையில் உள்ள அரசினர் மருத்துவமனையில் போதிய அறுவை சிகிச்சை அரங்கு இல்லாத காரணத்தால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?



(ஆ) ஆம் எனில் அம்மருத்துவமனையில் போதிய அளவிற்கு அறுவை சிகிச்சை அரங்கு ஏற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) நோயாளிகள் பாதிக்கப்பட்டதாக அரசுக்கு தகவல் ஏதும் இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரி.

*வினா எண் 1037—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரியில் இவ்வாண்டு (1980) எத்தனை பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்?

(ஆ) வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் எத்தனைப் பேர்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக்கல்லூரியில் இவ்வாண்டு (1980-81) பி.எஸ்.எம்.எஸ். பட்டப்படிப்புக்கு 75 பேர்களும், எம்.டி. சித்தா பட்ட மேற்படிப்புக்கு 13 பேர்களும், இந்தியமுறை மருந்தாளுநர்கள் பட்டப்படிப்பிற்காக 8 பேர்களும், ஆக மொத்தம் 96 பேர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

(ஆ) கேரள மாநிலத்தைச் சேர்ந்த 2 மாணவர்கள் பி.எஸ்.எம்.எஸ். சித்தா பட்டப்படிப்பிலும் பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஒரு மாணவர் எம்.டி. (சித்தா) படிப்பிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

(முற்பகல் 9-20)

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே பாளையங்கோட்டையிலே உள்ள இந்திய மருத்துவக்கல்லூரியில் 306 பேர் சேர்க்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களிலே தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பட்டப்படிப்புக்கு 75 பேர்களும் மேற்பட்டப்படிப்பிற்காக 13 பேர்களும் சேர்க்கப்பட்டிருப்பதாக நான் பதில் கொடுத்திருக்கிறேன். 75 பேரிலே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கை 14. அங்கே அவர்களுக்கு என்று 18 சதவீத

ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி 13 பேர் எடுத்துக் கொள்ள படவேண்டும் என்று இருந்தாலும் ஒரு நபர் ஜாஸ்தியாக எடுத்து ஆக 14 பேர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

### எழும்பூரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனை.

*வினா எண் 1038— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எழும்பூரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனையில் ஏற்படும் நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு மேற்படி மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையை விரிவுபடுத்தி, தற்போதுள்ள 250 படுக்கை வசதிகளை 450 ஆக உயர்த்த ஒரு வரைவுத் திட்டம் மருத்துவக் கல்லூரி இயக்குநரால் பொதுப்பணி தலைமைப்பொறியாளருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, சென்னை நகரிலே உள்ள அத்தனை மக்களும் இந்த எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனைக்குத்தான் குழந்தைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆகவே ஆங்காங்கே உள்ள மருத்துவமனைகளிலே குழந்தைகளுக்கு வைத்தியம் பார்க்கின்ற அளவிலே ஏற்பாடு செய்து ஒட்டுமொத்தமாக எல்லோருமே எழும்பூருக்கு வருவதைக் தடுத்து நிறுத்த அரசு ஏற்பாடு செய்யுமா? மேலும் பக்கத்திலே உள்ள காலியிடங்களையும் விலைக்கு வாங்கி மருத்துவமனையை விரிவுபடுத்துவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மூலக்கேள்வி எழும்பூரிலே இருக்கக்கூடிய குழந்தைகள் நல மருத்துவமனை விரிவுபடுத்தப்படுமா என்பது. அந்தக் கேள்விக்கு நான் பதிலளித்திருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் இடங்களிலே அப்படிச் செய்யப்படுமா என்று கேட்கிறார்கள். ஸ்டான்லி மருத்துமனையிலே 240 படுக்கைகள் கொண்ட பெரிய அளவிலே ஒரு குழந்தைகளுக்கான பிரிவை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை இந்த ஆண்டு தீட்டி இருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, எழும்பூர் மருத்துவமனையிலே போதிய நவீனக் கருவிகள் இல்லாததன் காரணத்தால் குழந்தைகளுக்கு வைத்தியம் பார்ப்பதிலே சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே நவீன கருவிகளை வாங்கி, கூடுதலாக டாக்டர்களை நியமிப்பதற்கும் அரசு ஆவண செய்யுமா? மேலும் இந்த மருத்துவமனை தென் சென்னையிலே தான் இருக்கின்றது. வட சென்னையிலேயும் குழந்தைகள் நல மருத்துவமனையை ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, வட சென்னையிலே இருக்கின்ற ஸ்டான்லி மருத்துவமனையிலே குழந்தைகளுக்கான ஒரு பிரிவு ஏற்படுத்துவதற்கு திட்டமிடப் பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்திருக்கிறேன். ஆனால் இப்போது எழும்பூர் மருத்துவமனையிலே நவீனக் கருவிகள் இல்லை என்ற புதிதான தகவலைத் தருகிறார்கள், குழந்தைகளுக்குத் தேவையான அத்தனை நவீனக் கருவிகளும் அதாவது என்னென்ன கருவிகள் வேண்டுமோ அவை அத்தனையும் அங்கே இருக்கின்றன. தென் இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக நடந்து வரும் மருத்துவமனை அது என்று அத்தனை பேரும் பாராட்டக் கூடியதாக இந்த மருத்துவமனை இருக்கின்றது. டாக்டர்களுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை கவனிக்கலாம்.

### அவினாசியில் அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 1039 திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் அவினாசியில் அரசு மருத்துவ மனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகையில் எத்தனை படுக்கை வசதிகளைக் கொண்டதாக இருக்கும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) கோவை மாவட்டம் அவினாசியில் ஆரம்பச் சுகாதார நிலையத்தை மருத்துவ மனையாக மாற்றும் வேண்டுகோள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்துள்ளது.

(ஆ) மாவட்ட மருத்துவ அலுவலர் உரிய நெறிமுறைகளின்படி செயற்குறிப்பு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளார்.

திரு. எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அவிநாசித் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக மட்டுமல்லாமல் கிட்டத்தட்ட 3 இலட்சம் மக்கள் தொகை கொண்ட ஒரு தொகுதியாகவும் இருந்து வருகின்றது. அங்கே பிரைமரி ஹெல்த் சென்டரைத் தவிர வேறு மருத்துவமனை இல்லை. ஆனால் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து செயற்குறிப்பு வந்திருப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு மதிப்பீட்டிலே அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அந்த மருத்துவமனையைக் கட்டி முடிப்பதற்கு எவ்வளவு அவகாசம் எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்போது அதுபற்றி அறிவிப்பதற்கு முடியாத நிலையிலே இருக்கிறோம். ஏன் என்றால் இன்னும் ஆரம்ப நிலையிலேதான் இருக்கின்றது.

District Development Council in its meeting held on 21-3-1980. அன்றுதான் அரசாங்கத்திற்கு ஒரு கடிதத்தை எழுதி அதுபற்றி பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் அதாவது மார்ச் மாதம். ஆகவே இதுபற்றி ஆரம்ப நிலையிலே தான் இருக்கிறோம். இதற்கு எவ்வளவு மதிப்பீடாகும், எத்தனை காலத்திற்குள் செய்து முடிக்கலாம் என்பதெல்லாம் இன்னும் சிந்திக்க வேண்டிய கட்டத்திலே தான் இருக்கிறோம்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், இப்பொழுதுதான் திட்டத்திற்கான ஆரம்பக் கட்டத்தில் இருப்பதாகச் சொன்னார்கள், கிட்டத்தட்ட அந்த தொகுதியில் இருக்கிற மக்கள் எல்லாம் ஒரு ஆக்ஸிடெண்ட் ஆனால் கூட போஸ்ட்மார்ட்டம் செய்ய வேண்டுமானால் கோவைக்கு அல்லது திருப்பூருக்குச் செல்ல வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. அதுவும் அல்லாமல் அது ஒரு தாலூக்கா மையமாக இருப்பதினால் அவசர அவசியமாக அந்த பிரைமரி ஹெல்த் சென்டரை, ஒரு தாலூக்கா மருத்துவமனையாக கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் உடனடியாக எடுக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த திட்டத்திற்காகத்தான் டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீசரை, உடனடியாக அங்கே போய் பார்த்து, என்னென்ன செய்ய வேண்டும், எப்படி திட்டங்கள் போட வேண்டும், என்னென்ன வாங்க வேண்டும் எப்படி அமைக்கலாம் என்பது பற்றி எல்லாம் ஆராய்ந்து அனுப்ப வேண்டும் என்று கடிதம் மூலமாக கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். தொலைபேசி மூலமாக வேண்டுமானால் சொல்லி, நடவடிக்கையை துரிதப்படுத்தலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே நேரிடையாக கூட இந்தப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல அந்த இடத்திலே ஒரு தாலூக்கா மருத்துவமனை தேவை என்பதை அரசும் உணர்ந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தின் அடிப்படையில் செயலாற்றிக் கொண்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்வர் விசாரணை கமிஷன் முடிவுகள்.

குறுகிய காலவினா என். 21 திரு. கு. ரமணி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) 1978 ஜூலை மாத இறுதியில் சென்னை பேஸின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 தொழிலாளர்கள் இறந்து விட்டது குறித்து விசாரணை நடத்த அன்வர் என்ற ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் ஒருவரை நிர்ணயித்து நடத்தப்பட்ட விசாரணையின் முடிவு என்ன?

(ஆ) விசாரணை அறிக்கை இதுவரை வெளியிடப்படாதது ஏன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; (அ) இவ்விபத்து 1979 ஜூலை மாதத்தில் ஏற்பட்டது. திரு. அன்வர் சமர்ப்பித்துள்ள அறிக்கயில் இவ்விபத்து அனல் மின் நிலையத்தின் ஆலைப் பகுதியில் ஒரு வெடிக்கக்கூடிய கலவை உண்டாகி, அப்பகுதியில் ஒரு நபர் தீக்குச்சியைக் கொளுத்தியதன் பயனாக விளைந்திருக்கலாம் எனக் கூறியுள்ளார்.

(ஆ) இவ்வறிக்கையை வெளியிட வேண்டிய அவசியமில்லையெனக் கருதப்பட்டதால் இதனை வெளியிடவில்லை.

திரு.கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிலாளி ஒரு தீக்குச்சியை கொளுத்தியதால் இவ்வளவு பெரிய தீ விபத்து ஏற்பட்டது என்பது அடிப்படையிலேயே நம்புவதற்கு முடியாத ஒரு காரணமாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. 9 பேர்கள் உயிரிழந்த மிகப் பெரிய தீ விபத்து. அதுவும் அந்த பேஸின் பிரிட்ஜ மின் நிலையம் இருக்கும் இடமே மிக குறுகலான இடம். எங்கு பார்த்தாலும் நிலக்கரி பரவி கிடக்கிற சூழ்நிலையில், நல்ல வெய்யில் காலத்தில் உஷ்ணம் அதிகமாகி வெகு எளிதாக தீ பிடிக்கக் கூடிய அபாயம் அங்கே எப்போதுமே இருக்கிறது. அப்படிப்பட்ட அபாயம் இனிமேல் ஏற்படாமல் தடுக்க முன் எச்சரிக்கையாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த விசாரணைக் கமிஷனிலிருந்து ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவர் அவர்களே, அவர்கள் 16 பரிந்துரைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த 16 பரிந்துரைகளின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் முழு விவரங்களையும் இங்கே சொல்ல வேண்டுமானால் பெரிய பட்டியலாக போய்க் கொண்டிருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

## விருதுநகர் அரசு மருத்துவமனை.

*வினா எண் 1040— திரு. மு. சுந்தரராஜன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விருதுநகரில் அரசு மருத்துவமனையில் உள்ள இட நெருக்கடியைத் தவிர்க்கக் கூடுதல் படுக்கை வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடம் அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தற்சமயம் இல்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் அரசு மருத்துவமனையில் ஏராளமான உள் நோயாளிகள், படுக்கை வசதி இல்லாமல் தரையில் படுக்கக் கூடிய நிலைமையில் கஷ்டப்படுகின்றனர். அதை உடனடியாக மாற்றி அமைக்கும் வகையில் அங்கே கூடுதல் கட்டிடம் கட்ட அமைச்சர் அவர்கள் உடனடியாக உத்தரவு வழங்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, நான் தற்சமயம் இல்லை என்று தான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு, அந்தப் பகுதி மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று, இங்கே ஒரு பெட்டிஷன் மூலமாக கொடுப்பார்களே யானால், அதை மீண்டும் ஆராயலாம். அதை ஒரு பெரிய மருத்துவமனையாக கொண்டு வரவேண்டும் என்கிற நிலைமை இருக்கிற காரணத்தால், இரண்டு பிரச்னைகளையும் தீர ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும் என்றுதான், தற்சமயம் இல்லை என்று நான் பதில் அளித்தேன்.

## வடாற்காடு மாவட்டத்தில் பெரியார் போக்கு வரத்துக் கழக பேருந்துகள் செல்லும் வழித்தடங்கள்.

*வினா எண் 1041—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டத்தில் பெரியார் போக்குவரத்து கார்ப்பரேஷன் அரசு அனுமதி பெற்ற பலவழித் தடங்களில் பேருந்துகள் விடப்படாமலிருப்பது உண்மையா?

(ஆ) அதன் விவரமென்ன?

(இ) காரணமென்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகம் அரசு அங்கிகாரம் பெற்ற எல்லா வழித்தடங்களிலும் பேருந்துகளை இயக்குகிறது.

(ஆ) மற்றும் (இ): கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9.30)



[முற்பகல் 9.30]

திரு. தி. அன்பழகன்: வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரிலிருந்து பெருமாப்பட்டு கிராமத்திற்கு அரசு அனுமதி தந்தும் பேருந்து விடப்படாமல் இருக்கிறது. அதுபோன்ற வழித் தடங்கள், அனுமதி பெற்ற வழித்தடங்கள் காலாவதியாகி விட்டால் அவை புதுப்பிக்கப்பட்டு புதிய பேருந்துகள் விடப் படுமா? பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் போதிய வண்டிகள் இல்லையென்பதால் புதிய வண்டிகள் விடுவதற்கு அரசாங்கம் ஏதாவது சிறப்புத் திட்டம் தீட்டி செயல்படுத்தியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அரசாங்க அங்கீகாரம் கொடுத்தும் அங்கே பேருந்துகள் இயக்காமல் பெரியார் போக்கு வரத்துக்கழகத்தில் எந்தயிடத்திலும் இல்லை. அங்கே பேருந்துகள் தேவையான அளவிற்கு இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அரசாங்கம் அங்கீகாரம் கொடுத்துவிட்டால் எப்படியாவது பேருந்துகள் வாங்கி விட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே அங்கீகாரம் கொடுக்கப்பட்ட பிறகு எந்தயிடத்திலும் பேருந்துகள் இயக்காமல் இல்லை. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் போக்குவரத்து எங்கெல்லாம் இயங்கவேண்டுமென்று கேட்கிறார்களோ கூடியவரை அங்கெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அங்கீகாரம் முதலில் கொடுப்பதில்லை. காரணம் நாம் அதை நிறுத்தி வைத்திருக்கிறோம். அரசாங்கத்தால் அங்கீகாரம் கொடுக்கப்பட்ட இடம் விடுபட்டிருக்கிறது என்ற நிலைமை இப்போது இல்லை.

திரு. கே. நாராயணசாமி: திருவண்ணாமலை முனிசிப்பாலிட்டி பெரிய முனிசிப்பாலிட்டி. அறுபது ஆண்டுகளாயிற்று. அந்த ஊரில் ஒன்பது வழித்தடங்கள் இருக்கின்றன. எல்லா வழித்தடங்களிலும் டவுன்பஸ்கள் விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேருந்துகள் தேவை என்ற நிலைமை இருக்குமானால் பேருந்து விட அரசு தயக்கம் காட்டாது.

திரு. ஏ. சி. சண்முகம்: பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் அங்கீகாரம் இல்லாத பல வழித்தடங்களில் பேருந்துகள் விடப் படாமல் இருக்கின்றன. அதன் தலைமையிடம் விழுப்புரத்தில் இருக்கிறது என்பதால் சென்னையிலிருந்து 100 மைல் தொலைவில் இருக்கிறது—நிர்வாகத்தில் பல பிரச்னைகள் உள்ளன. அது போதிய அளவுக்கு கவனிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே பெரியார் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரை தலைமையிடமாக வைத்து ஒரு கழகம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: கடந்த 27-ம் தேதி அன்று நான் மானியக்கோரிக்கையின் போதே அறிவித்திருக்கிறேன். பல்லவன் போக்குவரத்துக் கழகம் புறநகர் பிரிவு பெரியார்

போக்குவரத்துக் கழகம் இவை பின்னிப் பிணைந்திருப்பதால் அதை ஒன்றாகச் சேர்த்து பிரிக்கவேண்டும் என்ற திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். விரைவில் வேலை தொடங்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: பெரியார் போக்குவரத்துக் கழகம் மூலம் குடியாத்தத்திலிருந்து பல்வேறு கிராமங்களுக்கு குறிப்பாக குடியாத்தம்—தட்டப்பாறை, குடியாத்தம்—கொச்சூர் போன்ற யிடங்களுக்கு டவுன் பஸ் விடவேண்டுமென்றும், பல்வேறு தூரயிடங்களுக்கு சேலம், பங்களூர், பாண்டிச்சேரி போன்றயிடங்களுக்கு பேருந்துகள் விடவேண்டுமென்றும் கோரியிருந்தோம். அவைகளை துரிதமாகவிடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய எழுதிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர்கள் எழுதிக் கொடுக்கிற அத்தனை வழித்தடங்களுக்கும் வண்டி விடவேண்டுமென்றால் இந்த ஆண்டு மட்டும் ஐயாயிரம் பேருந்துகள் வாங்குவது என்பது முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிகிறது. இருந்தாலும் அவற்றில் எவை எவை முக்கியமானவை என்று பார்த்து அங்கு வண்டிகள் விட அரசு தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது.

வடாற்காடு மாவட்டத்தில் தனியார் துறை மூலம் நடைபெற்று வரும் பேருந்துப் பணிகள்.

*வினா எண் 1042—திரு. சி. கோபால் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் தனியார் துறை பேருந்து அதிபர்கள் பினாமி பெயரில் பேருந்துகளை நடத்தி வருவதை தடுக்கும் எண்ணம் இவ்வரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பினாமி பெயரில் பேருந்து உரிமங்கள வழங்குவது மோட்டார் வண்டிகள் சட்டத்தில் தடுக்கப்பட்டுள்ளது. வட ஆற்காடு மாவட்டத்தில் தனியார் துறை பேருந்து அதிபர்கள் பினாமி பெயரில் பேருந்துகளை நடத்துவதாக அரசுக்கு எவ்விதத் தகவலும் இல்லை.

திரு. சி. கோபால் : பேருந்துகள் உரிமங்கள், சட்டப்படி பினாமி பெயரால் நடத்தப்படுபவை மோட்டார் வாகனச் சட்டப்படி தடுக்கப்படுகிறது என்று கூறினார்கள். சட்டத்தில் இருக்கிற ஓட்டைகளைப் பயன்படுத்திக்கொண்டு பெரும் முதலாளிகள் பலர் பினாமி பெயர்களில் வட ஆற்காடு மாவட்டத்தில் நடத்தி வருகிறார்கள் என்பதால் ஏதாவது தனிக் குழு ஒன்று அமைத்து அமைச்சர் அவர்கள் அதை பரிசீலிப்பார்களா?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : சட்டத்தில் இருக்கிற ஓட்டைகளைப் பயன்படுத்திக்கொண்டு இப்படிப்பட்ட சூழ்நிலைகள் வருமானால் அதையெல்லாம் கவனிக்க சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று மக்கள் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். ஆகவே அதற்காக என்று ஒரு குழு தேவையில்லை. நீங்களே கண்காணித்து எங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படும். எனவே அந்த வேலையை நீங்கள்தான் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே தனியார்கள், பினாமி பெயரிலே பேருந்துகளை நடத்துவதோடு மட்டுமல்லாமல், அங்கே அதிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்காமல், தினச் சம்பளம் கொடுக்கப்படுகிறதென்றும், அதை நம்முடைய போக்குவரத்துத் துறை அதிகாரிகள் சரியாக கண்காணிப்பதில்லை என்றும், அந்த ரிஜஸ்தர்களை முறையாகப் பார்த்து தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துவதில்லை. அதற்கு என்ன காரணம்? இனிமேலாவது கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, போக்குவரத்து அதிகாரிகளைப் பொறுத்தவரையில் போக்குவரத்து வண்டிகளைக் கண்காணிக்க முடியுமே தவிர, அங்குள்ள தொழிலாளர்களை கண்காணிக்கின்ற அதிகாரம் இல்லை. எனவே, தொழிலாள நலத்துறையின் கவனத்திற்கு கொண்டு வருவார்களானால், நிச்சயமாக அவர்கள் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருவார்கள். அதிலே இன்னும் கொஞ்சம் தீவிரமாக நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பேருந்திற்காக உரிமம் பெறவேண்டுமென்று சொன்னால், சில வழிவகைகள் வகுக்கப்படுகின்றன. தேவையான நிபந்தனைகள் போடப்பட்டிருக்கின்றன. அப்படி வட ஆற்காடு மாவட்டத்தில் தனியார் துறையில் பஸ் வைத்துக் கொண்டிருப்பவர்கள் லாக் ஷீட் வைத்திருப்பார்கள். அதிகாரிகள் உடனடியாக அந்த லாக் ஷீட்டுகளை செக் அப் செய்தால், எத்தனை பேர்களிடத்தில் எத்தனை வண்டிகள் இருக்கின்றன என்ற உண்மை தெரியவரும். ஆகவே, வடஆற்காடு மாவட்டத்தில் இப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு எங்களுக்குத் தயக்கம் இல்லை. ஆனால், அப்படி பினாமியாக வைத்துக் கொண்டிருப்பவர்கள், சாதாரணமாக மாட்டிக் கொள்ளக்கூடிய

அளவில் வைத்துக் கொண்டிருக்கமாட்டார்கள். மிக உஷாராக வைத்துக் கொண்டிருப்பார்கள். எனவே, ஒரு குடும்பத்தில் யார் யார் பெயரிலே, அந்தப் பேருந்துகள் இருக்கின்றன என்று அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்கள நமக்கு எடுத்துச்சொன்னால், கொஞ்சம் சரிவர நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கும். அதற்காக ஒரு குழு அமைப்பதற்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஏற்கனவே சொன்னேன். இருந்தாலும் அரசாங்கம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வடஆற்காடு மாவட்டத்திலே தான் போக்குவரத்துத் துறையில் தனியார் ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது. அதனால், மற்ற மாவட்டங்களில் போக்குவரத்து துறையினால் மக்களுக்குக் கிடைக்கும் பலனை விட, இங்கு குறைவாக இருக்கிறது. அரசு உடனடியாக தனியார்களுடைய போக்குவரத்துக்கள் அனைத்தையும் தேசிய மயமாக்கி எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் பலமுறை இதற்கு பதில் சொல்லியிருக்கிறேன். நாம் பேருந்துகளை தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கையை வைத்திருந்தாலும், நான் ஏற்கனவே சொன்னதுபோல், சட்ட மன்ற உறுப்பினர்கள் கேட்கின்ற பேருந்துகளை கொடுப்ப தென்றால், இந்த ஆண்டு 5,000 பேருந்துகளை கொடுக்க வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இதற்காக மட்டும் செலவழிக்கின்ற சூழ்நிலை, நிதிவசதி மிகவும குறைவு. இந்த நேரத்திலே தனியார் பஸ்களை எடுத்துவிட்டால், நாமே அந்த பேருந்துகளை எடுத்துக்கொள்ள முடியுமா என்பதைப் பார்க்கிற போது, தமிழகத்திலே ஒரு தன்னிறைவு நிலை ஏற்பட்டபிறகு, அவைகளைப் படிப்படியாக, அரசாங்கமே தேசிய உடமையாக்கும் நடவடிக்கைகளில் செயல்பட இருக்கிறது. இருந்தாலும், வட ஆற்காடு மாவட்டத்திற்கு அரசு தனிக் கவனம் செலுத்தி, இனி மேல் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. குருசாமி : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பஸ்கள் அதிகமாக வேண்டுமென்று எழுதிக் கொடுத்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே எந்தெந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகமாக வேண்டுமென்று கேட்டு எழுதிக் கொடுத்திருக் கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோர் பெயர்களையும் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. திரு. இளையபெருமாள்.



திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இந்தமாதிரி பேருந்துகளை கொடுக்கின்ற வகையில், ஆதி திராவிட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு அரசு இந்த 18 சதவிகிதத்தைக் கொடுப்பதற்கு பரிசீலனை செய்யுமா? அல்லது வருங்காலத்தில் கொடுக்க யோசனை உண்டா? இருந்தாலும், இப்போது அது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். என்னுடைய இம்பர்மேஷன் உண்மையாக இருக்குமானால், அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்களை அந்தப் பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அரசு உத்தியோகத்தில் செய்யவேண்டிய காரியத்தை சட்டமன்ற உறுப்பினருக்குக் கொடுத்துவிட்டால், அவர்களுக்கு ஏதாவது வசதி வாய்ப்பு செய்வதற்கு வருங்காலத்திலே அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்?

[முற்பகல் 9.40]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்களை அந்த வேலையைச் செய்யவேண்டுமென்று கேட்கிறேன் என்று சொன்னால், அவர் அதிலே அதிகமான ஆர்வம் காட்டுகிறார். ஒரு பகுதியில் சட்ட மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுகிறபோது, அவர் ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, அவர் எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, மக்கள் குறைகளைத் தீர்ப்போம் என்று சொல்லி வருகிறோம். வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராக வந்தவுடன், அந்தக் கடமை நமக்கு வந்துவிடுகிறது என்பது பொருள். அரசாங்கம் வழிவகை செய்து தரவேண்டுமென்று சொல்வது சரியல்ல. அரசாங்க அதிகாரிகள் செய்கிறார்கள். அதைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அந்த சட்டமன்ற உறுப்பினருக்கு உண்டு. அதைத்தான் சொன்னேன். எனவேதான் நீங்களே கூட ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உங்களைக்கூட கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்தபடியாக, ஆதிதிராவிட மக்களைப் பொறுத்தவரையில் 18 சதவீதம் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் புரட்சித் தலைவருடைய அரசு வழிவகை செய்திருக்கிறது. இருக்கிற நிலை என்னவென்று சொன்னால் தனியார் துறைக்கு அதிமாக கொடுத்துவிடுகிறார்கள் என்ற நிலைமை இருக்கிற காரணத்தினால்தான் தற்காலிகமாக நாம் தனியாருக்கு கொடுப்பதையே நிறுத்தி வைத்திருக்கிறோம். எனவே தனியாருக்கு கொடுக்கத் துவங்கினால் 18 சதவீதம் அந்த மக்களுக்கு கிடைக்கும். அதை கொடுப்பதற்கு சிலவழி முறைகளை மாற்றியமைக்கிறோம். காரணம் கீழ் மட்டத்திலே இருக்கிறவர்களுக்கு கிடைக்கவேண்டும். பழைய நபர்களுக்கே

கிடைத்துக் கொண்டிருக்கக்கூடாது. இங்கே பினாமி என்று சொன்னார்களே அப்படிப்பட்டவர்களுக்கு கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால்தான சட்டங்களை திருத்தி மாற்றியமைத்து, கீழே இருக்கிறவர்களுக்கு கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்த வேணடும். குடிசைத் தொழில் போல மாற்றி விட வேண்டுமென்று அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் போக்குவரத்து வசதியைப் பெற்றுள்ள கிராமங்கள்.

* வினா எண். 1043—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–ம் ஆண்டிலிருந்து 1981 சனவரி முடிய தமிழகத்தில் எத்தனை கிராமங்கள் போக்குவரத்து வசதியைப் பெற்றுள்ளன?

(ஆ) இதன்மூலம் பயனடைந்த மக்கள் தொகை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :

(அ) மற்றும் (ஆ) 1976–77 ஆம் ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் வரை 3,872 கிராமங்கள் பேருந்து வசதி அடைந்திருக்கின்றன. இதனால் 72.41 லட்சம் மக்கள் பயன் அடைந்தனர்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு தலைவரவர்களே, இராம இராஜ்யத்தை கண்டு அடையும் புரட்சித் தலைவர் ஆட்சியில் பஸ் வசதி இல்லாத கிராமமே இல்லை என்கிற அளவில் 85 ஆம் ஆண்டிற்குள் கிராமங்கள் அத்தனைக்கும் பஸ் வசதி செய்து கொடுத்து விடுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எல்லா கிராமங்களுக்கும் பஸ் வசதி செய்து தரவேண்டுமென்று உணர்வோடு தான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. மூன்று ஆண்டு காலத்திலே எல்லா இடங்களுக்கும் பஸ் வசதி செய்து கொடுத்து விட வேண்டுமென்று நாம் ஒரு குழுவை அமைத்து ஏற்பாட்டை செய்திருக்கிறோம். இருந்தாலும் கூட இந்த குழு அமைப்பதன் மூலம் நடவடிக்கை எடுக்கப் படாமலும், நான் ஏற்கனவே சொன்னதையே திருப்பி, திருப்பி சொல்வதாக கூட நினைப்பீர்கள், போக்குவரத்து கழகங்கள் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருப்பதால் அதிலே கொஞ்சம் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய, அரசாங்கத்தினுடைய எண்ணத்திலே கருத்திலே, வேகத்திலே எந்தவிதமான சுணக்கமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுதந்திரம் பெற்ற இந்தியாவில் காந்தியின் கனவை நிறைவேற்றுகிற வகையில் நகர்புறத்தில் கிடைக்கும் வசதிகள் அத்தனை





யும் கிராமத்திலும் கிடைத்திட பாடுபடும் புரட்சித் தலைவரை காந்தியடிகள் அடிக்கடி சந்தித்து, வாழ்க என்றும், புரட்சித் தலைவர் தான் தமிழகத்தை ஆள வேண்டுமென்றும் சொல்வதை இந்திய நாட்டுக்கு இந்த அரசு அறிவிக்குமா?

(பதிலில்லை)

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது கிராமங்களுக்கு எல்லாம் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற நோக்கோடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 30 கிலோ மீட்டருக்குள்ளே எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் டெப்போக்களை திறந்து கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாங்கள் நகரப் பேருந்துகளை 30 கிலோ மீட்டராக ஆக்கி இருக்கிறோம். ஒரு இடத்திலிருந்து, இன்னொரு இடத்திற்கு 30 கிலோ மீட்டருக்கு இடையிலே ஒரு டெப்போ அமைப்பதன் காரணமாக, அங்கே போய் வருகிற பேருந்து இரண்டு டெப்போக்களைத் தொட்டுச் செல்லும். இது தேவையில்லை என்பதால் தான் 50 கிலோ மீட்டர் அல்லது 60 கிலோ மீட்டர் குறைந்தபட்சஇடைவெளி இருக்க வேண்டுமென்று ஏற்பாட்டை செய்திருக்கிறோம். கடந்த 27 ஆம் தேதி நான் அறிவித்தபடி ஏறத்தாழ தமிழகத்திலே டெப்போக்களை அமைக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படி ஆண்டுக்கு கொஞ்சம் எல்லா முக்கியமான இடங்களிலும் டெப்போ அமைப்பதன் மூலமாக நகரப் பேருந்துகளை கிராமங்களில் விட முடியும்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தரலைவரவர்களே, கிராமங்களில் பஸ் விடுவதை பொறுத்தவரையில், தன்னிறைவுத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுவதை போல பின்தங்கிய மாவட்டங்களில் பஸ் என்றால் என்னவென்றே தெரியாத இடங்கள் இருக்கின்றன. குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி கிராமத்தில் பஸ்ஸை பார்க்காத கிராமங்கள் இருக்கின்றன. இதுபோன்ற பகுதிகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தை போல, பின்தங்கிய மாவட்டங்களில் பஸ் விட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பின்தங்கிய மாவட்டங்களில் இருப்பவர்களுக்குத் தான் பஸ் வசதி செய்யவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. எல்லோருக்கும் பஸ் வசதி கிடைக்கவேண்டும் என்று தான் செயல்படுகிறோம். அதற்காகத்தான் ஒரு குழுவை அமைத்து கிராமத்திலே இருக்கிற மக்களுக்கு பஸ் வசதி கிடைக்க வேண்டுமென்ற ஏற்பாட்டை செய்து கொண்டிருக்கிறோம். நான் பலமுறை சட்ட மன்றத்திலே சொன்னதை போல நீங்களும் இப்போது சொல்லியிருக்கிறீர்கள்; பஸ் வசதி இல்லாமல் கஷ்டப்

படுகிறார்கள் என்று சொல்கிறீர்கள். ஏற்கனவே பஸ் வசதி பெற்றுவர்கள் இன்னும் கொஞ்சம் தியாகம் செய்தாக வேண்டும். கொஞ்சம் கட்டணம் உயர்த்தினால் கூட அதை பொறுத்துக் கொண்டால் தான் பின் தங்கிய இடங்களிலும் இருக்கிற மக்களுக்கு பேருந்து வசதியை நாம் விரைவாக கொடுக்க முடியும். இல்லையென்று சொன்னாலும் கொஞ்சம் காலதாமதம் ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது ஒன்றிரண்டு வருடங்கள் வரையில் அவர்கள் சிரமப்பட வேண்டியிருக்கும் என்று நான் பலமுறை சட்ட மன்றத்திலேயே எடுத்துத் தெரிவித்திருக்கின்றேன். அதற்கு நீங்கள் ஏதாவது வழிவகை செய்தால் தான் வேகமாக செய்ய முடியும், அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை நீங்களே சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : புதிய வழித்தடங்கள் வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகள் கிராமங்களுக்காக வேண்டும் என்று கோரிக்கைகள் விடப்படுகின்றன. லாப நோக்கத்தோடு செயல்படக்கூடிய வழித்தடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து லாபம் இல்லாத வழித்தடங்களை தனியார்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அங்கே தான் பிரச்சினை வருகிறது. நாம் சட்டமன்றத்திலே அப்படி அறிவிப்பை செய்வோமானால் நீதிமன்றமே ஒத்துக்கொள்ளாது. எனவே அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு நாம் போகமுடியாது. பொது மக்களின் வசதிக்காக அவர்களுடைய வசதிக்காக தனியார் துறையாக இருந்தாலும்சரி, போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும் சரி, போட்டி போட்டுக்கொண்டு செய்யவேண்டுமென்றுதான் இயங்குகின்றனவே தவிர லாபத்தை ஈட்டவேண்டுமென்ற முறையிலே அல்ல. தனியார்களை நட்டத்திற்கு தள்ளவேண்டுமென்ற நோக்கமோ அல்ல, யார் யாருக்கு எது அமைகிறதோ அதைச் செய்கிறோம். பொதுமக்களின் வசதிக்காக செய்கிறோம், லாபம் ஈட்டவேண்டுமென்ற நோக்கம் இல்லை, கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்றால் லாபத்திற்காக அல்ல. நிறையப் பேருந்துகளை வாங்கி பொது மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான். லாபத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, கிராமங்களுக்கு அதிக பஸ்கள் விடவேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கொள்கை, திட்டம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தற்போது அரசாங்கம் நகரப் பேருந்துகளை 25 கிலோ மீட்டர் என்பதை 30 கிலோ மீட்டர் வரை விடலாம் என்ற அறிவிப்பு வந்து 6 மாதம் ஆகிறது. உடனடியாக அனைத்து நகரப் பேருந்துகளையும் 30 கிலோ மீட்டர் வரை செய்வதற்கான முறையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா? அதிலே குறிப்பாக வரக்கூடிய ஜூன் 30 தேதிக்குள் அனைத்து நகரப் பேருந்துகளையும் 25 கிலோ மீட்டர்கள் செல்லக்கூடிய பேருந்துகளை 30 கிலோ மீட்டர் வரையில் செல்லலாம் என்று கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நம் போக்குவரத்துச் சட்டப்படி 30 கிலோ மீட்டர்க்கு மேலும் நகரப் பேருந்துகளை இயக்கக்கூடாது என்று சொல்கிறோமே தவிர கட்டாயம் 30 கிலோ மீட்டர் வரை இயக்கியாக வேண்டும் என்று சொல்ல சட்டத்திலே வழிவகை இல்லை. 30 கிலோ மீட்டர் வரையில் இயக்கலாம் என்று சட்டத்தை போடுகிறோம். எனவே தமிழகத்திலே எந்த எந்தப் பகுதிகளிலே அப்படி இருக்கலாம் என்று கருதுகிறார்களோ அப்படி அவர்கள் இயக்கிக் கொண்டு இருக்கிறார்கள். அரசாங்கப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில் 30 கிலோ மீட்டர் வரையில் பயன்படுகிற வகையில் நீட்டித்துக்கொள்ள உத்திரவு போட்டிருக்கிறோம். அதற்கேற்ப நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நீட்டிப்பதற்கு சில வழிமுறைகள் இருக்கின்றன. மீட்டிங் போட்டாக வேண்டும், எல்லோரையும் அழைத்தாக வேண்டும். அதிலே என்ன என்ன அப்ஜக்ஷன்கள் வருகின்றன என்பதைப் பார்த்தாக வேண்டும். அதற்குப் பின்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது அந்த அடிப்படையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. வெகு விரைவிலே அது முடிக்கப்படும்.

### போக்குவரத்துக் கழகங்களின் அமைப்பு மற்றும் செயல்திறன் குறித்த பட்டாபிராமன் குழுவின் அறிக்கை.

*வினா எண் 1044—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு பேருந்துக்கு 7.5 தொழிலாளர்கள் என்னும் நியதி இருக்க வேண்டுமென பட்டாபிராமன் குழு அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு இதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(இ) தற்பொழுது எத்தனை பேர்கள் ஒரு பேருந்துக்கு நியமனம் உள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பதில். (அ) ஆம். போக்குவரத்துக் கழகங்களின் அமைப்பு மற்றும் அவைகளின் செயல்திறன் பற்றி ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிக்க பட்டாபிராமன் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு ஒவ்வொரு பேருந்துக்கும் 7.5 என்ற முறையில் தொழிலாளிகள் இருக்கவேண்டுமென்று அறிக்கை கொடுத்திருக்கிறது.

(ஆ) இதன்மீது எல்லா போக்குவரத்துக் கழகமும் கடைப்பிடிக்கவேண்டுமென்று உத்திரவிடப்படுகிறது.

(இ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர் பிரிவு) மற்றும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர மற்ற எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் 7.5க்கு மேற்படாமல் தொழிலாளிகளை வைத்திருக்கிறார்கள், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் 10 பேர்களுக்கு மேற்படாமல் தொழிலாளிகளை வைத்து இருக்கிறார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது பட்டாபிராமன் குழு அரசுக்கு ஆலோசனை சொல்லியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். குழுவிலே தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் என்ன என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? எவை எவை எல்லாம் அமல்நடத்தப்பட்டிருக்கின்றன. அமல் நடத்தாமல் விடப்பட்டவை எப்போது அமல்படுத்தப்படும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பட்டாபிராமன் குழு ஒரு பேருந்தில் எவ்வளவு தொழிலாளர்களை வைத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி இங்கே கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள், அது சம்பந்தப்பட்ட பதில்கள் எல்லாம் இங்கே என்னிடத்திலே இருக்கின்றன— என்ன என்ன பரிந்துரைகளைச் செய்திருக்கிறது என்ற விவரம் இப்போது இல்லை, காரணம் நூற்றுக்கணக்கான பரிந்துரைகளை பல்வேறு வகைகளில் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவைகள் தற்போது என்னிடத்திலே இல்லை. இந்தக் கேள்வி சம்பந்தமான விளக்கம் தான் என்னிடத்திலே இருக்கிறது.

[முற்பகல் 9-50]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பல போக்குவரத்துக் கழகங்களிலே 7.5 என்ற கணக்கிலே தொழிலாளர்களை வைக்கப் பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவரகள் இங்கு சொன்னார்கள். ஆனால் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலே அந்த அளவிற்கு இல்லை என்றும் பல போக்குவரத்துக் கழகங்களிலே இன்று நிறையத் தொழிலாளிகளை அன்—அக்கவுண்டட் ஆக, தினக் கூலி தொழிலாளர்களாக வைத்து வேலை செய்து வருவதாகவும், அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதிலேயே நிறைய இலஞ்ச ஊழல்கள் இருப்பதாகவும். குறிப்பாகக் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கக் கூடிய ஜெனரல்-மேனேஜரால் அப்படி இலஞ்சம் வாங்கப்பட்டிருக்கிறது என்று ஒரு நோட்டீஸ்கூட விடப்பட்டிருந்தது ஒரு சங்கத்தால். இந்த நிலையிலே அந்தப் போக்குவரத்துக் கழகங்கள் சம்பந்தமாக பட்டாபிராமன் கமிட்டி ரிப்போர்ட்டிலே சேப்டர் 9—லே அவர்களுடைய பரிந்துரை 8 (3) என்ற அந்தப் பாராவிலே, அவர்கள் ஒரு அப்பாயின்ட்மெண்ட் போர்டை நியமனம் செய்ய வேண்டுமென்று சொல்லி இந்தப் போக்குவரத்துக் கழகங்களில் எல்லாத் தொழிலாளிகளையும் ரெக்ரூட் பண்ணுவதற்கும், இந்த நார்ம் சரிவரச் செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பதற்கும், அதைப்போன்று தேவைப்படும் இடங்களில் கூட்டவும் ஒரு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே ஒரு அப்பாயின்ட்மெண்ட் போர்டை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இங்கே நான் பதில் சொல்கிற பொழுது 7.5—க்கும் மேற்படாமல் தொழிலாளர்களை வைத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன். அடுத்தபடியாக இங்கே கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் மேலாளர் இலஞ்சம் வாங்கிக் கொண்டு தற்காலிகமாக ஆட்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் இங்கே சொன்னார்கள், அங்கே நோட்டீஸ் போடப்பட்டிருப்பதாகக் கூடச் சொன்னார்கள். நோட்டீஸ் போட்டதை வைத்து நாம் நடவடிக்கை எடுத்துவிட முடியாது. அதை வைத்துக்கொண்டு மட்டும் நாம் நம்பிவிட முடியாது. ஆனால் விசாரித்து உண்மை என்னவோ அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. பயிற்சிக்காக நாம் சிலரை எடுக்கிறோம். நேரடியாக எடுக்கும்பொழுது அவர்களுக்குப் பயிற்சியில்லாத காரணத்தால் தேவையான வேலையை ஒழுங்காகச் செய்ய முடியவில்லை என்ற காரணத்தால் அவர்களுக்குப் பயிற்சியைக் கொடுத்து அதற்கு பின்பு அவர்கள் முறையாகப் பயிற்சி பெற்ற பின்பு முழுநேர ஊழியர்களாக அவர்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசாங்கம்கூட உதவியைச் செய்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட அடிப்படையிலே எடுத்திருப்பார்களேயொழிய நேரடியாக வேண்டுமென்று அவர்களுக்காக எடுத்திருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இருந்தாலும் கண்காணிக்கப்படும்.

### சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பேருந்து உரிமச்சீட்டு

குறுகியகால வினா எண்— 22 திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள் கட்டாயமாக பஸ் பாஸ் கையில் வைத்துத்தான் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்ற உறுதியான உத்தரவை அரசு அறிவிக்குமா?

(ஆ) ஏழை நடத்துனர்கள், மரியாதையாலும் அச்சத்தாலும் பாஸ் நம்பரை கூட எம். எல். ஏ. க்களிடம் கேட்க தயங்கும் நிலை அரசு அறியுமா?

[1981 மே 14

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) பேருந்துகளில் பயணம் செல்பவர்கள் கட்டாயமாக பயணச் சீட்டோ அல்லது அனுமதிச் சீட்டோ வைத்திருக்க வேண்டுமென்று, மோட்டார் வாகன விதிகளின் கீழ் வகை செய்யப் பட்டுள்ளது; இதற்கான புதிய உத்திரவு வழங்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) ஒரு சில நேரத்தில் அப்படிப்பட்ட பிரச்னைகள் இருப்பதாக தகவல் வந்துள்ளது.

**திரு. மி. வின்சென்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் வந்துள்ள பிரச்னை யாது என அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, குறிப்பிட்டு யார் மீதும் அவர்கள் இங்கே சொல்லவில்லை. குறிப்பாகச் சில நேரத்திலே அவர்கள் பாஸ் கொண்டு வருவதற்கு மறந்து விடுகிறார்கள், அவர்களிடத்திலே கேட்கக்கூட எங்களுக்குக் கொஞ்சம் அச்சமாக இருக்கிறது; கேட்பது சரியல்ல என்றுகூட நாங்கள் நினைக்க வேண்டியதாக இருக்கிறது என்று தான் அவர்கள் பொதுபபடையாக சொல்லியிருக்கிறார்களே யொழிய, இவர்கள் கொண்டு வரவில்லை என்று பெயரைச் சொல்லி இது வரையில் சொல்லவில்லை எனவே, இந்த மன்றத்தின் மூலமாக நான் கேட்டுக் கொள்வது கூட, அந்தத் தொழிலாளர்கள் பயணச் சீட்டைக் கேட்கிறபொழுதோ அல்லது அந்தப் பாஸைக் கேட்கிற பொழுதோ காட்டக்கூடிய வாய்ப்பை உறுப்பினர்கள் ஏற்படுத்திக் கொள்வதுதான் இதற்கு ஒரு முடிவாக ஏற்படும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. மி. வின்சென்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கெஸ்டையும் சட்ட மன்ற உறுப்பினர்கள் அழைத்துச் செல்லலாம் என்பதன் விளக்கத்தை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, அதற்கான விளக்கம் இப்பொழுது கொடுக்க முடியாது. இன்னும் கொஞ்சம் அதைப்பற்றி விவரமாக பேச வேண்டியிருக்கிறது பேரவைத் தலைவர்களோடு. அதைப் பேசிய பின்புதான் அதன்மீது நான் பதிலைச் சொல்ல முடியும்.

**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களிடம் பாஸ், கேட்பது என்பது அவர்கள் கேட்கவே வேண்டியதில்லை. சட்டமன்ற உறுப்பினர்களே காட்ட வேண்டும். ஏனென்றால் கண்டக்டர்களிலே சில பேர்கள் பயப்படக் கூடியவர்கள் இருக்கலாம்; சட்டமன்ற உறுப்பினர்களாயிற்றே, ஏதாவது செய்து விடுவார்களோ என்று. சிங்கப்பூரில் Without demand, Shew your pass என்று இங்கிலீஷிலே எழுதியிருப்பார்கள். ஆகவே, டிமான்ட் அதாவது கோரிக்கை இல்லாமலேயே கண்டக்டரிடம் பாஸை like any government servant காட்ட வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். ஆகவே, சட்ட



1981 மே 14]

மன்ற உறுப்பினர்கள் என்றாலும் கண்டக்டரிடம் பாஸைக் காட்ட வேண்டுமென்று அரசாங்கம் அறிவுறுத்துவதற்கு முன் வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் கேட்டதே அறிவுறுத்தியது போலத்தான். எனவே அரசாங்கம்தான் சட்டமன்ற உறுப்பினர்களை இது அறிவுறுத்த வேண்டுமென்று நினைப்பது அவ்வளவு சரியாக இல்லை. ஆகவே, இதை மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் சொல்லி அதை நீங்கள் காட்டியாக வேண்டுமென்று சொல்ல வேண்டும். இதை, அரசாங்கத்திற்காக அல்ல, அந்த ஏழை நடத்துனர்களை காப்பாற்றுவதற்காக நீங்கள் செய்தாக வேண்டுமென்ற கோரிக்கையை அல்லது அந்த வேண்டுகோளை நான் இந்த சட்டமன்றத்திலே அந்தத் தொழிலாளர்களுடைய சார்பிலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது எங்களுடைய கடமை என்றுகூட நான் கருதுகிறேன்.

**திரு. எம். தங்கவேல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் ஒரு மெம்பர் தன்னுடைய மனைவியை அழைத்துச் செல்லலாம் என்ற நியதி இருக்கிறது. ஆனால்' ரெயில்வேயிலே, எம்.பி.க்கள் தங்களுடைய அட்டென்டர்களை யாவது, யாரையாவது அழைத்துச் செல்லலாம் என்று அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றித்தான நான் ஏற்கனவே சொன்னேன். அதை இப்பொழுது தலைவரோடு விவாதித்து, உறுப்பினர்களுக்குத் தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

வடாற்காடு மாவட்டத்தில் மண்பாண்டத் தொழில் செய்பவர்களுக்கு

தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம்.

*வினா எண் 1045—**திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள மண்பாண்ட தொழில் செய்பவர்களுக்கு தொழில் கருவிகள் அரசாங்கம் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் கிராமங்கள் வாரியாக எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:—(அ) மற்றும் (ஆ) மண்பாண்டத் தொழில் செய்வதற்கும், கருவிகள் வாங்குவதற்கு மாக 27 நபர்களுக்கும், செங்கல் சூளை அமைக்க 7 நபர்களுக்கும் தமிழ்நாடு கதர் கிராம வாரியத்தால் 1979-80—ல் நிதி உதவி அளிக்கப்பட்டது. அவ்வாறு அளிக்கப்பட்ட நபர்களின் விவரம் கிராம வாரியாக பின்வருமாறு இருக்கிறது.

| மண்பாண்டத் தொழில் கிராமம். | | நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | மேல்மயில் | 3 |
| 2 | கம்மகவுன்பெட் | 1 |
| 3 | மடவலம் | 6 |
| 4 | பரண்டப்பாரி அஞ்சல் | 7 |
| 5 | புதூர் | 1 |
| 6 | விலபாக்கம் | 1 |
| 7 | மிர்சாபெட் | 1 |
| 8 | போரூர் | 2 |
| 9 | கே. பி. குப்பம் | 2 |
| 10 | வெல்லலூர் | 2 |
| 11 | கருத்துவம்பாடி | 1 |
| | மொத்தம் | 27 |

| செங்கல் சூளை கிராமம் | | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பக்கிரிப்பேட்டை | 1 |
| 2 | மேல் அனத்தூர் | 1 |
| 3 | சேத்துவா குப்பம் | 1 |
| 4 | வடுக்கன்தாங்கல் | 1 |
| 5 | கரிக்கல் | 1 |
| 6 | வேலூர் | 1 |
| 7 | ஏர்த்தாங்கல் | 1 |
| | மொத்தம் .. | 7 |



### விளவங்கோடு தொகுதி கடலோரப் பகுதிகளில் ஏற்படும் கடல் அரிப்பைத் தடுக்கும் திட்டம்.

*வினா எண் 1046—திரு. டி. மணி: மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி கடலோரப் பகுதிகளில் ஏற்படும் கடல் அரிப்பைத் தடுக்க அரசு இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கியுள்ளதா?

(ஆ) அப்பணி எப்பொழுது ஆரம்பமாகும்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) (1) ஏணையம் (விரிவாக்கம்)

(2) முள்ளூர்த்துறை

(3) இராமன்துறை

(4) நீரோடைத்துறை

ஆகிய இடங்களில் வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் ஏணையம் (விரிவாக்கம்), இராமன்துறை ஆகிய இடங்களில் வேலைகள் துவக்கப்பட்டுவிட்டன. முள்ளூர்த்துறை வேலைக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. நீரோடைத்துறையில் வேலைகள் துவக்கப்பட்டு இருக்கிறது.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மூலக் கேள்வி விளவங்கோடு தொகுதியில் கடலோரப் பகுதியில் கடல் ஆக்கிரமிப்பைத் தடுப்பது சம்பந்தமானது. 1977—லிருந்து அந்த விளவங்கோடு தொகுதியிலே ஏரானியம் துறை என்று சொல்லப்படுகின்ற பகுதியிலே ஒரு மாதாகோயில் இருக்கிறது, அந்த மாதா கோயில் உள் படிக்கட்டு வரையிலும் 4 முறை கடல் ஆக்கிரமித்துள்ளது. பல்வேறு கிராமங்களிலே, ஏரேனியம்துறை, தூத்தூர், பூத்துறை போன்ற பல்வேறு பகுதிகளிலே கடல் ஆக்கிரமித்து, பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வீடுகள் சேதம் அடைந்துள்ளன. ஆனால் நாகர்கோவிலில் இருக்கிற கடல் அரிப்புக் கோட்டம் என்று சொல்கிற அலுவலக அதிகாரியை நான் சந்தித்தபொழுது அந்தப் பகுதியைப்பற்றி எந்தத் தகவலும் அவர்கள் சொல்லத் தயாராக இல்லை. எனவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம் விளவங்கோடு பகுதியிலே நீரோடி நீங்கலாக இருக்கிற இதரப் பகுதியிலே இந்த கடல் அரிப்பைத் தடுப்பதற்கு இந்த நிதி ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட பொறியாளரைப் பற்றி இங்கு மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். ஆனால் அரசு தீவிரமான நடவடிக்கை எடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தொகுதியில், தாலுகாவாரியாக: விளவங்கோடு தாலுகாவில் 16 கிராமங்களையும், கல்குளம் தாலுகாவில் 12 கிராமங்களையும், அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் 13 கிராமங்களையும் சேர்த்து, 30 கிலோ மீட்டர் நீளத்திற்கு கடல் ஓரமாக அரிப்புத் தடுப்புச்சுவர் ஒன்றை ஏற்படுத்துவதற்காக ரூ, 590 இலட்சம் மதிப்பீட்டிலே திருத்தப்பட்ட பெருந்திட்டம் ஒன்றை மாநில அரசு தயார் செய்து, மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கடற்கரை ஓரத்தில் வசிக்கும் மீனவர்கள் வீடுகள், விலை மதிப்புமிக்க சொத்துக்கள், மற்றும் அன்னாரின் உயிர்கள் அங்கு அடிக்கடி ஏற்படும் கடல் அரிப்பின் காரணமாக அழிக்கப்படுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள திருத்தப்பட்ட பெருந்திட்டத்திற்கு ஒப்புதல் பெறாத அளவில் இருக்குப்போதே தவிர்க்க முடியாத அவசியத்தின் காரணமாக, மாண்புமிகு புரட்சித் தலைவரின் தமிழக அரசு கீழ்க்குறிப்பிட்ட கிராமங்களுக்கு கடல் அரிப்பினால் ஏற்படும் நட்டங்களைத் தடுப்பதற்கு 1979-80 மற்றும் 1980-81ஆண்டில் கடல் தடுப்புச் சுவரைக் கட்டுவதற்காக விளவங்கோடு தாலுகாவிலே ஏனைய விரிவாக்கத்திற்காக 135மீட்டரில் ரூ.2,54,000-க்கும், விளவங்கோடு முள்ளூர் துறையிலே 335 மீட்டர் நீளத்திற்கு ரூ, 6 இலட்சம் செலவிலும், இராமன்துறை 250 மீட்டர் நீளத்திற்கு ரூ.15 இலட்சம் செலவிலும், விளவங்கோடு நீரோடித்துறையிலே அடுத்த 100 மீட்டரிலே ரூ 14 இலட்சத்திற்கும் அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நீரோடைத் துறையிலே கற்கள் எடுபோடும் இயந்திரம் வரப்பெற்று நிறுவப்படும் நிலையில் உள்ளது. வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. டி. மணி: மாண்புமிகு அமைச்சர் பல்வேறு விவரங்களை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். இந்த விவரங்களைப் பார்க்கிறபோது ஏற்கனவே அவர் கொடுத்திருக்கிற தகவலில் விளவங்கோடு தொகுதி அதில் உட்படவில்லை. அதிலே வராது. ஆகவே மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதல் கிடைக்கிறபோது இந்த எரேனியம் துறை, பூத்துறை, தூத்தூர் என்று நான் குறிப்பிட்டிருக்கிற அந்த இடங்களை இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா?





மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவர் அவர்களே, கண்டிப்பாக அது சேர்த்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் கடலோரத்தில் ஏற்பட்டிருக்கிற கடலரிப்பைத் தடுக்க தற்போது எங்கெங்கே பணிகள் நடந்து வருகின்றன. குமரி மாவட்டத்தில் கடலரிப்பைத் தடுக்க எத்தனை இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட குறிப்பு என்னிடத்தில் இல்லை. உறுப்பினர் தனியாக கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

2. போப் ஆண்டவர் விரைவில் நலம் பெற வாழ்த்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு ஒரு முக்கியமான குறிப்பினைக் கொண்டு வர நான் விரும்புகிறேன். போப் ஆண்டவர் 2-வது ஜான் பால் அவர்கள் நேற்று எதிர்பாராத வகையில் வாடிகன் நகரில் செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் பொது மக்களுக்கு காட்சி அளிக்க வருகை தந்தபோது அவர் சுடப்பட்டார் என்றும் அவர் கவலைக்கு இடமான வகையில் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார் என்றும் செய்தித்தாள்களில் வந்த செய்தி நமக்கெல்லாம் அதிர்ச்சி தரக்கூடிய ஒன்றாகும். அவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேதான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தாலும் உலகத்திலே வாழ்கின்ற கத்தோலிக்க கிருத்துவர்கள் அத்தனை பேர்களுடைய நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் பெற்ற அவர் எதிர்பாராத வகையில் சுடப்பட்டார் என்பது நமக்கெல்லாம் அதிர்ச்சியைத் தருகிற ஒன்றாக அமைந்திருக்கிறது. என்றாலும் அவருடைய இருதயமும், நுரையீரலும் நல்ல முறையில் வேலை செய்கின்றன என்றும், குண்டு அடிவயிற்றிலே பாய்ந்திருக்கிறது என்றும், கழுத்துக்குப் பக்கத்திலேதான் பாய்ந்திருக்கின்றது என்றும், இருந்தாலும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு அவர் நிதானத்தோடு இருக்கிறார் என்றும் செய்திகள் வந்திருக்கின்றன. கவலைப்படுவதற்கில்லை என்று செய்தி வருகிறது. இருந்தாலும் அவர்கள் கவலைக்கிடமான வகையிலேதான் இன்னும் 2, 3 நாட்களுக்கு இருக்கவேண்டும் என்றும் செய்திகள் வந்திருக்கின்றன. இருந்தாலும் இந்த அவையின் சார்பாக தங்களின் மூலமாக இந்த அவை தன்னுடைய நல்ல எண்ணத்தையும் விருப்பத்

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.
831ம் பக்க இணைப்பில் பார்க்க

தையும், அவர் விரைவிலே முழு உடல் நலம் பெற்று, எப்போதும் போல அவருடைய பணியை ஆற்றுவதற்கான வாய்ப்பு ஏற்படத்தக்க அளவுக்கு அவர் முழு உடல் நலம் பெறவேண்டும் என்ற விருப்பத்தை, விழைவை, நல்ல எண்ணத்தை இந்த அவை தெரிவிக்கிறது என்ற தன்மையை, தங்கள் மூலமாக வாடிகன் சிட்டியினுடைய அந்த போப் ஆண்டவருடைய செயலாளருக்கு அனுப்பிவைப்பது முறையாக இருக்கும்.

இந்த அவையினுடைய அத்தனை பேர்களும் ஒரே மனதாக அந்தக் கருத்தைத் தெரிவிக்கிறார்கள் என்ற முறையில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்களுடைய கருத்துக்களோடு என்னுடைய எண்ணங்களையும் நான் பகிர்ந்து கொள்கிறேன். போப் ஆண்டவர் அவர்கள் எதிர்பாராத வகையிலே சுடப்பட்டார் என்ற செய்தியையும், அதனாலே அவர் உடல் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார் என்பதையும் காலையிலே செய்தித்தாள்களிலே பார்த்து நானும் திடுக்கிட்டேன். போப் ஆண்டவர் அவர்களை நேரிலே சந்தித்து அளவளாகிற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். அவர் பூரண குணம் அடைய வேண்டும் என்கிற இந்த அவையின் பெருவிருப்பத்தோடு என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்து அவர் பூரணமாகக் குணம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தை நானும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### அ. குரோம்பேட்டை கலவரம்.

**திரு. என் எஸ், வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இரண்டு பிரச்னைகள் குறித்து ஒழுங்குப் பிரச்னை கிளப்புவதற்கு தங்களுடைய மேலான அனுமதியைக் கேட்டுக்கொள்கிறேன். ஒன்று இங்கே செவ்வாய்க் கிழமை மாலை சட்டமன்றம் நடந்து கொண்டு இருக்கின்ற போதே சென்னைக்கு அருகாமையில் உள்ள குரோம்பேட்டை ரயில் நிலையம் அருகே 10 சமூக விரோதிகள் ஒன்று சேர்ந்து கொண்டு அங்கேயிருக்கும் மார்க்கெட், சினிமாக் கொட்டகை ரயில் நிலையம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களையும், அந்த இடங்களில் உள்ள பொருள்களையும் பயங்கரமாகத் தாக்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த பிரச்னையை இப்போது எழுப்பக் கூடாது. இதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர விரும்பினால், கொண்டு வரலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலேயே இப்படிப்பட்ட பயங்கரமான சம்பவம் நடந்து இருப்பதால், மக்கள் மத்தியில் ஒரு பெரிய பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, அரசுத் தரப்பில் இது குறித்து ஏதாவது செய்தி சொல்ல முன்வருவார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஏற்கனவே இந்தப்



பொருள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவற்றிற்கான செய்திகளைச் சேகரித்துத் தர அவகாசம் இல்லை என்பதால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இருப்பினும், அரசுத் தரப்பில் ஏதேனும் கருத்து இருந்தால் கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதுபற்றிய முழு விவரங்கள் கிடைக்கவில்லையென்றாலும், மாண்புமிகு உறுப்பினர்களின் எண்ணங்களுக்கு மதிப்பளித்து, அது பற்றிய விவரங்களைச் சேகரித்து, அவற்றைத் தவிர்க்க, தடுக்க என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அதை அரசு எடுக்கும். எதிர்காலத்தில் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் நிகழாமல் இருப்பதற்கும் காவல் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும். அந்தகைய நடவடிக்கைகளை எடுப்பதில் அரசு உறுதியாக இருக்கும் என்பதை மட்டும் இப்போது இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. என், எஸ். வி. சித்தன்:** இரண்டு பிரச்னைகள் பற்றி கேட்க நான் அனுமதி கேட்டேன். ஒன்றுதான் கேட்டு இருக்கிறேன். ஆகவே. பாதி கிணறு தாண்டிய நிலையில் இருப்பதால், மற்றொன்றையும் கேட்க அனுமதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஒருவருக்கே திரும்பத்திரும்ப வாய்ப்பு அளிக்க முடியாது.

### ஆ. கைதான தொழில் நுட்பத் தொழிலாளர்களை விடுதலை செய்தல்.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு வேளாண்மைத் தொழில் நுட்பத்தொழிலாளர்கள் நடத்தி வந்த உண்ணாவிரதம் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த நேரத்தில், அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தினால் அவர்களை அழைத்துப் பேசுவோம் என்று சொன்னார்கள். அவர்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி நடத்திய போராட்டத்தின் காரணமாக அவர்களில் கிட்டத்தட்ட 820 பேர் சிறையில் இருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் மாண்புமிகு முன்னவரின் உறுதிமொழியை அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, அவர்களுடைய உண்ணாவிரதத்தையும் நிறுத்தச்சொல்லி, அவர்களும் உண்ணாவிரதத்தை நிறுத்தி இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, கிட்டத்தட்ட 4,000,5,000 ஆசிரியர்கள் சிறையில் இருக்கிறார்கள். நாளைக்கு அசெம்பிள் முடியப் போகிறது. ஆகவே, அவர்களை விடுதலை செய்கின்ற அறிவிப்பை இங்கே வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய கோரிக்கை சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்த அரசு முன்வர வேண்டும். உடனடியாக அவர்களை விடுதலை செய்யும் அறிவிப்பை வெளியிட வேண்டும் அதன்மூலம் பச்சுவார்த்தை நடத்த ஒரு சுமுகமான சூழ்நிலையினை ருவாக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ணாவிரதத்தை நிறுத்தி இருக்கிறார்கள். போராட்டத்தைக் கைவிட்டதாக அறிவிப்பு வரவில்லை. அதற்குப் பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, உண்ணாவிரதத்தை நிறுத்தி, போராட்டத்தையும் நிறுத்திவிட்டார்கள். ஆகவே, அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கவேண்டும். சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள அந்த 820 வேளாண்மைத்தொழில் நுட்ப அலுவலர்களை விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்களாகப் போராட்டத்தைத் தொடங்குவதும், நிறுத்துவதும், பேச்சுவார்த்தைக்கு அழைக்கவேண்டும் என்பதும் அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டும் என்று வற்புறுத்துவதும் முறையல்ல. உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்கள் என்பது கேட்டு மகிழ்ச்சி அடைகிறோம். பரிசீலிக்கிறோம் என்று சொல்கிறபோது சட்டப்படி பரிசீலித்து என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வோம்.

4. உரிமைப் பிரச்சினை.

பொறியியல்துறை அதிகாரி திரு மணவாளன் மீதும், பத்திரிகை மீதும்

**திரு. ரா. உமாநாத்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரியும். நான் சாதாரணமாக அட்ஜெர்ன்மெண்ட் மோஷன், பிரிவிலேஜ் மோஷன் ஆகியவற்றை இங்கே வந்து ரெயிஸ் செய்வது இல்லை. உங்களுடைய சேம்பருக்குத்தான் வருவது வழக்கம். இன்று சட்டமன்றம் நடைபெறுவது கடைசி நாள். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு எக்ஸ்டிராடினரி பொசிஷனில் நான் இருப்பதால், இங்கே ஒரு பிரச்னை ரெய்ஸ் செய்ய விரும்புகிறேன்.

குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய அவைக்குக் கொடுத்த தகவல் சம்பந்தமாக அது இருப்பதாலும், முதலமைச்சர் அவர்கள் இந்த அரசாங்கத்தின் ப்ரீ ஏஜென்ட்டாகச் செயல்படுவதைத் தடுக்கும் வகையில் உள்ள பிரச்னை என்பதாலும், நான் அதை இங்கே எழுப்புவது அவசியம் என்று கருதுகிறேன்.

கடந்த 9-ம் தேதி அன்று மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசுகின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில அதிகாரிகள் சம்பந்தமாக இந்தப் பக்கத்திலிருந்து ரெய்ஸ் செய்த பிரச்னைகள் குறித்து, அந்தத் துறையின் சார்பாகப் பதில் சொன்னார்கள்.

முற்பகல் 10.10]

அதை எந்த அதிகாரியும் இதுவரை எதிர்க்கவில்லை. ஆனால் மணவாளன் மட்டும் இங்கே கொடுத்த தகவல் சம்பந்தமாக, முதலமைச்சர் மூலமாக கரக்ஷன் கொடுப்பதற்குப் பதிலாக நேரே பிரஸ்க்குப் போயிருக்கிறார் என்றால் Extraordinary situation which will affect the rights of the Hon. Chief Minister and the rights of the very House.



அதனால்தான் பிரிவிலேஜ் மோஷன் கொடுத்திருக்கிறேன். இங்கே பேசியது சரியில்லை என்றால் சம்பந்தப்பட்ட அமைச்சர் மூலம் கரக்ஷன் கொடுத்திருக்கலாம். The officer has to abide by himself. He has no right to go to the Press behind the Chief Minister and express his views affecting the rights of the House.

அது மட்டுமல்ல; முதலமைச்சர் சொன்னது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று பிரஸ் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார். இங்கே பேசியது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று சொல்லக்கூடிய அவர் இன்னும் சர்வீசில் இருப்பார்; இருக்கிறார். அது பிரிவிலேஜ் இல்லையா? கன்டம்ட் ஆஃப் தி ஹவுஸ் இல்லையா? ஆகையால்தான் பிரிவிலேஜ் மோஷன் கொடுத்திருக்கிறேன். ஆகவே தயவுசெய்து இந்த பிரிவிலேஜ் மோஷனை அனுமதிக்க வேண்டும். இல்லை என்றால் நான் எஸ். பி. பற்றி பேசியிருக்கிறேன். அவர் இப்படி ஸ்டேட்மெண்ட் கொடுக்கலாம், நாளை ஐ. ஜி. இப்படி ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கலாம். இப்படி ஒவ்வொருவரும் பிரஸ் ஸ்டேட்மெண்ட் கொடுத்தால் இந்த ஹவுசின் நிலைமை என்னவாகும்? ஆகவே, தலைவரவர்களே, நீங்கள்தான் ப்ரொட்டக்ஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நாங்கள் மதிக்கிறோம். இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. இதிலே பேரவைத் தலைவர் எடுக்கின்ற முடிவுக்கு அரசு கட்டுப்படுகிறது. உண்மையிலேயே பொறியியல் துறை அதிகாரி வெளியிலே சென்று அறிக்கை வெளியிட்டது, இந்த நிர்வாகத்தை குழப்பத்தில் ஆழ்த்துவதும், தம் கடமை உணர்வை தவறான பாதையில் பயன்படுத்திக்கொள்ள ஒவ்வொரு அதிகாரியும் துணிவதற்கு உந்தித் தள்ளுவதும் ஆகும் என்பதை நானும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை அனுமதிக்கக்கூடாது என்பதும், துறை நடவடிக்கை என்று இருந்தால் கூட, இதைப்போன்று சட்டமன்றத்தினுடைய உரிமையைப் பாதுகாக்க உரிமைக் கமிட்டிக்கு இப்பிரச்சினை போவதுதான் சரியாக இருக்கும், போக வேண்டுமென்பது எங்களுடைய எண்ணம். இதிலே பேரவைத் தலைவர் என்ன முடிவை எடுக்கிறார்களோ அதற்கு அரசு கட்டுப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது குறித்து அரசு ஒரு தீர்மானத்தை மொழிய வேண்டும். அதோடு திரு. விஜயராகவன் அவர்களும் இந்தப் பொருள்பற்றி ஒரு பிரிவிலேஜ் மோஷன் கொடுத்திருக்கிறார்கள். அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவரவர்களே, அவர் இந்தச் சபையிலே இல்லாத ஒருவர். ஆகையால் இதிலே கருத்துத் தெரிவிக்க எங்களுக்கும் வாய்ப்பு கொடுத்துவிட்டு முடிவு செய்ய வேண்டும். இன்றைக்கு இல்லாவிட்டால் இன்னொரு நாளைக்கு இதை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசுத் தரப்பிலே தீர்மானத்தை மொழிந்த பிறகு உங்களுடைய கருத்தைச் சொல்லலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே கூறிய கருத்துக்களை ஒட்டி ஒரு குறிப்பிட்ட அதிகாரி, பொறியியல் துறையைச் சேர்ந்த திரு. மணவாளன் என்பவர் வெளியிலே தெரிவித்திருக்கிற கருத்து இந்த அவையின் உரிமையை மீறியது, இந்த அவையின் உரிமையை பாதிக்கிறது என்று இருப்பதால் இந்தப் பிரச்சனையை அவை உரிமைக் குழுவிற்கு விட வேண்டும் என்று இந்த அவை தீர்மானிக்கிறது.''

திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட நிர்வாகம், தலைமையிடப் பணியாளர்கள் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற போது இங்கே திரு. மணவாளன் என்று சொல்லப்படுகின்ற சீஃப் எஞ்சினியர் பற்றிச் சொல்லப்பட்ட சில கருத்துக்களுக்குப் பதில் அளிக்கின்ற வகையில் பல கருத்துக்களைச் சொன்னார்கள். ஹோசூரில் கட்டப்பட்டிருக்கிற ஒரு அணை பற்றி, அந்த அணையைக் கட்டுவதில் ஏற்பட்டிருக்கிற சில பிரச்சினைகளைப் பற்றி விளக்கமாக இங்கே சொன்னார்கள். சொல்லுகின்ற போது பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்த அணை கட்டுவதற்கான நில ஆர்ஜிதம் பண்ணாமலேயே அந்த அணையைக் கட்டிவிட்டார்கள் என்றும் அதற்குப் பொறுப்பாக சீஃப் இன்ஜினியர் இருந்தார் என்பது போன்ற கருத்துக்களைச் சொன்னார்கள். அவ்வாறு இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சரால் சொல்லப்பட்ட கருத்துக்களை மறுத்துரைக்கின்ற வகையிலே இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே இந்த மாதம் 11 ஆம் தேதி அன்று ஒரு அறிக்கையின் மூலமாக மறுப்புத் தெரிவித்திருக்கிறார் அந்த சீஃப் இன்ஜினியர் அவர்கள். அப்படி அவர் மறுத்ததன் மூலம் முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே சொன்ன கருத்துக்கள் உண்மைக்கு மாறானது என்கின்ற பொருள்படுகின்ற வகையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே இந்த நிலையிலே இதுபற்றிய உண்மை நிலை இந்த மன்றத்திற்குத் தெரிந்தாக வேண்டும். இதுபற்றிய உண்மையினைக் கண்டுபிடித்து உண்மையினை இந்த மன்றத்திற்குச் சொல்லியாக வேண்டும். ஏனென்றால் இந்த மன்றத்தின் உரிமையே இதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே நிர்வாகத்திலே இப்படிப்பட்ட சிக்கல்கள் வருகின்றபோது இதுபோன்ற நிலைமைகள் நீடித்துக்கொண்டே போகுமானால் அமைச்சரவையை நடத்திக்கொண்டு போக முடியாது. ஆனால் ஒருவேளை இந்த மன்றத்திலே சொல்லப்பட்ட கருத்துக்கள் தவறான கருத்துக்கள் என்றிருந்தாலும் கூட இதுபற்றிய உண்மை நிலையை நாம் அறிந்துகொள்ளவேண்டும் என்பதால் இதை நிச்சயமாக உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டும் என்று அரசாங்கமே முன்வந்து அவை முன்னவர் அவர்களின் வாயிலாக இந்தத் தீர்மானத்தை மொழிந்திருக்கின்ற காரணத்தால் இந்தப் பிரச்சினை உரிமைக் குழுவுக்கு அனுப்பப்படவேண்டும் என்பதை வரவேற்று நான் அமர்கிறேன்.



திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, மிஸ்டர் மணவாளன் அவர்கள் பத்திரிகைக்கு அறிக்கை விட்ட விஷயம் சம்பந்தமாக ஆரம்பத்திலேயே நான் சொன்னேன். ஆனால் இப்போது பிரிவிலேஜ் மோஷன் என்ற அடிப்படையிலே சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். அவர் இப்போது கவர்ன்மென்ட் சர்வீஸிலே இருக்கிறார். தாட் ஈஸ் மோஸ்ட் இம்பார்டன்ட் பாயின்ட். அப்படி கவர்ன்மென்ட் சர்வீஸிலே இருந்துகொண்டே சட்டசபையிலே நடைபெற்ற உண்மை பற்றி தெரிந்துகொண்டே அதாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்த தகவல்களைப் பற்றித் தெரிந்துகொண்டே அதுபற்றிய மறுப்பினை மாண்புமிகு முதலமைச்சரின் மூலமாக இந்த அவைக்குத் தெரியப்படுத்துவதற்குப் பதிலாக இந்த அவையினுடைய முதுகுக்குப் பின்னால் சென்று அவைக்கு மறைத்து விட்டு நேராக பிரஸ்ஸுக்குப் போய் இருப்பது என்பது தான் முக்கியமாக அவையின் உரிமையை மீறக்கூடிய பிரச்சினையாகும். ஆகவே அமைச்சர் மூலமாக விவரங்களைத் தெரிந்து கொள்ளவேண்டிய இந்த அவையின் உரிமையை அவர் மீறியுள்ளார். ஆனால் அவையிலே கொடுக்கப்பட்ட தகவல்களை மறுத்துத்தான் அங்கே இன்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையிலே ஸ்டேட்மென்ட் கொடுத்திருக்கிறார். இது டிப்பார்ட்மெண்டு விதிகளை மீறிய செயலாகும். ஆகவே அரசாங்கத்திலே இருக்கக்கூடிய ஒருஅதிகாரி பிரஸ்ஸுக்குப் போய் இருப்பது தப்பு. ஆனால் இந்தப் பிரச்சினை இந்த அவை சம்பந்தப்பட்டது என்று தெரிந்த பிறகும் அவர் பிரஸ்ஸுக்குப் போய் ஸ்டேட்மென்ட் கொத்திருக்கிறார் என்றால் இதிலிருந்து என்ன தெரிகிறது? இன்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையிலே அவர் கொடுத்திருக்கின்ற ஸ்டேட்மென்டிலே ''நில ஆர்ஜிதம் செய்யாமல் ஹோசூர் டாமைக் கட்டியதாக சனிக்கிழமை அன்று முதலமைச்சர் சட்டப்பேரவையில் கொடுத்திருக்கின்ற அறிக்கை பற்றி சில உண்மைகளைப் பொதுஜனங்கள் முன்னிலையிலே வைக்க திரு. மணவாளன் விரும்பினார், அதை ஒட்டித்தான் இது எல்லாம்'' என்று வந்திருக்கின்றது. கான்சியஸ்லி சட்டப் பேரவையிலே கொடுத்த தகவல் சம்பந்தமாக, தெளிவாக என்ற போர்வையிலே அதாவது அன்டர் தி கைஸ் ஆஃப் க்ளாரிஃபிகேஷன் என்ற போர்வையிலே சட்டப் பேரவையிலே அமைச்சர் மூலமாகக் கொடுக்க வேண்டிய அறிக்கைகளை — அதாவது மறுப்பினை அமைச்சர் ஏற்றுக்கொண்டால் — பத்திரிகைக்குக் கொடுத்திருக்கிறார்.

இந்த ப்ரீச் ஆஃப் பிரிவிலேஜிலே இன்னொரு முக்கியமான விஷயம் அடங்கி இருக்கின்றது.

No member of the House should be pressurised by outside means like Press, Money or anything. ஆகவே பிரஸ் ஸ்டேட்மென்ட் கொடுத்திருப்பதால் சுதந்திரமாக இந்த அவையினை இயங்க விடாமல் பிரஷரைஸ் பண்ணக்கூடிய காரியம் இது. அப்படி பிரஷரைஸ் பண்ணக் கூடாது. விருப்பப்படி செயல்பட வேண்டும்.

[முற்பகல் 10-20]

அப்படி பிரஸ் ஸ்டேட்மென்ட் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுதந்திரமாக ஒரு ரெப்ரசன்டேடிவ் என்ற முறையிலே இங்கே பேசுவதற்குப் பதிலாக பிரஸ்ஸை உபயோகப்படுத்திக் கொண்டு, அவர் மீது பிரஷரைஸ் கொண்டு வந்து, அவர் விரும்பக்கூடிய முறையிலே பேசுவதற்கு என்று விஷயத்தைக் கொண்டு வந்திருப்பதினாலே, இதிலே இன்னொரு சீரியஸ் பிரீச் ஆப் பிரிவிலேஜ் விஷயம் அடங்கியிருக்கிறது.

அத்துடன் சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உண்மைக்குப் புறம்பாக பேசி உள்ளார் என்று பத்திரிகையில் குறிப்பிடுவதன் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அந்தரங்கசுத்தியையே ஒரு சர்வீஸில் இருக்கிற ஆபீசர் கொஸ்டின் பண்ணுகிறார் என்பதுதான். அதை பகிரங்கமாகச் செய்ததன் மூலம் முதல்வர் அவர்கள் சுதந்திரமாக செயல்பட முடியாமல் He is intimidating indirectly, எச்சரித்திருக்கிறார் என்றும் வருகிறது. ஒரு கொஸ்டின் இதிலே எழலாம். என்ன கொஸ்டின் என்றால், சர்வீஸில் இருக்கிற ஒரு ஆபீசருக்கு, தங்கள் பெயரில் சார்ஜ் வந்து விட்டால் தாங்கள் எப்படி ரிப்ளை பண்ணுவது என்று? எப்படி ரிப்ளை பண்ணுவது என்று தெரிந்து தானே சர்வீஸில் இருக்கிறார்கள்.

இதிலே 2 விஷயங்களை தயவுசெய்து டிஃபரென்ஷியேட் பண்ணவேண்டும். ஒன்று நான்-அபிஷியல்ஸ் இருக்கிறார்கள் வெளியே. இன்னொன்று அபிஷியல்ஸ் இருக்கிறார்கள் கவர்ன்மென்ட் சர்வீஸிலே. சர்வீஸிலே இருக்காத நான் அபிஷியல்ஸ் பற்றி, வெளியே இருப்பவர்களைப் பற்றி, நான் குற்றம் சாட்டுகிறேன் என்று சொன்னால் அவர்கள் இங்கே வந்து பதில் சொல்ல முடியாது என்று சொல்லலாம். ஆனால் நான் இங்கே ரெயிஸ் பண்ணியிருப்பது, கவர்ன்மென்ட் அதிகாரிகளைப் பற்றி. அவர்கள்மீது குற்றம் சாட்டினால். அதிகாரிகளுக்கு டிபெண்ட் (defend) பண்ணவோ பண்ணாமல் இருந்து சொன்ன குற்றம் சரி என்று ஏற்றுக்கொள்ளவோ அமைச்சர்கள் இருக்கிறார்கள், அதிகாரிகளின் சார்பாக பதில் சொல்ல. அது சர்க்காரின் ரெஸ்பான்சிபிலிட்டி. ஆகவே, அந்த அதிகாரிதான் முதலமைச்சரை கன்வின்ஸ் பண்ண வேண்டும். அவர் கன்வின்ஸ் ஆகவில்லை என்று சொன்னால், "He has to submit and he has no other go."

ஆகவே, ஆபீசராக இருந்து குற்றம் சாட்டப்பட்டால், அவர்களால் அமைச்சரைக் கன்வின்ஸ் பண்ண முடியவில்லை என்று சொன்னால், He has to submit நான் இந்த நேரத்தில் ஒன்றை கவனப்படுத்த விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலே போலீஸ் மானியம் கொண்டுவருகிறபோது, அவர் தலைமையிலே



ரிச்சுக்கு ஊர்வலமாகப் போன அந்தக் கருத்தைப் பற்றி அவருடைய சொந்தக் கருத்துக்கு மாறாக அவர் ஒரு அரசாங்க நோட்டிலே (Note) சைன் பண்ணியிருக்கிறார் என்று நாங்கள் எழுப்பியபோது, அவர் கூட எளிமையான முறையிலே எழுந்து நின்று சொன்னார்.

ஆம், என்னுடைய கருத்துக்கு மாறாகத்தான் இதிலே நான் கையெழுத்திட்டேன். காரணம், "This is departmental official's position". ஆகவே அதில் நான் சைன் பண்ணினேன் என்று சொன்னார். 'டிபார்ட்மென்ட்டல் அபிஷியல்களுடைய நிலைமையை அவர் இங்கே மதிக்கிறார். "Why not this Mr. Manavalan submit this to the elected representatives in that question? ஆகவே, இப்படிப்பட்ட சீரியஸ் விஷயங்களுக்கு, நாடாளுமன்ற நடவடிக்கை முறையில் ஒரு அதிகாரியின் வரம்பு என்ன என்று தெரிந்திருக்கிற திரு மணவாளன் அவர்கள், தெரிந்தே இப்படி செய்திருப்பதினால், இந்த அவையின் மீது அவர் தொடுத்துள்ள தாக்குதல் ஆகவும், இந்த அரசுக்கு எதிராகவும், இந்த அவைக்கு எதிராகவும் கலகம் செய்யக் கூடிய அளவில் இருப்பதாகவும் என்னுடைய கருத்து. அதன் மூலம் மற்ற அரசு அதிகாரிகளையும் இந்த அவைக்கு எதிராகவும், அரசுக்கு எதிராகவும் கலகம் செய்வதற்குத் தூண்டுவதாக இது அமையும் என்பது என்னுடைய எண்ணம். இந்த அரசையும், அவையையும் கவிழ்ப்பதற்கு திரு. மணவாளன் அவர்கள் இத்தகைய முயற்சியிலே எல்லாம் ஈடுபட்டு, இந்த அரசைக் கவிழ்க்க கருதுகிற சக்திகளுடன் கொல்யூட் பண்ணுகிறார்களோ என்கிற அச்சம் எனக்கு இருக்கிறது. It amounts to breach of privilege. ஆகவே, திரு. மணவாளன் அவர்கள் அசாதாரணமான முறைகளைக் கையாண்டு, உரிமை மீறல்களைச் செய்திருப்பதால் அவையும் தன்னுடைய அசாதாரணமான அதிகாரத்தைப் பயன்படுத்தி — நான் இந்த ரெசல்யூஷன் உரிமைக் குழுவிற்குப் போக வேண்டியது தான் என்று ஒத்துக்கொள்கிறேன் என்றாலும் — இந்த அவை தன்னுடைய அசாதாரணமான பவர்ஸை யூஸ் பண்ண வேண்டும் என்று கருதுகிறேன்.

அந்த ஆபீசரைக் கூப்பிட்டு அவையில் நிற்க வைத்து நீங்கள் கேள்வி கேட்க வேண்டும். பிறகு அவரைப் போகச் சொல்லிவிட்டு என்ன தண்டனை என்று நீங்கள் முடிவு எடுக்க வேண்டும். அதை அனௌன்ஸ் பண்ண வேண்டும். பார்லிமெண்டில் கூட அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது அவைத் தலைவருக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். ஒரு பார்லிமெண்ட் மெம்பரை நாக்பூர் ரயில்வே ஸ்டேஷனில் போலீஸ் அதிகாரி ஒருவர் அசால்ட் பண்ணியதைக் குறித்த பிரச்னை அவையில் எழுந்தபோது, அதை எந்தக் குழுவிற்கும் அனுப்பாமல், நேரிடையாக அவைத் தலைவர் சம்மன் அனுப்பி அந்த ஆபீசரை வரவழைத்து, அவையில் நிற்க வைத்து நேரிடையாக விசாரணை செய்து, அவர் மன்னிப்பு கேட்ட பிறகுதான் போகச் சொன்னார்கள். Because he has behaved in such a way, he was called to the Bar of the House. அப்படி

ஒரு அசாதாரணமானபவர் இந்த அவைக்கு இருக்கிறது. உண்மையிலேயே அதைத்தான் நாம் இங்கே செய்திருக்க வேண்டும். இருந்தாலும் யூனானிமஸ்ஸாக இருக்க வேண்டும் என்று கருதி இந்த ரெசல்யூஷனை நான் ஆதரிக்கிறேன்.

**திரு, என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிந்த வாரம் நம்முடைய பாமன்றத்திலே எங்களுடைய பேரியக்கத்தின் துணைத் தலைவர் திரு சுந்தரராஜ் அவர்கள் பேசிய பேச்சுக்கு பதில் அளிக்கிற விதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறியியல் உயர் அதிகாரியாக இருக்கிற திரு. மணவாளன் அவர்களைப்பற்றி சொன்ன சில கருத்துக்கள் - அவர்கள் பத்திரிக்கையாளர்கள் மத்தியில் கொடுத்த அறிக்கை சம்பந்தமாக இந்த உரிமைப் பிரச்னை வந்து இருக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தச் சபைக்கு கொடுத்த தகவல்களில் அந்த உயர்தர அதிகாரி கருத்து மாறுபடுகிறார். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தச் சபைக்கு வேண்டுமென்றே ஒரு தவறான தகவலைக் கொடுத்திருப்பார் என்று நிச்சயமாக எடுத்துக் கொள்ள முடியாது. அவர்களுக்குக் கிடைத்த தகவல்கள் அடிப்படையில் சில விவரங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள்: அந்த அதிகாரி அந்தக் கருத்தில் மாறுபடுகிறார், ஆனால் மாறுபடுகிற அந்த அதிகாரி எந்த முறையை எடுத்துக்கொண்டார் என்பதில்தான் கருத்து வேறுபாடு இருக்கிறது. ஒரு உயர் அதிகாரியாக இருப்பவர், பல்லாண்டுகளாக் நிர்வாகப் பணியில் இருந்தார் அதை அரசாங்கத்திற்குத்தான் தெரிவித்திருக்க வேண்டுமே தவிர பத்திரிகை வாயிலாகத் தெரிவித்திருக்க கூடாது என்பதில் நமக்குள் ஒருமித்த கருத்து இருக்கலாம். ஆனால் இந்த மன்றத்தில் நம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன ஒரு கருத்தை வெளியில் ஒருவர் மறுக்கக் கூடாது, இந்தச் சபையில் உறுப்பினராக இல்லாத ஒருவரைப்பற்றி இந்தச் சபையில் ஒரு கருத்து சொல்கிற நேரத்தில் , வெளியில் அதை மறுக்கிற உரிமை ஒருவருக்குக் கிடையாது, அவர்கள் மீது உரிமைப் பிரச்னை கொண்டுவரலாம் என்று சொன்னால் நேற்றைய தினம் இதே மன்றத்தில் நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பற்றிக் கூடச் சொன்னார்கள். அந்தக் கட்சி பற்றிக்கூடச் சொன்னார்கள். இந்தி எதிர்ப்பு தீர்மானத்தைப்பற்றிச் சொல்கிற நேரத்தில் குறிப்பிட்டார்கள். இன்றைய தினம் பத்திரிகைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மறுப்பு கொடுத்திருப்பதாக அறிகிறேன். அப்படியானால் அவர்மீது உரிமைப் பிரச்னை கொண்டுவரலாமா என்று யோசிக்க வேண்டும். எனவே அவர்கள் பத்திரிகைகளுக்குப் போனது சரி என்று வாதாடவில்லை. அவர் இன்றைக்கு அதிகாரியாக இருக்கிறார், பதவியிலிருக்கிறார். அவர்மீது எடுக்கவேண்டிய நடவடிக்கையை அரசு முறையாக எடுக்க வேண்டுமே தவிர உரிமைப் பிரச்னையாக இங்கே கொண்டுவருவது சரிதானா என்று யோசிக்க வேண்டும். அவர்கள்





எப்படி அவசரமாக பத்திரிகையாளரிடம் போனாரோ அதே போல் நாமும் அவசரமாக ஒரு முடிவிற்கு வரக் கூடாது என்பதில் நான் மெத்த அக்கறையாக இருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் இது மாதிரியான ஒரு நிகழ்ச்சி இதுவரையில் வரவில்லை என்று கருதுகிறேன். ஆகவே இதை தீர யோசித்து— நமக்கு எவ்வளவோ அவகாசம் இருக்கிறது, ஒன்றும் குடிமுழுகிப்போக வில்லை, பின்னால் எடுத்துக்கொள்ளலாம். ஆகவே இதை உரிமைக் குழுவிற்கு இப்போது அனுப்பவேண்டியது அவ்சியந்தானா என்பதை மறுபரிசிலனை செய்ய வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய கருத்துக்களைக் கண்ணியமான முறையில் வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரைப்பற்றி நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து, அவர் அப்படிச் சொல்லியிருக்கமாட்டார் என்று சொன்னார். இருந்தாலும் சொல்லப்படுகிறது என்று சொன்னார். அதிலும் இந்த மாமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் அதற்குப் பதில் சொல்ல உரிமை உள்ளவர்கள் என்பது வேறு, அரசாங்கத்தினிடம் ஊதியம் பெற்று அலுவலராக இருப்பவர்கள் அரசாங்கத்தினுடைய கருத்தை சட்ட மன்றத்தில் சொல்லும்போது எதிர்த்து அறிக்கை விடுவது என்பது வேறு.

இன்னொன்றையும்கூட சொல்ல வேண்டியிருக்கிறது, இந்த நேரத்தில், நண்பர் மணவாளன் அவர்கள்— நண்பர் என்று சொல்ல வேண்டியிருக்கிறது, பொறியியல் நிபுணர் என்று சொன்னால் நாளை ஒரு அறிக்கை விடுவாரோ என்னவோ ஆனால் மிகமிகத் தெளிவாகச் சொல்வதுபோல் சொல்லியிருக்கிறார்கள். அணை கட்டுகிற இடத்தைத்தான் கையகப்படுத்த வேண்டும்; அதற்கு குறைந்தளவுதான். பணம் கொடுக்க வேண்டிவரும் என்பதையும் சொல்கிறார்கள். இதிலும் மிகப் பெரிய தவறு இருக்கிறது. எங்கே தண்ணீர் தேக்கப்படுகிறதோ அந்த இடங்களை நிச்சயமாக கையகப்படுத்தியாக வேண்டும். அந்த நிலச் சொந்தக்காரர்களுக்கு அரசாங்கம் நஷ்டயீடு கொடுத்தாக வேண்டும். இது முறை, மரபு, சட்டமும் கூட. இந்த வகையில் அதையும் அவர்கள் இணைக்காமல் அதை விட்டுவிட்டு இதை மட்டும் சொல்லி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலும் தவறு செய்திருக்கிறார்கள். ஆகவே தவறு செய்வது என்ற முடிவிற்கு வந்த ஒருவர் வேண்டுமென்றே இந்தச் சட்டமன்றத்தை அவமானப்படுத்துவது அல்லது எதிர்ப்பது என்ற முறையில் நடந்து கொண்டு இருக்கிறார்கள் என்ற எண்ணம்தான் அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்த வகையில் இந்த உரிமை மீறல் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு அனுப்புவதா இல்லையா என்பதைப் பேரவை முடிவு செய்ய வேண்டும் என்றிருந்தாலும் இது தொடர்கதையாக

ஆகிவிடக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னதுபோல் அதை நாம் நிச்சயமாகக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதிகாரிகள் தவறுகளுக்கு, அவர்கள் செய்துவிட்டவற்றைத் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் உண்மையைச் சொல்ல வேண்டிய அவசியம் அமைச்சருக்கு அல்லது அமைச்சரவைக்கு ஏற்பட்டு இங்கே சொல்லவேண்டியிருந்தால் அதை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது கடமை என்றாலும் கூட அவரவர்கள், அதிகாரிகள் தன் உரிமையை அல்லது நியாயத்தை அவர்கள் கருதுகிறபடி தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அறிக்கை வெளியிடுவதும் அந்த அறிக்கையை ஒரு பத்திரிகை வெளியிடுவதும் சரியல்ல. அந்தப் பத்திரிகை கூட சட்டத்தை உணராத பத்திரிகை, பத்திரிகை ஆசிரியர் என்று சொல்ல முடியாது. ஆகவே இந்த உரிமை மீறல் பிரச்சினையில் பத்திரிகையையும் நாம் சேர்க்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.' ஆகவே அதையும் இணைத்து உரிமைக் குழுவிற்கு அனுப்புவதுபற்றி பரிசீலிக்க வேண்டும் என்று நான் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்திய தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே கூறிய கருத்துக்களை ஒட்டி ஒரு குறிப்பிட்ட அதிகாரி, பொறியியல் துறையைச் சேர்ந்த திரு. மணவாளன் என்பவர், வெளியிலே தெரிவித்திருக்கின்ற கருத்து, அதனை வெளியிட்ட பத்திரிகைகளின் செயல் இந்த அவையின் உரிமையை மீறியது, இந்த அவையின் உரிமையைப் பாதிக்கின்றது என்று இருப்பதால், இந்தப் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு விட வேண்டும் என்று இந்த அவை தீர்மானிக்கிறது ''

திருத்திய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

## 3. தகவல் கோரல். (தொடர்ச்சி.)

### (இ) தேர்வு ஆணைக்குழு ஆதி திராவிட வகுப்பினர் எவரையும் பாரஸ்ட்ரேஞ்சர் பதவிக்குத் தேர்ந்தெடுக்காதது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நான் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே தேர்வுகள் நடைபெறுகின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் ஆதி திராவிட மக்கள் நலனில் அக்கறை எடுத்து, பல முக்கியமான உறுதிமொழிகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பாரஸ்ட் ரேஞ்சர்கள் 40 பேர்கள் தேர்ந்தெடுத்ததிலே ஒருவர்கூட ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்களை எடுக்கவில்லை. இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களிடத்திலும் எழுதிக் கொடுத்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் தற்போது இங்கே இருப்பதால், பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது, அந்த மக்களுக்குப் பாதகமான நிலை ஏற்பட்டிருப்பதால், ஆபத்து இல்லாத வகையில், சட்டத்தை அமுல் படுத்துகின்ற வகையில் முதலமைச்சர் அவர்களிடமிருந்து அதற்கான பதிலை எதிர்பார்க்கிறேன்.





மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்வாணைக் குழுவைச் சந்தேகிப்பது சரியல்ல, நியாயமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக, நியமனம் என்று வரும்போது யாருக்கோ சலுகை காட்டிவிட்டார்கள், அதிலே விருப்பு வெறுப்பிற்கு உட்பட்டு விட்டார்கள் என்று சந்தேகப்படுவது நியாயம் அல்ல. ஆனால், தேர்வாணைக் குழு நியாயமான வகையில், எந்தெந்த வகையில் அவர்களைத் , தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதையெல்லாம் பரிசீலித்து, தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்களை நாம் சந்தேகிக்க ஆரம்பிப்போமானால், பிறகு நமக்குப் போக்கிடமே இருக்க முடியாது. ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் நியாயத்தை நிச்சயமாக அமுல்படுத்த வேண்டுமென்ற அக்கறை கொண்டாலும், யாரையும் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று சொல்ல முடியாது. இன்னாரைத் தான், இந்த பகுதியினரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் சொல்ல முடியாது. ஆனால், எண்ணிக்கையைப் பற்றிச் சொல்லும்போது, இந்த இந்தப் பிரிவினருக்கு இவ்வளவு எண்ணிக்கை வருமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லலாம். அதைச் சொல்லியிருக்கிறோம் எந்த வகையில் அவர்களுக்கு அந்த எண்ணிக்கையைப் பூர்த்தி பண்ண முடியாமல் போய்விட்டது என்பது நமக்குத் தெரியாது. ஆகையால், என்ன வகையில் என்று கேட்கலாமே தவிர, அவர்கள் மீது குற்றம் சுமத்தக் கூடாது, வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

## 5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தமிழக, கேரள மாநில மீனவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற செ ராம் ஆகியோர்

''தமிழ்நாட்டின் கடைசிப் பகுதியான குமரி மாவட்டத்தில் நீரோடியிலுள்ள மீனவர்களுக்கும், அடுத்த மாநிலமான கேரளாவினைச் சார்ந்த பொழியூர் மீனவர்களுக்கும் ஏற்பட்டுள்ள மோதலின் காரணமாக நீரோடி பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க.'' பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இது எப்படி அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பிரச்சனை நீரோடி என்ற இடத்தில் இரண்டு கோஷ்டிகளுக்கு இடையே ஏற்பட்ட தகராறு என்பதை மட்டும் பார்பபது சரியாக இருக்காது என்ற காரணத்தால்தான், இது சம்பந்தமாக இருக்கக்கூடிய மற்ற சில விஷயங்களைச் சேர்த்துக் கொண்டு இந்தச் சபையின் மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து, அரசின் கவனத்திற்கு கொண்டுவந்து, தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அது மிகப் பெரிய வகுப்புக் கலவரமாக, கோஷ்டிக் கலவரமாக மாறக்கூடிய நிலைமை அந்த மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கிறது. நீரோடி கேரள மாநில எல்லையில் இருக்கக்கூடிய பகுதி. அந்த இடத்தில் மே 2 ஆம் தேதி ஒரு விளையாட்டுப் போட்டி நடந்ததைத் தொடர்ந்து இரண்டு கோஷ்டிகளுக்கிடையே தகராறுகள் ஏற்பட்டன. அந்த விளையாட்டுப் போட்டிக்குப் பிறகு, மது அருந்துவதிலே இருந்து இந்தத் தகராறு ஏற்பட்டு, அது கலவரமாக மாறி விட்டது. அதற்குப் பிறகு ஒரு கோஷ்டி, அண்டை மாநிலமாக இருக்கக்கூடிய கேரளாவிலிருந்து ஏறத்தாழ 2000க்கு மேற்பட்ட ஆட்களை அழைத்து வந்து, அந்தப் பகுதியிலே கலவரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் பகுதியில் இப்படிப்பட்ட கலவரம் ஏற்படுவது இது முதல் தடவையல்ல. நீரோடி, அதற்குப் பக்கத்திலே உள்ள பகுதிகளிலே ஒரு 3, 4 மாதங்களாக, ஏறத்தாழ கடந்த ஒரு மாத காலமாக இந்தக் கலவரம் ஏற்பட்டது. குமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய போலீசைப் பொறுத்தவரையில், அன்று அந்த நிலையைச் சரிக்கட்டுவதற்கு அவர்கள் அதிகமாகக் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது அன்றைக்கு இதற்கு ஒருசில நபர்கள், ஒருசில தனிப்பட்ட சக்தி மத்தியஸ்த நிலைமையை ஏற்படுத்த முயற்சித்தார்கள். இந்தத் தகராறு, காஞ்சீபுரம் என்ற இடத்தில், கேரளாவிலே இருந்து ஒருசில ஆட்களைக் கொண்டு வந்து. ஆர்.எஸ்.எஸ். என்று சொல்லக்கூடியவர்கள் ஒருசில ஆட்களை அடித்து, அவர்கள் மருத்துவமனையிலே சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். குமரி மாவட்டம் என்பது கேரளா மாவட்டத்தினுடைய எல்லையிலே இருக்கிற மாவட்டம். அந்த மாவட்டத்தில் இருக்கிற பலருக்கும் கேரளா மாநிலத்தில் சொந்தம் இருக்கிறது, தொடர்பு இருக்கிறது. இந்த நிலையைப் பயன்படுத்தி கேரளா மாநிலத்திலே இருக்கக்கூடிய ஆர்.எஸ்.எஸ்.





இயக்கத்தைச் சார்ந்தவர்களை அந்தப் பகுதிக்குக் கொண்டு வந்து வகுப்புக் கலவரமாக மாற்றுவதற்கு ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. காலா காலத்திலே போலீஸ் இது சம்பந்தமாகத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அந்த மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிற ஒரு நிலையை இந்தச் சபையினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவரவர்களே, கன்னியாகுமரியிலே விவேகானந்தா ராக் மெமோரியல் ஆட்களுக்கும், கடலோரப் பகுதியிலே இருக்கிற மீனவர்களுக்கும் ஒரு தகராறு ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாகப் பேசவிருக்கிற நேரத்திலே ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சுவரொட்டியை ஒட்டினார்கள். 'மாண்புமிகு முதல்வர் அவர்களே இந்து சமுதாயத்திற்கு நீதி வழங்கு' என்ற முறையிலே சுவரொட்டியை ஒட்டி அதை வகுப்புக் கலவரமாக மாற்றுவதற்கு முயற்சி செய்தார்கள். ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கும், அதேமாதிரி சமுதாய இயக்கத்திலே இருப்பவர்களுக்கும் பகைமை ஏற்பட்டு, தகராறு ஏற்படக்கூடிய நிலை இன்று தூண்டி விடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாகச் சில சம்பவங்கள் மாண்புமிகு மின்சார இலாக்கா அமைச்சரிடத்திலே ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே காவல் துறை தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் கேரளா மாநிலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய ஆர்.எஸ்.எஸ்.-ம் மற்ற இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் தகராறு உள்ள நிலை கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் ஏற்படலாம் என்ற ஐயப்பாடு, அச்சம் இருக்கிறது. இந்தக் கடலோரப் பகுதியிலே பல வருடங்களாக, ஒரு வருடத்திற்கு நான்கு, ஐந்து தடவைகள் கலவரங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதிலே போலீசுக்குத் தகவல் கொடுத்தால் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக இல்லை. வயக்கலூர் என்ற இடத்திலே ஆர்.எஸ்.எஸ். ஆட்களைக் கொண்டு வந்து ஒரு நபரை அடித்ததின் சம்பந்தமாகப் போலீசிலே புகார் கொடுக்கப் பட்டதற்குப் பிறகும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே காவல் துறை இது சம்பந்தமாக முன்கூட்டியே இப்படிப்பட்ட நிலை ஏற்படுவதிலிருந்து தடுக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது முக்கியமான பிரச்சினை. நாளை வகுப்புக் கலவரமாக மாறலாம் என்ற நிலை இருக்கிறது.

அதைப்போல சமீபத்திலே ஒரு கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் லாரி முதலாளிகள் ஏற்படுத்திய ஒரு போராட்டத்தில் இந்த நீரோடிக்குச் சில மைல்களுக்கு அப்பால் இருக்கிற களியக்காவிளையிலே ஏழை விவசாயிகள் கொண்டு வரக்கூடிய பொருள்களை, லாரி முதலாளிகளுடைய குண்டர்கள்,

ஏஜெண்டுகள் ஆக மாறி விவசாயிகளுடைய பொருள்களைத் தடுத்து அவர்களை எடுத்துச் செல்வதிலிருந்து தகராறு பண்ணி, அங்கே அடிதடி ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டது. ஆகவே இந்த மாவட்டத்திலே அப்படிப்பட்ட தகராறு பரவுவதைத் தடுப்பதற்கு, இந்தப் பிரச்சினையை விவாதிப்பதற்கு இந்த அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.40]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, 3-5-81 அன்று, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கொல்லன்கோடு காவல் துறை எல்லைக்குட்பட்ட நீரோடி பகுதி வாழ் மீனவ இனத்தவர்களுக்கும் மற்றும் கேரள மாநிலத்தைச் சார்ந்த பொழியூர் மீனவ இனத்தவர்களுக்கும், கால் பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. அச்சமயத்தில், பொழியூரிலுள்ள டேவிட் என்பவரை, நீரோடியைச் சேர்ந்த மீனவர்கள் தாக்கினர். தவிர 4-5-1981 அன்று, நீரோடியைச்சேர்ந்த மீனவர்கள், பொழியூர் செல்கையில் அவ்வூர் மீனவர்களால் தாக்கப்பட்டனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து, பொழியூரிலிருந்து நீரோடி பகுதி வழியாகத் தமிழ்நாட்டிற்கு, சட்டவிரோதமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சிக் கொண்டு செல்லப்படுவதை நீரோடி மீனவர்கள் தடுத்தனர். இதனால், பொழியூர் மீனவர்கள் சுமார் 500 பேர்கள் 6.5.81 அன்று பகல் 3.30 மணிக்கு நீரோடி பகுதிக்குச் சென்று 10 பேர்களைத் தாக்கியும் சில கடைகளுக்குச் சேதமும் விளைவித்தனர். கொல்லன்கோடு காவல் நிலையத்தினர், கலவரம் நடந்த பகுதிக்கு உடனே விரைந்து சென்று அமைதியை நிலைநாட்டினர். இச்சம்பவம் குறித்து, காவல் நிலைய குற்ற எண். 79 முதல் 84/81-ல் பிரிவு 147, 341, 427, 336 மற்றும் 337 இ.பி.கோ.படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தவிர, 7-5-81 அன்று சுமார் 3 மணிக்கு இரு பகுதியைச் சேர்ந்த மீனவர்களும் ஒருவருக்கொருவர் தாக்க முற்படுகையில், தமிழ்நாடு மாநில காவல் துறையினரும், கேரள மாநில காவல் துறையினரும் தக்க சமயத்தில் தலையிட்டு, எவ்வித அசம்பாவிதமும் நடவாதவாறு பாதுகாத்தனர். மேலும் அங்கு நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகின்றது. எனவே, இப்பிரச்சினை குறித்து விவாதிக்க அவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





### 3. தகவல்கோரல்—தொடர்ச்சி

### (ஈ) உறுப்பினரின் அறிவிக்கைக் குறித்து.

**திரு. எஸ். ஆண்டித்தேவர்:** துணைத்தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுப்பதாக இல்லை (குறுக்கீடு) திரு. ஆண்டித்தேவர் இப்போது பேசுவது எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. இன்றைக்கு 8 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் வர இருக்கின்றன. உங்களுக்கு அனுமதியில்லை. ** **

**திரு. ரா உமாநாத்:** துணைத்தலைவர் அவர்களே, அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக்கூட வற்புறுத்தவில்லை; அவர்கள் ஒரு கிளாரிபிகேஷன், கேள்வியாகக் கேட்பதற்கு அனுமதி கொடுக்கலாம்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர்:** இது மிக முக்கியமான பிரச்னை. ஒரே ஒரு கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித்தேவர் அவர்கள் வெளியிலே பேசிய பேச்சைப்பற்றிய ஒரு குறிப்பை இங்கே கூறுகிறார்கள். ஆகவே, அதற்குத் தகுந்த பதிலை அவர்கள் வெளியிலேயே எடுத்துச் சொல்லலாம். ஆனால் அவர்கள் சொல்லுகின்றபடி, ஜாதிக் கலவரங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. யார் யார் மீது ஜாதிக் கலவரத்தைத் தூண்டினாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி அரசு ஆராய்ந்து, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கும். ஆனால் வெளியிலே பேசிய பேச்சுக்கு அரசு இந்த அவையிலே பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத்தான் மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் கூறுகிறார்கள். அதற்கான பதிலை திரு. ஆண்டித்தேவர் அவர்கள் வெளியிலே சொல்லலாம். அதுபோல வெளியிலே ஆண்டித்தேவர் பேசிய பேச்சுபற்றியும் இங்கே கொண்டு வர முடியாது. ஆனால் அரசுக்கு இருக்கின்ற பொறுப்பின்படி ஜாதிக் கலவரங்கள் ஏற்படுகின்றபொழுது அதை யார் தூண்டிவிட்டாலும் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கும் என்ற உறுதி மொழியை நான் தருவதன் காரணமாக திரு. ஆண்டித்தேவர் அவர்கள் அமைதிபெற்று, இந்த அவையின் விதிகளுக்கு இணங்க இந்த அவையினுடைய விதிமுறைகளுக்கு இடம் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர்:** துணைத் தலைவரவர்களே, நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன். அவை முன்னவரவர்கள் ஒன்றைச் சொல்லிவிட்டார்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். **

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[1981 மே 14

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆண்டித்தேவர் அவர்கள் நன்றி சொல்வதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

* * வேண்டாம். அதை இங்கே அனுமதிப்பதில்லை.

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. இ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் "(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான சிவில் அறிக்கைகளில் நீர் வழங்கு திட்டங்கள் பற்றிய பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை);

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் போக்குவரத்துத் துறை குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை)." ஆகிய அறிக்கைகளை அளிக்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்.

அ. விதி 54 (6) ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒரு கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்குக் கொண்டு வரக்கூடாது என்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 54 (6) ஐ இன்று தளர்த்தி 8 பொருள்களை எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று 8 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்து கொள்ள இருப்பதால் ஓர் உறுப்பினருக்கு ஒரு கேள்விதான் அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1981 மே 14]

8. கவன ஈர்ப்புகள்.

(அ) தமிழகத்திற்கு மைய அரசு ஒதுக்கும் அரிசி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மைய அரசிடமிருந்து தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அரிசி தாமதமாகவும், குறைவாகவும் வந்து கொண்டிருப்பது குறித்து திருவாளர்கள் ரா. உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ஆர். சுந்தரம் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, "மைய அரசிடமிருந்து தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அரிசி தாமதமாகவும், குறைவாகவும் வந்து கொண்டிருப்பது குறித்து", அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

குறுவை, சம்பா இரு அறுவடைகளும் நன்றாக இருந்தால் தமிழகத்தில் அரிசி தேவையான அளவு இருக்கும். ஒரு அறுவடை மழை இல்லாமல் குறைந்துவிட்டால் அரிசிக்கு தன்னிறைவு இருக்காது. ஆனால் இரு பட்டங்களும் பொய்த்துவிட்டாலோ பற்றாக்குறையே ஏற்படும். மேலும் மூன்று நான்கு ஆண்டுகளை எடுத்துக்கொண்டால் ஒரு ஆண்டு மிகவும் பற்றாக்குறை உள்ள ஆண்டாக இருப்பதைக் காணலாம். இந்த அளவில் பற்றாக்குறை ஏற்படும்பொழுது தமிழகம் அரிசிக்கு மற்ற மாநிலங்கள் மற்றும் மைய அரசின் உதவியை நாட வேண்டியிருக்கிறது.

1981–1982–ம் வருடத்தில் மழையில்லாமல் பல மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால் அரிசியின் கையிருப்பு குறைந்துள்ளது. வெளிச்சந்தையில் அரிசி கிடைப்பதும் குறைவு. மக்கள் நியாய விலைக்கடைகளைத்தான் பெருமளவில் நம்பியிருக்கின்றார்கள்.

இந்தச் சூழ்நிலையில் தமிழக அரசு லெவி மூலம் மாநிலத்துக்குள் இயன்ற அளவு நெல் மற்றும் அரிசி வாங்கியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாக நல்ல விலை கொடுத்து நெல் கொள்முதல் செய்துள்ளார்கள்.

கடந்த அக்டோபர் மாதத்திலிருந்தே தமிழக அரசு அரிசியில் பற்றாக்குறை இருக்கும் என்பதை மைய அரசுக்குத் தெரிவித்து, அதிக அளவு ஒதுக்கீடு வேண்டுமென்பதை வற்புறுத்தி வந்துள்ளது. மைய அரசும் ஓரளவு ஒதுக்கீட்டை அதிகரித்ததென்றாலும் ரெயில்வே வாகன்கள் கிடைக்காததால் ஒதுக்கிய அளவு வந்து சேரவில்லை. 1980 ஏப்ரல் மாதம் முதல் 1981 மார்ச்சு மாதம்

முடிய ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவு 3.15 லட்சம் டன்; வந்து சேர்ந்தது 1.75 லட்சம் டன் தான். இதில் 24,481 டன்கள் தமிழ்நாடு நுகர் பொருள் வணிபக் கழகத்தால் லாரி மூலம் கொண்டு வரப்பட்டது. இதுபற்றி பலமுறை அதிகாரிகள் மட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களும் நானும் மைய அமைச்சர்களுக்கு கடிதம் எழுதியுள்ளோம். சமீபத்தில் நான் டில்லி சென்று மைய உணவு அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களை நேரில் சந்தித்து நம் நிலையை விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளேன். மாதம் ஒரு இலட்சம் டன் அரிசி தர வேண்டும் என்றும் இரயில்வே வேகன்கள் கிடைக்கவில்லை என்றால், கப்பல் மூலமாகவும் அரிசி அனுப்ப வேண்டும் என்றும் கூறியுள்ளேன். அவரும் நம் கோரிக்கையை பரிவுடன் கவனிப்பதாகக் கூறியுள்ளார்.

மைய அரசு ஒதுக்கீட்டை முழுமையாக நம்பியிருக்கக்கூடாது என்பதற்காக மற்ற மாநிலங்களிலிருந்து நேரடியாகவும் அரிசி வாங்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஆந்திரா, பஞ்சாப், அரியானா, ஒரிசா அரசுகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. அந்த அரசுகளும் உதவி செய்வதாகக் கூறியுள்ளனர். மத்திய அரசு, மாநில அரசுகளுக்குள் இப்படி அரிசி வியாபாரம் செய்வதை அவ்வளவாக ஆதரிக்கவில்லை. நாடு தழுவிய உணவுக் கொள்கையை மைய அரசுதான் சரியாக அமுல்படுத்த முடியும் என்பது அவர்களுடைய கருத்து. இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் இன்று தமிழ்நாட்டில் உள்ள வறட்சி நிலைமையில் தேவையான அளவு அரிசி மாநிலத்துக்கு வந்து சேருவதில் எவ்வித தடங்கலும் இருக்கக் கூடாது என்றும் மைய அமைச்சர்களிடம் கூறியுள்ளேன். அவர்களும் உதவுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். எப்படியும் பொதுமக்களுக்குத் தேவையான அளவு அரிசி வந்து சேரும் என்று எதிர்பார்க்கிறேன்.

(முற்பகல் 10–50)

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்தேன். அதிலே கொடுத்திருக்கிற விவரங்களைப் பார்க்கிறபொழுது உண்மையிலே அவசரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய சில பிரச்சனைகளாகத்தான் நம்முடைய இந்த விஷயங்கள் இருக்கின்றன, இரண்டு பருவ மழைகள் தவறி இருக்கின்றன பின்னணி. ஆற்றுப் பாசன ஏரியாவிலே தண்ணீர் கம்மியாகக் கிடைத்திருக்கிறது என்ற ஒரு பிரச்சனை. அதுமட்டுமல்ல, விவர அறிக்கையிலே வறட்சியின் காரணமாக, கையிருப்பு குறைந்துள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. வெளிச்சந்தையில் கிடைப்பதும் குறைவு என்ற அட்மிஷனும் இருக்கிறது. ரெயில்வே வாகன்ஸ் கிடைக்காததாலே, மைய அரசு அனுப்பக்கூடியதைக் கூட, ஓரளவு ஒத்துக் கொண்டதைக்





கூட பெறுவதற்கு நமக்குச் சில கஷ்டங்கள் இருக்கின்றன என்பதும் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பரிகாரம் என்ற முறையிலே முதலமைச்சர் எழுதியிருப்பதாகவும் முன்னவர் அங்கே, மைய அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களிடம் பேசியிருப்பதாகவும் கூறியிருக்கிறார். அப்பொழுதும் இம்ப்ருவ்மெண்ட் இல்லையென்று எண்ணும்போது, இனி லீன் மாதங்கள் வரக்கூடிய நிலைமை இருக்கும் போது, சில ஏரியாக்களிலே ஹாண்ட்லூம் போன்ற ஏரியாக்களிலே கஞ்சித் தொட்டித் தேடுகின்ற சீரியஸ் பொசிஷன் நமக்கு வரலாம். ஆகவே அரசு அப்படிப்பட்ட ஒரு சீரியஸ் நிலைமையைத் தவிர்ப்பதற்கு என்ன ஸ்தூல நடவடிக்கைகளை பரொப்போஸ் பண்ணியிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இவ்வளவு சீரியஸ் சிச்சுவேஷனைச் சமாளிப்பதற்காக, அரிசி வாங்க, முதலமைச்சர் ஒரு ஆல் பார்ட்டி மீட்டிங் கூட்டி, எல்லாக்கட்சிகளையும் கலந்து ஒரு முடிவெடுக்க முன்வருவார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூறியதைப் போன்று பல சங்கடமான சூழ்நிலைகள் இருந்தாலுங்கூட, அந்தச் சங்கடங்களை நீக்குவதற்காகப் பல்வேறு முயற்சிகளை பல்வேறு வழிகளிலே இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அந்த வகையிலே மத்திய அரசிடத்திலே ஒரு வாரகாலத்திற்கு முன்னால்கூட, அவசரமாக நான் சென்று இப்பொழுது இருக்கிற நிலைமைகளை விளக்கி, இப்பொழுது 11,000 டன் மாதம் ஒன்றுக்கு நாம் விநியோகித்த நிலைமை மாறி 55,000 டன் அளவுக்கு வந்திருக்கிறது. அது இன்னும் மேலே ஏறும் என்ற நிலைமையை விளக்கி, 1 இலட்சம் டன்னாவது மாதம் ஒன்றுக்கு அரிசி வழங்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னோம். இப்பொழுது 60,000 டன் அவர்கள் ஒதுக்கினாலும்கூட 30,000 டன், 40,000 டன் தான் வந்துசேருகிறது, அதனால் ஏற்படுகிற கஷ்டம் வேகன்கள் நகராமல் இருக்கின்றன. அதற்கு ஒரு யோசனையையும் நான் அவர்களிடத்திலே சொன்னேன். உங்கள் பகுதியிலிருந்து வேகன் வராவிட்டாலும், விசாகப்பட்டினம் மற்ற இடங்களில் இருக்கிற கிடங்குகளிலிருந்து கப்பல் மூலமாக அனுப்புகின்ற முயற்சியை எடுப்பீர்களானால் அதிகமான அளவுக்கு வந்து சேரலாம்.

நாமும் நம்முடைய நுகர்பொருள் கழகத்தின் மூலமாக, அதிக விலை கொடுத்து லாரிகள் மூலமாக 24,000 டன்கள் வாங்கியிருக்கிறோம். அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டு செய்து வருகிறோம். அது மட்டுமல்ல, ஆந்திராவிலிருந்து தாராளமாக அரிசி, நெல் வரட்டும் என்பதற்காக, லெவி முறையை அடியோடு எடுத்து விட்டோம். இப்பொழுது உணவுத் துறை செயலாளர் அவர்களும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய நிர்வாக அதிகாரி அவர்களும ஒரிசா, பஞ்சாப், அரியானா போன்ற இடங்களுக்குச் சென்று

அங்கே இருக்கிற நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுக் கழகம் ஆகியவற்றோடு பேசி, வாங்கும்படியாகச் செய்திருக்கிறோம். அதிலே, இந்த வாகன் தகராறு வருகிறது. இருந்தாலும் அந்த அமைச்சரையும் பார்த்துச் சொல்லியிருக்கிறோம். விரைவிலே அனுப்புவதற்கு ஏற்பாடு செய்வதாகக் குறிப்பிடுகிறார்கள். இருக்கிற நிலையிலே அரிசியை வேறுகிடங்குகளிலிருந்து கொள்முதல் செய்து கப்பல் மூலமாக அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறோம், விரைவிலே ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று இருந்தாலுங்கூட, நம்முடைய கையிருப்பு நம்முடைய தேவைக்கேற்ப இருக்க வேண்டுமென்கிற எண்ணத்தினுடைய அடிப்படையிலேதான் அந்தப் பணிகளையெல்லாம் நாம் ஆற்றிக்கொண்டு வருகிறோம். ஆகவே, மத்திய உணவு அமைச்சர் அவர்கள் அனுதாபத்தோடு அதைக் கேட்டு, இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தேவைப்பட்டால் மீண்டும் மீண்டும் வற்புறுத்துவோம். அது நடைமுறைப் பிரச்னையாகவும் சிக்கலாகவும் இருப்பதால்தான் இந்த வகையிலே அணுக வேண்டியிருக்கிறது. கொள்கை அளவிலே, கொள்கை வாயிலாக சிலபல முடிவுகள் எடுக்க வேண்டியிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று அனைத்து கட்சித் தலைவரையும் கூப்பிட்டு ஒரு குறிப்பிட்ட கொள்கையிலே மாற்றம் ஏற்பட அவசியம் ஏற்பட்டால் அதைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று இந்த வாய்ப்பிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. கன்னியாகுமரி -- கொட்டாரம் கிராமம் குடிநீர்க் குழாய்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:— ‘கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கொட்டாரம் கிராமத்தில் உள்ள குடிநீர் குழாய்கள் பழுதுபார்க்கப்பட வேண்டிய அவசியம் குறித்து திருவாளர்கள், டி.மணி, ஜே. ஹேமச்சந்திரன், நா. பழனிவேல், சு. முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. டி. மணி.— மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, ‘‘கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டம் கொட்டாரம் கிராமத்தில் உள்ள குடிநீர்க் குழாய்களில் பழுது பார்க்கப்பட வேண்டிய அவசியம் குறித்த’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:— தலைவர் அவர்களே, நான் பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



அறிக்கைகள்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி மாவட்டம், அகத்தீஸ்வரம் வட்டத்திலுள்ள கொட்டாரம் பேரூராட்சியில் மொத்தம் 29 குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளனவென்றும், அவைகளில் 19 குழாய்களில் குடிநீர் வருவதாகவும், மீதமுள்ள 10 குழாய்கள் மேடான பகுதிகளில் உள்ளதால் தண்ணீரின் அழுத்தக் குறைவினால் குடிநீர் வரவில்லை எனவும் கூறியுள்ளார். மேலும் இந்தக் குறையை நிவர்த்தி செய்ய, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருவதாகவும் மேற்படி வேலை ஒரு மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

திரு. டி. மணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குமரி மாவட்டம் கொட்டாரம் பகுதியில் பொருத்தப்பட்டு இருந்த குழாய்களில் 10 குழாய்கள் பழுது அடைந்தது. இதற்குத் தண்ணீர் வருகின்ற நீர்த் தேக்கத் தொட்டியிலே போதுமான கொள்ளளவு இல்லை. தண்ணீரே இல்லை. ஆகவே இந்த நீர்த் தேக்கத் தொட்டியை அகலப்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் 6 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு இருந்தது. அந்தத் திட்டம் இது வரையில் அமுலாக்கப்படவில்லை. ஆகவே இந்த மேல்நிலைத் தொட்டியைத் துரிதமாக அமுலாக்குவதற்குக் குறிப்பாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் தண்ணீர் இல்லாத நேரத்தில் அந்தப் பிரதேச மக்களுக்கு தண்ணீர் கொடுக்கின்ற வகையில் இந்த நீர்த் தேக்கத் தொட்டியை விரிவு படுத்தவும், அகலப்படுத்துவதற்கும் போதுமான குழாய்களை அமைத்துக் கொடுத்து அந்தப் பிரதேச மக்களுடைய குறைகளைத் தீர்க்க அவசர நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருவதாகவும் மேற்படி வேலை ஒரு மாதகாலத்தில் முடிந்து விடும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இனிமேல் விரிவாக்குவதோ, உயரமாக்குவதோ செய்தால் இன்னும் 2 மாதங்கள் ஆகிவிடும். இந்த ஒரு மாத காலத்திற்குள் விரைவாகச் செய்து முடிப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யும்படியாக ஏற்பாடு செய்கிறோம்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகத்திஸ்வரம் தாலுகா கொட்டாரம் என்ற கிராமத்திலே ஏற்படக்கூடிய குடிநீர்ப் பற்றாக்குறையைப் பற்றி விவர அறிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்த கிராமத்திலே ஏற்கனவே குடிநீர்த் தொட்டி இருந்தது. அதன் மூலமாக சப்ளை செய்யப்பட்ட தண்ணீர் போதுமானதாக இல்லை என்று ஏற்கனவே கோரிக்கைகள் விடப்பட்டு 6 ஆண்டுகளுக்கு முன்பாகவே வேறு ஒரு இடத்திலே [illegible]

நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. ஏன் 6 ஆண்டுகள் வரையிலே அதற்கான நடவடிக்கைகளை மக்களுக்கு நன்மை கொடுக்கின்ற விதத்திலே அந்தக் கனக்ஷன்கள் கொடுக்கப்பட வில்லை, என்பது புதிராக இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் புதிதாக தண்ணீர் சப்ளை கொடுக்கின்ற போது ஏற்கனவே இருக்கக்கூடிய கிணற்றை நல்ல முறையிலே ஆழப்படுத்தி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியிலே நல்ல முறையிலே நீர் போதுமான அளவுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல: இந்த வேலையை ஒரு மாதத்திற்குள்ளாக முடிப்பேன் என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த காலத் தாமதத்திற்கு யார் காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் கண்டறிந்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் முக்கியமாகச் செய்ய வேண்டிய மீதமுள்ள 10 குழாய்கள் மேடான பகுதியில் உள்ளதால் தண்ணீர் அழுத்தக் குறைவினால் குடிநீர் வரவில்லை என்று தெரிகிறது. எனவே அதன் மூலமாகக் குடிநீர் வருவதைத் தான் இப்போது அவசரமாகச் செய்யவேண்டும். இந்த வேலைகளை எல்லாம் செய்து முடித்தபிறகு மாண்புமிகு உறுப்பினர் மேலும் தண்ணீர் வருவதற்கு வசதியாக, வாய்ப்பு இருக்கக் கூடிய ஆலோசனை சொல்வார்களானால் அது பரிசீலனை செய்யப்படும்.

[முற்பகல் 11-00]

இ: கும்பகோணம் அருகே சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து விபத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 54-வது விதியின் கீழ் கும்பகோணம் அருகே சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து விபத்துக்குள்ளானது குறித்துத் திருவாளர்கள் மு. அம்பிகாபதி, தி. கா. நல்லப்பன், செ. சிவசாமி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1-5-1981 அன்று கும்பகோணம் அருகே சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து விபத்துக்குள்ளானது குறித்த அவசரப் போது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** : துணைத் தலைவரவர்களே, நான் பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

1-5-81-ந் தேதியன்று கும்பகோணம் கிளை II-ஐச் சார்ந்த சோழன் சாலைப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து எண். 20 (பேருந்து எண். டி. எம். எண். 4239) அதன் வழித்தடமான கும்பகோணம்—குடவாசல் (வழி) கொருக்கை, வலங்கைமான் வழித்தடத்தில் மாலை 7.35 மணி பயணத்தில் கும்பகோணம் பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டு குடவாசலுக்குச் சென்று கொண்டிருந்தது. கும்பகோணம் அருகே மாத்தி ரயில்வே கேட்டைக் கடந்து சீரான வேகத்தில் குறுகலான சாலையில் பேருந்து செல்லுகையில், சாலையில் வலது புறத்தில் பூட்டப் படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாட்டுவண்டியின் மீது ஏற்றப்பட்டிருந்த சவுக்குக் கழிகளின் மேல் மோதியுள்ளது. மேற்படி மோதலினால் சவுக்குக் கழிகள் பேருந்தின் முன் பக்க வலது காற்றுத்தடை கண்ணாடியை உடைத்துக்கொண்டு பேருந்தின் ஓட்டுநரையும் இடித்துள்ளது. மேற்படி எதிர்பாராத மோதலினாலும் ஓட்டுநர் அடிபட்டதாலும், ஓட்டுநர் தன் நிலையிழந்து பேருந்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பேருந்தை சாலையின் இடது புறம் திருப்ப முயற்சிக்கையில் பேருந்து சாலையின் இடது புறம் உள்ள வயலில் கவிழ்ந்துவிட்டது. மேற்படி மாட்டுவண்டி சாலையில் முறையாக நிறுத்தப்படாமல் தார் சாலையில் வண்டியின் ஒரு சக்கரமும் வண்டியின் மற்றொரு சக்கரம் மண் சாலையிலும் இருக்கும் வகையில் நிறுத்தப்பட்டிருந்தது. சவுக்குக் கழிகள் ஏற்றப்பட்டிருந்த மாட்டுவண்டி சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததற்கான எச்சரிக்கைக்காக வெளியே நீட்டிக் கொண்டிருந்த சவுக்குகழிகளில் சிகப்புக் கொடியோ அல்லது வேறு எவ்வித சிகப்பு விளக்கு அறிகுறியோ இல்லாமல் இருந்தது. விபத்து நடந்த இடத்தில் தெரு விளக்குகளினால் போதிய வெளிச்சம் இல்லாமல் இருந்துள்ளது. மேற்கூறிய காரணங்களினாலும் விபத்து நடந்த இடத்தில் நிறுத்தி வைத்திருந்த மாட்டு வண்டியைப் பேருந்து ஓட்டுநரால் சரிவர கவனிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. விபத்து நடந்த இடத்தில் மாட்டுவண்டியில் எச்சரிக்கைக்கான அடையாளம் ஏதும் இல்லாத காரணத்தால்தான் மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

2. மேற்படி விபத்தில் ஓட்டுநர் பலத்த காயமுறவே அவர் அருகிலுள்ள கும்பகோணம் அரசாங்க மருத்துமனைக்கு உடனடி சிகிச்சைக்காக எடுத்துச்செல்லப்பட்டார். ஆனால் மருத்துவமனைக்குச் செல்லுமுன் உயிர் இழந்தார். பேருந்தில் பயணம் செய்த ஒரு நபர் விபத்து நடந்த இடத்திலேயே கவிழ்ந்த பேருந்தினால் நசுக்கப்பட்டு உயிர் நீத்தார். ஆக இவ் விபத்தில் உயிர் இழந்தவர் இருவரே, ஐவர் அல்ல.

விபத்தில் உயிரிழந்த நபர்களின் பெயரும் விலாசமும் :

1. பா. பிச்சுமணி, ஆண், வயது 41.
சி. ஆர். சி. ஓட்டுநர், டி. எம். எண். 4239.
த/பெ பாலசுப்ரமணி.
நெ. 4, கௌதமேஸ்வரம் தெற்குவீதி,
கும்பகோணம்.

2. பொ. செல்வராஜ், ஆண், வயது 26 (பயணி)
த/பெ. பொன்னையன்.
நந்திவனம், மருதாநல்லூர்,
கும்பகோணம்.

மேற்படி விபத்தில் ஆறு பயணிகள் பலத்த காயங்களும் பதினைந்து பயணிகள் சொற்ப காயங்களும் அடைந்துள்ளனர். அவர்கள் சிகிச்சைக்காக கும்பகோணம் அரசாங்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பலத்த காயமுற்ற ஆறு பயணிகளும் மேற்கொண்டு சிகிச்சைக்காக தஞ்சை மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மிகவும் நல்லமுறையில் இந்த அறிக்கையை வைத்திருக்கிறார்கள், அறிக்கை சிறப்பாக இருக்கிறது. நான் இன்னொரு விஷயத்தையும் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த டிரைவர் பிச்சுமணி என்பவர் நீண்டநாள் பணியாற்றிவிட்டு இறந்திருக்கிறார். அதைப்போல பயணி ஒருவர் இறந்திருக்கிறார். மேலும் பலர் காயம் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க அரசு சிபாரிசு செய்திருக்கிறதா? எவ்வளவு கொடுக்க சிபாரிசு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, ஓட்டுநரைப் பொறுத்தவரையில் அரசு சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யும். குறிப்பாக ஓட்டுநருக்கு 10,000 ரூபாய் என்ற முறையில் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் இவருடைய குடும்பத்திற்கும் கொடுக்கப்படும். ஆனால் பயணியைப் பொறுத்தவரையில் இன்னும் நாம் முடிவு செய்யவில்லை. அவர்களுக்கு நீதிமன்றத்திற்குப் போகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அரசாங்கமோ அல்லது போக்குவரத்துக் கழகமோ முடிவு செய்ய முடியாது. அவர்கள் நீதிமன்றத்தின் மூலம் வாங்கிக்கொள்ள முடியும்.

ஈ. வறட்சியின் காரணமாகக் கால்நடைகள் வெட்டப்படுவது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ''வறட்சியின் காரணமாகக் கால் நடைகள் வெட்டப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தர்மபுரி, புதுக்கோட்டை, வட ஆற்காடு, இராமநாதபுரம் ஆகிய மாவட்டப் பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்குத் தீவன வசதி அளிக்க அரசு முதல் தவணையாக அரசு ஆணை எண். 781, வருவாய்த்துறை, நாள் 1–3–81–ன்படி 20 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. பிற இடங்களிலிருந்து கால்நடை தீவனம் அப்பகுதிக்கு கொண்டு சென்று அசல் விலைக்கு வழங்க ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதன் மூலம் தங்கள் கால்நடைகளைப் பிற மாநிலங்களுக்கு அனுப்பவோ அல்லது வெட்டவோ செய்வதைத் தவிர்க்க ஏதுவாகும். இளம் காளைகள் கறவை மாடுகள், வெட்டப்படுவது தமிழ்நாடு கால்நடை பாதுகாப்புச் சட்டம் 1958–ன் படி குற்றமாகும். இச்சட்டத்தின்படி கால்நடைகள் வெட்டப்படுமுன் அது வெட்டப்படுவதற்கு ஏற்றது என அரசினால் நியமிக்கப்பட்ட அலுவலரிடம் சான்று பெற்றிருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட இடம் தவிர்த்து மற்ற இடங்களில் வெட்டப்படுவதையும், இச்சட்டம் தடை செய்கிறது. மீறி நடப்பவர்களுக்கு உரிய தண்டனை வழங்கவும் வகை செய்கிறது.

11-12-80 நாளிட்ட உத்தரவின்படி, கால்நடைகள் வெட்டப்படும் இடங்களைப் பார்வையிட கால்நடை உதவி மருத்துவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வகையான கால்நடைகளை வெட்ட அனுமதி தரக்கூடாது என கால்நடை உதவி மருத்துவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

3 வருடத்திற்கு உட்பட்ட பசுக்கள் மற்றும் எருமைகள், 3 வயது முதல் 10 வயதுக்குட்பட்ட வேலை செய்யும் காளைகள் அல்லது வேலைக்கு பிற்காலத்தில் பயன்படக்கூடிய காளைகள்.

3 லிருந்து 10 வயதுக்குட்பட்ட பால் கொடுக்க வாய்ப்புடைய பசுக்கள், மலடு நீங்கலாக.

கறவை மாடுகள், சினைப்பசுக்கள் மற்றும் சினை எருமைகள்.

1981-ம் ஆண்டு தமிழ்நாடு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல் மற்றும் கால்நடைப் பாதுகாப்பு மசோதாவின் முன் வடிவு, சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்துவதற்கு முன் இம் மசோதாவுக்கு, அரசியலமைப்புச் சட்டத்தின் 304-வது விதிமுறையின் உட் கூறு (பி)–ன் கீழ் குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதல் வேண்டியும், மத்திய அரசின் அனுமதி வேண்டியும் பிப்ரவரி 1981–ல் மத்திய அரசிற்குக் கடிதம் ஒன்று அனுப்பப் பட்டுள்ளது. இது குறித்து மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது. சட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் கால்நடைகள் மற்றும் பசுக்களை மாநிலத்தை விட்டு வேறு மாநிலங்களுக்கு அனுப்புவதற்குத் தடை செய்தலும் ஒரு அவசியப்பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

திரு. எஸ், டி. உகம்சந்த் : துணைத் தலைவாவர்களே, தற்போது தமிழ்நாட்டில் வறட்சி நிலைமை கடுமையாக இருப்ப தால் கால்நடைகள் எல்லாம் வெட்டப்பட்டு வருகின்றன. குறிப் டாக இளம் காளைகளும் கன்றுகளும் வெட்டப்படுகின்றன. இதனால் பிற்காலத்தில் விவசாயம் மிகவும் பாதிக்கப்படும் நிலைமை இருக்கிறது. மேலும் இந்த விவர அறிக்கையில் 1958 ஆம் ஆண்டு கால்நடைப் பாதுகாப்புச் சட்டத்தின்படி இளம் காளைகள், கறவை மாடுகளை வெட்டக்கூடாது என்று சொல்லியிருக் கிறார்கள். ஆனால் அந்தச் சட்டம் சரியாக அமுல்செய்யப்பட வில்லை என்று சொல்லப்படுகிறது. அதைச் சரியான முறையில் அமுல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மண்புமிகு திருமதி ஷோமதி சீனிவாசன் : துணைத் தலைவரவர் களே, 11-12-80 நாளிட்ட உத்தரவின்படி, கால்நடைகள் வெட்டப்படும் இடங்களைப் பார்வையிட கால்நடை உதவி மருத்துவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வகையான கால்நடைகளை வெட்ட அனுமதி தரக்கூடாது என கால்நடை உதவி மருத்துவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட் டுள்ளன.

3 வருடத்திற்கு உட்பட்ட பசுக்கள் மற்றும் எருமைகள்; 3 வயது முதல் 10 வயதுக்குட்பட்ட வேலை செய்யும் காளைகள் அல்லது வேலைக்கு பிற்காலத்தில் பயன்படக்கூடிய காளைகள்.

3-லிருந்து 10 வயதுக்குட்பட்ட பால் கொடுக்க வாய்ப்புடைய பசுக்கள், மலடு நீங்கலாக.

சுறவை மாடுகள், சினைப்பசுக்கள் மற்றும் சினை எருமைகள்.

1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல் மற்றும் கால்நடைப் பாதுகாப்பு மசோதாவின் முன் வடிவு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்துவதற்கு முன் இம்மசோதாவுக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் 304—வது விதி முறையின் உட்கூறு (பி)-ன் கீழ் குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதல் வேண்டியும் மத்திய அரசின் அனுமதி வேண்டியும் பிப்ரவரி 1981—ல் மத்திய அரசுக்குக் கடிதம் ஒன்று அனுப்பப் பட்டுள்ளது.

இது குறித்து மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகின்றது. சட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் கால்நடைகள் மற்றும் பசுக்களை மாநிலத்தை விட்டு வேறு மாநிலங்களுக்கு அனுப்புவதற்குத் தடை செய்தலும் ஒரு அவசியப் பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஆகவே மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி இருக்கிறோம். அந்தக் கடிதத்தை விரைவில் எதிர்பார்த்துப் கொண்டிருக்கிறோம். அது வந்தவுடன் நடவடிக்கை எடுக்க படும்.



உ. சேலம் மாவட்டத்தில் தீவனம் இல்லாது கால்நடைகள் இறத்தல்.

திரு இரா. தாமரைக்கனி: துணைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்தில் வைக்கோல் இல்லாததால் ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்தது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை நான் வைக்கிறேன்.

அறிக்கை.

சேலம் மாவட்டத்தில் வறட்சியின் காரணமாகத் தீவனப் பற்றாக்குறை நிலவுகிறது. ஆனால் தீவனம் இல்லாமல் எந்தக் கால்நடையும் இறந்ததாகத் தகவல் இல்லை. திருச்செங்கோடு, ஆத்தூர் பகுதிகளில் பல விவசாயிகள் தங்கள் உபரிக் கால்நடை களைத் தீவனப் பிரச்சனையைச் சமாளிக்க விற்பனை செய்வ தாகவும் அறியப்படுகிறது. போதுமான தீவனம் கிடைக்காவிடில் நலிவுற்ற கால்நடைகள் நோய்வாய்ப்பட ஏது உண்டு. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால்நடைகளுக்கு வைத்திய உதவி அளிக்கத் தேவையான மருந்துகள் கால்நடை மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தேவையான தொற்று நோய்த் தடுப்பு மருந்துகளும் உள்ளன. சேலம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு நியாயவிலையில் வைக்கோல் கிடைப்பதற்கு, அங்குள்ள கால்நடை மருத்துவமனைகளில் வைக்கோலை விற்பனை செய்வதற்கான திட்டத்துக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. கால்நடைத்துறை யினால் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே மாடுகளுக்கு வைக்கோல் இல்லாததன் காரணமாகச் சென்னை நகரிலே உள்ள மாடுகள் மாதிரி அவைகளும் போஸ்டர்களைக் கிழித்துத் தின்று கொண்டிருக்கின்றன. மேலும் அரசாங்கமும் தடை விதித்திருக் கின்ற காரணத்தால் மாடுகள் எல்லாம் சாகும் தறுவாயில் இருக்கின்றன. ஆகவே குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு வழங்குவது போன்று மாடுகளுக்கும் வைக்கோலுடன் தவிடு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அடுத்து சேலம் மாவட்டத்திற்கு என்று எவ்வளவு ரூபாய்க்கு வைக்கோல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கால்நடைகள் போஸ்டர்களைக் கிழித்துத் திங்காத அளவுக்குத்தான் இன்றைக்கு தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வைக்கோல் கொள்முதல் செய்யப்பட்டு பல்வேறு இடங்களில் அசல் விலைக்கே விற்கப்படுகிறது. இதற்காக அரசு 1–3–81 அன்று 20 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. இந்தப்பணியைச் செய்வதற்காக 20 கால்நடை மருத்துவர்களும், 40 உதவி யாளர்களும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். வைக்கோலும் வாங்கிய விலைக்கே விற்கப்படுகின்றது. வைக்கோல் எடுத்துச் செல்கின்ற செலவை அரசே ஏற்றுக் கொள்கின்றது. ஆகவே வைக்கோல்தான் கால்நடைகளுக்குக் கொடுக்கப்படுகிறதே தவிர தவிடு கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊ. மாஜிஸ்ட்ரேட்—முன்சிப் ஒருங்கிணைப்புச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாஜிஸ்ட்ரேட்—முன்சீப் ஒருங்கிணைப்புச் சட்டத்தினை [Tamil Nadu References to Magistrates in Law (Special Provisions) Act. 1980] நடைமுறைப் படுத்துவதில் ஏற்படும் காலதாமதம் குறித்து திருவாளர்கள் எம். சின்னராஜ், கே. குப்புசாமி, செ. செம்மலை, சி. கோபால், கா. கோபாலகிருஷ்ணன், வே. இரா. ஜெயராமன், ஆ. வெள்ளைச் சாமி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள் ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். சின்னராஜ்; தலைவர் அவர்களே, மாஜிஸ்ட்ரேட்—முன்சீப் ஒருங்கிணைப்புச் சட்டத்தினை [Tamil Nadu References] to Magistrates in Law (Special Provisions) Act, 1980] நடைமுறைப் படுத்துவதில் ஏற்படும் காலதாமதம் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, பேரவை முன் கீழக்கண்ட விவர அறிக்கை ஒன்றை நான் வைக்கிறேன்.

அறிக்கை.

இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிகளை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிகளாகத் தரம் உயர்த்தி அவற்றைத் தமிழ்நாடு நீதித்துறைப்பணியின் கீழ், மாவட்ட முன்சீப் பதவித் தரத்தோடு ஒருங்கிணைந்த ஒரே பதவித்தரமாக ஆக்கவேண்டும் என்று உள்துறையின் 31–1–76ஆம் நாளிட்ட 202 ஆம் எண்ணில், அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மாவட்ட முன்சீப் பதவிகள், மாவட்ட முன்சீப் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகளாகப் பதவிப் பெயரிடப்படவேண்டும் என்றும் அரசு கட்டளையிட்டுள்ளது.



2. இப்பதவிகளை எந்தக்கோட்பாடுகளின் கீழ் ஒருங்கிணைக்க வேண்டும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பணி மூப்புநிலை, சம்பளம் முதலியவற்றை எவ்வாறு வரையறுக்கவேண்டும் என்பதற்கான விவரங்களைத் தொகுத்து அவற்றிற்கான செயற் குறிப்புகளை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு உயர்நீதி மன்றப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

3. அரசு ஆணையை உயர்நீதிமன்றம் நுணுக்கமாக ஆய்வு செய்தது என்றும், 1973ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிக்கோவையில் தற்போதுள்ள விதித்துறைகளைக் கருதிப் பார்க்கும் போது மேற்சொன்ன அரசு ஆணையில் பிறப்பிக்கப் பட்டுள்ள கட்டளைகளைச் செயல்படுத்த இயலாது என்று நீதிபதிகள் கருதுவதாகவும், உயர்நீதிமன்றப்பதிவாளர் 1976ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தெரிவித்தார். ஒவ்வொரு மாநிலத் திலும் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் இருக்கவேண்டும் என்று மேற்சொன்ன விதிக்கோவையின் 6–வது பிரிவு கூறுகிறது. மாநகர மாஜிஸ்டிரேட் அல்லது செஷன்ஸ் உதவி நீதிபதி அல்லது முதல்வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் அளித்த தண்டனையை எதிர்த்து, செஷன்ஸ் நீதிபதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துகொள்ள மேற்சொன்ன விதிக்கோவையின் 374–வது பிரிவு வகை செய்கிறது. இச்செயற்குறிப்பு செயல் படுத்தப் பட்டால் மாஜிஸ்டிரேட்டுகள் அளித்த தீர்ப்பை எதிர்த்து செய்து கொள்ளப்படும் மேல்முறையீடுகள் அனைத்தும் செஷன்ஸ் நீதிபதிகளுக்குச் செய்து கொள்ளப்படவேண்டும். அப்போது இதற்காக, மேற்சொன்ன விதிக்கோவையில் தேவையான திருத்தங்களைச் செய்யவேண்டியிருக்கும். தவிர மாவட்ட நீதிபதிகளின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டியிருக்கும் எனவே, அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணை செயற்படுத்ப். படுவதற்கு ஏற்றதல்ல என்று உயர்நீதிமன்றம் கருதியது, எனினும் இதுபற்றி ஆய்வு செய்து தகுந்த பரிவுரைகளை அரசுக்கு அனுப்பி வைக்க நீதிபதிகள் குழு ஒன்றை உயர்நீதிமன்றம் நியமித்தது. எவ்வாறாயினும், ஏதோ ஒரு நிலையில் தான் புதிதாக ஆட்களைத் தெரிந்தெடுக்கவேண்டும் என்று உயர்நீதி மன்றம் கருதியதோடு, இது குறித்து விரிவான செயற்குறிப்புகள் நாளடைவில் அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்தது.

4. நேரடியாக நியமனம் ஒருநிலையில் மட்டும் செய்வது என்ற ஏற்பாட்டுடன், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள், முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள், மாவட்ட முன்சீப்புகள் ஆகியோரடங்கிய ஒரே பதவித்தரத்தை மட்டும் வைத்துக் கொள்வதென நீதிபதிகள் முடிவெடுத்திருப்பதாக உயர்நீதிமன்றம் தற்போது தெரிவித்துள்ளது. இந்த பதவித்தரத்தில் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள், முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள், மாவட்ட முன்சீப்புகள் ஆகியோர்களுக்கான அதிகாரங்களைப் பல்வேறு அதிகாரிகளுக்கு அவர்களது அனுபவம், பொருத்தம், தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் உயர்நீதிமன்றம் வழங்கும். மேற் சொன்ன பதவித்தரத்தில் தற்போதுள்ள மாவட்ட முன்சீப்புகள்

முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள், பணிகள் முறைப்படுத்தப்பட்ட இராண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோர் வருவர். எந்த இராண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் பணி முறைப்படுத்தப் படாமல், இன்னும் தற்காலிகமாகப் பணியாற்றுகிறார்களோ, அவர்கள் புதிதாக ஆட்கள் நியமனம் செய்யப்படும் வரையில் தற்போதைய சம்பள வீதத்தில் தொடர்ந்து அவ்வாறே பணியாற்றுவார்கள். அந்த ஆள்தேர்விற்கு அவர்களும் விண்ணப்பித்துக் கொள்ளலாம். திருத்தங்களைச் சேர்த்து தேவையான ஆணைகளை பிறப்பிப்பதற்காக மேற்சொன்ன கோட்பாடுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், தமிழ்நாடு மாநில நீதித் துறைப் பணிவிதிகளுக்கு வரைவு திருத்தங்களையும் உயர்நீதி மன்றம் அனுப்பியுள்ளது. மாவட்ட முன்சீப் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகளுக்கான பயிற்சி வரைவுத் திட்டமும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அந்த வரைவு திருத்தங்கள், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நீதி மற்றும் சட்டத்துறை ஆகியோரோடு கலந்தாலோசித்து முடிவு செய்யப் பட்டுள்ளன. அந்த வரைவுத் திருத்தங்களுக்கு தமிழ்நாடு தேர்வாணைக்குழுவின் சம்மதமும் பெறப்பட்டுள்ளது.

5. உயர்நீதிமன்றம் இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தை அமல் செய்வதற்கு முதல்வகுப்பு, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுக்கு ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் புதுப்பதவி பெயர்களைப் பொறுத்து, ஒரு சட்டம் இயற்றுவது அவசியம் என்றும், அந்தச் சட்டம் தமிழகத்தில் நடைமுறையிலுள்ள எந்த சட்டத்திலும் எங்கெங்கும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் அல்லது இராண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் என்ற பதங்கள் காணப்படுகின்றனவோ, அங்கெல்லாம், அவை முறையே 'முதல்' வகுப்பு மாஜிஸ்டிரேட்டின் அதிகாரங்களைச் செயல்படுத்தும் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் மற்றும் நீதித்துறை மாஜிஸ்டிரேட் அல்லது, ''இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டின் அதிகாரங்களைச் செயல்படுத்தும் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் மற்றும் நீதித்துறை மாஜிஸ்டிரேட்'' என்ற பொருள் பெறும் என்ற முறையில் அமைய வேண்டும் என்றும் கருத்து தெரிவித்துள்ளது. உயர்நீதி மன்றத்தின் கருத்திற்கேற்ப சட்டம் ஏற்கனவே இயற்றப்பட்டு 30—9—80ல் குடியரசுத் தலைவரின் இசைவும் பெறப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் இத்திட்டத்தை 1-11-1980 முதல் அமுல்படுத்தலாம் என்று கருத்து தெரிவித்தது.

6. இதற்கிடையில் கடந்த சில ஆண்டுகளாக, மாவட்ட முன்சீப் பதவிக்கு வழக்கறிஞர்களை தேர்வாணைக்குழு மூலம் தேர்ந்தெடுக்காததால், இனி தேர்வாணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட இருக்கும் தேர்வில், பணிமாற்ற முறையில் தேர்ந்தெடுக்கப் படுபவர்களைவிட, நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களே அதிகமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி உயர்நீதிமன்றம் கலந்தாலோசிக்கப்பட்டது. உயர்நீதிமன்றம் அக்கருத்தை ஆதரித்து, இனி நடக்கவிருக்கும் தேர்வில், ஆறு பேர்களில், ஐந்து பேர்களை நேரடியாக வழக்கறிஞர்களிலிருந்தும், ஒருவரை மட்டும் பணிமாற்று முறையிலும் தேர்ந்தெடுக்கலாம் என்றும் கருத்து தெரிவித்துள்ளது.



7. இப்பொருள் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விரைவில் முடிவெடுக்கப்பட்டுவிடும். அந்த முடிவு தெரிந்தவுடன் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக்குழுவின் இசைவு பெற்று, இந்த ஒருங்கிணைப்புத்திட்டம் விரைவில் செயல்படுத்தப் படும்.

**திரு. எம். சின்னராஜ்:** மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் சட்டம் கொண்டு வந்ததன் நோக்கமே கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு எளிதாக அளிக்கக்கூடிய வகையிலே முன்சீஃப், சப்மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களில் முதல் வகுப்பு குற்றங்களையும் அளித்து நடத்துவதற்காக வசதியை ஏற்படுத்துவதற்காகத் தான் என்பதை முதலிலே நான் வரவேற்று இதன் காரணமாக இரண்டாம் நிலை மாஜிஸ்ட்ரேட்டாக இருப்பவர்களை முதல் நிலை மாஜிஸ்ட்ரேட்டாக ஆக்கி ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டாக சாதாரணமாகப் போட்டுவிடுகிறார்கள். ஆகவே இப்போது இந்த உயர் பதவியிலே தகுதியும் பொறுப்பும் அதிகமாக ஆக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்தப் பதவிகளுக்கு சாதாரணமாகத் துறையிலே இருந்து நியமிக்கப்படுபவர்களைத் தகுதியானவர்களாக உயர்நீதிமன்றமும் அரசும் கருத முடியாது. ஆகவே பத்தாண்டுகளுக்கு மேலாக வழக்கறிஞர் மன்றங்களிலே உள்ள வழக்கறிஞர்களை அல்லாமல் துறையிலே இருந்து இந்தப் பதவிக்கு அதாவது இரண்டாம் நிலை சப் மாஜிஸ்ட்ரேட் பதவிக்கு நேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்களை திரும்பவும் துறைக்கே அனுப்பிவிட்டு வழக்கறிஞர் மன்றங்களிலே இருந்து வருகின்றவர்களை மட்டும் இந்த பொறுப்பான பதவிக்குத் தேர்ந்தெடுக்க அரசு முன்வருமா? ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் துறையிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? அதாவது வழக்கறிஞர் மன்றங்களிலே இருக்கின்ற வழக்கறிஞர்களிடையே இருந்து அல்லாமல் துறையிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனைபேர் என்பதைப்பற்றியும் அமைச்சர் அவர்களின் மூலமாக அறிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11.10]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகின்றதைப் போலவே, நீதித்துறையில் இப்படிப்பட்ட ஒருங்கிணைப்பு திட்டம் செயல்படுகிறபோது செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்டிரேட்டாக இருப்பவர்கள், பர்ஸ்ட்கிளாஸ் மாஜிஸ்ட்டிரேட்டாக தகுதி உயர்வு பெற்று அவர்கள் செகண்ட் கிளாஸ் அஃபென்சஸ் ஆப் தி கிரிமினல் கேஸஸ் என்று மட்டுமல்லாமல், பர்ஸ்ட் கிளாஸ் அபென்ஸையும் நடத்தக் கூடிய நேரத்தில், சிவில் வழக்குகளை நடத்தக்கூடிய நன்மைகளையும் மக்கள் பெற வேண்டியிருக்கிறது என்ற நோக்குடனும், ஒரே கூரையின் கீழ் மக்கள் பர்ஸ்ட் கிளாஸ் or செகண்ட் கிளாஸ் அபென்சஸ், சிவில் or கிரிமினல் மேட்டர் என்று இல்லாமல், அந்தப்பகுதியிலே குறிப்பிட்ட எல்லைக்குள். ஜூரிஸ்டிக்ஷனுக்குள் இருக்கிற

வழக்குகள் எதுவாக இருந்தாலும் ஒரே கூரையின் கீழ், அந்த மக்கள் சட்ட நீதிநியாயத்தைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதை நடைமுறைபடுத்த உயர்நீதிமன்றம் ஆரம்பக் கட்டத்தில் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்டிரேட்டுகளின் பதவி உயர்வு பெறப்பட்ட போதிலும், செகண்ட் கிளாஸ் அபென்சுகளையே தொடர்ந்து சில காலத்திற்கு நடத்தலாம் என்று சொன்னபோது அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் அனைத்து செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்டிரேட்டுகளும், டிஸ்டிரிக்ட் முன்சீப்புகளும், ஜூடீஷயல் மாஜிஸ்ட்டிரேட் என்ற நிலைக்கு கொண்டு வரப்பட்டு, பர்ஸ்ட் கிளாஸ், செகண்ட் கிளாஸ் அபென்சஸ் சிவில் கிரிமினல் கேஸஸ் என்ற அனைத்தையும் நடத்தவேண்டும் என்று தான் அரசு முடிவு எடுத்திருக்கிறது. உயர்நீதிமன்றத்தோடு அரசு அதைப் பற்றி கலந்து பேசி வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இரண்டாவது பிரச்னையைப் பொறுத்தவரைக்கும், அப்படி நீதிபதிகளாக நியமிக்கப்படக் கூடியவர்கள் சட்டம் படித்த வழக்கறிஞர்களாக பணி ஆற்றி பயிற்சி பெற்றவர்களாக இல்லாமல், துறைகளிலிருந்து அனுபவம் இல்லாமல், பல ஆண்டு காலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் நீதிபதிகளாக இருக்கிற நேரத்தில், பதவி தரத்தை உயர்த்திய பிறகு, அவர்கள் அந்த தரத்தை வைத்து செயலாற்ற முடியாத நிலைமையில் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணத்தோடு தான் உயர்நீதிமன்றத்தின் கருத்தும் ஒன்றுபட்டிருக்கிறது. உயர்நீதிமன்றமும் இதே கருத்துக்களைத் தான் அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது.

இதுகாறும் கடந்த காலத்தில், எப்பொழுதிலிருந்து இப்படிப் பட்ட பயிற்சி பெற்ற வழக்கறிஞர்களை தேர்வு நடத்தி எடுக்காமல், பல அரசு துறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு நீதிபதிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்டார்கள்? 1965 ஆம் ஆண்டிலிருந்தே செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்டிரேட் பதவிக்கு அரசு அலுவலர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு வருகிறார்களே ஒழிய, அனுபவம் மிக்க வழக்கறிஞர்களை தேர்ந்து எடுக்கப்படாத நிலைமை இருந்து வருகிறது. அதை மாற்ற வேண்டும் என்று அரசுக்கு உயர்நீதிமன்றம் பரிந்துரையை தந்திருக்கிறது. அரசு அதை திவிரமாக பரிசீலித்துக் கொண்டு வருகிறது.

டிஸ்டிரிக்ட் முன்சீப் விஷயத்தில் 11 : 9 என்ற விதியையும் அதே போல மாஜிஸ்ட்டிரேட்டுகளின் விஷயத்தில் 60 : 40 என்ற விதியையும் கூட கடைபிடிக்காமல் இருந்து வந்த நிலைமை இருக்கிறது. அதை மாற்றுவதற்காக 5 : 1 என்ற முறையில் 5 பேர் பயிற்சி பெற்ற வழக்கறிஞர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுவார்களேயானால், துறையிலிருந்து அதுவும் சட்ட நுணுக்க



பயிற்சியைப் பெறக் கூடிய துறையிலிருந்து ஒருவர் தேர்ந்து எடுக்கப்படவேண்டும் என்று உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்திருக்கிறது. அதை அரசு தீர ஆராய்ந்து, அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

### எ. வேடசந்தூர் இறைவை கூட்டுறவுச் சங்கம் மூலம் தோண்டப்பட்ட கிணறுகள் செயல்படாமை.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''வேடசந்தூர் தொகுதி தொப்பநாயக்கனூர் இறைவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கம் மூலம் தோண்டப்பட்ட கிணறுகள் செயல்படாது இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை நான் வைக்கிறேன்.

#### அறிக்கை

மதுரை மாவட்டம், வேடசந்தூர் தாலூக்காவில் உள்ள தொப்பநாயக்கனூர் கூட்டுறவு நீர்ப்பாசன சங்கம் 30-12-1970-ல் பதிவு செய்யப்பட்டு 19-2-1971 முதல் வேலை துவங்கியது. நாளது தேதியில் இச் சங்கத்தில் 126 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ரூ. 3,400 பங்குத் தொகையாக செலுத்தியுள்ளனர். மேற்கண்ட 126 உறுப்பினர்களில் 63 உறுப்பினர்கள் தங்களின் 116 ஏக்கர் நிலத்தை சங்கம் மூலம் நீர்ப்பாசனவசதி பெற ஒன்று சேர்த்துள்ளனர். சங்கத்தின் மூலம் 107 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி செய்து தரும் வகையில் 9 திறவை கிணறுகளும், 5 குழாய் கிணறுகளும் தோண்ட ரூ. 5, 67, 800 மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. மேற்படி திட்டத்திற்கு தமிழ்நாடு மாநில நிலவள வங்கி ரூ. 4,95, 400 கடன் அனுமதித்து வேடசந்தூர் நிலவள வங்கி மூலம் ரூ. 3,72,820 வழங்கியுள்ளது. சிறு விவசாயிகள் மேம்பாட்டு கழகத்தினரிடமிருந்து சங்கத்தில் முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பீட்டில் 50 சதவீதம் முறையில் ரூ. 1, 85, 241 இச் சங்கம் மானியமாகப் பெற்று நிலவள வங்கியில் பெற்றகடன் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கடன் உதவியுடன் சங்கம் 9 திறவை கிணறுகளையும் 5 குழாய் கிணறுகளைளம் தோண்டபணி மேற்கொண்டது. 9 திறவை கிணறுகளில் 6 கிணறுகளில் வேலை முழுவதும் முடிவடைந்து, மூன்று கிணறுகளில் பணி நிலுவையாக உள்ளது. முழுவதும் வேலை முடிந்த 6 திறவை கிணறுகளில் 4 கிணறுகளுக்கு மின்சார பம்புசெட்டுகள் அமைக்கப்பட்டு 20 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 2 திறவை கிணறுகளிலும் மின்சார பம்பு செட்டுகள் அமைக்கவும் நிலுவையிலுள்ள மூன்று கிணறுகளின் பணிகளை முடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஐந்து குழாய்க் கிணறுகள் தோண்டியதில் நான்கு குழாய் கிணறு

களின் பணி திட்ட அறிக்கையின்படி முடிக்கப்பெறாமலும் ஒரு குழாய் கிணறு பொய்த்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள வேலைகளை முடிக்கத் தேவையான கூடுதல் நிதி உதவி பெறும் பொருட்டு திருந்திய மதிப்பீடு தயாரித்து ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே வேடசந்தூர் தொகுதி தொப்பநாயக்கனூர் இறவை கூட்டுறவுச் சங்கம் மூலம் தோண்டப்பட்ட கிணறுகள் முழுவதும் செயல்படாது இருக்கின்றன என்று கூறுவது சரியல்ல.

**வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலேயே, தோண்டப்பட்ட 6 திறவை கிணறுகளில் 2 கிணறுகளுக்கு இன்னும் மின்சார இணைப்பு கொடுக்காத காரணத்தால் செயல்படாமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் இந்தப் பணி 1973 ஆம் ஆண்டிலே முடிக்கப்பட்ட பணி, அது மின்சார கருவி பொருத்தபபடாத காரணத்தால் இயங்காமல் இருக்கிறது. அதைப்போலவே, விவர அறிக்கையிலேயே, தமிழ்நாடு மாநில நிலவள வங்கி ரூ. 4,95,400 கடன் தர அனுமதித்திருந்தாலும், வேடசந்தூர் நிலவள வங்கி மூலம் 3,72,820 மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த 1 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்படாததினால்தான், 7 ஆண்டு காலமாக அந்த கிணறுகள் செயல்படாமல் இருக்கின்றன என்பதை கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட கால அளவுக்குள் தொடங்கவும், புதிதாக போடாமல் இருக்கிற கிணறுகளுக்கு அந்த சங்கத்திலிருந்து கடன்கள் வழங்கவும், இந்த 1 கோடியே 22 ஆயிரம் ரூபாய்க்கு வட்டி சலுகை அளிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மின் இணைப்புக் கொடுப்பது போன்ற சில பிரச்சினைகளில் சில ஆண்டுகளாகவே அங்கே தாமதம் ஏற்பட்டிருப்பது உண்மைதான். விவசாயிகளுக்கும் அந்தப் பிரச்சனை இருக்கிறது என்பதும் உண்மைதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டது போல் விவசாயிகளின் நலன் கருதி அதையெல்லாம் உடனடியாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் உத்தரவிட்டு விரைவில் இதை நடைமுறைப்படுத்தும்.

அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

ஆ. விதி 32-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ தளர்த்தி இப் பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.



9 அரசினர் சட்டமுன்வடிவுகள்

அ. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு 1981.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே,

''1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1981) ஆய்வுக்கு* எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

என்று மொழிகிறேன்.

THIRU K.S.G. HAJA SHEREEF ; Sir, I move the following amendment:

"That the Tamil Nadu Industrial Establishment (Conferment of Permanent Status to Workmen) Bill, 1981 (L.A.Bill No. 40 of 1981) be referred to a Select Committee''.

THIRUMATHI T. RAJAMBAL : I second it.

MR. DEPUTY SPEAKER : The motion and amendment are before the House for discussion.

THIRU K.S.G. HAJA SHEREEF : Sir, I have got my own apprehension about the functioning of this Bill. I have got my own doubts whether this Bill will be able to do greater good to the workers. There are tens and thousands of small-scale industries and very small industries which obtain contracts from various public sector companies and supply. On these occasions they have to employ men for extra work and after completion of the extra work, they ask these people to go. There is no need for a special Bill regarding conferment of permanency of temporary workmen. As it is under the provision of Industrial Disputes Act, a dispute for permanency can be and is being raised and the adjudication machinery can deal with the same on the merits of each case. If however, an omnibus Bill like this is placed, the conditions and circumstances in individual units which may require special consideration will be totally lost sight of.

In the normal course of things, when there are permanent vacancies, the employers would only naturally and in fact are only making temporary workmen permanent. This is also covered by the various settlements in individual units. Hence no special legislation is called for.

*1981-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[K. S. G. Hafa sherieef] [1981 மே 14

The Bill as worded may deter employers from employing additional hands to meet short term increase in work or to meet short term demands, in view of being compelled to make temporary workmen permanent. This in turn may affect the utilisation of existing capacity.

If this Bill is passed in Tamilnadu this would have adverse consequences on setting up new industries by enterpreneurs from oute side the State and as a result the industrial growth of the State and employment potential may be affected.

சார், இதற்குத் திருத்த மசோதா கொடுத்திருக்கிறோம். இதன் காரணமாக, பல கஷ்டங்கள் அவசியம் வருமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். எனவே, இதை செலக்ட் கமிட்டிக்கு அரசாங்கம் அனுப்பினால், அதிலே நல்லவிதமாக இதற்கு ஒரு தீர்வு கண்ட பிறகு, இந்த மசோதாவைக் கொண்டுவந்தால், மிகவும் நலமாக இருக்கும் என்று கூறிக்கொண்டு நான் அமர்கிறேன்.

[முற்பகல் 11-20]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழிலாளிகள் ஆவலோடு எதிர்பார்க்கக்கூடிய, பல வருஷங்களாக, பல இயக்கங்களை நடத்தி, நிரந்தரமாக்கப்பட வேண்டும், அதற்கு சட்டத்தை இயற்ற வேண்டுமென்று கேட்டு, பல இயக்கங்களை நடத்தி வந்ததை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்த நோத்திலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், நல்ல நோக்கத்தோடு இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு நிரந்தரமான, பர்மனென்ட் ஸ்டேடஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று எண்ணுகிறோம். ஆனால், இந்தச் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஷரத்துக்கள் அப்பேர்ப்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்தாது என்ற ஐயத்தை எங்களுக்கு ஏற்படுத்துகிறது. ஆகவேதான் இது சம்பந்தமாக சில திருத்தங்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம். இந்தத் திருத்தங்கள் அடிப்படையிலே இந்தச் சட்டத்தை அமைத்துக் கொடுத்தால், தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் இந்தச் சட்டத்தினால் பயனடைவார்கள். ஆனால், இந்தச் சட்டத்தினால் பெரிய ஏமாற்றம் ஏற்படக்கூடிய நிலையை இந்த நாட்டிலுள்ள முதலாளிகள் ஏற்படுத்துவார்கள் என்பதை நாம் பல ஆண்டுகளாகப் பார்க்கிறோம். இந்த நாட்டிலுள்ள முதலாளி வர்க்கம், அவர்கள் சுரண்டலை நிலைநாட்டுவதற்காக, இந்த நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, இந்த நாட்டிலே தொழிலாளர் வர்க்கத்தின் தலையிலே இந்தச் சுமையைச் சுமத்துகிறார்கள். அப்படிச் சுமத்தி, சுரண்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்று இன்று பல Unfair and anti-labour practices-ஐ கையாள்கிறார்கள் என்பதை நாம் அறிவோம்.



1981 மே 14] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இந்த நேரத்திலே காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தப் பிரேரணையை என்னால் ஆதரிக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், அவர்கள் சொல்லுகின்ற காரணம் இன்று பல பப்ளிக் செக்டாரிலே கான்ட்ராக்ட் ஏற்படுகிறது. அப்படி கான்ட்ராக்ட் ஏற்படுகின்ற காரணத்தினால், பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை அவர்கள் வேலைக்கு வைக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு இன்றைக்கு முறையாக தொழில் தகராறு சட்டத்தின்படி பர்மனென்ட் ஸ்டேட்டஸ் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அப்பேர்ப்பட்ட நிலைமையில் கொடுக்கப்படவில்லை என்பதை இந்த நாட்டிலுள்ள தொழிலாளர் வர்க்கம், இயக்கம் நடத்துவது இந்த அரசு உணர்ந்துதான், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள் என்பதை நாம் அறிவோம். இந்த நேரத்திலே ஒன்றை நான் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சொல்லக்கூடிய முறையிலே பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இந்த கான்ட்ராக்ட் முறையிலே வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். அப்படி அமர்த்துகிறார்கள் என்று சொல்லும்போது, அந்த கான்ட்ராக்ட் வேலை அதோடு முடிந்து போய்விடுவதில்லை. மீண்டும் அந்த கான்ட்ராக்டர் கான்ட்ராக்ட் எடுத்துக் கொண்டிருக்கிறார். அப்போது அவர் அதே தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளலாம். ஆகவே, இந்த அரசு காசுவல் ஒர்க்கர்களுக்கு சர்வீஸ் புக் கொடுக்கவேண்டும் என்ற ஒரு நிலையைக் கடைபிடிக்கவில்லை. வேஜ் ஸ்லிப் கொடுப்பதில்லை. இந்த நாட்டிலுள்ள முதலாளிகள் அப்படி சர்வீஸ் புக் கொடுக்கவில்லை என்பதை நாம் அறிவோம். இந்த நேரத்திலே அரசாங்கத்தை குறை கூறுவதற்காக நான் சொல்லவில்லை. உண்மை நிலையை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அரசு இன்று எம்பளாயராக இருக்கக்கூடிய ஏறத்தாழ 10,000 ஏக்கர்களில் வேலை செய்யக்கூடிய அரசு ரப்பர் தோட்டங்களிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வேஜ் ஸ்லிப் முறையாகக் கொடுக்கவில்லை. இந்த சர்வீஸ் புக்கும் கொடுக்கவில்லை. இந்த அரசாங்கத்தினுடைய துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளே இப்படிப்பட்ட நிலைமையைக் கையாளுகின்ற நேரத்திலே, தனியார்கள், முதலாளிகள் பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே, இன்று ஒரு தொழிலாளி கான்ட்ராக்ட் வேலை செய்யக் கூடிய தொழிலாளியாக இருந்தாலும் சரி, அல்லது வேறு ஒரு தொழிலாளியாக இருந்தாலும் அவர்களுக்கு சர்வீஸ் புக், வேஜ் ஸ்லிப் கொடுக்கவேண்டும். வருஷத்தில் ஒரு கான்ட்ராக்ட் மூலம் 100 நாள் வேலை கிடைக்கும்; இன்னொரு கான்ட்ராக்ட் மூலம் 80 நாட்கள் கிடைக்கும். இப்படி 240 நாள் அவனுக்கு வேலை கிடைக்கிற காலத்தில், பெர்மனென்ட் ஸ்டேட்டஸ், நிரந்தரத் தன்மை அவனுக்கு கிடைப்பதற்கான வழி இருக்கிறது. அப்படிப்

பட்ட ஒரு நிலையை உருவாக்குவதற்கு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆதரிக்க வேண்டுமே தவிர, செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்ற பிரேரணை மீண்டும் காலதாமதத்தை ஏற்படுத்தி, இப்படிப்பட்ட சட்டம் தமிழ்நாடு சட்டமன்றத்திலே நிறைவேற்றப் பட போகிறது என்பதைத் தெரிந்து கொண்டு, இந்த நாட்டிலே இருக்கிறமுதலாளிகள் மீண்டும், ரெக்கார்டு இல்லாமல், சர்வீஸ் புக் இல்லாமல் இந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை பழி வாங்கி அவர்களை தெருவிலே இறக்கி விடுவதற்கு ஒரு நிலை வரும் என்பதை அவருக்குச் சொல்லி அந்த திருத்தத்தை வலியுறுத்தக் கூடாது என்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் இந்தச் சட்டம் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்வது தவறாக இருக்காது என்று நினைக்கிறேன். முதலாவதாக இந்தச் சட்டத்தினுடைய ஷெட்யூல் ஷரத்திலே 3-வது பிரிவிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 50 தொழிலாளர்கள் இருக்கக்கூடிய ஸ்தாபனங்களுக்குத் தான் இது பொருந்தும் என்றால் இன்று அரசு எடுத்திருக்கிற தொழில் நிறுவனங்களுக்கு, கொடுக்கப்பட்டிருக்கிற 'டெபனிஷனிலிருந்து' மிக தூரம் செல்கிறது. ஏனென்றால் மோட்டார் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் 5 தொழிலாளர்கள் இருந்தால் அந்த சட்டம் பொருந்துகிறது. 'ஷாப் அண்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட்'-லே மூன்று தொழிலாளர்கள் இருந்தால் அந்தச் சட்டம் பொருந்துகிறது. 50 தொழிலாளர்கள் இருக்கக்கூடிய 'ஷாப் அண்ட் எஸ்டாபிளிஷ்மெண்டுக்குத்' தான் அது பொருந்தும் என்றால் நாட்டிலே இருக்கக்கூடிய சாதாரணமான ஷாப்புகளுக்கு அந்தச் சட்டம் பொருந்தாது. 50 தொழிலாளர்களை வைக்கக்கூடிய ஷாப்புகள் இன்றைக்கு தமிழகத்திலே மிக கம்மியாக இருக்கும். ஐந்துக்கு மேலே தொழிலாளர்களை வைத்து இருக்கிற தொழில் ஸ்தாபனங்களுக்கு அந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று தான் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் தொழில் துறையினுடைய பல கமிஷன்களின் பரிந்துரைகளில், ஐந்துக்கு மேலே தொழிலாளர்களை வைத்து வேலை வாங்கக்கூடிய ஸ்தாபனங்கள் 'மைனர் யூனிட்ஸ்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்று மோட்டார் டிரான்ஸ்போர்ட்டிலே 50 தொழிலாளர்கள் என்ற நிலையிலே இருக்கக்கூடியவர்களுக்கு இது பலன் அளிக்காது. இதுபோன்ற பல தனியார் நிறுவனங்களுக்கு இருக்கிற தொழிலாளர்களுக்கு இது பலனளிக்காது. ஆகவே 50 தொழிலாளர்கள் என்பதை மாற்றி 5 தொழிலாளர்கள் என்று கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போல இன்று அரசுத் துறையில் இருக்கிற பல ஸ்தாபனங்களிலே பிராவிடன்ட்பண்ட் ஆக்டிலே எல்லாம் 10 தொழிலாளர்கள் இருந்தால் தானாகவே அந்த சட்டங்கள் அவர்களுக்கு பொருந்துகின்றன. ஆகவே இந்த நேரத்தில் நீங்கள் 50 தொழிலாளிகள் என்று வைத்தால், தொழிலாளர்களை மிகவும் பாதிக்கும் சட்டமாக இது மாறும்



என்பதைச் சொல்லிக் கொண்டு, 50 தொழிலாளர்கள் என்பதை மாற்றி 5 தொழிலாளர்கள் என்ற திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மற்றொன்று, இது சம்பந்தமாக இன்று 'இண்டஸ்ட்ரியல் எஸ்டாபிளிஷ்மெண்ட்' என்பதற்கு 'டெபனிஷன்ஸ்' கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்த டெபனிஷனிலே ஒரு பாக்டரியில், மோட்டார் பவர் உபயோகப்படுத்துகிற பாக்டரியில், 10 தொழிலாளர்கள் இருந்தால் தான் முடியும், அது பாக்டரி ஆக்ட்டிலே வரும் என்று ஒரு நிலையிருக்கிறது. அப்படி இருக்கும் போது 50 தொழிலாளர்கள் என்று நீங்கள் சொல்லக்கூடிய காலத்தில் இந்த பாக்டரிகளில், வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டத்தினுடைய பலன் கிடைக்காத ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே இன்று இந்தச் சட்டத்திலே ஒரு பாக்டரியிலே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் பலன் அடைய முடியாதபடி இருக்கிறது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பெரிய பாக்டரிகளை, சிறு சிறு பாக்டரிகளாக மாற்றி 10 தொழிலாளர்களுக்கு கீழே வேலைக்கு வைத்துக் கொண்டு பேக்டரி ஆக்டிலேயிருந்து தப்பித்துக் கொள்வதற்கு நிலை இருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது.)

[முற்பகல் 11–30]

தலைரவர்களே, I have moved many amendments and I have to explain all those things. நீங்கள் சென்று பார்க்கிற போது பல பெரிய பாக்டரிகளில் சிறு சிறு யூனிட்டுகளாக மாற்றி ஒரு பொருளையே பல இடங்களில் தயார் பண்ணுகிற, அசெம்பிள் பண்ணக்கூடிய நிலையை நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒரே முதலாளி சிறு சிறு யூனிட்டுகளாக வைத்து 10 தொழிலாளர்களுக்கு கீழே வைத்துக்கொண்டு பாக்டரி ஆக்டிலிருந்து தப்பித்துப் கொள்கிறார்கள். ஆகவே நீங்கள் 5 தொழிலாளர்கள் என்ற ஒரு திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் தமிழகத்திலே உள்ள பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் இந்தச் சட்டத்தினால் பயனடைய முடியாது. இண்டஸ்ட்ரியல் எஸ்டாபிளிஷ்மெண்ட் என்று கொடுக்கபபட்டுள்ள டெபனிஷனில் இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டிலே என்ன கொடுக்கப்பட்டிருக்கிறதோ அது கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்ட் ஒரு பேக்டரிக்கு ஒரு தொழிலாளருக்குப் பொருந்துகிறது. பிளான்டேஷன் ஆக்டிலேயும் ஒரு தொழிலாளிக்கு பொருந்துகிறது. ஆனால் பிளான்டேஷனைப் பொறுத்தவரையில் 25 ஏக்கரும் 30 தொழிலாளர்களும் இருந்தால்தான் பிளான்டேஷன் ஆக்ட் கொண்டு வர முடியும். இன்றைக்குத் தோட்டங்களைப் பங்கு போடக் கூடிய நிலைமை இருக்கிறது. ஃபிராக்மென்டேஷன்ஸ் என்ற முறையிலே வந்து கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தத் தோட்டங்களின் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்கின்ற முறையிலே முதலாளிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பிளான்டேஷன் ஆக்டிலே கொடுத்துள்ள

டெபனிஷனைக்கொடுத்தால் தோட்டங்களில் வேலை செய்கின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்குச் சட்டத்தின் பலன் கிடைக்காது. ஆகவே நாங்கள் கொடுத்திருக்கிற திருத்தத்தை 5 தொழிலாளர்களுக்கு மேல் இருக்கின்ற தொழிற்சாலையாக இருந்தாலும், பிளான்டேஷனாக இருந்தாலும், டிரான்ஸ்பேரர்ட் அன்டர்டேக்கிங்காக இருந்தாலும் பொருந்தும் என்ற திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான திருத்தம் என்னவென்றால் 240 நாட்கள் ஒரு வருடத்திலே வேலை செய்திருந்தால் அந்தத் தொழிலாளருக்கு நிரந்தரமான முறையிலே உள்ள சலுகைகள் அத்தனையும் கொடுக்கப்பட வேண்டுமென்ற முறையிலே சட்டங்கள் இருக்கின்றன. பிராவிடன்ட் பண்ட் ஆக்டிலே 240 நாட்கள் வருடத்திலே தொழிலாளி வேலை செய்திருந்தால் பிராவிடன்ட் பண்ட் பெனிபிட் கிடைக்கிறது. இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டிலே சாப்டர் 5 ஏ-யிலே உள்ள பெனிபிட்டுகளைப் பெறுவதற்காக ஒரு வருடத்திலே 240 நாட்கள் வேலை செய்திருந்தால் போதும் என்ற முறையிலே போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். லேபர் இலாகா அட்ஜுடிகேஷனுக்கு அனுப்ப டெக்ளைம் பண்ணுவதற்கு ஒரு வருடத்திற்கு 240 நாட்கள் வேலை செய்யவில்லை ஆகவே நீதிமன்றத்திற்கு அனுப்ப முடியாது என்று சொல்லிப் போடப்பட்ட உததிரவுகள் இருக்கின்றன, நான் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆகவே ஒரு வருடத்திலே 240 நாட்கள் என்பது மாமூலமாக அங்கீகரிக்கப்பட்ட கன்வென்ஷனாக அல்லது ஒரு பழக்கமாக இந்த நாட்டிலே இருப்பதன் காரணமாக 12 மாதத்திலே 240 நாட்கள் என்ற திருத்தத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அடுத்து "3 (1)— Notwithstanding anything contained in any law for the time being in force every workman who is in continuous service for a period of four hundred and eighty days in a period of twenty-four calendar months in an industrial establishment shall be made permanent.", என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வருடங்கள் அதிலே 480 நாட்கள் என்று போட்டால் சரியாக இருக்காது. ஆகவே இரண்டு வருட சர்வீஸோ அல்லது ஒரு வருடத்திலே 240 நாட்கள் சர்வீசோ என்று இருக்கக்கூடிய முறையிலே பெர்மனன்ட் ஸ்டேட்டஸ் கொடுக்கக்கூடிய நிலையை உருவாக்கினால் தான் தமிழகத்திலே உள்ள முதலாளிகள் தொழிலாளிர்களை நிரந்தரப்படுத்துவதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கையிலிருந்து • தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கமுடியும். அப்படிச் செய்தால்தான் தொழிலாளர்களுக்கு அதிகமான பலன்கள் பெற்றுக் கொடுக்க முடியும். அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற சட்டத்தின் மூலமாக அவர்களுக்குப் பலன்கிடைக்க முடியும்.

மற்றொரு முக்கியமான திருத்தம் சீஸனல் இன்டஸ்ட்ரி என்பது. சீஸனல் இண்டஸ்ட்ரி எது என்பதை முடிவு செய்வதற்கு இண்டஸ்ட்ரியல் ஆக்டிலே அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்



கிறது. ஆகவே இங்கேயும் சேர்த்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை: அதே நேரத்திலே சீஸனல் இண்டஸ்ட்ரி என்று சொல்லப்படுகிறபோது 240 நாட்களுக்கு மேலே வேலை செய்கிறபோது, ரா மெட்டிரியல்ஸ் இல்லாத அல்லது பவர் இல்லாத நிலைமை ஏற்படுகிறபோது அவர்களுக்கு ஒரு வருடம் பூர்த்தியாக வேலை செய்ய முடியாத நிலை தமிழகத்திலே பல இடங்களிலே இருக்கிறது.

இந்த அளவிலே "சீசனல் இன்டஸ்ட்ரி" என்று வாதாடி, தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கொடுக்கவேண்டிய உரிமைகளைக் கொடுப்பதிலேயிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள். எனவே, "சீசனல் இன்டஸ்ட்ரி" என்ற ஷரத்தை இந்தச் சட்டத்திலேயிருந்து எடுத்துவிட வேண்டும். "சீசனல் இன்டஸ்ட்ரி" என்ற ஷரத்து இங்கே இருக்குமேயானால் முதலாளிகள் அதை இங்கே பயன்படுத்திக்கொண்டு தொழிலாளர்களுக்கு பர்மனென்ட் ஸ்டேட்டஸ் கொடுப்பதிலேயிருந்து தப்பித்துக் கொள்வார்கள்.

இன்னொரு முக்கியமான அம்சம் என்னவென்றால், 7-வது ஷரத்திலே "Nothing contained in this Act, shall apply to workmen employed in an industrial establishment engaged in the construction of buildings, bridges, roads, canals, dams or other construction work whether structural, mechanical or electrical." என்று கொடுத்திருக்கிறீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள், இவர்கள் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் பயங்கரமான சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம். அவர்களுக்கு என்ன பாதுகாப்பு? அதுதான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் மிக முக்கியமான விஷயம்.

இன்று ஒரு விஷயத்தை இது சம்பந்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், டேம்ஸ், பிரிட்ஜஸ் போன்று உள்ள பெரிய அளவிற்கான வேலைகளைச் செய்யக்கூடிய கான்ட்ராக்டர்கள் நிரந்தரமாக இந்த வேலைகளிலே ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள். அவர்களுக்கு நிரந்தரமாகவே தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலாளிகளை இந்தச் சட்டத்தினுடைய வரம்பிற்குள்ளே கொண்டுவருவதற்கு சர்வீஸ் புக் கொடுத்து ஒரு தொழிலாளியை வேலைக்கு வைத்தால் அடுத்த ஒர்க்கிலே அந்தத் தொழிலாளியைத்தான் வைக்க வேண்டுமென்ற நிலையை நாம் உருவாக்காமல் அந்தத் தொழிலாளிக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த முடியாது. அவர்கள் அந்த அளவிற்குப் பயங்கரமாகச் சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஷரத்து அந்தச் சட்டத்திலே இருக்குமேயானால் அப்படிப்பட்ட பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகளுக்கு இந்தச் சட்டத்தினுடைய பலன் நிச்சயமாகக் கிடைக்காது என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, இன்று நான் என்ன வேண்டிக்கொள்ள விரும்புகிறேன் என்றால்

முதலாளிகள் என்ற ஸ்தானத்திலே இருக்கக்கூடியவர்கள் சற்று அஞ்சுவதாக, சற்று பயப்பட்டு பின் வாங்குவதாக இருக்கிற சூழ்நிலை இன்றைய தினம் உருவாகிக் கொண்டிருக்கிறது. என்பதை எடுத்துக் கூறுகிற விதத்திலே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் இதைப் பொதுக் குழுவுக்கு விட வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். ஆனால், அது அவசியமா, தேவையா என்று எண்ணிப் பார்க்கிற கட்டாயத்திலேதான் நம்மைப் போன்றவர்கள் எல்லாம் நின்று கொண்டிருக்கிறோம் என்பதை நான் முதலிலே சொல்லிக் கொள்ள விழைகிறேன்.

இந்தச் சட்டம் தொழிலாளர்களைப் பழி வாங்கவேண்டும், தொழிலாளர்களுடைய சிந்தனைக்கு மதிப்பைத் தரலாகாது, எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற முறையிலே எந்தத் தொழிலாளியை வேண்டுமானாலும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வீட்டுக்கு அனுப்புகிற அதிகாரம் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிற அந்தத் தொழில் அதிபர்களுக்கு ஒரு சிவப்பு விளக்காக இந்தச் சட்டம் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. அதே போல நாளைக்கு என்ன செய்வது, வேலை இருக்குமா உறுதி கிடைக்குமா நம்பிக்கை இருக்கிறதா, உத்திரவாதத்திற்கு என்ன பதில் என்று நினைத்துக் கொண்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு ஒரு பச்சை விளக்காக இந்தச் சட்டம் காட்சியினை அளித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சட்டம் தொழிலாளர்களுக்கு ஒரு பச்சை விளக்காக இன்றையதினம் காட்சி அளித்து கொண்டிருக்கிறது. சுதந்திரம் கிடைத்ததற்குப் பிறகு பல்வேறு அரசுகளை இந்தத் தமிழகத்து மக்கள் சந்தித்துக் கொண்டிருந்தாலும் கடந்த ஆட்சிகளால் கொண்டு வர முடியாத கொண்டு வரப்படாத, இந்தத் தொழிலாளர்களுக்கென உத்திரவாதம் அளிக்கிற இந்தச் சட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு இன்றைய தினம் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னால், இலட்சோப லட்சம் தொழிலாளர் உள்ளங்கள் இன்றைக்கு வாழ்த்தும், வரவேற்கும், போற்றிப் பாராட்டும் என்பதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்க முடியாது.

எத்தனையோ தொழிலாளிகள், எத்தனையோ தொழில் நண்பர்கள் எல்லாம் ரத்தம் சொரிந்ததற்குப் பின்னாலேதான் சாட்சியம் கூறுகிற தொழில் கூடங்கள், பசுமைச் சோலைகள் முன்னாலே நின்றுகொண்டிருக்கின்றன என்பதைப் பாவேந்தர் பாரதிதாசன் ஒரு கவிதையிலே வடித்துக் காட்டினார். அந்தக் கவிதை வரியை நினைவூட்டுகின்ற அளவில் அதற்கு உருவகம் அமைத்தத் தன்மையிலே, இந்தச் சட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது என்பதை இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்கள் வரவேற்பவர்கள் என்ற நல்ல நம்பிக்கை நமக்கெல்லாம் இருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பஞ்சாலைகளிலே வேலை செய்கின்றவர்களாக இருந்தாலும்,





டெக்ஸ்ட்டுல்களிலே வேலை செய்கின்றவர்களாக இருந்தாலும் பல்வேறு நிறுவனங்களிலே பணிபுரிந்து கொண்டு இருந்தாலும் அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் ஆண்டாண்டு காலமாக உழைத்து வந்தாலும் கூட, அவர்களுக்கு ஒரு உத்திரவாதம் இருக்கிறதா? அவர்களுக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறதா? அடுத்த நாள் வேலை கிடைக்கும் என்ற திட்டவட்டமான உணர்வு அந்தத் தொழிலாளர்களுக்கு இதுநாள் வரையில் இருந்திருக்கிறதா என்றால் நிச்சயமாகக் கிடையாது?

ஆனால் அப்படி ஏங்கி தவித்துக் கொண்டிருந்து, கையறு நிலையில் இருந்த, கைகளைப் பிசைந்து கொண்டிருந்த, நாளை மறுநாள் வீட்டுக்கு அனுப்புவார்களோ அல்லது இன்றைக்கே சீட்டுக் கிழித்து போடுவார்களோ என்று ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே தான் அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கின்ற முறையில், உங்களுக்கு நம்பிக்கை உண்டு, உங்களுக்கு இப்போது உத்தரவாதம் இருக்கிறது, உங்களுக்கு தொழிலிலே ஒரு உறுதிப்பாடு உண்டு, ஏனென்றால் இது உழைக்கின்ற தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதியாக அமைந்திருக்கின்ற புரட்சித் தலைவர் அரசு என்பதை அந்தத் தொழிலாளர் உணர்வுக்கு எடுத்துக் காட்டுகிற அளவில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இங்கே இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் வரவேற்கக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். பல பேர் கேட்கலாம். அப்படி எத்தனை தொழிலாளர்கள், எத்தனை ஆண்டுக்காலமாக, எங்கெங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்ற கேள்விகள் கூட கேட்கப்படலாம்.

நான் உதாரணத்திற்குச் சொல்வேன், ஆதாரத்தோடு சொல்வேன். இன்றைக்கும் திருப்பூர் நகரத்திலே இருக்கக்கூடிய எஸ்.ஆர்.சி. மில்லிலே அங்கே 800க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். அதிலே 400-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் டெம்பரரியாகத்தான். பதிலியாகத்தான், ஓராண்டு இரண்டாண்டு காலமாக அல்ல, 10, 12, ஆண்டு காலமாக டெம்பரரியாகத்தான் அவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அகவிலைப்படி கிடையாது வேறு விதமான போனஸ் கிடையாது, அவர்களுக்கு தீபாவளி இனாம் கிடையாது. முன்பணம் அவர்கள் கேட்டால் அந்தச் சலுகைகளைக் கொடுப்பதற்கு நிர்வாகம் மறுத்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் அவர்கள் நிலையான தொழிலாளர்கள் அல்ல. நீடித்து நிற்கக்கூடிய உத்தரவாதம் அளிக்கக்கூடிய தொழிலாளர்கள் அல்ல. எனவே அவர்களுக்கு குறைந்த பட்சக் கூலி என்று சொல்லக் கூடிய அளவுக்கு 6 ரூ. 5ரூ என்ற அளவிலே கூட அந்த எஸ்.ஆர்.சி. மில் நிர்வாகம் இருக்கிறது. அதேபோல பவானியில் இருக்கக்கூடிய கந்தசாமி நூற்பாலை. திருச்செங்கோட்டிலே இருக்கக் கூடிய குளிக்காரா மில்ஸ், அதேபோல

ராஜபாளையம்மில்ஸ். அந்த நிர்வாகத்தினர் எல்லாம் இன்னும் தொழிலாளர்களை கொத்தடிமை போல நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அரசினுடைய தீர்க்கமான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த ஜனநாயக யுகத்திலேதான், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்று சொல்லி பல்வேறு சட்டங்களை புரட்சித் தலைவர் அரசு இந்த மாமன்றத்திலே எடுத்து வைத்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் தான் நாள் மேற்குறித்த நிர்வாகத்தை நடத்தக்கூடிய ஜே.கே.கே. அங்கப்ப செட்டியார் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய அவர்களுடைய வகையறாக்கள், அவர்களுடைய உறவினர்கள் நடத்தக்கூடிய இந்தப் பஞ்சாலைகளில் எல்லாம் தொழிலாளத் தோழர்கள். பழிவாங்கப் படுகிறார்கள். ஆண்டாண்டு காலமாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாடாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அந்தத் தொழிலாளிகளுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கிறதா? இல்லை. 12 ஆண்டுக்காலம், 15 ஆண்டுகாலம் உழைத்துக் கொண்டு இருப்பவர்களுக்கு ஏதாவது பரிகாரத்தை இந்த நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் தந்திருக்கிறார்களா என்றால் கிடையாது. ஃபாக்டரி ஆக்ட் காற்றிலே பறக்கவிடப் படும். தொழிலாளர் ஆணையாளர் ஏதாவது உத்தரவு பிறப்பித்தால் அந்த உத்தரவுகள் உடனடியாக குப்பைத் தொட்டிக்கு அனுப்பப்படும். ஒரு சர்வாதிகாரத்தனம் அங்கே கோலோச்சிக் இருக்கும் நிலைமையை நான் அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11.50)

குறிப்பாகச் சொல்லப்போனால் 450 நாட்களாக அந்தத் தொழிலாளி தொடர்ந்து ஒரு இடத்தில் பணியாற்றிய ஒரு நிலைமையைத் தெரியப்படுத்தினால் அவனுக்கு நிரந்தரமான நிலைத்த வேலை கிடைக்கும். அது எந்தப் பாக்டரியாக இருந்தாலும் சரி, எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, அதற்கு இந்தச் சட்டம் பொருந்துகின்ற வகையில் இந்தச் சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்து இருக்கிறது. ஆகவே, நான் மேலே சொன்ன அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்து கொண்டு இருக்கக்கூடிய தொழிலாளர்களின் உள்ளத்திலே எல்லாம், அந்தத் தொழிலாளர்களின் இதயத்திலே எல்லாம் ஒரு இளந்தென்றல் வீச ஒரு இன்பத்தென்றல் உருவாக வழி வகை செய்கின்ற வகையில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டுகின்றேன். இந்தச் சட்டம் அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு பெருத்த வரப் பிரசாதமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



கோவை மாவட்டத்தை மட்டும் எடுத்துக் கொண்டால் பல்வேறு டெக்ஸ்டைல்ஸ் மில்கள் இதே மாதிரி இயங்கிக்கொண்டு இருக்கின்றன. வேஸ்ட் காட்டன் மில் என்று வைத்துக்கொண்டு நல்ல பஞ்சாலைகளில் என்னென்ன உற்பத்தியைச் செய்து கொண்டு இருக்கிறார்களோ அதை எல்லாம் அங்கே உற்பத்தி செய்து கொண்டு, ஆனால் அந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் போல் கொடுக்கக்கூடாது, அதை விடக் குறைத்துக் கொடுக்க வேண்டும், டெம்பரரியாக, பதிலியாக நாளைக்கு வேண்டுமானாலும் அவர்களை வீட்டுக்கு அனுப்பலாம். நாளை மறுநாள் வேண்டுமானாலும் அனுப்பலாம் அவர்களுக்கு ஞாயிறு விடுமுறை கிடையாது, ஓவர் டைம் கிடையாது, 8 மணிக்கு மேல் வேலை செய்தாகவேண்டும் என்கிற அந்தக் காரணத்திற்காக வேஸ்ட் காட்டன் மில் என்ற பெயரிலே அந்தப் பஞ்சாலைகளை அவர்கள் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். எந்தெந்த வேலைகளை எல்லாம் பஞ்சாலைத் தொழிற்சாலைகளில் செய்கிறார்களோ அவற்றை எல்லாம் இந்த வேஸ்ட் காட்டன் மில்லிலே செய்து கொண்டு இருக்கிறார்கள். அப்படி வேலையை வாங்கிக்கொண்டு அவர்களுக்குக் குறைந்த பட்சக் கூலியை இன்றையதினம் கொடுத்து வருகிறார்கள். கோவை மாவட்டத்தில் இதைப்போல் பல்வேறு டெக்ஸ்டைஉ. மில்கள் இருக்கின்றன. பல்வேறு வேஸ்ட் காட்டன் மில்கள் இருக்கின்றன. இதையெல்லாம் அரசாங்கம் எண்ணிப் பார்த்து, அந்தத் தொழிலாளர்களுக்கு எல்லாம் நல்வாழ்வு கிடைக்க அந்தத் தொழிலாளர்களுக்கு எல்லாம் ஒரு மறுமலர்ச்சி கிடைக்கும் வகையில் இந்தச் சிறப்பான சட்டத்தைக்கொண்டு வந்து இருக்கிறது இந்த அரசு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நெசவாளர் தொழிலாளர் நலனுக்காகச் சட்டம் கொண்டு வந்ததன் மூலமாக லட்சோபலட்சம் மக்களின் உள்ளத்திலே எல்லாம் ஒளிஏற்பட அகல் விளக்கு ஏற்றி வைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வு சுடர்விட்டுப் பிரகாசிக்கின்ற வகையில் ஒரு துருவ நட்சத்திரமாக இந்தச் சட்டத்தை உருவாக்கிக்கொண்டு வந்து இருப்பது வரவேற்கத் தக்கதொரு காரியமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே கூட பல்வேறு விவாதங்கள் எடுத்து வைக்கப்பட்டன. பல்வேறு விவாதங்களை எடுத்து வைத்து நம்முடைய மாமன்றத்திலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். அவர்களுடைய கருத்துக்களை தொழிலாளர்களை ஆதரிக்கின்ற இந்தச் சட்டத்தை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் கூட வரவேற்றார். ஒரு சில திருத்தங்களைக் கூட அவர்கள் தந்து இருக்கிறார்கள். நான் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்தச் சட்டத்தின் 6-வது பிரிவிலே 'தண்டனைகள்' என்ற தலைப்பிலே "தொழிலதிபர் எவரேனும் 3-ஆம் பிரிவின் விதித்துறைகளை மீறினால் அவருக்கு ஐந்தாயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படும். அவர் அக்குற்றத்தைத் தொடர்ந்து செய்வாரேயானால், முதல் தடவை குற்றம் செய்த பின்னர், தொடர்ந்து அக்குற்றத்தைச் செய்து வருகிற ஒவ்வொரு நாளுக்கும் இருநூறு ரூபாய் வரை மேற்கொண்டும் அபராதம் விதிக்கத்தக்கதாகும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது எல்லாம், ஒரு முதலாளி தொழிலாளி வர்க்கத்தினுடைய உழைப்பை மாத்திரமே அட்டைபோல் உறிஞ்சிக்கொண்டு, அவர்களிடத்திலே உழைப்பை மாத்திரமே வாங்கிக் கொண்டு அவனுக்கு ஏற்ற சிரமபரிகாரம் கொடுக்காமல். அவனைப் பழி வாங்கும் நிலையில், அந்தத் தொழிலாளிக்கு ஆதரவு தராத முறையில் நின்று கொண்டு இருந்தால். அந்தத் தொழிலாளியைப் பழி வாங்க முயற்சிந்தால். அந்த முதலாளிக்கு 5000 ரூ. வரை அபராதம் என்று இந்தச் சட்டத்திலே கண்டு இருக்கிறது. இந்த 5000 ரூ. என்பது மிகப் பெரிய முதலாளிகளுக்கு எல்லாம் சாதாரண பணம். ஆகவே, இந்த 5000 ரூ. என்பதை 10000ரூ என்று ஏன் உயர்த்தக் கூடாது. ஏன் அப்படிப்பட்ட ஒரு எச்சரிக்கையைக் காட்டக்கூடாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எத்தகைய சட்டங்களைக் கொண்டு வந்தாலும், ஆயிரம் சட்டங்கள் போட்டாலும் அந்தச் சட்டங்களை எங்களால் உடைக்க முடியும் என்று மிரட்டிக்கொண்டு இருக்கும் முதலாளித்துவ போக்கை முறியடிக்கும் வகையில் இந்த 5000 ரூ. என்பதை 10,000ரூ என்று மாற்றிட முடியுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் மானசீகமாக தொழிலாளர்களின் பால் உள்ள தார்மீக உணர்வின் அடையாளமாக தொழிலாளி வர்க்கத்தின் பிரதிபலிப்பாக நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை அமைச்சரவர்கள் கொஞ்சம் சிந்தனை செய்து பார்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல் ஒவ்வொரு நாளும் 200 ரூபாய் அபராதம் என்ற அளவிலே இருந்தாலும் கூட குறைந்த பட்சத் தண்டனை கொடுக்க அரசு முன்வருமா? அமைச்சர் அவர்கள் அதற்கேற்ற வகையில் காரியங்களைச் செய்வார்களா என்ற வினாவை எழுப்ப கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, பல்வேறு அரசுகள் இருந்தாலும் இலட்சோப லட்சம் தொழிலாளர்கள் ஆண்டாண்டுக் காலமாக ஒரே தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்தாலும் அவர்களுக்கு என்று நம்பிக்கை இல்லாத ஒரு நிலை, அந்த அவநம்பிக்கை "காற்றிலே கலந்த கீதமாக" மாற்றப்பட்டு, அந்த ஏழை எளிய தொழிலாளர்களுக்கு ஒரு புனர்வாழ்வை அளிக்கின்ற இந்தச் சட்டம். ஒரு புனர்ஜென்மத்தை உருவாக்கித் தருகின்ற இந்தச் சட்டம், எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிற இந்தச் சட்டம், ஒரு கலங்கரை விளக்காக இருக்கிற இந்தச் சட்டம் அவர்களுக்கு வழிகாட்டுகிற திசைகாட்டும் கருவி





யாக மாற்றப், பட்டிருக்கிற இந்தச் சட்டம், காலக் கண்ணாடியாக விளங்கிக் கொண்டிருக்கிற இந்த சட்டம் ஒரு உன்னதமான சட்டம், ஒரு மகோன்னதமான சட்டம், மகத்தான சட்டம். ஆகவே: இலட்சோப இலட்ச தொழிலாளர்களின் சார்பாக இந்தச் சட்டத்தை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் ஒரு நல்ல நோக்கத்தோடுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனுடைய 'காரண—நோக்க விளக்கம்' என்ற பகுதியிலே பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்கு ஏற்ற முறையிலும் அவர்கள் பெறவேண்டிய சலுகைகளைப் பெற முடியாமல் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டதாலும் இத்தகைய சட்டம் கொண்டுவரப்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு நேர்மாறாக அவர்கள் நிரந்தரமாக ஆவதற்கான வழிமுறைகளைத் தெளிவாக இந்தச் சட்டத்திலே சொல்லவில்லை.

குறிப்பாக இதிலே 50 பேர்களுக்கும் குறையாமல் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்ற தொழில் நிறுவனம் என்ற அந்தப் பகுதியில் குறைந்த பட்சம் 5 பேர்கள் இருந்தாலும் என்றுகூட போட்டிருக்கலாம். இருந்தாலும் பரவாயில்லை. 10 பேர்கள் இருந்தாலும் இது பொருந்தும் என்ற முறையில் அமைச்சரவர்கள் இதை மாற்றி அமைப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதிலும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழில்களுக்கு இதிலிருந்து விலக்களித்திருக்கிறார்கள். ஆனால் 7—வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. சில தொழில் நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களுக்கு இச்சட்டம் பொருந்தாது என்பது, கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள், கால்வாய்கள், அணைகள் கட்டுமானப் பணியிலோ, இயந்திர மின்சார வகையில் பிற கட்டுமானப் பணியிலோ ஈடுபட்டிருக்கிற ஒரு தொழில் நிறுவனத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிற பணியாளர்களுக்கு இச்சட்டத்தில் கண்டுள்ளது எதுவும் பொருந்தாது, என்று இருக்கிறது. இது *operation succ s but the patient died* என்பது மாதிரி இருக்கிறது.

தமிழ்நாட்டில் இன்றைக்கு பல பாலங்கள் அமைக்கும் பணியிலே. இயந்திரப் பிரிவுகளிலே, கட்டுமானப் பணிகளிலே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதிலேதான் விபத்தும் அதிகம். அதில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு இது பொருந்தாது என்பது தென்னை மரம் ஏறி தேங்காய் பறித்த கதையாக ஆகிவிடும். இதற்கு முன்னால் நிலச்சீர்

திருத்தச் சட்டம் என்று அறிவித்தார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டம் வரும், மிச்சம் வரும், பகிர்ந்து கொடுப்போம் என்று சொன்னார்கள். அதுவும் தென்னை மரம் ஏறி தேங்காய் பறித்த கதையாகிவிட்டது. சட்டம் வந்தது, சர்ப்ளஸ் எவ்வளவு என்றால் தெரியாது. அதைப்போலத் தான் இந்தச் சட்டமும் இருக்கிறது.

'தென்னை மரம் ஏறி தேங்காய் பறித்த கதை' என்னவென்றால் ஒருவன் தன்னுடைய மரத்திலே தேங்காய் பறிக்கச் சொன்னான். தேங்காய் பறித்தவன், 'எனக்கு இரண்டு' ஏறியதற்கு ஒன்று, இறங்கியதற்கு ஒன்று, பறித்ததற்கு ஒன்று' என்று சொல்லி, 5 தேங்காய் பறித்தான் ஐந்தையும் எடுத்துக் கொண்டு போய் விட்டான், மரத்திலே பறிக்கச் சொன்னவனுக்கு ஒன்றும் இல்லை. அந்த மாதிரி தான் நிலச்சீர்திருத்தச் சட்டம் வந்தது, அதனால் பலன் ஒன்றும் கிட்டவில்லை. ஆகவேதான் தேங்காய் பறித்த கதை மாதிரி இருக்கிறது இந்தச் சட்டம் என்று சொல்கிறேன்.

பால வேலை செய்கிறார்கள் என்பது நாட்டிலே ஒரு இணைப்பை ஏற்படுத்துவது. அணைக்கட்டு வேலைகளில் ஈடுபடுகிறார்கள் என்கிறபோது தண்ணீரை, தேக்கி வ்வசாயத்திற்குக் கொடுப்பது. அப்படிப்பட்ட அடிப்படை தொழில்களிலே ஈடுபட்டிருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்றால் இதை எந்த நோக்கத்தோடு போட்டார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

(நண்பகல் 12-00)

கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள், கால்வாய்கள், அணைகள் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருக்கிற முக்கியமான தொழிலாளர்களைத் தவிர வேறு யாருக்கு இது பொருந்தப் போகிறது; எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

இந்த தே ை இணைக்கப் பாலம் கட்டுகின்ற தொழிலாளிக்கும். அணை கட்டுகின்ற தொழிலாளிக்கும் இந்த சட்டம் பொருந்தாது என்று சொன்னால் வேறு எந்தத் தொழிலாளிக்குத்தான் இந்தச் சட்டம் பொருந்தும், எனவே இவர்களுக்கும் பொருந்தும்? என்ற முறையிலே இந்த சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

அதேபோல இதிலே இன்னொன்று. இதன் மூன்றாவது பிரிவிலே 24 காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் தொடர்ந்து பணி புரிந்து வரும் ஒவ்வொரு பணியாளரும் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்படவேண்டும் என்று இருக்கின்றது. இப்படி 24 காலண்டர் மாதங்களில் 480 நாட்களுக்குத் தொடர்ச்சியாக





த முதலாளி எந்தத் தொழிலாளியை வேலைக்கு வைத்துக் ாண்டிருப்பார்கள்? ஒன்று கடையின் பெயர் மாறிவிடும், ல்லது போர்டை மாற்றிவிட்டு புதிய தொழிலாக ஆரம்பித்து வார்கள். ஆகவே இந்த வகையிலே ஒரு நாள் இன்னும் ருக்கின்றது என்ற நிலை வரும்போதே அந்த ஆளை லையிருந்து நீக்கிவிடுவார்கள். ஆகவே 12 காலண்டர் தங்களில் 200 நாள் வேலை செய்திருந்தாலே போதும். துவும் தொடர்ச்சியாக வேலை செய்திருக்கவேண்டும் என்ற வசியம் இல்லை என்ற வகையிலே ஏற்படுத்தவேண்டும். கவே தொடர்ச்சி என்பது இருக்கக்கூடாது.

அடுத்து மூன்றிலே இரண்டாவது பகுதியிலே மீண்டும் அதை லியுறுத்தக் கூடிய ஒரு விஷயம் இருக்கின்றது. அதாவது சட்ட ரோதமற்ற வேலை நிறுத்தம் என்று இருக்கின்றது. எந்த வேலை றுத்தம் சட்டத்தோடு நடைபெறுவதாக நாட்டிலே சொல்லப் கின்றது? அதேபோன்று சட்டத்தின் அனுமதியோடும், தரவோடும் எந்த வேலை நிறுத்தம் நடந்ததாகக் கருதப் கின்றது? எதுவும் கிடையாது. வேலை நிறுத்தம் என்பதே ங்கே இருக்கக்கூடிய சூழ்நிலையிலே ஏற்படக்கூடிய ஒரு நிலைமை ன். எனவே அரசாங்கம் இதைக் கருத்திலே கொண்டு ன்றாவது பிரிவிலே இருக்கக்கூடிய 2-வது ஷரத்திலே உள்ள ந்த வாசகங்களை நீக்கவேண்டும். வேலை நிறுத்தம் என்ற ாசகமே வரக்கூடாது.

அடுத்து தொழிலாளர்களுடைய, தற்போது செயலில் ருக்கக்கூடிய எந்த ஒரு சட்டத்திலும் என்ன சொல்லி ருப்பினும் என்கின்ற முறையிலே திருத்தத்தைக் கொண்டு ந்து 3-வது பிரிவிலே 1-ல் 12 காலண்டர் மாதங்களில் 200 னங்கள் பணிபுரிந்து வரும் ஒவ்வொரு தொழிலாளியும் நிரந்தர ாக்கப்பட வேண்டும் என்ற முறையிலேயும் திருத்தம் வர வண்டும். மூன்றாவது பிரிவிலே இருக்கின்ற இரண்டாவது ரத்திலே வருகின்ற சட்டவிரோதமற்ற வேலை நிறுத்தம் என்ற ந்த வாசகத்தையும் நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து, தொழில் அதிபர்கள் எவரேனும் 3-வது பிரிவினை றினால் என்று சொல்லப்படுகின்ற அந்த வாதமே வராது. னென்றால் அவர்கள் மீறவேண்டிய அவசியமே கிடையாது. 24 லண்டர் மாதங்களில் எந்தத்தொழிலாளியையும் தொடர்ச்சியாக 30 நாட்களுக்கு எந்த முதலாளியும் வைத்திருக்க மாட்டார்கள் துபற்றி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கு ன்னை விட மிக நன்றாகத் தெரியும். முதலாளிகள் மிகவும் த்திசாலிகள், அவர்களுக்குத் தெரியும் எந்தத் தொழிலாளியை ப்போது வெளியேற்றுவது என்று. அல்லது ஆளின் பெயரையே ாற்றிவிடுவது போன்ற பல வித்தைகள் மயில்ராவணன் பான்று கற்றவர்கள் முதலாளிகள். ஹோட்டல் அமராவதி ன்றிருந்தால் அதை நியூ அமராவதி என்று மாற்றிவிடுவார்கள். ஆகவே முதலாளிகள் நம்மை விட புத்திசாலிகள். அப்படிப்பட்ட ாகஸக்கூடு விட்டு கூடுபாய்கிற விளையாட்டுக்களை விளையாடக்

கூடிய முதலாளிகளுக்குச் சாதகமாக இருக்கின்ற நீண்ட நெடுங் காலமான 24 காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் தொடர்ச்சியாக பணிபுரிந்து வரும் ஒவ்வொரு தொழிலாளியையும் நிரந்தரமாக்கவேண்டும் என்ற இந்த வாசகம் தொழிலாளிகளுக்கு பலன் அளிக்காது. எனவே இப்படிப் பலன் அளிக்காது என்கின்றபோது இதை நிறைவேற்றாத முதலாளிகளுக்கு 3,000 ரூபாய், 5000 ரூபாய் அபராதம் என்பது நடக்காத ஒன்று என்பதைத் தெரிவித்து கொண்டு இந்த சட்டத்திலே இருக்கக்கூடிய இப்படிப்பட்ட ஷரத்துக்களைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே தமிழகத்திலே இருக்கக்கூடிய கட்டிடத் தொழிலாளியாக இருக்கட்டும், அணை கட்டுகின்ற தொழிலாளியாக இருக்கட்டும், மில் தொழிலாளியாக இருக்கட்டும், கைத்தறி நெசவுத் தொழிலாளியாக இருக்கட்டும், அத்தனை இலட்சக் கணக்கான தொழிலாளர்களையும் பாதுகாக்கக்கூடிய முறையிலே இந்த சட்டத் திருத்தத்திலே சில திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று நான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன், வணக்கம்.

*திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலே தான் இங்கே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. இதிலே 7-வது பிரிவிலே மட்டும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஏழாவது பிரிவில் கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் போன்ற தொழிலாளர்களுக்கு இச்சட்டம் பொருந்தாது என்று குறிப்பிடப் பெற்றிருப்பது சற்று வருத்தத்தைத் தருகிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர். அவர் இப்படி போடலாமா என்றுதான் அவரிடம் கேட்க விரும்புகிறேன். நம் தமிழ்நாட்டில் என்று இல்லை, இந்தியத் துணைக்கண்டம். முழுவதும் பல திட்டங்கள் போடப்பட்டு, 5 ஆண்டு திட்ட அளவில் கட்டிடங்கள், பாலங்கள் முதலியன கட்டுவதற்காக திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இப்படி பணிகள் அதிக அளவில் இருக்கும் அந்த பேர் காண்டிராக்ட் ஊழியர்களுக்கு ஆதரவற்ற நிலைமைதான் நாடெங்கிலும் இருக்கிறது. அது போன்ற ஏழை எளிய தொழிலாளர்களின் நலனையும் பாதுகாக்கக்கூடிய அளவில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருந்தால் இது மிகவும் நன்றாக இருந்திருக்கும். அதேபோல இந்த காண்டிராக்ட் ஊழியர்களுக்கு, கோவாப்பரேட்டிவ் சொசைட்டி மூலமாக இன்னும் அதிக அளவில் வேலை வாய்ப்பு கிடைக்கவும் வழி செய்ய வேண்டும்.

இந்தக் காண்டிராக்ட் ஊழியர்கள் தனிப்பட்ட காண்டிராக்டர்கள் என்று எடுத்துக் கொண்டாலோ அல்லது முதலாளிகள் என்று எடுத்துக் கொண்டாலோ அவர்களால் வஞ்சிக்கப்படத்தக்க அளவில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அந்த முறையில் இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும். இல்லை என்று சொன்னால் இந்தச்சட்டத்தின் மூலமாக எத்தகைய நன்மைகளை, தொழிலாளர்களின் சமூகத்திற்குதரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்கிறார்களோ, அந்த முயற்சிகளுக்கு பாதகம் வரும் என்பதைச் சுட்டிக்காட்டி, இந்த நிலைமையை நீங்கள் நிச்சயமாக மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





ஆளும் கட்சியைச் சேர்ந்த சகோதரர் மணிமாறன் அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்நத தோழர் அம்பிகாபதி அவர்களும், இந்தச் சட்டத்திலே நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய எண்ணத்தோடு, அவர்களுடைய கருத்துக்களையும் ஏற்று, ஏழை எளிய தொழிலாளர்களுக்கு உதவி செய்கிற வகையில் இந்தச் சட்டத்தினை கொண்டு வருவீர்கள் என்று நம்புகிறேன். அதேபோல இந்தச் சட்டத்தில் 3-வது பிரிவில் இரண்டாவது ஷரத்தையும் நீக்க வேண்டும் என்று கேட்டு, இவைகளை நிச்சயமாக செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன். வணக்கம்.

THIRU K S.G, HAJA SHAREEF : Mr. Deputy Speaker, Sir, let me make it very very clear —— abundantly clear —— that the Congress party is for more employment, providing more employment opportunities, for increasing more per capita income and for more growth and development.

This Bill mostly refers to the casual labourers, which the bill seeks to make them permanent. My anxieties are not for big factories or for big industries because most of the labourers in such factories are permanent. Whenever they have come upto that standard they have been made permanent. I am talking about the smaller units, small-scale industries, which are called the feeder industries or units. Now the Salem Steel Corporation is going to come and there will be a number of small units coming up and there are going to be humpteen small units. They will supply a number of parts and afterwards they will close down. You cannot compel them to make the workers permanent in such units. After the parts are supplied, the workers will be taken out of employment. If this was insisted on such small units, they might migrate to other neighbouring States or some other place. In such cases, there will be more unemployment in our State. I hope the Hon. Minister will examine this aspect also.

Thank you, Sir.

(பிற்பகல் 12-10)

*மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் வரவேற்றார்கள். இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த திரு. ஹாஜா செரீப் அவர்கள்

தனக்கே ஏற்பட்டுள்ள சில அச்சங்களை எடுத்துரைத்தார்கள். இது ஒரு மூலை, ஒரு எக்ஸ்ட்ரீம். திரு. ஹேமச் சந்திரன் அவர்கள், சி.பி.எம். கட்சியைச் சேர்ந்தவர். இதிலே இன்னும் மாற்றங்கள் எல்லாம் கொண்டுவரவேண்டும் அப்போதுதான் இந்தச் சட்டத்தினுடைய பலன்களை முழுமையாக தொழிலாளர்கள் பெறுவார்கள் என்று சொன்னார்கள். இது இன்னொரு எக்ஸ்ட்ரீம். திரு. ஹாஜா ஷெரீப் அவர்கள் ஒரு எக்ஸ்ட்ரீம், திரு ஹேமச்சந்திரன் அவர்கள் ஒரு எக்ஸ்ட்ரீம், இது ஒரு மூலை, அது ஒரு மூலை. இந்த இரண்டு மூலைகளுக்குப் போய்விடாமல் தொழிலாளர்கள் பலன் அடையக் கூடிய முறையில் நடுநிலையாக இருந்து இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உதாரணமாக, பெரிய தொழிற்சாலைகளைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை, சிறு தொழில்கள் பாதிக்கப்படுகின்றன என்று திரு. ஹாஜா செரீப் அவர்கள் சொல்கிறார்கள். திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஐந்து பேர்கள் உள்ள தொழிற்சாலைக்கும் இது பொருந்தவேண்டும் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் இந்த இரண்டு கருத்துக்களையும் எதிர்பார்த்துதான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த அரசாங்கத்தின் கொள்கை புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி யாருக்காக இருக்கிறது? It is for the have-nots. இல்லாதவர்களுக்கு. ஏழைகளுக்கு எளியவர்களுக்கு. வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடியவர்களுக்கு. அவர்களுக்காகப் பணியாற்றுகிற அதே நேரத்தில் இப்போது வாய்ப்பு தேடித் தரக்கூடிய தொழில் அதிபர்களை ஒழித்துவிட வேண்டும் என்பது இந்த அரசின் நோக்கம் அல்ல. There should be an optimum level of production. உற்பத்தி நிரம்ப இருக்கவேண்டும். Uninterrupted protuction கூடியவரையில் இடைவெளியில்லாமல் ஒழுங்காக நடக்கக்கூடிய உற்பத்தி பெருகவேண்டும். இவ்வளவும் இருந்தால்தான் ஏழைகள் பலன்பெறுவர் என்பதுதான் இந்த அரசின் நோக்கம். ஆகவே அந்த மூலை இந்த மூலை என்று இல்லாமல் எந்த மூலைக்கும் போய்விடாமல் நடுநிலையிலிருந்து இந்த ஆட்சி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நாடு சுதந்திரம் பெற்று 32 ஆண்டுகளாயிற்று. 1973 ஜனவரி 29, 30 ஆகிய தேதிகளில் 25வது ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்ட் இந்த மாநிலத்தில் இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறார்கள். எந்த ஆண்டு? 1973-ல் 1973 ஜனவரியில் கொண்டு வந்திருக்கிறார்கள். 1973 சென்றது, 1974 சென்றது, 1975 சென்றது, 1976-ல் அவர்கள் இல்லை. மூன்று ஆண்டுக்காலம் ஒரு கட்சி ஆட்சியில் இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம். இந்தச் சட்டத்தை அவர்கள் கொண்டுவரவில்லை. அதைத்தான் நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதற்குப் பின்னால் நம் ஆட்சி வந்தது. இப்போது கூட சில ஓட்டைகளைக் காண்பித்தார்கள். இந்த ஓட்டைகள் கூட இல்லாமல் இருக்க



வேண்டும் என்பதற்காக தீவிர பரிசீலனைசெய்து இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபிறகு கூட நாங்கள் அமென்ட்மென்ட்ஸ் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்களானால் எவ்வளவு எச்சரிக்கையாக புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். நாங்கள் இதை முன்பே கூட கொண்டு வந்திருப்போம். நான் நேற்று சொன்னதுபோல் இரண்டு ஆண்டுகள் எட்டு மாதங்கள் இருக்கும்போது திடீரென்று ஷோக்காஸ் நோட்டீஸ் கொடுக்காமல் டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். ஒரு எக்ஸ்ப்ளனேஷன் கேட்டிருக்கலாம். உங்கள் அரசாங்கத்த இன்ன இன்ன காரணங்களுக்காக விலக்குவதாக இருக்கிறோம், உங்கள் பதில் என்னவென்று கேட்டால் அதற்கு நல்ல பதில புரட்சித் தலைவர் அவர்கள் தந்திருப்பார்கள். அப்படி ஒன்றும் செய்யவில்லை. எடுத்தேன் கவிழ்த்தேன் என்று திடீரென்று கவிழ்த்துவிட்டார்கள். நாங்கள் அங்கே போய் மீண்டும் மக்கள் இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். எந்த மக்கள்? எந்த மக்கள் எங்களை, இந்த அரசை இங்கே கொண்டு வந்து வைத்தார்களோ அந்த மக்கள் நலன்கள் பெறுவதற்காகத்தான் இதுவரை பல சட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். நான் பெருமையோடு சொல்லிக்கொள்வேன். 1985 ம் ஆண்டு மீண்டும் ஒருமுறை நாங்கள் வாக்காள பெருமக்களை அணுகும்போது இந்தியாவிலேயே தொழிலாளர் சட்டங்கள் அதிகமாகக் கொண்டு வந்து தொழிலாளர்களுக்கு 'இன் பில்ட் ப்ரொவிஷன்' செய்த ஆட்சி புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிதான் என்றிருக்கக்கூடிய நிலையை உருவாக்குவோம் என்று சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். 1981 ம் ஆண்டில் ஸப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் ஸஸ்பென்ட் செய்யப்பட்டவர்களுக்கு ஊதியம் கொடுக்கவேண்டிய சட்டம். ஸம்மணிங் பவர், முதலாளிகள் கன்ஸிலியேட்டரி ப்ரொஸிடிங்கஸ்க்கு வரவில்லையென்றால் சமன் போட்டு வரவழைக்கக்கூடிய சட்டம். தொழிலாளர்கள் தானாகவே கோர்ட்டுக்குப் போகக்கூடிய சட்டம். குறைந்தபட்ச ஊதியச் சட்டம் கொண்டுவந்து அதிலும் நன்மை செய்யவேண்டும் என்று சொன்னால் அதில் ஓட்டை உடைசல்கள் என்று சொல்லி அதைச் செல்லாமல் செய்யக்கூடிய கோர்ட் உத்தரவு காரணமாக கோர்ட்டுக்கு எடுத்துச் செல்லமுடியாது என்ற சட்டம், எல்லாவற்றிற்கும் மேலாக கைத்தறி நெசவுத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக இந்தியாவிலேயே முதன்முதலாக இந்த புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் சட்டம் கொண்டு வந்தது. அதோடு இதுவும் சேருகிறது. அந்த மகுடத்தில் இந்த முத்தை எங்கே வைப்பது என்று தெரியவில்லை. ஏனென்றால் மகுடத்தில் இடம் காலியில்லை புரட்சித் தலைவர் அவர்கள் செய்திருக்கிற நன்மைகளிலே. பெர்மனென்ட் ஸ்டாட்டெஸ். திரு. ஹாஜா ஷெரீப் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள வேண்டும். அவர்கள் இந்த செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று சொல்லுகிறார்கள். That is postponement by another one year-minimum 6 or 8 months. இன்றையதினம்

இந்தியாவை ஆளக்கூடிய கட்சியினுடைய கருத்தைப் பிரதிபலிக்கிறாரா என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. (குறுக்கீடு) காரணத்தைச் சொல்லிவிடுகிறேன். அப்படி சொல்லிவிட்டப் பிறகு நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லலாம். அப்போது நான் கேட்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய லேபர் அட்வைசரி போர்டே சட்டம் கொண்டு வரவேண்டும் என்று 73லே முடிவெடுத்தபோது, தமிழ்நாட்டில் இருக்கக் கூடியவர்கள் இந்த அரசு இந்தச் சட்டமுன்வடிவைத் தயார்செய்து, நகலை டெல்லிக்கு அனுப்பி டெல்லி அரசாங்கத்தினுடைய ஒப்புதல் பெற்று, அப்படி ஒப்புதல் பெற்ற பிறகுதான் இங்கே அறிமுகப்படுத்தி, விவாதிக்கப்படுகின்றபோது, டெல்லி அரசாங்கமே அதற்கு அனுமதி தந்திருக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் ஹாஜா செரீப் அவர்கள் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்வது, மத்திய அரசினுடைய கொள்கைக்கு ஒத்து வருவதாக நான் கருதவில்லை.

THIRU. K.S.G. HAJA SHAREEF;—Mr. Deputy Speaker Sir, I was very definite in telling that I am not worried about the big industrie I am worried mostly about the feeder industries which are developing. We are thinging of bringing on very many big industries here and for supplying parts for those industries, umpteen number of feede industries will come. If this sort of act is there, I am afraid the feedrer industries will have second thinking of coming here. I an not for referring it to the Select Committee but only for postponement. I want more clarifications that this Bill, after due consideration, if piloted, will not affect anybody but it will have more growth and development in a very amicable manner.

திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைத் தான் நான் சொல்கிறேன். திரு. ஹாஜா செரீப் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று சொல்லுகிறபோது, சில சிறிய நிறுவனங்களை பாதிக்கும் என்கிறார்கள். இதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் இந்த பில்லை மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள், ஆனால் நிச்சயமாக மத்திய அரசின் கொள்கை திரு. ஹாஜா செரீப் அவர்களின் கொள்கையோடு ஒத்து வருகிறது என்பதை என்னால் சொல்ல முடியவில்லை. அவ்வளவு தான். I am not in a position to say that. ஆனால், இதை மத்திய அரசுக்கு அனுப்பி அவர்களுடைய அனுமதியைப் பெற்றிருக்கிறோம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களில், தொழிற்சாலைகளில் தொழிலாளிகள் 5 பேர் என்பது சாத்தியக்கூறு அல்ல; 50 பேர்கள் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதே நேரத்தில் திரு. ஹாஜா செரீப் போன்றவர்களைத் திருப்தி



செய்வதற்காகச் சொல்லியிருக்கிறோம். ஆனால், அதே நேரத்திலே திரு. ஹேமச்சந்திரனையும் திருப்திபடுத்துவதற்காக Provided that the Government may by notification apply the provisions of this Act to any industrial establishment emPloying such number of workmen not less than 50 as may be specified in the notification 50க்கு குறைவான எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய நிறுவனங்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும்; செயல்படும் என்று இருக்கின்ற காரணத்தினால் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் திருப்திபட்டு, தன் திருத்தங்களை பின்வாங்கிக் கொள்வார் என்று கருதுகிறேன். ஆகவே, அவர் கேட்டுள்ள 5 பேர் என்னும் பிரச்னையும் நீக்கப்படுகிறது என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். 50 more workers. It is a natural corollary. இதற்கு நான் பதில் சொல்லி விட்டேன்.

கடைசியாக அவர்கள், ஒரு வருஷத்தில் 240 நாட்கள் இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஒரு இன்டஸ்ட்ரியை இன்பென்ட் ஸ்டேஜ் என்று சொல்வதுண்டு. ஏதேனும் சலுகைகளைப் பெறவேண்டும் என்பதற்காக இன்பென்ட் இன்டஸ்ட்ரி என்று சொல்லப் படுவதுண்டு. 24 மாதங்களில் 480 நாட்கள் இருக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக ஒரு ஆண்டில் 240 நாட்கள் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நாங்கள் ஏன் இப்படி கொண்டுவந்திருக்கிறோம் என்று சொன்னால் ஒரு தொழிலாளியை வேலைக்கு எடுக்கிறார்கள். அவரை வேலைக்கு எடுத்த பிறகு, ஓராண்டு காலத்திற்குள்ளாகவே அவரைப் பர்மெனன்ட் செய்யவேண்டும் என்றால் 240 நாட்கள் இருக்க வேண்டுமென்று சொன்னால், அவ்வாறு இல்லாமல் போய்விடலாம். அப்படிப் பட்ட சாத்தியக்கூறு ஏற்படலாம். ஒரு தொழிலாளி 235 நாட்கள் வேலை செய்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள்; அப்போது அதனால் அவர் பர்மனென்ட் ஆகாமல் போய்விடலாம். இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் என்று சொன்னால், இந்த ஆண்டிலே குறைகின்ற நாட்களை அடுத்த ஆண்டிலே ஈடுசெய்து கொள்ளலாம். எனவேதான், நாங்கள் இந்த எக்ஸ்டிரீமுக்கும் போகாமல், அந்த எக்ஸ்டிரீமுக்கும் போகாமல் நடுநிலையிலே நின்று தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இப்படிச் செய்கிறோம். அதே சமயத்தில், தொழிற்சாலையும் நடக்கவேண்டும். அதுவும் முக்கியம். தொழிற்சாலை இல்லை என்று சொன்னால், தொழிலாளர்கள் இல்லை. அதையும் நாம் கவனிக்கவேண்டும். unless there are establishm ents you do not have employees. ஆகவே தான், இரண்டு ஆண்டு காலத்திற்கு அவகாசம் தரவேண்டும் என்றும், அதிலே 480 நாட்கள் என்றும் சொல்லியிருக்கிறோம்.

[பிற்பகல் 12-20]

கேஷுவல் லேபர் என்று எடுக்கிறார்கள். ஒரு ஆண்டு ஒரு ஐம்பது பேரை எடுப்பார்கள். 10 நாளைக்கு ஒரு 10 பேருக்கு வேலை கொடுப்பார்கள். இன்னொரு 10 நாளைக்கு ஒரு 20 பேருக்கு வேலை கொடுப்பார்கள். மறுபடி 10 நாளைக்கு இன்னொரு 20 பேருக்கு வேலை கொடுப்பார்கள். தொழிலாளி என்ன நினைக்கிறான் என்று சொன்னால் நமக்கு 20 நாளைக்கு ஒரு தடவை, அல்லது 40 நாளைக்கு ஒரு தடவை வேலை கிடைக்கிறதே என்று நினைக்கிறான். இப்படியே நாலு ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் கடந்து விடும். பிறகு வீட்டிலே இருப்பவர்கள் நம்முடைய பிள்ளை வேலைக்கு போய் விட்டது என்று சொல்லி திருமணம் செய்வார்கள். பெண் கொடுத்தவனும்' ஏதோ பெரிய கம்பெனியாக இருக்கிறது என்று அதனால் திருமணம் செய்து கொடுத்து விடுவார்கள். பெண்ணை கொடுத்த உடனே நாலு ஆண்டு காலத்திலே மூன்று குழந்தைகளை பெற்று வைத்திருப்பான். சில நேரத்திலே இரட்டை குழந்தைகள் பிறந்து விடுகின்றன. இங்கே என்னோடு இன்று காலையிலே கூட ஒரு சட்டமன்ற உறிப்பினர் பேசிக் கொண்டிருந்தார். அவரே சொன்னார். 'அண்ணே எனக்கு நாலு ஆண்டிலே மூன்று குழந்தைகள்' என்று. அது எப்படி ஐயா என்று கேட்டபோது, ஒரு தடவை இரட்டை குழந்தை பிறந்து விட்டது; அதிலே ஒண்ணு ஆண் குழந்தை, இன்னொன்று பெண் குழந்தை என்றார். இரட்டை குழந்தை என்றால் ஒன்று, இரண்டும் ஆணாகவே இருக்கும்: அல்லது இரண்டும் பெண்ணாகவே இருக்கும், என்று நான் கேள்விபட்டிருக்கிறேன். நம்முடைய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஒரு தோழர் சொன்னார், எனக்கு இரண்டு குழந்தைகள், ஒன்று ஆண், இன்னொன்று பெண் என்றார். இப்படி நாலு ஆண்டு காலத்திலே இரண்டு, மூன்று குழந்தைகளைப் பெற்று வைத்து விடுவார்கள். சந்தோஷமாக நமக்கு வேலை பெர்மனென்ட் செய்வார்கள் என்று கருதுவார்கள். 200 பேர், 300 பேர் என்று கேஷுவல் லேபராக ஐந்தாண்டுக் காலம், ஆறாண்டுக் காலம் வேலையில் இருந்தவர்களை வேலை இல்லை போ, நீ கேஷுவல் லேபர் என்று சொல்லி வெளியே அனுப்பினால் என்ன பாதுகாப்பு? அவர்கள் தெருவிலே நின்று கண்ணீர் விடுவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது. தொழிற்சாலை பெயரை என்னால் சொல்ல முடியும். இன்றைக்கு சென்னையிலே, கோவை திருச்சி போன்ற இடங்களிலே மூன்று ரூபாய், ஐந்து ரூபாய், என்று பதினைந்து ரூபாய் வரை தினக்கூலியாக கொடுக்கிறார்கள். டியர்னஸ் அலவன்ஸ் கிடையாது; அட்வான்ஸ் கிடையாது: போனஸ் எக்ஸ்-கிரேஷியா கிடையாது; ஒன்றும் கிடைக்காது. மூன்று ரூபாய் ஐந்து ரூபாய், பத்து ரூபாய், பதினைந்து ரூபாய் என்று சில இடங்களிலே பெரிய கம்பெனிகளில் வாங்கிக் கொண்டு தொழிலாளி, நாம் பெர்மனென்ட் ஆகப் போகிறோம் என்று ஆசையாக குழந்தையை. மனைவியை



கொஞ்சிக் கொண்டிருக்கிறான், ஆனால் ஒரு நாளைக்கு வந்து இரண்டு பேரையும் கட்டிக் கொண்டு அழுகிறான். நடுத்தெருவிலே நிற்கிறார்கள். என்ன காரணம். பெர்மனென்ட் இல்லை என்கிற காரணம் தான். வெளியே போ என்று சொல்லி விடுகிறார்கள், இங்கே தெருவில் நின்று அழுகிற தொழிலாளி இன்றையிலிருந்து சிரிக்க போகிறார்கள், புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் என்பதை மறந்து விடக்கூடாது.

**திரு. எல். இளையபெருமாள்:** பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் சார் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து; உண்மையான கஷ்டங்களை எடுத்துச் சொன்னதற்கு நன்றி சொல்வதோடு. நம்முடைய சட்டமன்றத்திலே, சட்டமன்ற விடுதியிலே பணி செய்கிறவர்கள் எட்டு ஆண்டு, பத்தாண்டு காலமாக வேலை செய்து, 40 நாள், 60 நாள் என்று வேலை கொடுத்து அவர்களை ஒதுக்கி வைத்து பெர்மனென்ட் ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதே கருணையோடு அவர்களை எடுத்துக் கொள்வதற்கு, அவர்களுக்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் இப்போது கேட்கிறார்கள். அது தான் புரட்சித் தலைவர் ஆட்சியில் இருக்கிற விசேஷம். அவருக்கு இப்போது குறைந்தது 60 வயது இருக்கும் என்று நினைக்கிறேன். ஏறத்தாழ ஒரு நாற்பது வருஷம் பொது வாழ்வில் இருந்து. பாராளுமன்ற உறுப்பினராக இருந்து புகழ் வாய்ந்தவர், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாடுபட்டவர், அவருக்கே கூட புரட்சித் தலைவர் ஆட்சியிலே தான் இந்த கேள்வியை கேட்க வேண்டுமென்று வந்திருக்கிறது. அதற்கு முன்னால் வரவில்லை. எல்லோரும் கோரிக்கைகளை வைக்கிறார்கள், என்றால் இவர் காலத்தில் வைத்தால்தான் வெற்றி பெறலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள். இளையபெருமாள் அவர்களும் அப்படி கருதலாம். (குறுக்கீடு) உட்காருங்கள், இப்போது வேண்டாம். உங்களைப் பற்றி காம்ப்ளிமெண்ட்டாகத் தான் சொல்கிறேன். உட்காருங்கள் கன்டினியுட்டி போய் விடும் காங்கிரஸ் ஆட்சி ஆண்டிருக்கிறது. திராவிட முன்னேற்ற கழகம் ஆண்டிருக்கிறது (குறுக்கீடு)

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு துணைத்தலைவரவர்களே, தொழிலாளர் சட்டம் என்பது 1948-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. அது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவரும் ஒரு சமயத்தில் காங்கிரஸ் தலைவராக இந்த ஜில்லாவில் இருந்தார் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்;** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இளையபெருமாள் சாதாரணமானவர் அல்ல. அகில இந்திய புகழ் பெற்றவர். தாழ்த்தப்பட்ட மக்களின் பெருந்தலைவர். பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர், அவர் பெயராலே பெரிய கமிஷன் எல்லாம் வைத்து சிபார்சு ஆகி இருக்கிறது. அவருக்கே கூட இத்தனை ஆண்டு காலமாக இந்த கேள்வியை கிளப்புகிற எண்ணம் வரவில்லை. புரட்சித்தலைவர் அவர்களுடைய ஆட்சி வந்தவுடனேதான், இதுதான் சந்தர்ப்பம் என்று கேட்கிறார்கள். அதுதான் புரட்சித் தலைவர் ஆட்சியிலே இருக்கிற ஆட்சியினுடைய விசேஷம். ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்; இங்கே போராட்டம் அங்கே போராட்டம் என்கிறார்கள், அதெல்லாம் ஏன் வருகிறது? இதுதான் டைம், இதுதான் நேரம் என்று சொல்லி புரட்சித் தலைவரை கேட்டு வாங்கிக் கொள்வோம், அவர் கொடுக்க கூடியவர்கள்; கொடுத்து கொடுத்து சிவந்த கரங்களுக்கு சொந்தக்காரர், கேட்போம் என்று அந்த வகையிலே தான் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். அவர் சொன்னால் காங்கிரஸ் ஆட்சியில் மறுக்கக்கூடியவர்கள் யாராவது இருக்க முடியுமா? தைரியம் வந்திருக்குமா? அப்போது சொல்லவில்லை. இப்போது நினைக்கிறார். இப்போது புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். இருக்கிறார். நாம் சொன்னோம் என்றால் அவரிடம் போய்ச் சொல்வார். அவர்கள் இந்த ஆப்பர்சூனிட்டியைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று தான் சொல்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள்:** காங்கிரஸ் கட்சி ஆட்சியில் என்னைச் சேர்மனாகப் போட்டபோது அந்த அந்த மாநிலங்கள் தொழிலாளர் நலச் சட்டங்கள் சரியாக அமல்படுத்தப்படவில்லை தீண்டாமை கொடுமை இருக்கிறது என்பதை கண்டித்தும் எழுதியிருக்கிறேன். அண்ணா இருந்தபோது குஜராத், தமிழ்நாடு மாநிலங்களில் இளையபெருமாள் கமிட்டி ரிப்போர்ட் அமல் செய்யப்பட்டது என்று, புகழ்ந்தும் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன்;** திரு. இளையபெருமாள் அவர்கள் கோரிக்கையை வைத்தார்கள். அதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதற்கு திரு. இளையபெருமாள் காங்கிரஸ் ஆண்ட காலத்தில் கோரிக்கை வைக்கப்படவில்லை என்ற பொருள்பட அமைச்சர் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் தலைமையில் அகில இந்திய மட்டத்திலே அமைக்கப்பட்ட குழு நாடு பூராவும் சுற்றி அரிசன சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு என்ன என்ன குறைகள் இருக்கின்றன என்பதை நன்றாகப் பரிசீலனை செய்து ஒரு அறிக்கையை அவர்களே தந்தார்கள். அன்றைக்கு ஆண்டவர்கள் அவர்களுடைய அறிக்கையையே குப்பைத் தொட்டியிலே போட்டு விட்டார்கள். பரிசீலனை செய்யவில்லை. எனவே இப்போதாவது



கோரிக்கை வைத்தால் இன்றைக்கு இருக்கின்ற அரசாங்கம் நிறைவேற்றுமா என்று பார்க்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள்:** அருமைச் சகோதரர் நெடுமாறன் என் பேரில் பாதகமான குற்றச்சாட்டு சொல்வதுபோல் இருக்கிறது. அன்னை இந்திரா காந்தி ஆட்சியில் மனித உரிமை பாதுகாப்பு சட்டம் இளையபெருமாள் கமிட்டி ரிப்போர்ட்டிலே கொண்டுவந்தார்கள். ஒரு மாநிலத்திலே தாழ்த்தப்பட்ட மலைவாசி மக்களுக்கு உத்தியோகத்திலே கொடுப்பதைப்போல் உத்தியோக உயர்விலும் கொண்டுவந்தார்கள். அப்படிக்கொண்டு வந்ததை இந்த மாநிலம் இன்றைக்கும் நிறைவேற்றவில்லை என்பதை நான் நெடுமாறன் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** புரட்சித் தலைவர் வந்தபிறகுதான் பல கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன, நூதனமான கோரிக்கைகள் வருகின்றன, பலகாலம் கேட்டுவிட்டு ஊறுகாய் பானையில் போடப்பட்ட கோரிக்கைகள் வருகின்றன. ஏன். ஏன் என்ற கேள்விக்குப் பதிலைச் சொல்கிறேன். புரட்சி தலைவர் கொடுப்பார் என்ற எண்ணத்தால், திரு. இளைய பெருமாள் பெரிய பார்லிமெண்டேரியன், லெஜிஸ்லேட்டர் இப்போது எழுந்திருக்கிறார்கள். ஏன், திஸ் இஸ் தி டைம், கல் எடுத்து அடித்தால் மாங்காய் விழும். ஏன் புரட்சித் தலைவர் ஆளுகிறார். நான் பாராட்டுகிறேன். இந்த அரசு கொண்டு வந்து இருக்கின்ற சட்டங்கள், நாங்கள் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லமுடியும், எத்தனை சட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறோம் என்று. ஒன்றைக் கவனிக்கவேண்டும். எவ்வளவு எச்சரிக்கையாகப் போட்டிருக்கிறோம் என்று பார்க்கவேண்டும், மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள். கேஷுவல் லேபரை எடுத்துவிடமுடியாது, டம் கார்டு கொடுத்திருக்கிறார்கள். எங்கே அவர்களுக்கு அப்படிக் கொடுக்கவில்லை என்று புகார் கொடுத்தால் அரசும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். யாராவது கேஷுவல் லேபரை நிறுத்திவிட்டு வேறு ஒருவருக்கு வேலை கொடுத்தால் அவருக்கு கன்டினியுட்டி ஆப் சர்வீஸ் இருக்காதே என்று கேட்டார்கள். நியாயமான கேள்விதான். அதற்காகத் தான் நாங்கள்

> "which is not illegal or a lock out or on account of non-employment or discharge of such workmen for a period which does not exceed three months and during which pe iod a substitute has been employed in his place by the employer."

என்று கொண்டு வந்திருக்கிறோம். யாராவது கேஷுவல் லேபரை நிறுத்திவிட்டால் பிரேக் பண்ணலாம் என்று

சொன்னால் நிறுத்தின 90 நாட்களுக்குள்ளாக வேறு யாரை யாவது கொண்டுவந்தால் நிறுத்திவிட்டவருக்கு சர்வீஸ் கன்டினியுட்டி இருக்கும். What a beautiful amendment it is! ஆழமாகப் பார்க்கவேண்டும். யாராவது 40, 50 நாட்கள் கேஷுவல் லேபராக வேலைக்கு வைத்துவிட்டு அவரை நிறுத்தி விட்டு வேறு ஒருவரை வைத்தால் கன்டினியுட்டி இல்லாமல் செய்யமுடியுமா என்றால்

No, it is not possible.

என்று சொல்ல விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-30]

அது இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த அமென்ட்மென்ட் கொண்டு வந்திருக்கிறோம். யாரையாவது நிறுத்திவிட்டு, 90 நாட்களுக்குள்ளாக வேறு யாரையாவது சப்ஸ்டிடியூட் வேலைக்கு வைத்தால் நிறுத்தப்பட்டவர்களுக்கு அந்த கன்டினியுட்டி ஆஃப் சர்வீஸ் வேலை செய்யவில்லை என்று சொன்னாலும், நேரம் ஆகிறதே பில் கொண்டு வரவில்லையே, பில் கொண்டுவரவில்லையே என்று சொன்னால், கொண்டு வரும்பொழுது கூடுமான வரையில் ஓட்டைகள் இல்லாமல் இருக்க வேண்டுமென்றுதான் எண்ணுகிறோம். அதைப்போன்றுதான் இந்தச் சட்டத்திலே இந்தத் திருத்தத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். (குறுக்கீடு) அதற்கான சாத்தியக்கூறு இப்பொழுது இல்லை. இன்டரஸ்ட் ஆஃப் இன்டஸ்ட்ரியையும் கவனிக்க வேண்டும். இரண்டாண்டுகள் ஸ்டெபிலைஸ் ஆகி இந்த இரண்டாண்டுக் காலத்தில் 480 நாட்கள் வைத்திருக்கிறார்கள் என்றால் இந்தத் தொழிலாளி is a must. அந்தத் தொழிலாளி தேவையானவர்கள், நிறுத்த முடியாது என்று ஆகிவிடுகின்ற காரணத்தினாலே அவர்களைப் பர்மனென்ட் பண்ண வேண்டுமென்று ஆர்க்யூமென்ட் செய்வதிலே நியாயம் இருக்கும்.

அதேபோலத்தான் கன்ஸ்ட்ரக்ஷன் ஒர்க்கர்ஸ் பற்றி நீங்கள் சொல்லியிருக்கின்ற, construction/workers, building workers, bridge, road, canal and other workers. என்று சொல்லும் பொழுது அது இந்த சட்டத்தை அங்கே செயல் படுத்துவதில் சிரமம் இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதை ஒரு டெம்பாரி நேச்சராகச் செய்து கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு இந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் ஒரு சட்டம் கொண்டு வருவதாக வாக்களித்தார்கள். இந்தப் பாராளுமன்றத் தொடர் கூட்டத்திலேயே வந்துவிடும் என்று நான் நம்பியிருந்தேன்.





ஆனால் ஏமாந்து விட்டேன். எனக்கு இப்பொழுது கிடைத்திருக்கின்ற தகவல், இந்தத் தொடர் கூட்டத்திலே வரவில்லை; பின்னால் வருகிறது என்கிறார்கள். அது உண்மையாக வருத்தப்படக்கூடிய ஒன்று. எப்படித் தமிழக அரசு அவசரம் அவசரமாக ப்ரேக் நெக் ஸ்பீட்லே தொழிலாளர் சட்டங்களைக் வேகமாகக் கொண்டு வருகிறதோ அதைப்போல மத்திய அரசும் கொண்டு வரும் என்று நான் ஆசையோடு இருந்தேன்: ஆவலோடு இருந்தேன், இந்த அரசு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் மத்திய அரசு அதைக் கொண்டு வரவில்லை. இனிமேல் அடுத்தாற்போல்தான் கொண்டு வருவார்கள் என்று நான் கருதுகிறேன். அந்தச் சட்டம் வருமேயானால் அதனுடைய விளைவுகள். ரிஃபர்கஷன்ஸ் அன்ட் ரீயாக்ஷன்ஸ் என்ன இருக்கிறது என்று பார்த்து அதற்குப்பிறகு நாம் மறு பரிசீலனை செய்யலாம்,

தண்டனையைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு, மணிமாறன் அவர்களுடைய உணர்ச்சியை நான் மிகவும் மதிக்கிறேன். அதற்குக்காரணம், பத்தாயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள்; இன்னும் கொஞ்சம் அவரைப் பேசவிட்டிருந்தால் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்மென்றுகூட சொல்வார்கள். ஏனென்றால், பனியன் தொழிலாளிகள் நிரம்ப வேலை செய்யக்கூடிய இடத்திலே இருக்கக்கூடிய அவர் ஒரு சாதாரண தொழிலாளியாக இருந்தவர். எனவே அந்த உணர்ச்சிகளை நான் மதிக்கிறேன்.

ஆனால் ஒன்றை நீங்கள் உணர வேண்டும். எடுத்தவுடனேயே

We should not be rash. வேகமாக நாம் காரியங்களைச் செய்து விடக்கூடாது. முதலிலே பனிஷ்மென்ட் ஃபார் ஃபைன் என்று சொல்வோம் அதைமீறாமல் ஃபைன் கொடுக்காமல் ஒழுங்காக இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவார்களேயானால், நாம் இப்படியே இருந்து விடுவோம்.

(மாறாக) Rs. 5,000—I don't care. it is after all Rs. 5,000-

தொடர்ந்து வருவது. அடுத்து இருநூறு ரூபாயா, பர் டே, என்று தூக்கியெறிந்துவிட்டுப் போகிறேன். Whar is it for me-nothing. என்று அப்படித் தூக்கியெறிந்து விட்டார்கள். என்றால் அப்பொழுது கன்விக்ஷன், சிறைக்குப் போகிறாற்போல் திருத்தி விடுவோம். அதுவொன்றும் பிரமாதம் இல்லை. சட்டத்தைத் திருத்தி fine or imprisonment or both

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 மே 14

என்று கொண்டு வருவதற்கு அதிக நாட்கள் ஆகாது. ஆனால் எடுத்தவுடனேயே சிறைக்கு அனுப்புவோம் தொழிலதிபர்களை என்று மிரட்ட வேண்டிய தேவை இல்லை என்று கருதுகிறோம். இந்த அரசு கொண்டு வந்திருக்கின்ற சட்டத்தை அனைவருமே மதிப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். நல்லெண்ணத்தோடு இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அதுவும் புரட்சித் தலைவர்களுடைய எண்ணத்தை உணர்ந்திருக்கிறார்கள் என்ற காரணத்தால் அந்தத் தொழிலதிபர்கள் ஃபைன் கொடுக்கக்கூடிய நிலையில் நடக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன், எதிர் பார்க்கிறேன், வேண்டிக் கொள்கிறேன்.

எனவே, நீங்கள் சட்டத்தை முழுமையாக செயல்படுத்துவதற்கு வேண்டிய அளவிலே ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு, இதுவரையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்கள், வேதனைப்பட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்கள், பாதுகாப்பில்லாத தொழிலாளர்கள் இந்தச் சட்டம் நிறைவேறிய பிறகு அவர்களுக்கு ''பர்மனென்ட் ஸ்டேட்டஸ்'' கிடைப்பதை எண்ணி அவர்களெல்லாம் மகிழ்ச்சியடைந்து புரட்சித் தலைவரவர்களின் அரசைப் பாராட்டுவதைப்போல இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்களும் பாராட்டுவார்கள் என்று நம்பி, திருத்தத்தைப் பின் வாங்கிக் கொண்டு இந்தச் சட்டத்தை ஒரு மனதாக நிறைவேற்றித் தரும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவது என்றால் அதிக நாட்களாகும். நான் எற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாஜாசெரீப் அவர்களுக்குச் சொன்னதைப்போல, We have already obtained the concurrence from the Central Government. மைய அரசினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் இந்தச் சட்டத்தை இங்கே அறிமுகம் செய்து இப்பொழுது விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU. K.S.G. HAJASHAREEF:—Mr. Deputy Speaker, Sir, The Hon'ble Minister has not definitely answered my question about the feeder industries position. But I do not want to take it to the Select Committee. I withdraw my amendment.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''



1981 மே 14]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

திரு. இரா. கருப்பையா: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

''பிரிவு 1-இல் (3) வது உட்பிரிவில் இரண்டாவது பாராவில் இரண்டாவது வரியில் 'ஐம்பது பேருக்குக் குறைவான' என்ற வார்த்தையை நீக்கி அதற்குப் பதில் 'பத்து பேருக்குக் குறைவான' என்ற வார்த்தையைச் சேர்க்கவும்.''

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: உறுப்பினர் திரு. கருப்பையா அவர்களுடைய திருத்தத்தை ஆதரித்து, என்னுடைய திருத்தத்தை நான் மொழிய வில்லை.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

HON. THIRU S. RAGHAVANANDAM: Mr. Deputy Speaker Sir, I move—

"That in clause 3, in sub-clause (2), after the words 'or a lock', *insert* the words "or on account of non-employment or discharge of such workmen for a period which does not exceed three months and during which period a substitute has been employed in his place by the employer

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

"1. பிரிவு 3–ல் (1)–வது உபபிரிவில் கீழ்க்காணும் முறையில் திருத்தி அமைக்க வேண்டும் :—

(1) தற்போது செயலிலுள்ள எந்த ஒரு சட்டத்தில் என்ன சொல்லியிருப்பினும் தொழில் நிறுவனம் ஒன்றில் பன்னிரெண்டு காலண்டர் மாதங்களில் இருநூறு தினங்கள் பணி புரிந்து வரும் ஒவ்வொரு பணியாளரும் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்பட வேண்டும்.

(2) பிரிவு 3–ல் (2)–வது உபபிரிவில் முதல் வரிசையிலுள்ள 'தொடர்ந்து' என்ற வார்த்தையை நீக்கவும்.

(3) பிரிவு 3–ல் (2)–வது உபபிரிவில் 4–வது வரியில் 'சட்ட விரோதமற்ற என்ற வார்த்தையை நீக்கவும்''.

திருத்தம் வழி மொழியப் பெற்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.—

"In clause 3, in sub-clause (1), after the words" period of twenty-four calendar months and before the words "in an industrial establishment," *add* the following words :—

'Or for a period of two hundred and forty days in a period of twelve calendar months".

2. Omit the word 'continuous' from sub-clause (1) of clause 3
The amendment was duly seconded.

திருவாளர்கள் இரா. கருப்பையா, ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோரின் திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றன.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 4 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 7

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களின் திருத்தம், எதிர்த்து வாக்களிக்கும் தன்மை உடையதாக இருப்பதால் ஏற்கப்படவில்லை.



பிரிவுகள் 7 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :—

"பிரிவு 1-ல் (3)-வது உபபிரிவில் இரண்டாவது வரியில் உள்ள 'ஐம்பது பேருக்குக் குறையாமல்' என்ற வரியை நீக்கி 'பத்து பேரும் அதற்கு மேலும்' என்ற வார்த்தையைச் சேர்க்கவும்'.

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : உறுப்பினர் திரு. கருப்பையா அவர்களுடைய திருத்தத்தை ஆதரித்து, என்னுடைய திருத்தத்தை நான் மொழியவில்லை.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1981) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

[பிற்பகல் 12-40]

10. அறிவிப்பு.

அ. சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 (ஆ. இ).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1981) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

ஆ. சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை எண் 55/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும், என்று மொழிகிறேன்..........

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்த சம்பளம் வழங்கல் சட்ட திருத்தத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்கள், பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மற்றவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதிலே கவனம் செலுத்தினால் நல்லது என்று நான் கருதுகிறேன். நான் இந்த அவைக்கும் அமைச்சரவைக்கும் சொல்ல விரும்புவது பல்வேறு சிக்கலான ஒரு காலத்தில் நாம் இன்று அரசாட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பது அறிந்த பெரிய உண்மை. அப்படிப்பட்ட நேரத்தில் பல்வேறு தரப்பிலிருந்து கோரிக்கைகள் வருகிறபோது நம்மாலே நிறைவேற்ற முடியவில்லை என்ற உண்மை ஒரு பக்கம் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே நம்முடைய சம்பளத்தை, அலவன்சை நாம் உயர்த்திக் கொள்கிறபோது மிகக் கவனமாக இருக்கவேண்டிய பெரிய பொறுப்பு நமகிருக்கிறது. மிக சத்தமில்லாமல் அவர்கள் சம்பளத்தை சட்டமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும், அமைச்சர்களும் உயர்த்திக் கொள்ளுகிறார்கள் என்ற ஒரு அவலச் செயலுக்கு நாம் இடம் கொடுத்துவிடக் கூடாது. ஒரு முறையான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு உள்ள ஒரு சம்பளத்தைப் பெறவேண்டும் என்றுள்ள நல்ல அம்சத்தை நாம் மனதிலே கொண்டு இந்தக் காரியத்தைச் செய்யவேண்டும். நான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வருகிறபோது ஒன்றே ஒன்று சொல்லவேண்டும்.

இன்றைக்கு 1,000 ரூபாய் சம்பளத்தை 1,500 ஆக உயர்த்திக் கொண்டால் கூட பரவாயில்லை. கட்டடத்திற்கு வாடகை என்ற முறையிலே ஒரு 2 ஆயிரம் ரூபாய் திடீரென்று நாம் உயர்த்துகிறோம் என்று சொல்லுகிறபோது ஜனங்களுக்கு அதைப் பற்றி தவறான கருத்துகள் வரும் என்பதை அரசு கருத வேண்டும் அல்லது அவர்களுக்குப் புதிதாக, பெரிய கட்டடம் கட்டிக் கொடுக்க தயாராக இருக்கவேண்டும். அதற்குரிய முயற்சிகளை நாம் மேற்கொள்வதிலே தவறில்லை. ஆகவே நாம் வாடகை என்ற முறையிலே நாம் குடியிருக்கும்படியான

---

*1981ம் ஆண்டு மே மாதம் 13 தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



இல்லங்களுக்கு ஆயிரம் இரண்டாயிரம் என்று எடுத்துக் கொள்ளும் நிலை வருகிறபோது அது நமக்கு ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்தும் என்பதை அரசு கவனிக்கவேண்டும். இந்த முறையிலே இந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரும் போது அரசு தன்னுடைய நிலையை சரிப்படுத்தி இதை பரிசிலித்து பிரேரேபிக்கவேண்டும் என்று வற்புறுத்தி அமைகிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய சகோதரர் வரதராசன் அவர்கள் சொன்னதைப்போல, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் திருத்தச் சட்டத்தின் மீது ஒரு சில கருத்துக்களை சொல்லுகிறேன். வரதராசன் அவர்கள் சொன்னதைப்போல் அமைச்சராக இருக்கின்றவர்கள் சம்பளம், அதற்கு ஊதிய உயர்வு கோருவதிலே யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. அவர்கள் வீடு என்ற பேரில், கோடிக் கணக்கான மக்கள் வீடற்ற மக்களாக வாழ்கின்றார்கள்.

அவர்களுக்குப் போதிய உணவு கொடுக்க வழியில்லை. ஆனால் இப்போது இருக்கிற நிலைமையிலே, ஆயிரம் ரூபாயில் நமக்கு நல்ல வீடு சுமாராக கிடைக்கும் என்ற நம்பிக்கை பொது மக்கள் மத்தியிலே இருக்கிறது. ஆனால் 2 ஆயிரம் 3 ஆயிரம் என்று சொல்லி, நாம் சொல்லும்போது பொதுமக்கள் மத்தியிலே நமக்கு வீடு கிடைக்காமல் கூட போகும். அந்த கஷ்டம் உண்மை தான். - ஆயிரம் ரூபாய்க்கு வீடு கேட்டால் கூட கிடைக்காமலே இருப்பதும் உண்மை. நகரத்திலே மிகவும் கஷ்டம் கூட. ஆனால் அதைச் சம்பளம் என்ற பெயரில் தைரியமாக சொல்லலாம். அதிலே ஒன்றும் தவறு கிடையாது என்றிருக்கிற நிலைமையிலே, அதை சொல்வது ஒன்றும் குற்றமும் இல்லை. ஆனால் அதை விட்டு விட்டு ஏதோ வாடகைக்காக தலைவர், துணைத் தலைவர் அமைச்சர்கள் இவர்களுக்காக இரண்டாயிரம் வாடகை கொடுக்கிறோம் என்ற அவலப் பெயரை வாங்குவதிலே அரசு கவனம் செலுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். நாம் புதிதாக, வசதியாக அவர்களுக்கு கட்டடம் கட்டிக் கொடுப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. அதில் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் திருத்தச் சட்ட முன்வடிவு சம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கருத்துக்களைச் சொல்ல விரும்பகிறேன். அமைச்சர்களுக்கு, முதலமைச்சருக்கு, பேரவைத் தலைவருக்கு, பேரவைத் துணைத் தலைவருக்கு, மேலவைத் தலைவருக்கு, மேலவைத் துணைத் தலைவருக்கு, மற்றும் அமைச்சரின் செயலர்களுக்கு, முதன்மைச் செயலாளருக்கு ஆகியோர்களுக்கு சொந்த வீடுகள் கட்டி இருப்பவர்களுக்கு இந்த வீட்டு வாடகைப்படியை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்கள் அரசாங்க வீடுகளில் இருந்தால் இந்தப் பிரச்னை கிடையாது. அதே மாதிரி வாடகை வீடுகளில் இருந்தால், அந்த வீட்டு வாடகை எவ்வளவோ அவ்வளவு வாடகையும்

[திரு. இரா. கருப்பையா] [1981 மே 14

முழுமையாகக் கொடுக்கப்பட்டு விடுகிறது. அதிலேயும் பிரச்சினை இல்லை. இங்கேயிருக்கும் பிரச்னை என்னவென்றால், சொந்த வீடுகளில் இருக்கும் அமைச்சர்கள், பேரவைத் தலைவர்கள், மற்றும் மேலவைத் தலைவர் ஆகியோர் யார் யார் சொந்த வீடுகளில் இருக்கிறார்களோ அவர்களுக்கு இந்த வீட்டு வாடகைப்படியை உயர்த்துவது என்ற அடிப்படையிலேதான் இந்தத் திருத்தம் அமைந்து இருக்கிறது.

இன்றையதினம் அமைச்சரின் படி, சம்பளம் ஆகியவற்றை உயர்த்த வேண்டும் என்ற முறையிலே ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு இருக்குமானால், பொதுவாக இன்றைய தினம் இருக்கும் நிலையில் ஆயிரம் ரூபாய் சம்பளத்திலே அமைச்சர்கள் தங்களுடைய செலவைச் சரிகட்ட முடியாது என்ற யதார்த்த நிலைமை ஓரளவிற்கு அனைவருக்கும் புரிகின்ற நிலைமை இருப்பதால், அது ஒரு நியாயமான அடிப்படையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று ஒப்புக் கொள்ள முடியும். ஆனால் வீட்டு வாடகைப்படியை உயர்த்துவது அதிலும் குறிப்பாக முதலமைச்சர், அமைச்சர் மற்றும் பேரவைத்தலைவர் ஆகியோர்களுக்கு வீட்டு வாடகைப்படியாக நிர்ணயித்துக் கொடுக்கப்பட்ட 250 ரூ. என்பதை தற்சமயம் 2,000 ரூ. என்கிற அளவிற்கு உயர்த்திக் கொடுக்கலாம் என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலவைத் தலைவருக்கு ஏற்கனவே ரூ. 150 என்று நிர்ணயிக்கப்பட்டு இருப்பதை இப்போது 1,500 என்று உயர்த்த வேண்டும் என்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே சொந்த வீடுகளில் குடியிருப்பவர்கள் இந்தப் படியை எதிர்பார்த்துத்தான் இந்த பதவிகளை ஏற்றுக் கொண்டு இருப்பார்கள் என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால் அதே நேரத்திலே இந்த வீட்டு வாடகைப்படியை மேலும் உயர்த்துகின்ற நடவடிக்கை மூலம் அவர்களுக்கு அதனை முழுமையாக ஈடு செய்துவிடும் முறையிலே அமைந்துவிடும் என்று சொல்லிவிட முடியாது.

ஆகவே, ஏற்கனவே ரூ. 250 என்பதை ரூ 2,000 என்றும்; 150 ரூ. என்பதை 1,500 ரூ. என்றும், 100 ரூ. என்பதை 750 ரூ. என்றும் உயர்த்துவது என்ன எண்ணத்தை ஏற்படுத்தும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 250 ரூ. என்பதை 500 ரூ. என்று உயர்த்தினால் அது ஓரளவு பொருத்தமுடையதாக இருக்கும். தற்போதுள்ள நிலைமையை சரிக்கட்ட கொண்டு வரப்பட்டதாக இருக்கும். ஆனால் இந்த அளவிற்கு உயர்த்துவது என்பதைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இந்த முறையிலே சம்பளம், படி உயர்த்துவது போன்ற திருத்தம் கொண்டு வருவதாலே அனைத்து அமைச்சர்களுக்கு இதனால் ஆதாயம், பயன் கிடைக்குமா என்றால் இல்லை. சொந்த வீடுகளில் இருக்கும் அமைச்சர்களுக்கு மட்டும்



1981 மே 14] [திரு. இரா. கருப்பையா]

தான் இந்த உயர்வு பலனை அளிக்கும். ஆகவே, இந்த மாதிரி திருத்தம்தேவை இல்லை என்றும், இந்த 250 ரூ. என்பதை 500 ரூ. என்கிற அளவிற்கு உயர்த்தினால் போதும், அது நியாயமான அடிப்படையில் அமைந்ததாக இருக்கும், எல்லோரும் அந்த நியாயமான அடிப்படையை புரிந்துகொள்ள முடியும் என்பதால், அந்த அளவிற்கு மட்டும் உயர்த்தினால் போதும் என்று சொல்லி, இந்த உயர்வை ஏற்றுகொள்ள முடியாது என்று சொல்லி, அதை அமைச்சர் அவர்கள் திருத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, அந்த வகையில் இந்தச் சட்டத்தை திருத்தி நிறைவேற்ற முன்வரவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

[பிற்பகல் 12-50]

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த சம்பளத் திருத்த மசோதாவில் இங்கே பேசிய பல எதிர்க்கட்சித் தலைவர்கள் அமைச்சர்களுக்கு சம்பளம் உயர்த்தப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்கள். அதிலே யாருக்கும் இரண்டுவித கருத்து இருக்க நியாயமில்லை. காரணம் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இப்போது கிட்டத்தட்ட 900 ரூபாய் அல்லது 950 ரூபாய், இப்போது அதிகப்படுத்தப்பட்ட தொகையோடு சேர்த்து கிடைக்கிறது. அமைச்சர்களுக்கு கழிவு போக 950 ரூபாய்தான் மீதம் வருகிறது. ஆனால் பிற மாநிலங்களில் 2,100 ரூபாய் வரையில் கொடுக்கப்படுகிறது. அதை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நிச்சயமாக இந்த விலைவாசி ஏற்றத்தில் பொருளாதார நலிவில் அமைச்சர்களுக்கு 1,000 ரூபாய் சம்பளம் என்பது போதாது. அதை 2,000 ரூபாய் அளவுக்காவது உயர்த்த வேண்டுமென்ற கருத்தில் யாருக்கும் வேறுபாடு இல்லை. ஆகவே, அரசு இதைக் மறுபரிசீலனை செய்யும் என்ற எண்ணத்தோடு இந்த கோரிக்கையை வைக்கிறேன்.

அடுத்து, வீட்டு வாடகைப்படியைப்பற்றிச் சொன்னார்கள். அரசு கட்டடங்களில் இருக்கிற அமைச்சர்களைத் தவிர சில அமைச்சர்களுக்கு தனியாக வாடகை வீடுகள் வாங்கி, அங்கே தங்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலே ஒரு அமைச்சர் சாதாரண வீடுகளிலே தங்கினால் கூட 1,500 ரூபாய், 2,000 ரூபாய் வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. சில சமயங்களில் அதற்குக் கூட கிடைக்காது. அப்படி இருக்கும் போது சொந்த வீடுகளில் இருக்கிற அமைச்சர்களுக்கு 250 ரூபாய் 'படி என்பது போதாது. ஏனென்றால் தனியாக அவர்கள் வாடகை வீட்டில் இருந்தால் 2,000 ரூபாய்க்கு மேல் கொடுக்கப்படுகிறது. ஆகையால் சொந்த வீட்டில் இருந்தாலும், வாடகைக்கு விட்டால் அந்த வீட்டுக்கு என்ன வாடகை வருமோ அதைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சொந்தமாக வீடு இருந்தாலும் சொசைட்டியிலே, கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வாங்கி செலவு செய்து கட்டியிருப்பார்கள். அமைச்சர்களாக இல்லாவிட்டால் அந்த வீட்டில் ஒரு பகுதியை வாடகைக்கு

விட்டு, சொசைட்டி கடனைக் கட்டிவிடலாம். அமைச்சராக இருக்கும்போது அப்படிச் செய்ய முடியாது. அந்தக் கட்டடம் முழுவதையும் தானே பயன்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, தனியாக வாடகை வீடுகளுக்கு 1,500 ரூபாய், 2,000 கொடுத்துவிட்டு, சொந்த வீட்டில் இருப்பவர்களுக்கு 250 ரூபாய் கொடுப்பது என்பது எந்த வகையிலும் நியாயமல்ல. அதனால் எல்லா வீடுகளுக்கும் 2,000 ரூபாய் என்று கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. வாடகைக்கு எடுக்கப்படும் மற்ற வீடுகளுக்கு எப்படி மதிப்பீடு செய்கிறார்களோ அதைப்போல மதிப்பீடு செய்து, எவ்வளவு ரூபாய் வருகிறதோ அதைக் கொடுக்க வேண்டும். மதிப்பீடு 1,000 ரூபாய் என்று வந்தாத 1,000 கொடுக்கலாம்; 2,000 ரூபாய் மதிப்பீடு என்றால் அந்த 2,000 ரூபாயைக் கொடுக்கலாம். அதிகாரிகள் நியாயமான முறையில் பரிசீலித்துதான் மதிப்பீடு செய்வார்கள். அந்த மதிப்பீடுபடி கொடுத்தால் போதும்.

இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் அவர்கள் சொந்த வீடுகளில் இருந்தாலும் அதற்கு நியாய வாடகையைக் கொடுக்கும் போது யாரும் அதை தவறாக எண்ண மாட்டார்கள். ஆகவே, சொந்த வீட்டில் குடியிருப்பவர்களுக்கு அது ஒரு தண்டனையாக அமையாமல், இந்த 250 ரூபாய் என்பதை மாற்றி. அதற்கு உரிய வாடகையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

டாக்டர் கே. சௌரிராஜன்: பேரவைத் துணைத் தலைவர வர்களே, இந்த சம்பளம் வழங்குகின்ற மசோதாவை ஆதரித்து இந்த நேரத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி அளித்ததற்காக முதலில் தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரிலே இன்றைக்கு எங்குப்பார்த்தாலும் வீடுகளின் வாடகை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு வரதராஜன் போன்றவர்களுக்கு இது தெரிந்திருப்பதற்கு நியாயமில்லை. சாதாரணமாக ஒரு 'கராய்ஜ்' கூட இன்றைக்கு 300 ரூபாய், 400 ரூபாய் வாடகை என்ற அளவுக்கு எப்போதும் எதிர்பாராத அளவுக்கு இன்று உயர்ந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது சொந்த வீடுகளில் இருக்கின்ற அமைச்சர்கள் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களுக்கு இந்த 250 ரூபாய் கொடுப்பது என்பது உள்ளபடியே யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. சென்னையில் அமைச்சர்கள் சொந்த வீட்டில் இருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை நாம் பழிவாங்குகிற அளவுக்கு இந்த அரசு போய்விடுகிறது என்பதுதான் இதன்



நம்முடைய அமைச்சர்கள் எல்லாம் சாதாரணமாகக் குடியிருக்கின்ற வீடுகள் எல்லாம் 2,000 ரூபாய்க்குக் குறைந்து வாடகைக்குக் கிடைக்காது. சொந்த வீட்டிலே இருப்பவர்கள் ஆனாலும் அவர்கள் இருக்கின்ற வீட்டை வாடகைக்குக் கொடுத்தால் 2,000 ரூபாய்க்கு மேல் வாடகை வரும். மாண்புமிகு அமைச்சர் ஹன்டே அவர்கள் குடியிருக்கின்ற வீட்டினை ாடகைக்குக் கொடுத்தால் அதை 2,000 ரூபாய் வாடகையில் டுத்துக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆகவே சாந்த வீட்டிலே குடியிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக வகளுடைய வீட்டுவாடகைப்படியைக் குறைத்து அவர்களைப் ழி வாங்கக்கூடாது.

இன்னொன்று, இப்படி அமைச்சர்களுக்கு 2,000. ரூபாய் காடுக்கப்பட்டாலும் கார்ப்பரேஷன் சும்மா விடாது சொத்து ரி என்ற வகையிலே எப்படியும் வருடத்திற்கு 6,000 ரூபாயை சூலித்துவிடும். ஆகவே மூன்று நான்கு மாதச்சம்பளம் ார்ப்பரேஷனுக்கு வரியாக போய்விடும். இன்கம் டேக்ஸ் வேறு சூலிக்கப்பட்டுவிடும். ஆகவே இவ்வாறு அமைச்சர்களுக்கு ,000 ரூபாய் என்று கொடுத்தாலும் அரசாங்கத்திற்கு எந்தவித ான நஷ்டமும் இல்லை. அவற்றைச் சொத்துவரியாக அரசு ரும்ப வாங்கிவிடப்போகின்றது. வருமான வரியாக மத்திய ரசு வாங்கிவிடப் போகின்றது. ஆகவே நிச்சயமாக அவர் ளுடைய தகுதிக்கு குறைந்தது 2,000 ரூபாய் கொடுக்கலாம் ன்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் ணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் ந்த சட்டமுன்வடிவின் மீது பேசுகின்றபோது 250 ரூபாய் என்று ருப்பதை ஏன் இப்படி திடீரென்று 1,500 ரூபாய் உயர்த்தி ,000 ரூபாய் என்ற அளவுக்குக் கொடுக்கப்படுகிறது என்றும் ப்படிக் கொடுக்கலாமா என்றும் சொன்னார்கள். பதில் சால்வதற்கு முன்னால் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள பிருபுகிறேன். இப்போதிருக்கின்ற தொகை என்பது ஏதோ அண்மையிலே இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலோ அல்லது 5, 10 ஆண்டுகளுக்கு முன்னாலோ நிர்ணயிக்கப்பட்ட தல்ல. இதுபற்றி அவை தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற் காகச் சொல்கிறேன். 1951 ஆம் ஆண்டிலே போடப்பட்ட சட்டத்தின்படி அப்போது விதிக்கப்பட்ட தொகையாகும் இது. 150 ரூபாய், 100 ரூபாய், 200 ரூபாய், 250 ரூபாய் என்றெல் லாம் 1951 ஆம் ஆண்டிலே நிர்ணயிக்கப்பட்டது. 1951 ஆம் ஆண்டிலே வேண்டும் என்றால் 150 ரூபாய்க்குச் சென்னையிலே கட்டிடங்கள் வாடகைக்கு கிடைத்திருக்கலாம். அது எல்லா உறுப்பினர்களுக்கும் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சுட்டிக் காட்டியதுப்போல் தெளிவாகத் தெரியும். ஆனால் அதற்குப் பிறகு 30 ஆண்டுகளுக்குப் பிறகு எரோஷன் ஆப் மனி வேல்யூ

என்ற வகையிலே 2,000, 3,000 ரூபாய்க்குக் கூட வீடுகள் கிட்டாத நிலைமை இருக்கின்றது. ஆகவே பணவீக்கத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கின்றது இந்தச் சூழ்நிலை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌரிராஜன் அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல இந்த அவை ஏற்கும் என நம்புகிறேன். 1951 ஆம் ஆண்டு சட்டத்தின்படி அமைச்சர்களுக்கு ரென்ட் அலவன்ஸ் 250 ரூபாய் என்று இருந்ததை இப்போதைய சட்ட முன்வடிவின் மூலமாக 2,000 வரை என உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதுவும் 2,000 வரை என்றுதான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதே தவிர 2,000 என்று ஏற்படுத்தப்படவில்லை. அதுபற்றி பி.டபிள்யூ.டி. அசஸ் செய்து அது 500 ஆகவும் இருக்கலாம் 700 ஆகவும் இருக்கலாம், ஆயிரமாகவும் இருக்கலாம். குறிப்பாக சொந்த வீடு இல்லாத ஒரு அமைச்சருக்கு ஒரு வாடகை வீடு தருகிறார்கள் என்றால் அதற்கென்று கைட்லைன் இருக்கிறது, அதன்படிதான் அதற்கான ரென்டை பிக்ஸ் செய்கிறார்கள். ஆகவே 2,000 என்ற அந்த உச்சக்கட்டத்தைத் தான் கொடுப்பார்கள் என்று பொருள் அல்ல. 2,000—க்கு உட்பட்டதாகத் தரப்படுகின்றது.

உதாரணமாக ஸ்பீக்கருக்கு அந்த 1951 ஆம் ஆண்டு சட்டப்படி வீட்டுவாடகைப்படியை 250 என்று நிர்ணயித்தார்கள். ஆனால் இப்போது 30 ஆண்டுகளுக்குப் பிறகு பண வீக்கத்தைக் கருத்தில் கொண்டு பார்க்கின்றபோது அந்த உச்சகட்ட அளவை 2,000 ரூபாய் வரை என்று நிர்ணயிக்கப்படவேண்டும் என்று சொல்லப் படுகின்றது. ஆனால் இது பி.டபிள்யூ.டி. நிர்ணயிப்பதைப் பொறுத்து 500 ஆகவும் இருக்கலாம் 600 ஆகவும் இருக்கலாம்.

[பிற்பகல் 1.00]

உச்சக்கட்டமாக விதிக்கக் கூடிய ஒரே வழியாகத்தான் 2,000 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, இரண்டாயிரமே கட்டாயமாக நிர்ணயிக்கப்படவேண்டும் என்பது அல்ல. அது அந்த நியதிக்கு உட்பட்டது. அதைப்போலவே, டெபுட்டி ஸ்பீக்கருக்கு வெறும் 100 ரூபாய் என்றுதான் ரென்ட் அலவன்ஸ் என்று இருந்ததை தற்போது நிலவும் காலத்தை முன்னிட்டு ஏனென்றால் அதுவும் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு முன்னாலே நிர்ணயிக்கப்பட்டது என்ற காரணத்தினால் அதையும் 1,500 ரூபாய் வரை உச்சக்கட்டமாக நிர்ணயிக்கலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, சேர்மென் ஆப் தி லெஜிஸ்லேடிவ் கவுன்சிலுக்கும், டெபுட்டி சார்மென் ஆப் தி லெஜிஸ்லேடிவ் கவுன்சிலுக்கும், முறையே, 250 ரூபாய் என்று இருந்ததை 2,000 ஆகவும், 100 ரூபாய் என்று இருந்ததை 1,500 ஆகவும் உயர்த்தப் பட்டிருக்கிறது. ஏதோ அமைச்சர்களுக்கு மட்டுமே, இது உயர்த்தப்பட்டிருப்பதாக கருதக் கூடாது. அப்படி அல்ல அது





பார்லிமெண்டரி செக்ரட்டரிகளுக்குக் கூட 150 ஆக இருந்தது 1,500 என உயர்த்தப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் அப்போசிஷன் லீடர்ஸ் ஆப் தி லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி, அண்டு லெஜிஸ்லேடிவ் கவுன்சிலுக்கும் புதிய சட்டத்தின்படி 100 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டிருந்தது, தற்போது மேக்ஸிமம் 1,500 ரூபாய் என்று அவர்களுக்கும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்கான திருத்தங்களும் வர இருக்கிறது. அந்த திருத்தத்தின்படி அசெம்பிளி கொரடா மற்றும் கவுன்சில் கொரடாவுக்கும் கூட, வெறுமனே 100 ரூபாய் என்று இருந்த ரெண்ட் அலவன்ஸ் 1,500 என்று மாற்றப்பட்டிருக்கிறது. அதற்கான வழி வகைகள் செய்யப்பட்டிருக்கிறது.

அது மட்டும் அல்லாமல், தற்போது அமைச்சர்கள் இருக்கும் வீடு அரசுக்குச் சொந்தமான வீடாக இருக்குமானால், அதுபோல எதிர்க் கட்சித் தலைவர்கள் குடியிருக்கும் வீடும் அரசுக்குச் சொந்தமான வீடாக இருக்குமானால் அந்த வீடுகளைப் பராமரிக்கும் பொறுப்பை — அந்த செலவுகளை தற்போது அரசே ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு அமைச்சரோ அல்லது பேரவை எதிர்க்கட்சித் தலைவரோ, மேலவை எதிர்க் கட்சித் தலைவரோ, சொந்த வீட்டிலே இருப்பாரேயானால், அவருடைய வீட்டை, அந்த 5 ஆண்டு காலம் வரைக்கும் பராமரிக்கும் பொறுப்பைகூடதற்போதுஇருக்கிற விதிகளின்படி அரசு ஏற்றுக் கொள்ளாது. ஆனால் தற்போது அவர் அந்த பொறுப்பிலே இருக்கிறபோது, இந்த விதிக்கு உட்பட்டிருக்கிற காரணத்தால், அந்த பராமரிப்புச் செலவை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில், அதற்கும் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

சொந்தத்தில் வீடு வைத்திருக்கும் ஒருவர், அமைச்சராக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் சரி, அவர்கள் அந்த வீட்டை வாடகைக்கு விடுவார்களேயானால், அந்த வாடகை வருமானத்தை வைத்துக் கொண்டு, அவர் அமைச்சராக அல்லது எதிர்க்கட்சித் தலைவராக பதவியில் இல்லாத நேரத்தில், அந்த வாடகையை வைத்துக் கொண்டே முனிசிபல் டாக்ஸை கட்டி விடலாம். முனிசிபல் டாக்ஸ் எந்த அடிப்படையில் லெவி செய்யப்படுகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அந்த வீட்டை வாடகைக்கு விட்டாலும் சரி, விடாமல் சொந்த உபயோகத்தில் வைத்திருந்தாலும் சரி, வாடகைக்கு விட்டாலும் என்ன வருமானம் கிடைக்குமோ என்று கணக்கிட்டு அந்த அடிப்படையில் எடுத்துக் கொண்டு டாக்ஸ் போடப்படுகிறது.

ஆகவே, அமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் பொறுப்பில் இருக்கிறபோது, அந்த 5 ஆண்டுக் காலத்தில், அந்தக் கூடுதல் வருமானம் இல்லாவிட்டாலும், அதாவது

அந்த வீட்டை வாடகைக்கு விட்டு வரக்கூடிய வருமானத்தை இழந்தாலும் கூட, அந்த டாக்ஸை கட்டவேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, அமைச்சர் பொறுப்புக்கு வந்தபிறகு, அல்லது எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்புக்கு வந்தபிறகு, அவர்கள் வாடகைக்கு வீட்டை விட முடியாது. காரணம் செக்யூரிட்டி ரீசன் பாதுகாப்பு கருதிவிட முடியாது. அந்த இல்லத்தை அவர்கள் தனியாக வைத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. அரசினுடைய ரிகார்டுகள் எல்லாம் இருக்கும், பாதுகாப்பு இருக்கும் என்று அதைச் சொந்த உபயோகத்தில் வைக்கிறபோது இன்றியமையாத தேவை என்கிற காரணத்திற்காகத்தான், இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

அது மட்டும் அல்லாமல், பேரவையிலோ, மேலவையிலோ ஒரு உறுப்பினர் இறந்து விடுகிறபோது, அவருடைய பேமிலி அலவன்ஸாக Wife or husband or unmarried daughter or minor son என்ற அடிப்படையில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஏற்கனவே இருந்த 100 ரூபாய் என்பதை மாற்றி தற்போது 250 ரூபாய் மாதத்திற்கு அந்த குடும்பத்திற்குத் தரவேண்டும் என்று இதிலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்லாமல், மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், பேருந்துகளில் உறுப்பினர்கள் பயணம் செய்கிறபோது, உடன் யாரேனும் செல்வதற்கு அனுமதி வேண்டும் என்ற ஒரு வேண்டுகோள் விடுத்ததை அரசு ஏற்றிருக்கிறது. அந்த அடிப்படையில்,

> After the words 'to travel'. the words "either singly or for spouse or any other relative"

என்று இருக்கிறது. இதிலேகூட எனி அதர் ரிலேடிவ் என்று வருமானால், அதிலே யார் வேண்டுமானாலும் போகலாம் என்ற காரணத்தால், பெண் உறுப்பினராக இருப்பார்களே யானால், அவர்களுக்கு வேறு யாரேனும் கூட்டிச் செல்லலாம். துணைக்காக, பாதுகாப்பிற்காக என்ற அடிப்படையில், ஒரு திருத்தம் வர இருக்கிறது என்று சொல்லி, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள், அடுத்து இதை ஒட்டி இரண்டு திருத்தங்கள் இருக்கின்றன. அவற்றையும் எடுத்துக் கொண்டு இதை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன்.

DR. K. SOURIRAJAN: Does it include the cost of maintenance also ? Does the Government seek extra money for maintenance ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Rent allowance is different from Maintenance. மெயின்டெனஸ்க்கு தனியாகத் தரப்படும். ரெண்ட் அலவன்ஸ் என்பதே நீக்கப்பட்டிருக்கிறது. ரெண்ட்



என்பது மாக்ஸிமம் ரூ. 2,000, ரூ. 1,500 என்று பலவகையில் இருக்கிறது. அது ரூ. 500 ஆகவும் இருக்கலாம். ரூ. 700 ஆகவும் இருக்கலாம், ஏற்கனவே சொன்னதுபோல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

> "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 55/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை ரவையின் முடிவிற்குவிடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு-6

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

> "பிரிவு 6 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

HON. THIRU C. PONNAIYAN: Sir, I move the following amendment;

> "Renumber cluse 6 as Sub-Clause(1) and after Sub-Clause (1) as so renumbered insert the following Sub-clause namely:—
> (2) In section 6-A of the principal Act, in sub—section (2) for the expression "house rent allowance of one hundred rupees per mensum", the expression "house rent of a sum not exceeding one thousand and five hundred rupees per mensum as may be fixed by the Public Works Department of the State Government for the house the chief Government Whip in the Legislative Council occupies in the City of Madras, but the house rent shall not be paid to the Chief Government the Legislative Assembly or the Government whip in Whip in the Legislative Assembly and to the Government Whip in the Legislative Council if they occupy ahouse provided by the State Government free of rent shall be substituted."

திருத்தம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 6, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு—7

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி-

''பிரிவு- 7'' சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.

HON. THIRU. C. PONNAIYAN: Sir I move the following Amendment:—

For clause (a)' substitute, the following clause, namely;-

"(a) for the expression is paid a house rent allowance, the expression or the Chief Government Whip in the Legislative Assembly or the Government Whip in the Legislative Council is paid a house rent shall be substitute''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 7, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு—8

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 8'' சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.

HON. THIRU C.PONNAIYAN; Sir, I move the following Amendment:—

In clause 8, for sub-clause (b) the following shall be substituted namely:—

(b) in sub-section (4-A), in clause (a), after the words to trave the words either singly or with his orther spouse or any other relative in the case of lady members shall be inserted.

திருத்தம் பேரவையின்முடிவிற்கு விடப்பெற்று ,நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 8, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.





பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே,
''தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1981), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது

[பிற்பகல் 1-10]

இ. 3. கலவரப் பகுதிகள் (சட்ட விரோதக் கூட்டத்தினால் காயம் அடைந்தவருக்கு இழப்பீடு கொடுக்கும்) சட்ட முன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பில்
''தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு கலவரப் பகுதிகள் (சட்ட விரோதக் கூட்டத்தினால் காயம் அடைந்தவருக்கு இழப்பீடு கொடுக்கும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 53/ 981) தற்போது ஆய்வுக்கு*
எடுத்துக் கொள்ள வேண்டாம்'' என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

11. தனியார் அலுவல்கள்

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல்—தொடர்ச்சி.

தனித் தீர்மானம்

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: திரு. ரா. உமாநாத் அவர்கள் தீர்மானத்தின் மீது மேலும் விவாதம் தொடரும். திரு. கோவை தம்பி,

திரு கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலங்களையும் ஒட்டுமொத்தமாக இந்த நாட்டையும் முழுமையாகவும், விரைவாகவும் மேம்படுத்துவதற்காக தற்போதுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானதாக இல்லை என்று கூறுகின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைக்க விழைகின்றேன்.

---

1981ம் ஆண்டு மே மாதம் 13 தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

இந்தக் கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத்
அவர்களும், அவரைத் தொடர்ந்து பல்வேறு உறுப்பினர்களும்
இந்த அவையில் கூறியிருந்தாலும், இந்த இந்தியப் பேரரசின்
குடியரசுத் தலைவர் மாண்புமிகு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள்
கூட இந்தக் கருத்தை ஏற்றிருக்கிறார்கள் என்பதை நான் இந்த
நேரத்தில் பணிவோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு பலமான
மாநில அரசுகளை உருவாக்குகின்ற தன்மையில், மத்திய அரசு
பலமான மாநில அரசுகள் அமைப்பது என்ற முறையில்
ஈடுபடுமேயானால், தன்னுடைய செயல் திட்டங்களை வகுத்துக்
கொள்ளுமானால், பலமான மாநில அரசு அமைந்தால்தான்
பலமான மத்திய அரசு அமையும் என்ற நிலையிருக்கிறது
என்பதை பெருமதிப்பிற்குரிய இந்தியக் குடியரசினுடைய
தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள்கூட எடுத்துச் சொல்
யிருக்கிறார்கள், மாநில உறவு முறைகளை புதுப்பிக்க வேண்
மென்றும், அந்தப் புதுப்பிக்கின்ற முறை அழுத்தம் திருத்
மாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டுமென்றும் மாண்புமி
குடியரசுத் தலைவர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

பெரும் தொழில்கள் அல்லது சிலவகைமறைமுகமாக வழங்கப்
படுகின்ற உரிமம் மாநில அரசுக்கு அதிகமாக வேண்டுமென்று
மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள்
அந்த வலியுறுத்துகின்ற தன்மையில் பலமான ஒரு மாநிலஅமைப்ப
இருந்தால்தான், அந்த மாநில அமைப்பின் மூலம் மத்திய
சர்க்காரை நடத்த முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது
என்பது குடியரசுத் தலைவர் அவர்கள் கூறியதிலிருந்து தெளி
வாகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று உலகச் சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு, பாரதத்
திற்குத் திரும்பியிருக்கிற பெருமதிப்பிற்குரிய இந்திராகாந்தி,
இந்தியாவினுடைய பிரதமர் அவர்கள் எதிர்கால நடவடிக்கைகள்
என்ற அமைப்பில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கோருவது
என்பதும், மாநிலங்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில்
அக்கறைகொண்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்
விடுக்கின்ற வேண்டுகோளை ஏற்றுக்கொள்வார்கள் என்ற
நம்பிக்கை நமக்கிருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரத்தை
ஒருமாநில ஆட்சி நடத்துகின்ற, மாநில மக்களால் மாநில சட்ட
மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டஉறுப்பினர்கள்கேட்கும்போது
அந்த பிரிவினை ஸ்லோகன்கள் அல்லது மத்திய சர்க்காரை பல
வீனப்படுத்துகின்ற காரியங்களாக மத்திய ஆட்சியை நடத்து
கின்றவர்கள் கருதக்கூடாது என்பது என்னைப் போன்றவர்
களுடைய பணிவானகருத்து. இன்று வளைகுடா நாடுகளானாலும்
பாகிஸ்தான் ஆக்கிரமிப்பானாலும், அச்சுறுத்தலானாலும்,இந்திய
உபகண்டத்திற்கு எந்தப் பகுதியிலிருந்து எவ்வளவு இழப்புகள்
வந்தாலும், அல்லது எவ்வளவு மிரட்டல் வந்தாலும், அவைகளைச்
சமாளிப்பதற்கு, மத்திய சர்க்கார் எடுக்கின்ற எல்லா நடவடிக்கை
களையும் மாநில சர்க்கார் ஏற்றுக்கொண்டு, மாநில சர்க்கார்



கண்ணும் கருத்துமாக இருந்து, எந்த முனையிலிருந்து இந்தியப்
பேரரசுக்கு அல்லது இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஆபத்து
வருமானாலும், அதைக் களையும் முயற்சியில் மத்திய சர்க்கார்
எடுத்துக்கொள்ளும் எந்த முயற்சியையும்விட அதிகமாக எடுத்துக்
கொள்வதற்கு, அதிகமான செயலை எடுத்துக் கொள்வதற்கு
மாநில ஆட்சி தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில்
அல்ல, நடந்து முடிந்த காலகட்டத்தில், இந்தியாவிற்கு
ஏற்பட்ட சோதனையின் போதும், அந்நிய ஆக்கிரமிப்பின்
போதும், இந்திய பேரரசை ஆண்டு கொண்டிருக்கின்றவர்கள்
பார்க்காத ஒன்றல்ல என்பதை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிகாரம் கையில் இருக்கிறது என்ற காரணத்தினால்,
அதிகாரம் நம் கையில் இருக்கிறது, நம்மை யாரும் ஒன்றும்
செய்ய முடியாது என்ற காரணத்தினால், அச்சுறுத்தல், அவ
மானப்படுத்துதல், அல்லது அவதூறுகளை அள்ளி வீசுதல்,
இதையே அரசியல் பொழுதுபோக்காக கொண்டிருப்பவர்கள்,
இவர்களுடைய பேச்சுகளை எல்லாம் நம்பி ஒரு மத்திய
சர்க்கார். ஒரு மாநில சர்க்காரின் மீதோ ஒரு மாநில சர்க்கார்
மத்திய சர்க்காரின் மீதோ பழியை சுமத்த முற்படுவார்களானால்
ஒரு பலமான இந்தியாவை உருவாக்குவதற்கு ஊறு விளைவிக்கி
றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரி
வித்துக் கொள்கிறேன். இன்று தமிழகத்தைப் பொறுத்த வரை
யில் மக்கள் மன்றம் அளித்திருக்கிற தீர்ப்பு மாறுபட்ட தீர்ப்பு
என்பதை யாரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்ப்பாக இருக்கிறது
என்பதை இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.
1977-ல் நாட்டில் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற தேர்தல்
கூட்டணி இந்தியாவில் தமிழ் மாநிலத்தில் இன்றைய முதல
மைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில்
அமைக்கப்பட்டது என்பதையும் அந்த தலைமையில் இந்திய
பேரரசை ஆளுகின்றது யாராக இருக்க வேண்டுமென்று அகில
இந்திய அ.தி.மு.க. அதனுடைய தானைத்தலைவர், கூறிய கருத்து
1977—ல் தேர்தலில் வலியுறுத்தப்பட்டது. ஆனால் அந்த
நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு சட்டமன்ற தேர்தல் வந்த
காலத்தில் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் யாரை மத்தி
யிலே வலியுறுத்தியதோ அந்த வலியுறுத்தலுக்கு எதிராக பல்
வேறு காரியங்கள் ஆற்றி மாநிலத்தைப் பொறுத்த வரையில்
மாநிலத்தை ஆளுகிற முதலமைச்சர் யாராக இருக்கவேண்டு
மென்று அகில இந்திய அ.தி.மு.க. விரும்பியதோ அந்தக் கருத்
துக்கு எதிராக, மாநிலத்தை ஆளப்போகிற உரிமையை பெறப்
போகிற அ.தி.மு.க. மத்தியில் யார் இருக்கவேண்டும் என்று
விரும்பியதோ அவரை எதிர்த்துக் கூட இந்த மாநில மக்கள்
அதை, தான் விரும்பிய முதலமைச்சரைதான் மாநிலத்தில் உரு
வாக்கினார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் ஞாபகப்படுத்த
கடமைப்பட்டிருக்கிறேன். இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன்
என்று சொன்னால் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் காலு

சக்கரத்தின் சுழற்சியால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களால் 1980-ல் ஒரு மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது. அந்த மாற்றத்தின் அடிப்படையில் இந்தியாவில் நடைபெற்ற தேர்தல் பல்வேறு காலகட்டங்களில் அரசியலில் மத்தியிலே ஏற்பட்ட சோதனையின் அடிப்படையிலே அந்த தேர்தல் தோற்றுவிக்கப்பட்டது. அந்த தேர்தலில் தமிழகத்தைப் பொறுத்த வரையில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் ஒரு முடிவு எடுத்து அந்த முடிவின் அடிப்படையிலே மாநில அரசு அமைப்பதற்கு முன்பாக மாநில அரசை கையில் வைத்துக்கொண்டு மத்தியில் ஒரு நிலையான ஆட்சியை ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகன் ஆளுகிற கருத்தினை இந்திய பேரரசில் இருக்கிற மக்களுக்கு அகில இந்திய அ.தி.மு.க. தமிழ்நாட்டி லிருந்து எடுத்துச் சொன்னது. ஆனால் ஏனோ இந்திய மக்கள் தமிழகத்து மக்கள் ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ஆம் தேதி 'இந்த ஆட்சி கலைக்கப்பட்டது. ஆட்சி எந்த நோக்கத்திற்காக கலைக்கப்பட்டதோ அந்த நோக்கமே தேர்தல் காலத்தில் வைக்கப்பட்டது.

தேர்தல் காலத்தில் வைத்த அந்த நோக்கம் உண்மையான நோக்கம என்று ஏகபோகமாக இந்தியாவை ஆட்சி செய்கிறவர்கள் கூட அகில இந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியை கலைத்த பிறகு அதை எதிர்த்து அந்த தேர்தலில் போட்டியிட்டு பிறகு மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப் ட்ட இந்த ஆட்சி அமைக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆட்சியினுடைய நோக்கம் இந்த ஆட்சியினு டய கருத்து, இந்த ஆட்சியினுடைய செயல் எல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த தத்துவங்களை கொண்டு வந்தார்களோ எந்த நினைவுகளை நிறைவேற்றுகிற விதத்தில் நாட்டு மக்களிடத்தில், உள்ளங்களிலே இந்திய பேரரசை காப்பாற்ற வேண்டு மன்று விரும்பினார்களோ அந்த எண்ணங்களின் அடிப்படையாக இந்த ஆட்சி அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். நான் முன்னதாக ஒரு சம்பவத்தை குறிப்பில் சொன்னதைப் போல இந்த ஆட்சியை உருவாக்கியவர்களுக்கும், பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலே ஆட்சியை உருவாக்கியவர்களுக்கும், கர்நாடக மாநில ஆட்சியை உருவாக்கியவர்களுக்கும், ஏன் கேரளத்து ஆட்சியை உருவாக்கியர்களுக்கும். மற்றைய மாநில ஆட்சியை உருவாக்கியமாநில மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு கூறுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்படுத்தப் பட்டிருக்கிற ஸ்லோகன்கள் தேர்தல் காலத்தில் வெறிச்சோடிக் கிடக்கிற மைதானங்களை தேடி ஓடுகிற நிலையில் இருந்தது என்பதையும் இந்த புரட்டான ஸ்லோகன்களை எல்லாம் நாட்டு மக்கள் மன்றம் ஏற்றுக்கொள்ளாமல் மீண்டும் புரட்சித் தலைவர் எம் ஜி. ஆரை தமிழ் முதல்வராக ஆக்கியது என்பதை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன், அதிகாரத்தை கையிலே வைத்துக் கொண்டு, தன்னுடைய அதிகாரம் என்ற பூட்ஸ் காலால் சிவப்பு ரோஜா போன்ற நிறத்தை உடையவர்களை போட்டு துவைத்து, மிதித்துப் போட்டு, தும்பை





பூவை போன்ற உள்ளம் படைத்தவர்களை எல்லாம் வென்னீர் போன்ற அடுப்பிலே போட்டு எறித்த போதுகூட இந்த தமிழகத்து மக்கள் இந்த நாளைத் தலைவர் புரட்சித் தலைவர் எம் ஜி. ஆரை. மீண்டும் தமிழ் நாட்டினுடைய முதலமைச்சராக ஆக்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.

மக்கள் வைத்த ஸ்லோகன்கள் இந்திய பேரரசுக்குள் தமிழ் நாடு இருக்கிறது. இந்திய பேரரசினுள் தமிழ் மாநிலம் எல்லா உரிமைகளையும் பெற்ற மாநிலமாக தன்னிறைவு பெற்று தமிழ் நாட்டு மக்களை காப்பாற்றுகிற மாநிலமாக, பண்பாட்டை காப்பாற்றுகிற மாநிலமாக 22 மாநிலங்களிலே தலை நிமிர்ந்து நிற்கிற மாநிலமாக தமிழ் நாடு இருக்க வேண்டுமென்ற காரணத்திற்காக மாண்புமிகு புரட்சித்தலைவரவர்களை மீண்டும் தமிழ் நாட்டு முதலமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள். நான் சொல்வது சிலருக்கு மிகையாக இருக்கலாம் அமெரிக்க அதிபர் ரீகனை கூட படித்தவர்கள் தான் தேர்ந்தெடுத் தார்கள்.

[பிற்பகல் 1-20]

இந்தியாவை இன்று ஆண்டுக்கொண்டிருக்கின்ற மணக்கத் திற்குரிய மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்களை ஜனநாயகம் மறந்துவிடுமோ என்று ஏற்பட்ட அச்சத்தின் காரணத்தினால் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுக்கு மத்தியில் தத்தளித்து ஒரு தத்துவத்திற்கு வித்திட்ட ஒரு நாயகியாகத்தான் பெருமதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்களை மக்கள் தேர்ந் தெடுத்தார்கள். ஆனால் தமிழகத்தைப்பொறுத்தளவில் புரட்சித் தலைவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குக் காரணம் நாட்டு மக்கள், கிராமத்து மக்கள் புரட்சித் தலைவரை அழைத்த போது சொன்ன சுலோகம், கொஞ்சம் எங்கள் எம். ஜி. ஆரை கூபபிடுங்கள், ஏழைகளைக் காப்பாற்றுங்கள் என்ற சுலோகத்தைத் தான் நாட்டு மக்கள் வைத்தார்கள். அந்த ஏழைகளைக் காப்பாற்றுவதற்காக ஒரு ஆட்சி தமிழகத்திலே அமைக்கப் பட்டிருக்கிறது. இந்தியா பலப்படுத்தப்பட்ட இந்தியா என்பதும், இந்தியா உருவாக்கப்பட்ட இந்தியா என்பதும், இந்தியா ஒன்று படுத்தப்பட்ட இந்தியா என்பதும் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1950 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் பிளாசா யுத்தத்திலிருந்து, வெள்ளைக்காரன் வாணிபம் செய்ய வந்த காலத்திலிருந்து இந்த நாட்டில் கிழக்கிந்தியக் கம்பெனி தோற்றுவிக்கப்பட்ட காலத்திலிருந்து பண்டைய வரலாற்றை நாம் ஏறிட்டுப் பார்ப்போமானால் அந்தக் காலங் களில் அடிப்படையில் இந்தியா ஒன்றுபடுத்தப்பட்ட இந்தியாவாக உருவாக்கப்பட்ட இந்தியாவாக பலப்படுத்தப்பட்ட இந்தியாவாக மாறியிருக்கிறது என்றும் இந்தியாவில் ஒற்றுமையைக் காப்பாற்று வதற்காக உரிய நிலையில் மாநிலங்களுக்கு கொடுக்கிற அத்தனை அதிகாரங்களையும் அது பொதுச் சுகாதாரமாக இருந்தாலும்

தொழில் வளர்ச்சியாக இருந்தாலும் தனிறைவுத் திட்டமாக இருந்தாலும் மாநிலத்தில் போடப்படுகின்ற முதலீடுகளாக இருந்தாலும் ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் நிலையாக இருந்து அவர் அவைகளை நிறைவேற்றக்கூடிய தகுதியை ஏற்படுத்துவதுதான் நல்லது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சியை கவிழ்த்துவிடுவேன் என்பதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சியை நாங்கள் நிலைகுலையச் செய்வோம் என்பதும் நாட்டு மக்கள் மத்தியிலே பீதியை உருவாக்கும் என்பதையும் ஆட்சி நிலைத்தாலும் நிலைக்காவிட்டாலும் ஆட்சி இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த நாட்டு மக்களுடைய உள்ளங்களிலிருந்து பணியாற்றக்கூடிய நிலையை தமிழகம் பெற்றிருக்கிறது என்பதையும் மாடு இளைத்தால் கொம்பு இளைத்துவிடும் என்று அதிகாரத்தை ஏகபோகமாக வைத்திருக்கின்றவர்கள் கருதவேண்டாம் என்பதையும் பலமான இந்தியா, பலம்பெற்ற வல்லரசுகள் மத்தியில் போட்டியின்றி மிகவும் கம்பீரமாக வளர்வதற்கு உருவாக்கப்பட்ட இந்தியாவிற்குள் ஒன்றுபடுத்தப்பட்ட இந்தியாவிற்குள் பலமான மாநில அமைப்புகள் வேண்டும். அந்த மாநில அமைப்புகள் தேவை என்று சொன்னால் மாநில முதலமைச்சருக்கு பரிபூரணமாக, மாநில முதலமைச்சருக்கு தேவையான, மாநில முதலமைச்சருக்கு அவசியமான எல்லா அதிகாரங்களும் வேண்டுமென்று மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். தமிழக அரசு அந்த அதிகாரங்களைப் பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் மத்திய சர்க்காரோடு கலந்துபேசி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அமைச்சரவையும் ஏற்பாடு செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும். அந்த சூழ்நிலை உருவாகும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. உமாநாத் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை வலியுறுத்தி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவேண்டுமென்ற அவசியம் ஏற்படாது என்பதால் இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்யவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு வாய்ப்புஅளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற தீர்மானத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் இன்றைக்கு 5 நிமிடங்கள் பேசிவிட்டு பின்னாலே இந்தத் தீர்மானத்தின்மீது தொடர்ந்து பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று வற்புறுத்துகிற போது நம்முடைய மாநிலத்திலே நடைபெறுகின்ற சம்பவங்களைக் கொண்டே இந்தத் தீர்மானம் எவ்வளவு அவசியம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும். நேற்றைய தினம் அதற்கு முந்தைய தினம் 1976 ஆம் ஆண்டு இந்த நாட்டிலே மிகப் பெரிய சண்டமாருதமாக கமிஷன் அமைப்புகள் வெளிவந்த விஷயங்களை நாம் நினைப்பதற்குக்



கடமைப்பட்டிருக்கிறோம். கோதுமை பேர ஊழல், பூச்சி மருந்து பேர ஊழல் வழக்குகளில் சிக்கிக் கொண்டவர்கள் இன்றைக்குப் பெரிய வழக்குகளிலே அவர்கள் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று தமிழ்நாட்டிலே பேசிக் கொண்டிருந்த நிலையில் மத்திய அரசு அவைகள் எல்லாம் கப் சிப் என்று ஆகிற முறையிலே கடந்த இரண்டு நாட்களாக அவைகளை வாபஸ் பெற்றிருக்கின்ற அவல நிலையை தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித்தலைவர் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருக்கின்ற அன்பில் தர்மலிங்கம் ஆகியவர்கள் பெரிய வழக்குகளிலே மாட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்று தமிழ்நாட்டு மக்கள் பேசிக்கொண்டிருந்த நிலையில் இன்றைக்கு மத்திய சர்க்கார் அந்த வழக்குகளை வாபஸ் வாங்கியிருக்கிறது என்ற அவல நிலையை நாம் பார்க்கிறோம். மத்தியில் இருப்போர் அதிகாரத்தைக் கையிலே வைத்துக்கொண்டு எரிசாராயம் சம்பந்தமாக இரண்டாவது கமிஷனை அமைத்துத் தீரவேண்டும் என்று அடம்பிடிக்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம்.

அடம்பிடிக்கும்படியான ஒரு போக்கை நாம் பார்க்கிறோம். இந்த மாநில அரசு அப்படிப்பட்ட குற்றச்சாட்டு வந்த உடனேயே, இன்று நாங்களாகவே ஒரு கமிஷனை அமைக்கிறோம், ஒரு நீதிபதியைப் போடுகிறோம், அது விசாரணை நடத்தும் என்று பகிரங்கமாக நாடறிய, நாமறிய அறிவித்ததற்குப் பின்னாலே இன்றைக்கு ஒரு அடம் பிடிக்கும்படியான காட்சியினை மத்திய ஆட்சியிலே இருப்பவர்கள் செய்யும்படியான ஒரு நிலையைப் பார்க்கிறோம். அப்படியானால் நம்மிடையே ஒரு கேள்வி பிறக்கிறது. அவர்கள் ஊழலை ஒழிப்பதற்காக கமிஷனை அமைக்கிறார்களா அல்லது அவர்கள் கையில் இருக்கும்படியான அதிகாரத்தைக் கொண்டு மாநில அரசுகளை மிரட்டுவதற்கு அந்த அதிகாரத்தை உபயோகப்படுத்துகிறார்களா? அதுதான் இன்றையதினம் இருக்கும்படியான கேள்வி. அப்படியானால் 1976-ஆம் ஆண்டு அவர்கள் அமைத்த கமிஷனுடைய கதி என்ன, கதை என்ன என்று இன்றைக்கு நாங்கள் பார்க்கிறோம், ஆகவே, இப்படி அவர்கள் எரிசாராயக் கமிஷனுக்கு இரண்டாவது கமிஷனை அமைக்கிறோம் என்று சொல்லுகின்ற நிலைமையை இந்த மாநில அரசு, இந்த மாநில மக்கள் ஜனநாயக ரீதியிலே எதிர்க்கிறார்கள் என்பதை வற்புறுத்தி அமர்கிறேன். என்னுடைய பேச்சைப் பின்னால் தொடர்வேன்.

## 10. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

### ஆ. மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்

பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது:—

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1981).

## இ. பேரவை நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவையை ஒத்திவைக்கும் முன் சில விவரங்களைப் பேரவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடரில் 1981—82 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் 21-3-1981 அன்று பேரவையில் அறிவிக்கப் பெற்றது. அன்று முதல் இன்றோடு சட்டமன்றப் பேரவை கூடிய மொத்த

நாட்கள் —41
மாலையிலும் பேரவை நடைபெற்ற நாட்கள் 6
மொத்த நேரம் —210 மணி, 36 நிமிடங்கள்

நிதி அலுவல்கள் — 1981-82.

1. வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள். 7
2. மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற நாட்கள் 25
3. நிதி ஒதுக்க மசோதா மீது விவாதம் 1

### மானியக் கோரிக்கைகள்.

1. கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள். 3,012
2. அனுமதிக்கப் பெற்றவை 2,668



3. விவாதிக்கப் பெற்று நிறைவேறிய மானியக் கோரிக்கைகள். 52
4. விவாதிக்கப் பெறாமல் .. .. 'கில்லெட்டின்'. ஆனது. 4
5. உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள். 412

எடுத்துக் கொண்ட மொத்த மணி நேரம் 106 மணி 47 நிமிடங்கள்

### ஆற்றிய உரைகள் கட்சிவாரியாக விவரம்.

| | கட்சிகளின் பெயர். | உரைகளின் எண்ணிக்கை. | எடுத்துக் கொண்ட நேரம். (நிமிடங்களில்) |
|---|---|---|---|
| 1. | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். | 195 | 2,871 |
| 2. | திராவிட முன்னேற்றக் கழகம். | 45 | 910 |
| 3. | இந்திரா காங்கிரஸ். | 46 | 815 |
| 4. | கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) | 31 | 539 |
| 5. | கம்யூனிஸ்ட் | 33 | 472 |
| 6. | காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ். | 19 | 234 |
| 7. | அனைத்திந்திய பார்வர்ட் பிளாக். | 7 | 102 |
| 8. | தமிழ்நாடு காமராஜ் .. காங்கிரஸ். | 20 | 305 |
| 9. | ஜனதா | 8 | 80 |
| 10. | மக்கள் கட்சி. | 3 | 39 |
| 11. | இந்திய யூனியன் .. .. முஸ்லீம் லீக் | 2 | 10 |
| 12. | குடியரசு கட்சி. | 3 | 30 |
| | ஆக மொத்தம் | 412 | 6,407 |

வினாக்கள் :—

| | |
|---|---|
| விடையளிக்கப் பெற்ற குறுகிய கால வினாக்கள் | 11 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 641 |
| அனுமதிக்கப் பெற்ற மொத்த துணை வினாக்கள் | 1,903 |
| உடுக்குறியிடாத வினாக்கள் | 254 |

130 உறுப்பினர்களின் வினாக்களுக்கு விடைகள் அளிக்கப் பெற்றுள்ளன.

18 உறுப்பினர்களது வினாக்கள் 10—க்கும் மேல் பதிலளிக்கப் பெற்றுள்ளன.

ஒரு பொருள் குறித்து பல உறுப்பினர்களால் கேட்கப் பெற்ற வினாக்கள் 25

(வினாக்கள் —கட்சிவாரியாக விவரம்)

| | |
|---|---|
| அ.இ.அ.தி.மு.க. | 279 |
| தி.மு.க. | 97 |
| காங் (இ) | 74 |
| கம்யூ. (மா) | 92 |
| கம்யூ. | 42 |
| த. நா. கா. கா. | 18 |
| கா. கா. தே. கா. | 23 |
| இ. யூ. முஸ்லீம் லீக் | 6 |
| ஜனதா | 5 |
| அகில இந்திய பார்வர்ட் பிளாக் | 4 |
| குடியரசுக் கட்சி | 1 |
| | 641 |

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்.

| | |
|---|---|
| வரப்பெற்றவை .. | 768 |
| அனுமதி மறுக்கப் பெற்றவை .. | 439 |
| அனுமதிக்கப் பெற்றவை .. | 329 |
| துறைகளில் இருந்து பதில் வராதவை .. | 84 |
| பேரவையில் எடுத்துக் கொள்ளப் பெற்றவை .. | 245 (65—பொருள் குறித்து) |



வெட்டுத் தீர்மானங்கள்—

| | |
|---|---|
| வரப்பெற்றவை .. மொத்தம் | 380 |
| தள்ளப் பெற்றவை | 152 |
| கவன ஈர்ப்பாக மாற்றப் பெற்றவை | 60 |
| பேரவையில் எடுத்துக் கொள்ளப் பெற்றவை | 119 |
| நிலுவையில் உள்ளது | 49 |

சட்ட முன்வடிவுகள்—

| | |
|---|---|
| வரப்பெற்றவை | 58 |
| நிறைவேற்றப் பெற்றவை | 45 |
| குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெற்றவை | 3 |

தனியார் அலுவல்கள்—

| | |
|---|---|
| வரப்பெற்ற தனித் தீர்மானங்கள் | 23 |
| அனுமதிக்கப் பெற்றவை | 21 |

உரிமை மீறல் பிரச்சினை—

| | |
|---|---|
| கொடுக்கப் பெற்ற அறிவிப்புகள் | 37 |
| இசைவு மறுக்கப் பெற்றவை | 23 |
| அவையில் எடுத்துக் கொள்ளப் பெற்றவை | 11 |
| உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றவை | 3 |
| தீர்ப்பளிக்கப் பெற்றவை | 6 |

பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்—

| | |
|---|---|
| அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் | 74 |
| ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள் | 149 |

பார்வையாளர் மாடங்கள்—

| | |
|---|---|
| அனுமதிக்கப் பெற்றவர்கள் | 43,069 |
| ஆண்கள் | 28,532 |
| பெண்கள் | 3,112 |
| பேரவைத் தலைவர் மாடம் | 11,425 |

நூலகம்—

| | |
|---|---|
| மொத்தமுள்ள நூல்கள் | 30,000—க்கு மேற்பட்டவை |
| வருகை தந்திருப்பவர்கள் | 740 |

[பேரவைத் தலைவர்] [1981 மே 14

Legis–Alert என்பதாக கட்டுரை தொகுப்பு—இதுவரை 12 இதழ்களாக சுமார் 600 கட்டுரைகள் பல்வேறு இதழ்களிலிருந்து பொருள்வாரியாக தொகுக்கப் பெற்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெறுகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இதனை பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

பேரவை நடவடிக்கைகள் மட்டும் தட்டச்சு செய்யப் பெற்றுள்ள பக்கங்கள் 8,294 பக்கங்கள்

பேரவை கூட்டம் நடைபெற்ற எல்லா நாட்களிலும் வருகை தந்துள்ள உறுப்பினர்கள் 5

1. திரு. நா. குலசேகர பாண்டியன்
2. திரு. ஆர். சக்கரபாணி
3. திரு. இரா. சண்முகம்
4. திரு. ஏ. சி. சண்முகம்
5. திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்

பேரவை நிகழ்ச்சிகளை நல்ல முறையில் நடத்திச் செல்ல எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்த அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வானொலி, தொலைக்காட்சி நிலையத்தினருக்கும் பத்திரிகைக் காரர்களுக்கும் நம்முடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற நமக்கு மிகவும் ஒத்துழைப்பு தந்த சட்டமன்றப் பேரவைச் செயலர் திரு. அழகர்சாமி அவர்களுக்கும், சட்டமன்ற அலுவலர்ளர்கள் அனைவருக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவையை ஒத்தி வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் இப்போது தீர்மானத்தை மொழிவார்கள்.

### 7. அரசினர் தீர்மானம் (தொடர்ச்சி)

இ. நாள் குறிப்பிடாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுவது:—

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 41 நாட்களாக நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதமும் மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் நடைபெற்று சிறப்பாக முடிந்திருக்கிறது.



1981 மே 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒவ்வொரு துறையைச் சேர்ந்த அமைச்சர்களும் அந்தந்தத் துறையைப் பற்றிய, ஆற்றிய பணிகளையும் ஆற்ற வேண்டிய பணிகளையும் சிறப்பாக எடுத்துத் தெரிவித்தார்கள். தாங்களும் இந்தச் சட்டமன்றத் துறையின் சார்பாக ஆற்றப்பட்ட பணிகளையெல்லாம் இங்கே பட்டியல் போட்டு சிறப்பாகக் காட்டியிருக்கிறீர்கள். அதற்காக அவைத் தலைவருக்கு இந்த மன்றத்தின் சார்பாக, அனைத்து உறுப்பினர்கள் சார்பாக, உளங்கனிந்த நன்றியை, அனைவரின் சார்பாக நான்தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையொலி) இங்கே ஆக்கபூர்வமான பணிகள் என்ன, என்ன நடைபெற்றன என்பதை எல்லாம் தெளிவாக தங்களுடைய பட்டியல் அறிக்கையிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். அதைத் தொடர்ந்து இந்த மன்றம் தன்னுடைய நோக்கத்தை, குறிக்கோளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு இந்த அவையிலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களுடைய ஒத்துழைப்புத் தொடர்ந்து இருக்கும் என்ற நம்பிக்கையினுடைய அடிப்படையில் இந்த ஒத்துழைப்பை நாங்கள் அனைவரும் சேர்ந்து தருவோம் என்கின்ற உறுதிப்பாட்டினைத் தெரிவித்து மீண்டும் உங்களுக்கு இந்த அவையின் சார்பாக, அனைவருடைய சார்பாக நன்றியைத் தெரிவித்து, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

> "பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

பின்னர் பேரவை பிற்பகல் 1.36 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

### 11. பேரவைமுன் வைக்கப் பெற்றஏடுகள்

#### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

286. தமிழ்நாடு 1951ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்குச் சட்டத்தின் விவர அட்டவணையில் சில அத்தியாவசியப் பொருட்களைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் விதி ஒன்றினை உருவாக்குவது குறித்து உணவு கூட்டுறவுத் துறையின் 16–12–1980ஆம் தேதியிடப் பெற்ற 695 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சேமிப்பு கிடங்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/195) 27 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது],

287. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 24–3–1980 ஆம் தேதி

யிடப் பெற்ற 715 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு ]தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

288. தமிழ்நாடு 1966-ஆம் ஆண்டு நகர்புற நிலவரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 18-2-1981 ஆம் தேதியிடப் பெற்ற 416-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 45 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

289. சென்னையிலுள்ள தமிழ்நாடு கணக்குத் துறைத் தலைவர் அலுவலகப் பணியாளர் கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலைக்கு தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம் மற்றும் 1959 ஆம் ஆண்டு விதிகளின் சில சட்டம் மற்றும் விதிகளிலிருந்து விதி விலக்களிப்பது குறித்து தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறையின் 12-3-1981-ஆம் தேதியிடப் பெற்ற 572-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்புகள் [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

290. வருவாய்த்துறையின் 2-3-1981ஆம் தேதியன்று வெளியாகி 20-11-1980 ஆம் தேதியிடப் பெற்ற அரசிதழின் பாகம் III பிரிவு 1 (b), பக்கங்கள் 1-4-ல் (ஆங்கிலத்தில்) வெளியான SRO எண். 13570 (a)/80-ஆம் எண் அறிவிப்பில் வெளியிடப் பெற்ற திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 2-3-1981 ஆம் தேதியிடப் பெற்ற 492ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு பகுதி நேர கிராம அலுவலர்கள் பதவிகளை நீக்குதல் அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1980) 12 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

291. தமிழ்நாடு அரசின் 1979-80-ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள் [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

292. தமிழ்நாடு அரசின் 1979-80 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

293. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (சிவில்) (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



294. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்) (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

212. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1974-75, 1975-76-ஆம் ஆண்டுகளுக்கான சிவில் அறிக்கைகளில் நீர் வழங்கு திட்டங்கள் பற்றிய பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை (ஏழாவது பேரவை).

213. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1974-75, 1975-76-ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் போக்குவரத்துத் துறை குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை (ஏழாவது பேரவை).

214. (தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும்]. சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1981),

215. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 621 முதல் 754 வரை)

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS. IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras 14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem 1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai 1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate. Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street. Calcutta-17.

3073

116 R.F

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

## தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.